www.tamilarangam.net



கலாநிதி ஆ. க. மனோகரன்

யாழ். கட்டப்பிராயில் பிறந்த
கலாநிதி ஆ.க. மனோகரன் அவர்கள்
1971-73ஆம் ஆண்டுகளில்
இலங்கை விவசாய இலாகாவில்
போதனா ஆசிரியராகப்
பணியாற்றியவர். இவர்,
உருத்திரபுரம் மகா வித்தியாலயம்,
யாழ். செங்குந்தா இந்துக்கல்லூரி,
கண்டி - குண்டாசாலே
விவசாயக் கல்லூரி ஆகியவற்றில்
தனது கல்வியை முடித்து
விவசாயத்துறையின் மேற்படிப்பிற்காக
இங்கிலாந்து சென்றார்.

இலங்கை அரசியலில் ஈடுபாடு
கொண்ட இவர், 1975இல் இருந்து
ஐரோப்பிய நாடுகளிலும்,
இலங்கையிலும் தமிழ்பேசும் மக்களின்
நியாயமான உரிமைகளுக்கான
அரசியல் நடவடிக்கைகளில்
தன்னை ஈடுபடுத்தி வருகின்றார்.

சில ஐரோப்பியப் பத்திரிகைகளில்
ஈழவிடுதலைப் போராட்டம்
தொடர்பான கட்டுரைகளை
புனைபெயர்களில் எழுதியுள்ள இவர்,
தனது சமூகவிஞ்ஞான
இளமானிப்பட்டத்தை
*University of North London* இலும்
முதுமானிப் பட்டத்தை
*London South Bank University* இலும்
நிறைவு செய்து
அதே சர்வகலாசாலையில்
அரசியல் விஞ்ஞானத்தில்
கலாநிதிப் பட்டமும் பெற்றார்.
இப்பொழுது தெற்காசிய நாடுகளின்
இன முரண்பாடுகள் பற்றிய ஆய்வில்
ஈடுபட்டு வருகிறார்.

The PARKAR

இலங்கை தேசிய இன முரண்பாடுகளும்
சமாதான முன்னெடுப்புகளும் - கலாநிதி ஆ. க. மனோகரன்

The PARKAR

# இலங்கை தேசிய இன முரண்பாடுகளும் சமாதான முன்னெடுப்புகள

## ஒரு வரலாற்றுப் பார்வை

## 1948 - 2007

கலாநிதி ஆ. க. மனோகரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கை தேசிய இன முரண்பாடுகளும் சமாதான முன்னெடுப்புகளும்

## ஒரு வரலாற்றுப் பார்வை 1948–2007

கலாநிதி ஆ. க. மனோகரன்

தி பார்க்கர்
293, அகமது வணிக வளாகம், இரண்டாவதுதளம்
இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## BIBLIOGRAPHICAL DATA

| | |
|---|---|
| Title of the Book | **SRI LANKA: Ethnic Conflict and Peace Initiation. - A Historical Perspective 1948-2007** |
| Name of the Author | **Dr. A.K. Manoharan** |
| No. of Pages | xxx+850=880 |
| Size of the Book | Demy |
| Year of Publishing | September 2008 - First Edition |
| Wraper Design | V. Karunanithy |
| Publisher | ***The PARKAR***<br>293, Royapettah High Road,<br>Royapettah, Chennai - 600 014. |

Contact : akmharan@yahoo.co.uk

## நூல் வெளியீட்டுக் குறிப்பு

| | |
|---|---|
| நூலின் பெயர் | இலங்கை தேசிய இன முரண்பாடுகளும் சமாதானமுன்னெடுப்புகளும் 1948-2007 (ஒரு வரலாற்றுப் பார்வை) |
| ஆசிரியர் | கலாநிதி ஆ. க. மனோகரன் |
| பக்கங்கள் | xxx+850=880 |
| அளவு | டெமி |
| பதிப்பு | முதல் பதிப்பு : செப்டெம்பர் 2008 |
| அட்டை | வே. கருணாநிதி |
| வெளியீடு | தி பார்க்கர்<br>293, அகமது வணிக வளாகம்,<br>இரண்டாவது தளம், இராயப்பேட்டை<br>இராயப்பேட்டை நெடுஞ்சாலை,<br>சென்னை - 14. |

தொடர்புகட்கு : **akmharan@yahoo.co.uk**

அச்சிட்டோர்:

**AGS INC.,**
293, Ahamed Complex, 2nd Floor
Royapettah High Road, Chennai - 600 014.




## சமர்ப்பணம்

எனது பெற்றோர்க்கும்,
இலங்கைத் தமிழ்த் தேசிய இனத்தின்
சுயநிர்ணய உரிமைக்கான போராட்ட
வரலாற்றில் உயிர்நீத்த அனைவர்க்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உங்களுடன்...

உலகில் ஏராளமான தனித்தன்மை வாய்ந்த இனங்களும், இனக்குழுக்களும், தேசிய இனங்களும் காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை சிற்றரசாகவோ, பேரரசாகவோ தமக்கெனத் தனியான இராச்சியங்களையும் ஆட்சி முறைகளையும் வகுத்து வாழ்ந்துவந்தன. பெரும்பாலான பேரரசர்கள் தமது அதிகார எல்லைகளை விஸ்தரிப்பதற்காக வெவ்வேறு இன ஆட்சிகளின் மீது அதிகாரத்தைக் கொண்டிருந்தனர். ஆட்சி அதிகார விரிவாக்கத்தின் உயர்ந்த வடிவமாகவே ஒரு கட்டத்தில் மேற்கத்திய காலனி ஆதிக்கம் உலகெங்கும் பரவியது.

தமது சுரண்டலுக்காகவும், அதற்கான நிர்வாக வசதிகளுக்காகவும், காலனி நாடுகளின் மக்கள் தமக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யாமல் இருக்கும் வகையில் தமது கட்டுப்பாடுகளை அவர்கள் மீது காத்திரமாக வைத்திருப்பதற்காகவும், தனி இராச்சியங்கள் பலவற்றை ஒன்றாக்கினர். சில சமயங்களில் ஒன்றாக இருந்த இராச்சியங்களைப் பிரித்தனர். இவற்றின் விளைவுகள் பல நாடுகளில் இன்றும் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றது. ஆப்பிரிக்காவின் பல நாடுகளில் இன்றும் நிகழ்ந்து கொண்டிருக்கும் கொடிய வன்முறை யுத்தங்களாகட்டும், மத்திய கிழக்கில் பாலஸ்தீனப் போராட்டமாகட்டும், தூரக் கிழக்கின் கொரிய சிக்கல்களாகட்டும், இந்திய - பாகிஸ்தான் முரண்பாடாகட்டும், இலங்கையில் தமிழ்த் தேசிய இனப்போராட்டமாகட்டும், அனைத்தும் அந்தந்த நாடுகளில் அல்லது பிராந்தியங்களில் தமது நலன்களைப் பேணும் உள்நோக்குடன் காலனித்துவவாதிகளும், ஏகாதிபத்தியவாதிகளும், உருவாக்கிவிட்டுச் சென்றமையை நோக்கமுடியும்.

www.tamilarangam.net



எனவே, இன்று உலகளவில் நிகழ்ந்துவரும் உள்நாட்டு மற்றும் நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளின் வேர்களை நாம் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் காணலாம்.

இலங்கையின் இன முரண்பாட்டின் தொடக்கத்தை, பொதுவாகக் காலனித்துவ ஆரம்பத்துடனும், குறிப்பாக பிரித்தானியா இலங்கையின் மூன்று இராச்சியங்களை ஒன்றிணைத்ததுடனும் நோக்க முடியும்.

இலங்கையில் பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட்டு பல நூற்றாண்டுகள் கழித்தே சிங்கள மொழியின் தோற்றம் காணப்படுகின்றது. ஆனால், இலங்கையில் பௌத்தம் அறிமுகப்படுத்தப்படும்பொழுது அங்கு சைவத் தமிழ்க் கலாச்சாரமும் வாழ்க்கை முறையுமே காணப்பட்டது. எனவே இலங்கையின் ஆதிக்குடிகள் என்ற வகையிலும், இலங்கையின் அனைத்துவிதமான வளர்ச்சிகளிலும் தமிழ் மக்களின் பங்களிப்பு அளவிடற்கரியது என்ற வகையிலும், இலங்கைத்தமிழரைப் பொறுத்தவரை இலங்கை மீதான ஆதிபத்தியமும் உரிமையும் இயற்கையானதே. ஆனால் பிரித்தானிய காலனித்துவம் தமிழ் மக்களின் அனுமதியின்றி இராச்சியங்களை ஒன்றிணைத்ததுடன், வெளியேறும் பொழுது வாக்குரிமை அடிப்படையிலான பிரதிநிதித்துவ ஆட்சி முறையினை அறிமுகம் செய்ததன் மூலம் எண்ணிக்கையில் சிறுபான்மையினராகிய தமிழ் மக்களை சிங்கள ஆதிக்கத்தின் கீழான குடிமக்களாக ஆக்கிவிட்டது. மிக நீண்ட நெடிய மொழி, மத, பண்பாட்டுக் கலாச்சாரத் தன்மைகளைக் கொண்ட ஆதிக் குடிகளான தமிழர் வரலாற்றுக் காரணங்களால் புதிய அடையாளங்களைப் பெற்று பெரும்பான்மையாகிவிட்ட இன்னொரு இனத்தின் மேலாண்மையின்கீழ் வாழ்வதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதும் நியாயமானதே.

ஆனால், பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் சிங்களப் பெரும்பான்மையை ஆள்பவர்களாகவும் தமிழ் பேசும் சிறுபான்மை இனத்தை ஆளப்படுபவர்களாகவும் ஆக்கிவிட்டுச்





சென்றனர். வெள்ளைக்காரர்களிடம் தீர்வுகோரி ஆரம்பித்த இப்போராட்டம், அவர்கள் வெளியேறியபின் சிங்கள அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக கடந்த அறுபது ஆண்டுகளாக பல்வேறு கட்டங்களைத் தாண்டி தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு கட்டத்திலும் இலங்கையின் பல்வேறு அரசியற் சக்திகள் இனமுரண்பாட்டை எவ்வாறு நோக்கின, கடந்த கால் நூற்றாண்டாக சர்வதேச சமூகம் எந்த வகையில் முரண்பாடுகளை நோக்குகின்றது, இலங்கைத் தமிழ் இன முரண்பாட்டின் தீர்வு என்ன, அதற்கு சர்வதேச சமூகம் எத்தகைய அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும் போன்ற கேள்விகள் இன்னும் மேலோங்கி நிற்கின்றன.

இலங்கைத் தமிழர் இனமுரண்பாடு தொடர்பாக பல நூல்கள் வெளிவந்துள்ளபோதிலும் அவை முரண்பாட்டின் ஒரு குறிப்பிட்ட அம்சத்தை அல்லது குறிப்பிட்ட கால கட்ட நிகழ்வுகளைப் பிரதிபலிப்பவையாகவே உள்ளன.

வரலாற்று ரீதியான அரசியல் பகுப்பாய்வுமுறை மூலம், சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கோட்பாடுகளின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முரண்பாட்டின் தொடக்கத்திலிருந்து 2007 வரையான அதன் வளர்ச்சிக் கட்டங்களையும், ஒவ்வொரு கட்டத்திலும் முரண்பாடுகளின் பல்வேறு பரிமாணங்களையும் ஒரே நூலில் தர முனைந்துள்ளேன். இலங்கைத் தமிழர் இனமுரண்பாட்டின் மூலம், வளர்ச்சிக் கட்டங்கள், அவற்றிற்கான காரணங்கள், தீர்விற்கான அணுகுமுறைகள், தோல்விகளுக்கானக் காரணங்களும், அதன் கர்த்தாக்களும், சர்வதேச அடிப்படை, இலங்கை இனப்பிரச்சனையில் அவர்களின் அணுகுமுறைகள், அதன் குறைபாடுகள், சாத்தியப்பாடான அணுகுமுறைகள் என அனைத்தையும் உள்ளடக்கியது என்ற வகையில் இலங்கையின் இனப்பிரச்சனையை விளங்கிக்கொள்ள விரும்பும் மாணவர்களுக்கும், மக்களுக்கும் ஒரு முழுமையான நூலாகப் பயனளிக்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ாநிதி ஆ.க. மனோகரன்

இந்நூலை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிமாற்
ம் செய்த இலங்கை பாராளுமன்றத்தின் பிரதம மொழி
பயர்ப்பாளர் திரு. வேதநாயகம் அவர்களுக்கும், மூல
ஆய்வு நூலின் உயிர்ப்பு, தன்மை, தரம் ஆகியவை மாறாத
கையில் இலகுமொழி நடையில் இதனைத் திருத்தி
தாகுத்தமைத்த கலாநிதி க.சர்வேஸ்வரன், க. பிரேமச்
ந்திரன், இரா.தேசிகன் ஆகியோருக்கும் எனது மனப்
ூர்வமான நன்றிகள்.

மேலும் எனது ஆய்விற்கு உதவியவர்களுக்கும், இந்த
ஆய்விற்கு செவ்வி வழங்கியவர்களுக்கும், இந்நூலை கணி
னியில் வடிவமைத்து, அச்சிட்டு வெளியிட்ட சென்னை தி
பார்க்கர் நிறுவனத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

**— ஆறுமுகம் கந்தையா மனோகரன்**



# பொருளடக்கம்

## அத்தியாயம் 1


**ஆய்வின் கோட்பாடுகளும் குறிக்கோள்களும்** 1

இனத்துவம் 7

இனத்துவமும், அடையாளமும் 10

இன முரண்பாடுகள் 14

ஆய்வின் அடிப்படைக் கோட்பாடுகள் 17

ஆய்வின் குறிக்கோள்கள் 20


## அத்தியாயம் 2


**இலங்கை : வரலாற்றுப் பின்னணி** 22

இலங்கை : ஒரு சுருக்கமான வரலாறு 22

காலனித்துவத்துக்கு முந்திய காலம் தமிழரின் தொடக்க வரலாறு 34

சிந்துவெளி நாகரிகம் 37

கடலோடிகளான தமிழர்கள் 38

சிங்கள மற்றும் தமிழ்க் குடியேற்றங்களின் தோற்றம் 39

யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் 43

ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியின்கீழ் இலங்கை: ஆரம்பகாலத் தமிழர் வரலாறு 48

காலனித்துவச் சூழமைவு 53

போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் காலப்பகுதிகள் 56

ஆங்கிலேயக் காலனித்துவ ஆட்சியும் இன உறவுகளில் அதன் தாக்கமும் 60




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆங்கில ஆட்சியின்கீழ் அரசியலமைப்பு மற்றும் அரசியல் வரலாறு 63

டொனமூர் அரசியலமைப்புச் சீர்திருத்தம் 66

சோல்பரி அரசியலமைப்புச் சீர்திருத்தம் 74

ஆங்கிலேய நிர்வாகமும் தமிழர்களும் 84

அத்தியாயம் 3

இலங்கையில் முரண்பாட்டின் தோற்றுவாய் 88

ஒரு சுருக்கமான வரலாற்றுப் பார்வை 88

தமிழ்த் தேசிய இனத்தின் இறைமை 90

சிங்களவரையும் தமிழரையும் ஒன்றுபடுத்துவதில் தோல்வி 97

தனிச்சிங்கள அமைச்சரவை 98

நாடற்றவர்களாக 40வீத தமிழர் 99

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தமிழர் பாரம்பரியத் தாயகக் கோட்பாடு 103

குடியேற்ற பிரச்சினையில் இலங்கையின் முதல் பிரதமர் 105

சிங்கள ஆட்சிப் பிரதேசமாக ஏழு மாகாணங்களை ஒன்றாக்குதல் 107

அரசாங்கத்தின் குடியேற்றக் கொள்கையும் காணிக் குடியேற்றமும் 111

கல்ஓயா குடியேற்றத் திட்டம் 119

திருகோணமலை மாவட்டக் குடியேற்றம் 123

வவுனியா மாவட்டக் குடியேற்றம் 128

கிழக்கு மாகாணத்தில் சிங்களத் தேர்தல் மாவட்டங்களின் உருவாக்கம் 130

மணல் ஆறு (வெலி ஓயா) குடியேற்றம் 131

சிங்களக் குடியேற்றத் திட்டங்களும் தமிழர் போர் முனைப்பின் எழுச்சியும் 138





அரச கரும மொழியாகச் சிங்களம்: வரலாற்றுப் பின்னணி 144

அரச கரும மொழிகளாகச் சிங்களமும் தமிழும் 146

அரச கரும மொழியாக ‘சிங்களம் மட்டும்’ 155

‘சிங்களம் மட்டும்’ சட்டமும் பேராண்மையின் வளர்ச்சியும் 166

இன முரண்பாட்டை தூண்டுவதில் கல்வியின் பங்கு 168

காலனித்துவக் கல்வி 169

பல்கலைக்கழகக் கல்வியில் பாகுபாடு 170

பல்கலைக்கழக அனுமதியில் தமிழர் பாகுபடுத்தப்படுதல் 173

தகவு நோக்கில் பாகுபாடு பற்றிய விவாதம் 180

மலைநாட்டிலும் வடக்கு கிழக்கிற்கு வெளியிலும் தமிழரின் கல்வி 187

தொழில் வாய்ப்புகளில் பாகுபாடு 189

அரசியல் பிரச்சனை 191

அரசாங்கத்துறைத் தொழில் வாய்ப்பில் பாகுபாடு 192

இலங்கை அரசியலில் பௌத்தமும் இன முரண்பாடும் 202

சுதந்திரத்தின் பின்னர் தமிழருக்கு எதிரான கலவரங்கள் 202

முறிந்துபோன வாக்குறுதிகள் 207

தமிழ்த் தலைவர்களின் அமைதியான எதிர்ப்புகள் 209

1977ஆம் ஆண்டு தேர்தலும் தமிழ் மக்களும் 210

தமிழரின் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் 212

தமிழ்த் தேசிய இனத்தின்மீது ஒரு புதிய அரசியலமைப்பைத் திணித்தல் 217



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அத்தியாயம் 4


**தமிழர் போர்முனைப்பின் எழுச்சி** 222

தமிழர் போர்முனைப்பின் பரிணாம வளர்ச்சி 223

தமிழர் போர்முனைப்யின் தோற்றம் 227

தமிழர் அதிகரித்த அளவில் அந்நியப்படுத்தப்படல் 232

தமிழ் அரசியற் கட்சிகள் ஓரங்கட்டப்படுதல் 234

பேச்சுவார்த்தைகளின் தோல்வி: 1950களும் 1960களும் 238

தமிழ் மிதவாதிகளின் அதிகரித்துவந்த போர்முனைப்பு (1972 - 1975) 241

தமிழ்ப் போராளிக் குழுக்களின் உருவாக்கம் 242

தொடக்ககாலப் போர்முனைப்பு 245

ஈழத்திற்கான கோரிக்கை (1976 - 1979) 250

அரச வன்முறையும் போராளிகளும் (1979 - 1983) 252

விடுதலையை நோக்கிய வெகுசன முன்னெடுப்புகள் (1983 - 1985) 254

சிவில் யுத்தம், மே 1986 - ஆகஸ்ட் 1987 257

இலங்கை முஸ்லிம்களும் இன முரண்பாடும் 260

அரசியல் முறைமையின்மீது போர்முனைப்பின் தாக்கம் 263

போராளிக் குழுக்கள்: சித்தாந்தம், கட்டமைப்பு மற்றும் இலக்குகள் 265

தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்ரீரீஈ): தோற்றம் 266

எல்ரீரீஈயின் கொள்கை 270

எல்ரீரீஈயின் ஆரம்பகாலச் சித்தாந்தம் 272

எல்ரீரீஈயின் இணங்கிப்போகாத சித்தாந்தம் 274

எல்ரீரீஈயின் யுத்த உபாயம் 276

1980களுக்குப் பிறகான எல்ரீரீஈயின் போர்த்தந்திரங்கள் மனித அலை உத்திகள் 277







எல்ரீரீஈயின் தற்கொலைக் குண்டுதாரிகள் 279

எல்ரீரீஈயின் அதிகார எழுச்சியும் பலமும் 282

விடுதலைப் புலிகளின் ஒப்பற்ற வளர்ச்சி 285

எல்ரீரீஈயின் பெண் போராளிகள்: 'சுதந்திரப் பறவைகள்' 290

ஒரு விடுதலை இயக்கமாக எல்ரீரீஈ 304


## அத்தியாயம் 5


**இலங்கை-இந்திய உறவுகள் பிராந்திய மற்றும் சர்வதேசப் பரிமாணங்கள்** 310

இந்திய மேலாதிக்கம் 312

இந்தியாவின் மொன்றோ சித்தாந்தம் 313

வரலாற்று அடிப்படையில் இந்தியாவும் இலங்கையும் 320

இந்திய - இலங்கை உறவுகள் (1948 - 1980) 323

தமிழ் நாட்டு அரசியலும் இலங்கையின் இன முரண்பாடும் 326

காங்கிரஸ் காலப்பகுதி 326

தமிழ் நாட்டில் திராவிட இயக்கங்கள் 330

தி.க., தி.மு.க. மற்றும் அ.இ.அ.தி.மு.க. காலப் பகுதி 334

தமிழ்நாட்டுக் காரணி 337

இன முரண்பாடு: பிராந்தியப் பரிமாணங்கள் 347

இன முரண்பாடு: சர்வதேசப் பரிமாணங்கள் 349

வெளிநாட்டு அரசுகளும் இலங்கையின் இன முரண்பாடும்: இந்தியாவின் அக்கறை 351

வெளிநாட்டு அரசுகளின் பங்கு: 1977இன் பின்னர் அமெரிக்க இலங்கை உறவுகள் 354

திருகோணமலைத் துறைமுகம் 356




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


கலாநிதி ஆ. க. மனோகரன்

திருகோணமலை: எண்ணெய்த் தாங்கிப் பண்ணை அபிவிருத்தித் திட்டம் 357

1983இல் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'வுக்கு வசதிகள் நீடிப்பு 359

1983 முதல் இலங்கைக்கு அமெரிக்க உயர் பதவியாளர்களின் விஜயங்கள் 361

ஐக்கிய இராச்சியத்தின் (யுகே) பங்கு 363

இஸ்ரேலின் தலையீடு: தமிழர் மீதான தாக்கம் 365

பாகிஸ்தானின் பங்கு 370

சீனாவின் ஈடுபாடு 372

இலங்கை இன முரண்பாடு இந்தியாவில் ஏற்படுத்திய தாக்கங்கள் 375

சமூக-அரசியல் தாக்கங்கள் 376

பொருளாதார மற்றும் இராணுவ ரீதியான பாதிப்புகள் 379

1990களில் இந்திய-இலங்கை உறவுகள் 384

அத்தியாயம் 6

**இந்திய - இலங்கை ஒப்பந்தம்: மத்தியஸ்தராக இந்தியாவின் பங்கு** 391

1983 முதல் இந்திரா காந்தியின் தலைமையிலான மத்தியஸ்தம் 392

தமிழ்நாட்டுக் காரணி - புகலிடமாகவும் மத்தியஸ்தராகவும் இந்தியா 394

இந்தியாவின் இரு-தடக் கொள்கை (Two track policy) 395

1983க்குப் பிந்திய காட்சிப்புலம் 401

இன முரண்பாட்டின் இராணுவமயமாக்கம் 402

சர்வகட்சி மாநாடும் (1984) 'பிற்சேர்க்கை C'யும் 405

'பிற்சேர்க்கை C'யின் சில முக்கிய அம்சங்களாவன: 406







1985 முதல் ராஜீவ் காந்தியின்கீழ் மத்தியஸ்தம் 409

திம்பு சமாதானப் பேச்சுகள் - யூலை 1985 411

'அடுத்த கட்டப் பேச்சுக்கள்' 4 மே 1986 - 19 டிசெம்பர் 1986 415

இந்திய - இலங்கை ஒப்பந்தம் (ISLA): தோற்றமும் கோட்பாடுகளும் 421

அரசியல் மற்றும் இராணுவ நிலைமை 423

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மீதான பரிசோதனை 430

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் சூழமைவு 430

இந்தியாவின் புவி-அரசியல் நலன்கள் 432

இந்திய - இலங்கை ஒப்பந்தம் பற்றிய திறனாய்வு 434

இ.இ.ஒ. தமிழ் மக்களின் நலன்களை உறுதிப்படுத்தியதா? 435

இ.இ.ஒ. : குதிரைக்கு முன் வண்டியைக் கட்டும் செயல் 437

இ.இ.ஒ. அதிகாரப் பகிர்வா? அதிகாரப் பரவலாக்கமா? 440

மொழிப் பிரச்சனை: அரசாங்கத்தின் நிலைப்பாடு 441

தமிழர் பாரம்பரியத் தாயகம் பற்றி இ.இ.ஒ. 443

பொது மக்கள் வாக்கெடுப்பென்ற மோசடி 444

இ.இ.ஒ. நிபந்தனைகள் 446

இ.இ.ஒ. இந்தியாவின் தந்திரோபாய நலன்களை உறுதிப்படுத்தியது 447

இ.இ.ஒ. இன் தோல்விக்கான காரணங்கள் 449

இ.இ.ஒ. அமுல்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்கள் 454

மாகாண சபைச் சட்டத்திற்கான பதின்மூன்றாவது திருத்தம் 458

13ஆவது திருத்தத்திலுள்ள அதிகாரப்பகிர்வுப் பிரச்சனைகள் 459

நிறைவேற்றுக்குழு முறைமை 460

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேர்தலும், வ.கி.மா.சபையின் உருவாக்கமும் 461




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அத்தியாயம் 7


**தீர்வுக்கான முன்னெடுப்புகளும் அதற்கான தடைகளும் (1989 - 1998)** 471

எல்ரீரீஈயுடனான பேச்சுவார்த்தைகள் 1989-1990: ஒரு பரிசீலனை 471

சந்திரிகாவின் முன்மொழிவின் தடம்பின்பற்றுதல்: (1994 - 1998) 478

சந்திரிகாவின் தீர்வுதிட்ட முன்மொழிவுகள் (1995 - 1997) 479

இலங்கை அரசாங்க முன்மொழிவு பற்றிய ஒரு பரிசீலனை 485

பிராந்திய நிருவாகம் 486

பிராந்தியச் சட்டவாக்க அதிகாரம் 486

பிராந்தியத்துக்கான நிறைவேற்று அதிகாரங்கள் 487

புதிய முன்மொழிவுகளின் கீழ் 488

அமைச்சரவை 489

நிதி ஆணைக்குழு 489

அரச காணி 490

சட்டமும் ஒழுங்கும் 491

பிராந்தியக் காவல் துறையின் புலன்விசாரணை செய்யும் அதிகாரம் 491

நிதியும் வெளிநாட்டுக் கடனும் 492

கல்வி, உயர் கல்வி மற்றும் கல்விச் சேவைகள் 493

திட்டமிடலும் திட்டச் செயற்படுத்தலும் 494

பொருள் தெளிவற்ற ஏற்பாடுகளையும் சட்டத்தில் செல்லுபடியற்றவற்றையும் நீக்குதல் 496

உபாயகர விடயம் 497

வாழ்க்கைத்தொழிலுக்கான உரிமைகள் 497

தமிழர்களின் கவலைகள் 498

பெரும்பான்மையின் தயவை எதிர்பார்த்த நிலையில் 498







**சமாதானத்துக்கான தடைகள்** 504

- ஆளுங்கட்சி - எதிர் கட்சி உடன்பாடு இல்லாமை 505
- உளவியல் ரீதியான தடைகள் 506
- மாகாண சபைக்கு அதிகாரங்கள் இல்லாமை 510
- ஈழம் என்ற எண்ணக்கரு பற்றிய சர்ச்சை 512
- ஒற்றையாட்சிக் கட்டமைப்பிற்கான அரசியலமைப்பு 512
- சிங்கள, தமிழ் மக்களின் ஆழ்மன நிலைப்பாடு 514
- சிங்களத் தலைவர்கள் சர்வதேச சமூகத்தால் அங்கிகரிக்கப்பட்ட சுயநிர்ணய உரிமைகளை ஏற்க மறுத்தல் 516
- சிங்கள மக்களின் அச்சமும் கட்சி நலன்களும் 518
- ஒருதலைபட்ச அணுகுமுறை 519
- இருதரப்பினருக்கும் நம்பிக்கை இல்லாமை 520
- அரசியல் மிதவாதிகளை விலக்கியொழித்தல் 522
- இராணுவத் தீர்வில் நம்பிக்கை 526
- பிரச்சினையின் சாரம் 531
- ஒற்றையாட்சி அரசியலமைப்பு 534

இன முரண்பாட்டுத் தீர்வின் நெருக்கடி நிலை 536

முரண்பாட்டுக்குச் சாத்தியமான தீர்வு 545

ஈழமும் பிரிந்துசெல்லுதற்கான உரிமையும் 550

**தீர்வுக்கான வழிமுறை - அதிகாரப்பகிர்வுகள்** 554

கூட்டாட்சி 555

சமஷ்டி 556

பிரிந்து செல்லுதல் 558

ஐக்கிய இலங்கையின் முடிவு 559

இந்த ஆய்வின் மூலம் தெரிய வருவதாவது 560


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அத்தியாயம் 8

**இனமுரண்பாட்டுக்குப் பிந்தியகாலமும் சனநாயகமும்** 565

மோதலுக்குப் பிந்திய அரசு: அரசியல் தெரிவுகளின் முக்கியத்துவம் 558

சனநாயக அரச உருவாக்கத்துக்கான முன்நிபந்தனைகள் 591

பிரிவினை வாதத்துக்குப் பிந்திய நீடித்திருக்கக்கூடிய தெரிவுகள் 597

## அத்தியாயம் 9

**1999-2007 வரையான வரலாற்று நிகழ்வுகள்** 612

சர்வதேசத் தலையீட்டிற்கான பின்னணி 616

போர்நிறுத்த உடன்படிக்கை 619

விடுதலைப் புலிகள்மீதான தடை 627

சிங்கள 'தலைமைகளின்' மனோநிலையும் சிறுபான்மைத் தேசிய இனங்களும் 629

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை (Interim Self-Governing Authority) 630

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை - ஒருபரிசீலனை 636

சமாதானப் பேச்சு வார்த்தைகள் - நோர்வேயின் ஈடுபாடு (2002 - 2005) 642

நோர்வேயின் உதவியுடனான அமைதிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பம் 644

வடக்கு-கிழக்கு பிரிப்பும் இலங்கை நீதித்துறையும் 647

வடக்கு-கிழக்கு மாகாணப் பிரிப்பும் பல்வேறு அரசியல் சக்திகளின் நிலைப்பாடும் 659

மாகாண - மாவட்ட எல்லை மாற்றங்களும் அரசின் நடைமுறைகளும் 665

கருணாவின் வெளியேற்றம் 667





மகிந்தராஜபக்சவின் தலைமையும் சமாதான நடவடிக்கைகளும் 670

மீண்டும் போர் 1. திருக்கோணமலை 674

2. மாவிலாறு 676

சம்பூர் - யாழ்ப்பாணம் 677

பேச்சுவார்த்தையில் உள்ள சவால்கள் 679

ராஜபக்ச தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்வுத்திட்டம் 682

சர்வகட்சி பிரதிநிதிகள் குழு 690

பேச்சு வார்த்தைகள் 692

ஜெனிவா முதற்கட்டப் பேச்சுவார்த்தை 695

இரண்டாம் கட்ட ஜெனிவா பேச்சுவார்த்தை 702

Bibliography (உசாத்துணை நூல்கள்) 709

## பின்னிணைப்புகள் (APPENDIXES)

1. 1983 முதல் 1998 வரை யுத்தச் செலவின் சுருக்கம். செலவினம், சேதங்கள் மற்றும் விளைவளவின் இழப்பு 753
2. இந்த ஆய்வுக்காக நேர்காணப்பட்டவர்களின் நிரல் 755
3. சிலோன் அரசியலமைப்பு 1946இன் (சோல்பரி அரசியலமைப்பு) பிரிவு 29 760
4. 1948இன் 18ஆம் இலக்க இலங்கைப் பிரசாவுரிமைச் சட்டம் 761
5. 1956இன் 33ஆம் இலக்க அரசகரும மொழி (சிங்களம் மட்டும்) சட்டம் 768
6. பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் 770
7. டட்லி சேனாநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் 772
8. வட்டுக்கோட்டை தீர்மானம் (1976) 774
9. 1998இன் 1ஆம் இலக்க அவசரகால ஒழுங்குவிதிகள் 777
10. இலங்கையின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் PTA 780



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



11. இலங்கை ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் (1977) 784

12. தமிழ்ப் போராளி இயக்கங்களின் நிரல் 785

13. அரசியலமைப்புக்கான ஆறாவது திருத்தம் 787

14. பிற்சேர்க்கை (Annexure – C) 790

15. திம்பு பிரகடனம் (1985) 793

16. இலங்கையில் சமாதானத்தையும் வழமை நிலையையும் ஏற்படுத்துவதற்கான இந்திய - இலங்கை உடன்படிக்கை 795

17. வியம் ஃபொக்ஸ் உடன்படிக்கை 802

18. இலங்கையின் புனரமைப்பு அபிவிருத்தி மீதான டோக்கியோப் பிரகடனம் (2003 யூன் 10) 804

19. ஒஸ்லோ பிரகடனம் 814

20. சுனாமிக்கு பின்னரான தொழிற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றை தாபிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம். (P.Toms) 818

21. சிறியலங்கா ஜனநாயகச் சோஸலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் பெப்ரவரி - 23-2002 828

22. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபு 839

○○○



## ABBREVIATIONS – சுருக்கம்

| | |
|---|---|
| ACMA | All Ceylon Moors Association<br>அகில இலங்கை சோனகர் சங்கம் |
| ACTC | All Ceylon Tamil Congress<br>அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் |
| AGAs | Assistant Government Agents<br>உதவி அரசாங்க அதிபர்கள் |
| AIADMK | All India Anna Dravida Munnetra Kazhagam<br>அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் |
| ANC | African National Congress<br>ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் |
| APC | All Party Conference<br>சர்வ கட்சி மகாநாடு |
| ASEAN | Association of South East Asian Nation<br>தென் கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு |
| BBC | British Broadcasting Corporation<br>பிரித்தானிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் |
| B-C Pact | Bandaranaike - Chelvanayagam Pact<br>பண்டா - செல்வா ஒப்பந்தம் |
| BJP | Bharatiya Janata Party<br>பாரதிய ஜனதா கட்சி |
| CAS | Ceylon Administrative Service<br>இலங்கை நிர்வாக சேவை |
| CENTCOM | Central Command<br>மத்திய கட்டளையகம் |
| CENTO | Central Treaty Organisation<br>மத்திய கிழக்கு சம்பந்த நாடுகளின் கூட்டமைப்பு |
| CFS | Consumer Finance and Social - Economic Survey<br>நுகர்வோர் நிதி, சமூக, பொருளாதார மதிப்பீடு |
| CIA | Central Intelligence Agency<br>மத்திய புலனாய்வுத்துறை. (அமெரிக்க உளவு நிறுவனம்) |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | |
|---|---|
| CMB | Colombo<br>கொழும்பு |
| CNA | Ceylon National Association<br>இலங்கை தேசிய சங்கம் |
| CNC | Ceylon National Congress<br>இலங்கை தேசிய காங்கிரஸ் |
| | Congress (I) Indra Congress<br>இந்திரா காங்கிரஸ் |
| CPA | Center for Policy Alternatives<br>மாற்றுக் கொள்கைக்கான நிலையம் |
| CPI (M) | CPI - Marxist<br>இந்தியக் கம்யூனிஸ் கட்சி (மார்க்சிஸ்ட்) |
| CPI | Communist Party of India<br>இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி |
| CRD | Committee for Racial Development<br>இனங்களுக்கிடையில் அபிவிருத்திக்கான குழு |
| CRL | Ceylon Reform League<br>இலங்கை மறுசீரமைப்புச் சங்கம் |
| CRP | Conflict Resolution Package<br>முரண்பாட்டு தீர்வுக்கான பொதி. |
| CSCE | Conference for Security and Co - operation in Europe<br>ஐரோப்பிய பாதுகாப்புக்கும் ஒத்துழைப்புக்குமான மகாநாடு |
| CTO | Central Telegraphic Office<br>மத்திய தந்தி அலுவலகம் |
| CVF | Citizen Volunteer Force<br>குடிமக்கள் தொண்டர் படை |
| CWC | Ceylon Workers Congress<br>இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் |
| DCR | Denoughmore Commission Report<br>டொனமூர் கமிஷன் அறிக்கை |
| DCS | Department of Census and Statistics<br>குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் |
| DDC | District Development Council<br>மாவட்ட அபிவிருத்திச் சபை |





| | |
|---|---|
| DK | Dravidar Kazhagam<br>திராவிடர் கழகம் |
| DMK | Dravida Munnetra Kazhagam<br>திராவிட முன்னேற்றக் கழகம் |
| EAI | Education Attainment Index<br>கல்வித் தேர்ச்சிக் குறிகாட்டி |
| ENDLF | Eelam National Democratic Liberation Front<br>ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி |
| ENLF | Eelam National Liberation Front<br>ஈழ தேசிய விடுதலை முன்னணி |
| EPDP | Eelam People's Democratic Party<br>ஈழ மக்கள் ஜனநாயக கட்சி |
| EPRLF | Eelam People's Revolutionary Liberation Front<br>ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி |
| EROS | Eelam Revolutionary Organisers<br>ஈழப்புரட்சி அமைப்பு |
| ERs | Emergency Regulations<br>அவசரகால விதிமுறைகள் |
| FDL | Forward Defence Line<br>பாதுகாப்பு முன்னரண்கள் |
| FDLs | Forward Defence Lines<br>முதன்மைப் பாதுகாப்பு எல்லைகள் |
| FP | Federal Party<br>சமஷ்டிக் கட்சி (தமிழரசுக் கட்சி) |
| IAC | Interim Administration Council<br>இடைக்கால நிர்வாக சபை |
| ICES | International Centre for Ethnic Studies<br>இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் |
| ICJ | International Commission of Jurists<br>சர்வதேச யூரிகள் சங்கம் |
| ICS | Institute of Commonwealth Studies<br>பொது நலவாயக் கற்கைகள் நிறுவனம் |
| IDS | Institute for Defence Studies<br>பாதுகாப்புக் கற்கைகள் நிறுவனம் |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



IFT International Federation of Tamils
உலகத் தமிழர் பேரவை

INT Indian Tamils
இந்தியத் தமிழர்

IPKF Indian Peace Keeping Force
இந்திய அமைதி காக்கும் படை

ISI Inter Service Intelligence
இன்ரர் சர்வீஸ் இன்ரெலிஜன்ஸ் (பாகிஸ்தானிய உளவுப் பிரிவு)

ISLA Indo - Sri lanka Accord
இந்திய இலங்கை ஒப்பந்தம்

ITAK Ilankai Tamil Arasu Kadchi
இலங்கை தமிழ் அரசுக்கட்சி

J&K Jammu and Kashmir
ஜம்மு காஷ்மீர்

JNU Jawaharlal Nehru University
ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகம்

JP Justice Party
நீதிக் கட்சி

JSS Jatik Sevak Sangamaya
ஜாதிக சேவசங்கமய (தேசிய சேவகர்கள் சங்கம்)

JUTHR Jaffna University Teachers of Human Rights
மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம்

JVP Janatha Vimukti Peramuna
ஜனதா விமுத்தி பெருமுன (மக்கள் விடுதலை முன்னணி)

KAN Kandyan Sinhalese
கண்டியச் சிங்களவர்

KMS Keenie Minee Services
கினி மினி சர்வீஸ்

LCS Low Country Sinhalese
கீழ் நாட்டுச் சிங்களவர்

LSE London School of Economics
லண்டன் ஸ்கூல் ஒவ் எகொனமிக்ஸ்





LTTE Liberation Tigers of Tamil Eelam
தமிழீழ விடுதலைப் புலிகள்

MDMK Marumalarchi DMK
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

MEP Mahajana Eksath Perumuna
மகாஜன எக்ஷத் பெரமுன

MOD Ministry of Defence
பாதுகாப்பு அமைச்சு

Moores Muslims
முஸ்லீம்கள்

Mossad Israeli Secret Service
இஸ்ரேலிய உளவுப் பிரிவு

MSV Defence of the Motherland
தாயகப் பாதுகாப்பு அணி

NAM Non Aligned Movement
அணிசேரா நாடுகளின் இயக்கம்

NATO North Atlantic Treaty Organisation
வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளின் கூட்டமைப்பு

NEP North - East Provinces
வடக்கு - கிழக்கு மகாணம்

NEPC North - East Provincial Council
வடக்கு - கிழக்கு மகாண சபை

NEPG North and East Provincial Government
வடக்கு - கிழக்கு மகாண அரசு

NGO Non Governmental Organisation
அரசு சாரா நிறுவனங்கள்

NPC National Peace Council
தேசிய சமாதான பேரவை

OAU Organisation of African Unity
ஆபிரிக்க ஐக்கியத்திற்கான அமைப்பு

PA People's Alliance
பொதுஜன முன்னணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | |
|---|---|
| PCs | Provincial Councils<br>மகாண சபைகள் |
| PFLT | People's Front of Liberation Tigers<br>விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி |
| PLO | Palestine Liberation Organisation<br>பாலஸ்தீன விடுதலை இயக்கம் |
| PLOTE | People's Liberation Organisation of Tamil Eelam<br>தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் |
| PMK | Paatali Makkal Katchi<br>பாட்டாளி மக்கள் கட்சி |
| PRO | Public Record Office<br>அரசு ஆவணக் காப்பகம் |
| PTA | Prevention of Terrorism Act<br>பயங்கரவாத தடைச்சட்டம் |
| R&R | Rest and Recreation<br>ஓய்வும் பொழுதுபோக்கும் |
| RAW | Research and Analysis Wing<br>ஆய்வு மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு<br>(இந்திய உளவு நிறுவனம்) |
| RCSS | Regional Centre for Strategic Studies<br>மூலோபாயக் கல்விக்கான பிராந்திய நிலையம் |
| RDL | Roman Dutch Law<br>ரோமன் டச்சு சட்டம் |
| SAARC | South Asian Associations for Regional Cooperation<br>பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு |
| SAS | Special Air Services<br>விசேஷ விமான சேவை |
| S-C Pact | Senanayaka - Chelvanayagam Pact<br>சேனநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் |
| SCR | Soulbury Commission Report<br>சோல்பரி கமிஷன் அறிக்கை |
| SEATO | South East Treaty Organisation<br>தென்கிழக்கு ஒப்பந்த நாடுகளின் கூட்டமைப்பு |
| SGI | Sub-committee Gender Issues<br>பால்நிலைப் பிரச்சனைகளுக்கான உபகுழு |
| SILF | South Indian Liberal Federation<br>தென் இந்திய லிபரல் ஒன்றியம் |
| SIN | Sinhalese<br>சிங்களவர் |
| SIPRI | Stockholm International Peace Research Institute<br>ஸ்ரொக்கோம் சர்வதேச சமாதான ஆய்வு நிறுவனம் |
| SLFP | Sri Lanka Freedom Party<br>சிறீலங்கா சுதந்திரக் கட்சி |
| SLT | Sri Lankan Tamils<br>இலங்கைத் தமிழர் |
| SOAS | School of Oriental and African Studies<br>ஆபிரிக்க கல்விகளுக்கான நிலையம் |
| SP | Sessional Papers |
| SRM | Self Respect Movement<br>சுயமரியாதை இயக்கம் |
| SSA | Social Scientists Association<br>சமூக விஞ்ஞானச் சங்கம் |
| STF | Special Task Force<br>விசேட அதிரடிப்படை |
| TAM | Tamils<br>தமிழர் |
| TCM | Tamil Church Mission |
| TELO | Tamil Eelam Liberation Organisation<br>தமிழீழ விடுதலை இயக்கம் |
| TESO | Tamil Eelam Supporter's Organisation<br>தமிழீழ ஆதரவாளர் அமைப்பு |
| TIC | Tamil Information Centre<br>தமிழர் தகவல் நிலையம் |
| TN | Tamil Nadu<br>தமிழ் நாடு |
| TNA | Tamil National Army<br>தமிழ் தேசிய இராணுவம் |







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



TNA Tamil National Allaiane
தமிழ் தேசிய கூட்டமைப்பு
TNRF Tamil Nadu Retrieval Force
TNT Tamil New Tigers
புதிய விடுதலைப் புலிகள்
TSF Tamil Student Federation
தமிழ் மாணவர் பேரவை
TTH Tamil Traditional Homeland
தமிழர் பாரம்பரியத் தாயகம்
TUF Tamil United Front
தமிழர் ஐக்கிய முன்னணி
TULF Tamil United Liberation Front
தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி
TYF Tamil Youth Federation
தமிழ் இளைஞர் பேரவை
UDHR Universal Declaration of Human Rights
சர்வதேச மனித உரிமை பிரகடனங்கள்
UF United Front
ஐக்கிய முன்னணி
ULFA United Liberation Front of Assam
அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி
UN United Nations
ஐக்கிய நாடுகள் சபை
UNP United National Party
ஐக்கிய தேசியக் கட்சி
UPI United Press of India
USA United States of America
அமெரிக் ஐக்கிய நாடுகள்
USSR Union of Soviet Socialist Republics
சோவியத் ரஷ்யா
VOA Voice of America
அமெரிக்க குரல்
WFLT Women Front of the Liberation Tigers
விடுதலைப் புலிகள் பெண்கள் முன்னணி

OOO



அத்தியாயம்- 1

# ஆய்வின் கோட்பாடுகளும் குறிக்கோள்களும்

சமூக விஞ்ஞானத்தில் இன முரண்பாடு பற்றிய ஆய்வு அண்மைக்காலத்தில் பெருமளவு முக்கியத்துவம் பெற்றுள்ளது. இனரீதியாகவும் மதரீதியாகவும் தம்மை அடையாளம் காண்கின்ற வெவ்வேறு மக்கள் குழுக்களால் முரண்பாடுகள் திடீரென்று அதிகரித்துவருவதை உலகம் சந்தித்து வருகின்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இம்முரண்பாடுகள் அரசினுள் இடம்பெறுபவை. இனமுரண்பாடு பெரும்பாலும் தேசிய ஒருங்கிணைப்புக்கு ஒரு தடையாக மட்டுமன்றி அரசியல் உறுதிப்பாடின்மைக்கான ஒரு மூலமாகவும் விளங்கி வருகின்றது. இலங்கை, வேறு சில வளர்முக நாடுகளைப் போன்று, 1948இல் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றதிலிருந்து இனமுரண்பாட்டின் கோர விளைவுகளை அனுபவித்து வருகிறது.

இலங்கையில் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையிலான இனமுரண்பாடு சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பொருளாதாரரீதியாகவும் நாட்டைக் கூறுபடுத்தியுள்ளதுடன் தேசத்தின் உளவியலிலும் ஆழமான வடுக்களை ஏற்படுத்தியுள்ளது. என்றென்றும் ஆழமாகி வருகின்ற இனப்பிளவின் விளைவாக வன்செயல் மட்டங்கள் அதிகரித்து வருகின்றன. அவை இச்சிறுதீவை அதிரச் செய்து வழமையான பொருளாதார வாழ்வையும் சமூக வாழ்வையும் நிலைகுலைவித்துள்ளன. நீண்டகாலம் நீடித்துக் கொண்டிருக்கின்ற இந்த இன முரண்பாட்டால் இன்று இலங்கையர் மட்டுமன்றி அதன் உடனயல் நாடான இந்தியாவும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் முழுச் சர்வதேச சமூகமும் வெவ்வேறு வகையில் பாதிக்கப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கையின் இனமுரண்பாடானது படிப்படியாகத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகளாலும் மனித உரிமை மீறல்களினாலும் மூர்க்கத்தனமான வன்முறையாக வளர்ந்தது. இனமோதல் 1983இல் தொடங்கியதாகப் பொதுவாக எடுத்துக்காட்டப்படுகின்றது. இன முரண்பாட்டால் தோற்றுவிக்கப்பட்ட வன்முறை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆழமாக ஊடுருவி வருகின்றது. முரண்பாட்டுக்குத் தீர்வொன்றைக் காண்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு முயற்சியும் வன்முறைத் தீயை எண்ணெய் விட்டு வளர்ப்பதாகத் தோன்றுவதனால் இத்தீவானது அடிக்கடி தனது சோகம் நிறைந்த அதன் சொந்த வரலாற்றைத் திரும்பப் பார்ப்பதே அதன் தலைவிதியாகிவிட்டது. இராணுவ வெற்றி எந்தவொரு தரப்பிற்கும் கைக்கெட்டாத நிலையில் உள்ளபோதிலும் ஆழமாக வேரூன்றிவரும் இவ்வன்முறைச் சக்கரத்தைத் தடுத்து நிறுத்துவதென்பது, நன்கு நங்கூரமிடப்பட்டுள்ள இந்த இனமுரண்பாட்டில் வழக்கத்தைவிடக் கஷ்டமானதும் சிக்கலானதுமான ஒரு பொறுப்பாகும்.

இம்முரண்பாடு பனிப்போர் முடிவடையும் தருவாயில் தோன்றியது. உப கண்டத்தினுள் பனிப்போர் முக்கியத்துவம் பெற்றிருந்தபோதிலும், பிராந்தியத்தைப் பொறுத்தவரை இது ஒருபோதும் ஒருவருக்குப் பதிலாகப் போர் புரியும் நிலைக்கு வளர்ச்சியடையவில்லை. எனினும் பனிப்போருக்குப் பிந்திய புதிய தேசியவாதத்தில் சுயநிர்ணயத்துக்கும் தேசிய அடையாளத்துக்குமான தமிழரின் உரிமைக் கோரிக்கைகள் ஒத்திசைவதிர்வைக் கண்டன.

இலங்கையில் இன முரண்பாடு 1948இல் நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து விடாது தொடர்ந்துள்ளது. இது 1956இல், 1958இல், 1977இல், 1981இல் பின்னர் மீண்டும் 1983இல் பதற்றத்துக்கும் இன வன்செயல்களுக்கும் இனக் கலவரங்களுக்கும் வழிவகுத்தது (தம்பையா 1992 : 58-66). இவை எல்லாவற்றிலும் இலங்கையில் 1983 யூலையில் இடம்பெற்ற கலவரங்களும் அதன் தொடர் நடவடிக்கைகளும் நாட்டின் உறுதிப்பாட்டின் அத்திவாரத்தைத்தையே ஆட்டங்கான வைப்பதற்குக் காரணமாயிருந்தன.





வாக்குரிமையைப் பறித்தல், பல்கலைக்கழக அனுமதிகளைத் தரப்படுத்துதல் என்பவற்றில் தொடங்கி, மொழிப் பாகுபாடு மற்றும் தொழில் கொள்கைகள், தமிழ்ப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யாமை, தமிழர் தாயகத்தில் அரச ஆதரவுடனான குடியேற்றம் என்பவை வரையிலான ஒரு தொடர் வரிசையான சட்டவாக்க மற்றும் நிருவாக நடவடிக்கைகளூடாக இலங்கைத் தமிழர்மீது சிங்களப் பெரும்பான்மை அதன் மேலாதிக்கத்தைத் தாபிக்க முனைந்துள்ளது. தமிழ் மக்களை அடிபணியச் செய்வதற்கு அவர்களை அச்சுறுத்தி மிரட்டுகின்ற நோக்குடன் அம்மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட உடல்ரீதியான தாக்குதல்கள் மூலம் இச்சட்டவாக்க மற்றும் நிருவாக நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்டன.

1972 முதற்கொண்டு இராணுவம் தமிழர் தாயகத்தைத் தொடர்ச்சியாக ஆக்கிரமித்துள்ளது. ஏற்றுக்கொள்ள முடியாத இத்தகைய நிலைமைகளுக்கு எதிராகப் பொது மக்களின் அதிருப்தியானது கடுமையான இராணுவ அடக்குமுறை மூலமும், வன்முறை மூலமும் எதிர்கொள்ளப்படுவதே வழக்கமாக நடைபெற்றுவருகிறது. கடந்த பல ஆண்டுகளில் அனேகமானோர் தடுப்புக்காவலில் கொலை செய்யப்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்ற போதிலும் அச்செயல்களுக்காகத் தண்டனையெதுவும் வழங்கப்படவில்லை. தமிழர் கொலைகள் தொடர்பான வழக்குகள், ஒன்றில் இழுத்தடிக்கப்படுகின்றன இன்றேல் கைவிடப்படுகின்றன. இராணுவ நடவடிக்கைகளின்போதும் கண்ணிவெடிகளைக் கண்டுபிடிப்பதற்கும் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகச் செயற்படும்படி இலங்கை இராணுவம் நிர்ப்பந்தித்துள்ளது. இராணுவக் கொலைக் குழுக்கள் நாட்டில் தொடர்ந்து செயற்படுகின்றன. அடையாளமற்ற வாகனங்களில் பயணஞ்செய்யும் அக்குழுக்கள் தமிழ்ப் போராளிகளுடன் தொடர்புடையவரெனச் சந்தேகிக்கப்படும் எவரையும் கடத்திச் செல்கின்றன அல்லது விசாரணையெதுவுமின்றிக் கொலை செய்கின்றன.

1977இல் இலங்கைத் தமிழர்கள் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய ஈழம் என்றழைக்கப்படக்கூடிய தனிவேறான அரசொன்றைக் கோரிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துடன் அதனைத் தமது பாரம்பரியத் தாயகமென்றும் உரிமை கொண்டாடினர். 1976வரை இன முரண்பாடு பெருமளவுக்கு இலங்கைத் தமிழருக்கும் சிங்களவருக்கும் வரையறுக்கப்பட்டதாயிருந்தபோதிலும் 1977 ஆகஸ்டின் பின்னர் அவ்வாறிருக்கவில்லை. நாட்டில் இனக் கலவரங்கள் வெடித்தபோதெல்லாம் சிங்களவர் மலைநாட்டுத் தமிழர்களையும் தாக்கினர். 1977 முதல் இலங்கைத் தமிழர்களுக்குத் தனிவேறான அரசொன்றைத் தாபிக்கின்ற பிரதான குறிக்கோளுடன் பல்வேறு தமிழ்ப் போராளி இயக்கங்கள் திடீரெனத் தோன்றுவதை இலங்கை கண்டது.

தொடக்கத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இடம்பெற்ற வன்செயல்களின் தொடர்ச்சிதான் இறுதியில் 1970களின் நடுப்பகுதியில் தமிழர் போர்முனைப்பின் எழுச்சிக்கு வழிவகுத்தது. இப்போர்முனைப்பைத் தோல்வியுறச் செய்து தமிழர்களை அடிமைப்படுத்த வேண்டுமென்ற தெளிவான நோக்குடன் அதிகரித்த அளவில் பெரும்பாலான தமிழ் மக்களின்மீது பரந்த அளவில் பழிவாங்கும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. 1970களின் பிற்பகுதியில் அவசரகால ஒழுங்கு விதிகளின்கீழும், 'நாகரிகமடைந்த எந்தவொரு நாட்டினதும் சட்டப்புத்தகத்தில் ஒரு கறை' என்று சர்வதேசச் சட்டவல்லுனர்களின் ஆணைக்குழுவால் விவரிக்கப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழும் பெருந்தொகையான தமிழ் இளைஞர்கள் வழக்கு விசாரணையின்றித் தடுத்துவைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டனர் (லியறி 1983: 48). 1980இலும் அதன் பின்னரும் இலங்கை ஆயுதப் படைகள் தமிழர்களைத் தான் தோன்றித்தனமாகக் கொல்லத் தொடங்கின. 'சந்தேகத்துக்குரியவர்களைப் பிடிக்க முடியாதபோது அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பணயக் கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்டனர். இறுதியில் இலங்கை அரசின் பார்வையில் எல்லாத் தமிழர்களும் முதல்தோற்றத்திலேயே 'பயங்கரவாதிகளாக' அல்லது 'புலிச்' சந்தேக நபர்களாகக் காணப்பட்டனர் (ராஜநாயகம் 1986: 91-103).

சுதந்திரமடைந்து ஐம்பத்தைந்து ஆண்டுகள் கடந்த பின்னரும் கூடத் தேசத்தைக் கட்டியெழுப்புதலென்ற நுண்கலையை இலங்கை கற்றதாயில்லை. கடந்த 20 ஆண்டுகளாக





(1983-2003) ஒரு யுத்தத்தில் சிக்குண்ட நிலையில், பாவத்திற்காக ஒரளவேனும் வருந்தி சமாதான முயற்சிகளை முன்னெடுக்குமென்ற நம்பிக்கை இன்னமும் இல்லை. மீறப்பட்ட வாக்குறுதிகள், யுத்த மனப்பான்மை, விடியலை ஒருபோதும் காணாத சமாதானத் திட்டங்கள் என்பவை இன்றுவரை இனப்பிரச்சினைத் தீர்விற்கான பேச்சுவார்த்தைகளைத் தடுத்துள்ளன.

தொடர்கின்ற இம்முரண்பாட்டில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் இதுவரை உயிரிழந்துள்ளனர் என்றும், பத்து இலட்சம் மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளனரென்றும், சுமார் 11,000 பேர் காணாமற் போயுள்ளனரென்றும், 800,000க்கும் அதிகமானவர்கள் நாட்டைவிட்டுத் தப்பியோடி வெளிநாடுகளில் அகதிகளாகியுள்ளனரென்றும், 20,000க்கும் அதிகமானவர்கள் நிரந்தரக் காயங்களுக்குள்ளாகி நாட்டின் பல்வேறு திக்குகளிலுமுள்ள புனர்வாழ்வு நிலையங்களில் நலிவுறுகின்றனரென்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

யுத்தத்தின் விலை மதிப்பிட முடியாதது. யுத்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார இழப்பு அதன் மேற்பரப்பை மட்டுமே குறிக்கின்றது. அளவற்ற மனிதத் துயரத்துக்கும் விரயத்துக்கும் விலை நிர்ணயிக்க முடியாது. உள்நாட்டு மோதல் நாடுகளுக்கிடையிலான யுத்தத்திலிருந்து வேறுபட்டது. இலங்கையில் யுத்தச் செலவானது பொருளாதார, மனித, சமூக அரசியல் மற்றும் நெறிமுறை இழப்புகளை உள்ளடக்குகின்றது.

(1) பொருளாதார மதிப்பானது, யுத்தத்திற்காகச் செலவிடப்பட்ட வளங்களையும், வடக்கிலும் கிழக்கிலும் மற்றும் ஏனைய பகுதிகளிலும் சீரழிக்கப்பட்ட சொத்துகளின் மதிப்பையும், வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் செலவிடப்பட்ட பொருளாதார மதிப்பையும் உள்ளடக்கியது.

(2) மனித இழப்பானது போரிடுபவர்களினதும் சிவிலியன்களினதும் இறப்பையும், காயத்தையும், தனியாகத் தவிக்கவிடப்பட்டவர்களினதும், அனாதைகளாக்கப்பட்டவர்களினதும், உறவினர்களினதும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நண்பர்களினதும், இடம்பெயர்ந்த மக்களினதும், வீடற்றவர்களினதும் தாங்கமுடியாத வேதனையையும் உள்ளடக்குகின்றது.

மனித விழுமியங்களின் மதிப்பு அளவிடற்கரியதென்பதுடன், அதனைப் பொருளாதார மதிப்புகளாகக் கணக்கிடப்படவும் முடியாது. எனினும் இறப்பினாலும், காயத்தினாலும் இழக்கப்பட்ட பொருளாதார ஆயுள் ஆண்டுகள், இடப்பெயர்வினால் தடைப்பட்ட வருமானம் ஈட்டும் நடவடிக்கைகள், வெளிநாடுகளில் அடைக்கலம் தேடிச் சென்றவர்களால் இந்நாடு இழந்துள்ள ஆற்றல்கள், இடம் பெயர்ந்தவர்களைப் பராமரிப்பதற்கும் அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்குமான செலவு என்பவற்றை எண்ணிப்பார்க்க வேண்டும். உள்நாட்டு யுத்தம் ஒரு சமுதாயத்தின் விழுமியங்களையும், மனவலிமையின் அத்திவாரங்களையும் அரித்து சேதப்படுத்திவிடும். அது முழுச் சமுதாயத்தினுள்ளும் ஊடுருவிப் பரவுகின்ற வன்முறைக் கலாச்சாரமொன்றை ஊட்டி வளர்க்கின்றது.

யுத்தத்தின் பொருளாதாரச் செலவு, இழந்துபோன மானுட விழுமியங்கள் மற்றும் தொலைந்துபோன நீதி நேர்மை ஆகியவற்றை இலங்கையில் உள்ள ஒட்டுமொத்த சமுதாயத்தினரும் கூட்டாகவே சுமக்கின்றனர். அதனை சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்கள் அனைத்தும் சுமக்கின்றன. இலங்கை அரசாங்கமும் தமிழ்ப் போராளி இயக்கமும் பாரிய நிதி மற்றும் மனிதவளங்களைத் திரட்டி அவற்றின் உதவியுடன் இந்த அவலமான யுத்தத்தைத் தொடர்கின்றன, மனித உயிர்கள் கொல்லப்படுகின்றன. சமூக, பொருளாதார உட்கட்டமைப்பு அழிக்கப்படுகின்றது. பெண்கள் விதவைகளாக்கப்படுகின்றனர்; பிள்ளைகள் அனாதைகளாக்கப்படுகின்றனர்; பெருந்தொகையான மக்களின் மதிப்புமிக்க மனித வாழ்வு பறிக்கப்படுகின்றது. சண்டையோ தொடர்கின்றது. மக்கள் பலியாகின்றனர் (1998 வரை யுத்தச் செலவின் சுருக்கமொன்றைப் பின்னிணைப்பு 1 தருகின்றது).

எனவே, நான்கு தசாப்தங்களுக்கு மேலாக நாட்டின் மனித, சமூக மற்றும் நிலையான வளங்களையும் இழக்கச் செய்கின்ற இந்நீடித்த யுத்தத்துக்கான காரணங்களையும்





அதன் விளைவுகளையும் விளங்கிக்கொள்வதற்கும் விளக்குவதற்குமான பெரும் தேவையொன்றுள்ளது. இலங்கையில் இன முரண்பாட்டுப் பிரச்சினை இவ்வளவு கொடுமை நிறைந்ததாக இருக்கின்றபோதிலும், இதனைக் கருப்பொருளாகக் கொண்டு சமகாலத்தின்மீது மட்டுமன்றி பிரச்சினையின் வரலாற்றுத் தோற்றம்வரையில் கவனஞ் செலுத்துகின்ற கொள்கை அடிப்படையிலான சரியான திசைவழியில் அறிவுசார்ந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே இம்முரண்பாட்டின் தோற்றுவாய், அதனை நீடித்திருக்கச்செய்கின்ற காரணிகள், முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகள், அவை ஏன் தோல்வியடைந்தன என்பவைதான் இந்த ஆய்வின் கருப்பொருளாகும். அத்துடன் இந்த ஆய்வுநூல் முரண்பாட்டிற்கான தோற்றத்தை வரலாற்றுப் பின்னணியில் நடுநிலையுடன் தடம்பற்றுகின்ற அதேவேளை, முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான சமீபகால நடவடிக்கைகளில் உள்ள குறைபாடுகளையும் முனைப்படுத்திக்காட்ட முயற்சிக்கின்றது. இது யுத்தத்தின் முடிவை நோக்கி அரசியல் செயல்முறையை முன்னேற்றுவதற்குச் சாத்தியமான வழிவகைகளை ஆராய்கின்றது. இந்நூலின் பெரும்பகுதி இவற்றின் சில அம்சங்களைத் திறனாய்வு செய்கின்ற அதேசமயம், இலங்கையின் அனுபவத்திலிருந்து சில விடயங்களையும், வேறு நாடுகளிலிருந்து பெறப்பட்ட உதாரணங்களையும் ஒப்பாய்வு செய்கின்றது. சமாதானத்துக்கான இன்றைய வாய்ப்புகள் மதிப்பீடு செய்யப்படுவதுடன் வேறு சாத்தியமான தெரிவுகளுக்கான வழியையும் இந்நூல் சுட்டிக் காட்டுகின்றது.

## இனத்துவம்

இங்கு இனத்துவம் என்னும் பதம் ஒரு மக்கள் குழுவை ஏனையவற்றிலிருந்து வேறுபடுத்துகின்ற பல்வகைப்பட்ட காரணிகளை உள்ளடக்கும் வகையில் பரந்ததோர் எண்ணக்கருவாக பயன்படுத்தப்படுகின்றது. மொழி, இனம், மதம், நிறம் என்பவை சமகால முக்கிய வேறுபாடுகளாகும் (கை [Ghai], 1999). இக்குறியீடுகள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் தனித்தன்மைகளைக் குறிப்பிடுவதோடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிற்காமல், அரசியல் அடையாளத்திற்கான அடிப்படையாக மாறி அரசியல் செயல்முறையில் அல்லது அதிகாரத்தில் ஒரு குறிப்பிட்ட பங்களிப்பிற்கான உரிமையைக் கோருகின்றபோது இன வேறுபாடுகள் இனத்துவமாக நிலைமாற்றப்படுகின்றன. இந்நிலைமாற்றம் எதற்காக, எவ்வாறு நடைபெறுகின்றதென்பதைப் பற்றி தொடக்க நிலைவாதம் (Primordialism) மற்றும் சமூக-உயிரியல் (socio-biology) கோட்பாடுகளில் தொடங்கி அரசியல் மற்றும் பொருளாதாரக் காரணங்களுக்காக வேறுபாடுகளை வேண்டுமென்றே திட்டமிட்டு உருவாக்கி அவற்றைத் தந்திரமாகக் கையாளப்படுதல் வரையில் பல்வேறு காரணிகளை விளக்குவதற்குத் தேவையான அளவு இலக்கியச் சான்றுகள் இப்போதுள்ளன (பிறாஸ் 1991 எரிக்சென் 1993 ஹொரோவிற்ஸ் 1985). இப்பிரிவில் கூறப்பட்ட மேற்படி எழுத்தாளர்களின் நிலைப்பாடானது, இனக்குழுக்களின் தனித்தன்மைகள் உணர்ச்சியால் உந்தப்பட்டு, அது சக்தியாக உருப்பெற்று, தவிர்க்கமுடியாதவாறு அரசியல் முரண்பாட்டிற்கும் உரிமைக்கோரிக்கைகளுக்கும் வழி வகுக்கின்றது. இதன்பொருள் இனத்துவம் மூல முதலானதல்ல என்பதாகும். மாறாக, இனத்துவத்தின் தளர்ச்சியும், எழுச்சியும், அதன் தன்முனைப்பும் அல்லது நலிவும் பல்வகைப்பட்ட சமூக மற்றும் பொருளாதாரக் காரணிகளால் தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்ற போதிலும், அரசின் வடிவம் மற்றும் அது செயல்படும் முறையினால் ஏற்படுகின்ற விளைவுகளில் மட்டுமே இங்கு ஆராயப்படுகின்றது. இன உணர்வு நிலையும் மனக்கசப்பும் பெரும்பாலும் அரசின் அல்லது பெரும்பான்மைச் சமூகத்தின் அடக்குமுறையின் விளைவென்பதை இலங்கை மற்றும் பால்கன் தீவுகள் பற்றிய ஆய்வுகள் காட்டுகின்றன.

அரசாங்கங்கள் நிருவாக எல்லைகளை வரைந்துள்ள முறை அல்லது, எடுத்துக்காட்டாகக் குடிசன மதிப்பீட்டு நோக்கத்துக்காக, மக்களை வகைப்படுத்தியுள்ள முறை எவ்வாறு அடையாளங்கள் உருவாகுதலை ஊக்குவித்துள்ளதென்பதற்குக் காலனித்துவ அனுபவங்கள் அனேக உதாரணங்களை வழங்குகின்றன. தென்னாபிரிக்க அரசாங்கம் இன ஒதுக்கீட்டின்போது கறுப்பர்களை பண்டுஸ்ரான்கள் ஊடாக வெவ்வேறு சமூகங்களாகக் கூறுபடுத்துவதற்கு





முயன்றதுடன் பிரதிநிதித்துவத்தையும் பங்கேற்பையும் இனரீதியாகத் தனிப்படக் குறிப்பிடுவதன் மூலம் ஏனைய குழுக்களையும் பிரித்தது. நான் இனக்குழுக்களின் அரசியல் உரிமைக் கோரிக்கைகளை, விசேடமாக அவை சுயாட்சியுடன் தொடர்புகொண்டிருக்கும் வேளையில், இனத்துவத்தின் மீது சுயாட்சி ஏற்பாடுகளின் விளைவுகளையும், குறிப்பாக அரசின் சித்தாந்தத்துடனும், அதன் அமைப்புடனும், நிர்வாக இயந்திரத்திலும் இனத்துவத்தின் தொடர்புகளையும் ஆராய்கின்றேன். வேறு குழுக்கள் உள்ளபோது மட்டுமே இன உணர்வு எழுகின்றதென்பதனாலும், அரசு ஓர் இனக்குழுவின் அல்லது தொடர்புள்ள இனக்குழுக்களின் ஆதிக்கத்தின்கீழ் இருப்பதாகப் பெரும்பாலும் உணரப்படுவதனாலும் இனக்குழுக்களுக்கிடையிலான உறவுகளிலும் இங்கு கவனம் செலுத்தப்படுகின்றது. இனத்துவம் நெகிழ்வுடையதும் மாற்றமடைவதுமென்பதனால் இனத்துவக் கோரிக்கைகளுக்குப் பொருத்தமான பதிலை அரசியலமைப்பு தீர்மானிக்கவேண்டியது அவசியமாகின்றது. இனத்துவம் என்பதே தந்திரமான கையாளுதலின் விளைவெனக் கருதப்படுவதனால், அரசின் அல்லது அரசில் ஆதிக்கஞ் செலுத்துகின்ற குழுக்களின் பதில்நடவடிக்கைகள், அரசியலமைப்பைத் திட்டமிட்டியற்றுதலில் ஈடுபடுதலை விட, இத் தந்திரக் கையாளுகை அரசியல் அல்லது இராணுவ வழிமுறைகளில் எதிர்த்துப் போராடுதலாக இருக்கக்கூடும்.

சில இனத்துவ வடிவங்கள் ஏனையவற்றை விட அதிக நெகிழ்வுத் தன்மையுடையன. (ஐரோப்பாவில், அயர்லாந்திலும் கூட, மதம் அதன் முனைப்புத்தன்மையை ஓரளவு இழந்துவருகின்ற அதேவேளையில் மொழி இப்போதும் ஒரு பிரிவினைச் சக்தியாயுள்ளது. எனினும் ஆசியாவில் மதம் அடிப்படையானது). சைப்பிரசில் கிரேக்க மற்றும் துருக்கி மக்களுக்கிடையில் வேறுபாட்டுக்கான அடிப்படையாக மதத்திலிருந்து மொழி மாறிவருவதை நாம் காண்கின்றோம். தொடக்கத்தில் கனடாவின் வகைப்படுத்தலானது மொழியையும் சட்டத்தையும் சுற்றியதாயிருந்தது. பின்னர் அது 'தெளிவாக வேறுபட்ட ஒரு சமுதாயம்' என்று உரிமைகோரும் அளவிற்குப் பரந்த அளவில் கலாச்சாரத்திற்கும் வாழ்க்கை முறைக்கும் நீடிக்கப்பட்டது (இலங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கைத் தமிழர் தொடர்பில் ஒத்ததொரு முன்னேற்றத்தை நான் காண்கின்றேன்).

இனத்துவத்தின் சிறப்பம்சம் ஏனைய காரணங்களாலும் பாதிக்கப்படுகின்றது. வளரும் நாடுகளில் வரையறுக்கப்பட்ட சுயாட்சிக்கும் தேசிய நிறுவனங்களில் பங்கேற்பதற்குமான சாத்தியங்கள் திறந்துவிட்டுள்ளபோதிலும், ஒரு குழுவின் புவியியல் சார்ந்த செறிவு, பிரதேசச் சுயாட்சிக்குக் கண்டிப்பாக அத்தியாவசியமானது. இந்தியாவில் நினைத்துப் பார்க்க முடியாத அதன் பன்மைத்துவப் பண்பே அதன் பலமாக இருந்துவருகிறது. சைப்பிரசிலும் இலங்கையிலும் பிரச்சினைகள், ஒரே துண்டில் இரு துருவங்களாகச் செயற்படுவதாலும், இவற்றைப் பிரித்து விலக்கி விடுவதற்கான ஒரு சக்தி அங்கு இல்லாமையாலும் பிரச்சினைகள் பேயிடம் அகப்பட்டுக் கொண்டதைப் போல் விழிபிதுங்கி நிற்கின்றன. அதேவேளையில் எத்தியோப்பியா எண்ணற்ற இனக்குழுக்களைக் கொண்டுள்ளபோதிலும், அதன் அரசியல் இன்றியமையாதவாறு அம்ஹரா, ரைகிறே மற்றும் ஒறோமோ மக்களின் முக்கோணத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது (கை, 1999). ஒரு குழுவின் குறியீட்டாளர்கள் அயல்நாடொன்றிலுள்ள ஆதிக்கச் சமூகத்துடன் இலங்கை இந்திய அரசியல் சான்று பகர்கின்றவாறு ஒரே புள்ளியில் சந்திப்பவர்களாக இருந்தால் மத்திய அரசாங்கம் அத்தகைய குழுக்களுக்குச் சுயாட்சி வழங்கப் பொதுவாகத் தயங்குகின்றது. சுயாட்சிக்கான கோரிக்கைகள் வெளிப்படையாக இனத்துவத்தின் அடிப்படையில் இல்லாதபோது பொதுவாக அது ஏற்றுக்கொள்ளப்படவும் வெற்றியளிக்கவும் கூடும். இருந்தபோதிலும், வெளிப்படையாகத் தெரியக்கூடிய சூழ்நிலைகளில்தான் பெரும்பாலும் சுயாட்சிக்கான போராட்டங்கள் காணப்படுகின்றன.

## இனத்துவமும், அடையாளமும்

'இனத்துவம்' (Ethnicity) என்ற சொல்லே ஆங்கில மொழிவழக்கில் பல பொருள்களைக் கொண்டிருப்பதால் இப்பொருள் குழப்பங்கள்கூட ஒருவேளை அவை மீண்டும் மீண்டும் தொடர்வதற்குக் காரணமாக அமைந்து விடுகின்றது. ஆனால் யாரிடமாவது இனத்துவத்தை வரையறை





செய்யும்படி கேட்டவுடன் பிரச்சினை தொடங்குகின்றது. இதுகுறித்து எம்மிடம் பெருந்தொகையான விளக்கங்கள் இருக்கின்றன. இனத்துவமானது மனதை ஆதாரமாகக் கொண்டதாகவும், மனதிற்கு வெளியில் அதாவது யதார்த்தத்தில் இருப்பதுமான கூறுகளை உள்ளடக்கியிருப்பதாலும், இயக்காற்றலுள்ள ஒரு எண்ணக்கருவாக இருப்பதனாலும் அதைத் தெளிவாக வரையறை செய்வது கடினமாயுள்ளது. இனத்துவம் என்பது அதற்கு அர்த்தம் கொடுக்கின்றதான உணர்வினதும், வெளிப்புறச் சூழமைவு சார்ந்த யதார்த்தத்தினதும் ஒரு கலவை. அரசியல் சித்தாந்தத்தின்படி 'இனத்துவமானது' ஒரு குழு ஓரளவு இசைவினையையும், ஒருமைப்பாட்டையும், திரைமறைவில் பொதுவான தோற்றுமூலங்களையும், அக்கறைகளையும் உடையதென்ற விழிப்புணர்வையும் பெற்றிருத்தல் என்று விளக்கமளிக்கப்படுகின்றது. எனவே ஓர் இனக்குழுவானது ஒரு திரளான மக்களின் சாதாரணமான கூட்டமல்ல. மாறாக, அது பகிர்ந்து கொள்ளப்பட்ட அனுபவங்களாலும் ஒரு பொதுவான வரலாற்றினாலும் ஐக்கியப்பட்ட அல்லது நெருங்கிய தொடர்புடைய சுய உணர்வுடைய மக்கள் கூட்டம். ஆனால் அத்தகைய சில மதிப்புகளைத் தொடர்ந்து பேணிவருகின்ற மற்றும் ஒருமைப்பாட்டுடன் வாழ்ந்து வருகின்ற குழுக்களுடன் பகிர்ந்துகொள்ளாத பொதுவான தோற்றுமூலங்களையும் அக்கறைகளையும் உடையவர்களாக ஒன்றுக்கும் மேற்பட்ட குழுக்கள் இருக்கின்றன என்பதை இது குறிப்பால் உணர்த்துகின்றது.

இக்கருத்தின்படி ஒரு சில அரசுகள்தான் இனரீதியாக ஓரினமானவை. அனேக அரசுகள் விகிதாச்சாரத்தில் பல்லினமானவை. இனப்புத்தெழுச்சி பற்றி அதிகம் எழுதப்பட்டுள்ளதனால் அவ்விவாதத்தைச் சுருக்கிக் கூறவேண்டிய அவசியமில்லை. அடையாளத்தின் புத்தெழுச்சிக்கு மட்டுமன்றி வன்முறைக்கும் வழிவகுக்கின்ற சில குறிப்பிட்ட காரணிகள் உள்ளன என்பதுதான் அவ்விவாதத்தில் குறிப்பிடத்தக்க முக்கிய அம்சமாகும். நவீனத்துவ நிலைமைகள் இனத்துவத்தின் வளர்ச்சிக்கு வழிவகுப்பதுடன், அடையாளத்தை அர்த்தம் பொதிந்த சக்திவாய்ந்த குறியீடாகவும் ஆக்குகின்றன. இன்றைய இன முரண்பாடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கள் முன்னர் இருந்திராத அளவிற்கு நோக்கத்தையும் தீவிரத்தையும் கொண்டுள்ளன. அந்தனி டி. சிமித் (Antony D.Smith), "நவீன யுகத்தில் பரந்தகன்ற ஒரு வரலாற்றுப் போக்கைத் தனிமைப்படுத்தி அதனை ஓர் 'இனப் புத்தெழுச்சி' என்று பெயர்குறித்து அதனை முற்றிலும் சரியானது என்று நியாயப்படுத்துகின்றோம். ஆனால் அத்தகைய இனப்புத்தெழுச்சி ஒரு நிலைமாற்றமுமாகு மென்பதுடன் முந்திய இனப் புத்தெழுச்சியெதுவும் பகிர்ந்து கொள்ளாத தனித்துவப் பண்பொன்றையும் அது கொண்டுள்ளது" என்று வாதிடுகின்றார் (சிமித், 1983).

அடையாளத்துக்கான தேடல் மனித நாகரிகத்தை மேன்மேலும் வளர்த்தெடுப்பதில் ஒரு சக்திவாய்ந்த உள வியல் உந்துசக்தியாக இருந்துவந்துள்ளது. அடையாளம் என்பது அடிமனத்தின் ஆழத்தில் புதைந்துகிடக்கும் உணர்ச்சிகளின் வெளிப்பாடு. நாம் மிகவும் சாதாரணமா கக் கையாளுகின்ற ஒரு நம்பிக்கை அல்லது அரசியல் ரீதி யாக அணிதிரட்டத் தேவையான அனைத்து சக்திகளை யும் பெற்றிருக்கிறது என்ற கற்பனையில் உள்ள ஒரு சமூகமாகும். தங்களைப் பற்றிய உணர்வு தொடர்ந்திருப் பதால் அதன் மையக்கருவானது ஒரு தனிப்பட்டவரின் எதிர்கால வாழ்க்கையைப் படம் பிடித்துக்காட்டுகிறது (நோர்த்துறொப், 1989: 55). எதிர்காலத்தில் நிகழவிருக் கின்ற சம்பவங்களைக் கணிக்கும் ஆற்றல் இல்லாவிடின் பயங்கரமான அனுபவங்களைப் பெறுவது தவிர்க்க முடி யாததாகி விடும்.

அடையாளமென்பது சுயத்தைப் பற்றிய ஓர் உளவியல் உணர்வைவிடக் கூடியதெனக் கருதப்படுகிறது: அது உல கில் ஒருவர் உடல்ரீதியாகவும், உளவியல்ரீதியாகவும், சமூக ரீதியாகவும், ஏன் ஆன்மீகரீதியாகவும் கூட, பாதுகாப்பா னவரென்ற ஓர் உணர்வைச் சூழ்ந்து அமைகின்றது. அடை யாளத்தின் மையக்கருவை அச்சுறுத்துகின்ற அல்லது அதனை இல்லாமற் செய்கின்ற வகையில் நிகழக்கூடிய நிகழ்வுகள், உளவியல்ரீதியாக அல்லது அத்துடன் உடல் ரீதியாக அதனைத் திட்டமிட்டு அழிக்கப்படுவதைத் தடுக் கும் பொருட்டு தற்பாதுகாப்புச் செயல்களை வெளிப் படுத்தும்.





அண்மைக் காலங்களில் இனத்துவ நிலைமைகள், மிகுந்த அறிவாற்றல் சார்ந்த ஆய்வுக்குரிய விடயமாக இருந்து வருகின்றன. இனத்துவமும் அடையாள முரண்பாடுகளும் தான் எதிர்வரும் ஆண்டுகளில் முனைப்பான வன்முறை வடிவமாகவும், யுத்தமாகவும் இருக்குமென்பதே ஏகோ பித்த கருத்தாகத் தென்படுகின்றது. நவீனத்துவ நிலைமை களின்கீழ் இனத்துவம் தன்னைத்தானே மேம்படுத்திக் கொள்ளவும் மீள ஒழுங்கமைத்துக் கொள்ளவும் கூடும். தோற்றுமூலம் பற்றிய புனைகதைகள், எதிரியின் தோற்றம், மற்றவரைக் கண்டு மிரளுதல் என்பவை நீண்ட பாரம் பரியத்தைக் கொண்ட பழைய வரலாற்றுக் கற்பனைக் கதைகளாகும். யதார்த்தத்தில் பெரும்பாலான இனக் குழுக்கள் உண்மையில் தோற்றுவாய் குறித்து ஒரு புனை கதையையும், குழுவின் வரலாற்றையும், அடையாளங் காணப்பட்ட எதிரியையும், மனத்தளவில் காயம்பட்ட கதைகளையும் கொண்டுள்ளன.

இன்று பெரும்பாலான இன அல்லது சிறுபான்மை, பெரும்பான்மைக்கு இடையிலான முரண்பாடுகள் பல் வேறு காரணங்களின் நிமித்தம், சர்வதேச மட்டத்தில் குறிப்பிடத்தக்க அங்கம் வகிக்கின்றன. இதற்கு, இலங்கை யில் தமிழர்களைப் போன்று அல்லது வட அயர்லாந்தில் கத்தோலிக்கர்களைப் போன்று, ஓர் அரசிலுள்ள சிறுபான் மைச் சமூக உறுப்பினர்கள் அயல்நாடொன்றில் பெரும் பான்மைச் சமூகத்தின் ஒரு பகுதியாக இருத்தல் காரண மாக இருக்கலாம் அல்லது ஒரு சிறுபான்மைச் சமூகமோ இனச் சமூகமோ ஒரு நாட்டின் எல்லைகளைக் கடந்து வாழ் வதனால் ஒன்றுக்கும் மேற்பட்ட அரசுகள் சம்பந்தப்பட் டிருப்பதனால் இருக்கலாம்; (எ.கா. பாஸ்க் இனம், சாமிஸ் இனம் மற்றும் குர்திஸ் இனம்).

இன முரண்பாடுகள் உள்ளமையை அனேக அரசுகள் மறுத்துள்ளமைதான் பிரச்சினை. வளர்முக நாடுகளிலும், தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளிலும் இன முரண் பாட்டின் முக்கியத்துவமானது, உறுதிப்பாட்டைக் குலைக் கின்ற ஒரு சக்தியாக, மனித உரிமைகளின் பாதுகாப்புக்குப் பொறுப்பான சர்வதேச நிறுவனங்கள் எந்தளவுக்குக் கண்டுணர்ந்துள்ளனவென்பதை பார்ஷ் (1988) மதிப்பீடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்கின்றார். வியக்கத்தக்கமுறையில் பெருந்தொகையான அரசுகள் இனப்பிளவுகளின் சாத்தியத்தை ஒப்புக்கொள்ள மறுக்கின்றனவென்று அவரது ஆய்வின் முடிவு தெரிவிக்கின்றது. அத்தகைய மறுப்புக்கான உதாரணங்களை எல்லாப் பிராந்தியங்களிலும் காணக்கூடுமென்றபோதிலும், ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் மிகக் கூடுதலாகக் காணலாம். அங்குதான் இன முரண்பாட்டின் அச்சுறுத்தல் சமகாலத்தில் மிக அதிகமாயுள்ளதெனச் சான்றுகள் மூலம் தெரியவருகின்றது (பார்ஷ், 1988).

## இன முரண்பாடுகள்

'இன முரண்பாடு' என்ற சொற்றொடர் பெரும்பாலும் உள்நாட்டு முரண்பாடுகளை விவரிப்பதற்குப் பரந்த அளவில் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் குறிப்பாகக் கூறுவதாயின், நாம் ஒரு மக்கள் கூட்டத்தை ஓர் இனக் குழுவென்று விவரிக்க முற்படும் பொழுது, அக்குழு ஒரு கூட்டானதும் தனித்துவமான அடையாள உணர்வையும், ஒரு பொதுவான மூதாதையர் மரபையும், பகிர்ந்துகொள்ளப்படும் ஒரு கலாச்சாரத்தையும், வரலாற்றையும், குறித்த தொரு ஆட்சிப் பிரதேசத்தின்மீது பற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும் (சிமித், 1993). எனவே ஓர் இன முரண்பாடென்பது தம்மை வேறுபட்டவர்களாக உணர்கின்றதும் ஏனையோரால் வேறுபட்டவர்களாகக் காணப்படுகின்றதுமான இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்கள் சம்பந்தப்பட்ட ஒரு முரண்பாடாகும். மக்கட் குழுக்கள், தேசியங்கள், சமூகங்கள் அல்லது சிறுபான்மைகள் ஆகிய அனைத்தும் இனக்குழுக்களாகப் பார்க்கப்படலாம், அவ்வாறு தான் பார்க்கப்படுகின்றன. மேலும், அவை அனைத்தும் தாங்கள் பல்வேறு முரண்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ளனவாகத் தம்மைக் காண்கின்றன. குழுக்களையும் அதன் அங்கத்தவர்களையும் மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்துகின்ற அம்சங்களில் இனத்துவமும் ஒன்று. அது வேறுபாடுகளையும், நெருக்கடிகளையும், முரண்பாட்டையும் உருவாக்குகின்ற அம்சங்களில் ஒன்று. எனினும் அதன் முக்கியத்துவம் எவ்வாறிருப்பினும் முரண்பாட்டுக்குச் சாத்தியமான காரணங்களில் இனத்துவமும் ஒன்றாகும்.





தனித்துவமான அடையாள உணர்வுடைய குழுக்கள் தமது ஆட்சிக் கட்டமைப்பு தங்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் ஆற்றலற்றதென உணர்கின்றபோது இன முரண்பாடுகள் எழுகின்றன. அத்தகைய தேவைகள் மறுக்கப்படுகின்றபோது அல்லது நிறைவேற்றப்படாதபோது மனக்குறைகள் வளர்வதுடன் நிலைமை சீர்செய்யப்படவேண்டுமென்ற கோரிக்கைகள் மேலும் மேலும் வலுப்பெறுகின்றன. தாங்கள் நிர்க்கதியாக்கப்பட்டு விட்டோம் என்ற உணர்வும், அதனைக் களையவேண்டுமென்ற அவாவும் இனமுரண்பாட்டின் வளர்ச்சியினதும் நடத்தையினதும் பண்புகளாயுள்ளன.

இன முரண்பாட்டின் கட்டமைப்புத் தனித்துவமானதென அடிக்கடி விவரிக்கப்படுகின்றபோதிலும், இன முரண்பாடுகளில் கவனத்தைக் குவிக்கின்ற கட்டுரைகளும் தனி நூல்களும் பனிப்போருக்குப் பிந்திய காலகட்டத்தில் பல்கிப் பெருகியுள்ள போதிலும், இனமுரண்பாடுகள் திடீரெனத் தோன்றியவையல்ல என்பதை விளங்கிக்கொள்ளவேண்டும். 1980களில் இடம்பெற்றுக் கொண்டிருந்த பெருந்தொகையான இனமுரண்பாடுகள் 1990களிலும் தீர்க்கப்படாதிருந்தன. இன அடிப்படையிலான முரண்பாடுகள் நீண்டகாலம் நீடித்திருப்பதுடன் அரசியல் எல்லைகள் இனக் குழுக்களுடன் இணைந்து ஒரேபகுதியை ஆக்கிரமிக்காத வரை அவை தொடர்ந்திருக்கக்கூடும்.

பெரும்பாலான உள்ளக அல்லது முழுநாட்டிலும் நிலவுகின்ற முரண்பாடுகளில் இனத்துவமும், அடையாளமும், தேசியப் பற்றும் குறிப்பிடத்தக்க பங்குவகிக்கின்றன. எனவே சர்வதேசம் அவற்றின் தனித்துவத்தை அடையாளம் காண்பதிலும் நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். இன அடையாளமென்பது பல்வேறு சூழ்நிலைகளில் அதன் பகுதிகள் ஒன்றுடன் நேரிடையாக இணைக்கப்பட்ட நிலையில் உருவாக்கப்பட்டதும், மாற்றப்பட்டதும், மறுசீரமைக்கப்பட்டதுமான ஒரு சமூகக் கட்டுமானமாகும். சில சமயங்களில் இன அடையாளத்துக்கு அளப்பரிய முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. வேறு சமயங்களில் அது முற்றாகப் புறக்கணிக்கப்படுகின்றது. உதாரணத்துக்கு, சித்தாந்த வேறுபாடுகளை அல்லது ஆட்சிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரதேச வேறுபாடுகளைவிட இன அடையாளமே முரண்பாடுகளை வேறுபடுத்துவதாகவும் பெருமளவு கவனத்தைப் பெறுவதாகவும் தோற்றமளிக்கின்றது. இதுகுறித்து விரிவாக விவாதிக்க வேண்டியுள்ளது.

இனத்துவம் ஒன்றும் திடீர் நிகழ்வல்ல: அனேக முரண்பாடுகளில் அது ஒரு குறிப்பிட்ட பங்கினை வகிக்கக்கூடும். ஆனால் அது போதுமான ஒரு பங்கை வகிக்கின்றதென்று கருத முடியாது. இனத்துவம் மற்றும் அடையாளம் பற்றிய பிரச்சினைகளை வன்முறையான முரண்பாடுகளாக நிலைமாற்றுவதற்குக் கணிசமான அளவு முயற்சி தேவைப்படுகின்றது (அடையாளம் தொடர்பான எல்லா முரண்பாடுகளும் அல்லது பெரும்பாலான முரண்பாடுகள் கூட வன்முறையானவையாவதில்லை). இந்நிலைமாற்றம் பற்றி நாம் விழிப்புடன் இருக்கவேண்டும் (பெர்கோவிச், 2003).

வெளிப்படையாகத் தெரிவிப்பதில் ஆபத்துகள் இருப்பினும், இன முரண்பாடுகளென்று நான் குறிப்பிடுகின்ற பெரும்பாலான முரண்பாடுகள் பொதுவாகத் தனியோர் அரசுக்குக் கட்டுப்படுத்தப்பட்டதாகவோ அதன் தன்மையைப் பொறுத்தவரை அவை முழுமையாக இனஞ் சார்ந்தனவாகவோ இருப்பதில்லை. அவற்றில் பெரும்பாலானவை, தாங்களாகவே சர்வதேச முரண்பாடுகளுக்குத் தம்மை நிலைமாற்றுகின்றன. எனவே அடையாளம் அல்லது பாகுபாடான கட்டமைப்புகள் அல்லது நடைமுறைகள் தொடர்பான உள்நாட்டுப் பிணக்குகளில் தமது தோற்று மூலங்களைக் கொண்டுள்ள சர்வதேசமயமாக்கப்பட்டுள்ள முரண்பாடுகளின் தொகுதியொன்றுள்ளது. ஆனால் அவை பல்வகைப்பட்ட வழிமுறைகள் ஊடாகப் பரிச்சயமிக்க தோற்றமான ஒரு சர்வதேச இன முரண்பாடாக விரைவில் உருமாற்றம் பெறுகின்றன (குர், 2000, கங்குலி மற்றும் ரறஸ், 1998).

இலங்கை, (குர்தியர் தொடர்பில்) ஈராக், காஷ்மீர், இஸ்ரேல் அல்லது ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் காணக்கூடியதைப் போன்று, இன்று சர்வதேச நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடத்தை வகிக்கின்ற அனேக முரண்பாடுகள் இன முரண்பாடுகளாகத் தொடங்கியபோதிலும், அவை ஒன்றுக்கும் மேற்பட்ட அரசுகள் சம்பந்தப்படு





கின்ற வகையில் துரிதமாக எல்லைகளுக்கப்பால் பரவியுள்ளன. உலகமயமாக்கப்பட்ட இன்றைய காலகட்டத்தில் நாட்டின் எல்லைகள் அதிகரித்த அளவில் ஊடுருவப்படக் கூடியனவாகியுள்ளன. எனவே ஒருநாட்டின் எல்லைகளுக்குள் தொடங்குகின்ற முரண்பாடுகள் சர்வதேச முறைமையைப் பாதிக்கக்கூடிய வகையில் பின்விளைவுகளைக் கொண்டிருக்கக்கூடும் அல்லது சர்வதேச சமூகம் உள்நாட்டு முரண்பாடுகளைப் பாதிக்கின்ற நடவடிக்கைகளை எடுக்கக்கூடும். எப்படியிருப்பினும் அத்தகைய முரண்பாடுகள் ஓர் உள்நாட்டு விடயமாகத் தொடர்ந்திருப்பது என்பது அபூர்வமாகவே உள்ளது.

## ஆய்வின் அடிப்படைக் கோட்பாடுகள்

இலங்கையில் இன முரண்பாட்டின் மூலகாரணத்தையும், அதன் துணைக் காரணங்களையும், மேலும் அதன் பின்விளைவுகளையும் ஆழமாகப் பகுப்பாய்வு செய்து வெளிக் கொணர்வதை நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வானது இன முரண்பாட்டில் இந்தியாவின் பங்கை ஆராய்கின்றது. முரண்பாட்டு வரலாற்றின் மிக நெருக்கடியான காலப் பகுதிகளை அது உள்ளடக்குகின்றது. முரண்பாட்டின் தோற்றுமூலத்தை, இலங்கை 1948இல் அதன் தேசிய சுதந்திரத்தை எய்திய காலப்பகுதிவரை தடம்பற்றுவதற்கும், இனரீதியாக இலங்கைச் சமுதாயம் இரு துருவங்களாவதற்குப் பின்னர் வழிவகுத்த நடவடிக்கைகளையும் எதிர்நடவடிக்கைகளையும் விரிவாக ஆவணப்படுத்துவதற்கும் இதில் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்திக் கூடப் போராடுமளவிற்கு மிகைப்படுத்தப்பட்ட ஒரு சூழ்நிலைக்கு அவர்களைத் தூண்டிவிட்டு நிலைமையை மோசமடையச் செய்த காரணிகளான மொழி, மதம், கல்வி, தொழில், அரசியல் உரிமைகள், இந்தியத் தமிழர் (மலைநாட்டுத் தமிழர்) பலவந்தமாகத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படுதல் ஆகியவை குறித்து அடுத்தடுத்துவந்த அரசாங்கங்களின் பாகுபாடான கொள்கைகள், மற்றும் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அரச ஆதரவுடனான வன்முறை என்பவற்றை உள்ளடக்குகின்றன என்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் இன முரண்பாட்டுப் பிரச்சினை குறித்து அனேக நூல்களும் சஞ்சிகைக் கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளபோதிலும், தற்போதைய இந்த ஆய்வானது முரண்பாட்டின் தோற்றுமூலத்தை 1948 வரை தடம் பற்றுவதாலும், 1998 வரையான காலப்பகுதியை உள்ளடக்குவதனாலும், முந்திய ஆய்வுகளைவிட மேம்பட்டதாயுள்ளது. இந்த ஆய்வு முரண்பாட்டிற்கான முக்கியப் பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்கின்றது.

இலங்கையில் இனமுரண்பாட்டின் தோற்றுமூலங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலுமுள்ள தமிழ் பேசுகின்ற மக்கள் கடந்த காலத்திலும், இன்றுவரையும் தெளிவாகத் தெரிகின்ற ஒரு தேசியமாக அமைகின்றனராவென்பது பெரும் சர்ச்சைக்குரிய ஒரு விடயமாயுள்ளது. சமகாலத் தமிழ்த் தேசியவாதிகள் பதினெட்டாம் மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பிரித்தானிய காலனித்துவ நிர்வாகிகளினதும் பயணிகளினதும் எழுத்துகளை ஆதாரம் காட்டுகின்றனர். குறிப்பாக அவர்கள், ‘மிகப் புராதன காலந்தொட்டு இரு வேறுபட்ட தேசியங்கள் இத்தீவின் உடைமையைத் தமக்கிடையில் பிரித்துக்கொண்டுள்ளன. வளவ்வை ஆற்றிலிருந்து சிலாபம் வரை அதன் தெற்கினதும் மேற்கினதும் உட்புறப் பகுதிகளில் குடியிருக்கின்ற சிங்களவரும், வடக்கு மற்றும் கிழக்கு மாவட்டங்களைச் சொந்தமாக்கியுள்ள மலபார்களும் (தமிழர்களும்) இவ்விரு தேசியங்களும் அவற்றின் சமயத்திலும் மொழியிலும் பழக்கவழக்கங்களிலும் முற்றாக வேறுபடுகின்றன’ என்று தெரிவிக்கும் 1799 இன் கிளெக்ஹோர்ன் குறிப்பை எடுத்துக்காட்டுகின்றனர் (தமிழ் தகவல் நிலையம் 1997:2). எனினும் இக்கோரிக்கையை இலங்கை (சிங்கள) வரலாற்றாசிரியர் கே.எம். டி சில்வா மறுத்துரைக்கின்றார். முரண்படுகின்ற இக்கருத்துகளை இந்த ஆய்வு மதிப்பீடு செய்து விவாதிக்கின்றது.

இந்த ஆய்வு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளினதும் (எல்ரீரீஈ), ஏனைய முக்கிய தமிழ்ப் போராளிக் குழுக்களினதும் தோற்றுமூலம், வளர்ச்சி, உபாயங்கள் மற்றும்





உத்திகள் ஆகியவற்றின் தடம்பற்றும். அது மிகுந்த இரகசியமான ஓர் இயக்கமாதலால், வெளியிடப்பட்ட மற்றும் வெளியிடப்படாத மூலங்கள் மிகச்சிலவும் அரிதுமாகும். எனவே இவ்வாய்வு பெருமளவுக்கு இன்றைய மற்றும் முன்னாள் போராளிகளுடனும், படையணியினருடனுமான நேர்காணல்களிலும் போராளிகளினதும் அரசினதும் வெளியீடுகளிலும் தங்கியுள்ளது.

இந்த ஆய்வு இலங்கை தொடர்பான இந்தியக் கொள்கை உள்ளிட்ட, இலங்கையின் இன முரண்பாட்டில் இந்தியாவின் ஈடுபாட்டைப் பரந்த அளவில் நீண்டகாலக் கண்ணோட்டத்தில் ஆராய்கின்றது. இந்த விடயம் இது வரை வெளிவந்த இலக்கியங்களில் இடம்பெறவில்லை. இந்திரா காந்தி (1980-1984), ராஜீவ் காந்தி (1985-1990), நரசிம்மராவ் (1990-1995) ஆகியோரின் கீழிருந்த அரசாங்கங்களின் கொள்கைகளை உள்ளடக்கியதாக இலங்கையின் இனமுரண்பாட்டில் இந்தியாவின் மனோநிலை ஆராயப்படுகின்றது. மேலும் முந்திய ஆய்வுகளில் காணப்படாதவகையில் முரண்பாட்டிற்குப் புதிய கண்ணோட்டமொன்றை வழங்குவதன்மூலம் இலங்கைத் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பான அறிவுசார் நிலைக்கு ஒரு காத்திரமான பங்களிப்பைச் செய்கின்றது. இன முரண்பாடு கடந்து வந்த வரலாற்றுப் பாதைகளையும், அரசியல் நிர்ப்பந்தங்களையும் இனங்காணாமல் அரசியலமைப்பு சார்ந்த முரண்பாட்டிற்குச் சமாதானத் தீர்வொன்றைக் காணுதல் சாத்தியமானதல்ல என்பதை இந்த ஆய்வு விளங்கிக்கொண்டுள்ளது. வெளிப்புறச் செல்வாக்குகளின் பொதுமைப்படுத்துதலும் எளிமைப்படுத்துதலும் பெரும்பாலும் சர்வதேச நிலைமைகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி, முரண்பாட்டின் சமாதானமானத் தீர்விற்குச் சாதகமான கருத்து உருவாகுதலைத் தடுத்துவிடுவதனால், அத்தகையதொரு புரிந்துணர்வு வெளிப்புறச் செல்வாக்குகளின் தன்மையில் ஒரு மாற்றத்தை நிர்ப்பந்திக்கும். வெளிச்சக்திகள் குறித்த இத்தகைய விழிப்புணர்வானது இன முரண்பாட்டில் வேரூன்றினவாகவும், ஒரே மாதிரியாகவும், மாற்றமுடியாமல் இறுகிப்போய் இருக்கின்ற மனநிலைகளையும் அகற்றுவதற்கு உதவுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய இன முரண்பாட்டை அரசியல் மற்றும் இராணுவக் கண்ணோட்டத்தில் ஆராய்வதன் மூலமும் முயற்சிக்கப்பட்ட தீர்வுகளின் தோல்விக்கான காரணங் களை ஆராய்வதன்மூலமும், கடந்தகால அனுபவங்களி லிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு எதிர்காலத்தில் தவறுகளைத் தவிர்க்கக் கூடுமென்றும், அது தன்னிறை வுடைய தீர்க்கதரிசனமான 'மிகவும் காலந்தாழ்ந்து மிகவும் குறைந்தது (Too little too late)' என்ற நோய்க்குறி 'ஒரு போதும் காலம் கடந்துவிடவில்லை (Never too late)' என்ற பாரம் பரிய ஞானத்தால் பதிலீடு செய்யப்படக்கூடுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஆய்வின் குறிக்கோள்கள்

பெரும்பாலான சமுதாயங்களில் இன முரண்பாடு ஒரு சமூக அரசியல் நிகழ்வாக உள்ளது. இருபது மற்றும், இருபத்தோராம் நூற்றாண்டுகளில் சிவில் யுத்தங்களுக்கும், கிளர்ச்சிகளுக்கும், தேச ஒருமைப்பாடு சீர்குலைந்து போவதற்கும் மூலகாரணியாக இன முரண்பாடு விளங்கி வந்துள்ளது. எனவே இன முரண்பாடானது பெரும்பா லான அரசுகளுக்கு மிகக் கடுமையான ஒரு சவாலை ஏற்படுத்திவருகின்றது. சிறுபான்மை மொழிகளுக்கான அங்கீகாரம், பிராந்திய சுயாட்சி, கல்வி மற்றும் தொழிற் துறைகளில் சமமான வாய்ப்பு ஆகியவை அரசியல் அமைப்பு ரீதியாகப் புறக்கணிக்கப்படும் போதும், அடிப் படை உரிமைக் கோரிக்கைகள் முரட்டுத்தனமாகக் கையா ளப்படும்போதும், சுயாட்சி கோஷமானது, பெரும்பாலும் பிரிவினைவாதக் கோஷமாக மாறி தேசத்தைக் கட்டி யெழுப்புகின்ற படிமுறையில் பாரிய தாக்கத்தையும் விளை விக்கின்றது.

இந்த ஆய்வானது முரண்பாடு தொடர்பான பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கும், முரண்படுகின்ற தரப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் வாதிகளுக்கும், முரண்பாட்டைத் தீர்க்குமுகமாக மூன்றாந் தரப்பினராகச் செயற்படுகின்ற வேறுநாடுகளைச் சேர்ந்த வர்களுக்கும், சிவில் சேவையாளர்களுக்கும், கொள்கை யைப் பகுப்பாய்வு செய்பவர்களுக்கும், ஆழமாகப் பிளவு பட்ட சமுதாயங்களைச் சேர்ந்த கல்விமான்களுக்கும்,





நிபுணர்களுக்கும், பத்திரிகை எழுத்தாளர்களுக்கும், ஆலோசகர்களுக்கும் ஏனையோருக்கும், பயனுடையதா யிருக்குமென நம்புகின்றேன். சுருங்கக் கூறுவதாயின், பின் வரும் வினாக்களுக்கு விடையளிக்கும் நோக்கில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. இலங்கையில் இன முரண்பாட்டின் வரலாற்றுத் தோற்றுமூலங்கள் எவை? வெவ்வேறு வரலாற் றுச் சூழமைவுகளில், குறிப்பாகக் காலனித்துவக் காலப்பகுதியிலும், சுதந்திரத்துக்குப் பிறகு அடுத்த சில ஆண்டுகளிலும் இம்முரண்பாடு எவ்வாறு நோக்கப்பட்டது?

2. இன முரண்பாடு தொடர்பான போராட்டத் திற்குப் பலவழிமுறைகள் இருந்தும்கூட இவ்வளவு பெரும் செலவை உள்ளடக்கிய ஆயுதப்போராட் டம் ஆதிக்கம் செலுத்துவது ஏன்? தமிழர் போர் முனைப்பின் வரலாற்றுப் பின்னணிகள் எவை?

3. இந்திய - இலங்கை உறவுகள், குறிப்பாக இந்தியா வின் வெளிநாட்டுக் கொள்கை, இலங்கையின் இன முரண்பாட்டில் அதன் ஈடுபாட்டுக்கு எவ் வாறு உருக்கொடுத்தது? இலங்கையின் இனமுரண் பாட்டில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினதும், அதனுடன் இணைந்த 13ஆவது திருத்தத்தினதும் தாக்கங்கள் எவை?

4. இலங்கையின் இன முரண்பாட்டின் சர்வதேச சமூகம் எத்தகைய உள்நோக்கத்தைக் கொண்டுள் ளது?

5. தமிழர்களின் அபிலாசைகளை உள்ளடக்குகின்ற வகையிலும், இன முரண்பாட்டிற்கான இறுதித் தீர்வு ஒன்றை எட்டுகின்ற வகையிலும் சனநாயக ரீதியான மாற்றுவழி ஒன்றைக் காணமுடியுமா? ஒருபுறத்தில் சுயநிர்ணயத்திற்கான தமிழ் மக்க ளின் அபிலாசைகளுக்கு இடமளிக்கின்றதும், மறு புறத்தில் சிங்களப் பெரும்பான்மையின் பாது காப்பின்மீது கவனஞ்செலுத்துகின்றதுமான சன நாயகத் தீர்வொன்று சாத்தியமானதா?

www.tamilarangam.net

அத்தியாயம்- 2

# இலங்கை : வரலாற்றுப் பின்னணி

இவ்வத்தியாயம் காலனித்துவத்துக்கு முந்திய மற்றும் காலனித்துவக் காலப்பகுதிகளில் இலங்கையின் வரலாற்றை ஆராய்கிறது. இதில் கி.பி.1505 முதல் கி.பி.1795வரை உள்ள காலப்பகுதியில் இலங்கையில் போர்த்துக்கேயரினதும் ஒல்லாந்தரினதும் காலனித்துவ ஆதிக்கத்தையும், கி.பி.1796 முதல் கி.பி.1947வரையான காலப்பகுதியில் பிரித்தானியரின் காலனி ஆதிக்கத்தையும் ஆராய்வோம். இங்கு குறிப்பாக இன உறவுகளில் காலனி ஆதிக்கத்தின் தாக்கத்தை விளங்கிக்கொள்ளும் பொருட்டு இலங்கையில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இதில் விசேடமாக கி.பி.1833இல் சிங்களவர்களும் தமிழர்களும் அரசியல் ரீதியாக இணைக்கப்பட்டமை, கி.பி. 1928ஆம் ஆண்டின் டொனமூர் அரசியல் அமைப்புச் சீர்திருத்தம், மற்றும் கி.பி.1946ஆம் ஆண்டின் சோல்பரி அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள் தனித்தனியாகக் கையாளப்பட்டுள்ளன.

## இலங்கை – ஒரு சுருக்கமான வரலாறு

ஒரு தேசத்தின் வரலாற்றை அதன் புவியியல் நிலை மாற்றுவதுடன் வலுவான முறையில் அதற்கு வடிவமும் கொடுக்கின்றது. வெவ்வேறு தட்பவெப்ப நிலைமைகளைக் கொண்டதான இலங்கையின் பூகோளப் பிரிவானது மக்களின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எனவே இலங்கையின் இன முரண்பாட்டின் தோற்றத்தை மேலும் நன்கு புரிந்துகொள்வதற்கும், அதனைப் பகுப்பாய்வு





செய்வதற்கும், நாட்டு மக்களின் இன, மத, மொழி மற்றும் கலாச்சாரப் பின்னணிகளுடன் அதன் புவியியல் அம்சங்களையும் நிலைமைகளையும் கோடிட்டுக் காட்ட வேண்டியது இன்றியமையாதது.

முன்னர் 'சிலோன்' என்றழைக்கப்பட்ட இலங்கை, 04.02.1948இல் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றதன் பின்னர் 22.05.1972இல் ஒரு குடியரசாகியது. 16.08.1978இல் அதன் இப்போதுள்ள அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது. அதற்கமைய நிறைவேற்று அதிகாரம் பிரதம மந்திரியிடமிருந்து மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படும் ஒரு சனாதிபதிக்குக் கைமாறியது. சுதந்திரம் அடைந்ததிலிருந்து இந்நாடு பாராளுமன்றச் சனநாயகத்தைப் பின்பற்றி வருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.-UNP) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (ஸ்ரீ.ல.சு.க-SLFP) ஆகிய இரு பெரும் அரசியற் கட்சிகளுக்கிடையில் காலத்துக்குக் காலம் அதிகாரம் கைமாறி வருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரம் பெற்றதிலிருந்து 1956 வரையும், 1965 முதல் 1970 வரையும், மேலும் 1977 முதல் 1994 வரையும் ஆட்சியதிகாரத்திலிருந்தது. ஏனைய காலங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான இடதுசாரிக் கூட்டணிக்கட்சிகள் அதிகாரத்திலிருந்தன.

1971ஆம் ஆண்டில் சிங்கள இளைஞர்களின் அமைப்பான மாவோயிச வாதிகளாகக் கருதப்பட்ட 'ஜனதா விமுக்தி பெரமுன' (JVP - மக்கள் விடுதலை முன்னணி) எழுச்சிபெற்றது. 1971 மற்றும் 1987 - 1989ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இவர்களது இரு கிளர்ச்சிகளும், இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் (LTTE) போர் முனைப்பும் அண்மைக்கால வரலாற்றில் நாட்டு மக்கள் மத்தியில் பெரும்பீதியை ஏற்படுத்தியுள்ளன.

இந்து சமுத்திரத்தின் பரந்த நீர்ப்பரப்பில் பாக்கு நீரிணை என்றழைக்கப்படும் 40 கிலோ மீட்டர் அகலமான ஒரு குறுகிய நீர்ப்பரப்பினால் இந்திய உப கண்டத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்து பிரிக்கப்பட்டதாக நில நடுக்கோட்டுக்கு வடக்காக அமைந்துள்ள ஒரு சிறிய தீவுதான் இலங்கை. இலங்கையின் தீவுகளில் ஒன்றான மன்னாரையும் இந்தியாவின் இராமேஸ்வரம் தீவிலுள்ள தனுஷ்கோடியையும் இணைக்கின்றதாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் 'இராமர் பாலம்' அல்லது Adam's Bridge எனப்படும் ஒரு தொடரான ஆழமற்ற நீரடி மணல் திட்டுகள் காணப்படுகின்றன. (உருவரை படம் 2.1).

பூகோளரீதியில் இந்தியாவுடனான இலங்கையின் நெருக்கமும், அவற்றிற்கிடையிலான புராதனப் பிணைப்புகளும் இத்தீவின் அரசியல், சமூக, பொருளாதார, சமய மற்றும் கலாச்சார அபிவிருத்தியில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. ஆகக்கூடியதாக 224 கிலோ மீட்டர் அகலத்தையும் 65,610 சதுர கிலோ மீட்டர் பரப்பளவையும் கொண்ட இலங்கை இருபத்தைந்து நிருவாக மாவட்டங்களை உள்ளடக்கிய ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (உருவரை படம் 2.2).

இத்தீவு தாழ்நிலத்தையும், உயர் நிலத்தையும், கரையோரச் சமவெளிகளையும், ஏறக்குறைய 960 சதுர கிலோ மீட்டர் விஸ்தீரணமுள்ள வாவிகளின் மருங்காயுள்ள பரந்தகன்ற நிலப் பரப்புகளையும் உள்ளடக்கிய பல்வகைப்பட்ட இயற்கைக் காட்சியமைப்புகளைக் கொண்டுள்ளது. மத்திய 'உயர் நிலம்' நாட்டின் நிலப்பரப்பில் ஏறக்குறைய ஐந்திலொரு பங்கை நிரப்புகின்றது. எஞ்சிய 'தாழ்நில'ப் பிரதேசம் தீவின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் முழுவதையும், அகலத்தில் வேறுபடுகின்ற கரையோர நிலப் பகுதியையும் கொண்டுள்ளது. இவ்விரு திணைநிலங்களுக்கிடையில் 'இடைப்பட்ட' வலயம் அமைந்துள்ளது. மலைநாட்டுப் பிரதேசம் பெரும்பாலும் 1,200 அடி உயரமானதாயுள்ளபோதிலும் சிற்சில இடங்களில் 6,000 அடி முதல்; 8,000 அடி வரை எட்டுகின்ற மலைமுகடுகளையும், குன்றின் உச்சிகளையும், அவற்றைச் சூழவுள்ள 1,000 அடி முதல் 3,000 அடி வரையிலான குறைந்த உயரப் பிரதேசத்தையும் கொண்டுள்ளது.








**வரைபடம் 2.1 இந்துமாக்கடலில் இலங்கை**

Source: National Geographical Atlas of the World.
Revised Sixth Edition 1992: 78



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






**வரைபடம் 2.2 இலங்கையின் நிர்வாக மாவட்டங்கள்**

Source: A.J. Wilson, *Politics in Sri Lanka 1947-1973*, 1979: 4





இத்தீவு மத்திய உயர் நிலம், தெற்கு, மேற்கு, கிழக்கு மற்றும் வடக்கு என்ற நான்கு பிராந்தியங்களாகவும், வருடாந்த மழைவீழ்ச்சியின் பிராந்தியப் பங்கீட்டின் அடிப்படையில் ஈர மற்றும் உலர் வலயங்களாகவும் பிரிக்கப்படலாம். ஈர வலயத்துடன் பொருந்துகின்ற தென் மேற்குக் கரையோரச் சமவெளியும் மேற்கு உயர் நிலமும் நவம்பர் முதல் பெப்ருவரி வரையிலான தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றின் மூலம் பெருமளவு ஈரலிப்பைப் பெறுகின்றன. குடிசனச் செறிவுமிக்க இப்பிரதேசங்கள் தேயிலை, இறப்பர், கொக்கோ, தென்னை மற்றும் நறுமணச் சரக்குத் தோட்டங்களான பிரதான வர்த்தகப் பெருந்தோட்டங்களைக் கொண்டனவாகவும், நாட்டின் பெரும் வளர்ச்சி பெற்ற பொருளாதார நரம்பு மையங்களாகவும் விளங்குகின்றன.

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் முழுமையும் அடங்கலாக, தீவின் எஞ்சிய பகுதியெங்கும் வியாபித்துள்ள உலர்வலயம் ஒருவருடத்தின் ஆறு மாதத்திற்கும் மேல் நிலத்தின் மேற்பரப்பு நீரில் (ஆறு, ஏரி, குளம், கிணறு) தங்கியுள்ளது. இப்பிரதேசங்கள் அதிக அளவில் நம்பிக்கை வைக்க முடியாத வடகிழக்குப் பருவப்பெயர்ச்சிக் காற்றின் மூலமும், சூறாவளிச் சீற்றங்களின் மூலமும், நவம்பரிலும் டிசெம்பரிலும் 1,000 மி.மீ. முதல் 1,800 மி.மீ. வரையிலான மழைவீழ்ச்சியைப் பெறுகின்றன. சுவாத்தியம் சுட்டெரிப்பதாகவும் இயல்பாக இசைவற்றதாகவும் இருப்பதனால் யாழ்ப்பாணக் குடாநாடு, ஒருசில இடங்களில் மட்டும் செறிந்து வாழும் அடர்த்தியற்ற குடிசனத்தைக் கொண்டுள்ளது. சராசரி வெப்பநிலை 26 செல்சியஸ் முதல் 28 செல்சியஸ் வரையான வீச்சுடையது. மழைவீழ்ச்சி மிதமானதிலிருந்து கடுமையானது வரை காணப்படுகின்றது (யாழ்ப்பாணத்தில் 100 செ.மீ. முதல் உயர் நிலத்தில் 500 செ.மீ. வரை).

1994இன் புள்ளிவிவரப்படி இலங்கை ஒரு கோடி எண்பது இலட்சம் (18 மில்லியன்) சனத்தொகையைக் கொண்ட ஒரு பல்லின அரசியற் சமுதாயமாகும். இதில் 74 சதவீதத்தினர் சிங்களவர். அவர்கள் தெற்கிலும் தென் மேற்கிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்ள கரையோரத் தாழ்நிலத்திலும் மத்திய மலைநாட்டிலும் வசிக்கின்றனர். தென் மாகாணத்தினதும், மேல் மாகாணத்தினதும், வடமேல் மாகாணத்தினதும் கரையோரப் பிரதேசங்களில் வசிப்பவர்கள் கரையோரச் சிங்களவர் என்றழைக்கப்படுகின்றனர். அதே வேளையில், மலைநாட்டுச் சிங்களவர் பெரும்பாலும் முன்னைய கண்டி இராச்சியத்தைச் சேர்ந்த மாவட்டங்களில் செறிந்துள்ளனர். தாழ்நில ஈரவலயப் பிரதேசங்கள் சிலாபம், கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தளை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்குகின்றன. பல நூற்றாண்டு கால மேற்கத்தியச் செல்வாக்கினால் கூடிய முற்போக்கான வாழ்க்கைப் பாங்கை வளர்த்துக்கொண்டுள்ள தமது கரையோரச் சிங்களச் சகோதரர்களைப் போலல்லாது, மலைநாட்டுச் சிங்களவர் பாரம்பரியமாக மிகவும் பழைமைவாதிகளாவர்.

இலங்கைத்தீவில் சிங்களவர் பெரும்பான்மையாகவும் ஆதிக்கஞ் செலுத்துபவர்களாகவும் உள்ளபோதிலும், தென் இந்தியாவின் தமிழ்நாட்டுடன் தம்மை ஒப்பிட்டு ஒரு சிறுபான்மையாகக் காண்கின்றனர். பெரும்பாலும் பௌத்தர்களான சிங்களவர் இலங்கையில் மட்டும் பேசப்படும் ஒரு மொழியான சிங்களத்தைப் பேசுகின்றனர். சிங்கள மொழியானது, அதற்கடுத்து பெரிய இன-மொழிக் குழுவாக அமைந்துள்ளதும் சனத்தொகையில் ஏறக்குறைய 25 சதவீதத்தைக் கொண்டுள்ளதுமான தமிழ்பேசும் மக்களிலிருந்து அவர்களைப் பாரிய அளவில் வேறுபடுத்துகின்றது. பெரும்பாலும் தமிழர்கள் இந்துக்களாக இருப்பதுடன், அவர்களது மொழியான தமிழ்மொழி தமிழ்நாட்டில் பேசப்படும் திராவிட மொழிகளில் ஒன்றாகவும் உள்ளது. பூர்வீகக் குடிகளென்று நம்பப்படுகின்ற வேடர் எண்ணிக்கையில் மிகச் சிலராயிருப்பதுடன் இப்போது நடைமுறையில் ஏனைய குழுக்களிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியாதவர்களாகவும் உள்ளனர். எனவே இத்தீவு சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், மலாயர் எனப்படும் ஐந்து பிரதான இனக் குழுக்களைக் கொண்டுள்ளது. (அட்டவணை 2.1)





அட்டவணை 2.1

**இனக்குழுக்களின்படி இலங்கையின் சனத்தொகை**
***(1981 குடிசன மதிப்பீடு)***

| இனம் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| சிங்களவர் | 10, 985, 666 | 73. 98 |
| தமிழர் | 2, 696, 768 | 18. 16 |
| முஸ்லிம்கள் | 1, 056, 972 | 7. 12 |
| மலாயர் | 43, 378 | 0. 29 |
| பறங்கியர் | 38, 236 | 0. 26 |
| ஏனையோர் | 28, 981 | 0. 20 |

மூலம் : இலங்கையின் புள்ளிவிவரக் குறிப்பேடு 1994,
(கொழும்பு: குடிசன மதிப்பீடு, புள்ளிவிவரத் திணைக்களம் 1994: 12 - 13)

இங்கு திராவிடர் என்னும் சொல், பிரதானமாகத் தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய திராவிட மொழிகளைப் பேசுகின்ற தென்னிந்தியாவின் வெவ்வேறு சமூகங்களைக் குறிக்கின்றது. இப்போது இத்தீவில் திராவிட மொழி பேசுகின்ற ஒரேயொரு சமூகம் தமிழராயுள்ளபோதிலும் கர்நாடகம், கேரளம் மற்றும் ஆந்திராவிலிருந்தும் மக்கள் இங்கு வந்து குடியேறியிருந்தனர். இறுதியாக அவர்கள் பிரதான தமிழ்ச் சமூகத்துடன் ஒன்றிணைந்துவிட்டனர். இலங்கைத் தமிழர் (சுதேசத் தமிழர் அல்லது ஆதித் தமிழர் என்றும் அழைக்கப்படுகின்றனர்;) மற்றும் இந்தியத் தமிழர் (மலைநாட்டுத் தமிழர் அல்லது தோட்டத் தமிழர் என்றும் அழைக்கப்படுகின்றனர்) ஆகிய இரு பிரிவுகளையும் சேர்ந்த தமிழர்களில் முன்னையோர் கிறிஸ்துவுக்கு முந்திய காலத்தில் (கி.மு. 2500) இலங்கைக்கு வந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். மலைநாட்டுத் தமிழர் பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்டப் பொருளாதாரத்தைத் தொடர்ந்து புலம்பெயர்ந்து வந்தவர்கள்.

இந்த ஆய்வானது இத்தீவின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் வசிக்கின்ற தமிழ் பேசுகின்ற இஸ்லாமியர் அடங்கலாக இலங்கைத் தமிழர் தொடர்பாகவே அதிகக் கவனம் செலுத்துகின்றது. (உருவரைபடம் 2.3). மேற்கண்ட மாவட்டங்களுக்கு வெளியே கொழும்பு மாவட்டத்தில் மட்டுமே இலங்கைத் தமிழர் குறிப்பிடத்தக்க அளவு செறிந்துள்ளனர்;. அங்கு அவர்கள் மாவட்டச் சனத்தொகையில் 12.6 சதவீதமாயுள்ளனர்.

மறுபுறத்தில் இந்தியத் தமிழர் பிரதானமாகப் பாரம் பரியத் தேயிலைத் தோட்டப் பிரதேசங்களான களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய இடங்களில் செறிந்து வாழ்கின்றனர். சிங்களவரைப் போன்றல்லாது இலங்கைத் தமிழர் உலர் வலயப் பிரதேசங்களில் வாழ்கின்றனர்.

7 சதவீதமாக உள்ள முஸ்லிம்களும் தமிழையே பேசு கின்றனர். தமது தோற்றுவாயின் சுவடுகளை கி.பி. பத்தாவது நூற்றாண்டளவில் காண்கின்ற இவர்கள் கிழக்கு மாகாணத் தில் செறிந்து வாழ்கின்றனர். அராபிய வர்த்தகர்களாக ஆரம்பத்தில் குடியேறிய முஸ்லிம்களின் எண்ணிக்கை இந்திய முஸ்லிம்களின் கிரமமான புலம்பெயர்வினால் அதிகரித்தது. இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் தமிழ்மொழி பெரும் செல்வாக்கைக் கொண்டிருந்ததனால் அதுவே அவர்களின் தாய்மொழியாகியது. ஏனைய குறிப்பிடத் தக்க குழுக்களில் பறங்கியரும் மலேயரும் அடங்குவர். கிறிஸ்தவர்களான பறங்கியர், இலங்கையில் பணிபுரிந்த ஐரோப்பியரின் வழித்தோன்றல்களாவர். (உருவரைபடம் 2.4, அட்டவணை 2.2).

இலங்கையின் வரலாறு ஏறத்தாழ 2,500 ஆண்டுகளை அளாவியது. அனுராதபுரம், பொலனறுவை, யாழ்ப்பாணம், தம்பதெனிய, கண்டி மற்றும் கோட்டே இராச்சியங்கள் புராதன காலத்தினுள் அடங்கும் போர்த்துக்கேயரின தும் ஒல்லாந்தரினதும் காலனித்துவ காலப்பகுதிகள் இடை நிலைக் காலத்தினுள் அடங்கும் இறுதியாக நவீன காலம் பிரித்தானிய காலனித்துவ யுகத்துடன் ஆரம்ப மாகின்றது.








**வரைபடம் 2.3 இலங்கையின் குடிசன பரம்பல:**

Source: TIC, Insecutity of Tamils in Sri Lanka 1983: 2



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






வரைபடம் 2.4 மதங்களும் இனச் சமூகங்களும்

Source: www.google/ images/sri lanka 04 04 2003





அட்டவணை 2.2

சமய அடிப்படையில் இனக்குழுக்கள், 1981

| சமயம் | இனக் குழு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | இலங்கைச் சோனகர் | பறங்கியர் | மலாயர் | ஏனையோர் |
| பௌத்தம் | 93.3 | 1.8 | 1.8 | 0.2 | 2.9 | 2.1 | 7.5 |
| இந்து | 0.1 | 80.7 | 90 | 6.7 | 0.4 | 3.4 | 15.3 |
| முஸ்லிம் | 0.1 | 0.7 | 0.5 | 92.6 | 1.6 | 89.2 | 48.7 |
| ரோமன் கத்தோலிக்கம் | 6.1 | 14.3 | 6.2 | 0.4 | 79.3 | 2.2 | 11.6 |
| பிற கிறிஸ்தவர்கள் | 0.4 | 2.4 | 1.4 | 0.1 | 15.3 | 0.6 | 12.1 |
| ஏனையவை | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.5 | 2.5 | 4.3 |
| மொத்தம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |

மூலம் : குடிசன மற்றும் வீட்டுவசதி மதிப்பீடு, 1981 பொது அறிக்கை, தொகுதி -III, கொழும்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிங்களவர் தொடக்கத்தில் வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணம் என்று இப்போது அழைக்கப் படுகின்ற மாகாணங்களில் குடியேறினர். தொடக்க காலச் சிங்கள மன்னர்களின் தலைநகரங்களான அனுராதபுரமும் பொலனறுவையும் பௌத்த மதத்தின் தத்துவத்தினால் தூண்டப்பட்டதும் பக்குவப்பட்டதுமான ஓர் உன்னத நாகரிகத்தின் தொல்பொருளியற் சான்றுகளை இன்றும் கொண்டுள்ளன. பிந்திய காலத்தில் இந்நாகரிகம் மருவி அழிவுற்றதுடன் அனுராதபுரமும் பொலனறுவையும் காடு களால் சூழப்பட்டதைத் தொடர்ந்து சிங்களவர் கண்டி யையும் கோட்டையையும் நோக்கி, தெற்காகவும் தென் மேற்காகவும் இடம்பெயர்ந்தனர். தொடக்க காலத்தில் பாளியிலும், பிந்திய காலத்தில் சிங்களத்திலும் எழுதப் பட்ட வரலாற்றுப் பதிவுகள், இலங்கையின் அரசியல் வர லாற்றையும் ஓரளவுக்குச் மத வரலாற்றையும் தொடர்பு படுத்தி வியக்கத்தக்க வகையில் நம்பக்கூடிய தொய் வில்லாத தொடர்ச்சியுடைய தகவல்களை வழங்குகின்றன (பரணவிதான 1959: 83). தற்போது இருக்கின்ற தமிழரின் வரலாற்றுப் பதிவுகள், பதின்மூன்றாவது நூற்றாண்டில் தமிழ் இராச்சியம் நிறுவப்பட்டதன் பின்னர் ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகளுக்குப் பிந்தியன. எனினும் இலங்கை யில் மிகத் தொடக்க காலத்திலேயே தமிழர்கள் இருந்துள் ளனர் என்பதைப் பல்வேறு சான்றுகள் நிரூபிக்கின்றன.

## காலனித்துவத்துக்கு முந்திய காலம்: தமிழரின் தொடக்க வரலாறு

தமிழர், இன்று இலங்கை என்றழைக்கப்படுகின்ற பெருநிலப்பரப்பை அன்று உள்ளடக்கியிருந்த இந்தியக் குடாநாட்டின் தென்கோடியின் அருகாமையிலமைந்திருந்த வளமான வண்டல் மிகுந்த ஆற்றுப் படுகைகளில் தமது வரலாற்றைத் தொடங்கிய ஒரு தொன்மையான மக்களாவர். இத்தீவின் தாவர மற்றும் (யானைகள் உட்பட) விலங்கு உயிரினங்கள் ஆகியன புராதனமான இந்நிலத் தொடர் புக்குச் சான்றுகளாக உள்ளன. அவ்வாறே இந்திய உப கண்டத்தின் தென்கிழக்கிலுள்ள தனுஷ்கோடிக்கும், இத் தீவின் வடமேற்கிலுள்ள மன்னாருக்கும் இடையில் நீருள் அமிழ்ந்துள்ள 'நிலப் பாலத்தைச்' (இராமர் பாலம்)





செய்மதிப் புகைப்படங்களும் காட்டுகின்றன (உருவரை படம் 2.5). சில ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, கி.மு. 6000 முதல் கி.மு. 3000 வரையான காலத்தில் இத்தீவு இந்திய உபகண்டத்திலிருந்து பிரிந்து வேறாகியதுடன் இன்று பாக்குநீரிணை என்றழைக்கப்படும் குறுகிய நீளமான ஆழ மற்ற நீர்ப்பரப்பொன்றும் தோன்றியது (சத்தியேந்திரா: 6 டிசெம்பர் 1999).



**வரைபடம் 2.5 இலங்கையின் எல்லைகள் : செய்மதிப் புகைப்படம்**

Source: www.google/images/sri lanka 06 04 2003



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கை பண்புவளமிக்க பல்வகைப்பட்ட மக்களையும் கலாச்சாரங்களையும் பிரதிபலிக்கின்றது. அவற்றிற் சில தொன்மையானதும் சுதேசமானவையுமாகும். ஏனையவை நவீனமானவையும் அண்மைக்காலங்களில் வேறிடங்களிலிருந்து உள்வாங்கப்பட்டவையுமாகும். இலங்கை அதன் நீண்டகால வரலாற்றின் தொடக்க நூற்றாண்டுகளிலிருந்தே இனத்துவம், மொழி, சமயம் ஆகியவற்றில் அதன் பன்மைத் துவத்தைக் கொண்டுள்ளது (ஃபேர்னிவல் 1948: 304). புவியியல் ரீதியாக இத்தீவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான பூகோள ரீதியான நெருக்கம் மற்றும் கிழக்கு மேற்குக் கடற்பாதையில் அதன் அமைவிடமானது கேந்திர முக்கியத் துவம் வாய்ந்ததாக இருப்பதனால் ஐரோப்பிய வல்லரசுகளின் வாணிப மற்றும் ஆட்சிப் பிரதேச அத்துமீறல்கள் ஆகியவை இப்பன்மைப் பண்புகளுக்குப் பங்களித்தன.

இந்தியாவில் நிகழ்ந்த ஒவ்வொரு பெரும் மாற்றமும் இத்தீவில் அதன் எதிரலைகளைக் கொண்டிருந்தது. அத்துடன் பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கம்வரை இலங்கை தென்னிந்தியத் தமிழ் இராச்சியங்களான சேர, சோழ, பாண்டிய இராச்சியங்களின் அதிகாரப் போராட்டங்களில் ஒரு பகடைக்காயாக விளங்கியது. கி..பி 1505இல் போர்த்துக்கேயர் கடலோரப் பிரதேசங்களை வெற்றி கொண்டதுடன் தொடங்கிய நான்கரை நூற்றாண்டு கால ஐரோப்பிய ஆட்சியின்போது இப்பன்மைப் பண்புகளின் வளர்ச்சிவீதம் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது. கி.பி. 1796இல் பிரித்தானியர் இத்தீவை வெற்றிகொண்ட வேளையில் அது, அதன் பல்லினக் கட்டமைப்பையும், சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இருமொழிகளை அடிப்படையாகக் கொண்ட நன்கு விருத்தியடைந்த இரு மொழிரீதியான இனத்துவக் கலாச்சாரங்களையும், இந்து, பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய நான்கு பெரும் சமயங்களையும் சுவீகரித்துக் கொண்டதாயிருந்தது. இயற்கையில் ஒரு புவியியல் அலகாக இத்தீவு அமைவதினால் அது அதன் மக்கள் மத்தியில் குறிப்பிட்ட அளவு ஒற்றுமையைத் திணித்த அதேவேளையில் தனித்துவமிக்க கூட்டு அடையாளங்களையும் ஒற்றுமையையும் வலியுறுத்தியது.





## சிந்துவெளி நாகரிகம்

தமிழர் தமது தோற்றத்தின் அடிச்சுவடுகளை ஏறக்குறைய கி.மு. 6000ஆம் ஆண்டளவில் நிலவிய சிந்துவெளி நாகரிகத்தில் காண்கின்றனர். தென்னிந்தியாவில் இன்றும் வாழ்கின்ற தமது வழித்தோன்றல்களைக் கொண்டவர்களான திராவிடர் சிந்துநதிப் பள்ளத்தாக்கில் முதலாவது நகர சமூகங்களைத் தாபித்து, நீர்ப்பாசனத் திட்டங்களை அறிமுகப்படுத்தி, மட்பாண்டங்களை விருத்தி செய்ததோடு, நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட அரசாங்க முறைமையொன்றினையும் உருவாக்கியிருந்தனர் (Reader's Digest: 1970).

திராவிடரின் தோற்ற மூலங்கள் பற்றி மிக விரிவாக எழுதியுள்ள லைட் அஹ்மட் வின்ரெர்ஸ் (1980) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

சிந்துநதிப் பள்ளத்தாக்கிலிருந்து வடகிழக்கு ஆப்கானிஸ்தான் ஊடாகத் துருக்கிஸ்தான்வரை நீடித்த ஹரப்பா கலாச்சாரத்தை தாபித்தவர்கள் திராவிடர்களே என தொல்பொருளியல் மற்றும் மொழியியல் சான்றுகள் காட்டுகின்றன. ஹரப்பா நாகரிகம் கி.மு.2600 முதல் கி.மு. 1700வரை நிலைத்திருந்தது (அஹ்மட் 1981: 789).

தமிழர்களின் நாகரிகம் குறித்து ரொபேர்ட் கல்ட்வெல்லின் கருத்து பின்வருமாறு:

> ஆரம்பகாலத் தமிழர் மத்தியில் வழக்கிலிருந்த சொற்களின் சான்றினைக் கொண்டு நாம் பின்வரும் தகவல்களை அறிகின்றோம். 'உறுதியான வீடுகளில்' வசித்தவர்களும் 'நாட்டின் சிறு மாவட்டங்களை' ஆட்சிபுரிந்தவர்களுமான 'அரசர்களை' தமிழ் மக்கள் பெற்றிருந்தனர். திருவிழாக்களில் 'பாடல்களை' இசைக்கின்ற 'பாணர்கள்' இருந்துள்ளனர். மேலும் அவர்களிடம் பனையோலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதப்படும் அரிச்சுவடி 'எழுத்துகள்' இருந்துள்ளன. அவ்வோலைகளின் ஒரு கட்டு 'புத்தகம்' என அழைக்கப்பட்டது. இறைவன் உள்ளமையை ஒப்புக் கொண்ட அவர்கள் அவனைக் 'கோ' அல்லது 'கோன்' என்று பெயரிட்டழைத்தனர். இறைவனை மேன்மைப் படுத்துவதற்காக 'ஆலயம்' எழுப்பிய அவர்கள் அதனைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'கோயில்', (இறைவனின் இல்லம்) என்றழைத்தனர். அவர் களுக்குச் 'சட்டங்களும்' 'மரபுகளும்' இருந்தன... திருமண முறை அவர்கள் மத்தியில் காணப்பட்டது. சாதாரண உலோகங்கள் பற்றி அவர்கள் அறிந்திருந்தனர். அவர் களுக்குச் 'சிற்றூர்கள்' மற்றும் 'பட்டணங்கள்' இருந்தன. அவர்களிடம் 'மருந்துகள்', 'வள்ளங்கள்', படகுகள் மற்றும் கப்பல்கள் (சிறிய 'தளம் கொண்ட' கரையோரக் கலங்கள்) கூட இருந்தன. அக்காலத்தில் கடல்நீர் இறக்கத்தின் போது சிலவேளைகளில் நடந்துசெல்லக்கூடிய 'சிலோனை' (இலங்கையை) தவிரக் கடலுக்கப்பாலுள்ள எந்த மக்களு டனும் பரிச்சயமற்றவர்களாய் இருந்தனர். அவர்கள் கமத் தொழிலில் நல்ல பரிச்சயமுடையவர்களாயிருந்தனர். 'நூற்பு', 'நெசவு', 'சாயமிடல்' உட்பட வழக்கமான அல்லது அவசியமான வாழ்க்கைக் கலைகள் எல்லாம் அவர்கள் மத்தியில் காணப்பட்டன. மட்பாண்டக் கலையில் அவர்கள் சிறந்து விளங்கினர்... (கால்ட்வெல் [1875] *1961: 66.)*

## கடலோடிகளான தமிழர்கள்

கடலோடி மக்களான தமிழர் அகஸ்துஸ் பேரரசன் காலத்தில் உரோமருடன் வர்த்தகம் புரிந்தனர். இந்து சமுத்திரத்தின் அருகாயிருந்த அனேக நாடுகளுக்கு அவர்கள் கப்பல்களை அனுப்பினர். வர்த்தகர்களும் அறிஞர்களும் அக்கப்பல்களில் சென்றதுடன் ஒரு வாழ்க்கை முறையும் அவற்றுடன் சென்றது. இந்தோனேசியாவில் காணப்பட்ட தமிழ்க் கல்வெட்டுப் பொறிப்புகள் சுமார் ஈராயிரம் ஆண்டு களுக்கு முற்பட்டவை (சத்தியேந்திரா 6 திசெம்பர் 1999). இந்தோ-சீனாவில் காணப்படுகின்ற மூன்றாம் நூற்றாண் டைச் சேர்ந்த மிகப்பழைய சமஸ்கிருதக் கல்வெட்டுகள் தமிழ்ச் செல்வாக்குக்குச் சான்றுபகர்கின்றன. அக்காலப் பகுதியில் தாய்லாந்திலும் கம்போடியாவிலும் இருந்த மத குருக்கள் தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தினர். பதின் மூன்றாம் நூற்றாண்டில் மார்க்கோபோலோ சீனாவுக்கு வருகை தந்தபோது சிதைவடைந்து காணப்பட்ட கோயில் களின் இடிபாட்டுக் கூறுகள் முழுமையாகத் தமிழ்க் கட்ட மைப்புக்குச் சான்றாக விளங்குவதுடன் இவ்விடிபாடுகளில் தமிழ்க் கல்வெட்டுகளும் இருந்தன (அதே மேற்கோள்).





தமிழரின் தாயகமான தமிழ்நாடு, இந்தியாவின் தென் கோடிப் பிராந்தியத்தில் அமைந்துள்ளது. பாரம்பரியமாக, ஸ்ரீ வெங்கடேஸ்வரரின் உறைவிடமான திருவேங்கடமும் கிழக்கு மலைக் கணவாய்களின் ஒரு தொடரான மலைகளும் நாட்டின் கிழக்கெல்லையாகவும் அராபியக் கடலோரம் மேற்கெல்லையாகவும் அமைகின்றன. எனினும் பிற ஆட்சிப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் ஊடுருவல்களின் விளைவாக மேற்கிலும் வடக்கிலும் தமிழ் அதன் செல் வாக்கை இழந்தது. வரலாற்றின் இடைநிலைக் காலத்தில் மலைகளுக்கு மேற்காயுள்ள நாடு கேரளாவாகவும், வடக்கிலுள்ளது ஆந்திரப் பிரதேசத்தின் ஒரு பகுதியாகவும் மாறின. கேரளம், கர்னாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநில அரசுகளை எல்லைகளாகக் கொண்ட இன்றைய தமிழ்நாடு, தெற்கில் கன்னியாகுமரியிலிருந்து வடக்கே திருத்தணி வரை விரிந்துள்ளது.

முற்காலத்தில் சேரரும் சோழரும் பாண்டியரும் நாட் டில் புதுப்புலங்கண்டு ஆதிக்கம் செலுத்தியதுடன் தமது பாரம்பரிய முன்னரங்குகளுக்கு வெளியிலும் அவர்களது அதிகாரத்தை விரிவுபடுத்தினர். அதன் விளைவாகத் தமிழ் நாடு விரிந்தகன்ற பேரரசுகளின் தாயகமாக விளங்கியது. இக்காலப்பகுதியில்தான் தமிழ்க் கவிஞர்கள் தமிழ் இலக் கியத்தில் உன்னதப் படைப்புகளை இயற்றினர். இன்று சுமார் எட்டு கோடி மக்கட்தொகையைக் கொண்ட தமிழர் உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழ்கின்றனர். இதில் சுமார் ஆறு கோடிக்கும் அதிகமானவர்கள் இந்தியாவில் தமிழ்நாட்டிலும் ஏறக்குறைய 45 இலட்சம் பேர் இலங்கைத் தீவிலும் வாழ்கின்றனர்.

## சிங்கள மற்றும் தமிழ்க் குடியேற்றங்களின் தோற்றம்

ஏறக்குறைய கி.மு. 500இல் இந்தியாவில் கௌதம புத்தர் பரிநிர்வாணமடைந்த அதே நாளன்று, ஆரியக் குடிவரவாளர்களின் முதலாவது பிரிவினர் விஜயனின் தலைமையில் இத்தீவில் தரையிறங்கினர் என்று மிகவும் பிரசித்தி பெற்ற இதிகாசமான மகாவம்சம் கூறுகிறது. மகாவம்சத்தைத் தொகுத்த புத்தபிக்குகள் அல்லது துறவி கள் விஜயனின் வழித்தோன்றல்களான சிங்கள மக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கையில் பௌத்தத்தைப் போற்றிப் பாதுகாத்து வளர்ப்பதற்காகக் கடவுளின் அருளால் தீர்மானிக்கப்பட்ட வர்களென்று காட்டுகின்ற வகையில் இத்தீவில் விஜயன் வந்திறங்கியமைக்குச் சமய முக்கியத்துவம் அளித்து அதனை யும் மகாவம்சத்தில் இணைத்தனர். (சிமித் 1979: 456). இதனை அனைவரும்; ஏற்றுக்கொள்ளச் செய்யும் வகையில் பௌத்த மதகுருமார்கள் இந்நிகழ்ச்சியை என்றென்றும் நினைவூட்டி வந்தனர் என்று புகழ்பெற்ற சிங்கள வரலாற் றாசிரியர்கள் வலியுறுத்துகின்றனர் (கே.எம். டி சில்வா 1981: 3 - 4).

கணநாத் ஒபயசேகர, 'இக்கட்டுக்கதைகள் ஒரு தேசிய இனமாகச் சிங்களவரின் வரலாற்றுப் பங்கு பற்றிய சுய எண்ணத்தின் வெளிப்பாடு' என்றும், இச்சிங்கள-பௌத்த அடையாளம் புராதன காலங்களில் தென்னிந்தியாவி லிருந்து வந்த தமிழ் பேசுகின்ற 'சைவ அவநம்பிக்கை' யாளர்களை எதிர்த்துப் போராடுவதற்கு (அதாவது தமிழ் பௌத்தத்திற்கு எதிராக சிங்கள பௌத்தம்) முனைப்பாகப் பயன்படுத்தப்பட்டதென்றும் கூறுகின்றார் (ஒபயசேகர 1979: 282).

புராணக் கதைகளும் கட்டுக்கதைகளும் எவ்வாறிருப் பினும், இலங்கை ஆரியமயமாக்கப்பட்டதில் ஓரளவு உண்மை உள்ளதென்பதில் சிங்கள வரலாற்றாசிரியர்கள் மத்தியில் கருத்தொற்றுமை காணப்படுகின்றது. அது கி.மு. 543இல் இந்தியாவின் வங்காளத்திலுள்ள சிங்கபுர நகரத் திலிருந்து பட்டத்து இளவரசனான விஜயன் அவன் தந்தையால் நாடுகடத்தப்பட்டதைத் தொடர்ந்து அவன் தலைமையில் எழுநூறு பேர் இலங்கையின் மேற்குக் கரை களில் தரையிறங்கியதோடு சிங்கள மக்களின் தோற்றத்தின் தடம்பற்றுகின்றது. விஜயன் மனித இனஞ்சாராத இயக்கரின (Yakhsha) அரசியான குவேனியை மணம் முடித்ததன் மூலம் இத்தீவைத் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தான். எனினும் ஒரு சில ஆண்டுகளின் பின்னர் அவளைத் தனது மகனுடனும் மகளுடனும் காட்டினுள் துரத்திவிட்டான். விஜயனும் அவனது ஆட்களும் இயக்கரினப் பெண்ணின் மூலம் சிங்கள இனத்தைப் பெருக்கவில்லை என்பதை உணர்த்துவதற்காக இக்கதை திட்டமிட்டுப் புனையப்





பட்டது. அதற்குப் பதிலாக விஜயன் இன்றைய தமிழ் நாட்டைச் சார்ந்த மதுரையை ஆண்ட பாண்டிய மன்னனின் மகளை மணஞ்செய்தான். அவனது ஆட்கள் உயர்குலப் பாண்டியப் பெண்களை மணஞ்செய்தனர் என்று மகா வம்சம் கூறுகின்றது.

விஜயன் இலங்கையின் மன்னனாகத் தனக்குத் தானே முடிசூடிக்கொண்டு தம்பபண்ணை (இன்றைய புத்தளம்) யைத் தனது தலைநகராகக்கொண்டு 38 ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாகக் கூறப்படுகின்றது. அவனுக்கும் அவன் மண முடித்த பாண்டியநாட்டு தமிழ் இளவரசிக்கும் பிள்ளைகள் இல்லாததால் விஜயனைத் தொடர்ந்து அவனது சகோ தரனான பண்டுவாசுதேவ மகுடம் சூட்டிக்கொண்டான். மகாவம்சத்தில் இக்கதை மேலும் மிகைப்படுத்தப்பட்ட பல கற்பனைகளுடன் திரும்பவும் சொல்லப்பட்டுள்ளது.

ஆரியக் குடியேற்றத்தினர் மேற்கண்டவாறு தமது தனித்துவமான அடையாளத்தைக் கட்டிக்காப்பவர் களாகச் சிங்கள இனத்தைப் பிரச்சாரப்படுத்தினர். வேடர் இலங்கையின் பூர்வீகக் குடிகள் அல்லரென்றும், மாறாக விஜயனின் இயக்கரின மகனினதும் மகளினதும் வழித் தோன்றல்கள் என்றும் மகாவம்சம் குறிப்பிடுகின்றது. சிங்களவர்தான் இத்தீவின் தொடக்கமுதலான குடியிருப் பாளர்களென்று கருதப்படுதலையும், இலங்கையின் பூர்வீகக் குடிகளுக்கும் திராவிடருக்கு முன்னைய தென்னிந்தியக் குடிகளுக்குமிடையில் இனப் பிணைப்பேதும் இல்லை யென்பதையும் உறுதிப்படுத்துவதற்காகவே விஜயனுடனான வேடரின் தொடர்பு வலியுறுத்தப்படுகின்றது. எனினும் என்.டி.விஜயசேகர, வேடரின் உடற்கூறுப் பண்புகளில் தென்னிந்தியாவிலிருந்த மத்திய தரையினக் குழு, அவுஸ் திரலொயிட் மற்றும் நீகிறட்டோ இனக்குழுக்களின் தொடர்ச்சியான கூட்டிணைவைக் காண்கின்றார் (விஜய சேகர 1958: 55).

வரலாற்று மரபுகளின் அடிப்படையிலும், மகா பாரதத்திலும் இராமாயணத்திலும் காணப்படும் ஓரளவு புராணக்கதைகளின் அடிப்படையிலும் இலங்கையின் பூர்வீக மக்கள் குறித்து தொலமி விவரித்துள்ளதன் அடிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படையில் இயக்கர்களும் நாகர்களும், இந்தியாவினதும் இலங்கையினதும் பூர்வீகக் குடிகளென சில வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இவர்கள் காலத்தால் அழிந்த வரலாற்றுக்கு முந்திய காலமான கி.மு. 1000 ஆண்டளவில் நாகத்தையும் (நாகர்), ஆவிகளையும் (இயக்கர்) வழிபடுபவர்களாக வாழ்ந்த தமிழ் பேசுகின்ற மக்களென்று எடுத்துக்காட்டுவதே இதன் நோக்கமாகும் (பொன்னம்பலம் 1983: 17). இராமாயணத்தைப் போன்று மகாவம்சமும் சிங்களவர் இத்தீவில் வந்திறங்கியபோது இங்கு சுபிட்சமான இராச்சியங்களும் பேரூர்களும் கிராமக் குடியிருப்புகளும் இருந்ததைக் குறிப்பிடுகின்றது (விஜய சேகர 1958: 60).

மகாவம்சத்தில் கூறப்பட்ட இயக்கர்களது இராச்சியத்தின் விவரம் பற்றிய மலலசேகரவின் உறுதியான பொருள் விளக்கமானது, இலங்கை 'குறிப்பிட்ட அளவு நாகரிக வளர்ச்சி அடைந்திருந்ததாகவும், 'இயக்கர் தனது ஆட்சியின்கீழ் சொந்த நகரங்களையும் சமூக நிறுவனங்களையும் குறிப்பிடத்தக்க அளவு அபிவிருத்தியடைந்த ஒரு மொழியையும், ஐயத்திற்கிடமின்றி திரளான செல்வத்தைப் பெற்றிருந்ததற்கான அடையாளங்களையும் கொண்டிருந்தனரென்றும்' இராமாயணத்தில் குறிப்பிடப்பட்ட விவரங்களை உறுதிப்படுத்துகின்றது (மலலசேகர 1928: 16-19).

இயக்கர்களும் நாகர்களும்தான் இலங்கையின் தொடக்க முதலான தமிழ் பேசும் குடியிருப்பாளர்களாக இருந்தனரென்பதற்கு வலுவான சாத்தியக்கூறுகள் உள்ள போதிலும் மகாவம்சம் இலங்கையில் தமிழ்க் குடியேற்றங்களின் தோற்றுவாய் மற்றும் வளர்ச்சி குறித்து எவ்வகையிலும் குறிப்பிடவில்லை. எனினும் இரு சமூகத்தினரும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இத்தீவில் வசித்து வந்துள்ளனரெனச் சில வரலாற்றாசிரியர்கள் நம்புகின்றனர் (அரசரட்ணம் 1964: 15). இத்தீவில் சிங்களக் குடியேற்றங்கள் தமிழ்க் குடியேற்றங்களைவிட ஒரு சில நூற்றாண்டுகள் முந்தியவை என்பதில் வரலாற்றாசிரியர்களின் ஒருபகுதியினரின் மத்தியில் பொதுவான கருத்தொற்றுமை காணப்பட்டபோதிலும் சில அறிஞர்கள் 'சிங்களவர் வந்திறங்கியபோது இத்தீவில் பெரும்பாலும் தமிழ் பேசு





கின்ற திராவிடர் இருந்திருக்கக்கூடும்' என்று வாதிடுகின்றனர் (ஓம் வெட்ற் 1928 : 23).

இவ்வாதமானது திராவிடக் குடும்ப மொழிகளின் தோற்றுவாயினை கி.மு. 700 ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய தீபகற்பத்திலும் இலங்கையிலும் பரவலாக அக்கால கட்டத்தில் வழக்கிலிருந்த பெரிய நினைவுக்கல் (கற்களில் விடயங்களைச் செதுக்கி வைத்தல்) கலாச்சாரத்தில் காண முடிகின்றதென்ற கருதுகோளின் அடிப்படையில் அமைந்துள்ளது (ஸ்ஜோபேர்க் 1971: 8). இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் புலம்பெயர்ந்த முந்திய குடியேற்றவாசிகளான தமிழ் பேசுகின்ற திராவிடரின் மூதாதையர்களே இயக்கர்களும் நாகர்களும் என்ற கருத்தும் நிலவுகின்றது (ரென்னற் 1859: 327). இது இவ்வாறிருக்க, சிங்களவர் இத்தீவில் குடியேறத் தொடங்கியபோது இன்றுள்ள தமிழரின் மூதாதையர் ஏற்கெனவே இலங்கையில் இருந்தனரென்பதை நாம் ஊகிக்க மட்டுந்தான் முடியும்.

## யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்

யாழ்ப்பாண வைபவமாலை மற்றும் கைலாயமாலை ஆகிய இரு வரலாற்றுத் தமிழ் நூல்களுக்கிணங்க, யாழ்ப்பாண இராச்சியம் ஆரியச் சக்கரவர்த்திகள் என்றழைக்கப்பட்ட அரச வம்சத்தினரால் தாபிக்கப்பட்டது. முதலாவது அரசனான சந்திரபானுவைத் தொடர்ந்து ஆட்சி புரிந்த அவனின் மகன் தென்னிந்தியாவின் பாண்டிய அரசர்களின் உதவியுடன் அகற்றப்பட்டான். பாண்டியப் பேரரசு தென்னிந்தியாவில் அதன் மேலாதிக்க ஆட்சியதிகாரத்தை இழந்ததைத் தொடர்ந்து 'யாழ்ப்பாணம் ஆரியச் சக்கரவர்த்திகளின் கீழ் ஒரு சுதந்திரமான இராச்சியமாகியது' (கே.எம்.டி சில்வா 1981: 67). அதன் பின்னர் பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணத்தை நல்லூரிலிருந்து ஆட்சிபுரிந்தனர். வடக்கில் தமிழ் இராச்சியத்தின் தோற்றுவாய்களை, கி.பி. 1215இல் பொலனறுவையை ஆட்சிபுரிந்த கலிங்க மன்னன் மாகனின் காலத்திலிருந்து காணக்கூடியதாயுள்ளது. இந்த இராச்சியம் பின்னர் பலகூறுகளாகப் பிரிந்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாண இராச்சியம், தம்பதெனிய இராச்சியம் ஆகிய இரு புதிய இராச்சியங்கள் உருவாகின (பத்மநாதன் 1978: 5).

6



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இக்காலப்பகுதியில் தெற்கிலிருந்த சிங்கள இராச்சியம் உட்பூசல்களினாலும் முந்திய அரசர்கள் தொடுத்த யுத்தங்களினாலும் நலிவடைந்தது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் யாழ்ப்பாணத்தின் தமிழ் அரசன் சிங்கள அரசனுடன் போரிட்டு முத்துக்குளிப்பதற்கான உரிமையைத் தனதாக்கிக்கொண்டான். 'மேலும் அந்நூற்றாண்டின் நடுப் பகுதியில் யாழ்ப்பாண அரசன் தெற்கு நோக்கிப் படையெடுத்துச் சென்று, அப்போது ஆட்சிபுரிந்த சிங்கள அரசனை அவனின் தலைநகரான கம்பஹாவிலிருந்து விரட்டியடித்தான்' (அரசரட்ணம் 1964: 105).

யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசியல் ஒழுங்கமைப்பு தென்னிந்தியத் திராவிட அரசுகளின் பாங்கைப் பின் பற்றியதாயிருந்தது. பெரும்பாலும் வேளாளர் சாதியைச் (கமக்காரர்) சேர்ந்த மக்கள் குடாநாட்டின் தலைநகரான நல்லூரைச் சுற்றிலும் செறிந்து வாழ்ந்தனர். 'மாறுகின்ற வாய்ப்புகளுக்கேற்ப அதன் அரசியல் எல்லைகள் இடம் மாறியபோதிலும், பொதுவாக அது தமிழ் பேசும் மக்கள் வசிக்கின்ற எல்லைகளைத் தழுவியதாயிருந்தது' (அரசரட்ணம் 1964: 104). மக்களில் ஒரு பிரிவினர் யாழ்ப்பாணத்திலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்ததுடன் தேசவழமை (உள்நாட்டு வழக்காறுகள்) என்றழைக்கப்படும் அவர்களுக்கேயுரியதான சட்டக் கோவையொன்றையும் கொண்டிருந்தனர். அவர்களில் பெரும்பாலோனோர் ஆண் தெய்வங்களான சிவபெருமானையும், கணேசனையும், முருகனையும், பெண் தெய்வங்களான காளியையும், கண்ணகியையும் வழிபட்ட சைவ இந்துக்களாவர். எனவே தீவின் எஞ்சிய பகுதியில் புத்த சமயம் எவ்வாறிருந்ததோ அவ்வாறே வடக்கில் இந்து சமயம் ஒரு வாழ்க்கைச் சமயமாகியது (அரசரட்ணம் 1964: 104).

யாழ்ப்பாண இராச்சியத்தின் இருப்பானது பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பதினேழாம் நூற்றாண்டு வரை சிங்களவரிலிருந்து மட்டுமன்றி இந்தியாவிலுள்ள தமிழரிலிருந்தும் வேறுபட்ட தனித்தன்மைவாய்ந்த தமிழரை உருவாக்க உதவியது. பதினாறாம் நூற்றாண்டளவில் தமிழர் தமது நிரந்தரத் தாயகமாகத் தாம் முயன்று பெற்றதும் நன்கு





வரையறுக்கப்பட்டதுமான ஆட்சிப் பிரதேச மொன்றைக் கொண்டிருந்தனர்.... (அரசரட்ணம் 1964: 115).

தென்னிந்தியாவில் தமக்கெதிராகப் பாண்டியருக்கு உதவிய சிங்கள அரசரைத் தண்டிக்கும் பொருட்டு, 1017இல் அனுராதபுரம் சோழரால் தோற்கடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இலங்கை 75 ஆண்டுகள் சோழப் பேரரசின் ஒரு மாகாணமாக இருந்ததுடன், அக்காலப்பகுதியில் அதன் தலைநகரமும் அனுராதபுரத்திலிருந்து பொலனறுவைக்கு மாற்றப்பட்டது. சிங்கள மன்னனான விஜயபாகு 1070இல் சோழரைத் தோற்கடித்தான். முதலாம் பராக்கிரமபாகு (1153 - 1186) அரசபீடம் ஏறியதைத் தொடர்ந்து சோழரின் ஆட்சி ஒரு முடிவுக்கு வந்தபோதிலும் பன்னிரண்டாம் நூற்றாண்டில் தமிழரின் படையெடுப்புகள் சிங்கள இராச்சியத்துக்குத் தொடர்ந்தும் தொல்லை கொடுத்து வந்தன. பதின்மூன்றாம் நூற்றாண்டில் அது வீழ்ச்சியடைந்த போது சிங்களவர் தென்மேற்காக ஈர வலயத்துக்கு இடம் பெயரத் தொடங்கினர். பதினேழாம் நூற்றாண்டில் எழுதப் பட்ட சிங்கள வரலாற்று நூலான ராஜவளிய, பொலனறுவை இராச்சியம் இறுதியில் சீரழிந்துபோனதற்கான பழியை 1215இல் இத்தீவின்மீது படையெடுத்த கலிங்கத்தின் மாகன் மீது சுமத்துகின்றது.

பதினோராம் நூற்றாண்டின் சோழரின் கைப் பற்றுகை உட்பட, தென்னிந்தியாவிலிருந்து காலத்துக்குக் காலம் படையெடுப்புகளைச் சந்தித்தபோதிலும் சிங்கள இராச்சியம் அதன் குளம் சார்ந்த நாகரிகம், வளமிக்க பௌத்த அருஞ்செல்வங்கள் மற்றும் நிலை பேறான கட்டடப் பாங்கு என்பவற்றைக் கொண்டதாகப் பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை தொடர்ந்து நீடித்தது. உண்மையில் அது ஒரு சில குறுகிய காலங்களைத் தவிர, பல நூற்றாண்டுகளாக அதன் சுதந்திரத்தைப் பேணிவந்தது. இருந்தபோதிலும் தமிழர்கள் பௌத்தத்தை அழிப்பதற்கும் சிங்களவரை அடிமைப்படுத்துவதற்கும் இடைவிடாது முயற்சித்துவந்த வலுச்சண்டைக்காரர்கள் என்று காட்டும் பொருட்டு, சிங்கள மற்றும் பாளி வரலாற்று நூல்களில் சிங்கள நாகரிகத்தின் பொற்காலத்தின் வீழ்ச்சி, சோழரை விஜயபாகு வெற்றிகொண்டமை, மற்றும் இலங்கையினுள் தமிழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இராணுவங்களின் சிறுதிறத்திலான தாக்குதல்கள் ஆகிய வற்றிற்கு அழுத்தம் கொடுத்துக் காட்டப்படுகின்றன. இன்றைய இலங்கையில் தமிழருக்கு மொழி மற்றும் அரசியல் சலுகைகள் வழங்குவதற்கெதிராக வாதிடுவதற்கு இக்கருப்பொருள் பௌத்த குருமாரின் சில பிரிவினராலும், தீவிர சிங்களத் தேசியவாதிகளினாலும் காத்திரமான முறை யில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

உலர் வலயத்திலிருந்த சிங்கள இராச்சியம் வீழ்ச்சி யடைந்ததைத் தொடர்ந்து இத்தீவு மூன்று உபஇராச்சியங் களாகப் பிரிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திற்கும் அனுராத புரத்திற்கும் இடைப்பட்ட பகுதியும், வன்னியில் இருந்து வடக்குப் பகுதியும், யாழ்ப்பாணக் குடாநாடும் யாழ்ப்பாண அரசனின் கட்டுப்பாட்டின்கீழ் தமிழரின் குடியாட்சிப் பிரதேசங்களாயின. தென்மேற்கின் கரையோரப் பிரதேசம் கோட்டே இராச்சியத்தின் கீழும், மத்திய மலை நாடு கண்டி இராச்சியத்தின் கீழும் வந்தன (உருவரைபடம் 2.6). சிங்கள வரலாற்றாசிரியர்களான சீ.டபிள்யு.நிக்கலஸ், எஸ். பரணவிதான ஆகியோர் தமிழர் பதின்மூன்றாம் நூற் றாண்டில் வடமாகாணத்தின் கட்டுப்பாட்டைக் கைப் பற்றினரெனக் குறிப்பிட்டுள்ளனர் (நிக்கலஸ் மற்றும் பரணவிதான 1961: 5).

சோழப் படையெடுப்புகளைத் தொடர்ந்து இலங்கை யின் வடபகுதியில் பெருமளவிலான தமிழர் குடியேற்றத் துடன் கி.பி.13ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கைத் தமிழரின் வரலாறு மேலும் முழுமையானதும் தொடர்ச்சியுடையது மாகியது. யாழ்ப்பாண இராச்சியம் தாபிக்கப்பட்டதோடு இலங்கைத் தமிழர் தமிழ்நாட்டுத் தமிழரிலிருந்து தெளி வாக வேறுபட்ட ஒரு சமூக ஒழுங்கமைப்பையும், வழக்காறு களையும், மரபுகளையும், தமக்கே சொந்தமான ஒரு பேச்சு வழக்கையும் விருத்தி செய்தனர். பரம்பரை உடைமையும், ஆதன உரிமைகளும், தொடர்பான சட்டங்களும், வழக்காறு களும் புராதன காலங்களில் அவர்கள் இத் தீவுக்குக் குடியகன்று வந்திருந்த மலபார் பகுதியிலும் (இன்றைய திருநெல்வேலி, கேரள பகுதிகள்) தமிழ் நாட்டிலும் இன்றும் கூட வழக்கிலுள்ள சட்டங்களினதும் வழக்காறுகளினதும் ஒருங்கிணைப்பிலிருந்து தோற்றம் பெற்றன.








**வரைபடம் 2.6 இலங்கையின் மூன்று இராஜதானிகள் 1799**

Source: International Federation of Tamils (IFT), *50 Years of Subjugation of Tamils 1948-1998*, London 1998: 3



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தனிவேறான அரசொன்றைத் தாபிப்பதற்கான இலங்கைத் தமிழரின் அறைகூவலை ஓர் அண்மைக்கால வரலாற்று நிகழ்ச்சியாகச் சில வரலாற்றாசிரியர்கள் நோக்கு கின்றனர். யாழ்ப்பாண அரசர்கள் தீவின் ஒரு பகுதியை மட்டும் ஆளுபவர்களாக இருப்பதில் ஒருபோதும் திருப்தி யடையவில்லை என்ற கருத்தை அவர்கள் வலியுறுத்துகின் றனர் (ஒபயசேகர 1984: 39-42). எனினும் தமிழ் இராச்சியம் தாபிக்கப்பட்டமை இலங்கைத் தமிழர்களின் தேசியத் தன்மைக்கு முன்னிபந்தனைகளான தமிழ்மொழி, தமிழ்க் கலாச்சாரம், தமிழர் ஆட்சிப் பிரதேசம் என்பவற்றின் அடிப்படையிலான கூட்டு அடையாள உணர்வொன்றினை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்கியதென் பதில் ஐயத்துக்கிடமில்லை (அரசரட்ணம் 1964: 98-116).

எனவே, உண்மையில் தமிழருக்கு இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள்தான் 'அவர்கள் பொக்கிஷ மாகப் பாதுகாத்த உடைமைகளில் முற்றுமுழுதானவை' ஆகும். அவை ஒரு பாரம்பரியத் தாயகமாக அவர்களின் தேசியத் தன்மையின் இயற்பண்பையும், சிங்களவரிலிருந்து தெளிவாக வேறுபட்ட தன்மையையும், சிங்களவருடன் ஒன்றுபட்டு இணைய முடியாத இயல்பையும் வலியுறுத்து வதற்குப் பயன்பட்டன (அரசரட்ணம் 1979: 509). அவர்கள் தமிழ் நாட்டின் தமிழர்களுடன் அரசியல் ரீதியாகவோ, கலாச்சார ரீதியாகவோ ஒன்றுபடுவதற்கான விருப்ப மெதனையும் காட்டவுமில்லை. அவர்கள் 'எத்தனையோ நூற்றாண்டுகளாக இத்தீவில் அவர்களுக்குச் சொந்தமான தும் தனித்துவமானதும், வேறுபடுத்திக் காட்டக்கூடியது மான மொழி மற்றும் கலாச்சாரத் தொடர்ச்சிகளைப் பேணிவந்துள்ளதனால், குறிப்பாக இன்று நிலவிவரும் சூழ்நிலையில், தென் இந்தியாவின் தமிழிலக்கிய மற்றும் கலாச்சார மரபுச் செல்வம் ஆகியவை உண்மையில் வர லாற்றுத் தூண்டுதலுக்கான ஒரு காரணமாக மட்டுந்தான் செயற்படுகின்றது' (பொன்னம்பலம் 1983: 31).

## ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியின்கீழ் இலங்கை: ஆரம்பகாலத் தமிழர் வரலாறு

ஐரோப்பிய வல்லரசுகளின் வருகைக்கு முன்னர் தென் னிந்தியாவினதும் இலங்கையினதும் மக்களின் ஆரம்ப கால





அரசியல் வரலாறு, பெருமளவுக்குத் தனிப்பட்ட இராச்சி யங்களின் எழுச்சியினதும் வீழ்ச்சியினதும் ஒரு தொடர் கதையாகும். ஐரோப்பாவில் தொழிற் புரட்சியானது நிலப் பிரபுத்துவமுறை தகர்க்கப்படுவதற்கும், தேசிய அரசுகளின் தோற்றத்திற்கும் அடிகோலியது. அதே தொழிற்புரட்சி, ஐரோப்பிய வல்லரசுகளின் வாணிப விரிவாக்கத்திற்கும், வல்லரசுகளை மேலும் திடப்படுத்திக் கொள்வதற்கும், ஆசியாவில் காலனித்துவத்தை உருவாக்குவதற்கும் வழி வகுத்தது.

போர்த்துக்கேயர் தென்னிந்தியாவுக்குப் பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இலங்கைக்குப் பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் (1505) வந்து சேர்ந்தனர். அதற் கிடையில் இத்தீவு 'யாழ்ப்பாணத்தில் தமிழர், கோட்டேயில் தாழ்நிலச் சிங்களவர், கண்டியில் உயர்நிலச் சிங்களவர்' என்ற வகையில் மூன்று பெரும் இராச்சியங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. போர்த்துக்கேயர் யாழ்ப்பாண மற்றும் கோட்டே இராச்சியங்களின் பகுதியான தாழ்நிலப்பரப்பில் தமது மேலாட்சியுரிமையை நிலைநாட்டுவதில் வெற்றி கண்டபோதிலும், கண்டி இராச்சியத்தின்மீது தமது பிடியை வலுப்படுத்தத் தவறினர். கி.பி.1658இல் ஒல்லாந்தர் அவர் களை வெளியேற்றும்வரை போர்த்துக்கேயர் இங்கு தொடர்ந்திருந்தனர் (ஷரன் 1982: 16 - 17).

பதினேழாம் நூற்றாண்டில் இந்தியா ஆங்கிலேயரின தும் ஒல்லாந்தரினதும் பிரெஞ்சுக்காரரினதும் வருகையைக் கண்டது. ஆற்றலும் பேராவலும் மிக்க கண்டி அரசனான 'இரண்டாம் ராஜசிங்கனினால்' (கி.பி.1635 - 87) ஒல்லாந்தர் இத்தீவுக்கு அழைக்கப்பட்டனர். அவன் போர்த்துக்கேய மரபில் வளர்க்கப்பட்டிருந்தபோதிலும், அவனுக்கு வேண் டிய எல்லாவற்றையும் போர்த்துக்கேயரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாதிருந்தான். ஒல்லாந்தரின் வருகையைத் தொடர்ந்து, ஒல்லாந்தருக்கும் போர்த்துக்கேயருக்கு மிடையில் நீண்டகாலம் நடைபெற்ற யுத்தத்தின் விளை வாக, ஒல்லாந்தர் கொழும்பையும் யாழ்ப்பாணத்தையும் முறையே 1656இலும் 1658இலும் கைப்பற்றினர். ஒல்லாந் தரின் ஏகபோக வர்த்தக உரிமை மற்றும் அரசர்குலப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிணக்குகளின் காரணமாக கண்டி இராச்சியம் படிப்படி
யாக நலிவடைந்தது (ஷரன் 1982 : 17).

போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இத்தீவை ஆண்ட
போதுகூட வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தனிவேறான
ஒரே ஆள்புலமாக நிர்வகிக்கப்பட்டது. இறுதியாக 1815 இல்
ஆங்கிலேயரினால் கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்ட
பின்னர் 1833இல் முழுத் தீவையும் ஒரே ஆட்சியின்கீழ்க்
கொண்டு வந்ததுடன், நிர்வாக வசதிக்காகச் சிங்களவரை
யும் தமிழரையும் ஒன்றுசேர்க்கின்ற முறையில் மையப்
படுத்திய ஓர் அரசாங்க முறையும் இத்தீவில் தாபிக்கப்
பட்டது (வில்சன் 1974: 10).

1833இல் ஆங்கிலேய ஆட்சியில், இலங்கைத்தீவு முழு
வதும் ஒரே நிர்வாகத்தின்கீழ் வந்ததன் பின்னர் அரசாங்க
சேவைக்கு ஆங்கிலக் கல்வி இன்றியமையாததாகியது.
யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மிஷன் பாடசாலைகள் ஆங்கில
மொழிமூலத்தில் கற்பிக்கத் தொடங்கின. இலங்கைத்
தமிழர் ஆங்கிலத்தில் சிங்களவரைவிடச் சிறந்து விளங்
கினர். எடுத்துக்காட்டாக, 1911இல் 3.5 சதவீதத் தாழ்நிலச்
சிங்களவருடனும், 0.7 சதவீதக் கண்டியச் சிங்களவருடனும்
ஒப்பிடுகையில் 4.9 சதவீத இலங்கைத் தமிழர் ஆங்கில
எழுத்தறிவுடையவர்களாயிருந்தனர் (கே.எம்.டி சில்வா
1982: 158). இதன் விளைவாக ஆங்கிலத்தில் கல்வி கற்ற
தமிழர் தெற்கில் தொழில் வாய்ப்புக்களைத் தேடியதைத்
தொடர்ந்து ஏனைய சமூகங்களுடன் அவர்களுக்கு நேரடித்
தொடர்பு ஏற்பட்டது.

தமிழர்களுக்கெதிரான சிங்களவரின் பகைமையினதும்
மனக்கசப்பினதும் தொடக்கச் சுவடுகளை, 1830களிலிருந்து
மத்திய மலைநாட்டில் ஆங்கிலேயருக்குச் சொந்தமான
தேயிலை, கோப்பி மற்றும் இறப்பர்த் தோட்டங்களுக்குக்
குடிவந்த இந்தியத் தமிழ்த் தொழிலாளரின் குடிவரவில்
காணலாம். ஆனால், அளப்பரிய ஏற்றுமதி வாய்ப்புகளைக்
கொண்டதான பெருந்தோட்டத்துறை தாழ்நிலச் சிங்கள
வர்களுக்கு இலாபகரத் தொழில் முயற்சிகளுக்கான
புதிய வழிகளைத் திறந்துவிட்டது. எனினும் தமது காணி
களைப் பெருந்தோட்டங்களுக்குப் பறிகொடுத்ததன் காரண





மாகக் கண்டியர்கள் விசனமடைந்திருந்தனர். அத்துடன்
இலங்கைத் தமிழரும் இந்தியத் தமிழரும் 'தமிழ்' என்ற
ஒரே மொழியைப் பேசியதனால் அவர்கள் இருவரையும்
ஒருவராகவே அடையாளங் கண்டனர் (பெர்னான்டோ
மற்றும் கேர்னி - 1979: 29).

ஆங்கிலேயர் ஆட்சியின்போது இலங்கையின் அர
சியலமைப்பு அபிவிருத்திச் செயல்முறையானது வேறெந்த
ஆசிய-ஆபிரிக்கக் குடியேற்ற நாட்டினதையும் விட அதிகப்
பகட்டானதாகத் தென்பட்டது. 1813ஆம் ஆண்டிலிருந்து
வளர்ச்சிகண்ட சட்டவாக்கச் சபை சமூக அடிப்படையி
லான பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்தது. 1920இல்
அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து பிரதேச
ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதித்துவம் உத்தி
யோகபூர்வமற்ற பெரும்பான்மையொன்றைக் கொண்ட
தாக சட்டவாக்கச் சபையை விரிவுபடுத்தியது. இது
சிங்களவர் தமது சொந்த வாக்காளர் தொகுதியின் அடிப்
படையில் தமது எண்ணிக்கைப் பலம் பற்றி எண்ணுவதற்கு
வழிவகுத்தது. சிங்களத் தலைவர்கள் தமிழர்களுக்கான
ஆதரவைக் கைவிடுதலை 1920ஆம் ஆண்டுத் தேர்தல்
கண்டது. இதற்குப் பதில் நடவடிக்கையாக தமிழர் இலங்கைத்
தேசிய காங்கிரசிலிருந்து (CNC) பிரிந்து சென்று, தனி
வேறான தமது சொந்த அரசியற் குழுவை உருவாக்கினர்
(பொன்னம்பலம் 1983: 49).

பிரதேச ரீதியான பிரதிநிதித்துவத்தின் அறிமுகம்
இனச் சமூகங்கள் அரசியல் நோக்கங்களுக்காகத் திரட்டப்
படுவதற்கு வழிவகுத்தது. படிப்படியாகத் தமிழர் ஒரு
தேசியச் சிறுபான்மையென்ற சுயசாயலை எடுத்துக் கொண்
டனர். அஃதன்றியும் சிங்கள மறுமலர்ச்சியாளர்கள் வெளிப்
படுத்தியவாறு மொழி ரீதியாகவும், சமூக ரீதியாகவும்
இனத்துவ அடையாளத்தின் கவர்ச்சியானது சிங்கள உயர்
குடியினரின் அரசியல் நோக்கங்களுக்குப் பயன்பட்டது.

மேலும் டொனமூர் ஆணைக்குழுவின் அரசிய
லமைப்புச் சீர்திருத்தங்கள்; வயதுவந்தோருக்கான சர்வ
சன வாக்குரிமை மற்றும் பிரதேச ரீதியான பிரதிநிதித்துவம்
ஆகிய முறைகளை அறிமுகப்படுத்தியது. இது தமிழர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களுக்கு சட்டவாக்க சபை பிரதிநிதித்துவத்தில் நியாய மான ஒரு பங்கை வழங்கத் தவறியது. இனச்சமூக ரீதியான பிரதிநிதித்துவம் ஒழிக்கப்படுதலை விதந்துரைத்தும், பிர தேச ரீதியான பிரதிநிதித்துவத்தை ஆதரித்தும் ஆணைக் குழுவின் அறிக்கை கூறியதாவது:

சமூகங்களின் பரம்பலைக் கருத்திற்கொள்ளாது வகுக்கப்படும் பிரதேச வாக்காளர் தொகுதிகளென்பவை சிறுபான்மையினருக்கு எவ்விதப் பாதுகாப்புமின்றிப் பெரும்பான்மைச் சமூகத்தின் ஆட்சியென்ற கருத்தாவத னால் தவிர்க்க முடியாதவாறு சமூக ரீதியான தேசத்தின் பிளவை ஆழமாக்குகின்றது (DCR 1928).

எனினும் உண்மையில் நடுநிலையான அரசியற் கட்சி கள் இல்லாமையினால் ஆணைக்குழுவின் சீர்திருத்தங்கள் சாத்தியமற்றனவாயிருந்தன. இலங்கை பல்வேறு சமூகங் களாகப் பிரிக்கப்பட்ட ஒரு தேசமென்ற மிக முக்கியமான தேசியப் பிரச்சினையைப் புரிந்துகொள்ள ஆணைக்குழு தவறிவிட்டது. ஆனால், உண்மையில் 'இலங்கை இரு தேசிய இனங்களையும் (சிங்களவர் மற்றும் தமிழர்), ஐந்து சமூகங்களையும் (இந்தியத் தமிழர், இலங்கை முஸ்லிம்கள், இந்திய முஸ்லிம்கள், பறங்கியர் மற்றும் மலாயர்) கொண்ட ஓர் அரசியற்-புவியியல்சார் ஆள்புல மாகும். காலனித்துவ ஆட்சியின்கீழ் சிங்களவரும் தமிழரும் தேசிய வாழ்வின் எல்லாத் துறைகளிலும் சம பங்காளிகளாகச் செயற்பட் டனர்' (ஜயவர்தன 1984: 53). எனவே 'முழுத்தீவையும் உள் ளடக்கிய' காலனித்துவ நிர்வாகம் காரணமாக அங்கு குறிப்பிடத்தக்களவு சமூகக் கூட்டுறவும் தனிப்பட்ட நட்புறவும் காணப்பட்டது. இக்காலப்பகுதியில் உள்நாட்டு உயர்குடியினர் அரசியற் களத்தில் மேலாதிக்கஞ் செலுத் தினர். தேசிய உணர்வு குடிசனத்தின் ஒரு பிரிவினருக்கு (உயர்குடி) மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை காலனித்துவ வல்லரசுடன் பூரண ஒத்துழைப்புக்கு வழிவகுத்தது.

இந்தியப் பிராந்தியத்தில் காலனித்துவச் செயல்முறை யானது தேசிய இனங்களின் உள்ளார்ந்த வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவதற்கும் பயன்பட்டது. இந்தியாவிலும் இலங்கையிலுமிருந்த அரச எல்லைகள், அந்நிய ஆட்சியா





ளரின் அளப்பரிய அதிகாரத்தையும் அவ்வதிகாரத்தை என்றென்றும் காத்துப் பேணவேண்டிய ஆட்சியாளரின் தேவையையும் பிரதிபலித்தன. 1947-48இல் ஆங்கிலேயர் வெளியேறியதைத் தொடர்ந்தே இந்தியப் பிராந்தியத்தில் தேசிய இனங்களின் உள்ளார்ந்த வளர்ச்சி வேகம்பெற்றது. இந்தியாவில் இது சமஷ்டி இணைப்பொன்றினுள் மொழி ரீதியான அரசுகளுக்கான கோரிக்கைக்கு வழிவகுத்தது. இந்திய உபகண்டத்தில் எழுச்சிபெற்றுவந்த தமிழ்த் தேசிய வாதம் அப்போதைக்குத் தமிழ்நாடு என்ற மொழிவாரியான அரச அமைப்பிற்குள் கட்டுப்படுத்தப்பட்டது. அது ஏறக் குறைய 50 மில்லியன் தமிழர்களைச் சனத்தொகையாகக் கொண்ட ஒரு மொழிவாரி மாநில அரசாக 1960களில் உருவாக்கப்பட்டது.

இலங்கையைப் பொறுத்தவரை 1948இல் ஆங்கிலேய அரசாங்கம் பிரசாவுரிமை, வாக்குரிமை அல்லது தனிப் பட்டவர்களினதோ குழுக்களினதோ அடிப்படை உரிமை களின் பாதுகாப்புப் பற்றிய சட்டம் எதனையும் கொண் டிராத சோல்பரி அரசியலமைப்பின் அடிப்படையில், இத்தீவுக்குச் சுதந்திரம் வழங்கியது. 1948இல் சுதந்திரம் பெற்றதன் பின்னர் இலங்கை வெஸ்ட்மினிஸ்டர் பாணி யிலான பல-கட்சி சனநாயகத்தை அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து இந்நாடு முடிக்குரிய 'மாதிரிக்' குடியேற்ற நாடு எனக் குறிப்பிடப்பட்டது.

## காலனித்துவச் சூழமைவு

நாம் முன்னர் கண்டவாறு ஏறக்குறைய நான்கரை நூற்றாண்டுக் கால மேற்கத்திய காலனித்துவ ஆதிக்கம் போர்த்துக்கேயருடன் தொடங்கி, பின்னர் ஒல்லாந்தர், அவர்களைத் தொடர்ந்து ஆங்கிலேயருடன் முடிவுற்றது. ஆங்கிலேயர் தமக்கு முன்பிருந்தவர்களைப் போலன்றி, முழு நாட்டையும் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரு வதில் வெற்றிகண்டனர். ஆங்கிலேய ஆட்சியாளர்களின் தவிர்க்க முடியாத மற்றும் அவசரத் தேவைகள், மையப் படுத்திய அதிகாரக் கட்டமைப்பொன்றின் உருவாக்கத் துக்கு வழிவகுத்தன. அக்கட்டமைப்பின் அரணாக காலனி நாடான இலங்கை முழுவதையும் உள்ளடக்கிய நிருவாக, நீதி மற்றும் தொடர்பாடல் முறைமைகள் விளங்கின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெருந்தோட்ட விவசாயத்தின் அறிமுகமானது அதனை முனைப்புடன் செயல்படுத்துவதற்கான தொழிலாளர்களையும் மூலதனத்தையும் இறக்குமதி செய்தது. கோப்பி; மற்றும் தேயிலைச் சாகுபடி செய்வதில் ஆங்கிலேய சிவில் சேவையாளர்களும், இராணுவ அதிகாரிகளும் முன்னோடி முதலீட்டாளர்களாகத் திகழ்ந்தனர். கண்டி இராச்சியத்தின் பெருந்தோட்டங்களில் வேலைசெய்வதற்குத் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் இறக்குமதி செய்யப்பட்டனர். இப்பெருந்திரளான மக்கள் குடியேற்றமானது மக்கள் தொகையில் ஒரு துரிதமான வளர்ச்சியை ஏற்படுத்தியதுடன், முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் பணப்பிணைப்பை மட்டும் ஏற்படுத்திய நிலமற்ற தொழிலாள வர்க்கம் ஒன்றைத் தோற்றுவிக்கவும் வழி வகுத்தது. முன்னோடியான ஓர் இனத்துவ சிந்தனையின் அடிப்படையில் நோக்கும்போது கோப்பி மற்றும் தேயிலை போன்ற பெருந்தோட்டங்களில் குடியேற்றப்பட்டவர்கள் சிங்கள-தமிழ் பன்மைத்துவத்திற்கு இன்னுமோர் பரிமாணத்தைக் கொடுத்தனர்.

தொழிலின் வர்த்தக மயமாக்கலானது பாரம்பரிய அதிகாரக் கட்டமைப்பைப் பாதிக்கின்றவகையில், அடிப்படை உற்பத்திகளின் ஏற்றுமதிப் பொருளாதார நாடாக இலங்கையை மாற்றுவதற்கு வழிவகுத்தது. அஃதன்றியும் காலனித்துவ அரசியல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டதும் ஆங்கிலக் கல்வியறிவுடையதுமான ஒரு மத்தியதர வர்க்கமும் தோன்றியது. இது பிரதானமாகக் கீழ்நாட்டுச் சிங்களவர் மத்தியிலிருந்த உயர் சாதியினரையும் (சிங்களத்தில் கொவிகம), மேல்சாதி யாழ்ப்பாணத் தமிழரையும், இக் காலப்பகுதியில் உயர் அந்தஸ்தைப் பெற்றுவிட்ட மூன்று கரையோரச் சாதிகளின் உறுப்பினர்களையும் கொண்டிருந்தது. ஏனைய இரு ஏற்றுமதி விளைபொருள்களான இறப்பர் மற்றும் தென்னந்தோட்டங்களில் அச்சாதிகளின் உறுப்பினர்களும், கீழ்நாட்டு 'கொவிகம' குடும்பங்களும் ஆதிக்கஞ் செலுத்தின. 'அத்தகைய இன உறவுக் குழுக்கள் தமது கூட்டுவர்க்க நலன்களை முன்னேற்றுவதற்குத் தேசிய ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட கூறுகளாகவும், அதிகாரத்தின்பொருட்டு ஒன்றோடொன்று போட்டியிடுகின்ற சுய நலக் கும்பல்களாகவும் செயற்பட்டன' (சாஸ்திரி 1984: 132).





எனவே, உருவாகி வந்த மத்தியதர வர்க்கமானது சமூகம், சாதி மற்றும் மதம் போன்ற பல்வேறுபட்ட கூறுகளை உள்ளடக்கியதாக இருந்தது. இருப்பினும் ஆங்கிலக் கல்வியும் சமூக உறவுப் பாங்குகளும் காலனித்துவ அதிகாரக் கட்டமைப்பின் மீதான அக்கறையுடன் சேர்ந்து ஓரளவு உறுதிப்பாட்டையும் ஒரே சீரான தன்மையையும் ஏற்படுத்தின. எனவே இலங்கை சுதந்திரமடைந்தபோது இவ்வர்க்கம்தான் மத்தியில் அரசியல் அதிகாரத்தின் ஏக போக உரிமையைக் கொண்டிருந்தது. இருந்த போதிலும் அதிகார உயர்மட்டம் கிடையாகவும் செங்குத்தாகவும் பிளவுபட்டிருந்தது.

ஆங்கிலேயக் காலனித்துவக் காலப்பகுதியில் 'பிரித்தானிய இராஜ்ஜியத்திற்கு' எதிரான கலாச்சார மற்றும் அரசியல் போராட்டத்தில் ஒரு பொதுவான எதிரி அடையாளம் காணப்பட்டபோதிலும் மறுமலர்ச்சி இயக்கங்கள் தெளிவான இன வேறுபாட்டைக் (பௌத்தர், இந்துக்கள், சோனகர்) கொண்டிருந்தன. குறிப்பாக 1931ஆம் ஆண்டின் சீர்திருத்தத்துக்குப் பிந்திய அரசியல்-தேர்தல் செயல் முறையானது முன்பிருந்ததைவிட ஓரளவு அதிக வெளிப்படையானதும் ஒழுங்கமைக்கப்பட்டதுமான முறையில் இன அழுத்தங்களையும் ஈர்ப்புகளையும் பிரதிபலித்தது.

சுதந்திரத்தின்போது இனப்பிளவு வெளிப்படவில்லையென்றால் அதற்குக் காரணம் சிறுபான்மைச் சமூகங்களின் உயர்குடியினரைத் திருப்திப்படுத்தக்கூடியதாக அதிகாரம் போதியளவு அதிகமாயிருந்ததாகும். அவர்களில் இலங்கைத் தமிழர் ஏற்கெனவே நிர்வாகத்துறை, சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற உயர் தொழில்களிலும் முக்கியப் பதவிகளை வகித்தனர். இருப்பினும், 1928இன் அரசியலமைப்பு ஆலோசனைகளில் இந்தியத் தமிழர்களின் அரசியல் அந்தஸ்துப் பற்றிய வாசகங்கள் பிரதிபலிக்கின்றவாறு, சிங்களவர் கடுமையான ஓர் அரசியல் தொனியை வெளிப்படுத்தினர். இதன் பின்னர் 1940களில் அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கான பல்வேறு ஆலோசனை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களில் சிறுபான்மைச் சமூகங்களுக்கு அளிக்கப்படவுள்ள முக்கியத்துவம் தொடர்பிலும் சிங்கள மற்றும் இலங்கைத் தமிழ்த் தலைமைத்துவங்களுக்கிடையில் இழுபறி காணப் பட்டது (கேர்னி 1967: 30 - 47). ஆளுகின்ற உயர்குடியினர் மத்தியில், அடிப்படையான சமூக, பொருளாதார உறவு களில் ஒரு சீரானத் தன்மை நிலவியபோதிலும், இனப் பிளவுகள் அரசியல் ரீதியான அணிதிரட்டலிலும், போட்டி யிலும் அளப்பரிய ஆற்றல் மிக்கனவாயிருந்தனவென்பதை இவ்வளர்ச்சிகள் காட்டின. சுதந்திரத்தின் பின்னர் ஒரு தசாப்தத்தினுள் இலங்கையின் அரசியற் செயல்முறையில் இவை ஒரு கசப்பான நிலைக்கு மாற்றம் பெற்றன.

## போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் காலப்பகுதிகள்

இச்சின்னஞ்சிறு தீவின்மீது செயற்பட்ட ஆரம்ப காலச் சக்திகளில் மேற்கத்திய வல்லரசுகளும் அடங்கும். பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளுக்கிடையில் தமிழ் பேசும் பிரதேசங்களுக்குக் கைத்தொழில் வாணிபத்தைக் கொண்டுவந்த போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இத் தீவை ஆக்கிரமித்தனர். இவ்வாறாக பாரம்பரிய நிருவாக முறைமையானது, காலனித்துவ முறைமையொன்றினால் பதிலீடு செய்யப்பட்டது. சுவிசேஷ நற்செய்தியைப் பரப்பும் கிறிஸ்தவமும் ரோமன் கத்தோலிக்கமும்கூட இத்தீவில் அறிமுகப்படுத்தப்பட்டன. உள்நாட்டுச் சமூகங்களுக்கும் போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தருக்கும் இடையிலான கலப்புத் திருமணங்களின் விளைவாகப் பறங்கியர் என்ற ஒரு புதிய சமூகக் குழுவினர் தோன்றினர்.

1650 யூனில் அதிக வலிமைமிக்க வாணிப வல்லரசான ஒல்லாந்தரினால் போர்த்துக்கேயர் வெளியேற்றப்பட்ட னர். போர்த்துக்கேயர் காலத்தின் பரந்த ஆட்சிப் பிரதேசப் பிரிவுகளைத் தொடர்ந்தும் வைத்திருந்த ஒல்லாந்தர், கொழும்பிலுள்ள ஆளுநருக்குப் பொறுப்புக்கூறுபவரும், யாழ்ப்பாணக் கோட்டையில் நிலைகொண்டிருந்தவரு மான ஒரு படைத்தளபதி மூலம் அவற்றை ஆட்சி புரிந்தனர். 1796இல் ஒல்லாந்தரிடமிருந்து இத்தீவின் கட்டுப்பாட்டை ஆங்கிலேயர் கைப்பற்றும்வரை இந்நிலைமை தொடர்ந்தது. எனவே பதினாறாம் நூற்றாண்டிலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டுவரை இத்தீவின் கடல்சார்ந்த மாவட்டம் முழு





வதையும் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் ஆட்சிபுரிந்த போதிலும், தமிழ்பேசும் ஆட்சிப் பிரதேசங்களான வடக் கும் கிழக்கும் அவற்றின் நிருவாகத் தனித்துவத்தைத் தீவின் எஞ்சிய பகுதியிலிருந்து வேறானதாகப் பேணிவந்தன.

தமிழ் ஆட்சிப் பிரதேசங்களின் இத்தனிப்படுத்தல் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையிலான எல்லைப் பிரதேசங்களிலுள்ள விரிந்து படர்ந்த அடர்த்தியான காடு களினால் மேலும் வலுப்படுத்தப்பட்டது. காலனித்துவத் துக்கு சற்றுமுந்திய காலப்பகுதியில் நிலவிய மட்டுப்படுத்தப் பட்ட சமூகக்கூட்டுறவுகூட, தொடர்பாடலிலிருந்து சிரமத் தினாலும் அத்தகைய தொடர்புகளைத் தடுக்கின்றவகை யில் மிகக்கண்டிப்பான காலனித்துவக் கொள்கையினாலும் ஒரு முடிவுக்கு வந்தது.

போர்த்துக்கேயர் இந்து சமயத்தை எதிர்த்தனர். இந்துக் கோயில்கள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டு அவற் றின் சொத்துகள் அபகரிக்கப்பட்டன. யாழ்ப்பாணத் தலைமைத் தளபதியான பெலிப்பி டி ஒலிவீரா (1619 - 27) சுமார் 500 கோயில்களை அழித்ததாகப் பறைசாற்றினான் (மனோகரன் மற்றும் ஃபஃபென்பேர்கர் 1994: 42 - 43). இந்து சமயத்தைப் பின்பற்றுதல் தொடர்பாக ஒல்லாந்தர் அதிக சகிப்புத்தன்மையுடையவர்களாக இருந்ததனால், ஒல்லாந்தர் காலத் தொடக்கத்திலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டுவரை இந்துசமய மறுமலர்ச்சியொன்று காணப்பட்டது. தென்னிந்தியாவிலிருந்து அந்தணர்களை அழைத்துவரும் வழக்கத்திற்குப் புத்துயிரளிக்கப்பட்டது. தென்னிந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட கட்டடக் கலைஞர்களினதும் சிற்பிகளினதும் உதவியுடன், அழிக்கப் பட்ட கோயில்கள் மீளக் கட்டியெழுப்பப்பட்டதுடன் எண்ணற்ற புதிய கோயில்களும் கட்டப்பட்டன.

புதிய கோயில்களைப் புனிதப்படுத்துவதற்கும் சிலை களையும் தெய்வங்களையும் சடங்காச்சாரப்படி பிரதிஷ்டை செய்வதற்குமென அந்தணர்கள் அழைத்துவரப்பட்டனர். முன்னர் ஒளிவுமறைவாகக் கடைப்பிடிக்கப்பட்ட கோயில் சடங்குகளும் வழக்கங்களும் இப்போது, சீர்திருத்தத் திருச்சபையின் மதகுருமார்களே வருந்தக்கூடிய வகையில்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பகிரங்கமாகவும் பேரார்வத்துடனும் நிகழ்த்தப்பட்டன. இந்து சமயத்தைப் பின்பற்றுதலை ஒல்லாந்தர் தடை செய்ய வில்லை. வெள்ளாள முக்கியஸ்தர்களும் நிலச்சுவான் தார்களும் அதிகாரிகளும் இச்சமயப் புத்தெழுச்சிக்குப் பகிரங்கமாக ஆதரவு நல்கினர். இக்காலப்பகுதியில் யாழ்ப் பாண இந்துகளுக்கும் தென்னிந்திய இந்துகளுக்கும் இடை யிலான தொடர்புகள் புனிதத் தலங்களுக்கான யாத்திரை கள் மூலம் பேணப்பட்டன. யாழ்ப்பாணத் துறைமுகங் களுக்கும் தமிழ்நாட்டுத் துறைமுகங்களுக்குமிடையில் சிறு படகுகள் அடிக்கடி பயணித்தன.

எனவே இலங்கைத் தமிழ்ச் சமுதாயத்தைக் கொண்ட தான யாழ்ப்பாணம், தென்னிந்தியாவின் கலாச்சாரப் பரப்பின் ஒரு விரிவாக்கமாகியது. வர்த்தகமும் மதமும் இப்பிணைப்பில் முக்கியக் கூறுகளாயிருந்தன. இலங்கைத் தமிழரின் இந்து மதத்துக்குப் புத்துயிரளிப்பதற்குத் தென் னிந்திய வளங்கள் பயன்படுத்தப்பட்டமை இத்தொடர்ச் சியை மேலும் மேம்படுத்தியது.

தமிழ்ச் சமுதாயத்தின் மீதான கிறிஸ்தவத்தின் ஆழ மான ஊடுருவலானது சமூக - கலாச்சார சிந்தனைகளை யும் சித்தாந்தங்களையும் பெரியளவில் பாதித்தது. பெரும் பட்டணங்களிலும் தலைநகரத்திலும், ஒவ்வொரு கிராமத் திலும் பெரியதும் சிறியதுமான தேவாலயங்களும், மத குருமார் இல்லங்களும், கன்னியர் மடங்களும், அநாதை இல்லங்களும், வைத்தியசாலைகளும் எழுந்தன. மதமாற்றம் வெற்றியளித்துள்ளதாக உரிமைகொண்டாடிய செயல் மிகைப்படுத்தப்பட்ட ஒன்றாக இருந்தபோதிலும், மதம் மாறியவர்களின் எண்ணிக்கை கணிசமாகவே காணப் பட்டது. யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்த அரசர் குலம் ஓரங்கட்டப்பட்டதனால் அரச குடும்ப உறுப்பினர்களும், பதவி வகித்த உயர்குடியினரும் கிறிஸ்தவத்தைத் தழுவு வதற்குத் தூண்டப்பட்டனர். இக்காலப்பகுதியில்; யாழ்ப் பாணம் ஒல்லாந்தருடைய ஒரு காப்பாண்மையாக (Protec-torate) ஆளப்பட்டதனால் ஒல்லாந்தருக்கான ஆதரவை உறுதிப்படுத்துவதில் வெளிப்படையான ஓர் அனுகூல மிருந்தது. அது நிலவுடைமையாளர்களான வெள்ளாள வகுப்பினருக்குப் பதவிகளினதும் சிறப்புரிமைகளினதும்





தொடர்ச்சியையும் வர்த்தகத்தில் முன்னுரிமையையும் காணி உரிமைகளையும் உறுதிப்படுத்தியது. மறுதலையாகக் கிறிஸ்தவ எதிர்ப்புணர்ச்சியும், பாரம்பரிய நம்பிக்கையை வெளிப்படையாகப் பின்பற்றுதலும், கண்டனத்திற்கும் பதவி இழப்பிற்கும் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படு வதற்கும், சிறைத் தண்டனைக்கான சாத்தியப்பாட்டிற்கும் வழிவகுத்தன.

யாழ்ப்பாணக் கிறிஸ்தவ திருப்பணி பெருமளவுக்குப் பிரான்சிஸ்கன் குருமாரின் கட்டுப்பாட்டில் இருந்தபோதி லும் பின்னர் சில ஜேசுவிற் குருமாரும் அனுமதிக்கப் பட்டனர். 1634இன் மக்கள்தொகை அறிக்கைக்கிணங்க யாழ்ப்பாண ஆட்சிப் பிரதேசம் முழுவதிலும் 71,438 கிறிஸ் தவர்கள் இருந்ததுடன், 26 தேவாலயங்களும் இருந்தன (பீரிஸ் மற்றும் மீர்ஸ்மன் 1972: 242). மதம் மாறியவர்கள் வெள்ளாளர், கரையார், சிவியார், நளவர் மற்றும் பிராம ணர்கள் அடங்கலாகப் பல்வேறு சாதிகளைச் சார்ந்தவர் களாக இருந்தனர். மதம் மாறியவர்களுக்கு ஞானஸ்நானத் தின்போது புனிதர்களின் பெயர்கள் சூட்டப்பட்டதுடன், முக்கியஸ்தர்களின் பெயர்களுக்கு முன்னால் ‘டொன்’ என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

ஒல்லாந்தர் இத்தேவாலயங்களைக் கைப்பற்றி அவற் றைப் புரட்டஸ்தாந்து மதத்தினராக மாற்ற முற்பட்ட போது அவலமான விளைவுகளைக் கண்டனர். மக்கள் திரள்திரளாக அத்தேவாலயங்களைக் கைவிட்டுத் திரும்ப வும் தமது சொந்த அடையாளங்களைப் பின்பற்றச் சென் றனர். எவ்வாறிருப்பினும் இப்பங்குகளுக்குத் திருப்பணி யாளர்களை நியமிப்பதற்குத் தேவையான திருச்சபைக் குருமரபினர் ஒல்லாந்தரிடம் இருக்கவில்லை. அனேக கிராமத் தேவாலயங்கள் குருமாரின்றிக் கைவிடப்பட்ட அதேவேளையில், சபையினரும் மறைந்துபோயினர். அனேக தேவாலயக் கட்டடங்கள் கவனிப்பாரின்றிச் சீர்குலைந்தன. கிராமங்களெங்கும் கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன, புதிய கோயில்கள் கட்டப்பட்டன, முக்கியமான திருவிழாக்கள் புத்தெழுச்சியுடன் பேரார்வத்துடன் கொண்டாடப்பட்டன.

திருமணச் சடங்கின்போது தேவாலயத்தில் திருமண பந்தத்தின் பாரம்பரியச் சின்னமான தாலி குருவானவரால்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆசீர்வதிக்கப்பட்டப் பின்னர் பயன்படுத்தப்பட்டது. சில சமயங்களில் தேவாலயத்தில் திருமணம் முடித்த ஒரு தம்பதியினர் வீட்டில் இந்துச் சடங்கை மேற்கொள்வர். ஏனைய வாழ்க்கைச் சக்கரச் சடங்குகள் பாரம்பரிய முறையில் இரகசியமாகப் பின்பற்றப்பட்டன. ஒல்லாந்தர் பாடசாலை முறைமையை, அரசிடமிருந்து சிறிய அளவிலான உதவியை சம்பளமாகப் பெற்ற பள்ளி ஆசிரியர்கள் மூலம் பேணிவந்தனர். இவ்வாசிரியர்கள் பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருந்தபோதிலும் அவர்கள் தமிழ் மொழியைக் கற்பித்தனர். பாடசாலை மாணவர் சேர்ப்புப் புள்ளி விவரம் பெரிதும் கவரக்கூடிய வகையிலிருந்தது. 1665இல் 18,000 பிள்ளைகள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர் (பீரிஸ் மற்றும் மீர்ஸ்மன் 1972: 243). ஒல்லாந்தரால் இலங்கையில் அச்சுக் கூடம் அறிமுகப்படுத்தப்பட்டமையும் தமிழில் கிறிஸ்தவ இலக்கியங்கள் அச்சிடப்பட்டமையும் கருத்துகள் பரப்பப் படுவதற்கும் எழுத்தறிவு பரவுவதற்கும் மேலும் பங்களித்தன.

## ஆங்கிலேயக் காலனித்துவ ஆட்சியும், இன உறவுகளில் அதன் தாக்கமும்

1796இல் இலங்கைக்கு ஆங்கிலேயரின் வருகையும், இத்தீவில் ஒருங்கிணைக்கப்பட்ட நிருவாக முறை ஏற்படுத்தப் பட்டமையும் பெரும் பின்விளைவுகளை ஏற்படுத்தின.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எல்லாச் சமூகங்களையும் சேர்ந்த மத்தியதர வர்க்கத் தலைவர்கள் ஒன்றாகக் கைகோர்த்து ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகக் கிளர்ச்சி செய்ததுடன் நாட்டின் நிருவாகத்தில் ஒரு பங்கையும் வற்புறுத்திக் கோரினர். ஆங்கிலேயர் காலத்துக்குக் காலம் தமது பங்குக்கு மட்டுப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினர்.

ஆரம்பம் முதலே இலங்கையின் தேசியவாத இயக்கத்தில் 'தேசியவாதிகளுக்கும்' 'அரசியலமைப்புவாதிகளுக்கும்' இடையில் தெளிவான வேறுபாடு காணப்பட்டது. 'அரசியலமைப்புவாதிகள்' ஆங்கிலேயரால் அறிமுகப் படுத்தப்பட்ட அரசியலமைப்பு மற்றும் அரசியல் கட்டமைப்பைக் குழப்பாத வகையில் மட்டுப்படுத்தப்பட்ட அரசியல் நடவடிக்கை நிகழ்ச்சித் திட்டமொன்றை வலியுறுத்திய அதே வேளையில், 'தேசியவாதிகள்' அரசியலமைப்பு வாதிகளின் நடவடிக்கைகளுக்கு முரண்படாத வகையில் நாட்டின் கலாச்சாரப் பாங்குகளுக்கும், மதப் பாரம்பரியங்களுக்கும் அதிக முக்கியத்துவம் அளித்ததன் மூலம் அரசியல் நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்த முனைந்தனர் (கே. எம். டி சில்வா 1981: 378).





1915ஆம் ஆண்டளவில் அரசியலில் ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்கான அமைப்பொன்றின் தேவை உணரப் பட்டதைத் தொடர்ந்து, 1919இல் இலங்கைத் தேசிய சங்கத்தினதும் (Ceylon National Association) இலங்கைச் சீர் திருத்த லீக்கினதும் (Ceylon Reform League) இணைப்பின் மூலம் இலங்கைத் தேசிய காங்கிரஸ் (Ceylon National Congress) உருவாக்கப்பட்டது.

முதலாம் உலக யுத்தம் முடிந்துவிட்ட நிலையில் சுய நிர்ணய உரிமைக் கருத்தே அக்காலத்து அரசியற் சிந்தனையின் பொதுவான போக்காக இருந்தது. இது சிங்கள உயர் குடியினருக்கும் தமிழ் உயர்குடியினருக்கும் இடையில் அரசியல் ரீதியான இறுதிநிலைப் போட்டியை ஏற்படுத்தியது. இம்முரண்பாடுகளை ஊக்குவித்து வளர்த்து விட்டதன் மூலம், ஆளுநர் மன்னிங் தனது சுயலாபத்திற்காக இதனைப் பயன்படுத்தினார். இலங்கைத் தேசியக் காங்கிரசை தனது அதிகாரத்திற்கான ஒரு சவாலாகக் கண்ட அவர் அதில் தெளிவாகப் புலப்பட்ட இன ஒற்றுமையை அழிக்க முற்பட்டார் (கே.எம்.டி சில்வா 1952: 173).

எனினும் இலங்கை மக்களின் பிரதிநிதித்துவத்துக்கான கோரிக்கையை ஒதுக்கித்தள்ள முடியாதிருந்தது. ஒரு பல்லினச் சமுதாயத்தில் இது அவ்வளவு எளிமையானதல்ல. இலங்கைத் தேசிய காங்கிரஸ் சுமார் 50 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையொன்றைக் கோரியது. அவர்களில் 80 சதவீதமானோர் பிரதேச அடிப்படையில் பரந்துபட்ட ஆண்கள் மற்றும் பெண்களின் வாக்குரிமையின் மூலம் தெரிவுசெய்யப்படவிருந்தனர். ஆளுநரின் நிறைவேற்றுச் சபையில் இலங்கையைச் சார்ந்த மூன்று அமைச்சர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருக்கவேண்டுமென்றும், சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களிலிருந்து குறைந்தபட்சம் இருவர் அமைச்சர்களாக நியமிக்கப்படவேண்டுமென்றும் அது கோரிக்கை விடுத்தது.

இவ்வாலோசனைகள் கீழ்நாட்டுச் சிங்களவருக்கு முதன்மையான அரசியல் அதிகாரத்தை வழங்குவதாகத் தோன்றியதனால் இவற்றைக் கடுமையாக எதிர்த்த சிறுபான்மையினர், குடியேற்ற நாடுகளுக்கான இராசாங்கச் செயலாளருக்கு முறைப்பாடொன்றை அனுப்பினர். இதற்குச் சபை அலுவலகம் அவசரம் காட்டவில்லை. அதிகாரக் கைமாற்றமானது இலங்கையின் சமூகங்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கும், சமய ரீதியாகவோ இன ரீதியாகவோ அன்றி, அரசியல் ரீதியாகத் தம்மை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் கற்றுக்கொள்ளும்வரை, நம்பிக்கைக்குப் பாத்திரமானதாக இருக்காது என்று கருதப்பட்டது. இவ்விடயம் முழுவதும் ஆளுநர் சேர் வில்லியம் மன்னிங்கின் கலந்தாலோசனையுடன் ஐக்கிய இராச்சியத்திலுள்ள காலனித்துவ அலுவலகத்தால் பரிசீலனை செய்யப்பட்டது.

எனினும் இலங்கை தேசியக் காங்கிரசானது தேசிய ஒற்றுமையினதும், இன இணக்கப்பாட்டினதும் அடையாளமாகச் செயற்படுமென்ற எதிர்பார்ப்பு தேசிய சட்டசபையில் பிரதிநிதித்துவமுறை மற்றும் அரசாங்க சேவையில் பதவிகள் என்ற இரு காரணங்களின் நிமித்தம் நிறைவேறவில்லை. இதன் விளைவாக சிங்கள மற்றும் தமிழ் அரசியல் தலைமைகளுக்கிடையில் ஏறக்குறைய ஒரு தசாப்த காலம் நிலவிய அந்நியோன்ய உறவுகள் முறிவடைந்தன (கே.எம்.டி சில்வா 1986: 97 - 98).

எதிர்பார்த்தவாறு 1924இல் பிரதேச ரீதியான பிரதிநிதித்துவமும் மேல் மாகாணத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களுமென்ற விடயத்தில், தலைவர்களுக்கிடையில் ஒரு பிளவு தோன்றியதைத் தொடர்ந்து, பெரும்பான்மையான தமிழ்த் தலைவர்கள் இலங்கைத் தேசியக் காங்கிரசை விட்டு விலகித் தமது சொந்த அமைப்பான தமிழ்ச் சீர்திருத்த லீக்கை (Tamil Reformist League) உருவாக்கினர்.





## ஆங்கில ஆட்சியின்கீழ் அரசியலமைப்பு மற்றும் அரசியல் வரலாறு

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இந்து சமுத்திரத்தில் ஆங்கிலேயர்கள் ஒப்புயர்வற்ற வல்லரசாகிவிட்டனர். இந்தியாவிலும் அதனைச் சுற்றியுள்ள கடற்பிரதேசங்களிலும் அதிகாரச் சமநிலையில் ஏற்பட்ட இம்மாற்றமானது இலங்கையையும் பாதிப்பதாயிருந்தது. காலனித்துவத்தின் கடந்த காலத்தைச் சிறிது பின்னோக்கிப் பார்ப்போமானால், பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒல்லாந்தர் கிழக்கிந்தியக் கம்பெனியின் படைகளிடம் சரணடைந்தனர். 1796 மார்ச்சில் மதறாஸ் அரசாங்கத்தினால் ஆங்கிலேயப் படைகளின் தளபதிக்கு இலங்கைத்தீவின் மீதான சிவில் மற்றும் இராணுவத் தற்றுணிபு அதிகாரம் உரித்தாக்கப்பட்டது. ஈராண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்த இராணுவ ஆட்சிக்காலத்தின்போது மதறாஸ் அரசாங்கமே இலங்கை அரசாங்கத்துக்குப் பொறுப்பாயிருந்தது. 1802இன் ஏமியன்ஸ் சமாதானத்தைத் தொடர்ந்து, ஆங்கிலப் பேரரசின் ஒரு பகுதியாகிய இலங்கை ஒரு முடிக்குரிய குடியேற்ற நாடாக்கப்பட்டது. முடியரசினால் இலங்கையின் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டதோடு ஆங்கிலேய ஆட்சியின் முதலாம் கட்டம் முடிவடைந்தது. இலங்கையின் நிருவாகமானது படைகளின் தலைமைத் தளபதி, காலனித்துவச் செயலாளர், பிரதம நீதியரசர் ஆகியோரைக் கொண்ட கவுன்சிலின் ஆலோசனையின்படி, ஆளுநரால் நடத்தப்பட்டது.

லெப். ஜெனரல் சேர் றொபேட் பிறவுனிங் 1812இல் பொறுப்பேற்றார். அவரின் ஆட்சியின்போது இலங்கையைத் தனியொரு நாடாக விருத்தி செய்யக்கூடிய வகையில் கண்டி இராச்சியம் முடியரசுடன் இணைக்கப் பட்டது. ஆங்கிலேய காலனி அரசின் ஆளுநர் 1814ஆம் ஆண்டு சனவரியில் கண்டி மக்களின் அதிகரித்துவந்த கோரிக்கைகளின் பேரிலும், ஆங்கிலப் பிரசைகளுக்கெதிராகப் புரியப்பட்ட அட்டூழியங்களின் அடிப்படையிலும் தமது நடவடிக்கையை நியாயப்படுத்தி, இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட ஒரு படைப்பிரிவின் உதவியுடன் வலுவூட்டப்பட்ட ஒரு பலமான இராணுவத்துடன் கண்டி இராச்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யத்தின்மீது படையெடுத்தார். அவர் 'இக்குடியேற்றங்களுக்கு நிரந்தர சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்காகவும், கண்டி மக்களை அடக்கி ஒடுக்கியவர்களிடமிருந்து ஆங்கிலேயர் அவர்களை விடுவித்தனரென்ற பெயரை நிலைநாட்டுவதற்காகவும்' இந்நடவடிக்கையை மேற்கொண்டதாக மக்களுக்கு அறிவித்தார் (இலங்கை அரசாங்கம் 1984). கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து பிரதானியுடன் சேர்ந்து குடியேற்றச் சட்டமொன்று ஆக்கப்பட்டு 02.03.1815இல் அது பிரகடனப்படுத்தப்பட்டது.

இதன்மூலம் முழுத் தீவும் ஆங்கில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது. கண்டி குடியேற்றச் சட்டமானது கண்டி பிரதானியின் சலுகைகள், அதிகாரங்களின் கீழ் ஒரு வகையான மறைமுக ஆட்சி அதிகாரத்தை வழங்கியது. நடைமுறையில் தனது அதிகாரம் தான் எதிர்பார்த்ததைவிட ஸ்திரம் குறைவாக இருப்பதை உணர்ந்த பிரதானி அதற்கெதிராகப் புரட்சி செய்தபோதிலும், அது முரட்டுத்தனமாக அடக்கப்பட்டு அவரின் அதிகாரம் ஆங்கில சிவில் சேவையாளர்களுக்குக் கைமாற்றப்பட்டது (DUBY 1993: 4).

முதலாவது சட்டசபை ஆளுநரால் நியமிக்கப்பட்ட ஒன்பது உத்தியோகபூர்வ உறுப்பினர்களையும், ஆறு உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர்களையும் கொண்டதாக இனப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் 1833இல் தாபிக்கப்பட்டது. முதலாவதாக நியமிக்கப்பட்ட அறுவரில், தமிழ் மற்றும் பறங்கிச் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மூன்று ஆங்கில வணிகர்கள் இடம்பெற்றனர். கண்டி மற்றும் கரையோர மாகாணங்களுக்கிடையிலான நிருவாக வேறுபாடு ஒழிக்கப்பட்டது. நீதிமன்றங்களும் மறுசீரமைக்கப்பட்டன. இறுதியில் இலங்கை ஒரே நாடாகியது. ஆளுநருக்கான நிறைவேற்றுச் சபையொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அவர் அதன் ஆலோசனையைக் கேட்க வேண்டியிருந்தபோதிலும் அதன்படி செயற்பட வேண்டுமென்ற கட்டாயமிருக்கவில்லை.

1833 முதல் 1912 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற குறிப்பிடத்தக்க அரசியலமைப்பு அபிவிருத்தியானது, பிரித்தானியப் பேரரசின் ஏனையப் பகுதிகளிலுள்ள குடியேற்ற நாடுகளில், குறிப்பாக அவுஸ்திரேலியாவில் நடந்ததைப் போன்று சட்டசபையின் சட்டவாக்க மற்றும் நிதி அதிகாரங்கள் படிப்படியாக அதிகரிக்கப்பட்டமையாகும். 1859இல் உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர்களுக்குச் சட்ட மூலங்களை அறிமுகப்படுத்தும் உரிமைகள் வழங்கப்பட்டன. 1889இல் உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆறிலிருந்து எட்டாக அதிகரிக்கப்பட்டது. அதன்மூலம் மேலதிக ஆசனங்கள் கண்டியச் சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் கிடைத்தன. எனினும் உத்தியோகபூர்வப் பெரும்பான்மையை பிரித்தானிய அரசாங்கம் தொடர்ந்தும் பேணிவந்தது. இத்தகைய வளர்ச்சிகள் எல்லாம் பெரும்பாலும் ஐரோப்பிய மக்களின் நன்மைக்காகவேயன்றி உள்நாட்டு மக்களுக்காகவல்ல என்பதை இங்கு கவனத்திற் கொள்ளவேண்டும்.

இந்நூற்றாண்டு முடிவுக்கு வருகின்ற வேளையில், இலங்கையின் அரசியல் வாழ்வில் முற்றிலும் புதியதோர் ஆக்கக்கூறு தோன்றத் தொடங்கியது. கல்வி முறைமையின் விரிவாக்கம் மற்றும் நாட்டின் பொதுவான அபிவிருத்தி ஆகியவற்றின் விளைவாகத் தமிழர்களையும் சிங்களவர்களையும் உள்ளடக்கிய ஒரு புதிய மத்தியதர வர்க்கம் உருவாகியது. வர்த்தகம் மற்றும் தொழிற்துறை தொடர்பான வெவ்வேறு உயர்தொழில்களில் உள்நாட்டு மக்கள் அதிக அளவில் பதவி வகிக்கத் தொடங்கினர். சிங்கள மற்றும் தமிழ்த் தலைவர்கள் பொது அலுவல்களை மேற்கொள்வதில் தமக்கும் ஆக்கபூர்வமான பங்கு தரப்படவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கத் தொடங்கினர். நல்லிணக்கத்துடன் வாழ்ந்த இவ்விரு சமூகங்களும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்காகப் போராடின. இலங்கைச் சீர்திருத்த லீக்கின் முதலாவது தலைவராயிருந்த, தமிழரான சேர் பொன்னம்பலம் அருணாசலம் இந்தியத் தேசிய காங்கிரசை (Indian National Congress) அடியொற்றி இலங்கைத் தேசிய காங்கிரசை (Ceylon National Congress) உருவாக்குவதற்கு ஏனைய சிங்களத் தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டார். 1919இல் இலங்கைத் தேசியக் காங்கிரஸ் தாபிக்கப்பட்டபோது இனத்துவம் ஒரு







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரச்சினையாக இருக்கவில்லை. அருணாசலத்தின் தலைமைத்துவம் ஐயத்திற்கிடமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது (இலங்கை அரசாங்கம் 1984).

## டொனமூர் அரசியலமைப்புச் சீர்திருத்தம்

1927ஆம் ஆண்டு நவம்பரில் டொனமூர் பிரபு தலைமையில் ஒரு விசேட ஆணைக்குழு இலங்கைக்கு வந்தது. அனேக அமைப்புகளைச் சார்ந்தவர்களும். பொது வாழ்வில் முக்கியமானவர்களும் ஆணைக்குழுவுக்கு மகஜர்களை அனுப்பியதுடன் அதன் முன்னிலையிலும் சமூகமளித்தனர். இலங்கை தேசியக் காங்கிரஸ் பிரதேச ரீதியான பிரதிநிதித்துவம் விரிவாக்கப்படவேண்டுமென்று வலியுறுத்தியதுடன் முழுப் பொறுப்புள்ள அரசாங்கத்தையும் கோரியது. இருந்தபோதிலும் ஆணைக்குழு முன்மொழிந்த வயது வந்தோருக்கான வாக்குரிமை அறிமுகப்படுத்தப்படுதலை அது எதிர்த்தது. மறுபுறத்தில் தமிழ்த் தலைமையானது 1923ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சிங்களவர், தமிழர் பிரதிநிதித்துவ வீதத்தை 2:1 என்ற வகையில் சட்டசபையில் தொடரவேண்டும் என வலியுறுத்தியது. இதே நேரத்தில் கண்டி தேசியப் பேரவை சமஷ்டி முறை ஆட்சியொன்றைக் கோரியது.

நன்கு அறியப்பட்ட சிங்கள, தமிழ்ச் சமூகங்களைச் சார்ந்த பெரும்பாலானோர் ஆணைக்குழு முன் சென்று, தத்தமது சாதிகளினதும் சமயங்களினதும் சமூகங்களினதும் உரிமைகள் விசேடப் பிரதிநிதித்துவத்தின் மூலம் பாதுகாக்கப்படாவிட்டால் அவை அழிந்துவிடுமென்று வாதிட்டனர். பிரதேச ரீதியான பிரதிநிதித்துவ முறையை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் ஏனையோர் மீதான கீழ்நாட்டுச் சிங்களவர்கள் மேலாதிக்கம் சாத்தியமாகும் என்பதனால் இதற்கு எதிராக, கண்டியர்களும், தமிழர்களும் இத்தகைய நிலையைத் தவிர்க்கும் பொருட்டு ஆங்கிலேய ஆட்சி தொடரவேண்டியது அவசியமென விரும்பினர். இவ்வகையில் பொதுவாக எல்லோரும் காலனித்துவ ஆட்சி தொடரப்படுதலையே விரும்பினர்.

டொனமூர் ஆணைக்குழு அறிக்கை (DCR 1928) பெரும் விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய முக்கியமான அனேக





பரிந்துரைகளைச் செய்தது. இன மற்றும் சமூக ரீதியான பிரதிநிதித்துவத்தை ஒழிப்பதற்கும், பிரதேச ரீதியான பிரதிநிதித்துவத்தை விஸ்தரிப்பதற்குமான பரிந்துரையில் டொனமூர் ஆணைக்குழு அறிக்கை கூறியதாவது, 'சமூகங்களின் பரம்பலைக் கருத்திற் கொள்ளாமல் வகுக்கப்பட்ட பிரதேசத் தேர்தல் தொகுதியானது சிறுபான்மைகளுக்குப் பாதுகாப்பேதுமற்ற பெரும்பான்மை ஆட்சியென்ற கருத்தாகின்றது. அதேவேளையில் சிறுபான்மைகளுக்கான பாதுகாப்புகள் இன ரீதியாகத் தேசத்தின் பிரிவினையை தவிர்க்கமுடியாதவாறு ஆழமாக்குகின்றது' அது மேலும் கூறியதாவது:

இலங்கையின் நிலைமையை மதிப்பீடு செய்கையில் இன ரீதியான பிரதிநிதித்துவமானது தன்னலத்தையும் சந்தேகத்தையும், பகைமையையும் வளர்க்கின்ற அரசியல் உணர்வின் புதிய வளர்ச்சிக்கு நஞ்சூட்டக்கூடிய, ஒரு தேசிய அல்லது கூட்டு மனப்பான்மையின் அபிவிருத்தியை முனைப்புடன் தடுக்கின்ற, மக்களின் உயிர்நாடியான ஆற்றல்களை மேலும் மேலும் ஆழமாக அரிக்கக்கூடிய, மேலும் அரசியல் சமூகத்தில் புரையோடிப்போயுள்ள ஒரு புற்றுநோயென்ற முடிவுக்குத் தயக்கமின்றி நாம் வந்துள்ளோம். இன ரீதியான பிரதிநிதித்துவ முறைமையானது, நாட்டைச் சீரழிக்கின்றவகையில் அதன் செல்வாக்கு முழுவதையும் கொண்டதாக அரசியலமைப்பின் ஒரு தெளிவான அம்சமாக இருக்கின்றவரை, குடிமக்களின் பல்வேறு வகையான விகிதாச்சாரங்களையும், அவற்றின் பொதுவான ஒற்றுமைப்பண்புகளை உணர்கின்ற வகையிலும், நாட்டின் பிரசைகளாக அவற்றுக்குள்ள பொதுவான கடமைகளை ஒப்புக் கொள்கின்ற வகையிலும் ஒன்றிணைக்க முடியும் என்ற நம்பிக்கை துளியும் இருக்க முடியாது (இலங்கை DCR 1928: 39).

1833இல் அரசியல் ரீதியாக ஒருமைப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே இன விடயங்கள் பற்றி முன் வைக்கப்படும் கருத்து மேலோங்கியிருந்தது. 1931இல் டொனமூர் சீர்திருத்தங்களின் அறிமுகம் இலங்கையில் அரைகுறைப் பொறுப்புள்ள ஓர் அரசாங்கத்துக்கு வழிசமைத்தது. இச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சீர்திருத்தங்கள் சர்வசன வாக்குரிமையையும் அறிமுகப் படுத்தியதுடன் இன ரீதியான பிரதிநிதித்துவ முறைமையையும் ஒழித்தது.

அக்காலத்தில் தலைசிறந்த தமிழ் அரசியல்வாதியாக விளங்கியவரும், வாக்குரிமை விஸ்தரிக்கப்படுதலையும் இன ரீதியான தேர்தல் தொகுதிகள் ஒழிக்கப்படுதலையும் எதிர்த்தவருமான சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவற்றை ஆட்சேபித்து, காலனித்துவ அலுவலகத்துக்குத் தூது சென்றபோதிலும் அது பயனளிக்கவில்லை. இராமநாதனின் தூது தோல்வியடைந்ததைத் தொடர்ந்து பழைமைவாதத் தமிழ்த் தலைமைத்துவம் புதிய அரசியலமைப்பை வெள்ளோட்டம் பார்க்கத் தீர்மானித்தது. 'இன ரீதியான கோட்பாடு ஒழிக்கப்படுதலுடன் இணைந்ததான சர்வசன வாக்குரிமை ஆலோசனையினால் சிங்களவருக்கு இப்போது ஐம்பது சதவீதத்துக்குக் கூடிய ஆசனங்கள் கிடைக்குமென்பதனால் அதுவே சிறுபான்மைகளின் அழிவுக்குக் காரணமாகி விடுமென்ற அடிப்படையில், டொனமூர் திட்டத்தை முதலில் அகில இலங்கைத் தமிழ் லீக் எதிர்த்தது' (ரஸ்ஸல் 1982: 20). எனினும் பின்னர் அத் திட்டத்துக்குச் சாதகமாக அதன் நிலைப்பாட்டை மாற்றியது. ஆனால் டொனமூர் திட்டம் சுய ஆட்சியைவிட மிகக் குறைந்ததென்ற அடிப்படையில் அதனை எதிர்த்த புதிதாக உருவாக்கப்பட்ட முற்போக்குவாத யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் (Jaffna Youth Congress) வட மாகாணத்தில் நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலை பகிஷ்கரிக்க வைப்பதில் பெருவெற்றிகண்டது.

1944இல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் (All Ceylon Tamil Congress) என்ற பெயரில் புதிய அரசியல் குழுவொன்று உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து, டொனமூர் அரசியலமைப்பின் கீழான அரச சபையின் பகிஷ்கரிப்பை ஒரு முடிவுக்குக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 'புதிய ஆளுநரான ஸ்ரப்ஸ் வட மாகாணத் தேர்தல்களுக்கான நியமனப்பத்திரத் தேதிகளை மீண்டும் ஆணையை வெளியிடுவதற்குத் தேவையானக் காலனித்துவ அலுவலகத்திலிருந்து தம்முடன் கொண்டுவந்தார்' (ரஸ்ஸல் 1982: 69 - 70). காலியாக உள்ள ஆசனங்களுக்கான உபதேர்தல்கள் 1934ஆம் ஆண்டு யூலையில் நடத்தப்பட்டன. பருத்தித்துறைத் தொகுதி உறுப்பினரான ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஆளுநருக்கான உரையில் 'பல்வேறு சமூகங்களுக்கிடையில் தற்போதுள்ளதைவிட அதிக அளவிலான நேர்மையானதும், சமநிலையானதுமான அதிகாரப் பங்கீடு இருக்கவேண்டுமென்று நாம் எண்ணுகின்றோம். மேலும் இலங்கைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புகழ்மிக்க, அதன் கடந்த காலத்திற்கும் அதன் தற்போதைய முக்கியத்துவத்திற்கும் ஏற்ற வகையில் அரச சபையில் போதிய பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்க வேண்டும்' என்று வாதிட்டார் (ரஸ்ஸல் 1982: 187).

இரண்டாவது அரசு சபைத் தேர்தல்கள் 1936ஆம் ஆண்டு மார்ச்சில் நடத்தப்பட்டன. அதில் 38 சிங்கள உறுப்பினர்களும், 7 இலங்கைத் தமிழ் உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் இரண்டு இந்தியத் தமிழர்களும், இரண்டு ஐரோப்பியர்களும், ஒரு முஸ்லிம் உறுப்பினரும் சேர்த்துத் தெரிவு செய்யப்பட்டனர். ஓர் இலங்கைத் தமிழரான டபிள்யு. துரைசாமி சபாநாயகராக நியமிக்கப்பட்டபோதிலும், புதிதாக அமைக்கப்பட்ட அமைச்சர்களின் சபையில் தமிழ் உறுப்பினர் எவரும் இருக்கவில்லை. நன்கு திட்டமிடப்பட்ட ஒரு தந்திரமான முறையில் அரசு சபை அதன் அமைச்சர்களின் சபையை சிங்களச் சமூகத்தைச் சேர்ந்தவர்களை மட்டும் கொண்டதாகத் தெரிவு செய்தது. அது 'முழுச் சிங்கள அமைச்சரவை' என அழைக்கப்படலாயிற்று. அதன் விளைவாகச் 'சிங்களவர் இயல்பாகவே ஆதிக்க மனப்பான்மை உடையவர்களென்று சிறுபான்மையினர் முன்னெப்போதையும், விடக் கூடுதலாக நம்பினர்' (ரஸ்ஸல் 1982: 206).

இன ரீதியான பிரதிநிதித்துவத்தை முற்றுமுழுதாக ஒழித்ததன் மூலம், ஆணைக்குழுவானது நாட்டின் தேசியக் கட்டமைப்பைப் பிரதிபலிப்பதற்கு அரசியல் முறைமையினுள் அமைக்கப்பட்டிருந்த மிக நுட்பமானதும், மையமானதுமான சமநிலைப்படுத்தும் ஓர் ஒழுங்கமைவை அகற்றியது. இன ரீதியான பிரதிநிதித்துவம் ஒழிக்கப்படுவதன் மூலம் வெவ்வேறு இனக் குழுக்கள் இனரீதியாகச் சிந்தித்தலை அவசியமற்றதாக்கிவிடுவதுடன், தேசிய ஒருமைப்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாடும் வலுப்படும் என்ற ஆணைக்குழுவின் தளராத நம்பிக்கையுடனான ஊகம் முற்றிலும் அடிப்படையற்றதென நிரூபிக்கப்பட்டது. 1930கள் முழுவதும் மட்டுமன்றிச் சுதந்திரம் வரையிலும், சட்டசபையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமான விகிதாச்சாரப் பிரச்சினை நாட்டில் முக்கிய விவாதப்பொருளாகியது. உண்மையில் தேசத்தினுள் காணப்பட்ட பிரிவுகளை அது மேலும் ஆழமாக்கியது.

டொனமூர் சீர்திருத்தங்களின் அடிப்படையில் 1931 மற்றும் 1936ஆம் ஆண்டு தேர்தல்கள் கொண்டுவந்த 5:1 என்ற விகிதம் தமக்குச் சாதகமானது எனச் சிங்களவர்கள் ஏற்றுக்கொண்ட அதேவேளையில், முற்றிலும் போதாததெனத் தமிழரால் பலமாக ஆட்சேபிக்கப்பட்டது. இக் காலப்பகுதியில் ஜீ.ஜீ. பொன்னம்பலம் 'சரிசமநிலையான பிரதிநிதித்துவத்துக்கான' சூத்திரமொன்றை முன்வைத்தார். அதுவே சிங்கள ஆதிக்கத்துக்கெதிராக இன மற்றும் சமயச் சிறுபான்மைகளுக்குச் சிறந்த பாதுகாப்பென்று அவர் வாதிட்டார். 'ஐம்பதுக்கு - ஐம்பது' என்று பிரபலமாக அறியப்பட்ட அவ்வரசியலமைப்புச் சூத்திரம், எதிர்காலச் சீர்திருத்தம் எதனிலும் சிங்களச் சமூகத்துக்குச் சட்ட சபையில் அரைப்பங்கு ஆசனங்களும் எஞ்சிய அரைப்பங்கு சிறுபான்மைகளுக்கு ஒதுக்கப்படவும் வற்புறுத்தியது. முஸ்லிம் லீக் தொடக்கத்தில் இத்திட்டத்தை ஆதரித்தது. ஆனால் அகில இலங்கைச் சோனகர் சங்கம் (ACMA) ஐம்பதுக்கு-ஐம்பது திட்டத்தை ஆதரிக்கவில்லையென முஸ்லிம் லீக் கண்டதனால் அதன் ஆதரவை விலக்கிக் கொண்டது. மாக்கன் மாக்காரின் கூற்று இதனை மேலும் தெளிவுபடுத்துகிறது. அவர் கூறியதாவது:

> சிறுபான்மைகள் (நான் யாழ்ப்பாணத்துக்காகவோ மட்டக்களப்புக்காகவோ பேசவில்லை) சிங்களவருடன் சமமான பிரதிநிதித்துவத்தை வேண்டவில்லை. ஆனால் எமக்கு வேண்டியது போதிய பிரதிநிதித்துவமும் நல்ல ஆட்சியும் தான். நான் சிங்களவரால் இந்நாடு ஆளப்படுவதை விரும்புகின்றேன் (மெகான் 1987: 25).

மறுபுறத்தில் இந்தியத் தமிழர்களின் பிரதிநிதிகள் இத்திட்டத்தை ஆதரித்தனர். ஐம்பதுக்கு-ஐம்பது கொள்





கையில் இலங்கைத் தமிழரை உறுதியாக ஆதரித்தவர்கள் அவர்கள் மட்டுமே. ஐரோப்பிய உறுப்பினர்களும் இக் கோரிக்கையை ஆதரித்தனர். எனினும் இவ்வாலோசனை அப்போதைய ஆளுநர் அல்கொட்டினால் ஒரேயடியாக நிராகரிக்கப்பட்டது.

டொனமூர் அரசியலமைப்பு இலங்கையின் பிளவுபட்ட சமூகங்களைச் சார்ந்த வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை அளித்தது. இது தொகுதி அடிப்படையிலான தேர்தல் மூலம் மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் அடிப்படையுடன் கூடிய ஒருமுறையாகும். இம் முறையானது சிங்களப் பிரதிநிதிகளே பெரும்பான்மையாகத் தெரிவு செய்யப்படும் நிலையைத் தோற்றுவிக்கும் என்பதால் தமிழர் டொனமூர் அரசியலமைப்பை எதிர்த்தனர். மலைநாட்டுத் தமிழர்களும் வாக்குரிமை பெற்றதனால் பெரும் எண்ணிக்கையிலான இவர்கள் வாக்காளர் பட்டியலை நிரப்பிவிடுவர் என கண்டிய சிங்களத் தலைவர்கள் அச்ச முற்றனர். இதனால் அவர்களும் டொனமூர் அரசியல் யாப்பை ஆரம்பத்தில் எதிர்த்தனர்.

இரண்டாவது அரச சபையில் எல்லா அமைச்சர்களும் சிங்களவர்களாகவும், பல்வேறு நிறைவேற்றுக் குழுக்களின் உறுப்பினர்கள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகவும் இருந்தனர். முதலாவது அரச சபையில் ஒரு மலைநாட்டுத் தமிழரான திரு. பெரி சுந்தரம் தொழிலாளர் நலம், தொழிற்துறை மற்றும் வர்த்தக அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முன்னைய சட்ட சபைகளில் தமது மூதாதையர் அனுபவித்த அதே உயர் சிறப்புரிமைகள் இப்போது கிடைக்கப்பெறாத தமிழ் உயர்குடியின் சில பிரிவினர் இதனை முழுச் சிங்கள அமைச்சரவை என்று விமர்சித்தனர்.

டொனமூர் அரசியலமைப்புக் காலப்பகுதியில் (1931 - 1947) சிங்களத் தலைவர்கள் மேலும் மாற்றத்தை விரும்பியவர்களாக, சிங்கள வாக்காளர் தொகுதியின் நிலைமையை முன்னேற்றுவதற்கு, நடைமுறையிலிருந்த அதிகாரத்தைப் பயன்படுத்தியதன் விளைவாக இனப் பதற்றம் தூண்டப்பட்டது. புறக்கணிக்கப்பட்டவர்களாக உணர்ந்த சிறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பான்மைத் தமிழர் குழு தங்களது உரிமைகளுக்குப் பாது காப்பளிக்கக் கோரியது. அவற்றைச் சிங்களவர் சுய ஆட்சிப் பாதையிலுள்ள தடைக்கற்களாக விளங்கிக்கொண்டனர். மேலும் அது சமுதாயங்களுக்கிடையிலான உறவை மோச மடையச் செய்ததுடன், 1937இல் எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமையில் சிங்கள மகா சபாவும், 1944இல் ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் உருவாக வழிவகுத்ததோடு மோசமடைந்துவந்த நிலைமை உச்சக்கட்டத்தை அடைந் தது. டொனமூர் அரசியலமைப்பானது என்னதான் குறை பாடுடையதாக இருந்தாலும், ஐ.டி.எஸ். வீரவர்தன கூறிய வாறு, 'புதுமைதான் டொனமூர் அரசியலமைப்பின் முத்திரையாயிருந்தது. வேறெதனையும் விட சட்டவாக்க மற்றும் நிறைவேற்றுக் கடமைகளைக் கொண்ட அமைப் பொன்றின் உருவாக்கம் இதனைவிட வேறெங்கும் தெளி வாக விளக்கப்படவில்லை (வீரவர்தன 1961: 66).

டொனமூர் திட்டத்தின் மிகப்பெரிய குறைபாடு, அரசியற் கட்சிகள் எதுவும் இல்லாத ஒரு காலத்தில், வாக்குரிமையும் பிரதேச ரீதியான பிரதிநிதித்துவமும் செயற்படவேண்டி இருந்தமையாகும். அரசியற் கட்சிகள் இல்லாதவிடத்து வேட்பாளர்களும் தேர்தல் தொகுதி மக்களும் அணிதிரள்கின்ற முனைப்பான மையமாக இனத் துவம் அல்லது சமூக விசுவாசம் இருக்கும் என்பதை ஆணைக்குழு எதிர்பார்க்கத் தவறிவிட்டது. இதன்காரண மாக, பிரதேச ரீதியான பிரதிநிதித்துவம் இனவாதமென்ற 'புற்றுநோயை'க் களைவதற்குப் பதிலாக அதனை ஊக்கு வித்தது. அரசியற் கட்சிகளுடன் தேர்தல்கள் நடைபெற்ற போது அரசியல்வாதிகள் இப்போக்கை முழுநிறைவான தாக்கி நீடிக்கச் செய்தனர். சேர் ஐவர் ஜென்னிங்சின் கூற்றுக்கிணங்க இத்திட்டம் :

நிறைவேற்றுக் குழுவின் ஓர் உறுப்பினரென்ற வகையில் ஒரு சுயேச்சை உறுப்பினருக்கு அது கணிசமான அளவு அதிகாரத்தைக் கொடுத்ததினால், கட்சிகளின் உருவாக் கத்தை ஊக்குவிப்பதற்குப் பதிலாக உண்மையில் அதனை ஊக்கமிழக்கச் செய்தது. அதனால் கட்சிக் கொள்கை





யொன்று காரியசாத்தியமற்றதாக அரசாங்கத்தின் கடமை களைப் பிளவுபடுத்தியது (மேற்கோள்: மனோகரன் 1987, 54).

டொனமூர் ஆணைக்குழு இலங்கையின் மிக முக்கிய தேசியப் பிரச்சனையில் கவனஞ்செலுத்தத் தவறிவிட்டது. இலங்கை மக்கள் பல்வேறு சமூகங்களாகப் பிரிக்கப்பட்ட ஒரு தேசிய இனமென்பதே அதன் புரிதலாயிருந்தது. மாறாக, யதார்த்தத்தில் இலங்கை சிங்களவர் மற்றும் தமிழர் (இலங்கைத் தமிழர், மலைநாட்டுத் தமிழர்) ஆகிய இரு தேசிய இனங்களையும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் மற்றும் மலாயர் என்ற ஐந்து சமூகங்களையும் கொண்ட ஒரு நாடு அல்லது அரசியல் மற்றும் புவியியல் ஆள்புலமாகும் என்பதனை ஏற்றுக்கொள்ளத் தவறி விட்டது. இங்கு நான் முஸ்லிம்களைத் தமிழ்த் தேசிய இனத்தின் பகுதியாகப் பார்க்கின்றேனேயன்றித் தனி வேறான ஒரு தேசிய இனமாகவல்ல. ஒரு தேசிய இனமும் ஒரு சமூகமும் அடிப்படையில் வேறுபட்டவை.

ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் வாழும் நாடு களைப் பொறுத்தவரை இவற்றில் பெரும்பாலான அரசுகள் சமஷ்டி முறையைக் கொண்டனவாகும். இதன்மூலமே ஒரு பல்லின அரசு தனிவேறான அடையாளங்களும் மொழி களும் கலாச்சாரங்களும் பேணப்படுவதற்கான பாது காப்பை வழங்க முடியும்.

டொனமூர் ஆணைக்குழு, அதன் குறைபாடுகள் எவ்வாறிருந்தபோதிலும், காலனித்துவ ஆட்சியின் கீழ் அதிகாரப் பகிர்வென்ற விடயத்தில் அதன் கவனத்தைச் செலுத்தியது. தமிழ்த் தலைமைத்துவத்தால் அப்போது முன்வைக்கப்பட்ட தவறான பெரும்பான்மையின சிறு பான்மைப் பிரச்சினையானது, ஆணைக்குழு சமஷ்டி முறை ஆட்சியொன்றின் கீழ் முழுமையான தன்னாட்சியை வழங்குதலைப்பற்றி சிந்திப்பதைத் தடுத்திருக்கக்கூடும்.

இவ்விடயத்தில் இங்கு போதிய தமிழ்ப் பிரதிநிதித் துவம் பற்றிய விடயமே மையப் பிரச்சினையாகியது. ஆளுநர் சேர் அன்ட்றூ ஒல்கொட் 28.10.1939 அன்று குடியேற்ற நாடுகளுக்கான இராசாங்கச் செயலாளர் மல்கொம் மக்டொனால்டுக்கு அனுப்பிய அந்தரங்கக் கடிதத்தில் எழுதியிருந்ததாவது:

www.tamilarangam.net



'எமது அரசியல் கருத்துருவங்கள் எல்லாம் வெறுப்பூட்டு கின்ற சிறுபான்மைப் பிரதிநிதித்துவமென்ற விடயத்தி லிருந்தே விரிந்து செல்கின்றன' (கே.எம். டி சில்வா 1998). அரச சபையில் தமிழர் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற் குப் புதிய தொகுதி எல்லை நிர்ணயக் குழுவொன்று தாபிக் கப்பட வேண்டுமென ஆளுநர் ஒல்கொட் ஆலோசனை கூறினார்.

ஆளுநரின் கருத்துகள் அமைச்சர்களால் வரவேற்கப் பட்டதைத் தொடர்ந்து, 1936இல் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட தனிச்சிங்கள அமைச்சரவை உருவாக்கப்பட்டது. இவ்வமைச்சரவையானது, முழுமையான தன்னாட்சியை நோக்கி முன்னேறுவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு அனைவரும் ஒப்புக் கொண்ட நிலையில் அமைக்கப்பட்டது. இவ்வேளையில் சிங்கள அரசியல் தலைமைத்துவமானது, எச்சரிக்கைமிகுந்த, பழைமைவாத அரசியல்வாதியான டி.எஸ்.சேனநாயக்கவின் கீழ் வந்து விட்டது. இவர் சிங்கள மற்றும் தமிழ்த் தேசிய இனங்களின் பெரும்பான்மை - சிறுபான்மைக் கூட்டுப்பங்காண்மை அடிப்படையில் ஓர் ஐக்கியமான சுதந்திர இலங்கையைக் கட்டியெழுப்புவதற்குத் திடசங்கற்பம் பூண்டிருந்தார். ஆனால் அரசியலமைப்புச் சீர்திருத்தத் திட்டங்கள் ஆளுநருக்கும் அமைச்சர்களுக்குமிடையில் வெற்றிகர மாகப் பேசித்தீர்க்கப்பட்டிருந்தவேளையில் இரண்டாம் உலகப்போர் மூண்டது. இதன் விளைவாக 1940இல் நடத்தப்படவிருந்த தேர்தல் யுத்தம் முடியும் வரை தள்ளி வைக்கப்பட்டது.

## சோல்பரி அரசியலமைப்புச் சீர்திருத்தம்

சட்டவாக்க சபை (State Council) தொடங்கப்பட்டது முதல் இலங்கைத் தலைவர்கள் டொமினியன் அந்தஸ்து (தன்னாட்சியுரிமையுடைய குடியேற்ற நிலைநாடு- Dominion) போன்ற அரசியலமைப்புச் சலுகைகளுக்காக மேலும் குரல் கொடுத்து வந்துள்ளனர். 1941இல் இரண்டாம் உலக யுத்தத்தின்போது காலனித்துவ நாடுகளுக்கான இராசாங்கச் செயலாளர், யுத்தத்தின் பின்னர் அரசிய லமைப்புச் சீர்திருத்தம் பற்றிய விடயம் எடுத்துக் கொள்ளப் படுமென்று உறுதியளித்தார். எனினும் சுய ஆட்சிக்கு வழி





வகுக்கின்ற சீர்திருத்தத்துக்கான கோரிக்கை தொடர்ந்தது. 1943ஆம் ஆண்டு மே 26ஆம் தேதியன்று மாட்சிமை தங்கிய மன்னரின் அரசாங்கம், யுத்தத்தின் பின்னர் சீர்திருத்தங் களுக்கென இலங்கை அரசியலமைப்பின் மீள் பரிசீலனை பற்றிய விடயம், குடிமக்கள் சார்ந்த நிருவாக விடயங்கள் எல்லாவற்றிலும் முடியரசின்கீழ் முழுப்பொறுப்புள்ள அரசாங்கமொன்று இலங்கைக்கு வழங்கப்படுதலை நோக்கியதாயிருக்குமெனப் பிரகடனப்படுத்தியது.

சோல்பரி பிரபுவின் தலைமையின்கீழ் சேர் பெடறிக் றீஸ், சேர் பிரெட்றிக் பறோஸ் ஆகிய இரு உறுப்பினர் களைக்கொண்ட அரச ஆணைக் குழுவொன்று 1944ஆம் ஆண்டு செப்ரெம்பர் 20ஆம் தேதியன்று இலங்கைக்கு வந்து நான்கு மாதங்கள் இங்கு தங்கியிருந்தது. அரசியலமைப் பின் சீர்திருத்தம் தொடர்பில் அதன் முன்னைய உறுதி மொழிகளை ஆங்கிலேய அரசாங்கம் நிறைவேற்றவில்லை யென்று கூறி அரச சபை, உத்தியோகபூர்வ அமைப் பென்ற வகையில், ஒட்டாமல் ஒதுங்கியிருந்தது. ஆணைக் குழு பல்வேறு அரசியல், சமூக, சமய மற்றும் பிற சிறு பான்மைச் சங்கங்களுடன் தொடர்புகொண்டது. எனினும் ஆணையாளர்கள் அரச சபையின் முதல்வரான டி.எஸ்.சேனநாயக்கவுடனும், சிவில் பாதுகாப்பு ஆணை யாளரான சேர் ஒலிவர் குணதிலகவுடனும் தனிப்பட்ட கலந்துரையாடல்களை நடத்தினர் (SCR 1946).

அதே ஆண்டில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசைத் தாபித்து ஜீ.ஜீ. பொன்னம்பலம் தமது 'ஐம்பதுக்கு - ஐம்பது' அல்லது 'சரிசமநிலையான பிரதிநிதித்துவத்துக் கான' கோரிக்கையை ஆணைக்குழு முன் கொண்டுசென் றார். 10 மணித்தியாலங்கள் நீடித்த இந்த அமர்வின்போது அவர் சட்டவாக்க சபையில் பிரதிநிதிகளின் எண்ணிக்கை யில் சிங்களவர் பெரும்பான்மையாக இருப்பதனால் தமிழர் பாகுபாட்டை அனுபவிக்க நேரிடுமென்ற வாதத்தை முன்வைத்தார். ஆனால் ஏதேனும் இனச் சமநிலையை அல்லது பிரதிநிதித்துவ விகிதத்தை ஆணைக்குழு கொள் கையளவில் எதிர்த்ததனால் இவரது கோரிக்கை நிரா கரிக்கப்பட்டது.

8



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழர்கள் நிர்வாகத்தில் பாகுபாடுகாட்டப்படுகின்றார்கள் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லையென்றும், எதிர்காலத்திலும் பாகுபாடு இருக்காது என்று உறுதியாக நம்புவதாகவும் ஆணைக்குழு கூறியது. 'இன அல்லது மத ஒருமைப்பாட்டின் முனைப்பை அழிக்கும் வாய்ப்புடையதாக ஏற்கெனவே இடதுசாரிக் கருத்தின் வளர்ச்சி அமைகின்றது' என்றும் 'இன ரீதியை விடச் சமூக மற்றும் பொருளாதார ரீதியாகக் கூடிய கவனஞ்செலுத்துகின்ற போக்குடைய இடதுசாரி இயக்கத்தின் வளர்ச்சிக்கான திட்டவட்டமான அறிகுறிகள் காணப்படுகின்றன' என்றும் அது குறிப்பிட்டது (SCR 1945: பத்தி 262 மற்றும் 267).

சோல்பரி ஆணைக்குழு அதன் அறிக்கையை 1945ஆம் ஆண்டு யூலை 11ஆந் தேதியன்று சமர்ப்பித்ததைத் தொடர்ந்து ஆங்கிலேய அரசாங்கம் சோல்பரி ஆணைக்குழு அறிக்கை பற்றிய முடிவை உள்ளடக்கியதான வெள்ளை அறிக்கையொன்றை ஒக்ரோபர் 30ஆந் தேதியன்று வெளியிட்டது (SCR 1945).

இது சட்டவாக்க சபையில் விவாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, டி.எஸ்.சேனநாயக்க 1945 நவம்பர் 8ஆம் தேதியன்று பின்வரும் பிரேரணையை முன்மொழிந்தார். 'ஒப்பீட்டளவில் ஒரு குறுகிய காலத்தில் இந்நாடு டொமினியன் அந்தஸ்தை எய்தக்கூடியதாக மாட்சிமை தங்கிய மன்னரின் அரசாங்கம் இலங்கை மக்களுடன் ஒத்துழைக்குமென்ற 1945ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31ஆந் தேதிய வெள்ளை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள உறுதிமொழியின் நிமித்தம், இலங்கைக்கு முழு டொமினியன் அந்தஸ்து அனுமதிக்கப்படுதலை மாட்சிமைதங்கிய மன்னரின் அரசாங்கம் தள்ளிப் போட்டுள்ளதையிட்டு, இச்சபை தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்துகின்றது. இடைக்காலத்தில் மேற்படி வெள்ளை அறிக்கையில் வழங்கப்பட்ட அரசியலமைப்பை ஏற்றுக்கொள்வதென இச்சபை தீர்மானிக்கின்றது' (1945 நவம்பர் 8ஆம் தேதியன்று அரச சபையின் நடவடிக்கை).

சட்டவாக்கசபையில் ஆதரவாக 51 வாக்குகளையும், எதிராக 3 வாக்குகளையும் பெற்று இப்பிரேரணை நிறைவேறியது. இரு தமிழ் உறுப்பினர்களான என். நல்லையாவும் ஏ. மகாதேவனும் பிரேரணையை ஆதரித்தனர். இலங்கையில் சுய ஆட்சியின் பரிணாம வளர்ச்சிக்கு மிகப்பெரிய பங்களிப்பைத் தாம் சார்ந்துள்ள சமூகம் செய்துள்ளதென்று அது பெருமைப்படலாமென்று என். நடேசன் உரிமையுடன் கூறினார். தமிழர்களுக்கு 'ஒரு மனக்குறை உணர்வு இருந்தது. சம பிரதிநிதித்துவத்துக்காக அவர்கள் பாடுபட்டனர். அது அவர்களின் மூளையில் உதித்த தொன்று என்பதற்காகவல்ல, மாறாக அது ஆங்கிலேய நிருவாகிகளால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி என்பதனால். ஆணைக்குழு அதன் தீர்ப்பை வழங்கி விட்டது. தமிழர்களின் கோரிக்கையின் மீது ஆணைக்குழு மிகக் குறைவான கவனத்தையே கொண்டிருந்தமை புலப்படுகின்றது. எனினும் அவர்கள் சகிப்புத்தன்மையுடன் எதிர்காலத்தை எதிர்நோக்கவேண்டியுள்ளனர் என்று கூறினார் (1945 நவம்பர் 8ஆந் தேதிய சட்டவாக்க சபையின் நடவடிக்கை).

ஒரு சிங்களவரான டி.டபிள்யு. தஹநாயக்காவும், மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்களின் (இந்தியத் தமிழர்) எதிர்காலம் பற்றி அச்சமுற்ற இரு இந்தியத் தமிழர் பிரதிநிதிகளும்தான் பிரேரணையை எதிர்த்து வாக்களித்த மூன்று உறுப்பினர்களாவர். அவர்கள் ஐ.எக்ஸ். பெரேராவும், எஸ். நடேச ஐயருமாவர் (1945 நவம்பர் 8ஆந் தேதிய சட்டவாக்க சபையின் நடவடிக்கை).

1946இன் புதிய சோல்பரி அரசியலமைப்பு பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்தது:

(i) உள்ளக நிருவாக விடயங்கள் எல்லாவற்றிலும் முழுமையான கூட்டுப்பொறுப்புடைய ஓர் அமைச்சரவை;

(ii) வயதுவந்தோருக்கான சர்வசன வாக்குரிமையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 95 உறுப்பினர்களையும், 06 நியமன உறுப்பினர்களையும் கொண்டதொரு மக்கள் பிரதிநிதிகள் சபை மற்றும் சனப்பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட 15 பேரும் ஆளுநரின் 'தற்றுணிவில்' நியமிக்கப்பட்ட 15 பேருமாக 30 உறுப்பினர்







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களைக் கொண்டதொரு செனட் சபை ஆகிய இரு அவைகளையுடைய ஒரு சட்டசபை;

(iii) ஆளுநரின் அதிகாரங்களுக்கு ஒரு குறுகிய வரை விலக்கணம், அத்துடன்

(iv) 'ஒதுக்கிய விடயங்கள்' எடுத்துக் காட்டாக - பாதுகாப்பு, வெளிவிவகாரம், நாணயம், போக்கு வரத்து மற்றும் தொடர்பு. இவ்விடயங்கள் தொடர்பான சட்டமூலங்கள் மாட்சிமைதங்கிய மன்னரின் அரசாங்கத்தால் இசைவளிக்கப்படு வதற்கு ஒதுக்கப்படவிருந்தன (புதிய சோல்பரி அரசியலமைப்பு 1946).

சிறுபான்மையினர் நலன்களைப் பாதிக்கின்ற பாகுபாடான சட்டங்கள் ஆக்கப்படுதலைத் தடுப்பதற்கு சோல்பரி அரசியலமைப்பில் ஓர் ஏற்பாடு இருந்தது. ஏனைய சமூகங் களை அல்லது மதங்களைச் சேர்ந்தவர்களுக்கு கட்டுப் பாடுகள் விதித்தல், அல்லது அவர்களைக் கட்டுப்பாடு களுக்கு உட்படுத்துகின்ற சட்டமெதுவும் ஆக்கப்படுதலைத் தடைசெய்தல் ஆகியவற்றின் மூலம் சிறுபான்மையின ருக்கு முற்பாதுகாப்பொன்றை சோல்பரி ஆணைக்குழு வழங்கியது. சோல்பரி அரசியலமைப்பின் (1946) 29(2)ஆம் பிரிவாக (பின்னிணைப்பு 3) வந்த இந்த ஏற்பாடு தனிப் பட்ட பாகுபாட்டையோ அல்லது வாக்குரிமை, பிரசா வுரிமை, மொழி ஆகியவை தொடர்பில் நடைமுறை யிலுள்ள கூட்டு உரிமைகள் ஒரேயடியாகப் பறிக்கப் படுதலையோ தடுப்பதில் முற்றிலும் பயனற்றதெனப் பின்னர் காணப்பட்டது. எனினும் சோல்பரி பிரபு 'சிறு பான்மைகளுக்கு மதிநுகமுள்ள மனிதனால் வகுக்கக்கூடிய பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தையும் உறுதிப்படுத்தி யுள்ளதாக' தாம் எண்ணியதாகப் பின்னர் தெரிவித்தார். (பொன்னம்பலத்தின் மேற்கோள் 1983: 63).

இதன் பின்னர் இலங்கைச் சுதந்திரச் சட்டம் 1947ஆம் ஆண்டு டிசெம்பர் 10ஆந் தேதியன்று அரச இசைவைப் பெற்றது. 1947ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தவாறு இலங்கை அரசாங்கத்தின் மீதான எல்லாக் கட்டுப்பாடுகளையும் நீக்கும்படி





இலங்கைச் சுதந்திர அரசவைக் கட்டளை வழங்கப்பட்டது. இறுதியாக 1948ஆம் ஆண்டு பெப்ருவரி 3ஆந் தேதியன்று நள்ளிரவில் இலங்கை முடிக்குரிய ஒரு குடியேற்ற நாடாக இல்லாதொழிந்ததைத் தொடர்ந்து, மேன்மைதங்கிய அரசுரிமைக்குரிய குளொசெஸ்டர் பிரபு தமது சகோதர ரான மாட்சிமைதங்கிய VIஆம் ஜோர்ஜ் மன்னரின் பிரதிநிதியாகச் சுதந்திர இலங்கையின் பாராளுமன்றத்தை முறைப்படி திறந்துவைத்தார்.

சுதந்திர இலங்கையின் இவ்வரசியலமைப்பு ஒற்றை யாட்சிக்குரியதாயிருந்தது. மத்திய அரசாங்கம் சகல வல்லமையும் கொண்டதாயிருந்தது. அது வரையறை களின்றி பழைய ஆள்புலப் பிரிவுகளையும், மாகாணங் களையும் மாவட்டங்களையும் ஒழிக்கவும், அவற்றினிடத்தில் புதியவற்றை உருவாக்கவும் அதிகாரமுடையதாயிருந்தது. எனவே மாகாணங்களையும் உள்நாட்டுப் பிரதேசங்களை யும் பொறுத்தவரையில் எல்லா அதிகாரமும் மத்திய அரசாங்கத்திலிருந்து வெளிப்பட்டது. அது 1972வரை தொடர்ந்த பாராளுமன்றத்தையும் தாபித்தது.

இலங்கை அப்போதும் கனடா, அவுஸ்திரேலியா மற்றும் நியுசிலாந்து போன்று ஒரு டொமினியனாக இருந்த தனால் ஆங்கிலேய முடிமன்னரே நாட்டின் தலைவ ராயிருந்தார். பாராளுமன்றம் முடிமன்னரையும் இரு சபை களையும் கொண்டிருந்தது. முடிமன்னரைப் பிரதிநிதித்துவப் படுத்திய இலங்கையின் மகா தேசாதிபதி, இலங்கை யிலுள்ள அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் நியமிக்கப்பட்டார்.

இந்த அரசியலமைப்பு ஆங்கிலேயப் பாங்கினைப் பின் பற்றியதுடன், பிரசைகளின் அடிப்படை உரிமைகளை உள்ளடக்கவும் இல்லை. ஆனால் மேலே கூறப்பட்டவாறு இனத்தின் அல்லது மதத்தின் அடிப்படையில் பாகு பாட்டுத் தடுப்பை இலக்காகக் கொண்டுள்ளது. எனினும் 1948இன் இலங்கைப் பிரசாவுரிமைச் சட்டம் வேறு குழுக் களுக்கெதிரான பாகுபாட்டைக் கொண்டிருந்தது. ஆகை யால் அன்றைய அரசாங்கம் அதனைச் சூழ்ச்சியான முறையில் செய்து முடித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எவ்வாறெனின், சுதந்திரத்தின் பின்னர் ஒரு சில மாதங்களினுள் டொன் ஸ்டீபன் சேனநாயக்கவின் அரசாங்கம் (1947 - 52) 1948இன் பிரசாவுரிமைச் சட்டத்தையும் (பின்னிணைப்பு 4), 1949இன் இந்திய மற்றும் பாகிஸ்தானிக் குடியிருப்பாளர் (பிரசாவுரிமை) சட்டத்தையும் ஆக்கியது. அவை இரண்டும் பிரதிநிதித்துவத் தோற்றத்தைப் பூரணமாக மாற்றின. சிங்கள அரசியல் விஞ்ஞானியான ஐ.டி.எஸ். வீரவர்தன 'சிறுபான்மைகளும் பிரசாவுரிமைச் சட்டமும்' என்ற தலைப்பிலான ஒரு கட்டுரையில் இந்தியத் தமிழர்களின் (மலைநாட்டுத் தமிழர்களின்) வாக்குரிமையைப் பறித்தமை 'எல்லாச் சிறுபான்மைகளுக்கும் முறிந்து போன வாக்குறுதி' என்று மிகச் சரியாகக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது: 'சோல்பரி அரசியலமைப்பின் நெறிமுறை அடிப்படை துடைத்தழிக்கப் பட்டுவிட்டது' (Ceylon Historical Journal ஜன. 1952, தொகுதி 1, இல. 3). ஆனால் இது ஒற்றையாட்சி அரசின் வளர்ந்துவரும் கொடுக்களின் தொடக்கம் மட்டும்தான்.

இதுவே விருத்தியடைகின்ற அரசியல் நிலைமை பற்றிய வீரவர்தனவின் எதார்த்தமான மதிப்பீடாகும். அதே வேளையில் சோல்பரி ஆணைக்குழுவினர் தாமே பிரதிநிதித்துவத்திற்கு முக்கியத்துவமளிப்பதன் மூலம் சிறுபான்மைச் சமூகங்கள் மேலும் நல்ல நிலைக்கு வருமென்று நம்புகின்ற அளவுக்கு ஏமாற்றப்பட்டுள்ளனர். அவர்களின் அறிக்கையின் 270ஆவது பந்தியில் அவர்கள் எழுதியதாவது:

> அவர்களின் திட்டம் எவ்வாறு செயற்படுகின்றதென்பதை விளக்கிக் காட்டுவதற்கு எமக்குப் புள்ளிவிவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. எம்முன்னர் வந்த அனேக சாட்சிகளின் உதவியுடன் அதனை நாம் ஆராய்ந்து பார்த்தோம். அதன் விளைவாக 95 தெரிவுசெய்யப்பட்ட ஆசனங்களில் 58 சிங்கள வேட்பாளர்களுக்கும், 15 இலங்கைத் தமிழர்களுக்கும், 14 இந்தியத் தமிழர்களுக்கும், 8 முஸ்லிம்களுக்கும் போகுமென்றும், 6 நியமன ஆசனங்களுடன், 101 பேரைக் கொண்ட ஒரு சபையில் சிறுபான்மைப் பிரதிநிதித்துவம் 43ஆக இருக்குமென்றும் அதன் சார்பில் வாதிடுவோர் மதிப்பிடுகின்றனர் (SCR 1945: பந்தி 270).





அத்தகைய ஒரு திட்டத்தின்கீழ் சிறுபான்மை நலன்களுக்கு ஊறு விளைவிக்கின்ற சட்டங்கள் அறிமுகப் படுத்தப்படுமாயின், சிறுபான்மைக் குழுக்கள் ஒன்று சேர்ந்து அவைகளே அவர்களின் நலன்களுக்கு ஊறுவிளைக்கின்ற முயற்சிகளை நிச்சயமாகத் தடுக்க முடியுமென்று வாதிடலாம். சிறுபான்மைகள் இணைந்து செயற்படத் தீர்மானிப்பார்களாயின், சட்ட சபையின் மூன்றிலிரண்டு பங்கினரின் ஆதரவைப் பெறுதல் அப்போது சிங்களவர்களுக்குக் கடினமாகிவிடும். எனினும் இது அவ்வாறு நிகழவில்லை. சுதந்திரத்துக்குப் பிந்திய தசாப்தங்களில் மலைநாட்டுத் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்ட பின்னர் பெரும்பான்மை ஆசனங்களை வென்றும், மலைநாட்டுத் தமிழர்களுக்குப் போயிருக்கக்கூடிய 8 - 14 ஆசனங்களைத் தமதாக்கியும், பின்னர் பெரும்பான்மைக்குச் சாதகமான சட்டங்களை ஆக்குகின்றனவுமான சிங்களவர்களை மையப்படுத்திய 'தேசியக் கட்சிகளை (பெரும்பாலான வாக்காளர் தொகுதிகளில் ஆசனங்களுக்குப் போட்டியிடுகின்ற கட்சிகள் என்ற கருத்தில்) வரலாறு கண்டது. இந்த வழிமுறை மட்டும்தான் பயன்படுத்தப்பட்டதென்பதல்ல. சோல்பரி ஆணைக்குழு ஒரு பிரதம அமைச்சரைக் கொண்ட அரசாங்கத்துக்கு ஏற்பாடு செய்தது. ஒரு பிரதம அமைச்சருக்கு அமைச்சரவைப் பதவி வழங்குவது மற்றும் அரசாங்கத்துறையில் முக்கிய நியமனங்களை வழங்குவது உட்படப் பல சலுகைகளை வழங்கும் உரிமை உள்ளது. அவர்தான் கௌரவங்களினதும் பட்டங்களினதும் ஊற்றாகவும் உள்ளார். இனச் சிறுபான்மையின் முன்னணி உறுப்பினர்களை அரசாங்க அணியில் ஒத்துத் தெரிந்தெடுப்பதற்கு அதைவிடச் சிறந்ததாக வேறு எந்த வழியும் இருக்கவில்லை.

சிறுபான்மை இனக் குழுக்களுக்கு மேலதிக ஆசனங்களுக்கான ஏற்பாடு மலைநாட்டுத் தமிழர்களுக்கெதிரான பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் மறைந்துபோனதன் விளைவாக, அரசியலமைப்பானது முரண்பாடுகளற்றுச் செயற்படுவதற்கான சாத்தியக்கூறுகளை இல்லாமல் செய்தது. வெஸ்ட்மினிஸ்ரர் மாதிரியைக் கைக்கொண்டு இத்தீவு வெற்றிகாணுமென்று சோல்பரி ஆணையாளர்கள் எதிர்பார்த்ததற்கு வேறு நான்கு காரணிகளும் இருந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1. அரசியலமைப்பின் 29(2)ஆம் பிரிவு அமைச்சர்களின் வரைவுத் திட்டத்திலிருந்து எடுக்கப்பட்டுச் சிறுபான்மைகளுக்கு மேலதிகப் பாதுகாப்பை வழங்குவதற்காக ஆணையாளர்களால் மீள வகுக்கப்பட்டது. ஒட்டு மொத்தத்தில் 29(2)ஆம் பிரிவானது உரிமைகள் தொடர்பான மசோதாவின் சிறிது குறைக்கப்பட்ட வடிவமே. பொதுவாக அது வேறு குழுக்களை உட்படுத்தாமல் ஒரு குறிப்பிட்ட இன அல்லது சமயக் குழுவை உட்படுத்துகின்ற பாகுபாடான சட்டங்களை இலங்கைப் பாராளுமன்றம் ஆக்குவதிலிருந்து அதனைத் தடுத்தது. இறுதியாக 1972இல் புதிய குடியரசு அரசியலமைப்பொன்று ஆக்கப்பட்டபோது அதற்கு முன் நடவடிக்கையாக 29(2)ஆம் பிரிவு நீக்கப்பட்டது. புதிய அரசியலமைப்பின் அத்தியாயம் VIஇல் 'அடிப்படை உரிமைகளும் சுதந்திரமும்' பற்றிய ஒரு கூற்று சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஆனால் 18(2)ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்ட ஒரு மறைப்பான கூற்றின்மூலம் அதன் வலு குறைக்கப்பட்டது. அடுத்துவந்த 1978 அரசியலமைப்பும், அதேபோன்ற அதிகாரங்களை உயர் நீதிமன்றத்துக்கு உரித்தாக்கியது (பிரிவு 120 - 6). தத்துவார்த்த ரீதியில் இந்நீதிமன்றம் 1972-1978இன் அரசியலமைப்பு நீதிமன்றத்தை விடக் கூடிய அரசியல் தலையீடற்றதாயுள்ளது. எனினும் நடைமுறையில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புகள் விவாதத்துக்குரியனவாயுள்ளன. உண்மையில் இந்நாட்டின் உயர் நீதிமன்றம் அரசியல் ரீதியாகச் சர்ச்சைக்குரியதாகியுள்ளது.

2. பெரும்பான்மைக் குழுவின் தலைவர் சிறுபான்மை இனங்களின் நலன்களை உள்ளடக்கிச் செயற்படுவாரெனச் சோல்பரி ஆணையாளர்கள் நம்பினர். உண்மையில் பிரித்தானியா அரசு டொன் ஸ்டீபன் சேனநாயக்கவுக்கு அதிகாரத்தைக் கைமாற்றத் திட்டமிடுகின்றதென நம்புவதற்கு ஆணைக்குழுவிற்குக் காரணமிருந்தது. இலங்கையில் ஆங்கிலேய நலன்களுக்கு அவர் நல்லதோர் உத்தரவாதமென அவர்கள் அறிந்திருந்தனர். அவர்களின் அறிக்கையில் அவர்கள் எழுதியதாவது:

மேற்கத்திய மாதிரிகளுக்குக் கூடிய ஒத்தமுறையில் இலங்கை அதன் கட்சிகளை விருத்தி செய்யும்வரை பெரும்பான்மைக் குழுவின் தலைவர் ஓர் அரசாங்கத்தை அமைக்கின்றபோது, சிறுபான்மைகளின் பிரதிநிதிகளுக்கு அமைச்சர் பதவிகளில் ஒரு விகிதாச்சாரத்தை வழங்குதலும் அப்பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும்போது அவர்கள் சார்ந்துள்ள குழுவின் அல்லது குழுக்களின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கலந்தாலோசித்தலும் அறிவுடைய ஆலோசனையாக இருக்குமென்று நாம் உறுதியாகக் கருதுகின்றோம் (SCR 1945: பந்தி 261).

சேனநாயக்காவால்கூட அவரின் அமைச்சரவையில் இடம்பெறுவதற்கு இலங்கைத் தமிழர்களின் உண்மையான பிரதிநிதிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் இலங்கைத் தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியே தேர்தல் தொகுதிகளை (மன்னார் மற்றும் வவுனியா) பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இரு தனிமையானவர்களை அமைச்சர் பதவிகளைப் பொறுப்பேற்கும்படி நியமித்தார். 1948இல் அவர் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் வெற்றி கண்டார். எனினும் 1956ஆம் ஆண்டு முதல் இன்றுவரை எந்தவோர் இலங்கை அரசாங்கத்திலும் தமிழர் மேலோங்கிய வட மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட இலங்கைத் தமிழர் ஒருவர்கூட அமைச்சராக இருந்ததில்லை.

3. 'இடதுசாரிக் கருத்தின் வளர்ச்சி இன அல்லது மதக் கூட்டொருமைப்பாட்டின் முனைப்பை அழிக்கின்ற வாய்ப்புடையதாக அமைந்துள்ளதென' சோல்பரி ஆணைக் குழுவினர் நம்பினர் என்பதனை ஏற்கனவே நோக்கினோம் (SCR 1945: பந்தி 262). அவர்களின் நம்பிக்கை நிறைவேறவில்லை. கட்சிகள் கூடுதலாக இன அல்லது மத ரீதியாக ஒன்றுபடும் போக்கைக் கொண்டிருந்தன - ஐக்கிய தேசியக் கட்சி (United National Party), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (Sri Lanka Freedom Party), தமிழ் அரசுக் கட்சி (Federal Party), தொழிற்சங்க அடிப்படையிலான இந்தியத் தமிழ் அரசியல் நிறுவனமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (Ceylon Workers Congress) என்பவை இதற்குச் சிறந்த உதாரணங்கள். அவ்வாறே இனத்துவ மையமென்ற வர்ணம் பூசப்பட்ட







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அனேக சிறு கட்சிகளும் உள்ளன. ட்றொட்ஸ்கியவாத மற்றும் கம்யூனிச இடதுசாரிக் கட்சிகள் கூட சிங்கள-பௌத்த ஆதரவு நிலைப்பாடுகளை எடுத்துள்ளன. இவை ஒரு காலத்தில் இனப்பிரச்சினை பற்றிய அவற்றின் மனப் பாங்கில் தாராளவாதத்தைக் கடைப்பிடித்தன.

4. இறுதியாக, அரசாங்க சேவை ஆணைக்குழு, நீதிச் சேவை ஆணைக்குழு, இரண்டாவது சபையான செனட் என்பவற்றுக்கு ஆளுநருக்கு ஒதுக்கப்பட்ட தற்றுணிபுத் தத்துவங்கள் (உள்ளக சுய ஆட்சியென்ற ஒரு வரை யறுக்கப் பட்ட சட்டகத்தில்) வழங்கப்படுமென்றும் இவற்றுக்கு நியமிக்கப்படுபவர்கள் சுதந்திரமாகச் செயற்படுவார் களென்று நம்பியிருக்கலாமென்றும் சோல்பரி ஆணைக் குழுவினர் எதிர்பார்த்தனர். இருப்பினும் இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து இருக்கவேண்டுமென பிரித்தானி யாவின் 'வெள்ளை மண்டபம்' (White Hall) தீர்மானித்தத னால் அரசியலமைப்பின்படி ஆளுநர் அரசின் தலைவ ராகினார். அவர் அரசியல் காரணங்களால் வழிநடத்தப் படும் பிரதம அமைச்சரின் ஆலோசனையின்படி செயற்பட வேண்டியவராயிருந்தார்.

## ஆங்கிலேய நிர்வாகமும் தமிழர்களும்

கி.பி.1833இல் ஆங்கிலேயர் இலங்கைத் தீவில் மையப் படுத்தப்பட்ட அரசாங்க முறையொன்றைத் தாபித்துடன், தமிழ் மற்றும் சிங்களப் பிரதேசங்களை இணைக்கின்ற வீதிகளையும் ரெயில் பாதைகளையும் அபிவிருத்தி செய் தனர். மேலும் ஆங்கிலக் கல்வி கற்ற தமிழர் தெற்கில் தொழில் தேடுவதற்கான வாய்ப்புகளையும் உருவாக்கினர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவை எல்லாம் இரு சமூகங்களையும் ஒன்றோடொன்று நேரடியாகத் தொடர்பு கொள்ள வைத்தன.

கி.பி.1830களிலிருந்து பெருந்தொகையான தென்னிந் தியத் தமிழ்த் தொழிலாளர்களும் பிரதானமாக நாட்டின் மத்திய பகுதியான மலைநாட்டில் ஆங்கிலேயருக்குச் சொந்தமாயிருந்த கோப்பி, தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் குடியமர்த்தப்பட்டனர். சிங்கள விவசாயி கள் தோட்டங்களில் குறைந்த ஊதியமும் கண்டிப்பான





ஒழுங்குமுறையும் கொண்ட பெருந்தோட்ட வேலையைப் பெற்றுக் கொள்வதற்காகத் சுதந்திரமான கால அட்ட வணைப்படியான நெற்செய்கையை விட்டுக்கொடுக்கத் தயங்கியதனால், ஆங்கிலேய ஆட்சியாளர்கள் தமது பெருந் தோட்டங்களில் இந்தியத் தமிழர்களை வேலைக் கமர்த்தினர்.

இந்தியத் தமிழரும் இலங்கைத் தமிழரும் ஒரே இன மூலத்தைக் கொண்டவர்களாகவும் இருவருமே இந்துக் களாகவும் உள்ளபோதிலும், வரலாற்று ரீதியாகவும் புவியியல் ரீதியாகவும் அவர்கள் பல நூற்றாண்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இலங்கைத் தமிழர் பெருந்தொகை யாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற அதேவேளையில், இந்தியத் தமிழர் மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் பெருமளவுக்குச் செறிந் துள்ளனர். கடந்த காலத்தில் சிங்களவர்களுக்கெதிராக ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்குவதிலிருந்து இரு குழு வினரையும் தடுத்துநிறுத்தும் அளவுக்கு அவர்களுக் கிடையிலான வேறுபாடுகள் பலம் மிக்கவையாயிருந்தன. உண்மையில் ஓர் அரசியல் அவதானி குறிப்பிட்டவாறு 'இனம்தான் முக்கியமானதென்றால் இலங்கைத் தமிழரும் இந்தியத் தமிழரும் சிங்களவருக்கெதிரான ஒரு பொது வான இலக்கைக் கொண்டிருப்பர்' என்பது தெளிவா கின்றது (ஜென்னிங்ஸ் 1950: 66).

1940களில் ஏறக்குறைய 12 இலட்சமென்ற எண்ணிக்கை யைக் கொண்டிருந்த இந்தியத் தமிழர்பால் சிங்களவர் பகைமை உணர்வுடைய்வர்களாக இருந்தபோதிலும் பெருந் தோட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட பெரும் பரப்பளவிலான காணி இந்தியத் தமிழர்களுக்கன்றி ஆங்கிலேயத் தோட்ட உரிமையாளர்களுக்கே பராதீனப் படுத்தப்பட்டது. எவ்வாறிருப்பினும் பெருந்தோட்டங்கள், அதிகரித்து வருகின்ற தமது மக்கள் தொகைக்குத் தேவைப் பட்ட நிலத்தைக் கண்டியர்களிடமிருந்து பறித்துவிட்ட தோடல்லாமல், இந்நாட்டில் நிலையான அக்கறை யில்லாத வேற்றினத்தைச் சார்ந்த, வெளிநாட்டில் பிறந்த மக்கள் மத்தியில் வாழும்படியும் அவர்களை நிர்ப்பந் தித்தது. இந்தியத் தமிழ்ச் சமூகம் 'இலங்கைத் தேசத்தில்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒன்று பட்டிணையாததும் ஒன்றுபட்டிணைக்க முடியாதது மான ஓர் ஆக்கக்கூறாக' வருணிக்கப்பட்டது (அரசரட்ணம் 1967: 275).

நாட்டுப்புறக் கிராமங்களைச் சார்ந்த சிங்கள விவசாயி களுக்கு மோசமான ஊதியம் பெற்ற இந்தியத் தமிழர் களுடன் நேரடித் தொடர்பு ஏற்பட்டபோதிலும், முன்னைய வர்களுக்கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பெரும்பான்மையான இலங்கை விவசாயிகளுக்கு மிடையில் பின்னிய செயல்விளைவுக்கான வாய்ப்பேதும் இருக்கவில்லை. இலங்கைத் தமிழர் நாட்டின் தெற்குப் பிரதேசங்களில் பயிர்ச்செய்கைக்காகவோ பெருந்தொகை யில் குடியமர்வதற்காகவோ காணிகளைக் கொள்வனவு செய்யவில்லை. எனவே பதினோராம் நூற்றாண்டிலிருந்து பெரும்பாலான இலங்கைத் தமிழரும் சிங்களவரும் புவியியல் ரீதியாக ஒருவர் மற்றவரிலிருந்து பிரிக்கப் பட்டிருந்தனர். இலங்கைத் தமிழரும் இந்தியத் தமிழரும் ஒரே மொழியைப் பேசியதனால் சிங்களவர், இந்தியத் தமிழர்மீது அவர்களுக்கிருந்த இயல்பான எதிர்ப்பு மனப் பான்மைகளை இலங்கைத் தமிழர்மீதும் செலுத்தினர்.

வளர்ந்துவந்த ஆங்கிலக் கல்வி கற்ற உயர்குடியின் மத்திய வகுப்பைச் சார்ந்த ஒரு சிறு எண்ணிக்கையினரான இலங்கையர், அவர்களின் அந்தந்தச் சமூகங்களைப் பிரதி நிதித்துவப்படுத்துவதற்காகச் சட்டசபைக்கு நியமிக்கப் பட்டனர். இலங்கையின் அரசியற் பரிணாம வளர்ச்சியின் இக்கட்டத்தில் தேசிய விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப் பட்டதுடன் குழுவாதம் வளர்வது தடுக்கப்பட்டது. உண்மையில் தேசிய உணர்வு மேலைநாட்டு நாகரிகமய மானவர்களில் ஒரு பிரிவினருக்கு மட்டுப்படுத்தப்பட் டிருந்த போதிலும், நாட்டை ஆளுவதில் ஆங்கிலேய அதிகாரிகளுக்கு அனைவரும் தமது முழுநிறைவான ஒத்துழைப்பை வழங்கினர். அதேசமயம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பெரும்பாலான சிங்கள மறுமலர்ச்சியாளர்கள் சோனகர்களையும் (முஸ்லிம்கள்), இந்திய வர்த்தகர்களையும் மட்டுமன்றி இலங்கைத் தமிழரையும் 'தேசிய இனமல்லாதோர்' என்ற வகுதியில் உள்ளடக்கினர். ஏனெனில் 'தேசிய இனமல்லாதோர்' என்ற





பதம் அனேக சந்தர்ப்பங்களில் அவர்களால் 'சிங்களவர் அல்லாதோருக்கு'ச் சமமாகப் பயன்படுத்தப்பட்டது முஸ்லிம்களும் இந்திய வர்த்தகர்களும் நாட்டின் வர்த்தகத் திலும் பணக் கடன் வழங்கலிலும் ஆதிக்கஞ் செலுத்துவ தாகப் பிரச்சாரம் செய்தனர்.

மேற்கண்ட ஆய்விலிருந்து பின்வரும் முடிவுகளுக்கு நாம் வரமுடியும்.

கி.பி. பத்தாவது நூற்றாண்டின்போது இலங்கைச் சமுதாயத்தில் இனத்துவம், பிரிவினைக்கான ஒரு முக்கிய தொடக்கமாக இருக்கவில்லையென்பதை வரலாற்றுச் சான்று காட்டுகின்றது. கி.பி. பத்தாவது நூற்றாண்டுவரை இலங்கையில் சிங்களவருக்கும் தமிழருக்குமிடையில் கடுமையான பகைமை இருக்கவில்லை. எனினும் இரு சமூகங்களுக்குமிடையிலான நீண்டகாலக் குழு அடை யாளங்களும், தவறான எண்ணங்களும் ஒற்றுமையைக் கடினமாக்கியுள்ளன. தென்னிந்தியாவுக்கு அண்மையில் இலங்கை இருப்பதனால், தமிழர் தம்மீது கலாச்சார ரீதியாக மேலாதிக்கஞ் செலுத்தக் கூடுமென்ற உளவியல் ரீதியான அச்சத்தை நெடுங்காலத்துக்கு முன்னர் இலங்கை மீதான தென்னிந்தியப் படையெடுப்புகளின் வரலாறு சிங்களவர் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. இவ்வச்ச உணர் வானது தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகள் மீது சிங்களவர்களைச் சந்தேகங்கொள்ள வைத்துள்ளது.

1946இல் சோல்பரி அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப் பட்டபோது இரு சமூகங்களுக்குமிடையில் ஓர் அரசியல் புரிந்துணர்வு எட்டப்பட்டது. இப்புரிந்துணர்வு சிறுபான் மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் சோல் பரி அரசியலமைப்பின் 29ஆம் பிரிவில் உள்ளடக்கப் பட்டது. சுதந்திரத்தின்போது தமிழ் மக்களால் பிரிவினைக் கான கோரிக்கையெதுவும் எழுப்பப்படவில்லை.

○○○



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அத்தியாயம்- 3

# இலங்கையில் முரண்பாட்டின் தோற்றுவாய்

இவ்வத்தியாயத்தில் 1948 முதல் 1983 வரை சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களால், மலைநாட்டுத் தமிழர் தொடர்பில் நிறைவேற்றப்பட்ட பாகுபாடான கொள்கைகள், இனரீதியாகத் தமிழர்களின் பாரம்பரியத் தாயகத்தில் சிங்கள அரசாங்க ஆதரவுடனான குடியேற்றங்கள், 'சிங்களம் மட்டும்' என்ற சட்டத்தின் மூலம் தமிழ் மொழியின் மீது ஏற்படுத்திய தாக்கம், கல்விரீதியிலான தரப்படுத்தல் கொள்கைகளினதும், தொழில்வாய்ப்புக் கொள்கைகளினதும் தாக்கம் என்பவற்றின் அடிப்படையில் இன முரண்பாட்டின் தோற்றுவாய்கள் இங்கு ஆராயப்படுகின்றன. இலங்கையில் இன முரண்பாட்டிற்கு அத்திவாரமிட்ட சூழ்நிலைகளை விளங்கிக்கொள்ளும் பொருட்டு இவ்விடயங்கள் விரிவாகக் கீழே விவாதிக்கப்படுகின்றன.

## ஒரு சுருக்கமான வரலாற்றுப் பார்வை

தமிழ்த் தேசிய இனம் பற்றிய ஒரு கருத்துப்படிவத்தை ஆராய்ந்தாலன்றி இலங்கையில் தேசிய முரண்பாட்டின் தோற்றுவாயை விளங்கிக்கொள்ள முடியாது. தமிழர் எப்போதும் ஒரு தேசிய இனமாக அமைந்திருந்தனரென்ற கருத்துப்படிவத்தைப் பேராசிரியர் கே.எம். டி சில்வா போன்ற சிங்கள அறிஞர்கள் மறுத்துரைத்தபோதிலும், பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளின் ஆங்கிலேய நிருவாகிகளும், இலங்கைக்கு வழிபோக்கர்களாகப் பயணம் மேற்கொண்டவர்களும்கூட சிங்களவரும் தமிழரும் இரு தேசிய இனங்களாக வாழ்ந்துவந்தன





ரென்றும், ஒவ்வொரு சமூகமும் இத்தீவில் தனிவேறான ஆட்சிப் பிரதேசங்களில் குடியிருந்தனரென்றும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

குறிப்பாக 1798இல் இலங்கையின் காலனித்துவச் செயலாளரான ஹியு கிளெக்ஹோர்ன் தமது பிரபலமான 1799இன் குறிப்பேட்டில் இரு தேசிய இனங்களும் புராதன தோற்றுவாய்களைக் கொண்டனவென்றும் சமயம், மொழி மற்றும் பழக்கவழக்கங்களில் முழுமையாக வேறுபட்டனவென்றும் வருணித்துள்ளார் (பீரிஸ், 1953). இலங்கையின் 1911 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டை மீளாய்வு செய்த டென்ஹாம் (1911) என்பவரும் இரு இனங்களும் நெருங்கிய அரசியல் தொடர்பைக் கொண்டிருந்தபோதிலும், அவற்றின் குடியிருப்புகளின் எல்லைகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளவாறே இன்று இலங்கையில் அவை தெளிவாக வேறுபட்டவையென்று கூறியுள்ளார். இவ்வெல்லைகள் ஆங்கிலத் தேசப்பட வரைஞர்களால் தயாரிக்கப்பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தேசப்படங்களில் கூட ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக அறோசிமித்தின் 1857 இலங்கைத் தேசப்படம், இயற்கையான மற்றும் மனிதனால் ஆக்கப்பட்ட உருவங்களுக்கு வழங்கப்படும் பெயர்கள் உட்பட இடங்களின் பெயர்களுக்குப் பயன்படுத்தப்படும் மொழியின் மூலம் சிங்களப் பிரதேசங்களைத் தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து வேறுபடுத்தலாமென்று காட்டுகின்றது (எமர்சன் 1859).

இரு இன மக்களுக்குமிடையிலான எல்லைகள் ஓய, வெவ, கம, கம்வ, விய போன்ற சிங்களப் பெயர்கள் ஆறு, குளம், ஊர், மடு, தீவு போன்ற தமிழ்ப் பெயர்களைக் கொண்ட பிரதேசங்களுடன் வந்திணைகின்றன. 1873இல் ஆங்கிலேயக் காலனித்துவ அரசாங்கம், ஏறக்குறைய முற்றுமுழுதாகத் தமிழர் (இலங்கைத் தமிழரும், இஸ்லாமியத் தமிழரும்) குடியிருந்த ஆட்சிப் பிரதேசத்தை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களென்று பெயர் குறிப்பிடுமளவுக்கு தமிழ் பேசும் மக்களது தனித்துவம் அப்பிரதேசங்களில் இருந்தது.

1881இன் குடிசன மதிப்பீடுகூட, பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இரு தமிழ் மாகாணங்களிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏறக்குறைய முற்றுமுழுதாகத் தமிழரே குடியிருந்தனரென்று காட்டுகின்றது (இலங்கைக் குடிசன மதிப்பீடு, 1881). இரு மாகாணங்களினதும் மொத்தச் சனத்தொகையில் 1.8 சதவீதம் மட்டும்தான் சிங்களச் சனத்தொகையாயிருந்தது. 1881ஆம் ஆண்டு வட மாகாணத்தில் 0.51 சதவீதமும், கிழக்கு மாகாணத்தின் 4.2 சதவீதமும் சிங்கள மக்களைக் கொண்டதாக இருந்தது (இலங்கை அரசாங்கம் 1984).

## தமிழ்த் தேசிய இனத்தின் இறைமை

தீவின் எஞ்சிய பிரதேசங்களைப் போன்றே தமிழ்ப் பிரதேசங்களும் போர்த்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தருக்கும் பின்னர் ஆங்கிலேயருக்கும் கைமாறின. 1948ஆம் ஆண்டு பெப்ருவரி நான்காம் திகதியன்று இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. 1802இல் இலங்கைத் தீவு அவ்வாண்டின் ஏமியன்ஸ் ஒப்பந்தத்தின்மூலம் ஆங்கில முடியரசிடம் ஒப்புவிக்கப்பட்டது. ஏமியன்ஸ் ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட்ட அறோசிமித்தின் இலங்கைத் தேசப்படம் இத்தீவை இரு வெவ்வேறு நாடுகளாக-வடக்கையும் கிழக்கையும் கொண்ட ஒரு தமிழ் நாடாகவும், தென்மேற்கையும் மத்திய பகுதிகளையும் கொண்ட ஒரு சிங்கள நாடாகவும் - காட்டுகின்றது.

அடிக்கடி எடுத்துக்காட்டப்படும் ஒரு குறிப்பேட்டில் சேர் ஹியு கிளெக்ஹோர்ன் 1799 யூனில் ஐக்கிய இராச்சிய அரசாங்கத்துக்கு எழுதியதாவது:

> மிகப் புராதன காலந்தொட்டு இரு வெவ்வேறு தேசிய இனங்கள் இத்தீவின் உடைமையைத் தமக்கிடையில் பிரித்துக்கொண்டுள்ளன. முதலாவது அதன் தென் மேற்குப் பகுதிகளில் நாட்டின் உட்புறத்தில் குடியிருக்கின்ற சிங்களவர், இரண்டாவது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உடைமையாகக் கொண்டுள்ள மலபார்கள் (அதாவது தமிழர்). இவ்விரு தேசிய இனங்களும் அவற்றின் மதம், மொழி, பழக்கவழக்கங்கள் என்பவற்றில் முழுமையாக வேறுபடுகின்றன. (தமிழ்த் தகவல் நிலையத்திலிருந்து எடுத்துக்காட்டு 1997:2).

மேலும், புகழ்பெற்ற பிரதம நீதியரசர் சேர் அலெக்சாண்டர் ஜோன்ஸ்ரன் பெரிய பிரித்தானியா மற்றும் அயர்லாந்தின் றோயல் ஏசியாடிக் சொசைட்டிக்கு 1827ஆம் ஆண்டு யூலை 1ஆம் திகதியன்று எழுதியதாவது:



> ஆகக்கூடிய கமத்தொழில் சுபிட்சம் நிலவிய காலப் பகுதியில் இலங்கைத் தீவின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் முழுவதிலும் வசித்த மக்கள் இனம் அதே காலப்பகுதியில் இந்தியாவின் தென்குடாநாட்டில் வசித்த மக்கள் இனத்தைப் போன்று அதே மொழியைப் பேசினரென்பதையும், அதே எழுத்து வரிவடிவத்தைப் பயன்படுத்தினரென்பதையும், அதே தோற்றுவாயையும் மதத்தையும் சாதிகளையும் சடங்குகளையும் பழக்கவழக்கங்களையும் கொண்டிருந்தனரென்பதையும், அவர்களிடமுள்ள மற்றும் எனது கைவசமுள்ள வெவ்வேறு வரலாறுகள் எல்லாவற்றிலிருந்தும் நிச்சயமாக முடிவுசெய்யலாமென்று நான் நினைக்கின்றேன் ('ஈழத்தின் இறைமை' பற்றிய ஒரு கட்டுரையிலிருந்து எடுத்துக்காட்டு, www.tamilnation.org/history 06 யூன் 2000).

இலங்கைத் தீவு இரு தனிவேறான பிராந்தியங்களைக் கொண்டிருந்ததென்பதற்கு 1799இன் கிளெக்ஹோர்ன் குறிப்பேட்டையும் 1802இன் அறோசிமித் தேசப்படத்தையும் அதிகாரப்பூர்வமான சான்றுகளாகக் கொள்ளலாம். (உருவரைபடம் 3.1) பிரதம நீதியரசர் சேர் அலெக்சான்டர் ஜோன்ஸ்ரனின் கடிதம் இதனை மேலும் உறுதிப்படுத்துகின்றது. 1815இல் கண்டி இராச்சியமும் 1818இல் வன்னிப் பிரதானிகளும் வீழ்ச்சியடைந்ததன் பின்னர் மட்டும்தான் ஆங்கிலேய அரசாங்கம் முழுத் தீவையும் ஒருங்கிணைத்ததென்பதை நினைவில் கொள்ளவேண்டியது முக்கியமானதாகும் (வில்சன் 1988: 2-4). அவர்கள் அதனை ஒரு புவியியல் அலகாக உணர்ந்தனரேயன்றி அரசியல் அல்லது தேசிய அலகாக அல்ல.

ஆங்கிலேய அரசாங்கம் 1833இல் நிருவாகத்தை ஒருங்கிணைத்தபோதிலும், அது அறிமுகப்படுத்திய கச்சேரி' முறைமையுடன் முன்னர் நடைமுறையிலிருந்த வெவ்வேறு சுதேச நிருவாகக் கட்டமைப்புகளையும் ஒருங்கிணைத்தது. இதிலிருந்து அவர்கள் கடந்த காலத்தை முறித்துக் கொள்ள விரும்பவில்லையென்பது தெளிவாகத் தெரிகின்றது. உள்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






Source: Tennet J Emerson, *Ceylon Volume II*, 1859, London: Longman Press.

**வரைபடம் : 3.1 - இலங்கைத் தமிழர்களின் அடையாளபூர்வ இடங்கள்**

*(The Space-Related Identity of Sri Lankan Tamils)*





நாட்டு மற்றும் மரபுவழக்கான சட்டங்கள் தொடர்ந்தும் நடைமுறையிலிருந்தன. ஒல்லாந்தரால் கடலோரப் பிரதேசங்களில் அறிமுகப் படுத்தப்பட்டிருந்த ரோமன் டச்சுச் சட்டம் (RDL) நாட்டின் பொதுச் சட்டமாகத் தொடர்ந்தது. முன்னைய சட்ட முறைமை முழுத் தீவையும் உள்ளடக்கியதாக இருக்கமுடியவில்லை. அவ்வாறே ஆங்கிலக் கல்வி கற்ற புதிய உயர்குடி வகுப்பினரால் இத் தீவின் இரு இன மக்களுக்குமிடையிலான வேறுபாடுகளைக் களைந்து அவர்களை ஒரே தேசமாகக் கொண்டு வரவும் முடியவில்லை. இது சாத்தியமற்ற ஒரு செயலாகவே தோன்றியது (பார்க்க அரசரட்ணம் 1979).

டொனமூர் மற்றும் சோல்பரி ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகள் தனியோர் 'இலங்கைத்' தேசமொன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளின் தோல்விக்குச் சிறந்த சான்று பகர்கின்றன. எனவே 1948இல் ஆங்கிலேயர் வெளியேறியதைத் தொடர்ந்து கைக்கொள்ளப்பட்ட நேர்மையற்ற அரசியலமைப்பின் விளைவாக இத்தீவிலுள்ள தமிழர் சிங்களவரின் தயவில் விடப்பட்டனரென்பதைச் சொல்லத் தேவையில்லை. அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் குறித்து ரோயல் கமிஷனுக்குக் கடைசியாகத் தலைமை தாங்கிய சோல்பரி பிரபு, இலங்கையின் விவகாரங்கள் தொடர்பில், பின்னர் தாம் பெற்றுக்கொண்ட அனுபவம் முன்னர் இருந்திருக்குமாயின் தமது பரிந்துரைகள் வேறுவிதமாக இருந்திருக்குமென்று மனம் வருந்திக் கூறியதை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானதாகும் (ஃபார்மர் 1963: 7-8).

கச்சேரி முறைமையினுள் வெவ்வேறு பிரதேசங்களின் சுதேச நிருவாக முறைமையை ஒருங்கிணைத்தலைத் தவிர வெவ்வேறு இனக் குழுக்களுக்கிடையில் நடைமுறையிலிருந்த அதிகாரச் சமநிலையைக் குழப்பாதிருத்தலிலும் கவனஞ்செலுத்தப்பட்டது. சட்ட சபையின் பிரதிநிதித்துவம் இனப் பிரதிநிதித்துவ அடிப்படையில் அமைந்ததாகச் சிங்களவருக்கும் தமிழருக்குமிடையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விகிதாச்சாரத்தைக் கொண்டிருந்தது. காலப்போக்கில் இது மாற்றப்பட்டதைத் தொடர்ந்து 1924இற்கும் 1931இற்குமிடையில் சிங்களவருக்கும் தமிழருக்குமிடையிலான விகிதாச்சாரம் 2 : 1 என்றாகியது. சட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சபையில் 16 சிங்கள உறுப்பினர்களுக்கு எட்டுத் தமிழர் இருந்தனர். மேலும் சட்டசபையின் பிரதிநிதித்துவமானது, தனியொரு சமூகம் கூட்டான ஏனைய சமூகங்களை வாக்களித்து வெல்லக்கூடாது என்னும் டிவொன்ஷயர் சூத்திரத்துக்கு உட்பட்டதாயிருந்தது.

பிரதேச ரீதியிலான பிரதிநிதித்துவம் என்பது தேசிய சிந்தனையை வளர்க்குமென்றும், இன அடிப்படையிலான பிரதிநிதித்துவம் என்பது இனவாதத் தன்மை உடையதாய் இருக்குமென்றும் டொனமூர் அரசியலமைப்பை உரு வாக்கியவர்கள் கூறினார்கள். இதன் உள்நோக்கம் என்ன என்பது இந்த அரசியலமைப்பை உருவாக்கியவர்களுக்கே வெளிச்சம். இதில் பெரிய ஆச்சரியம் என்னவெனில், ஆளுநர் அன்ட்று கல்டெகொட் பிரபுவும், சோல்பரி ஆணையாளரும், காலனித்துவ அலுவலகத்தினரும் அவ்வாறே எண்ணியதுதான். இருந்த போதிலும், ஏனைய பல்லினக் குடியேற்ற நாடுகளிலிருந்து கைக்கொள்ளப் பட்ட டிவொன்ஷயர் சூத்திரம் இலங்கை விடயத்தில் விகிதாச் சார பிரதிநிதித்துவத்துடன் சேர்த்துக் கைவிடப்பட்டது.

எனினும் 1948இல் சுதந்திரம் வழங்கப்பட்டபோது ஆங்கிலேய அரசாங்கமானது அன்று 'தனிச் சிங்கள அமைச்சரவையை' பாகுபாடின்மை கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளும்படி தூண்டியது. சோல்பரி அரசியலமைப்பின் 29ஆம் உறுப்புரையின்படி சமாதானம், பாதுகாப்பு, நல்ல ஆட்சிமுறை என்பவற்றுக்கான சட்டங்களை ஆக்குவதற்குப் பாராளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்ட போதிலும், ஏனைய சமூகங்களுக்குச் சமமான முறையில் பிரயோகிக்கப் படாமல் குறிப்பாக ஏதேனும் ஒரு சமூகத்துக்குச் சாதக மான அல்லது பாதகமான பாகுபாடான சட்டங்களை ஆக்கு வதற்கான ஆற்றல் பாராளுமன்றத்துக்கு மறுக்கப்பட்டது.

அரசியலமைப்பிலுள்ள இந்த ஏற்பாட்டுடன் சேர்த்து, அன்று வாதத்துக்கிடமின்றிச் சிங்களவரின் தன்னிகரற்ற தலைவராயிருந்த அதிகௌரவ டி.எஸ்.சேனநாயக்க அவர் களால், அரசியலமைப்பைச் செயற்படுத்துவதில் சிங்களவ ருடன் தமிழர் இணைந்துகொள்வதன் மூலம் அவர்களுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாதென்ற திட்டவட்டமான உத்தர





வாதமும் பாராளுமன்றச் சபையில் வைத்து வழங்கப் பட்டது (ஹன்சாட் 8 நவம்பர் 1945: பத்தி 6931).

சோல்பரி அரசியலமைப்பின் உறுப்புரை 29 பாராளு மன்றத்தையன்றி அரசியலமைப்பையே இறைமையுடைய தாக்குகின்ற வலிமையுடைய ஒரு வாசகமெனப் பிறிவி கவுன்சில் கருத்துத் தெரிவித்திருந்தது. இந்த ஏற்பாடும், அதிகௌரவ டி.எஸ்.சேனநாயக்கவின் உத்தரவாதமும்; இணைந்து, தன்னாட்சியுரிமை கொண்ட குடியேற்ற நாடான இலங்கையின் அரசியலை ஒரு நிபந்தனைக்குட் பட்ட அரசியலாக்கியது. இந்நிபந்தனை, தமிழருக்கெதி ராகப் பாகுபாடு காட்டுவதற்கு, இனப் பெரும்பான்மை யானது அதன் எண்ணிக்கைப் பலத்தைப் பயன்படுத்தா தென்ற உத்தரவாதத்தைக் கொடுத்தது (திருநாவுக்கரசு 1995: 15). எனினும், இந்நிபந்தனையானது மீண்டும் மீண்டும் சிங்கள அரசாங்கங்களினால் மீறப்பட்டுள்ளமையும், கடுமையான பாகுபாடான நடவடிக்கைகள் இடம்பெற்றுள் ளமையும், தமிழர் அந்த அரசியற் சமுதாயத்திலிருந்து அவர்களின் விருப்பப்படி வெளியேறுவதற்கான தார்மீக உரிமையை அவர்களுக்கு அளிக்கின்றது.

தமிழரின் ஆதரவற்றதும், அவர்களின் பிரதிநிதிகள் அதிலிருந்து வெளிநடப்புச் செய்ததுமான ஓர் அரசியல மைப்புச் சபைதான் 1972இன் சிங்கள மக்களுக்கான குடியரசு அரசியலமைப்பை ஆக்கியது. அது கடந்த காலத்துடன் சட்டத் தொடர்ச்சியைக் கொண்டிராத ஓர் அரசியலமைப் பாகும். தமிழ்த் தேசிய இனம் அதனை ஆக்குவதற்கு ஒப்பு தலளிக்கவில்லை. எனவே, அங்கு ஓர் பிளவு இருந்தது. இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளின் இறையாண்மையானது இருவேறுபட்ட தேசிய இனங்களின்மீது பொதிந்திருக் கின்றது என்பதனை மேற்படி நிகழ்வுகள் மீண்டுமொரு முறை தெளிவாகக் காட்டுகின்றன. வடக்கையும் கிழக்கை யும் உள்ளடக்குவதற்கான இலங்கையின் கோரிக்கை யிலுள்ள சட்ட மற்றும் அரசியலமைப்புக் குறைபாடுகள் இப்போது எளிதில் உணரத்தக்கனவாயிருக்கும். இலங்கை தேசமானது வடக்கிலும் கிழக்கிலுமுள்ள மக்களின் இசை வின்றி அமைக்கப்பட்டதனால் அது முந்திய ஆங்கிலேய காலனி அரசியற் சமுதாயங்களின் வாரிசுதாரர் அல்ல.

www.tamilarangam.net



அரசியல் அதிகாரம் இந்நாட்டு மக்களுக்குக் கைமாற்றப் பட்டபோதிலும் அவர்களின் இறைமையின் கருவூலமாக ஆங்கிலேய அரசியே தொடர்ந்துமிருந்தார்.

அரசியலமைப்புச் சபை அங்கீகரித்ததைத் தொடர்ந்து 1972 மே 22ஆம் தேதியன்று அமுலுக்கு வந்த குடியரசு அரசியலமைப்பு இச்சட்டத் தொடர்ச்சியை அறுத்துக் கொண்டதுடன், இந்த இறைமையின் உறைவிடம் மக்கள் தானென்று பிரகடனப்படுத்தியதன் மூலம் மக்களின் இறைமைக்கும் உத்தரவாதமளித்தது.

ஆனால், தமிழ்த் தேசிய இனத்தின் பிரதிநிதிகள் இந்த அரசியலமைப்புக்குத் தமது ஒப்புதலைக் கொடுக்க மறுத்ததுடன், அதனை நிராகரித்தும் விட்டனர். தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட 19 பாராளுமன்ற உறுப்பினர்களில் 15 பேர் 1972 மே 22ஆம் தேதி நடைபெற்ற மிகமுக்கியமான இக்கூட்டத்தைப் பகிஷ்கரித்து அதனை நிராகரித்தனர். எனவே இந்த அரசியலமைப்புக்குச் சட்டத் தொடர்ச்சியோ தமிழ்த் தேசிய இனத்தின் ஒப்புதலோ இல்லையென்பது தெளிவாகின்றது.

முன்னர் கூறியவாறு தமிழ்த் தேசிய இனத்தின் இறைமையும் அதன் அரசுரிமையும் முதலில் 1619இல் ஆக்கிரமிப்பு உரிமையின் மூலம் பறிக்கப்பட்டன. ஆனால் அதன் இறைமையை, சட்டத் தொடர்ச்சியின் மூலமாகவோ, ஒப்புதல் மூலமாகவோ அல்லது ஆக்கிரமிப்பு உரிமையின் மூலமாகவோ பறித்துக்கொண்டது சிங்கள தேசிய இனம் அல்ல. சர்வதேசத் தரத்திலான சுய நிர்ணய உரிமை சட்டங்களின் அடிப்படையில், தமிழ்த் தேசிய இனம் அதன் இறைமையையும் அரசுரிமையையும் மீளத் தாபிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளதெனத் தமிழ்த் தேசியவாதிகள் வாதிடுகின்றனர்.

சிங்களத் தேசிய இனம் அதன் ஆட்சியை தமிழ்த் தேசிய இனத்தின்மீது திணிக்க முடியாதென்றும், ஈழத்தை சிங்கள அரசின் ஒரு குடியேற்ற நாடாக மாற்ற முடியாதென்றும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டலாம். தற்போதைய அரசியலமைப்பு சிங்களத் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், அந்நோக்கத்துக்





காக, அத்தேசிய இனத்தினால் வழங்கப்பட்ட ஆணையின் பேரில் வரைவு செய்யப்பட்டதொன்றாகும். ஒரு தனி வேறான தமிழ் அரசை (ஈழம்) தாபிப்பதற்கான ஆணையைக் கோரி 1977இன் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) வடக்கிலும் கிழக்கிலுமுள்ள 26 ஆசனங்களில் 18ஐ வென்றது. தமிழ் மொழியையே பேசுகின்ற முஸ்லிம்கள் ஐ.தே.கட்சியை (UNP) ஆதரித்து 6 ஆசனங்களை வென்றனர். ஆனால் வடக்கிலும் கிழக்கிலுமுள்ள தமிழர் ஈழ அரசின் சுதந்திரத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கான ஆணையை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு வழங்கினர்

தமிழ்த் தேசியவாதிகள் இவ்வாதத்தை மேலும் முன்னெடுத்து இலங்கை அரசாங்கம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள்மீது சட்டப்படியான உரிமை இல்லாமையின்பேரில் வருந்துகின்றதென்றும், நடைபெறுகின்ற யுத்தம், சட்டத்திற்குட்பட்ட உரிமை தொடர்பான நெருக்கடிகளில் ஒன்றென்றும் கூறத் துணியலாம். இதன் தொடர்ச்சிதான் சர்வதேச சமூகத்தின் சில பிரிவினரால் 'இலங்கையின் ஐக்கியம், இறைமை மற்றும் ஆள்புல ஒருமைப்பாடு' பற்றிய வலியுறுத்தலாகும். இது ஏற்றுக்கொள்ளத் தகாததும் தமிழ்த் தேசிய இனத்தின் நியாயமான அபிலாசைகளுக்கு எதிரானதுமாகும்.

## சிங்களவரையும் தமிழரையும் ஒன்றுபடுத்துவதில் தோல்வி

முன்னர் சுட்டிக்காட்டியவாறு பதினாறாம் மற்றும் பதினேழாம் நூற்றாண்டுகளில் தமிழ் மாகாணங்கள் இத்தீவின் ஏனையப் பிரதேசங்களிலிருந்து தெளிவாக வேறுபட்டனவாக, தனிவேறான நிருவாக அலகுகளாக ஆளப்பட்டன. மேலும், தமிழ் மக்களை ஆளுவதில் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் உள்ளூர் வழக்கங்களையும் மரபுகளையும் கடைப்பிடித்தனர் (அபேசிங்க 1986: 1-11). எனினும் ஆங்கிலேய அரசாங்கம் ஒற்றையாட்சி அரசாங்க முறையொன்றின்கீழ் அவர்களை ஒன்றுபடுத்துவதில் உறுதியாயிருந்தது (ஃபார்மர், 1963: 8). ஆனால் ஒவ்வொரு தேசிய இனத்தினதும் அங்கத்தவர்கள் அவர்களின் சமூகத்தினுள் தத்தமது வாழ்க்கை முறைகளையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மரபுகளையும் பின்பற்றியதனால் அரசாங்கக் கட்டமைப்பு தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் ஒரே தேசிய இனமாக ஒன்றுபடுத்துவதில் தோல்வி கண்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேய அரசாங்கத்தின் வர்த்தக முயற்சிகள் தமிழருக்கு அவர்களின் மொழித்திறமைகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை அளித்தன. ஆங்கிலக் கல்வியின் அனுகூலங்களைத் தமிழர் கண்டதுடன், உண்மையில் யாழ்ப்பாணம் போன்ற பெரும்பான்மைத் தமிழ்ப் பிரதேசங்களில் மக்களை மதம் மாற்றுவதற்கும், பாடசாலைகளையும் தேவாலயங்களையும் நிறுவுவதற்கும், கிறிஸ்தவ மத நிறுவனங்களை வேண்டி அழைக்கும் அளவிற்குக்கூட அவர்கள் சென்றனர் (சிவராஜா 1996: 109-110). தமிழர் ஆதிக்கத்தின் ஆபத்துகளை உணர்ந்த சிங்களவர் 1930களில் ஓர் அரசியல் சக்தியாகத் திரள்வதற்குப் பெருமுயற்சியெடுத்து சட்டசபையில் கூடிய பிரதிநிதித்துவத்தைப் பெற்றனர். சிங்கள பௌத்தர்களை இலங்கையின் தேசிய அரசுடன் இணைத்துக் கொள்வதற்கும் ஒரு திட்டமிட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தமிழர் சட்டசபையில் இனப் பிரதிநிதித்துவத்தின் மூலம் அரசியல் செல்வாக்கைப் பெறுகின்றனரென்றும் அவர்கள் தமிழர்மீது குற்றஞ்சாட்டினர் (றிக்கிங்ஸ்: 1960).

## தனிச் சிங்கள அமைச்சரவை

'சிங்கள மக்கள் அவர்களின் மூதாதையர்களின் நிலத்துக்குத் திரும்பிச் செல்வதற்கு' உதவுகின்ற ஒரு வழிமுறையாக அரசாங்க நிதியுதவியுடனான குடியேற்றத் திட்டங்களை டொன் ஸ்ரீபன் சேனநாயக்க நடைமுறைப்படுத்தினர். முழுச் சிங்கள அமைச்சர் குழாமினதும், சிங்கள ஆதரவுச் சபையான சிங்கள மகா சபையினதும் உருவாக்கம் ஜீ. ஜீ. பொன்னம்பலம் போன்ற தமிழ்த் தலைவர்களின் மனதைப் புண்படுத்தியது. அவர் சட்டசபையில் அரைப் பங்கு ஆசனங்கள் சிறுபான்மைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டுமெனப் பரிந்து வாதாடினார். ஆனால் அத்தகையத் திட்டங்கள் நிராகரிக்கப்பட்டன.

1948இல் இலங்கை சுதந்திரமடைந்தபோது சிங்களத் தலைவர்கள் தமது சமூகத்தின் பொருளாதார மற்றும்





அரசியல் நிலைமைகளை முன்னேற்றுவதற்கு, புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றத்தில் தமக்கிருந்த பெரும்பான்மையைப் பயன்படுத்தினர். இந்திய வம்சாவளித் தமிழரான மலைநாட்டுத் தமிழர்தான் பாகுபாட்டுக்கான முதலாவது இலக்காகினர். பாராளுமன்றத்திலிருந்த இலங்கைத் தமிழ் உறுப்பினர்கள் எதிர்த்தபோதிலும், சிங்களவர் ஆதிக்கஞ்செலுத்திய பாராளுமன்றம், மலைநாட்டுத் தமிழரின் வாக்குரிமையையும் பிரசாவுரிமையையும் பறிக்கின்ற சட்டங்களை நிறைவேற்றியது. தமிழ்ச் சனத்தொகையின் ஏறக்குறைய 40 சதவீதத்தின் வாக்குரிமை பறிக்கப்பட்டது.

## நாடற்றவர்களாக 40வீத தமிழர்

முழுத்தீவையும் ஒரே நாடாக ஆங்கிலேயர் நிருவகித்த போதிலும், நான் மேலே குறிப்பிட்டவாறு, உண்மையில் இங்கு சிங்களவர் மற்றும் தமிழர் என்ற இரு தேசிய இனங்கள் இருந்தன. சுதந்திரத்தின் பின்னர் சிங்கள அரசாங்கத்தால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு சட்டத்தையும் தொடர்ந்து, முரண்பாட்டை ஏற்படுத்தும் செயலானது மேலும் கூடிய முனைப்புடையதாகியது. சோல்பரி அரசியலமைப்பானது பிரசாவுரிமை, வாக்குரிமை, தனிப்பட்ட மற்றும் அடிப்படை உரிமைகளின் பாதுகாப்பு என்பவை பற்றிக் குறிப்பிடுதலைத் தவிர்த்ததன் மூலம் 1949இன் 48ஆம் இலக்கப் பாராளுமன்றத் தேர்தல் (திருத்தச்) சட்டத்துடன் சேர்த்து 1948இன் 18ஆம் இலக்க மற்றும் 1949இன் 3ஆம் இலக்கப் பிரசாவுரிமைச் சட்டம் (பின்னிணைப்பு 4) ஆகியவற்றுக்கும் வழிசமைத்தது. இலங்கைப் பிரசாவுரிமையானது கடந்த கால வதிவிடம், தற்போதுள்ள பொருளாதார நிலை, அத்துடன் இத்தீவுடன் இரண்டு சந்ததித் தொடர்பு என்பவற்றுக்கான ஆவணச் சான்றுடையவர்களுக்கு மட்டும் உரித்துடையதாயிருந்தது (கொடிக்கார, 1981: 198). எனவே இத்தீவின் வளர்ச்சிக்குத் தமது உழைப்பைப் பங்களித்த இந்தியத் தமிழர் நாடற்றவர்களாக்கப்பட்டனர். 1947இல் அவர்களின் வாக்குகளைக் கொண்டு பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட எட்டுப் பிரதிநிதிகளில் ஒருவரேனும் 1952 தேர்தலிலும் அதற்குப் பின்னரும்கூட மீளத் தெரிவுசெய்யப்பட முடியவில்லை (அட்டவணை 3.1). இதன் விளைவாக, சனத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அட்டவணை 3.1

### இனவிகிதாச்சார அடிப்படையில் தேர்தல் மாற்றங்கள் 1947--1977

| விவரம் | மொத்தம் | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | முஸ்லிம்கள் |
|---|---|---|---|---|---|
| சனத்தொகை 1946 | 100% | 69.40% | 11% | 11.70% | 7% |
| சனத்தொகை அடிப்படையில் உரிய ஆசனங்கள் | 95 | 66 | 12 | 10 | 6 |
| பெற்ற ஆசனங்கள் 1947 | 95 | 68+ | 13 | 7 | 6 |
| 1952 | 95 | 75+ | 13 | இல்லை | 6 |
| 1956 | 95 | 75+ | 12 | இல்லை | 7 |
| **சனத்தொகை 1958** | 100% | 69.30% | 10.90% | 12.00% | 6.30% |
| உரிய ஆசனங்கள் | 151 | 106 | 17 | 18 | 10 |
| மார்.-60 | 151 | 123 | 18 | இல்லை | 9 |
| ஜுலை-60 | 151 | 122+ | 18 | இல்லை | 11 |
| 1965 | 151 | 121+ | 17 | இல்லை | 11 |
| 1970 | 151 | 123+ | 19 | இல்லை | 9 |
| சனத்தொகை 1971 | 100% | 71.90% | 11.10% | 9.40% | 7% |
| உரிய ஆசனங்கள் | 168 | 121 | 19 | 16 | 12 |
| பெற்ற ஆசனங்கள் 1977 | 168 | 136+ | 19 | 1 | 12 |

மூலம் விஜே; எம்.இலங்கையில் தமிழர் மீதான அடக்குமுறை, 1983: 107

குறிப்பு

+ : சிங்களவர்களுக்கான ஆசனங்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்புக்குக் காரணம் இந்திய வம்சா வளித் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டதன் விளை வாகும். அவர்களுக்கான ஒதுக்கீடு சிங்களவருக்குச் சேர்ந்தது.

இல்லை: 1948இன் பிரசாவுரிமைச் சட்டத்தினாலும், 1949இன் பாராளு மன்றத் தேர்தல் (திருத்தச்) சட்டத்தினாலும் இந்திய வம்சாவளித் தமிழரின் பிரசாவுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டதனால் 1952 முதல் 1977 வரை அவர்களுக்குப் பாராளுமன்றத்தில் ஆசனம் எதுவும் இருக்கவில்லை.





தொகையின் சுமார் 70 சதவீதமாயிருந்த சிங்களவர் பாராளுமன்ற ஆசனங்களில் 80 சதவீதத்தைக் கைப்பற் றினர். 'சிறுபான்மையினருக்குப் பாதுகாப்புக் கவசமாக' இருப்பதற்குப் பதிலாக, அது பெரும்பான்மையினருக்குப் பாதுகாப்புக் கவசமாகியது. எவ்வகையான தொழிலுக்கும், பிரயாண ஆவணங்களுக்கும், அரிசிப் பங்கீட்டுக்கும், ஆதனப் பதிவுக்கும், பங்குகளுக்கும், வர்த்தகர்களாகப் பதிவு செய்வதற்கும், அத்தகைய வேறு செயற்பாடுகளுக்கும் பிரசாவுரிமைக்கான சான்று வலியுறுத்தப்பட்டது. நடை முறையில் அவர்களுக்குச் சுகாதாரப் பராமரிப்புக்கும் கல்விக்கும் எவ்வித உரித்தும் இருக்கவில்லை.

அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தின் 15ஆம் விதி 'ஒவ்வொருவருக்கும் ஒரு தேசிய இனத்துக்கான உரிமை யுண்டு. எவருக்கும் அவரின் தேசிய இனம் பறிக்கப்படு தலோ, தேசிய இனத்தை மாற்றுவதற்கான உரிமை மறுக்கப் படுதலோ கூடாது' என்று வலியுறுத்துகின்றது. 1931இல் இத்தீவில் வயதுவந்தோருக்கான சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டபோதிலும் 1987இல் ஏறக்குறைய ஐந்து இலட்சம் மக்கள் அப்போதும் நாடற்றவர்களாயிருந்தனர் (நடேசன் 1993: 327).

'Sri Lanka; A Mounting Tragedy of Errors' என்ற மலையகத் தமிழர் தொடர்பான அறிக்கையில் போல் சீக்ஹார்ற் என்ற அறிஞர், 'இலங்கையில் ஒரு சமூகம் இருக்கின்றது. அது தன்னை முற்றிலும் சலுகை பெறாத ஒரு சிறுபான்மை என்று அழைக்கப்படுவதற்கான அனைத்து நியாயங்களையும் கொண்டிருக்கிறது. அதுதான் 'இந்தியத் தமிழர் என்றழைக்கப்படும் சமூகம்' என்று கூறுகின்றார். 'இவர்களில் பெரும்பகுதியினர் தொடர்ந்தும் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்றனர். அவர்களின் உழைப்பு தேசிய வருமானத்துக்கு அளப்பரிய பங்களித்த போதிலும், உணவு, சுகாதாரம் மற்றும் கல்விக்கான ஏற் பாடுகள் அவர்களுக்கு மறுக்கப்படுவது கவலையளிப்பதாய் உள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார் (சீக்ஹார்ற் 1984: 13).

சர்வதேச சட்டவல்லுநர் ஆணைக்குழுவின் சார்பில் இலங்கைக்குத் தூதுப் பணியினை மேற்கொண்ட வேர் ஜீனியா லியறி அவர்களும் '1948இல் சுதந்திரத்தின்போது,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழர் சட்ட சபையில் 33 சதவீத வாக்களிப்பு வல்லமையைக் கொண்டிருந்தனர். எனினும், தோட்டத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டதன்பேரில் (1950இல்) இவ் விகிதாச்சாரம் 20 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. தமிழரைப் பாதிக்கின்ற சிங்களக் கொள்கைகளுக்கான சக்திவாய்ந்த எதிர்ப்பைத் தமிழர் பிரயோகிக்க முடியாதவாறு பாராளுமன்றத்தில் சிங்களவர் மூன்றிலிரண்டு பங்கிற்கும் அதிகமான பெரும்பான்மையைப் பெற்றனர்' என்று அவர் மேலும் கூறுகின்றார் (1981: 11).

மலையக மக்கள் வாக்களிக்கும் உரிமையை இழந்ததன் விளைவாக, சிங்களவருக்கும் தமிழருக்குமிடையில் முரண்பாட்டுப் பரப்பொன்று விருத்தியடைந்தது. பிரசாவுரிமைச் சட்டத்திற்குப் பதிலளிப்பாக எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அச்சட்டத்தை எதிர்த்ததுடன், ஜி.ஜி. பொன்னம்பலத்தின் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசிலிருந்தும் (ACTC) விலகி, 1949 டிசெம்பரில் சமஷ்டிக் கட்சியை (FP) உருவாக்கினார். இது தமிழர் மத்தியில் தேசியத்துவ அம்சங்களுக்கான ஓர் அமைப்பாக விளங்கியது. 1949இல் கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றிய செல்வநாயகம், "தமிழ் பேசும் மக்களின் சுதந்திரத்தை எய்துவதற்கான ஓர் அமைப்பை உருவாக்குகின்ற பொதுவான இலக்குடன் நாம் ஒன்றுகூடியுள்ளோம்" என்று பிரகடனப்படுத்தினார். அதன் பின்னர் கட்சியின் முதலாவது மகாநாட்டில் அவர், "இலங்கையில் தமிழ் பேசுகின்ற மக்கள், நாட்டுரிமைக்கான ஒவ்வோர் அடிப்படைச் சோதனையின் மூலமும், சிங்களவரிலிருந்து தெளிவாக வேறுபட்ட ஒரு தேசிய இனமாக அமைகின்றனர்" என்று பிரகடனப்படுத்தினார் (கே.எம். டி சில்வாவிலிருந்து மேற்கோள் 1982: 162).

சிங்கள ஆதிக்க அரசாங்கம் தமிழருக்கெதிராகப் பாகுபாடான கொள்கைகளைப் பின்பற்றுகின்றதென்று தமிழர் உணர்ந்தபோது, அவர்களுக்கு சமஷ்டிக் கட்சி ஒரு மாற்றுத் தெரிவாகியது. இலங்கையில் இனப் பதற்றத்தின் வீரியத்தை வருந்தத்தக்க முறையில் ஆங்கிலேயர் குறைத்து மதிப்பிட்டனரென்பதற்குத் தெளிவானதும் வியக்கத்தக்கதுமான சான்று, பிரதம அமைச்சரான டி.எஸ்.சேனநாயக்க சுதந்திரமடைந்த உடன் தொடக்கிவைத்த அவரின் சொந்தக் கொள்கைகள் ஒன்றில் வெளிப்படுகின்றது. ஒரு தொடரான சட்டவாக்க நடவடிக்கைகள் மூலம் அவர் கிட்டத்தட்ட பத்து இலட்சம் மலையகத் தமிழரின் வாக்குரிமையைப் பறித்ததுடன் அவர்களின் பிரசாவுரிமையையும் மறுத்தார்.





சேனநாயக்க தான் விடுதலையை அனுபவித்த போதிலும்கூட, அவரின் செயல் நோக்கம் சிங்கள சார்புத் தன்மையின் எச்சசொச்சத்திலிருந்து விடுபட்டதாயிருக்கவில்லை (கே.எம். டி சில்வா 1986: 155). அத்தகைய பெரும் பங்கினரான சிங்களவரல்லாத தொகுதி மக்களைத் தகுதியற்றவர்களாக்கியதன் மூலம் சேனநாயக்க ஒரு பெரும் அரசியல் அனுகூலத்தைச் சிங்களச் சமூகத்துக்கு வழங்கியிருந்தார். இந்நடவடிக்கையானது, சிங்களவர் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கும், அதன் மூலம் நாட்டின்மீது வலுவான அதிகாரத்தைச் செலுத்துவதற்கும் வழிவகுத்தது (குமாரசுவாமி, 1984: 11). சேனநாயக்கவினால் இந்தியத் தமிழர்களுக்கு எதிராக இயற்றப்பட்ட சட்டத்தின் பின்விளைவுகளை முன்கூட்டியே உணர்ந்துகொள்ளுதல் ஒன்றும் கடினமானதல்ல.

## திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் : தமிழர் பாரம்பரியத் தாயகக் கோட்பாடு

தமிழ்த் தலைவர்களைப் பொறுத்தவரையில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழரின் பாரம்பரியத் தாயகமானதனால் (Tamil Traditional Homeland-TTH) அம்மாகாணங்களில் சிங்களவரைக் குடியேற்றும் அரசாங்கத்தின் கொள்கையை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக எதிர்த்து வந்துள்ளனர். மறுபுறத்தில் சிங்களவர், இத்தீவின் நவீன காலத்துக்கு முந்திய வரலாற்றின் அடிப்படைக்கு ஒரேயொரு மூலமாக விளங்கும் பாளி வரலாற்றுக் கதைகள் புராதனக் காலத்திலிருந்து இத்தீவில் நிரந்தரமான தமிழ்ச் சமூகங்கள் இருந்துள்ளமையைக் குறிப்பிடாததன் நிமித்தம், இக்கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். முன்னர் கூறியவாறு பௌத்தகுருமாரால் எழுதப்பட்டனவும், பெருமளவுக்குப் புனைந்துருவாக்கப்பட்டனவுமான இவ்வரலாற்றுக் கதைகள் முற்றுமுழுதாகச் சிங்கள மக்களின் வரலாற்றைத்தான் கூறுகின்றன. அவை தமிழர்களை இத்தீவை உரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாக்கித் தாபித்த 'இனங்களில்' ஒன்றாகக் கூறுவதைவிட, அவர்களைப் படையெடுப்பாளர்களாகவும், புராதனச் சிங்கள நாகரிகத்தை அழித்தவர்களாகவும் குறிப்பிடு கின்றன (பொன்னம்பலம் 1983: 15). இத்தீவின் எந்தப் பகுதி யிலும் சிங்களவரைக் குடியேற்றுவதற்கான நியாயப்படுத் துதலுக்கு, அவர்களின் மூதாதையர் இத்தீவில் சிங்கள இனத்தைப் பரப்புவதற்கும், தேரவாத பௌத்தத்தைப் போற்றி வளர்ப்பதற்கும் கௌதம புத்தரால் திட்டவட்ட மாகத் தெரிவுசெய்யப்பட்டனரென்ற, இட்டுக்கட்டப்பட்ட கதையை அடிப்படையாகக் கொண்ட ஒரு காரணமும் இருந்தது.

'இலங்கை பாரம்பரியமாக, தனித்துவமாக அல்லது இன்றியமையாதவாறு ஒரு சிங்கள மற்றும் பௌத்த ஆட்சிப் பிரதேசமும் அரசியற் சமூகமுமென்ற கருத்தைச் சுற்றி ஐயப்பாடுகளும் குழப்பங்களும் முரண்பாடுகளும் உள்ளன' என்று மூர் கூறுகின்றார் (மூர் 1985: 171). எனவே சிங்கள ஆதிக்க அரசாங்கங்கள் வேண்டுமென்றே திட்ட மிட்டு, கடந்த காலத்தில் பௌத்தர்களாக இருந்திருக்கக் கூடிய தமிழர், தமது பாரம்பரியத் தாயகமென்று மதித்து வந்த ஆட்சிப் பிரதேசத்தில் சிங்கள மக்களைக் குடியேற் றியது. இலங்கைத் தமிழர் புராதன காலத்தில் இத்தீவின் நிரந்தரக் குடிசனத்தின் ஒரு பகுதியாக அமையவில்லை யென்ற கருத்தை எல்லாச் சிங்கள வரலாற்றாசிரியர்களும் ஏற்றுக்கொள்வதில்லை. ஒரு சிங்கள வரலாற்றாசிரியர், 'சில இலங்கைத் தமிழர் இலங்கைக்குச் சிங்களவர் வந்த காலத்திலோ அல்லது அதற்கு முன்னரோ வந்திருக்கக் கூடும்' என்பதுடன், 'ஏழாம் நூற்றாண்டளவில் இத்தீவின் நிரந்தரக் குடிசனத்தின் கணிசமான பகுதியாகவும் அமைந் தனர்' என்று எழுதுகின்றார் (கே.எம். டி சில்வா 1982: 156). மேலும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், சிலாபம் மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் புராதன இந்துக் கோயில்கள் உள்ளமை, இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் பதின்மூன்றாம் நூற்றாண்டில் தமிழ் இராச்சிய மொன்று நிறுவப்படுவதற்கு நீண்ட காலத்துக்கு முன்னரே தமிழ்க் குடியேற்றங்கள் இருந்துள்ளதை உணர்த்துகின்றன (அரசரட்ணம் 1964: 101).





### குடியேற்ற பிரச்சினையில் இலங்கையின் முதல் பிரதமர்

உண்மையில் நவீன இலங்கையின் தாபகர்களில் ஒருவ ராகச் சேனநாயக்கவின் பங்கைப் பொதுவாக மதிப்பீடு செய்கையில் அவரின் 'மேற்குலகப் பற்று' மிதமிஞ்சி வலி யுறுத்தப்படலாகாது. அவரின் மனப்பாங்கில் சிங்கள பௌத்தத்தின் செல்வாக்கு முக்கியமானதாயிருந்துள்ள தாகத் தோன்றுகிறது. எடுத்துக்காட்டாக, அவர்தான் 'பண்டைய அரசர்களுடனும் பாரம்பரிய வழக்கங்களு டனும் தம்மை அடையாளப்படுத்திய முதலாவது நவீன இலங்கையின் அரசியல்வாதி' ஆவார் (கெம்பர் 1991: 861). அவரது குடும்பத்தின் விருப்பங்களுக்கிணங்க அவர், தம்மை இலங்கையை பௌத்தத்தின்கீழ் ஒன்றிணைத்த மத்திய கால மாவீர மன்னன் முதலாம் பராக்கிரமபாகுவின் வழித் தோன்றலாகக் கண்டார். முதலாம் பராக்கிரமபாகு குறிப் பாக அவர் நிர்மாணித்த நுட்பமான நீர்ப்பாசனக் கட்டு மானங்களுக்காக நினைவுகூரப்படுகின்றபோதிலும் புனித நகராக அனுராதபுரத்தை அவர் தமது இராச்சியத்தின் மையமாக மீட்டதுடன், பௌத்த துறவி மடங்களையும் மறுசீரமைத்து புனித தந்தக் கோயிலையும் கட்டினார் (கெம்பர் 1991: 66-69). சேனநாயக்க, பராக்கிரமபாகு மன்னனின் பாணியில் செயற்பட்டார். பௌத்தத் துறவி மடப் பாடசாலைகளில் தீவிர அக்கறை காட்டிய அவர் 1947இல் தேசிய உடையணிந்து வெள்ளைச் சால்வை போர்த்தியவராக பௌத்தச் சின்னங்களின் முன்னர் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி பின்னர் 'பௌத்த பொதுமக்களின் சார்பாக பௌத்தமத அடையாளச் சின்னம் தாங்கிய பேழையைத் தமது சிரசில் தாங்கிச் சென்றார்' (கெம்பர் 1991: 162). அத்தகைய செயல்கள் மூலம் 'தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், பொதுமக்கள் முன்னிலையில் பௌத்த சமயப் பாரம்பரிய முறையில் மரியாதை செலுத்துகின்ற செயல்முறையை சேனநாயக்க தொடக்கி வைத்தார்' (மேனர் 1989: 133). இந்த நடைமுறை இன்றளவும் பின்பற்றப்பட்டு வருகின்றது.

1930களின் பிற்பகுதியில் சேனநாயக்க 'எமது பண்டைய மன்னர்கள் செய்ததை நவீன ஆட்சியாளர்களும் அதே யளவு நல்லமுறையில் செய்ய முடியும்' என்ற கருத்துடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கமத்தொழில்
வாய்ப்புகளை உருவாக்கும் பொருட்டு, 1935ஆம் ஆண்டில்
காணி அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் அம்மாகாணங்களில்
நீர்ப்பாசன அமைப்பைப் புதுப்பிக்கத் தொடங்கினார்
(கெம்பர்: 161-162). உலர் வலயப் பிரதேசங்களில் பயிர்ச்
செய்கைக்காகக் காணியை அபிவிருத்தி செய்தலானது,
காணியற்ற சிங்கள விவசாயிகளை சுயாதீனமான காணி
உரிமையாளர்களாக்கியது. அபிவிருத்தியானது தொழில்
வாய்ப்பின்மையைக் குறைக்கவும், உணவுற்பத்தியை
அதிகரிக்கவும், புதிய சுபிட்சப் பிரதேசங்களைத் தாபிப்
பதற்கும் வழிவகுத்தது (பீபிள்ஸ் 1990: 37). ஆங்கிலேயர்
அத்தகைய கொள்கைகளைச் செயற்படுத்தத் தொடங்கி
யிருந்தனர். ஆனால் இக்கொள்கையானது சிங்கள விவசாயி
களின் விசேடத் தேவைக்கும் நலன்களுக்கும் எதிராகச்
செயற்பட்டனவென சேனநாயக்கவும் அவரின் கூட்டாளி
களும் நம்பினர். மேலும், அவர்கள் 'தீவின் கடந்தகால
மெனக் கருதிய உன்னத நிலைக்கு' நாட்டை இட்டுச் செல்
வதற்கு ஏதுவாக 'ஆயிரம் ஆண்டுகாலத் தொலைநோக்
குடன்' குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்துக்குப் புதுவடிவமளித்
தனர் (பீபிள்ஸ் 1990: 84). சேனநாயக்க கமத்தொழில்
அமைச்சராயிருந்தவேளையில், அவராற்றிய உரையொன்
றில் சிங்களவரை நம்பிக்கைக்குரிய பாதுகாவலர்களாக
புத்தரே நியமித்தாரென்று நினைவுகூர்ந்தார். "நாம் ஒரே
இரத்தமும், ஒரே தேசமுமாக இருக்கின்றோம்;. நாம்
தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள்" என்று கூறினார் (சிலோன்
டெய்லி நியுஸ், 17 ஏப்பிரல் 1939). இவ்வகையான உணர்ச்சி
வெளிப்பாடுகள் புதிய காலனித்துவ அபிலாசைகளுடன்
'சிங்கள தேசியவாதத்தைப் புகுத்துவதற்குப் பொறுப்பா
யிருந்தன' (மூர் 1985: 45).

சேனநாயக்கவின் குடியேற்றத் திட்டமானது, சந்தேகத்
திற்கிடமின்றி சிங்கள தேசியவாதத்தில் ஊறியிருந்ததன்
விளைவாக, தமிழருக்குத் தீவிரக் கவலையை அளிக்கின்ற
ஒரு விடயமாயிருந்தது. தமிழரின் எதிர்பார்ப்புகள் நியாய
மானவையாக இருப்பினுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி, அக்
காரணத்தினால் அத்திட்டம் இனங்களுக்கிடையில்
விரிசலை ஏற்படுத்தி இனப் பதற்றத்துக்கு ஒரு முக்கியக்
காரணியாகியது. சிங்களக் குடியேற்றங்களின் விரிவாக்க





மானது இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதி
களில் தமிழரின் பெரும்பான்மை அந்தஸ்தை அச்சுறுத்து
கின்றதெனத் தமிழ்த் தலைவர்கள் சோல்பரி ஆணைக்குழு
முன் கடும் கண்டனங்களைத் தெரிவித்தனர் (கே.எம். டி
சில்வா 1986: 125). சுதந்திரத்தின் பின்னர் தமிழரின் அச்சம்
கடுமையாக அதிகரித்ததன் விளைவாக இறுதியில் ஒரு
தனியரசுக்கான கோரிக்கை எழுந்தது (வில்சன் 1988: 93).

### சிங்கள ஆட்சிப் பிரதேசமாக ஏழு மாகாணங்களை ஒன்றாக்குதல்

மூன்று மாகாணங்களைச் சிங்கள மாகாணங்களாக
வெற்றிகரமாக ஒன்றாக்கியதன் பின்னர், மேலும் ஆட்சிப்
பிரதேச இணைப்புக்காக இரு தமிழ் மாகாணங்களின்
ஆட்சிப் பிரதேசத்தின்மீது சிங்களவரின் கவனம் திரும்
பியது. இலங்கையின் செவிவழிக் கதையான மகாவம்சத்தின்
சயாம் நாட்டுப் புதிய பதிப்புகள் வரலாற்று ரீதியாக முழுத்
தீவிற்கும் உரிமைகோரக்கூடியவர்கள் சிங்களவரேயெனக்
காட்டின. இந்த ஆவணம் உடனடியாகப் பாளி மொழி
யிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதைத் தொடர்ந்து,
சிங்களவர் தமது ஆட்சிப் பிரதேசக் கோரிக்கைகளை
புதுப்பிக்கப்பட்ட வீரியத்துடன் தொடர்வதற்கான முற்றி
லும் புதிய வாய்ப்பினை வழங்கியது.

கண்டி இராச்சியத்துக்கும் ஒல்லாந்தருக்கும் இடை
யில் காணப்பட்ட பிரதேச எல்லை நிர்ணயமும், மகா
வம்சத்தில் கூறப்பட்டவாறான வரலாறு சார்ந்த நம்பிக்கை
களும் சிங்களவரின் புதிய ஊடுருவல் முயற்சிக்கு அடிப்
படையாக அமைந்தன. அவர்களின் நம்பமுடியாத கோரிக்
கைகள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு மீள் எல்லை
நிர்ணயமும், இணைத்துக்கொள்ளுதல்களும் தொடர்ந்த
தன் விளைவாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின்
அரைப்பங்கிற்கும் அதிகமான ஆட்சிப் பிரதேசங்களை
உள்ளடக்கியதாக ஒன்பது மாகாணங்கள் உருவாக்கப்
பட்டன. வரண்ட கரையோர நீள்வரித்துண்டு நிலம்
மட்டுமே தமிழ்ப் பிரதேசங்களாக வகைப்படுத்துவதற்கு
விட்டுவைக்கப்பட்டது. ஆங்கிலேயரால் மேற்கொள்ளப்
பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் முழுமையாகத் தெற்கில்
குவிக்கப்பட்டதனால் வடக்கு கிழக்கில் தொடர்ச்சியாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்கள்தொகை குறைவடைந்தது. தமிழ் மாகாணங்களில் எப்பொழுதாகிலும் திருத்தப்படும் குளங்கள் மிகச் சிலருக்கு அங்கு குடியேற்ற வாய்ப்புகளை வழங்கியதைத் தவிர அவை வளர்ச்சி குறைந்தனவாகத் தொடர்ந்தன. 1833இல் கோல்புறூக் ஆணைக்குழு அறிக்கையின் விளைவாக உருவான முதல் ஐந்து மாகாணங்களின் எல்லை நிர்ணயத்தை உருவரைபடம் 3.2 காட்டுகின்றது (இத்தேசப் படம் அறிக்கையின் ஒரு பகுதியாகும்).

இப்பிரதேசங்களின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றுவதில் முன்னர் தோல்விகண்ட சிங்களவர், 1948இல் சுதந்திரத்தின் பின்னர், ஒற்றையாட்சி அரசும் பெரும்பான்மைப் பாராளுமன்ற சனநாயகமும் வழங்கிய வாய்ப்பினைப் பயன்படுத்தி, அதிகாரத்தை அடாவழியில் கைப்பற்றுவதில் வெற்றி கண்டதுடன், முழுத் தீவுக்குமான அவர்களின் சட்டவிரோதமானதும் போலியானதுமான உரிமையைத் திடப்படுத்துவதற்கு ஆட்சிப் பிரதேசங்களை இணைத்துக் கொள்கின்ற விடாப்பிடியான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தையும் வலிந்து செயற்படுத்தியதன் மூலம், ஐக்கிய இலங்கையென்ற கருத்துக்கு அழிவையும் ஏற்படுத்தினர்.

ஆட்சிப் பிரதேசங்கள் கண்டி இராச்சியத்தின்கீழ் இருந்தனவென்ற அடிப்படையிலும், முழு இலங்கையிலும் அவர்கள் 2500 ஆண்டுகளாகத் தழைத்தோங்கியவர்கள் என இப்போது பரப்பப்படும் கதைகளின் அடிப்படையிலும் ஏழு மாகாணங்களையும்[2] சிங்கள ஆட்சிப் பிரதேசமாக (உருவரைபடம் 3.3) ஒன்றாக்கியதன் பின்னர், சிங்களவர் எஞ்சியுள்ள தமிழ் ஆட்சிப் பிரதேசத்தையும் இணைத்துக்கொள்வதற்குப் புதிய தந்திரோபாயமொன்றைக் கைக்கொண்டனர். தொடர்ச்சியான பிரதேச ஆக்கிரமிப்பு நோக்கமானது, தற்போது இராணுவ ஆக்கிரமிப்பினூடாகவும், குடியேற்றங்களினூடாகவும் பிரதேசங்களை இணைத்துக்கொள்கின்ற செயல்முறையாக மாறியுள்ளது. தமிழ்ப் பிரதேசங்களை இணைத்துக் கொள்கின்ற சிங்களவரின் நிகழ்ச்சிநிரலும், தமிழர் அரசொன்றினைக் கோரக்கூடிய பாரம்பரியத் தாயகமாக (TTH) ஆட்சிப் பிரதேசம் எதனையும் உரிமை கொண்டாடக்கூடாது என்ற வாதமும் தான் அடிப்படைப் பிரச்சினையாகும்.








**வரைபடம் : 3.2 - 1833இல் பிரிட்டிஷாரால் உருவாக்கப்பட்ட ஐந்து மாகாணங்கள்**

Source: Based on the Article by R L Brohier, 'Territorial and Administrative Boundaries' in *Land Maps & Surveys*, Vol I., Cited from A.R. Arudpragasam, *The missing Pages of Sri Lankan History* 1996: 111.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






**வரைபடம் : 3.3**
**ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்ட சமயத்தில் அதன் எல்லைகள்**

Source: A R Arudpragasam, *The missing Pages of Sri Lankan History* 1996: 112





## அரசாங்கத்தின் குடியேற்றக் கொள்கையும், காணிக் குடியேற்றமும்

சிங்களவர் ஏழு மாகாணங்களினதும் ஆட்சிப் பிரதேசத்தைச் சிங்கள ஆட்சிப் பிரதேசமாக ஒன்றாக்குவதில் வெற்றி கண்டதைத் தொடர்ந்து, அரசாங்கங்களின் கவனம் எஞ்சிய இரு தமிழ் மாகாணங்களையும் இணைத்துக் கொள்வதன்மீது திரும்பியது. இச்செயல்முறை, இலங்கை ஆங்கிலேய ஆட்சியின்கீழ் இருந்தபோதே தொடங்கி விட்டது (உருவரைபடம் 3.4(1) மற்றும் 3.4(2)). உலர் வலயத்தில் விவசாயக் குடியேற்றத்தின் வரலாற்றைக் கோடிட்டுக் காட்டுதல் இந்த ஆய்வின் நோக்கமல்ல. மாறாக, இலங்கையில் அரசாங்க ஆதரவுடனான குடியேற்றம் தொடர்பான ஒட்டுமொத்தக் கொள்கையின் இயல்பையும் குறிக்கோளையும் ஆராய்ந்து பார்த்தலே இதன் நோக்கமாகும். சிங்கள விவசாயிகளை அவர்களின் சொந்தக் கிராமங்களிலிருந்து தொலைவாக உலர் வலயத்திலுள்ள தமிழர் பாரம்பரியத் தாயகத்தில் குடியமர்த்துவதற்கு, அரசாங்க ஆதரவுடனான விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. காலனித்துவக் காலப்பகுதியின்போது முடிக்குரிய ஆதனமென்று குறிக்கப்பட்ட பெரும் நிலப் பரப்புகள் ஆகக்கூடிய விலை கேட்பவருக்கு வழங்கப்பட்டன. ஆனால் 1930களில் தொடங்கி உலர் வலயத்திலுள்ள முடிக்குரிய காணிகள் இனங்காணப்பட்டு அவை விவசாயக் குடியேற்றவாசிகளின் நலன்களுக்காக அபிவிருத்தி செய்யப்பட்டன. ஒரு குடியேற்றத்தின் திட்டமிடல் கட்டத்தில், காணித் துண்டுகள் பிரித்து ஒதுக்கப்படுவதற்கு முன்னர் மண் ஆய்வுகளும் பொறியியல் நில அளவீடுகளும் நடத்தப்பட்டு, காணி அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களங்களின் ஒருங்கிணைந்த முயற்சிகளின் ஊடாகக் கால்வாய்களும் வீதிகளும் நிர்மாணிக்கப்பட்டன. குடியேற்றத் திட்டங்கள், கல்ஓயா திட்டம் போன்று, பெரும் ஆற்றுநீர்ப் பாசனத் திட்டங்களுடன் அல்லது கந்தளாய்க் குளம் போன்ற, பழைய நீர்ப்பாசனக் குளங்களின் புனரமைப்புடன் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களுடன் தொடர்புடையனவாயிருந்தன. எனினும் அவை எல்லாவற்றுக்கும் நீர்ப்பாசன வசதிகள் வழங்கப்பட்டன வென்று கூறுவதற்கில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## Sinhalese Colonization of Tamil Districts, 1881-1981




**வரைபடம் : 3.4(1) - சுதந்திரத்தின் பின்னர் தமிழர் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள்**

Source: Lee Lional, *Census of Ceylon 1881*, Colombo: Department of Census and Statistics; *Census of Ceylon 1953*, Colombo; and *Census of Population and Housing, Sri Lanka Primary Report No. 1* (1981) Colombo: Department of Census.





## Sinhalese Electorates Carved out of Eastern Province and Manal Aru and Maduru Oya Projects




**வரைபடம் : 3.4(2) - சுதந்திரத்தின் பின்னர் தமிழர் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள்**

Source: Lee Lional, *Census of Ceylon 1881*, Colombo: Department of Census and Statistics; *Census of Ceylon 1953*, Colombo; and *Census of Population and Housing, Sri Lanka Primary Report No. 1* (1981) Colombo: Department of Census.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உலர் வலயம் திறந்துவிடப்படுவதற்கான புதிய வாய்ப்பு, ஒரு விவசாயப் பின்னணியிலிருந்து வந்தவர்களான சிங்களத் தேசியவாதத்தின் புதிய தலைவர்களின் சிங்களத் தேசிய வாதத் கண்ணோட்டத்துடன் பின்னிப்பிணைந்திருந்தது. தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு-கிழக்கில் அரசாங்க அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டத்துடன் கூடிய காணிப் பங்கீட்டுத் திட்டங்களானது, தமிழர்களை அவர்களது பாரம்பரியத் தாயகத்தினுள்ளேயே ஒரு ஆட்சிப் பிரதேச உரிமைக்கான புதிய கோரிக்கையை முன்வைப்பதற்கு வழிவகுத்தது. தமிழ் மாகாணங்களினுள் நீர்ப்பாசனத் திட்டங்களை அபிவிருத்தி செய்தும், அவற்றில் பெருந்தொகையான சிங்களவர்களைக் குடியேற்றியும், வடக்கு-கிழக்கிலுள்ள அவர்களின் கிராமங்களிலிருந்து தமிழர்களை விரட்டிவிடுதலே திட்டமாயிருந்தது. சுதந்திரத்தின் பின்னர் இத்திட்டம் விரைவாக்கப்பட்டதன் விளைவாக, சுதந்திர இலங்கையில் தமிழ் - சிங்கள உறவில் பாரிய பிளவை ஏற்படுத்துகின்ற ஒரு பிரச்சினையாகத் தோற்றம்பெற்று, இறுதியில் ஈழம் என்கின்ற தனியரசுக்கான கோரிக்கையில் வந்து நின்றது.

சுதந்திரம் தொட்டு எவ்வித இடையூறுமின்றித் தொடரப்பட்ட இக்குடியேற்றங்கள், இலங்கை அரசியலில் மிகவும் சர்ச்சைக்குரிய விடயமாகத் தோற்றம் பெற்றன. காணிப் பங்கீட்டுத் திட்டத்தினைக் கடுமையாக எதிர்த்த சமஷ்டிக் கட்சி அதனை ஒரு பிரச்சினையாக்கியது. அதுவே பண்டாரநாயக்க அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைக்கான பிரதான விடயமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. 1956இல் தமிழ் மாகாணங்களினுள் சிங்களக் குடியேற்றத்தை நிறுத்துவதற்கான ஓர் உடன்படிக்கை எட்டப்பட்ட போதிலும், துரதிருஷ்டவசமாக அது நிறைவேற்றப்படாமல் கிழித்தெறியப்பட்டது.

தமிழரின் உக்கிரமான எதிர்ப்பானது அநேக அடிப்படைக் காரணங்களிலிருந்து வெளிப்படுகின்றது. முதலாவதாக, காணிப் பங்கீடு என்ற பெயரால் சிங்களக் குடியேற்றங்கள் தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான உரிமைகளைக் கடுமையாக மீறுகின்றன. இவ்வரலாற்று ரீதியான உரிமைகள், தமிழர் ஆட்சிக் காலங்களிலிருந்து காலனித்துவக் காலத்தினூடும், கிராமங்களின் மரபுவழியான உரிமை





களாக வடக்கிலும் கிழக்கிலுமுள்ள தமிழ் மக்களால் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டு வந்துள்ளன. அவர்களுக்கு யாழ்ப்பாணத்தின் தேசவழமைச் சட்டங்கள் (உள்ளூர்ப் பொதுச்சட்டங்கள்) என்ற வகையில் தவிர வேறு சட்டத் தொகுப்பொன்று ஒருபோதும் இருந்திராத போதிலும், இவ்வுரிமைகள் கிராமங்களால் கடைப்பிடிக்கப்பட்டதுடன், கிராமத் தலைவர்களாலும் நடைமுறைப் படுத்தப்பட்டன. தேசவழமைச் சட்டங்கள் ஒல்லாந்தர் காலத்திலிருந்து தொகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டன. காணிக் குடியேற்றங்கள் புதிய அபிவிருத்தியின் மூலம் அல்லது காடுகளை அழிப்பதன்மூலம் செய்யப்படுகின்றன என்ற வாதம், சிங்களவர் மத்தியில் காணிக் குடியேற்றங்களை முன்மொழிபவர்களினதும் ஆதரிப்பவர்களினதும் அறியாமையிலிருந்தும் சமூக உடைமை மாற்றத்திலிருந்தும் எழுகின்றது. வடக்கினுள் மக்களின் பொருளாதார வாழ்வின் ஓர் அங்கமாயிருந்த காட்டுப் பிரதேசம் மட்டுமன்றி கிழக்குச் சமூக மற்றும் பொருளாதார வாழ்வின் ஓர் அங்கமாயிருந்த கிழக்கு மாகாணத்தின் கணிசமான பிரதேசங்கள் வேடர் ஆட்சிப் பிரதேசமாக ஒப்புக்கொள்ளப்பட்டன. அவர்கள் தமது வாழ்வுக்குக் காட்டு வளங்களில் தங்கியிருந்ததுடன், வாழ்வாதாரத்துக்கான ஒரு வழிமுறையாக அவ்வளங்களில் வர்த்தகமும் செய்துவந்தனர்.

கொள்கையளவில், அரசாங்க ஆதரவுடனான உலர் வலயப் பிரதேசக் குடியேற்றத்தின் பிரதான குறிக்கோள்கள், சனத்தொகைச் செறிவு கூடிய பிரதேசங்களில் சனத்தொகை நெருக்கடியைக் குறைத்தலும், உள்நாட்டு உணவுற்பத்தியை அதிகரித்தலுமாகும். சிங்களவர் செறிந்து வாழ்கின்ற ஈர வலயத்திலும், அதேபோன்று, பல நூற்றாண்டுகளாகக் கணிசமான எண்ணிக்கையினரான தமிழர் காணியற்றவர்களாயுள்ள உலர் வலய மாவட்டங்கள் சிலவற்றிலும், மட்டுப்படுத்திய விவசாயக் காணி மீதான சனத்தொகை அழுத்தத்தைத் தணிக்கவேண்டிய அவசியமிருந்தது. இக்காணியில்லா நிலைக்குக் காரணம் உயர்ந்த சனத்தொகை அடர்த்தியும் விவசாயத்தை விஸ்தரிப்பதற்கு நீர் இல்லாமையுமாகும். சனத்தொகை அடர்த்திமிக்க உலர் வலய மாவட்டங்களில் உள்ள மக்கள் நீர் இல்லாமையினாலும், தொழிலுக்கான வேறு வழிமுறைகள் இல்லாமையினாலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடுமையான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இருப்பினும் நீர் மற்றும் காணி வளங்களின் ஒதுக்கீட்டில் ஈரவலய விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

1930களில் அரசாங்க உதவியுடனான காணிக் குடியேற்றம் ஆரம்பமாகியபோது, ஏனைய உலர்வலய மாவட்டங்களின் விவசாயிகளுடன் ஒப்பிடுகையில், யாழ்ப்பாண மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் தமிழரில் ஒரு பெரும் சதவீதத்தினர் தொழிலற்றவர்களாகவும் காணியற்றவர்களாகவும் இருந்தனரென்பதற்கு ஆவணச் சான்றுகள் உள்ளன. எனினும் அரசாங்கம் யாழ்ப்பாண விவசாயிகளின் பிரச்சினைகளைத் தணிக்கும்பொருட்டு, வன்னியை அபிவிருத்தி செய்வதில் எவ்வித அவசரமும் காட்டவில்லை (ஃபார்மர் 1957: 76).

அரசாங்க உதவியுடனான குடியேற்றத்தின் பிரதான குறிக்கோள்கள் விவசாயிகளின் நிலைமைகளை மேம்படுத்தலும் உள்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரித்தலுமாயிருந்தபோதிலும், பெருந்தொகையான சிங்களக் குடும்பங்களை ஈர வலயத்திலிருந்து உலர் வலயத்துக்கு இடம் பெயர்க்கின்ற கொள்கையை வலிந்து பின்பற்றியமை, அரசாங்கத்துக்குத் தொடக்கத்திலிருந்தே வேறு உள்நோக்கங்கள் இருந்தனவென்பதை வெளிப்படையாகக் காட்டியது. 1930களில் புதிதாக நியமிக்கப்பட்ட இலங்கையைச் சார்ந்த அமைச்சர்கள் சிலர், உலர் வலயத்தின் திட்டமிட்டக் குடியேற்றத்தின் ஊடாகவும், நீர்ப்பாசன வேலைகளின் புனரமைப்பு வேலைகள் மூலமும், ரஜரட்டையின் (கீழ்நாடு) சிங்கள நாகரிகத்தின் பெருமைகளை மீண்டும் உருவாக்க இருப்பதாகக் கூறியதன் வாயிலாக, இந்நோக்கங்களைத் தெளிவாக வெளிப்படுத்தினர்.

இக்குடியேற்றக் கருத்திட்டங்களால் காட்டு வளங்களும் உயிரினங்களின் இயற்கையான உறைவிடமும் அழிக்கப்படுதலும், அதன் உயிர்ச் சூழலியல் விளைவுகளும் ஒருபோதும் ஒரு பொருட்டாகவே கருதப்படவில்லை. சிங்கள அரசாங்கத்திற்குத் தேவைப்பட்டதெல்லாம் நீர் வழிந்தோடுவதற்கான பொறியியற் சாத்தியம் மட்டுமே என்பதனால் அது அவற்றைத் தனது ஆதாயத்துக்குப் பயன்படுத்திக்கொள்வதில் தீவிரம் காட்டியது. நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாக கமத்தொழில் முறை





களை அறிமுகப்படுத்துவதற்கு வடக்கிலும் கிழக்கிலும் காட்டுவளம் அகற்றப்படுவதன் பின்விளைவுகளில் எவ்விதக் கவனமும் செலுத்தப்படவில்லை.

1930களுக்கு முந்திய காலனித்துவக் காலங்களில் மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், அனுராதபுரம், பொலனறுவை, புத்தளம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் பண்டைய நீர்ப்பாசனக் கட்டுமானங்களைப் புனரமைத்தலும் மீளக் குடியமர்த்தலும் மேற்கொள்ளப்பட்டது இருந்தபோதிலும், ஈர வலயத்திலிருந்து தமிழர் தமது பாரம்பரியத் தாயகமாகக் கருதுகின்ற உலர் வலய மாவட்டங்களுக்கு விவசாயிகளை இடம்மாற்றுகின்ற பாரிய முயற்சிகள் பிந்தியக் காலம்வரை இடம்பெறவில்லை. தப்போவ (Tabbowa) மற்றும் மலாயர் குடியேற்றங்கள் தவிர 1931இல் உலர் வலயக் குடியேற்றங்கள் இடம்பெறவில்லை. ஆனால், 1953ஆம் ஆண்டிற்கிடையில் நீர்ப்பற்றாக்குறையான பிராந்தியத்தில் இருபத்தேழு விவசாயக் குடியேற்றங்கள் தாபிக்கப்பட்டிருந்தன (பன்சி 1971: 67). யாழ்ப்பாண மாவட்டத்தில் கிளிநொச்சித் தேர்தல் தொகுதியின் இரணைமடுத் திட்டமும், மட்டக்களப்பு மாவட்டத்தில் உன்னிச்சைக் குடியேற்றமும் மட்டுமே தமிழர் ஆதிக்கஞ் செலுத்திய மாவட்டங்களில் தொழிலில்லாப் பிரச்சினையையும் சன நெருக்கடியையும் ஒரு சிறு அளவிலேனும் குறைப்பதற்கு உதவிய குடியேற்றத் திட்டங்களாகும். இவை முறையே 1936இலும் 1950இலும் தாபிக்கப்பட்டன (அட்டவணை 3.2). தொடக்கத்திலிருந்தே கிழக்கு மாகாணத்தில் குடியேற்றத் திட்டங்களானது தமிழ் மாவட்டங்களில் சனநெருக்கடியையும் தொழிலில்லாப் பிரச்சினையையும் தணிப்பதை நோக்கமாகக்கொண்டு திட்டமிடப்படவில்லை. மாறாக, நிலப்பங்கீட்டில் தமிழரை விடப் பெருமளவுக்குச் சிங்களவர்களுக்கே காணிகள் வழங்கப்பட்டதனால், அவை மாகாணத்தின் இன விகிதாசாரத்தினை மாற்றுகின்ற நோக்கத்தைக் கொண்டிருந்தன. 1950களின் தொடக்கத்தில் தாபிக்கப்பட்ட அல்லை, கந்தளாய் மற்றும் கல்ஓயா ஆகிய குடியேற்றங்களில், குடியமர்த்துவதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை அந்த மாவட்டத்தைச் சார்ந்த தமிழ் விவசாயிகளின் எண்ணிக்கையை விஞ்சியதிலிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இது தெளிவாக விளங்குகின்றது. 1931க்கும் 1953க்கும் இடையில் 16,532 பேருக்குப் பிரித்து வழங்கப்பட்ட 47,931 ஹெக்டயர் காணியில் 17.4 சதவீதம் மட்டும்தான் உள்ளூர் வாசிகளான தமிழருக்குக் கிடைத்தது (ஃபார்மர் 1957: 209).

அட்டவணை 3.2

மட்டக்களப்பு மாவட்ட இனக் கூட்டமைவில் மாற்றங்கள் 1827 – 1953

| ஆண்டு | சிங்களவர் | % | தமிழர் | % | முஸ்லிம்கள் | % |
|---|---|---|---|---|---|---|
| 1827 | 100 | 0.3 | 19,095 | 69.5 | 8,288 | 30.2 |
| 1881 | 5,012 | 4.8 | 61,014 | 57.6 | 37,255 | 35.4 |
| 1891 | 6,403 | 5.2 | 69,584 | 56.7 | 44,780 | 36.5 |
| 1901 | 7,575 | 5.2 | 79,857 | 55.0 | 54,190 | 37.3 |
| 1911 | 5,771 | 3.7 | 83,948 | 54.5 | 60,695 | 39.4 |
| 1921 | 7,243 | 4.6 | 84,665 | 53.3 | 63,146 | 39.8 |
| 1946 | 11,850 | 5.8 | 102,264 | 50.3 | 85,805 | 42.3 |
| 1953 | 31,174 | 11.5 | 130,381 | 48.2 | 106,706 | 39.4 |
| அதிகரிப்பு | | | | | | |
| 1827-1953 | 31,074 | 31,074.0 | 111,286 | 583.0 | 98,418 | 1187.0 |

மூலம் : Public Record Office (PRO), 'Population of Ceylon' Ceylon Blue Books (Cc 59/82, 132, 155 and 159) for 1827 – 1943-London: PRO and Department of Census and Statistics (DCS), Population Census of Sri Lanka 1927 – 1953, Colombo: DCS.

1987இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினூடாக இணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கிழக்கு மாகாணம் முன்னர் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இரு மாவட்டங்களைக் கொண்டிருந்தது. மட்டக்களப்பு மாவட்டமானது 1964இல் மட்டக்களப்பு மாவட்டமாகவும் அம்பாறை மாவட்டமாகவும் பிரிக்கப்பட்டது. இப்புதிய பிரிவில் தமிழர் ஒரு சிறுபான்மையினராகிய போதிலும் இப் பிரதேசம் தமிழர் தாயகத்திற்குச் சொந்தமான கணிசமான செழிப்பான காணிகளையும் காரைதீவு மற்றும் திருக்கோவில் போன்ற அதன் முக்கியமான சில கலாச்சார மற்றும் சமய மையங்களையும் கொண்டிருந்தது. (அட்டவணை 3.3)





அட்டவணை 3.3

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மவட்டங்களில் இனக்கூட்டமைவு 1963 – 1981

| ஆண்டு | சிங்களவர் | % | தமிழர் | % | முஸ்லிம்கள் | % |
|---|---|---|---|---|---|---|
| 1963 | 68,740 | 16.9 | 192,070 | 47.1 | 143,190 | 35.1 |
| 1971 | 93,828 | 17.7 | 243,817 | 46.1 | 188,643 | 35.6 |
| 1981 | 157,017 | 21.8 | 315,941 | 43.9 | 243,798 | 33.5 |
| அதிகரிப்பு | | | | | | |
| 1963 - 1981 | 88,227 | 128.0 | 123,871 | 65.0 | 100,608 | 70.0 |

மூலம் : குடிசன மதிப்பீடு, புள்ளிவிவரத் திணைக்களம், சனத் தொகைப் புள்ளிவிவரம் 1963 - 1981 இலங்கை : DCS வெளியீடு

இலங்கையின் முதலாவது பிரதமரான டி.எஸ்.சேனநாயக்க, காலனித்துவ அரசாங்கத்தில் நீர்ப்பாசன அமைச்சராக இருந்தபோது, வகுத்த திட்டத்தின் ஊடாக முதலாவது காணிக் குடியேற்ற நிகழ்ச்சித் திட்டம் கல்ஓயாவில் ஆரம்பிக்கப்பட்டது. திருகோணமலை மாவட்டத்திலுள்ள அல்லை மற்றும் கந்தளாய் நீர்ப் பாசனத் திட்டங்கள் கிழக்கின் ஏனைய இருபெரும் நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆகும். எவ்வாறாயினும், இலங்கையின் மக்கள் என்ற வகையில் ஒவ்வொருவருக்கும் எங்கேனும் குடியமர்வதற்கு உரிமையுண்டென்பதும், வறிய விவசாயிகளுக்குப் பயிர்ச் செய்கை செய்வதற்குக் காணி தேவைப்பட்டதென்பதும் தான் இக்குடியேற்றங்களை நியாயப்படுத்துவதற்கு முன் வைக்கப்பட்ட அரசியல் வாதங்களாகும். ஆனால் உண்மையான நிகழ்ச்சி நிரல் வேறானதாயிருந்தது. அதாவது, வரலாற்று ரீதியான தமிழர் ஆட்சிப் பிரதேச உரிமைகளை மறுத்தலும் அவற்றைச் சிங்கள ஆட்சிப் பிரதேசங்களாக இணைத்துக்கொள்ளுதலுமாக இருந்தது.

## கல்ஓயா குடியேற்றத் திட்டம்

டி.எஸ்.சேனநாயக்க தொடக்கிவைத்த அரச ஆதரவுடனான பல்வேறு சிங்களக் குடியேற்றத் திட்டங்களில் ஒன்றுதான் கல்ஓயா குடியேற்றத்திட்டமாகும்.[3] தமிழர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாரம்பரியத் தாயகங்களில் சிங்களக் குடியேற்றங்களுக்கான மதகுகளைத் திறந்துவிடுவதற்குப் பெரிதும் செயல்முறையில் பொறுப்பாயிருந்த தலையாய தந்திரசாலி அவர்தான். திருகோணமலை மாவட்டத்தில் அல்லை - கந்தளாய் மற்றும் யான்ஓயா குடியேற்றத் திட்டங்கள், மட்டக்களப்பு மாவட்டத்தில் மதுருஓயா, முல்லைத்தீவு மாவட்டத்தில் வெலிஓயா[4] போன்ற பல திட்டங்களை இதற்கு உதாரணங்களாகக் கூறலாம். அரச உதவியுடனும் நிதியுடனும் மேற்கொள்ளப்பட்ட இச்சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மக்கட் பரம்பலின் விகிதாச்சாரத்தைக் கடுமையாக மாற்றியுள்ளன (அட்டவணை 3.4). இத்திட்டங்கள் தெற்கிலுள்ள காணியற்ற சிங்கள விவசாயிகளுக்குக் காணிகளை வழங்கும் நோக்குடையனவென்று சொல்லப்பட்டபோதிலும், மலைநாட்டுத் தமிழர் ஒருவருக்கேனும், வடக்கிலும் கிழக்கிலும் எக்காலத்திலேனும் எந்தக் காணியும் வழங்கப்படவில்லை.

அட்டவணை 3.4

அம்பாறை மாவட்டம் இன விகித்தாச்சார அமைவில் மாற்றங்கள் 1911–1981

| ஆண்டு | சிங்களவர் | % | தமிழர் | % | முஸ்லிம்கள் | % |
|---|---|---|---|---|---|---|
| 1911 | 4,702 | 7.0 | 24,733 | 37.0 | 36,843 | 55.0 |
| 1921 | 7,285 | 10.3 | 25,207 | 35.8 | 37,901 | 53.8 |
| 1953 | 26,450 | 19.5 | 39,985 | 29.0 | 69,376 | 51.0 |
| 1963 | 62,160 | 29.0 | 49,220 | 23.5 | 97,990 | 45.6 |
| 1971 | 82,280 | 30.0 | 60,519 | 22.0 | 126,365 | 47.0 |
| 1981 | 146,371 | 38.0 | 78,315 | 20.0 | 126,365 | 47.0 |
| அதிகரிப்பு | | | | | | |
| 1981 | 141,669 | 3012.0 | 53,582 | 216.0 | 124,638 | 338.0 |

மூலம் : PRO, 'Population of Ceylon' Ceylon Blue Books (Cc 59/82, 132, 155 and 159) for 1911 – 1921, London: PRO Publication and DCS, Population Census of Ceylon for the period of 1953 – 1981, Sri Lanka: DCS Publications.





இலங்கைக்குத் தன்னாட்சி உரிமையுடைய குடியேற்ற நிலை நாடு (Dominion Status) என்ற அந்தஸ்தை அளிக்கின்ற சுதந்திரச் சட்டத்தின் மீதான மை காய்வதற்கிடையில், ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட இந்திய வம்சாவளித் தமிழரை நாடற்றவர்களாக்கிய, 1948இன் 18ஆம் இலக்க இலங்கைப் பிரசாவுரிமைச் சட்டத்தை டி.எஸ்.சேனநாயக்க நிறைவேற்றினார். வாக்குரிமை பற்றிய 1946 சட்ட வாக்கசபைக் கட்டளைகளுக்கு ஒரு திருத்தமாக 1949இல் 48ஆம் இலக்க இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) திருத்தச் சட்டத்தை ஆக்கியதன்மூலம், 1947இல் நடத்தப்பட்ட பொதுத் தேர்தலில் 7 உறுப்பினர்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பிய மலைநாட்டுத் தமிழர் நாடற்றவர்களாகவும், வாக்குரிமையற்றவர்களாகவும் ஆக்கப்பட்டனர். அதன் விளைவாக அடுத்துவந்த பாராளுமன்றங்களில் தமிழரின் தேர்தல் பலம் (சுதந்திரம் பெற்றவேளையிலிருந்த 21.66 சதவீதத்திலிருந்து 11.92 சதவீதமாக ஏறக்குறைய அரைப் பங்கினால்) குறைக்கப்பட்டது. மறுபுறத்தில் பாராளுமன்றத்தில் 1948இல் 71.60 சதவீதமாகவிருந்த சிங்களவரின் பிரதிநிதித்துவம் 1950இல் 80.78 சதவீதமாக உயர்ந்தது.

அதேயாண்டில் டி.எஸ்.சேனநாயக்க அரசாங்கம் 51ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் கல்ஓயா அபிவிருத்திச் சபையைத் தாபித்தார். அது பிரதமர் சேனநாயக்கவினால் 1949 ஆகஸ்ட் 28ஆம் தேதியன்று இங்கினியாகலையில் உத்தியோகபூர்வமாகத் தொடங்கி வைக்கப்பட்டது. கல்ஓயா ஆற்றுநீரைத் திசைதிருப்புவதற்காக இங்கினியா கலையில் அணையொன்று கட்டப்பட்டது. முழு இலங்கையிலும் மனிதனால் ஆக்கப்பட்ட மிகப்பெரிய குளமான இந்நீர்த் தேக்கம், சேனநாயக்க சமுத்திரம் எனப் பொருத்த மான முறையில் பெயரிடப்பட்டது. கல்ஓயா அபிவிருத்திச் சபை, உட்கட்டமைப்புக்களை நிர்மாணிப்பதற்கும் குடியேற்றவாசிகளைக் குடியமர்த்துவதற்கும், மலைக்க வைக்கும் 67.2 மில்லியன் அமெரிக்க டொலரைச் செல விட்டது (விஜே 1985: 15).

1,20,000 ஏக்கரை உள்ளடக்கியதான கல்ஓயாத் திட்டத்தில் ஒவ்வொன்றும் 150 குடும்பங்களைக் கொண்ட மொத்தம் 40 குடியேற்றங்கள் தாபிக்கப்பட்டன. தனி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யொரு குடும்பத்திற்கு வசிப்பதற்கு ஒரு வீட்டுடன் 3 ஏக்கர் நெற்காணியும் 2 ஏக்கர் மேட்டுக் காணியும் கொடுக்கப் பட்டது. திட்டத்தின் முதலாவது கட்டத்தில் இக்குடி யேற்றங்களில் 20,000 சிங்களவர் குடியமர்த்தப்பட்டனர். ஆறு குடியேற்றங்கள் தமிழருக்கு ஒதுக்கப்பட்ட போதிலும், 1956 யூன் 5ஆந் தேதியன்று வெடித்த இனக்கலவரங்களின் போது அவர்கள் அங்கிருந்து விரட்டப்பட்டனர். அனேக தமிழர் சூறையாடுகின்ற சிங்களக் காடையர்களினால் கொல்லப்பட்டனர் அல்லது ஊனமாக்கப்பட்டனர். தமது வீடுகளுக்குத் திரும்பிவந்த தமிழர் 1958 இனக்கலவரங்களின் போது மீண்டும் தாக்கப்பட்டனர். இன்று இந்த ஆறு குடியேற்றங்களிலும் சிங்களவர்களே குடியிருக்கின்றனர் (விஜே 1985: 16).

1990இல் பொத்துவிலுக்கு அருகில் லகுகலையில் வசித்த இருபத்தொன்பது தமிழர், சிங்களவரால் கொல்லப் பட்டு அவர்களின் வீடுகள் அழிக்கப்பட்டன. மேலும் 314 தமிழ்க் குடும்பங்கள் லகுகலையிலிருந்து விரட்டப்பட்டு அவர்கள் இப்போது அடுத்துள்ள தமிழ்க் கிராமங்களான ஆலையடிவேம்பு, காரைத்தீவு, விநாயகபுரம் ஆகியவற்றில் அகதிகளாக வாழ்கின்றனர். தமிழருக்குச் சொந்தமான 1,200 ஏக்கர் செய்கைபண்ணக்கூடிய காணி இராணுவத் தின் உதவியுடன் சிங்களவரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

1959இல் நியமிக்கப்பட்ட எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் பரிந்துரையின்பேரில் 1960ஆம் ஆண்டளவில் சிங்களக் குடியேற்றவாசிகளுக்காக அம்பாறை என்றழைக்கப் படும் (இப்போது திகாமடுல்ல) முற்றிலும் புதிய தேர்தல் தொகுதியொன்று பிரித்து உருவாக்கப்பட்டது. 1961 சனவரி 10ஆம் தேதியன்று அப்போதிருந்த அரசாங்கம் மட்டக் களப்பு மாவட்டத்திலிருந்து அம்பாறை என்றழைக்கப்படும் ஒரு புதிய நிர்வாக மாவட்டத்தை உருவாக்கியதைத் தொடர்ந்து, சிங்களக் குடியேற்றங்களின் வேகம் கடுமை யாக அதிகரித்தது (விஜே 1985: 16). 1911இல் பிரிக்கப்படாத மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களவரின் சனத்தொகை 4,702 ஆக மட்டுமே இருந்தது. 1921இல் அது 7,243 ஆக அதி கரித்தது. ஆனால் கல்ஓயாத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், அட்டவணை 3.4இல் உள்ள தரவுகள் காட்டுகின்ற





வாறு, சிங்களச் சனத்தொகை வியக்கத்தக்க முறையில் விரைவான முன்னேற்றத்துடன் அதிகரிக்கத் தொடங்கியது.

## திருகோணமலை மாவட்டக் குடியேற்றம்

திருகோணமலை மாவட்டத்தில் அல்லை குடியேற்றத் திட்டத்தின் கீழ் 65 சதவீத ஒதுக்கீடுகள் சிங்களவருக்கும், 35 சதவீதம் முஸ்லிம்களுக்கும் வழங்கப்பட்டன. கந்தளாய் குடியேற்றத் திட்டத்தின் கீழ் உள்ளெடுப்பு 77 சதவீதம் சிங்களவராகவும், 23 சதவீதம் தமிழ் பேசுவோராகவும் இருந்தது. மொரவெவ (தமிழில் முதலிக்குளம்) திட்டத்தின் கீழ் தொடக்கத்தில் ஒதுக்கீடுகள் விகிதாச்சார அடிப்படை யில் செய்யப்பட்டபோதிலும், பின்னர் சிங்களவரால் தமிழ்க் குடியேற்றவாசிகள்மீது கிரமமான முறையில் மேற் கொள்ளப்பட்ட வன்செயல்கள் அவர்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு நிர்ப்பந்தித்தன. இன்று அதுவொரு 100 சதவீத சிங்களக் குடியேற்றமாக உள்ளது (விஜே 1985:13).

1972இல் நொச்சிக்குளம் என்பது சிங்களத்தில் நொச்சி யாகம என மறுபெயரிடப்பட்டு, கப்பல்துறையிலும் பாலம் பட்டாறிலும் வாழ்ந்த தமிழரிடமிருந்து பலவந்தமாகச் சுவீகரிக்கப்பட்ட 5,000 ஏக்கர் காணியில் சிங்களவர் குடிய மர்த்தப்பட்டனர். இத்திட்டத்துக்குப் பின்னாலிருந்த மூளை சாலி அனுராதபுர மாவட்டத்துக்கான அப்போதைய ஸ்ரீ.ல.சு.கட்சி அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினரு மான கே.பி.இரத்நாயக்கவேயன்றி வேறு எவருமில்லை. 1973இல் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியின் போது திருகோணமலை மாவட்டத்தில் 10,738 சிங்களக் குடும்பங்கள் சட்டவிரோதமாகக் குடியமர்த்தப்பட்டன (விஜே1985:13).

குச்சவெளி, புல்மோட்டை, கும்புறுப்பிட்டி, திரியாய், தென்னைமரவாடி ஆகிய தமிழ்க் கரையோரக் கிராமங்கள் நெடுகிலும் சிங்களக் குடியேற்றவாசிகள் குடியமர்த்தப் பட்டனர். எடுத்துக்காட்டாக 1983இல் நூற்றுக்கணக்கான சிங்களவர் புல்மோட்டை கமத்தொழில் அபிவிருத்திச் சங்கத்துக்கு அடுத்துள்ள காணியில் சட்டவிரோதமாக அத்துமீறிப் பிரவேசித்துக் குடியமர்ந்தனர். 1984 டிசெம்பர் 2ஆம் தேதியன்று இச்சிங்களக் குடியேற்றவாசிகள் புல்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மோட்டைக்கு வடக்கே அமைந்துள்ள தென்னைமரவாடிக் கிராமத்தைத் தாக்கித் தமிழருக்குச் சொந்தமான 165 வீடுகளையும் 7 கடைகளையும் எரித்தனர். இதன்விளைவாக 147 குடும்பங்களைச் சார்ந்த 749 தமிழர் இடம்பெயர்ந்து செல்ல நேரிட்டது. அவர்கள் அடுத்துள்ள கிராமங்களில் அகதிகளாக வாழ்வதற்கு வகைதேட நிர்ப்பந்திக்கப்பட்டனர் (விஜே 1985: 14).

அறுபதுகளிலும் எழுபதுகளிலும் திருகோணமலை நகரிலும் அதனைச் சுற்றியும் அனேக சிங்களக் கிராமங்கள் முளைத்தன. சிறிமாபுர, அபயபுர, மிகிந்தபுர மற்றும் பத்திஸ்புர என்பவை பெரும்பாலும் தமிழரை விரட்டியதன் பின்னர் உருவான சிங்களக் கிராமங்களிற் சில. 1984இல் சீனன்குடாவிலும் கவதிக்குடாவிலும் வாழ்ந்த தமிழர்கள் ஆயுதப் படைகளின் உதவியுடன் அடியோடு விரட்டப்பட்டு, அவர்களின் இடங்களைச் சிங்களவர் ஆக்கிரமித்தனர்.

1998 ஒக்ரோபரில், திருகோணமலை நகரிலிருந்து 15 மைல் தொலைவிலுள்ள ஒரு கிராமமான லிங்கநகரில் வாழ்ந்த 132 தமிழ்க் குடும்பங்கள் அருகிலிருந்த சிங்கள இராணுவ முகாமை விஸ்தரிக்கின்றசாக்கில் இராணுவத்தால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். அதற்கு முன்னர் 1996 செப்ரெம்பர் தொடக்கம் முகாமை நிறுவுவதற்காக, 47 தமிழ்க் குடும்பங்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டிருந்தன. 1980களின் தொடக்கம் வரை சிங்களக் குடியேற்றத்துக்காக இலக்குவைக்கப்பட்ட பிரதேசங்கள் இனக் கலப்பினைக்கொண்ட தமிழ்ப் பிரதேசங்களுக்கு வரையறுக்கப்பட்டிருந்தன. வெளிப்படையான காரணங்களின் பொருட்டு இக்கொள்கை பின்னர் ஆழப் புதைக்கப்பட்டதைத் தொடர்ந்து சிங்களக் குடியேற்றங்கள் முற்று முழுதாகத் தமிழர் குடியிருந்த பிரதேசங்களில் தாபிக்கப்படலாயின.

1948ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த நாள் தொடக்கம் திருகோணமலை மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட அரசாங்க அதிபர்களில் ஒருவர்கூட தமிழர் இல்லை. தடைகள் ஏதுமின்றித் துரித சிங்களக் குடியேற்றம் சீராகச் செயற்





படுத்தப்படுதலை உறுதிப்படுத்தும்பொருட்டு மாவட்டக் காணி உத்தியோகத்தர் பதவிகளும் சிங்களவரால் நிரப்பப்பட்டன. அட்டவணை 3.5 மற்றும் உருவரைபடம் 3.5 கடந்த ஆண்டுகளில் சிங்களச் சனத்தொகையின் சடுதியான அதிகரிப்பைக் காட்டுகின்றன.

அட்டவணை 3.5

**திருகோணமலை மாவட்ட இன விகித்தாச்சாரக் கூட்டமைவில் மாற்றங்கள் 1827–1981**

| ஆண்டு | சிங்களவர் | % | தமிழர் | % | முஸிம்கள் | % |
|---|---|---|---|---|---|---|
| 1827 | 250 | 1.3 | 15,663 | 81.8 | 3,245 | 16.9 |
| 1881 | 935 | 4.2 | 14,394 | 64.8 | 5,746 | 25.9 |
| 1891 | 1,109 | 4.3 | 17,117 | 66.4 | 6,426 | 25.0 |
| 1901 | 1,203 | 4.2 | 17,069 | 60.0 | 8,258 | 29.0 |
| 1911 | 1,138 | 3.8 | 17,233 | 57.9 | 9,714 | 32.6 |
| 1921 | 1,501 | 4.4 | 18,586 | 54.4 | 12,846 | 37.7 |
| 1946 | 11,606 | 15.3 | 33,795 | 44.5 | 23,219 | 30.6 |
| 1953 | 15,296 | 18.2 | 37,517 | 44.7 | 28,616 | 24.1 |
| 1963 | 40,950 | 29.6 | 54,050 | 39.1 | 42,560 | 30.8 |
| 1971 | 54,744 | 29.1 | 71,749 | 38.1 | 59,924 | 31.8 |
| 1981 | 86,341 | 33.6 | 93,510 | 36.4 | 74,403 | 29.0 |
| அதிகரிப்பு | | | | | | |
| 1881-1981 | 85,406 | 9134.0 | 79,216 | 550.0 | 68,657 | 1194.0 |

மூலம் : PRO, 'Population of Ceylon' Ceylon Blue Books (Cc 59/82, 132, 155 and 159) for 1827 – 1921, London: PRO Publication and DCS, Population Census of Ceylon for the period of 1946 – 1981, Sri Lanka: DCS Publications.

திருகோணமலை மாவட்டத்தின் பரப்பு - 2,618.2 சதுர கி.மீ,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






**வரைபடம் : 3.5 - தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள்**

Source: Lee, Lional, Census of Ceylon, 1881, Table 4,Colombo , 1982, Depatment of Census and Statistics; Census of Ceylon.1953, Colombo, and Census of Population and Housing 1953; Sri Lanka Preliminary Report No.1, Colombo 1981





1881இல் சிங்களச் சனத்தொகை வெறும் 4.2 சதவீதமாக இருந்தபோதிலும் 1981இல் அது மலைக்கத்தக்க 33.6 சதவீதமாக அதிகரித்ததுடன், திருகோணமலை மாவட்டத்தின் மொத்தச் சனத் தொகையின் மூன்றிலொரு பங்காகவும் அமைந்தது (அட்டவணை 3.5). 1881 - 1981 காலப் பகுதிக்கிடையில் கிழக்கு மாகாணம் முழுவதற்குமான மக்கள் பரம்பலில் மாற்றங்கள் கீழே அட்டவணை 3.6இல் காட்டப்பட்டுள்ளன.

### அட்டவணை 3.6

**கிழக்கு மாகாண இன விகித்தாச்சாரக் கூட்டமைவில் மாற்றங்கள் 1827–1981**

| ஆண்டு | சிங்களவர் | % | தமிழர் | % | முஸ்லிம்கள் | % |
|---|---|---|---|---|---|---|
| 1827 | 250 | 1.3 | 34,758 | 75.65 | 11,533 | 23.56 |
| 1881 | 5,947 | 4.5 | 75,408 | 61.35 | 43,001 | 30.65 |
| 1891 | 7,512 | 4.75 | 87,701 | 61.55 | 51,206 | 30.75 |
| 1901 | 8,778 | 4.7 | 96,296 | 57.5 | 62,448 | 33.15 |
| 1911 | 6,909 | 3.75 | 101,181 | 56.2 | 70,409 | 36.0 |
| 1921 | 8,744 | 4.5 | 103,551 | 53.5 | 75,992 | 39.4 |
| 1946 | 23,456 | 8.4 | 146,059 | 52.3 | 109,024 | 39.1 |
| 1953 | 46,470 | 13.1 | 167,898 | 47.3 | 135,322 | 38.1 |
| 1963 | 109,690 | 20.1 | 246,120 | 45.1 | 185,750 | 34.0 |
| 1971 | 148,572 | 20.7 | 315,560 | 43.9 | 248,567 | 34.6 |
| 1981 | 243,358 | 24.9 | 409,451 | 41.9 | 315,201 | 32.2 |
| அதிகரிப்பு | | | | | | |
| 1881-1981 | 237,411 | 3592.0 | 334,043 | 443.0 | 272,300 | 633.0 |

மூலம் : PRO, 'Population of Ceylon' Ceylon Blue Books (Cc 59/82, 132, 155 and 159) for 1827 – 1921, London: PRO Publication and DCS, Population Census of Ceylon for the period of 1946 – 1981, Sri Lanka: DCS Publications.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 1981இன் பின்னர் சனத்தொகை மதிப்பீடு நடத்தப்படவில்லை. யுத்த நிலைமைகளினதும் இராணுவப் பயங்கரவாதத்தினதும் கீழ், கிழக்கு மாகாணத்தில் விடாப்பிடியாகத் தொடரப் பட்ட சிங்களக் குடியேற்றங்களின் முழுத்தாக்கம் இத் தொகை மதிப்பீடு பூர்த்தியாக்கப்பட்டதன் பின்னர் வெளிப்படுத்தப்படும்.

## வவுனியா மாவட்டக் குடியேற்றம்

வவுனியா மாவட்டத்தில் பதவிய[5] குடியேற்றத் திட்டத் தின்கீழ் சிங்களவர் வந்து குவிந்ததன் நிமித்தம் அரசாங்கம் அப்போதிருந்த வவுனியா தெற்கை இரு கூறுகளாகப் பிரிப்பதன்மூலம் வவுனியா தெற்கு என்றழைக்கப்படும் ஒரு புதிய உதவி அரசாங்க அதிபர் (AGA) பிரிவை உரு வாக்கியது. இப்புதிய பிரிவில், முழுவதும் தெற்கிலுள்ள அம்பலாங்கொடையைச் சேர்ந்த சிங்களவரைக் கொண்ட தான, அம்பலாங்கொடல்ல என்றழைக்கப்படும் கிராமம் ஒன்றுள்ளது, வவுனியா மாவட்டத்தில் 1881ஆம் ஆண்டு சனத்தொகை மதிப்பீட்டின்படியான 13,164 தமிழருடன் ஒப்பிடுகையில் 1,157 சிங்களவர் மட்டுந்தான் இருந்தனர். ஆனால் 1981 சனத்தொகை மதிப்பீட்டிற்கிணங்க 54,179 தமிழருடன் ஒப்பிடுகையில் 15,794 சிங்களவர் இருந்தனர் (அட்டவணை 3.7). அட்டவணை 3.7, வவுனியா மாவட்டத் தின் (வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டதன் பின்னர்) ஒட்டுமொத்த மக்கள் பரம்பல் விகிதாச்சார அமைவைக் காட்டுகின்றது.





அட்டவணை 3.7

**வவுனியா மாவட்ட இன விகித்தாச்சாரக் கூட்டமைவில் மாற்றங்கள் 1827–1981**

| ஆண்டு | சிங்களவர் | % | தமிழர் | % | முஸிம்கள் | % |
|---|---|---|---|---|---|---|
| 1827ட | 517 | 5.7 | 8,011 | 94.3 | - | - |
| 1881 | 1,157 | 7.4 | 13,164 | 84.6 | 1,138 | 7.3 |
| 1891 | 1,188 | 7.7 | 13,030 | 84.1 | 1,139 | 7.3 |
| 1901 | 1,128 | 7.4 | 12,726 | 84.0 | 1,069 | 7.1 |
| 1911 | 1,848 | 10.7 | 14,059 | 81.1 | 1,241 | 7.1 |
| 1921 | 2,215 | 11.8 | 14,978 | 80.1 | 1,345 | 7.2 |
| 1946 | 3,870 | 16.6 | 17,071 | 73.4 | 2,158 | 9.3 |
| 1953 | 5,920 | 16.9 | 25,881 | 73.7 | 3,020 | 8.6 |
| 1963 | 12,020 | 17.5 | 51,410 | 75.1 | 4,900 | 7.2 |
| 1971 | 15,981 | 16.7 | 72,259 | 75.9 | 6,641 | 7.0 |
| 1981 | 15,876 | 16.6 | 73,133 | 76.3 | 6,640 | 6.9 |
| அதிகரிப்பு | | | | | | |
| 1881-1981 | 14,719 | 1272.0 | 61,969 | 383.0 | 5,502 | 483.0 |

- மன்னாரின் பகுதியையும் உள்ளடக்குகின்றது.
- இப்போது வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங் களாகப் பிரிக்கப்பட்டது.

மூலம் : PRO, 'Population of Ceylon' Ceylon Blue Books (Cc 59/82, 132, 155 and 159) for 1827 – 1921, London: PRO Publication and DCS, Population Census of Ceylon for the period of 1946 – 1981, Sri Lanka: DCS Publications.

எனவே, 1881 - 1981 காலப்பகுதிக்கிடையில் தமிழர் சனத்தொகை 383 சதவீதத்தால் மட்டும் அதிகரித்த அதே வேளையில், சிங்களவர் சனத்தொகை 1272 சதவீதத்தால் அதிகரித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வவுனியா மாவட்டத்தில் பாவற்குளம் குடியேற்றத் திட்டம் 1956இல் அறிமுகப்படுத்தப்பட்டது. தொடக்கத்தில் இத்திட்டத்தின்கீழ் 595 தமிழ்க் குடும்பங்களும் 453 சிங்களக் குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டன. தொடர்ச்சியான இனக்கலவரங்களின் காரணமாக அதில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

எண்பதுகளின் தொடக்கத்தில் காந்திய இயக்கம், மலைநாட்டில் 1977, 1979 மற்றும் 1981ஆம் ஆண்டுகளில் சிங்களவரால் மேற்கொள்ளப்பட்ட இனவன்செயல்களால் பாதிக்கப்பட்ட, சுமார் 85,000 தமிழரை மீளக் குடியமர்த்தியது. எனினும் ஜயவர்தனவின் அரசாங்கம் 1982இல் அவசர கால அதிகாரங்களைப் பயன்படுத்திச் சிங்கள இராணுவத்தின்மூலம் இத்தமிழ்க் குடியேற்றவாசிகளை வெளியேற்றியது (விசாகப்பெருமாளுடனான நேர்காணல்: 27 யூன் 2001).

### கிழக்கு மாகாணத்தில் சிங்களத் தேர்தல் மாவட்டங்களின் உருவாக்கம்

திருகோணமலை மாவட்டத்தில் 1881 இற்கும் 1981 இற்கும் இடையில் சிங்களச் சனத்தொகை 9134 சதவீதத்தால் அதிகரித்த அதேவேளையில், அதேகாலப்பகுதியில் தமிழர் சனத்தொகை 502 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது (அட்டவணை 3.5). அஃதன்றியும் 1881 இற்கும் 1981இற்கும் இடையில் மாவட்டத்தின் தமிழ்ச் சனத்தொகை 64.8 சதவீதத்திலிருந்து 33.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்த போதிலும், 1881இல் மாவட்ட மொத்தச் சனத்தொகையின் 4.2 சதவீதமாக மட்டுமிருந்த சிங்களச் சனத்தொகை, 1981ஆம் ஆண்டிற்கிடையில் மாவட்ட மொத்தச் சனத்தொகையின் 33.6 சதவீதமாக அதிகரித்தது. திருகோணமலையிலுள்ள 11 உதவி அரசாங்க அதிபர் (AGA) பிரிவுகளில் ஏழில், அதாவது தம்பலகாமம், திருகோணமலைப் பட்டினமும் சூழலும், சிறிபுர, கோமரங்கடவல (தமிழில் கோமரங்கடவை), மொரவெவ (தமிழில் முதலிக்குளம்), கந்தளாய், மற்றும் சேருவில ஆகியவற்றில், சிங்களவர் பெரும்பான்மையினராயுள்ளனர்.

எல்லை நிர்ணய ஆணைக்குழு 1976இல் சேருவிலையிலிருந்து ஒரு புதிய தேர்தல் பிரிவை வெட்டியுருவாக்கியதைத் தொடர்ந்து 1977இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஒரு சிங்களவர் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். சேருவில தேர்தல் தொகுதி திருகோணமலை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பின் ஐந்தில் மூன்று பங்கைக் கொண்டுள்ளது (பிரேமச்சந்திரனுடனான நேர்காணல்: 6 யூன் 2001).

அம்பாறை மாவட்டத்திலுள்ள 16 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் எட்டில், அதாவது அம்பாறை நகரம், தமண, நாமல் ஓயா, உகண, தெகியத்தகண்டிய, லகுகல, மகா ஓயா மற்றும் பதியத்தலாவ ஆகியவற்றில், சிங்களவர் பெரும்பான்மையினராயுள்ளனர். மொத்தப் பரப்பான 4,318 சதுர கிலோ மீட்டரில் 3,391 சதுர கிலோ மீட்டர் சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குச் சொந்தமானது. அதாவது அம்பாறை மாவட்டத்தில் 78 சதவீத நிலப்பரப்பு சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசங்களாகிவிட்டது (பிரேமச்சந்திரனுடனான நேர்காணல்: 6 யூன் 2001).

1977இல் முறையே அம்பாறை மாவட்டத்தில் திகாமடுல்லையிலிருந்தும் திருகோணமலை மாவட்டத்தில் சேருவிலையிலிருந்தும் இரு சிங்கள உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர். 1989இல் கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, அம்பாறை மாவட்டத்திலிருந்து நான்கும் திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஒன்றும் என்ற வகையில், ஐந்தாக திட்டமிட்ட வகையில் சடுதியாக அதிகரித்தது. 1994 பொதுத் தேர்தலிலும் அதே எண்ணிக்கையிலான சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டனர் (பிரேமச்சந்திரனுடனான நேர்காணல்: 7 யூன் 2001).

### மணல் ஆறு (வெலி ஓயா) குடியேற்றம்

1988 ஏப்பிரல் 16ஆந் தேதியன்று அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்றின்மூலம் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மணல் ஆறு பிரதேசம் வெலி ஓயா[6] என மறுபெயரிடப்பட்டது (இலங்கையின் 26ஆவது மாவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது). அது மகாவலி துரித அபிவிருத்தித் திட்டத்தை உள்ளடக்கியது (உருவரைபடம் 3.6).







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






**வரைபடம் : 3.6 மணலாறு (வெளிஓயா) குடியேற்றம்**

Source: C. Manogaran, *Tamil Voice International* Vo l2, February,1989 : 11





தமிழ் வியாபார அமைப்புகளினால் 99 ஆண்டுக் குத்தகையில் நடத்தப்பட்டு வந்தனவும், ஒவ்வொன்றும் 1,000 ஏக்கர் விஸ்தீரணமுடையதுமான டொலர் மற்றும் கென்ற் பண்ணைகளும் வேறு 12 பண்ணைகளும் அடங்கலாக, 42 கிராமங்களில் வாழ்ந்த மொத்தம் 13,288 தமிழ்க் குடும்பங்களின் காணிகள் அதே வர்த்தமானி அறிவித்தல் மூலம் பறிக்கப்பட்டன. சிங்கள இராணுவம் தமிழ்க் கிராமவாசிகளை அவர்களின் வீடுகளைவிட்டு 48 மணித்தியாலத்திற்குள் வெளியேறும்படியும் இன்றேல் அவர்கள் பலவந்தமாக வெளியேற்றப்படுவார்களென்றும் அறிவித்தல் விடுத்தது. உண்மையில் மணல் ஆறு குடியேற்றம் வெகு முன்னதாக 1984ஆம் ஆண்டளவிலேயே ஆரம்பமாகிவிட்டதுடன், சிங்கள இராணுவமும் அதே சமயத்தில் அப்பிரதேசத்தில் நிலைகொள்ளத் தொடங்கிவிட்டது (விஜே 1985: 10:13).

சிங்கள இராணுவம் உறுதியளித்தவாறு பலத்தைப் பிரயோகித்ததைத் தொடர்ந்து, முன்னர் 1983இல் சிங்களவரின் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட சில மலைநாட்டுத் தமிழ் அகதிகள் உட்பட, பெருந்தொகையான தமிழ்க் கிராமவாசிகள் படுகொலை செய்யப்பட்டனர். எஞ்சியோர் பேரச்சத்துடன் ஓடித்தப்பினர். வெலி ஓயா குடியேற்றத்திலிருந்து தொலைதூரத்திலுள்ள ஒரு குக்கிராமமான ஒதியமலையில் ஒரே இரவில் மட்டும் 29 தமிழ்க் கிராமவாசிகள் படுகொலை செய்யப்பட்டனர் (மேலேயுள்ள அதே மூலம்).

வெலி ஓயா சிங்களக் குடியேற்றத்தின் பின்னணியில் பெரிதும் உந்துசக்தியாகச் செயல்பட்ட தந்திரசாலிகள், மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசாநாயக்க, தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி, கைத்தொழில் மற்றும் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் சிறில் மத்தியு, மகாவலி அபிவிருத்திச் சபைத் தலைவர் என்.ஜீ.பீ. பண்டிதரத்ன ஆகியோராவர். இக்குழுவினர் பொதுவாக வடக்கிலும் கிழக்கிலும் மட்டுமன்றி குறிப்பாக வெலி ஓயாவிலும் இராணுவப் பலத்தைப் பயன்படுத்தித் தமிழர்களை விரட்டியதன் பின்னர் சிங்களவர் குடியேற்றப்பட வேண்டுமென்று பகிரங்கமாகக் குரலெழுப்பி வந்தனர் (மேலேயுள்ள அதே மூலம்).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அன்றுதொட்டுச் சிங்களக் குடியேற்றம் ஒரு யுத்த முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டது. 1988-89ஆம் ஆண்டுகளுக்கிடையில், பெரும்பாலும் சிறைச்சாலைகளிலிருந்து நேரடியாகக் கொண்டுவரப்பட்ட, முன்னாள் குற்றவாளிகளின் குடும்பங்களான 3,364 குடும்பங்கள் வெலி ஓயாவில் குடியமர்த்தப்பட்டன. மேலும், அதேதிட்டத்தின்கீழ் மேற்கொண்டு 5,925 குடும்பங்களைச் சார்ந்த 35,000 பேர் குடியமர்த்தப்பட்டனர். சிங்கள இராணுவத்தின் உச்ச மட்டத்தினரின், விசேடமாக மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவின் 'நாட்டாண்மைக்காரர் சேவைகளை' அங்கீகரிக்கும் பொருட்டு, தண்ணிமுறிப்பு என்ற தமிழ்க் கிராமம் ஜானகபுர என மறுபெயரிடப்பட்டது (விஜே 1985டி 32). தற்பொழுது இலங்கை அரசாங்கமானது, வெலி ஓயாவின் 'எல்லைக் கிராமங்கள்' என்றழைக்கப்படும் இத்தந்திரோபாயக் குடியேற்றத்தொகுதியைப் பாதுகாப்பதற்கு, ஏறக்குறைய 25,000 சிங்களப் படை வீரர்களையும் துணைப்படை ஆளணியினரையும் (ஊர்காவல் படையினர்) ஈடுபடுத்தியுள்ளது. இதன் மூலம், மேலே கூறப்பட்டவாறு இத்தொகுதியானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கிடையில் ஆப்பு இறுக்குவது போல் இறுக்கப்பட்டுள்ளது (அருள்பிரகாசம் 1996: 281 - 85).

பிரிகேடியர் ஹிரான் ஹலன்கொட, "வெலி ஓயா இராணுவ ரீதியாக மிக முக்கியமானது. எமது சமூகம் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு இடமளிக்கமாட்டாது. நாம் இங்கு இருக்கும்வரை பயங்கரவாதிகளால் ஈழத்தை வெல்ல முடியாது. நாம் போய்விட்டால் பதவியாவிற்கும் கெபத்திகொல்லாவவிற்கும் இறுதியில் அனுராதபுரத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்படும்" என்று கூறினார் (சண்டே ஒப்சேவர் 22 பெப்ருவரி 1998). 1998 மேயில் வெலி ஓயாவில் 'ஒப்பரேஷன் ஜயசிக்குறு' வின் (வெற்றி நிச்சயம்) கிழக்கு ஊடச்சில் கஜபாபுர-பதவிய முகாம்களிலிருந்து படையணிகளால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து, நெடுங்கேணிக்குத் தெற்காயுள்ள நுழைவாயிலான கஜபாபுரவிலிருந்து நெடுங்கேணிக்கும் ஒலுமடுவுக்கும் நீடிக்கின்ற காப்பரண்களால் இப்போது அடைக்கப்பட்டுள்ளது. இராணுவ முன்னரங்கப் பாது





காப்பு அரண்கள் (FDLS) இப்போது மேற்கே நெடுங் கேணியிலிருந்து கிழக்கே கொக்கிளாய் வரையிலும், தெற்கே ஒலுமடு வரையிலும் நீடிக்கின்றன (புதிய கண்ணோட்டம், யூலை 1998).

மகாவலி அபிவிருத்தி அமைச்சின் அதிகாரி ஹேர்மன் குணரத்ன 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் எழுதுகையில், ஏனையவற்றுடன் அவர் பின்வருமாறு ஒப்புக்கொண்டதன் மூலம், அவர்களின் கபட நாடகம் அம்பலமாகியது:

> நிலத்துக்காகத்தான் எல்லா யுத்தங்களும் புரியப்படுகின்றன. யான் ஓயா மற்றும் மல்வத்து ஓயாப் பள்ளத்தாக்குகளில் மக்களைக் குடியேற்றவதற்கான திட்டம் 1983இன் இனக் கலவரங்களுக்கு முன்னரே வகுக்கப்பட்டது. சர்வதேச மட்டத்தில் உயர் பதவிகளை வகிக்கும் சிலர் உட்பட மகாவலியில் அளப்பரிய ஆர்வம் காட்டியவர்கள் தான் இத்திட்டத்தின் சூத்திரதாரிகள். எனது பங்கு ஒரு நிறைவேற்றுநருடையதுதான் . நீண்ட காலத்துக்கு இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாக்குமென நாம் எண்ணிய ஒரு திட்டத்தைக் கருத்தில் உருவாக்கிச் செயற்படுத்தினோம். காணிப்பசி கொண்ட (சிங்கள) விவசாயிகளான 45,000 பேரைக்கொண்ட ஒரு பெரும் குழுவினரை மாதுரு ஓயா ஆற்றுக்கழிமுக மாவட்டங்களான மட்டக்களப்பிற்கும் பொலனறுவைக்கும் இடம் பெயர்த்தோம். இரண்டாவது கட்டமானது யான் ஓயா பள்ளத்தாக்கில் அதனை ஒத்த மனித குடியேற்றமொன்றைச் செய்தலாகும். மூன்றாவது படி ஈழத்தை எதிர்க்கின்ற மக்கள் கூட்டமொன்றை மல்வத்து ஓயாக் கரைகளில் குடியமயர்த்துதலாயிருந்தது.
>
> மாதுரு ஓயாவில் (சிங்கள) மக்களைக் குடியமர்த்துவதன் மூலம் ஒரு தனிநாட்டை எதிர்க்கின்ற பெரும் சனத்திரளை மட்டக்களப்பு வலயத்தில் வைத்திருக்க நாம் முனைந்தோம். பிரிவினைவாதிகள் அல்லாதோரால் (சிங்கள மக்களால்) யான் ஓயா குடியேற்றப்படுமாயின் அது சனத்தொகையை ஏறக்குறைய மேலும் 50,000 பேரால் அதிகரிக்கும். அது கிளர்ச்சிக்காரரிடமிருந்து திருகோணமலையைப் பூரணமாகப் பாதுகாக்கும் (26 ஆகஸ்ட் 1990).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆசிரியர் சரியாகக் குறிப்பிட்டவாறு இந்த யுத்த மானது உண்மையில் நிலத்துக்கான ஒரு சண்டைதான். திட்டவட்டமாக இக்காரணத்தினால்தான் 1995இல் யாழ்ப் பாணத்தை இராணுவம் கைப்பற்றியபோது யாழ்ப்பாணம் 'யாப்பா பட்டுன' என சிங்களத்தில் மறுபெயரிடப்பட்ட துடன் சிங்கக்கொடியும் சம்பிரதாயபூர்வமாக ஏற்றப் பட்டது. அவ்வாறே 1997 பெப்ருவரியில் யுத்த நட வடிக்கையை ('ஒப்பரேஷன் எடிபல') தொடர்ந்து வவுனியா மன்னார் வீதியிலுள்ள பூவரசங்குளத்தை இராணுவம் கைப்பற்றியபோது அதனை சப்புமல்புர என மறு பெய ரிட்டதுடன் சிங்கக் கொடியையும் ஏற்றியது. அதே ஆண்டில் ஆளரவமற்ற நகரமாயிருந்த மாங்குளத்தை இராணுவம் கைப்பற்றியபோது, தமிழர் மீதும் அவர் களின் ஆட்சிப் பிரதேசத்தின் மீதும் சிங்கள மேலாண்மை ஆட்சிக்கு முட்டுக் கொடுப்பதற்காக, சிங்கக்கொடி அங்கும் ஏற்றப்பட்டது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலண் டனுக்குத் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண் டிருந்தபோது மாங்குளத்தைக் கைப்பற்றிய 'வீரதீரமான படைவீரர்களைப் பாராட்டி அங்கிருந்து விடுத்த அறிக்கை யில் கூறியதாவது:

> எல்ரீரீஈ பயங்கரவாதிகளின் கடைசிக் கோட்டையாக விளங்கிய மாங்குளத்தை எமது வீரதீரப் படைவீரர்கள் கைப்பற்றியதை அறிந்து நான் பெருமகிழ்ச்சியடைந்தேன். வரலாற்றுப் புகழ்மிக்க இவ்வெற்றியின் மகிழ்ச்சியை எனது நாட்டின் சக மக்களுடனும் இச்சாதனையையிட்டு இப்போது வெற்றிக்களிப்புக் கொண்டாடும் துணிவுமிக்க படைவீரர்களுடனும் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன் (ரொய்ட்டர்-கொழும்பு, 4 ஒக்ரோபர் 1997).

1995இன் பின்னர் 'கிளர்ச்சியாளர்களிடமிருந்து திரு கோணமலையைப் பூரணமாகப் பாதுகாப்பதற்கான தேடல்' குறையாது தொடர்ந்தது. சிங்களவர், ஆயுதப்படை களின் நிலைமாறாத உதவியுடன், தமிழருக்குச் சொந்தமான தனிப்பட்ட காணிகளிலும், பல்வேறு இந்துக் கோயில் களுக்குச் சொந்தமானக் காணிகளிலும் தொடர்ந்தும் சட்டவிரோதமாகக் குடியமர்கின்றனரென்ற உண்மையை





திருகோணமலையிலிருந்து கிடைக்கும் செய்திப்பத்திரிகை அறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன.

கொழும்பிலுள்ள தமிழ் அரசியற் கட்சிகள் கூட, திருகோணமலையின் கிழக்குப் பகுதியில் சிங்களவரின் குடியேற்றம் பற்றிக் குறிப்பிடுகின்றவேளையில் அதனை, 'மாவட்டத்தின் மக்கள் பரம்பலின் விகிதாச்சாரத்தைச் செயற்கையானமுறையில் மாற்றுவதற்கான ஒரு முயற்சி' என விவரித்தன.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (EPRLF) செயலாளர் நாயகம் திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியதற் கிணங்க, 1998இல் கொழும்பில் நடைபெற்ற ஒரு கூட்டத் தில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF), ஈழமக்கள் சனநாயகக் கட்சி (EPDP), தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE), தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO) ஆகிய வற்றின் பிரதிநிதிகளால் தீர்மானமொன்று எடுக்கப்பட்டது. பிரேமச்சந்திரன் விடுத்த அறிக்கையில் 'சிவில் யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான தமிழர் களை மீளக் குடியமர்த்துவதற்குப் பதிலாக இப்பிரதேசங் களில் சிங்களவரைக் குடியமர்த்தும் பாரிய அரச உதவி யுடனான குடியேற்றத்தில் அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாக கட்சிகள் கருதுகின்றன' எனக் கூறினார். 'மாவட்ட மக்கள் தொகையின் விகிதாச்சாரத்தைச் செயற்கையான முறையில் மாற்றுவதற்கான மிகத் தெளிவான முயற்சிகள்' என்று அவை கருதுகின்றவற்றைக் கண்டித்த அக்கட்சிகள், 'லிங்க நகரிலும் அதனைச் சுற்றிலும் உள்ளனவும் திருகோணமலை மாவட்டத்தில் உள்ளனவுமான சட்டவிரோதச் சிங்களக் குடியேற்றங்கள் அனைத்தையும் அரசாங்கம் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டுமெனக் கோரின' (பிரேமச்சந்திர னுடனான நேர்காணல்: 6 யூன் 2001).

கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழர் தமது பெரும் காணிப்பரப்பின் மூன்றிலிரண்டு பங்கைச் சிங்களவரிடம் இழந்துள்ளதுடன் 1827இல் 75.65 சதவீதத்திலிருந்து 1981இல் 41.90 சதவீதமாக, எண்ணிக்கையில் ஒரு சிறுபான்மையின ராகவும் குறைக்கப்பட்டுள்ளனர். முக்கியமாக வடக்கினதும் கிழக்கினதும் புவியியல் தொடர்ச்சி இடையறுக்கப்பட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டுள்ளது. இது தனியோர் அரசியல்-பொருளாதார ஆள் புலமாக அமையக்கூடிய வடக்கையும் கிழக்கையும் நிரந்தர மாக இணைக்கவேண்டுமென்ற கோரிக்கையைத் தளர்வுறச் செய்வதற்குத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு தந்திரோபாய நடவடிக்கையாகும் (அட்டவணை 3.7).

## சிங்களக் குடியேற்றத் திட்டங்களும் தமிழர் போர்முனைப்பின் எழுச்சியும்

இலங்கையில் அரசாங்கத்தின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும், உள்ளகப் புலம்பெயர்வும் பற்றிய விடயம் புகழ்பெற்ற அறிஞர்களால் போதிய அளவில் ஆராயப்பட்டுள்ளது (மனோகரன் 1987: 81 -84). சேன நாயக்கவின் கூற்றுப்படி ஈரவலயத்திலுள்ள காணியற்ற விவசாயிகளின் பிரச்சினைகளைத் தணித்தலும் உணவுற் பத்தியை அதிகரித்தலும்தான் குடியேற்றத்தின் குறிக்கோள் களாக இருந்த போதிலும், அவர் சிங்கள விவசாயிகளின் குடியேற்றத்தைச் சிங்கள மக்கள் அவர்களின் பண்டைய நாகரிகத்தின் பூமிக்குத் திரும்பிச் செல்வதற்கு உதவுகின்ற ஒரு வழியாகவும் கருதினார். சிங்கள உயர்குடியினரில் அனேகரைப்போன்று அவரும் உலர் வலயமெங்கிலும் புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிர்மாணித்து, அதன் மூலம் குளங்களையும் கால்வாய்களையும் புனரமைத்து, வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பெரும்பான்மைப் பிர தேசங்களிலுள்ள தமிழர் உட்படப் பெருந்தொகையான விவசாயிகளை அங்கு குடியமர்த்துவதன்மூலம் உலர் வலயத்தின் முன்னைய உன்னத நிலைக்கு அதனை மீண்டும் கொண்டுவரலாமென்று நம்பினார். ஆனால் தமிழர் ஆதிக்கப் பிரதேசங்கள் மீதான கட்டுப்பாட்டைச் சிங்கள மக்கள் மீண்டும் ஈட்டக் கூடியதாகத் திட்டமிடப்பட்ட விவசாயக் குடியேற்றக் கொள்கையொன்றை அரசாங்கம் சூழ்ச்சியுடன் செயற்படுத்துவதாக தமிழ்த் தலைவர்கள் குற்றஞ்சாட்டத்தொடங்கினர். இந்த உணர்வினைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் மைக் மூர் எழுதியதாவது:

> பெருமளவிலான நீர்ப்பாசனத் திட்டங்களானது, தமிழ் பேசும் இலங்கைத் தமிழர் அல்லது முஸ்லிம்கள் முன்னர் வசித்துவந்த பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை அத்துமீறிப் புகுத்தியது மட்டுமன்றி, அதுவே மனப்பூர்வ மானதும் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான நோக்கமாகவும் இருந்துள்ளது. எனவே சிங்கள அரசியல் மற்றும் கலாச்சாரப் புத்தெழுச்சி தொடர்பில் 'எதிரியை வென்று திரும்பப்பெறு' என்னும் புராதன அடிப்படையிலான நம்பிக்கையின் அடிப்படையில் ஆட்சிப்பிரதேசப் பரிமாணமொன்றும் உள்ளது. காணிக்கொள்கையும், அதற்கு ஆதரவான சிந்தாந்தங்களும் பொதுவாகக் காணிச் செய்கையின்மீது அல்லது பயன்பாட்டின்மீது கவனஞ் செலுத்துவதைவிடப் பெரிதும் காணியின் மீதான கட்டுப் பாட்டில்தான் கவனத்தைக் குவித்துள்ளன (மூர் 1985: 45).

எனவே, உலர் வலயத்தில் 1930களில் தொடக்கி வைக்கப்பட்ட பெரிய அளவிலான நீர்ப்பாசன மற்றும் குடியேற்றத் திட்டங்கள் அப்பிரதேசத்தை அதன் முன்னைய உன்னத நிலைக்கு மீண்டும் கொண்டுவருவதற்கேயென்று நம்புவதற்கு வலுவான காரணமுண்டு (சிமித் 1979: 85). இதற்கும் முன்பாக 1920களிலேயே சிங்கள மகாஜன சபை யானது, கமத்தொழிலை அபிவிருத்தி செய்வதன்மூலம் உலர் வலயம் அதன் முன்னைய உன்னத நிலைக்கு மீண்டும் கொண்டுவரப்படவேண்டுமென்று பிரகடனப்படுத்தியது. இதன்படி சிங்கள மகாஜன சபை மின்னேரியாவில் கமத்தொழில் திட்டமொன்றை அபிவிருத்தி செய்யும்படி மின்னேரியா அபிவிருத்திக் கம்பனியைத் தூண்டி இணங்க வைத்த போதிலும், அத்திட்டம் தோல்வியடைந்தது. (வீ.கே.சமரவீரவின் கூற்றுக்கிணங்க).

'இத்திட்டத்தின் நோக்கமானது பொருளாதாரத்தை விட சமூகரீதியானதும் கற்பனாவாதத் தத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டது. அதாவது, இலங்கையில் மிகச்சிறந்த நெற்செய்கை நிலங்களில் ஒன்று என்று புகழ்ந்து பறைசாற்றுவதும், இம்முயற்சிகளானது அப்பிரதேசத்தின் பண்டையப் பெருமைகளுக்குப் புத்துயிரளிக்குமென்ற நம்பிக்கையுமே இதன் முக்கியக் காரணங்களாகும்.' (சமரவீர 1973: 451).

இது ஒருவகையில் 1930களில் தொடங்கிய சிங்களவர் சார்பான தமிழர் விரோதக் கமத்தொழிற் கொள்கை களுக்குக் கட்டியங்கூறுவதாயிருந்தது.









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மூர் கூறியதற்கிணங்க ‘உலர் வலயத்தில் குடியேற்றத்தையும் நீர்ப்பாசன அபிவிருத்தியையும் ஊக்குவிப்பதில் பிரதமர் சேனநாயக்க காட்டிய உணர்ச்சிவெறியின் விளைவாக உலர் வலயத்தின் குடியேற்றத்தில் சிங்களவரின் புராதன நீர்ப்பாசன நாகரிகத்தின் மையத்துக்குத் திரும்பச் செல்கின்ற தோற்றத்துடன் சிங்களத் தேசியவாதம் புகுத்தப்பட்டது’ (மூர் 1985: 45). மின்னேரியாக் குளத்தை முதலில் கட்டியவரான மகா பராக்கிரமபாகுவின் பெயருடன் தமது பெயரும் பேசப்படவேண்டுமென்று சேனநாயக்க விரும்பியதனால், குறிப்பாக மின்னேரியாக் குளத்தைப் புதுப்பித்து அதன் அண்டைப்புறங்களில் ஒரு விவசாயக் குடியேற்றத்தைத் தாபிப்பதில் அவர் அக்கறை காட்டினார். நாட்டின் இப்பகுதியைச் சார்ந்த சிங்கள மக்கள் தன்னையும் மாபெரும் வரலாற்றுப் புகழ்மிக்க ஒருவராகக் கொண்டாடவேண்டுமென அவர் விரும்பினார். மலபார்களால் (மலபார்கள் தமிழராவர்) அழிக்கப்பட்ட கமத்தொழில் முறைமைக்குப் புத்துயிரளித்தவரும், குளங்களைப் புதுப்பித்தவருமான புகழ்பெற்ற சிங்கள மன்னருடன் தமது பெயரும் இணைத்துப் பேசப்படவேண்டுமென்று சேனநாயக்க விரும்பியதாக ஜான்ஸ் குறிப்பிடுகின்றார். மேலும் இதுபற்றி வில்சன் பின்வருமாறு கூறுகிறார்:

> டொன் ஸ்ரீபன் சேனநாயக்க தமிழரின் பாரம்பரியத் தாயகங்களில் அரச உதவியுடன் சிங்களக் குடியேற்றவாசிகளைக் குடியமர்த்துகின்ற அவரின் திட்டங்களை விடாது தொடர்ந்தார். தமிழ் அரசுக் கட்சியின் தோற்றத்துக்கும் இறுதியில் ஒரு தனிநாட்டுக் கோரிக்கைக்கும் இதுவொரு காரணமாகும் (வில்சன் 1988: 93).

கியர்னி மற்றும் மில்லர் ஆகியோர் தீவினுள் உள்நாட்டுப் புலம்பெயர்வின் தன்மை பற்றிக் கருத்துரைக்கையில், சிங்களவர் சனத்தொகைச் செறிவுமிக்க தென்மேற்கு வலயத்திலிருந்து, தமிழர், தமது பாரம்பரியத் தாயகத்தினுள் அடங்குபவையெனக் கருதிய பிரதேசங்கள் உட்பட, வடக்கினதும் கிழக்கினதும் உலர்வலயப் பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனரென்று வலியுறுத்தினர் (சியர்னி மற்றும் மில்லர் 1987: 94) உண்மையில் விவசாயக் குடியேற்றம் பற்றிய அரச கொள்கை, வடக்கு - கிழக்கு மாகா





ணத்தில் பெருந்தொகையினரான சிங்கள விவசாயிகளைக் குடியமர்த்துவதற்கென தெளிவான நோக்கத்துடன் வேண்டுமென்றே திட்டமிடப்பட்டதென்பதில் சந்தேகத்திற்கிடமில்லை.

இன்று இலங்கைத் தீவின் கிழக்கு மாகாணத்தில் உள்ள நிலைமை அச்சு ஊடகங்களின் அறிக்கைகளில் காணப்படுவதைவிட மிகப் பாரதூரமானது. கிழக்கு மாகாணத்தின் பரந்த பிரதேசங்களிலிருந்து தமிழ்க் குடிசனத்தை, படுகொலை செய்வதன்மூலமும், தமது வீடுகளிலிருந்து ஓடித் தப்புவதற்கு அவர்களை நிர்ப்பந்திப்பதன்மூலமும். ஒழித்துக் கட்டுவதற்கு இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்டங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதென்ற முடிவுக்கு வருதல் தவிர்க்கமுடியாததெனத் தோன்றுகிறது.

தற்போதைய இனப்படுகொலைப் பிரச்சாரமானது தற்செயலான ஒரு நிகழ்ச்சியல்ல. அது அப்பிரதேசத்தின் மக்கட் தொகையியலின் விகிதாச்சாரத்தை மாற்றுவதற்கும் கிழக்கு மாகாணத்திலுள்ள பாரம்பரியத் தமிழ்த் தாயகத்தைச் சிங்கள வந்தேறிகளைக்கொண்டு குடியேற்றுவதற்கும் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலான காலத்தில் அடுத்தடுத்துவந்த சிங்கள அரசாங்கங்கள் எடுத்த முயற்சிகளின் உச்சக்கட்டத்தைக் குறிக்கின்றது. வால்டர் ஷிவார்ஸ் (1979: 23) சுட்டிக்காட்டியதாவது:

‘குடியேற்றத்தின் வேகம் முன்னரெப்போதையும் விடக் கூடியதெனத் தமிழ்ப் பேச்சாளர்கள் முறையிட்டனர். குறிப்பாக அவர்கள் கிழக்கு மாகாணத்தில் உலக வங்கியின் ஆதரவுடன் தெற்கிலிருந்து சிங்களக் குடும்பங்கள் கொண்டுவரப்படும் மகாவலி ஆற்றின் திசைதிருப்பும் திட்டத்தைக் குறிப்பிட்டனர். கிழக்கு மாகாணத்தில் கனேடிய உதவியுடன் மேற்கொள்ளப்படும் மாதுரு ஓயாத் திட்டம் அதேவிளைவைக் கொண்டிருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.’

இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகள் 1981இல் சர்வதேச சட்டவல்லுநர் ஆணைக்குழுவின் தூதுக்குழுவில் இலங்கைக்கு வந்த பேராசிரியர் வேர்ஜீனியா லியறி அவர்களின் கவனத்தையும் ஈர்த்தன:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களினுள் பெருந் தொகையான சிங்களவரை இறக்குமதி செய்கின்ற அரச குடியேற்றத் திட்டங்களைத் தமிழர் ஆட்சேபித்துள்ளனர். குடியேற்றம் பற்றிய தமிழரின் கவலை அவர்களின் உடல்ரீதியான பாதுகாப்பின்மையுடனும் அவர்களின் பாரம்பரியத் தாயகங்களில் அவர்கள் ஒரு சிறுபான்மையாகி விடுவரென்ற அச்சங்களுடனும் தொடர்பானது.

இலங்கை ஒரே நாடென்பதனால் அதன் பிரசைகள் நாட்டின் எப்பகுதியிலும் சுதந்திரமாகக் குடியமரக்கூடுமென்றும், அதிக உற்பத்திவளமுள்ள பிரதேசங்களில் சில குடிசனங்களை மாற்றுக் குடியேற்றுதல் அவசியமானதென்றும் அரசாங்கம் தனது வாதத்தை நியாயப்படுத்துகின்றது. மறுபுறம் தனிப்பட்ட புலம் பெயர்வைத் தாம் எதிர்க்கவில்லையென்றும், ஒரு பிரதேசத்தின் இன ஆக்கக் கூட்டமைவை மாற்றுகின்ற பெரிய அளவிலான அரசாங்கக் குடியேற்றத் திட்டங்களை மட்டுந்தான் எதிர்ப்பதாகவும் தமிழ்த் தலைவர்கள் பதிலளிக்கின்றனர்' (லியறி 1981: 38).

பேராசிரியர் லியறி பரிந்துரைத்ததாவது: 'தமிழ்ப் பிரதேசங்களினுள் பெருந்தொகையான சிங்களவரைக் கொண்டு வருவதன்மூலம் அத்தகைய பிரதேசங்களின் இன விகிதாச்சார கூட்டமைவை மாற்றுகின்ற அரசாங்க ஆதரவுக் குடியேற்றத் திட்டங்கள் பற்றிய தமிழரின் கவலையில் அரசாங்கம் மீண்டும் கவனஞ் செலுத்த வேண்டும். தமிழர் சிறுபான்மையாக வாழ்கின்ற பிரதேசங்களில் அவர்களுக்கெதிரான இன வன்செயல்களின் காரணமாக அவர்களின் பாதுகாப்பின்மையின் நிமித்தம் இது அதிக முக்கியம் வாய்ந்ததாகும்.' (ப. 80).

எனினும், சர்வதேச சட்ட வல்லுநர் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்தப்படவில்லை. அரசாங்கத்தின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தமிழர்மீது அரசாங்கத்தின் துணையுடன் நன்கு திட்டமிடப்பட்ட தாக்குதல்களை நடாத்துவதற்கு வழிவகுத்தது. அத்தாக்குதல்கள் தமது பாரம்பரியத் தாயகங்களிலிருந்து தமிழர் பலவந்தமாக வெளியேற்றப்படுவதற்கு வழிவகுத்தன. அது சிங்களப் பேரினவாதம் தொடர்ச்சியாக வளர்ச்சியடையவும் உதவியாக இருந்தது (லியறி 1983: 80).





1985இல் பிரித்தானியப் பாராளுமன்ற மனித உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இலங்கைக்கு விஜயம் செய்த றொபர்ட் கில்றோய் சில்க், பா.உ., மற்றும் றொஜர்சிம்ஸ், பா.உ. ஆகியோர் பின்வருமாறு அறிக்கையிட்டனர்:

'(கிழக்கு மாகாணத்தில்) முழுக் கிராமங்களும் வறிதாக்கப்பட்டு, சுற்றுவட்டாரங்களில் இருந்தவர்கள் இராணுவத்தால் அவர்களின் வீடுகளிலிருந்தும் தொழில்களிலிருந்தும் விரட்டப்பட்டு, அரசாங்கத்தின் உலர் உணவுப் பங்கீடுகளில் தங்கியிருக்கும் அகதிகளாக்கப் பட்டனரென்று எமக்கு வந்த குற்றச்சாட்டுகளைச் சாட்சிகளும் உறுதிப்படுத்தினர்'. அத்தகைய ஒரு நடவடிக்கை முறையில் மீறப் பட்ட மனித உரிமைகளை இங்கு விவரிக்கத் தேவையில்லை.

மிக முக்கியமானது என்னவெனில், சரியாகவோ பிழையாகவோ அது, அரசாங்கத்தின் குறிக்கோள் ஒன்றில், முன்னைய தமிழ்ப் பிரதேசங்களில் ஆயுதமேந்திய சிங்கள மக்களைக் குடியமர்த்துவதென்ற அரசாங்கத்தின் அறிவிக்கப்பட்ட கொள்கையின் உதவியுடன் நடத்தப்படும் ஒரு செயல்முறையாக வடக்கிலும் கிழக்கிலும் தமிழரின் பெரும்பான்மையைக் குறைக்கக்கூடியதாகப் போதிய எண்ணிக்கையிலான தமிழரை வடக்கிலும் கிழக்கிலுமிருந்து விரட்டுதல், இன்றேல் ஒட்டுமொத்தமாகத் தமிழரை விரட்டுதலென்று எமக்கு அடிக்கடி கூறப்படும் கருத்துக்கு அது நம்பகத்தன்மையை அளிக்கின்றது.

இப்பிரச்சினையில் நாம் தீர்ப்புக்கூற முடியாது. அர சாங்கம் தமிழரை அவர்களின் வீடுகளிலிருந்து விரட்டுகின்றதென்றும், அப்பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியமர்த்த உண்மையில் திட்டமிட்டுள்ளதென்றும் சந்தேகத்துக்கிடமின்றி நாம் கூற முடியும். குறைந்த பட்சம் இதுவேனும் பெரும்பாலான தமிழர் நம்புகின்ற மிகக் கடுமையான விளக்கத்துக்கு ஆதாரமாயுள்ளது (கில்றோய் சில்க் மற்றும் சிம்ஸ் 1985: 13 - 14).

சிங்களக் குடியேற்றத்துக்கான இம்முயற்சிகள் சிங்கள அரசாங்கத்தினால் கவனமாகத் திட்டமிடப்பட்ட ஒரு தந்திரோபாயத்தின் விளைவென்பது, 1990 ஆகஸ்டில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மகாவலி அமைச்சின் சிங்கள அதிகாரி ஹேர்மன் குணரத்தவின் வெளிப்படையான கூற்றுகளினால் ஐயத்துக்கிடமின்றி இப்போது நிறுவப்பட்டுள்ளது.

தமிழ்ப் பெரும்பான்மை மாவட்டங்களின் இன விகிதாச்சாரக் கூட்டமைவின் ஒரு பகுப்பாய்வு, 1953 இற்கும் 1981இற்கும் இடையில் திருகோணமலை மாவட்டத்தில் சிங்களச் சனத்தொகை 465 சதவீதத்தால் அதிகரித்த அதே காலப்பகுதியில் தமிழ்ச் சனத்தொகை 149 சதவீதத்தால் அதிகரித்துள்ளதென்பதைக் காட்டுகின்றது (மனோகரன்; 1987: 95 - 102). அஃதன்றியும் ஒட்டுமொத்தமாகக் கிழக்கு, மாகாணத்தில் சிங்களச் சனத்தொகை 435 சதவீதத்தால் அதிகரித்த போதிலும் தமிழ்ச் சனத்தொகை அதே காலப் பகுதியில் வெறும் 145 சதவீதத்தால் அதிகரித்தது. வட மாகாணத்தில் சிங்களச் சனத்தொகை 137 சதவீதத்தால் அதிகரித்த அதேவேளையில், தமிழ்ச் சனத்தொகை அதே காலப்பகுதியில் 92 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது. மேலும் சிங்களப் பெரும்பான்மை மாவட்டம் எதனிலும் தமிழ்ச் சனத்தொகை மொத்தச் சனத்தொகையின் 10 சதவீதத்தை விஞ்சாதபோதிலும், வவுனியா, திரு கோணமலை, அம்பாறை ஆகிய தமிழ்ப் பெரும்பான்மை மாவட்டங்களில் சிங்களச் சனத்தொகை முறையே 16.55 சதவீதம், 33.62 சதவீதம், 37.5 சதவீதம் என்னுமளவுக்கு உயர்வாயுள்ளது (வைடிக் 1986: 82). தமிழ்ப் பெரும் பான்மை மாவட்டங்களின் இன விகிதாச்சார அமைவில் அரசாங்கத்தின் திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்களின் தாக்கம் கிழக்கு மாகாணத்தில் ஆகவும் வெளிப்படையாகத் தெரிகின்றது.

### அரச கரும மொழியாகச் சிங்களம் – வரலாற்றுப் பின்னணி

நாம் 1833ஆம் ஆண்டின், கோல்புறூக் கமறூன் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அதேயாண்டில் அமுல்படுத்துவதில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். அவைதான் இக்குடியேற்ற நாட்டின் சிவில், நீதி, நிர்வாகம் மற்றும் கல்விக்கான பரந்த கொள்கைச் சட்டகத்தை உருவாக்கின. காலனித்துவ மற்றும் யுத்தத் திணைக்களத்துக்கான இராசாங்கச் செயலாளர் பாத்ஹேஸ்ற் கோமானால் 1930 சனவரி 18ஆந் தேதியன்று ஆணையாளர்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களில் 'நீதிமன்றத்திலும் பகிரங்க நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் ஆங்கில மொழியை அறிமுகப்படுத்துதல்' விசாரணைக்கான ஒரு விடயமாக்கப்பட்டது. கோல்புறூக் ஆணைக்குழுவினர் போதியளவு எண்ணிக்கையிலான மாணவர்கள் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறுதலை உறுதிப்படுத்தும்பொருட்டுக் கல்வித் தொடர்பில் விசேடப் பரிந்துரைகளைச் செய்தனர் (மெண்டிஸ் 1956: 73).





கோல்புறூக் சீர்திருத்தங்களின் பின்னர், நாட்டின் உயர் பணித்துறை நிர்வாகமும் செயல்திறன்மிக்கதுமான இலங்கை அரசாங்க நிர்வாக சேவையினுள் இலங்கையர் புகுவதற்கு 50 ஆண்டுகளுக்கு மேல் எடுத்தது. எனினும் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்க மற்றும் மிஷனரிப் பாடசாலைகளில் போதனாமொழியாக ஆங்கிலத்துக்கு முக்கியத்துவமளிக்கின்றதாகக் கல்விக் கொள்கையில் செய்யப்பட்ட மாற்றங்களின் நிமித்தம் ஆங்கிலக் கல்வி கற்ற 'சுதேசிகள்' மத்தியிலிருந்து கீழ்நிலைப்பட்ட பதவிகள் எல்லாவற்றுக்கும் ஆட்சேர்க்கக்கூடுமாயிருந்தது. இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய 'சுதேச' மொழிகளுக்கு மாற்றாக ஆங்கிலத்தை நிருவாகத்திற்கும் நீதித் துறைக்குமான அரச கரும மொழியாக்குகின்ற கொள்கைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் பெருமளவு வெற்றியளித்தன.

அடுத்த முக்கிய கட்டமானது, சர்வசன வாக்குரிமையை அறிமுகப்படுத்திய 1931ஆம் ஆண்டின் டொனமூர் அரசியலமைப்புமுறையாகும். நிருவாகத்திலும் நீதித்துறையிலும் ஒரு தேசிய மொழி அல்லது தேசிய மொழிகள் ஆங்கிலத்தைப் பதிலீடு செய்யவேண்டியதன் முக்கியத்துவம் சர்வசன வாக்குரிமையின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட சட்டசபையினரால் மிக ஆரம்பத்திலேயே உணரப்பட்டது. 1943-44இல் சட்டசபை சிங்களமும் தமிழும் ஆங்கிலத்தைப் பதிலீடு செய்வதற்கு ஜே.ஆர். ஜயவர்தனவால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு பிரேரணையினை ஏற்றுக் கொண்டது. மூலப் பிரேரணை ஆங்கிலத்தைச் சிங்களத்தால் பதிலீடு செய்ய முனைந்தபோதிலும், அது பின்னர் சிங்களமும் தமிழும் என்று வாசிக்கக்கூடியதாகத் திருத்தப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்டது (கே.எம்.டி. சில்வா 1993: 275 - 305). 'அரசாங்க நிருவாகத்திற்கான அரசகரும மொழிகளாகச் சிங்களத்தை யும் தமிழையும் ஆக்குகின்றதாக' மொழிக்கொள்கையில் மாற்றங்களைச் செயற்படுத்துவதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி அறிக்கையிடுவதற்கு சட்டசபையின் தெரிவுக் குழுவொன்று 1946 செப்ரெம்பர் 20ஆம் தேதி யன்று நியமிக்கப்பட்டது. 1946இன் பருவப்பத்திரம் (SP) XXII (கே.எம். டி சில்வா 1993: 275 - 305) ஆக வெளியிடப் பட்ட அதன் அறிக்கை இலங்கையில் மொழிக் கொள்கை யொன்றின் வளர்ச்சியில் அடுத்த முக்கிய கட்டமாயிருந்தது.

## அரச கரும மொழிகளாகச் சிங்களமும் தமிழும்

பிரதிநிதித்துவ ஆட்சிமுறைக்கும், பங்கேற்புள்ள சன நாயகத்திற்கும் ஓர் அறிமுகமாக ஆங்கிலேயர் சட்டவாக்கச் சபையை அறிமுகப்படுத்தினர். அதன் ஒரு புத்தாக்கமாக சட்டசபை விரைவில் தொடக்கி வைக்கப்பட்டது. ஆளுநருக்கான ஆலோசனைச் சபையென்ற வகையில் சட்டவாக்கச் சபையானது உத்தியோகபூர்வ உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகபூர்வமல்லாத உறுப்பினர்கள் ஆகிய இரு தரப்பினரையும் கொண்டிருந்தபோதிலும் சட்ட சபை, தமது கருத்துகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்தக்கூடி யவர்களும் சர்வசன வாக்குரிமை மூலம் தெரிவுசெய்யப் பட்டவர்களுமான பெரும்பாலான உறுப்பினர்களைக் கொண்டதாக அதிகபட்ச சனநாயக முறைப்படியான ஓர் அமைப்பாக விளங்கியது. நாட்டின் நிருவாகம் ஒட்டு மொத்தத்தில் செயற்படும் முறையைப் பின்பற்றி சட்ட சபையின் அலுவல் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டது.

மொழிக் கொள்கையின் அமுலாக்கம் அடிப்படையில் கல்வி, சட்டம் மற்றும் பொது நிருவாகம் ஆகிய மூன்று முக்கிய துறைகளில் தங்கியுள்ளது. 1930களிலிருந்தே தாம் தமது சொந்த மொழியின்மூலம் நிர்வகிக்கப்படவும் கல்வியறிவு ஊட்டப்படவும் வேண்டுமென்ற மக்களின் தேசிய ரீதியான அபிலாசைகள் பல்வேறு பிரதிநிதித்துவ அமைப்புகள் ஊடாகவும், குறிப்பாக சட்டசபையின் ஊடாகவும் வெளிப்படத் தொடங்கின. எடுத்துக் காட்டாக ஜீ.கே.டபிள்யு. பெரேரா 1932 யூலையில் சட்டசபையில் பின்வரும் பிரேரணையை அறிமுகப்படுத்தினார்:





1. சிங்களத்தில் அல்லது தமிழில் ஓர் உயர் தரத்தை எட்டத்தவறுகின்ற எவரும் எதிர்காலத்தில் சிவில் அல்லது எழுதுவினைஞர் சேவைக்கு நியமிக்கப் படலாகாது.
2. சிவில் அல்லது எழுதுவினைஞர் சேவையிலுள்ள அலுவலர் எவரும் சிங்களத்தில் அல்லது தமிழில் தேர்ச்சியைக் காட்டினாலன்றி அல்லது காட்டும் வரையிலும் அவருக்குப் பதவியுயர்வு எதுவும் வழங்கப்படலாகாது.
3. எந்தவொரு நபரும் சிங்களத்தில் அல்லது தமிழில் நடவடிக்கைகளை நடத்துவதற்கும் பதிவு செய் வதற்கும் ஆற்றலுடையவரென நிரூபித்தாலன்றிப் பொலிஸ் நீதிவானாக அல்லது உயர் குற்றவியல் நீதிமன்றங்களில் தலைமை வகிப்பதற்கு நியமிக்கப் படலாகாது.
4. வழக்கறிஞர்கள் சிங்களத்தில் அல்லது தமிழில் குற்றவியல் வழக்குகளை நடத்துவதற்கு அனு மதிக்கப்படவேண்டும். (ஹன்சாட் 5 யூலை 1932: 1641)

இது மொழிக்கொள்கை அரசியலில் பிரிவினைக்கான ஒரு விடயமாக இருக்காத காலம். எனினும் கடந்த ஐந்து தசாப்த காலக் கொள்கை உருமாற்றம் உக்கிரமான கட்டங்களையும் இரு பெரும் அரசியலமைப்பு மாற்றங்களையும் கண்டது. அவை எல்லாம் நிருவாகக் கட்டமைப்பில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவனவாயிருந்தன.

1932இல் ஜீ.கே.டபிள்யு. பெரேராவின் பிரேரணையி லிருந்து 1978 அரசியலமைப்பின் 16ஆவது திருத்தம் வரை மொழிக்கொள்கையானது, உண்மையான அரசியல் சிந்தனையில் தொடங்கி, மொழித் தேசியவாதமும் அதன் பின்னர் இன முரண்பாடு என குறிப்பிடத்தக்க மாற்றங் களைக் கொண்ட ஐந்து தசாப்தங்களைக் கடந்துள்ளது. இதில் வியப்பென்னவென்றால், இந்நீண்ட காலத்தில் இம்முரண்பாடானது மனக்கசப்பு, சண்டை மற்றும் வன்முறை ஆகியவற்றை உருவாக்கியதுடன், இறுதியில் 1932இல் ஜீ.கே.டபிள்யு. பெரேராவால் முன்மொழியப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மொழிக் கோட்பாட்டுக் கொள்கைகளின் விரிவாக்கமே இன்று சட்டமாக உள்ளது.

பதினோராண்டுகளின் பின்னர், 1943 யூன் 22இல் சட்ட சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்வரும் பிரேரணையில், முதலில் பெரேராவால் துணிந்து கூறப்பட்ட சுதேச மொழிப் பயன்பாட்டின் மதிப்புப் பற்றிய எண்ணக் கருவுக்கு ஜயவர்தனவால் வேறுபட்ட தோற்றமொன்று அளிக்கப் பட்டது:

1. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் இலங்கையின் அரசகரும மொழியாகச் சிங்களத்தை ஆக்குகின்ற குறிக்கோளுடன்,
2. எல்லாப் பாடசாலைகளிலும் சிங்களம் போதனா மொழியாக்கப்பட வேண்டுமென்றும்,
3. பொதுப் பரீட்சைகள் எல்லாவற்றிலும் சிங்களம் ஒரு கட்டாய பாடமாக்கப்பட வேண்டுமென்றும்,
4. சட்ட சபையில் அலுவல் சிங்களத்திலும் நடத்தப் படுதலை அனுமதிப்பதற்குச் சட்டங்கள் அறிமுகப் படுத்தப்படவேண்டுமென்றும்,
5. ஏனைய மொழிகளிலுள்ள முக்கிய நூல்களைச் சிங்களத்தில் மொழிபெயர்ப்பதற்குத் தெரிவு செய்வதற்கும் மொழிபெயர்ப்பதற்கும் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென்றும்,
6. ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துக்கான மொழி மாற்றத்தைச் செயற்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் பற்றி அறிக்கையிடுவதற்கு ஆணைக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென்றும்,

இச்சபை கருதுகிறது. (ஹன்சாட்: அரசசபை 22 யூன் 1943: 1024).

அவரின் சிங்கள-ஆதரவுப் பிரேரணை 1944 மே 24ஆந் தேதியன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, தனியொரு சுதேச மொழியை வற்புறுத்துவதற்கான அவரின் உள்ளெண்ணத்தை ஜயவர்தன விளக்கினார்:





"அரசகரும மொழி ஆங்கிலமாக இருப்பதனால் தான் இந்நாடு அந்த ஆங்கிலப் பாடசாலைகளூடாக வரு கின்ற ஒரு சிறிய தனிக்குழுவால் எப்போதும் ஆளப்படு கின்ற ஆபத்திலுள்ளது. அதேசமயம் சிங்கள மற்றும் தமிழ்ப் பாடசாலைகளூடாக வருகின்ற அளப்பரிய பெரும் பான்மை எப்போதும் மரந்தறிப்பவர்களும் நீர் இறைப் பவர்களுமென்ற நிலையில்தான் இருக்க வேண்டும்" (ஹன்சாட் அரசசபை 24 மே 1944: 758).

ஒரு மொழியை 'அரசகரும' மொழி என்று அழைப்ப தன்மூலம் வெளிப்படும் கட்டற்ற அதிகாரத்தை அவர் இங்கு வலியுறுத்துகின்றார். எனினும் அன்றைய விவாதத்திலேயே ஜயவர்தன சிங்களத்தின் மீதான அவரின் முன்னைய வலி யுறுத்தலுக்கு ஒரு திருத்தத்தைக் கொண்டு வருகிறார்.

'தமிழையும் உள்ளடக்குவதற்கான எனது விருப்பம் தொடர்பில் எனது விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். தமிழ் பேசுகின்ற மாகாணங்களில் தமிழ் பேசப்பட வேண்டு மென்பதும், தமிழ் பேசுகின்ற மாகாணங்களில் தமிழ் அரச கரும மொழியாக இருக்க வேண்டுமென்பதும் எப்போதும் எனது நோக்கமாக இருந்துள்ளது.' (ஹன்சாட் அரசசபை 24 மே 1944: 759).

இங்கு தமிழும், 'கூட' என்ற அந்தஸ்தைப் பெறத் தொடங்குவதை நாம் அவதானிக்கலாம். அதாவது, அரச கரும மொழியாகச் சிங்களம் நிறைவேற்றப்படுவதை உறுதிப் படுத்துவதை நோக்கமாகக்கொண்டு, தமிழை இரண்டாம் பட்சமாக யோசித்ததன் வெளிப்பாடே 'தமிழும் கூட' என்ற விடயமாகும். இது பிற்சேர்க்கை என்ற நிலைப்பாட்டையே காட்டுகின்றது. ஜயவர்த்தனாவின் இருகூற்றுகளிலும் அவரின் அடிப்படைக் கொள்கையான சமத்துவமான அல்லது நியாயமான பிரதிநிதித்துவமென்ற அடிப்படைக் கோட்பாட்டுடன் அவர் தடுமாறுவதை நாம் காணக் கூடியதாயுள்ளது:

'இந்நாட்டின் மூன்றிலிரண்டு பங்கினரான மக்கள் சிங்களம் பேசுவதனால் இத்தீவின் அரசகரும மொழியாகச் சிங்களம் மட்டும் இருக்கவேண்டுமென்று முன் மொழிகின்ற உத்தேசம் எனக்கிருந்தது. ஆனால், தமிழைப் பேசுகின்ற

www.tamilarangam.net



தமிழ்ச் சமூகம் தமிழும் சிங்களத்துக்குச் சரிசம நிலையில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமென விரும்புவதாக எனக்குத் தோன்றுகிறது' (ஹன்சாட் அரசசபை 24 மே 1944: 759).

இப்பெரும்பான்மைத்துவ சனநாயகக் கோட்பாட்டில் தவிர்க்க முடியாதவாறு பின்னிப்பிணைந்துள்ள இச்சுய முரண்பாடுகள், பின்னர் மொழி உரிமைவாதிகள் எண்ணிக்கையின் மூலமான அடக்குமுறையென்று விவரிக்கக் கூடியதும், முழுத்தொகுதி மக்களினதும் குரலைத் தீவிரமாக நசுக்குவதுமான ஒன்றைத் தோற்றுவிக்கக்கூடியதாய் இருந்தன.

கலாச்சாரப் பாதுகாப்புடன் தொடர்புடைய ஒரு 'பெரும் அச்சம்' எழுவதாக ஜயவர்தன கபடமான முறையில் வாதிடுகின்றார். உலகில் முப்பது இலட்சம் மக்கள் மட்டுமே சிங்களம் பேசுகின்றனர். அதனால் இலங்கையில் தமிழும் அதற்குச் சமமான நிலையில் வைக்கப்படுமாயின் காலப்போக்கில் சிங்கள மொழி பாதிக்கப்படும் அல்லது முழுமையாக அழிந்துபோகுமென்று அவர் வாதிட்டார். இதனை வலியுறுத்தும் வகையில், 'நாலு கோடிக்கும் மேலானவர்களால் பயன்படுத்தப்படும்' தமிழ்க் கலாச்சாரமும், திரைப்படங்களும், இலக்கியமும் இலங்கையினுள் பலமான செல்வாக்குச் செலுத்துகின்றன என்று வாதிட்டார். தொடக்கத்தில் ஜயவர்தன அத்தகைய செல்வாக்கு 'சிங்கள மொழியின் எதிர்காலத்துக்குத் தீங்கானது' எனக் கருதினார். எனினும் தமிழ் பேசும் மக்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று அவர் விரும்பியதாகத் தோன்றுகின்றது.

> சிங்களத்துடன் தமிழுக்கும் சமமான அந்தஸ்து வழங்கப்படவேண்டுமென்பது தமிழரின் விருப்பமாக இருந்தால், அந்நிலையை அது அடைவதிலிருந்து அதனை நாம் தடுக்க வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. இந்நாட்டின் அரசகரும மொழியென்ற அதன் நிலையிலிருந்து ஆங்கிலம் அகற்றப்படவேண்டுமென்பதிலும், எமது மக்களின் புராதன மொழிகளான சிங்களமும் தமிழும் இலங்கையின் அரசகரும மொழிகளாக்கப்படவேண்டுமென்பதிலும் இச்சபை என்னுடன் சேர்ந்து வாக்களிக்குமென்பது நிச்சயம்" (ஹன்சாட் அரசசபை 24 மே 1944: 747 - 48).





ஒரு சனநாயகம் அதன் மக்களின் குரலைப் பிரதிநிதித்துவப்படுத்தவேண்டுமென்பதே சட்ட சபையில் ஜயவர்தனவின் முடிவுரையாயிருந்தது. திருகோணமலை-மட்டக்களப்பு உறுப்பினர் வீ. நல்லையா, நாட்டின் அரசகரும மொழிகளாகச் சிங்களத்தையும் தமிழையும் ஆக்கும் பொருட்டுப் பிரேரணைக்கு ஒரு திருத்தத்தை முன்மொழிந்தார். (ஹன்சாட் அரசசபை 24 மே 1944: 759). அத்திருத்தத்தை வழிமொழிந்த கம்பளை உறுப்பினர் ஆர்.எஸ்.எஸ். குணவர்தன முரண்பட்ட பண்புகளைக் கொண்ட குடிசனங்களின் மொழிகளுக்கு முறைப்படியான சட்டபூர்வ நிலை வழங்கப்படவேண்டியதன் தேவையைக் கூறினார்:

> 'ஒரு மொழி அரசகரும மொழியாக்கப்பட வேண்டுமென்பது இயல்பின்படி சாத்தியமற்றது. சிங்களம் அதற்கான ஒரு விடயமாகக் கூறப்பட்டவுடன் தமிழ் பேசுகின்ற ஏனைய நல்ல மக்கள் எல்லோரும் தமது மொழி கீழ்நிலைக்குப் பின்தள்ளப்பட்டுள்ளதாகவும் தமது நலன்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் எண்ணுவர். சமூகத்தின் இரு பிரிவினர் இரு மொழிகளைப் பேசுகின்ற நிலை இருக்கும்வரை, இரு மொழிகளும் அரசகரும மொழிகளாக அங்கீகரிக்கப்படவேண்டியது அவசியம். எமது சிக்கல்களுக்கு அதுவொரு தீர்வாயிருக்கும்' (ஹன்சாட் சட்டசபை 24 மே 1944: 760).

ஒரு நியமன உறுப்பினரான ரீ.பி. ஜாயா ஒத்த உணர்ச்சி நிரம்பிவழிபவராக 'இந்நாட்டின் மீது அன்பு செலுத்துபவர்கள்' என்ற காலனித்துவத்துக்கு முந்திய தேசியவாதத்துடன் சுதேச இரட்டைமொழிக் கொள்கையொன்றை ஒருங்குசேரக் குறிப்பிட்டார்:

> 'மிகப் பெரும்பான்மையான மக்கள் சிங்களவராகவும் தமிழராகவும் உள்ள இப்படிப்பட்ட ஒரு நாட்டில் இவ்விரு மொழிகளும் ஏன் கீழ்நிலைக்குப் பின்தள்ளப்பட வேண்டுமென்பதற்கு என்னால் காரணமெதனையும் காண



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முடியவில்லை' இந்நாட்டின் மீது அன்பு செலுத்துபவர்கள் சிங்களமும் தமிழும் அரசகரும மொழிகளாக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்த வேண்டுமென்றுதான் நினைக்கின்றேன் (ஹன்சாட் சட்டசபை 24 மே 1944: 762).

தேசப்பற்று தொடர்பில் மக்களை மெய்சிலிர்க்க வைக்கும் ஜாயாவின் கருத்து தேசப்பற்றுப் பற்றிய தனியொரு கலாச்சார வரைவிலக்கணத்திலிருந்து எழுகின்ற பிரச்சினையைக் கூடிய நெருக்கமாகப் பரிசீலனை செய்வதற்கு அப்போதைய பருத்தித்துறை உறுப்பினர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தைத் தூண்டியிருக்கக்கூடும். பொன்னம்பலம் கண்கூடாகக் கண்ட சமகால நிகழ்ச்சியான இரண்டாம் உலக யுத்தத்தின் பயங்கரங்களை எடுத்துக்காட்ட விழைந்தார்:

'சில காலத்துக்கு முன்னர் சட்ட சபையின் முதல்வர் கூட இப்பொறுப்பைத் தாமே நிறைவேற்ற மனதற்றவராயிருந்தார்: இங்கு ஒரேயொரு அரசகரும மொழி, ஒரேயொரு இனம், ஒரேயொரு சமயம் இருக்கின்ற ஒரு காலத்தை அவர் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்.' ஒரு மேம்பட்ட இனம் அல்லது ஐரோப்பாவில் ஒரு 'ஹொரன்வொக்' என்ற இந்தப் புரளியை ஒழித்துக் கட்டுவதற்கு முழு உலகிலும் ஒரு யுத்தம் புரியப்படுகின்ற இவ்வேளையில் அதனைத்தான் நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். இலங்கையில் ஒரு 'ஹெரன்வொக்' எமக்கு வேண்டாமென்பதுடன், இலங்கையின் ஏனைய மக்கள் பிரிவினர்மீது 'ஹொரன்வெக்'கின் மொழி திணிக்கப் படவும் கூடாது. அதுதான் எமது நிலை. அதனால்தான் நாம் இந்த ('சிங்களம் மட்டும்') பிரேரணையை எதிர்த்தோம். (ஹன்சாட் சட்டசபை 24 மே 1944: 765).

ஜயவர்தனவின் மூலப் பிரேரணைக்கான தமிழ் - சிங்களத் திருத்தத்தைப் பரிசீலனை செய்கையில் 'இவ்விரு மொழிகளும் அரசகரும மொழிகளாகக் கருதப்படுவதில் தமக்குத் தனிப்பட்ட ஆட்சேபம் எதுவுமில்லை' என்றும் '(திருத்தத்திலிருந்து) ஏதேனும் குறிப்பிட்ட தீங்கு அல்லது ஆபத்து அல்லது சிக்கல் எழுவதைத் தாம் காணவில்லை'; என்றும் பண்டாரநாயக்க தெரிவித்தார் (ஹன்சாட் சட்டசபை 24 மே 1944: 811). பின்னர் அவர் தமிழ் - சிங்கள





திருத்தத்துக்கு வாக்களிப்பதிலிருந்து தவிர்த்துக்கொள்வதன் மூலம் விலகிநிற்கும் இப்போக்கைத் தொடர்ந்தார்.

எனினும் இதற்கு முன்னர் ஜயவர்தன திருத்தத்தை ஆராய்ந்திருந்தார். புள்ளிவிவர அறிக்கைகளை ஒருவர் ஆராய்ந்து பார்த்தால் 'இந்நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களில் இரண்டில், வடக்கிலும் கிழக்கிலும், தொண்ணூறு சதவீதத்துக்குக் கூடியவர்கள் தமிழைப் பேசுகின்றனர்' என்று அவர் கூறினார். தமிழ் பேசுகின்ற குடிசனங்களுக்குத் தன்னுரிமையளிக்க வேண்டுமென்பதற்கான வாதத்தை அவர் தொடர்ந்தார்: 'அம்மாகாணங்களிலுள்ள மக்களுக்குத் தமிழை ஓர் அரசகரும மொழியாக நாம் மறுக்கக்கூடாது' (ஹன்சாட் சட்டசபை 24 மே 1944: 813).

ஜயவர்தனவின் சலுகையைத் தொடர்ந்து நாட்டின் அரசகரும மொழிகளாகச் சிங்களத்தையும் தமிழையும் ஆதரிக்கின்ற திருத்தம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டது. இதில் வாக்களிக்காது பண்டாரநாயக்க தவிர்த்தமை இவ்விடயத்தில் அவரின் தயக்கத்தை நினைவூட்டுவதாயிருந்தது. சட்டசபையின் இந்த இரட்டைமொழித் தீர்மானத்தின் பிரகாரம் சபையின் பதில் முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்:

(அ) நாட்டின் அரசகரும மொழிகளாகச் சிங்களத்தையும் தமிழையும் ஆக்குகின்ற குறிக்கோளுடன் ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துக்கும் தமிழுக்குமான மாற்றத்தைச் செயற்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்து அறிக்கையிடுவதற்கு சட்டசபையின் தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும்.

(ஆ) இக்குழு ஜே.ஆர். ஜயவர்தன உட்பட ஆறு உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

ஜயவர்தனவைத் தவிசாளராகத் தெரிவுசெய்த இக்குழு, கொழும்பிலும் பிற மாவட்டங்களிலும் பகிரங்க அமர்வுகளை நடத்துவதன்மூலமும் எழுத்திலான தெரிவிப்புகளை ஏற்றுக்கொள்வதன் மூலமும் தகவல்களைத் திரட்டத் தொடங்கியது. ஜயவர்தன குழு அதன் அறிக்கைகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முடிவு செய்ததைத் தொடர்ந்து அது கண்டறிந்த வற்றை 1946 டிசெம்பர் 7ஆந் தேதிய 1946இன் XXII ஆம் இலக்க அமர்வுப்பத்திரமாக வெளியிட்டது.

இந்த 1946 புள்ளிவிவரங்களைப் பரிசீலனை செய்த குழு பின்வருமாறு குறிப்பிட்டது:

எனவே, மொழியின் பிரகாரம் விகிதாச்சாரம் சிங்களம் பேசுபவர்கள் 69.6 சதவீதம் எனவும், தமிழ் பேசுபவர்கள் 28.6 சதவீதம் எனவும் மதிப்பிடலாம் (அட்டவணை 3.8).

**அட்டவணை 3.8**

**1946இல் சனத்தொகைப் புள்ளி விவரம்**
**(ஜயவர்தன குழு அறிக்கை)**

| இனம் | சனத்தொகை கிட்டிய ஆயிரத்தில் | மொத்த சதவீதம் |
|---|---|---|
| சிங்களவர் (கீழ்நாட்டு மற்றும் கண்டி) | 4,637,000 | 69.6 |
| இலங்கைத் தமிழர் | 826,000 | 12.4 |
| இலங்கைச் சோனகரும் மலாயரும் | 393,000 | 5.9 |
| இந்தியத் தமிழர் | 682,000 | 10.3 |
| ஏனைய இந்தியரும் இந்தியச் சோனகரும் | 6,900 | 1.0 |
| ஏனைய இனங்கள் | 1,200 | 0.8 |

மூலம் : ஜயவர்தன குழு, பருவப்பத்திரம் 1946இன் இல. XXII, இலங்கை : அரசாங்கம் வெளியீடு

1946ஆம் ஆண்டில் ஜயவர்தன தலைமையிலான குழு 1956 சம்பவங்களை எதிர்பார்த்திருக்க முடியாதென்ற அடிப்படையில், இன்று நாம் பின்னோக்கிப் பார்க்கின்ற பொழுது எள்ளிநகையாடக்கூடிய ஒரு நாளாக இன்று நாம் காணக்கூடிய 1957 சனவரி 1ஆந் தேதியை சிங்களமும் தமிழும் இலங்கையின் அரசகரும மொழிகளாக மாறுவதற்கான காலக்கெடுவாகக் குழு நிர்ணயித்திருந்ததுதான்





(1946இன் பருவப்பத்திரம் இல. 22:27). குழு உறுப்பினர்கள் அனைவரும் இந்த யோசனையை ஒருவரிடம் கொடுத்து அதன்மீது ஆக்கபூர்வமான திறனாய்வு செய்வதற்குப் பரிந்துரை செய்தனர். ஒருவேளை அதன் அமுலாக்கமானது ஒரு பயனளிக்கக்கூடிய பரிந்துரையில் தங்கியிருந்திருக்கலாம். அதாவது சிங்கள மற்றும் தமிழ் சுருக்கெழுத்தாளர்களைப் பயிற்றுவிப்பதற்கும் மற்றும் குறைந்தபட்சம் இரண்டாயிரம் தமிழ் சிங்கள தட்டச்சுப் பொறிகளை கொள்வனவு செய்வதற்குமான கட்டளையை வழங்குவதற்கான பரிந்துரையைச் செய்வதில் தங்கியிருந்திருக்கலாம் (1946இன் பருவப்பத்திரம் இல. 22: 20, பத்தி 20).

### அரசகரும மொழியாக 'சிங்களம் மட்டும்'

1956 பொதுத் தேர்தல் நெருங்கியபோது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) ஏனைய பல்வேறு எதிர்க்கட்சிகளையும் 'மகாஜன எக்சத் பெரமுன' (மக்கள் ஐக்கிய முன்னணி - MEP) என்ற பொது முன்னணியொன்றின்கீழ் கூட்டுச்சேர்த்து ஒரு தேர்தல் கூட்டமைப்பை உருவாக்கியது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் (UNP) தமது பிணைப்பை அறுத்துக்கொண்ட காலஞ்சென்ற பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தலைமை தாங்கினார். தாம் ஆட்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் நாற்பத்தெட்டு மணித்தியாலங்களினுள் சிங்களத்தை மட்டும் இலங்கையின் ஒரேயொரு 'அரசகரும மொழி'யாக சட்டமியற்றுவதாக அவர் பிரகடனப்படுத்தினார்.

பண்டாரநாயக்கவின் தேர்தல் வாக்குறுதியால் கலவரமடைந்த ஐக்கிய தேசியக் கட்சியும் 'சிங்களம் மட்டும்' பந்தயத்தில் இறங்கியது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஆளும் தன்மையுடைய அரசியலைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக் கொண்ட போதிலும் அவை இரண்டும் கவர்ச்சியூட்டும் அதிகார பலிபீடத்தில் சிறுபான்மைகளின் நலன்களையும் உரிமைகளையும் பலிகொடுக்கத் தயாராயிருந்தன. அத்தகைய பலியீட்டுக்கு எதிர்ப்பு இல்லாமலிருக்கவில்லை. 1952 முதல் 1956 வரையான பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகால உறுப்பினர்களில் ஒருவராக இருந்தவர் காங்கேசன்துறை உறுப்பினரான காலஞ்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்ற சுப்பையா நடேசன். உலகப்புகழ்பெற்ற சிறந்த அறிவாளியான அவர் ஐக்கிய தேசமொன்றை உருவாக்கு வதற்கு உதவும்பொருட்டு அரசியலில் பிரவேசித்தவர். ஐக்கிய தேசியக் கட்சி 'சிங்களம் மட்டும்' பந்தயத்தில் இறங்கி அதன்மூலம் அதன் அத்திவாரத்தையே தகர்க்க முற்பட்டபோது, நடேசன் தமது அஞ்சல் மற்றும் தகவல் அமைச்சுப் பதவியிலிருந்தும் தம்மை வளர்ப்பதற்கு உதவிய கட்சியிலிருந்தும் விலகினார்.

1956 சனவரி 20ஆந் தேதியன்று நடேசன் தமது இராஜினாமாவைக் கையளித்தார். இதயத்தைப் பிழிகின்ற ஒரு வேண்டுகோளில், சிங்களத்தை அரசகரும மொழி யாக்குவதற்கான ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்மானம் பற்றிய தமது ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார். சுதந்திரம் தொடர்பாக அவர் தெரிவிக்கையில், தமிழர் 'அந்நிய ஆட்சி இல்லாதொழிக்கப்படுவதோடு ஆங்கிலத்திற்குப் பதிலாக மற்றொரு மொழி தம்மீது திணிக்கப்படுவதற்கு ஒப்பந்தம் செய்யவில்லை' என்று கூறினார். மேலும், தமிழ் மொழி நாட்டின் அரசியல் திட்டத்தில் மிகக் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதென அவர் மிகத்திருத்தமாக அடை யாளங் காட்டினார். எதிர்க்காதிருத்தல் தவறுக்குத் துணை போதலாகும்: 'பெரும் கலாச்சாரத் தனிச்சிறப்புடைய இப்புராதன மொழி இந்நாட்டில் இழிந்த நிலைக்குத் தள்ளப்படுவதைச் சுயமரியாதையுள்ள எந்தவொரு தமிழனும் அனுமதிக்கமாட்டான்' (இலங்கைப் பாராளு மன்ற ஹன்சாட் 20 சனவரி 1956: 1863).

இங்கு நடேசன் சுய அடையாளத்தைத் தேசியப் போக்குடன் ஒருங்கிணைக்கின்றார். தேசிய அரசின் உரு வாக்கத்தின்போது சிங்கள சமூகங்களுடன் ஒரே காற்றைச் சுவாசித்தவர்களாக தமிழ் மக்களும் விவாதத்துக்கிட மின்றித் இத்தேசத்துடன் தம்மை ஒன்றாக அடையாளப் படுத்தினர். இலங்கையை உருவாக்குவதற்குப் பண்டைக் காலத்திலும் அண்மைக் காலத்திலும் தமிழர்களால் ஆற்றப் பட்ட பரந்தகன்ற பங்களிப்புகளை நடேசன் எடுத்துக் காட்டுகின்றார். 'எமது தமிழ்த் தலைவர்களில் சிலர் தமது சொந்த உற்றார் உறவினர்களுக்காகவன்றித் தமது சிங்களச் சகோதரர்களுக்காக வீரதீரத்துடன் போராடினர்' என்று





நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடிய அத்தலைவர் களைத் தனிப்படுத்திக் கூறுகின்றார்.

> "இத்தலைவர்கள் கௌரவிக்கப்பட்ட பெயர்கள் - தமிழ் மக்களைவிடக் கூடுதலாகச் சிங்கள மக்களால் கௌரவிக்கப்பட்டவர்கள். சபாநாயகர் அவர்களே, இராமநாதனும் அவரின் சகோதரர் அருணாச்சலமும் இலங்கையின் சுதந்திரத்துக்காகப் போராடிய போது, அவர்கள் பேசிய மொழி, அவர்கள் நாவன்மைக்கு உரமூட்டிய மொழி, அவர்கள் பெருமைப்பட்ட மொழி இந்நாட்டில் இழி நிலைக்குத் தள்ளப்படும் காலமொன்று வருமென்று அவர்கள் எண்ணிப் பார்த்திருக்கக்கூடுமென்று உங்களால் கற்பனை செய்ய முடியுமா?" (இலங்கைப் பாராளு மன்ற ஹன்சாட் 20 சனவரி 1956: 1863).

இரு மொழிகளினதும் வரலாற்றுப் பிணைப்பைத் தாபித்து நடேசன், சனநாயகம் பற்றிய வெறும் புள்ளி விவரம் சார்ந்த வரைவிலக்கணங்களுக்குக் கண்மூடித்தன மாக அடிபணிவதன் விளைவான நியாயமற்ற தன்மை யைக் குறிப்பிடுகின்றார்.

'சனநாயகம் என்பது பெரும்பான்மை அடக்குமுறை யைத் திணிப்பதென்ற கருத்தாகாது. அது எப்போதும் சிறுபான்மைகளுக்கு நீதியை நிலைநாட்டுகின்றது' (இலங் கைப் பாராளுமன்ற ஹன்சாட் 20 சனவரி 1956: 1862-65).

எனினும் நடேசன் எவ்வழிமுறையிலேனும் சாதிக்கப் படும் நீதியை விரும்பவில்லை. அவர் 'போர் மனப் பான்மையுடன்' பேசவில்லை எனக்குறிப்பிடுகின்றார்.

> தமிழர் தமது மிதவாதப் பாரம்பரியங்களிலிருந்து விலக வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்க வில்லை. ஆனால் எமது விருப்பத்துக்கெதிராக மொழியொன்று எம்மீது திணிக்கப்படுமாயின் நாம் அதனை எதிர்க்க வேண்டும், நாம் அதனை எதிர்ப்போம் என்று என்னால் சொல்லா திருக்க முடியாது. எதிர்ப்புக்காக அங்கீகரிக்கப்பட்ட மிகச் சிறந்த ஒழுக்கநெறிப் படியான போராட்டத்தை நாம் நடத்துவோம் (இலங்கைப் பாராளு மன்ற ஹன்சாட் 20 சனவரி 1956: 1864).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவுடன் பண்டாரநாயக்க பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டிருந் தார். அவரின் ஆரம்ப நாட்களில் சிங்களத்தை மட்டும் இலங்கையின் மொழியாக வரையறுக்கும் பொருட்டுப் பண்டாரநாயக்க 1956ஆம் ஆண்டு யூன் 5ஆந் தேதியன்று இலங்கையின் ஒரேயொரு அரசகரும மொழியாகச் சிங்களத்தை அறுதியிடுவதற்கும், அதற்கான தற்காலிக மாற்று ஏற்பாடுகளைச் செய்வதற்குமான சட்டமூல மொன்றை அறிமுகப்படுத்தினார் (இலங்கைப் பாராளு மன்ற ஹன்சாட் 5 யூன் 1956, தொகுதி : 24: 735). சட்ட மூலம் பின்வரும் வாசகத்தைக் கொண்டிருந்தது:

சிங்கள மொழியே இலங்கையின் ஒரேயொரு அரச கரும மொழியாக இருத்தல் வேண்டும். எப்படியெனில்; இச் சட்டம் அமலுக்கு வருவதைத் தொடர்ந்து உடனடி யாக எந்தவொரு அரசகரும நோக்கத்துக்காகவும்; சிங்கள மொழியை மட்டும் பயன்படுத்தத் தொடங்குதல் நடை முறை சாத்தியமற்றதென அமைச்சர்கள் கருதுகின்ற விடத்து, அதாவது 1960 ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆந் தேதி முடி வடைவதற்கு முன்னர் இயன்றவரை விரைவில் தேவையான மாற்றம் செய்யப்படும்வரையில் அந்நோக்கத் துக்காக இது காலவரை பயன்படுத்தப்பட்ட மொழி அல்லது மொழிகள் தொடர்ந்தும் அவ்வாறு பயன் படுத்தப்படலாம் (இலங்கைப் பாராளுமன்ற ஹன்சாட் 5 யூன் 1956, தொகுதி 24: 735).

இச்சட்டமூலத்தின்மீதான பாராளுமன்ற விவாதத்தின் போது தமிழ்த் தலைவர்களினதும் சமமான பிரதி நிதித்துவத்தின்பால் ஈடுபாடுகொண்ட சிங்களத் தலைவர் களினது வேண்டுதல்கள் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அசைக்கத் தவறின. விவாதத்தின் முடிவில் கடும் ஏமாற்ற மடைந்த வெள்ளவத்தை-கல்கிசைப் பாராளுமன்ற உறுப் பினரான காலஞ்சென்ற கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா ஒற்றுமையின்மை தேசத்தைச் சுரண்டலுக்கு இரையாக்கி விடுமென எச்சரித்தார்:

"சபாநாயகர் அவர்களே, சமத்துவம்தான் எமது தேசத்தின் விடுதலைக்கும் அதன் விகிதாச்சாரங்களின் ஐக்கியத்துக்கு மான பாதையென்று நாம் நம்புகின்றோம். இன்றேல் இத்தேசத்தின் ஒரு பெரும் பிரிவானது தானே தேசத் துரோகத்துக்கு நிர்ப்பத்திக்கப்படுவதன்மூலம் ஒரு சிறிய அரசிலிருந்து இரத்தம் பாய்கின்ற பிளவுபட்ட இரு சிறிய அரசுகள் தோன்றக்கூடும். அதுவே ஏகாதிபத்தியம் அண்மை யில் திருப்பிக் கொடுத்ததை ஏகாதிபத்திய வாதிகள் மீண்டும் சுருட்டிக்கொள்வதற்கு வழிவகுக்கும்" (ஹன்சாட், இலங்கைப் பாராளுமன்றம். 14 யூன் 1956: பத்தி 1917).





வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் சீ. சுந்தரலிங்கம் விரக்தியின் விளிம்பில் பிரதமருக்குக் கூறியதாவது:

"எனது வேலை வெளியே உள்ளதென்று நான் கருத வேண்டும். அத்துடன் பிரதமர் அவர்களே, நாம் எவ்வாறு இந்த யுத்தத்தை, நீதிக்கான இந்த யுத்தத்தை, நேர்மைக்கான இந்த யுத்தத்தைப் புரியவேண்டுமென்றும் நான் எண்ணிப் பார்க்க வேண்டும். நீங்கள் ஓர் ஐக்கிய இலங்கையை எதிர் பார்க்கின்றீர்கள். பிரதமர் அவர்களே, அது ஒரு சாதாரண விடயம். அஞ்சவேண்டாம், இறைவனின் அருளால் பிளவு பட்ட ஓர் இலங்கை உங்களுக்குக் கிடைக்குமென்று நான் உறுதியளிக்கின்றேன்" (ஹன்சாட், இலங்கைப் பாராளு மன்றம். 14 யூன் 1956: பத்தி 1939).

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 'சிங்களம் மட்டும்' என்ற தேர்தல் வாக்குறுதியுடன் ஐக்கிய தேசியக் கட்சியும் போட்டியிடத் தெரிவு செய்ததன் விளைவாக, அது தன் னுடைய சொந்தத் தேசிய உரிமையைச் சீர்குலைத்ததி னால் அதன் எதிர்ப்புக் குரலையோ அல்லது இதனைச் சரிப்படுத்துவதற்கான பிராயச்சித்தங்களைத் தேடுவதற் கான குரலையோ எழுப்பவில்லை. மாறாக ஐக்கிய தேசியக் கட்சி தேசத்தின் மிகப் புராதனமான முக்கிய அங்கங்களில் ஒன்றான தமிழ்க் குடிசனத்தைத் துண்டிக்கும் முயற்சியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தது. இவ்விரு கட்சிகளுக்கிடை யிலான போட்டியின் நிமித்தம் மிகப்பெரும்பான்மையால் தீர்மானிக்கப்பட்ட இச்சட்டமூலமான 1956இன் 33ஆம் இலக்கச் சட்டமூலம் 1956ஆம் ஆண்டு செப்ரெம்பர் 24ஆந் தேதியிலிருந்து சட்டவலுப்பெற்றது (பின்னிணைப்பு 5).

1956 சட்டமூலம் நிறைவேற்றப்படுவதற்கு வழிவகுத்த தந்திரோபாயத்தை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிங்களமொழி மீதான பேரார்வமோ அல்லது அதன் அபிவிருத்திக்கான பேராவலோ 'சிங்களம் மட்டும்' கோட்பாட்டைப் பரிந்துரை செய்தவர்களின் சிந்தனையை வழிநடத்தவில்லையென்பதை நாம் அவதானிக்க முடியும். அத்தகைய ஒரு பேரார்வம் இருந்திருக்குமாயின் தமிழை இழிநிலைக்குத் தள்ளவேண்டிய தேவை இருந்திருக்காது. மாறாக, அரசியல் சந்தர்ப்பவாதமானது அப்படிப்பட்ட பேரார்வம் தனக்கு இருப்பதாகத் தானே வெளிப்படுத்துவதற்கான ஒரு வழிமுறையைக் கண்டு கொண்டது. இது பிரித்து ஆளுகின்ற பரந்தகன்ற அதிகாரத்தைத் துரிதமாகப் பயன்படுத்துபவர்கள் விரக்தியுற்ற கிராமப்புறச் சிங்கள வெகுசனத்தின் மத்தியில் இலகுவாக தமக்கு அரசியல் ஆதாயத்தை ஈட்டக்கூடும்.

'சிங்களம் மட்டும்' எனக் குரலெழுப்பிய 'தேசபக்தர்கள்' கல்வியில் ஆங்கிலத்தையும் தமிழையும் கீழ்நிலைக்குத் தள்ளுவதன்மூலம் பொதுமக்கள் குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள், சமகாலக் கற்றலையும் அறிவையும் கிரகித்துக் கொள்வதற்கான வாய்ப்பை இழக்கச் செய்தனர். அத்தகைய இழப்பினால் உருவாக்கப்பட்ட சமூக ஏற்றத்தாழ்வுகளின் வலைப்பின்னல் முன்பிருந்த இன வேறுபாடுகளை மேலும் ஆழமாக்கின.

அதனைத் தொடர்ந்து தமிழர்களின் மொழிப்பற்று பண்டாரநாயக்கவின் காதுகளுக்கு எட்டியிருக்கக்கூடும். பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கலாக, தமிழரசுக் கட்சித் தலைவர்களை வீட்டுக்காவலிலும் பெருந்தொகையான மக்களைத் தடுப்புக்காவலிலும் வைத்த பின்னர், பண்டாரநாயக்க 1958ஆம் ஆண்டு யூலை 17ஆம் தேதியன்று 'தமிழ்மொழியின் பயன்பாட்டுக்கான ஏற்பாட்டைச் செய்வதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதன் தொடர்ச்சியான நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்வதற்குமான' ஒரு சட்டமூலத்துக்கான முன்னறிவித்தலைக் கொடுத்தார் (இலங்கை பாராளுமன்ற ஹன்சாட் 17 யூலை 1958: பத்தி 1967).

பண்டாரநாயக்கவின் சட்டமூலம் 1958 ஆகஸ்ட் 5ஆம் தேதியன்று பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சட்டமூலத்தை நிராகரித்து லங்கா





சமசமாஜக் கட்சி (LSSP) உறுப்பினர் கலாநிதி என்.எம். பெரேரா தெரிவித்தக் கருத்து வருமாறு:

> மொழிப் பிரச் சனைக்கு ஒரேயொரு தீர்வு தமிழ்மொழிக்கு முறையான அரசகரும அந்தஸ்தை வழங்குகின்ற ஒன்றென் பதை நாம் மீண்டும் வலியுறுத்துகின்றோம். இதுவொன்று மட்டும் தான் இந்நாட்டின் ஐக்கியத்தை உறுதிப்படுத்தும்' (இலங்கை பாராளுமன்ற ஹன்சாட் 5 ஆகஸ்ட் 1958: பத்தி 1938).

சாராம்சத்தில் 'சிங்களம் மட்டும்' அரசகரும மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டதைத் தவிரச் சட்டத்தில் வேறு எதுவும் இருக்கவில்லை. எனவே இவ்விதியின் கோட்பாடுகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பலன் அளிப்பதற்கான நிபந்தனைகள் எவையும் வகுக்கப்படாததனால் கொள்கை அடிப்படையில் பெருமளவு குழப்பம் நிலவியது. குறிப்பாக அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இவ்வகையான விடயங்களில் அரசாங்கக் கொள்கை முடிவுகள் சட்டத்தின் மூலமும் துணை விதிகள் மூலமும் போற்றிப் பேணப்படுமாயின் அவை எல்லோரும் திருப்திப்படுமளவுக்கு உறுதிப்படுத்தப்படுகின்றன. எனவே துரதிர்ஷ்டவசமாக இக்குறைபாடானது சட்டத்தின் உறுதியான அமுலாக்கத்திற்கு ஊறுவிளைவித்தது. எனவே, இந்தக் குழப்பம் ஏற்படுத்திய பிளவை ஈராண்டுகளுக்குள் நிவர்த்தி செய்ய வேண்டியிருந்தது. 1958ஆம் ஆண்டு செப்ரெம்பரில் 1958இன் 28ஆம் இலக்க தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை இயற்றுவதன் ஊடாக இது சரிசெய்யப்பட்டது. இச்சட்டம் அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பாதிக்காமல் தமிழ்மொழியின் பயன்பாட்டுக்கு ஏற்பாடு செய்தது.

எனவே தமிழின் நியாயமான பயன்பாட்டுக்குச் சட்டத்தின்மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. இங்குகூடப் பல்வேறு விடயங்கள் காலக்கிரமத்தில் வகுக்கப்படவுள்ள ஒழுங்குவிதிகள்மூலம் தெளிவுபடுத்தப்படுவதற்காக விடப்பட்டன. எனினும் எட்டு ஆண்டுகளாக அத்தகைய ஒழுங்குவிதி எதுவும் அறிமுகப்படுத்தப்படவில்லை.

1966இல்தான் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகள் வகுக்கப்பட்டன. ஜே.ஆர். ஜயவர்தன இராசாங்க அமைச்சரென்ற வகையில் 1958



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன் 28ஆம் இலக்கத் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம், 5ஆம், 6ஆம் பிரிவுகளின்கீழ் இவ்வொழுங்கு விதிகளை அறிமுகப்படுத்தினார். அவை பின்வருமாறு தமிழ்மொழி பயன்படுத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்தது:

1. (அ)வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரசாங்க மற்றும் பகிரங்க அலுவல்கள் எல்லாவற்றையும் நடத்துவதற்கும் பகிரங்கப் பதிவுச் சான்றுகளைப் பேணுவதற்கும்,

   (ஆ)தமிழ்மொழியில் அலுவல்களை நடத்துகின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள ஏதேனும் உள்ளூர் அதிகாரசபைகளுக்கிடையிலும் உத்தியோக பூர்வமுறையில் எவரேனும் அலுவலருக்கும் தமிழில் கல்விகற்ற எவரேனும் ஆளுக்கும் இடையிலுமான கடிதத் தொடர்புகள் எல்லாவற்றிலும்,

2. அரசாங்கத்தாலும் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களாலும் நியதிச்சட்டமுறையான நிறுவனங்களாலும் பயன்படுத்தப்படும் அல்லது வெளியிடப்படும் எல்லாக் கட்டளைகள், பிரகடனங்கள், விதிகள், துணைவிதிகள், எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழ் செய்யப்படும் அல்லது வெளியிடப்படும் ஒழுங்கு விதிகள் மற்றும் அறிவித்தல்கள், சுற்றறிக்கைகள் மற்றும் நியதிகள் ஆகிய எல்லாவற்றிற்கும் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்தது.

ஒழுங்குவிதிகளை ஆதரித்துப் பேசிய செல்வநாயகம் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> 'ஒரு சுதந்திரமான மக்கள் அவர்களின் சொந்த மொழி மூலம் ஆட்சி செய்யப்படுதல் இன்றியமையாதது. மக்கள் அவர்களின் சொந்த மொழிமூலமாகவன்றி வேறு ஏதேனும் மொழிமூலம் ஆட்சி செய்யப்படுவார்களாயின் அவர்கள் சுதந்திரமான மக்களல்ல. இலங்கையில் சிங்களம் பேசும் மக்களுக்குச் சிங்களமொழி எவ்வாறிருக்கின்றதோ அவ்வாறே தமிழ்பேசும் மக்களுக்குத் தமிழ்மொழி இருக்க வேண்டும்' (இலங்கை பாராளுமன்றம் ஹன்சாட் 8 சனவரி 1966: பத்தி 130).





செல்வநாயகம் சுதந்திரத்துக்கு முந்தியதும் பிந்தியதுமான வரலாற்றை விரித்துக்கூறுவதன்மூலம் தொடர்ந்தார். 1944 சட்டசபைத் தீர்மானம் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்தென்ற கோட்பாட்டை ஏற்றுக்கொண்டிருந்தது. அதன் அடிப்படையில் நாட்டுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது. 1956வரை எல்லா அரசியல் கட்சிகளும் 'சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்தென்ற இந்த அடிப்படைக் கோட்பாட்டை' ஏற்றுக்கொண்டிருந்தன. தமிழ் பேசுகின்ற மக்கள் அரசாங்கத்துடனான தமது அலுவல்களைத் தமது சொந்த மொழியில் நடத்துவதற்கான இந்த உரிமைதான் மிகவும் அடிப்படையான உரிமை (இ.பா. ஹன்சாட் 8 சனவரி 1966: பத்தி 130).

நடைமுறையிலிருந்த சட்டங்களின்கீழ் எட்டப் பட்ட சீரமைவினுள் அத்தகையதோர் அடிப்படையான உரிமையை வடக்கு-கிழக்குக்கு வெளியேயுள்ள பிரதேசங்களுக்கு நீடிக்க முடியாதிருந்தமைதான் செல்வநாயகத்தின் பிரதானக் கவலையாயிருந்தது. 1966ஆம் ஆண்டு பெப்ருவரி 3ஆந் தேதிய 14,653ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் ஆவணப்படுத்தப்பட்டவாறு அரசாங்கம் பின்னர் இவ்வொழுங்குவிதிகளை நிறைவேற்றியது. திறைசேரிச் செயலாளர் 1966 மார்ச் 26ஆந் தேதிய 686ஆம் இலக்கச் சுற்றறிக்கை ஊடாக அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் இச்செய்தியைத் தெரிவித்தார்.

சட்டத்தின்கீழான இவ்வொழுங்குவிதிகள் நிறைவேற்றப்பட்டு மூன்றாண்டுகளின் பின்னர் இவ்விடயத்தில் அரசாங்கத்தின் கொள்கையைத் தெளிவுபடுத்தும் வகையில் திறைசேரி 1969ஆம் ஆண்டு பெப்ருவரி 28ஆந் தேதிய 760ஆம் இலக்கச் சுற்றறிக்கையை வெளியிட்டது. அதன் தலைப்பிலிருந்தே அரசாங்கம் எவ்வாறு திரும்பவும் தமிழை, பொது அபிப்பிராயத்தின்கீழ் இறுக்கமாகப் பிடித்திருந்தது என்பதையும், ஆனால் 'நியாயமான' சூழ்நிலைகளின்கீழ் அவிழ்த்துவிடக் கூடியதுமான, ஒரு நெகிழ்வுச் சுருக்கு நிலைக்குத் தள்ளியிருந்ததென்பதையும் நாம் அவதானிக்க முடியும்.

1970ஆம் ஆண்டு மேயில் ஐக்கிய முன்னணி (UF) ஆட்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டது. சோல்பரி அரசிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லமைப்பென்று பிரபலமாக அறியப்பட்ட 1948 அரசியலமைப்பின் 29ஆம் பிரிவு சிறுபான்மையினரின் உரிமைகளையும் நலன்களையும் மட்டுப்படுத்தப்பட்ட அளவுக்குப் பாதுகாத்திருந்தது. அது சமாதானத்துக்கும் நல்ல ஆட்சி முறைக்கும் தீங்கு விளைவிக்கக்கூடிய சட்டங்களை ஆக்குவதிலிருந்தும் பாராளுமன்றத்தைத் தடுப்பதாயிருந்தது.

ஐயப்பாடான மரபுச்சொத்தென்று ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த அரசியலமைப்பு முழுவதையும் ஐக்கிய முன்னணி கைவிட்டது. 1972ஆம் ஆண்டு மேமாதம் 22ஆந் தேதியன்று அமுலுக்கு வந்த புதிய குடியரசு அரசியலமைப்பானது 'சிலோன்' என்றழைக்கப்பட்ட இலங்கையை 'ஸ்ரீலங்கா' என மறுபெயரிடப்பட்டு ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தியது. புதிய அரசியலமைப்பின் 12ஆம் உறுப்புரை, 'அரசியலமைப்பில் வேறுவகையில் வெளிப்படையாகக் கூறப்பட்டவை தவிர' அரசியலமைப்புத் தொடங்குவதற்கு முன்னர் அமுலிலிருந்த எழுத்துமூலமான மற்றும் எழுத்திலில்லாத எல்லாச் சட்டங்களும் தொடர்ந்தும் அமுலில் உள்ளன' என்று வகை செய்தது.

இந்நிபந்தனைகளின்கீழ், 1958இன் 28ஆம் இலக்கத் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டமும், அச்சட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட ஒழுங்குவிதிகளும் செயல் விளைவுடையனவாகத் தொடர்ந்தும் உள்ளனவென்று குடியரசு அரசியலமைப்பின் 8(1)ஆம், (2)ஆம் உறுப்புரைகள் கூறின.

> 'எவ்வகையிலும் அவை அரசியலமைப்பின் ஓர் ஏற்பாடாகப் பொருள்கொள்ளப்படலாகாது. மாறாக, 13ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நடைமுறையிலுள்ள எழுத்திலான சட்டமாகத் தொடர்ந்தும் அமுலில் இருக்கின்ற துணைச் சட்டமாகக் கருதப்படுதல் வேண்டும்;

மேலதிகமாக, புதிய அரசியலமைப்பின் உறுப்புரை 11(3), (4), (5) மற்றும் (6) நீதிமன்றங்களில் முறையீடுகளையும் விண்ணப்பங்களையும் செய்வதற்குத் தமிழ்மொழி பயன்படுத்தப்படுவதற்கு வகை செய்தது. இலங்கைக் குடியரசின் தேசிய அரசுப் பேரவை, நீதிமன்றங்களில் தமிழ்மொழியின் உபயோகத்தை வரையறை செய்கின்ற 1973இன்





14ஆம் இலக்க, நீதிமன்ற மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை நிறைவேற்றியது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களில் தமிழின் உபயோகத்தை மேலும் தெளிவுபடுத்துகின்றனவாக இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகள் தேசிய அரசுப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டன.

இந்த அரசியலமைப்பின் குறிப்பிடத்தக்க அம்சம், சிறுபான்மைகளின் உரிமைகளுக்கு ஓரளவு உத்தரவாதமளித்த சோல்பரி அரசியலமைப்பின் 29ஆம் உறுப்புரையைப் போன்ற ஒரு வாசகம் இல்லாமையாகும். மேலும் தமிழ்மொழியின் உபயோகம் பற்றிய ஏற்பாடுகள் பொதுவாகத் துணைச் சட்டமாக நடத்தப்படுகின்றனவேயன்றி அரசியலமைப்பு ஏற்பாடுகளாகவல்ல. இவ்விடயம் பற்றிய ஆய்வாளர்களால் இதுவரை புறக்கணிக்கப்பட்ட ஓர் அப்பட்டமான உண்மை, 1956இன் 33ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டம், 1958இன் 28ஆம் இலக்க தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம், 1973இன் 14ஆம் இலக்க நீதிமன்றங்களின் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ஆகிய மூன்று சட்டங்களின் சட்ட வெளிப்பாடானது வெற்றிடமொன்றில் இடம்பெற்றவைபோன்று ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமலிருந்தது.

இதற்குப் பிரதான காரணம் மொழிச் சட்டங்களை நிறைவேற்றும்போது தெளிவான தொடர்பாடலுக்கான தேவையைக் கண்டுணரத் தவறியமையே. 1958 மற்றும் 1973 சட்டங்கள் 1956இன் 33ஆம் இலக்க மூலச்சட்டத்துக்கான திருத்தங்களல்ல. மேலும், பின்வந்த இரு சட்டங்களினதும் முன்னுரை அவை '1956இன் 33ஆம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரண்படாமல்' நடைமுறைப் படுத்தப்படுமெனக் கூறுகின்றது: இரண்டாம் மற்றும் மூன்றாம் சட்டங்கள் மூலச்சட்டத்தின் நிலை மீறப்படலாகா தென்று மீளவும் வலியுறுத்துகின்றன.

சட்டத்தினுள் காணப்படும் இப்பணிப்புரைகளின் பன்மை தமிழின் உத்தியோகபூர்வ உபயோகத்தை எதிர்ப்பவர்களுக்குப் பல்வகைப்பட்ட வாய்ப்புகளை வழங்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கின்றது. இவ்விருபொருள் மயக்கத்தின்கீழ் தமிழின் உபயோகம் தொடர்பான சட்டங்களின் தேவைகளை வேண்டுமென்றே உதாசீனப்படுத்துகின்ற ஓர் அலுவலருக் கெதிராகக்கூட நடவடிக்கை எடுக்க முடியாது. ஏனெனில் அவர் தாம் வெறுமனே 1956இன் 'சிங்களம் மட்டும்' சட்டத்தைத் தொடர்ந்தும் செயற்படுத்தினாரென்ற நிலைப் பாட்டை எப்போதும் எடுத்துத் தப்பித்துக்கொள்ளலாம். எனவே சட்டப்படி குறைகாண முடியாததும் முதன்மை யானதுமான 'சிங்களம் மட்டும்' சட்டம் தனது அதிஉச்ச நிலையைத் தொடர்ந்தும் வகிக்கின்றது. பின்னர் வந்த சட்ட ஏற்பாடுகள் 'வேறு ஏதேனும் சட்டம் கொண்டுள் ளதற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும்' என்ற வழமை யான வாசகத்தைக் கொண்டிராதபடியால் தனியோர் அரசகரும மொழிச்சட்டம் - அதாவது 1956இன் 33ஆம் இலக்கச் சட்டம் அவற்றையெல்லாம் மேலோங்கி நிற்க வேண்டுமென்று விளங்கிக்கொள்ளக் கூடுமென்பதனால், சிங்களம் மட்டும் என்னும் கொள்கையையே ஓர் அடிப் படைக் கொள்கையாக ஏற்றுக் கொள்ளச் செய்கின்றன.

## 'சிங்களம் மட்டும்' சட்டமும் பேராண்மையின் வளர்ச்சியும்

பாராளுமன்றத்திலிருந்த சிங்களப் பெரும்பான்மை யானது 1956ஆண்டில் சிங்களத்தை தேசத்தின் அரசகரும மொழியாக ஆக்குகின்ற சட்டத்தை நிறைவேற்றியது (கியர்னி, 1978). தமிழர் அரசாங்கத் துறையில் தொழில் ஈட்டுவதற்கும், அரசாங்கச் சேவைகளில் அவர்களின் வேலைகளை நிலையாக வைத்திருப்பதற்கும், பதவியுயர்வு களைப் பெறுவதற்கும் அவர்களுக்கு அந்நியமான ஒரு மொழியில் விரைவாகத் தேர்ச்சி பெறும்படி கோரப்பட் டனர். தமிழ்ப் பிரதேசங்களில் வாழையடி வாழையாகப் பெற்றோர் தமது பிள்ளைகளுடன் தங்களது சொந்த மொழியான தமிழ் மொழியில் தொடர்புகொண்டிருந் தனர். இந்நாடு ஆங்கிலேய ஆட்சியின்கீழ் வரும்வரை பல நூற்றாண்டுகளாகப் பாடசாலைகளில் ஒரேயொரு போதனாமொழியாகத் தமிழ்தான் இருந்துவந்துள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில்கூட ஆரம்பப் பாட சாலைகளில் தமிழ்தான் ஒரேயொரு போதனாமொழி





யாக இருந்தது. உயர்நிலைப் பள்ளிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் மட்டும்தான் ஆங்கிலம் பயன்படுத்தப் பட்டது. எனவே ஆங்கிலக் கல்வி கற்ற உயர்குடியினர் மட்டத்தைத் தவிர, சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கு மிடையில் சமூக உறவுகள் மிகக்குறைவாகவே இருந்தன. மொழிக்காரணியுடன் மனக்கசப்புக்களும் இரு மக்களை யும் பிரித்து வைத்திருந்தன. இத்தீவு ஆங்கிலேயர் ஆட்சி யின்கீழ்க் கொண்டுவரப்பட்ட பின்னரும்கூட தமிழருக்கும் சிங்களவருக்குமிடையிலான சமூக உறவுகள் மிகக்குறைந்த அளவே பேணப்பட்டு வந்துள்ளன.

வெவ்வேறு குழுக்களுக்கிடையிலான திருமணங்கள் இத்தீவில் மிக அரிதாயிருந்துள்ளன. இருப்பினும் ஆங்கி லேயர் காலத்தின்போது சிங்களவரும் தமிழரும் ஆங்கிலத் தின் ஊடாக ஒருவரோடொருவர் தொடர்புகொள்வதற் கான வாய்ப்பு இருந்தது. அரசகரும மொழியாகச் சிங்களம் ஆங்கிலத்தைப் பதிலீடு செய்தபோது இரு மக்களும் இரு வேறு திசைகளில் அடித்துச் செல்லப்பட்டனர். 1960களில் அரசாங்கம் சிங்கள மாணவர்களும் தமிழ் மாணவர்களும் பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை தத்தமது சொந்த மொழியில் போதிக்கப்படவேண்டுமென்ற ஒழுங்கு விதியை வெளியிட்டதன் விளைவாக, சிங்கள மாணவர் தமிழ் மாணவருடன் தொடர்பு கொள்ளல் சாத்தியமற்ற தாகியது. பழைய பாடசாலைகள் தேசியமயமாக்கப் பட்டதைத் தொடர்ந்து, தமிழ்ப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பாடசாலைகளில் மட்டுமே கல்வி கற்பிக்க முடியுமென்று கட்டாயப்படுத்துகின்ற ஒழுங்கு விதிகள் தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தப்பட்டன.

தேசத்தின் ஒரேயொரு அரசகரும மொழியாகச் சிங்களத்தை ஆக்குகின்ற சட்டம் நிறைவேற்றப்பட்டமை, சிங்களவரைப்போன்று ஆங்கில ஆட்சியிலிருந்து விடு விக்கப்பட்ட தமிழரின் அபிலாசைகளுக்குப் பேரிடியாகியது. தமிழர் அந்நியர் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றவுடன், அது அரசாங்க சேவையில் வேலைகளைத் தேடுவதற்காகத் தமது பிள்ளைகளை ஓர் அந்நிய மொழியில் கற்பிக்க வேண்டிய தேவையிலிருந்து விடுவிக்குமென்றும், அரசாங்க அலுவலர்களுடன் தமது சொந்த மொழியில் தொடர்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொள்ள வழிவகுக்குமென்றும் தமிழர் எதிர்பார்த்திருந் தனர். 1956 சிங்களம் மட்டும் சட்டத்தில் தமிழின் நியாய மான உபயோகத்துக்கான ஏற்பாடுகள் உள்ளடக்கப் படாத தன் மூலம் இவ்வுரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டது. இது தமிழ் மக்களுக்கு, விசேடமாக இதனால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட தமிழ் இளைஞர்களுக்குப் பெரும் மனத் தாங்கலை ஏற்படுத்தியது. இதுவும் ஏனைய பாகுபாடான ஒழுங்குவிதிகளும் தமிழ்ப் போராளி இயக்கங்களின் படிப்படியான எழுச்சிக்கு வழிவகுத்தன.

## இன முரண்பாட்டைத் தூண்டுவதில் கல்வியின் பங்கு

இலங்கையில் கல்வி, சமூக இயங்குதிறனுக்கு ஒரு முக்கியத் திறவுகோலாக இருந்து வந்துள்ளதுடன், இப்போதும் அவ்வாறே நோக்கப்படுகின்றது. கல்விக் கான, விசேடமாக மூன்றாம்நிலைக் கல்வியானது, சிவில் சேவையில் அல்லது உயர்தொழில்களில் பெருவிருப்புக் குரியதும் செல்வாக்கு மிக்கதுமான பதவிகளைப் பெறு வதற்கு இன்றியமையாததாயிருந்தது. இலங்கைத் தமிழர், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ளவர்கள், கல்வி யில் முதலீடு செய்கின்ற நீண்ட பாரம்பரியத்தைக் கொண் டுள்ளனரென்பது பரந்த அளவில் ஒப்புக் கொள்ளப்பட் டுள்ளது (எ.கா. யுஎன்டிபீ, 1998: 20). பல்வேறு காரணங் களின் நிமித்தம் இக்குழுவினர் நாட்டின் மூன்றாம்நிலைக் கல்வி இடங்களில், விசேடமாக விஞ்ஞான அடிப்படைக் கல்விநெறிகளில், பெரும்பங்கைப் பெற்றுக்கொள்வதில் வெற்றிகண்டுவந்துள்ளனர். இம்மிகையான பிரதிநிதித் துவம் ஒரு முக்கிய அரசியல் பிரச்சினையாகியதுடன், அரசாங்கத்துறையில் தொழில் வாய்ப்புப் பற்றிய ஒத்த விவாதங்களுடன் சேர்ந்து தமிழ்த் தேசியவாதத்தின்மீதும் பிரிவினைவாதத்தின்மீதும் மறுக்கமுடியாத தாக்கத்தை யும் ஏற்படுத்தியது.

1970களின் தொடக்கத்திலிருந்து நடுப்பகுதிவரை பல்கலைக்கழக அனுமதி பற்றிய விவாதம் சூடுபிடித்துக் கொண்டிருந்த காலத்தில், மூன்றாம்நிலைக் கல்விக்கான வாய்ப்பில் இன ஏற்றத் தாழ்வுகளைத் 'திருத்துவதற்கு' அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்கும், தமிழ் இளைஞர் மத்தியிலான பிரிவினைவாத உணர்வுகளுக்குமிடையில் ஒரு தொடர்பு இருந்துள்ளதாகத் தோன்றுகின்றது. வில்சன் மற்றும் சந்திரகாந்தன் (1998: அத். 7) கூற்றுப்படி, பல்கலைக் கழக அனுமதிகளில் 'தரப்படுத்தல்' என்ற கடைசி துரும்பைத் தொடர்ந்து, இலங்கையின் ஒற்றையாட்சிக்குள் தமிழர்கள் கட்டுப்படுவதற்கு முதலாவது நிபந்தனை யாயிருந்த கல்வியையும் தொழில் வாய்ப்புக்களையும் அவர்கள் இழந்துவிட்டனரென்பது தெளிவாகியது. பெருந் தொகையான தமிழ் இளைஞர்கள் தனித் தமிழ் அர சொன்றின்கீழ் மட்டும்தான் தமது சமூக-பொருளாதார அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்ற முடிவுக்கு வந்தனர். ஒரு நீண்ட வரிசையான காரணிகளும் நிகழ்வுகளும் இனமுரண்பாட்டிற்குத் தூண்டு கோலா யிருந்ததைப் போலவே இச்சம்பவமும் இப்பிரச்சினை கொழுந்துவிட்டெரிவதற்குத் தூண்டுகோலாயிருந்தது. இவ்வரலாற்றைத்தான் இப்போது நாம் திரும்பிப் பார்க் கின்றோம்.

## காலனித்துவக் கல்வி

முறைசார்ந்த மேற்கத்தியப் பாணியிலான கல்வி பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரதான மாகக் கிறிஸ்தவ மதநிறுவனங்களுடன்தான் இலங்கைக்கு வந்தது. ஏதோ காரணத்தினால் சிங்களப் பிரதேசங் களைவிடத் தமிழ்ப் பிரதேசங்களில்தான் கூடிய மிஷனரிப் பாடசாலைகள் வழமையாக நிறுவப்பட்டன (றிக்கின்ஸ், 1960: 234). இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பக் காலத்துக் கிடையில் நாட்டின் ஆங்கிலமொழிப் பாடசாலைகளில் சுமார் 20 சதவீதமானவை வட மாகாணத்தில் அமைந் திருந்தன. 1927இல் வட மாகாணத்திலுள்ள ஆறு பிள்ளை களுக்கு ஒரு பிள்ளை ஆங்கிலப் பாடசாலைகளில் படித்துக் கொண்டிருந்தது. இது வேறெந்த மாகாணத்தையும் விட, உயர்வானதும் பத்துக்கு ஒன்றென்ற தேசியச் சராசரியை விடக் கூடியதுமாகும் (றொபேர்ட்ஸ், 1977 : அட்டவணை 3).

கல்வியில், பொதுவாக ஆங்கிலமொழிக் கல்வியில், இம்முந்திய அனுகூலம் கல்விகற்ற தமிழ் உயர்குடியின







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ருக்குக் குறிப்பிடத்தக்க ஆதாயங்களுக்கு வழிவகுத்தது. எடுத்துக்காட்டாக, 1911இல் சட்டசபையில் 'கல்விகற்ற இலங்கை' உறுப்பினர்களுக்கு வாக்களிப்பதற்குத் தகுதி பெற்ற ஏறக்குறைய 3000 வாக்காளர்களில் சுமார் 36.4 சதவீதத்தினர் தமிழராயிருந்தனர் (ரொபர்ட்ஸ், 1977 : அட்டவணை 8). இவ்விகிதாச்சாரம் அவ்வாண்டில் பொதுவாக வயதுவந்த ஆண் சனத் தொகையில் தமிழரின் விகிதாச்சாரத்தை (14.5%) விடக் குறிப்பிடத்தக்களவு அதிகமானதாயிருந்தது.

எனினும், இம்முந்திய அரசியல் அனுகூலங்களைவிட அதிக முக்கியமானவையாக கல்விமூலம் வழங்கப்பட்ட தொழில் வாய்ப்புகளும் அந்தஸ்துக்கான வாய்ப்புகளும் விளங்கின. காலனித்துவக் கல்விமுறை திறமையான, ஆங்கிலம் பேசுகின்ற எழுதுநர்களை - உள்நாட்டு நிருவாக உயர்குடியொன்றை - உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது (கே.எம். டி சில்வா, 1979வி பஸ்ரியன், 1984வி புறூரன் மற்றும் ஏனையோர் 1992: 88). காலனித்துவ காலத்தில் ஆங்கிலமொழிமூலப் பாடசாலைகளிலிருந்து கல்விப் பட்டம் பெற்றவர்கள் சிலோன் சிவில் சேவையில் ஆவலுடன் விரும்பப்படும் பதவிகளை, கீழ்மட்டங்களில் இருந்தபோதிலும், அதனை அடைவதற்கான மிகச் சிறந்த வாய்ப்பைப் பெற்றிருந்தனர். சில இலங்கைத் தமிழர் இம் முந்திய அனுகூலத்திலிருந்து கணிசமான அளவு பயனடைந்தனர்.

## பல்கலைக்கழகக் கல்வியில் பாகுபாடு

சுதந்திரத்தின் ஆரம்பக் காலத்தில் நாட்டின் பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களின் சேர்க்கை மட்டுப்படுத்தப் பட்டிருந்த அதேவேளையில் நாடுதழுவிய அளவில் ஆங்கில மொழியிலான அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற சிறந்த மாணவர் குழுவும் சிறியதாயிருந்தது. எனவே 1950களில் மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனங்களில் 3,000இற்கும் குறைந்த இடங்களே இருந்த போதிலும் விண்ணப்பிக்கின்ற ஒவ்வொரு மூன்றுபேரில் ஒருவருக்கு மேலாக அனுமதி பெறத்தக்கதாயிருந்தது (கே.எம். டி சில்வா, 1978: 85).





அட்டவணை 3.9

பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சைகளுக்குத் தோற்றுகை 1943–84;85

| ஆண்டு | பரீட்சைக்கு அமர்ந்த மொத்தம் | அனுமதிக்கப்பட்ட மொத்தம் |
|---|---|---|
| 1943 | 350 | 197 |
| 1945 | 754 | 289 |
| 1950 | 1443 | 438 |
| 1955 | 2061 | 658 |
| 1960 | 5277 | 1812 |
| 1965 | 31350 | 6359 |
| 1960 - 70 | 30445 | 3457 |
| 1973 - 74 | 36236 | 3533 |
| 1979 | 101015 | 5255 |
| 1984 - 85 | 105500 | 5630 |

மூலம் : Nithyananthan, V. 'An analysis of economic factors behind the origin and development of Tamil nationalism in Sri Lanka' 1987: 122, in Abeysekera, C. & Gunasinghe, N. (eds), *Facets of Ethnicity in Sri Lanka*, Colombo: SSA. Abeyratne, S. Economic Changes and Political Conflict in Developing Countries. Amsterdam: VU University Press, 1988: 156.

எனினும், அனைத்து மக்களுக்குமான பொதுக்கல்வி தங்குதடையின்றி வழங்கப்பட்டமை விரைவாக விளைவுகளை வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து பல்கலைக்கழகக் கல்வியானது வேண்டுகோள்களைப் பெருமளவுக்குப் பூர்த்தி செய்யமுடியாமலிருந்தது. எடுத்துக்காட்டாக, 1950களில் நாடெங்கிலும் சிரேஷ்ட இரண்டாம்நிலைக் கல்விக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 65,000 இலிருந்து 225,000 ஆக உயர்ந்தது. அதேவகையில் தரம் 12 (உயர்தரம்) கற்பிக்கின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை 1958இல் 50 இலிருந்து 1972ஆம்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆண்டளவில் 209 ஆக அதிகரித்தது (கே.எம். டி சில்வா, 1978: 91). மழலைப் பருவத்திலிருந்த இலங்கையின் உயர் கல்வி முறைமையினால் அதிகரித்த தேவைகளுக்கு ஈடு கொடுக்க முடியாதிருந்தது. 1960களில் உயர் கல்விக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை ஐந்து மடங்குக்கும் மேலாக அதிகரித்த போதிலும், பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பிற்கு விண்ணப்பித்த ஐந்து விண்ணப்ப தாரர்களில் ஒருவர் மட்டும்தான் வெற்றி பெறக் கூடியதாயிருந்தது. 1960களின் பிற்பகுதியில் உச்சத்தி லிருந்த மாணவர் சேர்க்கை 1970களின் தொடக்கத்தில் தேக்க நிலையை அடைந்து வீழ்ச்சியுற்றபோது மாணவர் சேர்க்கை வீதம் பத்துக்கு ஒன்றைவிடக் குறைந்தது. (அட்ட வணைகள் 3.9 மற்றும் 3.10).

அட்டவணை 3.10

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் சதவீதம் 1948 – 1979

| ஆண்டு | அனுமதிக்கப் பட்ட சதவீதம் | ஆண்டு | அனுமதிக்கப் பட்ட சதவீதம் | ஆண்டு | அனுமதிக்கப் பட்ட சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1948 | 22.4 | 1958 | 28.0 | 1970 | 10.9 |
| 1949 | 24.0 | 1959 | 30.0 | 1971 | கிடைக்கவில்லை |
| 1950 | 30.3 | 1960 | 34.3 | 1972 | 10.8 |
| 1951 | 28.1 | 1961 | 37.0 | 1973 | கிடைக்கவில்லை |
| 1952 | 25.6 | 1962 | 21.4 | 1974 | 11.2 |
| 1953 | 24.1 | 1963 | 22.6 | 1975 | 8.4 |
| 1954 | 29.5 | 1964 | 20.6 | 1976 | 7.8 |
| 1955 | 31.3 | 1965 | 20.3 | 1977 | 5.9 |
| 1956 | 35.1 | 1966 | 11.6 | 1978 | 6.7 |
| 1957 | 33.4 | 1967-69 | கிடைக்க வில்லை | 1979 | 6.4 |

மூலம்: Bastian, S. 'University Admission and National Question' in SSA of Sri Lanka (ed.) *Ethnicity and Social Change in Sri Lanka.* Colombo: SSA. 1984: 174





இலங்கையின் கல்வி முறைமை அரசாங்க சேவை யாளர்களை உருவாக்குவதற்காக வடிவமைக்கப் பட்டுள்ள போதிலும் அது விரைவில் அரசாங்கச் சேவை வழங் கலுக்குப் பட்டப்படிப்பை முடித்து வெளியேவரும் அனை வரையும் இரண்டாம்நிலை மற்றும் மூன்றாம்நிலைப் பட்டதாரிகளுக்கான பதவிகளில் ஈர்த்துக்கொள்ள முடி யாத கட்டத்தை அடைந்தது. இதன்விளைவாகப் பெரும் பாலான அரசாங்கத்துறைப் பதவிகளுக்கான புகுமுகத் தேவைகள் அதிகரிக்கப்பட்டதுடன், கலைத்துறைகளி லிருந்து விலகி விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பத்துறைகள் மீதான நாட்டமும் உருவாகியது. எனினும் விஞ்ஞான அடிப்படைக் கல்வி நெறிகளில் வளர்ச்சி (புதிய வசதி களுக்கும் உபகரணங்களுக்கும் கணிசமான மூலதன முதலீடு தேவைப்படுவதனால்) மந்தமானதாயிருந்தது. 1958இல் 450 மாணவர்கள் (முழு உள்ளெடுப்பின் 50.8%) விஞ்ஞான அடிப்படைக் கல்விநெறிகளுக்கு அனுமதிக்கப்பட்டனர். 1965ஆம் ஆண்டளவில் இத்தொகை 1014 ஆக அதிகரித்த போதிலும், கலைப் பாடநெறிகளுக்கான அனுமதிகளும் பெருமளவு அதிகரித்ததனால் முழு உள்ளெடுப்பின் 16.9 சதவீதத்தை மட்டுமே விஞ்ஞான அடிப்படைக் கல்வி பிரதி நிதித்துவப்படுத்தியது. 1970களின் தொடக்கத்தில் ஒட்டு மொத்த அனுமதிகள் வீழ்ச்சியடைந்ததனால் விஞ்ஞான உள்ளெடுப்பும் வீழ்ச்சியடைந்தது. 1969இல் 457 பேர் (15.3%) மட்டும் அனுமதிக்கப்பட்டனர். இத் தொகையும் சதவீதமும் இரட்டிப்பாவதற்கு ஏறக்குறைய ஒரு தசாப்த காலமெடுத் தது (கே.எம். டி சில்வா, 1977: 423 கே.எம். டி சில்வா 1978: அட்டவணை 1). எனவே, விஞ்ஞான அடிப்படைக் கல்வி நெறிகளில் அனுமதிக்கான போட்டி குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்ததன் பயனாக, அக்கல்வி நெறிகளுக்கான அனுமதி முறையானது எளிதில் உணர்ந்து கொள்ளக் கூடிய ஓர் இனப்பிரச்சினையாக மாறியதில் வியப்பில்லை.

### பல்கலைக்கழக அனுமதியில் தமிழர் பாகுபடுத்தப்படுதல்

பல்கலைக்கழக அனுமதியைச் சர்ச்சைக்குரிய ஒரு விவாதத்திற்கு இட்டுச்செல்வதாயிருந்த இரு நிகழ்ச்சிகள் கல்விக் கொள்கையை இன விவாதங்களின் எல்லையினுள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டுவந்தன. முதலாவது, 1960-61இல் தனியார் பாடசாலைகளும் சமயப் பாடசாலைகளும் தேசியமயமாக்கப்பட்டமை. அது பிரதானமாகக் கல்வியின்மீது சமயக் குழுக்கள் பிரயோகித்துவந்த கட்டுப்பாட்டைக் வேரறுக்கும் நோக்குடையதாக இருந்த அதேவேளையில், இன ரீதியான அம்சமொன்றையும் கொண்டிருந்தது. சில அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளவாறு (கே.எம். டி சில்வா - 1979 பஸ்ரியன், 1984: 169-70), இந்து மற்றும் கிறிஸ்தவ தலைமைத்துவங்கள் அத்தகைய முயற்சிகளையிட்டு எச்சரிக்கையாயிருந்த அதேவேளையில், பௌத்த தலைமைத்துவம் அரசினால் அதன் நலன்கள் பாதிக்கப்படமாட்டாவென்ற நம்பிக்கையுடன் அதன் பாடசாலைகளைக் கையளிப்பதற்குப் பெரிதும் விருப்பம் கொண்டிருந்தன. இரண்டாவது, 'சிங்களம் மட்டும்' கொள்கை ஊக்குவிக்கப்பட்டமையும், முதலில் இரண்டாம்நிலைக் கல்விக்கும் பின்னர் மூன்றாம்நிலைக் கல்விக்கும் சுதேச மொழிமூலம் கற்கைநெறி அறிமுகப்படுத்தப்பட்டமையும் ஆகும். இதன் விளைவாகத் தமிழர் தமது கவனத்தை விஞ்ஞான அடிப்படைக் கல்விநெறிகள்மீது திருப்பினர். ஒரேமொழிக்கொள்கையானது அரசாங்கச் சேவையை உயர் தொழில்களைவிடக் கவர்ச்சி குறைந்த ஒரு தெரிவாக்கியது. உயர் தொழில்களுக்கான தேவை அதிகமானதாகவும் அரச மொழிக்கொள்கைகளின் தாக்கம் குறைவானதாகவும் இருந்தது. மேலும் 1960களின் தொடக்கத்தில் கலைப் பாடநெறிகள் (அப்பாடங்களைச் சிங்களத்தில் கற்ற மாணவர்களுக்கு இடங்களைத் திறந்துவிடுகின்ற வகையில்) சிங்களத்திலும் தமிழிலுமாக மாற்றப்பட்ட போதிலும், விஞ்ஞான அடிப்படைக் கல்விநெறிகள் 1970களின் தொடக்கம் வரை ஆங்கிலத்திலேயே தொடர்ந்தும் கற்பிக்கப்பட்டன. (இதன் மூலம் இப்பாடங்களில் ஆங்கிலக் கல்வி கற்ற தமிழரின் அனுகூலம் மேலும் வலுப்படுத்தப்பட்டது).

எனவே, இலங்கைத் தமிழ் மாணவர்கள், விசேடமாக வட மாகாணத்திலிருந்து அனுமதி பெறுகின்றவர்கள் விஞ்ஞான அடிப்படையிலான துறைகளில் அதிக கவனஞ் செலுத்தத் தலைப்பட்டதனால், பல்கலைக்கழகத்தில் இப்பீடங்களுக்கான இடங்களில் மிதமிஞ்சிய பிரதிநிதித்து





வத்தைப் பெற்றிருந்தனர். உதாரணத்துக்கு 1964இல் தமிழர் விஞ்ஞானம் மற்றும் பொறியியலில் 37 சதவீத இடங்களையும், மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் 41 சதவீத இடங்களையும், கமத்தொழில் மற்றும் கால்நடை மருத்துவத்தில் 42 சதவீத இடங்களையும் பெற்றிருந்தனர் (கே.எம். டி சில்வா, 1978: 86-7). இவ்வேளையில் இலங்கைத் தமிழர் முழுச் சனத்தொகையின் சுமார் 12.5 சதவீதமாயிருந்தனர். இந்த ஏற்றத்தாழ்வானது காரசாரமான விவாதத்தைக் கிளப்பியது. தமிழ்ப் பரீட்சகர்கள் அவர்களின் சிங்கள சகபாடிகளைவிடச் சாதகமான முறையில் தமிழ் விடைத்தாள்களைத் திருத்துவதன்மூலம் தமிழ் மாணவர்களுக்கு நியாயமற்ற ஓர் அனுகூலத்தை வழங்குகின்றனரென்ற குற்றச்சாட்டே அவ்விவாதத்தின் மையக்கருவாயிருந்தது.

இவ்விடயத்தில் அரசு இரு சவால்களை எதிர் நோக்கியது. எல்லாச் சமூகங்களினதும் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு விஞ்ஞான அடிப்படைக் கல்விநெறிகளுக்கான இடங்களை அது அதிகரிக்க வேண்டியிருந்தது. (எனவே அதற்காக ஆரம்ப மட்டத்தில் விஞ்ஞானம் கற்பிக்கின்ற பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியிருந்தது). மேலும் இத்துறைகளில் இலங்கைத் தமிழரின் மிதமிஞ்சிய பிரதிநிதித்துவம் தொடர்பாக அதிகரித்துவரும் அழுத்தத்தைச் சமாளிக்க அது ஏதேனும் செய்தாக வேண்டியிருந்தது.

1969வரை இலங்கையில் பல்கலைக்கழகத்துக்கான அனுமதி முற்றுமுழுதாக கல்விப் பொதுச்சான்றிதழ் உ/த (Secondary) இறுதிப் பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. 1971இல் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம், பல்கலைக்கழக அனுமதி பெறுவதில், விசேடமாக மருத்துவ விஞ்ஞானங்களில், தமிழ் மாணவர்களின் தொடர்ச்சியான வெற்றியின் பின்னணியிலுள்ள காரணங்களை மீளாய்வு செய்ததைத் தொடர்ந்து, பிரதானமாக மொழிமூலத்தின் அடிப்படையில் வேறுபடுகின்ற இடஒதுக்கீடுகளையும் வெட்டுப் புள்ளிகளையும் கொண்ட ஒரு கல்வி முறைமையினைச் செயற்படுத்தியது. நடைமுறையில் அரசாங்கம் 'அரசியல் ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு விகிதாச்சாரத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிங்கள மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப் படக்கூடியதாக' சிங்கள மொழி மூல மாணவர்களுக்குத் தகுதிபெறும் புள்ளியைக் குறைத்து வகுத்தது (கே.எம். டி சில்வா, 1978: 87). இச்செயல்முறையானது கல்விச்சாதனை அடிப்படையில் மட்டும் தங்கியிருந்த பல்கலைக்கழக அனுமதியை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்ததுடன், மொழியையும் அதன் தொடர்ச்சியான பின்விளைவாக இனத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு இட ஒதுக்கீட்டு முறைமை முதன் முதலாகவும் மிக முனைப்புடனும் உத்தியோகபூர்வமாகச் செயற்படுத்தப்பட்டதைக் கோடிட்டுக் காட்டியது. தமிழ் அரசியல்வாதிகளினதும், இலங்கைப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினதும் மற்றும் ஏனையோரினதும் கண்டனங்களின்பேரில் இட ஒதுக்கீட்டு முறைமைக்கான இவ்விளக்கம் பின்னைய ஆண்டுகளில் ஒழிக்கப்பட்டது.

1973இல் கல்வி அமைச்சு 'தரப்படுத்தல்' என்று பொதுவாக அறியப்பட்ட ஒரு திருத்திய திட்டத்தினைச் செயற்படுத்தியது. இம்முறைமையின்கீழ் பல்கலைக்கழகம் புகுவதற்குத் தகுதி பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மொழிமூலமும் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கைக்குச் சமவிகிதத்தில் இருக்கும் வண்ணம், அனைத்து மொழிமூல மாணவர்களினதும் 'உண்மையான புள்ளிகள்' தரப்படுத்தப்பட்டன. இம்முறைமைக்குக் கூறப்பட்ட அடிப்படைக் காரணம், அது கற்பித்தல் தொடர்பான வசதிகளில், கற்பித்தலில் அல்லது புள்ளியிடுதலில் இரு மொழிமூலங்களுக்கும் இடையிலுள்ள ஏற்றத்தாழ்வுகளைத் திருத்தக்கூடுமென்பதாகும் (கே.எம். டி சில்வா 1987: 90). இது இலங்கையின் உயர் கல்வி வரலாற்றில் முதல் தடவையாக 1973இல் விஞ்ஞான அடிப்படைப் பாடநெறிகளுக்குப் புகுகின்ற தமிழரின் ஒட்டுமொத்தச் சதவீதத்தை 30க்கும் குறைவானதாகக் குறைக்கின்ற விளைவை ஏற்படுத்தியது (அட்டவணை 3.11). இத்திட்டமும் அதன் முந்தியதைப்போன்று அதன் நேரடியானப் பாகுபாட்டு அம்சங்களுக்காக மட்டுமன்றி, எல்லாத் தமிழ்ப் பாடசாலைகளும் சிங்கள பாடசாலைகளைப் போல் ஒரேமாதிரியான வசதிகளையும் கற்பித்தலையும் கொண்டுள்ளனவென்ற அதன் ஊகத்தினாலும் தமிழ்ச்





சமூகத்தின் கணிசமான எதிர்ப்பைச் சந்தித்ததில் வியப்பேதுமில்லை. எனினும் யாழ்ப்பாண மாவட்டத்திற்கும் வடக்கினதும் கிழக்கினதும் ஏனைய பகுதிகளுக்குமிடையில் கல்வி வசதிகளில் கணிசமான அளவு முரண்பாடுகள் இருந்தன. இப்போதும் இருக்கின்றன.

அடுத்த ஆண்டில் (1974) பல்வேறு அரசியல் காரணங்களுக்காக, தீவு பூராவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் வசிக்கின்ற மொத்தச் சனத்தொகைக்கிணங்கப் பல்கலைக்கழக இடங்களை ஒதுக்குகின்ற வகையில் அனுமதி முறைமை மாற்றப்பட்டது. இந்த 'மாவட்ட இடஒதுக்கீடு' திட்டத்தின்படி வழமையான பல்கலைக்கழக உள்ளெடுப்பின் 25 சதவீதத்துக்குப் பாரம்பரியமாகப் பங்களித்துவந்த யாழ்ப்பாண மாவட்டத்திற்கு, தேசிய சனத்தொகையில் அதன் பங்கிற்கு இணையாக 6 சதவீதத்துக்கும் குறைந்த இடஒதுக்கீடு அமையுமென்று வகுக்கப்பட்டது (கே.எம். டி சில்வா 1978: 92). ஏனைய நகர்ப்புற மையங்கள், குறிப்பாக கொழும்பு அதேமாதிரியான பிரச்சனைகளை எதிர்நோக்கியதனால் இக்குழுக்களின் அழுத்தங்களின் காரணமாகக் குறைந்தபட்சம் புகுமுகத் தரமொன்று வகுக்கப்பட்டதுடன் கிராமப்புற மாவட்டங்களில் நிரப்பப்படாத இடங்கள் நகர்ப்புறப் பிரதேசங்களுக்கு மீளவும் ஒதுக்கப்பட்டன. இருந்தபோதிலும் 1974இல் விஞ்ஞான அடிப்படைக் கல்விநெறிகளுக்கு அனுமதிக்கப்படும் தமிழரின் சதவீதம் 20.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது (அட்டவணை 3.11). விகிதாச்சாரங்களில் ஏற்பட்ட இந்த மாற்றத்தைத் தவிர வேறுவழிகளிலும் தமிழர் பாதிக்கப்பட்டனர்.

இம்முறைமை பின்னர் பல்வேறு தடவை மாற்றப்பட்டுள்ளபோதிலும் 'இத்திட்டங்கள் எல்லாவற்றினதும் இறுதி விளைவு பெரிதும் விரும்பப்படும் மருத்துவ மற்றும் பொறியியல் பீடங்களுக்கான இலங்கைத் தமிழ் மாணவர்களின் அனுமதியைப் படிப்படியாகக் கட்டுப்படுத்துவதாயிருந்தது' என்று விமர்சகர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (கே.எம். டி சில்வா 1984: 121). இக்கல்வி நெறிகளுக்குத் தமிழ் மாணவர்களின் அனுமதி 1980களின் தொடக்கத்தில் ஓரளவு முன்னேறிய போதிலும் (அட்டவணை 3.11) ஏற்கெனவே தீங்கு இழைக்கப்பட்டாயிற்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அட்டவணை 3.11

பல்கலைக்கழக அனுமதிகள் : இன விகிதாச்சார அமைவில் மாற்றங்கள் 1969–1983

| ஆண்டு | விவரம் | அனுமதிகளின் மொத்த எண்ணிக்கை | சிங்களம் % | தமிழ் % | முஸ்லீம் % | ஏனையோர் |
|---|---|---|---|---|---|---|
| 1969-70 | விஞ்ஞானம் மொத்தம் | 792 | 57.7 | 39.8 | 1.6 | 0.9 |
| | கலை மொத்தம் | 2337 | 88.4 | 7.5 | 4.0 | 0.1 |
| | மொத்தம் | 3129 | 80.6 | 15.7 | 3.4 | 0.3 |
| 1970-71 | விஞ்ஞானம் மொத்தம் | 955 | 60.6 | 35.3 | 2.2 | 1.9 |
| | கலை மொத்தம் | 2502 | 88.9 | 7.6 | 3.4 | 0.1 |
| | மொத்தம் | 3457 | 81.1 | 15.2 | 3.1 | 0.6 |
| 1971-72 | விஞ்ஞானம் மொத்தம் | 1069 | 63.6 | 33.6 | 1.7 | 1.1 |
| | கலை மொத்தம் | 2239 | 92.6 | 4.8 | 2.4 | 0.2 |
| | மொத்தம் | 3308 | 83.2 | 14.1 | 2.2 | 0.5 |
| 1973 | விஞ்ஞானம் மொத்தம் | 1177 | 67.4 | 29.5 | 2.0 | 1.1 |
| | கலை மொத்தம் | 2243 | 91.5 | 6.1 | 2.0 | 0.4 |
| | மொத்தம் | 3420 | 83.2 | 14.1 | 2.1 | 0.6 |
| 1974 | விஞ்ஞானம் மொத்தம் | 1403 | 75.4 | 20.9 | 3.3 | 0.4 |
| | கலை மொத்தம் | 2250 | 86.0 | 10.0 | 3.7 | 0.3 |
| | மொத்தம் | 3653 | 81.9 | 14.2 | 3.6 | 0.3 |
| 1975 | விஞ்ஞானம் மொத்தம் | 1411 | 78.0 | 19.0 | 2.9 | 0.1 |
| | கலை மொத்தம் | 2080 | 85.6 | 10.1 | 3.8 | 0.4 |
| | மொத்தம் | 3491 | 82.6 | 13.7 | 3.4 | 0.3 |





| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1976 | விஞ்ஞானம் மொத்தம் | 1395 | 71.3 | 25.9 | 2.2 | 0.5 |
| | கலை மொத்தம் | 2399 | 86.3 | 8.6 | 4.7 | 0.3 |
| | மொத்தம் | 3794 | 80.8 | 15.0 | 3.8 | 0.4 |
| 1977 | விஞ்ஞானம் மொத்தம் | 1485 | 73.3 | 23.6 | 2.8 | 0.3 |
| | கலை மொத்தம் | 2494 | 85.8 | 9.2 | 4.5 | 0.6 |
| | மொத்தம் | 3979 | 81.1 | 14.6 | 3.8 | 0.5 |
| 1978 | மொத்தம் | கிடைக்கவில்லை | 75.9 | 19.7 | 4.3* | |
| 1979 | மொத்தம் | கிடைக்கவில்லை | 73.6 | 21.3 | 5.1* | |
| 1980 | மொத்தம் | கிடைக்கவில்லை | 79.2 | 17.3 | 3.5* | |
| 1981 | மொத்தம் | கிடைக்கவில்லை | 76.4 | 19.2 | 4.4* | |
| 1982 | மொத்தம் | கிடைக்கவில்லை | 74.0 | 22.0 | 3.9* | |
| 1983 | மொத்தம் | கிடைக்கவில்லை | 75.0 | 19.3 | 5.7* | |

* முஸ்லிம்கள், மலாயர் மற்றும் ஏனையோரின் கூட்டுத் தொகைகள்

*மூலம் :* de Silva, C.R. 'The Politics of University Admission: A Review of some aspects of the admission policy in Sri Lanka 1971-1978' *Sri Lanka Journal of Social Sciences* Vol.1 No.2: 1978: Table I, pp 105-6; de Silva, C.R. 'Sinhala-Tamil Ethnic Rivalry: The Background' in Goldman, R.B. & Wilson, A.J. (eds) *From Independence to Statehood,* London: Frances Printers. 1984: Appendix 1,2,3, pp. 108-110

1970இற்கும் 1975இற்கும் இடையில் பல்கலைக்கழகம் (எல்லாக் கல்விநெறிகளுக்கும்) புகுகின்ற தமிழ் மாணவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களின் எண்ணிக்கை மொத்த எண்ணிக்கையின்படியும் சதவீதத்தின்படியும் வீழ்ச்சியடைந்துள்ளது (கே.எம். டி சில்வா 1978: 93). நாட்டை உலுக்கிய மக்கள் விடுதலை முன்னணியின் (JVP) வன்முறைக் கிளர்ச்சியைத் தொடர்ந்து, இக்காலப்பகுதியில்தான் தமிழ்ப் பிரிவினைவாதம் எழுச்சி பெற்றதுடன் அனேக தமிழ் இளைஞர்களும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் (TULF) தீவிரவாத இளைஞர் பிரிவு மற்றும் புதிதாக உருவான தமிழ்ப் போராளிக் குழுக்கள் போன்ற அரசியற் குழுக்களின்பால் ஈர்க்கப்பட்டனர்.

## தகவுநோக்கில் பாகுபாடு பற்றிய விவாதம்

மூன்றாம்நிலைக் கல்வி இடங்களுக்கான உக்கிரமமான போட்டியில் ஒவ்வொரு குடும்பமும் பிராந்தியமும் சமூகமும் வெற்றிபெற்ற விண்ணப்பதாரர்களின் விகிதாச்சாரத்தைச் சமுதாயத்தில் சமத்துவத்தையும் பாகுபாட்டையும் அட்டவணைப்படுத்துவனவாகக் காணத்தொடங்கின. தெளிவான இனப் பாகுபாடுகளைக் கொண்டிருந்த காரணிகளின் (தரப்படுத்தலும் மாவட்டக் கோட்டாக்களும்) மூலம் பல்கலைக்கழக அனுமதி முறைமையின் சீர்திருத்தம் வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டது. அது அதற்கு மேலும் கல்விமான்களின் ஆட்சிப் பரப்பினுள் அடங்கவில்லை. பதிலாக அது நீண்டகால முரண்பாட்டுச் சிக்கலின் தீவிரமான அனல்கக்கும் அரசியல் விவாதத்துக்கான விடயமாகியது.

குறித்த சில (விஞ்ஞான அடிப்படையிலான) பாடங்களில் (மொழிரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும்) புகுமுக விகிதாச்சாரங்களில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வானது அரசியல்மயமாக்கப்பட்டது. இந்த ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட தொடர்ச்சியான முயற்சிகளும் இனப் பதற்றத்தின் அதிகரிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தின. விஞ்ஞான அடிப்படையிலான உயர்தொழில்களுக்கான அனுமதியின்மீது கவனத்தைக் குவிப்பதன் மூலம் இவ்விவாதம் இரு பக்கங்களிலும் மனக்கசப்பைத் தூண்டிவிடுவதில் வெற்றிகண்டது. தமிழர் தமக்கெதிராகப் பாகுபாடு காட்டப்படுவதாக எண்ணினர். சிங்களவர் முக்கிய அனுமதியில் தமிழர் விகிதாச்சாரங்கள் தாம் எதிர் பார்த்தவாறு திடீர் வீழ்ச்சியடையத் தவறிவிட்டதைக் கண்டனர்.





எனினும் பல்கலைக்கழக அனுமதியில், விசேடமாக அதிகளவு போட்டி நிலவக்கூடிய கல்விநெறிகளுக்கான அனுமதியின்மீதான இக்கவனக்குவிப்பு பரந்த கல்வி முறைமையில் உண்மைக்குப் புறம்பான தோற்றத்தை வழங்குகின்றது. மேற்கூறியவாறு பல்கலைக்கழக அனுமதி வழங்கலானது பாடசாலைகளிலிருந்து தேர்ச்சிபெற்று வெளிவருபவர்களின் அதிகரித்த எண்ணிக்கைக்கு ஈடுகொடுக்கும் வகையில் போதுமானதாக இருக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் 1970களின் பிற்பகுதியில் இருந்த அளவிற்குக் கூடப் போதுமானதாக இல்லை. 1978-79இன் நிலைமையைக் கூர்ந்து ஆராய்கின்றபோது, கல்வியின் பொது மட்டங்கள் அதிகரித்தபோதிலும், மூன்றாம் நிலைக் கல்விக்கான வாய்ப்பு மிகப் பெரும் பான்மையான இலங்கையர்களுக்கு எட்டாதிருந்துள்ளதை அது வெளிப் படுத்துகின்றது.

அட்டவணை 3.12

சமூகத்தின் சதவீதமாக இனத்துவப்படி கல்விச் சாதனை மொத்த மாணவர்கள் 1978–1979

| தொகுதி | பாடசாலை செல்லாதோர் | ஆரம்பக் கல்வி | இரண்டாம் நிலைக் கல்வி | சாதாரண தரம் | உயர்தரமும் மேலும் |
|---|---|---|---|---|---|
| சிங்களம் | 21.9 | 37.9 | 29.1 | 9.5 | 1.6 |
| இலங்கைத் தமிழர் | 23.5 | 36.1 | 26.3 | 12.4 | 1.6 |
| இந்தியத் தமிழர் | 45.0 | 47.6 | 6.2 | 1.1 | 0.1 |
| முஸ்லிம், மலாயர் | 27.1 | 43.2 | 22.7 | 6.3 | 0.7 |
| ஏனையோர் | 6.5 | 35.9 | 43.5 | 9.8 | 4.3 |
| முழுத்தீவும் | 24.4 | 38.8 | 26.3 | 8.8 | 1.4 |

மூலம் : Consumer Finance and Socio-Economic Survey (CFS) 1978/79 quoted in Abeyratne, S. 1998: Appendix 8.

சிவில் யுத்தத்தின் நிமித்தம் அண்மைக்கால (1979 முதல்) புள்ளி விவரங்கள் இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அட்டவணை 3.13

**கல்விச் சாதனையும், பிராந்திய மொத்தச் சதவீதமும்**
***1978–1979***

| விவரம் | பாடசாலைக் செல்லாதோர் | ஆரம்பக் கல்வி | இரண்டாம் நிலைக் கல்வி | சாதாரண தரம் | உயர் தரம் | மூன்றாம் நிலையும் பிறவும் |
|---|---|---|---|---|---|---|
| நகர்ப்புறம் | 19.66 | 33.89 | 31.80 | 12.38 | 1.35 | 0.92 |
| கிராமப்புறம் | 23.45 | 39.55 | 27.12 | 8.60 | 0.84 | 0.50 |
| பெருந்தோட்டம் | 44.66 | 47.39 | 6.67 | 1.28 | 0.0 | 0.0 |
| வலயம் 1 | 20.14 | 36.70 | 31.40 | 10.23 | 1.19 | 0.70 |
| வலயம் 2 | 26.08 | 42.36 | 23.72 | 6.58 | 0.64 | 0.62 |
| வலயம் 3 (வகிமா) | 24.52 | 37.22 | 25.81 | 11.53 | 0.79 | 0.43 |
| வலயம் 4 | 27.93 | 40.94 | 22.81 | 7.24 | 0.66 | 0.42 |
| வலயம் 5 (கொமாந) | 20.33 | 32.41 | 31.76 | 13.11 | 1.36 | 1.03 |
| தீவு முழுவதும் | 24.37 | 38.92 | 26.43 | 8.84 | 0.88 | 0.52 |

மூலம் : CFS 1978/79 quoted in Committee for Racial Development (CRD), 1984: 5. Zones are categorised according to CFS classification.

வலயங்களைத் தோராயமாகப் பின்வருமாறு விவரிக்கலாம்: வலயம் 1 - கொழும்பு மாநகரசபை எல்லை நீங்கலாக தென்மேல் மாவட்டங்கள், வலயம் 2 - சரிவு நிலங்கள் (வலஞ்சுழியாகப் புத்தளத்திலிருந்து அம்பாந்தோட்டை வரை), வலயம் 3 - அம்பாறை நீங்கலாக வடக்கு மற்றும் கிழக்கு மகாணம், வலயம் 4 - மலைநாட்டு மாவட்டங்கள் வலயம் 5 - கொழும்பு மாநகர எல்லை.

அந்த ஆண்டில் முழுச் சனத்தொகையின் ஒரு சதவீதத்துக்குக் குறைந்தவர்களே உயர்தரம் சித்தியடைந்





திருந்தனர். அதையும் விடக் குறைந்தவர்கள்தான் பல்கலைக் கழகக் கல்வி பெற்றிருந்தனர். மேலும் சிங்களவரும் இலங்கைத் தமிழரும், உயர்தரத்திலும் அதற்கு மேலான கல்வியிலும் ஒவ்வொரு சனத்தொகையினதும் விகிதாச் சாரப்படி சரிசம நிலையில் இருந்துள்ளமையும் இரு சமூகங்களும் இந்தியத் தமிழ் மற்றும் சோனக - மலாயச் சமூகங்களைவிட கணிசமான அளவு முன்னணி வகித்ததையும் அட்டவணை 3.12 காட்டுகின்றது. கவனத்தை ஈர்க்கின்ற வகையில் அட்டவணை 3.13 இலுள்ள சான்றானது தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சாதாரண தரங்களுக்கு அப்பால் உயர் தரங்களில் குறைந்த அளவில் இருப்பதைக் காட்டுகின்றது. இது பல்கலைக்கழகங்களுக்குப் பெரிய அளவில் கலைத் துறைக்கான உள்ளெடுப்புகளின் நிமித்தம் அதிக சிங்களவர் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுதலையும் சிங்களவரின் மிகையான பிரதிநிதித்துவத்தையும் பிரதபலிக்கக் கூடும். கீழ் மட்டங்களில் இரு சமூகங்களும் அனுமதியை ஒத்த அளவில் பகிர்ந்துகொள்ளுகின்றன. சிங்களச் சமூகத்தின் கீழ்மட்டங்களுக்கும் உயர் மட்டங்களுக்கும் எதிராகத் தமிழ்ச் சமூகங்களின் மட்டங்களையும் வட-கிழக்கு மாகாணத்துக்கெதிராகக் அதிக வசதிபடைத்த தாழ்நிலச் சிங்களப் பிரதேசங்களையும் நேரடியாக ஒப்பிடுகையில் இப்பிராந்தியங்கள் ஒப்பிடத்தக்க தோற்றங்களைக் கொண்டிருத்தல் வெளிப்படுகின்றது (அட்டவணை 3.14). மேலும் விஞ்ஞானத் துறைகளுக்கான பல்கலைக்கழக அனுமதியில் தமிழரின் ஆதிக்கமானது சமூகத்தின் எஞ்சிய பிரிவினர் வரை நீடிக்கவில்லையென்ற உண்மைக்கான சான்று CRD (1984) வகுத்த கல்விப் பேறுச் சுட்டியின் (EAI) மூலம் கிடைக்கின்றது (அட்டவணை 3.15). இச்சுட்டி ஒட்டு மொத்தக் கல்விப்பேறில் இந்தியத் தமிழரையும் சோனகரையும்விட மிகவும் முந்தியவர்களாக இலங்கைத் தமிழர் இருந்தபோதிலும், அவர்கள் கண்டிச் சிங்களவரை ஓரளவிலேயே முந்தியுள்ளனர் என்பதையும், உண்மையில் தாழ் நிலச் சிங்களவரைவிடப் பின்தங்கியுள்ளனரென்பதையும் காட்டுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அட்டவணை 3.14

கல்வி ரீதியானப் பாகுபாடு
(தெரிவு செய்யப்பட்ட குழுக்களின் சதவீதம்) 1978–1979

| விவரம் | பாடசாலை செல்லாதோர் + ஆரம்பக் கல்வி மட்டும் | சாதாரண தரமும் அதற்கு மேலும் | உயர் தரமும் அதற்கு மேலும் |
|---|---|---|---|
| சிங்களவர் | 59.8 | 11.6 | 1.6 |
| இலங்கைத் தமிழர் | 59.6 | 14.0 | 1.6 |
| வலயம் 3 (வ.கி. மா.) | 61.7 | 12.8 | 1.2 |
| வலயம் 5 (கொ.மா) | 52.7 | 15.5 | 2.4 |
| வலயம் 1 | 56.8 | 12.8 | 1.9 |
| முழுத்தீவு | 63.2 | 10.2 | 1.4 |

மூலம் : CFS 1978/9 quoted in CRD, 1984: 12

அட்டவணை 3.15

| கல்விச் சாதனை சுட்டி 1978–1979 | |
|---|---|
| கண்டிச் சிங்களவர் | 4.40 |
| தாழ்நிலச் சிங்களவர் | 5.26 |
| இலங்கைத் தமிழர் | 4.94 |
| இந்தியத் தமிழர் | 2.10 |
| முஸ்லிம் | 3.91 |
| மலாயர் | 5.48 |
| பறங்கியர் | 6.44 |
| ஏனையோர் | 6.30 |

மூலம் : CFS 1978/9 quoted in CRD, 1984: 12

இவ்விவாதத்தில் பெருமளவுக்கு வெளிப்பட்ட உணர்ச்சிப் பாங்கு வதந்திகளால் தூண்டப்பட்டது. எடுத்துக்காட்டாக கே.எம். டி சில்வா (1978: 87), 1970இல் தமிழர்





விரோத உணர்ச்சியைத் தூண்டுவதற்கு, பொறியியல் பட்டப்படிப்பிற்கான அனுமதியில் ஏறக்குறைய 60 சதவீதம் தமிழரால் நிரப்பப்பட்டுள்ளதென்ற வதந்தியின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகின்றார். அத்தகைய வதந்திகளும் அவற்றின் தாக்கமும் குறைந்தபட்சம் இரு காரணங்களுக்காக முக்கியத்துவம் வாய்ந்தவை. முதலாவது, தமிழரின் நிலை பற்றிய பொதுவான புரிந்துணர்வுகளின் பெரும் பகுதி எப்போதும் துல்லியமானவையல்ல என்பதை அது காட்டுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் தமிழர் பொறியியலுக்கான இடங்களின் 40 சதவீதத்தை மட்டும் பெற்றிருந்தனர். மேலும் இத்தொகையானது 1970இல் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட தமிழரின் ஒட்டுமொத்த விகிதாச்சாரத்தைவிட குறிப்பிடத்தக்களவு உயர்ந்தது (அட்டவணை 3.11). இரண்டாவதாக, அவர்களின் சரியான எண்ணிக்கையைப் பற்றிக் கவலைப்படாமல், கல்வி கற்பதற்கான வாய்ப்பை உள்ளடக்கிய சமூக-பொருளாதாரக் காரணிகள் இலங்கையின் இனப்போட்டி உணர்ச்சிக்கு எவ்வளவு மையமானதென்பதை இவ்வதந்திகள் குறிப்பால் உணர்த்துகின்றன.

எனினும் வதந்திகள் ஒருபுறமிருக்க, 1970களில், விசேடமாக சனத்தொகையின் ஒட்டுமொத்தக் கல்வி சார்ந்த சூழலில், பல்கலைக்கழக அனுமதிக் கொள்கைகளிலும் செயல் முறையிலும் இடம்பெற்ற மாற்றங்களானது, பல்வேறு காரணிகளின் நிமித்தம் முக்கியத்துவம் பெறுகின்றன. முதலாவதாக, இனப்பாகுபாடுபற்றிய விவாதங்களில் பல்கலைக்கழகங்களும் சிக்கவைக்கப்பட்டமை, கல்வியறிவுள்ள தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையிலான உறவுகளில் ஓர் அடையாளபூர்வ முறிவின் சின்னமாக இருந்தது. சிவில் சேவை போன்ற நிறுவனங்களுடன் பல்கலைக் கழகங்கள் நாட்டின் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கிடையில் குறிப்பிடத்தக்கப் பிணைப்பினை ஏற்படுத்தும் இடங்களாக இருந்து வந்துள்ள போதிலும், நாடெங்கிலும் பரவலாயிருந்த பிரிவுகளை (ஒருவரின் கண்ணோட்டத்தைப்பொறுத்து) உருவாக்குகின்ற அல்லது வலுப்படுத்துகின்ற, இனரீதியாகப் பிளவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்ட நிறுவனங்களாகப் படிப்படியாக மாறிவந்தன. ஒரு காலத்தில் பல்கலைக்கழகத்துக்கான அனுமதியானது வெகு சனங்களிடமிருந்து வேறுபடுத்தப்பட்ட உயர்குடியினரின் 'சங்க'த்திற்கான அனுமதிச்சீட்டாயிருந்தது. அது சமுதாயத்தில் நல்ல சம்பளத்துடன் மதிக்கப்படும் ஒரு பதவிக்கான அனுமதிச்சீட்டாகவுமிருந்தது. பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியவுடன் பாதுகாப்பான தொழிலுக்கான உத்தரவாதமானது பரந்த பொருளாதாரச் சூழ்நிலைகளால் சீரழிக்கப்பட்டுவிட்ட அதேவேளையில், பல்கலைக் கழக அனுமதியின் இனத்துவமயமாக்கம் 'சங்கத்'தின் முடிவுக்கு அடிகோலியது. சுதேச மொழி வகுப்புகளின் தொடக்கத்தையும், வளர்ந்துவரும் இனத்துவத்துக்கு அளிக்கப்பட்ட அதிகரித்த முக்கியத்துவத்தையும் தொடர்ந்து, ஒரு காலத்தில் தேசத்தின் அறிவுமிக்க உயர்குடியினருக்கிடையில் பிணைப்பை ஏற்படுத்தக்கூடிய வடிகால்களாக விளங்கிய விரிவுரை மண்டபங்களும் மாணவர் சங்கங்களும் சிற்றுண்டிச் சாலைகளும் பிளவுபடலாயின.

இரண்டாவதாக, பாகுபாட்டுப் பிரச்சினை தமிழருக்குக் குறிப்பான கவனத்திற்குரியதாகவும் ஏனைய சிறுபான்மையினருக்கு முக்கியமானதாகவும் இருந்தது. முக்கியமாக இரு பிரதான சிங்கள அரசியல் கட்சிகளும் இப்பிரச்சினையில் ஆழமாக ஈடுபட்டிருந்தன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஆட்சியிலிருந்தபோது பல்கலைக்கழக அனுமதிகளில் 'திருத்தத்தை'ச் சாதிக்க நடவடிக்கை எடுத்தன. விவாதத்தின் தொடக்கத்திலேயே அரசாங்கத்தின் அதிகாரபூர்வ நிலை தெளிவாகியபோது தமிழரின் எதிர்பார்ப்புகள் வலுவிழக்கச் செய்யப்பட்டன. 1970 டிசெம்பரில் ஒரு நேர்காணலின்போது கல்வி அமைச்சர் 'தமிழரையும் முஸ்லிம்களையும் விடக் கூடிய சிங்களப் பிள்ளைகளை' (மாணவர்களை) அனுமதிப்பதன்மூலம் இன ஏற்றத்தாழ்வுகளுக்குப் பரிகாரம் காண்பதற்கான அரசாங்கத்தின் நோக்கத்தை முன்வைத்தார். அவர் மேலும் கூறியதாவது: 'எப்படியிருப்பினும் பெரும்பான்மைச் சமூகம் சிங்களவரென்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே பல்கலைக்கழகங்களில் உள்ள வெற்றிடங்





களின் பெரும் விகிதாச்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை அவர்களுக்கு இருக்கின்றது' (சச்சிதானந்தம், 1971: 4). அனேக தமிழர் இதனையும் இதனை ஒத்த கருத்துக்களையும் நிராகரித்தனர்.

இறுதியாக மிக முக்கியமாக, கல்விக்கும் முன்னேற்றத்துக்குமான மட்டுப்படுத்தப்பட்ட, குறைந்துவருகின்ற வாய்ப்புகளுக்கும், கல்வியில் தமிழர்களின் வெளிப்படையான வெற்றியின்பால் சிங்களவரின் மனக்கசப்புக்கும், அரசாங்கக் கொள்கை தொடர்பான கூருணர்வுக்குமிடையில் சிக்குண்ட பெரும்பாலானத் தமிழ் இளைஞர்கள், பிரிவினையை ஒரு சாத்தியமுள்ள தீர்வாகக் காணத் தொடங்கினர். இலங்கையில் இன உறவுகள் மேலும் கவலையளிப்பதாக இருப்பதைக் கண்ட ஓர் ஆய்வாளரான சில்வா கூறியதாவது:

> மாவட்ட அளவிலான இடஒதுக்கீட்டு முறைமையின் அரசியல் தாக்கம் போதுமான அளவிற்குப் பேரழிவை நோக்கி இட்டுச் சென்றுள்ளது. அது பெரும்பான்மைச் சிங்களவரிடமிருந்து சமமாக நடத்தப்படுதலை எதிர்பார்த்தல் பயனற்றதென அனேகத் தமிழரை உறுதியாக நம்பச் செய்துள்ளது. அது தமிழர் ஐக்கிய முன்னணியினுள் (பின்னர் த.ஐ.வி.மு.) பிரிவினைவாதச் சக்திகளைப் பெருமளவில் பலப்படுத்தியுள்ளதுடன், 1975இன் தொடக்கத்தில் தனியரசுக்கான கொள்கைப் பிரச்சாரத்தை அங்கீகரிப்பதற்கும் வழிவகுத்தது (மேற்கோள் கே.எம். டி சில்வா, 1984: 100).

எனவே, 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்தே இலங்கையில் கல்விக் கொள்கைகளின் படிப்படியான வளர்ச்சி, இலங்கையில் இனப் பதற்றங்களையும், இறுதியாக முரண்பாட்டையும் உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகித்துள்ளது.

## மலைநாட்டிலும் வடக்கு கிழக்கிற்கு வெளியிலும் தமிழரின் கல்வி

இந்தியாவிலிருந்து ஆங்கிலேயரால் கொண்டுவரப்பட்ட தோட்டத்தொழிலாளர்களின் வழித் தோன்றல்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களான 'இந்தியத் தமிழர்' நாம் முன்னர் கண்டவாறு சமுதாய அடிநிலை வகுப்பினராவர். வீடு, சுகாதாரம், கல்வி தொடர்பான விடயங்களிலும் ஏனைய வசதிகளிலும் கடுமையாக ஒடுக்கப்பட்ட இவர்களின் நிலை, 1948இன் இலங்கைப் பிரசாவுரிமைச் சட்டத்தின் மூலம் (அவர்களில் மிகப்பெரும்பாலானவர்கள் இலங்கையில் பிறந்திருந்த போதிலும்) அவர்களின் பிரசாவுரிமையும், 1949இன் சிலோன் (பாராளுமன்றத் தேர்தல்) திருத்தச் சட்டத்தின் மூலம் அவர்களின் வாக்குரிமையும் பறிக்கப்பட்டதன் பின்னர், மேலும் மோசமடைந்தது.

1981 சனத்தொகை மதிப்பீட்டில் அவர்கள் சனத் தொகையின் 5.8 சதவீதமாக அமைந்தனர். முன்னர் அவர்கள் மிகவும் உயர்ந்த சதவீதமொன்றைக் கொண் டிருந்தபோதிலும், அவர்களில் அனேகர் வலுக்கட்டாய மாக இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்பட்டனர். அதிக மானோர் பிரசாவுரிமையைப் பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து அவர்களின் பற்றுறுதி மிக்க இருப்பை உணர்த்தும் வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டியது. ஆரம்ப காலத்தில் ஆங்கிலத் தோட்டத்துரையினதும் மலை நாட்டிலும் கரையோர மாகாணங்களிலுமிருந்த இலங்கை கிறிஸ்தவர்களினதும் நிதியுதவியுடன் தமிழ்த் திருச்சபை மிஷனால் (TCM) நிதியிடப்பட்டு நடத்தப்பட்ட தோட்டப் பாடசாலைகளில் மலைநாட்டுத் தமிழர் கல்வி பயின்றனர். ஆனால் தோட்டங்களில் மாறிவந்த அரசியல் நிலைமை களினாலும், நிதிகள் சுருங்கத் தொடங்கியதனாலும், தமிழ்த் திருச்சபை மிஷன் செயலற்றுப்போனதைத் தொடர்ந்து அப்பாடசாலைகள் அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ் வந்துள்ளன. இப்பாடசாலைகள் நாட்டின் எஞ்சிய பகுதி யில் வழங்கப்படும் கல்வியின் தரத்தை அனுபவிப்பதற்கு இன்னும் சில தலைமுறைகளைக் கடக்க வேண்டியுள்ளது.

1978 அரசியலமைப்பானது, அரசு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒரு தேசிய மொழியில் கல்வி நெறி களை வழங்குமாயின், அது மற்றத் தேசிய மொழியிலும் அவற்றை வழங்கவேண்டுமென்று அறிவுறுத்துவதன்மூலம்





எல்லாக் குழுவினருக்கும் பல்கலைக்கழகக் கல்விக்கான வாய்ப்பை வழங்க முனைந்தது (அரசியலமைப்பு பிரிவு 21 (2), 1978). மலைநாட்டுத் தமிழரில் 19 வயதைக் கடந்தவர் களில் 86 சதவீதத்தினர் ஐந்தாம் ஆண்டுக்குக் குறைந்த பாட சாலைக் கல்வியைப் பெற்றுள்ளனரென அண்மைக் காலப் புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன (பீரிஸ் 1996: 306). மிக அண்மைக் காலமான 1991இல் கூட இலங்கையிலுள்ள வேறெந்த மாவட்டத்தையும்விட, நுவரெலியாவில் தான் அதிக எண்ணிக்கையிலான சிறு பாடசாலைகள் (ஒன்றி ரண்டு ஆசிரியர்களைக் கொண்ட பாடசாலைகள்) இருந்தன. (இலங்கை-கல்விப் புள்ளிவிவரம் 1992: 48).

மேலும் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே யுள்ள தமிழ் மாணவர்களுக்கு அடிப்படைக் கல்விகூட பிரச்சினைக்குரிய ஒன்று. அனேக ஆரம்பப் பாடசாலைகள் சிங்களப் பாடசாலைகளால் மாற்றீடு செய்யப்படுகின்றன. பல்வேறு சிங்களப் பாடசாலைகளிலுள்ள தமிழ்ப் பிரிவுகள் மூடப்பட்டுள்ளன. ஏனையவற்றுக்குப் போதிய ஆசிரியர் கள் நியமிக்கப்படாமையினால் செயலிழந்துள்ளன. இதன் விளைவாக அனேகப் பிரதேசங்களிலுள்ள தமிழ் மக்கள் சிங்கள மொழிமூலத்தில் படிக்க நிர்ப்பந்திக்கப்படுகின் றனர். தமிழரின் இதயபூமியான வட மாகாணத்தில்கூட சில மக்கள் ஆசிரியத் தொழிலின்பால் கவர்ந்திழுக்கப் பட்டுள்ளதுடன், சிங்கள பௌத்த பாடசாலைகளும் திறக்கப்பட்டு சிங்களம் போதனாமொழியாக அங்கீகரிக் கப்பட்டுள்ளது.

## தொழில் வாய்ப்புகளில் பாகுபாடு

தம்முள் மாறுபட்ட தன்மையுள்ள சமுதாயங்களில் வளப்பற்றாக்குறை காரணமாக பொருளாதார நெருக்கடி மற்றும் தொழில் வாய்ப்புகள் அடிப்படையிலான முரண் பாடு ஏறக்குறைய உலகெங்கும் பொதுவானது. இலங்கை யைப் போன்ற பல்லினச் சமுதாயங்களில் அத்தகைய போட்டியுணர்ச்சி இனரீதியான போக்குடன் கூடிக் கலப்பது பெருமளவுக்குத் தவிர்க்க முடியாததெனத் தோன்று கின்றது. இலங்கையில் இனக்குழுக்கள் பொருளாதார நட வடிக்கைகளை அணுகுகின்ற மற்றும் அவற்றில் பங்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பற்றுகின்ற முறையிலுள்ள வேறுபாடுகள், ஆய்வாளர்களினதும் உள்நாட்டு அரசியல் பங்காளிகளினதும் கவனத்துக்குரிய ஒரு விடயமாக இருந்துவந்துள்ளது.

நாட்டில் பல்வேறு இனக்குழுக்களால் செய்யப்படும் தொழில்களின் விகிதாச்சாரங்களிலும் வகைகளிலும் உணரப்படும் வேறுபாடுகள், இலங்கையின் அண்மைக் கால வரலாற்றில் பல்வேறு அரசியல் சர்ச்சைகளைத் தூண்டியுள்ளன. இலங்கையில் ஆங்கில ஆட்சியின் பிற்பகுதியில் உள்நாட்டு விவாதம் சுதேச இலங்கையருக்குத் தொழிலிலும் வியாபாரத்திலும் இருந்த வாய்ப்புப் பற்றிக் கவனஞ்செலுத்தியது. அண்மைக்காலங்களில் சர்ச்சையின் பெரும்பகுதி இரு முக்கிய விடயங்களான அரசாங்கத் துறையில் தொழில் வாய்ப்பு மற்றும் இலங்கைத் தமிழரின் சிறப்பான பொருளாதார நிலை ஆகியவற்றைச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. பின்னர் பொருளாதாரப் பங்கேற்புக்கும் இன முரண்பாட்டிற்கும் இடையிலான தொடர்பு குறித்த பெரும்பாலான பகுப்பாய்வுகள், அரசாங்கத் துறைத் தொழில்களில் இலங்கைத் தமிழரின் தொழில் வாய்ப்பை மையமாகக் கொண்டிருந்தன (எ.கா: தம்மையா, 1955 ரொபேர்ட்ஸ் 1977 சமரசிங்க, 1984). பொருளாதாரப் பங்கேற்புத் தொடர்பில் இந்த அம்சத்துக்கு அளிக்கப்படும் முக்கியத்துவமானது, அரசாங்கத் துறையில் இன விகிதாச்சாரப் பிரச்சினையுடன் தொடர்புடைய அரசியல் முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கின்ற அதேவேளையில் (றிக்கின்ஸ் 1960), இனப் பதற்றத்தின் அதிகரிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள வேறு பரந்த போக்குகளும் நிச்சயமாக உள்ளன. அவ்வகையில் இப்பகுதி அரசாங்கத் துறையிலும், கமம் சாராத தனியார் துறையிலும், இலங்கைத் தமிழர்களின் பங்கேற்பில் கவனஞ்செலுத்துவதுடன், இரு துறைகளிலும் குழுக்களுக்கிடையிலான போட்டிகள் எவ்வாறு வளர்ந்துவரும் இனப் பதற்றத்தை உருவாக்கியிருக்கக்கூடுமென்றும் ஆராய்கின்றது.

சுதந்திரகாலந்தொட்டு, கல்விக்கான உரிமையைப் போன்றே ஆதாயமுள்ள தொழிலுக்கான உரிமையும் ஏறக்குறைய எல்லா இனக்குழுக்களினதும் முக்கிய அக்கறை





யாக இருந்துள்ளது. சனத்தொகைக்கு ஈடான விகிதாச்சாரங்களில் பல்கலைக்கழக அனுமதிக்கான இட ஒதுக்கீடுகள் மீதான விவாதங்களைப் போன்று அரசாங்கத் துறைத் தொழில்வாய்ப்பில் அரசினால் தொழிலுக்கமர்த்தப்படும் ஒரு குறிப்பிட்ட குழுவினரின் விகிதாச்சாரத்துக்கும், முழுச் சமூகத்தில் அக்குழுவின் விகிதாச்சாரத்துக்குமிடையிலான சரிசமநிலைதான் பெரும்பாலும் சர்ச்சைக்குரிய விடயமாக இருந்துள்ளது.

## அரசியல் பிரச்சினை

தமிழருக்கும் சிங்களவருக்குமிடையில் அரச தொழில் வாய்ப்புக்கான போட்டி அதிதீவிரமானதாகவும் பகிரங்கமானதாகவும் நேரடியானதாகவும் வளர்ந்தபோது, விசேடமாக யாழ்ப்பாணத் தமிழரின் அதிகப்படியான பிரதிநிதித்துவம் ஒரு முக்கியமான 'பகிரங்கப் பிரச்சினை' ஆகியது (றிக்கின்ஸ், 1960: 233-6). எவ்வாறாயினும் சுதந்திரத்தை ஒட்டிய அடுத்தடுத்த ஆண்டுகளில், எல்லா அரசாங்கப் பதவிகளிலும் கிட்டத்தட்ட 60 சதவீதத்தைத் தமிழர் வகிக்கின்றனரென்றும், அதில் தங்களுக்குரிய பங்கு அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் இருந்தனவென்று றிக்கின்ஸ் குறிப்பிடுகின்றார். றிக்கின்சின் (1960: 235) தரவுகளோ, தம்பையாவின் (1955) தரவுகளோ, தமிழர் பிரதிநிதித்துவம் அத்தொகைக்குக் கிட்டியதாயிருந்ததெனக் காட்டவில்லை. இப்பிரபலமான உணர்வுகள் நிச்சயமாக ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்ததுடன், அவை ஒருவேளை அரசாங்கப் பதவிகளை வகித்த தமிழர் விசேடமாகப் பொதுவேலைகள் திணைக்களம் போன்ற துறைகளில் காணக்கூடிய பதவிகளை வகித்ததனால் தூண்டப்பட்டிருக்கலாம் (றிக்கின்ஸ் 1960: 235).

> அரசாங்க சேவையில் பாதுகாப்பான, செல்வாக்கு மிக்க மற்றும் நல்ல சம்பளத்துடனான வாய்ப்புகள் சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களுக்கிடையில் சச்சரவுக்கான பிரதான மூலகாரணங்களாயிருந்துள்ளன. இந்தச் சமூகம் அல்லது அந்தச் சமூகம் அத்தகைய பதவிகளின் 'நியாயமான பங்கை'ப் பெற்றிருக்கவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவதற்கு, போட்டி பொறாமைகளைத் தூண்டக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூடிய ஒப்பீடுகள் சிலசமயங்களில் எண்ணிக்கைகளைக் காட்டுவனவாக அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளன (றிக்கின்ஸ் 1960: 33).

எப்போதும் தமிழரைவிடக் கூடிய சிங்களவர் அரசாங்கப் பதவிகளை வகித்தனரென்றும், ஒவ்வொரு சமூகத் தினதும் முழுமையான ஒப்பீட்டளவிலான பரம்பலை நாம் எடுத்துக்கொள்கின்றபோதுதான், விகிதாச்சாரப்படி கூடிய தமிழர் இருந்துள்ளதை நாம் காண்கின்றோமென் றும், சுதந்திரத்தின் தொடக்க ஆண்டுகளில் சிங்களவரை விட அதிகளவில் பறங்கியர்களே இருந்துள்ளனரென்றும், அரசாங்கப் பதவிகள் பற்றிய முக்கியமான விடயத்தை றிக்கின்ஸ் குறிப்பிடுகின்றார் (1960: 233 - 4). எனினும் ஒப்பீட்டளவிலான இவ்வேறுபாடுதான் இரு சமூகங் களுக்குமிடையில் மிகத் தீவிரமான சில விவாதங்களின் கருப்பொருளாயிருந்துள்ளது.

## அரசாங்கத்துறைத் தொழில்வாய்ப்பில் பாகுபாடு

சுதந்திரத்தின் பின்னர் அரசாங்கத்துறைக்கு ஆட் சேர்ப்பதில் பாகுபாடு பற்றிய கருத்து வேறுபாடு, இனப் பதற்றம் அதிகரிப்பதற்கு ஒரு மையப் பிரச்சினையாக இருந் துள்ளது. அரசாங்கத் தொழில்களின் இன விகிதாச்சார கூட்டமைவில் ஒட்டுமொத்த மாற்றமொன்று ஏற்பட்டிருப் பது தெளிவாகத் தெரிகின்றது. கிடைக்கின்ற சான்றுகளின் அடிப்படையில், ஏறக்குறைய அனைத்துத் துறைகளிலும் சிங்களவர் பொதுவான சனத்தொகையில் அவர்களின் விகிதாச்சாரத்துக்கும் அரசாங்கத் தொழில்களில் அவர் களின் விகிதாச்சாரத்துக்குமிடையில் சரிசமநிலையைச் சாதித்துள்ளனர். அரசாங்கத் தொழில்களின் பெரும் பாலான துறைகளில் சிங்களவரின் ஆட்சேர்ப்பு, சனத் தொகையில் அவர்களின் விகிதாச்சாரத்துக்கு ஒத்த மட்டங்களில் அதிகரித்துள்ளதை அட்டவணை 3.16 காட்டு கின்றது. ஆட்சேர்ப்பு விகிதாச்சாரங்களில் தளராது தொடரப்பட்ட இத்திருத்தம், 1972ஆம் ஆண்டளவில் அரசாங்கத் துறையின் இன விகிதாச்சார அமைவை சுதந்திரத்தின்போது இலங்கை சுவீகரித்த விகிதாச்சார அமைவிலிருந்து குறிப்பிடத்தக்களவு மாற்றுவதற்கு வழி வகுத்துள்ளதை அட்டவணை 3.17 காட்டுகின்றது.





### அட்டவணை 3.16

### குறிப்பிட்ட துறைகளுக்கான மத்திய அரசாங்கத் தொழில்களுக்கு ஆட்சேர்ப்பு (1948–1979)

| இனக்குழு | | 1948 | | 1955 | | 1963 | | 1979 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண் | % | எண் | % | எண் | % | எண் | % |
| சிலோன் சிவில் சேவை | சிங்களவர் | 83 | 53.9 | 104 | 57.4 | 506 | 71.6 | 1,316 | 85.2 |
| | தமிழர் | 38 | 24.7 | 47 | 26.0 | 165 | 23.4 | 203 | 13.1 |
| | ஏனையோர் | 33 | 21.4 | 30 | 16.0 | 35 | 5.0 | 26 | 1.7 |
| அரசாங்க கணக்காளர் சேவை | சிங்களவர் | 27 | 40.5 | 30 | 36.5 | 72 | 42.6 | 233 | 60.8 |
| | தமிழர் | 31 | 46.2 | 32 | 59.9 | 95 | 56.2 | 148 | 38.6 |
| | ஏனையோர் | 3 | 13.4 | 4 | 3.6 | 2 | 1.1 | 2 | 0.6 |
| பொது எழுதுநர் சேவையில் | சிங்களவர் | 805* | 53.7 | 422 | 65.9 | 703 | 92.4 | 4870** | 93.6 |
| | தமிழர் | 610* | 40.7 | 191 | 29.8 | 52 | 6.8 | 279** | 5.4 |
| | ஏனையோர் | 84* | 5.6 | 27 | 4.2 | 9 | 0.9 | 53** | 1.0 |

மூலம் : Samarasinghe, S.W.R. de A. 'Ethnic Representation in Central Government Employment and Sinhala-Tamil Relations in Sri Lanka: 1948 – 1981' in Goldman, R.B. & Wilson, A.J. *Fro Independence to Statehood.* London: Frances Printers 1984: 177-8 – taken from various sources.

* 1949இற்கான தொகைகள்

** 1978-81இற்கான மொத்த ஆட்சேர்ப்புக்கான தொகைகள், சிவில் யுத்தத்தின் நிமித்தம் அண்மைக்கால (1979) முதல் தரவுகள் கிடைக்கவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அட்டவணை 3.17

பிரதான தொழில் தொகுதிகள் மற்றும் இனத்துவப்படி அரசாங்க சேவையாளர்கள் 1972

| தொகுதிகள் | உச்ச உயர் தரங்கள் % | மத்திய தரங்கள் | பாடசாலை ஆசிரியர்கள் | சிற்றூழியர் | தொழிலாளித் தரங்கள் | மொத்தம் | மொத்தசனத் தொகையில் % |
|---|---|---|---|---|---|---|---|
| சிங்களவர் (கீ.நா.சி.+கண்) | 67.7 | 81.2 | 81.5 | 86.4 | 85.5 | 82.63 | 72.0 |
| தமிழர் (இல.த+இந்.த) | 28.5 | 15.3 | 11.6 | 10.6 | 11.6 | 12.93 | 20.5 |
| முஸ்லீம் | 2.5 | 2.2 | 6.6 | 1.9 | 2.0 | 3.53 | 6.5 |
| பறங்கியர் | 0.9 | 0.8 | 0.01 | 0.5 | 0.3 | 0.46 | - |
| ஏனையோர் | 3.35 | 0.4 | 0.06 | 0.23 | 0.23 | 0.47 | 1.0 |

குறிப்பு: நிருவாக, உயர்தொழில் மற்றும் தொழில் நுட்பத் தரங்களை உள்ளடக்குகின்றது. கீ.நா.சி.: கீழ் நாட்டுச் சிங்களவர், கண்: கண்டிச் சிங்களவர், இல.த. : இலங்கைத் தமிழர், இந்.த.: இந்தியத் தமிழர்.

மூலம் : Gunasinghe, N. 'The Open Economy & Its Impact on Ethnic Relations in Sri Lanka' in CRD (ed.), *Sri Lanka, The Ethnic Conflict: Myths, Realities and Perspectives*, New Delhi: Navarang. 1984:204

சுதந்திரத்தின் பின்னர், முதலிரு தசாப்தங்களில் அரசுத் தொழில்களில் தமிழரினதும் பறங்கியரினதும் விகிதாச்சாரம் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. பறங்கியர் ஒரு சிறிய சமூகமாகவே காணப்பட்டனர். மேலும் பிரதானமாக குடியகல்வின் நிமித்தம் காலப்போக்கில் அவர்களது விகிதாச்சாரம் மேலும் சுருங்கியது. இதனால் அவர்களது பிரச்சினை ஒருபோதும் போதிய அளவு கவனத்தை ஈர்க்கவில்லை. அத்துடன் 1972ஆம் ஆண்டளவில் அரசாங்கத் துறையில் பறங்கியரின் பங்கு வீழ்ச்சியடைந்துவிட்ட





போதிலும், முழுச் சனத்தொகையில் புறக்கணிக்கத்தக்க அவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் தொடர்ந்தும் அதிகமாகவே இருந்தனர். எனினும் தமிழரைப் பொறுத்த வரையில் நிலைமை வேறுவிதமாக இருந்தது.

1970களின் தொடக்கத்தில் இலங்கைத் தமிழர் அவர்களின் சனத்தொகைப் பங்குக்கு ஏறக்குறையச் சரிசமமாகக் குறைக்கப்பட்ட அதேவேளையில் (அட்டவணை 3.17 இலங்கைத் தமிழரினதும் இந்தியத் தமிழரினதும் ஒன்றாக்கப்பட்ட தொகைகளைக் காட்டுகின்றதென்பதை அவதானிக்கவும்) தமிழர்கள் ஐயத்துக்கிடமின்றி அவர்களின் அனுகூல நிலையை இழந்துவிட்டனர். அட்டவணை 3.18 இல் காட்டப்பட்டுள்ள மிக அண்மைக்கால எண்ணிக்கைகள் 1990ஆம் ஆண்டளவில் இலங்கையின் முக்கிய சிறுபான்மையினரின் பங்குகள் சனத்தொகைச் சரிசம நிலைக்குக் கீழே வீழ்ச்சியடைந்துள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றன.

அட்டவணை 3.18

அரசதுறையில் சிறுபான்மைகளின் தொழில் வாய்ப்பு 1990

| இனக்குழு | சனத்தொகை (மொத்த சனத்தொகையின் % ஆக | மாகாண சேவைகள் (ஊழியர்களின் % ஆக | அரச சேவைகள் (ஊழியர்களின் % ஆக | அரச சார்பான சேவைகள் (ஊழியர்களின் % ஆக |
|---|---|---|---|---|
| இலங்கை தமிழர் | 12.7 | 5.9 | 7.1 | 8.2 |
| இந்தியத் தமிழர் | 5.5 | 0.1 | 0.2 | 0.5 |
| முஸ்லிம் | 7.4 | 2.0 | 4.6 | 1.0 |

மூலம் : அரசாங்க மற்றும் பொதுத்துறை ஊழியர்களின் தொகை மதிப்பீடு, இலங்கைத் தொகை மதிப்பீடு, புள்ளிவிவரத் திணைக்களம், 1990.

இலங்கையின் உள்நாட்டு அரசியலில் இப்போக்குத் தொடர்பாக அரசின் செயல்முறையில் தமிழருக்கெதிராகப் பாகுபாடு காட்டப்பட்டதா என்ற சர்ச்சைக்குரிய பிரச்சினை எழுந்தது. எனினும் எமது தற்போதைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோக்கங்களுக்கு, அரசாங்கத் தொழில்களில் தமிழருக் கெதிரான பாகுபாடு இருந்ததாவென்ற பிரச்சினை, இச் சர்ச்சையில் அரசின் நிலைப்பாட்டை விளங்கிக் கொள் வதில் சிக்கல் உள்ளபோதிலும், அதுமட்டுமே முக்கிய மானதல்ல என்பதைக் கவனத்திற் கொள்வது பயனுள்ளது. தமிழரின் கண்டனங்கள் இடம்பெற்றுள்ளன என்பதையும், தமிழரின் கவலைகள் முரண்பாட்டின் தோற்றத்துக்குப் பகுதியளவில் வழிவகுத்துள்ளன என்பதையும் நாம் இங்கு முக்கியமாகக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தமிழர் தொழில்வாய்ப்பில் ஒப்பீட்டளவிலான வீழ்ச்சியை விளக்குவதற்கு ஒரு வழி, சிங்களப் பிரதேசங் களில் பாடசாலைக் கல்வியின் அளவையும் தரத்தையும் 'விரைந்து எட்டுவதற்கான' முயற்சியுடன் அதனைத் தொடர்புபடுத்துதலாகும். 1950களில் கல்வி விரிவாக்கத் தின் தங்கு தடையற்ற விளைவுகள் கல்விகற்ற வேலை தேடு கின்ற சிங்களவரின் பெரும் எண்ணிக்கை அதிகரிப்பில் பிரதிபலித்தன. இவ்விளக்கத்திற்கு அணிசேர்க்கும் வகையில் பொதுக் கல்வியில் துரித அதிகரிப்புகளைச் சிங்களவர் அனுபவித்த அதேவேளையில், அது அவர்கள் மத்தியில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் திறன்களில் பரந்த அளவிலான முன்னேற்றங்களாக மாற்றம் பெறவில்லை யென்ற சான்று அமைகின்றது. பொதுக்கல்வியின் உயர்வும், விஞ்ஞானத்தில் பயிற்சியின்மையும், தவிர்க்க முடியாத வாறு அரசாங்கத்துறைத் தொழில்களுக்கான சிங்களவரின் அதிகரித்த கோரிக்கையும், தமிழருக்கும் சிங்களவருக்கு மிடையில் அரசாங்கத்துறைத் தொழில்களுக்கான ஒப்பீட் டளவிலான கோரிக்கையில் மாற்றத்தையும் காட்டுகின்றன. இலங்கையில் அரசாங்க சேவைகளுக்கு ஆளெடுப்பதிலோ அல்லது பதவி உயர்வு வழங்குவதிலோ இனவிகிதாச்சாரம் பிரதிபலிக்க வேண்டும் என்கின்ற பரவலான கருத்துக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். தொழிலில் வெற்றியானது திறமைமூலம் தீர்மானிக்கப் பட வேண்டுமேயன்றி ஒருவர் சார்ந்துள்ள இனக் குழுவுக் கிணங்கவல்லவென்று அவர்கள் வாதாடினர். இவ்விடயந் தொடர்பான அதிகாரபூர்வக் கொள்கைகளுக்கு மூன்று தொகுதி ஆட்சேபணைகள் கடந்த காலங்களில் எழுப்பப் பட்டுள்ளன.





### (1) மொழிக்கொள்கை

இலங்கையில் மொழிக்கொள்கையானது சிங்களம் பேசாதவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தைப் பெறு வதற்கான வாய்ப்புகள் மீது குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வடக்கு-கிழக்கின் நீண்ட வரலாறு சார்ந்த ஆங்கிலக் கல்வியின் அனுகூலங்கள் இப்போது குறைந்துவிட்டதுடன், தமிழ் மட்டும் தெரியுமென்ற அறிவு அரசாங்கத்துறைத் தொழிலுக்கான வாய்ப்பெல்லையை இப்போது மட்டுப்படுத்திவிட்ட அதேவேளையில், சிங்கள அறிவு புதிய வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளது.

1956இல் 'சிங்களம் மட்டும்' சட்டம் ஆக்கப்பட்டமை யும், அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நட வடிக்கைகளும் தேசிய மொழியாகச் சிங்களத்தின் மேன்மை நிலையை உறுதிப்படுத்தின. முதலாவது சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டுக் கால் நூற்றாண்டு கடந்த பின்னர், 1981ஆம் ஆண்டளவில் இலங்கைத் தமிழரில் 12 சதவீதத்தினர் மட்டும் சிங்கள மொழியில் எழுத்தறிவைப் பெற்றிருந்தனர். 1981இல் இலங்கைத் தமிழர் மத்தியில் ஆங்கில எழுத்தறிவு 17 சதவீதமாயிருந்தது. எனினும் தமிழ் அரசாங்க சேவையாளர்களில் மேலும் கூடிய விகிதாச் சாரத்தினர் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருந்தனர். இது ஆட்சேர்ப்புக்கும் பதவியுயர்வுக்கும் சிங்கள அறிவைத் தேவைப்படுத்துகின்ற ஒரு தொடரான ஒழுங்குவிதிகளை அரசாங்கம் உருவாக்கியபோது தமிழ் அரசாங்க சேவை யாளர்களையும் அச்சேவையை நாடுபவர்களையும் அனு கூலமற்ற ஒரு நிலைக்குத் தள்ளிவிட்டது. அப்போது வடக்கு-கிழக்குக்கு வெளியே இருந்த அரச ஊழியர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சிங்களப் பரீட்சையொன்றில் சித்தியடைய வேண்டுமென வற்புறுத்தப் பட்டனர்.

### (2) ஆட்சேர்ப்புக் கொள்கை

அரசாங்கத்துறை ஊழியர்களைத் தெரிவு செய்வதற் கான ஆட்சேர்ப்புக் கொள்கைகளை அனேக விமர் சகர்கள் கேள்விக்குட்படுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக திருச்செல்வம் (1984), 1977-78இல் இலங்கையின் அரசாங்க சேவையின் உயர் தரங்களுக்கும் இடைத் தரங்களுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நியமிக்கப்பட்ட தமிழரின் எண்ணிக்கையும் விகிதாச்சாரமும் குறிப்பிடத்தக்க அளவு குறைந்ததென்பதற்குச் சான்று காட்டுகின்றார் (அட்டவணை 3.19).

அட்டவணை 3.19

அரசாங்க சேவைத் தொழிலுக்கு ஆட்சேர்ப்பு 1977 – 78

| விபரம் | ஆட்சேர்ப்பு எண்ணிக்கை | தமிழரின் எண்ணிக்கை | தமிழரின் % |
|---|---|---|---|
| சி.நி.சே. திறந்த போட்டிப் பரீட்சை * | 140 | 0 | 0.0 |
| உதவி அஞ்சலதிபர்கள் | 98 | 4 | 4.1 |
| மருந்தியலாளர், கதிரியக்கவியலாளர் | 480 | 7 | 1.5 |
| நில அளவைப் பயிலுநர்கள் | 318 | 5 | 1.6 |
| இலங்கைக் கடற்படை | 2170 | 146 | 6.7 |
| பட்டதாரி ஆசிரியர்கள் | 1000 | 0 | 0.0 |
| பயிற்றப்படாத ஆசிரியர்கள் | 17000 | 700 | 4.1 |
| பொது எழுதுநர் சேவை | 1000 | 2 | 0.2 |

* சிலோன் நிருவாக சேவை (CAS) மூலம் : Tiruchelvam, N. 'Ethnos and Resource Allocation' in Goldman, R.B. & Wilson, A.J. Ceds). From Independence to Statehood, London: Frances Printers, 1984: 186.

பகுதியளவில் பெரும்பாலான அரசாங்கத்துறை ஊழியர்களை அமர்த்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட பரீட்சைச் செயல்முறையில் உள்ளார்ந்த பக்கச்சார்பு இருந்திருக்கக்கூடும். பரீட்சையின் ஊடாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட தமிழரின் விகிதாச்சாரம் குறைந்ததென்றும், 1970களின் காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்து வந்ததென்றும் சமரசிங்க (1984: 179) காட்டுகின்றார் (அட்டவணை 3.20)





அட்டவணை 3.20

இலங்கை நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்பு 1970–1981

| | இனக்குழு | 1970-77 | | 1978-81 | |
|---|---|---|---|---|---|
| | | எண் | % | எண் | % |
| திறந்த போட்டிப் பரீட்சை | சிங்களவர் | 433 | 91.5 | 159 | 100.0 |
| | தமிழர் | 34 | 7.2 | 0 | 0.0 |
| | ஏனையோர் | 6 | 1.3 | 0 | 0.0 |
| மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை | சிங்களவர் | 208 | 83.5 | 39 | 92.9 |
| | தமிழர் | 39 | 15.7 | 3 | 7.1 |
| | ஏனையோர் | 2 | 0.8 | 0 | 0.0 |
| திறமை நியமனம் | சிங்களவர் | 148 | 82.2 | 48 | 77.4 |
| | தமிழர் | 27 | 15.0 | 12 | 19.4 |
| | ஏனையோர் | 5 | 2.8 | 2 | 3.2 |
| மொத்தம் | சிங்களவர் | 789 | 87.4 | 246 | 93.5 |
| | தமிழர் | 100 | 11.1 | 15 | 5.7 |
| | ஏனையோர் | 13 | 1.5 | 2 | 0.8 |

மூலம் : சமரசிங்க, 1984; 179 - பொது நிருவாக அமைச்சிலிருந்து எடுக்கப்பட்டது.

### (3) அரசியல் போஷிப்பு

1970களில் ஆட்சேர்ப்பில் அரசியற் செல்வாக்கின் விஸ்தரிப்பு மேலும் விரிவடைந்தது. அத்தகைய முயற்சிகள் இலங்கையின் விசித்திரமான பிரதிநிதித்துவ சனநாயகத்தின் விளைவாக இருந்திருக்கக்கூடிய அதேவேளையில், அவை இன உணர்வுகளை ஊட்டி வளர்க்கின்றனவென்ற குற்றச்சாட்டுகளுக்கு விரைவில் உள்ளாகின (திருச்செல்வம், 1984). அரசாங்கத்துறைக்கான ஆட்சேர்ப்பில் அரசியற் செல்வாக்கின் விளைவு பற்றிய ஒரு மதிப்பீடானது (அட்டவணை 3.20) ஆட்சேர்ப்பில் தமிழர்க்கு எதிரான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடுமையான ஒருதலைபட்சத்தை இக்காரணி போதுமான அளவிற்கு வெளிப்படுத்துகின்றது.

1979ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கத்துறையின் கீழ் மட்டங்களுக்கான, ஏறக்குறைய எல்லா ஆட்சேர்ப்புகளும் 'வேலை வங்கி'த் திட்டத்தினூடாக நடத்தப்பட்டன (Employment Bank). அதன்கீழ் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் வேலை தேடுபவர்கள் 1000 பேர் வரையில் சிபாரிசு செய்ய அனுமதிக்கப்பட்டனர் (சமரசிங்க, 1984: 183). அத்தகைய ஒரு திட்டமானது, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருந்த காலத்தில் அரசியல் ஆதரவுத் தன்மை மீதும் கட்சி ஆதரவு மீதும் வெளிப்படையான தொடர்பினைக் கொண்டிருந்தது. இதன் விளைவாக ஒரு குறிப்பிடத்தக்க இனப்பரிமாணம் ஒன்று வேகமாக வெளிப்பட்டது. 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 18 பேர்[7] மட்டும் இலங்கைத் தமிழ்ப் பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகையில், தமிழ்ப் பிரதேசங்களில் பெருமளவில் தேவைப்பட்ட தொழில்களை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டவையாயிருந்தன.

தொடக்கத்தில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்களின் தொகுதிகளில் விநியோகிப்பதற்கு விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டன. ஆனால் திருச்செல்வம் (1984: 191) சுட்டிக்காட்டுகின்றவாறு அப்படிவங்கள் பின்னர் பரிசீலனையிலிருந்து விலக்கப்பட்டன. 1982 மே மாதத்திற்கிடையில் உண்மையில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் சமர்ப்பித்த 11,000 விண்ணப்பங்களில் 1,470இற்கு மட்டும் அரசாங்க வேலைகள் வழங்கப்பட்டன. தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்பட்ட நியமனதாரர்களுக்கான பணியமர்த்தல் விகிதம் குறைக்கப்பட்டு ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியின் சந்தர்ப்பவாத அரசியலினால் தூண்டப்பட்டு தமிழர்களுக்குக் கிடைத்திருக்க வேண்டிய நியாயமான (ஒப்பீட்டளவில் குறைந்த பட்சம்) பணிநியமனங்கள் குறைக்கப்பட்டு, அதன் ஒருபகுதி ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களுக்கு வழங்கப்பட்டது என்று சமரசிங்க (1984: 184) சூசகமாகக் குறிப்பிடுகின்றார்.





அரசியல் போஷிப்பின் வரலாறு சுதந்திரத்திற்கு சற்று முந்திய காலத்தில் தொடங்கியிருக்கக்கூடும். இதில் அரசியலும், தேர்தல்களும் சாதி, குடும்பம் மற்றும் இனக் குழுமம் என்பவற்றின் அடிப்படையிலேயே பெரும்பாலும் செயற்பட்டன (திருச்செல்வம், 1984: 189-90). இப்பாரம்பரியத்தில் அரச நிறுவனங்களின் விரிவாக்கம், தொகுதி மக்கள் சலுகைகளை நாடிப் பெறுவதற்கான ஒரு வாய்ப்பாகவும், அத்துடன் தொடக்கத்தில் பொருளாதாரத் தேசியமயமாக்கலுக்கும் பின்னர் தேசியப் பொருளாதார வளர்ச்சியிலிருந்து சிறுபான்மையினரை விலக்கிவைக்கும் (Economic Exclusion) ஒரு வாய்ப்பாகவும் காணப்பட்டது (தம்பையா, 1955). 1970களில் பொருளாதாரத்தின்மீது அரச கட்டுப்பாடு முழுமையாக இருந்ததனால் அரசியற் சலுகையாதரவுக்கான வாய்ப்புகள் காணி, வீடு, கைத்தொழில் (Industry) அனுமதிப்பத்திரங்கள், பாடசாலை அனுமதி, கடன், அந்நியச் செலாவணி மற்றும் வேலைகள் என்பவை தொடர்பில் தொடர்ந்திருந்தன. எனினும் அரசியற் சலுகைகளின ஊடாக அரசத் தொழிலின் (Employment) பங்கீடுதான் இம்முறைமையின் மீது மிக முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அடையாளமாகியது. தாராளமயமாக்கலின் வருகையின் பின்னரும் கூடப் பாரிய அளவிலான அரசாங்க முதலீடுகளின் மூலம் அத்தகைய வாய்ப்புகள் முக்கியமானவையாகத் தொடர்ந்தன.

அரசாங்கத்துறையில், விசேடமாக அதன் கீழ்த்தட்டுகளில், தமிழர்களின் தொழில் வாய்ப்புக்கான குறிப்பிடத்தக்க மற்றும் அதிகரித்துவந்த இனங்காணக்கூடிய தடைகளை குணசிங்க சுருக்கிக் கூறுகிறார்:

அரசியல் போஷிப்பின் பேரிலான ஆட்சேர்ப்பு முறைமையும் சிங்கள இளைஞர்களுக்குச் சாதகமாயிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றில் எது ஆட்சியிலிருந்தாலும், சிங்கள இளைஞர்கள் உள்ளூர் அரசியல்வாதிகளுடன் சலுகையாதரவாளர் - கட்சி ஆதரவாளர் என்ற தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கும் தம்மை வலிந்து முன்னேற்றுவதற்குமான வாய்ப்புகள் அவர்களுக்கிருந்தன. தமிழ் இளைஞர்கள், விசேடமாக வடக்கையும் கிழக்கையும் சார்ந்தவர்கள்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர்களின் உள்ளூர் அரசியல்வாதிகள் மத்திய அரசாங்கத்தில் எவ்வித அதிகாரத்தையும் அனுபவிக்காத பிராந்திய இனக் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியதனால், இந்த அனுகூலத்தை அனுபவிக்கவில்லை. எனவே அரசாங்கத் துறையின் விரிவாக்கம் வெறுமனே பொருளாதாரத்தின் மீது அரசக் கட்டுப்பாட்டின் அதிகரிப்பாக மட்டுமன்றி, அதன் தொடர் நிகழ்வாக சிங்கள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளில் ஒரு விரிவாக்கப் பரப்பாகவும் விளங்கியது. அரசாங்கத் துறையில் தோன்றிவந்த சிங்கள முகாமைத்துவப் படிநிலையும் சிங்களத் தொழில்முயற்சிக் குழுக்களுடன் நல்லுறவுகளைப் பேணியதனால், சிங்களத் தொழில் முயற்சியாளர் ஏற்கெனவே அனுபவித்துவந்த அனுகூலங்களை இது மேலும் வலுப்படுத்தியது (1984: 199).

## இலங்கை அரசியலில் பௌத்தமும் இன முரண்பாடும்

பௌத்தத்தினதும் சிங்கள மக்களினதும் மேலாதிக்க அந்தஸ்தைப் பேணுவதன்மூலம் மட்டுமே பௌத்த விசுவாசத்தைப் பாதுகாக்க முடியுமென்று இலங்கையிலுள்ள பௌத்தர்கள் நம்புகின்றனர். சமயமும் அரசியலும் கலந்து, சமயக் குருவும், அரசியல் குருவுமென்ற இரட்டை வேடத்தைச் சமயத் துறவிகள் ஏற்கின்றபோது சனநாயகச் செயல்முறை கடுமையான நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுகிறது (பார்க்க தம்பையா 1992).

## சுதந்திரத்தின் பின்னர் தமிழருக்கு எதிரான கலவரங்கள்

முன்னர் விவரிக்கப்பட்டவாறு இலங்கை ஒரு பல்லினச் சமுதாயம். இனம், மதம் மற்றும் மொழியின் அடிப்படையில் ஒன்றோடொன்று வேறுபட்டதான, சுயஉணர்வுடைய தேசிய இனக் குழுக்களைக்கொண்ட ஒரு பல்வண்ண ஒட்டு. எனினும் அத்தகைய கதம்பப் பண்புகளைக்கொண்ட ஒரு சமுதாயத்தில், சிங்களவரும் தமிழருமென்ற இருபெரும் சுதேசச் சமூகங்கள் தொடக்கத்தில் ஒன்றோடொன்று ஓரளவு நல்ல உறவுகளைப் பேணிவந்தன. கடந்த காலத்தில், குறிப்பாகப் பத்தாம், பதினான்காம் நூற்றாண்டுகளுக்கிடையில், சிங்கள அரசர்களும் தென்னிந்தியாவின் சோழ இராச்சியத்தைச் சார்ந்த தமிழர்களும் ஒருவரொருக்





கொருவர் எதிராகச் சண்டையிட்டபோதிலும், இலங்கைத் தீவின் இரு சமூகங்களையும் சார்ந்த சாதாரண மக்கள் தம்மாலியன்றவரை முரண்பாடின்றி இம்மண்ணில் வாழ்ந்து வந்தனர் (றிக்கின்ஸ் 1960: 230).

ஆங்கிலக் காலனித்துவ ஆட்சியின்கீழ் சிங்கள-தமிழ் சமூக உறவுகள் சீரழிக்கப்பட்டு இரு இனங்களுக்குமிடையிலான பிரிவுக்குப் பெருமளவு பங்களித்தது. ஆங்கிலக் காலனித்துவ அரசாங்கம் பொருளாதாரச் சுரண்டலுக்காகவும், நிருவாக வசதிக்காகவும் இலங்கையை ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு நாடாக நடத்தியபோதிலும், தனது அரசியல் நலன்களுக்காக அதனை இனரீதியாகப் பிரித்தது. 1948இல் ஆங்கிலேயர் வெளியேறியபோது இன முரண்பாட்டுக்கான கோடுகள் ஏற்கெனவே கீறப்பட்டுவிட்டன. சுதந்திரத்தின் பின்னர் இரு இனங்களும் பரஸ்பர அவநம்பிக்கைக்கும் பகைமைக்குமான அறிகுறிகளை வெளிப்படுத்தியபோதிலும் ஒரு சில ஆண்டுகளின் பின்னர்தான், குறிப்பாகத் தமிழரின் பல்வகைப்பட்ட மனக்குறைகளை நீக்குவதற்குச் சிங்கள அரசாங்கம் தவறிய பின்னர்தான், ஆயுதமோதல் ஆரம்பித்தது. 1956இல் 'அரசகரும மொழிச் சட்டம்' அல்லது 'சிங்களம் மட்டும் சட்டம்' ஆக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழருக்கெதிரான முதலாவது கலவரம் தொடங்கியது.

ஆரம்பத்தில் தமிழருக்கெதிரான கலவரங்கள், பாகுபாடான சட்டங்களுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் எதிராக சமஷ்டிக் கட்சியின் (தமிழரசுக் கட்சி) (FP) தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதியான, சாத்வீகமான சிவில் சட்டமறுப்புப் பிரச்சாரங்களுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் பதிலளிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டன. எனினும் இத்தகைய பதில் நடவடிக்கைகள் தமிழரின் கண்டன எதிர்ப்பை அடக்கும் நோக்குடன் திட்டமிட்ட தூண்டுதல்களுடன் கூடிய வன்செயல்களாயிருந்தன. தமிழர் ஆதிக்கப் பிரதேசங்களிலிருந்து தமிழர் வெளியேற்றப்பட்டதும் அதே யிடங்களில் சிங்களவர் குடியமர்த்தப்பட்டதுமே 1956 கலவரங்களைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்களாகும்.

1958ஆம் ஆண்டு மேயில் வட மாகாணத்தில் வெகுசன சட்டமறுப்பு இயக்கமொன்றைத் தொடங்கும் பொருட்டு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழரசுக் கட்சியின் மகாநாடு ஒழுங்குசெய்யப்பட்டது. இங்கும் சிங்களவர் தமிழருக்கெதிராக வன்முறைமூலம் எதிர்ப்பைத் தெரிவித்தனர். சூறையாடல்களும் தீவைப்புக் களும் வெடிமருந்துகளைப் பயன்படுத்தலும் இவ்வன் செயல்களில் அடங்கும். அத்தகைய நிலைமைகளில் சிங்களச் சமுதாயத்தின் கிரிமினல் சக்திகள் தலைமைதாங்கி, வகை தொகையற்ற கொலைகளிலும் தமிழர் உடைமைகளை அழிப்பதிலும் ஈடுபட்டதைக் காணமுடிந்தது. அவற்றின் விளைவாக 700இற்கும் மேற்பட்ட தமிழர் தமது உயிர் களை இழந்ததுடன், ஏறக்குறைய 12,000 தமிழர்கள் அகதி களாக வடக்கிலும் கிழக்கிலுமுள்ள அவர்களின் தாயகத் துக்கு ஏற்றிச்செல்லப்பட்டனர் (சிவசிதம்பரத்துடன் நேர் காணல்: 15 ஏப்பிரல் 2001). இச்சம்பவங்களைத் தொடர்ந்து பிரதமர் பண்டாரநாயக்க, நிருவாகத்தில் தமிழின் நியாய மான உபயோகத்தைத் தொடர்வதற்கு 28ஆம் இலக்கத் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துக்குப் பாராளு மன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றார்.

1977ஆம் ஆண்டானது, தமிழருக்கெதிராகப் பொங்கி யெழுந்த மற்றுமொரு தொடர்ச்சியான வன்செயல்களைக் கண்டது. இம்முறை, பொதுத்தேர்தலின்போது ஈழம் என்ற தனிவேறான தமிழ் அரசொன்றைத் தாபிப்பதற்கு வடக்கிலும் கிழக்கிலுமுள்ள தமிழர் அளித்த அளப்பரிய ஆதரவுக்கு எதிர்ச்செயலாக இத்திடீர்ச் சீற்றம் வெடித்தது. தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைப்பின்மூலம் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி உருவானதுடன், ஈழத்துக்கான உரிமைக் கோரிக்கையும் வலுப்பட்டது. இது சிங்களத் தீவிரவாதிகளுக்கும் பௌத்த குருமாருக்கும் ஆத்திர மூட்டியது. அவர்கள் தமிழ்ப் போராளிகளால் சிங்களப் பொலிஸ்காரர் ஒருவர் கொல்லப்பட்டாரென்று பரப்பப் பட்ட பொய்யான வதந்திகளுக்கு எதிர்ச்செயலாகக் கடுமையான வன்செயல்களில் ஈடுபட்டனர். இம்முறை 300இற்கும் மேற்பட்ட தமிழர் கொல்லப்பட்டதுடன் 35,000பேர் அகதி முகாம்களில் தஞ்சம் புகவும் நேரிட்டது. இந்தியத் தமிழரும் இலக்குவைக்கப்பட்டதனால் அவர் களில் 200,000இற்கும் அதிகமானவர்கள் பாதுகாப்புத் தேடி இந்தியாவுக்கும் அத்துடன் வடக்குக்கும் கிழக்குக்கும் தப்பி யோடினர். 40,000இற்கு மேற்பட்ட மலைநாட்டுத் தமிழர்





அகதிகளாகி அவர்கள் வட மாகாணத்துக்கு அனுப்பப் பட்டனர் (சந்திரஹாசனுடன் நேர்காணல்: 13 ஏப்பிரல் 2001). கலவரங்கள் பற்றிய சனாதிபதி விசாரணை ஆணைக் குழு, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் சிங்கள எதிர்ப்புப் பிரச்சாரம் கலவரங்களுக்குக் காரணமெனப் பழிசுமத்தியது (மேற்கோள் - விஜே, 1985: 86).

இவற்றையெல்லாம் விடக் கொடுமையானது இனிமேல் தான் வரவிருந்தது. அதுதான் 1983 யூலையின் இறுதி வாரத் தில் இடம்பெற்ற பாரிய சிங்கள இன வன்முறை. அது இத்தடவை கொழும்பை மையமாகக்கொண்டு, வெடித்தது. தீவிரத்திலும் பரிமாணத்திலும் முன்னர் ஒருபோதும் காணாத அளவுக்கு தமிழரின் உயிர்களுக்கும் உடைமை களுக்கும் எதிராக அது ஏவிவிடப்பட்டது. ஜயவர்தன அரசாங்கத்தில் செல்வாக்குள்ள பிரிவினர், பௌத்த குருமார் மற்றும் இலங்கைப் பொலீசாரும் ஆயுதப் படை களைச் சார்ந்தவர்களும் அதில் ஈடுபட்டதை வெளிப் படுத்துகின்ற ஆவணச் சான்றுகள் உள்ளன (பார்க்க திசாநாயக்க 1984, வெங்கடாச்சலம், 1987 மற்றும் பியதாச, 1984). பாதுகாப்புப் படைகளுக்கும் வடக்கின் தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கும் இடையிலான ஒரு தொட ரான தாக்குதல்களினாலும் எதிர்த்தாக்குதல்களினாலும் இலங்கை அதிர்ந்தது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA), போராளிக் குழுக்களை அடக்குவதற்குப் பாது காப்புப் படைகள் விரும்பியவாறு செயற்படுவதற்கான சுதந்திரத்தை அவற்றுக்கு அளித்தது (ஹூல் மற்றும் ஏனையோர், 1990: 52-62).

தமிழ் இளைஞரைப் பொறுத்தவரை இதுவொரு விடுதலைப் போராட்டமேயன்றி 'பயங்கரவாதமல்ல'. இந் நெருக்கடிமிக்க சூழ்நிலைகளில் இந்திய அரசாங்கத்தால் ஒரு நடுநிலையான, மௌனமான சாட்சியாக இருக்க முடிய வில்லை: போராளிகளுக்கு அடைக்கலம் அளிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை அது உணர்ந்தது. துக்ககரமான அந்த 1983 யூலையின் இறுதியில் 2000 முதல் 3000 வரையிலான தமிழர் கொலைசெய்யப்பட்டதுடன், 300 மில்லியன் யுஎஸ் டொலர் பெறுமதியானவையென மதிப்பிடப்பட்ட தமிழரின் உடைமைகளும் சூறையாடப்பட்டன. நான்கு நாட்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முடிவடைந்த நிலையில் கொழும்பில் வசித்துவந்த தமிழரில் ஏறக்குறைய 70 சதவீதமானவர்கள் அகதி முகாம்களில் இருந்தனர். அடுத்துவந்த வாரங்களில் 1,60,000இற்கும் அதிக மான இலங்கைத் தமிழர் தென்னிந்தியாவிலுள்ள தமிழ் நாட்டுக்குக் கடல்கடந்து சென்றனர் (செனெவிரத்ன 1988: 11). வெலிக்கடைச் சிறைச்சாலையில் முக்கியமான போராளித் தலைவர்கள் உட்பட 53 தமிழ்க் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். கலவரம் பற்றி விசாரணை நடத்து வதற்கு ஜயவர்தன அரசாங்கம் தயங்கியதிலிருந்து அதில் அரசாங்கத்தினரும் ஈடுபட்டனர் என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாகவே இருந்தது (பார்த்தசாரதி: 1985).

பிரபலமான சிங்கள எழுத்தாளரான பியதாசவின் (1984: 78) கூற்றுப்படி இனப்படுகொலையென்று வரை யறுக்கப்படக்கூடிய இது, அரசாங்க அலுவலகங்களினதும் கூட்டுத்தாபனங்களினதும் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்துகின்ற பலம்மிக்க ஒரு தொழிற்சங்கமான 'ஜாதிக சேவக சங்கமய'வால் (JSS) நன்கு திட்டமிடப்பட்டது. சனாதிபதி தேசத்துக்கு ஆற்றிய உரை அழிவுகளுக்கும் வன்முறைக்கும் வருத்தம் தெரிவிக்கும் கருத்துக்களைக் கொண்டிருந்தபோதிலும், வன்முறையை நிறுத்தும்படி எவ்வித வேண்டுகோளையோ பலியானவர்களுக்கு அனு தாபத்தையோ அதில் அவர் வெளிப்படுத்தவில்லை. 'நாடு பிரிக்கப்படுவதைத் தடுக்கவேண்டுமென்ற சிங்கள மக்களின் இயல்பான விருப்பத்தையும் கோரிக்கையையும் திருப்திப் படுத்துவதற்கு, பிரிவினையை ஆதரித்துப் பேசுபவர்கள் அதனைச் சட்டபூர்வமாகச் செய்ய முடியாதவாறு' அர சாங்கம் சட்டங்களை இயற்றும். தனி அரசொன்றுக்காக உழைத்தலை ஒரு கிரிமினல் குற்றமாக்குகின்றதும், பாராளு மன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றையாட்சி அரசின் மீதான தமது பற்றுறுதியை வெளிப்படுத்தும் உறுதிப் பிரமாணம் செய்யவேண்டுமென்ற அதிகாரத்தைக் கொண் டதுமான, அரசியலமைப்புக்கான ஆறாவது திருத்தம் 1983 ஆம் ஆண்டு ஆகஸ்டில் நிறைவேற்றப்பட்டது.

இந்தியாவின் அனைத்துப்பகுதிகளிலிருந்தும் தலைவர் கள் இலங்கையிலுள்ள தமிழரின் நெருக்கடி நிலை குறித்து அதிர்ச்சியை வெளிப்படுத்தினர். இந்திரா காந்தியின் வெளி





விவகார அமைச்சர் பீ.வீ. நரசிம்மராவ் நிலைமையைக் கண்காணிக்கும்பொருட்டு இலங்கைக்கு வருகை தந்தார்.

தமிழருக்கெதிரான 1983ஆம் ஆண்டு கலவரங்கள் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களைப் போராளி இயக்கங்களின்பால் தள்ளிவிட்டது. லெபனானிலும், சிரியா விலும், லிபியாவிலும் மற்றும் இந்தியாவிலும் அவர்கள் பெற்ற பயிற்சியைக்கொண்டு சிங்களக் காடையர் கும்பல் களையும் பாதுகாப்புப் படைகளையும் எதிர்கொள்வதற்கு, கெரில்லா யுத்திகள் அடங்கலாகத் தீவிர நடைமுறைகளைப் பயன்படுத்த அவர்கள் ஆயத்தமாயிருந்தனர். பெரும் பாலான போராளிகளைப் பொறுத்தவரையில், இன முரண்பாட்டின் சமாதானத் தீர்வுக்கான அனைத்து வழி களும் மூடப்பட்டுவிட்டன.

1983ஆம் ஆண்டு யூலைவரை சிங்களப் பிரதேசங்களில் சிங்களக் காடையரின் வன்செயல்களுக்குத் தமிழர்கள் மட்டுமே பலியாயினர். மிகச் சிலரான சிங்களக் குடிமக்கள், பொலிஸ்காரர் அல்லது பாதுகாப்புப் படையினர்தான் தமிழ்ப் போராளிகளால் கொல்லப்பட்டிருந்தனர். தமிழ்ப் போராளிகள் ஆயுதம் ஏந்தியவர்களாக 1983ஆம் ஆண்டு ஆகஸ்டுக்கு முன்னர் அவர்களுக்கு இழைக்கப்பட்ட வன்முறைக்கெதிராகப் பதில் நடவடிக்கைகளைத் தொடங் கியவுடன் இந்நிலைமை விரைவாக மாறியது. தமிழரின் போராண்மையை எதிர்ப்பதற்காக வடக்கிலும் கிழக்கிலும் பெருந்தொகையாக நிலை கொண்டிருந்த சிங்களப் பொலிசாரும் இராணுவ ஆளணியினரும் போராளிகளின் ஆயுத எதிர்ப்புக்கு இலக்குகளாயினர். பிரதான போராளிக் குழுவான தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE), ஒருசில சம்பவங்களைத் தவிர, தமிழ்ப் பிரதேசங்களினுள்ளும் அவற்றுக்கு வெளியேயும் வசிக்கின்ற சிங்களக் குடிமக்கள் மீது புறத்தூண்டுதலற்ற தாக்குதல்கள் நடத்துவதைத் தவிர்த்தது.

## முறிந்துபோன வாக்குறுதிகள்

'சிங்களம் மட்டும்' சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் மொழிப் பிரச்சினை தொடர்பில் சிங்களக் கட்சி களின் தலைவர்கள் எடுத்த நிலைப்பாடுகள் தமிழ்த்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தலைவர்களுக்கு ஆத்திரமூட்டின. சுதந்திர இலங்கையின் மூன்றாவது பிரதமரான, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சேர் ஜோன் கொத்தலாவல 1955இல் தமிழர் தாயகத்தின் இதயமான யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தபோது, 1956 பொதுத் தேர்தலில் அவரது கட்சி ஆட்சிக்கு வருமாயின் சிங்களமும் தமிழும் இந்நாட்டின் அரசகரும மொழி களாக்கப்படுமென்று தமிழ் மக்களுக்கு வாக்குறுதியளித் திருந்தார்.[8]

இரு மொழிகளுக்கும் சமமான அந்தஸ்து வழங்கப் பட்டால் சிங்கள மக்கள் தமிழ் படிக்கும்படி நிர்ப்பத்திக்கப் படுவரென்று சிங்களத் தீவிரவாதிகளால் இக்கூற்று வேண்டுமென்றே திரித்துக் கூறப்பட்டது. சிங்கள-பௌத்த குறிக்கோளுக்கு ஆதரவாகக் குரலெழுப்பிவந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சார்ந்த பண்டாரநாயக்கவுக்கு, தமிழின் நியாயமான உபயோகத்துக்கான ஏற்பாட்டுடன் இலங்கையின் ஒரேயொரு அரசகரும மொழியாகச் சிங்களம் ஆக்கப்படுமென்று பிரகடனப்படுத்துவதற்கான வாய்ப்பை இது வழங்கியது.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பிரதமர் கொத்த லாவலயும், அவர் முன்னர் தமிழருக்களித்த வாக்குறுதிக்கு முரணாக, தேசத்தின் ஒரேயொரு அரசகரும மொழி யாகச் சிங்களம் ஆக்கப்படுமென்று அறிவித்தவகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இந்த நிலைப்பாட்டுக்குச் சவால் விடுத்தார் (பொன்னம்பலம், 1983: 94). ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த அறிவித்தலைத் தொடர்ந்து, உடனடியாகப் பண்டாரநாயக்க தமது கூட்டணிக் கட்சி கள் தேர்தலில் வெற்றிபெற்றால் இருபத்து நான்கு மணித் தியாலங்களில் சிங்களம் அரசகரும மொழியாக்கப்படு மென்று பிரகடனப்படுத்தினார் (பொன்னம்பலம், 1983: 94). பிரதமர் பண்டாரநாயக்க தமிழ்மொழி உபயோகத்துக் கான நியாயமான ஏற்பாடெதனையும் செய்யாமல் 1956இல் சிங்களத்தை ஒரேயோரு அரசகரும மொழியாக ஆக்கினார்.

சிங்கள ஆளும் வர்க்கத்தினர், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குச் சிங்கள வாக்காளர்களுக்கு எவ்வித வாக்குறுதிகளையும் வழங்கத் தயாராயுள்ளனரென்பதை யும், தமிழர் மீதும் நீண்டகாலமாகப் பேணப்பட்டுவந்த





சிங்கள-தமிழ் உறவுகள்மீதும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய இத்தீர்மானங்களைப்பற்றி அவர்கள் அக்கறையற்றவர்களென்பதையும் தமிழ்த் தலைவர்கள் நன்றாக உணர்ந்தனர்.

## தமிழ்த் தலைவர்களின் அமைதியான எதிர்ப்புகள்

தமிழரசுக் கட்சி தலைவர் செல்வநாயகத்துக்கு, சிங்களத் தலைவர்களுடன் பேசி பிரச்சினைகளைத் தீர்ப் பதற்கான ஓர் உடன்படிக்கையை எட்டுவதற்கான ஆதர வைத் தமிழ் மக்கள் அளித்தனர். சமஷ்டி முறையிலான ஓர் அரசாங்கத்தின்கீழ் கணிசமான அளவு பிராந்திய சுயாட்சி யென்ற தமிழரின் மூலக்கோரிக்கைகளை விட அம்முன் மொழிவுகள் மிகக் குறைந்தனவாக இருந்தபோதிலும் கூடத் தமிழ் மக்கள் அவரை ஆதரித்தனர் (பார்க்க த.அ.க. விஞ்ஞாபனம் 1977). தமிழ்ப் பிரதேசங்களுக்குக் குறைந்த பட்சம் பிராந்திய சுயாட்சி வழங்கப்படுமென்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பண்டாரநாயக்கவும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த டட்லி சேனநாயக்கவும் முறையே 1957இலும் 1965இலும் செல்வநாயகத்துக்கு அளித்த வாக்குறுதிகளை, சிங்கள கடும்போக்காளர்களி னதும் பெரும்பாலான சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் களினதும் எதிர்ப்பின் காரணமாகக் கைவிட்டனர் (பின்னிணைப்பு 6 மற்றும் 7).

1970களின் தொடக்கத்தில் சிறிமாவோ பண்டார நாயக்க அரசாங்கம் போன்று, அடுத்தடுத்து வந்த அர சாங்கங்கள் தமிழரின் கோரிக்கைகளை நிராகரித்ததுடன் மட்டுமன்றி, தமிழ்ப் பிரதேசங்களில்கூட தமிழ்மொழி உபயோகத்திற்கான ஏற்பாடெதனையும் செய்யாமல், சிங்களமே அரசகரும மொழியென்று மீண்டும் வலியுறுத்து கின்ற அளவுக்குச் செயற்பட்டன. 1980களின் பிற்பகுதியில் ஜயவர்தனவின் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் இலங்கையின் தேசிய மொழிகளில் ஒன்றாகத் தமிழை[9] ஆக்குவதற்கு அரசியலமைப்பைத் திருத்தியபோதிலும், அச்சட்டத்தை அமல்படுத்துவதற்கு காத்திரமான முயற்சி யெதுவும் எடுக்கப்படவில்லை. இன்றுவரை தமிழர் அர சாங்கத்துடன் தொடர்புகொள்வதற்குச் சிங்களத்தைப் பயன்படுத்தவேண்டியிருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1950களின் நடுப்பகுதியிலிருந்து தமிழ்த் தலைவர்கள் தமது மனக்குறைகளுக்கு மருந்திடும் பொருட்டு, அரசாங்கத்தை இணங்கவைப்பதற்குச் செயல்விளைவுடைய சாத்வீக முறைகளில் முழு நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் அரசாங்கத்துக்குக் கலக்கம் அளிக்கும் வகையில் தமிழ்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தைத் தூண்டுவதில் சாத்வீக முறைகள் செயல் திறனற்றவை என்பதுடன், அவை இராணுவமும் சிங்களக் காடையர் கும்பல்களும் அப்பாவித் தமிழர்களின்மீதான கோரத் தாக்குதல் மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கின்றன என்றும் உணர்ந்தனர். உண்மையில் தமிழ்ப் போராளி இயக்கங்களின் எழுச்சியானது, அரசாங்கத்தின் பாகுபாடான கொள்கைகளின் மீதான தமிழரின் எதிர்ப்பை நசுக்கும்பொருட்டு இராணுவமும் சிங்களக் காடையர் கும்பல்களும் பயன்படுத்திய பயங்கர உத்திகளால் தூண்டப்பட்டது.

## 1977ஆம் ஆண்டுத் தேர்தலும், தமிழ் மக்களும்

சிங்கள ஆதிக்க அரசாங்கம் தமிழரின் மனக்குறையைத் தீர்ப்பதற்கு எவ்வித முயற்சியையும் எடுக்கவில்லை. அது **சிங்களம் மட்டும்** சட்டம் கண்டிப்பாக அமுல்படுத்தப்படுதலையும், பல்கலைக்கழகங்களுக்கான அனுமதியில் தமிழ் மாணவர்களைவிடச் சிங்கள மாணவர்களுக்கு விசேட முன்னுரிமை அளிக்கப்படுதலையும், அரசாங்க மற்றும் தனியார்துறை வேலைகளுக்கான நியமனங்களில் சிங்கள விண்ணப்பதாரர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படுதலையும், சிங்கள மொழியில் தேர்ச்சியற்ற அரசாங்க ஊழியர்களுக்குப் பதவியுயர்வுகள் மறுக்கப்படுதலையும் உறுதிப்படுத்துவதற்கான மேலதிகச் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் தொடர்ந்தும் அறிமுகப்படுத்தி வந்தது. இவற்றுடன் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள கல்வி நிறுவனங்களும் வைத்தியசாலைகளும் வீதிகளும் சீரழிந்து போக விடப்பட்டதுடன், அப்பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்தியும் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டது. அரசாங்கத்தின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களானது தமிழ் மக்களது பாரம்பரியத் தாயகத்தின் ஒருமைப் பாட்டிற்கு அச்சுறுத்தலாக விளங்கின (மனோகரன், 1987).





குடியேற்றம், பல்கலைக்கழகக் கல்வி மற்றும் தொழில் பற்றிய அரசாங்கக் கொள்கைகளும் பிரமாணங்களும் தமிழ்ச் சமூகத்தைப் பாரதூரமாகப் பாதித்தன. குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதிர்ந்த தமிழ்த் தலைவர்களின் இயலாமையையிட்டுச் சீற்றங் கொண்டவர்களாக, பிளவுபட்டிருந்த தமிழ்க்கட்சிகளை ஒன்றிணைத்து தனியொரு கட்சியாக 1977 பொதுத் தேர்தலில் போட்டியிடும்படி அறைகூவல் விடுத்தனர். இதனை ஏற்று தமிழ்த் தலைவர்கள் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியை (TULF) உருவாக்கி, 1976 மே 14ஆந் தேதியன்று செல்வநாயகத்தின் தலைமையின்கீழ் கூட்டப்பட்ட வட்டுக்கோட்டை மகாநாட்டில் தனிநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றினர் (பின்னிணைப்பு 8).

தமிழர் ஐக்கிய விடுதலைக் முன்னணியின் 1977ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனம், இந்நாட்டில் தமிழ் பேசுகின்ற மக்களின் பாரம்பரியத் தாயகங்களாக இருந்துள்ள, புவியியல் தொடர்ச்சியுள்ள எல்லாப் பிரதேசங்களையும் உள்ளடக்கியதான ஒரு சுதந்திரமான, இறைமையுள்ள, மதச் சார்பற்ற, சமதர்ம ஈழ அரசினைத் தாபிப்பதற்குத் தமிழர் புதிய உபாயங்களைக் கைக்கொள்வரென்று சிங்கள அரசியல்வாதிகளுக்கு அறிவித்தல் கொடுத்தது. அது கூறுவதாவது:

> தமிழ்த் தேசிய இனம் அதற்குரிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அதன் தாயகத்தில் அதன் இறைமையைத் தாபிப்பதற்கான தீர்மானத்தை எடுக்கவேண்டும். சிங்கள அரசாங்கத்துக்கும் முழு உலகிற்கும் இத்தீர்மானத்தை அறிவிப்பதற்கான ஒரேயொரு வழி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு வாக்களிப்பதுதான். இவ் வாக்குகள் மூலம் தெரிவுசெய்யப்படும் தமிழ்ப்பேசும் பிரதிநிதிகள் இலங்கைத் தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர்களாக இருக்கின்ற அதேவேளையில், 'தமிழ் ஈழத் தேசிய பேரவை' உறுப்பினர்களாகவும் தம்மைத் தாமே அமைத்துக்கொள்வார்கள். அப்பேரவை தமிழ் ஈழ அரசுக்கான ஓர் அரசியலமைப்பை வரைவுசெய்து சமாதானமான வழி முறைகள் மூலமாகவோ அல்லது நேரடி நடவடிக்கை அல்லது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போராட்டம் மூலமாகவோ அவ்வரசியலமைப்பைச் செயற்படுத்துவதனூடாக தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை நிலைநாட்டும் (த.ஐ.வி.மு. விஞ்ஞாபனம் 1977).

தமிழ் அரசியல்வாதிகள் சிங்களவருக்கு எதிரான போராட்டத்தில் இணைந்துகொள்ளும்படி தமிழ் இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தனர். தனிவேறான தமிழ் அரசொன்றைத் தாபிப்பதற்கான ஆணையைக் கோரி 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, வட மாகாணத்தில் உள்ள அனைத்து 14 ஆசனங்களையும், கிழக்கு மாகாணத்தில் தமிழர் பெரும்பான்மையாயுள்ள 4 ஆசனங்களையும் வென்றது. எஞ்சிய எட்டு ஆசனங்களை ஐக்கிய தேசியக் கட்சி வென்றது. இதில் ஆறு ஆசனங்களைத் தமிழ் பேசுகின்ற முஸ்லிம்களும், எஞ்சிய இரண்டு ஆசனங்களை அண்மையில் தாபிக்கப்பட்ட சேருவில மற்றும் அம்பாறை தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்த சிங்கள வேட்பாளர்களும் வென்றனர்.

தமிழருக்கெதிரான கலவரங்கள், பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி நாடுகின்ற தமிழ் மாணவர்கள்மீது கட்டுப்பாடுகளை விதிக்கின்ற ஒழுங்குவிதிகளின் அறிமுகம், இளைஞர் இயக்கங்களைத் தடைசெய்வதற்கு அவசரகால நடைமுறைகளின் உபயோகம் (பின்னிணைப்பு 9) என்பவை அடங்கலாக 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலைத் தொடர்ந்து இடம்பெற்ற தொடர்ச்சியான துயர நிகழ்வுகள் ஆகியவை தமிழ்ப் போராளி இயக்கங்களின் எழுச்சிக்குப் பங்களித்தன.

## தமிழரின் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள்

அரசுக்கெதிரான ஆயுதப் போராட்டத்திற்கு எதிர்ப்பென்ற பெயரில் இலங்கை அரசாங்கமும் பாதுகாப்புப் படைகளும் இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் உரிமைகளுக்கெதிராகப் படுமோசமான மீறல்களைப் புரிந்துள்ளன. தமிழ் மக்களின் வாழ்வுக்கும் சுதந்திரத்துக்கும் பாதுகாப்புக்குமான உரிமைகள் பெரும்பாலும் இடருக்குள்ளாயின. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினதும் (PTA)[10] அவசரகால ஒழுங்குவிதிகளினதும் கீழ், தமிழ்க்கைதிகள்





பரந்த அளவில் நீண்டகாலம் கேட்பாரின்றித் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். போராளிகளால் படைவீரர்கள் அல்லது பொலிஸ் அலுவலர்கள் கொலை செய்யப்பட்டமைக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகக் குடிமக்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான கைதிகள் காணாமற் போயுள்ளனர். ஏனையோர் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டதாக அறியப்படுகின்றது. வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் அத்தகைய வன்செயல்களால் கூடுதலாகப் பாதிக்கப்பட்டனர். பாதுகாப்புப் படைகளின் தந்திரோபாய மாற்றங்களுக்கேற்ப அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் நடவடிக்கைகளும் வேறுபட்டன. எவ்வாறாயினும் வடக்கும் கிழக்கும் மோதலின் பிரதான அரங்காகத் தொடர்ந்த அதேவேளையில், தமிழ் மக்களின் உரிமைகள் பெரிதும் இடருக்குள்ளாயின.

1980களின் நடுப்பகுதியிலிருந்து பாதுகாப்புப் படைகள் ஆயுத எதிர்ப்பை எதிர்கொள்வதற்கு, தொடர்ச்சியாகப் பரந்த அளவிலான, சட்டத்துக்குப் புறம்பான கொலைகளிலும் காணாமற்போகச் செய்தல்களிலும் இறங்கின. 1983இல் முரண்பாடு அதிகரித்ததன் பின்னர், வடக்கிலும் கிழக்கிலும் பாதுகாப்புப் படைகளின் பழிவாங்கும் நடவடிக்கையில் தமிழ்க் குடிமக்கள் கொல்லப்பட்டதையும் சில சமயங்களில் அவர்களின் உடல்கள் எரிக்கப்பட்டதையும் கூறுகின்ற எண்ணற்ற அறிக்கைகள் உள்ளன. 1984இல் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட ஆட்கள் காணாமற் போவது அதிகரிக்கத் தொடங்கியது (தமிழ்த் தகவல் நிலையம் 1997: 36-46). அவர்களின் உறவினர்கள், விசேடமாக அவர்களின் தாய்மாரும் மனைவியரும் சகோதரிகளும், அவர்களைத் தேடும் முயற்சியில் ஆண்டுக்கணக்கில் ஈடுபட்டும் அவர்களது முயற்சி பலனிக்கவில்லை.

ஒரு புதிய பொலிஸ் கமாண்டோ பிரிவான விசேட அதிரடிப் படையினரும் (STF) இராணுவத்தினரும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கைதுகளில் ஈடுபட்டதாகச் சாட்சிகள் கூறியுள்ளனர். காவல்துறை, வான் படை, கடற்படை ஆகியவற்றைச் சார்ந்த அதிகாரிகளால் குறைவான சந்தர்ப்பங்களிலேயே கைது செய்தப்பட்டதாகவும் விவரித்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துள்ளனர் (தமிழ்த் தகவல் நிலையம் 1997: 36-46). காணாமற் போனவர்களில் அனேகர் கட்டுக்காவலின்போது சித்திர வதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டதன் பின்னர் அவர்களின் உடல்கள் இரகசியமாக அழிக்கப்பட்டனவென்று நம்பப்படுகின்றது. விடுவிக்கப்பட்ட கைதிகள் சிலசமயங்களில் தாம் கண்கூடாகக் கண்ட இவ்வகையான நிகழ்வுகளை விவரித்துள்ளனர் (பார்க்க சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை 1983 மற்றும் இலங்கை பற்றிய 'ஏசியா வாட்ச்' அறிக்கை 1983).

வடக்கிலும் கிழக்கிலும் நீதிக்குப் புறம்பான முறையில் கொலைசெய்யப்பட்ட அல்லது காணாமற் போனவர்களின் எண்ணிக்கை பல்லாயிரக்கணக்காகும். பலியானவர்கள், அனைவரும், தமிழர்களே. இம்மீறல்கள் நிகழ்த்தப்படும் வேகத்திற்கு ஈடுகொடுத்து, அவற்றை ஆவணப்படுத்த முடியாத அளவுக்கு அவற்றின் வேகம் அதிகரித்தது. மேலும் 1980களின் நடுப்பகுதியில் இவற்றைப் பதிவுசெய்த உள்நாட்டு நிறுவனங்களில் அனேகமானவை 1984 முதல் 1987 நடுப்பகுதிவரை வடக்கிலும் கிழக்கிலும் 680இற்கும் மேற்பட்ட காணாமற்போதல்களைப் பதிவுசெய்தன (சர்வதேச மன்னிப்புச் சபை (AIR) அறிக்கை, ஏப்பிரல் 1995: ASA 37/04/95).

1987 நடுப்பகுதியிலிருந்து 1990 மார்ச் வரை வடக்கினதும் கிழக்கினதும் பாதுகாப்புக்கு இந்திய அமைதிப் படை (IPKF) பொறுப்பேற்றிருந்தபோது 43 காணாமற்போதல்களை அது பதிவுசெய்தது. அவற்றுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் இந்திய அமைதிப்படையும் காரணமாயிருந்தனவென நம்பப்பட்டது. 1997இற்கும் 2000இற்கும் இடையில் வடக்கிலும் கிழக்கிலும் தொடர்ந்தும் பாதுகாப்புப் படைகளின் கரங்களால் 622 காணாமற்போதல்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன (பார்க்க: 'யுஎன்எச்சிஆர்' அறிக்கை 2000). அதற்கு முன்னர் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டு, அவர்களில் அனேகர் சித்திரவதைப்படுத்தப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும் காணாமற்போகச் செய்தலானது, தடுப்புக் காவலிலுள்ள கைதிகளின் சித்திரவதை, சட்டவிரோதக் கொலைகள் உட்பட, பாரதூரமான துஷ்பிரயோகங்களுக்கான நேரடிச்





சான்றுகளை ஒழித்துவிடுகின்ற ஓர் உத்தியாயிருந்தது. 1990ஆம் ஆண்டு யூனில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கப் படைகளுக்குமிடையில் ஆயுத மோதல் மீண்டும் தொடங்கிய பின்னர், ஒருசில மாதங்களினுள் காணாமல் போனோரின் எண்ணிக்கை ஏறக்குறைய 3000ஐ எட்டியது. எனினும் உண்மையான தொகையைக் கூறுவது சாத்தியமற்றதாகியது (ச.ம.அறிக்கை, 1991).

1993 யூன் 1 முதல் டிசெம்பர் 31வரையான ஏழு மாதங்களில், கொழும்பு மாவட்டத்தில், அவசரகால ஒழுங்கு விதிகளின் அல்லது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் 15,711 கைதுகள் செய்யப்பட்டனவென்று சர்வதேச மன்னிப்புச் சபை மேலும் கூறுகின்றுது. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர் ஆவர். போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டனரென்ற சந்தேகத்தின்பேரில் தடுத்துவைக்கப்பட்ட தமிழ் மக்களும் இவர்களில் அடங்குவர். தமிழ்ச் சந்தேக நபர்களைத் தான்தோன்றித் தனமாகத் தடுத்துவைக்கப்படுவது தொடர்ந்தது. வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற மக்கள் மட்டுமன்றித் தெற்கிலுள்ள நகரங்களில், குறிப்பாகக் கொழும்பில் வசிக்கின்ற தமிழரும் அத்தகைய அதிகார துஷ்பிரயோகத்திற்கு எளிதில் இலக்காகினர்.

விசேடமாக தமிழீழ விடுதலைப் புலிகளால் தெற்கில் நடத்தப்பட்ட சதிக்கொலைகளையும் தாக்குதல்களையும் தொடர்ந்து தெற்கிலுள்ள ஆயிரக்கணக்கான தமிழர், முற்றுமுழுதாக அவர்களின் இன அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டனர். இவ்வழக்குகளில் 8 வீதமானவற்றில் மட்டும்தான் அவசரகால ஒழுங்கு விதிகளின்கீழ் தடுப்புக் கட்டளை வழங்குவதன்மூலம் கட்டுக்காவலில் இருந்த ஆளைத் தொடர்ந்தும் தடுத்துவைப்பதற்குப் போதிய சான்று இருந்தது. மேலும் 0.1வீத வழக்குகளில் மட்டும் தான் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக் கட்டளை வழங்கப்பட்டது. இவ்வாறு தான்தோன்றித்தனமாகக் கைது செய்யப்பட்ட தமிழரின் எண்ணிக்கை 1995இல் மேலும் அதிகரித்தது (பார்க்க ச.ம. அறிக்கை 1995).

வழக்கமான சட்டத்தில் காணப்படுகின்ற, சித்திர வதைக்கும் காணாமற்போதலுக்கும் எதிரான சட்டரீதியான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாதுகாப்புகளை பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் அவசரகால ஒழுங்கு விதிகள் இல்லாதொழிப்பதனால் பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தடுத்துவைக்கப்படு பவர்கள் ஆபத்திலுள்ளனர். பயங்கரவாத தடைச் சட்டமும், அவசரகால ஒழுங்கு விதிகளும், அரசாங்கத்தின் எதிராளி களெனச் சந்தேகிக்கப்படுபவர்களைக் கைதுசெய்வதற்கும், குற்றச்சாட்டைப் பதிவு செய்யாமல் அல்லது வழக்கு விசாரணையின்றி நீண்ட காலங்களுக்கு வெளித் தொடர் புக்கான வாய்ப்பின்றித் தடுத்துவைப்பதற்குமான பரந்த அதிகாரங்களைப் பாதுகாப்புப் படைகளுக்கு வழங்குகின் றன. அத்தகைய நிலைமைகள் தடுப்புக்காவலில் சித்திரவதை மரணங்களுக்கும் காணாமற்போதல்களுக்கும் இலகுவான ஒரு சூழலை ஏற்படுத்துகின்றன (தமிழ்த் தகவல் நிலையம் 1987: 5).

இலங்கை அரசாங்கம் சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவுபடுத்து கின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தண்டனை என்பவற்றுக்கெதிரான ஐ.நா.உடன்படிக்கையை 1994ஆம் ஆண்டு சனவரியில் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டது. 1994ஆம் ஆண்டு நவம்பரில் பொதுசனக் கூட்டணி (People's Alliance) அரசாங்கம் உடன்படிக்கையை செயல் படுத்துவதற்காக இலங்கையில் அதற்கான சட்டத்தை நிறைவேற்றியது (பார்க்க: இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 13). எனினும் உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திட்டபோது அது ஏற்றுக்கொண்ட கடப்பாடு களின் முழு வீச்சை இச்சட்டம் கொண்டிருக்கவில்லை (தமிழ்த் தகவல் நிலையம் 1987: 5).

இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து ஒரு சனநாயகப் பாராளுமன்ற முறைமையினைப் பேணி வருகின்ற போதிலும், நடைமுறையில் அது கடந்த 50 ஆண்டுகளில் 34 ஆண்டுகளுக்கு மேலாக, முழு நாட்டிலும் அல்லது நாட்டின் சில பாகங்களில் அவசரகாலச் சட்டத்தின் கீழேயே ஆட்சிபுரிந்து வந்துள்ளது. அவசரகால ஒழுங்கு விதிகள் வெவ்வேறு காலங்களில் வேறுபட்டுள்ளன. அவை அரசியலமைப்பு தவிர்த்த ஏனைய சட்டங்கள் எல்லா வற்றையும், மேலோங்கி நிற்கின்றன.





முன்னர் ஆராயப்பட்டவாறு பாதுகாப்புப் படை களும் அரசாங்கமும் பாரதூரமான மனித உரிமை மீறல் களைத் தண்டனை விலக்கீட்டுரிமையுடன் புரிவதற்குப் பயங்கரவாதத் தடைச் சட்டமும் அவசரகால ஒழுங்கு விதி களும் பங்களித்துள்ளன. அவை கண்மூடித்தனமான கைதுகள், காணாமல் போதல், தடுத்துவைத்தல், சித்திர வதை போன்றவற்றிற்கு எதிரான சாதாரணச் சட்டங்களை இல்லாமல் செய்ததினூடாக சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்வதற்கு இலகுவாக வழிவகுத்தது.

அவசரகால ஒழுங்கு விதிகளில் காணப்பட்ட, பெரிதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத சில அம்சங்கள் கடந்த 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களால் நீக்கப் பட்டுள்ளன. இருந்தபோதிலும் அவை இன்னமும் துர்ப் பிரயோகத்துக்கு எதிராக அவசியமான பாதுகாப்பை மக்களுக்கு வழங்கத் தவறுகின்றன. அத்துடன், குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன் படிக்கையின் கீழ் இலங்கையின் கடமைகளைப் பூரணமாக நிறைவேற்றவும் தவறுகின்றன. அத்துடன் அவசரகால அதிகாரங்களின் எல்லைகளைத் திட்டமிட்டு வரையறை செய்வதற்கும், நீதிமுறையை மீளாய்வு செய்வதற்கும், அரசியலமைப்பில் தேவையான மாற்றங்கள் செய்யப் படாததினால், இரவோடிரவாக மிகக் கொடுமையான ஏற்பாடுகளை மீண்டும் அறிமுகப்படுத்துதலைத் தடுப் பதற்கான நடைமுறைகள் எதுவும் அச்சமயத்தில் இல்லை.

## தமிழ்த் தேசிய இனத்தின்மீது ஒரு புதிய அரசியலமைப்பைத் திணித்தல்

இங்கு மாதிரிகளாக எடுத்துக்காட்டப்பட்ட சர்வாதி கார நடவடிக்கைகளின் உச்சக்கட்டம்தான் ஒரு புதிய அரசியலமைப்பின் வரைவும், அது தமிழ்த் தேசிய இனத் தின் மீது திணிக்கப்பட்டமையுமாகும். இலங்கையில் சிங்களப் பெரும்பான்மையால் உருவாக்கப்பட்ட பிரசா உரிமைச் சட்டமானது, மலையகத் தமிழர்களின் குடி யுரிமையைப் பறித்ததுடன், 70% சிங்கள மக்கள் 80% மான பிரதிநிதித்துவத்தைப் பாராளுமன்றத்தில் வகிக்கவும் வழி வகுத்தது. தமிழ் மக்களின் பிரசா உரிமையைப் பறித்ததன் மூலம் இலங்கைப் பாராளுமன்றம் பிரதிநிதித்துவப் படுத்தப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படாத ஜனநாயகத்திற்கு ஓர் அடையாளமாக விளங்குகின்றது. இவ்வாறானதோர் பாராளுமன்றம் 1970ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் பின்னர் புதிய அரசியல் சாசனம் ஒன்றை வரைவதற்கான அரசியல் நிர்ணய சபையை உருவாக்கியது. இப்பேரவையின் கலந்தாலோசனைகள், 1971இல் பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னர், மக்களின் பேச்சுச் சுதந்திரமும் எழுத்துச் சுதந்திரமும் நீக்கப்பட்டு, பத்திரிகைத் தணிக்கை கண்டிப்பாக அமுல் செய்யப்பட்டு ஓர் அவசரகால நிலைமையின்கீழ் நடத்தப்பட்டன. 1972இல் தமிழ் பேசுகின்ற மக்களின் சார்பாக அறிமுகப்படுத்தப்பட்ட அடிப்படைத் தீர்மானங்களுக்கான திருத்தங்கள் யாவும் பேரவையிலிருந்த சிங்களப் பெரும்பான்மையால் நிராகரிக்கப்பட்டன (த.ஐ.வி.மு. தேர்தல் விஞ்ஞாபனம் 1977: 11).

இந்நாட்டின் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாகத் தற்போதுள்ள தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தோற்றத்திற்கு வழிவகுத்த கட்சிகளில் ஒன்றான தமிழரசுக் கட்சியால் முன்வைக்கப்பட்ட, சுயாட்சி உரிமையுடைய தமிழ் அரசுகளையும் சுயாட்சி உரிமையுடைய ஒரு முஸ்லிம் அரசையும் மூன்று சிங்கள அரசுகளையும் கொண்டதான ஒரு சமஷ்டித் திட்டம் பரிசீலிக்கப் படாமலேயே பேரவையால் நிராகரிக்கப்பட்டது.

சிங்களக் கட்சி உறுப்பினர் யாரேனும் ஒருவரோ அல்லது பெரும்பான்மைச் சமூகத்தைச் சார்ந்த யாரேனும் ஒருவரோ தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு மாற்றுத் திட்டத்தைக் கலந்தாராய்வதற்கோ அல்லது வழங்குவதற்கோ முன்வரவில்லை. குறைந்தபட்சம் தமிழ்மொழியின் உபயோகத்துக்கான ஒழுங்குவிதிகளையேனும் அரசியலமைப்பில் இடம்பெறச் செய்விப்பதற்குத் தமிழ் உறுப்பினர்கள் எடுத்த முயற்சிகள்கூட பலனளிக்கவில்லை. இம்முயற்சிகளின் ஒரேயொரு பலன், தமிழ்மொழியின் உபயோகம் பற்றிய ஒழுங்குவிதிகள் அரசியலமைப்பின் ஒரு பகுதியாக இருத்தலாகாது என்று திட்டவட்டமாகக் கூறுகின்ற 8(2)ஆம் பிரிவு அரசியலமைப்பினுள் அறிமுகப்படுத்தப்பட்டமைதான். அரசியலமைப்புப் பேரவையில் தொடர்ந்தும் பங்குபற்றுதலில்





பயனில்லையென உணர்ந்த தமிழ்ப் பிரதிநிதிகள் அதிலிருந்து வெளிநடப்புச் செய்தனர். அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்காகக் கூட்டப்பட்ட 1972ஆம் ஆண்டு மே 22ஆந் தேதிய பேரவைக் கூட்டத்தை தெரிவுசெய்யப்பட்ட 19 தமிழ்ப் பிரதிநிதிகளில் 15 பேர் புறக்கணித்தனர். ஏனைய நான்குபேர் அரசியலமைப்புக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அரசியலமைப்புக்கு ஆதரவாக வாக்களித்த நான்கு பேரில் இருவர், அவர்களின் கட்சியான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசிலிருந்து விலக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்களின் பிரதிநிதித்துவப் பண்பை இழந்தனர். ஒருவர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (சமஷ்டிக் கட்சி) வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தவர். அக்கட்சியிலிருந்து அவர் விலக்கப்பட்டதனால் அவரின் பிரதிநிதித்துவ உரிமையை இழந்தார். நான்காமவர் அரசாங்கத்துக்கெதிரான கோட்பாட்டு அடிப்படையில் சுயேச்சையாகப் போட்டியிட்டு வென்றவர்.

எனவே, இந்த அரசியலமைப்பு தமிழ் மக்களால் முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட்டதென்பது தெட்டத் தெளிவு. தமிழ்த் தேசிய இனத்தின் ஏகமனதான எதிர்ப்பு உதாசீனப்படுத்தப்பட்ட முறையும், அவர்கள்மீது அது எவ்வாறு திணிக்கப்பட்டதென்பதும் சிங்கள ஏகாதிபத்தியப் போக்கை உறுதிப்படுத்த உதவியுள்ளன. ஆங்கிலேயர் அரசியலமைப்பில் சிறுபான்மைகளுக்கு விட்டுச்சென்ற குறைந்தபட்ச முற்பாதுகாப்புகளைக்கூட அவர்கள் ஒழித்துக்கட்டிவிட்டு, தகர்க்க முடியாத ஒரு தடையாக சிங்களர்கள் அவர்களின் சொந்த மொழியையும் மதத்தையும் அமர்த்தியுள்ளனர். இது தமிழரை இவ்வரசின் அரசியல் அதிகாரத்தில் எவ்விதப் பங்குமற்ற, அவர்களின் அடிமைகளாக்கியுள்ளது.

இவ்வத்தியாயத்தில் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களால் 1948ஆம் ஆண்டு முதற்கொண்டு தமிழருக்கெதிராகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட பாகுபாட்டின் விளைவாக இன முரண்பாடு தோன்றியதென்பது சுட்டிக்காட்டப்பட்டது. சிங்கள ஆளும் கட்சிகள் சிங்கள வாக்குத் தளத்திலேயே பெருமளவு தங்கியிருந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமையாலும், அவற்றிற்கே பொறுப்புடையதாக இருந்தமையாலும், அடுத்தடுத்து வந்த சிங்கள அரசாங்கங்கள் இன்றியமையாதவாறு தமிழருக்கு எதிரான பாகுபாட்டுக் கொள்கையை முன்னெடுத்துச் சென்றனவென்பதும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டது. அவர்களின் பாகுபாட்டுக் கொள்கைகள் சிங்களப் பெரும்பான்மையின் அபிலாசைகளை நிறைவேற்றும் நோக்குடையவை. நிரந்தரமான சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களால் தமிழர்கள் தொடர்ச்சியாகப் பாகுபடுத்தப்பட்டமையும், பழிவாங்கப்பட்டமையும், ஒரு பல்லினச் சமுதாயமென்ற தங்களது எண்ணத்தைத் தமிழர்கள் மாற்றிக்கொள்வதற்கும் இலங்கை அரசியல் முறைமையின் சட்டபூர்வ நிலைக்கு அவர்கள் சவால் விடுப்பதற்கும் தமிழரை நிர்ப்பந்தித்தன.

அடுத்த அத்தியாயம் தமிழர் மத்தியில் போராளி இயக்கங்களின் எழுச்சியையும், மிதவாத இயக்கங்களிலிருந்து போராளி இயக்கங்களாக அவற்றின் படிநிலை முன்னேற்றத்தையும் ஆராய்கின்றது. நாம் காணவுள்ளவாறு அரசியலமைப்புத் தீர்வுகளைத் தேடுவதில் தோல்வி கண்ட முயற்சிகளுக்குப் பதிலளிப்பதாக தமிழர் போராண்மையின் எழுச்சி தகுதியானதே.

## முடிவுக் குறிப்புகள்

1. 'கச்சேரி முறைமை' என்பது ஆங்கிலக் காலனித்துவ அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்ட நிருவாக அலகு

2. எஞ்சிய இரு மாகாணங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள்

3. தொடக்கத்தில் தமிழில் பட்டிப்பளை ஆறு என அழைக்கப்பட்டது.

4. தொடக்கத்தில் தமிழில் மணலாறு என அழைக்கப்பட்டது.

5. தொடக்கமூலத் தமிழ்ப் பெயர் 'பாவற்குளம்'

6. அரசாங்கம் வெலிஓயா என்று மாற்றுவதற்கு முன்னர் தொடக்கமூலத் தமிழ்ப் பெயர் மணலாறு.

7. 1977 தேர்தலில் த.ஐ.வி.மு. வட மாகாணத்தில் எல்லாப் பதின்நான்கு ஆசனங்களையும் கிழக்கு மாகாணத்தில் நான்கு ஆசனங்களையும் வென்றது.





8. கொத்தலாவல 1955இன் தொடக்கத்தில் யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலா சென்றார். அவரின் கடைசிப் பொதுக்கூட்டம் கொக்குவிலில் நடைபெற்றது. அவர் அக்கூட்டத்தில் "நாட்டின் அரச கரும மொழியாகச் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்குவதற்கு அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்படும்" என்று கூறினார்.

9. மற்றத் தேசிய மொழி சிங்களம்.

10. 1979 யூலையில் ஜயவர்தன அரசாங்கம் 'எல்ரீரீஈ' ஐத் தடை செய்கின்ற சட்டத்தை நீக்கி அதனிடத்தில் நாட்டில் ஆக்கப்பட்ட சட்டங்களில் ஆகவும் கொடுமையான, 1979இன் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பதிலீடு செய்தது. இச்சட்டம் தென்னாபிரிக்காவின் வசைப்பெயரெடுத்த 1967 பயங்கரவாதச் சட்டத்தைப் போன்று அதேயளவு முக்கியமானது.

www.tamilarangam.net

அத்தியாயம்- 4

# தமிழர் போர்முனைப்பின் எழுச்சி

இந்த அத்தியாயம் இலங்கையில் தமிழர் போர் முனைப் பின் படிப்படியான வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களைக் கவனமாகப் பரிசீலனை செய்வதன் வாயிலாக அதன் தோற்றுவாயை ஆராய்கின்றது. தமிழர் இன இயக்கமானது ஒரு மிதவாதக் கட்டத்திலிருந்தும் சமஷ்டிக்கான முயற்சி யிலிருந்தும் (1940கள்-1960கள்) சுயநிர்ணயத்திற்கும் பிரிந்து செல்வதற்குமான உரிமைக்கோரிக்கைகள் ஊடாக (1970 கள்) இன்றைய ஆயுதப் போராட்ட அரசியலாக (1980கள்) விருத்தியடைந்தது. சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் செயற்படுத்திய பாகுபாடான நடவடிக்கைகள் காரண மாக இலங்கையில் இன உறவுகள் ஒரு புதிய கட்டத்தினுள் புகுந்தனவென்பதை கடந்த அத்தியாயத்தில் கண்டோம். - தொடக்கத்தில் சிங்கள அடக்குமுறைக்கும் மிதவாத அரசி யலின் தோல்விக்கும் ஓர் எதிர்ச் செயலாகவும், பின்னர், கூடிய அளவில் பிரதானமாக உலகளாவிய சூழமைவில் அத்தகைய உள்நாட்டு இயக்கங்களை விளங்கிக்கொள்ளக் கூடிய ஒரு தருக்க ரீதியாகவும் அது இடம்பெற்றது. இலங்கையில் தமிழ்த் தேசியவாதத்தின் தோற்றத்தின் மிக முக்கிய அம்சம், அது இலங்கையின் நவீனமயப்படுத்த லுடன் பிரித்துப் பார்க்க முடியாதளவு பின்னிப் பிணைந் துள்ளமையாகும்.

இந்த அத்தியாயம் இலங்கையில் தமிழர் போர் முனைப்பின் தோற்றுவாய்களை, குறிப்பாகத் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் (LTTE) கொள்கைகள் தொடர்பில் ஆராய்கின்றது. ஏனெனில் விடுதலைப் புலிகள் அமைப்பே மிகவும் வலிமைகொண்டதும், நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட





தும், இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டு மன்றி உலகெங்கும் சிதறியுள்ள தமிழர் மத்தியிலும் பிரபல மான ஆதரவுத்தளத்தைக் கொண்டதுமாகும்.

## தமிழர் போர்முனைப்பின் பரிணாம வளர்ச்சி

இலங்கையின் சிங்கள-தமிழ் இன முரண்பாடானது ஊட் கூறியது போன்று, வேகமாக மாற்றம் பெறும் எதிரெதிர் நிலைப்பாடுகளையும், செயற்பாடுகளையும் கொண்டதாகவும் ஒவ்வொரு கட்டத்திலும் இவ்வெதிர்ச் செயற்பாடுகளின் ஒட்டுமொத்த தாக்கத்தையும் கொண்ட தாகவும் காணப்படுகிறது. முரண்பாட்டின் முதலாவது கட்டம் 1937இல் அரசியலமைப்பினூடான உத்தரவாதத் துடன், மத்தியில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான தமிழரின் கோரிக்கையுடன் தொடர்புடையதாயிருந்தது (கே.எம். டி சில்வா, 1986: 103-05). இது ஏற்றுக் கொள்ளப் படாததனால், 1949இல் பிரிவினைவாதம் - அதாவது தமிழ்ப் பிரதேசங்களுக்குக் குறிப்பிடத்தக்க சுயாட்சி கொண்ட ஒரு சமஷ்டி அரசினை உருவாக்குதல் என்பதாக மாறியது (கே.எம். டி சில்வா, 1986: 181-2). 1976 ஆம் ஆண்டளவில் பிரிவினை எய்தப்பட்டிராத வேளையில், இக்கோரிக்கை பலவந்தமாகப் பிரிந்துபோதலாக - ஈழம் என்ற தனிவேறான தமிழ் அரசொன்றைத் தாபித்துலாக அதிகரித்தது (கே.எம். டி சில்வா, 1986: 259-61). முதலிரு கட்டங்களிலும் அமைதியான, அரசியலமைப்புக்கு உட் பட்ட வழிமுறைகள்மூலம் கோரிக்கை வெளிப்படுத்தப் பட்டது. இலங்கை அரசாங்கம் அதற்கு இராணுவ நட வடிக்கைகள் மூலமும் அடக்குமுறைகள் மூலமும் பதி லளித்தது. அதனால் மூன்றாவது கட்டம் படிப்படியாக ஆயுதப் போராட்ட நடவடிக்கைகள் கொண்ட ஒரு கெரில்லா யுத்தமாகத் தன்னிச்சையாக மாற்றம் பெற்றது. பெருமளவு இரத்தஞ் சிந்தப்பட்டதும் சொத்துக்கள் இழக்கப்பட்டதுமான ஏறக்குறைய இருபதாண்டுச் சண்டை யின் பின்னர் 1983ஆம் ஆண்டிலிருந்து இந்தியா நேரடி யாகத் தலையிட்டு 1987இல் இந்திய- இலங்கை ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

அதன் பின்னரான வளர்ச்சிகள் தமிழ்ப் போராளி இயக்கங்கள் நான்காவது கட்டமான 'பலவந்தமாகப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரிந்துபோவதற்குப் பிந்திய' கட்டத்தை எட்டிவிட்டன என்பதையும், தமிழ்ப் பிரதேசங்களுக்கு மிக உயர்ந்தளவு சுயாட்சி என்னும் அடிப்படையில் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடத் தயாராயுள்ளனவென்பதையும் காட்டுகின்றன. இந்நான்கு கட்டங்களும் இவ்விருபிரிவினரிடையே ஒருதொகுதிக் காரணிகளினால் ஏற்பட்ட சிக்கலான விளைவாகும். முதலிரு கட்டங்களும் ஏறக்குறைய முழுமையாக உள்நாட்டில் தோன்றிய, சமாதான இயல்புடைய காரணிகளுடன் தொடர்புடையவை. மூன்றாம், நான்காம் கட்டங்கள் அதிகரித்த அளவிலான ஆயுத மோதலுடனும் வெளிப்புறக் காரணிகளின் குறுக்கீடுகளுடனும் தொடர்புடையவை.

முரண்பாட்டின் முதல் மூன்று கட்டங்கள்பற்றி விரிவாக எழுதப்பட்டுள்ளது (தம்பையா 1986, வில்சன் மற்றும் டால்ரன் 1982: 155-74). எனினும் இப்போதுதான், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாகவும், 1987 யூலையில் இலங்கைக்கு இந்திய அமைதிகாக்கும் படையைக் (IPKF) கொண்டுவந்த இந்திய இராணுவத் தலையீட்டின் ஊடாகவும் தொடக்கிவைக்கப்பட்ட நான்காவது கட்டம் ஆராயப்படுகின்றது. இப்போது சில காலமாக அரசியற் கோட்பாட்டாளர்கள் இன முரண்பாட்டுக் கோட்பாட்டில் இரு பிரதான விடயங்களான இன முரண்பாட்டிலும் (குணரத்ன 1993) இனச் சிவில் யுத்தங்களிலும் (எக்ஸ்ரெய்ன், 1964: 1-34) அந்நியத் தலையீட்டின் பங்கு மற்றும், பலவந்தமாகப் பிரிந்து போதலுக்குப் பிந்திய நிலையின் இயல்பு ஆகியவற்றைக் குறித்து ஊகங்களை வெளிப்படுத்தி வந்துள்ளனர். ( வூட், 1991:133).

1990களின் முற்பகுதிவரையில் வடக்கிலும் கிழக்கிலும் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லையென்ற வரையறைக்குள், இவ்விரு விடயங்களிலும் ஆர்வத்தைத் தூண்டும் அனுபவபூர்வமான சான்றை இலங்கை வழங்குகின்றது. இலங்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இந்திய அமைதிப்படை 1990ஆம் ஆண்டு மார்ச்சில் முழுமையாக வாபஸ் பெறப்பட்டது. இது, இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் 1988 நவம்பரில் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டதும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியால் நடத்தப்பட்டதுமான வடக்கு-





கிழக்கு மாகாண நிர்வாகம் வீழ்வதற்கும் வழிவகுத்தது. இந்திய அமைதிப் படையை எதிர்த்துப் போரிட்டதும், 1989ஆம் ஆண்டு ஏப்பிரலில் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியதுமான பிரதான போராளிக் குழுவான தமிழீழ விடுதலைப் புலிகள், இந்திய அமைதிப்படை வெளியேறியதைத் தொடர்ந்து வடக்கு-கிழக்கு மாகாணங்களை அதன் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் பலவந்தமாகப் பிரிந்துபோகின்ற அவர்களின் நோக்கத்தை அதிகாரபூர்வமாகக் கைவிட ஒப்புக்கொள்ளாத போதிலும், தனிவேறான தமிழ் அரசொன்றைவிடச் சிறிது குறைந்ததை ஏற்றுக்கொள்ளவும், தேர்தல் செயல் முறையில் பங்கு பற்றவும் தாம் தயாரென்று இலங்கை அரசாங்கத்துடனான பேச்சுகளில் சுட்டிக்காட்டினர் (பாலசிங்கம், 2001).

1970களின் தொடக்கத்திலிருந்து பொதுவாகத் தமிழரும், குறிப்பாக தமிழ் இளைஞரும் பல்கலைக்கழக அனுமதி, தொழில் வாய்ப்புகள், காணிப் பங்கீடு, தமிழ் மொழியின் உபயோகம் ஆகிய துறைகளில் இன ரீதியாகத் தாங்கள் ஒதுக்கப்படுவதாக உணர்ந்தனர். ஜயவர்தனவின் தலைமையின் கீழ் 1977இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய அரசாங்கமும் தமிழ்பேசும் மக்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள் உள்ளனவென்பதை ஒப்புக்கொண்டது (இலங்கை அரசுப் பேரவை அறிக்கை 1977: 111; (பின்னிணைப்பு 11). அம்மனக்குறைகளைத் தீர்ப்பதற்குச் சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்குமென்று அது உறுதியளித்தது.

1970ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழக அனுமதியில் தமிழரின் நிலை (பார்க்க: அத்தியாயம் 2), 1970களின் பின்னர் அரச மற்றும் கூட்டுத்தாபனத் துறைக்கும் ஆயுதப் படைகளுக்கும் ஆட்சேர்ப்பு, 1948ஆம் ஆண்டு முதல் காணிக் குடியேற்றம், 1956ஆம் ஆண்டு முதல் உத்தியோகபூர்வ நோக்கங்களுக்குத் தமிழ்மொழியின் உபயோகம் ஆகியவற்றை ஆராய்கின்றபோது தமிழர் உரித்துடையவர்களாயிருந்த அவர்களின் எதிர்பார்ப்புகளை இலங்கை அரசாங்கம் பூர்த்தி செய்யத் தவறிவிட்டது என்பது தெளிவாகத் தெரிகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எட்வேர்ட் என். முல்லர், 'கைகூடாத அபிலாசைகளைவிடக் கைகூடாத நியாயமான விருப்புகள் தீவிரமாக உணரப்படும் விரக்தியை உருவாக்கக்கூடியன' என வாதிடுகின்றார் (முல்லர், 1968: 72). குர் என்னும் அறிஞர் (1970: 30-33) கூறியதற்கிணங்க, தனியாளொருவர் நியாயமாக அவருக்குரியதென்று எண்ணுவதை அடையாதபோது சார்புரீதியான இழப்பு எழுகின்றது. சார்புரீதியான இழப்பே 'எதிர்ப்பிலும் வன்செயலிலும் ஈடுபடும்படி மக்களைத் தூண்டுவதற்குப் போதியளவு தீவிரமான விரக்தியை உருவாக்குகின்ற பொறிமுறை' (முல்லர், 1968: 72). அவர்களுக்கு உரித்தானது அவர்களுக்கு மறுக்கப்பட்டதெனத் தமிழ் இளைஞர் உணர்ந்தனர். அவர்கள் தமது குறிக்கோள்களைச் சாதிப்பதற்கு ஏன் வன்முறைகளைத் தெரிவு செய்தனரென்பதை இது விளக்குகின்றது. உண்மையில் குர் கூறியவாறு:

> இந்த அடிப்படைத் தொடர்பு வளிமண்டலப் பௌதிகத்திற்குப் புவியீர்ப்பு விதியைப் போன்று சிவில் சண்டையை விளங்கிக்கொள்வதற்கு அடிப்படையாயுள்ளது. சார்பு ரீதியான இழப்பு... எவ்வகையான சிவில் சண்டைக்கும் அவசியமான ஒரு முன்நிபந்தனையாகும் (முல்லர், 1968: 143).

அனுமதிக்கான புள்ளிகள் மொழிவாரியாகத் தரப்படுத்தப்பட்டதனால் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறமுடியாமல் போனதனாலும், தொழில் மறுக்கப்பட்டதனாலும் ஏற்பட்ட விரக்திக்கு மேலதிகமாகத் தமிழ் இளைஞர்களை வன்முறைகளில் ஈடுபடுவதற்குத் தூண்டிவிட்டிருக்கக்கூடிய வேறு சில நிலைமைகளும் இருந்தன:

(1) 1971இல் ஜனதா விமுக்தி பெரமுனயின் (JVP) தலைமையின்கீழ் சிங்கள முற்போக்குவாதிகளின் தோல்விகண்ட ஆயுதக் கிளர்ச்சியின் பரிமாணங்களும் அதன் விளைவுகளும்,

(2) 1971இல் இந்தியாவின் உதவியுடன் முக்தி பாஹினியின் ஆயுதப்போராட்டத்தின் ஊடான பங்களாதேஷின் பிறப்பு,

(3) 1972இல் இலங்கையில் புதிய அரசியலமைப்பொன்றின் பிரகடனம்,





(4) 1974இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆறாவது சர்வதேசத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின் இறுதி நாளன்று பொலிசாரால் புரியப்பட்ட அட்டூழியங்கள்,

(5) தமிழருக்கெதிரான 1977 கலவரம்.

மேற்குப் பாகிஸ்தானின் ஆதிக்கத்திற்கும் சுரண்டலுக்கும் எதிராக அப்போதைய கிழக்குப் பாகிஸ்தானின் வீரப் போராட்டத்தின்மூலம் உருவான ஒரு புதிய தேசமான பங்களாதேஷின் பிறப்பு, இலங்கையிலும் ஏறத்தாழ அதே விதமான ஒடுக்குமுறைகளை எதிர்கொண்ட தமிழரின் உள்ளத்தைக் கவர்ந்து இறைமைகொண்ட தனி நாடொன்றுக்கான ஆவலைத் தூண்டிவிட்டது.

1977இல் இடம்பெற்ற தமிழருக்கெதிரான கலவரங்கள் தான் பெரும்பாலான தமிழருக்கு ஒரு திருப்புமுனையாயிருந்தது. தமிழ் இளைஞர் ஒரு தனிவேறான தமிழ் அரசான ஈழம் என்கின்ற அவர்களின் இலக்கைச் சாதிப்பதற்கு மேலும் உறுதிகொண்டனர். 1972இற்கும் 1975இற்கும் இடையில் தமிழ் இளைஞர் பேரவையில் (Tamil Youth Federation) தீவிரமாகச் செயற்பட்ட அனேக தமிழ் இளைஞர்கள், அவர்களுக்கெதிராகக் குற்றச்சாட்டெதுவும் கொண்டுவரப்படாமல் கைது செய்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். தமிழ் பேசும் பிரதேசங்களில் தமிழ் இளைஞர்மீது அதிகரித்துவந்த பொலிசாரின் துன்புறுத்தல்கள் தமிழர் போர்முனைப்பின் ஆரம்பக் கட்டத்தைத் தோற்றுவித்தன.

## தமிழர் போர்முனைப்பின் தோற்றம்

தமிழர் போர்முனைப்பென்பதை ஒரு சமூகவியல் கண்ணோட்டத்தில் ஆராய்கின்றபோது, அவர்கள் வளர்ந்து வந்த பண்புக்கு முற்றிலும் மாறான அதிசயிக்கத்தக்க ஓர் அண்மைக்கால நிகழ்வாகத் தோன்றுகிறது. கொழும்பில் ஏசியா வீக்' இன் நிருபராயிருந்த ஜூலியன் வெஸ்ற் 1992ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் தேதிய இதழில் யாழ்ப்பாணத்துக்கான விஜயமொன்றைப்பற்றி எழுதுகையில் கூறியதாவது:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமுதாயத்தின் தோற்றமும் மாறிவிட்டது. பெரும் பாலான மத்திய வகுப்பினரும் தொழில் வல்லுனர்களும் கனடாவுக்கு அல்லது அவுஸ்திரேலியாவுக்குக் குடி பெயர்ந்துவிட்டனர். கடந்த யூன் மாதத்திலிருந்து 125,000 அகதிகள் தமிழ் நாட்டுக்குச் சென்றுள்ளதனால் அங்கு அகதிகளாயுள் ளவர்களின் எண்ணிக்கை 200,000 ஆகப் பெருகியுள்ளது. கொழும்பில் உள்ளவர்களைவிடக் கூடிய தமிழர் - 60,000 - இலண்டனிலும் இலண்டனின் பெரும் பாகத்திலும் வசிக் கின்றனர். குடாநாட்டில் 2,60,000 பேர் இடம்பெயர்ந்துள் ளனர். மூத்த தமிழர் சிலருக்குப் பேராச்சரியத்தை ஏற் படுத்துவது ஓர் இளைஞர் கெரில்லா இயக்கமான போராளி களின் தோற்றமாகும். 'எமது பையன்கள் யுத்தத்திற்குப் போனதையிட்டு எம்மைவிடக் கூடுதலாக எவரும் அதிர்ச்சி யடைந்திருக்க முடியாது' என்று கூறுகின்றார் ஓர் அரசாங்க ஊழியர். 'எமது சமுதாயத்தின் பாரம்பரிய அமைப்பு மாறிவிட்டது' (ஏசியா வீக், 8 மார்ச் 1992).

தமிழர் போர்முனைப்பு வெளிப்பட்டபோது அது திகைப்பை ஏற்படுத்தியபோதிலும், நீண்டகாலமாக நீடித்து வரும் சிங்கள இனப் பாகுபாடு, கலகக் கும்பல்களின் தாக்குதல்கள், அதன் எண்ணிக்கைப் பலத்தைவிடச் சிறந்த அளவில் நாட்டின் முன்னேற்றத்துக்குப் பங்களித்த ஒரு முழுச் சமூகமும் ஒட்டுமொத்தமாக இழிவுபடுத்தப்பட் டமை, நூற்றாண்டுக் காலமாகப் பிறந்து வளர்ந்த ஒரு மக்களின் பிறப்புரிமை உணர்வை இழக்கச் செய்யப்பட் டமை என்ற அரசியல் பின்னணியில் ஏதோவொரு கால கட்டத்தில் ஏதோவொன்று அறுபடத்தான் வேண்டும் என்ற சித்தாந்த அடிப்படையில் தமிழர் போர் முனைப் பிலும் ஒரு தவிர்க்கமுடியாத தன்மை இருந்துள்ளது.

அனேக அரசியல் விமர்சகர்கள் தமிழர் பிரச்சினை யின் தோற்றம் பற்றி ஆழமாக ஆராய முனைவதில்லை யென்பதனால், தமிழர் போர்முனைப்புக்கு மாறாக இலங்கையில் சிங்கள-பௌத்த போர்முனைப்பு - சமகால சமீப நிகழ்வுகளின்படி பார்த்தாலும்கூட - நூறாண்டு களுக்கு முன்பிருந்தே ஒரு வரலாற்றுத் தொடர்ச்சியைக் கொண்டுள்ளதையும், எல்லாக் காலங்களிலும் அது இத்





தீவில் குடியிருந்த இன மற்றும் சமயச் சிறுபான்மைகள் அனைத்தின் மீதும் இடைவிடாது தொடர்கின்ற சகிப்புத் தன்மையற்ற போக்கை ஐயத்திற்கிடமின்றிக் காட்டியுள்ள தையும் இங்கு நினைவிற்கொள்வது பயனுள்ளதாகும். அதாவது, இத்தீவு சுதந்திரம் அடையும்வரை தாக்குதல் களுக்கான இலக்குகள் முதலில் கிறிஸ்தவர்களாகவும், அடுத்து முஸ்லிம்களாகவும், அடுத்து மலையாளிகளாகவும், அதன் பின்னர் தோட்டத் தமிழர்களாகவும் இருந்துள்ளன. சிங்கள-பௌத்த போர்முனைப்பு இறுதியாக எவ்வாறு சுதேசத் தமிழர்மீதும் திரும்பியதென்பது சமகால வரலாறு. நூறாண்டுகளின் பின்னர் சிங்கள-பௌத்த தேசியவாதம் எதிர்நோக்கவேண்டியிருந்த முதலாவது நேரடியான ஆயுத அறைகூவலே தமிழர் போர்முனைப்புத் தொடர்பில் குறிப்பிடத்தக்க முக்கிய அம்சமாகும். (சிவசிதம்பரத்துட னான நேர்காணல், 15 ஏப்பிரல் 2001).

1880இற்கும் 1970இற்கும் இடையிலான தொண்ணூ றாண்டுக் காலப்பகுதியில் இந்நாட்டில் இடம்பெற்ற நிகழ்வுகள், ஒவ்வொரு சிறுபான்மையும், அது இனமாகவோ சமயமாகவோ இருப்பினுஞ் சரி, அல்லது அந்நியமான தாகவோ சுதேசமானதாகவோ இருப்பினுஞ் சரி, சிங்கள-பௌத்த தேசியவாதமென்ற அரக்கனின் பிடியில் சிக்கி நசுங்குண்டுள்ளதைக் காட்டுகின்றன. எழுபதுகளின் தொடக்கத்தில் தமிழர் போர்முனைப்பின் தோற்றத்தைச் சரியென்று நிரூபிப்பதற்கான காரணத்தை ஒருவர் தேடு வதாயின் அதற்கான பதிலை எளிதில் கண்டுபிடித்து விடலாம். சுதேசத் தமிழர்கள், 1956ஆம் ஆண்டிலிருந்தே சிங்கள-பௌத்த அடக்குமுறை அழுத்தத்தினால் வாட்டி வதைக்கப்பட்ட போதிலும், கட்டுப்படுத்தப்படாத பெரும் பான்மை வன்முறைக்கு ஒரேயொரு பதில் வன்முறைதான் என்று எண்ணுவதற்குச் சுதந்திரத்துக்குப் பிந்தைய தமிழ் இளைஞர்களின் இரண்டாவது சந்ததிவரை காத்திருக்க வேண்டியிருந்தது. இதுவே அரசையும் தமிழருக்கெதிரான வன்முறை மோதலுக்குக் கொண்டுவந்தது. விடுதலைக் கான தமிழர்களின் யுத்தமென குறிப்பிடப்படும் தமிழர் போர்முனைப்பிற்கு உந்துதலாக இருந்ததும், இலங்கையில் பல்லாண்டுகளாகத் தொடர்ந்துகொண்டிருப்பதுமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதீத வன்முறையை ஆய்வு செய்வதில் இங்கிலாந்திலும், ஏனைய நாடுகளிலும் ஓர் ஈர்ப்பு இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

முன்னைய அத்தியாயத்தில் நாம் கண்டவாறு நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர் பகிரங்கமான அரச ஒடுக்குமுறைகளினால் துன்புற்றனர். இக்காலம் பூராவும் தமிழர் பாராளுமன்றத்திலும், பொது மேடைகளிலும் ஊடகங்கள் மூலமும், சர்வதேச அரங்குகள் ஊடாகவும் தமது குரலை எழுப்பினர். அவர்கள் நீதி மன்றங்களுக்குச் சென்றனர். எதிர்ப்புகளையும் சாத்வீகமான இயக்கங்களையும் மேற்கொண்டனர்;. சிங்களத் தலைவர்களுடன் ஒப்பந்தங்களையும் கனவான்களுக்கிடையிலான உடன்படிக்கைகளையும் செய்து கொண்டனர். இருந்த போதிலும் அவை எல்லாம் அவமதிக்கப்பட்டன (பார்க்க: பின்னிணைப்பு 6 மற்றும் 7). சுருங்கக்கூறின், தமிழர் கடந்த காலங்களில் அடக்கப்பட்ட ஒரு தேசிய இனத்துக்குச் சாத்தியமான சமாதான முறையிலான தெரிவுகள் எல்லாவற்றையும் முழுமையாகப் பயன்படுத்திவிட்டனர். இந்தியாவில் ஜின்னாவைப் போன்றல்லாது, சுதந்திரத்தின்போது அவர்கள் பெரும்பான்மைச் சமூகத்தின்மீது தமது முழு நம்பிக்கையையும் வைத்தபோதிலும் அந்நம்பிக்கை கெடுக்கப்பட்டது.

1970ஆம் ஆண்டு மே மாதம் திருமதி பண்டார நாயக்க எதிர்பாராத அளவுக்குப் பெருவெற்றி பெற்று இரண்டாவது தடவையாக ஆட்சிக்கு வந்தபோதுதான் தமிழர் அரச பாகுபாடென்ற கசையடியின் வீச்சைப் பல்வேறு வழிகளிலும் உணரத் தொடங்கினர். அவரின் கணவரான S.W.R.D.பண்டாரநாயக்க அவர்கள் 1956இல் 'சிங்களம் மட்டும்' சட்டத்தின் தந்தையாயிருந்து சிங்கள-பௌத்த பேரினவாதச் சக்திகளைக் கட்டவிழ்த்துவிட்ட அதே வேளையில், அவரது விதவையான ஸ்ரீமாவோ அவர்கள் தமிழர் போர்முனைப்பின் தாயாக இருந்து அதனை அரவணைத்தார் என்று கூறினால் அது மிகையாகாது. ஏனென்றால், 1970 முதல் 1977 வரையான அவரது 7 ஆண்டுக் கால ஆட்சியின்போதுதான் இத்தீவு மிக மோசமான ஒடுக்கு முறை வடிவங்களான - பல்கலைக்கழக அனுமதியில் தரப்





படுத்தல் கொள்கை, வாழ்வின் பெரும்போக்கிலிருந்து தமிழரைச் செயல்முனைப்புடன் ஒதுக்கிவிட்ட 1972 அரசியலமைப்பு, தென்னிந்தியாவுக்கான (தமிழ் நாட்டுக்கான) பிரயாணத் தடை, தமிழ் இலக்கியங்களின் மீதான தடை, மிகப்பெரிய செய்திப் பத்திரிகைகளின் கபளீகரம் மற்றும் 1974இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சர்வதேசத் தமிழ் மகாநாட்டில் பொலிஸ் வன்முறை ஆகியவற்றை இத்தீவு கண்டது.

எனினும், 1970கள்வரை பலவந்தமாகப் பிரிந்து போவதற்கான ஆதரவு வலிமை குன்றியதாகவே இருந்தது. 1958இல் ஈழத்திற்காகக் குரலெழுப்பிய தமிழ்ப் பிரிவினை வாதத்தின் தந்தையான சுந்தரலிங்கம் 1960ஆம் ஆண்டுத் தேர்தலில் பிரிவினைவாதக் கோட்பாட்டினடிப்படையில் போட்டியிட்டபோது தோற்கடிக்கப்பட்டமை இதற்குச் சான்றாகும். சமஷ்டிக் கட்சித் (தமிழரசுக் கட்சி) தலைமைத்துவம், அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களால் கிழிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் பற்றியும், முறிந்துபோன வாக்குறுதிகள் பற்றியும் முறையிட்டபோதிலும், 1970 தேர்தல் விஞ்ஞாபனத்தில்கூட அது, எமது நாட்டை இரு கூறாக்குதல் நாட்டுக்கோ தமிழ்பேசும் மக்களுக்கோ நன்மை பயக்கமாட்டாதென்று கூறி, அதற்காகக் குரலெழுப்புகின்ற அரசியல் இயக்கம் எதனையும் ஆதரிக்கவேண்டாமென்று தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தது (சமஷ்டிக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனம், 1970).

1969இல் அதனை ஏற்க மறுத்த பாராளுமன்ற உறுப்பினர் நவரத்தினம் உட்பட சமஷ்டிக் கட்சியின் சில தீவிரப் போக்கினர் சமஷ்டிக் கட்சியிலிருந்து வெளியேறி அரசாங்கத்தின் ஏய்ப்புகளை வெளிப்படுத்தினர். அதனைத் தொடர்ந்து இலங்கையில் சுதந்திரமும் சுயாட்சியும் கொண்ட தமிழ் அரசொன்றுக்கான குறிக்கோளுடன் புதியதோர் அமைப்பான தமிழர் சுயாட்சிக் கழகம் 1969 இல் தொடக்கிவைக்கப்பட்டது. 1970 தேர்தலில் பிரிவினை வாதக் கோட்பாட்டின் அடிப்படையில் போட்டியிட்ட அவர்கள் தோற்கடிக்கப்பட்டனர் (ஸ்ரீகாந்தாவுடனான நேர்காணல்: 8 மே 2001).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழர் அதிகரித்த அளவில் அந்நியப்படுத்தப்படல்

தமிழ் அரசியல் கட்சிகள் அரசியல் பெரும்போக்கிலிருந்து படிப்படியாக ஓரங்கட்டப்பட்டதைத் தொடர்ந்து, அவை உயர் கல்வி, தொழில், தமிழ் நிலத்தில் அரசாங்க ஆதரவுடனான குடியேற்றம் போன்ற பரப்புகளிலும், தமிழர்களின் உயிருக்கான பாதுகாப்பிலும்கூடத் தமிழ் மக்களின் நலன்களைத் தம்மால் பாதுகாக்கவும் அவற்றை வழங்கவும் முடியாதெனக் கண்டன. அரசியற் செயல் முறையிலிருந்து அந்நியப்படுத்தப்பட்டதனால், பிரிவினை வாதத்தில் தமது மீட்பைக் கண்ட முற்போக்குத் தமிழ் இளைஞர்களிடம் தலைமைத்துவம் கைமாறியது. இது அவர்கள் மொழியிலும் சமயத்திலும் கலாச்சாரத்திலும் தொடர்புகளைப் பகிர்ந்துகொண்ட தென்னிந்தியாவிடம் உதவி நாடுவதற்கு அவர்களை ஊக்குவித்தது.

ஆங்கிலக் காலனித்துவ ஆட்சியின் ஆரம்பக் காலத்திலிருந்தே நாட்டின் அரசியல் விவகாரங்களில் இன ரீதியான விடயங்கள் முனைப்பான முக்கியத்துவம் பெற்றிருந்தன. இருபதாம் நூற்றாண்டில் இலங்கை 'ஏழுக்குக் குறையாத வெவ்வேறு அரசியலமைப்புக்களைக் கொண்டிருந்துள்ளது' என்று கூறும் ஜேன் ரஸ்ஸல், அது பற்றிக் கருத்துரைக்கையில், 'சட்ட அமைப்புக்களுடனான இத் தொடர்ச்சியான பரிசோதனைக்குப் பல்வேறு காரணங்கள் இருந்தபோதிலும், அவற்றில் மிக முக்கியமானது இலங்கை அரசியலின் இனவாதத் தன்மை' என்று கூறுகின்றார் (ரஸ்ஸல் 1982: 17).

இனரீதியான சந்தேகம் காலனித்துவக் காலங்களில் இலங்கை அரசியலில் ஊடுருவியதுடன் சுதந்திரத்தின் பின்னர் அது மேலும் அதிகரித்தது. சுதந்திரத்துக்கான வாய்ப்புடன் இனரீதியான போட்டி மேலும் வலுப் பெற்றது. இதனைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட சட்ட அமைப்புகள் அதற்கு மேலும் நிரந்தரத் தன்மையைக் கொடுத்ததுடன் சுதந்திரத்துக்குப் பிந்திய காலப்பகுதியிலும் இப்போக்கைத் தொடரச்செய்தன.

அரசியல், கலாச்சார மற்றும் கல்வி நிறுவனங்களை இனரீதியாக இரண்டாக்கியமையே இங்கு மிகவும் அவ





தானிக்கப்பட வேண்டிய விடயமாகும். 1919ஆம் ஆண்டு எவ்.ஆர். சேனநாயக்காவால் தாபிக்கப்பட்ட லங்கா மகா ஜன சபை என்ற சிங்கள அமைப்புக்கு 1921ஆம் ஆண்டு கனகசபை மற்றும் அருணாச்சலம் ஆகியோரால் உருவாக்கப்பட்ட தமிழர் மகாசபை தமிழ் இனரீதியில் பதிலளிப்பதாகவே அமைந்திருந்தது.

1936ஆம் ஆண்டு நவம்பரில் தாபிக்கப்பட்ட சிங்கள மகா சபை தமிழர் மத்தியில் பெரும் அச்சங்களைத் தோற்றுவித்தது. அதன் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் முனிதாச குமாரணதுங்க, பியதாச, சிறிசேன போன்ற முன்னணியிலிருந்த இலக்கியப் பிரமுகர்களின் செல்வாக்கு, இப் புதிய அமைப்பின் பின்னணியிலிருந்த எண்ணக்கருவைக் குறிப்பிடத்தக்களவு மாற்றி அதனை முற்றுமுழுதாக இன ரீதியான ஓர் அமைப்பாக்கக்கூடுமானதாயிருந்தது (ரஸ்ஸல் 1982: 142). 1930களின் பிற்பகுதியில் சிறிசேனவும் குமாரதுங்கவும் அதனுடனான தமது தொடர்புகளை அறுத்துக்கொண்டபோது சிங்கள மகா சபை S.W.R.D. பண்டாரநாயக்கவின் தலைமைத்துவத்தின்கீழ் செயல் விளைவுமிக்க ஓர் அரசியல் நிறுவனமாகியது.

முன்னர் குறிப்பிட்டவாறு முதலாவது அரச சபையின் (சட்டசபை) காலத்தில் தம்மை வெளிப்படுத்திய இப் போக்குகள் இரண்டாவது அரச சபையின் காலத்திலும் தொடர்ந்ததுடன் சில அம்சங்களில் கூடிய வீரியமும் பெற்றன. 1936இல் தனிச் சிங்கள அமைச்சரவை (Pan Sinhala) என்றழைக்கப்பட்ட அமைச்சர்கள் சபையின் தெரிவு, சிங்களவர் அவர்களின் பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி ஏகபோக அதிகாரம் செலுத்தும் இலக்கைக் கொண்டுள்ளனரென்ற தமிழரின் அச்சத்தை மேலும் கூட்டியது (ரஸ்ஸல் 1982: 208).

இக்காலப்பகுதியில் கிளர்ந்தெழுந்து, மேலும் முனைப்பான தோற்றத்துடன் சுதந்திரத்திற்குப் பிறகு குறிப்பிட்ட சில காலத்திற்கும் தொடரவிருந்த இரு விடயங்கள் மொழியும் கல்வியும் பற்றிய விடயங்களாகும். 1944 மேயில் ஜே.ஆர்.ஜயவர்தன சிங்களத்தை அரசகரும மொழியாக்குவதற்கான ஒரு தீர்மானத்தை அரச சபையில் பிரேரித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழையும் உள்ளடக்குவதற்கான ஒரு திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டபோதிலும், சிங்களத்தை மட்டும் அரச கரும மொழியாக்குவதற்கான முன்மொழிவு செய்யப் பட்டதென்ற நிகழ்வு தமிழரைப் பெருமளவுக்குக் கலவர மடையச் செய்தது (சிவசிதம்பரத்துடனான நேர்காணல்: 15 ஏப்பிரல் 2001).

இலங்கை சுதந்திரமடையப் போகின்ற தறுவாயில், சுதந்திரம் வழங்குதல் தொடர்பில் பொருத்தமான பரிந்துரைகளைச் செய்வதற்கு சோல்பரி பிரபுவின் தலைமையில் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்ட போது தமிழர் மனதில் மீண்டும் அச்சங்கள் எழுந்தன. தமிழ்ப் பிரதிநிதிகள் சிங்களவருக்கும் ஏனைய இனக் குழுக் களுக்குமிடையில் பிரதிநிதித்துவத்தில் 50 : 50 சமநிலை என்ற முந்திய ஆலோசனைகளை மீண்டும் முன்வைத்தனர். எனினும் 1947இன் புதிய அரசியலமைப்பு அதன் 29(2)ஆம் பிரிவிலிருந்த வழிமுறையின் ஊடாகச் சிறுபான்மைகளின் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்த அதேவேளையில், அரசியல் தலைமைத்துவத்தின் அரசியல் மேதகைப் (Statemenship) பண்பின்மூலம் இன நல்லிணக்கத்தைக் கூடுதலாகச் சாதிக்கலாமென எதிர்பார்த்தது.

## தமிழ் அரசியற் கட்சிகள் ஓரங்கட்டப்படுதல்

பாராளுமன்றத்திலும் அரசாங்கத்திலும் பிரதான தமிழ் அரசியற் கட்சிகளின் பங்கேற்பானது பரந்தள விலான ஒத்துழைப்பிலிருந்து, சமநிலையை ஏற்படுத்தச் செயற்படுதல், என்றென்றும் ஒரு சிறுபான்மையாக இருத்தல், மேலும் மிக அண்மைக்காலத்தில் செயலிழக்கச் செய்யப்படுதல் என்பது வரையில் பல்வேறு கட்டங்களை யும் பங்களிப்புகளையும் கடந்துள்ளன. சுதந்திரத்துக்குப் பிந்திய உடனடிக் காலப்பகுதியில் தமிழ்க் கட்சிகள் ஒருமைப்பாட்டுணர்வுடனான ஒத்துழைப்புக் கொள்கை யொன்றைப் பின்பற்றின. தமிழ்ப் பிரதேசங்களில் மிகவும் வெற்றிகரமான அரசியற் கட்சியாயிருந்த தமிழ்க் காங்கிரஸ், 1948இன் பிற்பகுதியில் ஐ.தே.க. அரசாங்கத்துடன் இணைந்து கொண்டதுடன், அதன் தலைவரான ஜீ.ஜீ.பொன்னம்பலம் கைத்தொழில் அமைச்சரர்க அமைச்சரவைப் பதவி யொன்றையும் ஏற்றுக்கொண்டார். இக்காலத்தில் ஐக்கிய





தேசியக் கட்சி அரசாங்கம் இலங்கைப் பிரசாவுரிமைக்கான விதிமுறைகளை மீள வரையறை செய்கின்ற சட்டத்தை அறிமுகப்படுத்தியது. அச்சட்டம் செயல்விளைவில் பெரும் பாலான இந்திய வம்சாவளி தமிழர் முன்னர் அனுபவித்த வாக்குரிமையை இழக்கச் செய்தது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் (All Ceylon Tamil Congress) இச்சட்ட வாக்கத்தில் அரசாங்கத்தை ஆதரித்ததன்பேரில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலானோர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் தலைமை யில் அதைவிட்டுப் பிரிந்துசென்று, 1949இல் சமஷ்டிக் கட்சி (Federal Party) என்றழைக்கப்பட்ட தனி அரசியற் கட்சியொன்றை உருவாக்கினர்.

1951இல் சமஷ்டிக் கட்சியின் முதலாவது தேசிய மகா நாட்டில் செல்வநாயகம் தமிழ்த் தேசியம் என்ற விடயம் பற்றிப் பேசினார். அதாவது, 'இலங்கையில் தமிழ் பேசு கின்ற மக்கள் முதலாவதாக, சிங்களவரைப் போன்று புராதனமானதும் உன்னதமானதுமான ஒரு தனியான கடந்தகால வரலாற்றைக் கொண்டுள்ள வகையிலும், இரண்டாவதாக, சிங்களவரிலிருந்து முழுமையாக வேறு பட்ட ஒரு மொழியினமாகவுள்ள வகையிலும், இறுதியாக, இத்தீவின் மூன்றிலொரு பங்கிற்குக் கூடிய திட்டவட்ட மான பிரதேசங்களை ஆட்சிநில உறைவிடமாகக் கொண் டுள்ள வகையிலும், தேசியத்துக்கான ஒவ்வோர் அடிப் படையிலும் உற்றுநோக்கும்போது சிங்களவரிலிருந்து தெளி வாக வேறுபட்ட ஒரு தேசிய இனமாக அமைகின்றனர்' என்னும் அக்கருப்பொருளானது அது முதலில் கூறப்பட்ட காலத்தைவிட இன்றைய காலத்தில் அதிகமான நேரடித் தொடர்பைக் கொண்டுள்ளது. (சிவராஜா 1996: 106).

1956 தேர்தலும், அத்தேர்தலுக்கான பிரச்சாரமும், சிங்களவருக்கும் தமிழருக்குமிடையிலான அரசியல் உறவு களில் பண்புசார்ந்த ஒரு மாற்றத்தை வெளிப்படுத்தின. அதாவது அதுவரை அகில இலங்கை தமிழ்க் காங்கிரசால் பின்பற்றப்பட்ட 'ஒருமைப்பாட்டுணர்வுடான ஒத்துழைப்பு'க் கொள்கை இப்போது முடிவுக்கு வந்தது (ரஸ்ஸல் 1982: 328-329). அதனிடத்தில் சமஷ்டிக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் 'சமஷ்டி முறைமையொன்று தாபிக்கப்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படும் வரை எந்தவோர் அரசாங்கத்தின்கீழும் எந்தவொரு பதவியையும் ஏற்றுக்கொள்வதில்லையென்றும், சிங்களவருக்கும் தமிழருக்கும் சரிசம அந்தஸ்தை வழங்காத அரசாங்கம் எதற்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவி எதனையும் அளிப்பதில்லையென்றும்' உறுதிபூணும்படி அதன் வேட்பாளர்களைக் கோரியது (வீரவர்தன 1956: 186).

பொதுத் தேர்தலின் பின்னர் விரைவாக, 1956 ஆகஸ்ட் 19ஆந் தேதியன்று திருகோணமலையில் நடத்தப்பட்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் மகாநாடு 'நான்கு பிரதானக் கொள்கைத் திட்டங்கள்' என்றழைக்கப்பட்ட கொள்கைத் தீர்மானங்களை நிறைவேற்றியது:

1. தற்போதுள்ள பெருங்கேடான அரசியலமைப்பை, சமஷ்டிக் கோட்பாட்டின் அடிப்படையிலான அறிவுக்குப் பொருத்தமான சனநாயக அரசியலமைப்பொன்றால் பதிலீடு செய்தலும், தமிழ் பேசுகின்ற மக்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மையாயுள்ள புவியியல் தொடர்ச்சியுள்ள பிரதேசங்கள் எல்லாவற்றையும் ஒருங்கிணைத்ததான ஒரு தமிழ்மொழி அரசை அல்லது ஒன்றுக்குக் கூடிய அரசுகளை, இலங்கையின் ஐக்கியத்திற்கும் வெளிப்புறப் பாதுகாப்புக்கும் முரண்படாத வகையில் பரந்தகன்ற சுயாட்சி அதிகாரங்களையும் எஞ்சிய அதிகாரங்களையும் அனுபவிக்கின்ற சமஷ்டி அலகாக அல்லது அலகுகளாகத் தாபித்தலும்,

2. தமிழ்மொழியை நாட்டின் ஓர் அரசகரும மொழியாகச் சிங்களத்துடன் முழுமையான சரிசம அந்தஸ்தை அனுபவிக்கின்றதான அதன் உரிய இடத்துக்கு மீண்டும் கொண்டுவருதல்.

3. தற்போதுள்ள பிரசாவுரிமைச் சட்டங்களை நீக்குதலும், அவற்றுக்குப் பதிலாக இந்நாட்டைத் தமது தாய்நாடாக்கியுள்ள எல்லா மக்களுக்கும் எளிமையான வதிவிடச் சோதனையொன்றின் அடிப்படையில் முழுப் பிரசாவுரிமையை ஒப்புக்கொள்கின்ற சட்டங்களை ஆக்குதலும், அத்துடன்





4. சிங்கள மக்களைக்கொண்டு பாரம்பரியத் தமிழ் பேசும் பிரதேசங்களின் குடியேற்றத்தை உடனடியாக இடைநிறுத்துதல் (பொன்னம்பலம் 1983: 106).

ஏறக்குறைய இரு தசாப்தங்களின் பின்னர் ஒரு தனி அரசுக்கான பகிரங்க அறைகூவலாக, பின்னர் நிகழ்ந்ததை முன்னரே அறிவிக்கின்றதாக 1956 தேர்தல் பிரச்சாரத்தின் போது முன்வைக்கப்பட்ட கருத்து அமைந்தது. அனேக தமிழ்த் தலைவர்கள் தமிழரசுக் கட்சியின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காகவும், அத்துடன் 'சிங்களம் மட்டும்' என்பதற்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காகவும், சுதந்திரமான அரசொன்றைக் கோரியிருந்தனர். இச்செயற் திட்டத்தைத் தமிழரசுக் கட்சி ஆதரிக்கவில்லை. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களின் ஒரு பகிரங்கப் புரட்சியின்றிச் சுதந்திரமானதும் தனியானதுமான தமிழ் அரசொன்றைத் தாபிக்க முடியாதென்று தமிழரசுக் கட்சி கருதியது. அத்தகைய ஒரு கொள்கையை தமிழரசுக் கட்சி ஆதரிக்கவில்லை. அது இந்திய மாதிரியைப் பின்பற்றி, அகிம்சை ஊடாகவும் சத்தியாக்கிரகம் மூலமும் அரசியலமைப்புச் சார்ந்ததும் சமாதானமானதுமான முறைகளை மட்டும்தான் பயன்படுத்துமென்று மேலும் பிரகடனப்படுத்தியது' (வீரவர்தன 1956: 187).

1956 தேர்தல் ஒருவகையில் ஒரேயொரு - விடயத் தேர்தலாக - 'சிங்களம் மட்டும்' என்ற கோஷத்தை உள்ளடக்கிய கலாச்சார, சமய, அரசியல் மற்றும் பொருளாதாரப் பரிமாணங்கள் எல்லாவற்றையும் கொண்ட தேர்தலாக இருந்தது. மேலும் அப்போதுதான் தெரிவு செய்யப்பட்ட மகஜன எக்சத் பெரமுன (MEP) அரசாங்கத்தால் 1956 யூன் 14ஆந் தேதியன்று நிறைவேற்றப்பட்ட முதலாவது சட்டமூலம் 'சிங்களம் மட்டும்' சட்டமென்று பிரபலமாகக் குறிப்பிடப்படும், 1956இன் 33ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டமாகும். இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து வெடித்த கலவரங்கள் இவ்விடயத்தில் தமிழரின் ஆழமான உணர்ச்சிவசப்பட்ட ஈடுபாட்டின் அறிகுறியாக விளங்கின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பேச்சுவார்த்தைகளின் தோல்வி: 1950களும் 1960களும்

முக்கியமான விடயங்களில் தமிழ்க் கட்சிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் திரும்பத்திரும்ப முன்னேற்றத்துக்கான நம்பிக்கையின் அறிகுறிகளைக் காட்டிய போதிலும், கையெழுத்து வைத்த சிங்களத் தலைவர்களே உடன்பட்டவற்றைச் செயல்படுத்தத் தவறியதனால் பேச்சுவார்த்தைகள் தவிடுபொடியாயின.

1956 ஆகஸ்டில் சமஷ்டிக் கட்சி (தமிழரசுக் கட்சி - Fedral Party) பிரதமர் S.W.R.D. பண்டாரநாயக்கவின் அரசாங்கத்திடம் நான்கு பிரதான கோரிக்கைகளை முன் வைத்தது. அது சமஷ்டி அரசியலமைப்பொன்றையும் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சரிசம அந்தஸ்தையும், பாகு பாடான பிரசாவுரிமைச் சட்டங்களின் நீக்கத்தையும், கிழக்கில் பாரம்பரியத் தமிழ்த் தாயகங்களென்று காணப் பட்டவற்றில் சிங்கள மக்களின் குடியேற்றம் உடனடியாக நிறுத்தப்படுதலையும் கோரியது. இக்கோரிக்கைகள் 1957 ஆகஸ்டிற்கு முன்னர் நிறைவேற்றப்படாவிட்டால் ‘சாத்வீக வழிகளில் நேரடி நடவடிக்கை’ எடுக்கப்போவதாக தமிழரசுக் கட்சி அச்சுறுத்தியது (சிவசிதம்பரத்துடனான நேர்காணல்: 15 ஏப்பிரல் 2001).

பின்னர் ஓராண்டிற்கும் குறைந்ததான 1957ஆம் ஆண்டு யூலையில் S.W.R.D. பண்டாரநாயக்கவும் S.J.V. செல்வ நாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சி பிரதிநிதிகளும் ஓர் உடன்படிக்கைக்கு வந்தனர். அது உண்மையில் செயற் படுத்தப்பட்டிருக்குமாயின் தொடர்கின்ற யுத்தத்தின் சமாதானத்திற்கான அத்திவாரத்தை அது தாபித்திருக்கக் கூடுமென்று அனேகர் நம்புகின்றனர். பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தம் (B-C Pact) முழுமையான சமஷ்டிக் கட்டமைப்பொன்றுக்கு உறுதியளிக்கவுமில்லை, தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்றவு மில்லை. எனினும் அது ஒருசில கோரிக்கைகளை நிறை வேற்ற முன்வந்தது (பின்னிணைப்பு 6).

‘பொதுக் கருத்துப் படிவச் சீராக்கமேயன்றி இறுதித் தீர்வல்ல’ என்று சமஷ்டிக் கட்சி விவரித்த அவ்வுடன்





படிக்கையின்கீழ், வட மாகாணம் குறைந்தபட்சம் இரு பிராந்தியங்களையாவது கொண்டிருந்தது. எனினும் அப்பிராந்தியங்கள் பாராளுமன்ற அங்கீகாரத்துடன், குறித்த விடயங்களில் ஒத்துழைப்பதற்கும், அத்துடன் அவை ஒன்றிணைவதற்கும் அல்லது பிரிந்து போவதற்குமான ஏற்பாடும் அதிலிருந்தது. அந்த உடன்படிக்கை சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்குச் சரிசம அந்தஸ்து வழங்காத போதிலும், தமிழ் ஒரு தேசிய சிறுபான்மை மொழியாக ஒப்புக்கொள்ளப்படுமென்று வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் பேசாதவர்களுக்கான ஏற்பாட்டுடன், நிருவாகப் பணி தமிழில் நடத்தப்படுமென்றும் உறுதியளித்தது. எதிர்காலக் குடியேற்றத்துக்கு எதிரான வாக்குறுதிகளையும் அது கொண்டிருந்தது. பிரசாவுரிமைச் சட்டத்திற்கான திருத்தங் களின் தன்மை பற்றி உடன்பாடெதுவும் எட்டப்படாத போதிலும், இவ்விடயத்தில் விரைவில் கவனம் செலுத்தப் படுமென அரசாங்கம் உறுதியளித்தது.

எப்படி இருந்தபோதிலும் பண்டா - செல்வா ஒப்பந்தம் ஒருபோதும் செயற்படுத்தப்படவில்லை. உண்மையில் அது சிங்களத் தேசியவாதக் குழுக்களின் அதிகரித்த அழுத்தத் தின் காரணமாக, 1958 ஏப்பிரலில் பண்டாரநாயக்கவால் கிழித்தெறியப்பட்டது. ஒப்பந்தத்துக்கெதிரான பிரச்சாரத் துக்குத் தெய்வங்களின் ஆசியை வேண்டி சிங்கள இராச்சி யத்தின் கடைசி அரியாசனமான கண்டிக்கு மேற்கொள்ளப் பட்ட எதிர்ப்பு ஊர்வலத்திற்கு ஜயவர்தன தலைமை தாங்கிச் சென்றாரென்பது இலங்கை வரலாற்றில் கவலை யளிக்கும் விடயங்களில் ஒன்று. ஆனால் ஜயவர்தனாவிற்கு பின்னாளில் நடக்கப்போகும் சம்பவத்தை முன்கூட்டியே உணர்ந்துகொள்ள முடியாதது ஒன்றும் ஆச்சரியமல்ல. அவர் சுமார் 20 ஆண்டுகளின் பின்னர், தனது அரசிய லமைப்பின்கீழ், தமிழை ஓர் அரசகரும மொழியாக்கினார், மலைநாட்டுத் தமிழர்களுக்குப் பிரசாவுரிமை வழங்கினார். அத்துடன் மாகாண சபைக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக் கும் ஒரு புதிய திட்டம் பற்றி இந்தியாவுடன் உடன் படிக்கையொன்றையும் செய்தார்.

1960ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக தமிழரசுக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடனோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனோ கூட்டுச் சேருவதற்கு அடிப்படையாக அதன் நான்கு பிரதானக் கோரிக்கைகளை முன்வைத்தது (நிசன் 1994). ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பண்டா-செல்வா ஒப்பந்தப்படியான நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்கு உறுதியளித்ததனால், தமிழரசுக் கட்சி அதன் ஆதரவை வழங்கியது. எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறுதிப்பெரும்பான்மையுடன் கூடிய வெற்றியைப் பெற்றதைத் தொடர்ந்து, அதன் உடன்பாட்டைப் புறக்கணித்தது. அதற்குப் பதிலாக அவ்வரசாங்கம், 1956 'சிங்களம் மட்டும்' சட்டத்தில் தீர்மானித்திருந்தவாறு, 1961ஆம் ஆண்டு சனவரி முதல் தேதியிலிருந்து தீவெங்கிலும் நிருவாக மொழியாகச் சிங்களத்தைத் கொணர்ந்தது. அது தமிழருக்குத் தன்னிலையான சலுகை எதையும் செய்யாததுடன், தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைச் செயற்படுத்துவதற்கான ஏற்பாட்டையும் செய்யவில்லை.

1965இல் தமிழரசுக்கட்சி மற்றோர் ஒப்பந்தத்தை, ஆனால் இம்முறை ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்தது. சேனநாயக்கவின் தலைமையில் 'தேசிய அரசாங்கம்' ஒன்றை அமைப்பதற்குச் தமிழரசுக் கட்சியின் ஆதரவை உறுதிப்படுத்தும்பொருட்டு டட்லி சேனநாயக்கவுக்கும் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துக்கும் இடையில் சேனநாயக்க-செல்வநாயகம் (டட்லி-செல்வா) ஒப்பந்தம் ஒன்று உருவாக்கப்பட்டது. (பின்னிணைப்பு 7). இவ்வுடன்படிக்கை தமிழ்மொழி உபயோகத்திற்கும் மாவட்ட சபைகளின் (District Councils) உருவாக்கத்துக்கும், காணிக் குடியேற்றத்துக்குமான ஏற்பாடுகளைக் கொண்டதாக, பண்டா - செல்வா ஒப்பந்தத்தை ஒத்திருந்தது. இவ்வொப்பந்தமோ அல்லது 1966ஆம் ஆண்டு மார்ச் 2ஆம் தேதியன்று வெளியிடப்பட்ட தமிழ்மொழி ஒழுங்குவிதிகளோ அமுல்படுத்தப்படவில்லை. மேலும் 1968 யூலையில் 'மத்திய அரசாங்க நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ்' மாவட்ட சபைகளுக்கு ஏற்பாடு செய்வதற்கான வரைவுச் சட்டமூலமும் எதிர்க் கட்சியின் கடுமையான எதிர்ப்பின் நிமித்தம் கைவிடப்பட்டது. இதனால் தமிழரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்து விலகியது.





## தமிழ் மிதவாதிகளின் அதிகரித்துவந்த போர்முனைப்பு (1972 – 1975)

1970களின் தொடக்கத்தில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்கள் தூண்டுகோல்களாகச் செயற்பட்டு, தவிர்க்க முடியாத ஒரு செயல்முறையைத் துரிதப்படுத்தின. வன்முறைதான் தீர்வென்ற அபிப்பிராயப் பேரலை படிப்படியாக வேகம்பெற்று வந்தது. 1970ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய முன்னணியின் அமோக வெற்றி, பாராளுமன்ற அரசியலில் தமிழரசுக் கட்சி போன்ற பிராந்தியக் கட்சிகளின் சமநிலைப்படுத்தும் பங்கை இழக்கச் செய்தது. அதற்கு மேலும் தமிழரசுக் கட்சியால் தமிழருக்கான சலுகைகளுக்காகப் பாராளுமன்ற ஆதரவை வழங்கலாமென்று பேரம் பேச முடியவில்லை. அத்துடன் பங்களாதேஷின் விடுதலைப் போராட்டமும், 1971இல் ஜனதா விமுக்தி பெரமுன (JVP) கிளர்ச்சியும் தமிழர் மனதில் அழிக்கமுடியாதவாறு ஆழப் பதிந்தன. ஜே.வி.பி. கிளர்ச்சிகளில் மிகச் சில தமிழர்தான் ஈடுபட்டனரென்றபோதிலும், அனேக தமிழ் இளைஞர்கள் சிறைச்சாலையில் இருந்தவேளையில், ஜே.வி.பி.யின் புரட்சிகரமான சித்தாந்தத்தினதும் தந்திரோபாயங்களினதும் செல்வாக்கின்பால் ஈர்க்கப்பட்டிருந்தனர். பல்கலைக்கழக அனுமதியில் 'தரப்படுத்தல்' மத்தியதர வர்க்கத் தமிழ் இளைஞரை மோசமாகத் தாக்கியது. விரைவில் அவர்கள் ஆயுதப் போராட்டத்தின் முதுகெலும்பானார்கள்.

1972ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற குடியரசு அரசியலமைப்புக்கு முழுத் தமிழ்ச் சமூகமும் காட்டிய கடுமையான எதிர்ப்பானது தமிழர் போர்முனைப்பின் ஓரம்சம் மட்டுமே. தமிழரின் உரிமைகளை அரசியலமைப்பின் மூலம் அங்கீகரிக்கவைப்பதற்கு, ஒரு பொதுவான நிகழ்ச்சித்திட்டத்தைப் பிரச்சாரம் செய்யும்பொருட்டு, தமிழரின் உரிமைகளுக்கான போராட்டத்தில் முன்னணி வகித்த மூன்று அமைப்புக்களான தமிழரசுக் கட்சி (Federal Party), அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் (All Ceylon Tamil Congress), இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (Ceylon Workers' Congress) ஆகியவை இணைந்து 1972ஆம் ஆண்டு யூன் 13ஆம்; தேதியன்று தமிழர் ஐக்கிய முன்னணியை (Tamil United Front) உருவாக்கின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிகழ்வுகள் இப்போது அளப்பரிய வேகத்துடன் இடம் பெறத் தொடங்கின. தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அவரின் காங்கேசன் துறை ஆசனத்தை பாராளுமன்றத்தினுள்ளேயே இராஜினாமா செய்து உபதேர்தலொன்றை நடத்தும்படி அரசாங்கத்திற்கு அறைகூவல் விடுத்தார். சவாலை எதிர்கொண்ட ஐக்கிய முன்னணி அரசு, அதனை ஒட்டி நடந்த காங்கேசன் துறை உபதேர்தலில் தனது மந்திரிசபை சகாக்களை அனுப்பி தன்னால் இயன்ற அனைத்துவழிகளிலும் முயற்சித்தும், தமிழர் ஐக்கிய முன்னணி தலைவர் (அவரை எதிர்த்த கம்யூனிஸ்ட் கட்சியின் போட்டியாளர் பெற்ற 9,457 வாக்குகளுக்கெதிராக 25,927 வாக்குகளைப் பெற்று) 16,000 பெரும்பான்மை வாக்குகளால் அமோக வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, 1975 பெப்ருவரியில் அவர் பின்வருமாறு பிரகடனப்படுத்தியபோது தமிழ் ஈழத்துக்கான முதலாவது வாக்குறுதி உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டது:

> தமிழ்த் தேசிய இனம் தமிழ் மக்களுக்கு ஏற்கெனவே உரித்தாக்கப்பட்டிருந்த இறைமையைப் பிரயோகித்துச் சுதந்திரமானதாக வேண்டுமென்பதற்காக வழங்கப்பட்ட ஓர் ஆணையாக இத்தேர்தலின் தீர்ப்பை நான் கருதுகின்றேனென்று எனது தமிழ் மக்களுக்கும் இந்நாட்டிற்கும் அறிவிக்க விரும்புகின்றேன். அந்த ஆணையை நாம் நிறைவேற்றுவோமென்று பயபக்தியுடன் நான் உங்களுக்கு உறுதியளிக்கின்றேன் (பொன்னம்பலம்,1983:183).

## தமிழ்ப் போராளிக் குழுக்களின் உருவாக்கம்

தமிழ் இளைஞர்களில் போர் முனைப்பு கொண்ட ஒரு பகுதியினர் 1970களின் தொடக்கத்தில் வித்தியாசமான புதிய போர் முரசத்தின் கீழ் அணிவகுக்கத் தொடங்கினர். 1977 ஆகஸ்ட் இனக்கலவரங்களை விசாரிப்பதற்கு சனாதிபதியால் நியமிக்கப்பட்ட தனிநபர் ஆணைக்குழு (சன்சோனி ஆணைக்குழு) வடக்கில் அரசியல் கிளர்ச்சியினதும் போராளிகளின் நடவடிக்கைகளினதும் அண்மைக்கால வரலாற்றை ஆராய்ந்தது (SCR: பருவப்பத்திரம் இல. ரு11-1980).

இச்சம்பவங்கள் குறித்த மேற்படி ஆய்வு (SCR 1988 'பருவப்பத்திரம் இல. ரு11) வட மாகாணத் தமிழர் மத்தியில் அரசியலில் அந்நியப்படுத்தப்பட்டதோர் உணர்வு வளர்ந்துவந்ததென்பதையும், அது வலுப்படுத்தப்பட்டதென்பதையும் காட்டுகின்றது. 1972ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பு நிராகரிக்கப் பட்டதுடன் மட்டுமன்றி, மே 22ஆந் தேதியை நாட்டின் எஞ்சிய பகுதிகள் ஒரு வைபவமாகக் கொண்டாடிய அதேவேளையில், நிராகரிப்பின் அடையாளமாக வடக்கு கிழக்கில் அந்தநாள் ஆண்டுதோறும் ஓர் எதிர்ப்பு நாளாகக் குறிக்கப்பட்டது. பிரதமரும் அரசாங்க அமைச்சர்களும் திட்டவட்டமாக வடக்கிலும் கிழக்கிலும் வரவேற்கப்படாததுடன், அரசாங்கத்தின் தமிழ் ஆதரவாளர்களும் கொல்லப்பட்டனர். எதிர்ப்பு மற்றும் பிரிவினைக் கலாச்சாரமானது உண்ணாவிரதங்கள், மறியல் போராட்டங்கள், பாடசாலைப் புறக்கணிப்புகள், ஆர்ப்பாட்டங்கள், துண்டுப்பிரசுர விநியோகங்கள் என்பவற்றின் ஊடாக இளைஞர் மனதிலும் முதியோர் மனதிலும் ஆழப்பதிக்கப்பட்டது.[1]

இத்தகைய வளர்ச்சியின் போக்கில் இளந்தலைவர்கள் முன்னணிக்கு வந்த மற்றுமொரு கட்டத்தையும் ஒருவர் அவதானிக்கலாம். தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் இளைஞர் பிரிவுடன் அனேகர் தம்மை இனங் காட்டினர். 1975ஆம் ஆண்டு சனவரியிலும் மேயிலும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட இளந்தலைவர்களை மாலைசூட்டி வரவேற்பதற்கு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் போற்றத்தக்க தலைவர் செல்வநாயகம் யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்துக்குச் சென்றதானது, தலைவர்களின் ஒரு புதிய சந்ததி முதன்மைநிலைக்கு வருதலை, கட்டியம் கூறுவதாக இருந்தது.

எதிர்ப்புகள் அதிக வன்முறை வடிவங்களாக மாறுகின்றன: அரசியல் எதிராளிகளின் படுகொலைகள், பொலிஸ் அலுவலர்கள் கொல்லப்படுதல், வெடிக்கின்ற சாதனங்களைத் தயாரித்தலும் அவற்றைப் புதைத்து வைத்தலும், வங்கிகளைக் கொள்ளையடித்தல், சுடுபடைக் கலங்களையும் வெடிமருந்துகளை சேகரித்தலும் - அவற்றை அதிக அளவில் பயன்படுத்துதலும், மின்சார விநியோகம், வாயு விநியோகம் போன்ற பொதுப் பயன்பாடுகளை







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அழித்தல் ஆகிய நடவடிக்கைகளில் இளைஞர்கள் ஈடுபட்டனர். அவர்கள் மிக நெருக்கமான இரகசியக் குழுக்களைச் சேர்ந்தவர்களாகவும், சிற்சில காலங்களைச் சிறைச்சாலையில் கழிப்பவர்களாகவும், சிறையிலிருந்து தப்பியோடுபவர்களாகவும் அல்லது விடுதலை செய்யப்படும்வரை சிறைத் தண்டனையை அனுபவிப்பவர்களாகவும் ஆபத்தான வாழ்க்கைக்குத் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டவர்களாகவும் இருந்தனர்.

இக்காலப்பகுதியில் அவதானிக்கக்கூடியதாயிருந்த மற்றுமொரு வளர்ச்சியானது தமிழ்நாட்டுடன் தொடர்புகள் வைத்துக்கொள்ளப்படத் தொடங்கியமை. அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய பெருந் தொகையான வெடி பொருள்களைத் தமிழ் நாட்டிலிருந்து ஏற்றிக்கொண்டு வந்த படகொன்று 1973 மார்ச்சில் கைப்பற்றப்பட்டமை, தமிழ் நாட்டிலுள்ள ஆதரவு சக்திகளுடனான தொடர்புகள் ஏற்கெனவே தாபிக்கப்பட்டுவிட்டன என்பதைக் காட்டியது. மேலும் ஏறக்குறைய இதேகாலப்பகுதியில், ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும்பொருட்டு அரச வங்கிகளிலிருந்தும் தமிழ் வர்த்தகர்களிடமிருந்தும் பணமும் நகைகளும் கொள்ளையிடப்பட்டன. 1974 ஒக்ரோபருக்கிடையில் சில தமிழ்க் குழுக்கள் இலங்கையின் கரைகளுக்கு அப்பாலுள்ள இலக்குகள்மீதும் அவற்றால் தாக்குதல்களைத் தொடரமுடியுமென்பதற்குத் தெளிவான சான்றைக் காட்டின. சென்னையிலுள்ள இலங்கைப் பிரதி உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் மீதான தாக்குதல்கள் மற்றும் சென்னையிலுள்ள மகாபோதி சங்கத் தலைமையகத்தின் மீதான தாக்குதல் ஆகிய நடவடிக்கைகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

இத்தகையத் தாக்குதல்கள் பல்வேறு விடயங்களைக் கோடிட்டுக் காட்டுகின்றன. அவையாவன: எல்லைகளைக் கடந்து செல்வதற்கான நிதிஆதாரங்கள், ஏனைய அவசியமான பொருட்கள் தொடர்பான உதவிகள் உள்ளடங்கலாக அவற்றைப் பெற்றுக்கொள்ளும் துணை ஆதாரங்களையும் தமிழ் நாட்டில் கொண்டிருந்தனர். வெளிநாட்டில் இருக்கும் ஒரு உயர்ஸ்தானிகர் அலுவலகத்தைத் தாக்கியதன் மூலம் அவர்கள் தமது இலட்சியத்தின்பால் கொண்டிருந்த பிரமிக்கத்தக்க ஈடுபாட்டையும் இத்தகைய நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய எந்த எதிர்விளைவையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மனஉறுதியையும் பெற்றிருந்தனர் என்பதையும் வெளிக்காட்டுகின்றது. மேலும் இதுபோன்ற நடவடிக்கைகள் அவர்களின் போராட்ட இலட்சியங்களைச் சர்வதேசமயப்படுத்துவதற்கு உதவின.





அவர்களது இலட்சியத்தை அடைவதற்கு இறுதியானதும் முக்கியமானதுமாக, வடக்கு கிழக்கு மக்களின் ஆதரவு அவர்களின் விருப்பத்தினுடனோ அல்லது விருப்பமின்றியோ தேவைப்பட்டது. இளைஞர் குழுக்கள் பொலிஸ் அலுவலர்களையும் பொலிஸ் உளவாளிகளையும் 'சிங்கள அரசாங்கங்களின்' ஆதரவாளர்களையும் தீவிரமாக இலக்கு வைக்கத் தொடங்கினர்.* 1975 யூலையில் யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பாவின் படுகொலையுடன் முழுமூச்சாகத் தொடங்கிய அத்தகைய கொலைகள் படிப்படியாக வேகம்பெற்றன.[2]

இங்கு மீளாய்வை உள்ளடக்கிய காலகட்டம் என்பது போராளிக் குழுக்கள் உருவான காலப்பகுதியைக் குறிக்கின்றதென்ற வகையிலும் முக்கியமானது. இன்று பரிச்சயமாயுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள், ரெலோ மற்றும் ஈரோஸ் ஆகிய குழுக்களின் தலைவர்கள் 1977இற்கு முந்திய இக்காலப்பகுதியில்தான் வெளிப்படத் தொடங்கினர் (சிவராஜா 1996: 130-141).

## தொடக்ககாலப் போர்முனைப்பு

இலங்கையில் தமிழரின் போர்முனைப்பானது எந்த நாளில் தொடங்கியது என்பதைக் கண்டுபிடிப்பது சாத்தியமற்றது. தமிழர் ஐக்கிய முன்னணி அதன் கிளர்ச்சியை சாத்வீக முறைகளுக்குக் கட்டுப்படுத்தியிருந்தபோதிலும், 1956 கலவரங்களின் பின்னர் கிழக்கு மாவட்டமான மட்டக்களப்பில் தமிழர் குழுவொன்று, தம்மை ஒழுங்கமைத்துக் கொண்டு இராணுவத்தின்மீது வேட்டுகளைத் தீர்த்தனரென்று அந்தக் காலத்தைச் சேர்ந்தவர்கள் நினைவுகூருகின்றனர். அம்பாறை மாவட்டத்தில் கல்முனைக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் ஓர் இரவில் 11 தமிழர் தமக்கிடையில் ஏழு துப்பாக்கிகளை ஏந்தியவர்களாக சிங்களக் குடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்களினதும் அரசாங்க அதிகாரிகளினதும் வாகனத் தொடரணிமீது சூடு நடத்தியதில் இரண்டு சிங்களவர் கொல்லப்பட்டனர்.

மேலும், 1973இல் பெருந்தொகையான தமிழ் இளைஞர்கள் வன்முறையை நாடத் தொடங்கிவிட்டனர் என்பதற்கான அறிகுறிகள் வெளிப்படையாகக் காணப்பட்டன. முந்தைய மாதங்களில் கைதுசெய்யப்பட்டிருந்த 37 தமிழ் இளைஞர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களைப் படுகொலை செய்ய முயற்சித்தமை, அரச சொத்துகளை அழிக்க முயற்சித்தமை மற்றும் அச்சுறுத்தியமை என்ற குற்றச்சாட்டுகளின்பேரில் விரைவில் விசேட ஆணைக் குழுவொன்றால் குற்ற விசாரணை செய்யப்படுவரென்று மே 28ஆந் தேதியன்று உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப் பட்டது. பிரதி நிதி அமைச்சரான ஜயக்கோடி, மே 31ஆந் தேதியன்று ரோந்துக் கடற்படையினர் இந்தியத் தயாரிப் பாளர்களின் அடையாளம் பொறித்த 40,000 வெடிக்க வைக்கும் பொருள்கள் நிறைந்த ஒரு படகைக் கைப்பற்றின ரென்றும், தென்னிந்தியாவிலிருந்து வட மாகாணத்திற்கு அரசைக் கவிழ்ப்பதற்கான பிரச்சாரப் பிரசுரங்கள் பெருமளவில் கடத்தப்படுகிறதென்றும் யூன் 6ஆந் தேதியன்று பேரவையில் கூறினார். கடத்தப்பட்ட இச்சரக்குகள், பத்தாண்டுகளின் பின்னர் 1983ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் கொல்லப்பட்ட, குட்டிமணி என்று பிரபலமாக அறியப்பட்ட யோகச்சந்திரனால் ஒழுங்கு செய்யப்பட்டதென அறிவிக்கப்பட்டது.

இக்காலப்பகுதி, நீடித்த போராட்டமாகவன்றிப் பயங்கரவாதமென்ற வடிவத்தில் அவ்வப்போதான வன் செயல்களால் குறித்துக்காட்டப்பட்டது. இச்சம்பவங்களை விரிவாக இங்கு நான் குறிப்பிடப் போவதில்லை. எனினும் அப்போது ஓர் அரசியல் சக்தியாக எழுந்து விட்ட இவ்விளைஞர்கள் பிரிந்துபோவதெனத் தீர்மானிக்கும்படி தமிழர் ஐக்கிய முன்னணிக்கு அழுத்தங்கொடுத்தனர். 1973 மேயில் தமிழர் ஐக்கிய முன்னணியின் செயற்குழு, அதன் இலக்கு 'தமிழ் ஈழம் என்ற தனியரசு' எனத் தீர்மானித்தது. 1974ஆம் ஆண்டு சனவரியில் யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழ் மகாநாடு நடத்தப்பட்டது. அதன் கடைசி நாளன்று





பொதுக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில், பொலிசார் அதை அனுமதியற்ற பொதுக்கூட்டமென்ற சாட்டில், கூட்டத்தினர்மீது கண்ணீர்ப் புகையுடன் தடியடிப் பிரயோகமும், ஆகாயத்தை நோக்கிய துப்பாக்கிச் சூடும் நடத்தினர். இதன்போது மின்கம்பிகள் அறுந்து விழுந்த தனால் ஒன்பது பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதனைத் தமது கலாச்சாரத்தின்மீது ஓர் 'இனத்துவேச' அரசினால் வலிந்து மேற்கொள்ளப்பட்ட மற்றொரு தாக்குதலாகத் தமிழர் கண்டனர்.

தமிழ் இளைஞர் மத்தியில் இரகசியப் போராளி இயக்கமொன்றின் தோற்றத்திற்கு இவ்வன்முறைத் தாக்குதல்களே காரணமாக இருந்தது. 1970களில் 'தரப்படுத்தலை' எதிர்த்த மாணவர்கள் 'தமிழ் மாணவர் பேரவை' (Tamil Student Federation) என்ற பெயரில் தம்மை நிறுவனமயப் படுத்திக்கிக்கொண்டனர். ஆரம்ப ஆண்டுகளில் தமிழர் போர்முனைப்பு இந்நிறுவனத்தின் ஊடாக வெளிப் பட்டது. அதனைச் சார்ந்த ஓர் இளைஞரான சிவக்குமாரன் பெரிதும் பிரபலம் பெற்றவராகவும் பொதுமக்கள் மனதில் ஒரு மாவீரராகவும் விளங்கினார். ஆனால், பொலிசாரையும் சிங்கள அரசாங்கத்துக்கு உடந்தையாயிருந்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஏனையோரையும் கொலை செய்வதற்கான முயற்சிகள் போன்ற, அவரின் வன்முறையான சாகசச் செயல்கள், நன்கு கட்டமைக்கப் பட்ட போராளி இயக்கமொன்று இல்லாததனால் வெற்றியளிக்கவில்லை. தமிழ் மாணவர் பேரவை உறுப்பினர்களுக்கெதிராகப் பொலிசார் கடும் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியதோடு அது விரைவில் கலைந்துபோயிற்று.

1972இல் தமிழர் ஐக்கிய முன்னணியின் உருவாக்கம் 1973ஆம் ஆண்டு சனவரியில் தமிழ் இளைஞர் பேரவைக்கு (Tamil Youth Federation) வழிவகுத்தது. அது முற்று முழுதாக தமிழர் ஐக்கிய முன்னணியின் ஓர் இணைப்பாக இல்லாதபோதிலும், அத்தகையதொன்றாகச் செயற்பட்டுப் பெருந்தொகையான இளந் தமிழர்களை ஒரு கொடியின் கீழ்க் கொண்டுவந்தது. அது சுமார் 40 இளைஞர்களால் தாபிக்கப்பட்டது. அவர்களில் அனேகர் பின்னர் போராளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயக்கங்களில் முன்னணி வகித்தனர் (சேனாதிராஜாவுடனான நேர்காணல், 11 யூலை 2001).

தமிழர் ஐக்கிய முன்னணியின் அதிகார ஆணைகள் தமிழ் இளைஞர் பேரவையினுள் இயல்பாகவே மனக் கசப்பை உருவாக்கின. அதன் உறுப்பினர்கள் பொதுவாக இரு போக்குகளைக் கொண்டவர்களாகப் பிளவுபட்டிருந்தனர்: ஒருசாரார் மிதவாதத் தமிழ்த் தலைமைத்துவத்தை முழுமனதுடன் ஆதரிப்பவர்கள், மறுசாரார் இடதுசாரிச் சிந்தனையுடையவர்கள். அவர்கள் பாரம்பரியத் தலைவர்கள் எந்த அளவுக்குத் தமிழர்களை வழிநடத்தக்கூடுமென்று சந்தேகங்களை எழுப்பினர். அவர்கள் தாராளவாதத் தமிழ்த் தலைமைத்துவத்தைச் சித்தாந்தத் தெளிவற்ற 'சுகபோக' புரட்சிவாதிகளாகக் காணத்தொடங்கினர். 1975ஆம் ஆண்டு யூனில் தமிழ் இளைஞர் பேரவையின் ஒரு பிரிவினர், தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைமையின் பின்னால் அணிதிரண்டபோது இறுதிப் பிளவு ஏற்பட்டது. மறுசாரார் பிரிந்து சென்று தமிழ் ஈழ விடுதலை அமைப்பு (Tamil Eelam Liberation Organisation) எனத் தம்மை அழைக்கத்தொடங்கினர். அது ஆயுதப் போராட்டத்தைப் பரிந்துரைத்தபோதிலும் சாராம்சத்தில் ஒரு சீர்திருத்த அமைப்பாகத் தொடர்ந்தது.[3] (இங்கு குறிப்பிடப்படும் TELOவும் பின்னர் சிறிசபாரத்தினம் தலைமையில் உருவான TELOவும் ஒன்றல்ல.)

1975இல் இரு இரகசியக் குழுக்கள் தீவிரமாகச் செயற்பட்டன. ஒன்று குட்டிமணி குழு, மற்றது தகவல் தெரிந்த வட்டாரங்களில் செட்டி குழு என்றும், பின்னர் பிரபாகரன் குழு என்றும் அறியப்பட்டதான தமிழ்ப் புதிய புலிகள் (Tamil New Tigers). இரண்டும் தமிழர் ஐக்கிய முன்னணி தலைவர் அமிர்தலிங்கத்தின் மௌனமான ஆசீர்வாதத்தைப் பெற்றிருந்தன.

1974இல் யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து 91,000 ரூபாய் களவு போனபோது, தமிழ்ப் போராளிகள்மீது பழிசுமத்தப்பட்ட முதலாவது வெற்றிகரமான கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது. கொள்ளைக்குப் பொறுப்பானவர்கள்





மத்தியில் செட்டியும், அவரது மைத்துனர் ஒருவரும் இடம் பெற்றிருந்தனர் (1975இல் பங்குபற்றிய ஒருவருடன் 'பெயர் இரகசியமானது' கலந்துரையாடல்).

1976 மார்ச்சில், முன்னாள் தமிழ்ப் புதிய புலிகள் (TNT) உறுப்பினரும் இன்றைய தமிழீழ விடுதலைப் புலிகளின் (Liberation Tigers of Tamil Eelam - LTTE) தலைவருமான பிரபாகரன் தலைமையில் சில போராளிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட மக்கள் வங்கியின் (People's Bank) புத்தூர் கிளையில் ஐந்து இலட்சம் ரூபாய் ரொக்கமாகவும், 200,000 ரூபாய் பெறுமதியான நகைகளையும் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றனர். அதுவே யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற முதலாவது வெற்றிகரமான வங்கிக் கொள்ளை. 'ரெலோ' புலோலியில் மற்றொரு வங்கிக் கொள்ளையின் மூலம் அதனைத் தொடர்ந்தது. இளம் வங்கி முகாமையாளரான வீ. பாலகுமார் (EROS இன் முன்னாள் தலைவர்களில் ஒருவரும் தற்போதைய எல்ரீரீஈயின் முக்கியஸ்தர்களில் ஒருவர்) உட்கையாயிருந்தாரென்று கைதுசெய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்த பொலிசாரின் கழுகுப் பாய்ச்சலினால் அன்றைய ரெலோ ஏறக்குறைய அழிக்கப்பட்டது.

1975 சனவரியில் இலண்டனில் வசித்த இலங்கைத் தமிழரில் ஒரு குழுவினர் 'ஈழப் புரட்சிகர அமைப்பாளர்கள்' என்னும் அமைப்பை உருவாக்கினர், அது ஈரோஸ் (Eelam Revolutionary Organisers) என்று அதன் ஆங்கில தலைப்பெழுத்துச் சொல்லால் அழைக்கப்பட்டது. அது நீண்ட காலம் இலங்கைத் தமிழ்ப் பிரதேசங்களில் வேரூன்றத் தவறிய போதிலும் போர்முனைப்பின் வளர்ச்சிக்கு வலுவான உருவங்கொடுப்பதில் ஒரு முக்கிய பங்கு வகித்தது (அருட்பிரகாசத்துடனான நேர்காணல், 6 ஒக்ரோபர் 2001).

இரகசிய ஆயுதக் குழுக்களின் நடைமுறைகள் மிதவாதத் தமிழர் ஐக்கிய முன்னணியின் நடைமுறைகளிலிருந்து முழுமையாக வேறுபட்டபோதிலும் இரண்டுக்குமிடையில் தொடர்புகள் இருந்தன. இரகசியக் குழுக்களின் பெரும்பாலான உறுப்பினர்கள் தமிழரசுக் கட்சி, தமிழர் ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் இளைஞர் பிரிவின் முன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



னாள் உறுப்பினர்களாக இருந்தவர்களென்பது அதற் கான காரணங்களில் ஒன்று. 1975ஆம் ஆண்டு யூலையில் யாழ்ப்பாண மேயரான அல்பிரட் துரையப்பா கொல்லப் பட்டார். அப்படுகொலை மேலும் ஒரு தொடரான கைதுகளுக்கு வழிவகுத்தது.

## ஈழத்திற்கான கோரிக்கை (1976 – 1979)

இக்காலப்பகுதி பிரிவினைக் கோரிக்கைக்கான அடுத்த அடியை எடுத்துவைத்தது. 1976ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் தேதியன்று தமிழ்ப் புதிய புலிகள் (TNT) தமிழீழ விடுதலைப் புலிகள் (Liberation Tigers of Tamil Eelam) என்று புதுப்பெயர் சூட்டிக்கொண்டனர். ஒரு வாரத்தின் பின்னர் 1976ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் தேதியன்று வட்டுக் கோட்டை மகாநாட்டில் தமிழர் ஐக்கிய முன்னணி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, (Tamil United Liberation Front) என்ற பெயரைத் தனதாக்கிக்கொண்டது. (அதாவது அவை தமது அமைப்பின் பெயரில் 'விடுதலை' என்னும் சொல்லை இணைத்துக்கொண்டன.) அது இலங்கைத் தமிழரை 'சிங்களவரிலிருந்து தெளிவாக வேறுபட்டதும் தனி வேறானதுமான ஒரு தேசிய இனம்' என்று விவரித்தது.

தமிழ்த் தேசிய இனம் அதன் ஆட்சிப் பிரதேசம், மொழி, பிரசாவுரிமை, பொருளாதார வாழ்க்கை, தொழில் மற்றும் கல்வி வாய்ப்புகள் என்பவற்றை இழக்கச் செய் வதற்காகச் சிங்களவர் அதிகாரத்தைப் பறித்துக்கொண்டு அதன்மூலம் தமிழ் மக்களின் தேசியத்துவத்திற்கான இயற் பண்புகள் எல்லாவற்றையும் அழித்துவிட்டனரென புதிய கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி குற்றம் சுமத்தியது. நாட்டில் தமிழ்த் தேசிய இனம் உயிர்த்திருத்தலைப் பாது காக்கும் பொருட்டு ஒவ்வொரு தேசிய இனத்தினதும் உள் ளார்ந்த சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில், தமிழ் ஈழமென்ற சுதந்திரமான, இறைமையுடைய, மதச்சார்பற்ற, சமதர்ம அரசை மீண்டும் நிறுவுதலும் மீளமைத்தலும் தவிர்க்க முடியாததென்று இம்மகாநாடு தீர்மானித்தது (சுதந்திரன், 12 மே 1976),

வரலாற்றுப் புகழ்பெற்ற இத்தீர்மானமானது, முக்கிய மாகத் தமிழர் கோரிக்கைகள் தொடர்பில் இலங்கையின்





இரு முன்னணிக் கட்சிகளினதும் நுண்ணறிவின்மையின் காரணமாகக் கடந்த பல ஆண்டுகளாகத் தமிழ் அரசியற் சமுதாயத்தைக் கொந்தளிக்க வைத்த ஒரு செயல்முறை யின் உச்சக்கட்டமாகும். தமிழர் ஐக்கிய விடுதலை முன் னணியின் மேற்கண்ட தீர்மானம் பிரிந்து செல்வதற்கான ஒரு திடசங்கற்பமாக இருந்தபோதிலும், மிதவாதத் தலைமைத்துவம் உண்மையில் அதனை அவ்வாறு காண விரும்பவில்லை. அதுமுதற்கொண்டு, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைமைத்துவம் ஈழத்தைச் சாதிப்பதென்ற அதன் வாக்குறுதியின் மீதான உறுதியான செயற்பாட்டை வைத்தே மதிப்பிடக்கூடியதாயிருந்தது. மேலும் இரண்டாண்டுக் காலம் கழிந்துவிட்ட இத்தீர்மானத் தோடுதான் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி 1977ஆம் ஆண்டு யூலை பொதுத்தேர்தலுக்குச் சென்றது. தமிழர் கண்ணோட்டத்தில் 1977ஆம் ஆண்டுத் தேர்தல் மூன்று வழி களில் தனிச்சிறப்பு வாய்ந்ததாயிருந்தது. முதல் தடவை யாக இலங்கையின் பிரதானக் கட்சிகளில் ஒன்று தமிழர் பிரச்சினையொன்று உள்ளதென்பதைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டது. அத்துடன் முதல் தடவையாகத் தமிழ்க் கட்சியொன்று இலங்கைப் பாராளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சியாக உயர்ந்தது. மூன்றாவதாக வட- கிழக்குத் தேர்தலில் அமோக வெற்றி தமிழர் போர் முனைப்புக்கு அளப்பரிய வீச்சை அளித்தது.

அமிர்தலிங்கத்தின் தலைமையில் (1977 ஏப்பிரலில் செல்வநாயகம் காலமாகிவிட்டார்) தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி 'எமது மூதாதையர் ஆட்சிபுரிந்த எமது நாட்டை நாம் மட்டும்தான் ஆளவேண்டுமென்றும், சிங்கள ஏகாதிபத்தியம் எமது தாயகத்தைவிட்டு வெளி யேறவேண்டுமென்றும் அறுதி முடிவாக உறுதியுடன் பிரகடனப்படுத்தும்படி' தமிழரைக் கேட்டுக்கொண்டது. அதன் தேர்தல் விஞ்ஞாபனம் கூறியதாவது: 'தெரிவு செய்யப்படும் தமிழ்பேசும் பிரதிநிதிகள் இலங்கைத் தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர்களாயுள்ள அதே வேளையில், தமிழ் ஈழத்தின் தேசியப் பேரவையாகவும் தம்மை அமைத்துக்கொண்டு, அதன் அரசியலமைப்பைச் சமாதானமான வழிகளிலோ அல்லது நேரடி நடவடிக்கை அல்லது போராட்டம் மூலமாகவோ செயற்படுத்துவதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஊடாகத் தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை நிலைநாட்டுவர்' (த.ஐ.வி.மு. தேர்தல் விஞ்ஞாபனம், 1977).

## அரச வன்முறையும் போராளிகளும் (1979 – 1983)

1979 - 1983 காலப்பகுதி போராளிகளுக்கு ஓர் இலகுவான காலமாக இருக்கவில்லை. பொலிசாரின் திடீர்ச் சோதனைக் குழுவொன்றை எல்ரீரீஈ பதுங்கியிருந்து தாக்கி காவல்துறை ஆய்வாளர் பஸ்தியாம்பிள்ளையையும், வேறு இருவரையும் கொலைசெய்ததைத் தொடர்ந்து, அரசாங்கம் அவர்களுக்கெதிராகத் தீவிர நடவடிக்கையில் இறங்கியது. 1979இல் மற்றொரு போராளிக்குழு மேலும் மூன்று தமிழ்ப் பொலிசாரை யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொன்றது. ஐயவர்தன விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் சட்டத்தை மேலும் கொடுமையான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (பின்னிணைப்பு 10) மூலம் பதிலீடு செய்தார். அது பின்னர் நாட்டின் நிரந்தரச் சட்டங்களின் ஒரு பகுதியாக்கப்பட்டது. ஒரு சட்டம் பயன்படாவிட் டால் அதனைவிடக் கடுமையான மற்றொன்று பயனளிக்குமென்ற நம்பிக்கையில் தம்மைத்தாமே ஏமாற்றிக்கொண்ட சனாதிபதி ஐயவர்தன, பிரச்சினையை அரசியல் ரீதியாகக் கையாள்வதற்குப் பதிலாகப் புதிய சட்டங்களை ஆக்கிக் கொண்டிருந்தார்.

1979 யூலை 11ஆந் தேதியன்று அவர் தமது உறவினரும் அப்போது பிரதம இராணுவப் படைப் பிரிவு அலுவலராகவுமிருந்த பிரிகேடியர் ரீ.ஐ. (Bull) வீரதுங்கவை யாழ்ப்பாணத்திற்குப் பொறுப்பான தளபதியாக நியமித்துப் பின்வரும் வீம்பாரவாரக் கட்டளையைப் பிறப்பித்தார்:

> இந்நாட்டின் சட்டங்களுக்கிணங்க இத்தீவிலிருந்தும் மேலும் விசேடமாக யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்தும் பயங்கரவாத அச்சுறுத்தலை ஒழித்துக்கட்டுதல் உங்கள் கடமையாகும் இப்பொறுப்பை நீங்கள் மேற்கொண்டு 1979 திசெம்பர் 31ஆந் தேதிக்கு முன்னர் அதனைப் பூர்த்தி செய்யவேண்டும். (வீரகேசரி, 12 யூலை 1979 மற்றும் டெய்லி நியுஸ், 12 யூலை 1979).

அதே தினத்தன்று யாழ்ப்பாணத்தில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது. மேலும் மரண





விசாரணையின்றி இறந்த உடல்களை ஒழித்துவிடுவதற்குப் பொலிசாருக்கும் ஆயுதப் படைகளுக்கும் அதிகாரமளிக்கின்ற பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தை சனாதிபதி அமுலுக்குக் கொண்டுவந்தார்.[4] இச்சட்டமானது அதனை உருவாக்கிய சனாதிபதியைத் தவிர வேறெந்த அதிகாரிக்கும் பதில்சொல்ல வேண்டிய அவசியமின்றி, யாரையும் எங்கும் கொலை செய்வதற்கு அங்கீகாரம் வழங்குகின்றது. இப்படியான ஒரு சட்டம் மிகவும் கொடுங்கோலான ஆட்சியாளர்களாலேயே இயற்றப்பட்டுள்ளது. எனினும் இருபத்திரண்டு ஆண்டுகளின் பின்னர் (இந்த ஆய்வின் கால எல்லையான 2001ஆம் ஆண்டுவரை) இன்று அதே ஆயுதப்படைகள் யாழ்ப்பாணத்தினுள் ஊடுருவக்கூட முடியாதுள்ளன என்ற உண்மையிலிருந்து, இந்த அதீத ஒடுக்குமுறை தமிழர் போர்முனைப்பைக் கட்டுப்படுத்துவதில் மிகக் குறைந்த அளவு வெற்றியையே ஈட்டியுள்ளது என்பதை உணர முடியும்.

தமிழர் போர்முனைப்பு, பயங்கரவாதச் செயல்களிலிருந்து கெரில்லா யுத்த நடவடிக்கைகளாகவும், பின்னர் அரசின் பெரும் வல்லமையைச் சம பலத்துடன் எதிர்க்கக் கூடிய ஆற்றலைப் பெற்று வருகின்ற ஒரு நிலைக்கும் முன்னேறிவிட்டது. 1980இல் தமிழர் போர்முனைப்பு ஏறக்குறைய முழுதாக மரித்துவிட்டபோதிலும், அடுத்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து மீண்டும் உயிர்த்து விட்டது. போராளிகளால் தூண்டப்பட்ட வன்செயல்களின் வீழ்ச்சிக்குப் பொலிஸ் அடக்குமுறை மட்டும் காரணமாக இருக்கவில்லை. போராளி அணிகளுக்குள், குறிப்பாக எல்ரீரீஈ அணிகளுக்குள் வளர்ந்துவந்த வேறுபாடுகளின் விளைவாக அதில் பிளவேற்பட்டதைத் தொடர்ந்து, 1980இல் உமா மகேஸ்வரனால் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (People's Liberation Organisation of Tamil Eelam) உருவாக்கப்பட்டது. புலிகளின் அணிகளுக்குள் தனித்துவிடப்பட்ட பிரபாகரன் 'எல்ரீரீஈ'யை ஏறக்குறைய கலைத்துவிட்டு சுமார் ஓராண்டுவரை 'ரெலோ'வுக்கு ஆதரவளித்து வந்தார். (குட்டிமணி, தங்கதுரை தலைமையிலான புதிய TELO இது இதற்கு முன்னர் இருந்த TELOவிலிருந்து முற்றிலும் மாறுபட்டது.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேலே கூறப்பட்ட அத்தகைய கொடூரமான நடவடிக்கைகள் மூலம் தாக்கப்பட்ட போராளிகள் இந்தியாவுக்குத் தப்பியோடினர். அவர்கள் இந்தியாவில் தமது இயக்கங்களை மீளமைத்துக் கொண்டும், பாதுகாப்பாக மறைந்திருக்கக்கூடிய வீடுகளுக்கு ஏற்பாடு செய்து கொண்டும், ஆயுதங்களைத் தேடிக்கொண்டும் இருந்ததனால், 1981வரை அவர்களின் நடவடிக்கைகள் ஓரளவுக்கு ஓய்ந்திருந்தன. அதேவேளை இந்த ஆயத்தங்களால் அவர்களின் ஆயுத பலம் அதிகரித்தது. 1979இல் 'ஈரோஸ்'இல் ஏற்பட்ட பிளவின் மூலம், அதிலிருந்து வெளியேறிய பத்மநாபா, சுரேஷ் பிரேமசந்திரன், ஐயா என்றழைக்கப்படும் பத்திமநாயகம் ஆகியோருடன் குண்சி என்றழைக்கப்படும் குணசேகரன் ஆகியோரால் 1981இல் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) தாபிக்கப்பட்டது (அருட்பிரகாசத்துடன் நேர்காணல், 27 ஒக்ரோபர் 2001).

இம்முடிவை நோக்கிய பல்வகையான வளர்ச்சிகளுக்கு முக்கிய காரணகர்த்தாக்களான இலங்கை அரசும் தமிழர்களும் மட்டுமன்றி இந்திய மற்றும் தமிழ்நாட்டு அரசாங்கங்களும் பங்களித்தன. 1983ஆம் ஆண்டு, தமிழர் போர்முனைப்பின் வளர்ச்சியில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது.

## விடுதலையை நோக்கிய வெகுசன முன்னெடுப்புகள் (1983 – 1985)

1983ஆம் ஆண்டின் யூலையில் தமிழர் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலைகள் இலங்கைக்கெதிரான உலகளாவிய உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தியதுடன், போர்முனைப்புக்கு ஒரு நியாயப்படுத்தலையும், சர்வதேச சமூகத்தின் கவன ஈர்ப்பையும் ஈட்டுகின்ற அளவுக்குத் தமிழர்மீது சர்வதேச அனுதாபத்தையும் கொண்டுவந்தன. அத்துடன், அதுகாலவரை பங்குகொள்ளாதிருந்த பெருந்திரளான இளைஞர்களுக்கு அதுவோர் அவசர உணர்வை ஏற்படுத்தியதன் விளைவாக, முதல் தடவையாகப் பெற்றோரின் பெருமளவு எதிர்ப்பின்றித் துப்பாக்கியைத் தூக்குவதற்குத் தாமாக முன்வந்தவர்களின் எண்ணிக்கை தன்னியல்பாகப் பெருகியது. அக்கலவரம் வெறும் இருபது கடல் மைல்களுக்குக் குறுக்காயிருந்த தமிழ் நாட்டின் இடப்பரப்பைச் சடுதியாகத் திறந்துவிட்டது. ஆயிரக்கணக்கான





இளைஞர்கள், அவர்களில் பெரும்பாலானவர்கள் முதல் தடவையாக மேற்கொண்ட அப்படகுப் பயணமே வடக்கினதும் கிழக்கினதும் எல்லைகளுக்குள் அவர்கள் வாழ்ந்து வந்த நசுக்கப்பட்ட, ஆபத்தான வாழ்க்கையிலிருந்து ஒரு விடுதலை உணர்வையும் வெற்றிச் செருக்கையும் அவர்களுக்களித்தது. பகிரங்கமாக இல்லாவிடினும், இந்திராகாந்தியின் அரசாங்கமானது தமிழர்களுடைய ஒரு நட்பு சக்தி என்பதை அங்கு சென்ற தமிழ் மக்கள் நன்கு உணர்ந்து கொண்டனர்.

இனப்படுகொலையால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் பாதிக்கப்பட்டிருந்ததனால், போராளி இயக்கங்கள் வெகுசன அடிப்படையில் கட்டியெழுப்புவதற்கு அது உதவிகரமாக இருந்தது. தமிழ்ப் பிரதேசங்கள்தான் தமக்குப் பாதுகாப்பானவையென்ற உணர்வு 'தாயகம்' என்ற இலட்சியத்திற்கான ஆதரவை வலுப்படுத்தியதைத் தொடர்ந்து, பெருந்தொகையான மக்கள் போராளிக் குழுக்களில் இணைந்துகொண்டனர். இது அப்போதிருந்த குழுக்கள் மேலும் விரிவடைவதற்கு மட்டுமன்றி அவை பல்கிப் பெருகுவதற்கும் வழிவகுத்தது.

1983 யூலை வரை ஈபீஆர்எல்எஃப், ஈரோஸ், எல்ரீரீஈ, ரெலோ மற்றும் புளொட் என்பவை இயங்கிக் கொண்டிருந்த பிரதானக் குழுக்களாயிருந்தன. கலவரத்தைத் தொடர்ந்து குழுக்கள் பல்கிப் பெருகியதன் விளைவாக 1984ஆம் ஆண்டளவில் ஏறக்குறைய 35 குழுக்கள் செயற்பட்டுக் கொண்டிருந்தன (பின்னிணைப்பு 12). அவற்றின் செயற்பாடுகளின் தன்மையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றின் நடவடிக்கைகள் இப்பொழுது குடாநாட்டிலிருந்து கிழக்குக்கும் தெற்குக்கும் நகரத் தொடங்கின. தனித்த படைவீரர்கள் அல்லது பாதுகாப்புடன் செல்லும் படையணிகள் மீதான தாக்குதல்களுக்கு மேலதிகமாக இப்போது இராணுவ மற்றும் கடற்படை முகாம்கள் மீதும் திடீர்த் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ் மக்கள் குடியேற்றப்பட்ட பகுதிகளில் இராணுவம் மிலேச்சத்தனமாக அவர்களைக் கொலை செய்தது. இதற்குப் பதிலடியாக சிங்களக் குடியேற்றவாசிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கொலை செய்யப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாரிய அளவிலான ஆயுதக் கொள்வனவுகளையும் பயிற்சியையும் தொடர்ந்து போராளிகள் 'தரையிலிருந்து வானில் செலுத்தப்படும் ஏவுகணைகளையும் ரொக்கட் மூலம் உந்தப்படும் எறிகுண்டுகளையும் பயன்படுத்துவதிலும், இராணுவ வாகனங்களை வெடித்துத் தகர்க்கின்ற நிலக் கண்ணிவெடிகளைப் புதைப்பதிலும், கட்டடங்களைத் தகர்க்கின்ற தொலைக் கட்டுப்பாட்டுக் கருவிகளைப் பயன்படுத்துவதிலும், அரசாங்கப் படைகளுடன் நேருக்கு நேர் மோதுவதிலும் நல்ல தேர்ச்சியும் பயிற்சியும் பெற்றவர்களாயினர்' (மனோகரன், 1987: 168).

ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்த ஈபீஆர்எல்எஃப், ஈரோஸ் மற்றும் ரெலோ ஆகியவற்றின் தலைவர்கள் கலந்தாலோசித்து 1984ஆம் ஆண்டு ஏப்பிரலில் ஈழத் தேசிய விடுதலை முன்னணியை (Eelam National Liberation Front)[5] உருவாக்கினர். அதன் ஸ்தாபகர்கள் தத்தமது தனிவேறான அடையாளங்களைத் தொடர்ந்து பேணுகின்ற அதே வேளையில், இலங்கை ஆயுதப்படைகளுக்கெதிரான நடவடிக்கைகளில் ஒன்றிணைந்து செயற்படுவதென உடன்பட்டனர். 1985ஆம் ஆண்டு ஏப்பிரலில் 'எல்ரீரீஈ'யும் இம்முன்னணியுடன் இணைந்தது.[5] ஈஎன்எல்எஃப் இந்தியாவின் அழுத்தத்தின் பேரில் திம்பு பேச்சுவார்த்தைகளில் கூடப் பங்குபற்றியது. எனினும் வவுனியாவில் தமிழர் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பேச்சுவார்த்தையிலிருந்து வெளிநடப்புச் செய்தது. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியைப் பொறுத்தவரையில் தமிழ் அரசியலில் அது தனிமைப்படுத்தப்பட்ட சக்தியாக மாறிவிட்டது. அதன் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் தனி நாட்டுக்கான இலட்சியத்தைத் துறப்பதற்கு மறுத்ததைத் தொடர்ந்து 1983ஆம் ஆண்டு ஆகஸ்டில் அது தடை செய்யப்பட்டது (பின்னிணைப்பு 13). அதன் உறுப்பினர்களில் மூன்றுபேரைத் தவிர ஏனைய எல்லோரும் சென்னைக்குத் தப்பியோடினர். அது சர்வகட்சி மகாநாடு (All Party Conference) மற்றும் திம்புப் பேச்சுக்கள் போன்ற பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்தும் பங்குபற்றிய போதிலும் போராளிகளின் பாட்டுக்குத்தான் அவர்கள் தாளம் போட்டனரென்பது தெளிவாகப் புலப்பட்டது.





## சிவில் யுத்தம், மே 1986 – ஆகஸ்ட் 1987

ஈழத் தேசிய விடுதலை முன்னணி என்ற கூட்டமைப்பில் ஐக்கியம் என்பது நீடிக்காமையால் ஒருவரை ஒருவர் அழிக்கின்ற போட்டி ஆரம்பமாகியது. 1986ஆம் ஆண்டு மே மாதம் 'ரெலோ' இயக்கம் மீது 'எல்ரீரீஈ' யினர் பாரிய தாக்குதல் நடத்தியதுடன் அதனைத் தடை செய்வதாகவும் அவர்கள் அறிவித்தனர். அதேபோன்று 1986ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் சிங்களப் பொதுமக்களைக் கொலை செய்தமையையும் தமிழீழ விடுதலை இயக்கத்தினரைத் தாக்கி தடைசெய்தமையைக் கண்டித்ததற்காகவும், அத்துடன் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (Eelam People's Revolutionary Liberation Front) அரசியல் ரீதியாக மக்கள் மத்தியில் மிகவும் செல்வாக்கு பெற்று வளர்ந்து வந்த ஓர் அமைப்பாக விளங்கியதாலும், அதனையும் இல்லாதொழிக்க வேண்டும் என்பதற்காக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் மீதும் தாக்குதல் நடாத்தப்பட்டு அந்த அமைப்பும் தடைசெய்யப்பட்டது. இச்சம்பவத்தில் அந்த அமைப்பின் நூற்றுக்கணக்கான போராளிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் படுகொலை செய்யப்பட்டார்கள் (புலம் பெயர்ந்த பல EPRLF போராளிகளுடனான நேர்காணல் யூன் 2001).

ஆட்சியினர் தமிழ்ப் போராளிகளுடன் அவ்வப்போது பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டபோதிலும், இரு தரப்பினரின் விட்டுக்கொடுக்காத போக்கினால் அப்பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தன. அரசியல் தீர்வொன்றுக்கான இம்முயற்சிகள் எவ்வாறிருப்பினும், அரசாங்கம் இந்நெருக்கடிக்கு இராணுவத் தீர்வொன்றை நாடுகின்றதென்பது தெளிவாகத் தெரியத்தொடங்கியது. அது 'தேடுதலும் அழித்தலும்' என்ற இராணுவ நடவடிக்கை மூலம் ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கிழக்கிலிருந்து விரட்டியதன் பின்னர், வடக்கில் 'திடீர் நகர்வு நடவடிக்கை' என்றழைக்கப்பட்ட முழு வேகத்துடனான ஆக்கிரமிப்பு நடவடிக்கையைத் தொடங்கியது. போராளிக் குழுக்கள் உடன்பிறப்புகளைக் கொலைசெய்யும் யுத்தத்திலிருந்து அப்போதும் மீளாதிருந்ததனால், அரசாங்கத்துக்கு அது நல்ல வாய்ப்பான வேளையாயிருந்தது. எனினும் துரிதமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மீண்டும் தம்மை ஒருங்கிணைத்துக்கொண்ட எல்ரீரீஈ, ரெலோவிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களைப் பயன் படுத்திக் குடாநாட்டைப் பாதுகாக்கக்கூடுமாயிருந்தது.

வடக்கிலும் கிழக்கிலும் நிகழ்ந்த யுத்தம், இராணுவத் துக்கும் போராளிக் குழுக்களுக்குமிடையில் நெருங்கி மோதுகின்ற சண்டைகளாகத் தொடர்ந்த அதேவேளை யில், தென்பகுதியிலும் குண்டு வெடிப்புகள் மூலமாகத் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டன. கொழும்பில் மத்திய தந்தித் தொடர்பு அலுவலகம் (CTO), பேருந்து நிலையம், ஹோட்டல் ஒபரோய், சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் (எலிபன்ட் ஹவுஸ்) ஆகியவற்றிலும் திருகோணமலையில் சீமெந்துத் தொழிற்சாலையிலும் இடம்பெற்ற குண்டு வெடிப்புகள் தாக்குதல்களின் நவீன பாணியிலான வளர்ச் சியைக் காட்டின. அவை அரசின் அரசியல் ஸ்திரத் தன்மையையும் பொருளாதாரத்தையும் பலவீனப்படுத்து வதை நோக்கமாகக் கொண்டிருந்தன."

இக்காலப்பகுதியில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க ஒரு வளர்ச்சியின் விளைவாக, குறிப்பிட்ட சில 'பிரதேசங்கள்' 'விடுவிக்கப்பட்டு,' அவ்வாறு 'விடுவிக்கப்பட்ட பிரதேசங் களில்' இலங்கை அரசுக்கு இணையான நிருவாகங்கள் தாபிக்கப்பட்டன. 1983ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணத் தின் மீதான கட்டுப்பாட்டைக் கொழும்பு படிப்படியாக இழந்துவிட்டது. பொலிசாரும் ஏனைய அரசாங்க அதிகாரி களும் வெளியேறினர். சிவில் நிருவாகம் முழுமையாகத் தகர்ந்துபோனது (வெங்கட்ரமணி, 1987: 81).

கொழும்பின் பிரதிநிதிகளாக யாழ்ப்பாணத்தில் இருந்தவர்கள் அரசாங்க அதிபரின் தலைமையிலான நிர்வாகத்துறையும் ஆயுதப்படைகளும் மட்டும்தான். முன்னையதன் அதிகாரம் வலுக் குறைந்ததாக இருந்த அதேவேளையில், பின்னையது பெரும்பாலான நேரம் முழுவதும் முகாம்களில் முடக்கப்பட்டிருந்தது.

1987ஆம் ஆண்டு சனவரி 2ஆந் தேதியன்று, யாழ்ப் பாணத்தின் கட்டுப்பாட்டை மீண்டும் கைப்பற்றுவதற் கான ஒரு முயற்சியாக யாழ்ப்பாணத்தின்மீது எரிபொருள் மற்றும் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்ட அதே





சமயம், முழுவேகத்துடனான இராணுவ வலுத்தாக்குதலும் தொடக்கிவைக்கப்பட்டது. போராளிகளின் பதுங்கிடங்கள், ஆயுதக் களஞ்சியங்கள், வெடிபொருள் தொழிற்சாலைகள் என்பவற்றின்மீது மட்டும்தான் விமானக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதென அரசாங்கம் தெரிவித்தது (வெங்கட்ரமணி, 1987: 130). எனினும் இத்தாக்குதலின் விளைவாக 800 தமிழ்க் குடிமக்கள் கொல்லப்பட்டதுடன், யாழ்ப்பாணப் பொது வைத்தியசாலையும் குண்டுத்தாக்கு தலுக்கு இலக்கானது (வெங்கட்ரமணி, 1987: 131). அரசாங் கமும் போராளிகளும் தாக்குதல்களிலும் எதிர்த் தாக்குதல் களிலும் ஈடுபட்டிருந்தமையால் யாழ்ப்பாணம் சிவில் யுத்தத்தின் குவிமையமாகியது.

TELO, PLOTE, EPRLF போன்ற இயக்கங்களை LTTEயினர் தடை செய்து அவைகளின் நூற்றுக்கணக்கான போராளி களைக் கொன்றொழித்த காலகட்டத்தைப் பயன்படுத்திய சிறிலங்கா இராணுவம், 1987ஆம் ஆண்டு மே மாதத்தின் நடுப்பகுதியில் 'விடுதலை நடவடிக்கை' (Operation Liberation) என்ற பெயரில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது வடம ராட்சியில் ஓர் பாரிய தாக்குதலை மேற்கொண்டது. இராணுவ ஜெனரல் கொப்பேகடுவ தலைமையில் நடத்தப் பட்ட இத்தாக்குதலில் புலிகளுக்குப் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டன. இதனால் புலிகள் பல பகுதிகளிலிருந்து பின்னுக்குத் தள்ளப்பட்டனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாணக்குடா நாடு இலங்கை இராணுவத்திடம் வீழ்ச்சி அடையுமாக இருந்தால், தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாகவோ அன்றி இந்தியா வின் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாகவோ இலங்கை அரசுடன் பேரம் பேசி ஒரு தீர்விற்கு வரமுடியாது என்பதை உணர்ந்த இந்திய அரசு, மீன்பிடிப் படகுகளின் தொகுதி யொன்றில் உணவு நிவாரணங்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதன் மூலமும், பின்னர் உணவுப் பொருள்களை விமானங்களிலிருந்து போடுவதன் மூலமும் இதில் நேரிடை யாகத் தலையிட்டது.

1987ஆம் ஆண்டு யூலையில் இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் இந்திய-இலங்கை ஒப்பந்தம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கைச்சாத்திடப்பட்டது. போராளிகள் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட ஒரு தரப்பினராக இருக்கவில்லை. அவ்வொப்பந்தம் ஏனைய ஏற்பாடுகளுடன், அது கைச்சாத்திடப்பட்ட 48 மணித்தியாலங்களினுள் யுத்த நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படுவதற்கும், 72 மணித்தியாலங்களுக்குள் போராளிகளின் ஆயுதங்கள் களையப்படுவதற்கும் ஏற்பாடு செய்தது. இரு அரசுகளுக்கிடையிலான இவ்வொப்பந்தம் ஈழக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாத போதிலும், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்ற நிபந்தனையுடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு ஏற்பாடு செய்தது (புல்லியன், 1996: 120-22).

## இலங்கை முஸ்லிம்களும், இன முரண்பாடும்

தொடக்கக் காலத்தில், தமிழர் போர்முனைப்பின் சித்தாந்தவாதிகள் ஈழத்துக்கான அவர்களின் தேடல், முஸ்லிம்கள் உட்படத் தமிழ் பேசுகின்ற எல்லோர் சார்பானதுமென்று கூறினர். பொதுவாக முஸ்லிம்கள் தீவிரமாகிவந்த மோதலில் நடுநிலை வகிக்க முனைந்துவந்த போதிலும், விசேடமாகக் கிழக்கில், சிங்கள மற்றும் தமிழ்ச் சமூகங்கள் இரு துருவங்களாகப் பிளவுபட்டபோது தவிர்க்கமுடியாதவாறு அவற்றுக்கிடையில் சிக்கிக்கொண்டனர். இதனை ஒப்புக்கொள்ளும் வகையிலும், இலங்கையின் தேசிய விவகாரங்களில் முஸ்லிம்களின் நலன்களுக்காகக் குரலெழுப்பும் பொருட்டும் 'ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (Sri Lanka Muslim Congress)' என்னும் புதிய அரசியற் கட்சி 1980களில் தாபிக்கப்பட்டது.

1984-85இன் பின்னர், தமிழருக்கெதிரான முஸ்லிம்களின் மனக்குறைகள் ஏற்றம் பெறவும் தீவிரமடையவும் தொடங்கின. இக்காலப்பகுதிக்கு முன்னர் முஸ்லிம்களின் தனித்துவமான அடையாளத்தைத் தமிழர் மறுத்துவிட்டனரென்ற ஒரு பொதுவான குறை இருந்தது.

1985ஆம் ஆண்டு லலித் அதுலத் முதலி அவர்கள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த காலகட்டத்தில், 'ஸ்ரேலின் மொசாட்' என்ற உளவுப்பிரிவின் ஆலோசனைக்கிணங்க, தமிழ் முஸ்லிம் மக்களுக்கு இடையில் ஆழ்ந்த பிளவை உருவாக்கும் பொருட்டு தமிழ்-முஸ்லிம்





கலவரங்களை உருவாக்குவதற்கு முஸ்லிம் மக்கள் தூண்டிவிடப்பட்டனர். இதனால் பல தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டும், பல தமிழ்ப்பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டும் இந்துக் கோயில்கள் உடைக்கப்பட்டும் பாரிய கலவரம் ஒன்று அம்பாறையில் நடைபெற்று முடிவுற்றது.

இப்படியான கலவரங்களும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தோற்றமும் அதன் செயற்பாடுகளும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான முஸ்லிம் காங்கிரசின் அரசியல் நடவடிக்கைகளும் மற்றும் முஸ்லிம் ஊர்க்காவல் படையினரின் புலிகளுக்கு எதிரான வன்முறை நடவடிக்கைகளும் காலக்கிரமத்தில் ஓர் வன்முறை வட்டத்தை ஏற்படுத்தின.

1985இல், இத்தீவின் வடமேற்காயுள்ள மன்னாரில், ஒரு தொகையான இலங்கை முஸ்லிம்களைத் தமிழ்ப் போராளிகள் கொன்றனர். அவர்களின் பாதுகாப்பு இப்போது நேரடியாக அச்சுறுத்தப்பட்டதன் விளைவாக, முஸ்லிம் சமூகத்தினுள் அதிகரித்த போர்முனைப்பு தமிழ்-முஸ்லிம் மோதல்களின் அலையொன்றைத் தூண்டுவித்தது. 1990இல் காத்தான்குடிப் பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்த சுமார் 140 முஸ்லிம்கள் கொல்லப்பட்டமையும், வடக்கிலிருந்து அனைத்து முஸ்லிம்களும் துரத்தப்பட்டமையும் உட்பட, எல்ரீரீஈயின் தளராது தொடர்ந்த தாக்குதல்களை முஸ்லிம்கள் அனுபவித்தனர். புதுவேகத்துடன் நடத்தப்பட்ட இத்தாக்குதல்களைத் தொடர்ந்து போதிய பாதுகாப்பை வழங்க முடியாத அரசாங்கம், முஸ்லிம் ஊர்க்காவல் படையென்ற, ஆயுதமேந்திய சிவில் பாதுகாப்புப் படையொன்றை உருவாக்கியது. ஏற்கெனவே படிப்படியாக அதிகரித்துவந்த வன்முறைச் சுழற்சிக்கு இது வலுசேர்த்தது. முஸ்லிம் மற்றும் தமிழ்ப் பொதுமக்களுக்கெதிராக முறையே எல்ரீரீஈயாலும் ஊர்க்காவல் படையினாலும் நடத்தப்பட்ட பழிவாங்கற் கொலைகள் பற்றிய எண்ணற்ற அறிக்கைகள் வெளிவந்தன.

இருப்பினும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் தான் முஸ்லிம்களின் கலக்கமும் கவலைகளும் அதிகரித்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அளவில் தீவிரமடைந்தன. இலங்கை அரசாங்கமோ, இந்திய அரசாங்கமோ, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும்போது முஸ்லிம்களைக் கலந்தாலோசிக்கு வில்லையென்ற அவர்களின் மனக்குறை கருத்து வேறு பாட்டுக்கான ஒரு முக்கியக் காரணமாகியது. சனாதிபதி ஜயவர்தனவால் ராஜீவ் காந்தியுடன் செய்துகொள்ளப் பட்ட உடன்படிக்கையையும், இணைந்த வடக்கு-கிழக்குச் சபையொன்றை உருவாக்கிய பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தையும், பாரதூரமான ஓர் அரசியல் தவறென்று முஸ்லிம்கள் எண்ணினர். இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சபை முஸ்லிம்களின் எண்ணிக்கைச் செறிவைக் குறைப்பதனால் அது அவர்களுக்குப் பாதகமானதென அவர்கள் வாதிட்டனர்.

2001-2002 ஆம் ஆண்டுகளில் முஸ்லிம்களுக்கு இருந்த மிக மோசமான கவலை, அவர்களின் பாதுகாப்புப் பற்றியதும், எதிர்கால இடைக்கால நிருவாகமொன்றில் அவர்களின் நிலை பற்றியதுதாகும். எல்ரீரீஈ ஈழக் காவல்துறை, ஈழ நீதித்துறை மற்றும் வங்கிகள் என்பவற்றைத் தாபிப்பதன் ஊடாகக் கிழக்கு மாகாணத்தில் அதன் அதிகாரத்தைத் திடப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளதென அவர்கள் வாதிட்டனர்.

கடந்த சில ஆண்டுகளில் முஸ்லிம்-தமிழ் வன்முறை குறிப்பிடத்தக்களவு தணிந்துள்ள அதேவேளையில், முரண்பாட்டுக்கான தீர்வெதுவும் முஸ்லிம்களின், குறிப்பாகக் கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம்களின், அச்சங்களையும் நலன்களையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்பது இப்போது தெளிவாகியுள்ளது. இதனை, அதன் பாராளுமன்றப் பெரும்பான்மையைப் பேணுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசில் தங்கியிருந்த முன்னைய அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது. 1997ஆம் ஆண்டு ஒக்ரோபரில் வெளியிடப்பட்ட அதன் வரைவு அரசியலமைப்பு, தென்கிழக்கிலுள்ள அம்பாறை மாவட்டத்தில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட முஸ்லிம் ஆட்சிப் பிரதேச அலகொன்றை உருவாக்கக்கூடிய விவாதத்திற்குரிய ஏற்பாடுகளைக் கொண்டிருந்தது.

இக்கவலைகள் முஸ்லிம்களுக்குத் தனியான மாகாண சபையொன்றைக் கோருவதற்கு முஸ்லிம்களை நிர்ப்பந்தித்துள்ளன. மேற்கோளாக ரவூப் ஹக்கீம் அண்மையில் விடுத்த ஓர் அறிக்கையில், 'முஸ்லிம்களின் இறுதிக் கோரிக்கை வடக்கு-கிழக்கில் ஒரு தனியான சபை. முஸ்லிம்களுக்கு இரு மாகாணங்களிலுமுள்ள எல்லா முஸ்லிம் பிரதேசங்களையும் உள்ளடக்கிய நிலத் தொடர்ச்சியற்ற நிருவாக அலகொன்று வழங்கப்படவேண்டும்' என்று கூறியுள்ளார் (டெய்லி மிரர், 11 ஒக்ரோபர் 2002).





## அரசியல் முறைமையின்மீது போர்முனைப்பின் தாக்கம்

இலங்கை-இந்திய ஒப்பந்தம் தமிழர் போர்முனைப்பின் ஒரு கட்டத்தினது முடிவை மட்டும் குறித்ததேயன்றி முழுப் போர்முனைப்பின் முடிவையுமல்ல. இலங்கையில் போர்முனைப்பு அரசியல் முறைமையில் பரந்த செயல் விளைவுடைய தாக்கத்துடன் நாட்டைத் தொடர்ந்தும் உலுக்கிவந்துள்ளது.

போர்முனைப்பு, நாட்டைப் பிரித்து ஒரு சுதந்திரமான ஈழத்தைத் தாபிக்க முனைந்ததென்பதனால் ஓர் ஐக்கிய இலங்கையின் உயிர்ப்பையே அச்சுறுத்தியுள்ளது. எனவே அது இத்தீவின் ஆள்புல ஒருமைப்பாட்டிற்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கியுள்ளது.

இறுதியாகப் போர்முனைப்பானது அதிக நச்சுப் பகைமை மற்றும் பேரினவாத வடிவம் ஆகியவற்றைக் கொண்டதாக ஜே.வி.பீ. மீண்டும் வெளிப்படுவதற்கு வழி வகுத்தது. வடக்கில் எல்ரீரீஈயின் தமிழ்த் தேசிய அதீத வாதத்திற்குப் போட்டியாகத் தெற்கில் சிங்களத் தேசிய அதீதவாதம் அணிதிரளும் மையமாக ஜே.வி.பீ. எழுந்தது. எனவே தமிழர் போர்முனைப்பு என்ற போராளிக் குழு மற்றும் அதற்கு எதிராகப் போட்டிபோட்டுக்கொண்டு கிளர்ச்சியில் ஈடுபடுகின்ற ஜே.வி.பீ.-யினர் ஆகிய இரு தரப்பினரையும் ஆட்சி எதிர்கொள்ளவேண்டி இருந்தது.

தமிழர் போர்முனைப்பின் பரிணாமமும் வளர்ச்சியும் குறித்த மேற்படி ஆய்விலிருந்து போர்முனைப்பானது, அடுத்தடுத்து வந்த ஆட்சிகளின் பாரபட்சமான கொள்கைகளுக்கும், தமிழர் மனக்குறைகளில் கவனஞ்செலுத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வதற்கு அரசுகளின் மறுப்புக்கும், தமிழரின் குறைந்தபட்சக் கோரிக்கைகளைக்கூட மிதவாதிகள் உறுதிப்படுத்தத் தவறியதற்கும் பதிலளிப்பாக எழுந்ததென்பது தெளிவு. 1950களின் நடுப்பகுதியிலிருந்து அதிருப்தி வளர்ந்து வந்துள்ளபோதிலும், 1970களின் தொடக்க நிகழ்வுகள் தான் போர்முனைப்பைத் தூண்டிவிட்டன. அரசாங்கத்தின் கல்விக் கொள்கைகளுக்கு எதிராகத் தமிழ் இளைஞர்கள் கொதித்தெழுந்தனர். அதுவே தமிழரின் போர்முனைப் பென்ற பெருந்தீயை மூட்டுவதற்குச் சிறிய பொறியாக விளங்கியது.

தொடக்கத்தில் தமிழர் இயக்கத்தில் போர்முனைப் பிற்கான அரும்புகள் புலப்பட்டபோதிலும், அது கோரிக் கையில் மிதமானதாக இருந்ததுடன், அதன் உத்திகளும் தொடர்ந்தும் மிதமானவையாகவே இருந்தன. இக்கட்டத் தில் மிதவாத தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக்கும் போராளிகளின் தலைமறைவு இயக்கத்திற்கும் இடையில் ஒருவகை நட்புரீதியான தொடர்பு நிலவியது - இரண்டும் ஈழத்தைத் தாபிக்கும் நோக்குடையனவாக இருந்த போதிலும் அவற்றின் முறைகள் வேறுபட்டன.[7] எனினும் 1979இல் மிதவாதிகளுக்கும் போராளிகளுக்குமிடையில் ஒரு பகிரங்க முறிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து, அன்றி லிருந்து போராளிகளின் துவக்குகள் மிதவாதிகளையும் குறிவைத்தன.

1980களில் மிதவாதிகளை ஒதுக்கித்தள்ளியவாறு போராளிகள் படிப்படியாக மென்மேலும் பலம் பொருந்தி யவர்களாயினர். மக்கள் ஆதரவும் ஆயுத பலமும் அதிகரித்தமை போராளி இயக்கங்களைப் பலப்படுத்திய அதேவேளையில் போட்டிகளும் சகோதரப் படுகொலை களும் அவற்றைப் பிளவுபடுத்தி நலிவுறச்செய்தன. தனது ஆளுமையைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதற் காக ஏனைய இயக்கங்களைத் தாக்கித் தடைசெய்த எல்ரீரீஈ பலம்பொருந்திய அமைப்பாக வெளிப்பட்டது. 1980களில் கெரில்லா யுத்தப்போக்கே பிரபலமானதா யிருந்தது. 1986 தொடக்கம் போர்முனைப்பானது பெரு மளவுக்கு எல்ரீரீஈயின் தலைமையின்கீழ், ஒரு சிவில் யுத்தத்தின் பரிமாணங்களைப் பெற்றது.





போர்முனைப்பு முறைகள் மேலோங்கியிருந்தமை, ஈழத்தைத் தாபிப்பதற்கான ஆயுதப் போராட்டத்திற்குக் குறிப்பிடத்தக்களவு ஆதரவு இருந்ததென்பதைக் காட்டு கின்றது. இவ்விடயத்தில் ஒருமித்த கருத்துக்களின் செறிவு காணப்பட்டது. எனினும் போராளி இயக்கத்தின் உள் முரண்பாடுகள், போராட்ட அணுகுமுறை தொடர்பில் வேறுபாடுகள் இருந்துள்ளதை வெளிப்படுத்தியது. பிரதான குழுக்களைப் பற்றிய ஒரு பகுப்பாய்வை - பல்வேறு விடயங்களில் அவற்றிற்கிடையே நிலவிய ஒற்றுமைகளை யும் வேற்றுமைகளையும் குறித்த ஒரு பகுப்பாய்வை மேற் கொள்வதற்குப் பின்வரும் பகுதி முயற்சிக்கிறது.

## போராளிக் குழுக்கள் : சித்தாந்தம், கட்டமைப்பு மற்றும் இலக்குகள்

1985ஆம் ஆண்டின் மதிப்பீடுகளின்படி (மத்தியுஸ், 1986: 34) இலங்கையில் ஆயுதப் போராட்டத்தினூடாகத் தமிழர் ஆதிக்கப் பிரதேசங்களில் தனியரசொன்றைத் தாபிக்கும் குறிக்கோளுடன் ஏறக்குறைய முப்பத்தைந்து போராளிக் குழுக்கள் (பின்னிணைப்பு 12) இயங்கிக்கொண் டிருந்தன. அவற்றில் ஐந்து குழுக்கள் மட்டுமே பிரதான குழுக்களாக ஒப்புக்கொள்ளப்படக்கூடியவை. அவையாவன:

1. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (LTTE)
2. தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE)
3. தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO)
4. ஈழப் புரட்சிகர இயக்கத்தினர் (EROS)
5. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)

இவையெல்லாம் தமிழில் பெருந்தொகையான பிரச் சார இலக்கியங்களை வெளியிட்டுள்ளன. அவை அவற்றின் சித்தாந்தம், இலக்குகள் மற்றும் நடவடிக்கைகள் பற்றிய ஒரு நுழைபுலத்தை எமக்களிக்கின்றன. அவை - தேசிய வாதம், மார்க்ஸியவாதம் மற்றும் இரண்டும் இணைந்தது என்று - வேறுபடுகின்ற சிந்தாந்தச் சாயல்களையும் கொண் டிருக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த இயக்கங்களின் தோற்றுமூலங்களின் சுவட்டை 1970களின் தொடக்கத்திலிருந்த தமிழ் மாணவர் பேரவையிலும் தமிழ் இளைஞர் பேரவையிலும் காணலாம். இப் பிரதான ஐந்து குழுக்களில் எல்ரீரீஈ தான் மிகவும் பலம் பொருந்தியது, மிகவும் கொடியது, அத்துடன் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் பிரசித்திபெற்ற ஆதரவுடன் மிகச் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்டது.

பின்வரும் பகுதியில் நான் எல்ரீரீஈயை மட்டும் ஆராய்கின்றேன். ஏனெனில் இலங்கையில் செயற்படுகின்ற தமிழ்ப் போராளிக் குழுக்கள் எல்லாவற்றிலும் அதுவே மிகவும் முக்கியமானதாக இருந்துவந்துள்ளது.

## தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்ரீரீஈ)

### தோற்றம்

தமிழர் போர்முனைப்பு 1983இல் தொடங்கியதுமல்ல, அது இந்தியாவால் உருவாக்கப்பட்டதுமல்ல. 1983ஆம் ஆண்டு கலவரங்களின்போது தமிழ்ப் போராளிகளின் இயக்கம் ஏறக்குறைய ஒரு தசாப்தகாலம் நீடித்ததாயிருந்தது. தமிழ்ப் போராளிகளால் அரசாங்க அதிகாரிகள், பொலிஸ்காரர் மற்றும் பிற இலக்குகள் மீதான முதலாவது தாக்குதல்கள் 1970களின் தொடக்கத்திலேயே அறிக்கையிடப்படத் தொடங்கின (சாஸ்திரி 1990: 56 - 77). யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைச் சேர்ந்த பிரபல கிரிமினலான செட்டி என்றழைக்கப்படும் தனபாலசிங்கம் மக்கோணாவிலிருந்து அனுராதபுரம்வரையிலான சிறைச்சாலைகளில் பல வருடங்களைக் கழித்திருந்த வேளையில் சிறையிலிருந்து தப்பினார். அவர் 1974இல் அரசாங்க ஆதரவுத் தமிழர்களையும், பொலிசுக்குத் தகவல் கொடுப்பவர்களையும் ஒழித்துக்கட்டுவதற்கும், வங்கிகளையும் ஏனைய அரசாங்க மற்றும் தனியார் வர்த்தக நிறுவனங்களைக் கொள்ளையடிப்பதற்கும் அரசியல் நோக்கங் கொண்ட இளைஞர் குழுவொன்றுக்குத் தலைமைதாங்கினார். ஒரு பாரம்பரியத் தமிழ் அரசியல்வாதியான ஏ. இராஜரட்ணத்தால் தூண்டப்பட்டு அவர்கள் தமிழ்ப் புதுப் புலிகளை (TNT) உருவாக்கினர்.





செட்டி மீண்டும் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, குட்டிமணியுடனும் தங்கதுரையுடனும் முன்னர் இணைந்திருந்த பிரபாகரன் ரீ.என்.ரீயின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். 'ரீஎன்ரீ'யின் பெரும்பாலான உறுப்பினர்களும் வல்வெட்டித்துறையைச் (பிரபாகரனின் பிறப்பிடம்) சார்ந்தவர்களே. பின்னர் செட்டி விடுதலையாகி வந்தபோது படுகொலை செய்யப்பட்டார். ரீஎன்ரீ தான் மூர்க்கமான வன்முறையில் ஈடுபட்ட முதலாவது போராளிக்குழு. அவர்கள் அனேக தமிழ்ப் பொலிஸ்காரர்களைக் கொன்று அவர்களின் ஆயுதங்களைக் கைப்பற்றியதுடன், வங்கிகளிலும் தனியார் அடகுக்கடை முதலாளிகளிடமும் அரசாங்க மற்றும் தனியார் வர்த்தக நிறுவனங்களிலும் இடம்பெற்ற அனேகக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டிருந்தனர்.

ரீஎன்ரீ குழுவினர் ஓர் ஆயுதந்தாங்கிய கெரில்லாப் படையாக வளர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து, 1976இல் தமக்கு எல்ரீரீஈ என மறுபெயரிட்டுக்கொண்டனர். அது, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியால் ஒரு 'துரோகி' என்று நாமம் சூட்டப்பட்டவரும், யாழ்ப்பாணத்தின் தமிழ் மேயருமான அல்பிரட் துரையப்பாவின் கொலையைத் தொடர்ந்து பிரபலமடைந்தது. எனினும் 1975இல்தான் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO), ஈழப் புரட்சி அமைப்பாளர்கள் (EROS) ஆகிய பல்வேறு போராளி இயக்கங்கள் அதிகாரபூர்வமாக உருவாக்கப்பட்டன.

எல்ரீரீஈ தனது ஆரம்பகாலத்தில் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கையுடையவர்களும், அடக்குமுறையை எதிர்த்துப் போராடத் தயாராயுள்ளவர்களும், தமது இறுதி இலக்காக சமதர்மத் 'தமிழ் ஈழத்தை' ஏற்றுக்கொண்டவர்களுமான இளைஞர்களைக் கவர்ந்தது. இக் காலப்பகுதியில் எல்ரீரீஈயின் நடவடிக்கைகள் பிரதானமாக அரச உளவாளிகளின் வலையமைப்புக்கும் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதன்மூலம் 'தமிழர் இலட்சியத்தைக் காட்டிக்கொடுத்த' தமிழருக்கும் எதிராக ஏவப்பட்டன.

1978இல் போராளிகள் இரத்மலானை விமான நிலையத்தில் அவ்ரோ விமானமொன்றை வெடி வைத்துத் தகர்த்ததுடன் பொலிஸ் அலுவலர் குழுவொன்றையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொலை செய்தனர். 1983ஆம் ஆண்டு யூலைக்கிடையில் எல்ரீரீஈ இராணுவ ரோந்துப் படையொன்றை நிலக் கண்ணி வெடிகளையும் எறிகுண்டுகளையும் தன்னியக்க ஆயுதங்களையும் பயன்படுத்திப் பதுங்கியிருந்து தாக்கி யழிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தது. இவையெல்லாம் இந்திய அரசாங்கம் போராளிகளுக்குப் பயிற்சியளிக்கத் தொடங்குவதற்குப் பெரிதும் முந்தியவை.

இந்தியா இதுவரை தலையிட்டிராதபோதிலும், போராளிகள் வெளிநாடுகளில் பயிற்சிபெறத் தொடங்கி யிருந்தனர். இலண்டனிலிருந்த ஈரோஸ் தலைமைத்துவம் பிரித்தானியாவின் பீஎல்ஓ பிரதிநிதியாயிருந்த சையத் ஹமாமியுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டது. அவ ரால் பின்னர் ஈரோஸ் போராளிகளுக்கு லெபனானில் பயிற்சிக்கு ஒழுங்குசெய்யப்பட்டது. 1976ஆம் ஆண்டு மேயில் ஈரோஸ் செயலாளர் நாயகம் ஈ. இரத்தினசபாபதி பெய்ரூத்துக்குச் சென்று வந்ததன் பின்னர் பெரிதும் அஞ்சப்படும் பீஎல்ஓ தலைவர் அபு ஜிகாத்துடன் (இவர் பின்னர் இஸ்ரேலியரால் கொல்லப்பட்டார்) தொடர் பேற்படுத்தப்பட்டது. 1976ஆம் ஆண்டின் பிற்பகுதியில் முதலாவது (ஈரோஸ்) தமிழ்ப் போராளிகள் குழு லெபனானில் பயிற்சியை முடித்திருந்தது. 1977இல் ஈரோஸ் லெபனானில் உள்ள பீஎல்ஓ முகாமில் பயிற்சிக்காகச் சில எல்ரீரீஈ உறுப்பினர்களைச் சேர்த்துக்கொண்டது. அத்தகைய எல்ரீரீஈ உறுப்பினர்களில் ஒருவர் பின்னர் புளொட்டின் தலைவராகினார். எல்ரீரீஈ போராளிகளை லெபனானில் பயிற்சி பெறுவதற்கு ஒழுங்கு செய்வதில் ரத்னசபாபதியின் நோக்கம் பின்னர் அவர்களை ஈரோசி னுள் உள்ளீர்த்துக்கொள்ளலாமென்பதாக இருந்தபோதி லும் அத்திட்டம் தோல்விகண்டது.

1983ஆம் ஆண்டு யூலை கலவரங்களின் பின்னர், போராளிகளுக்குக் கிடைத்த பயற்சியினதும் ஆயுதங் களினதும் விளைவாக அக்குழுக்களில் பயிற்றப்பட்ட போராளிகளின் எண்ணிக்கை பாரிய அளவில் அதிகரித் தது. இந்தியா பயிற்சியளிக்கத் தொடங்குகின்றதெனத் தெரியவந்த போது பல்வேறு இயக்கங்களிலும் இணைந்து





கொள்ள முன்வந்த இளைஞர்களின் எண்ணிக்கை பொங்கியெழுந்தது. ரெலோகுழுவினர்தான் அப்பயிற்சியை ஒழுங்குசெய்த இந்தியப் புலனாய்வுச் சேவைகளின் கவனத்தை முதலில் ஈர்த்தனர் (சந்திரகாசனுடன் நேர் காணல், 13 ஏப்பிரல் 2001). எனினும் தாம் விடுபட்டுவிடக் கூடாதென்ற ஆவல்கொண்ட எல்ரீரீஈ இந்திய ஏஜன்சீக் களுடன் தொடர்புகொண்டது. முதல் தொடர்பின் பின்னர், எல்ரீரீஈ போராளிகளின் ஒரு சிறு குழு உத்தரப் பிரதேசத்தில் பயிற்சிக்காகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இக்குழு பின்னர் தமிழ் நாட்டிலிருந்த முகாம்களில் வேறு எல்ரீரீஈ போராளிகளுக்குப் பயிற்சியளிப்பதற்குப் பயன் படுத்தப் பட்டது. தவிர்க்கமுடியாதவாறு இதுவே ஏனைய பிரதானப் போராளிக் குழுக்கள் எல்லாவற்றிற்கும் பயிற்சி யளிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பாணியாயிருந்தது (திருநேசன் அல்லது சங்கருடனான நேர்காணல், 14 ஏப்பிரல் 2001).

தொடக்கப் பயிற்சியோடு இந்தியாவுக்கும் எல்ரீரீ ஈக்கும் இடையில் அதிருப்திக்கான விதைகளும் முளைக்கத் தொடங்கின. பிரபாகரனின் குறிக்கோள் எல்ரீரீஈயைத் தலையாய போராளி இயக்கமாக்கவேண்டுமென்பதாக இருந்ததனால், அதனைச் சாதிப்பதற்கு அவர் இந்தியாவின் உதவியை எதிர்பார்த்தார். எல்ரீரீஈ தம்முடன் மட்டும் இந்தியா தொடர்பை வைத்திருக்கவேண்டுமென்று விரும் பியதுடன் அதற்குப் பதிலாக இந்தியா நம்பியிருக்கக்கூடிய ஒரு நண்பராகத் தம்மை ஒப்படைக்கவும் முன்வந்தது. எனினும் இந்திய அரசாங்கம் 1986ஆம் ஆண்டுவரையிலும் எல்ரீரீஈயை ஏனைய குழுக்களில் ஒன்றாக மட்டுமே நடத் தியது. அதன் நாட்டமுள்ள குழு ரெலோவாகத் தோன்றி யமை எல்ரீரீஈக்கு உறுத்தலாயிருந்தது. “எம்மெல்லோருக் கும் கொடுத்ததைவிடக் கூடிய ஆயுதங்கள் ரெலோவுக்குக் கிடைத்தன - அவர்களுக்கு ‘றோ’வுடன் நெருக்கமான தொடர்புகள் இருந்தன. நாம் யாழ்ப்பாணத்தில் தலையாய குழுவாகிக்கொண்டு வந்தோம். இந்தியா ஏனையவற்று டன் எம்மைச் சமநிலைக்குக் கொண்டுவர முயற்சித்தது” என்று பேச்சாளரான பாலசிங்கம் 1991இல் பிபிசி உலகச் சேவையுடனான ஒரு நேர்காணலில் கூறினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எல்ரீரீஈ மட்டுமே மிகவும் தீவிரமான இராணுவப் படைப்பிரிவாக உள்ளதுடன் அவ்வாறே இருந்தும் வந்துள்ளது. 1970களில் அங்கொன்றும் இங்கொன்றுமான வன்முறைச் செயல்களுடன் தொடங்கி, 1980களில் இராணுவத்தின்மீதும் பொலிசின்மீதும் முழு அளவிலான தாக்குதல்களை நடத்துமளவுக்கு வளர்ச்சிகண்ட எல்ரீரீஈ தவிர்க்கமுடியாதவாறு அரசியலைவிட இராணுவ நோக்கங்களுக்கு முன்னுரிமையளிக்கின்ற ஓர் இயக்கமாக விளங்கியது. எல்ரீரீஈ தொடக்கத்தில், வெறுமனே வடமராட்சியுடன்[8] மிக நெருங்கியதாக இனங்காணப்பட்டதனாலும் சாதியில் குறிப்பாக கரையர் (மீன்பிடி) சமூகத்திற்குரியதென[9] எண்ணப்பட்டதனாலும் பல தடங்கல்களுக்குள்ளாகியது. பின்னைய கருத்து இப்போது உண்மையற்றதென்பதுடன் தொடக்கக் கட்டத்திலிருந்து கொண்டு வரப்படுவதுமாகும். அது ஆழமான சித்தாந்தத்தின் அல்லது கல்வியின் மூலமாகவல்லாது போராட்டத்தின் ஊடான முற்போக்கு இயக்கத்தின் அடையாளமாயுமுள்ளது. அவ்வப்போது பாலசிங்கத்தின் மார்க்ஸிஸ அல்லது சோசலிசப் பாங்கான வெற்றாரவாரப் பேச்சைவிடப் பிரபாகரனதும் அவரது உள்வட்டத்தினரதும் அமைப்பு ரீதியான கட்டுப்பாடு இறுக்கமானது.

எல்ரீரீஈ படிப்படியாக யாழ்ப்பாணத்தில் மிகவும் பலம் வாய்ந்த ஒரு அமைப்பாகத் தோற்றம் பெற்றது. ஏனைய குழுக்களைப் போன்றல்லாது எல்ரீரீஈ போராளிகள் தேசியவாதிகளாகவும், குறிக்கோளைச் சாதிக்கும் செயல் தூண்டுதல் கொண்டவர்களாகவும் இருந்தனர். எடுத்துக்காட்டாக, ஆணாயினும் பெண்ணாயினும், ஒவ்வொரு எல்ரீரீஈ போராளியும் பிடிபடப்போகின்ற தருணத்தில் விழுங்கிவிடுவதற்குப் பொட்டாசியம் சயனைட் குப்பியொன்றை அணிந்திருக்கவேண்டியது அந்த அமைப்பினல் கட்டாயமாக்கப்பட்டது.

### எல்ரீரீஈயின் கொள்கை

எல்ரீரீஈயின் கொள்கையானது இலங்கையில் தமிழ் மக்களுக்குரிய சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்காக உருவாக்கப்பட்டதெனக் கூறப்பட்டது. அது கூறுவதாவது:





> எல்ரீரீஈயின் கொள்கை தெளிவாக வரையறுக்கப்பட்ட அரசியல் நிகழ்ச்சித்திட்டமொன்றை அடிப்படையாகக் கொண்டது. இந்த அரசியல் நிகழ்ச்சித்திட்டம் தமிழ் மக்களுக்குச் சுய நிர்ணய உரிமையை ஈட்டும் குறிக்கோளைக் கொண்டது. சுய நிர்ணயத்துக்கான உரிமைதான் அரசியல் சுதந்திரத்துக்கான தமிழர் போராட்டத்துக்கு அடிப்படையாயுள்ள மூலாதாரக் கோட்பாடு. தமிழர் ஒரு மக்கள் கூட்டம் அல்லது ஒரு தேசிய இனமாக அமைகின்றனரென்றும், அவர்களுக்கு ஒரு தாயகம் உள்ளதென்றும், அது வரலாற்று ரீதியாகத் தமிழரின் உறைவிடமாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தழுவிய, நன்கு வரையறுக்கப்பட்ட, இடையறாத் தொடர்ச்சியுள்ள ஆட்சிப் பிரதேசமாக அமைகின்றதென்றும் கொள்கின்ற நிலைப்பாட்டில் எல்ரீரீஈ உறுதியாயுள்ளது. தமிழருக்கு ஒரு தாயகமும் தெளிவாக வேறுபட்ட ஒரு மொழியும், கலாச்சாரமும், ஒரு தனித்துவமான பொருளாதார வாழ்க்கையும், மூவாயிரம் ஆண்டுகளுக்குமேல் நீடிக்கின்ற ஒரு வரலாறும் உள்ளதனால், அவர்கள் ஒரு தேசிய இனத்துக்குரிய அல்லது ஒரு மக்களுக்குரிய எல்லாப் பண்புகளையும் கொண்டுள்ளனர். ஒரு மக்களென்ற வகையில் பராதீனப்படுத்த முடியாத சுயநிர்ணய உரிமை அவர்களுக்குள்ளது. இவ்வுரிமை தமது சொந்த அரசியல் அந்தஸ்தைத் தீர்மானிப்பதற்கான ஒரு தேசிய இன மக்களின் சுதந்திரத்தை இன்றியமையாததாக்குகின்றது. தமிழ் மக்கள் 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் சுயநிர்ணய உரிமையின் பாதுகாப்பை வேண்டியுள்ளனரென்றும், அரசியல் சுதந்திரத்துக்கும் அரச அந்தஸ்துக்கும் போராடத் தெரிவுசெய்துள்ளனரென்றும் எல்ரீரீஈ கருதுகின்றது. எல்ரீரீஈயின் தேசிய விடுதலைப் போராட்டம் சுயநிர்ணயத்திற்கான மக்களின் ஆணையை அடிப்படையாகக் கொண்டது (எல்ரீரீஈ, 6 யூன் 1999: 3 - 4).

அது மேலும் கூறுவதாவது:

> தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் சுதந்திரத்துக்காகப் போராடுகின்ற எல்ரீரீஈயின் கொள்கை, அந்த அமைப்பு தன்னிச்சையாக எடுத்த ஒரு தீர்மானமல்ல. மாறாக அது தமிழ் மக்களின் கூட்டுவிருப்பத்தினதும் அபிலாசையினதும் வெளிப்பாடும் முன்வைப்பும் ஆகும். பல தசாப்த காலச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

> சிங்கள ஆதிக்கமும், அடக்குமுறையும், தமிழ் மக்கள் சனநாயகச் செயல்முறையொன்றின் ஊடாகத் தமது சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிப்பதற்கு அவர்களைத் தூண்டியது. இச்சுயநிர்ணய உரிமையானது சர்வ தேசச் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் அடிப்படை யான மனித உரிமை. ஐ.நா. சாசனத்தின் சர்வதேச சம வாயங்கள் சுயநிர்ணயக் கோட்பாட்டைப் பின்வருமாறு தெளிவுபடக் கூறுகின்றன: 'எல்லா மக்களுக்கும் சுய நிர்ணய உரிமையுண்டு. அவ்வுரிமையின் திறத்தின் காரணமாக அவர்கள் தமது அரசியல் அந்தஸ்தைச் சுதந்திரமாகத் தீர்மானிப்பதுடன் தமது பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார அபிவிருத்தியையும் சுதந்திரமாகத் தொடர்கின்றனர்.' சுயநிர்ணயம் பற்றிய வினா மீதான ஒரு மக்கள் தீர்ப்பென்ற பண்பைப் பெற்ற 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், தமிழ்த் தேசிய இனம் பிரிந்துசென்று, அதன் தாயகத்தில் அதன் இறைமையை நிலைநாட்டுவதன்மூலம் அதன் அரசியல் அந்தஸ்தைத் தீர்மானிக்க முடிவுசெய்தது. 'சமாதான வழிகளில் அல்லது நேரடி நடவடிக்கைமூலம் அல்லது போராட்டத்தின்மூலம்' ஒரு சுதந்திரமான அரசை உருவாக்குவதற்குப் போராடுமென உறுதியளித்ததும், அதற்கான தெளிவான ஆணையை மக்களிடமிருந்து பெற்றுக்கொண்டதுமான தமிழ்ப் பாராளுமன்ற அரசியற் கட்சியான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி அக்குறிக் கோளை அடைவதற்குப் போராளிகளை அழைத்தது. எனினும் தமிழ் மக்களின் விருப்பையும் தேசிய அபிலாசை யையும் ஆதரிக்கின்ற எல்ரீரீஈ சுயநிர்ணயத்திற்கான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த உறுதிபூண்டுள்ளது (எல்ரீரீஈ, 6 யூன் 1999: 4)

## எல்ரீரீஈயின் ஆரம்பகாலச் சித்தாந்தம்

மக்கள் ஆதரவுடனான மார்க்ஸிய லெனினிய புரட்சி கர சித்தாந்தத்தின் அடிப்படையில் ஒரு ஆயுதப் போராட் டத்தைத் தொடர்ந்து நடத்துவது என்பது புலிகளின் சித்தாந்தமாக இருந்ததை அவர்களின் வெளியீடுகளில் காணக்கூடியதாக இருந்தது. வெகுசனத்தின் ஆதரவுடன் தளராது தொடரப்படும் ஓர் ஆயுதப்போராட்டத்தில் அது





நம்பிக்கை வைத்துள்ளது. 1980களில் எல்ரீரீஈயினரால் வெளியிடப்பட்ட ஒரு தத்துவார்த்தப் பத்திரிகையில், தமிழ் மக்களுடைய தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான சித்தாந்தம் தொடர்பாகவும் அதனுடைய மூலோபாயம் தொடர்பாகவும் விளக்கியிருந்தனர் (எல்ரீரீஈ, 1980: 41). இப்பத்திரிகை தமிழர் விடுதலைப் போராட்டத்தின் போது முன்னெடுத்துச் செல்லவிருந்த தேசியப் போராட்டத் தினதும் வர்க்கப் போராட்டத்தினதும் மார்க்சிய-லெனினிய ஆய்வாக விளங்கியது.

தேசியப் பிரச்சினைமீது லெனினின் மூலபாடங்களை அடிப்படையாகக்கொண்டு வாதிட்ட எல்ரீரீஈயின் அதிகார பூர்வக் கோட்பாட்டியலாளரான ஏ.எஸ்.பாலசிங்கம், சுயநிர்ணய உரிமை தொடர்பில் லெனினின் நிலைப்பாடு பற்றி இலங்கையின் இடதுசாரித் தலைவர்கள் வழங்கிய தவறான பொருள்விளக்கத்தைக் கண்டித்தார். இந்த இடதுசாரித் தலைவர்கள் ஒரு தேசிய இனமாகத் தமிழ ருக்குச் சுயநிர்ணய உரிமை உள்ளதெனப் பிரகடனப்படுத் தினர். எனினும் அது பிரிந்து செல்வதற்கான உரிமையைக் குறிக்கவில்லையென்று அவர்கள் வாதிட்டனர். லெனினின் பின்வரும் கருத்துரைகளை எடுத்துக்கூறிய பாலசிங்கம், பிரிந்துசெல்லுதல் உட்படச் சுயநிர்ணய உரிமை தமிழ ருக்கு உள்ளதென வாதிட்டார்:

> சட்ட வரைவிலக்கணங்களைக்கொண்டு முடிவு செய் யாமல் அல்லது கருத்தியலான வரைவிலக்கணங்களை உருவாக்காமல், அதற்கு மாறாகத் தேசிய இயக்கத்தின் வரலாற்று-பொருளாதார நிலைமைகளை ஆராய்ந்து பார்ப்பதன்மூலம் தேசிய இனங்களின் சுயநிர்ணயத்தின் பொருளை நாம் விளங்கிக்கொள்ளலாம். தேசிய இனங் களின் சுயநிர்ணயம் என்பது அந்நியத் தேசிய அமைப்பு களிலிருந்து தேசிய இனங்கள் அரசியல் ரீதியாகப் பிரிந்து செல்வதும், சுதந்திரமான தேசிய அரசொன்றை உரு வாக்குதலுமென்பதுதான் அதன் கருத்து என்ற முடிவுக்கு நாம் வருதல் தவிர்க்கமுடியாதது (எல்ரீரீஈ,1980: 42).

கடந்த காலத்தில் சிங்கள, தமிழ் பாட்டாளி வர்க்கத்துக் கிடையில் ஒற்றுமையை உருவாக்கும் முயற்சிகள் வெற்றி யளிக்கவில்லையென்றும், எனவே தமிழ் முற்போக்குச்

www.tamilarangam.net



சக்திகள் தேசிய அடக்குமுறைக்கு எதிராகத் தாமாகவே போராட வேண்டுமென்றும் பாலசிங்கம் சுட்டிக்காட்டினார்.

### எல்ரீரீஈயின் இணங்கிப்போகாத சித்தாந்தம்

யார் ஆட்சிக்கு வந்தபோதிலும் இலங்கையில் சமாதானத்துக்கான வாய்ப்பு எதுவுமில்லை. இரு தேசங்களுக்கிடையிலான ஒரு யுத்தமே தற்போது இலங்கையில் நடைபெறுகிறது. எல்ரீரீஈ ஒற்றைக் கட்சிச் (Single Party) சமதர்ம ஈழமொன்றை உருவாக்குகின்ற நோக்குடன் இலங்கை அரசுக்கெதிரான அதன் போராட்டத்தைத் தொடங்கியது. இன்று அது தமிழ்மக்களின் இராணுவமாகப் பரிமாணம் அடைந்துள்ளது. இதுவரை எல்ரீரீஈ தமிழ் ஈழமென்ற அதன் இறுதி இலக்கை விட்டுக் கொடுக்கவில்லை.[10] எனவேதான் இலங்கையின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அல்லது இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் தொடங்கப்பட்ட பேச்சுவார்த்தை களுக்கான முனைப்புகள் அனைத்தும் தோல்வியடையுமென்பது தெளிவு. கடந்த கால வரலாற்றின்படி எல்ரீரீஈ எவ்வகையிலேனும் பேச்சுவார்த்தைக்குச் சம்மதித்திருக்குமாயின் அது தனது பலத்தை மீட்டுக்கொள்வதற்கான ஒரு பதில் நடவடிக்கையாக மட்டுமே இருந்து வந்துள்ளது.

எல்ரீரீஈயிடம் ஏற்பட்டுள்ள மாற்றம்தான் இதற்குக் காரணம். தொடக்கத்தில் அது தனது போராட்டத்தை மார்க்சிய நோக்கில் கண்டது. எல்ரீரீஈயின் ஆலோசகர் ஆன்டன் பாலசிங்கம் அதன் போராட்டத்தை வரையறை செய்வதற்கு மார்க்சியக் கோட்பாடுகளைப் பயன்படுத்தினார். எனவே அதன் ஆரம்பகால இலக்கியம் ஆளும் வர்க்கங்களுக்கெதிரான போராட்டத்தை வலியுறுத்தியதேயன்றிச் சிங்களவர்களுக்கு எதிரானதையல்ல.

இன்று கொள்கை வெறிகொண்ட ஒரு தமிழ்த் தேசியவாதியான பிரபாகரன் முழுமையானதும் பூரணமானதுமான வெற்றிக்கான ஒரு வேட்டையென எல்ரீரீஈயின் உபாயத்தை வரையறை செய்துள்ளார். எல்ரீரீஈயின் சித்தாந்தமும் உத்திகளும் இதனையே பிரதிபலிக்கின்றன. சண்டையில் ஓய்வென்பதை தனது படைகளை இழப்பீடு செய்வதற்கான ஒரு வாய்ப்பாக எல்ரீரீஈ கருதுகின்றது.





பேச்சுவார்த்தைகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் தமிழ்ப் போராளிகள் யாழ்ப்பாணத்தில் மூன்று நாள் வேலைநிறுத்தமொன்றை வலிந்து செயற்படுத்திய போதிலும், இந்திய நெருக்குதலின் நிமித்தம் எல்ரீரீஈ முதல் தடவையாக 1985இல் திம்புப் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்தது. பேச்சுவார்த்தை முக்கியக் கட்டத்தினை எட்டியிருந்த வேளையில், இலங்கை அரசாங்கம் ஒப்புக் கொண்ட யுத்தநிறுத்தத்தை மீறி இராணுவம் செயற்பட்டதால், அரசாங்கம் பேச்சுவார்த்தைகளில் நேர்மையாக நடந்து கொள்ளவில்லையென்று கூறி, 1985ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22ஆந் தேதியன்று தமிழ்ப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைகளிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

நிகழ்ச்சிநிரலில் ஈழம் ஒரு விடயமாக இருக்காத போதிலும், அவ்வமைப்பின் இறுதி இலக்கு ஈழமேதானென்று காட்டுகின்ற வகையில் திம்புவில் எல்ரீரீஈ சுதந்திரம் பற்றிய விடயத்தில் விடாப்பிடியாயிருந்தது. மீண்டும் 1987இல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்பையும் கணிசமான அளவு சுயாட்சியையும் தமிழருக்கு உறுதியளிக்கின்ற சமாதான ஒப்பந்தமொன்றை இந்தியாவும் இலங்கையும் செய்துகொண்டன. ஒப்பந்தத்தின் விளைவாக யுத்தத்தில் எல்ரீரீஈயைப் பெரும் தோல்வியடையச் செய்த இலங்கை இராணுவம், 1987க்கு முந்திய நிலைகளுக்கு திரும்பப் பெறப்பட்டன. ஒப்பந்தத்தை முறித்துக்கொண்ட எல்ரீரீஈ தீவில் அமைதியைக் காப்பதற்கு அனுப்பப்பட்ட இந்தியப் படைகளைத் தாக்கியது. இந்திய அமைதிகாக்கும் படையை (IPKF) இந்தியாவுக்குத் திருப்பியனுப்புவதில் இலங்கை அரசும் எல்ரீரீஈயும் ஒன்றோடொன்று தொடர்பினை ஏற்படுத்தி ஒத்துழைத்தன. 1990இல் 'ஐபீகேஎஃப்' தீவைவிட்டு வெளியேறிய பின்னர் எல்ரீரீஈ இலங்கைப் படைகளுடனான அதன் தொடர்பை முறித்துக்கொண்டது.

எட்டு ஆண்டுகளின் பின்னர் 1997இல் தமிழருக்குச் சாத்தியமான மிகச் சிறந்த தீர்வை உறுதியளிக்கின்ற வகையில் சனாதிபதி சந்திரிகாவினால் வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வுப் பொதியை எல்ரீரீஈ நிராகரித்தது. பிராந்தியங்களுக்குக் குறிப்பிடத்தக்க சுயாட்சி உறுதியளிக்கப்பட்டதுடன், தமிழுக்கும் சிங்களத்துக்கும் 'சம அந்தஸ்தும்'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வழங்கப்பட்டது (சோமசுந்தரம் செப்ரெம்பர் 2000: 15). ஆனால் எல்ரீரீஈயின் பதில்நடவடிக்கை எதிர்பார்த்த வாறிருந்தது. அரசாங்கம் 'இராணுவ வழிமுறைகள் ஊடாக போலியான அரசியல் தீர்வொன்றை' திணிக்க முயல்கின்ற தெனக் கூறிப் பேச்சுவார்த்தைக்கு அது மறுத்துவிட்டது.

### எல்ரீரீஈயின் யுத்த உபாயம்

ஆயுதப் போராட்டம்தான் அனைத்துப் போராளிக் குழுக்களினதும் பொதுவான உபாயமாக இருந்து வந்துள்ளது. எல்ரீரீஈ 'தமிழ் ஈழப் பரப்பு முழுவதும் அரசியல் மற்றும் இராணுவப்பிரிவுகளின் மையங்களைக் கொண்ட (Political and Military centres) ஒரு புரட்சிகர தலைமறைவு இயக்கமாக' செயற்பட்டு வருவதாகக் கூறியுள்ளது. அது 'ஆயுதப் போராட்டத்தின் செயற்திறன்மிக்க முறையாக நகர்ப்புற கெரில்லா யுத்த நடவடிக்கையைத் தெரிவு செய்துள்ளது.' அதன் கெரில்லா பிரிவினர் மக்களால் பாது காத்துப் பேணப்பட்டு மக்களோடு மக்களாக வாழ்கின்றனர். எல்ரீரீஈயினர், தார்மீக மற்றும் பொருளாதார உதவிகளுக்கு உள்ளூர் மக்களில் தங்கியுள்ள போதிலும், சண்டையில் அவர்களுக்கொரு மட்டுப்படுத்தப்பட்ட பங்கையே ஒப்படைத்துள்ளனர்.

1980களின் நடுப்பகுதியிலிருந்து அதன் இராணுவச் செயற்பாடு ஓர் 'இரட்டைப் பண்பை'க் கொண்டிருந்துள்ளது. அதாவது அதன் நிலைகள் உறுதியுடன் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலைகொண்ட யுத்த நடவடிக்கைக்கு முகங்கொடுக்க ஆயத்தமானதாயிருந்தது. குடாநாட்டுக்கு வெளியே எல்ரீரீஈ பெருமளவுக்கு 'கெரில்லா உத்திகளில்' (தாக்கிவிட்டு ஓடும் உத்தி) தங்கியிருந்தது. அரசியல் மற்றும் இராணுவ அங்கங்களை வெவ்வேறாகப் பிரிக்காத ஒரேயொரு அமைப்பு எல்ரீரீஈ மட்டும்தான். எனினும் அதன் அரசியல் மற்றும் இராணுவ மையங்கள் தமிழ்ப் பிரதேசங்கள் முழுவதிலும் இருக்கின்றன.

எல்ரீரீஈ தனிமனித தலைமைத்துவத்தை - அதன் தலைவராகவும் இராணுவத் தளபதியாகவும் பிரபாகரனைக் கொண்டதாக இருந்து வருகின்றது. பிராந்திய தளபதிகளைக் கொண்ட உள்வட்டம் நெருக்கமான குடும்பமாக





இருந்து வருகின்றது." எனினும் இறுதி முடிவு பிரபாகரனின் கரங்களில்தான் இருக்கின்றது. எல்ரீரீஈயினர் தங்களது அமைப்பைக் காட்டிக் கொடுப்பவர்களுக்குப் பகிரங்க மரண தண்டனைகள் நிறைவேற்றப்படுவதன் ஊடாக அதன் உபாயத்தையும் நடமாட்டங்களையும் இரகசியமாக வைத்துக்கொள்ளக்கூடிய வகையில், இறுக்கமாகக் கட்டுப் படுத்தப்பட்ட ஓர் அமைப்பாக அதனை உருவாக்கியுள்ளனர்.

## 1980களுக்குப் பிறகான எல்ரீரீஈயின் போர்த்தந்திரங்கள்

### மனித அலை உத்திகள்

இலங்கையின் மோசமான இரத்தக்களரியாக அதிக காலம் நீடித்த (மே 1997 - நவம்பர் 1998) இராணுவ நடவடிக்கையான 'ஜய சிக்குரு' ('வெற்றி நிச்சயம்') நடவடிக்கையின் ஈராண்டுகளின் முடிவில், இலங்கை இராணுவம் அது கைப்பற்றிய ஏறக்குறைய எல்லா ஆட்சிப் பிரதேசத்தையும் எல்ரீரீஈயிடம் இழந்துவிட்டது. ஒரு கெரில்லாப் படையாக இருந்த எல்ரீரீஈ ஒரு சிறிய இராணுவத்தின் இராணுவ ஆற்றல்களைக்கொண்டு எவ்வாறு உலகின் பலம்மிக்க போராளிக் குழுவொன்றாகத் தகுதிபெற்றதென்பதற்கான காரணங்களில் ஒன்று, கெரில்லா யுத்த நடவடிக்கையில் மரபுசார்ந்த உத்திகளை விவேகத்துடன் அது பயன்படுத்தியமையாகும் (எல்ரீரீஈ, 6 யூன் 1999).

இந்தச் சண்டையில் எல்ரீரீஈ, இராணுவம் அதன் படைகளைச் சிதறலாக வைத்திருக்கச் செய்வதற்காகப் பயனற்ற ஆட்சிப் பிரதேசத்தைக் கைவிட்டது. பின்னர் அது அவர்களைக் காத்திரமான முறையில் தோற்கடித்தது. எல்ரீரீஈ மனித உயிர்களைப் பற்றியோ பொருளாதாரச் செலவைப் பற்றியோ கவலைப்படாமல் யுத்தங்களைப் புரிவதனால் மேம்பட்ட நிலையிலுள்ள படைகளுக்கெதிராகப் பெரும்பாலும் வெற்றியீட்டுகின்றது. எல்ரீரீஈ பயன்படுத்தும் உத்திகளில் மனித அலைத் தாக்குதலும் ஒன்று. வழமையாக கெரில்லா யுத்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படும் தனித்தனியான சிதறலான தாக்குதல் உத்திகளிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டது. அத்துடன் நிலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யான, நன்கு திட்டமிடப்பட்ட இராணுவம் திரட்டக்கூடிய ஆயுதபலம் பெரும்பாலான கெரில்லாப் படைகளுக்கு இருப்பதில்லையென்ற உண்மையைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில், மிகக்குறைந்த பலத்தைப் பிரயோகித்து எதிரிக்கு அதிகபட்ச சேதத்தை ஏற்படுத்துதலே கெரில்லா யுத்த நடவடிக்கையின் பிரதான குறிக்கோளாகும்;. இதன் மூலம் கெரில்லா தரப்பில் மரணம், காயப்படுதல் போன்ற இழப்புகளை இயன்றளவு குறைக்க முடியும்.

எல்ரீரீஈ மனித அலை போர்த்தந்திரங்களைப் பயன் படுத்துவதன் வாயிலாக இவ்விதிக்குப் புறம்பானதாயுள்ளது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எல்ரீரீஈ போராளிகள் இலங்கை இராணுவத்தின்மீது அலையலையாகப் பாய்ந்து தாக்குகின்றனர். எடுத்துக்காட்டாக, 1996ஆம் ஆண்டு சனவரி மாதம் 7ஆந் தேதியன்று தற்கொலைப் படைக் குழுக்களின் தலைமையில் 1,000க்கும் மேலான எல்ரீரீஈ போராளிகள் பரந்தன் இராணுவ முகாம்மீது பின்னிரவுப் பொழுதில் திடீர்த் தாக்குதலை நடத்தி மூன்று மணி நேரத் திற்குள் அத்தளத்தைக் கைப்பற்றினர் (எல்ரீரீஈ, 6 யூன் 1999).

சீன இராணுவம் போன்ற நிலையான படைகளும் 'மனித அலை'த் தாக்குதல்களை முன்னர் பயன்படுத்தியுள் ளன. கார்கிலை மீளக் கைப்பற்றுவதற்கு இந்திய இராணுவம் அதே உத்தியைப் பயன்படுத்தியதாக அறிக்கைகள் கூறு கின்றன. கொரியாவில் சீனர்கள் அளப்பரிய இழப்புகளை அனுபவித்தபோதிலும், மனிதவளத்தைக் கொண்டு ஒரு சிறிய நிலையைக் கைப்பற்றி பெரிய இலட்சியத்தை அடை வதற்காக அதேமுறையைப் பின்பற்றி அதனைக் காத்துப் பேணினர் (மேற்கூறிய அதே ஆவணம்).

மனித அலைத் தாக்குதல் கோட்பாட்டின் தடத்தை மாவோவின் சிந்தனையில் காணலாம். எதிரியை அவனின் பலம்குறைந்த இணைப்புகளில், மேம்பட்ட படைபலம் கொண்டு தாம் தெரிவுசெய்கின்ற துல்லியமான நேரத்தில் தாக்கவேண்டுமென்பதை மாவோ வலியுறுத்தினார் (மேற் கூறிய அதே ஆவணம்). மாவோவின் 'திரள்' என்ற எண் ணத்தை, ஒரு நிலையைக் கைப்பற்றுவதற்குத் திரளான தாக்குதல்களில் படைகளை ஒருமுகப்படுத்தலென்ற பொருளில் எல்ரீரீஈ பிரயோகிப்பதாகத் தோன்றுகிறது.[12]





மறுபுறத்தில் எல்ரீரீஈ ஒரு தற்கொலைக் குண்டுதாரி தன்னோடு மேலும் பலரைக் கொன்றுவிடுவாரென்ற கோட்பாட்டின் அடிப்படையில், அலையலையான தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்டு அதன் மூலம் எதிரிகளின் பெரும் பகுதியைக் கொன்றழித்த பின்னர், அவர்களையும் விழுங்கிவிட விரும்புகின்றது (எல்ரீரீஈ, 6 திசெம்பர் 2000). இவை அனைத்திற்கும் மேலாக போராளி களின் வெறித்தனமான விசுவாசத்தைப் பெற்ற ஒரு தலைவர் எல்ரீரீஈக்கு இருக்கின்றார். எனினும் போதிய ஆள்பலம் இல்லாத பிரச்சினையை எல்ரீரீஈ எதிர்நோக்கு வதனால் அது கைப்பற்றிய நிலைகளைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்வதில் பிரச்சினைகள் உள்ளன. எல்ரீரீஈ வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பில் ஈடுபட்டிருக்கும் போதிலும் இழப்புகளை நிரப்ப முடியாத அளவுக்கு ஆட் சேர்ப்பில் வீழ்ச்சி காணப்படுகின்றது.

## எல்ரீரீஈயின் தற்கொலைக் குண்டுதாரிகள்

ராஜீவ் காந்தியின் படுகொலைக்காக மரண தண்ட னைக்குக் காத்திருப்பவர்கள் அச்சம்பவத்தில் ஒரு குறிப் பிட்ட பங்கினை மட்டும் வகித்தவர்கள். போராளி அமைப் பினுள் ஒரு நிழல் குழுவான கரும்புலிகளென்ற எல்ரீரீஈயின் தற்கொலைப் படைகள்தான் அதனை நிறைவேற்றியது. இஸ்ரேலை எதிர்த்துப் போராடுகின்ற ஹமாஸ் போன்ற வேறு அமைப்புகள் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் களில் ஈடுபட்டுள்ளன. ஆனால் எல்ரீரீஈ, தற்கொலைக் குண்டுத் தாக்குதலை விசுவாசத்தின் அடையாளமான ஒரு கொள்கைக் கூறாக்கியுள்ளது. அந்த அமைப்பினால் மிகக் கூடுதலாகக் கௌரவிக்கப்படும் உறுப்பினர்களினால் கட்டளையிடப்பட்ட கரும்புலிகள் தங்களது பணியை நிறைவேற்றப் புறப்படுவதற்கு முன்னர் இறுதி உணவைப் பிரபாகரனுடன் சேர்ந்து உண்பதற்கு உரிமையுடையவர் களாயுள்ளனர் (எல்ரீரீஈ, 6 திசெம்பர் 2000).

1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் தேதியன்று சென்னைக்கு அருகிலுள்ள ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்வதற்குத் தற்கொலைக் குண்டுத் தாக்கு தலை எல்ரீரீஈ கைக்கொண்டது. அதுமுதற்கொண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தற்கொலைக் குண்டுதாரிகள் இலங்கைச் சனாதிபதி பிரேமதாச (1 மே 1993), சனாதிபதி வேட்பாளர் காமினி திசநாயக்க ஆகியோரைக் கொன்றுள்ளனர். இந்த உத்தி இராணுவ வாகனத் தொடரணிகளைத் தாக்குவதற்கும், இராணுவத் தளங்களைக் கைப்பற்றுவதற்கும்கூடப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக 90களின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணக் கோட்டை மீதான தாக்குதலின் போது, 200 பேர்வரை இருந்த காவற்படையைத் தோற்கடித்து கோட்டையைக் கைப்பற்றுவதற்கு, வெடிகுண்டுகளால் போர்த்திய ஒரு போராளியை எல்ரீரீஈ பயன்படுத்தியது. 1996ஆம் ஆண்டு சனவரியில் கொழும்பில் சனாதிபதி வீதியிலுள்ள மத்திய வங்கியை டிரக் குண்டு மூலம் சின்னாபின்னமாகத் தகர்ப்பதற்கும் எல்ரீரீஈ இந்த உத்தியைப் பயன்படுத்தியது. அதில் நூறுக்குமேலான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 1,000க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

எல்ரீரீஈ 1976இல் தாபிக்கப்பட்டபோதிலும், 1980களின் பிற்பகுதியில்தான் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை ஓர் உத்தியாக ஏற்றுக்கொண்டது. 1987ஆம் ஆண்டு யூலை மாதம் 5ஆம் தேதியன்று எல்ரீரீஈயின் கரும்புலிகளைச் சேர்ந்த கப்டன் மில்லர் நெல்லியடியிலிருந்த இராணுவ முகாமொன்றினுள் வெடிகுண்டுகள் நிரம்பிய லொறி ஒன்றைச் செலுத்திச் சென்றபோது முதலாவது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. அதில் 128க்கும் அதிகமான படைவீரர்கள் கொல்லப்பட்டனர் (எல்ரீரீஈ, 6 திசெம்பர் 2000).

ஒரு சாதாரண ஆளைத் திகிலடையச் செய்யக்கூடிய 'பயங்கர ஒத்திகைகளில்' வழமையாக ஈடுபடுகின்ற கரும்புலிகளின் செயல் தூண்டல்கள் என்ன? ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ள மாவோ, லெனின் அல்லது சே போன்ற கெரில்லா நடவடிக்கைக் கோட்பாட்டியலாளர் எவரும் தற்கொலைக் குண்டுத் தாக்குதலைப் பரிந்துரைத்ததில்லை. புலிகளுடன் ஒப்பிடத்தக்க ஒரேயொரு தரப்பினர் மத்திய கிழக்கிலுள்ள இஸ்லாமியப் போராளிகள்தான். அவர்களின் சித்தாந்தப்படி அவர்கள் நேரே பரலோகம் போவார்களென நம்புகின்றனர்.





கொள்கையளவில் எல்ரீரீஈ நாத்திகம் பேசியபோதிலும், அதன் போராளிகளில் பெரும்பான்மையானவர்கள் ஆன்மாவின் மறுபிறப்பில் நம்பிக்கையுள்ள இந்துக்களாகவே இருக்கின்றனர். எல்ரீரீஈயின் சித்தாந்தவாதியான அன்ரன் பாலசிங்கம் 1995ஆம் ஆண்டு நவம்பரில் யாழ்ப்பாணத்தில் ஆற்றிய உரையொன்றில் '*தமிழர்களை வதைத்த*' சிங்களத் தலைவர்களின் அகால, அசாதாரண மரணங்களுக்குக் காரணம் அவர்களின் வினைப்பயனென்று கூறினார்.

எல்ரீரீஈயின் விடயத்தில் தற்கொலைத் தாக்குதல்களுக்கான செயல்தூண்டுதல்கள் மாவீரர் வாரம், அவர்களுக்காகக் கட்டியெழுப்பப்படும் விசேட மயானங்கள், ஆயுதங்களுக்குக் கரும்புலிகளின் பெயரிடுதல், இன்னும் சுருக்கமாகச் சொல்வதாயின் இறப்பின் பின் உறுதியாக அளிக்கப்படும் கௌரவம் போன்ற சடங்குகள் வாயிலாக எல்ரீரீஈ மனமுவந்து வளர்க்கின்ற ஒரு வகையான குழு ஈடுபாட்டு வெறியாகத் தோன்றுகின்றது. உண்மையில் ஒளிநாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ள கரும்புலிகளின் 'ஒத்திகை நடவடிக்கைகள்' பெரும் துணிவுமிக்கவர்களைக் கூடத் திகிலடையச் செய்யக் கூடியவை. துணிவை விட அதிகமான ஏதோவொன்று இதில் உள்ளது என்பது மட்டும் உண்மை. மேலும் இவ்வாழ்வில் ஈட்டுவதற்கு எதுவுமற்றவர்களுக்கு, மரணத்துக்கு அப்பாலும் வாக்குறுதிப்படியான கௌரவம் கவர்ச்சிகரமானதே. இப்போது கீழ் நடுத்தர வர்க்கத்திலிருந்து எல்ரீரீஈக்கு வரும் பெரும்பாலான போராளிகள் அத்தகைய கவர்ச்சிப் பிரச்சாரத்திற்கு இலகுவில் ஆட்படுவார்கள் என்பதனால் இது முக்கியத்துவம் பெறுகின்றது.

எல்ரீரீஈயில் உள்ள ஒருவர் தற்கொலைப் போராளியாவதற்கு மற்றுமொரு செயல்தூண்டுதல், தமிழ் இலக்கியத்தில் ஊறிய சின்னங்களை அதன் சித்தாந்தத்துடன் எல்ரீரீஈ புத்திக்கூர்மையுடன் தொடர்புறுத்திப் பயன்படுத்துதலாகும். புகழ்பெற்ற பண்டைய சோழப் பேரரசர்களின் இலச்சினையாகப் புலி இருந்தது. அது மாத்திரமல்லாமல், ஒரு வெற்றியின் சின்னமாகப் புலிக்கொடியைக் கொண்ட சோழ மன்னர்கள் சிங்கள அரசுகள் மீது படையெடுத்து முழு இலங்கையையும் ஆண்ட வரலாறுகளும், அத்துடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புலிக்கொடி என்பது அப்போதைய சோழ சாம்ராச்சிய மான தாய்லாந்திலும் இந்தோனேசியாவிலும் கம்போடியா விலும் பறந்த வரலாறுகளும், புலிகளின் மத்தியில் கவர்ச்சி யையும் பிடிப்பையும் துணிச்சலையும் வீரத்தையும் உரு வாக்குவதற்குக் காரணமான செயல் தூண்டுதல்களாக இருந்திருக்கலாம். மேலும் மறம் என்ற கோட்பாடு, தமது அன்புக்குரிய உற்றார்களை யுத்தத்திற்காகத் தியாகஞ் செய்த வீரத்தாய் மற்றும் வீரப்பெண் என்ற கோட்பாடு, இது கி.மு. 500க்கும் கி.பி. 200க்கும் இடைப்பட்ட சங்க காலத்தின் புறநானூற்றுப் பாடல்களில்[13] திரும்பத் திரும்பக் காணப்படும் ஒரு தொனிப்பொருள். எல்ரீரீஈ போராளி கடந்தகாலக் கருத்தியற் கோட்பாடுகளுக்கு இணங்கி யொழுக வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றார். ஒரு தோல்வியென்பது ஒரு தனிப்பட்டவர் தக்க தருணத்தில் அமைப்பைக் கைவிட்டுவிடுவதனால் அல்ல. மாறாக அந்த அமைப்பு கடந்த காலத்தின் மகோன்னதமான கருத்தியற் கோட்பாடுகளுக்கமைய வாழத் தவறியமையாகும்.

எல்ரீரீஈயின் கரும்புலிப் போராளிகளின் செயல் தூண்டுதல் இரண்டாம் உலக யுத்தத்தின்போது யப்பானிய விமானப் படையைச் சேர்ந்த 'கமிக்காசே' விமான ஓட்டி களினதை ஒத்தது. அவர்கள் 'நான் பேரரசருக்காக உயிர் துறக்கின்றேன்' என்று கூக்குரலிட்டவாறு வெடிபொருள் கள் நிரம்பிய விமானங்களை அமெரிக்க யுத்தக் கப்பல்கள் மீது மோதுவர். அவர்கள் பண்டைய 'சமுராய்' பாரம் பரியத்தை நிறைவேற்றுவதாகவும், பண்டைய மாவீரர் களின் கருத்தியற் கோட்பாடுகளுக்கு இணங்க வாழ்ந்து காட்டுவதாகவும், பேரரசரால் வேண்டப்படும் ஒரு தியாகத் தைப் புரிவதாகவும், அவர்கள் சரணடைவார்களாயின் அளப்பரிய அவமானத்தையும் மதிப்பிழப்பையும் எதிர் நோக்குவாரென்றும் நம்புகின்ற அளவுக்கு மருட்சியடைந் திருந்தனர். அதுவே எல்ரீரீஈயின் விடயத்திலும் பொருந்தும்.

## எல்ரீரீஈயின் அதிகார எழுச்சியும், பலமும்

எல்ரீரீஈயின் உண்மையான பலத்தைப் பற்றிய ஒரு தெளிவான தோற்றத்தைப் பெறுதல் எப்போதும் சிரம மானதாக இருந்துள்ளது. அது 1974இல் 15 முழுநேரப் போராளிகளிலிருந்து 2000இல் ஏறக்குறைய 15,000 பேராக





வளர்ச்சி கண்டுள்ளது. எனினும் அரசாங்கம் அடிக்கடி அதனை மறுதலித்து அதிகாரபூர்வ அறிவிப்புகளை விடுத் துள்ளது. 1983ஆம் ஆண்டு யூலை கலவரங்களுக்கு முன்னர் எல்ரீரீஈயின் பலம் சுமார் 50 பேர் (ஒரு முக்கிய எல்ரீரீஈ உறுப்பினருடன் கலந்துரையாடல், யூலை 1983). கலவரம் அனைத்துக் குழுக்களும் துரித கதியில் ஆட்சேர்ப்புச் செய் வதற்கான வாய்ப்பை வழங்கியதைத் தொடர்ந்து, 1984இல் எல்ரீரீஈயின் பலம் 1,000 முதல் 1,500 வரையானதாயிருந்தது (இலண்டனில் எல்ரீரீஈ தீவிர செயற்பாட்டாளர் ஒருவருடன் கலந்துரையாடல், யூன் 1984). இந்தியாவிடமிருந்தும் இந்தியாவிலும் பயிற்சி வசதிகள் கிடைத்ததனால் 1985இல் எல்ரீரீஈயின் பலம் 2,500க்கு மேலாக வளர்ந்தது (சென்னை யில் எல்ரீரீஈ தீவிர செயற்பாட்டாளர் ஒருவருடன் கலந் துரையாடல், யூலை 1985). 1987இல் முதலாம் அரையாண் டில், எல்ரீரீஈ அதன் அனைத்துச் செயற்பாடுகளையும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு மாற்றியபோது அதன் பலம் 3,200 என மதிப்பிடப்பட்டது (சிவராம், 6 யூன் 2000). 1987-1989இல் இந்திய அமைதிப்படையின் காலத்தில் எல்ரீரீஈயின் பலம் வீழ்ச்சியடைந்தது. இது ஒன்றுதான் எல்ரீரீஈக்கு ஆட்சிப் பிரதேசக் கட்டுப்பாடும், ஆட்சேர்ப்புக் கான வாய்ப்புகளும் காத்திரமான முறையில் மறுக்கப்பட்ட ஒரேயொரு காலப்பகுதியாகும்.

இந்திய அமைதிப்படை திரும்பிச் சென்றதைத் தொடர்ந்து, எல்ரீரீஈ முதல் தடவையாக குறைந்த வயது இளைஞர்களை இலக்காகக்கொண்டு பலவந்தமான ஆட் சேர்ப்பில் ஈடுபடத் தொடங்கியது. முன்னாள் சனாதிபதி பிரேமதாசவின் நிருவாகத்திடமிருந்து கிடைத்த உதவி யுடன், இந்திய அமைதிப் படையால் பயிற்றப்பட்ட ஈபீஆர்எல்எஃப்பின் வட-கிழக்கு மாகாணசபை இராணுவப் பிரிவான, ஆயுதப் பலம்மிக்க ஆனால் போதிய பயிற்சி யற்ற தமிழ்த் தேசிய இராணுவத்தைத் (TNA) தாக்கியதன் பின்னர் எல்ரீரீஈ இழந்த வலுவை மீண்டும் பெற்றதுடன், மேலும் பலமுள்ளதாகவும் ஆகியது. 1990ஆம் ஆண்டு மார்ச்சில் இந்திய அமைதிப்படை முழுவதும் நாடு திரும்பிய வுடன், உடனடியாக இலங்கைப் படைகளுக்கெதிராக எல்ரீரீஈ யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியபோது 4,000 பேராக இருந்த அதன் பலம் 1992இல் 6,000 ஆக வளர்ந்தது





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(குணரத்ன 1998: 356). 1992இல் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கிழக்கில் எல்ரீரீஈயை எதிர்த்துத் தாக்கு வதற்கும் வடக்கில் அதனைக் கட்டுப்படுத்துவதற்குமான உபாயமொன்றில் கவனம் செலுத்தியது. 1994இல் எல்ரீரீஈ யின் போராடும் பலம் 15,000 ஆக அதிகரித்தபோதிலும், 1996இல் இலங்கை இராணுவம் யாழ்ப்பாணக் குடா நாட்டில் எல்ரீரீஈயை எதிர்த்துத் தாக்கியபோது குறைந்தது (மேற்கூறிய அதே: 356) 1997இல் எல்ரீரீஈயின் பலம் 14,000 என மதிப்பிடப்பட்டது (மேற்கூறிய அதே: 356).

அதிகப்படியான ஆட்சேர்ப்பிற்குப் பல காரணங்கள் இருந்தன. அவற்றில், கலவரங்களினால் பாதுகாப்பின்மை, இலங்கை ஆயுதப் படைகளின் வகைதொகையற்ற மனித உரிமை மீறல்கள், யாழ் குடாநாட்டிலிருந்து வன்னிப் பிரதேசங்களுக்கு மக்களின் இடப்பெயர்வு போன்ற அனேக முக்கியக் காரணங்கள் இருந்தன. எனவே, இரண்டரைத் தசாப்தங்களினுள் எல்ரீரீஈயின் போராளிப் பலம் ஆயிரம் மடங்காகவும், அவசரநிலையில் உதவிசெய்யக்கூடிய உறுப்பினர்கள் அல்லாத ஆதரவாளர்கள் என்றழைக்கப் படுகின்றவர்கள் எண்ணிக்கை போராளிகளைவிட இரண்டு மடங்கு கொண்டதாகவும் அதிகரித்தது. இது இலங்கை ஆயுதப் படைகளுடன் போட்டியிடத்தக்க ஒரு வளர்ச்சி வீதமாகும் (இலண்டனில் எல்ரீரீஈ தீவிர செயற்பாட் டாளர் ஒருவருடன் கலந்துரையாடல், மே 2000). 1997இல் இலங்கை ஆயுதப் படைகளின் பலம் 1,10,000. தரைப்படை யினர் 80,000, விமானப் படையினர் 12,000, கடற்படை யினர் 8,000 இது தவிர பொலிஸ் படையினரும் இருந்தனர் (குணரத்ன, 1998: 356).

இலங்கை அரசும் (1994 முதல் பொதுசன முன்னணி அரசாங்கம்) இராணுவத்தினரும் எவ்வளவு அதிக அளவில் பாதுகாப்புக்காக வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப் படுகிறதோ அவ்வளவு விரைவாக புலிகளை அழித்து யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்ற தவறான எண்ணத்தைக் கொண்டிருந்தனர் (குணரத்ன, 1998:357). அரசாங்கப் பாதுகாப்புச் செலவு அதிகரித்ததை யும் மீறி எல்ரீரீஈயின் வளர்ச்சியும் அதிகரித்து வந்துள்ளது. ஸ்ரொக்ஹோம் சர்வதேச சமாதான ஆராய்ச்சி நிறுவனத்





தின் (SIPRI) அறிக்கையின்படி, 1983ஆம் ஆண்டு முதல் யுத்த வரவு செலவுத் திட்டம் வேகமாக அதிகரித்து வந்துள்ளது (அட்டவணை 4.1). பொதுசன முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த நாள் முதல், பாதுகாப்புச் செலவினத்தைக் குறிப்பிடத்தக்க மட்டங்களுக்கு அதிகரிப்பதற்கு எல்ரீரீஈ அதனை நிர்ப்பந்திக்கக் கூடியதாக இருந்தது என்பதுதான் உண்மை. அன்று தொடக்கம் அரசாங்கம் ரூ. 10 பில்லியன் பெறுமதியான இராணுவத் தளவாடங்களை எல்ரீரீஈயிடம் இழந்துள்ளது.

**அட்டவணை 4.1**

**இலங்கை இராணுவச் செலவினம் (1991–2000)**

| ஆண்டு | ரூ.பில் | யு.எஸ்.மில் | % (மொ.உ.உ.) |
|---|---|---|---|
| 1991 | 10.3 | 322 | 2.8 |
| 1992 | 12.9 | 361 | 3 |
| 1993 | 15.4 | 387 | 3.1 |
| 1994 | 19.4 | 450 | 3.4 |
| 1995 | 35.2 | 756 | 5.3 |
| 1996 | 38.1 | 707 | 5 |
| 1997 | 37.1 | 628 | 4.2 |
| 1998 | 42.5 | 658 | 4.2 |
| 1999 | 40.1 | 593 | 3.6 |
| 2000 | (62.0) | (87.0) | |

மூலம் : SIPRI இராணுவச் செலவினம் மற்றும் ஆயுத உற்பத்திக் கருத்திட்டங்கள் (2001)

பில் = பில்லியன், யு.எஸ். மில் = மில்லியன் யு.எஸ். டொலர், ( ) = நிச்சயமற்ற தொகை = SIPRI மதிப்பீடு.

## விடுதலைப்புலிகளின் ஒப்பற்ற வளர்ச்சி

இலங்கையில் எல்ரீரீஈ பெரும்பாலான அதன் போட்டி அமைப்புகளை ஈவிரக்கமின்றி ஒழித்துக்கட்டுவதன் மூலம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதன் மேலாண்மையை நிலைநாட்டியது. இதன் முதற் கட்டமாக, 1985இல் கிட்டத்தட்ட ஒழிக்கப்பட்டது புளொட் ஆகும். ஒரு காலத்தில் எல்ரீரீஈக்கு அடுத்து இரண்டாவதாகப் புளொட் பலம் மிக்கதாகவும் செல்வாக்குடையதாகவும் நல்ல நிதி வளமுடையதாகவும் விளங்கியது. அது 1981இல் அதன் முன்னாள் தலைவரும் மத்திய குழு உறுப்பினருமான உமா மகேஸ்வரனின் தலைமையில் எல்ரீரீஈயிலிருந்து பிரிந்து சென்றது. பிளவின் பின்னர் ஒரு குறுகிய காலமான 1982இன் ஆரம்பத்தில் சென்னையிலுள்ள பாண்டி பஸாரில் உமா மகேஸ்வரனுக்கும் பிரபாகரனுக்கும் இடையில் ஒரு துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது (ஹெல்மன் 1986: 67).

எனினும் புளொட்டின் இராணுவ பலம் குன்றியும் போரிடும் சக்தி எல்ரீரீஈயை விடத் குறைந்ததாக இருந்ததாகவும் அதன் சொந்தக் கூற்றிலிருந்து தெளிவாக வெளிப்பட்டது (புளொட், 1985: 1). புளொட் மற்றுமோர் ஆயுத மோதலைத் தவிர்க்கும் பொருட்டு, யாழ்ப்பாணத்தில் அதன் காப்பரண்களிலிருந்தும் அதன் ஏனைய பலமான இடங்களிலிருந்தும் வெளியேறி ஓர் இரகசிய இயக்கமாக மாறியது எனக் கூறப்படுகின்றது. இது உயர்மட்டத்தில் எடுக்கப்பட்ட ஒரு தீர்மானமெனக் கூறப்படுகின்றது (சித்தார்த்தனுடனான நேர்காணல்: 11 யூன் 2001). எனினும் நேர்த்தியான வார்த்தைகளைக் கொண்ட இச்சொல்லலங்காரம் முழுவதும், அதற்கு அறைகூவல் விடுத்து எல்ரீரீஈ முன்னேறியபோது புளொட் அவசர அவசரமாகப் பின்வாங்க நேரிட்டதென்ற உண்மையை மெல்லியதாக மறைக்கின்றது. அதன் கையிருப்பிலிருந்த புரட்சிகரப் பேச்சுகளுடன் ஒட்டிக்கொண்டிருந்த புளொட், பணமுமின்றி எந்தப் பக்கத்திலிருந்தும் உண்மையான ஆதரவுமின்றி நிலைகொள்ள முடியாத ஆழத்தில் தெளிவாகச் சிக்கியிருந்தது (சித்தார்த்தனுடனான நேர்காணல்: 11 யூன் 2001).

இரண்டாவது கட்டமாக ரெலோ. அதன் தலைவர் சிறீ சபாரத்தினம் உட்பட 300க்கும் மேலான உறுப்பினர்கள் 1986 ஏப்பிரல் முடிவில் மே தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கையில் கொல்லப்பட்டனர் (ஈரோஸ், 1986: 5). ரெலோ உறுப்பினர்கள் தங்களது இரவு





உணவை உண்டு கொண்டிருந்தவேளையில் முற்றிலும் எதிர் பாராத தருணத்தில் ரெலோ முகாம்களைச் சுற்றிவளைத்து விடுதலைப் புலிகள் அவர்களைச் சுடத்தொடங்கினர். எல்லாவற்றுக்கும் மேலாக எல்ரீரீஈ, சீஐஏ (CIA) ஆதரவில் இயங்கும் அமைப்பென்று ரெலோவினால் மட்டுமன்றி, புளொட் மற்றும் ஈபீஆர்எல்எஃப் என்பவற்றாலும் குற்றம் சாட்டப்பட்டது (ஈரோஸ் 1986: 5).

1986இல் ரெலோ படுகொலை செய்யப்பட்டமைக்கு எல்ரீரீஈ கூறிய காரணங்கள் வேறுபட்டபோதிலும் பிரதானமாக அவற்றை இரு வகைகளில் உள்ளடக்கலாம்.

1. ரெலோ ஆட்கடத்தல்கள், கொள்ளைகள், சூட்டுச் சண்டைகள், சிறு களவுகள் மற்றும் குற்றங்கள் போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டதன் மூலம் பாசிஸ மனப்போக்கைக் காட்டுவதுடன் இலட்சியத்துக்குத் துரோகமிழைத்துவிட்டது. அது சாதி நோக்கங்களைப் பின்பற்றியதுடன் இறுதியாகப் பேச்சுவார்த்தைக்கென நிராயுதபாணியாக அவர்களின் முகாமுக்கு வந்த எல்ரீரீஈ லெப்டினன்ட் லிங்கத்தையும் படுகொலை செய்தது (வெளியாக்கம், 2 ஏப்பிரல் 1986).

2. கொடுக்கப்பட்ட இரண்டாவது காரணம், ரெலோ அதன் செயல் தொடர்புகளில் இந்தியாவுடன் அளவுக்கு மீறிய நெருக்கமுடையதாகி நடைமுறையில் 'இந்தியாவின் சிறிய படைவீரர்களாக' மாறியதுடன் ஈழத்தில் அவர்களின் யுத்தத்தை இந்தியாவே நடத்த வேண்டுமெனவும் எதிர் பார்த்தது. அது ஜயவர்தனவுடன் பேரமொன்றை ஒழுங்கு செய்யவும் முயற்சித்தது (வெளியாக்கம், 2 ஏப்பிரல் 1986). இது போராட்டத்தின் வெற்றிக்கு ஆபத்தானதாக இருந்ததனால் இந்நடவடிக்கையை எல்ரீரீஈ எவ்வகையிலேனும் தடுக்கவேண்டியிருந்தது.

எல்ரீரீஈ அடுத்து முல்லைத்தீவில் இருந்த ஈபீஆர்எல்எஃப் முகாம்களை இலக்கு வைத்தது. அவை தாக்கப்பட்டுச் சூறையாடப்பட்டதுடன், முன்னணி வகித்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போராளிகளைக் கடத்திச் சென்று கொல்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன (ஈபீஆர்எல்எஃப் துண்டுப் பிரசுரம், 24 பெப்ருவரி 1986). எனினும் தற்போதைய ஈபீ ஆர்எல்எஃப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் தகவலின் படி, இத்தாக்குதல்கள் பற்றி முன்கூட்டியே அறிந்திருந்த ஈபீஆர்எல்எஃப் உறுப்பினர்கள் தலைமறைவாகிவிட்ட தனால், வெறிச்சோடிய முகாம்களையே புலிகளால் காண முடிந்தது (ஈபீஆர்எல்எஃப் துண்டுப்பிரசுரம், 24 பெப்ருவரி 1986). கிழக்கில் 'ஈபீஆர்எல்எஃப்பின் பலம்வாய்ந்த தனி யிடங்கள்' தொடர்ந்தும் இருந்தன. அவை இலங்கையின் விசேட அதிரடிப் படைக்கும் (STF) எல்ரீரீஈக்கும் எதிராக முழு வேகத்துடன் கெரில்லா யுத்தத்தைப் புரிந்தன. அரசியல் நிகழ்வுகள் குறுக்கிட்டதனால் ஈபீஆர்எல் எஃப்ஐக் கையாள்வதற்கு அதற்கு நீண்ட காலம் எடுத்தது. 1990 யூன் 19ஆந் தேதியன்று சென்னையில் அதன் தலைவர் மற்றும் பெரும்பாலான மத்திய குழு உறுப்பினர்கள் உட்பட ஈபீஆர்எல்எஃப் இன் 13 முன்னணி உறுப்பினர்களை எல்ரீரீஈ கொலைசெய்ததென்ற கருத்தை நாம் ஏற்றுக் கொள்வோமாயின் அதனோடு EPRLF இன் ஆயுதப் போராட்டமும் முடிவுற்றது. (தமிழ் ரைம்ஸ், 15 யூலை 1990: 9). ஆனால் தற்போது புளொட், ரெலோ, ஈபீஆர்எல்எஃப் ஈரோஸ் ஆகிய நான்கு அமைப்புக்களும் தமிழ் அரசியல் கட்சிகளாக இலங்கையில் செயற்படுகின்றன. எல்ரீரீஈயினர் இப்போதும் காலத்திற்குக் காலம் இக்கட்சிகளின் முக்கிய உறுப்பினர்களைக் கொன்றுவருகின்றனர்.

மக்களின் வீடுகள், வியாபாரங்கள், கமங்கள் ஆகிய வற்றை எல்ரீரீஈ பலவந்தமாகச் சுவீகரித்தல் பற்றிய முறைப் பாடுகள் இருந்தபோதிலும், அவர்களுக்கு உள்ளூர் ஆதரவு மிக அதிகமாகவே உள்ளது. புலிகளின் அடாவடிச் செயல் களுக்கெதிராக ஆங்காங்கே தோன்றிய மாணவர் ஆர்ப் பாட்டங்களும் எதிர்ப்புகளும் ஏனைய குழுக்கள் ஒழிக்கப் பட்டதன் பின்னர் துரிதமாக நசுக்கப்பட்டன. எவ்வாறா யினும் கண்டனங்களைவிட எல்ரீரீஈக்கான ஆதரவே விஞ்சி யுள்ளது. தொடக்கத்தில் இவ்வாதரவு குறைவாக இருந்த தற்குக் குடிசனத்தின் மிகத் தீவிரமான பங்கேற்பைப் புலிகள் வற்புறுத்திக் கோராததன் காரணமாக இருக்கலாம்.





ஈழவிடுதலைப் போராட்ட வரலாற்றில் சாதியம் என்பதும் ஒரு பங்கைத் தன்னகத்தே கொண்டுள்ளது. தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து, EROS, EPRLF, TELO, PLOTE போன்றவை எல்லாமே யாழ்ப் பாண மேற்சாதி மக்களாலேயே தலைமைத்துவப்படுத்தப் பட்டது. முக்கியமாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட விடுதலை இயக்கங்கள் தோன்றக் காரணிகளாக இருந்த கல்வியில் தரப்படுத்தலும், சிங்களம் மாத்திரம் அரச கரும மொழி என்பதும், கூடுதலாக தமிழ் மத்தியதர வர்க்கத் தையே பாதித்தது. அதுமாத்திரமல்லாமல், இனக் கலவரங் களில் சிங்களப் பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட தமிழர் களில் பெரும்பான்மையோர் வியாபாரிகளாகவும், ஆசிரியர் களாகவும், ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களாகவும் இருந்தனர். இவர்களும் மிகப் பெரும்பான்மையாக மத்திய தர வர்க்கத்தைச் சார்ந்தவர்களாகவே இருந்தனர்.

அதேசமயம், எல்ரீரீஈயின் தலைமைத்துவம் என்பது மீன்பிடிச் சமூகத்தைச் சேர்ந்த பிரபாகரனாலும், அவரது நெருங்கிய உறவினர்களாலுமே இன்றுவரை கொடுக்கப் பட்டு வருகின்றது. இவர்கள் சாதி என்ற அடிப்படையில் மீனவ சமூகத்தைச் சார்ந்தவர்களாக இருந்தபொழுதிலும், பொருளாதார ரீதியில் மத்திய தரவர்க்கத்தைச் சேர்ந்த வர்களாகவே இருந்தனர். அத்துடன் தொழில்ரீதியில் திடகாத்திரமானவர்களாக இருந்ததால், பிறப்பாலேயே போராட்ட குணமுள்ளவர்களாகவும் இருந்தனர்.

மறுபுறத்தில், EROS, EPRLF, PLOTE போன்ற அமைப்பு களை எடுத்துக்கொண்டால், EROS மலையக தமிழ் உழைப்பாளிகளை போராட்டத்தின் முன்னணி சக்தியாக மாற்ற வேண்டுமென்பதிலும், EPRLF வடக்கு-கிழக்கில் தாழ்த்தப்பட்ட மக்களையும், மலையக மக்களையும் போராட்ட முன்னணி சக்தியாக ஆக்க வேண்டுமென்பதி லும், PLOTEம்கூட ஏறத்தாழ EPRLFஇன் கருத்துக்களைக் கொண்ட ஒரு இடதுசாரிக் குழுவாக இருந்ததுடன், இந்த அடிப்படையிலேயே அதன் செயற்பாடுகளும் இருந்தன.

புலிகள் மேலாதிக்கம், ஏகப்பிரதிநிதித்துவம் ஆகிய வற்றை எய்தும் பொருட்டு, ஏனைய இயக்கத் தலைவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களையும் முன்னணி உறுப்பினர்களையும் இல்லா தொழிக்கும் ஒரு நிலைப்பாட்டை எடுத்துச் செயற்பட்டதால், மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த பலநூறு போராளிகள் வெளிநாடுகளுக்குச் செல்லும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதுமாத்திரமல்லாமல், நீண்ட போராட்டத்தில் நின்று தாக்குப்பிடிக்க முடியாத குட்டி முதலாளித்துவ சிந்தனை கொண்ட மத்தியதர வர்க்க மக்கள் கூட்டமும் கூட்டம் கூட்டமாக இந்தியாவிற்கும், வெளிநாடுகளுக்கும் இடம் பெயர்ந்தனர். இவ்வாறாக ஏறத்தாழ ஒரு மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அதேசமயம், சில யாழ்ப்பாணத் தமிழர் எல்ரீரீஈயை அவசியமான ஒரு கேடாகக் கண்டனர், இப்போதும் காண்கின்றனர். அவர்களின் பாதுகாப்புக் கடமையை மனமில்லாமல் ஒப்புக்கொண்டதுடன் மெச்சவும் செய்தனர். ஆனால் இந்தியர்கள் (IPKF) வந்தவுடன் அவர்களின் அலுவல்களைப் பார்த்துக்கொள்ளும்படி மகிழ்ச்சியுடன் அனுப்பிவிட்டனர். பின்னர் இந்திய அமைதிப்படை வெளியேறி, இலங்கை ஆயுதப்படைகள் மீண்டும் யாழ்ப்பாணத்தைக் குண்டுவீசித் தாக்கியபோது மக்கள் புலிகளை அவர்களின் பாதுகாவலர்களாக மீண்டும் ஏற்றுக்கொண்டனர். பெரும்பாலான குடும்பங்களைச் சார்ந்த மகன்கள், மகள்கள், சகோதரர்கள், சகோதரிகள் எல்ரீரீஈயில் இருப்பதும், அவர்கள் புலிகளை ஆதரிப்பதற்கு ஒரு வலுவான காரணமாயுள்ளது. எனினும் எல்ரீரீஈ அமைப்பானது வரம்பற்ற நிலப்பரப்பில் சாதிக் கலப்பைக் கொண்டதோர் அமைப்பு. எனவே யாழ்ப்பாணத் தமிழர் அவர்களைத் தமது ஆட்சியாளர்களாக ஏற்றுக்கொள்ளக்கூடும். அவர்களின் தலைவர்கள் வெள்ளாளரைவிடத் தாழ்ந்தவர்களென்று கருதப்பட்ட ஒரு மீனவ சமுதாயத்திற்கு 'கரையார் சமூகத்திற்கு' தமது மேலாதிக்கப் பங்கை விருப்பின்றி விட்டுக் கொடுக்கக்கூடும்..

### எல்ரீரீஈயின் பெண் போராளிகள்: 'சுதந்திரப் பறவைகள்'

இலங்கையில் பொதுவாகப் பெண்களும் குறிப்பாகத் தமிழ்ப் பெண்களும் இருவிதமான அடக்குமுறைகளுக்கு நீண்டகாலமாக உட்பட்டுள்ளனர். ஒருபுறத்தில் தமிழ்





மக்களில் ஐம்பது சதவீதத்திற்குச் சிறிது கூடிய பெண்கள், பேரினவாதச் சிங்களக் கொள்கைகளிலிருந்து எழுகின்ற தேசிய அடக்குமுறையின் தாக்குதலைத் தாங்கிவந்துள்ளனர். மறுபுறத்தில் ஆணாதிக்க வெறியிலிருந்து எழுகின்ற கலாச்சார மற்றும் சமூக அடக்குமுறையின் உள்ளக வடிவமொன்றுக்குப் பெண்கள் உட்பட்டுள்ளனர். இவ்வகையான அடக்குமுறை தமிழ்ச் சமூகத்தில் உள்ளூரக் காணப்படும் பழைமைவாதப் பாரம்பரியங்களாலும் சில கலாச்சார பழக்க வழக்கங்களினாலும் உருவாகின்றது. மலையகத்தில் உள்ள பெருந்தோட்டங்களில் பணிபுரிபவர்களில் பாதிக்கு மேல் பெண்கள். இவர்கள் மீதான சிறீலங்கா அரசாங்கத்தின் அடக்குமுறை அளவுகடந்தது. இப்பகுதி தமிழ்ப் பெண்களின் மீதான தாக்குதல்களின் ஓர் அம்சமான யுத்தத்தின் தாக்கத்தை ஆராய முற்படுகின்ற போதிலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண்கள் இராணுவ அமைப்பான 'சுதந்திரப் பறவைகள்'களின் வளர்ச்சி பற்றி விசேடமாக ஆராய்கின்றது.

போரில் பெண்கள் தீவிரமாகப் பங்குபற்றுதலை தமிழ் இலக்கியம் வலியுறுத்தவில்லை. பதிலாக அது தாய்மையைப் போற்றிப் புகழ்கின்றது. தனது கருப்பையைக் குகையாகவும் போரிடும் மகனை ஒரு புலியாகவும் வருணிக்கின்ற புறநானூற்றுத் (கி.மு. 500 தமிழ் இலக்கியம்) தாய் இதற்கு ஓர் உதாரணம்.[14] போரில் தனது தந்தையையும் தனது கணவனையும் தனது சகோதரனையும் இழந்த பின்னரும், தனது ஒரேயொரு மகனைப் போருக்கு அனுப்பிய வீரத்தாயின் கதையும் உள்ளது. அவளின் மகன் முதுகில் காயப்பட்டானென்று தவறாக அறிவிக்கப்பட அந்தத்தாய், ஒரு கோழையாகப் புறமுதுகிட்டு ஓடும் போது மகன் காயப்பட்டானேயென்றறிந்து வெட்கப்படுகின்றாள். போர்க்களத்தை அடைந்தபோது வீரம்மிக்க அவளின் மகன் நெஞ்சில் காயமடைந்திருப்பதைக் காண்கின்றாள். இதனால் அவள் பெருமிதமும் இறுமாப்பும் அடைகின்றாள். அழுது புலம்புவதற்குப் பதிலாக அவள் வீரமகனின் மரணத்தைக் கொண்டாடுகின்றாள். இப்படியாக ஒரு பெண் போரில் ஒரு புறச்சக்தியாகச் செயற்பட்டதைத்தான் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனினும் அதிகரித்துவந்த தேசிய அடக்குமுறை தமிழ்ப் பெண்களை ஆயுதமேந்தும் நிலைக்குத் தள்ளியது. பெருந் தொகையான இளைஞர்கள் மேற்கு ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் புலம்பெயர்ந்ததோடு, இயல்பு வாழ்க்கையில் ஒரு துரித மாற்றமேற்பட்டது. ஓர் இளம் ஆண், பெண்ணை விட அதிக ஆபத்தை எதிர்நோக்க வேண்டியிருந்ததால், 'பெண் பிள்ளைகள் ஆண் துணையுடன் செல்ல வேண்டும்' என்பதைப் போன்ற சில கலாச்சார அம்சங்கள் மறையத் தொடங்கின.

மிகைப்படுத்தப்பட்ட சாகசச் செயல்களினால் கவரப் பட்ட பெண்களும், போரில் பெரிதும் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சார்ந்த பெண்களும் ஆரம்ப காலத்தில் ஆயுதப் போரட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர் (எல்ரீரீஈ உறுப்பினருடனான கலந்துரையாடல், 25 மே 2001). சில சந்தர்ப்பங்களில் தனிப்பட்ட அனுபவம் ஒரு தூண்டுதற் காரணியாக இருந்துள்ளது (எல்ரீரீஈ உறுப் பினருடனான கலந்துரையாடல், 25 மே 2001). தொடக்கத் தில் சுதந்திரப் பறவைகள் அமைப்பானது ஒரு துணை இராணுவப் பிரிவை ஒத்ததாகவே இருந்தது.

1991க்கு முன்னர், இலங்கைப் படைகளுக்கெதிரான சண்டையில் புலிகளின் பெண் போராளிகள் காயமடைந் திருந்தபோதிலும், இந்திய இராணுவத்துக்கெதிரான சண்டையின்போதுதான் மரணங்கள் நிகழ்ந்தன (ஷோக், 1994: 166). எடுத்துக்காட்டாக, 1987 ஒக்ரோபருக்கும் 1990 திசெம்பருக்கும் இடையில் மொத்தம் 99 பெண்போராளி கள் இறந்தனர் (மேற்கூறிய அதே: 166). பெண்கள் படைப் பிரிவின் தலைவியான வசந்தி அல்லது சோதியா 1990இல் இயற்கையாக ஏற்பட்ட மூளைக்காய்ச்சலினால் மரண மடைந்தார் (அடெல், 1993: 54).

தமிழரின் ஆயுதப் போராட்டம் இருபத்துமூன்று (1977-2000) ஆண்டுகளுக்கும் மேலாக பழைமை வாய்ந்தது. ஆயுதமேந்திய பெண்களின் போராட்டக் காலம் சுமார் 17 (1983 - 2000) ஆண்டுகளாகும். 1983இல் தமிழருக்கெதிரான இனப்படுகொலையின் எதிர்விளைவுகளும், தொடர்கின்ற இராணுவ அடக்குமுறையும், அனேக தமிழ் இளைஞர்





களைப் போராளிக் குழுக்களில் இணையத் தூண்டின. ஆரம்பக் கட்டங்களில் பெண் போராளிகளின் மைய நிலை யங்கள் ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலும் உருவாக்கப் பட்டன.

1985இல் பெண் போராளிகளின் பல்வேறு மைய நிலையங்களும் ஒரு முழுமையான இணைப்பாக- எல்ரீரீஈ பெண்களின் இராணுவப் பிரிவாக உருவாக்கப்பட்டது (அடெல், 1993: 41). சமகாலத் தமிழர் வரலாற்றில் முதல் தடவையாக தமிழ்ப் பெண்கள் யுத்தப் பயிற்சி பெற்று, ஒரு புரட்சிகரப் போராட்ட அலகை உருவாக்கினர். பெண் களின் அமைப்புகள் பெண்கள் மத்தியில் பெருமளவு அரசியல் மற்றும் பிரச்சார வேலையில் ஈடுபட்டன (மேற் கூறிய அதே: 17-21). தேசிய விடுதலைப் போராட்டம் பற்றி யும், பெண்களின் அடக்குமுறை பற்றியும் பெண்கள் மத்தியில் விழிப்புணர்வை அதிகரிப்பதற்காகச் சுதந்திரப் பறவைகள் என்றழைக்கப்படும் செய்தித்தாளொன்றும் வெளியிடப்பட்டது. அதன் முதலாவது இதழ் 1984ஆம் ஆண்டு திசெம்பரில் வெளிவந்தது.

சுதந்திரப் பறவைகள் என்பது விரைவில் பெண்களின் அலகுக்கான ஒத்த பெயராகியது. குடாநாடு பகுதியளவு விடுவிக்கப்பட்ட பிரதேசமாகியபோது, பெண்கள் பிரிவின் நடவடிக்கைகள் பரந்த அடிப்படையைக் கொண்டன வாகத் தீவிரப்படுத்தப்பட்டன. 'சுதந்திரப் பறவைகள்' பெண்களின் நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், பயிற்சி நிலையங்கள், சுகாதார நிலையங்கள், ஆரம்பக் கல்வி நிலையங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒருங் கிணைத்து ஒத்திசைவித்தனர். அதேவேளையில் பெண் போராளிகள், மன்னாரிலும் வவுனியாவிலும் இலங்கைத் தரைப்படைக்கெதிரான நேரடிச் சண்டையில் தம்மை ஈடுபடுத்தினர் (மேற்கூறிய அதே: 34-38).

1986ஆம் ஆண்டு யூன் மாதம் 12ஆந் தேதியன்று அடம்பன் மோதலில் விக்டர் கொல்லப்பட்டார். இந்த மோதலில் பெண் போராளிகள் தீவிரமாகப் போரிட்டனர் (மேற்கூறிய அதே: 34). யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் முழுமையான கட்டுப்பாட்டை நிலை நாட்டுவதற்கான முயற்சிகளில் பெண்களும் ஈடுபட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாழ்ப்பாணக் கோட்டை, நாவற்குழி, கட்டுவன் மற்றும் வல்வெட்டித்துறையிலிருந்த இராணுவ முகாம்களுக்கருகில், முன்னரங்குகளிலும் பதுங்கு குழிகளிலும் கடமையிலிருந்த அனேக பெண் பிள்ளைகள் காயமடைந்ததுடன் தமது கைகால்களையும் இழந்தனர் (மேற்கூறிய அதே: 35-37).

மயிலியத்தனை மினி முகாம் தாக்குதல், காங்கேசன் துறை துறைமுக முகாம் தாக்குதல், குரும்பசிட்டி முகாம் தாக்குதல் மற்றும் கப்டன் மில்லரின் தலைமையில் இடம் பெற்ற முக்கியத்துவம் வாய்ந்த நெல்லியடித் தாக்குதல்கள் ஆகியவற்றிலும் பெண் போராளிகள் பங்குபற்றினர் (மேற் கூறிய அதே: 38-39). இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டதைத் தொடர்ந்து, பெண்களின் பிரிவுக்குத் தலைக்குமேல் வேலையிருந்தது. தொடக்கத்தில் பெண் களின் படையணி பிரச்சாரத்தில் தம்மை ஈடுபடுத்தியது. இந்தியாமீது மக்கள் வைத்திருந்த பொய்யான நம்பிக்கை யுணர்வை ஒழித்தல் அவர்களின் பொறுப்பாயிருந்தது. பகிஷ்கரிப்புகள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், வீதிப்போக்கு வரத்துத் தடைகள், மறியல்கள் என்பவை ஒழுங்குசெய்யப் பட்டன.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது பெண் போராளிகள் பெருந் துணிவுடன் போரிட்டனர் (மேற்கூறிய அதே: 34-38). இந்தியாவுக்கெதிரான யுத்தத்தில் முதலாவதாகப் பலியான புலி, ஒரு பெண் போராளியான 2ஆம் லெப்டினன்ட் மாலதி. அவர்தான் புலிகள் மத்தியில் பலியான முதலாவது பெண். அப்பூர்வாங்க மோதலில் கஸ்தூரி, தயா, ரஞ்சி ஆகிய வேறு மூவரும் உயிரிழந்தனர் (மேற்கூறிய அதே: 43-44).

சித்தங்கேணியில் இந்தியப் படையினர் சென்ற கவச வாகனத்தைப் பெண்போராளிகள் தாக்கி அதனை முழுமை யாக அழித்தனர் (மேற்கூறிய அதே: 61). மேலும் அவர்கள் திருநெல்வேலியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில், ஆகாயத்திலிருந்து குதித்த கமாண்டோக்களை நெஞ்சுரத் துடன் எதிர்த்துப் போராடினர் (மேற்கூறிய அதே: 59-60). வெலிஓயாவில் (மணலாறு) ஆண்களுடன் இணைந்து பெண்களும் நடத்திய கடுந்தாக்குதல் குறிப்பிடத்தக்கது (மேற்கூறிய அதே: 96).





முன்னாள் பெண் இராணுவத் தலைவிகளான சோதியா, மாலதி மற்றும் அகிலா ஆகியோரின் பெயரில் முழுநிறைவான காலாட் படையணிகள் உள்ளன. அவற் றுடன் காங்கேசன்துறையில் கடற்படைக் கப்பலொன்றைத் தகர்த்த அங்கயற்கண்ணியின் பெயரில் கடற்புலிப் பெண்கள் படைப் பிரிவொன்றும் உள்ளது (இலண்டனில் எல்ரீரீஈ தீவிர செயற்பாட்டாளருடன் கலந்துரையாடல், 25 யூன் 2000). தமிழ்ப் பெண் பிள்ளைகள் பெருந்தொகையாக எல்ரீரீஈ அமைப்பில் இணைந்துவருவதுடன், போரில் மிக முனைப்பான பங்கினையும் வகிக்கின்றனர். ஆனால் அவர் களுக்குத் தலைமைத்துவத்தில் அங்கத்துவம் அளிக்கப்பட வில்லை. அண்மையில் 2001ஆம் ஆண்டு ஏப்பிரலில் இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட 'ஒபரேஷன் அக்னிகில'[15] என்ற யுத்த நடவடிக்கையின் படு தோல்விக்குப் பிரதானக் காரணம், கேணல் சுதந்திரா வின் தலைமையிலான சோதியா படையணியினதும், கேணல் விதுஷா தலைமையிலான மாலதி படைப்பிரி வினதும் மூர்க்கமான எதிர்த்தாக்குதலாகும் (தமிழ் ரைம்ஸ், 25 மே 2001).

தமிழ்ப் பெண்கள் மத்தியில், போர்முனைப்பின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் சிங்களத் தேசிய சக்தி களின் அதிகரித்த அடக்குமுறையின் பின்னணியில் பார்க்க வேண்டும். ஓர் ஆணாதிக்கச் சமுதாயத்தினால் ஒரு காலத் தில் அடுக்களை என்ற கீழ்நிலைக்கு ஒதுக்கப்பட்டிருந்த அடக்கமான தமிழ்ப் பெண்கள், கல்வியினூடாக ஓரளவு முன்னேற்றமும் விடுதலையும் பெற்றனர். இப்போது அனேக தமிழ்ப் பெண்கள், அவர்களின் சகோதரிகளில் சிலர் சீருடையணிந்த இலங்கைப் படைகளினால் கொடூரமான முறையில் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்படுகின்ற அதே வேளையில், தாமே ஆயுதமேந்தி, எதிர்த்து நிற்கமுடியாத ஒரு போர்ப்படையாகத் தம்மை உருவாக்கிக் கொள்வதன் மூலம் புதிய விடுதலை மட்டங்களைச் சாதித்து வருகின் றனர். இப்போக்குத் தொடருமாயின் நெருங்கி வருகின்ற அச்சுறுத்தலை எதிர்நோக்குகின்ற தமிழ்ப் பெண்கள் மேலும் மேலும் பெருந்தொகையாகப் புலிச் சின்னத்தின் கீழ் அணிதிரள்வதற்கு நீண்டகாலம் எடுக்காது.

www.tamilarangam.net



பெண்ணிய விழுமியங்கள் 'தமிழ்த்தன்மை' பற்றிய பாரம்பரிய மற்றும் இடதுசாரிப் போதனைகளை விமர்சிக்கத் தூண்டியுள்ளன. 1980களில் தமிழ்ப் போராளி இயக்கங்களைச் சார்ந்த பெண் உறுப்பினர்கள், பெண்களின் சுய உரிமைகளின் பாதுகாவலர்களாகத் தம்மை உறுதிப்படுத்துவதற்கு இப்புதிய அரசியல் தளத்தைப் பயன்படுத்தியுள்ளனர். ஆண்களில் பெண்கள் தங்கியிருத்தலும், திருமணப் பங்காளிகளுக்கிடையில் சமத்துவமின்மையும் மாற்றப்பட வேண்டிய ஒரு பாதகமான நிலைமையாகக் காணப்பட்டது. எனினும் பெண்களின் விடுதலை பற்றிய கருத்துகளை முற்றுமுழுதாக அல்லது பிரதானமாக இராணுவ நோக்கத்துக்கு (துப்பாக்கி ஏந்திய பெண் புலி) பயன்படுத்துதல் நிராகரிக்கப்பட்டது.

1980களின் தொடக்கத்தில் எல்ரீரீஈயில் இருந்த முக்கிய பெண் உறுப்பினர்களில் ரஜனி திரணகமவும் ஒருவர். மருத்துவ விரிவுரையாளராக இருந்த அவர், யாழ்ப்பாணத்திலும் இலண்டனிலும் ஒரு பெண்ணிலைவாத முற்போக்கு எழுத்தாளராகவும் எல்ரீரீஈக்கு மொழிபெயர்ப்பாளராகவும் அறியப்பட்டவர். அவரின் அறிவாற்றலின் வளர்ச்சியின் விளைவாக எல்ரீரீஈயிலிருந்து அவர் அந்நியப்படுத்தப்பட்டாரென்பது எல்லோரும் அறிந்ததே. அவர் 1989இல் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டார். அதனை எல்ரீரீஈயினர்தான் செய்தனரென்ற குற்றச்சாட்டும் நிலவுகின்றது. அவரின் மற்றொரு சகோதரியான குமாரி சிவமோகனும் தமிழரின் விடுதலை இயக்கத்தில் பெண்கள் வன்முறையில் ஈடுபடுவதைப் பற்றிய கேள்வியை எழுப்பியவர். எப்படியிருந்த போதிலும் தற்போதைக்கு அதனை நியாயப்படுத்த முடியாதென்று அவர்கள் இருவரும் அதனை நிராகரித்தனர். அவர்களின் ஆய்வில் யாழ்ப்பாணத்தில் வன்முறையின் உபயோகம் ஆணாதிக்க வெறியின் ஒரு பகுதியாகவும் எனவே வன்முறையின் உபயோகம் பெண்களின் விடுதலையென்ற இலட்சியத்தைத் தோல்வியடையச் செய்வதாகவும் காணப்பட்டது. இதுவே யாழ்ப்பாண, மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின் அடிப்படை நிலைப்பாடாகவும் இருந்தது [UTHR(J) 1992: 71-96ல்.





1980களில் தோன்றிய தமிழ்ப் போராளி இயக்கங்களால் பயன்படுத்தப்பட்ட இந்தத் தாய்மையின் உருவங்கள் எவ்வாறு வன்முறையான யுத்தக் கற்பனையின் ஒரு வியக்கத்தக்க இணைப்பாக வார்க்கப்பட்டனவென்று மௌனகுரு விவாதிக்கின்றார். 'ஒரு கையில் தன்னியக்கத் துப்பாக்கியையும், மறுகையில் ஒரு பிள்ளையையும் ஏந்திய பெண்' (மௌனகுரு 1995: 164). இராணுவத்திலுள்ள ஆண்கள் மாவீரர்களாகவும், அவர்களின் தாய்மார் தமது பிள்ளைகளைத் தேசத்துக்காகத் தியாகஞ்செய்யும் வீரப் பெண்களாகவும் சித்திரிக்கப்படுகின்றனர். எனினும் இந்த உருவமைப்புக்கிணங்க, பெண்கள் எவ்வளவுதான் வீரமுடையவர்களாக இருந்தாலும் அவர்கள் கீழ்ப்படிதலுள்ளவர்களாகவும் கற்புடையவர்களாகவும் 'தூய்மை'யானவர்களாகவும் இருக்க வேண்டும். பெண்களின் உடை மற்றும் நடத்தை பற்றிப் புதிதாக விதித்துரைக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தொடர்பில், யாழ்ப்பாணத்தில் உள்ளூர்ப் பெண்கள் அமைப்பிற்கும் போராளிக் குழுக்களுக்குமிடையில் கடும் போராட்டம் இருந்துள்ளது (மௌனகுரு, 1995: 169). ராதிகா குமாரசுவாமியின் கருத்து பின்வருமாறு அமைகின்றது:

> ஆயுதமேந்திய கெரில்லாப் பெண்கள் தொடர்பில், எல்ரீரீஈயின் குறிக்கோள்நிலை தூய்மையும் கன்னித்தன்மையும் கொண்டதோர் உருவத்தை முன்வைக்கின்றது. பெண்கள் தூய்மையானவர்களாகவும் நல்லொழுக்கமுடையவர்களாகவும் வருணிக்கப் படுகின்றனர். அவர்களின் கற்புடைமை, அவர்களின் நோக்க ஒற்றுமை மற்றும் அவர்களின் சமூக வாழ்க்கைத் தியாகம் அவர்களுக்குப் பலத்தைக் கொடுக்கின்றது. அவர்களுக்குப் பாலியல் அல்லது சிற்றின்ப அனுபவங்கள் மறுக்கப்படுகின்றன. மறுத்தலின் அடிப்படையிலான தூய்மை என்ற இக்கருத்து, உலக நோக்குக்கிணங்கப் பெண்ணானவள் எவ்வாறிருக்க வேண்டுமென்ற சமூக உருவாக்கத்தின் ஒரு பகுதியாக இருத்தலை எல்ரீரீஈயின் ஆயுதமேந்திய கன்னிப்பெண் போராளி உறுதிப்படுத்துகின்றாள் (1996: 10).

எல்ரீரீஈ உருவாகிய தொடக்கக் காலத்தில், பெண்கள் சமூகத்தால் உருவாக்கப்பட்ட பாலினரீதியான கடமைகளை நிறைவேற்றுவதன் ஊடாகப் பெண்கள் ஆயுதப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போராட்டத்துக்குப் பங்களித்தனர். பெண்கள், எல்ரீரீஈ போராளிகளுக்கு மனவுறுதி தளராதிருப்பதற்கான ஆதரவையும், புகலிடத்தையும், உணவையும் வழங்கியதுடன் அப்போராளிகளின் பாதுகாப்பையும் உயிர்த்திருத்தலை நிலைப்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகித்தனர். அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதன்விளைவாகத் தடுத்துவைக்கப் படுதல், சித்திரவதை செய்யப்படுதல், சிலவேளை கொல்லப் படுதல் என்ற ஆபத்துகளைக்கூடப் பொருட்படுத்தாமல் இப்பொறுப்புகளை நிறைவேற்றினர். உண்மையில் அனேகமானப் பெண்கள், பாதுகாப்புப் படைகளினால் அத்தகைய சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுக் கடுமையான, நீண்ட விசாரணைகளுக்கும் சித்திரவதைகளுக்கும் உட்படுத்தப்பட்டனர். தடுத்து வைக்கப்பட்ட அனேகப் பெண்கள் நித்திரை இழக்கச் செய்யப்பட்டு, விசாரணைகளின் போது பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டனர். அதன் விளைவாக அனேகப் பெண்கள் தமது உயிரைத் துறந்தனர்.

மௌனகுருவின் கூற்றுக்கிணங்க, 1980களின் பிற்பகுதி வரை தமிழ்ப் போராளி இயக்கங்களில் பிரச்சாரத்திலும் மருத்துவப் பராமரிப்பிலும் நிதி திரட்டுதலிலும் மட்டுமே பெண்கள் ஈடுபட்டிருந்தனர். ஆனால் போர்புரிவதற்கான ஆண்களின் எண்ணிக்கை (இந்திய அமைதிப் படையின் ஆக்கிரமிப்பினாலும், அனேகத் தமிழர் அடைக்கலம் தேடி வேறு நாடுகளுக்குச் சென்றுவிட்டதனாலும்) குறிப்பிடத் தக்களவு குறைந்ததைத் தொடர்ந்து, இயக்கத்திலுள்ள பெண்கள் போராளிகளாகப் பயிற்றப்பட்டனர். இதன் விளைவாகப் பெண்களின் உருவாக்கம் 'வீரத் தாய்மார்' என்பதிலிருந்து 'பெண் வீராங்கனைகளாக' உருமாற்றங் கண்டது (1995: 163-164).

தமிழ்ப் போராளி இயக்கங்கள் யாவும், பெண்களின் பிரச்சினையை அவற்றின் அரசியல் நிகழ்ச்சி நிரல்களில் அடிமட்டத்திலேயே வைத்திருந்தன. முதலில் தமிழ் மக்கள் விடுவிக்கப்படவேண்டும். அதன் பின்னர் பெண்கள் விடுவிக்கப்படுவர். புரட்சியில் பங்குபற்றுகின்ற பெண்கள், தமது சொந்த நலன்களையும் உரிமைகளையும் தாங்களே முன்வந்து தேசியவாத இலட்சியத்துக்குக் கீழ்ப்பட்டதாக்க





வேண்டும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இது ஒரு மனமார்ந்த தெரிவின் விளைவாக இருக்கவில்லை.

எல்ரீரீஈயின் ஆயுதமேந்திய பெண் போராளிகளென்ற காரண காரிய நிகழ்வானது பெண்கள் பற்றிய பொதுவான சிந்தனை 'ஒட்டத்திற்கு எதிரானது' (ராதிகா குமாரசுவாமி 1996: 8). ஆனால் இலங்கைப் பெண்ணிலைவாதிகள் வேறுவகையில் எண்ணுகின்றனர். எடுத்துக்காட்டாகப் பெண்ணியத்திற்காகக் குரல்கொடுப்பவர்களில் முன்னணி வகிக்கும் ஒருவரான ராதிகா குமாரசுவாமி கூறுவதாவது:

1. பெண்கள் பற்றிய பண்டைக் காலத் தமிழ்க் கருத்து எவ்வளவுதான் எதிர்மறையானதாயிருப்பினும், வாழ்க்கையைக் கொண்டாடுவதாயிருந்தது. சுபிட்சம், பாலியல் குணங்கள், இசையிலும் கலைகளிலும் நாட்டம் என்பவை எல்லாம் திருமணமான பெண்களின் முக்கிய கட்டுப்பாட்டு அம்சங்களாயிருந்தன. மாறாக எல்ரீரீஈ சுயதியாகம், எளிமை, பால் வேறுபாடின்மை என்பவற்றைக் கருத்தியல்களாக முன்வைக்கின்றது. வாழ்வைவிட மரணமே கொண்டாடப்படுகின்றது.

2. பால் வேறுபாடின்மையென்ற எல்ரீரீஈயின் கருத்தியல் 'வீரப்பண்பு'களை மட்டும்தான் போற்றிப் புகழ்கின்றது. அது மக்களை ஒன்றிணைத்தல், சீராட்டி வளர்த்தல், மென்மை, பரிவு, சகிப்புத் தன்மை போன்ற 'பெண்மைப்பண்பின்' அடையாளங்களை மறுப்பதுடன் அழிக்கவும் செய்கின்றது.

3. எல்ரீரீஈயின் வாதமானது, பெண்கள் சுதந்திரமான மனிதர்கள் என்பதை ஏற்றுக்கொள்ள மறுப்பதுடன், அவர்கள் தங்கள் சொந்த அனுபவங்களிலிருந்து முடிவெடுக்கும் அதிகாரம் எதுவும் அவர்களை முகாமைத்துவப்படுத்தும் நிறுவனங்களுக்குக் கூட இல்லை என்று கூறுகிறது. தன்னிச்சையான முடிவுகளை எடுப்பதற்குப் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. அவளின் விடுதலை என்பது (தமிழ்த்) தேசியவாதத்திற்குப் பொருந்துகின்ற அளவுக்கு மட்டும்தான் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண்களுக்கெதிரான வன்முறை பற்றிய ஐ.நா. தொடர்பாளர் குமாரசுவாமியின் கருத்துகளைக் கேட்டபோது, அவர் பெண் போராளிகளென்ற எண்ணக்கரு பற்றிக் கவலை தெரிவித்தார். 'ஆயுதப் படைகளில் பெண்கள்' என்ற இக்கருத்து சமுதாயம் இராணுவமயப்படுத்தப்பட்டு உள்ளதென்பதைத்தான் எனக்குக் காட்டுகின்றது. அது உரிமைக்கான ஒரு பெரிய அடையாளமாக எனக்குத் தோன்றவில்லை. ஏனெனில் பெண்கள் கடும் கட்டுப்பாட்டைக் கொண்ட ஓர் அமைப்பினுள் செல்கின்றனர். அதில் பெண்களுக்காக முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே சுடுதல் ஒரு உரிமையென்று நீங்கள் நினைத்தாலன்றி அது உரிமையளிக்கின்ற ஒரு விடயமல்ல. இந்நிலைமை ஆராயப்படவேண்டுமென்பதுடன், சமுதாயத்துக்கு அது என்ன செய்கின்றதென்பதையும் பெண்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். எவரும் மோதலுக்குப் பிந்திய இலங்கையை எண்ணிப் பார்ப்பதாயில்லை (தி ஐலன்ட், 25 சனவரி 1998).

1999ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் தேதி சர்வதேசப் பெண்கள் தினம் கொண்டாடப்பட்டவேளையில், விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணியைச் (WFLT) சேர்ந்த சுகிர்தகலா தமது அறிக்கையில், முன்னைய வெற்றிகள் பல ஆண்டுகளுக்கு முன்னர் ஈட்டப்பட்டபோதிலும், பாலியல் சமத்துவத்துக்கான போராட்டம் தொடர்கின்றதென வாதிடுகின்றார். பின்வருவதில் இது சுருங்கக் கூறப்படுகின்றது:

> வடக்கிலும் கிழக்கிலுமுள்ள ஆண்கள் அரசியல் உரிமைகளுக்காகப் போராடுகின்ற அதேவேளையில், பெண்களும் சமூக அடக்குமுறைக்கும் சமுதாயத்திலுள்ள புராணகால நம்பிக்கைகளின் அடிப்படையிலான அடக்குமுறைகளுக்கும் எதிராகப் போராடுகின்றனர். சமூக அடக்குமுறைக்கு எதிரான பெண்களின் போராட்டம் தான் மிகவும் கடினமானதென்று கூறினால் அது மிகையாகாது.
>
> பெண் விடுதலைப் போராட்டமானது எந்தவொரு தேசிய விடுதலைப் போராட்டத்திலும் முக்கியமானதொரு பகுதி. ஆனால் சுருக்கமாகப் பெண் விடுதலை என்றால் என்ன? அது அரசின் அடக்குமுறையிலிருந்தும், சமூகப் பாகு





> பாட்டிலிருந்தும், ஆணின் பொருளாதாரச்சார்பு நிலையிலிருந்தும் பெண்களின் விடுதலையை உறுதிப்படுத்துதலாகும். விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணி இம்மூன்று முனைகளிலும் மும்முரமாகப் போராடுகின்றது.
>
> தமிழ்ப் பெண்களின் விழிப்புணர்வும், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் அவர்களின் குறிப்பிடத்தக்க பங்கேற்பும், தமிழ்ப் பெண்களின் வரலாற்றுக்கு ஒரு புதிய பரிமாணத்தை அளிக்கின்றன. பெண் போராளிகள் விடுதலை இயக்கத்தின் எல்லாப் பிரிவுகளுக்கும் பங்களிக்கின்றனர்.
>
> அவர்கள் கனரக இராணுவ வாகனங்களைச் செலுத்துதல், எல்லா வகையான நவீன, பாரிய ஆயுதங்களை இயக்குதல், இராணுவ உளவுப்பிரிவில் பணிபுரிதல், தெரிந்தெடுக்கப்பட்ட கடற்படையிலும் நீரில் மூழ்கி ஊடுருவும் படையிலும் இணைந்து செயற்படுதல் போன்ற, பாரம்பரியமாக ஆண்களுக்கேயுரித்தான ஆட்சிப்பரப்புகளில் தமது பங்களிப்புகளைச் செய்கின்றனர்.
>
> தமது ஆண் சகாக்களுடன் கடமைகளைச் சமமாகப் பகிர்ந்துகொள்வதன் மூலம் தாம் ஆண்களுக்குச் சமமான அந்தஸ்தை எட்டிவிட்டதைப் பெண்கள் வெளிப்படுத்துகின்றனர். இவ்வளர்ச்சி பெருமளவுக்குப் பழைமைவாதத் தமிழ்ச் சமுதாயம் பெண்களுடன் நடந்து கொள்ளும் முறையில் ஒரு துரித மாற்றத்தை ஏற்படுத்தியது.
>
> எல்ரீரீஈயின் தெரிந்தெடுக்கப்பட்ட கடற்படையான கடற்புலிகளின் பெண்கள் பிரிவு 1992 மார்ச்சில் உருவாக்கப்பட்டது. இன்று இப்பிரிவின் உறுப்பினர்கள் 150-200 குதிரைச்சக்தி கொண்ட இயந்திரங்கள் பொருத்தப்பட்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படுகின்ற விசைப் படகுகளை லாவகமாக இயக்குகின்றனர்.
>
> விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணி (WFLT) எல்ரீரீஈயின் பெண் உறுப்பினர்களால் 1990இல் தாபிக்கப்பட்டது. இம்முன்னணி தமிழ் ஈழத்தில் பெண்களின் சமூக மற்றும் அரசியல் முன்னேற்றம் தொடர்பான பல விடயங்களில் பணியாற்றுகின்றது. அவர்களின் நடவடிக்கைகளின் விளைவை விதவைகள் மறுமணம் மற்றும் பொருளாதார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அபிவிருத்தியில் தன்னிறைவை எட்டுவதற்கான பெண்களின் ஈடுபாடு போன்ற விடயங்களில் அண்மைக்காலத்தில் சமுதாயத்தின் உணர்வில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினூடாகக் காணமுடிகின்றது (தமிழ் கார்டியன், மார்ச் 13, 1999).

சமாதானச் செயல்முறையில் மிக முக்கியமான வளர்ச்சிகளில் ஒன்றுதான் பெண்களின் தீவிரப் பங்கேற்பை உறுதிப்படுத்துவதற்கும், சமாதானச் செயல்முறையின் எல்லாக் கட்டமைப்புகளிலும் பொறிமுறைகளிலும் நடவடிக்கைகளிலும் பால்நிலை அக்கறைகளை உள்ளடக்குவதற்குமாக பால்நிலை விடயங்கள் பற்றிய உபகுழு தாபிக்கப்பட்டுள்ளமை. இது சமாதானம் பற்றிப் பெண்களின் குழுக்களாலும் பெண்ணிலைவாதச் செயற்பாட்டாளர்களாலும் எடுக்கப்பட்ட கொள்கைமாறாத நிலைப்பாட்டிற்கும், பேச்சுவார்த்தை மேசையில் பால்நிலை அக்கறைகள் உள்ளடக்கப்பட வேண்டுமென்ற அதிகரித்த கோரிக்கைகளுக்கும் இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது. உண்மையில் எம்எஸ். பத்தி (M.S.Column) கூடச் சமாதானச் செயல்முறையில், பெண்களினதும் பால்நிலை விடயங்களினதும் முக்கியத்துவம் பற்றிய பல்வேறு கட்டுரைகளை வெளியிட்டுள்ளது.

அதேசமயம், இலங்கை அரசாங்கமும் எல்ரீரீஈயும் இந்த அக்கறைகளை ஒப்புக்கொண்டு, சமாதானச் செயல்முறையில் அவற்றில் கவனஞ்செலுத்துவதற்கான வாய்ப்பை எடுத்துள்ளமை மகிழ்ச்சி அளிக்கின்றது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தருணத்தில் பெண்களின் பிரச்சினைகளை ஒப்புக்கொண்டு, அவற்றை உள்ளடக்குவதற்கான இந்த முன்னெடுப்பின்மூலம் உலகின் ஏனையோருக்கு இலங்கை ஒரு முன்மாதிரியாக விளங்கக்கூடும்.

பால்நிலை விடயங்கள் பற்றிய உபகுழு 10 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது, இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஐந்து பெண்களும் எல்ரீரீஈயால் நியமிக்கப்பட்ட ஐந்து பெண்களும் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர். இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்களில் கலாநிதி குமாரி ஜயவர்தன, கலாநிதி தீபிகா உடகம, கலாநிதி பஸீலா எம். ரியாஸ், குமுதினி சாமுவேல், பைசுன் ஸக்காரியா ஆகியோர் அடங்குவர். தமிழினி சுப்பிரமணியம், காயா சோமசுந்தரம், பிரேமிளா சோமசுந்தரம், சுதாமதி





சண்முகராஜா, யாழிசா பாலசிங்கம் ஆகியோர் எல்ரீரீஈயின் பிரதிநிதிகளாவர் (சன்டே ஒப்சேவர், மார்ச் 30, 2003).

இலங்கைச் சனத்தொகையில் பெண்கள் அரைப் பங்கிற்கும் மேலாக இருந்த போதிலும், சமாதானச் செயல்முறையில் ஒப்பீட்டளவில் அவர்களின் குறைந்த பிரதிநிதித்துவம் அச்சத்தையும் கவலையையும் அளிப்பதாக உள்ளது. முரண்நகையாக மாறுபட்டவகையில் எல்ரீரீஈ சமாதான அறைகூவல் உட்பட எல்லா மட்டங்களிலும் பெண்களின் பங்கேற்பை உறுதிப்படுத்துவதில் தெற்கை விஞ்சியுள்ளது.

எல்ரீரீஈ பெண்கள் பிரிவின் பிரதித் தலைவியான செல்வி ரேவதி அத்தகைய பெண்களில் ஒருவர். ஓர் அரசியல் விஞ்ஞானப் பட்டதாரியான அவர் தற்போது வடக்கு, கிழக்குக் கொள்கைத் திட்டமிடல் மற்றும் சர்வதேச உறவுகள் நிறுவகத்தில் இணைந்துள்ளதுடன் (யப்பான் சமாதானப் பேச்சுக்களில் உருவான) அரசியல் விவகாரக் குழுவின் உறுப்பினராகவும் உள்ளார். அடுத்துக் கூறக் கூடியவர் சமாதானச் செயலகத்தின் பிரதிப் பணிப்பாளர் செல்வி கார்த்திகேசன் சுபைதி. அதே நிறுவனத்தின் மற்றுமோர் அரசியல் விஞ்ஞானப் பட்டதாரியான அவர் யப்பான் சமாதானப் பேச்சுகளில் உருவான அரசியல் விவகாரக் குழுவின் ஓர் உறுப்பினராயுள்ளார். முழுநிறைவான சமத்துவத்தையும், செயலுறுதிமிக்க நிர்வாகத்தையும் நோக்கிய பால்நிலை வேறுபாடற்ற சுதந்திரமான ஒரு முயற்சியாக எண்ணற்ற பெண்களின் நிரலில் இவர்கள் இருவரை மட்டுமே எல்ரீரீஈ தெரிவுசெய்துள்ளது.

தற்போதைய சமாதானச் செயல்முறைகளில் பெண்களின் பங்கேற்பிற்கான அங்கீகாரம் குறைந்தே காணப்படுகிறது. இதற்கு ஒருவகையில் பெண்களும் பொறுப்பேற்க வேண்டியவர்களே. ஏனெனில் அவர்கள் தங்களது பங்கேற்பின் அவசியத்தை அழுத்தமாக இத்தகைய அமைப்புகளில் வலியுறுத்தத் தவறிவிட்டனர். பெண்களின் குறைவான பங்கேற்புப் பற்றிய விடயமானது, பல்வேறு பெண்கள் அமைப்புகளின் கூட்டங்களில் அவ்வப்போது விவாதிக்கப்படுவதோடு நின்றுவிடுகின்றது (டெய்லி நியுஸ் - டிசெம்பர் 4, 2003).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சமத்துவத்தை வெறும் சட்டங்களினால் அல்லது அவற்றுடன் கூடிய பொருளாதார அல்லது கல்விசார்ந்த அபிவிருத்திகளினால் மட்டும் நிலைநாட்ட முடியாது. அவர்களுக்கிடையில் பரஸ்பர புரிந்துணர்வின்மூலமும், அடிப்படை மனிதாபிமான நியமங்களை அனைவரும் ஏற்றுக்கொள்கின்ற ஒரு மனமாற்றத்தின் மூலமும்தான் அதனைச் சாதிக்க முடியும். துரதிர்ஷ்டவசமாக இருபதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டில் கூட பெண் போராளிகள் இக்கட்டம் வரை முன்னேறியுள்ளனரென்று என்னால் கூற முடியாதுள்ளது.

## ஒரு விடுதலை இயக்கமாக எல்ரீரீஈ

தமிழ் மக்களின் பராதீனப்படுத்த முடியாத உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, எல்ரீரீஈ சிங்கள அரசின் அந்நிய ஆதிக்கத்துக்கெதிரான ஆயுதப் போராட்டமொன்றை நடத்தி வருகின்றது. சுயநிர்ணயக் கோட் பாட்டில் ஈடுபாடு கொண்டதும், நீண்டகாலமாக ஓர் அரசியல் - இராணுவப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளதுமான ஓர் அமைப்பென்ற வகையில் எல்ரீரீஈ ஒரு தமிழ்த் தேசிய விடுதலை இயக்கமென்ற அந்தஸ்தை ஈட்டியுள்ளது (ரவி ராஜுடன் நேர்காணல்: 6 மே 2001). ஈழத்திலும், சர்வதேசத் தமிழ்ச் சமூகத்தின் மத்தியிலும் எல்ரீரீஈ பரந்த அளவிலான பொதுமக்களின் ஆதரவை அனுபவிக்கின்றது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்கான எல்ரீரீஈயின் போராட்டம் தமிழர் பிரச்சினை சர்வதேசமயப்படுத்தப்படுவதற்குக் காரணமாயிருந்துள்ளதென்பது ஒரு மறுக்கமுடியாத உண்மை (விநாயகமூர்த்தியுடன் நேர்காணல்: 7 மே 2001).

தமிழ்ப் புலிகள் பயங்கரவாதத்தில் ஈடுபட்டுள்ள ஒரு சிறு குழுவினரான புரட்சிவாதிகளென்றும், அவர்கள் மக்களிலிருந்து அந்நியப்படுத்தப்பட்டவர்களென்றும் திரும்பத் திரும்ப இலங்கை அரசு கூறுகின்ற புனைவு அடிப்படையற்றது. எல்ரீரீஈக்கு 25 ஆண்டுகளுக்கு மேல் நீடிக்கின்ற இராணுவ மற்றும் அரசியல் வரலாறொன்று உள்ளதென்ற உண்மையே அவ்வமைப்பு தமிழ்த் தேசியவாதிகளின் பூரண ஆதரவை அனுபவிக்கிறதென்பதற்குப் போதுமான சான்றாக விளங்குகின்றது. ஆயுதமேந்திய





விடுதலைப் போராட்டங்களுக்குத் தம்மை அர்ப்பணித்துள்ள கெரில்லா இயக்கங்கள் மக்களின் ஆதரவும் ஊட்டமுமின்றி உய்யமுடியாதென்பதை வரலாறு காட்டியுள்ளது. அதன் நீண்ட ஆயுளும், வெல்ல முடியாத இராணுவப் படைகளுக்கெதிராகத் தொடர்ச்சியாகத் தளராது தொடர்கின்ற ஆயுதப் போராட்டமொன்றை நடத்துவதற்கான அதன் ஆற்றலும், அரசியல் நடவடிக்கைக்காக வெகுசனங்களைத் திரட்டுவதற்கும் ஒழுங்குசெய்வதற்குமான அதன் செயல் திறனும் அது அனுபவித்துவரும் அளப்பரிய ஆதரவை வெளிப்படுத்துகின்றன.

எல்ரீரீஈக்கு ஒரு நிலையான இராணுவம், பல்லாயிரக் கணக்கான விடுதலைப் போராளிகளைக் கொண்டதான ஒரு தேசிய விடுதலைப் படை, ஆற்றலும் பொறுப்பும் மிக்க ஒரு கட்டளை அமைப்பு, இராணுவப் பயிற்சி வசதிகள், நவீன ஆயுதங்கள், அதன் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் பெரும் ஆட்சிப் பரப்புகள் என்பவை உள்ளதுடன், மரபு ரீதியான யுத்தமுறையில் இலங்கையின் ஆயுதப்படைகளை எதிர்த்து நிற்பதற்கான உள்ளார்ந்த ஆற்றலும் செயல் திறமையும் அதற்குண்டு. மேலும் எல்ரீரீஈக்கு சமூக, பொருளாதார, கல்விசார்ந்த மற்றும் கலாச்சார நிறுவனங்களைக் கொண்டதோர் அரசியல் பிரிவு, சிவில் நிருவாக அலகுகள் மற்றும் சட்ட ஒழுங்குக்கான ஓர் இயங்குமுறை என்பனவும் இருக்கின்றன (நீரன், 6 யூன் 2000). சிக்கலான, பன்முகக் கூறுகளைக் கொண்ட எல்ரீரீஈயின் கட்டமைப்பு, செயல் திறன்மிக்க ஆயுத எதிர்ப்பையும் அரசியல் போராட்டத்தையும் நடத்துகின்ற அதேசமயம், நன்கு ஒழுங்கமைக்கப் பட்ட ஒரு நிருவாக முறைமையையும் பேணக்கூடியதாக அமைந்துள்ளது. அஃதன்றியும், எல்ரீரீஈ உலக நாடுகளின் பல்வேறு தலைநகரங்களிலும் செயற்படுகின்ற பாரிய சர்வதேச வலையமைப்பொன்றையும் கொண்டுள்ளது (மேற்கூறிய அதே).

எல்ரீரீஈ தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒரு விடுதலை இயக்கமென்ற உண்மையை ஒப்புக்கொள்வதற்கு இலங்கை இடையறாது மறுத்துவந்துள்ளது. அவ்வாறு ஒப்புக் கொள்ளுதல் தமிழரின் போராட்டத்தை ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாக ஏற்றுக்கொள்ளு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தலை இன்றியமையாததாக்கும். இலங்கையின் சிங்களர் களின் கண்ணோட்டத்தில் எல்ரீரீஈ எப்போதும் ஒரு பயங்கர வாத அமைப்பாகவும், தமிழரின் விடுதலைப் போர் ஒரு பயங்கரவாதப் போராகவும் இருந்துவந்துள்ளது (செனெ விரத்னவுடனான நேர்காணல்: 9, மே 2001).

இலங்கை அத்தகையதொரு தீவிர நிலைப்பாட்டை எடுத்து எல்ரீரீஈயைக் கண்டித்துள்ளபோதிலும், சிங்களத் தலைமைத்துவம் வேறு வழியில்லாமல் எல்ரீரீஈதான் தமிழர் மத்தியில் ஆதிக்கம்மிக்க அரசியல்-இராணுவச் சக்தி யென்ற உண்மையை ஒப்புக்கொண்டு தமிழ்ப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட அனேக சந்தர்ப்பங்கள் உள்ளன. இலங்கை எல்ரீரீஈயுடன் திம்புவிலும், டெல்லி யிலும், பெங்களூரிலும், கொழும்பிலும் பின்னர் மிக அண்மையில் தாய்லாந்திலும் நோர்வேயிலும் பெர்லி னிலும் பேச்சுவார்த்தைகளை நடத்தியது. எல்ரீரீஈயுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதானது, தமிழ்ப் புலிகள் தமிழரின் ஒரே பிரதிநிதித்துவ அமைப்பாயுள்ளதென்பதை உள்ளூர ஒப்புக்கொள்ளுதலை இன்றியமையாததாக்கு கின்றது. அரசியல் உரையாடல்களின்போது எல்ரீரீஈக்கு இந்த அந்தஸ்து வழங்கப்படுகின்றபோதிலும் பேச்சுகள் முடிவடைந்தவுடன் அது திடீரென்று மறுக்கப்பட்டு, எல்ரீரீஈ ஒரு பயங்கரவாத அமைப்பென்று முத்திரை குத் தப்படுகிறது. சமாதான வேளைகளில் எல்ரீரீஈயை ஒரு மக்களின் அமைப்பாகவும், யுத்த வேளைகளில் ஒரு பயங்கர வாத அமைப்பாகவும் கருதுவதில் முரண்படுகின்ற நிலை களுக்கு, அதன் கொள்கையை மாற்றுகின்ற இலங்கையின் இந்த விசித்திரமான மனப்பான்மையை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் (எல்ரீரீஈ உறுப்பினருடனான நேர் காணல்: மே 25, 2001).

இதுவரை இவ்வத்தியாயத்தில் நாம் மேற்கொண்ட ஆய்வின் மூலம் எம்மால் பின்வரும் முடிவுகளுக்கு வரக் கூடியதாக உள்ளது.

அடுத்தடுத்து வந்த சிங்கள அரசாங்கங்களின் பாகு பாடான கொள்கைகளுக்கும், தமிழரின் கோரிக்கைகளில் கவனஞ் செலுத்துவதற்குச் சிங்களப் பெரும்பான்மை





மறுத்தமைக்கும், மிதவாதிகளால் குறைந்தபட்சக் கோரிக்கை களைக்கூட வெல்லமுடியாமைக்கும் பதிலளிப்பாகத் தமிழர் போர்முனைப்பு எழுந்ததென்பதை இலங்கையில் தமிழர் போர்முனைப்பின் பரிணாமமும் வளர்ச்சியும் பற்றிய மேற்படி ஆய்வுரை காட்டுகின்றது. போர்முனைப் பைத் தூண்டிவிட்டதான மனக்கசப்பு 1970களின் தொடக்கத் திலிருந்தே வளர்ந்துவந்துள்ள அதேவேளையில், 'சிங்களம் மட்டும் சட்டத்திற்கும்' அரசாங்கத்தின் கல்விக் கொள்கை களுக்கும் எதிராகத் தமிழ் இளைஞர்கள் ஆர்ப்பரித்தெழுந் தனர். அவைதாம் போர்முனைப்பென்ற பெருநெருப்பைத் தூண்டிவிட்ட பொறியாக விளங்கின.

தொடக்கத்தில் தமிழ் இயக்கங்கள் தமது கோரிக்கை களிலும் அரசியல் உத்திகளிலும் மிதமானவையாயிருந்தன. ஆனால் தமிழ்த் தலைமைத்துவம் சிங்கள ஆட்சியாளர் களிடமிருந்து சில சலுகைகளைக்கூடப் பெற்றுக் கொள்ளத் தவறியபோது, பிராந்திய சுயாட்சிக்கான கோரிக்கையானது ஈழம் என்ற தனிவேறான ஓர் அரசுக்கான கோரிக்கையாக விசுவரூபமெடுத்தது. 1970களின் நடுப்பகுதிவரை தமிழ் அரசியல் தொடர்ந்தும் மிதவாதிகளின் ஆதிக்கத்தில் இருந்தபோதிலும் போர்முனைப்பின் தொடக்கங்களைக் காணக் கூடுமாயிருந்தது. 1979இல் மிதவாதிகளுக்கும் போராளிகளுக்குமிடையில் பகிரங்கமான பிளவு ஏற்பட்டது. இறுதியாக மிகவும் சக்திவாய்ந்த ஓர் அமைப்பாக எல்ரீரீஈ எழுச்சிபெற்றது. 1990ஆம் ஆண்டு முதல் போர்முனைப்பின் பெருமளவு எல்ரீரீஈ தலைமையின்கீழ் ஒரு சிவில் யுத்தமாகப் பரிணமித்தது.

குறிப்பாக இலங்கையின் மிக நெருங்கிய அயல் நாடான இந்தியாவின் உள்நாட்டு உள்ளக விவகாரங்களில் அதன் தாக்கம் தொடர்பிலும் இவ்விரு நாடுகளுக்குமிடையிலான உறவுத் தொடர்பை உருவாக்குவதில் அதன் பின்விளைவுகள் தொடர்பிலும் தமிழர் போர்முனைப்பின் பிராந்திய மற்றும் சர்வதேசப் பரிமாணங்களை ஆராய்ந்து பார்த்தல் இன்றியமையாதது. போராளி அமைப்புகளை வளர்த் தெடுப்பதிலும், அவற்றின் இலட்சியத்தை முனைப்படுத்திக் காட்டுவதிலும் இந்தியா பெரும் பங்கு வகித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## முடிவுக் குறிப்புகள்

1. 1960களிலும் 1970களிலும் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெற்ற பெரும்பாலான சாத்வீக அரசியல் நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்குபற்றினார்.

2. ஆசிரியர் அவ்வேளையில் யாழ்ப்பாணத்தில் இருந் ததுடன், தமிழ்ப் போராளிகளின் இந்த அரசாங்க எதிர்ப்பு அரசியல் நடவடிக்கைகள் பலவற்றில் பங்கு பற்றியுமுள்ளார்.

3. ஆசிரியர் தமிழ் இளைஞர் சம்மேளனத்துடன் (TYF) தொடர்பிலிருந்தவர். அச்சம்மேளனம் பிளவுபட்டு 'ரெலோ' உருவானதை அவதானித்தவர்.

4. ஆசிரியர் அவ்வேளையில் கிழக்கு மாகாணத்தில் இருந்த வர். அவரின் அமைப்பைச் சார்ந்தவர்களாக அவ்வேளை யில் யாழ்ப்பாணத்தில் இருந்த இரு உறுப்பினர்கள் (பாலேந்திரா மற்றும் இன்பம்) கைது செய்யப்பட்டுக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர். அவர்களின் சிதைக்கப்பட்ட உடல்கள் பாலமொன்றின்கீழ்க் காணப் பட்டன.

5. 1985 ஏப்பிரலில் எல்ரீரீஈயும் ஈழத் தேசிய விடுதலை முன்ன ணியில் (ENLF) இணைந்தது.

6. இந்நடவடிக்கைகள் ஈரோஸால் நடத்தப்பட்டன. இது 2001 ஏப்பிரலில் தமிழ்நாடு சென்னையில் ஈரோஸ் இரா ணுவத் தளபதி திரு. நேசனுடனான தனிப்பட்ட தொடர் பிலிருந்து பெறப்பட்டது.

7. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் (TULF) முறை சாத்வீகமானது. போராளிகளின் முறை ஆயுதப் போராட் டம்.

8. வடமராட்சி யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலயங்களில் ஒன்று. பிரபாகரன் அவ்வலயத்தைச் சேர்ந் தவர்.

9. கரையர் என்பவர் மீனவ சமூகத்தைச் சார்ந்தவர்.

10. 1990இல் எல்ரீரீஈ முன்னறிவித்தலெதுவுமின்றி யாழ்ப்பா ணத்திலிருந்து 75,000க்குக் கூடிய முஸ்லிம்களை இன ரீதி





யாகச் சுத்திகரித்தது. அந்த முஸ்லிம்கள் இப்போது சிலாபம், புத்தளம் மற்றும் வேறிடங்களில் அகதிகளாக வாழ்கின்றனர்.

11. வல்வெட்டித்துறைதான் பிரபாகரனின் பிறந்த இடம்.

12. எல்ரீரீஈயின் மனித அலை (ஓயாத அலைகள்) உத்தி முல்லைத்தீவு, பரந்தன், பூநகரி, மணலாறு (வெலிஓயா), மாங்குளம், வன்னிப் பிரதேசம் மற்றும் பளை இராணுவ முகாம்கள்மீது பயன் படுத்தப்பட்டது.

13. சங்ககாலத் தமிழ் இலக்கியம் (கி.மு. 500 - கி.பி. 200).

14. மேலும் விபரங்களுக்குப் பார்க்க, புறநானூறு (தமிழ் இலக்கியம், கி.மு. 500).

15. 2001 ஏப்பிரலில் வட மாகாணத்தில் இலங்கை இராணுவ நடவடிக்கையின் பெயர்தான் 'ஒபரேஷன் அக்னிகீல'. இதில் 2000க்கும் கூடிய இராணுவத்தினர் கொல்லப்பட்ட துடன் மேலும் அனேகர் காயமடைந்தனர்.

○○○



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அத்தியாயம்- 5

# இலங்கை - இந்திய உறவுகள்: பிராந்திய மற்றும் சர்வதேசப் பரிமாணங்கள்

முதலாவதாக இந்தியாவை நான் தெற்காசியாவில் பெரும் வல்லரசாகக் குறிப்பிடக்கூடிய போதிலும் பெரும் பிராந்திய வல்லரசாகவல்ல. அமெரிக்க ஆயுதங்களால் கடுமையாக இராணுவமயமாக்கப்பட்ட, துண்டாடப்பட்ட, பாகிஸ் தானும் ஒரு பெரும் பிராந்திய வல்லரசுதான். எனினும் இந்தியா பெரும் வளங்கள்மீது கட்டுப்பாட்டைக் கொண் டுள்ளதுடன், உலகின் நான்காவது பெரிய நிலையான இராணுவத்தையும் கொண்டுள்ளது. இந்தியா ஒரு பெரும் வல்லரசாகத் தனியொரு பகுதியில் உள்ளது. உலகில் அத்தகைய பிராந்திய வல்லரசு நாடாக சீனாவோ, தென் னாப்பிரிக்காவோ, இஸ்ரேலோ, மேற்கு ஐரோப்பிய நாடு களில் ஏதேனும் ஒன்றோ அல்லது தென் அமெரிக்காவோ எதுவுமில்லை. இதற்கு வலிமை குறைந்த வல்லரசுகள்மீது இந்தியாவின் மிதமிஞ்சிய மேலாதிக்கம் ஒரு காரணம். மற்றொன்று இந்தியாவின் கொள்கை வகுப்பவர்கள் இந்திய உபகண்டத்துக்கு அத்தகைய ஒரு நிலையை உருவாக்கு வதற்குத் திட்டமிட்டுச் செயற்பட்டுள்ளனர் (வில்சன், 1988:2)

இந்த அத்தியாயம் 1948ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவிய உறவுகளையும், இந்திய வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குவதில் அதன் தாக்கங்களையும், இலங்கையின் இன முரண்பாட்டின்பால் அதன், அணுகுமுறையையும், குறிப்பாகத் தமிழ்நாட்டின்





ஈடுபாடு தொடர்பாகவும் ஆராய்கின்றது. அது முரண் பாட்டின் சர்வதேசப் பரிமாணங்களையும், அதன்மீதான இந்தியாவின் அக்கறைகளையும் கூட ஆராய்கின்றது. ஈடுபாடுகளைக் கொண்டனவாக இவ்வத்தியாயத்தில் ஆராயப்பட்டுள்ள ஏனைய நாடுகள் ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, இஸ்ரேல், பாகிஸ்தான், சீனா ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்திலிருந்தே இந்தியாவின் பாதுகாப்புக்கு இலங்கை கேந்திர முக்கியத் துவமுடையதாகக் காணப்பட்டுள்ளது. இந்தியாவுக்கு மிக அண்மையிலுள்ள இலங்கை, உலகின் மிகச்சிறந்த இயற்கைத் துறைமுகங்களில் ஒன்றான திருகோணமலையை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஓரிடத்தில் பெற்றுள்ளது. இந்தியக் கடற்படையின் இளைப் பாறிய தளபதியொருவரின் வார்த்தைகள் இதனைச் சிறப் பாக எடுத்துரைக்கின்றன:

> ஐக்கிய இராச்சியத்துக்கு (பெரிய பிரித்தானியா) அயரே (அயர்லாந்து) போன்று அல்லது சீனாவுக்குத் தாய்வான் போன்று இந்தியாவுக்கு அதேயளவு முக்கிய மானது இலங்கை. இலங்கை நட்புறவானதாக அல்லது நடுநிலை யானதாக இருக்கும்வரை இந்தியா எதைப்பற்றியும் கவலைப்படத் தேவையில்லை. ஆனால் இந்தியாவுக்கு விரோதமான ஒரு வல்லரசின் ஆதிக்கத்தின்கீழ் இத்தீவு வருகின்ற ஆபத்து ஏதேனும் இருக்குமாயின் இந்தியாவின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளைவிக்கின்ற அத்தகைய ஒரு நிலைமையை இந்தியாவால் சகித்துக் கொள்ள முடியாது (கவுல் 1974: 147).

இவ்வத்தியாயம் இலங்கையின் இன முரண்பாட்டில் இந்தியாவின் கொள்கைகளையும் ஈடுபாட்டையும்கூட ஆய்வு செய்கின்றது. இலங்கை அரசாங்கமும், தமிழ்ப் போராளிகளும், தமது இன முரண்பாட்டைத் தீர்த்துக் கொள்ள முடியாதிருந்ததனால், இந்தியாவின் கொள்கை களும் அதன் ஈடுபாட்டின் தன்மையும் (குறிப்பாக 1983இன் பின்னர்) பல்வேறு தடவை மாற்றப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இந்திய மேலாதிக்கம்

உபகண்டத்தின்மீது இந்திய மேலாதிக்கமென்று ஒருவர் கூறுகின்றபோது நாம் எண்ணற்ற காரணிகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும். ஒன்று, கலாச்சார ஆதிக்கம். இந்தியாவானது இலங்கை, நேபாளம், பூட்டான், பங்களா தேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய அதன் எல்லையை ஒட்டிய நாடுகளை ஒன்றுபட்ட இந்தியாவின் கலாச்சார வெளிப்பாடுகளாகக் கருதுகின்றது (வில்சன் 1988:3). நேரு அவரின் சிறைச்சாலைச் சிந்தனைகளில் இந்தியாவை 'கலாச்சாரங்களின் ஐக்கியம்' என்று விவரிக்கின்றார். உறுதிப்பாடற்ற உள்நாட்டு நிலைமைகளில் வெளிநாட்டு அபாயம் இந்தியாவின் அரசியற் கட்டமைப்புகளுக்கு ஏதேனும் கலக்கத்தை ஏற்படுத்தலாம். உறுதிப்பாடற்ற சர்வதேச நிலைமைகளில் வெளிநாட்டு ஊடுருவல்பற்றிய அண்டைநாடுகளின் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் குறிக்கோள்கள் குறித்து இந்தியாவின் ஆளும் வர்க்கம் ஐயம் கொண்டுள்ளது. மேற்கண்ட காரணிகள் இந்திய உப கண்டம் தனியொரு கலாச்சார ஆள்புலமென்ற கருத்தைப் பிராந்தியத்தின்மீது இந்தியாவின் மேலாதிக்கத்தைத் தீவிர மாக வலிந்து உறுதிப்படுத்துகின்றது.

பிரித்தானியாவின் வாரிசான இந்தியா, ஆதிக்கம் மிகுந்த வாரிசுதாரர்களான, இந்தியத் தேசிய காங்கிரசின் உறுப்பினர்களும் அவர்களின் கட்சி நிர்வாகத்தினரும் வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுவதில் கலாச்சார மற்றும் தந்திரோபாயக் கடமைகளைக் கவனத்தில் கொண் டனர். 1947 மார்ச்-ஏப்பிரலில் புதுடெல்லியில் நடைபெற்ற ஆசிய உறவுகள் மாநாட்டில் முறையிடுகையில் நேரு, "அயல்நாடுகள் கலாச்சாரரீதியாகக்கூட ஐரோப்பாவை நோக்குகின்றனவேயன்றி, கடந்த காலத்தில் அவை பெரு மளவுக்குப் பயன்பெற்ற அவற்றின் சொந்த நண்பர்களையும் அயலவர்களையும் (நேரு கருதியது இந்தியாவை) அல்ல" என்று கூறினார். ஒரு குறுகிய காலத்தினுள் இந்தியப் பிரதமர், எவ்வளவுதான் நடுநிலைவாதம் பற்றியும், அணி சேராமை பற்றியும் பேசியபோதிலும், வலிமைகுறைந்த அயல்நாடுகளை இந்தியாவின் மேலாதிக்கத்தின்கீழ் கொண்டுவந்தார். 1949ஆம் ஆண்டு ஆகஸ்டில் இந்தியா





பூட்டானுடன் தொடர்ச்சியான சமாதானத்துக்கும் நட் புறவுக்குமான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டது. இந்தியா பூட்டானின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட மாட் டோம் என்று உத்தரவாதமளித்தது. இதற்குப் பிரதிபல னாகப் பூட்டான் தனது தரப்பில் வெளிநாட்டு உறவுகளில் இந்தியாவின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்போம் என்று உறுதியளித்தது (வில்சன், 1989: 89).

இந்திரா காந்தியின் தலைமையின்கீழ் இந்தியா, அவரின் தந்தையான நேரு சாதித்ததற்கு அப்பால் பல்வேறு நட வடிக்கைகளை எடுத்தது. அவை உபகண்டத்தில் இந்தியா வின் வெறும் ஆதிக்கப் பங்கையன்றி, மேலாதிக்கத்தைத் தாபிக்கும் நோக்குடன் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப் பட்டன. 1977-1979 காலப்பகுதியில் மொரார்ஜி தேசாயின் ஜனதா அரசாங்கத்தில் திருமதி காந்தி எதிர்க்கட்சியிலிருந்த வேளையில், 'பூட்டான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் போன்ற சின்னஞ்சிறு நாடுகள்கூட எம்மை ஏளனப்படுத்தும் அளவுக்கு' இந்தியாவின் வெளி விவகாரக் கொள்கை அயல் நாடுகளைத் திருப்திப்படுத்தும் வகையில் இருப்பதாகக் குற்றம் சுமத்தி, தனது கொள்கைகளைச் செயற்படுத்து வதற்கு அடித்தளமிட்டார் (வில்சன், 1989: 90). பாகிஸ்தான் சனாதிபதி யாஹியாகானின் கொடுங்கோன்மையிலிருந்து பங்களாதேஷை விடுவித்தார். பங்களாதேஷிலிருந்து ஒரு கோடி அகதிகள் இந்தியாவினுள் புகுந்ததனால் இவ் விடயத்தில் அவருக்கு மாற்றுவழி இருக்கவில்லை. இதற்கு ஓராண்டுக்கு முன்னர் 1971ஆம் ஆண்டு ஆகஸ்டில் திருமதி காந்தி சோவியத் சோசலிசக் குடியரசுடன் நட்புறவு ஒப்பந்த மொன்றில் கைச்சாத்திட்டிருந்தார். அதில், கைச்சாத்திட் டிருந்த நாடுகளில் ஒன்று தாக்கப்படுமாயின் மற்றது அதன் உதவிக்கு வர இரு தரப்புக்களும் உடன்பட்டன. எனினும் அவ்வுடன்படிக்கை அத்தருணத்தில் கலாச்சார தந்திரோ பாய உறவை நோக்கிய ஓர் முனைப்பாக இருக்கவில்லை.

## இந்தியாவின் மொன்றோ சித்தாந்தம்

திருமதி காந்தி பங்களாதேஷ் யுத்தத்தைத் தொடர்ந்து, அளப்பரிய வெற்றி பெற்று அறுதிப்பெரும்பான்மையுடன் பதவியில் வலுவாக அமர்ந்தபோதும் (1972-77), பின்னர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜனதா கட்சி அரசாங்கத்தைத் தோற்கடித்து அவர் மீண்டும் பிரதமராகியபோதும் (1979-84), இந்தியாவிற்கு ஒரு பிராந்திய வல்லரசின் மேலாதிக்க ஆட்சிக்கான உறுதியான திட்டவடிவம் கொடுக்கப்பட்டது. தெற்காசியா குறித்த மன்றோவின் சித்தாந்தத்தின்மீது இந்திராகாந்தி அதிக கவனம் செலுத்தினார் (வில்சன், 1989: 91).

இந்தியாவின் கௌரவத்திலும் அதிகரித்துவந்த அதன் இராணுவப் பலத்திலும் ஏற்பட்ட மாற்றத்துடன் இணைந்ததாக இராசதந்திரப் பாங்கிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றுக்கு இந்தியாவின் தலைமைத்துவ மாற்றமும் காரணமாயிருந்தது. இக்காலப்பகுதியின் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய ஓர் ஆய்வில் சுர்ஜித் மான்சிங் 'இந்தியாவின் சமாதானத்துக்கான தேடலை' பிரதமர் காந்தியின் கீழான தனிச்சிறப்புமிக்க பண்பாகக் காண்கின்றார். இந்தியாவின் புதிய பாணியின் சூழமைவில் சுதந்திர இந்தியாவின் முன்னைய தலைவர்களுடன் திருமதி காந்தியின் பாங்கை ஒப்பிடுகையில் மான்சிங் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: 'அதிகாரத்தின் மீதான இந்தியாவின் பேராவல் அதன் முந்திய அதிகாரமின்மையின் ஓர் எதிர்விளைவு. மீளாய்வுக் காலப்பகுதியில் அது அதிகாரத்துக்கான ஒரு தேடலாகியதற்குப் பிரதானக் காரணம் இந்திராகாந்திதான். அன்பைப் போதித்த மகாத்மா காந்திக்கு மாறாக, தார்மீகச் செல்வாக்குடன் திருப்தியடைந்த ஜவஹர்லால் நேருவுக்கு மாறாக அவர் அதிகாரத்தை மதித்தார்' (மான்சிங், 1984: 2).

திருமதி காந்தியின் பதவிக் காலத்தை ஒட்டுமொத்தமாக நோக்குகின்றபொழுது, 'சர்வதேச உறவுகளில் 'அதிகாரம்'தான் தீர்மானிக்கும் சக்தி என்பதை இந்திராகாந்தி கண்டுகொண்டமையே இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைக்கு அவரின் பிரதானப் பங்களிப்பாயிருந்தது' (மான்சிங், 1984: 32). அதனைப் பின்பற்றியவரான பிரபல்யம் பெற்ற சனாதிபதி ரிச்சட் நிக்ஸன் இப்பண்புத் திறத்தை உறுதிப்படுத்துகின்றார் - 'அவர் உண்மையில் அதிகார அரசியலை இந்திராகாந்தி ஈவிரக்கமின்றிப் பின்பற்றினாரெனக் கருதினார்' (கிஸ்ஸிங்கர் 1979: 879).





இந்தியா தனது 'அதிகார அரசியல்' நடவடிக்கையை முழுமையானதாக ஆக்குவதற்கு உப கண்டத்தின் ஏனைய நாடுகளிடமிருந்து குறிப்பிட்ட சில அணுகுமுறைகளை எதிர்பார்த்தது. அதாவது, இந்தியாவின் நலன்களுக்கெதிரானவையென பொருள் கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை அண்டைநாடுகள் தவிர்க்கவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. பிராந்தியத்தில் உறுதிப்பாடின்மைக்கும் உட்பூசலுக்கும் மூலகாரணமாயிருப்பது 'வெளிப்புறச் சக்திகளின்' தலையீடென இந்தியா நம்பியதனால், பிராந்தியத்தில் அதன் முக்கிய நலன்களுக்குத் தீங்கானவையென அது தீர்மானித்த நடவடிக்கைகள்மீது ஒரு வகையான 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்த அது முனைந்தது (மான்சிங் 1984: 27 மற்றும் 41).

இந்தியாவுக்கு அதன் அதிகாரத்தை முனைப்படுத்திக் காட்டுவதில் உதவும்பொருட்டு, திருமதி காந்தி 1968இல் இந்தியாவின் முதலாவது வெளிநாட்டு உளவு ஏஜன்சியான ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவை (RAW) தாபித்தார் (மான்சிங் 1984: 290). 'ரோ' பிரதமரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் வைக்கப்பட்டது. இந்த ஏஜன்சிதான் கிழக்கு பாகிஸ்தானில் பங்களாதேஷ் உருவாகுவதற்கு வழிவகுத்த நிகழ்ச்சிகளில் 1970களின் பிற்பகுதியிலும், 1980களில் இலங்கையிலும் இந்தியாவிலும் தமிழருக்கு ஆதரவான இரகசியமான நடவடிக்கைகளிலும் தீவிரமான பங்கு வகித்தது. திருமதி காந்தியின் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட அவசர காலச் சட்டத்தின்கீழ் காங்கிரசுக்கெதிரான பல்வேறு தலைவர்கள் பலவிதமான நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டார்கள். எதிர்க்கட்சியினர் இந்த சம்பவத்தை தமக்குத் தொந்தரவு கொடுப்பதற்காகவே 'ரோ' உள்நாட்டு அரசியலில் பயன்படுத்தப்பட்டதாகக் குற்றம் சுமத்தினர். இதன் மூலம் 'ரோ' ஒரு சர்ச்சைக்குரிய அமைப்பாகவும் பார்க்கப்பட்டது (மேற்கூறிய அதே).

1983ஆம் ஆண்டு யூலை இனக்கலவரங்களும், அதனையடுத்து சில நாடுகளிலிருந்து இராணுவ உதவியை நாடுவதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிக்கின்றது என்ற அறிவிப்பும், இலங்கை அரசின் நடவடிக்கைகளுக்குப் பதில் நடவடிக்கையாகப் பிராந்தியப் பாதுகாப்புப் பற்றிய அதன்

www.tamilarangam.net



கொள்கைத் திட்டமொன்றை, 'இந்திராவின் கொள்கை' என்று பெருமையுடன் பேசப்பட்ட ஒரு கொள்கைத் திட்டத்தை உருவாக்கக் காரணமாக அமைந்தது. இந்தக் கொள்கைத் திட்டமானது பல்வேறு ஆக்கக்கூறுகளைக் கொண்டதென பிரபலமான இந்தியப் பத்தி எழுத்தாளரொருவர் விவரித்தார். அவையாவன:

1. 'தெற்காசிய நாடொன்றின் உள்நாட்டு முரண்பாடொன்றில் தலையிடும் நோக்கம் இந்தியாவுக்கில்லையென்பதுடன் வேறு நாடுகளின் தலையீட்டையும் அது வன்மையாக எதிர்க்கின்றது'.

2. 'எந்தவொரு தெற்காசிய நாட்டிலும் நிலவுகின்ற முரண்பாடொன்றில், வெளிப்புறத் தலையீடானது மறைமுகமாகவோ அல்லது வெளிப்படையாகவோ இந்திய விரோதக் கொள்கை எதனையும் கொண்டிருக்குமாயின், அத்தலையீட்டை இந்தியா சகித்துக்கொள்ளாது. ஆகவே தெற்காசியாவில் உள்ள எந்த ஒரு அரசாங்கமும், இந்திய எதிர்ப்புச் சார்புடைய எந்தவொரு நாட்டிடமும் இராணுவ உதவியைக் கேட்கக்கூடாது'.

3. 'தெற்காசிய நாடொன்றுக்குப் பாரதூரமான உள்ளக முரண்பாட்டு நிலைமையொன்றை அல்லது சட்டபூர்வமாகத் தாபிக்கப்பட்ட ஓர் அரசாங்கம் சகித்துக்கொள்ள முடியாத ஓர் அச்சுறுத்தலைக் கையாள்வதற்கு வெளிப்புற உதவி உண்மையாகத் தேவைப்படின், இந்தியா உட்பட அயல்நாடுகள் ஒன்றின் உதவியை அது கேட்க வேண்டும். அத்தகையதோர் எதிர்பாராத நிகழ்வின்போது இந்தியாவை விலக்கிவைப்பதானது, சம்பந்தப்பட்ட அரசாங்கத்தின் ஓர் இந்திய விரோத நடவடிக்கையாகவே கருதப்படும் (குப்தா 1983: 20-21).

இந்திரா சித்தாந்தத்தின் ஒரு முக்கிய அம்சம்தான் வெளிநாட்டு உதவியைக் கோரக்கூடிய சூழ்நிலைகள் தொடர்பானது. வெளிநாட்டு உதவியைக் கோருதல் இந்திய விரோதச் சார்புடன் செய்யப்படுமாயின் இந்தியா அதனை அனுமதிக்காது. இந்தியாதான் அதனை முடிவு





செய்யும் நடுவர். இந்தியாவின் நலன் மதிக்கப்பட வேண்டுமென்று பிராந்தியத்துக்கு வெளியேயுள்ள நாடுகளுக்கான ஓர் செய்தியாகவும் அது இருந்தது. கிடைக்கின்ற தகவல்கள் சிறிது குழப்பமளிக்கின்றதாக உள்ளபோதிலும் வெளிப்புற உதவிக்காக இலங்கையால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் வேண்டுகோளையும், அதற்கான பதிலளிப்புகளையும் நுணுகி ஆராயத் தூண்டுகின்றன.

கொழும்பிலிருந்து ஸ்டுவர்ட் சிலேவிங்கின் 1983ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2ஆந் தேதியிட்ட UPI அறிக்கையொன்று, இன வன்செயல்களைத் தொடர்ந்து வெளிநாட்டுத் தலையீடு பற்றி அரசாங்கம் அச்சமடைந்திருப்பதாகவும், 'பாகிஸ்தான், பங்களாதேஷ், பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளிடம் இராணுவ உதவிக்கான உத்தரவாதங்களைக் கோரியிருப்பதாகவும் தெரிவித்தது. பாகிஸ்தானும் பங்களாதேசும் சாதகமாகப் பதிலளித்துள்ள அதேவேளையில், ஐக்கிய அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் தூதரகங்கள் தத்தமது அரசாங்கங்களின் அறிவுறுத்தல்களை எதிர்பார்த்திருப்பதாகவும் அவை (அரசாங்க தரப்புகள்) கூறின' (திசாநாயக்க, 1983: 97).

இந்நிகழ்ச்சிகள் பற்றி விளக்கமளித்த ஜனாதிபதி ஜயவர்தன, இனக் கலவரங்களில் வெளிநாட்டுச் சக்திகளின் ஈடுபாட்டிற்கான சாத்தியம் இருப்பதாக 1983ஆம் ஆண்டு யூலை மாதம் 26ஆம் தேதியளவில் தமக்குத் தகவல் கிடைத்ததாகத் தெரிவித்தார் (ரட்னதுங்க, 1988: 130-131). இச்சாத்தியத்தை ஏற்றுக்கொண்ட இலங்கை அரசாங்கம், தன்னைப் பலவந்தமாகக் கவிழ்ப்பதற்கான ஒரு முயற்சி இருக்குமாயின் வெளிநாடுகளில் ஆயுத உதவிகளைக் கோருவதெனத் தீர்மானித்தது. எனவே வெளிநாட்டு அமைச்சினூடாக நட்பு நாடுகளுக்கு 'இக்கட்டுச் சமிக்ஞைகள்' விடுக்கப்பட்டன. அவை சமிக்ஞைகளாக இருந்தனவேயன்றித் திட்டவட்டமான கோரிக்கைகளாக இருக்கவில்லை. தமிழ்நாடு இந்த விடயத்தில் அக்கறையுள்ள ஒரு தரப்பாயிருந்ததனால் இந்தியாவிடம் கேட்கப்படவில்லை. வெளிநாட்டு ஈடுபாடு பற்றிய அச்சுறுத்தல் 1983ஆம் ஆண்டு யூலை 29ஆந் தேதியளவில் நீங்கிவிட்டதனால், இவ்விடயத்தைத் தொடர வேண்டிய தேவை இருக்கவில்லை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்றும், மேலும் 'திருமதி காந்திக்கு நாம் சங்கடம் ஏற்படுத்த விரும்பவில்லை' (மேற்கூறியது: 132) என்றும் ஜனாதிபதி கூறினார்.

குப்தா (1983: 20) குறிப்பிடுகின்றவாறு, 'இந்தியப் பிராந்தியப் பாதுகாப்புக் கொள்கையென்று பொருள் கொள்ளக்கூடியதான இந்தியாவின் நிலைப்பாடு, சம்பந்தப் பட்ட அனைத்துத் தரப்பினராலும் உடனடியாக மறைமுக மாகவாவது ஏற்றுக்கொள்ளப் பட்டதென்பது புது டெல்லிக்குக் குறிப்பிடத்தக்களவு திருப்தியளித்தது'. அதே அறிக்கைக்கிணங்க, பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற் காசிய நாடுகளின் கூட்டமைப்பின் (சார்க்) கூட்டமொன்றுக் காக அப்போது புதுடெல்லியிலிருந்த பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் வெளிநாட்டு அமைச்சர்கள் (இந்திய வெளி விவகார அமைச்சர் லோக் மற்றும் ராஜ்ய சபாவில்[1] அவரின் அறிக்கையை விடுத்தவேளையில்) அவருடனான உத்தி யோக பூர்வமற்ற உரையாடலொன்றின்போது, இலங்கை யிடமிருந்து இராணுவ உதவிக்கான கோரிக்கையெதுவும் அவர்களின் அரசாங்கங்களுக்குக் கிடைத்தாலும் கூட, சிங்கள - தமிழ் முரண்பாட்டில் ஈடுபடுவதற்கு அவர்கள் விரும்பமாட்டார்களென்று தெளிவாகக் கூறியிருந்தனர் (மேற்கூறியது: 21). அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தூது வரான மேரியன் கிறீக்மோர் இலங்கையிடமிருந்து உதவிக் கான கோரிக்கையெதுவும் அமெரிக்க அரசாங்கத்துக்குக் கிடைக்கவில்லையென்றும், இலங்கையின் முரண்பாட்டில் ஈடுபடுவதற்கு வாஷிங்டன் விரும்பவில்லையென்றும் இந்திய வெளிநாட்டு அமைச்சுக்கு உறுதியளித்திருந்தார். பிரித்தானியாவால் இந்தியாவுக்கு அதேவகையான உறுதி வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது (மேற்கூறியது: 21).

இந்திராவின் சித்தாந்தம் அல்லது மொன்றோவின் சித்தாந்தம் என்று சொல்லப்படும் சித்தாந்தங்களுக்கு ஓர் உள்ளடக்கத்தையும் நம்பகத்தன்மையையும் கொடுத்ததன் மூலம், வேறுவிதமான சர்வதேசத் தலையீடுகளை இந்தியா வால் தடுக்க முடிந்தது. எனினும் அத்தகைய சித்தாந்தங்கள் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு பெருக்கங்களுடன் தொடர்ந்து வளர்ச்சியடைவதற்கான போதிய நெகிழ்வுத்தன்மை யுடையவை. 'சித்தாந்தத்தில் மற்றுமோர் ஆக்கக்கூறாக





இருந்தது யாதெனில், இந்தியாவுக்கும் தெற்காசிய பிராந் தியத்தில் உள்ள அதன் அயல்நாடுகளுக்குமிடையில் எப் போதும் ஒன்றுடன் ஒன்று என்ற நேரடி உறவு இருக்க வேண்டும். அதாவது பிராந்தியத்திற்குள் அல்லது பிராந் தியத்துக்கு வெளியேயுள்ள அரசுகளின் மத்தியஸ்தம் எதுவுமின்றிப் பிரச்சினைகள் இருதரப்பு ரீதியாகத் தீர்க்கப் பட வேண்டும். இச்சித்தாந்தம் இந்தியாவின் தலைமைச் சிறப்பையும், பிராந்திய விவகாரங்களில் முடிவெடுக்கும் அதன் உரிமையையும் வலியுறுத்தும் நோக்குடையது' (ராம் 1989: 119-120). அவ்வாறான ஒரு நிலையில் 1983ஆம் ஆண்டு யூலையில் கலவரங்கள் வெடித்ததைத் தொடர்ந்து, ஒரு குறுகிய காலத்தில் இந்தியாவின் மத்தியஸ்தத்திற்கான கோரிக்கையை இலங்கை ஏற்றுக்கொண்டது. அத்தருணத் திலிருந்து இந்தியா பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்தின் மீதும் விளைவின்மீதும் தீர்க்கமான ஒரு பங்கைப் பிரயோ சித்தது.

1983ஆம் ஆண்டு யூலை இனப்படுகொலையும், அத னைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் சில நாடுகளில் இருந்து இராணுவ உதவிகளைக் கோருவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகளும் பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கு எதிரானது என இந்தியா சுட்டிக்காட்டியது. மேற்கண்ட விடயத்தை இந்தியா சொன்ன விதமானது ஒரு புதிய சித் தாந்தத்தைக் கோடிட்டுக் காட்டியது. அதுவே பிராந்தியப் பாதுகாப்பு என்றழைக்கப்பட்ட தெற்காசியாவிற்கான பாதுகாப்பாகும். இதனையே 'இந்திராவின் சித்தாந்தம்' என்று அழைக்கின்றனர்.

இதில், மூன்று அம்சங்கள் இருந்தன. ராஜீவ் காந்தி அவற்றில் இரண்டை இலங்கையின் நிலைமைக்குப் பிர யோகித்தார்:

1. தெற்காசியா குழப்பம் மிகுந்த ஒரு பிராந்திய மென்று கருதிய சித்தாந்தம், அத்தகைய சூழலில் 'இந்தியாவின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டு மென' வலியுறுத்தியது.

2. அயல்நாடொன்றில் சட்டமும் ஒழுங்கும் சீர் குலையுமாயின், உறுதிப்பாட்டைக் குலைக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செயல்முறையைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தியா வின் உதவி நாடப்பட வேண்டும், இந்தியா விலக்கி வைக்கப்படாமல் பிராந்தியத்தினுள் உதவி கோரப் படலாம். அத்துடன்,

3. தமது காங்கிரஸ் (ஐ) கட்சிக்கும் ஏனைய அரசியற் கட்சிகளுக்குமிடையில் தேசியக் கருத்தொற்றுமை யொன்று பெறப்பட்டுள்ளதென திருமதி காந்தி தெரிவித்தார். பிராந்திய அபிவிருத்திகளிலிருந்து இந்தியாவைத் தள்ளிவைக்க முடியாது. ஏனெனில், பிராந்திய அபிவிருத்தி என்பது பிராந்தியப் பாது காப்புடனும் தொடர்புடையது. பாகிஸ்தானுக்கு அமெரிக்கா இராணுவ உதவிகள் வழங்குவது தொடர்பாக இந்தியாவினது கரிசனங்களும் கவலை களும் சுட்டிக்காட்டப்பட்டன (ஃபட்னிஸ், 1990: 228);

4. திருமதி காந்தி இப்புதிய சித்தாந்தத்துக்கு அர்த்தம் கொடுக்கும் பொருட்டு இந்தியாவைத் திரு. நேரு வின் அணிசேரா அரசிலிருந்து ஒரு தேசியப் பாது காப்பு அரசாக மாற்றினார். எனவே ஒரு பிராந் திய வல்லரசாக இந்தியாவின் மேலாட்சி ஆதிக்க உயர்வு பின்வரும் மூன்று தூண்களின் மேல் நிறுத் தப்பட்டிருந்தது;

அ. கலாச்சார மற்றும் தந்திரோபாய இன்றியமையாமை

ஆ. திருமதி காந்தியின் மொன்றோ சித்தாந்தம், மற்றும்

இ. திருமதி காந்தியின் தேசியப் பாதுகாப்பு அரசின் அங்குரார்ப் பணம் (மன்றோ 1989: 10-17)

## வரலாற்று அடிப்படையில் இந்தியாவும் இலங்கையும்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இரு தரப்பு உறவைப் பாதித்த பிரதானக் காரணிகளில் ஒன்று, சுதந்திரத்துக்கு முன்னரும் பின்னரும் இலங்கையிலுள்ள 'இந்தியத் தமிழர்களின்' கௌரவம் தொடர்பானது. மலையகத் தமிழர்கள் சனத்தொகையின் 5.6 சதவீதமாக மட்டுமே இருந்தபோதிலும், 1823இல் தோட்டத் தொழிலா ளர்கள் ஆங்கிலேயரால் முதன்முறையாக இலங்கைக்குக்





கொண்டுவரப்பட்டது முதற்கொண்டு, அவர்கள் பெரும் பான்மைச் சிங்களவர்களால் பொதுவாக சந்தேகத்துடனும் பகைமையுடனும் நோக்கப்பட்டனர். அதற்கிணங்க, அவர் கள் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக இரு நாடுகளுக்கு மிடையிலான சர்ச்சைக்குரிய பேச்சுவார்த்தைகளின் விட யப்பொருளாக இருந்துள்ளனர் (ஃபட்னிஸ் மற்றும் ஜெற்லி, 1990: 149).

1939இல் ஜவஹர்லால் நேரு இலங்கைக்கு வருகை தந்தபோது, மலைநாட்டுத் தமிழரின் அந்தஸ்து பற்றிய விட யத்தை சேர் ஜோன் கொத்தலாவலையிடம் எழுப்பி னார். அதற்கு அவர், 'எமது மக்கள் வேலையற்றிருக்கும் போது நாம் நிச்சயமாக இந்தியர்களை வேலைக்கு வைத்திருக்கப் போவதில்லை என்பதனால், இந்தியர்களை ஆட்குறைப்பு செய்கின்றபோது அவர்கள் போகத்தான் வேண்டும்' என்று அவருக்குக் கூறப்பட்டது (ராமசுவாமி 1987: 44).

சோல்பரி அரசியல்யாப்பின் கருத்தியல்கள் சுதந்திரத் துக்குப் பிந்திய 1948 - 49இன் பிரசாவுரிமைச் சட்டமென்ற பாகுபாடான சட்டத்தின்மூலம் மலையகத் தமிழருக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தது. அது பத்து லட்சம் மலை யகத் தமிழர்களின் பிரசாவுரிமையையும் வாக்குரிமையை யும் பறித்தது. மலையகத் தமிழர்கள் இடதுசாரி வேட்பா ளர்களைத் தெரிவுசெய்யக்கூடுமென்ற அச்சத்தின் உந்து தலினால் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது (பார்க்க முந் தைய அத்தியாயம் மற்றும் - த சில்வா 1982: 161).

மலையகத் தமிழர்களின் அந்தஸ்து குறித்து 1954ஆம் ஆண்டு இலங்கைப் பிரதமர் கொத்தலாவலைக்கும் இந்தி யப் பிரதமர் நேருவுக்குமிடையில் ஒரு தொடரான பேச்சு கள் நடத்தப்பட்டன. இப்பேச்சுவார்த்தைகள் 1953ஆம் ஆண்டு இலங்கையின் முன்னாள் பிரதமர் டட்லி சேனநா யக்கவுக்கும், அப்போதைய இந்தியப் பிரதமர் நேருவுக்கும் இடையில் பொதுநலவாய மாநாட்டில் இடம் பெற்ற ஒரு சந்திப்பைத் தொடர்ந்து நடத்தப்பட்டது. அச்சந்திப்பின் போது இலங்கை 6,00,000 மலையகத் தமிழர்களைத் தனது பிரஜைகளாக ஏற்றுக்கொள்வதென்றும், இந்தியா 3,50,000 பேரைத் தாய்நாட்டுக்குத் திருப்பி அழைத்துக் கொள்வ தென்றும் ஆலோசிக்கப்பட்டது (ராமசுவாமி 1987: 56).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எண்ணிக்கை மீதான சச்சரவுகள் மலையகத் தமிழர் பிரச்சினையில் அடுத்துவந்த முப்பது ஆண்டுகளாக நீடித்த பேச்சு வார்த்தைகளில் தனியிடம் வகித்தது.

மலையகத் தமிழர் நடத்தப்படும் விதம் தொடர்பாக 'யுத்த நடவடிக்கை' மேற்கொள்வதைப் பொருத்தமற்றதென விளக்கிய நேரு, பின்வருமாறு திரும்பவும் உறுதிப்படுத்தினார்: 'இலங்கை இப்பெரிய இந்தியக் கண்டம் பற்றி ஓரளவு அச்சம் கொண்டுள்ள ஒரு சிறிய நாடு. அவர்கள் எம்மையிட்டு அச்சமடைவதை நாம் விரும்பவில்லை. அவர்களின் சுதந்திரத்தில் எவ்வகையிலும் தலையிட நாம் விரும்பவில்லை' (ராமசுவாமி 1987: 49).

1954இன் 'நேரு-கொத்தலாவல ஒப்பந்தம்'[2] மலையகத் தமிழர்கள் மிகவும் மந்த கதியில் இலங்கைப் பிரசைகளாகப் பதிவுசெய்யப்படுவதற்கு வழிவகுத்தது. பதிவு செய்யப்படும் வேகத்தை அதிகரிப்பதற்கு டட்லி சேன நாயக்கவும் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவும் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை (மத்தியுஸ் 1988: 623-24). இதனையடுத்து இலங்கையினதும் இந்தியாவினதும் அடுத்து வந்த பிரதமர்களால் 1964 ஒக்ரோபர் 30ஆந் தேதியன்று கைச்சாத்திடப்பட்ட சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம் இலங்கைப் பிரசைகளாக ஏற்றுக்கொள்ளப்படவிருந்த அல்லது இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்படவிருந்த இலங்கையிலுள்ள மலையகத் தமிழர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுக் கூறியது (ஃபட்னிஸ் மற்றும் ஜெறல்லி, 1990 : 149). மொத்தம் 9,00,000 மலையகத் தமிழர்களில் 5,25,000 பேர் இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்படும் அதேவேளையில் 300,000 பேருக்கு 15 ஆண்டுகளுக்குள் முழுமையான இலங்கைப் பிரசாவுரிமை வழங்க இவ்வொப்பந்தம் வகைசெய்தது (மேற்கூறியது: 150). இது தொடர்ந்தும் இந்திய-இலங்கை உறவுகளைப் பாதித்தது. 1979ஆம் ஆண்டு இவ்வொப்பந்தம் காலாவதியான சமயத்தில், ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையினர் முழுமையாக உள் வாங்கப்பட்டோ அல்லது முழுமையாக இந்தியாவிற்கு அனுப்பப்பட்டோ பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படாமல் அது ஒரு தீர்க்கப்படவேண்டிய விடயமாகவே தொடர்ந்தும் இருந்தது (மேற்கூறியது: 150).





## இந்திய – இலங்கை உறவுகள் (1948–1980)

இந்தியா சுதந்திரம் பெற்ற காலகட்டத்தில், இந்திய உயர்குடியினர் உபகண்டம் தொடர்பில் இரு கருத்துரைகளை உறுதியாக நம்பினரெனத் தோன்றுகிறது. முதலாவதாகக் காலனித்துவ ஒழிப்பின்மூலம் உருவான அரசுகளில் மிகப்பெரியதென்ற வகையில், ஆங்கிலேயக் காலனித்துவ ஆட்சியின் இயல்பான வாரிசாக இந்தியாவை அவர்கள் கண்டனர். இது அவர்கள்தான் மேலாதிக்கமுள்ள பிராந்திய வல்லரசும் அதனகத்துள்ள பாதுகாப்பு விடயங்களின் மீது தீர்மானிக்கும் சக்தி என்ற சுய உணர்வை உள்ளடக்கியது. இரண்டாவதாக, சமயச் சார்பற்ற இந்தியாவுடன் ஒப்பிடுகையில், அதன் அண்டை நாடுகளில் இருந்த ஏறக்குறைய அனைத்து ஆட்சிகளும், தாழ்ந்தனவாகக் கருதப்பட்டன. ஏனெனில் ஒன்றில் அவை சமயக் கோட்பாட்டின்மீது தாபிக்கப்பட்டவை (பாகிஸ்தான்), இன்றேல் சனநாயகமல்லாத அரசியல் ஒழுங்கை அடிப்படையாகக் கொண்டவை (நேபாளம், பூட்டான்) அல்லது காலனித்துவத்துக்கெதிரான வெகுசனப் போராட்டமின்றிச் சுதந்திரம் ஈட்டியவை (இலங்கை). (கபூர் 1988: 42-59).

1947ஆம் ஆண்டு முதல் 1980ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், விசேடமாக 1956ஆம் ஆண்டு[3], இந்திய-இலங்கை உறவானது, இந்தியாவின் தரப்பில் பெருந்தன்மையான பட்டும்படாத நிலையைக் கொண்டதாகவும், இலங்கையின் தரப்பில் இந்தியாவின் செல்வாக்கு தொடர்பாக அவ்வப்போது ஏற்படும் அதீத நுண்ணறிவை உள்ளடக்கியதாகவும் இருந்தது. திட்டவட்டமாகக் கூறுவதாயின், பல்வேறு விடயங்களில் தனது நீண்டகால அல்லது குறுகிய கால நலன்களுக்கு உகந்த வழிகளில் இந்தியா செயற்படவில்லை. குறிப்பாக, 1948இல் மலையகத் தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்தமை, 1964-65இல் அவர்களைத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புதல் பற்றிய சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம் மற்றும் கச்சதீவுப் பிரச்சினை[4] ஆகியவற்றைக் கூறலாம். எப்போதாகிலும் திடீர் முரண்பாடுகளும் இருந்தன என்பதும் மறுக்க முடியாத உண்மை.

எடுத்துக்காட்டாக, 1950களின் தொடக்கத்தில் இலங்கையின் பிரதமராக ஜோன் கொத்தலாவல பதவி வகித்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காலத்தில், அவரின் இந்திய எதிரிணையாளராக நேரு பிராந்திய விவகாரங்களில் மேற்கொண்ட மழுப்ப லான ஆதரவு தொனியையிட்டு அவர் சீற்றமடைந்தார். இந்தியா-பாகிஸ்தான் மற்றும் இந்தியா-சீன உறவுகளோடு ஒப்பிடுகையில், இலங்கையின் இராசதந்திர சரிசம நிலைப்பாடு ஒரு சிறிய தேசத்தின் புரிந்துகொள்ளக்கூடிய கொள்கையாகப் பெரும்பாலோரால் காணப்பட்ட போதிலும், டெல்லியால் சில சமயங்களில் வெறுக்கப்பட்டது. எனினும் 1971இன் முதலாவது 'ஜனதா விமுக்தி பெரமுன' (ஜேவிபீ) நெருக்கடியின் போது இந்திய இராணுவ மற்றும் தந்திரோபாய உதவியின் மூலம், இலங்கையின் அரசியற் சமூகத்தில் உண்மையான நெருக்கடியேற்படும் ஒரு வேளையில் இலங்கையர்கள் இந்தியர்களை நம்பியிருக்கலாமென்பதை வெளிப்படுத்தியது (சிஸ்ஸன் மற்றும் ரோஸ் 1990).

1970களின்போது இந்திய-இலங்கை உறவுகள் குறிப்பாக இணக்கமானவையாயிருந்தன. இது தொடக்கத்தில் பெருமளவுக்கு திருமதி காந்திக்கும் திருமதி பண்டாரநாயக்கவுக்கும் இடையிலான மிகச் சிறந்த தனிப்பட்ட சமநிலை காரணமாயிருந்தது. அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார அபிவிருத்தி, வெளிநாட்டுக் கொள்கை போன்ற பல்வேறு விடயங்களில் அவர்களின் கொள்கைகள் ஒத்திருந்ததனால் இச்சமநிலையை மேலும் தாங்கிப் பிடித்தன. 1977-1979 காலப்பகுதியில் இந்தியா, பிரதமர் மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா கூட்டணியாலும் இலங்கை, சனாதிபதி ஜயவர்தன தலைமையிலும் ஆளப்பட்ட வேளையில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் வலுவானவையாக இருந்தன. 1979இன் சிங்கள-தமிழ் இனக் கலவரங்களின்போது மொரார்ஜி தேசாய் இப்பிரச்சினை இலங்கையின் ஓர் உள்நாட்டு விவகாரமென்றும், இது குறித்து இந்தியர்கள் அதிகம் கவலைகொள்ளத் தேவையில்லை என்றும் தெளிவாகக் கருத்துத் தெரிவித்திருந்தார்.[5]

சம்பந்தப்பட்ட விடயம் பற்றி இலங்கையின் உணர்வுகள் எப்படியிருந்தாலும், தமிழ் நாட்டின் திராவிடக் கட்சிகளான திராவிட முன்னேற்றக் கழகமும் (தி.மு.க.), அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் (அ.இ.





அ.தி.மு.க.), தமிழர்களுக்காக (இலங்கை மற்றும் மலையக) அவற்றின் கவலையை வெளிப்படுத்தும் மிகைப்படுத்தப்பட்ட வெற்றுப் பேச்சுகள் எல்லாவற்றின் மத்தியிலும், இலங்கை தொடர்பாக இந்திய மத்திய அரசாங்கத்தின் கொள்கை ஒரு குறிப்பிட்ட எல்லைகளைத் தாண்டாமல் பார்த்துக்கொண்டது. 1948ஆம் ஆண்டு முதலே தமிழ் நாட்டின் திராவிட அரசியலின் முழு வேகமும் ஒரே சீராகப் பிரிவினையிலிருந்து விலகிச் சென்றுவிட்டது. தி.மு.க.வும் அ.இ.அ.தி.மு.க.வும் பெரியதோர் சமஷ்டி அரசியற் சமூகத்தினுள் பிராந்தியக் கட்சிகளாக வசதியாக இடம்பிடித்துக் கொண்டன.

1972இல் அ.இ.அ.தி.மு.க. தோன்றியதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டின் தேர்தல் கணிதப்படி இரு திராவிடக் கட்சிகளும் சட்டசபைத் தேர்தல்களில் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றுவதற்குக் காங்கிரஸ் கட்சியுடன் ஆசன ஒழுங்குகளைப் பெரிதும் விரும்பின. இரண்டில் எதுவும் பாக்கு நீரிணைக்கு அப்பாலுள்ள தமிழரின் இலட்சியத்துக்கு வெளிப்படையாக ஆதரவளிப்பதன் மூலம் அதன் அரசியல் நல்வாய்ப்புக்களை இடருக்குள்ளாக்க விரும்பவில்லை. காங்கிரஸ் அல்லாத மாநில அரசுகளை ஏதேனுமொரு சாக்கில் கலைத்துவிடுகின்ற திருமதி காந்தியின் நடவடிக்கைகளின் பின்னணியில், தி.மு.க.வும், அ.இ.அ.தி.மு.க.வும் இவ்விடயத்தில் மத்திய அரசாங்கத்தின் முடிவிற்கு மாறாக, சுதந்திரமான ஒரு போக்கை அவை எடுக்கின்றன என்ற எண்ணத்தைத் தவிர்க்கும்பொருட்டு, இலங்கையின் பிரச்சினையில் தமது சீட்டுகளை மிகக் கவனத்துடன் ஆடின.

குறிப்பிட்டுக் கூறுவதானால், காலனித்துவத்துக்குப் பிந்திய இலங்கையில் மலைநாட்டுத் தமிழர்களின் வாக்குரிமைப் பறிப்பு, 1956இல் 'சிங்களம் மட்டும்' சட்டத்தின் ஆக்கம், சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம், பண்டா - செல்வா ஒப்பந்தமும் டட்லி-செல்வா ஒப்பந்தமும் ஒரு தலைப்பட்சமாக கிழித்தெறியப்பட்டமை, தரப்படுத்தலின் அறிமுகம், காலத்துக்குக்காலம் சிங்களத் தேசியவாதிகளால் ஒழுங்குசெய்யப்பட்ட தமிழர் விரோதக் கலவரங்கள் போன்றவை சிங்கள-தமிழ் உறவுகளின் வரலாற்றில் முக்கிய திருப்புமுனைகளாகும். இவைகளுக்கெதிரான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கைத் தமிழரின் இலட்சியத்துக்கு தமிழ்நாட்டில் ஆதரவுப் பேரலையெதுவும் உருப்படியாக எழவில்லை. இலங்கைத் தமிழர்களுக்கும் தமிழ் நாட்டிலுள்ள தமிழர்களுக்கும் இடையில் ஐயத்திற்கிடமின்றிக் கலாச்சார, திருமண, சமய மற்றும் சமூகத் தொடர்புகள் இருந்தபோதிலும் அவை அரசியல் விடயங்களில் ஒருமுகப்படுதலுக்கு வழிவகுக்கவில்லை.

## தமிழ்நாட்டு அரசியலும் இலங்கையின் இன முரண்பாடும்

இலங்கையின் புவிக்கேந்திர நிலையானது இலங்கையின் இனமுரண்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு பிரதம காரணி. அதன் இராட்சத அயல்நாட்டுக்கு மிக அண்மையாக இந்நாடு அமைந்துள்ளது மட்டுமன்றி, வடக்கிலும் கிழக்கிலுமுள்ள தமிழ்ப் பெரும்பான்மைப் பிரதேசங்கள் ஆறு கோடிக்கும் மேலான தமிழர்களின் தாயகமான தமிழ்நாட்டிலிருந்து வெறும் இருபது மைல் தூரத்திலேயே இருக்கின்றது.

சந்தேகத்துக்கிடமின்றி தமிழ் நாட்டு அரசியல்வாதிகளிடமிருந்து மத்திய அரசாங்கத்துக்கு உள்நாட்டு அழுத்தங்கள் இருக்கின்றன. அஃதன்றியும் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்கும் இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகளுக்குமிடையில் நெருக்கமான பிணைப்புகள் உள்ளன. இந்திய அரசாங்கம் தொடக்கத்தில் மறுத்தபோதிலும், உண்மையில் தமிழ்நாட்டில் தமிழ்ப் போராளிகளுக்குப் பயிற்சி முகாம்கள் இருந்தன (பீரிஸ் 1983: 13-15).

## காங்கிரஸ் காலப்பகுதி

இந்த ஆய்விலிருந்து இலங்கையின் இனத்துவத்தில் தமிழ் நாட்டிலுள்ள அரசியற் கட்சிகள் வகித்த பங்கை ஒருவர் உய்த்துணரமுடியுமென்பதுடன், அரசியற் கட்சிகள் அரசியற் செயல்முறையில் தமது நிலையைத் திடப்படுத்திக் கொள்வதற்கு இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் எந்த அளவுக்கு உதவினவென்பதை மதிப்பீடு செய்யவும் முடியும். தமிழரின் பெயரில் இரு விடயங்கள் தமிழ் அரசியல்வாதிகளினதும் இந்திய அரசாங்கத்தினதும் கவனத்தைக் கவர்ந்து வந்துள்ளன. முதலாவதாக, ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் மலையகத் தோட்டங்களில் வேலை செய்வதற்குத் தமிழர்கள் இந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து கூலிகளாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டனர். சுதந்திரத்தின் பின்னர் அவர்கள் இலங்கை அரசியலில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவேண்டிய ஒரு பெரும் சக்தியாக அமைந்தினால் நாடற்றவர்களாக்கப்பட்டனர். மலையகத் தமிழர்களைத் திருப்பி அனுப்பப்பட்டவர்களாக எடுத்துக் கொள்ள வேண்டிய சூழலில், இப்பிரச்சினையில் இந்தியா சம்பந்தப்பட்டது. இரண்டாவதாக, சில சிறப்புரிமைகளை அனுபவித்துவந்த இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மண்ணின் மைந்தர்களான இலங்கைத் தமிழர்கள், அரசினால் மேற்கொள்ளப்பட்ட இனச்சமப்படுத்தல் நடைமுறையின் காரணமாக அரசியற் சமூகத்தினால் சுதந்திரத்துக்குப் பிந்திய காலத்தில் பாதிக்கப்பட்டனர். படிப்படியாக அவர்கள் அதிகாரத்தையும் அந்தஸ்தையும் இருப்பையும் சிறப்புரிமைகளையும் இழந்ததன் விளைவாக இனக் கொந்தளிப்புகள் ஏற்பட்டு அவை கடந்த இரு தசாப்தங்களில் இனப்படுகொலைகளுக்கு வழிவகுத்தன (தமிழ் தகவல் நிலையம் 1997).





நீண்டகாலமாக இலங்கைத் தமிழர் பிரச்சினையானது இலங்கையின் உள்நாட்டு விடயமாகவே இந்தியாவால் கையாளப்பட்டு வந்தது. தமிழ்நாட்டு அரசியல் என்பது காங்கிரஸ், திராவிட இயக்கத்தின் (திராவிட இயக்க வரலாற்றுக்கு அடுத்த பிரிவைப் பார்க்க) பல்வேறு சாயல்கள், இடதுசாரிச் சக்திகள் ஆகியவற்றின் பேச்சுகளைச் சுற்றிச் சுழல்கின்றதென்பது எல்லோருக்கும் தெரிந்ததே. 1967 வரை தமிழ்நாட்டில் காங்கிரஸ் தொடர்ச்சியாக காமராஜர் மற்றும் பக்தவத்சலம் ஆகிய முதலமைச்சர்களின் தலைமையில் ஆட்சியிலிருந்தது. இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் அது பொதுவாக நேருவின் வழியைப் பின்பற்றியது. காமராஜரின் வழியில் வந்த பக்தவத்சலம், 1964 இல் சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தைப் பாராட்டுவதில் திருமதி காந்தியின் குரலை எதிரொலித்தார். சிறிது காலத்தில் திருமதி இந்திரா காந்தியின் சிந்தனையில் மாறுதல்கள் ஏற்பட்டன. தமிழ்நாட்டில் அதிகாரத்தில் இருக்கக்கூடிய முற்போக்கு சக்திகளை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பதற்காக, திருமதி பண்டாரநாயகவின் கூட்டமைப்பில் இருந்த முற்போக்கு சக்திகளுடன் அவர் நட்பை வளர்த்துக் கொண்டார். இக்கொள்கைமாற்றக் காலத்திலிருந்து இற்றை வரை தமிழ்நாட்டில் காங்கிரஸ் மத்திய அரசால் விதிக்கப் பட்ட வழியிலிருந்து விலகவில்லை. தமிழ்நாட்டில் 1969இல் காங்கிரஸ் பிளவுபட்டதன் பின்னர், அதன் வளங்களையும் அதிகாரத்தையும் உள்நாட்டு மண்ணிலிருந்து பெறுவதை விடக் கூடுதலாக டெல்லியிலிருந்து பெற்றமை ஒருவேளை இதற்குக் காரணமாயிருக்கலாம் (பத்மநாதன் 1991: 75).

திராவிட இயக்கங்கள் மத்தியில் திராவிடர் கழகம் தான் இலங்கைத் தமிழர்கள்மீதான அதன் அனுதாபத்தை முதலில் வெளிப்படுத்தியது (மேற்கூறியது: 76). தொடக்கத் தில் 1950களில் திராவிடர் கழகம் இந்தியத் தமிழர்களை யும் இலங்கைத் தமிழர்களையும் அவ்வளவு கடுமையாக வேறுபடுத்தவில்லை. இந்தியத் தமிழர்களின் மெதுவான எனினும் கிரமமான குடியேற்றம், இலங்கைத் தமிழர்களின் குறிக்கோளைத் திராவிடர் கழகம் ஆதரிப்பதற்கு அதனை நிர்ப்பந்தித்தது. அது இலங்கைத் தமிழர் மத்தியிலிருந்து மிதவாதிகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் அரசியலமைப்புக்கு உட்பட்ட கலந்துரையாடலை ஊக்கு வித்தது. அத்தகைய அரசியலமைப்பு நடவடிக்கையின் தோல்வி இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீவிரமான தீர்வுகளைக் காணும்படி திராவிடர் கழகத்தைப் படிப்படி யாக மாற்றியது. தற்போது அது எல்ரீரீஈயின் தலைமைத் துவத்துக்கு ஆதரவளிக்கின்றது (சோ ராமசுவாமியுடன் நேர்காணல்: 15 ஏப்பிரல் 2005). 1950களின் தொடக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கைத் தமிழ் மக்களின் நல்வாழ்வைப் பாதிக்கின்ற பிரச்சினைகளில் மத்திய அர சாங்கத்தின் அக்கறையின்மைபற்றிக் கேள்வி எழுப்பியது. திராவிட முன்னேற்றக் கழகம் கருத்துக் கூறுகையில்:

> தென்னாபிரிக்காவிலுள்ள இந்தியர்களின் நெருக்கடி நிலை போன்ற ஏனைய அனேக பிரச்சினைகளில் குரல் கொடுத்துள்ள இந்திய அரசாங்கம் இப்போது அக்கறை யற்றிருப்பது எவ்வாறு? அது இலங்கையில் துன்பப்படுப வர்கள் 'இந்தியர்கள்' அல்ல தமிழர்கள் என்பதாலா? (தாய்நாடு 15.6.1957).





இக்காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக அனேக ஊர்வலங்களையும் பொதுக்கூட்டங்களையும் ஒழுங்குசெய்தது. சுதந்திரக் கட்சித் தலைவரும் முன்னாள் இந்திய ஜனாதிபதியுமான சி. ராஜகோபாலாச்சாரியாரும் தமிழருக்கான சுயாட்சிக்கும் சிங்கள மொழிக்கு இணையாகத் தமிழுக்கு சம அந்தஸ்துக் கும் அவரின் ஆதரவை வெளிப்படுத்தினார் (சிலோன் டெய்லி நியுஸ் 22 செப்ரெம்பர் 1958).

எனினும் தென்னிந்தியாவைச் சேர்ந்த ஓர் உறுப்பின ரான என்.ஜீ.ரங்கா உள்ளூரில் சுயாட்சிக்கான இலங்கைத் தமிழர்களின் கோரிக்கையை ஆராய்ந்து பார்ப்பதற்கும் அவர்களின் தலைவர்களைச் சந்திப்பதற்கும் இந்திய அர சாங்கம் ஏதேனும் முயற்சி எடுத்துள்ளதாவென்று கேட்ட போது அவ்வாலோசனையை நேரு கடுமையாக எதிர்த் தார். அக்கருத்தை நேரு பின்வருமாறு நிராகரித்தார்:

> 'மற்றொரு நாட்டிலுள்ள எதிர்க்கட்சிகளினதும் கிளர்ச் சிக் கட்சிகளினதும் தலைவர்களுடன் தொடர்பு கொள் வது முற்றிலும் தவறானது, முழுமையாக முறையற்றது- அது தேசிய மற்றும் சர்வதேசச் சட்டம் அல்லது நடை முறை என்ற பல்வேறு கோணங்களிலும் மரபுமீறியதொன் றாயிருக்கும் (லோக்சபா விவாதம் 1-5 மே 1961).'

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துகளும் அதன் அழுத்தமும் எவ்வாறானதாயிருப்பினும் இந்திய அரசாங் கம் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக அவ்விவகாரங் களினுள் ஈடுபடாது என்பதை நேருவின் பதில் தெளிவா கக் காட்டியது. இராசதந்திர நியமங்களைக் கட்டுப்படுத்து கின்ற சர்வதேசச் சட்டம் பற்றி நன்குணர்ந்திருந்த நேரு, இலங்கைத் தமிழர் பிரச்சினையை இலங்கையின் ஓர் உள் நாட்டு விடயமாகக் கருதினார். அவர் உள்நாட்டு அபிப் பிராயத்தைவிட உலக அபிப்பிராயம் பற்றி மட்டும் விழிப் புடையவராயிருந்தார். இந்தியப் பிரதமரின் தெளிவான நிலைப்பாடு அவ்வாறிருந்தபோதிலும் தமிழ்நாட்டிலுள்ள பிராந்தியக் கட்சிகளின் நடவடிக்கைகள் இலங்கை அர சாங்கத்துக்குக் கவலையளித்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### தமிழ் நாட்டில் திராவிட இயக்கங்கள்

சென்னை, திருவல்லிக்கேணியைச் சார்ந்த அரசாங்க வேலையில் ஆசையற்ற சேவை நோக்குடைய ஒரு பிரபல வைத்தியரான டாக்டர் சி. நடேச முதலியார் 1912ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் தேதியன்று மதராஸ் திராவிடச் சங்கத்தை ஆரம்பித்தார். 1916ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் தேதியன்று டாக்டர் நடேச முதலியார், டாக்டர் ஜே.எம். நாயர், சேர் தியாகராஜா (செட்டி) ஆகியோர் வேறு 27 பேருடன் விக்டோரியா பொது மண்டபத்தில் கூடி 'வரையறுக்கப்பட்ட தென்னிந்திய மக்களின் சங்கத்தை' உருவாக்கினார் (வேணுகோபால் 1992: 23). பிராமணரல்லாதவர்களின் மனக்குறைகளை வெளிப்படுத்துகின்ற செய்திப் பத்திரிகைகளை ஆங்கிலத்திலும், தெலுங்கிலும், தமிழிலும் பிரசுரித்தல் அதன் நோக்கமாயிருந்தது. பிராமணரல்லாத சாதி இந்துக்களின் அரசியல் நலன்களை ஊக்குவிப்பதற்காக தென்னிந்திய லிபரல் பெடரேஷன் (South Indian Liberal Federation - SILF) என்றழைக்கப்படும் புதிய அமைப்பொன்று 1916ஆம் ஆண்டு திசெம்பர் 20ஆம் தேதியன்று உருவாக்கப்பட்டது. அது 'ஜஸ்டிஸ்' என்றழைக்கப்படும் ஆங்கிலத் தினசரியொன்றை வெளியிட்டது. டாக்டர் நாயர் தாமே அதன் பதிப்பாசிரியராகி 1917ஆம் ஆண்டு பெப்ருவரி 26ஆம் தேதியன்று அதன் முதலாவது இதழை வெளியிட்டார். இந்த ஆங்கிலத் தினசரி அதிகமான பிரபலம் பெற்றதனால், அதன் பெயரே கட்சியின் பெயருமாகி, 'தென்னிந்திய லிபரல் பெடரேஷன்' 'ஜஸ்டிஸ் கட்சி' (ஜ.க.) என்று பொதுவாக அழைக்கப்படலாயிற்று (மேற்கூறியது: 24).

மொன்ற்போட் சீர்திருத்தங்களின்படி அமைக்கப்பெற்ற சட்ட சபைக்கான முதலாவது பொதுத் தேர்தல் 1926ஆம் ஆண்டு நவம்பர் முடிவில் நடத்தப்பட்டது. அதற்கு முன்னர், சட்டசபையில் பலம் பொருந்தியதாயிருந்த ஜஸ்டிஸ் கட்சி முதலாவது அமைச்சரவையை உருவாக்கி 1920ஆம் ஆண்டு டிசெம்பர் 17ஆம் தேதியன்று பதவியேற்றது. 1920 மற்றும் 1923 தேர்தல்களில் ஜஸ்டிஸ் கட்சிக்கு வெற்றியை ஈட்டிக்கொடுத்த முன்னணித் தலைவர் 1925ஆம் ஆண்டு ஏப்பிரல் 28ஆம் தேதியன்று காலமானார். ஈடு செய்ய முடியாத இவ்விழப்பினால் பாதிக்கப்பட்ட ஜஸ்டிஸ்





கட்சி 1926 நவம்பர் 8ஆம் தேதியன்று தோற்கடிக்கப்பட்டது (மேற்கூறியது: 40).

அதன் பின்னர், 1937இன் இந்திய அரசாங்கச் சட்டப்படி சட்டப் பேரவைக்கான முதலாவது தேர்தல் 1937ஆம் ஆண்டு பெப்ருவரியில் இடம்பெற்றபோது ஜஸ்டிஸ் கட்சியும் அதன் தலைவர்களும் தோற்கடிக்கப்பட்டனர். காங்கிரஸ் 215 ஆசனங்களில் 159ஐ வென்று அமைச்சரவையை அமைத்தது. இதனைத் தொடர்ந்து மதராஸ் பிரசிடென்சியில் ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சி ஒரு முடிவுக்கு வந்தது (மேற்கூறியது: 41).

திராவிடக் கழகத்தின் தாபகரும், தலைவருமான ஈ.வெ.ராமசுவாமி நாயக்கர் (ஈ.வெ.ரா.)[6] 1919இல் காங்கிரசில் இணைந்தார். தமிழ்நாடு காங்கிரஸ் குழுவில் பிராமணத் தலைமைத்துவம், விஞ்சி மேம்பட்டதாயிருந்தது. இந்தியத் தேசிய காங்கிரசின் ஆதரவுபெற்ற நிறுவனங்களில் பிராமணர்கள் எவ்வாறு தமது சொந்த நலன்களை ஊக்குவிக்கின்றனரென்பதை ஈ.வெ.ரா. அவதானித்தார். காங்கிரசில் மிதமிஞ்சிய பிராமணத் தலைமைத்துவமும் பிராமணரல்லாதோர் மத்தியில் அரசியல் மற்றும் சமூக விழிப்புணர்வின்மையும் ஈ.வெ.ரா.வை ஜஸ்டிஸ் கட்சியின் கருத்துகளின்பால் நெருக்கமாகக் கொண்டுவந்தன. சமூக நீதிக்கான அவர்களின் போராட்டம் அவரின் இதயத்தில் எதிரொலித்தது (மேற்கூறியது: 42). அனேக ஆண்டுகள் காங்கிரசில் இருந்த ஈ.வெ.ரா. காங்கிரஸ் சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கத் தவறிவிட்டதோடன்றி, பிராமணரல்லாதோரின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்கு என்றும் நிலைத்திருக்கின்ற தடைகளை உருவாக்கியுள்ளதென்றும் உறுதியாக நம்பினார். 1927இல் வெறுப்புற்றுக் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறிய அவர் சுயமரியாதை இயக்கத்தைத் தாபித்தார்.

ஈ.வெ.ரா. காங்கிரசைவிட்டு வெளியேறிய பின்னர் ஜஸ்டிஸ் கட்சி 1927ஆம் ஆண்டு யூலை 2ஆம் தேதியன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற அதன் வருடாந்தக் கூட்டத்துக்கு அவரை அழைத்தது. ஈ.வெ.ரா. பிராமணரல்லாதவர்களின் பொதுவான அந்தஸ்தையும் நிலைமைகளையும் முன்னேற்றும்பொருட்டு ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்கத் தொடங்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கினார். சுயமரியாதை இயக்கம் (சு.ம.இ.) ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து அடிப்படையில் இரு அம்சங்களில் வேறுபட்டது. அந்தஸ்துள்ள ஒரு குழுவினராக பிராமணர் உருவானதற்குக் காரணம் அவர்கள் வகித்த அரசாங்க உத்தியோகங்களும் உயர்பதவிகளுமென்று ஜஸ்டிஸ் கட்சி நம்பிய அதே வேளையில், இந்து சமுதாயத்தில் பரவலாயிருந்த சமூக, கலாச்சார மற்றும் சமூக விழுமியங்களே அதற்குக் காரணமென சுயமரியாதை இயக்கம் நம்பியது. ஜஸ்டிஸ் கட்சியின் தலைமைத்துவம் ஜமீன்தார் வகுப்பினரையும் வணிக வகுப்பினரையும் மத்திய வகுப்பினரையும் மேல் மத்திய வகுப்பினரையும் கொண்டதாயிருந்தது. சுயமரியாதை இயக்கம் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பின்தங்கிய பிராமணரல்லாத ஏனைய சாதிகளையும் தாழ்த்தப்பட்ட சாதிகளையும் கவர எண்ணியது (மேற்கூறியது: 44-45).

சுயமரியாதை இயக்கம் அதன் நிகழ்ச்சித்திட்டங்களில் ஒரு வெகுசன அமைப்பாகியதுடன், பிராமணரல்லாத, சமூகத்தில் உரிமைப்பேறு பெற்ற சிலரின் நலன்களைவிட, வெகுசனத்தின் பரந்த நலன்களையும் நோக்காகக் கொண்டிருந்தது. ஈ.வெ.ரா.வின் சுயமரியாதை இயக்கம் பால் அல்லது அந்தஸ்து வேறுபாடின்றி வாழ்வில் அனைத்து மக்களுக்குமான சமத்துவத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு, முதலாளி வர்க்கத்தையும் சமயங்களையும் ஒழித்துக்கட்டுவதற்கு கம்யூனிசம் சார்பாகவும் நாத்திகம் சார்பாகவும் அதன் பிரச்சாரத்தை நடத்தியது (மேற்கூறியது: 1992: 45).

1939ஆம் ஆண்டு செப்ரெம்பரில் இரண்டாவது உலக யுத்தம் வெடித்ததைத் தொடர்ந்து காங்கிரஸ் அமைச்சரவை இராஜினாமாச் செய்தது (மேற்கூறியது: 47). ஜஸ்டிஸ் கட்சி படிப்படியாகத் தமிழ்மயமாக்கப்படுவதற்கு ஈ.வெ.ரா. பொறுப்பாயிருந்ததுடன், 'திராவிட நாட்டுக்கான' அல்லது ஒரு திராவிட மாநிலத்துக்கான கோரிக்கையும் எழுப்பப்பட்டது. ஈ.வெ.ரா. போன்று வேறு எந்த ஜஸ்டிஸ் கட்சி தலைவரும் வெகுசனத்தின் ஆதரவைப் பெற்றிருக்கவில்லை. 1944ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27ஆந் தேதியன்று நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சியின் பதினாறாவது மாநாட்டில் சி.என். அண்ணாத்துரை (அண்ணா) ஜஸ்டிஸ் கட்சியின் பெயரை திராவிடக் கழகம் என்று மாற்றுவதற்கான தீர்மானத்தைப்





பிரேரித்ததுடன், அதனைப் பிராமணரல்லாத வெகுசனத்தின் சமூக விழிப்புணர்வுக்கும் முன்னேற்றத்திற்கும் உழைக்கின்ற ஒரு சமூக நிறுவனமாகவும் உருமாற்றினார். அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, ஜஸ்டிஸ் கட்சி திராவிடர் கழகம் என்றழைக்கப்படலாயிற்று.

திராவிடர் கழகம் பலம்வாய்ந்த ஒரு வெகுசன இயக்கமாக உருவாகியபோது ஈ.வெ.ரா.வுக்கும் அண்ணாவுக்கும் இடையில் வேறுபாடுகள் எழுந்தன. 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15இல் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் பற்றிய விடயத்திலும் அவர்கள் எதிரெதிரான கருத்துகளைக் கொண்டிருந்தனர். ஆங்கிலேயத் தளையிலிருந்து இந்தியா விடுவிக்கப்பட்டதனால் அது களிப்புடன் கொண்டாடவேண்டிய ஒரு நாளென்று அண்ணா கூறினார். எசமானர்கள் மட்டும் மாறியுள்ளனரென்றும், ஆங்கிலேய ஆட்சிக்குப் பதிலாக பாணியர்களும் பிராமணர்களும் இணைந்த கூட்டு நாட்டை ஆளுமென்றும், எனவே அதுவோர் துக்க நாளென்றும் ஈ.வெ.ரா. கூறினார் (மேற்கூறியது: 46). பின்னர் அவர்களுக்கிடையில் மேலும் அனேக வேறுபாடுகள் அதிகரித்து வந்ததைத் தொடர்ந்து ஈ.வெ.ரா.வைப் பிரிந்து சென்ற அண்ணா 1949ஆம் ஆண்டு செப்ரெம்பரில் திராவிட முன்னேற்றக் கழகத்தை (தி.மு.க.) உருவாக்கினார் (மேற்கூறியது: 46).

1967 தேர்தலில் தி.மு.க. அறுதிப் பெரும்பான்மையுடன் அதிகாரத்தைக் கைப்பற்றியது. ஈ.வெ.ரா. போதித்த சமூகச் சீர்திருத்தங்களில் அனேகமானவை படிப்படியாகக் கிரமமான முறையில் சட்டப் புத்தகத்தில் இடம்பெறலாயின. இறுதியாகத் தமிழ் நாட்டின் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஆளுநர் உரைக்கான நன்றிப் பிரேரணை மீதான விவாதத்துக்குப் பதிலளிக்கையில் 'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அ.இ.அ.தி.மு.க.) சுயமரியாதை இயக்கத்தினதும் ஜஸ்டிஸ் கட்சியினதும் பரிணாம வளர்ச்சியென்று கூறியதுடன், திராவிட இயக்கத்துக்கு ஈ.வெ.ரா., சேர் பி. தியாகராஜா (செட்டி), அண்ணா, எம்.ஜி.ராமச்சந்திரன் ஆகிய பெருந்தலைவர்கள் ஆற்றிய அளப்பரிய சேவையை நினைவுகூர்ந்து, மக்களுக்குச் சேவையாற்றுவதில் அவர்களின் அடிச்சுவடுகளைத் தாம் பின்பற்றுவதாகவும் வலியுறுத்தினார்' (வேணுகோபால் 1992). எனவே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தி.க., தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. உட்பட திராவிடக் கட்சிகள் எல்லாவற்றுக்கும் ஜஸ்டிஸ் கட்சிதான் தாய் நிறுவனமென்று உண்மையாகக் கூறமுடியும் (மேற்கூறியது: 50).

### தி.க., தி.மு.க. மற்றும் அ.இ.அ.தி.மு.க. காலப்பகுதி

1944இல் ஈ.வெ.ரா.வின் தலைமையின் கீழ் திராவிடர் கழகம் தோன்றுவதற்கு அனேகக் காரணிகள் பங்களித்தன. தமிழ்நாட்டு அரசியலிலும் சமுதாயத்திலும் சனத்தொகையின் 2 சதவீதத்தை மட்டுமே பெற்றிருந்த பிராமணர்களின் ஆதிக்க நிலையை ஈ.வெ.ரா. வெறுத்தார். ஒரு பகுத்தறிவுவாதியான ஈ.வெ.ரா. சுயமரியாதை இயக்கத்தைத் தொடக்கி வைத்து, மனுதர்மமுறை[7] தமிழ்ச் சமுதாயத்துக்கு அந்நியமானதென நிரூபிக்க முயன்றார். திராவிடர் கழகம் திராவிட[8] உணர்வைத் தமிழ்நாட்டில் மட்டுமன்றி அதற்கு வெளியேயுள்ள தமிழர் மத்தியிலும் தூண்டிவிடுவதற்கும், தமிழ் மொழியைச் சமஸ்கிருதத்தின் கொடும்பிடியிலிருந்து காப்பாற்றுவதற்கும் முயற்சித்தது. அரசியல் துறையில் திராவிடர் கழகம் கேரளம், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் ஆகிய இந்தியாவின் தென் மாநிலங்கள் எல்லாவற்றையும் கொண்டதான ஒரு சுதந்திரத் திராவிட நாட்டுக் கோரிக்கையை முன்வைத்தது (நம்பி 1980).

சித்தாந்த வேறுபாடுகளின் காரணமாகவும், தனிப்பட்ட வேற்றுமைகள் காரணமாகவும், ஈ.வெ.ரா.வின் சீடர்களில் ஒருவரான சி.என்.அண்ணாத்துரை திராவிடர் கழகத்தை விட்டுவிலகி, 1949இல் திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கினார். தி.மு.க. பொதுமக்களுக்கு அதன் அரசியல் சித்தாந்தங்களைப் பரப்புவதற்கு ஊடகங்களை, விசேடமாகத் திரைப்படத் துறையை, செயல்விளைவுள்ள முறையில் பயன்படுத்தியது. தி.மு.க.வின் இன்றைய தலைவரான கருணாநிதியும் அ.இ.அ.தி.மு.க.வின் நிறுவனரான எம்.ஜி.ராமச்சந்திரனும் (எம்.ஜி.ஆர்.) திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். தி.மு.க. சித்தாந்தங்களை முனைப்படுத்திக் காட்டுகின்ற திரைப்படங்களில் எம்ஜிஆர் நல்லது செய்கின்ற, தீமையை எதிர்த்துப் போராடுகின்ற, பெண்களைப் பாதுகாக்கின்ற ஒரு கதாநாயகனாகக் காட்டப்பட்டார். விரைவில் மாநிலத்தின் அனேக பகுதிகளில் எம்ஜிஆர் இரசிகர் மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன (1954).





சுதந்திர இந்தியாவில் பிரிவினையை அதன் பிரதானக் கொள்கையாகக் கடைப்பிடித்த முதலாவது பிராந்தியக் கட்சி தி.மு.க.வாக இருந்தபோதிலும், இந்திய-சீன எல்லைப் போரைத் தொடர்ந்து அதனை அவ்வியக்கம் கைவிட்டது. எனினும் அது (அ) இந்தி திணிக்கப்படுவதற்கு எதிர்ப்பு (ஆ) மாநிலங்களுக்குக் கூடிய அதிகாரம் அல்லது மாகாண சுயாட்சிக் கோரிக்கை ஆகிய இரு முக்கிய விடயங்களில் தொடர்ந்தும் தமிழரைக் கவர்ந்தது. இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்மூலம் தமிழ் வெகுசனத்தை அணியணியாகத் திரட்டிய தி.மு.க. 1967 மற்றும் 1971 தேர்தல்களில் இந்தியத் தேசிய காங்கிரசைத் தோற்கடித்தது. தி.மு.க.வின் அமோகமான தேர்தல் வெற்றிகளில் எம்ஜிஆர் இரசிகர் மன்றங்கள் பெரும் பங்கு வகித்தன.

இலங்கையின் சிங்களத் தலைவர்கள் தி.க.-வையும், அதன் கிளையான தி.மு.க. வையும் இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வாய்ப்புடையனவாகக் கருதினர். பாக்கு நீரிணைக்கு அப்பால் தமிழ் நாட்டில் ஆறு கோடி தமிழர் வாழ்வதனால் சிங்களவர் ஒரு பரந்த பூகோள அரசியல் பார்வையில் 'தாங்கள் சிறுபான்மையினர்' என்ற தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொண்டிருந்தனர். சிங்களவர் தமது தீவில் பெரும்பான்மையாக இருந்தபோதிலும், இந்தியாவின் தமிழகம் முழுவதும் விரிந்துபரந்த பெரும் தமிழ்ச் சமூகத்துடன் ஒப்பிடுகையில் அவர்கள் சிறுபான்மையென்ற உணர்வு சிங்களவர் மத்தியில் உள்ளது (ரஸ்கர், 1985). தி.மு.க. 1967இல் தமிழ்நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றியபோது, இலங்கையில் தமிழர் ஆதிக்கப் பிரதேசங்களுக்குச் சுயாட்சியென்ற தமிழரசுக் கட்சியின் கோரிக்கையை அது ஆதரித்தது. தி.மு.க. தலைவர் அண்ணாதுரையும், அதன் இன்றைய தலைவர் மு.கருணாநிதியும், எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தையும் தமிழரசுக் கட்சியின் பிற தலைவர்களையும் கௌரவிக்கும் பொருட்டுக் கூட்டங்களை ஒழுங்குசெய்ததுடன், தி.மு.க. ஆட்சியின்போது அவர்கள் தமிழ்நாட்டுக்கு வருகைதந்த போதெல்லாம் உத்தியோக பூர்வ கௌரவத்தையும் வழங்கினர்.

1972ஆம் ஆண்டு திராவிட இயக்கத்தில் மற்றுமொரு பிளவு ஏற்பட்டதைத் தொடர்ந்து பெருஞ்செல்வாக்குடைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திரையுலக ஜாம்பவானான எம்.ஜி. இராமச்சந்திரன். தி.மு.க. வை விட்டுவிலகி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை தாபித்தார். 'அவரின் திரைப்படங்கள் நிலைமாறாது அரசியற் செய்தியொன்றைத் தெரிவித்தன. இயல்பாக இது அவருக்குப் பெருந்தொகையில் அவரைப் பின்பற்றுபவர்களை, விசேடமாக மாநிலத்திலுள்ள வறிய பெண்களைத் தேடிக்கொடுத்தது' (தி ஐலன்ட் 17 மே 1987). 1977 தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. தமிழ் நாட்டில் எம்.ஜி.ஆர். இரசிகர் மன்றங்களின் துணையுடன் அமோக வெற்றிகண்டு ஆட்சியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து எம்.ஜி.ஆர். முதலமைச்சராகத் தம்மை நிலைப்படுத்திக் கொண்டார்.

பல ஆண்டுகளாக மாநிலத்தில் இந்திரா காங்கிரசின் காங்கிரஸ் (ஐ) செல்வாக்கு வீழ்ச்சி கண்டுவந்தது. காங்கிரஸ் (ஐ)இன் தோற்றத்தை முன்னேற்றும்பொருட்டு இந்திரா காந்தி தி.மு.க. உடன் கூட்டொன்றை உருவாக்கிய துடன், 1978இல் அ.இ.அ.தி.மு.க. அரசாங்கத்தைக் கலைக்கவும் செய்தார். எனினும் அ.இ.அ.தி.மு.க. 1980ஆம் ஆண்டு தேர்தலில் தி.மு.க.-காங்கிரஸ் (ஐ) கூட்டணியைத் தோற்கடித்து, மாநிலத்தில் மீண்டும் அதிகாரத்திற்கு வந்தது. இதன் விளைவாக இந்திரா காந்தி தி.மு.க. உடனான கூட்டை முறித்துக்கொண்டு அ.இ.அ.தி.மு.க.உடன் கூட்டொன்றை உருவாக்கினார். தமிழ்நாடு பின்வரும் இரு காரணங்களால் டெல்லிக்கு அதிகரித்த அளவில் ஒரு முக்கியக் காரணியாகியிருந்தது. (1) 'அ.இ.அ.தி.மு.க.வும், இந்திரா காங்கிரஸ் காங்கிரஸ் (ஐ) உடன் அரசியல் ரீதியாகக் கூட்டு வைத்திருந்த அதன் பிரபலமான தலைவரான எம்.ஜி. ஆரும் மு. கருணாநிதி தலைமையிலான தி.மு.க. கட்சி வெளிப்படுத்திய தமிழ்நாட்டுத் தேசியவாதத்தினதும் பிரிவினைவாதத்தினதும் தீவிர போர்முனைப்பான போக்கைத் தடுத்து நிறுத்தியிருந்தனர்' (தி ஐலன்ட் 26 யூலை 1987). (2) நான்கு தென்னிந்திய மாநிலங்களிலும் தமிழ்நாட்டில் மட்டும்தான் காங்கிரஸ் (ஐ) அதன் கூட்டுப் பங்காளியாகச் செல்வாக்குமிக்க ஒரு பிராந்தியக் கட்சியைக் கொண்டிருந்ததனால் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் (ஐ) அதன் இழந்த அரசியல் கீர்த்தியையும் ஆதரவையும் இக்கூட்டின்மூலம் மீண்டுப் பெறுவதற்கு முயற்சித்தது.





யூலை 1983 தமிழர் விரோதக் கலவரங்களும் இலங்கையின் இன முரண்பாடும் தி.மு.க.வும் அ.இ.அ.தி.மு.க.வும் அவற்றின் தோற்றத்தை உயர்த்திக் காட்டுவதற்கு வாய்ப்பளித்தன. அதே சமயம் அரசியல் கணிப்பீடுகளுக்கும் மேலாக இரு கட்சிகளும் இலங்கையிலுள்ள சக தமிழர்களின் நல்வாழ்வில் நிலையான அக்கறையைக் கொண்டிருந்தனவென்பதில் சந்தேகமில்லை.

## தமிழ்நாட்டுக் காரணி

தமிழ்நாடு, புதுடெல்லியில் அதிகாரத்தில் இருந்த அரசியல் தலைவர்மீதோ அல்லது இந்திய மத்திய அரசாங்கத்தின் மீதோ அதன் செல்வாக்கைச் செலுத்தும் தகுதிவாய்ந்த சக்தியாக இருந்தது என்பதற்குப் போதுமான சான்றுகள் உள்ளன:

> தமிழ்நாட்டு வாக்காளர் தொகுதி 2 கோடி 80 இலட்சம் வாக்காளர்களைக் கொண்டுள்ளது. அது லோக் சபாவுக்கு (பாராளுமன்றத்தின் கீழவை) அல்லது மத்திய அரசாங்கத்துக்கு 39 உறுப்பினர்களை அனுப்புகின்றது. மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரை உத்தரப் பிரதேசம் (85), பீஹார் (54), மகராஷ்டிரா (48), மேற்கு வங்காளம் (42), மத்தியப் பிரதேசம் (40) ஆகியவற்றை அடுத்து தமிழகம் ஏழாவது மிகப்பெரிய மாநிலம் ஆகும். வாக்காளர்களைப் பொறுத்த வரையில், பிரதானமாக ஆந்திரப் பிரதேசம், மகராஷ்டிரா, கேரளம், கர்நாடகம் ஆகிய பிற மாநிலங்களில் இலட்சக் கணக்கான தமிழர்களை வாக்காளர்களாகப் பதிவுசெய்துள்ள, ஆறாவது ஆகப்பெரிய மாநிலம் (ரணதுங்க 1988: 81).

தமிழ்நாட்டிலுள்ள இரு பிரதான அரசியற் கட்சிகளான திராவிட முன்னேற்றக் கழகமும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே தமிழ்த் தேசியவாதத்தில் ஆழ வேரூன்றியவை. தமிழ்த் தேசியவாதத்துடனும் தமிழ்நாட்டில் கிளர்ச்சிகளுடனும் தொடர்புடைய அம்சங்களாயிருந்தவை மொழி (தமிழ் எதிராக இந்தி), அதிகபட்ச சுயாட்சி, குறிப்பிடத்தக்க அளவில் பிராமண எதிர்ப்புவாதம் என்பவையாகும். தி.மு.க.வும், அ.இ.அ.தி.மு.க.வும் சாராம்சத்தில் சரியொத்த கொள்கைகளை - தமிழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மொழிக்கு ஆதரவு, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம், தமிழ் நாட்டுக்குச் சாதகமாக மேலதிக நிதி ஒதுக்கீடு, ஒரு தெளிவற்ற குடிப்பொதுமைப் (Populist) பொருளாதாரக் கொள்கை ஆகியவற்றைக் கொண்டிருந்தன. இரு அரசியற் கட்சிகளும் தலைமைத்துவப் போட்டிகளைக் காட்டிய அதேவேளையில், 1967இல் அதிகாரத்துக்கு வந்ததிலிருந்து அவை இரண்டும் தமிழ்நாட்டு அரசியலில் ஆதிக்கஞ் செலுத்திவந்துள்ளன. அதன்பின்னர் நடைபெற்ற எந்த வொரு தேர்தலிலும் காங்கிரசால் வெற்றி பெற முடிய வில்லை.

இந்தியாவின் அண்டைநாடுகள், வியக்கத்தக்க வகை யில் இந்தியாவின் தலைநகர் புதுடெல்லியைவிட அயலி லுள்ள இந்திய மாநிலங்களுடன் கூடுதலாக ஊடாடும் போக்குடையனவென்றுசுட்டிக்காட்டப்படுகின்றது. ‘இலங்கை தமிழ்நாட்டுடனும், பங்களாதேசம் மேற்கு வங்காளத்துடனும், அஸாமுடனும், திரிபுராவுடனும், நேபாளம் உத்தரப் பிரதேசத்துடனும், பீஹாருடனும், மேற்கு வங்காளத்துடனும், பாகிஸ்தான் ஜம்மு, காஷ் மீருடனும், பஞ்சாப்புடனும், ஹரியானாவுடனும், ராஜஸ் தானுடனும்’ ஊடாடுகின்றன (ஹூசெய்ன் 1990). இந்த விடயம் குறித்து திரு. ஹூசைன் மேலும் குறிப்பிடுகையில், இந்தியாவும் அதன் அண்டை நாடுகளும் ஒரு குறிப்பிட்ட வரையறையில் ஒன்றன்மீது ஒன்று அக்கறை செலுத்து கின்றன. இது உலகின் வேறு எந்தப் பகுதியிலும் பின்பற்ற முடியாதது என்கிறார். ஊடாட்டங்களின் தன்மை ஒவ் வொரு நாட்டின் விடயத்திலும் வேறுபடுகின்றது.

இலங்கையின் விடயத்தை வேறுபடுத்துவது பின்வரும் காரணிகளாகும்: இந்தியாவின் தமிழ்நாட்டுடனான உறவு கள் வேறெந்த மாநிலத்தினதையும்விட அதிக முக்கியத் துவம் வாய்ந்தவை. இலங்கையைப் பொறுத்தவரையில் அருகில் இருக்கக்கூடிய இந்தியாவின் தமிழ்நாடு மாநில மானது, ஆறுகோடிக்கும் அதிகமான மக்கள்தொகையைக் கொண்ட ஒரு மாநிலமாக இருக்கின்றது. அதுமாத்திரமல் லாமல், 1967ஆம் ஆண்டு முதல் பிராந்தியக் கட்சிகளான திராவிட முன்னேற்றக் கழகமும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் மாநில அரசியலில் ஆதிக்





கஞ் செலுத்தி வந்துள்ளன. இந்தி பேசாத மாநிலங்களில் இந்தி மொழி ஆதிக்கம் செலுத்தக் கூடாதென்பதற்காக வும், தமிழகத்தில் தமிழ் அரச கரும மொழியாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், இந்திமொழி இந்தியாவின் அரசகரும மொழி என்பதற்கு எதிராகவும் தி.மு.கழகம் மாபெரும் போராட்டத்தை முன்னின்று நடத்தியது. அத் துடன் சுதந்திரத்திற்குப் பிறகு ‘திராவிடநாடு திராவிடர் களுக்கே’ என்ற கோரிக்கையை முன்வைத்துப் போராடி யவர்களாகவும் இவர்கள் இருந்தனர். இத்தகைய காரணி களினால் இலங்கையில் இடம்பெறும் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களின் உணர்வுகளுடன் விளையாடும் ஒரு செயல் என புதுடெல்லி கருதியது. இதனால் தமிழகத்தின் திராவிடத் தலைமை களுக்குப் பொறுப்பாயிருத்தல் தனது சொந்த நலனுக்குகந்த தெனப் புதுடெல்லி கருதுகின்றது.

கடந்த மூன்று தசாப்தங்களாக இந்தியாவின் அரசியற் தளத்திலும், அதன் தேசிய அரசியல் கட்டமைப்பிலும் பெரும் மாற்றங்கள் உருவாகியுள்ளன. அதன் விளைவாகத் தேசிய மற்றும் மாநில மட்டங்களிலும் அதன் அரசியற் செயற்பாடுகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற் றின் விளைவாக மத்தியின் முன்னைய கட்டுப்பாடுகள் தளர்வுற்றதுடன், மாநிலங்களினதும் அவை தொடர்பான விடயங்களினதும் முக்கியத்துவமும் அதிகரித்துள்ளது.

பிராந்தியக் கட்சிகளின் எழுச்சியும், நீண்டகாலம் அவை தங்கள் மாநிலங்களில் ஆட்சிபுரிந்தமையுமே முக்கிய மாற்றங்கள் ஏற்படக் காரணமாயிருந்தன. - தமிழ்நாட்டில் தி.மு.க. மற்றும் அ.இ.அ.தி.மு.க., ஆந்திரப் பிரதேசத்தில் தெலுங்கு தேசம், ஜம்மு மற்றும் காஷ்மீரில் நஷனல் கான்பரன்ஸ், பஞ்சாபில் அகாலி தள். இப்பிராந்தியக் கட்சிகளுக்கு மேலதிகமாக தேசியக் கட்சிகளும் இயங்கி வருகின்றன. இத்தேசியக் கட்சிகள் மாநிலக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்து டெல்லியில் அரசை அமைத்து வரு கின்றன.

இப்போக்குகளின் விளைவாக பிராந்தியக் கட்சிகளின் பலம் பொருந்திய வளர்ச்சியானது பாராளுமன்ற, சட்ட மன்றத் தேர்தல்களை வேறுபடுத்திப் பார்த்தது. அதிகரித்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வருகின்ற தேர்தல் கூட்டும், கூட்டு அரசாங்க முறைமையும், மாநில அரசுகள் மத்திய அரசு மீது செல்வாக்குச் செலுத்த உதவுகின்றன. அது மாநில மற்றும் உள்ளூர் விடயங்களுக்கு அதிக முக்கியத்துவத்தையும் அளித்தது. அதாவது புது டெல்லி, மாநிலங்களுடன் கூடுதலாகக் கலந்தாலோசிக்க நிர்ப்பத்திக்கப்பட்டது. இதன்மூலம் அதிகாரம் மையப் படுத்தப்படுதலைக் குறைத்தது.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கை, இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கு அம்மாநிலம் அளித்த ஆதரவை, இன முரண்பாடு தொடர்பான விடயங் களில் புதுடெல்லிமீது தமிழகத்தின் செல்வாக்கு மற்றும் அயல் நாடுகளுடனான இருதரப்பு உறவுகளில் மத்திய அரசாங்கத்துக்குள்ள புறக்கட்டுப்பாடுகள் ஆகியவற்றை ஒருவர் ஆராய்கின்றபோது, வளர்ந்துவருகின்ற இப்போக்கு களையும், இந்திய அரசியல் முறைமையின்மீது அவற்றின் தாக்கத்தையும் எவரும் புரிந்துகொள்ள முடியும்.

இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கு அவர்களின் போராட்ட அணுகுமுறையைத் தீர்மானிக்கும் தளமாக தமிழ்நாடு முக்கிய பங்கு வகித்தது. அதாவது அவர்களின் ஆயுதப் போராட்டத்துக்கு எதிராக இலங்கை அரசாங்கத் தின் இராணுவக் கரம் எட்ட முடியாத ஒரு பின்தளத்தை அவர்களுக்கு வழங்கியது.[9]

தமிழ்நாட்டுக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமிடை யிலான தொடர்புகளை ஒருவர் விளங்கிக் கொள்வதாயின், இரண்டுக்குமிடையிலான கலாச்சார மற்றும் மொழிப் பிணைப்புகளையும், அவற்றின் செல்வாக்குகளையும் அவர் ஆராய்ந்து பார்க்கவேண்டும். காலஞ்சென்ற பேராசிரியர் க.கைலாசபதி 'தமிழ்ச் சமூகத்தின் கலாச்சார மற்றும் மொழிசார்ந்த உள்ளுணர்வு' என்ற சொற்றொடர் ஊடாக இத்தொடர்புகளை விளக்கியுள்ளார் (கைலாசபதி, 1979: 107-120).

'இலங்கைத் தமிழர்'களுக்கும் 'மலைநாட்டுத் தமிழர்' களுக்குமிடையில் குறித்தசில சமூக-கலாச்சார வேறுபாடு கள் நிலவுகின்றபோதிலும், இரு குழுவினரும் கலாச்சார மற்றும் ஆன்மீகத் தேடல்களுக்கு இந்தியாவை நாடுகின்





றனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் அறிவுஜீவிகள் தென்னிந்தியாவின் இலக்கியத்துறையில் கணிசமான அளவு செல்வாக்கைக் கொண்டிருந்தனர். அத்துடன் பத்தொன்ப தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் 'யாழ்ப்பாண மரபுக் குழுதான் சென்னையின் இலக்கிய அரங்குகளில் ஆதிக்கஞ் செலுத்தியது' (மேற்கூறியது).

'யாழ்ப்பாண புத்திஜீவிகள்' சென்னையில் இலக்கியத் துறையில் அவர்களின் பங்களிப்பைச் செய்த அதேவேளை யில், தமிழ் நாட்டில் கலாச்சாரத் தேசியவாதத்தின் பிறப்பு நிலை அதிர்வுகளையும் தென்னிந்தியாவில் எழுந்த வெவ் வேறு பிராந்திய இயக்கங்களையும் கண்கூடாகக் கண்டனர். அவைதான் பிந்திய ஆண்டுகளில் தி.மு.க.வின் தோற்றமும் மொழிவாரி மாநிலங்களாகத் தென்னிந்தியாவின் மீள மைப்புமென்றவகையில் அரசியல் வடிவம் பெற்றன. இவ் வளர்ச்சிகள் இயல்பாகவே இலங்கைத் தமிழரின் கலாச் சார, மொழியுணர்வில் ஒரு விளைவை ஏற்படுத்தியிருந் தன (மேற்கூறியது).

1980களின் தொடக்கத்தில் தமிழ்நாடு இலங்கைக் கெதிரான இராணுவ நடவடிக்கைகள் அரங்கேற்றப்படும் ஒரு பிரதேசமாக மாறியிருந்தது. தமிழ்நாட்டு மக்கள் போராளிகளைத் தீவிரமாக ஆதரித்தனர், உள்ளூர்த் தமிழ் அரசியல்வாதிகள் இலங்கைத் தமிழர்பால் அனுதாபம் கொண்டிருந்தனர். மத்திய அரசாங்கம் அவர்களை எப்போதாகிலும் கைவிடுமாயின், அது இன உணர்வுமிக்க மாநிலத்தில் தேன் கூடொன்றைக் கலைத்ததற்கொப்பாகும்' (பீரிஸ், 1985: 14). சில போராளிக் குழுக்கள் சென்னையில் இயங்கிவந்த தமிழ்த் தகவல் மையத்திற்குப் புறம்பாக, இந்தியக் கரைக்கு அப்பால் ஒரு படகிலிருந்து ஆங்கிலத் திலும் சிங்களத்திலும் தமிழிலும் செய்திகளை மேலதிக மாக வழங்குவதற்கு வானொலி ஒலிபரப்பு சேவையொன்றை நடத்தினர்.

போராளிகள் பற்றியும், அவர்களின் பயிற்சி பற்றியும், அதிகமான தகவல்கள் 'சவுத்' (South) என்ற சஞ்சிகையில் வெளியிடப்பட்ட ஒரு கட்டுரையில் அதன் பதிப்பாசிரிய ரான டென்சில் பீரிஸ் என்பவரால் கொடுக்கப்பட்டன (பீரிஸ், 1985: 13-15). 'கொழும்பிலுள்ள அரசு அதிகாரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒருவரின் தகவல்' ஒன்றின் அடிப்படையில் அக்கட்டுரை, தமிழ்நாட் டிலுள்ள போராளிக் குழுக்கள், பயிற்றப்பட்ட வர்களின் எண்ணிக்கை, பயிற்சிக் காலம், முகாம்களின் அமைவிடம், செயல்முறைப் பயிற்சி விவரங்கள், போதனா சிரியர்களின் பெயர்கள் ஆகிய விவரங்களை வழங்கியது. அவ்வேளையில் மத்திய அரசாங்கம் அத்தகைய தகவல் களை எல்லாம் உத்தியோகபூர்வமாக மறுத்தது.

நவீன காலப்பகுதியான பத்தொன்பதாம் நூற்றாண் டின் பிற்பகுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி யிலும், காலனித்துவ பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பரந்த கன்ற பொதுக் கட்டுமான வேலைகளுக்காகவும் தேயிலை, இறப்பர் மற்றும் கோப்பித் தோட்டங்களில் வேலைசெய் வதற்காகவும் இந்தியத் தொழிலாளர் புலம்பெயர்ந்ததைத் தொடர்ந்து இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான தொடர்புகள் விருத்தியடையத் தொடங்கின. இலங்கையி லுள்ள இந்தியத் தமிழர் தொடர்பான விடயங்கள்மீது இந்தியாவின் மாநில அரசியற் செயல்முறையின் மற்றொரு மட்டத்தில் ஊடாட்டங்கள் இடம்பெற்றுக்கொண்டிருந் தன . அவை மதராஸ் (இப்பொழுது தமிழ்நாடு) சட்டப் பேரவையில் கருத்து எதிரலைகள், விவாதங்கள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பானவை. இந்தியத் தமிழர் எல்லோ ரும் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்களாதலால் இலங் கையிலுள்ள இந்தியத் தமிழர் தொடர்பான விடயங்களில் அவர்களுக்கோர் அக்கறை இருந்தது. இலங்கையிலுள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் இந்தியத் தமிழர்களுக்கு மிடையிலான ஊடாட்டங்களைத் தொடர்ந்து 'தமிழ் நாட்டுக்காரணி' என்ற வடிவத்தில் இந்த அக்கறை இப்போ தும் உள்ளது (கொடிக்கார, 1965: 219-33).

இந்தியத் தமிழர்களின் நல்வாழ்வு தொடர்பான விடயங்களுக்கு மேலதிகமாக பிரசாவுரிமை, வாக்குரிமை, தென்னிந்தியாவுக்கான பயணக் கட்டுப்பாடுகள் போன் றவை தொடர்பான ஏனைய விடயங்களிலும் மதராஸ் சட்டசபை அக்கறை கொண்டிருந்தது. இலங்கையின் பிரசாவுரிமைச் சட்டங்களுக்கும், இந்தியத் தமிழரின் அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டமைக்கும், மதராஸ் அரசியல் கருத்தானது கடுமையான எதிர்ப்பைக் காட்டி





யது. வாக்குரிமைப் பறிப்பை எதிர்த்து சிலோன் இந்தியக் காங்கிரசால் இலங்கையில் ஒழுங்கு செய்யப்பட்ட சத்தியாக் கிரகத்துக்குப் பேரவைத் தீர்மானமொன்றின் மூலம் மதராஸ் பேரவை ஆதரவளித்தது. மதராஸ் பேரவையில் விவாதங் கள் மூலமும் தீர்மானங்கள் மூலமும் இந்திய- இலங்கைப் பேச்சுவார்த்தைகளின் வெவ்வேறு கட்டங்களில் அவர் களின் கருத்துகளை மதராஸ் பேரவையினர் வெளிப்படுத் தினர் (கொடிக்கார, 1965: 220-226).

முன்னர் குறிப்பிட்டவாறு நேருவின் காலப்பகுதியில் புதுடெல்லியில் இருந்த காங்கிரஸ் அரசாங்கம் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை இலங்கையின் ஓர் உள்நாட்டு விவகாரமாகக் கருதியது. ஆனால் அதன்பின்னர் இந்திய நிலைப்பாடு குறிப்பிடத்தக்களவு மாறியுள்ளது. அவ்வேளை யில் இந்திய அரசியலில் நேரு வகித்த ஆதிக்க நிலையை இது பிரதிபலித்ததுடன் மட்டுமல்லாது, இன்றைய காலத் துடன் ஒப்பிடுகையில் அரசியலமைப்பு ரீதியாக மட்டு மன்றி அரசியல்பலச் சமநிலையிலும் மாநிலத்துக்கெதிராக மத்தி பலம்வாய்ந்ததாக இருந்ததென்பதையும் பிரதிபலித் தது. தி.மு.க. மற்றும் அ.இ.அ.தி.மு.க. போன்ற பிராந்தியக் கட்சிகளின் எழுச்சியினால் தமிழ்நாட்டில் இந்திரா காங் கிரஸ் கட்சி பலவீனமடைந்தமையும், இதே போன்று மற்ற மாநிலங்களில் புதியதாகத் தோன்றிய பிராந்தியக் கட்சி களினாலும் மத்திக்கும் மாநிலங்களுக்கும் இடையிலான அரசியல் அதிகாரச் சமநிலையில் ஏற்பட்ட மாற்றத்தை யும் தொடர்ந்து வெவ்வேறு மாநிலங்களும் மத்தியின்மீது அதிக செல்வாக்கைச் செலுத்தத் தொடங்கின.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றமானது தமிழ்நாட்டுக் கும் டெல்லிக்கும் இடையிலான அரசியல் மாற்றத்திலும் பிரதிபலித்தது. 1948-1966 காலப்பகுதியில் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி ஆட்சி புரிந்தது. இலங்கையிலுள்ள இந்தியத் தமிழர்களின் பிரச்சினைகளை முனைப்படுத்திக் காட்டுவதற்கு மத்தியிலும் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் அரசு தமிழ்நாட்டின் சட்ட சபையையும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களையும் பயன்படுத்தியது. கருத்துகளையும், உத்தியோகபூர்வப் பதிலளிப்புகளையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளிப்படுத்துவதில் மத்திக்கும் மாநிலத்துக்கும் இடையில் பெருமளவு ஒருங்கிணைந்த செயற்பாடும் ஒத்துழைப்பும் காணப்பட்டது (பழனித்துரை மற்றும் மோகனசுந்தரம், 1993: 64-70).

1964இல் இந்திய-இலங்கை உடன்படிக்கை (சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம்) கைச்சாத்திடப்பட்டபோது, தி.மு.க. தலைவரான அண்ணாதுரை மாநிலப் பேரவையில் அதனைத் தாக்கிப் பேசினார். மாநிலத்தில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சியின் பதிலளிப்பு, உடன்படிக்கையைச் செய்த அதே கட்சி மத்தியிலும் ஆட்சி புரிந்த காரணத்தினால் கட்டுப்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி அரசாங்கம் 1967இல் தி.மு.க.ஆல் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தி.மு.க. தமிழர் பிரச்சினைகள் பற்றிய அதன் கருத்துகளை மேலும் கடுமையாக வெளிப்படுத்தத் தொடங்கியது. தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படுவதற்கு இலங்கை அரசாங்கத்தை அக்கட்சி சாடியது. இலங்கைத் தீவிலுள்ள தமிழ்பேசும் பிரதேசங்களுக்குக் அதிக அளவு சுயாட்சியையும் உரிமைகளையும் கோரிய இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் நெருக்கமான தொடர்புகளையும் தி.மு.க. தாபித்துது.

1977 பொதுத்தேர்தலில் தி.மு.க.விலிருந்து பிரிந்து சென்ற ஒரு குழுவான அ.இ.அ.தி.மு.க. பெரும்பான்மையாக வெற்றிபெற்றுத் தமிழ்நாட்டில் அரசாங்கத்தை அமைத்தது. அக்கட்சியின் தலைவரான எம்.ஜி.ராமச்சந்திரன் (எம்.ஜி. ஆர்.)[10] முதலமைச்சரானார். இலங்கையில் 1977 ஆகஸ்டில் இடம்பெற்ற கலவரங்களில் தமிழர்கள் தாக்கப் பட்டதை அ.இ.அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. ஆகிய இரண்டும் கண்டித்தன. புதுடெல்லியில் ஜனதா அரசாங்கத்தின் பிரதமராயிருந்த மொரார்ஜி தேசாய் தமிழ்நாட்டின் கவலை பற்றிச் சற்று அதிகமான பரிவுடையவராயிருந்தார். அவர் இலங்கையில் மீண்டும் இயல்பு நிலை விரைவில் நிலைநாட்டப்படுமென்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகின்ற தனிப்பட்ட செய்தியொன்றை 1977 ஆகஸ்ட் 23ஆந் தேதியன்று இலங்கைப் பிரதமர் ஜயவர்தனவுக்கு அனுப்பினார். அதே சமயம் இந்தியப் பிரதமர் தமிழ்நாட்டு முதலமைச்சரும் அ.இ.அ.தி.மு.க. தலைவருமான எம்.ஜி.ஆருக்கும்,. தி.மு.க.





தலைவர் கருணாநிதிக்கும் இலங்கை அரசாங்கத்துடன் தொடர்புகொள்வதற்கு இந்திய அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகள் பற்றி அறிவித்ததுடன், அரசாங்கம் ‘இலங்கையில் வசிக்கின்ற தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அதனால் செய்யக்கூடிய எல்லாவற்றையும் செய்கின்றது’ என்றும் அவர்களுக்கு உறுதியளித்தார்.

தமிழர்களுக்கெதிரான வன்முறை அடிக்கடி இடம்பெறத் தொடங்கியபோது தமிழ்நாட்டின் எதிரலைகள் மேலும் கடுமையாகின. தமிழர்களுக்கெதிரான 1981 கலவரங் கள் தமிழ்நாட்டிலுள்ள ஊடகங்களால் பரந்த அளவில் வெளிக்கொணரப்பட்டன. தமிழ்நாடு அரசு ‘தமிழர்களுக்கு நீதி வழங்கப்படுதலை உறுதிப்படுத்துவதற்கும் அவர்களுக்குப் போதிய பாதுகாப்பை அளிப்பதற்கும் இந்திய உயர் ஸ்தானிகராலயம், ஐக்கிய நாடுகள் என்பவற்றின் ஊடாகவும் வேறு செயற்திட்டங்கள் ஊடாகவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்படி’ இந்தியப் பிரதமரை வேண்டுகின்ற கடுஞ்சொற்களைக் கொண்ட தீர்மானமொன்றை ஏகமனதாக நிறைவேற்றியது (த ஹிந்து, 22 யூலை 1983: 8). மேலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கவன ஈர்ப்புப் பிரேரணையொன்றின் மூலம் மத்திய அரசாங்கத்தில் இப்பிரச்சினையை எழுப்பி அவர்களின் கடுமையான உணர்வுகளை வெளிப்படுத்தினர். பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும்படி அவர்கள் இந்திய அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தனர்.

1981ஆம் ஆண்டு நவம்பர் 7ஆந் தேதியன்று தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தலைமையில் மாநிலத்தைச் சேர்ந்த சர்வகட்சித் தூதுக்குழுவொன்று பிரதமர் இந்திரா காந்தியைச் சந்தித்தது. இத்தூதுக்குழு அ.இ.அ.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் (ஐ- இந்திரா), காங்கிரஸ் (எஸ்-சரண்சிங்), காமராஜ் காங்கிரஸ், ஜனதா கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கியிருந்தது. அத்தூதுக்குழு இலங்கையிலுள்ள தமிழர்களைப் பாதிக்கின்ற சமீபத்திய தமிழர் எதிர்ப்புக் கலவரங்கள் பற்றிய அவர்களின் கவலைகளையும் கருத்துகளையும் வெளிப்படுத்துகின்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மகஜர் ஒன்றைக் கையளித்தது. 'வம்சாவளித் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட' தமிழர் விரோதக் கலவரங் கள் பற்றிக் குறிப்பிட்ட மகஜர், இலங்கை அரசாங்கத்தின் தீவிரமான அல்லது மறைமுகமான ஆதரவின்றி அத்தகைய கலவரங்கள் இடம்பெற முடியுமாவென்ற சந்தேகங்களை யும் எழுப்பியது (த ஹிந்து, 8 திசெம்பர் 1981).

1980களில் தமிழ்ப் போராளிகள் தமிழ்நாட்டில் அடைக்கலத்தை அனுபவித்துக்கொண்டிருந்த வேளையில், அவர்கள் நாட்டின் சட்டங்களை மீறியபோதிலும் கூட, இரு அரசாங்கங்களும் (மத்திய மற்றும் மாநில) தமிழ்ப் போராளிகளைப் புண்படுத்தாதிருக்க இயன்றவரை முயற் சித்தன. தமிழ்நாட்டு அரசாங்கம் தமிழ்ப் போராளி களுக்குப் பெருமளவு சுதந்திரம் கொடுத்தது. உதாரண மாக, தமிழ்நாட்டிலுள்ள இந்தியப் பிரசைகள் அவ்வாறு அனுமதிக்கப்படாதபோதிலும் ஆயுதங்களுடன் நடமாடு வதற்குத் தமிழ்ப் போராளிகள் அனுமதிக்கப்பட்டனர். சில போராளிக் குழுக்களின் உறுப்பினர்கள் தமிழ் நாட் டுத் தமிழர்களுடன் மோதலில் ஈடுபட்ட பல்வேறு சம்ப வங்கள்கூட இடம்பெற்றுள்ளன.

1986இல் (கம்யூனிஸ்டுகளைத் தவிர) மாநிலத்தின் பிரதான எதிர்க்கட்சிகளைக் கொண்ட குடை அமைப் பொன்று தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பை (TESO - Tamil Eealm Solidarity Organisation) உருவாக்கியது. 'ரெசோ'வின் நடவடிக்கைகளில் ஒரு முனையம்சமாக, 1986ஆம் ஆண்டு மே 4ஆந் தேதியன்று 'இலங்கைத் தமிழர்களைக் காப் பாற்றும் மாநாடு' என்றழைக்கப்பட்ட ஒரு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. தேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் களான எச்.என்.பஹுகுணா, கே.பி.உன்னிகிருஷ்ணன், ஆந் திரப் பிரதேச முதலமைச்சரான என்.டி.ராமராவ் ஆகி யோர் அதில் பங்குபற்றினர். எனினும் இலங்கைத் தமிழர்களுக்கு ஈழம் எனப்படும் தனிநாடொன்றை ஆதரிக்கின்ற தீர்மான மொன்றை நிறைவேற்றுவதற்கு தி.மு.க. எடுத்த முயற்சி களுக்கு புதுடெல்லியைச் சார்ந்த தேசிய எதிர்க்கட்சித் தலைவர்களிடமிருந்து கடுமையான எதிர்ப்புக் கிளம்பியது. பஞ்சாப் பிரச்சினையின் காரணமாக அதன் பின்விளைவு





களையிட்டு அவர்கள் தர்மசங்கடமான நிலையை அடைந் தனர். இறுதியில் இலங்கை அரசாங்கத்தைக் கண்டிக்கின்ற தும், தமிழர்களுக்கான ஆதரவை உறுதிப்படுத்துகின்றது மான ஒரேஒரு தீர்மானம் மட்டுமே மாநாட்டிலிருந்து பிறந்தது.

சுருங்கக் கூறுவதாயின் இலங்கையின் இன முரண் பாட்டில் தமிழ்நாட்டுக் காரணியானது செல்வாக்குகளின் பல அடுக்குத் தொகுதியெனக் காணப்படலாம். அதன் அத்திவாரமாக பாக்குநீரிணையின் இருபக்கங்களிலுமுள்ள இரு தமிழ்ச் சமூகங்களையும் பிணைக்கின்ற கலாச்சார, சமய மற்றும் சமூகத் தளைகள் அமைகின்றன. இந்த அடுக் கின்மீது அண்மைய தசாப்தங்களில் வேறு தேசிய இனங் கள் ஆதிக்கஞ் செலுத்துகின்ற மொழித் தேசிய இனங்கள் இரண்டின் முற்றுகை மனப்பான்மையின் அடிப்படை யிலான பிரிவினைவாதத் தூண்டுதலென்ற பொதுவான அனுபவம் பொருந்தியது. தனியான தாயகமொன்றுக்காகப் போராடுபவர்களுக்குப் பிராந்தியக் கட்சிகளான தி.மு.க. மற்றும் அ.இ.அ.தி.மு.க. ஆறுதலும் உதவியும் அரசியல் ஆதரவும் அளிக்கத் தயாராயிருப்பதற்கு இவ்வனுதாபம் காரணமாகின்றது. மாநிலத்தில் பிராந்தியக் கட்சிகளின் ஆதிக்கம் இதற்கு உதவுகின்றது. மேலும் மத்தியைக் கையாள் கின்ற மட்டத்தில் தமிழ்நாட்டிலுள்ள பலமான ஒரு பிராந் தியக் கட்சி சுதந்திரத்துக்குப் பிந்திய தொடக்க ஆண்டு களில் இருந்ததைவிட அதிகமான செல்வாக்கைக் கொண் டுள்ளது.

## இன முரண்பாடு: பிராந்தியப் பரிமாணங்கள்

இப்பிரிவின் நோக்கம், 1977ஆம் ஆண்டிலிருந்து ஜயவர்தன ஆட்சியின்கீழ் இலங்கை வெளிநாட்டு அரசு களிடம் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் விடுக்கப் பட்ட வேண்டுகோள்களையும் அவற்றுக்குப் பதிலாக வெளிநாட்டு அரசுகளால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை யும் மதிப்பீடு செய்தலாகும். மேற்குலகுக்கு ஆதரவான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது அதன் மிகப்பெரிய, பலம்பொருந்திய அயல்நாடான இந்தியா விற்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியது. இதன் விளைவாக இந்தியா அனுமதிக்கக்கூடிய வெளியுறவுக் கொள்கையை

www.tamilarangam.net



இலங்கை வகுத்துக்கொள்வதற்கு 1987 ஆம் ஆண்டின் இந்திய-இலங்கை ஒப்பந்தம் அடிகோலியது (தமிழ் ரைம்ஸ், 15 செப்ரெம்பர் 1997). எனவே தென்னாசியப் பிராந்தியத்தில் குறிப்பிடத்தக்க ஒரு நிலையை வகிக்கின்ற இந்தியாவுடன் இலங்கையின் உறவை ஆராய்தல் பொருத்தமானது.

இந்தியா அதன் அயல்நாடுகளுடனான பரஸ்பர உறவுகளில் ஒரு பலமான தாக்கத்தைக் கொண்டுள்ள இன, சமய மற்றும் சமூக-கலாச்சாரப் பிணைப்புகள் தொடர்பில் அவற்றுடன் சமச்சீரற்ற ஓர் உறவைக் கொண்டுள்ளது. அயல்நாடுகளில் இந்தியாவின் பாதுகாப்பு அக்கறைகள் பெருமளவுக்குப் புவியியல் தொடர்ச்சி, சமூக-கலாச்சார அடையாளங்கள், வெளிநாட்டுத் தாக்குதலும் அதனைக் கட்டுப்படுத்திய விதம் இதனைப் போன்றே உள்நாட்டுக் கவிழ்ப்புகள் ஆகியவற்றின் வரலாற்று அனுபவங்கள் போன்ற நிலைமாறாத காரணிகளால் தீர்மானிக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளன (வாஜ்பாய் 1983: 115). இக்காரணிகள் ஒன்று மற்றொன்றின் சமாதானம், ஸ்திரத்தன்மை, பலம் ஆகியவற்றில் பரஸ்பர ஈடுபாடுகளுக்கும் பங்களிக்கின்றது. இச்சூழலில் இலங்கையின் பாதுகாப்பு நெருக்கடியைக் கருதுகின்றபோது இந்திய-இலங்கை உறவுகள் பெரும் முக்கியத்துவம் பெறுகின்றன.

எனவே, சுதந்திரத்துக்குப் பிந்திய காலப்பகுதியில் இந்தியா, அதன் சிறிய அயல்நாடுகளுடனான இருதரப்பு உறவுகள் குறித்த விடயங்களில் நல்லிணக்கக் கொள்கையொன்றைப் பின்பற்றியிருந்தது. எனவே பிராந்தியத்தில் சீனாவின் எழுச்சியின் நிமித்தம், அது பூட்டானுடனும் நேபாளத்துடனும் ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்துகொள்வதன் மூலம் நல்ல உறவுகளைப் பேணியது. ஆனால் அதன் தென்கோடியான இலங்கையில் ஆங்கிலேயர் தொடர்ந்து இருத்தலுக்கு ஏதோ வகையில் எதிர்ப்பற்ற உடன்பாட்டைக் காட்டியிருந்தது. எனினும் படிப்படியாக, மாறிவரும் சூழ்நிலைகளின்கீழ் இந்தியாவை ஒரு மேலாதிக்க அரசாக நோக்கிய சிறிய அயல்நாடுகள் இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு முரண்பாடான குறித்த சில வெளிநாட்டுக் கொள்கைகளைப் பின்பற்றின. இலங்கையைப் பொறுத்தவரை அதன் கேந்திர முக்கியத்





துவமும், இந்திய வம்சாவளி இனக்குழுக்கள் சில அங்கு இருந்தமையும் இந்தியாவுக்குப் பல்வேறு சிந்தனைகளை ஏற்படுத்தின.

## இன முரண்பாடு : சர்வதேசப் பரிமாணங்கள்

சர்வதேச மற்றும் தெற்காசியப் பிராந்திய அரசியல்கள் உள்நாட்டு முரண்பாடுகளிலும் ஒரு பங்கை வகிப்பதனால் உலக அரசியலும் தென்னாசியப் பிராந்திய அரசியலும் இலங்கையின் இன நெருக்கடியையும் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவுகளையும் எவ்வாறு பாதித்தனவென்று இங்கு ஆராய்தல் பொருத்தமானது. எனினும் இந்து சமுத்திரத்தில் வல்லரசுப் போட்டியையோ அல்லது தென்னாசியப் பிராந்திய அரசியலையோ இங்கு விரிவாக ஆராய்தல் எனது நோக்கமல்ல. எனது ஆய்வுடன் தொடர்புடைய விடயங்களுக்கு மட்டும் நான் என்னைக் கட்டுப்படுத்திக்கொள்கிறேன்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர், ஐக்கிய அமெரிக்க நாடுகளும் (யு.எஸ்.ஏ.) சோவியத் சோசலிசக் குடியரசும் (யு.எஸ்.எஸ்.ஆர்.) வல்லரசுகளாக எழுச்சி பெற்றன. இரண்டும் பூகோள அக்கறைகளையும் சர்வதேசக் கண்ணோட்டங்களையும் கொண்டிருந்தன. அவற்றில் ஒன்று உலகக் கம்யூனிச இயக்கத்தின் தலைமையாகத் தன்னைத்தானே காட்டிக் கொண்டதுடன், உலகும் அதனை அவ்வாறே கண்டது. அதேசமயம் மற்றையது, சர்வ தேச முதலாளித்துவ அமைப்பின் பாதுகாவலராகவும் இரட்சகராகவும் உலகில் பிரவேசித்தது (குப்தாவும் ஏனையோரும், 1986). வல்லரசுகள் இரண்டும் ஒன்று மற்றையதன் அதிகார விஸ்தரிப்பையும் செல்வாக்கையும் கட்டுப்படுத்த விரும்பியதனால் யுஎஸ்ஏ தலைமையிலான வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பு (North Atlantic Treaty Organisation - NATO) மற்றும் சோவியத் யூனியன் தலைமையிலான வார்சோ ஒப்பந்தம் போன்ற பரஸ்பரம் முரண்படுகின்ற நேசக்கூட்டுகளை அவை உருவாக்கின.

அதன் விளைவாக உலக அரங்கு இரு துருவங்களாகியது. வல்லரசுகளின் அதிகார அரசியலில் சம்பந்தப்பட விரும்பாத நாடுகள் அணிசேரா இயக்கத்தை (Non Aligned Movement-NAM) உருவாக்கின. ஏறக்குறைய அனைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தெற்காசிய நாடுகளும் அணிசேரா இயக்கத்தின் உறுப்பு நாடுகளாயிருந்தன. எனினும் வல்லரசுகள் விரைவில் 'தாம் வளர்த்து வருகின்ற உலகளாவிய தந்திரோபாயச் சட்டகத்தினுள் பிராந்தியத்திலுள்ள நாடுகளையும் பொருந்தச் செய்யும் முயற்சியாகத் தென்னாசியாவை நோக்கி அவற்றின் கவனத்தைத் திருப்பின' (குப்தாவும் ஏனையோரும், 1986). இந்தியா அணிசேராக் கொள்கையைக் கைக்கொண்டு சர்வ தேச அரசியலில் சுதந்திரமான ஒரு கொள்கையைப் பின்பற்ற விரும்பியதனால், அமெரிக்கா அதன் கவனத்தைப் பாகிஸ்தான் பக்கம் திருப்பிய அதேவேளையில், இந்தியா ஓர் ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடென்ற வகையில் ஸ்டாலினின் மரணத்தின் பின்னர் சோவியத் யூனியன் இந்தியாவை ஒரு நண்பனாகக் கருதியது.

'அமெரிக்கா பாகிஸ்தானின் பக்கம் சாயத் தொடங்கியதோடு சோவியத் யூனியன் இந்தியாவின் சார்பாக அதனைப் பாதுகாக்க முற்படுமென்பது இயல்பானதே' (குப்தாவும் ஏனையோரும் 1986). இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் காஷ்மீர் மீதான பிணக்கில் சோவியத் யூனியன் இந்தியாவை ஆதரித்தது. மறுபுறத்தில் பாகிஸ்தான் 1954 இல் அமெரிக்காவுடன் பரஸ்பர உதவி மற்றும் பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதுமல்லாமல் அது தென் கிழக்காசிய ஒப்பந்த அமைப்பிலும் (South East Asian Treaty Organisation - SEATO) மத்திய கிழக்கு நாடுகளின் ஒப்பந்த அமைப்பிலும் (Central East Nationas Treaty Organisation - CENTO) ஓர் உறுப்பினராகியது. எனவே தென்னாசியா வில் இரு பெரிய, பலம்மிகுந்த நாடுகளும் பரஸ்பர விரோதிகளாகவும் பரஸ்பரம் எதிர்ப்புணர்ச்சிகொண்ட வல்லரசுகளின் நண்பர்களாகவும் ஆகிவிட்டன.

கொடிக்கார சுட்டிக்காட்டியுள்ளவாறு, இலங்கையைப் பொறுத்தவரையில் வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானிக்கும் செயல்முறையில் இரு முக்கிய காரணிகள் பங்குவகித்தன:

1. 'தீவின் ஏற்றுமதி-இறக்குமதிப் பொருளாதாரம் வெளிநாட்டுப் பொருளாதார மற்றும் தொழில் நுட்ப உதவியில் தங்கியிருந்தமை' (கொடிக்கார 1986). அத்துடன்,





2. இந்தியக் குடாநாட்டின் தென்முனையில் இந்து சமுத்திரத்தில் இலங்கையின் புவிக்-கேந்திர அமைவிடம், மேலும் சுதந்திரம் முதல் அதிகாரத்திலிருந்த கட்சியில் அல்லது கட்சிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையைப் பாதித்தன (கொடிக்கார, 1988).

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரு பிரதான கட்சிகளின் பொருளாதாரக் கொள்கைகள், அவ்வவற்றின் பதவிக் காலங்களின்போது வெளிநாட்டுக் கொள்கைகளின் மாறுபாட்டைத் தீர்மானிக்கும் ஒரு காரணியாக இருந்துள்ளன. எடுத்துக் காட்டாக, ஐ.தே.க. எப்போதும் தனியார்துறையை ஊக்குவித்த அதேவேளையில், ஸ்ரீ ல.சு.க. இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தியதுடன், பெரிய தொழில்முயற்சிகளையும் தேசியமயமாக்கியது. இவ்வேறுபாடுகள் அவற்றின் வெளிநாட்டுக் கொள்கையிலும் பிரதிபலிக்கின்றன. இதன் விளைவாக ஐ.தே.க. எப்போதும் மேற்குலக நாடுகளுடனும், ஸ்ரீல.சு.க. கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தன. 1977க்குப் பிந்திய காலப்பகுதியில் மேற்கை நோக்கித் திசைமாறுகின்ற ஐ.தே.க.இன் பாரம்பரிய வெளிநாட்டுக் கொள்கை ஜயவர்தன அரசாங்கத்தால் தொடரப்பட்டது (கொடிக்கார, 1986).

இலங்கையுடனான அமெரிக்க உறவுகள் எப்போதும் மிக நெருக்கமானவையாயிருந்துள்ளன. குறிப்பாக ஐ.தே.க. ஆட்சியின்போது அவ்வுறவு இந்தியாவுடனானதைவிடப் பெருமளவு கூடிய நட்புறவானதாயிருந்தது.

## வெளிநாட்டு அரசுகளும் இலங்கையின் இன முரண்பாடும் : இந்தியாவின் அக்கறை

முன்னர் விவாதிக்கப்பட்டவாறு, அயல்நாடுகளில் இந்தியாவின் பாதுகாப்பு அக்கறைகள் புவியியல் தொடர்ச்சி, சமூக-கலாச்சார அடையாளங்கள், வெளிநாட்டு வலுத்தாக்குதலும் கட்டுப்பாடும்பற்றிய ஒத்த வரலாற்று அனுபவம் மற்றும் உள்நாட்டுக் கவிழ்ப்புப் போன்ற மாறாத காரணிகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளன. இச்சூழலில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யின் புவிக்-கேந்திர முக்கியத்துவம் மற்றும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான புவியியல்ரீதியான நெருக்க மான உறவு ஆகிய இரு காரணிகள் முக்கியமானவை. இதன் விளைவாக இலங்கையில் 1983 யூலை கலவரங்களைத் தொடர்ந்து இந்தியா அதன் பாதுகாப்பைப் பாதிக்கின்ற வளர்ச்சி எதனையும், குறிப்பாக வெளிநாட்டு அரசுகளின் (பிராந்தியத்துக்குப் புறம்பான மற்றும் இந்திய விரோதப் பிராந்திய அரசுகளின்) ஈடுபாட்டையும் இந்தியாவால் புறக்கணிக்க முடியவில்லை. இலங்கையின் இன முரண் பாட்டில் இந்தியாவின் ஈடுபாடும் பங்கும் பற்றிய ஆய்வுக்கு ஒரு பின்னணியாக இலங்கையின் இன முரண்பாட்டில் வெளிநாட்டு அரசுகளின் ஈடுபாட்டை இங்கு ஆராய்தல் பொருத்தமானதாகும்.

தமிழ்ப் போராளிகள் தமது பிரிவினைவாத இயக்கத் தின்பேரில் இலங்கையின் ஆயுதப் படைகளையும் தம்மை எதிர்த்தவர்களையும் தாக்கத் தொடங்கினர். எனவே ஜனாதிபதி ஜயவர்தன தமது அரசாங்கம் நாட்டிற்குள்ளும் வெளியிலிருந்தும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்குகின்ற தென்றும், சிங்களச் சமூகத்தின் பேரினவாதப் பிரிவினர் இலங்கையின் ஒழுங்குக் கட்டுப்பாடற்ற இராணுவத்தி லுள்ள பற்றுறுதியற்ற படைகளுடன் கூட்டாகச் சதிசெய்து தமது ஆட்சியைக் கவிழ்க்கக்கூடுமென்றும் உணர்ந்தார் (மேனர், 1985: 174). பலிகொள்ளப்பட்ட பெருமளவு தமிழ் உயிர்களினதும் உடைமைகளினதும் விளைவாக, இந்தியா வில் உருவாகியுள்ள தமிழ் உணர்வையும், இந்தியாவின் பாதுகாப்புக்கு இலங்கையின் புவிக்-கேந்திர முக்கியத்து வத்தையும் கருத்திற்கொண்ட சிங்கள ஆதிக்க அரசாங்கம், 1971இல் கிழக்குப் பாகிஸ்தான் நெருக்கடியின்போது நடந்துகொண்டவாறு இந்தியா இராணுவ ரீதியாகத் தலையிடக் கூடுமென்றும் தமிழரின் இலட்சியத்திற்காகச் செயற்படக்கூடுமென்றும் அச்சமடைந்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்வரை இந்திய ஆதிக்கம் பற்றிய அச்சங்கள் இலங்கையின் இராசதந்திரம், அரசியல் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான தீர்மானங் களை எடுப்பதில் பெருமளவுக்கு வழிப்படுத்தின. எனவே ஐ.தே.க. அரசாங்கம் நெருக்கடியைச் சந்திப்பதற்குப் பிராந்தி யத்துக்கு வெளியேயுள்ள ஏனைய இந்திய விரோதப்





பிராந்திய அரசுகள் பலவற்றிடமிருந்து இராணுவ உதவியை நாடியது (த ஹிந்து, 6 ஆகஸ்ட் 1983).

இந்தியாவுக்கு விரோதமான எல்லாப் பிராந்திய அரசு களும், பிராந்தியத்துக்கு வெளியேயுள்ள அரசுகளும், தெற்காசியாவில் இந்தியாவின் மேலாதிக்க நிலையைக் குறைப்பதற்காக, இரு நெருங்கிய அண்டைநாடுகளான இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் நிரந்தரமான பதற்றத்தை உருவாக்க விரும்பின. மேலும் முன்னர் கூறிய வாறு, இந்து சமுத்திரத்தில் இலங்கையின் புவிக்-கேந்திர அமைவிடத்தின் நிமித்தம் உலக வல்லரசுகளின் பார்வை யில் இலங்கை ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. எனவே இந்து சமுத்திரப் பிராந்தியத்தில், அவற்றின் பொருளா தார மற்றும் தந்திரோபாய நலன்களுக்கு இலங்கை உத்தர வாதமளிக்கக்கூடுமென்பதுடன், கப்பல்களையும் விமானங் களையும் மீள நிரப்புவதற்கும் திருத்துவதற்கும் தேவை யான கடற்படை மற்றும் விமானப்படைத் தளங்களைப் பயன்படுத்துவதற்கான வசதிகளையும் அது வழங்கக்கூடும்.

தந்திரோபாய நோக்கங்கள் எல்லாவற்றிற்கும் இலங் கையை உள்ளடக்கிய இந்தியப் பாதுகாப்பு வளையத்தி னுள் இயற்கைத் துறைமுகமான திருகோணமலை இந்தி யாவின் பாதுகாப்பு அக்கறைகளுக்கு மிக முக்கியமான தாயிருந்தது. எனவே ஜயவர்தன அரசாங்கம் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், பாகிஸ்தான், பங்களா தேஷ், சீனா, தென்னாபிரிக்கா ஆகியவற்றிடமும், மேலும் அனேக மேற்காதரவு நாடுகளிடமும் பொருளாதார மற்றும் இராணுவ உதவியைக் கோரியபோது, இந்தியா தெற் காசியப் பிராந்தியத்தின் பாதுகாப்பு முகாமைத்துவத்தில் அமெரிக்கா ஈடுபடுகின்ற சாத்தியம் குறித்து மிகுந்த அக்கறையுடன் அவதானித்துக் கொண்டிருந்தது. அதன் பின்னர் 1983ஆம் ஆண்டு யூலை கலவரங்களையடுத்து, இலங்கையில் ஸ்திரமற்ற அரசியல் நிலைமை நிலவியதைத் தொடர்ந்து, தெற்காசியாவின் தந்திரோபாய ஐக்கியத்தை யும் பிராந்தியத்தில் இந்தியாவின் நடுநிலையையும் உறுதிப் படுத்துகின்ற வகையில் இந்தியாவில் புதிய தந்திரோபாயச் சிந்தனையொன்று உருவாகியது. முன்னர் எப்போதுமில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லாத இவ்வளர்ச்சிகளைக் கவனத்தில்கொண்ட இந்திரா காந்தி, இந்தியாவின் மொன்றோ கோட்பாடென்று பிரபலமாக அறியப்பட்ட இந்தியப் பாதுகாப்புக் கோட்பாடொன்றை தெற்காசியப் பிராந்தியம் முழுவதிலும் மேற்கொண்டார். அது கூறியதாவது:

> பிராந்தியத்திலுள்ள ஏதேனும் அரசு கோரினாலன்றி இந்தியா பிராந்தியத்திலுள்ள ஏதேனும் அரசின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடமாட்டாதென்பதுடன், வெளியிலுள்ள அரசொன்றின் அத்தகைய தலையீட்டைச் சகித்துக்கொள்ளவும் மாட்டாது. உள்நாட்டு நெருக்கடியொன்றைச் சந்திப்பதற்கு வெளிநாட்டு உதவி தேவைப்படுமாயின், அரசுகள் முதலில் பிராந்தியத்தினுள் உதவியைத் தேட வேண்டும் (சிவராஜா 1985: 141).

இச்சூழலில் இலங்கையின் இன முரண்பாட்டில் ஏதேனும் வெளிநாட்டு அரசின் தலையீடு ஏற்படுமாக இருந்தால் அது தெற்காசியப் பிராந்தியத்தின் பாதுகாப்புச் சூழல் தொடர்பில் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே ஜனாதிபதி ஜயவர்தன எவ்வாறு பிராந்தியத்துக்கு வெளியேயுள்ள அரசுகளுடன் நெருக்கமான தந்திரோபாயப் பிணைப்புகளைத் தூண்டிவிட்டாரென்றும், அவை எவ்வாறு இலங்கையில் நெருக்கடி நிலைமையைத் துரிதப்படுத்தினவென்றும் ஆராய்தல் பொருத்தமானது.

## வெளிநாட்டு அரசுகளின் பங்கு: 1977இன் பின்னர் அமெரிக்க–இலங்கை உறவுகள்

இலங்கையில் இன முரண்பாடு மேலும் மோசமடைந்ததையும், இம்முரண்பாட்டின்பால் இந்தியாவின் மனப்பான்மையையும் தொடர்ந்து ஐ.தே.கட்சியின் தலைமை, மேற்குலக நாடுகளுடனும் சீனா, பாகிஸ்தான் மற்றும் யப்பானுடனும் நெருக்கமான உறவை வளர்த்துக் கொண்டது. இலங்கையில் தமிழ்ப் போராளிகளினதும் ஜே.வி.பீ. யினதும் சவால் தீவின் தேசியப் பாதுகாப்பை முன்னுரிமைக்குரிய ஒரு விடயமாக்கியது. 1977ஆம் ஆண்டு முதல் ஐ.தே.க. பின்பற்றிய பொருளாதாரத் தாராளமயமாக்கற் கொள்கை முதலாளித்துவம் சார்ந்ததாக இருந்ததனால், அது மேற்குலக நாடுகளுக்கு ஆதரவானது எனக் கருதப்பட்டது.





ஜயவர்தன ஆட்சிக்கு முன்னர், திருமதி பண்டாரநாயக்கவின் தலைமையின்கீழிருந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் (1970-77) முதலாளித்துவ விரோதமானதாகவும், எனவே மேற்குலக நாடுகளுக்கு எதிரானதாகவும் கருதப்பட்டது. அவரின் அரசாங்கம் சோசலிச நாடுகளுடன் நெருங்கிய உறவுகளை வைத்திருந்தது. மறுபுறத்தில் 1980களில் இலங்கையை நோக்கிய அமெரிக்காவின் கொள்கையும், குறிப்பாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் தொடர்பில் தெற்காசியாவை நோக்கிய அதன் கொள்கைகளும், கம்யூனிசத்தைக் கட்டுப்படுத்துதல் போன்ற உலக விடயங்களில் அதன் ஒட்டுமொத்த அணுகுமுறையால் வழிப்படுத்தப்பட்டன.

இஸ்லாமாபாத், வாஷிங்டன்-பெய்ஜிங் அச்சு நீடிக்கப்படுவதும், இலங்கை போன்ற சில நாடுகள் அம்முறைமையினுள் கொண்டுவரப்படுவதும்தான் கசப்பான உண்மையென்று இந்தியச் செய்திச் சஞ்சிகையான லிங்க் குறிப்பிட்டது (லிங்க் 1987).

முதலாவதாக, தென் ஆசியாவில் அமெரிக்காவின் தந்திரோபாய நலன்களுக்கு இந்தியா மட்டுமே ஒரேயொரு பலம்பொருந்திய தடையாக இருந்தது. காஷ்மீர் பிணக்குத் தொடங்கியதிலிருந்து, பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு பெரிதும் மாறவில்லையென்பது தெளிவாகியிருந்தது. எனவே, இலங்கையுடன் நெருங்கிய பிணைப்புகள் இப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் தந்திரோபாய அக்கறையின் பகுதியாயிருந்தன. அதற்குப் பிரதானக் காரணங்களாயிருந்தவை:

1. பிராந்தியத்தில் இலங்கையின் கேந்திர அமைவிடம். அது அமெரிக்காவின் நிலையை ஸ்திரப்படுத்தியதுடன், இந்தியாவின் பாதுகாப்புக்கும் ஓர் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது.
2. பிலிப்பைன்சிலும் டீகோ-கார்சியாவிலும் இருந்த அமெரிக்கக் கடற்படைத் தளங்களை பலப்படுத்த வேண்டியிருந்தது. மார்கோஸ் பதவியை இழந்து அக்குவினோ அதிகாரத்துக்கு வந்தபோது, அமெரிக்கக் கடற்படைத்தளம் ஒப்பந்தத்தை அக்கு வினோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரத்துச் செய்யக்கூடுமென்ற ஓர் அச்சமிருந்தது. ஆயினும் இறுதியாக அவர் 1990 வரை அதனைத் தொடர்வதற்கு உடன்பட்டார். இக்காலப் பகுதியில் பிலிப்பைன்ஸ் தளத்தை அமெரிக்கா இழக்குமா யின் இலங்கையில் ஒரு புதிய தளத்தைத் தாபிப்ப தற் கான ஒரு மாற்றுத் திட்டம் அதற்கிருந்தது.

## திருகோணமலைத் துறைமுகம்

இலங்கையின் கிழக்குக் கரையோரத்தில், திருகோண மலையில் வங்காள விரிகுடாவை நோக்கியதாக அமைந் துள்ள இயற்கைத் துறைமுகம், உலகிலுள்ள மிகச்சிறந்த ஆழ்நீர்த் துறைமுகங்களில் ஒன்றென்ற வகையில், கடந்த காலத்தில் அனேக மேற்குக் காலனித்துவ அரசுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது (ஆனந் 1987: 551). 1857 முதல் 1948 வரை ஒரு பிரிட்டிஷ் கடற்படைத் தளமாயிருந்த அது, இரண்டாவது உலக யுத்தத்தின்போது யப்பானியரால் சிங்கப்பூர் கைப்பற்றப்பட்டதன் பின்னர், பிரிட்டிஷ் பசுபிக் கப்பற் படையின் தலைமையகமாகப் பயன்படுத்தப்பட்டது (ஆனந் 1987: 551). இந்து சமுத்திரத்தில் அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் கடற்படை ஆதிக்கப் போட்டி அதிகரித்ததைத் தொடர்ந்து, இந்து சமுத்திரத்தில் ஒரு நிரந்தர இருப்பைப் பேணத் தீர்மானித்த அமெரிக்கா, டீகோ-கார்சியாவில் நிரந்தரக் கடற்படைத் தளமொன்றை நிர்மாணித்தது.

எனவே அமெரிக்கா அதன் கடற்படையினருக்கு ஓய்வுக் கும் பொழுதுபோக்கிற்குமான வசதிகளைத் தேடிக் கொண் டிருந்தது. இதன் தொடர்பில் ஜே.பீ. ஆனந் பின்வருமாறு கூறினார்:

> 1980இன் தொடக்கத்தில் அமெரிக்கா ஓய்வுக்கும் பொழுது போக்கிற்குமான வசதிகளை இலங்கையில் அவசரமாகத் தேடியது. இக்கோரிக்கை கணிசமான அளவு முதலீட் டுடன் சேர்த்து முன்வைக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது. அமெரிக்கா திருகோணமலை துறைமுகத்தையும், கொழும் புக்கு அருகே உள்ள கட்டுநாயக்க விமான நிலையத்தை யும் பயன்படுத்துவதற்கு அளிக்கின்ற வாய்ப்புக்குப் பரி மாற்றமாக, 600 மில்லியன் டொலர் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்கான உறுதிமொழியென்ற கவர்ச்சியூட்டு





> கின்ற சலுகையை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கியது (ஆனந் 1987: 552).

1983இலும் 1984இலும் அமெரிக்கக் கடற்படைக் கப்பல் களின் 'நல்லெண்ண' விஜயங்களின் உச்சக்கட்டமாக, 1985 நவம்பரில் அமெரிக்க இராட்சத விமானந்தாங்கிக் கப்ப லான கிட்டி ஹோக், பெரும் யுத்தக் கப்பல்களுக்குக் கிடைப்பதாயுள்ள வசதிகளைச் சோதித்துப் பார்ப்பதற் காக வருகை தந்தது (வில்சன் 1986: 11). திருகோணமலை மீதான அக்கறைக்கு பிலிப்பைன்சிலுள்ள சுபிக் குடாவில் தள வசதிகள் மீளப் பெறப்படுமிடத்து, திருகோணமலை பயனுள்ள ஒரு பின்பலமாகச் சேவையாற்றுமென்பதே எளிதில் நம்பக்கூடிய ஒரு காரணம். ஒரு மாற்றுப் புனை கருத்து, எதிர்காலத்தில் ஏதேனுமொரு கட்டத்தில் திருமதி பண்டாரநாயக்க மீளத் தெரிவுசெய்யப்படுவாராயின் சோவியத் யூனியன் போன்று வேறு அக்கறைகொண்ட தரப்புகளுக்குச் சாத்தியமான தளவசதிகளை உண்மையில் மறுக்கின்ற உள்நோக்கமுமாகும் (கொடிக்கார 1993). திரு கோணமலைத் துறைமுகம் அமெரிக்கக் கடற்படைக்குக் கிடைப்பதாயுள்ள, ஆனால் சோவியத் யூனியனுக்கு மறுக்கப் பட்ட ஒரு வசதியாகக் காட்டுகின்ற வரைபடமொன்றைப் பென்ரகன் வெளியிட்டபோது, திருகோணமலைத் துறை முகம் பற்றிய பிரச்சினை மேலும் சிக்கலாகியதென்பது கவனத்திற்கொள்ள வேண்டிய சுவாரஸ்யமான ஒரு விட யம் (ஆனந் 1987: 552).

## திருகோணமலை : எண்ணெய்த் தாங்கிப் பண்ணை அபிவிருத்தித்திட்டம்

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சியின்போது பிரிட் டிஷ் கடற்படை ஆட்சிக்குழு 1927-32 காலப்பகுதியில், 10,900 தொன் எண்ணெயைக் களஞ்சியப்படுத்தும் கொள் திறன் கொண்ட 100 எண்ணெய் சேமிப்புத் தாங்கிகளை நிர்மாணித்திருந்தது. இது பிரிட்டிஷ் கடற்படை ஆட்சிக் குழு இயற்கைத் துறைமுகத்தை மையப்படுத்தித் திருகோ ணமலையில் கட்டியெழுப்பியிருந்த ஒரு பாரிய சுய ஆதர வுப் பாதுகாப்புத் தொகுதியின் ஒரு பகுதியாக அமைந்தது (ஆனந் 1987: 552). இலங்கை சுதந்திர மடைந்ததைத் தொடர்ந்து, இத்தாங்கிப் பண்ணையின் உடைமை 1957இல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்குக் கை மாற்றப்பட்டது. அன்றுதொட்டு இத்தாங்கிகளில் பெரும் பாலானவை பயனற்றுக் கிடக்கின்றன.

1991இல் இலங்கை அரசாங்கம் திருகோணமலையில் பயனற்று இருக்கின்ற இத்தாங்கிகளைக் குத்தகைக்கு விடு வதென்ற முடிவுக்கு வந்தது. அதன் விளைவாக 1991ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆந் தேதியன்று இலங்கைப் பெற்றோ லியக் கூட்டுத்தாபனம் பெர்முடா, கோஸ்ரல் கோப்பரே ஷனுடன் பேரமொன்றை முடித்துள்ளதாக அறிக்கை வெளி யிடப்பட்டது. இப்பேரத்தின்கீழ்:

> எண்ணெய்ப் பண்ணையைப் புனரமைப்பதற்கும், ஒரு நவீன எண்ணெய் முடிவிடத்திற்குத் தேவையான இறங்கு துறையையும் நங்கூரமிடும் வசதிகளையும் கட்டுவதற்காக வும், கோஸ்ரல் 100 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்யவிருந்தது. வருடாந்தத் தள வாடகையாக 36,000 டொலரைச் செலுத்துவதற்கும், 25 ஆண்டுக் காலப் பகுதியில் ஒவ்வோர் ஆண்டும் பத்துச் சதவீதத்தால் அதனை அதிகரிப்பதற்கும் கோஸ்ரல் கோப்பரேசன் உடன்பட்டது. இவ்வசதியில் சேமிக்கப்படும் ஒவ்வொரு மெட்ரிக் தொன் எண்ணெய்க்கும் மேலதிகக் கட்டணமொன்று செலுத்தப் படவிருந்தது. இதன்மூலம் இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வருடாந்தம் 4 மில்லியன் டொலர் நிகரவருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது (கிறெட்ஹர் 1984: 238).

எண்ணெய் தாங்கிப்பண்ணை நவீனமயப்படுத்தலுக் கான மேம்பாட்டுத் திட்டத்தின் நீடித்த செயல்முறைச் சூழ்நிலைகள் இந்தியாவின் கோபத்தை மேலும் கிளறி விட்டன (கொடிக்கார 1990: 17). கேள்விதாரர் அமெரிக்கக் கடற்படையுடன் ஒப்பந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளா ரென்ற இந்தியச் சான்றின் விளைவாக இவ்வொப்பந்தம் பின்னர் கைவிடப்பட்டது (கொடிக்கார 1990: 17).

இவ்வொப்பந்தம் பின்னர் சிங்கப்பூரைச் சேர்ந்த ஒரோலியம் (பிரை) லிமிரெட், மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த ஒயில் ராங்கிங், சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த டிரா டினஃப்ற் ஆகிய மூன்று கம்பனிகளைக் கொண்டதான





'கூட்டிணைப்பு' ஒன்றுக்கு வழங்கப்பட்டது (கொடிக் கார 1990: 17). இந்தியக் கேள்வி நிராகரிக்கப்பட்டது. இக் 'கூட்டிணைப்பு' பிராந்தியத்தில், அதன் கப்பற்படைக்கு எரி பொருள் ஆதார வசதியை ஈட்டுகின்ற உண்மையான அமெரிக்க நோக்கத்திற்கான ஒரு முகப்பு என இந்தியா சந்தேகித்தது. எனினும் இவ்வசதிகளை அடைய வேண்டு மானால், ஒரு போலிக் கம்பனியைத் தாபிக்க வேண்டு மென்று அமெரிக்கா உணர்ந்துகொண்டது. இந்தியாவின் பிராந்தியப் பாதுகாப்பைப் புறக்கணிப்பதற்கும், அச்சுறுத்து வதற்கும், இலங்கை மீண்டுமொருதடவை அமெரிக்க அக் கறைகளுக்கு இடமளிப்பதாக இந்தியா உணர்ந்தது.

## 1983இல் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'வுக்கு வசதிகள் நீடிப்பு

இரண்டாம் உலக யுத்தத்தில் அமெரிக்காவிற்கு எதி ராக உடன்படிக்கை செய்துகொண்ட அரசுகளைத் தோற் கடிப்பதற்கு அமெரிக்கா எடுத்த முயற்சியின் ஒரு பகுதி யாக வொய்ஸ் ஒவ் அமெரிக்கா (VOA) 1942இல் ஆரம்பிக் கப்பட்டது. '1950களில் அது பிரதானமாக கம்யூனிசத்தை எதிர்த்துப் போராடுவதற்கும், கெடுபிடி யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்குமான ஒரு வழிமுறையாகப் பயன்படுத்தப்பட்டது'. 1951இல் அமெரிக்க அரசாங்கம், உலகின் இப்பகுதியிலுள்ள நேயர்களுக்கு ஒலி பரப்புவதற் காக இலங்கையில் ஒலிபரப்புக் கருவியொன்றை நிறுவுவதற் கான உடன்படிக்கையொன்றைச் செய்தது.

1983ஆம் ஆண்டு டிசெம்பரில் வொய்ஸ் ஒவ் அமெரிக் காவுக்கும் இலங்கைக்குமிடையில் ஒரு புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதன்கீழ் இலங்கையில் திருகோண மலையில் 1,000 ஏக்கர் காணிப்பரப்பில் 600 கிலோ வாட் ஆற்றலுள்ள ஒலிபரப்புக் கருவிகளை நிறுவுவதற்கு அமெரிக்க அரசாங்கத்துக்கு அனுமதியளிக்கப்பட்டது.

1951ஆம் ஆண்டு உடன்படிக்கையின்கீழ், வொய்ஸ் ஒவ் அமெரிக்கா ஒலிபரப்புகின்ற சகல விடயங்களையும் பகுப்பாய்வு செய்வதற்கான உரிமை இலங்கைக்கு இருந்தது. 1983ஆம் ஆண்டின் உடன்படிக்கையில் இவ்வாசகம் தவிர்க்கப்பட்டது. அஃதன்றியும் விரிவுபடுத்தப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வொய்ஸ் ஒவ் அமெரிக்கா வசதிகள் அதன் ஒலிபரப்புகள் ஆசியாவில் மிகவும் சக்திவாய்ந்தனவற்றில் ஒன்றானதாகும் அளவுக்கிருந்தன. இவ்வசதிகள் இந்து சமுத்திரப் பிராந்தியத்திலுள்ள அமெரிக்கக் கப்பல்களின் உளவு நோக்கத்துக்குப் பயன்படலாமென நம்பப்பட்டது (IDSA மார்ச் 1985).

இந்தியா பின்வரும் காரணங்களுக்காக நீடிக்கப்பட்ட வசதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தது:

1. புதிய வசதிகளைக்கொண்டு வொய்ஸ் ஒவ் அமெரிக்கா இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பான தகவல் தொடர்புச் சாதனங்களை தெளிவற்றதாக்கக்கூடும்.

2. குறைந்த அலையதிர்வெண் கொண்ட ஒலிபரப்புக் கருவிகள் இந்து சமுத்திரத்திலுள்ள அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்களுடன் தொடர்புகளைப் பேணுவதற்கு உதவக்கூடும். அத்துடன்,

3. வொய்ஸ் ஒவ் அமெரிக்காவிற்கு வழங்கப்பட்டுள்ள புதிய வசதிகள் உளவுத் தகவல்களைச் சேகரிக்கும் நோக்கங்களுக்காகவும், இந்து சமுத்திரத்தை இலத்திரனியல் மூலம் கண்காணிப்பதற்காகவும் பயன்படுத்தப்படலாம் (கொடிக்கார 1990: 163).

இது இந்தியா உட்படப் பிராந்தியத்தினுள் கடற்படையின் தொடர்புகளையும் அசைவுகளையும், அத்துடன் தரைத் தொடர்புகளையும் கண்காணிப்பதற்கான உயர் தொழில்நுட்பக் கருவித் தொகுதியாகப் பயன்படலாமென்ற அச்சங்களை இந்தியாவில் தோற்றுவித்தது.

எனினும், கொழும்பு-டெல்லி அச்சினை விடப் பலமான கொழும்பு-இலண்டன்-வாஷிங்டன் அச்சினை விரும்பித் தெரிவுசெய்திருந்த ஐ.தே.க. அவ்வாறு கருதவில்லை. இது இந்தியாவின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசியல் இயக்கநிலையில் மாறிவருகின்ற கோலங்களைக் கண்காணிப்பதற்கு அல்லது சரியாகப் புரிந்துகொள்வதற்குக் கொழும்பு அரசாங்கங்களின் இயலாமை அதிகரித்து வந்ததைக் காட்டியது. இதன்விளைவாக டெல்லிக்கும்





கொழும்புக்கும் இடையிலான பிளவு விரிவடைந்து, இறுதியில் இந்தியா திட்டமிட்டு இலங்கையினுள் ஒரு சிவில் தாக்குதலை ஊக்குவிப்பதற்கும், இலங்கைக்கு வேண்டப்படாத இந்திய இராணுவம் அந்நாட்டில் இருப்பதற்கும் வழிவகுத்தது.

## 1983 முதல் இலங்கைக்கு அமெரிக்க உயர் பதவியாளர்களின் விஜயங்கள்

இலங்கையில் 1983ஆம் ஆண்டு தமிழர் விரோதக் கலவரங்கள் இடம்பெற்று இரண்டு மாதங்களே கழிந்திருக்கையில், அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் கஸ்பர் வெயின்ஸ்பேகர் திக்விஜயமொன்றைக் கொழும்புக்கு மேற்கொண்டார். இன முரண்பாட்டுக்குச் சமாதானத் தீர்வொன்றைக் காண்பதில் உதவுவதற்கு இந்தியா அதன் நல்லெண்ணத் தூதுவர்களை இலங்கைக்கு வழங்க முன்வந்த நேரம் என்பதால், அத்திக்விஜயத்தின் சரியான நேரக் கணிப்பீடு முக்கியத்துவமானது. அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளரின் விஜயம் ஒரு மரியாதை நிமித்தமான சந்திப்பு மட்டுமேயென்று விவரிக்கப்பட்டபோதிலும், எதுவரினும் அமெரிக்கா அதன் நேசநாடுகளை ஆதரிக்குமென்ற மீள் உத்தரவாதப் பணி அதுவென்று அனேக இலங்கைச் செய்திப் பத்திரிகைகள் பொருள் கூறின (வைடிக் 1986: 89).

இலங்கையில் இராணுவ மூலோபாயத்தைக் கட்டியெழுப்புவதில் அமெரிக்க ஈடுபாடு, அமெரிக்க உயர் பதவியாளர்களின் ஒரு தொடர்ச்சியான விஜயங்களை உள்ளடக்கியது. அவர்கள் முழு அமெரிக்க உதவியை ஆதரித்தனர். அமெரிக்க பாதுகாப்புச் செயலாளரின் விஜயத்தைத் தொடர்ந்து, நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்ட சனாதிபதி றீகனின் சிறப்புத் தூதுவர் ஜெனரல் வேர்ணன் வால்டர்ஸ், இஸ்ரேலுடன் இராணுவ உதவிக்கான உடன்படிக்கையை வரைவு செய்வதில் இலங்கை அரசாங்கத்துக்கு உதவிபுரிந்தார் (தி எகொனமிஸ்ட் 15 செப்ரெம்பர் 1984).

இதன் பலனாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் ஆதரவுடன், அதேகட்டடத்தில் 1984ஆம் ஆண்டு மே 24ஆந் தேதியன்று 'இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவு'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாபிக்கப்பட்டது. அதிலிருந்த இஸ்ரேல் நிபுணர்களின் எண்ணிக்கை பற்றி முரண்பாடான அறிக்கைகள் வெளிவந்தபோதிலும், இஸ்ரேல் இராணுவ ஆலோசகர்கள் இலங்கை ஆயுதப்படைகளுக்குக் கிளர்ச்சி எதிர்ப்பிலும் உள்நாட்டுப் பாதுகாப்பிலும் பயிற்சியளிப்பதில் ஈடுபட்டிருந்தனரென ஒப்புக்கொள்ளப்பட்டது (இன்டியன் எக்ஸ்பிரஸ், 23 ஆகஸ்ட் 1984). இச்செயல்முறையில் அமெரிக்கா இஸ்ரேலின் பிரசன்னத்தின் ஊடாக இலங்கையில் மறைமுகமான இராணுவ ஈடுபாட்டைக் கொண்டிருந்தது.

1984ஆம் ஆண்டு யூனில் வெளிநாட்டு அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீட் 'நாம் பயங்கரவாதப் பிரச்சினையைக் கவனித்து எமக்குக் கிடைப்பதாயுள்ள மிகச் சிறந்த வெளிநாட்டுச் சேவையைத் தேடிச் சென்றோம். இறுதியாக இஸ்ரேலென்று நாம் முடிவெடுத்து அதனை ஏற்பாடு செய்வதற்கு உதவும்படி அமெரிக்காவைக் கேட்டோம் என்று தெரிவித்த கூற்றிலிருந்து அது தெளிவாகியது (த ஸ்ரேட்ஸ்மன் 16 யூன் 1984).

இதற்கிடையில் இலங்கையில் காணப்பட்ட வளர்ச்சிகளை அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வந்தது. அது அதன் சொந்த லாபத்திற்காகப் பயன்படுத்த நினைத்திருந்த திருகோணமலைக் கடற்படைத் தளத்துக்கு மாற்றாகக் குறிப்பிடத்தக்க உதவியை இலங்கைக்கு வழங்கத் தயாராயிருந்தது. எனவே பாதுகாப்பு ஒதுக்கீட்டுக் குழுவின் தவிசாளர் செனட்டர் ஜோசப் அட்டாபோ தலைமையிலான அமெரிக்கச் சட்ட மாமன்றத் தூதுக்குழுவொன்று இலங்கைக்கு வருகை தந்ததுடன், 'இலங்கையின் கடற்படையைத் தரமுயர்த்துதலும் அதன் ஆளணியினருக்குப் பயிற்சியளித்தலும் அமெரிக்காவின் முதன்மையான அக்கறைகளாயிருக்கும்' என்றும் பத்திரிகைகளுக்குக் கூறியது (IDSA மே 1984).

அமெரிக்காவின் திட்டங்கள் மத்திய கட்டளை (Central Command) தலைமையகத்தை இலங்கைக்கு இடம் மாற்றுதலை உள்ளடக்கியதெனப் பின்னர் வந்த அறிக்கைகள் தெரிவித்தன (தமிழ் ரைம்ஸ் 15 சனவரி 1984). 1984ஆம் ஆண்டு சனவரியில் 'பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை' ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து,





அமெரிக்கா இலங்கைக்கு இராணுவ மற்றும் பயிற்சி சம்பந்தப்பட்ட சாதனங்களை வழங்கியது. மேலும் 7.3 மில்லியன் டொலருக்கான உதவிப்பொதியொன்றும் வழங்கப்பட்டதுடன், 1984 யூனில் அமெரிக்காவுக்கு வருகை தருமாறு சனாதிபதி ஜயவர்தனவுக்குத் தனிப்பட்ட அழைப்பொன்றும் விடுக்கப்பட்டது (கொடிக்கார 1990: 16). எனவே அமெரிக்க அதிகாரிகள் திரும்பத் திரும்ப பகிரங்கமாக மறுத்தபோதிலும், தெற்காசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் அதிகார முனைப்புகளுக்கு இலங்கை அதிகரித்த அளவில் முக்கியமானதாகி வந்தமை தெட்டத் தெளிவாகியது.

இலங்கையில் அதிகரித்துவந்த அமெரிக்க ஈடுபாடு இந்தியாவுக்குப் பாரதூரமான கவலையை அளித்ததுடன், 'அதன் அடிவயிற்றின் அருகில் இருப்பதைப் போன்ற இலங்கைமீது எந்தஒரு வல்லரசும் தனது மேலாட்சியை ஈட்டுகின்றமையை' கடுமையாக எதிர்த்தது (குவைத் ரைம்ஸ், 4 மார்ச் 1984). இவ்விடயத்தில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திலுள்ள தென்னாசிய மற்றும் தென்கிழக்கு ஆசியப் பிரிவின் தலைவரும், உதவி இராஜாங்கச் செயலாளர்களில் ஒருவருமான ரிச்சர்ட் மேர்பியின் விஜயம் ஒரு முக்கிய அரசியல் வளர்ச்சியாயிருந்தது. சில செய்தி அறிக்கைகளின் பிரகாரம், மேர்பி கொழும்பில் இந்திய உபகண்ட அரசுகளுக்கான அமெரிக்கத் தூதர்களின் மாநாடொன்றுக்குத் தலைமைதாங்கினார். அம்மாநாடு பிரதானமாக தென்னாசியாவில் இந்தியாவின் அதிகரித்து வரும் மேலாதிக்கப் பங்கினையும், அதை எதிர்ப்பதற்கான வழிமுறைகளையும் விவாதித்தது (சன் 29 நவம்பர் 1984).

அமெரிக்கத் தொடர்பைத் தவிர, ஜயவர்த்தன ஆட்சி ஐக்கிய ராச்சியம், சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல், தென் ஆபிரிக்கா ஆகியவற்றிடமிருந்தும் வேறு அனேக மேற்கு நாடுகளிடமிருந்தும் உதவியைப் பெற்றது.

## ஐக்கிய இராச்சியத்தின் (U.K) பங்கு

1985ஆம் ஆண்டு சனவரியில் ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டுச் செயலாளர் சேர் ஜோபிரி ஹோவ் இலங்கை அரசு தமிழர்களுடன் அவசரமான இணக்கமொன்றைச்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்யவேண்டுமென்று கருத்து வெளியிட்டார் (வில்சன் 1988: 200). 1983ஆம் ஆண்டு ஏப்பிரலில், சுமார் 112,000 ஏக்கர் காணியைப் பயிர்ச்செய்கையின்கீழ்க் கொண்டுவருவதற்கும், நீர் மின்சார உற்பத்தித்திட்டத்தை வழங்குவதற்குமாக வடிவமைக்கப்பட்டு மகாவலி ஆற்றின் மீது கட்டப்பட்ட விக்டோரியா அணைக்கட்டின் அங்குரார்ப்பணத்தின்போது, ஜயவர்தன அவ்வாய்ப்பை, அத்திட்டத்திற்குக் குறிப்பிடத்தக்களவு பங்களித்த பிரித்தானியாவுக்கு இருதரப்புப் பரஸ்பர உதவியை உள்ளடக்கிய 1947 நவம்பர் பாதுகாப்பு உடன்படிக்கை அப்போதும் வலுவில் இருந்ததென நினைவூட்டுவதற்குப் பயன்படுத்தினார். அவர் 1982இல் போக்லன்ட் தீவுப் பிரச்சாரத்தின்போது கணிசமான அளவு மூன்றாம் உலக அழுத்தத்தின் மத்தியிலும்கூட ஐ.நா.வில் பிரிட்டிஷைத் தாம் ஆதரித்திருந்ததையும் பிரித்தானியாவுக்கு நினைவுபடுத்தினார் (முனி 1991: 118).

ஜயவர்தனவுடனான ஒரு கலந்துரையாடலின் பின்னர் திருமதி தட்சர் இன முரண்பாட்டுக்கான அரசியல் அணுகுமுறை என்று கூறப்படுவதில் ஜயவர்தனவின் நேர்மையைப் புகழ்ந்து அவரின் பொறுப்பை எளிதாக்குவதற்கு இந்தியா உதவவேண்டுமெனப் பரிந்துரை செய்து திருமதி காந்திக்குக் கடிதமொன்றை எழுதினார். இதற்கும் மேலாக, அண்மையில் மீண்டும் புத்துயிரூட்டப்பட்ட 1947இன் பாதுகாப்பு உடன்படிக்கையின்கீழ், பிரித்தானியா இலங்கைக்கு இராணுவ உபகரணங்களை வழங்க உடன்பட்டது. இதன்படி பிரிட்டிஷ் அரசாங்கம் 1985இற்கும் 1986இற்கும் இடையில் 30 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை இலங்கைக்கு வழங்கியது (திரிப்பதி 1989: 33).

ஆங்கிலக் கால்வாய் தீவைத் (British Chanal Island) தளமாகக் கொண்ட கினி மினீ சேர்விசஸ் (KMS) என்றழைக்கப்படும் ஒரு தனியார் கூலிப்படை முகவர் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களும் முன்னர் விசேட வான் சேவைகளிலிருந்து (SAS) ஓய்வுபெற்றவர்களுமான படை வீரர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அங்கீகாரமில்லாமல் மௌனமாக வெளிநாடுகளில் செயற்படும் வழக்கமில்லையென்பதும் தெரியவருகிறது. மேலும் பிரிட்டிஷ் விமானிகள் தமிழ்ப் பிரதேசங்கள் மீதான தாக்குதல்களுக்கு உலங்கு வானூர்தி





களையும் போர் விமானங்களையும் செலுத்தியுள்ளதுடன் வேறு பிரிட்டிஷ் கூலிப்படையினர் தரைத் தாக்குதல்களுக்கும் தலைமை தாங்கியுள்ளனர். மேற்படி கூலிப்படைகளின் வான் தாக்குதல்களின் விளைவாகப் பெருமளவிலான பொதுமக்கள் இறந்ததுடன் பாரிய பொருட்சேதங்களும் ஏற்பட்டுள்ளன. இதனை பிரிட்டிஷ் அரசாங்கம் மறுத்தபோதிலும் சன்டே ரைம்ஸ் (சன்டே ரைம்ஸ் 11 மே 1986) நிருபர் சைமன் வின்செஸ்டர் அதற்கு முரணான சான்றைச் சமர்ப்பித்தார். வடமாகாணத்திலுள்ள இலக்குகளைக் கிரமமான முறையில் குண்டுவீசித் தாக்கிய யுத்த உலங்கு வானூர்திகளை இரு பிரித்தானியரும் ஒரு தென் ஆப்பிரிக்கரும் செலுத்திவந்தனரென்றும், இக்கூலிப்படையினர் மாதமொன்றுக்கு 2,500 பவுணைக் கட்டணமாகப் பெற்றனர் என்றும் 1986ஆம் ஆண்டு மே முதல் வாரத்தில் அவர் கண்டுபிடித்தார். (சன்டே ரைம்ஸ் 11 மே 1986).

இலங்கைக்கு வருகைதந்த முதலாவது கினிமினி சேர்வீஸ் கூலிப்படையினர் அந்நிறுவனத்தின் பங்காளியான கேணல் ஜிஎம் ஜோன்சன், அணிக் கமாண்டரும் அந்நிறுவனத்தின் மரியாதைக்குரிய ஒரு கூலிப்படை வீரருமான முன்னாள் எஸ்ஏஎஸ் அதிகாரி கேணல் டேவிட் வாக்கர் ஆகியோராவர். அவர்கள் தமிழர்களுக்கு எதிரான பயிற்சி மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்கான திட்டங்களைத் தீட்டினர். இவர்களைத் தொடர்ந்து ரொம் ஜெய்க் மற்றும் வீரத்திற்காக மகாராணியால் OBE பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட கேணல் பிறையன் பட்டி உட்படப் பல்வேறு அதிகாரிகள் வந்தனர் (மேற்கூறியது).

இந்திரா காந்தி இலங்கையில் முன்னாள் எஸ்ஏஎஸ் படைவீரரும் இஸ்ரேல் உளவாளிகளும் இருக்கின்றமையையிட்டுத் திரும்பத் திரும்பக் கவலையை வெளிப்படுத்தினார்.

### இஸ்ரேலிய தலையீடு : தமிழர் மீது ஏற்படுத்திய தாக்கம்

1970இல் திருமதி பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம், 1967ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆந் தேதிய 242ஆவது ஐ.நா. தீர்மானத்துக்கிணங்க, இஸ்ரேலுடனான இராசதந்திர உறவுகளைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தற்காலிகமாக நிறுத்திவைத்திருந்தது. அப்போதைய எதிர்க் கட்சித் தலைவரான ஜயவர்தன இம்முடிவைக் கண்டித் தார். இருந்தபோதிலும் ஜயவர்தன இலங்கையின் பிரதம ராகியபோது இஸ்ரேலுடனான இராசதந்திர உறவுகளை அவர் உடனடியாக மீண்டும் தொடரவில்லை.

1985ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையின் வெளி நாட்டு அமைச்சரான ஏ.சி.எஸ்.ஹமீட் 'தமிழரின் எழுச்சியை எதிர்த்துப் போராடுவற்கு இராணுவத்தினருக்குத் தேவை யான பயிற்சியளிப்பதற்காக இஸ்ரேலின் உதவியை இலங்கை நாடியுள்ளதென்றும், அமெரிக்கத் தூதரகத்தில் இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவொன்று திறக்கப்பட்டதென் றும்' பாராளுமன்றத்தில் உறுதிப்படுத்தினார் (சிறீதர் 1984: 238). அரசாங்கப் படைகளுக்குப் பயிற்சியளிப்பதற்கும் தமிழ்ப் போராளிகளுக்கெதிரான சில நடவடிக்கைகளை வழிப்படுத்துவதற்குமென இஸ்ரேல் உளவுத்துறையினரில் முக்கியமானவர்கள் சிலர் இலங்கையில் இருந்தனர்.

இந்தியாவுக்கும் இஸ்ரேலுக்குமிடையிலான உறவுகள், பாகிஸ்தானுடன் அல்லது அமெரிக்காவுடனான இந்தியா வின் உறவுகளைப் போன்று அதேயளவு கசப்பானவை யாயிருந்தன. இலங்கை-இஸ்ரேல் இணைப்பின்மீது இந்தியா வின் வெறுப்பை விளங்கிக்கொள்வதற்கு, இலங்கை-இஸ் ரேல் தொடர்பு பற்றி இரகசியமாகப் பாதுகாக்கப்படும் விவரங்களை ஆராய்தல் முக்கியமானது.

1970இல் திருமதி பண்டாரநாயக்க, பொதுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்தவாறு, கொழும்பிலிருந்த இஸ்ரேல் தூதரகத்தை மூடிவிடும்படி கட்டளையிட்டார். அதன் பின்னர் இஸ்ரேலுடனான இராசதந்திர உறவுகள் மீண்டுந் தொடரப்படாததுடன் நாட்டினுள் பிரவேசிக் கின்ற இஸ்ரேலியர் மீது தீவிரமான கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன. எனினும் இராணுவ உதவிக்காக சர்வ தேச நாடுகளிடம் ஜயவர்தன அரசாங்கம் விடுத்த பொது வான வேண்டுகோள் எதிர்பாத்த பலனை அளிக்காததி னால் அது 1983இல் இஸ்ரேலை அணுகியது. 1983ஆம் ஆண்டு ஆகஸ்டில் அமைச்சரவைச் செயலாளர் ஜீ.வி.பீ. சமரசிங்க இஸ்ரேலுக்கு இரகசிய விஜயமொன்றை மேற்





கொண்டதைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் ஆரம்ப மாயின (முனி 1984). சனாதிபதி ஜயவர்தனவின் மகனும் சனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான ரவி ஜயவர்தனவும் பயங்கரவாத எதிர்ப்பு, தேசிய உளவுப்பணி யகத்தின் பணிப்பாளர் ஸேர்னி விஜேசூரியவும் இஸ்ரே லுக்கு விஜயஞ்செய்து மொஸாட் தலைவர் அட்மொனி யையும் இஸ்ரேல் பிரதமர் யிற்ஸக் ஷமீரையும் சந்தித்த னர். 'ஒரு பொதுவான எதிரியை-பயங்கரவாதத்தை எதிர்த் துப் போராடுவதற்கு இஸ்ரேலின் வளங்களில்' இலங்கை நம்பியிருக்கலாமென ஷமீர் அவர்களுக்கு உறுதியளித்தார்.

இலங்கை இஸ்ரேலுடன் 1984ஆம் ஆண்டு மேயில் கைச்சாத்திட்ட உடன்படிக்கையை வரைவு செய்வதில் இலங்கைக்கு உதவி புரிவதற்கு ஜெனரல் வேர்ணன் வால் டேர்ஸ் அவர்களை வழங்கியதன்மூலம் அப்பேச்சு வார்த் தைகளில் அமெரிக்கா பெரும் பங்கு வகித்தது. முன்னர் குறிப்பிட்டவாறு இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவு கொழும் பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் 1984ஆம் ஆண்டு மே மாதம் 24ஆந் தேதியன்று திறக்கப்பட்டது. இத்தேதிக்கு முன்னரே இலங்கைப் படைகளுக்குப் பயிற்சியளிப்பதில் இஸ்ரேல் ஆளணியினர் ஈடுபட்டிருந்தனரென்று அறிக்கை கள் கூறின (தமிழ் ரைம்ஸ் 15 யூன் 1984).

1984ஆம் ஆண்டு யூன் மாதம் 9ஆந் தேதியன்று ஐக்கியத் தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் ஜய வர்தன இஸ்ரேல் பிரிவு திறந்துவைக்கப்பட்டுள்ளதை உறு திப்படுத்தியதுடன் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களி டம் 'அரசாங்கத்தின் முடிவை அவர்கள் ஆதரிக்கா விட் டால் அவர்கள் வெளியேறலாமென்றும் இம்முடிவுக் கெதிராக அவர்கள் பேசுவார்களாயின் அவர்கள் கட்சியி லிருந்து விலக நிர்ப்பந்திக்கப்படுவர் என்றும் கூறினார் (வைடிக் 1986).

இஸ்ரேல் ஆளணியினர் இராணுவப் பயிற்சியளிக்கும் நோக்கங்களுக்காக இலங்கையில் நிலைகொண்டுள்ளன ரென்பதைத் தொடக்கத்தில் மறுத்தபோதிலும் தேசியப் பாதுகாப்பு அமைச்சரான லலித் அத்துலத்முதலி 1984ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ஆந் தேதியன்று கொழும்பில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இஸ்ரேலின் உள் நாட்டுப் பாதுகாப்பு ஏஜன்சியான ஷின்பெத் இலங்கை ஆயுதப் படைகளுக்குப் பயிற்சியளிப்பதில் ஈடுபட்டிருந்த தென ஒப்புக்கொண்டார் (தி ஐலன்ட் 7 மார்ச் 1985).

மேலும் முன்னாள் மொஸாட் (இஸ்ரேல் உளவுச் சேவை) ஏஜன்டான விக்டரி ஒஸ்ட்றோவ்ஸ்கி 1984ஆம் ஆண்டு யூனிலிருந்து இஸ்ரேல் இலங்கை ஆயுதப் படை களுக்கு ஆயுதங்களையும் பயிற்சியையும் வழங்கியதெனத் தெரிவித்தார். மகாவலி திட்டத்திற்காகவும் வேறு பல அபிவிருத்தித் திட்டப் பணிகளுக்காகவும் உலக வங்கியிட மிருந்து பெறப்பட்ட தொகை இதற்காகச் செலவிடப் பட்டதென அவர் மேலும் கூறினார் (ஹொய் 1990).

இஸ்ரேலின் வருகையின் பின்னர் தமிழ்ப் பிரதேசங் களில் இராணுவ நடவடிக்கைகளில் விரைவில் ஒரு மாற்றம் உணரப்பட்டது. ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலியர் கைக்கொண்ட நடவடிக்கைகளுக்கு இணை யான நடவடிக்கைகள் இலங்கை ஆயுதப்படைகளால் மேற் கொள்ளப்பட்டன.

பொதுஜன முன்னணி. மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்களும் தமிழர் பாரம்பரியத் தாயகமென்று கருதிய பிரதேசங்களில் கூட மேற்குக்கரைப் பாணியிலான குடியேற்ற நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிக்குமாறு அவர் கள் இலங்கை அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கினர்.

மிகக்குறைந்த மனித சக்தியுடன் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தை அரசு கட்டுப்படுத்தக்கூடிய வகையில், தமிழர் செறிந்துவாழும் பிரதேசங்களைக் கண்காணிப்பதற்கு மேற்குக் கரையிலும் கலிலியிலும் முயற்சித்துப் பார்க்கப் பட்ட 'மிற்ஸ்பிம்' போன்ற காவல் சாவடிகளைத் தாபிப் பதில் இஸ்ரேலியர் உதவிபுரிந்தனர். 1984ஆம் ஆண்டு நவம்பரிலும் திசெம்பரிலும் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப் பட்டு 14 முதல் 35 வயது வரையிலான பெருந்தொகையான தமிழ் இளைஞர்கள் (ஆண்களும் பெண்களும்) கைது செய் யப்பட்டனர். ஏறக்குறைய 4,000 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். (தமிழ் கார்டியன், சனவரி 1985).





முழுக் கிராமங்களையும் தீயிட்டுக் கொளுத்துதல், அகதி முகாம்களைத் திடீரெனத் தாக்கி அங்குள்ளவர் களைக் கொலைசெய்தல், தேடியழிக்கும் நடவடிக்கைகள் ஆகிய இஸ்ரேலிய முறைகளும் பின்பற்றப்பட்டன. நீண்ட காலம் தடுத்து வைத்திருத்தல், கட்டுக்காவலில் உள்ளவர் களை விசாரணை செய்து சித்திரவதைப்படுத்துதல் என் பவை சர்வசாதாரணமாயின. பல்வகைப்பட்ட சூழ்ச்சித் திறம் மிக்க, கோரமான சித்திரவதை முறைகள் கைக்கொள் ளப்பட்டன (தமிழ் கார்டியன், சனவரி 1985).

மேற்குக்கரை மீதான இராணுவக் கட்டளைகளை ஒத்த அனேக அவசரகால ஒழுங்குவிதிகள் பிரகடனப் படுத்தப்பட்டன. இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் தமிழ்ச் சமூகத் தின் அன்றாட அலுவல்களைக் கடுமையாகப் பாதிக்கின் றனவாக ஒரு கண்காணிப்பு வலயம், பாதுகாப்பு வலயங்கள், தடைசெய்யப்பட்ட வலயங்கள், சூன்ய வலயங்கள் என் பவை உருவாக்கப்பட்டன.

மேற்குக்கரையில் இஸ்ரேலியரால் மேற்கொள்ளப் பட்டதைப் போன்று, ஆயுதப் படைகளினால் வீதிகளின் மருங்கிலுள்ள சுவர்கள் இடித்துத் தகர்க்கப்பட்டன, ஆளில்லாத வீடுகள் எரிக்கப்பட்டன. இராணுவ முகாம் களுக்கு அருகிலுள்ள குடிமக்கள் பலவந்தமாக வெளி யேற்றப்பட்டனர். மேற்குக் கரை இராணுவக் கட்டளை இல. 378ஐ (இது இராணுவக் கட்டளை இல. 31ஐப் பதிலீடு செய்துள்ளது) அச்சலாக அதனை ஒத்ததான 1984இன் 1ஆம் இலக்க அவசரகால ஒழுங்குவிதியின்கீழ், மேற்குக் கரையில் உள்ளவாறு, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய பாதுகாப்பு வலயமொன்று உருவாக்கப்பட்டது. இவ்வொழுங்குவிதி பின்வரும் கட்டுப் பாடுகளை விதித்தது:

1. அனைவரும் எப்போதும் தமது அடையாள அட்டை யைத் தம்முடன் கொண்டுசெல்ல வேண்டும்.
2. பாதுகாப்பு வலயத்தினுள் பிரவேசிப்பதற்கு அல் லது அங்கிருந்து வெளியேறுவதற்கு உதவி அரசாங்க அதிபரின் அனுமதியைப் பெற வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



3. பொலிசின் அனுமதியின்றி வாகனங்களை வைத்திருத்தல் தடைசெய்யப்பட்டிருந்தது.
4. குறித்த நேரங்களில் மட்டும்தான் வாகனங்களைப் பயன்படுத்த முடியும்.
5. குறித்த வீதிகளில் மட்டும்தான் வாகனங்களைப் பயன்படுத்த முடியும்.
6. குறித்த நிறங்களில் மட்டும்தான் மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்த முடியும்.
7. அதிகாரமளிக்கப்பட்ட எரிபொருள் (பெற்றோல் மற்றும் பிற எரிபொருள்கள்) விற்பனையாளர்களின் எண்ணிக்கை கடுமையாகக் குறைக்கப்பட்டது.
8. விற்பனையாளர்கள் ஒரு ஆளுக்கு மாதமொன்றுக்குப் பத்து லீட்டர் எரிபொருளைவிடக் கூடுதலாக விற்பனை செய்தல் தடைசெய்யப்பட்டது.
9. பாதுகாப்புப் படைகளின் பார்வையை மறைக்கின்ற எதனையும் தகர்த்தழிப்பதற்கு அவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டது.
10. வளவுகளைச் சோதனையிடுதல், வாகனங்களை அகற்றுதல் ஆகியவற்றுக்குப் பாதுகாப்புப் படைகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டது.

### பாகிஸ்தானின் பங்கு

1983ஆம் ஆண்டு யூலையில் இடம்பெற்ற தமிழர் விரோதக் கலவரங்களைத் தொடர்ந்து உடனடியாக இலங்கை ஆயுதங்களைக் கோரிய நாடுகளில் ஒன்று பாகிஸ்தான். அதன் பின்னர் பாகிஸ்தானால் கிரமமான முறையில் அதிகாரிகளின் பரிமாற்றமும் ஆயுதங்கள் வழங்கலும் இடம்பெற்றன (சிங்க ராவ் 1987: 1457).

காஷ்மீர் மற்றும் சியாச்சென் பனியாறு போன்ற பல்வேறு எல்லைப் பிரச்சினைகள் தொடர்பில் பிரதான எதிரியான பாகிஸ்தான், இந்தியாவின் வளர்ந்துவரும் பிராந்தியத் தலைமையை எதிரீடுசெய்ய உதவுகின்ற சக்தியாக அமெரிக்காவாலும் சீனாவாலும் நீண்டகாலமாகக் கருதப்பட்டு வந்துள்ளது (ரைம் 17 யூலை 1989: 19-25).





பாகிஸ்தான் குறிப்பாகத் தமிழர் பிரச்சினையில் இலங்கை அரசின் நிலைப்பாட்டிற்கு அதன் ஆதரவு குறித்தும் இந்தியாவுடனான இலங்கையின் உறவுகள் பற்றியும் துணிச்சலுடன் வெளிப்படையாகத் பேசிவந்துள்ளது.

1985ஆம் ஆண்டு மார்ச்சில் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்த ஜயவர்தன ஆப்கானிஸ்தான் பற்றிய பாகிஸ்தானின் கொள்கைக்கு அவரின் ஆதரவை வெளிப்படுத்தினார். ஜெனரல் ஸியா-உல்-ஹக் தமிழர் பிரிவினைவாதம் தொடர்பில் ஜயவர்தனவின் நிலைப்பாட்டுக்குத் தமது ஆதரவை மீண்டும் வலியுறுத்தினார் (திரிபாதி 1989: 25). 1985ஆம் ஆண்டு திசெம்பரில் இலங்கைக்கு விஜயம் செய்த ஸியா, ஜயவர்தனவின் தமிழ்க் கொள்கைக்குத் தமது 'காரிய சாத்தியமான' ஆதரவை வெளிப்படுத்தியதுடன் ஆண்டுக்கு 60மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த இரு-வழி வர்த்தகத்தை 200 மில்லியனாக அதிகரிப்பதற்கான திட்டம் ஒன்றையும் அறிவித்தார். இது குறித்து 1986ஆம் ஆண்டு மார்ச்சில் 'இந்தியா ருடே' பின்வருமாறு அறிக்கையிட்டது:

> பாகிஸ்தானின் ஈடுபாடு ஆயுதங்கள் வழங்குதலுக்கு அப்பால் வெகுதூரம் நீடிக்கின்றது. கடந்த ஓராண்டில் இலங்கையைச் சேர்ந்த முதன்மைப் பொறுப்பதிகாரி களும் ஏனைய படிநிலைகளைச் சேர்ந்தவர்களுமென மதிப்பிடப்பட்ட 8,000 அலுவலர்கள் கிளர்ச்சி எதிர்ப்பு, பீரங்கிப் படை, முதன்மை கமாண்டோ பயிற்சி, அடிப்படைப் பயிற்சி ஆகிய பயிற்சிநெறிகளைப் பூர்த்தி செய்ததன் பேரில் பாகிஸ்தானிலிருந்து திரும்பியுள்ளனர். பாகிஸ்தான் இலங்கை விமானப் படை மற்றும் கடற்படை வல்லுநர்களுக்கும் பயிற்சியளிப்பதாக அறிக்கையிடப்படுகின்றது திரிப்பதி 1989: 26).

பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற படைவீரர்களுக்குக் கறுப்புச் சீருடை வழங்கப்பட்டது. அவர்கள் தமிழ்க் குடிமக்களுக்கெதிராக வகைதொகையற்ற கொலைகள், காயப்படுத்தல், வன்புணர்ச்சி, சொத்துக்களை அழித்தல் உட்பட எண்ணற்ற அட்டூழியங்களைப் புரிந்துள்ளதாக அறியப்படுகின்றது (திரிப்பதி 1989: 26).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழர்களை அடக்குவதற்காக இலங்கைக்கான பாகிஸ்தானின் ஆதரவானது பாகிஸ்தானின் ஆளும் உயர் குடியினரின் இயல்பான வெறுப்பு மனப்பான்மையைக் காட்டுகின்றது. பாகிஸ்தானியர் சமயத்தின் அடிப்படையில் தனியான தேசியத்தைக் கோரினர். இன்று தமிழர் ஒரு மொழிரீதியான தேசியச் சிறுபான்மையாக அவர்களின் சட்டப்படியான உரிமைகளைக் கோருகின்றபோது பாகிஸ்தானியர் சிறுபான்மையினரின் கோரிக்கைகளை நசுக்குவதற்குப் பெரும்பான்மைக்கு உதவுகின்றனர். இப்போது இலங்கையும் பாகிஸ்தானும் ஒரு பெரும்பான்மை மொழிரீதியான சிறுபான்மைகளின் உரிமைகளை அடக்கியொடுக்குவதற்கு ஒரு பொதுவான கொள்கையைப் பின்பற்றுகின்றன.

பாகிஸ்தானிலும் இலங்கையிலும் ஆளும்வர்க்கத்தினர் மொழி, சமயம் மற்றும் உட்குழு வேறுபாடுகளின் அடிப்படையில் மக்களைப் பிரிப்பதற்கு முயற்சிக்கின்றனர். சிறுபான்மை உரிமைகளை மறுத்தல் வன்முறையான கருத்து வேறுபாட்டுக்கு வழிவகுக்கின்றது. அதுவே இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றுதலை நியாயப்படுத்துகின்றது. அத்தகைய இராணுவ ஆட்சிக்கான எதிர்ப்பு சனநாயக அரசொன்றைத் தாபிப்பதற்கான போராட்டத்தில் பெரும்பான்மையையும் சிறுபான்மைகளையும் ஐக்கியப்படுத்துகின்றது. இன்று பாகிஸ்தானும் இலங்கையும் ஆளும் வர்க்கத்தினரால் சிறுபான்மைகள் அடக்கப்படுதல், சிறுபான்மைகளின் வன்முறையான கருத்து வேறுபாடு, ஆயுதப் படைகளில் அதிகரிப்பு, இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றுதல், இராணுவ முனைப்புக்கெதிராகப் பொது மக்களின் ஒன்றுபட்ட போராட்டம், பெரும்பான்மைக்கும் சிறுபான்மைக்குமிடையில் சரிசமநிலையான உறவைக் கொண்டதான ஒரு சனநாயக அரசின் தோற்றம் என்ற இவ்வட்டத்தில் தம்மைக் காண்கின்றன (ரைம் 17 யூலை 1989: 19-25).

## சீனாவின் ஈடுபாடு

சீனா இலங்கைக்கு அரசியல் ரீதியான ஆதரவுக்கும் இராணுவ உதவிக்கும் மாறாத நம்பிக்கைக்கு உரிய நாடாக





இருந்துள்ளது. எனினும் அதன் ஈடுபாடு இலங்கையிலிருந்து சீனா தொலைவிலிருப்பதனாலும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் அக்கறைகளின் இயல்பினாலும் கட்டுப்படுத்தப்படுகின்றது. இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிந்திய காலப்பகுதியில் இலங்கையின் முதல் தொடர்புகள் அரசியலைவிடப் பொருளாதார நிர்ப்பந்தங்களினால் மேற்கொள் ளப்பட்டன. உண்மையில் அந்நேரத்தில் இலங்கை, அதன் அரசியல் உறவுகளுக்கு மேற்கை நோக்கியதுடன் 'கம்யூனிச' அடையாளங்கொண்ட நாடுகள் பற்றிய ஒரு குறிப்பிட்ட அச்சத்தையும் கொண்டிருந்தது. எனினும் இறப்பர் விலைகளின் வீழ்ச்சி, பெரும்பகுதி அரிசியை இறக்குமதி செய்ய வேண்டியதன் கட்டாயம் போன்ற பொருளாதாரக் காரணங்களால் 1952இல் அன்றைய அரசாங்கம் அரிசி-இறப்பர் உடன்படிக்கையில் கைச்சாத்திட நிர்ப்பத்திக்கப்பட்டது (ரிக்கின்ஸ் 1960: 403-411). பொருளாதார உறவுகளைத் தாங்கிப் பிடிப்பதற்காக அரசியல் மற்றும் இராசதந்திரத் தொடர்புகள் 1956இல் பண்டார நாயக்க அரசாங்கத்தின்கீழ் தாபிக்கப்பட்டன.

1962இல் சீன-இந்திய யுத்தத்தைத் தொடர்ந்தும், பின்னர் இந்தியா மற்றும் பாகிஸ்தானின் எல்லைகளில் சீனா இருப்பதனால் இந்தியா-பாகிஸ்தான் இடையேயான அரசியல் அதிகார உறவுகளில் அதன் ஈடுபாட்டின் காரணமாகவும் தென்னாசியப் பிராந்தியத்தில் சீனாவின் அக்கறைகள் அதிகரித்தன. அதனால் பாகிஸ்தானுக்கும் சீனாவிற்கும் இடையிலான உறவுகள் சீனாவின் 'மிக நெருக்கமான நேச நாடுகளில்' ஒன்றாக பாகிஸ்தான் பரிணமிக்கும் வகையில் வளர்ந்தன. ஆப்கானிஸ்தான் மீது சோவியத் ஆக்கிரமிப்பின் விளைவாக சமீப ஆண்டுகளில் அவை மேலும் வலுப் பெற்றன (மேனர் 1984: 182). இந்து சமுத்திரப் பிராந்தியமானது வல்லரசுகளின் மோதலுக்கு ஓர் களமாகியுள்ளமையும் அப்பிராந்தியத்தில் சீனாவின் அக்கறைகளுக்கு மற்றுமொரு காரணம். சீனா அரசியல் ரீதியாக தன்னைத் தானே ஒரு பிராந்திய வல்லரசாகக் கருதியதால் மொஸ்கோவுக்கும் வாஷிங்டனுக்கும் மட்டும் அக்களத்தை விட்டுக் கொடுக்க அதனால் முடியாதிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1979இல் ஆப்கானிஸ்தான் மீதான சோவியத் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து இடம்பெற்ற சக்திகளின் மீள் ஒழுங்கு, சோவியத் யூனியனை எதிர்கொள்வதற்குச் சீனா அமெரிக்காவுடனும் பாகிஸ்தானுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது. சோவியத் யூனியனின் ஒரு நேச நாடென்ற வகையில் சீனாவினால் மேற்கொள்ளப்பட்ட இப்புதிய கூட்டு இந்தியாவிற்குத் தீங்கிழைக்கக்கூடும் என்று உணர்ந்த இந்தியா அதனை இந்தியாவின் பிராந்திய நலன்களுக்கு எதிரான நோக்கமுடையதாகவும் பொருள் கொண்டது.

1983இன் இனக்கலவரங்களைத் தொடர்ந்து, இலங்கை அரசாங்கத்தால் வெளிநாடுகளுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள்களுக்குச் சீனா சாதகமாகப் பதிலளித்தது. வெளிநாட்டுச் சக்திகளுக்கெதிராக இலங்கைக்கு அதன் ஆதரவை வெளிப்படுத்திய முதல் நாடு சீனாதான். இலங்கையின் இன முரண்பாட்டில் இந்தியாவின் ஈடுபாடு தொடர்பில் சீனா 'பெரியது சிறியதை அச்சுறுத்தக்கூடாது' என எச்சரித்திருந்தது (ரணதுங்க 1988: 154). சீன வெளிநாட்டு அமைச்சர் வூ ஸுக்குவியன் இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொண்டபோது இன முரண்பாடு ஓர் உள்நாட்டு விடயமென்றும் 'வெளிப்புறத் தலையீடுகளின்றி அது தீர்க்கப்படவேண்டும்' என்றும் வெளிப்படுத்திய வகையில் சீனா அரசியல் ஆதரவை வழங்க முன்வந்தது (த ஹிந்து, 26 சனவரி 1985).

சீனா 1970களின் தொடக்கத்திலிருந்தே ரோந்துப் படகுகளையும் சிறு ஆயுதங்களையும் வழங்கியிருந்ததுடன் விமானப் படையினருக்குப் பயிற்சியும் அளித்திருந்தது. 1979-83 காலப் பகுதியில் இலங்கை சீனாவிடமிருந்து 5 மில்லியன் அமெ. டொலர் பெறுமதியான ஆயுதங்களைக் கொள்வனவு செய்திருந்தது (சிங்கராவ், 1987: 1457). இலங்கை 1980களின் பிற்பகுதியில் மேலும் பல ரோந்துப் படகுகளைக் கொள்வனவு செய்திருந்தது. பல்வேறு மேற்குலக நாடுகள் இராணுவத் தளபாடங்களை விற்பனை செய்வதில் எண்ணற்ற கட்டுப்பாடுகளை விதித்ததுடன் அதற்கு மறுத்துமுள்ள வேளையில் அத்தகைய உடனடி ஆதரவு இலங்கையால் பெரிதும் பாராட்டப்பட்டது.





## இலங்கை இன முரண்பாடு இந்தியாவில் ஏற்படுத்திய தாக்கங்கள்

கடந்த இரு தசாப்தங்களின்போது சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையிலான இன முரண்பாடு இத்தீவுத் தேசத்தின் உறுதிப்பாட்டைப் பாதித்ததுடன் மட்டுமன்றி இந்தியாவின் சமூக-அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ நலன்கள் மீதும் பாரதூரமான தாக்கங்களைக் கொண்டிருந்தது. முன்னர் ஆராயப்பட்டவாறு சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையிலான பகைமை, 1956இல் சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்கப்பட்டதிலிருந்து பல்வேறு இனக் கலவரங்களுக்கு வழிவகுத்தது. இலங்கையில் 1983ஆம் ஆண்டு யூலையில் இடம்பெற்ற தமிழருக்கு எதிரான கலவரங்களும் அதனைத் தொடர்ந்த இனச் சிக்கல்களும் இந்தியாவின் உள்நாட்டு அரசியல் ஸ்திரத் தன்மையைப் பெருமளவு பாதித்தனவென்பதை, அவ் வேளையில் தமிழ் நாட்டு மக்கள் இலங்கைத் தமிழரின் இலட்சியத்தைப் பாதுகாத்து வளர்ப்பதற்கு, இந்திய அரசாங்கம் இலங்கையில் இராணுவ ரீதியாகத் தலையிட வேண்டுமென்பதை வலியுறுத்தி 'முழு அடைப்புப் போராட்டங்களிலும்' அரசியல் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டதிலிருந்து உணரலாம்.

இலங்கையில் 1983 யூலை கலவரங்கள் வெடித்ததிலிருந்து இந்திய-இலங்கை உறவுகளில் பரஸ்பர அவநம்பிக்கையும் சந்தேகமும் நிலவியது. 'பலம் குன்றியவர்கள்' என்ற தாழ்வு மனப்பான்மையினாலும் இந்திய ஆக்கிரமிப்பு பற்றிய அச்சத்தினாலும் அல்லது இந்திய வெறுப்புக் கோளாறினாலும் பாதிக்கப்பட்ட இலங்கை அரசாங்கம் தன்னைக் காத்துக்கொள்வதற்கு ஐக்கிய அமெரிக்கா உள்ளிட்ட பெரும்பாலான மேற்குலக நாடுகளிடமிருந்து இராணுவ உதவியைக் கோரியதிலிருந்து இது தெளிவாகப் புலப்பட்டது. மேலும் 1971இல் கிழக்குப் பாகிஸ்தானில் தோன்றிய நெருக்கடியின்போது மேற்கொண்டதைப் போன்று இந்தியா தமிழர்களுக்காக இராணுவ ரீதியாகத் தலையிடக்கூடுமென்று இலங்கை தனது மக்களைத் திரும்பத் திரும்ப எச்சரித்தது (வெங்கடாச்சலம் 1987: 42).

மறுபுறத்தில் இந்தியா இலங்கையை அதன் பாதுகாப்பு வலையத்துக்குட்பட்டதாகக் கருதியதனால் இலங்கை அர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சாங்கத்தின் நோக்கங்கள் குறித்துத் தொடர்ந்தும் சந்தேகம் கொண்டிருந்தது. எனவே தெற்காசியப் பிராந்தியத்தில் நடைமுறையிலிருந்த அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்தற்கான எல்லா முயற்சிகளையும் இந்தியா எடுத்தது. இச்சூழலில் இந்த ஆய்வு இந்தியாவின் தேசிய நலன்களைக் கருத்தில் கொண்டு இந்தியாவின் மீதும் அதன் அக்கறைகள் மீதும் இலங்கை இனப்பிரச்சினை ஏற்படுத்திய தாக்கங்களை மதிப்பீடு செய்தது.

## சமூக—அரசியல் தாக்கங்கள்

இலங்கையில் 1983ஆம் ஆண்டு யூலை கலவரங்களின் விளைவாக ஏறக்குறைய 200,000 தமிழ் அகதிகள் இந்திய மாநிலமான தமிழ் நாட்டிற்குச் சென்றனர் (கொடிக்கார, 1985: 18). இந்தியாவின் மாநிலமான தமிழ்நாட்டு அரசாங்கம் அதன் நகரங்களைச் சுற்றிலும் எண்ணற்ற அகதி முகாம்களை இரவோடிரவாகத் திறக்கவேண்டியிருந்தது. இதன் சமூக, பொருளாதார பாதிப்புகளை விரிவாக விளக்க வேண்டியதில்லை. இது நீர் மற்றும் மின்சாரம் வழங்கல் அடங்கலாக, மாநில அரசாங்கத்தின் நிர்வாக வளங்கள் மீது தாங்கமுடியாத ஒரு சுமையாக இருந்தது. அத்துடன் ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகளும் இலங்கைத் தமிழ்ப் பிரசைகளும் (அகதிகளல்லாதோர்) தென்னிந்தியாவின் தமிழ்நாட்டிலும் அடுத்துள்ள மாநிலங்களிலும் நிரந்தரத் தங்குமனைகளையும் சொத்துக்களையும் சுவீகரித்தனர். இந்தியாவில் நிரந்தரத் தங்குமிடத்தைப் பெறக்கூடுமாயிருந்ததைத் தொடர்ந்து இலங்கைத் தமிழ்ப் பிரசைகள் இலங்கையில் நிலவிய படுமோசமான கொந்தளிப்பு நிலைமையின் காரணமாகத் தமது சொந்த நாட்டுக்குத் திரும்பப்போகின்ற அறிகுறியெதனையும் காட்டவில்லை. எனவே இப்பிரசைகள், குறிப்பாகச் சென்னை நகரின் அன்றாட வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் ஒரு மேலதிகச் சுமையாகினர்.

சமூகரீதியான பாதிப்புக்களை மதிப்பீடு செய்கின்ற போது இலங்கையில் இன முரண்பாடு அதிகரித்த வேளையில், பங்களாதேஷில் தலையிட்டதைப் போன்று இலங்கையில் ஆயுதத் தலையீட்டை மத்திய அரசாங்கம் மேற்





கொள்ள வேண்டுமென்று தமிழ் நாடெங்கிலும் தன்னிச்சையான கோரிக்கையொன்று எழுந்ததென்ற உண்மையை எவரும் மறுக்க முடியாது. இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடாதென்று மத்திய அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்ததன் விளைவாக தமிழர்களுக்கும் தமிழரல்லாதோருக்கும் இடையிலான நம்பிக்கை குறைந்தது (தமிழ்நாடு சட்டசபை விவாதம், 26 ஒக்ரோபர் 1983: பத்தி 3, பக். 233-34).

தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். சென்னையில் சர்வகட்சிக் கூட்டமொன்றைக் கூட்டினார். அது இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதைக் கண்டித்தது (த ஸ்ரேட்ஸ்மன் 29 யூலை 1983). அதனைத் தொடர்ந்து எம்.ஜி.ஆர். ஐக்கிய நாடுகள் சபையில்; (UNO) இவ்விடயத்தை எழுப்பும்படி வற்புறுத்தி இந்திரா காந்திக்குத் தந்தியொன்றை அனுப்பியதுடன் மட்டுமல்லாது 1983 யூலை 31ஆந் தேதியன்று தமிழ்நாட்டிலுள்ள வெவ்வேறு அரசியற் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தூதுக்குழுவொன்றுக்குத் தலைமைதாங்கிப் புதுடெல்லிக்குச் சென்றார். அத்தூதுக் குழு ஏனையவற்றுடன் பின்வருவனவற்றைத் தெரிவிக்கின்ற மகஜரொன்றைப் பிரதமர் இந்திரா காந்தியிடம் சமர்ப்பித்தது:

இலங்கையின் கொடிய, காட்டுமிராண்டித்தனமான கொலைகளை அந்நாட்டின் உள்நாட்டு விவகாரமாகத் தள்ளிவிட முடியாது. இந்திய அரசாங்கம் இலங்கையிலுள்ள தமிழர்களைக் காப்பாற்றுவதற்குச் செயல்விளைவுடனும் தீவிரமாகவும் அவசரமாகவும் தலையிடவேண்டிய நேரம் வந்துவிட்டதென நாம் திட்டவட்டமாக உணர்கின்றோம் (சிவராஜா, 1985: 140).

தமிழ்நாடு சட்டசபையின் சபாநாயகர் இலங்கையில் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்களுக்கு வருத்தந் தெரிவிக்கின்ற தீர்மானமொன்றை 1983ஆம் ஆண்டு ஒக்ரோபர் 24ஆந் தேதியன்று முன்மொழிந்தார். 1983ஆம் ஆண்டு ஒக்ரோபர் 25ஆந் தேதியன்று தி.மு.க. ஏனைய எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்புடன் தமிழ்நாடு சட்டசபையில் தலையீட்டுக் கோட்பாட்டைப் பரிந்துரைத்து, இலங்கைக் கெதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ராக பங்களாதேஷ் பாங்கிலான நடவடிக்கையை வலியுறுத்தியது. எனினும் ஆட்சியிலிருந்த அ.இ.அ.தி.மு.க. அத்தகைய நடவடிக்கை முறையை ஆதரிக்கவில்லை (மேற்கூறியது: 141).

இலங்கையிலுள்ள தமிழர் இலட்சியத்தின்பால் தமிழ்நாட்டின் அனுதாபமும் தமிழர்களுக்கு உதவுவதற்கு இலங்கையில் தலையிடுமாறு இந்திய அரசாங்கத்தின் மீதான அழுத்தமும் இலங்கையில் கடுஞ்சீற்றத்தை ஏற்படுத்தின. எனினும் 1983ஆம் ஆண்டு யூலையில் வெடித்த இன வன்முறையும் அதன் தொடர் நிகழ்வுகளும் இந்தியாவைப் பெரிதும் இக்கட்டான நிலைக்கு உட்படுத்தியதனால் இந்தியாவின் ஆழமான கவலையைத் தூண்டி விட்டன. இராசதந்திரத் தூதரகங்களின் உறுப்பினர்கள் உட்பட இந்திய மற்றும் இலங்கைத் தமிழர் மீதும் இந்தியத் தேசிய இனத்தவர் மீதும் பரந்த அளவிலான தாக்குதல்களும் இந்தியச் சொத்துக்களுக்கு விளைவிக்கப்பட்ட சேதமும் இந்தியாவினுள் கடுமையான எதிர்ப்புகளைத் தோற்றுவித்தன. மறுபுறுத்தில் இலங்கையின் நெருக்கடி பிராந்தியத்தின் இணக்கச் சூழ்நிலையையும் உபகண்டத்தின் புவி-அரசியற் சூழலையும் தகர்த்துவிடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது.

இலங்கையின் இன முரண்பாட்டின் விளைவாக திருமதி காந்தி ஒரேசமயத்தில் இரு வெவ்வேறான பிரச்சினைகளை எதிர்நோக்கினார். அதாவது, இலங்கையுடன் இந்தியாவின் வரலாறு சார்ந்ததும் கலாச்சார ரீதியானதுமான இணைப்புகளைப் பாதுகாக்கவேண்டிய தேவையும், தமிழ்நாட்டு மக்களின் அபிலாசைகளைத் திருப்திப்படுத்துவதன் மூலம் இந்தியாவின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியமும் அவருக்கு இருந்தது. எடுத்துக்காட்டாக 'இலங்கையில் ஏற்பட்டுள்ள இன மோதலின் வளர்ச்சிகள் இந்தியாவைக் கடுமையாகப் பாதித்துள்ளதனால் இந்தியா வேறு நாடுகளைப்போல் செயற்பட முடியாதென்று இந்திரா காந்தி இலங்கை ஜனாதிபதி ஜயவர்தனவுக்குத் தெளிவுபடுத்தினார்.' (த ரைம்ஸ் ஒவ் இன்டியா, 13 ஆகஸ்ட் 1983).





## பொருளாதார மற்றும் இராணுவ ரீதியான பாதிப்புகள்

முன்னர் குறிப்பிட்டவாறு இலங்கையில் 1983 யூலையில் இடம்பெற்ற பாரிய இன வன்முறையைத் தொடர்ந்து சுமார் 200,000 தமிழ் அகதிகள் தென்னிந்தியாவின் தமிழகத்தில் அடைக்கலம் புகுந்தனர். அதன் விளைவாக இந்த அகதிகள் அனைவரும் இந்திய அரசாங்கத்தினதும் தமிழக அரசாங்கத்தினதும் செலவில் பராமரிக்கப்பட்டனர். இது உண்மையில் இந்தியப் பொருளாதாரத்தின்மீது ஒரு மேலதிகச் சுமையாயிருந்தது. இலங்கையின் இன முரண்பாடு இலங்கையுடனான இந்தியாவின் நெருக்கமான பொருளாதாரப் பிணைப்புக்களைப் பாரதூரமாகப் பாதித்திருந்தது. ஏனெனில் சுதந்திரமான தமிழ் அரசொன்றை உருவாக்கும் பொருட்டுச் சிங்கள ஆதிக்க அரசாங்கத்திற்கெதிராகப் போராடுவதற்குப் பயிற்சியும் ஏனைய வசதிகளும் வழங்கியதன் மூலம் தமிழ் கெரில்லாக்களை ஊக்குவிப்பதற்கு இந்தியா பொறுப்பாயிருந்ததெனச் சிங்கள மக்கள் உணர்ந்ததனால் அவர்களின் பார்வையில் இந்திய வர்த்தகர்கள் தகாவழிப் பேர்வழிகளாகிவிட்டனர். அதன் விளைவாக பாரத ஸ்டேட் வங்கி உட்பட அனேக வர்த்தக வியாபார நிறுவனங்கள் சிங்களக் காடையர் கும்பல்களினால் அடித்துநொறுக்கப்பட்டன (ஏசியன் ரெக்கோடர், யூலை 1983: 178). சிங்களவருக்கு இந்திய வர்த்தகர்கள் மீது ஏற்பட்ட வெறுப்புக்குக் காரணம் அவர்கள் சுரண்டும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களென்பதனாலல்ல. மாறாக காலப்போக்கில் ஒட்டுமொத்தமாக இந்தியாவுக்கெதிராக சிங்களவர் வளர்த்துக்கொண்ட பகைமை உணர்வின் காரணமாக உள்நாட்டு முதலாளிகள் இந்தியர்களைப் பெரும் போட்டியாளர்களாக கருதியமையே ஆகும்.

1983ஆம் ஆண்டு யூலை கலவரங்களை அடுத்து இலங்கை அரசாங்கம் இராணுவ உதவிக்காகப் பல்வேறு நட்பு நாடுகளை, குறிப்பாக அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளை அணுகியது. ஜயவர்தன அரசாங்கம் பாதுகாப்பை வழங்குவதற்கு மேற்குலக அரசுகளையும் அவற்றின் நேசநாடுகளையும் அணிதிரட்ட விரும்பியதனால் இந்தியாவை வேண்டுமென்றே திட்டமிட்டு விலக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கியது. எனவே இலங்கை அரசாங்கம் அத்தகைய சூழ்ச்சித் திட்டத்தின்மூலம் இந்தியாவின் பாதுகாப்பு நலன்களெனக் காணப்பட்டவற்றுக்குத் தீங்கு விளைவிக்கின்ற சக்திகளின் தலையீட்டை தந்திரோபாயமாக ஊக்குவிப்பதனூடாகப் பிராந்தியத்தில் இந்தியாவைத் தனிமைப்படுத்த விரும்பிய தென இந்தியா உணர்ந்தது.

அதற்கிணங்க ஜயவர்தன அரசாங்கம் பிராந்தியத் துக்கு வெளியேயுள்ள, பிராந்தியநலனுக்கு எதிரான மற்றும் பிராந்தியத்தில் இந்தியாவுக்கு விரோதமான அரசுகளிடம் இராணுவ உதவியை நாடுகின்றதென்ற அறிக்கைகளைத் தொடர்ந்து இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை யின் உள்நாட்டுக் குழப்பத்திலிருந்து விலகியிருக்கும்படி எல்லா வெளிப்புற அரசுகளையும் எச்சரித்தார் (த ஹிந்து, 6 ஆகஸ்ட் 1983). எனினும் இந்தியாவின் எச்சரிக்கைச் சமிக்ஞையின் மத்தியிலும் கொழும்பு அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளத் தயங்கவில்லை. ஜயவர்தன அரசாங்கம் இராணுவ மற்றும் அரசியல் ஆதரவை உறுதிப்படுத்து வதற்கு வழமையான இராசதந்திர வழிகளுடன் விசேட தூதுக்குழுக்களையும் பயன்படுத்தியது (த ஹிந்து, 6 ஆகஸ்ட் 1983). இந்திய அரசாங்கத்தினதும் மக்களினதும் ஆதர வுடனும் ஊக்குவிப்புடனும் செயற்படுகின்ற தமிழ்ப் போராளிகளினால் இலங்கையின் ஐக்கியத்திற்கும் ஒருமைப் பாட்டிற்கும் கடுமையான அச்சுறுத்தல் உள்ளதெனவும் அத்துடன் பங்களாதேஷைப் போன்று சுதந்திரமானதும் இறைமையுள்ளதுமான தமிழ் அரசொன்றை உருவாக்கு வதற்கு இந்தியாவின் நேரடி இராணுவப் படையெடுப்புக் கான சாத்தியம் உள்ளதெனவும் இத்தூதுக் குழுக்கள் பிரச்சாரம் செய்தன.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் இத்தூதுக் குழுக்களின் சாதனைகள் ஏராளம். எடுத்துக்காட்டாக இலங்கை அரசாங்கம் அதன் சொந்த உளவுத்துறையையும் இராணுவப் பயிற்சி வசதிகளையும் பலப்படுத்துவதற்கு இஸ்ரேலிய உளவு ஏஜன்சீக்களான மொஸ்ஸாட்டினதும் ஷின்பெத் தினதும் உதவியை நாடிப்பெற்றது. பிரிட்டிஷ் சனல் ஐலன்டைத் தளமாகக் கொண்ட கீனி மீனி சேர்விஸ் (Keenie Meneny Service - KMS) என்ற தனியார் ஏஜன்சியின்





பெயரில் வந்த முன்னாள் பிரிட்டிஷ் விசேட வான் சேவையை (Special Aviation Service-SAS) சேர்ந்த கமாண்டோக்கள் மூலம் பயிற்சி வசதிகள் மேலும் அதிகரிக்கப்பட்டன. இலங்கை கையளித்த விவரங்களின் அடிப்படையில் இவற்றிற்கு பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு நிதி வசதி செய்து கொடுத்தது என்று நம்பப்படுகின்றது (முனி, 1993: 53). 1983ஆம் ஆண்டு ஒக்ரோபரில் அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் கஸ்பர் வெய்ன்பேர்கரின் கொழும்பு விஜயத்தை யும், 1983ஆம் ஆண்டு நவம்பரில் சனாதிபதி றீகனின் விசேட தூதுவராக முன்னாள் மத்திய உளவுத்துறை ஏஜன்டான (Central Intelligence Agent-CIA) ஜெனரல் வேர்னன் வால்ற் டர்ஸ் இலங்கைக்கு அனுப்பப்பட்டதையும் தொடர்ந்து இஸ்ரேலுடனான இலங்கையின் உளவுத்தொடர்பு தாபிக்கப் பட்டது. 1984ஆம் ஆண்டு மேயில் இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவொன்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் முறைப்படி தாபிக்கப்பட்டதுடன் இலங்கைக்குச் சீனா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடு களிடமிருந்து கணிசமான அளவு மலிவான இராணுவத் தளபாடங்களும் கிடைத்தன (மேற்கூறியது).

அதற்கும் மேலாக ஐக்கிய நாடுகளினுள்ளும், அணி சேரா இயக்கத்தினுள்ளும் (NAM) இந்தியாவும் இலங்கையும் பெரும்பாலான விடயங்களில் எதிரான கருத்துக்களைக் கொண்டிருந்தன. சித்தாந்த வேறுபாடுகளும் கொள்கை வேறுபாடுகளும் இந்திய ஆதிக்கம் பற்றிய இலங்கையின் அச்சமும் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவு பாதை விலகிப் போவதற்குப் பங்களித்தன. எனினும் 1987 ஆம் ஆண்டு யூலை 29ஆந் தேதியன்று இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து இவ் விடயங்களில் இந்தியாவின் அக்கறைகளுக்கு இணங்கிப் போவதற்கு இலங்கை அரசாங்கம் உடன்பட்டது.

இலங்கையின் இன முரண்பாடு இந்தியாவின் மீது ஏற்படுத்திய இராணுவரீதியான தாக்கங்களை மதிப்பீடு செய்யும்போது இந்தியாவிலுள்ள அனேக பயங்கரவாத மற்றும் கிளர்ச்சிக் குழுக்களுடன் எல்ரீரீஈ பலமான பிணைப்புக்களை விருத்தி செய்திருந்ததென்ற உண்மையை எவரும் புறக்கணிக்க முடியாது. எனவே இலங்கையின் இன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நெருக்கடி உடனடியாகத் தீர்க்கப்படாவிட்டால் அது இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்பை எவ்வாறு பாதிக்கக் கூடுமென்று ஆராய்தல் பொருத்தமானது.

இச்சூழலில் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச ஏஜன்சீக்களால் பயங்கரவாதத்தையும் கிளர்ச்சியையும் ஊக்குவிக்கின்ற வலையமைப்பொன்று இந்தியாவில் நிறுவப்பட்டு வருகின்றது (கரீம், 1993: 62). இந்தியாவின் பொருளாதார, சமூக கட்டமைப்பைச் சீர்குலைப்பதற்கும் அதன் மூலம் தற்போதைய இந்தியக் கூட்டரசுக் கட்டமைப்பைத் தகர்ப்பதற்கும் கருவிகளாகப் பயங்கரவாதமும் கிளர்ச்சியும் இந்த ஏஜன்சீக்களால் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியாவில் இனத்துவத்தின் அடிப்படையிலான பிரிவினை வாதச் சக்திகள் உள்நாட்டின் உறுதிப்பாட்டிற்குத் தொடர்ச்சியான சவால்களாக இருந்துள்ளன. போடோ, மணிப்பூர் கிளர்ச்சிவாதிகளும் பஞ்சாப், ஜம்மு மற்றும் காஷ்மீர் பயங்கரவாதமும் இதற்குச் சில உதாரணங்களாகும். வன்முறையுடனான ஆர்ப்பாட்டங்கள், அரசியல் படுகொலைகள், பொது வேலைநிறுத்தங்கள், அப்பாவிப் பொதுமக்களைக் கொலைசெய்தல் என்பவை பாராளுமன்றம் மற்றும் நீதித்துறை போன்ற சனநாயகக் கட்டமைப்புக்களைச் செயலிழக்கச் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் சில வழிமுறைகளாயுள்ளன. 1999இல் பயங்கரவாதக் குழுக்களால் மும்பாயில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புக்களும் முன்னாள் இளம் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையும் இச்செயலுக்கு இரு உதாரணங்கள். தமிழ்நாட்டில் அஸ்ஸாம் ஐக்கிய விடுதலை முன்னணியின் (ULFA) முகாம்களும், LTTE, ULFA மற்றும் பிற பயங்கரவாதக் குழுக்களினதும் கிளர்ச்சிக் குழுக்களினதும் கூட்டுப் பயிற்சி முகாம்களும் கண்டுபிடிக்கப்பட்டமை கூட்டுத்திட்டமிடல் முகாமொன்று சில ஆண்டுகளாக இருந்துவந்துள்ளதென்ற உண்மையை நிலைநாட்டியுள்ளது (மேற்கூறியது: 64-65).

ராஜீவ் காந்தியின் படுகொலையின் பின்னர் அளப்பரிய ஆதரவும் போதுமான வசதிகளும் இழக்கப்பட்ட பின்னரும் கூட, எல்ரீரீஈ தமிழ்நாட்டிலுள்ள மக்களின் உள்ளங்களில் அதன் செல்வாக்கைத் தொடர்ந்தும் வைத்துள்ளது. இன்றும் வன்னியர் ஆதிக்கத்திலுள்ள பாட்டாளி மக்கள் கட்சியும் (PMK), வைகோவின் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகமும் (MDMK) தமிழர் இலட்சியத்திற்கான ஆதரவு என்ற பெயரில் எல்ரீரீஈயைப் பகிரங்கமாக ஆதரிக்கின்றன. தமிழ்நாட்டு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா எல்ரீரீஈ மீதான தடைக்குச் சற்றுமுன்னர் விடுத்த கூற்றொன்றில் தமிழ்நாட்டின் பொது வாழ்க்கையென்ற கட்டுமானத்தினுள் எல்ரீரீஈ பரந்த அளவில் ஊடுருவியுள்ளதற்கான விரிவான சான்றுகளைக் கடந்த சில மாதங்களில் அவரின் அரசாங்கம் திரட்டியுள்ளதாகத் தெரிவித்தார். அவர் எல்ரீரீஈக்கும் தமிழ்த் தேசியவாதத்திற்கும் இடையிலான தொடர்பு பற்றியும் குறிப்பிட்டார் (மேற்கூறியது).

எல்ரீரீஈ தமிழ்நாடு மீட்புப்படை (Tamilnadu Retrival Force) கெரில்லாக்களுடனும் நக்ஸலைட்டுகளுடனும் குறிப்பாக மக்கள் யுத்தக் குழுவுடனும் (People's War Group) அஸ்ஸாமில் அஸ்ஸாம் ஐக்கிய விடுதலை முன்னணி (United Liberation Front of Assam) உடனும் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளது (மேற்கூறியது: 66). எல்ரீரீஈ ஆயுதக் கடத்தலையும் போதைப்பொருள் வர்த்தகத்தையும் எளிதாக்கும் பொருட்டு இந்தியாவிலுள்ள எல்லாப் பிரிவினைவாத மற்றும் பயங்கரவாதக் குழுக்களுடனும் ஓர் அடையாளபூர்வமான உறவை வளர்த்துக்கொள்ள விரும்பியதென நம்பப்படுகின்றது (மேற்கூறியது). எல்ரீரீஈ ஆயுதம் மற்றும் வெடிமருந்துகளைப் பெருக்கிக்கொள்வதற்கு கிழக்காசியா, மேற்காசியா, ஆபிரிக்கா, ஐரோப்பாவில் பல்வேறு மையங்கள், அவுஸ்திரேலியா, கனடா மற்றும் அமெரிக்காவிலும் தொடர்புகளைக் கொண்டிருந்தது. ஆயுதக் கொள்வனவையும் வேறு தேவைகளையும் எளிதாக்குவதற்கு அது பாகிஸ்தானின் உளவுத்துறையான (ISI), ஒருசில ஆப்கான் முஜாஹிதீன் குழுக்கள், பாலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO) ஆகியவற்றுடனும் தொடர்புகளை விருத்தி செய்திருந்தது (மேற்கூறியது).

எனவே எல்ரீரீஈயின் தற்போதைய நிலைமை முறைகேடாகக் கையாளப்படுமாயின் அது இந்தியாவினுள் பின்







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வரும் பாதகமான நிலைமைகளின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும். எல்ரீரீஈ ஒருவேளை -

1. இந்தியாவில் அதன் பிடியைத் தொடர்ந்து வைத்திருக்கும் நோக்குடன் தமிழ்நாட்டிலும் அடுத்துள்ள மாநிலங்களிலும் பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கக் கூடும்.

2. தமிழ்நாடு மீட்புப்படை போன்ற எல்ரீரீஈ ஆதரவுக் குழுக்களின் உதவியுடன் தற்போதைய அ.இ.அ.தி.மு.க. மாநில அரசின் ஸ்திரத்தன்மையைக் குலைக்கக் கூடும்.

3. இந்தியாவிலுள்ள எல்லாப் பிரிவினைவாத அல்லது பயங்கரவாதக் குழுக்களுடனும், தகவல்களுக்கும் உளவுச் செய்திகளுக்கும் பரிமாற்றமாக ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் வழங்குவதற்கு, ஓர் அரசியல் தொடர்பையும் வலையமைப்பையும் தாபிக்கக்கூடும்.

4. ஆயுதங்களைக் கொள்வனவு செய்து இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் அவற்றைக் கடத்துவதற்கும் புதிய தளங்களை உருவாக்கும் நோக்குடன் இந்தியாவை எதிர்க்கின்ற நாடுகளுடன் இணைப்புகளைத் தாபிக்கக்கூடும்.

5. பல்வேறு பிரிவினைவாதக் குழுக்களின் உதவியுடன் எல்ரீரீஈயின் பதுங்கிடங்களாகத் தென்னிந்திய மாநிலங்களைப் பயன்படுத்தக்கூடும். அத்துடன்

6. இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் ஈழத்தை ஆதரிக்கும் அரசியல்வாதிகளைத் திரட்டி அங்கு பெரும் பிரிவினைவாத அனைத்துத் திராவிடத் தமிழ்ப் போராளி இயக்கமொன்றைப் போற்றி வளர்க்கக்கூடும்.

## 1990களில் இந்திய–இலங்கை உறவுகள்

1980களின் நிகழ்வுகள் பற்றிய விவரங்களிலிருந்து விலகிச்சென்று பார்க்குமிடத்து இரு விடயங்கள் முனைப்பாகத் தெரிகின்றன. முதலாவது, 1987இன் ஒப்பந்தம் அது





எழுதப்படும்போதே வழக்கிழந்த ஓர் ஆவணமாகிவிட்டதென்பது. அது ஓர் இரு-துருவ உலகும் அதில் பிராந்திய அரசுகளின் பங்குமென்ற ஊகங்களின் அடிப்படையிலான ஒரு பழைமையான கெடுபிடி-யுத்த ஆவணமாயிருந்தது. கொர்பச்சோவ் கம்யூனிசக் கூடாரத்தைச் சுருட்டிக் கொண்டதோடு ஒரு காலத்தில் பெரும் பலம்வாய்ந்ததாயிருந்த சோவியத் யூனியன் பூசலிடுகின்ற அனேக குடியரசுகளாகத் தகர்ந்துபோனதைத் தொடர்ந்து இந்தியா வலிந்து பறித்துக்கொண்ட புவி-அரசியற் ‘சலுகைகள்’ அவை எழுதப்பட்ட காகிதத்தின் பெறுமதிகூட அற்றனவாகத் தோன்றின.

உண்மையில் இந்தியர்கள் அவர்களின் பொருளாதாரத்தைத் தாராளமயப்படுத்தியும், அமெரிக்கக் கடற்படையுடன் கூட்டுப் பயிற்சிகளை நடத்தியும், அமெரிக்கா மற்றும் மேற்குலக நேச நாடுகளுடன் அவர்களின் வர்த்தகத்தைப் பெருமளவு விரிவுபடுத்தியும், இஸ்ரேலுடன் உறவுகளைச் சுமுகப்படுத்தியும், தென்கிழக்காசிய நாடுகளின் சங்கத்தில் (Association of South East Asian Nations - ASEAN) உறுப்புரிமையை நாடியும், அவர்களின் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கொள்கைகளில் பல்வேறு முக்கிய மாற்றங்களையும் மேற்கொண்டுள்ளது.

இந்த வேளையில் 1987ஆம் ஆண்டு ஏற்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தம் அது கைச்சாத்திடப்பட்டு பதினைந்து ஆண்டுகள் மட்டுமே கடந்துள்ள போதிலும் அதன் பிறகு ஏற்பட்ட துரித கதியான மாற்றங்கள் ஒப்பந்தம் ஏற்பட்டு நீண்டகாலம் ஆகிவிட்டதைப் போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

இரண்டாவதாக, காலனித்துவத்துக்குப் பிந்திய தேசியவாத ஓட்டத்தில் இனத் தேசியவாத இயக்கங்கள் அதன் கொள்கைகளிலிருந்து விலகிவிட்டதாகவும் சுற்றுவழியில் செல்பவர்களாகவும் கருதமுடியாத அளவிற்கு தென்னாசியாவில் உள்நாட்டு மற்றும் பிராந்திய அரசியலைக் கொண்டு நடத்துவதில் யதார்த்தத்தில் ஒரு ஆக்கபூர்வமான சக்திகளாக இருந்தனர். 1980களிலும் 1990களிலும் எல்ரீரீஈ இந்திய அரசாங்கத்தினதும் எம்.ஜி.ஆர். தலைமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யிலான அ.இ.அ.தி.மு.க. அரசாங்கத்தினனதும் (தமிழ்நாடு அரசாங்கம்) கொழும்பில் பிரேமதாச ஆட்சியினதும் (இலங்கை அரசாங்கம்) தந்திரோபாயத்தின் இன்றியமை யாத ஒரு பகுதியாயிருந்தது. இந்த ஆட்சிகள் ஒவ்வொன்றும் தங்களது சொந்த இலக்கை அடைவதற்காக எல்ரீரீஈயைப் பயன்படுத்த முயற்சித்தன. இலங்கையின் வடக்கிலும் உல கெங்கிலும் அதன் பிடியைத் திடப்படுத்துவதற்கு எல்ரீரீஈ தனது பங்கிற்கு அவை ஒவ்வொன்றையும் பயன்படுத்தியது. அதேவகையில் இலங்கை அரசியல்வாதிகளில் பெரும் பாலோர் தாம் தேசியத் தலைவர்களாவதற்கான தேவை யான தகுதிகள் தம்மிடம் உள்ளதென்று வாக்காளர் களுக்கும் போட்டியாளர்களுக்கும் நிரூபிக்கும்பொருட்டு எல்ரீரீஈ போன்ற குழுக்களைக் கையாள்வதில் அவர்களுக் குள்ள பரிச்சயங்களை விளக்க வேண்டிய சூழ்நிலையில் இருந்தனர்.

பிரத்தியேகமாக தேசிய அரசுகளுக்கு மட்டுமே இறை மையும் சட்டப்படியான தன்மையும் உரியதெனக் கோரு கின்ற வெற்றாரவாரப் பேச்சுக்கள் எவ்வாறிருப்பினும், அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகள் அவர்களின் அர சியல் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும், அவர்களின் அயல்நாடுகளுடன் உறவுகளை வைத்திருப்பதற்கும், அவர் களின் எதிரிகளைத் தோற்கடிப்பதற்கும், தொடர்ந்து அதி காரத்தில் இருப்பதற்கும், இனத் தேசியவாத இயக்கங்கள் அவசியமென்பதற்கும், அவற்றை அவர்கள் பயன்படுத்து கின்றனரென்பதற்கும் மிதமிஞ்சிய சான்றுகள் உள்ளன. 1983 முதல் 1987 வரையான காலப்பகுதியில் இந்திய அரசு எவ்வாறு ஜயவர்தனவுக்கு எதிரான ஒரு நெம்புகோலாக எல்ரீரீஈயைப் பயன்படுத்த முனைந்ததோ அவ்வாறே பிரேமதாசவும் 1990களின் தொடக்கத்தில் ராஜீவ் காந்தியை இழிவு படுத்துவதற்கும் இந்திய அமைதிப் படையை வெளி யேற்றுவதற்கும் எல்ரீரீஈக்கு ஆயுதம் வழங்கியதுடன், ஜே. வி.பீ.யை அழிப்பதற்கு புலிகளுடன் எட்டப்பட்டிருந்த போர் நிறுத்த உடன்படிக்கையைப் பயன்படுத்திக் கொண்டார்.

1991 மே 21ஆம் தேதியன்று ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்படுவதற்கு முன்னரே இலங்கை தொடர்பான இந்திய வெளிநாட்டுக் கொள்கை 1981க்கு முந்திய நிலைக்குத் திரும்புகின்ற உறுதியான அறிகுறிகளைக் காட்டியது. குறு கியகாலம் நீடித்த வி.பீ.சிங்கின் அரசாங்கத்தைப் போன்று பி.வி. நரசிம்மராவ் ஆட்சியும் இலங்கையின் இன முரண் பாடானது அடிப்படையில் அந்நாட்டின் ஓர் உள் நாட்டுப் பிரச்சினையென்றும் தமிழ்நாட்டின்மீதான அதன் பாதிப்பு கள் அளவற்ற கற்பனையானவை என்றும் அது கருதுவதா கத் தெளிவுபடுத்தியிருந்தது. இம்மனப்பான்மை 1996 முதல் தொடர்ந்துவந்த எல்லா ஆட்சிகளினாலும் - அது கௌடா வினதாயினுஞ் சரி, குஜ்ராலினதாயினுஞ் சரி அல்லது இப் போது வாஜ்பாயின்கீழ் பி.ஜே.பீ. தலைமையிலான கூட்டர சாங்கத்தினதாயினுஞ் சரி தளராது தொடரப்பட்டுள்ளது. இந்த ஆட்சிகள் எல்லாவற்றினதும்கீழ் இந்தியக் கொள்கை இலங்கையின் ஐக்கியமும் ஒருமைப் பாடும் பற்றிய அதன் கருத்துக்களை ஐயத்துக்கிடமின்றிக் கூறியுள்ளதுடன் இலங் கைத் தமிழர்களுக்குத் தனி வேறான தேசிய அரசொன்றை உருவாக்குவதற்கான எவ்வித ஆதரவையும் வெளிப்படை யாகவே மறுத்துள்ளது. இந்தியாவில் அல்லது குறைந்த பட்சம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பெயர் பெற்ற அரசி யல் கட்சிகள் எதுவாகினும் இலங்கை விவகாரங்களில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த பங்கை வகித்த அந்தப் பழைய நாட்களுக்குத் திரும்பிச் செல்வதற்கு விருப்ப மிருப்பதாகத் தெரியவில்லை.

பஞ்சாப்பிலும், காஷ்மீரிலும், அஸ்ஸாமிலும், இலங் கையிலும் ஏற்பட்ட பிரச்சினைகளின் பின்னர் உள் நாட்டு மற்றும் பிராந்தியப் பகைவர்களுக்கெதிராக இனத் தேசிய வாத இயக்கங்களைப் பயன்படுத்துதல் இருபக்கமும் கூரான வாளென்பது மட்டுமன்றி அது தற்கொலைக்கு ஒப்பான தாகுமென்றும் ஆளும் வர்க்கத்தினர் மெதுவாக உணரத் தொடங்கியுள்ளதை காணக் கூடியதாயுள்ளது. இந்திரா காந்தியினதும் ராஜீவ் காந்தியினதும் பிரேமதாசவினதும் படுகொலைகள் எல்லாம் இனத் தேசியவாத இயக்கங்க ளுடன் நெருக்கமான தொடர்பை வைத்திருப்பதன் காரண மான வீழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனவென்று உணர்ந்து கொள்வதற்குப் பெருமளவு அறிவுக்கூர்மை தேவையில்லை.

இதுவரை நாம் ஆய்வு செய்தவற்றிலிருந்து கீழ்க்காணும் முடிவுகளை எட்ட முடியும்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கையிலுள்ள தமிழர் அதிகரித்த அளவில் அரச அடக்குமுறையை எதிர்நோக்கியபோது அவர்கள் உல கெங்கும் சிதறிப் பரவிய தமிழர்களிடமும், உலகின் ஏனைய விடுதலை இயக்கங்களிடமும், இந்தியாவிடமும் உதவி தேடினர். இவை எல்லாவற்றிலும் இந்தியாவின் பங்கு மத்தியஸ்தம் வகித்தலும் போராளிகளுக்கு ஆதரவுமென்ற இருமுனைகொண்ட தந்திரோபாயத்தின் காரணமாக இரு மனப்போக்குடையதாகத் தோன்றியது. 1984ஆம் ஆண்டு வரை தமிழர்களுக்கு இந்தியாவின் ஆதரவு பலமானதாக உணரப்பட்டது. ஆனால் 1985 முதற்கொண்டு இந்தியா வின் ஈடுபாடு அதன் சொந்தப் பிராந்தியத் தந்திரோபாய நலன்களை மேம்படுத்துதலேயன்றி ஈழம் அதன் நலன் களுக்கு ஏற்புடையதல்லவென்பது தெளிவாகியது. எனினும் உத்தியோகபூர்வமாக இந்தியா இலங்கை ஆட்சிக்கும் தமிழர்களுக்குமிடையில் ஓர் மத்தியஸ்தரென அறிவித்துக் கொண்டது.

இலங்கையிலுள்ள வெளிநாட்டு அரசுகளின் பங்கி லிருந்து இலங்கை அரசாங்கம் அதன் சொந்த உளவுத் துறையின் கட்டமைப்பையும் இராணுவப் பயிற்சி வசதி களையும் பலப்படுத்துவதற்கு மொஸாட் மற்றும் ஷின்பெத் ஆகிய இஸ்ரேலிய உளவுத்துறை ஏஜன்சிக்களின் உதவியை உறுதி செய்துகொண்டது (ஒஸ்ரோவ்ஸ்கி 1990). முன்னாள் பிரிட்டிஷ் எஸ்ஏஎஸ் கமாண்டோக்கள் (KMS) மூலம் பயிற்சி வசதிகள் மேலும் அதிகரிக்கப்பட்டன. இலங்கை அறிக்கைப்படி பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு இதற்கு நிதியுதவி வழங்கியதாக நம்பப்படுகின்றது (ரட்னதுங்க 1988). அமெரிக்க மற்றும் ஐக்கிய இராச்சிய அரசாங்கங்கள் இந்தியாவின் கூருணர்வுக்கு மதிப்பளித்து இலங்கையை வெளிப்படையாக ஆதரிக்க விரும்பாததனால் அவற்றின் மறைமுகமான ஆதரவுடன் முறையே இஸ்ரேல் ஏஜன்சீக் களையும் பிரிட்டிஷ் கூலிப்படைகளையும் பயன்படுத்து வதற்கு இலங்கை தூண்டப்பட்டதென்பதை இங்கு கவனத் தில் கொள்வது முக்கியமானது.

இந்தியாவின் மத்தியஸ்த முயற்சிகள் ஆட்சியினரும் போராளிகளும் பேச்சுவார்த்தை மேசையில் சந்தித்தலை இயலச்செய்தன. இதற்கு மேலாக இந்திய மாநிலங்கள்





அனுபவிக்கின்றவாறான பிராந்தியச் சுயாட்சியைத் தமிழர் களுக்கு உறுதிப்படுத்த அது முனைந்தது. ஒப்பந்தத்தின் ஊடாக அது நியாயமான அளவு அதிகாரப் பகிர்வைத் தமிழர்களுக்கு உறுதிப்படுத்தக்கூடுமாயிருந்தது.

அடுத்த அத்தியாயம் 1987 யூலையின் இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு குறிப்பிட்ட முக்கியத்துவம் அளிக்கின்ற தாக, இலங்கையின் இன முரண்பாட்டிற்கு ஒரு சமாதான மான முடிவைக் கொண்டுவருவதற்கான முயற்சியில் இந்தி யாவின் பங்கையும் நோக்குகின்றது.

## முடிவுக் குறிப்புகள்:

1. லோக்சபா ராஜ்யசபா : இந்தியப் பாராளுமன்றத்தின் கீழ் அவையையும் மேல் அவையையும் கருதுகின்றன.
2. இந்தியப் பிரதமர் நேருவாலும் இலங்கைப் பிரதமர் கொத் தலாவலையாலும் 1954இல் கைச்சாத்திடப்பட்ட ஓர் ஒப் பந்தம்.
3. இக்காலத்தில் பண்டாரநாயக்க பெரிய பிரித்தானியாவுடன் அது கொண்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளிலிருந்து இலங் கையை விலக்கிக்கொண்டார்.
4. கச்சதீவு இந்தியாவுக்குச் சொந்தமானது. வட இலங்கைக் கும் தமிழ் நாட்டுக்குமிடையில் அமைந்துள்ள அது 1965இல் இந்திரா காந்திக்கும் ஸ்ரீமா வோவுக்கும் இடை யிலான உடன்படிக்கையின் பின்னர் இப்போது இலங்கைக் குச் சொந்தமாயுள்ளது.
5. ஜயவர்தனவும் தேசாயும் முறையே இலங்கையையும் இந்தியாவையுஞ் சேர்ந்த மேற்குலகு ஆதரவுச் சித்தாந்தத் தலைவர்கள்.
6. ஈ. வே. ராமசுவாமி நாயக்கர் தென்னிந்தியாவில் ஈ. வெ. ரா. என்றும் பெரியார் என்றும் புகழ்பெற்றவர்.
7. வருண முறைமை என்பது பிராமணச் சாதியென்ற கருத் தாகும்.
8. இந்தியாவில் தென்னிந்திய மக்கள் திராவிடர்களாவர். வடஇந்திய மக்கள் ஆரியர்களாவர்.
9. 1970களின் தொடக்கத்திலிருந்து தமிழ்ப் போராளிகள் பல் வேறு பயிற்சி முகாம்களைத் தமிழ் நாட்டிலும் இலங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கையிலும் கொண்டிருந்தனர். ஆயுதப் படைகள் இப்பிர தேசங்களை எட்ட முடியாதிருந்தன.

10. எம்ஜிஆர் எனப் புகழ்பெற்ற எம்.ஜி. இராமச்சந்திரன் தமிழ் நாட்டில் திரைப்பட நடிகராயிருந்தார்.

ooo



அத்தியாயம்- 6

# இந்திய - இலங்கை ஒப்பந்தம்: மத்தியஸ்தராக இந்தியாவின் பங்கு

இவ்வத்தியாயம் தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் மத்தியஸ்தராக இந்தியா வகித்த பங்கை ஆராய்கின்றது. 1983ஆம் ஆண்டு முதல் இந்திய அரசாங்கம் இலங்கையின் இன முரண் பாட்டின்மீது ஈடுபாடு காட்டத் தொடங்கியது. 1983க்கும் 1990க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இந்தியப் பிரதமர் கள், குறிப்பாக இந்திரா காந்தியும் அவரது மகனான ராஜீவ் காந்தியும் தமிழ்ப் போராளிக் குழுக்களையும் இலங்கை அரசாங்கத்தையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதில் குறிப்பிடத்தக்க பங்குகளை வகித்தனர்.

இலங்கைக்கான இந்தியாவின் கொள்கையை வகுப் பதில் தமிழ்நாட்டு அரசியலின் செல்வாக்கும் இவ்வத் தியாயத்தில் ஆராயப்படுகின்றது. அதற்குக் காரணம், தமிழ்ப் பேராளிகளின் பயிற்சிக்கான ஒரு தளமாகத் தமிழ் நாட்டைப் பயன்படுத்தியமையாகும். சர்வகட்சி மாநாட் டின் முன்மொழிவுகளும் விவாதத்திற்கு எடுத்துக் கொள் ளப்பட்டுள்ளன (பிற்சேர்க்கை C) 1985ஆம் ஆண்டு யூலையில் பூட்டானின் தலைநகரான திம்புவில் இடம் பெற்ற சமாதானப் பேச்சுக்கள், 1987ஆம் ஆண்டு யூலையில் இந்திய-இலங்கை ஒப்பந்தம், இலங்கை அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தம், வடக்கு-கிழக்கு மாகாண சபையின் (NEPC) எழுச்சியும் வீழ்ச்சியும் என்பன இவ்வத்தியாயத்தில் ஆராயப்பட்டுள்ள முக்கிய ஆவணங்களும் ஒப்பந்தங்களு மாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 1983 முதல் இந்திரா காந்தியின் தலைமையிலான மத்தியஸ்தம்

தமிழர் இலட்சியத்தின் மீது இந்தியாவின் ஆதரவுக்கு அடிப்படையாயிருந்த நியாயமான காரணம் மற்றும் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் மத்தியஸ்தராக அதன் பங்கைத் தவிர்த்திருக்க முடியுமா என்பவை இவ்வத்தியாயத்தில் கவனஞ்செலுத்தப்பட்டுள்ள சில முக்கிய விடயங்களாகும். அதனை 1980க்கும் 1984க்கும் இடையில் சர்வதேச மற்றும் பிராந்தியங்களில் நிலவிய தந்திரோபாய சூழலின் பின்னணியில் இந்தியாவின் நோக்கங்களையும் நடவடிக்கைகளையும் ஆராய்தல் பொருத்தமானது. அமெரிக்க ஜனாதிபதி ரீகன் பதவியிலிருந்த அதேவேளையில் சோவியத் யூனியன் கோர்பச்சேவின் வருகைக்கு முன்னர்வரை பிரெஷ்னேவுக்குப் பிறகு உருவாகக்கூடிய நிச்சயமற்ற தன்மைகளை அலசி ஆராய்ந்து கொண்டிருந்தது. அத்தருணத்தில் ரீகன் 'மோசமான பேரரசுகள்' குறித்தும் 'தந்திரோபாயப் பாதுகாப்பு முன்னெடுப்புகள்' பற்றியும் பேசிக் கொண்டிருந்தார் (டிக்ஸிற் 1999: 28-29).

செர்னன்கோ மற்றும் அன்ட்றோபோ ஆகியோரின் தலைமையின்கீழ் சோவியத் யூனியன் அதேயளவு மோதல் போக்கைக் கொண்டிருந்தது. ஆப்கானிஸ்தானில் சோவியத்தின் இராணுவத் தலையீட்டைத் தொடர்ந்து மோதல் உச்சக்கட்டத்தில் இருந்தது. பாகிஸ்தான் ஐக்கிய அமெரிக்காவின் கூட்டாளியாகவும் ஆப்கானிஸ்தானுக்குள் சோவியத்தின் முன்னேற்றத்தைக் கட்டுப்படுத்துவதில் அதன் பிரதான கருவியாகவும் செயல்பட்டது. மத்திய ஆசியப் பிராந்தியத்தில் அமெரிக்கா தனது தந்திரோபாயக் குறிக்கோள்களை அடைவதற்கு ஒரு முன்னணி அரசாகப் பாகிஸ்தானைப் பயன்படுத்துவதில் காட்டிய அக்கறையின் முழு அனுகூலத்தையும் பாகிஸ்தானின் ஸியா-உல்-ஹக் பயன்படுத்திக் கொண்டார். பாகிஸ்தான் இந்தியாவுக்கெதிரான அதன் தந்திரோபாய ஆற்றல்களை பெருக்கிக் கொள்வதற்கு அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ ஆதரவைக் கோரியது. பாகிஸ்தான் வளைகுடா வழியாகத் துருக்கியிலிருந்து இஸ்ரேல் வரை விரிந்துசெல்கின்றதான





சோவியத் ரஷ்யாவின் தென்மேற்குப் பக்கமாக அமெரிக்க அரசாங்கம் உருவாக்கிவந்த கட்டுப்படுத்தும் 'வில்' வளையின் வடமுனையாக இஸ்ரேல் தொடர்ந்திருந்தது. (டிக்ஸிற், 1998: 33-34).

1976இல் இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையில் பூரண இராஜதந்திரத் தொடர்புகள் மீளத் தாபிக்கப்பட்ட போதிலும் அவ்விரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் அமைதி குலைந்தனவாகத் தொடர்ந்தன. ஆப்கானிஸ்தானில் அதன் செல்வாக்குப் பரப்பை விஸ்தரிக்கும் சோவியத் ரஷ்யாவின் முயற்சிகளைக் கட்டுப்படுத்துவதில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் ஒரு பொதுவான அக்கறை இருந்தது. ஆப்கானிஸ்தானின் மீதான சோவியத்தின் நாட்டங்களை இந்தியா ஆதரிப்பதாக உணரப்பட்டது. அதனால் சோவியத்-இந்திய யுத்த தந்திரோபாய, அரசியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை நலிவுறச்செய்யும் நோக்கங்கொண்ட அரசியல் மற்றும் பொருளாதார அழுத்தங்களுக்கு இந்தியா இலக்கானது.

இலங்கையில் தமிழர் போர்முனைப்பின் எழுச்சியும் இவ்வளர்ச்சிகள் பற்றிய ஜெயவர்தன அரசாங்கத்தின் காத்திரமான அச்சங்களும் இந்தியா மீது அரசியல்-யுத்த தந்திரோபாய அழுத்தங்களைக் கொண்டுவருவதற்கு அமெரிக்காவாலும் பாகிஸ்தானாலும் பயன்படுத்தப்பட்டன. இலங்கைத் தமிழர்களுக்குத் தமிழ்நாட்டிலிருந்து கிடைக்கும் ஆதரவு பற்றி அச்சங்கொண்டிருந்த ஜெயவர்தன திருமதி காந்தி மீதும் அவரின் நடவடிக்கைகள் மீதும் தனிப்பட்டமுறையில் வெறுப்புக் கொண்டிருந்ததுடன் இலங்கைத் தமிழர்களுக்கான தமிழ்நாட்டின் ஆதரவை அவரால் ஒரு முடிவுக்குக் கொண்டுவர முடியாதென்றும் கருதினார். அவர் அமெரிக்கா, பாகிஸ்தான், இஸ்ரேல் மற்றும் பிற மேற்கு நாடுகளுடன் கணிசமான பாதுகாப்பு மற்றும் உளவுத்துறைத் தொடர்புகளைத் தாபித்துார் (டிக்ஸிற் 1999: 1-16). இக்காலத்தில் இந்திய அரசாங்கமானது பஞ்சாப்பினதும், காஷ்மீரினதும், வடகிழக்குப் பகுதிகளினதும் உள்ளக அழுத்தங்களுக்கு உட்பட்டிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழ்நாட்டுக் காரணி – புகலிடமாகவும் மத்தியஸ்தராகவும் இந்தியா

இலங்கைத் தமிழரின் நெருக்கடி நிலைக்குத் தமிழ் நாட்டில் ஆழமான அனுதாபம் காணப்பட்டது. தமிழ் நாட்டில் அப்போது எம்.ஜி.இராமச்சந்திரன் (MGR) தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் (AIADMK) ஆட்சி நடந்துகொண்டிருந்தது. 'எம்ஜிஆர்' உடன் ஆக்கபூர்வமான அரசியல் ஒத்துழைப்பைப் பேணுதல் திருமதி காந்திக்கு முக்கியமானதாயிருந்தது. 1965இல் பிரிந்துசெல்லப்போவதாக அச்சுறுத்திய முதலாவது இந்திய மாநில அரசு தமிழ் நாடென்ற உண்மை இந்திரா காந்தியின் அரசியல் நினைவுகளில் பசுமையாயிருந்தது (சோ ராமசுவாமியுடனான நேர்காணல், 15 ஏப்பிரல் 2001).

அறுபதுகளின் நடுப்பகுதியில் இந்திய மாநில அரசுகள் எல்லாவற்றிலும் ஹிந்தியைத் தேசிய மொழியாகவும் அரசகரும மொழியாகவும் திணிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டபோது திராவிட முன்னேற்றக் கழகம் (DMK) பிரிவினைக்கான அச்சுறுத்தலை விடுத்தது. இலங்கையிலுள்ள தமிழர்களின் இலட்சியத்தை இந்தியா ஆதரிக்காமல் இருக்கவும் இலங்கைத் தமிழர்களின் அரசியல் மற்றும் உளவியல் உணர்வுகளின்மீது இந்திய அரசாங்கம் கேள்வி கேட்க முயலுமாயின் இந்தியாவில் தமிழ்ப் பிரிவினைவாதம் மீண்டும் தலைதூக்கும் என்று உணரப்பட்டது. எனவே இலங்கையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் பற்றி இந்தியா அக்கறையற்றிருக்க முடியாததினால் திருமதி காந்தியின் இரண்டாவது பதவிக்காலத்தின்போது இந்திய அரசாங்கம் இலங்கைத் தமிழர்களை ஆதரிக்கும் தெரிவை மேற்கொண்டது (அசோக் மேத்தாவுடன் நேர்காணல், 21 ஏப்பிரல் 2001).

இலங்கையின் பிளவுக்கு வழிவகுக்கக்கூடிய தனித்தமிழ் அரசுக்கான ஈழக் கோரிக்கையை ஆதரித்தல் இந்திராவின் நோக்கமாக இருக்கவில்லை. இந்தியா அதனை ஆதரித்திருக்குமாயின், பஞ்சாப்பிலும்; காஷ்மீரிலும் அது எதிர்நோக்கிய பிரிவினைச் சவால்கள், மத்திய அரசில் (central Government) அதன் ஒட்டுமொத்த ஐக்கியத்தையும் பிரதேச





ஒருமைப்பாட்டையும் பேணுதல் இந்தியாவுக்குக் கடினமானதாயிருந்திருக்கும் (சோ ராமசுவாமியுடனான நேர்காணல், 15 ஏப்பிரல் 2001). எனவே ஓர் ஐக்கிய இலங்கையென்ற வரையறையினுள் ஜெயவர்தன அரசாங்கம் தமிழர் அபிலாஷைகளுக்குச் செவிசாய்க்கும் வகையில் அதற்குப் போதிய அழுத்தம் கொடுக்கின்ற அளவுக்கு மட்டுமே இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவளிப்பது அவரின் நோக்கமாயிருந்தது. 1980க்கும் 1983க்கும் இடையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கு மிடையில் நடைபெற்ற அரசியல் பரிமாற்றங்கள் இம்மதிப்பீட்டுக்கு ஆதாரமாயுள்ளன.

தமிழருக்கெதிரான 1983ஆம் ஆண்டு கலவரங்களும் அதனைத் தொடர்ந்து பெருந்தொகையான அகதிகள் இந்தியாவுக்கு வருவதற்குக் காரணமாயிருந்த இலங்கை அரசாங்கத்தின் கொடூரமான வன்செயல்களும் இலங்கை மீதான இந்தியாவின் கொள்கைகளை மாற்றின (சந்திரஹாசனுடனான நேர்காணல், 13 ஏப்பில் 2001). எனவே இலங்கைத் தமிழர்களுக்கெதிராக இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட உறுதியான இராணுவ நடவடிக்கைகளுக்குப் பதில் நடவடிக்கையாக மட்டுமன்றி அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இஸ்ரேல், பாகிஸ்தான் ஆகியவற்றுடன் ஜெயவர்தனவின் திட்டவட்டமான, விரிவுபடுத்திய இராணுவ மற்றும் உளவுத்துறை ஒத்துழைப்புக்கான ஒரு எதிர்நடவடிக்கையாகவும் தமிழர் போர்முனைப்புக்குத் தமிழ் நாட்டிலிருந்தும் இந்திய மத்திய அரசாங்கத்திடமிருந்தும் ஆதரவு கிடைத்தது (கல்கத்துடன் நேர்காணல், 21 ஏப்பிரல் 2001).

## இந்தியாவின் இரு தடக் கொள்கை (Two Track Policy)

1983இல் கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் தமிழருக்கெதிரான கலவரங்கள் வெடித்தபோது அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி பதிலளிக்க நிர்ப்பந்திக்கப்பட்டார். அவரின் பதில் நடவடிக்கைகள் வழக்கமானதும், வழக்கத்திற்கு மாறானதுமான இரு வடிவங்களாய் இருந்தன. முதலாவதாக, அயல்நாடொன்று குழப்பங்களால் பாதிக்கப்பட்டுள்ளபோது எந்தவொரு நாட்டின் தலைவரும் செய்யவேண்டுமென எதிர்பார்க்கப்படுவதை அவர் செய்தார். அதாவது அவர் இலங்கை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசாங்கத்துக்கும் பிரதான தமிழ் அரசியற் கட்சியான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கும் (TULF) இடையில் மத்தியஸ்தராகச் செயற்படுவதற்குத் தமது நல்லெண்ணத் தூதர்களை அனுப்பினார். இரண்டாவதாக தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கு ஆயுதங்கொடுத்துப் பயிற்சி யளித்ததன் மூலம் இலங்கையின் இன முரண்பாட்டில் ஆழமாக ஈடுபடுகின்ற முதலாவது அடியையும் இந்திரா எடுத்துவைத்தார்.[1]

நட்புறவற்ற அரசாங்கங்களின் ஸ்திரத்தன்மையைக் குலைத்து அவற்றைக் கவிழ்ப்பதன்மூலம் அதிக நட்புறவான ஆட்சிகளை அவற்றினிடத்தில் பதிலீடு செய்யும் நோக்குடன் கிளர்ச்சிக் குழுக்களுக்கு நிதி வழங்கிப் பயிற்சியளித்துள்ள அரசாங்கங்களை நாமறிவோம். நிக்கரகுவாவில் அமெரிக்க அனுசரணையுடனான கொன்றா கிளர்ச்சி இவ்வகைக்கு ஒரு சிறந்த உதாரணம். ஆனால் வரலாற்றுரீதியாக நல்ல உறவுகளைப் பேணிவந்துள்ளதும் கடந்த காலத்தில் அதன் ஸ்திரத்தன்மையைக் குலைப்பதற்கான அக்கறை எதனை யும் கொண்டிராத ஓர் அயல்நாட்டுக்கெதிராக மிக அரிதாகவே ஒரு நாடு போர்முனைப்பைத் தூண்டியும் போராளிகளுக்குப் பயிற்சியும் அளித்துள்ளது. இலங்கை அரசாங்கத்தின் கண்ணோட்டத்தில் இந்தியா 'பயங்கர வாதத்துக்கு' அனுசரணையளிப்பதாயிருந்தது.[2] எனவே இந்தியாவின் நல்லெண்ண அணுகுமுறைகளை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறுவழியில்லையெனக் கொழும்பு உணர்ந்ததினால் விருப்பின்றி அவற்றை ஏற்றுக்கொண்டது. இந்தியக் கொள்கை இன முரண்பாட்டைத் தீர்ப்பதைவிட இலங்கையின் உறுதிப்பாட்டைக் குலைக்கின்ற நோக்கில் இயக்கப்படுவதாக இலங்கை கருதியது. எனவே தவிர்க்க முடியாதவாறு இந்தியாவால் முன்வைக்கப்பட்ட யோச னைகள் காமாலைக் கண்கொண்டு நோக்கப்பட்டன.

ஐந்து பிரதான போராளிக் குழுக்களும் இந்திய ஆதர வின்கீழ் தழைத்துச் செழித்ததுடன் தனி நாடொன்றைப் பறித்தெடுப்பதில் மேலும் கூடிய ஆழமான ஈடுபாட்டை யும் காட்டின. இருப்பினும் நாம் ஏற்கனவே கண்டபடி ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற கருத்திற்கமையவே இந்தியா அத்தகைய ஆதரவுகளை வழங்கியது.





சுதந்திரத்துக்குக் குறைந்ததான ஓர் அரசியல் தீர்வுத் திட்டத்தை ஏற்கவேண்டிய நேரம் வந்தபோது அவை பின் வாங்கின. இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் முக்கிய மான தருணம் வருகின்றபோது ஒரு தீர்விற்கு உடன்படும் படி போராளிக்குழுக்களை நிர்ப்பத்திக்கக்கூடிய போதிய கட்டுப்பாடு அவர்களுக்கிருப்பதாக எண்ணினர்.[3] அது ஏறக்குறைய சரியாகவே இருந்தது. போராளிக் குழுக்களில் நான்கு இந்திய அழுத்தத்துக்கு அடிபணிந்து, தனி நாட்டுக் கான போராட்டத்தை ஒதுக்கித்தள்ளிவிட்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை மனக்கசப்புடன் ஏற்றுக்கொண் டனர்.[4] இதற்கு இராணுவ ரீதியாக மிகவும் பலம்வாய்ந்த தாயிருந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (LTTE) விதிவிலக் கானதாயிருந்தனர். தொடக்கத்தில் அவர்கள் உடன்பட்ட போதிலும், பின்னர் இந்திய-இலங்கை ஒப்பந்த ஏற்பாடு களிலிருந்து வெளியேறியதுடன் இந்தியாவின் கொள்கை முடிவுகளுக்கும் அதனை அடைவதற்குப் பயன்படுத்திய நடைமுறைகளுக்கும் இடையிலான அடிப்படை முரண் பாட்டையும் விளக்கிக்காட்டினர்.

இந்தியா ஏன் இக்குறிப்பிட்ட நடவடிக்கையை எடுத்தது? தந்திரோபாயத்தின் பிரகாரம் போராளிகளைப் பயன்படுத்தி ஜனாதிபதி ஜெயவர்தன மீது செல்வாக்கைப் பிரயோகிப்பதன் மூலம் தமிழருடன் காத்திரமான முறை யில் பேச்சுவார்த்தை நடத்தினாலன்றி அவரின் நாடு பிளவுபடுகின்ற ஆபத்துள்ளதென்று அவருக்கு உறைக்கச் செய்வது அதன் இலக்காயிருந்தது. தமிழர்களிடமிருந்து ஜெயவர்தனவுக்கு உண்மையான ஓர் அச்சுறுத்தல் வந்தா லன்றி அவர் தமிழரின் கூற்றுக்குச் செவிசாய்க்கமாட்டா ரென்ற உறுதியான எண்ணம் புதுடெல்லிக்கு இருந்தது. 1981இல் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல்களை இலங்கை ஜனாதிபதி கையாண்ட விதம், அதிகாரப்பகிர்வு பற்றிய உடன்படிக்கைகளைப் பேசித் தீர்ப்பதற்கான முந்தய முயற்சிகளின் வரலாறு ஆகியவற்றை நன்குணர்ந்த புது டெல்லியிலுள்ள கொள்கை வகுப்பாளர்கள் தமிழர்கள் தங்கள் கோரிக்கையில் வெற்றிபெற அவர்கள் ஒரு பலமான நிலையிலிருந்து பேச்சுவார்த்தையை நடத்தவேண்டும் என்று உறுதியாக நம்பினர். போராளிகளை ஆயுதபாணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களாக்குதல் அத்தகைய பலத்தை வழங்கும் ஒரு வழியாக இருந்தது.

மேலும், ஏதாவது ஒரு வழியில் தமிழர் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அவர்களுக்கு உதவுவது சரியானதெனவும் உணரப்பட்டது. குழுக்களுக்குப் பயிற்சியளித்தலும் தமிழ் நாட்டில் முகாம்களை வைத்திருப்பதற்கு அவற்றுக்கு இடமளித்தலும், சிங்கள அரசாங்கத்தால் தமிழர்களுக்கெதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைக்கு நியாயமானதும் மனிதாபிமானதுமான ஒரு பதில் நடவடிக்கையாகக் கருதப்பட்டது. சில குழுக்கள் தமிழ் நாட்டில் ஏற்கெனவே தமது கால்களை ஊன்றியிருந்ததனால்[5] போராளிகளுக்கு ஆயுதங் கொடுத்துப் பயிற்சியளிப்பதற்கான முடிவு ஏறக்குறைய இயல்பானதாகத் தோன்றும்படி செய்யப்பட்டது. எடுத்துக்காட்டாக ஈழப் புரட்சிகர அமைப்பாளர்களும் (EROS) எல்ரீரீஈயும் 1970களின் தொடக்கத்திலிருந்தே தமிழ்நாட்டில் தங்கியிருந்தனர் (இரத்னசபாபதி, 1986: 34-35). இலங்கைத் தமிழ்ப் போராளிகள் தமிழ் நாட்டிலுள்ள தமிழ்ச் சமுதாயத்துடனும் தமிழ் அரசியல் இயக்கங்களுடனும் மிக நெருக்கமான தொடர்புகளை விருத்தி செய்திருந்தனர்.[6] போராளிகள் நடமாடுவதற்கும் செயற்படுவதற்கும் கணிசமான அளவு சுதந்திரத்தை அனுபவித்ததனால் அவர்கள் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கிற்கும் தமிழ் நாட்டுக்கும் இடையில் எளிதாகப் போய்வந்தனர். தமிழ்நாடு, குறிப்பாக 1983இன் பின்னர், தமிழ்ப் போராளிகளின் இராணுவ நடவடிக்கைகளுக்கு இன்றியமையாததாயிருந்த பின்புலத் தளங்களைத் தாபிப்பதற்கான மிக உகந்த சூழலை அவர்களுக்கு வழங்கியது.

திருமதி காந்தியும் அவரின் ஆலோசகர்களும் போராளிகளுக்கு ஆயுதம் வழங்குவதென்ற முடிவை எடுத்தபோது அவர்களின் மனோநிலை எப்படிப்பட்டதாயிருந்தது என்பது இன்றும் மர்மமாயுள்ளது. எனினும் இலங்கையைப் பிளவுபடுத்தித் தனித் தமிழ் அரசொன்றை உருவாக்குதல் இந்தியாவின் திட்டமாக இருக்கவில்லையெனத் தோன்றுகிறது (டிக்ஸிற், 1999: 28-29). இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்த வேளையில், 1983இலும்





1984இன் தொடக்கத்திலும் தமிழர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தொடங்கப்பட்ட பயிற்சியானது இன்று மிகவும் மோசமான அழிவுகளுக்கு இட்டுச் சென்றுள்ளது வெளிப்படையாகத் தெரிகிறது. போராளிக் குழுக்களின் இராணுவ ஆற்றல்கள் சீராக அதிகரித்ததுடன் தமிழரின் அரசியல் தலைமையானது தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (கூட்டணி)யின் கைகளிலிருந்து போராளிகளின் கைகளுக்கு மிகவிரைவாக மாறியது. போராளிக் குழுக்களுக்கிடையில் நிகழ்ந்த உட்பகை சார்ந்த போராட்டங்களின் விளைவாக எல்ரீரீஈ ஏனையவற்றை விஞ்சி மேம்பட்ட ஒரு இராணுவச் சக்தியாகத் தோற்றம் பெற்றது. இவ்வளர்ச்சி இந்தியாவின் மத்தியஸ்த முயற்சிகளை துரதிருஷ்டவசமாகப் பின்னுக்குத் தள்ளியது.

இந்தியக் கொள்கைகளின் முரண்பாடுகளுக்கு குறிப்பாக ராஜீவ் காந்தி மீது பழிசுமத்தலாம். எல்ரீரீஈ முழுமையான யுத்தத்திற்குத் திரும்பியவுடன் அதனை எதிர்த்துத் தாக்கும்படி இந்திய அமைதிப்படைக்கு (IPKF) அவர் அறிவுறுத்தியபோதிலும், அவர்களுக்கெதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு உணர்வு ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் சிலவேளைகளில் அவரிடம் தயக்கம் காணப்பட்டது. அவருக்குத் தமிழர்களின் நியாயமான உரிமைகளிலும் அபிலாசைகளிலும் உளப்பூர்வமான அனுதாபம் இருந்தது. எல்ரீரீஈக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளில் இந்திய அமைதிப்படை ஈடுபட்டிருந்த வேளையிலும் எல்ரீரீஈயுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கு உளவுத் துறைகளின் பிரதிநிதிகளை அவர் அனுமதித்தமைக்கு இந்த அனுதாபம் ஒருவேளை காரணமாயிருக்கலாம் (கல்கட்டுடனான நேர்காணல், 21 ஏப்பிரல் 2001).

அதன் பின்விளைவாக எல்ரீரீஈயும் இலங்கை அரசாங்கமும் இந்த இருதடக் கொள்கையையும் அதன் முரண்பாடுகளையும் தமக்கு அனுகூலமான முறையில் பயன்படுத்தியதனால் இந்திய அமைதிப்படை நடவடிக்கைகளின் செயல்திறன் குறைக்கப்பட்டது. இலங்கை அரசாங்கத்தினதும் எல்ரீரீஈயினதும் சூழ்ச்சிகரமான செயல் திட்டங்களும் தவறான எண்ணங்களும் இந்திய-இலங்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒப்பந்தத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கான வாய்ப்புக்களை எதிர்த்திசையில் திருப்பிவிட்டன. ஜெய வர்தனவின் நோக்கம் இந்தியப் பகைமையை மட்டுப்படுத்தக் கூடியதாகச் சமாதானத் தீர்வுக்கான ஈடுபாடென்ற ஒரு போலித் தோற்றத்தைக் காட்டுவதாயிருந்தது. சிங்களப் பொதுமக்களின் அபிப்பிராயத்திலிருந்து தமது கட்சியை அந்நியப்படுத்த அவர் விரும்பவில்லை.

உடன்படிக்கையை 'எம்ஜிஆர்' ஆதரித்தவுடன் (அவர் அவ்வாறு செய்தார்) இலங்கையில் தமது கொள்கைகளைச் செயற்படுத்துவதற்குத் தமிழ் நாட்டின் முழு ஒத்துழைப்புக் கிடைக்குமென ராஜீவ் காந்தி எதிர்பார்த்தார். ஆனால் அது தவறானதென நிரூபிக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்கம் (வ.கி.மா.அ.) தாபிக்கப்படுதலை உறுதிப்படுத்துவதற்கான நேரடிப் பொறுப்பை ஏற்பதற்கு எல்ரீரீஈ மறுத்தமைக்கும் இடைக் கால வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்கத்தை உருவாக்கு வதில் அவர்களின் தொடர்ச்சியான தாமதப்படுத்தும் உத்தி களும் தமிழ் நாட்டின் ஆதரவு பற்றிய அவர்களின் திட நம்பிக்கையும் காரணமாயிருந்திருக்கக்கூடும். இலங்கைத் தமிழர்கள் மீது இந்தியாவின் ஆழமான அனுதாபத்தின் காரணமாக இந்திய அமைதிப்படையின் இராணுவ நட வடிக்கைகள் தடுக்கப்படுமெனவும் கட்டுக்குள் கொண்டு வரப்படும் எனவும் அவர்கள் அறிந்திருந்தனர் (அசோக் மேத்தாவுடனான நேர்காணல், 21 ஏப்பிரல் 2001).

இவ்வளவு நிர்ப்பந்தங்களின் மத்தியிலும் இந்திய அமைதிப்படை இலங்கையில் அதன் பொறுப்புக்களைக் கட்டுப்பாட்டுடனும் அர்ப்பணிப்புடனும் செயல்நோக்கத் துடனும் நிறைவேற்றியது. அவர்கள் இத்தீவின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஒழுங்கையும் உறுதிப் பாட்டையும் மீண்டும் நிலைநாட்டினர். தமிழ்ப் பிரதேசங் களில் தேர்தல்கள் நடத்தப்படுதலையும் வடக்கு-கிழக்கு மாகாண அரசு உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்படுதலையும் இயலச்செய்த பிரதான காரணகர்த்தாக்கள் அவர்கள் தான் (அசோக் மேத்தாவுடனான நேர்காணல், 21 ஏப்பிரல் 2001). இந்திய அமைதிப் படையை மீளப் பெறுவதற்கான வீ.பீ.சிங் அரசாங்கத்தின் தீர்மானம்தான் நியாயமான





இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்தத் தடையாக இருந்தது என்று எல்ரீரீஈ சாராத அமைப்புகள் மதிப்பிடுகின்றன. இந்த சூழ்நிலை, இலங்கையில் இன மோதலுக்குப் புத்துயிரளித்ததுடன் வன்முறையையும் உறுதியின்மையையும் நீடிக்கச்செய்தது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் காணப்பட்டவற்றுடன் ஒப்பிடுகையில், இன்று வரை பிரேமதாச அரசாங்கமோ அல்லது சந்திரிகா அர சாங்கமோ இலங்கைத் தமிழர்களுக்கு அதைவிடச் சிறந்த அதிகாரப் பகிர்வுப் பொதியை அல்லது தீர்வை வழங்க முடியாமலிருக்கிறது. சிவில் யுத்தம் தணியாது தொடர் கின்றது.

## 1983க்குப் பிந்திய காட்சிப்புலம்

1983 தமிழர் விரோதக் கலவரங்கள் நிலைமைகளை மேலும் மோசமாக்கின. இக்கலவரங்களைத் தொடர்ந்து, இலங்கையில் இருந்து மிக அதிகளவிலான தமிழ் மக்கள் அகதிகளாக இந்தியாவைச் சென்றடைந்தமையும் கடல் கடந்த தமிழக மக்களின் உணர்ச்சி பூர்வமான ஈடுபாடும் தவிர்க்கமுடியாத வகையில் இந்தியாவை இப்பிரச்சினை யில் ஈடுபடவைத்தன. இந்திரா காந்தி இந்நிலைமைக்குப் பதில் நடவடிக்கை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள் ளாகி இருந்தார். உள்நாட்டு அரசியல் மற்றும் ஒட்டு மொத்தத் தேசிய பாதுகாப்பென்ற காரணகாரியங்கள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதன் விளைவாகத் திருமதி காந்தி வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவையும் பின்னர் அவரின் கொள்கைத் திட்டமிடல் தலைவர் ஜீ. பார்த்த சாரதியையும் விசேட தூதுவர்களாக ஜெயவர்தனவிடம் அனுப்பிவைத்தார். தள எதார்த்தங்களைப் பார்வையிட்டு பிராந்திய அரசியல் விவாதங்களின் அடிப்படையில் அவரது நடவடிக்கைகளை மறுபரிசீலனை செய்யும்படி ஜெயவர்தனவுக்கு அறிவுறுத்தி அவரை இணங்கவைப்பதே அவர்களது பயணத்தின் நோக்கமாகும்.

இலங்கையில் ஒரு பிளவை இந்தியா விரும்பவில்லை என்பதும் அதேவேளையில் இந்தியாவின் யுத்த தந்திரோ பாய நலன்களுக்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகின்ற இலங்கையின் கொள்கைகளை அது ஏற்றுக்கொள்ளா தென்பதும் அவர்களின் செய்தியாயிருந்தது. இருதரப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதொரு சமசர உடன் பாட்டை எட்டுவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ் மக்களுக்குமிடையில் மத்தியஸ்தராகச் செயற்படுவதற்கு இந்தியா பெரிதும் தயாராயிருந்தது. மேலும் பாதுகாப்பு அக்கறைகளின் நிமித்தம் அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், சீனா, இஸ்ரேல் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் கொழும்பின் நெருக்கம் அதிகரித்துவருவதையிட்டும் டெல்லியின் அதிருப்தி தெளிவாகப் புலப்பட்டது. பேரா சிரியர் எஸ்.டி.முனி விளக்குகின்றவாறு, அந்நாடுகளிலிருந்து ஆதரவைத் திரட்டுவதற்குச் சனாதிபதி ஜெயவர்தனவின் முயற்சிகள் -

இந்தியாவின் பாதுகாப்பு நலன்கள் என்று கருதக் கூடியவற்றிற்குத் தீங்குவிளைவிக்கின்ற சக்திகளின் தலை யீட்டை தந்திரோபாயமாக ஊக்குவிப்பதன்மூலம் பிராந் தியத்தில் இந்தியாவைத் தனிமைப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாக டெல்லியால் உணரப்பட்டது. திருமதி காந்தி 1983ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5ஆந் தேதியன்று ஜனாதிபதி ஜெயவர்தனவுடன் நடத்திய தொலைபேசி உரையாடலில் கூட இலங்கை வெளிநாட்டு ஆதரவைத் தேடுதலை மிக வும் கடுமையாகக் கண்டித்துள்ளார் (முனி, 1993: 52).

சிங்களக் கொள்கைகளைப் பேணிவளர்ப்பதற்காக, இந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்து கின்ற வகையில் அரசியல் மற்றும் பாதுகாப்புச் சமநிலை களைத் தாபிப்பதன்மூலம் சிறீலங்கா அரசாங்கம் நிலை மையை மேலும் சிக்கலாக்கியது. இவைகளுக்குச் செவி சாய்க்க வேண்டியது இந்தியாவிற்குத் தவிர்க்க முடியாதது மட்டுமல்ல, அதன் கண்ணோட்டத்தில் அது இன்றியமை யாததுமாகும் (சர்வேஸ்வரனுடனான நேர்காணல், 23 ஏப்பிரல் 2001).

## இனமுரண்பாட்டின் இராணுவ மயமாக்கம்

முந்திய அத்தியாயத்தில் ஆராயப்பட்டதும் 1981ஆம் ஆண்டு யூனில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களுக்குச் சற்றுபின்னரான காலப்பகுதியில், குறிப் பாக எல்ரீரீஈ, தமிழீழ மக்கள் விடுதலை இயக்கம் (புளொட்), தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஆகிய தமிழ்ப் போராளி அமைப்புக்கள் மேலும் வளர்ச்சியடைந்தன.





மேலும், இலண்டனை அதன் தாபகத் தலைவர்களின் தள மாகக் கொண்டிருந்த ஈரோஸ் பிளவுபட்டதைத் தொடர்ந்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈபீஆர்எல்எஃப்) உருவானது. இன முரண்பாட்டின் இராணுவமயமாக்கம் மற்றும் இந்திய அரசாங்கத்தின் மத்தியஸ்தத்திலான பேச்சுவார்த்தைகள் ஆகிய சமாந்தரச் செயல்முறைகளில் முக்கிய பங்கு வகிக்கவிருந்த மேற்படி எல்லா அமைப்புக் களும் 1970களின் பிற்பகுதியில் தமிழ்நாட்டில் தங்களது செல்வாக்குகளைத் தாபிப்பதில் வெற்றிகண்டன.

இப்'புகலிடமானது முக்கிய தமிழ்நாட்டு அரசியல் வாதிகளை உள்ளடக்கிய புதுடெல்லியின் நேரடிக் கண் காணிப்பின்கீழ் இருந்தது. எல்லாத் தெரிவுகளையும் திறந்தன வாக வைத்திருக்கும் நோக்குடன், இந்திய உளவுத்துறை, ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு (RAW) ஆகியவை பல்வேறு தமிழ்ப் போராளி அமைப்புக்களுடனும் தொடர்பு களைத் தொடர்ந்து பேணிவந்தது (சுவாமி 1994: 93-96).

இதற்கிடையில் தமிழ்ப் போராளி இயக்கங்களின் நடவடிக்கைகள் பிறந்த நாட்டில் பாதுகாப்புப் படைகள் மீதான தாக்குதல்களுக்கு மட்டும் கட்டுப்படுத்தப்படாமல் வங்கிக் கொள்ளைகளையும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிகளைச் சேர்ந்த தமிழ் அரசியல் வாதிகளின் படுகொலைகளையும் உள்ளடக்கின. போராளி களால் சகோதரப் படுகொலைகளும் 'சமூக விரோத சக்தி களுக்கு' மின்கம்ப மரணதண்டனை வழங்குவதும் அதிகரித்துவந்தன. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஆங்கில வாராந்தப் பத்திரிகையான 'சற்றடே றிவியூ' மிகவும் அச்சமூட்டுகின்ற ஆனால் பின்னர் தீர்க்கதரிசன மாக உணரப்பட்ட பின்வரும் வார்த்தைகளில் மேற்படி போக்குகளுக்கெதிராக எச்சரித்தது. 'ஒரு பாதாள உலக சக்தி, இலட்சியங்கள் ஏதுமற்ற ஒரு பாதாள உலக சக்தி உருவாகிவருகின்றதென்பதுதான் உண்மை. அதனைக் கட்டுப்படுத்தாதுவிட்டால் அது யாழ்ப்பாணத்தில் சிவில் சண்டை உருவாகும் ஒருநிலையைக்கூட ஏற்படுத்தும் என்ப துடன் முழுக் குடாநாட்டையும் பெரும் குழப்பத்தில் மூழ் கடிக்கவும் தயங்காது' (சற்றடே றிவியூ, 1 ஏப்பிரல் 1983).

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (கூட்டணி)க்கும் ஏனைய போராளிக் குழுக்களுக்குமிடையில் அதிகரித்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்த விரிசல் இக்காலப்பகுதியில் காணப்பட்ட மற்றுமொரு வளர்ச்சியாகும். போராளிக் குழுக்கள் 1983ஆம் ஆண்டு மேயில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதென்ற த.ஐ.வி.முன்னணியின் முடிவைப் பகிரங்கமாக எதிர்த்தன. மேலும் ஐக்கிய தேசியக் கட்சி (UNP) வேட்பாளர்கள் அச்சுறுத்தப்பட்டதுடன் சிலர் படுகொலையும் செய்யப்பட்டனர். ஏப்பிரல் 29ஆந் தேதி யன்று ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்று வேட்பாளர்கள் எல்ரீரீஈயால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.[7] உள்ளூராட்சித் தேர்தல்களைப் புறக்கணிக்குமாறு அறைகூவல் விடுக்கப் பட்டது. தொகுதி மக்களில் 80 சதவீதத்துக்கும் மேலான வர்கள் வாக்களித்த, ஓராண்டுக்கு முன்னர் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல்களைப் போலன்றி இம்முறை 80 சதவீதத்துக்கும் மேலான மக்கள் வாக்களிக் காது வீட்டில் இருந்துவிடத் தீர்மானித்தனர் (சர்வேஸ்வர னுடனான நேர்காணல், 23 ஏப்பிரல் 2001).

இதற்கெதிரான அரசாங்கத்தின் பதில் நடவடிக்கை இருஎண்ணங்கொண்டதாக இருந்தது. ஒருபுறத்தில் புளொட்டுக்கும் எல்ரீரீஈக்கும் இடையிலான உட்பகை மோதலையிட்டும் போராளி இயக்கங்களால் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு ஏற்படுத்தப்படும் அவ மானங்களைப் பார்த்தும் கொழும்பில் ஓரளவு எக்காளச் சிரிப்பு காணப்பட்டது. மறுபுறத்தில் போராளி இயக்கங் களுக்கிடையிலான பகைமை அவர்களையே பலிகொள்ளத் தொடங்கியது. இவ்வுயிர்ப்பலிகள் எண்ணிக்கையில் அதிக மாக இல்லாதபோதும் போராளிகள் பலியெடுக்கத் தொடங்கிவிட்டனர் என்று அரசாங்கம் கூறிவந்ததை நியாயப்படுத்த உதவியது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (Prevention of Terrorism Act) நிறைவேற்றப்பட்டு ஐந்தாண்டுகள் கடந்துவிட்ட போதிலும் 'பயங்கரவாதம்' தணிவதற்கான அறிகுறியெது வும் தென்படவில்லை. மாறாக எதிர்ப்புகள், ஆர்ப்பாட் டங்கள், ஹர்த்தால்கள் ஆகிய வடிவங்களில் தமிழ்ப் பிரதேசங்களில் சட்டபூர்வமான பிரிவினைக்கான பகிரங்க மான அறிகுறிகள் அதிகரித்த அளவில் வெளிப்படத் தொடங்கின. அரசு அதன் கையாலாகாத்தனத்தை பொது





மக்களுக்கெதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறை யின் மூலம் ஈடுசெய்தது. இராணுவப்படையின் பிரதம அதிகாரி மேஜர் ஜெனரல் திஸ்ஸ வீரதுங்க, 1982இன் நடுப்பகுதியில் குழப்பம் நிலவிய வடக்கு-கிழக்கில் குறிப் பிடத்தக்க காலம் சுற்றித்திரிந்த கல்விமானும் பத்திரிகை எழுத்தாளருமான டேவிட் செல்போர்னுக்கு அளித்த பேட்டியின் பின்வரும் பகுதிகள் பாதுகாப்புப் படைகள் மத்தியில் அதிகரித்துவந்த விரக்தியை வெளிப்படுத்து கின்றன:

"நிலைமை எனது கட்டுப்பாட்டின்கீழ் இல்லை. யாழ்ப் பாணத்தில் ஒரு தீப்பெட்டியையோ அல்லது ஒரு பற்பசை யையோ வாங்குவதற்குக்கூட ஒரு டிரக் நிரம்பிய படை யினர் செல்ல வேண்டியுள்ளது. போராளிகள் இடத்தை யும் நேரத்தையும் தெரிவுசெய்துதான் வருகின்றனர். எம்மால் எதிர்ச்செயலாற்ற மட்டும்தான் முடியும்" (செல்போர்ன் 1982: 42).

### சர்வகட்சி மாநாடும் (1984) 'பிற்சேர்க்கை C'யும்

இலங்கைத் தமிழ் அகதிகள் பெருந்திரளாகத் தமிழ் நாட்டுக்கு வெளியேற வேண்டியமைக்கு வழிவகுத்த 1983 யூலையின் தமிழருக்கெதிரான இனப்படுகொலையைத் தொடர்ந்து எல்லைகடந்த இன உறவுகளின் உணர்ச்சி பூர்வமான வெளிப்பாடு (அதாவது 'தமிழ்நாட்டுக் காரணி') ஏற்கெனவே அங்கு செயற்படத் தொடங்கிவிட்டது. அதனைத் தொடர்ந்து இராசதந்திர நடவடிக்கைகள் விரை வாக மேற்கொள்ளப்பட்டன. ஜனாதிபதி ஜெயவர்தனவுடன் கலந்துரையாடுவதற்கு ஜீ. பார்த்தசாரதி 1983ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25ஆம் தேதியன்று கொழும்பு வந்தார். இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (கூட்டணி)க்கும் இடையில் அரசியல் தீர்வுக்கான ஓர் உரையாடலைத் தொடக்கிவைப்பதற்கும் அதில் மத்தியஸ் தராகச் செயற்படுவதற்குமான ஆணை அவருக்கு வழங்கப் பட்டிருந்தது (இரத்தின சபாபதியுடனான நேர் காணல், 6 யூன் 2000).

ஜீ. பார்த்தசாரதியின் வருகையைத் தொடர்ந்து சர்வ கட்சி மாநாடு (ச.க.மா.) 1984ஆம் ஆண்டு சனவரி 10ஆம் தேதியன்று கூடியது. ஜெயவர்தனவால் கூட்டப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சர்வகட்சி மாநாட்டில் ஜெயவர்தன, இலங்கை அரசாங்க அதிகாரிகள், பல்வேறு அரசியற் கட்சிகளைச் சேர்ந்த ஏனைய சிங்கள, தமிழ்த் தலைவர்கள் ஆகியோரின் கலந்தாலோசனையுடன் வடிவமைக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு யோசனை ஒன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. பார்த்தசாரதி தமிழ் அரசியல்-ஆயுதப் போராட்ட இயக்கங்களின் தலைவர்களினதும் பிரதிநிதிகளினதும் கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் உறுதியாக அறியும்பொருட்டு அவர்களுடனும் கலந்தாலோசனை களை நடத்தினார். அதனைத் தொடர்ந்து பரந்ததொரு சமரச இணக்கச் சூத்திரத்தைக் கொண்டதான ஆவண மொன்று தயாரிக்கப்பட்டது. அதேஆண்டு பெப்ருவரியில் சர்வகட்சி மாநாடு திரும்பவும் கூட்டப்பட்டபோது பேச்சு வார்த்தைகளுக்கான அடிப்படையாக அந்த ஆவணம் அதன் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டது. நிகழ்ச்சிநிரலின் பிரதான விடயமாக 'பார்த்தசாரதியின் பரிந்துரைகள்' சமர்ப்பிக்கப்பட்டு, அது 'பிற்சேர்க்கை C' எனக் குறிக்கப் பட்டது (பிற்சேர்க்கை 14).

### 'பிற்சேர்க்கை C'யின் சில முக்கிய அம்சங்களாவன:

1. முன்னரே உள்ளதான மாவட்ட அபிவிருத்திச் சபைகள் (மா.அ. சபைகள்) ஒரு பிராந்திய சபையாக அல்லது ஒன்றுக்குக் கூடிய பிராந்தியச் சபைகளாக இணைவதற்கு அனுமதிக்கப்பட்டன. முறையே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு ஒரு விசேட சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதன்மூலம் ஒவ்வொரு பிராந்தியத்தினுள்ளும் இருக்கின்ற மாவட்ட அபிவிருத்தி சபைகள் அம்மாவட்டங் களில் மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பென்ற செயல் முறைக்குட்படாமல் பிராந்திய சபைகளாக ஒருங் கிணைக்கப்படும்.
2. அவ்வாறு உருவாக்கப்படும் பிராந்திய சபைகள் அவற்றுக்குப் பகிரப்பட்ட விடயங்கள் தொடர் பாக விவாதங்களை நடத்தி சட்டமியற்றும் அதி காரங்களைக் கொண்டிருக்கும். பகிரப்படும் விடயங் கள் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்மானிக்கப்படும்.





3. பிராந்திய அரசாங்க சேவையின் துணையுடன் முதலமைச்சரும் அவரின் அமைச்சரவையும் அதன் அங்கமாக அமைவர்.

ஆனால் பிரதம மந்திரி ஆர். பிரேமதாச 'பிற்சேர்க்கை C'யின் வெளிப்படையான தன்மை பற்றி உண்மையில் ஆர்வம்காட்டவில்லை. பௌத்த சங்கத்தைப் பிரதிநிதித் துவப்படுத்திய சங்கைக்குரிய மடிஹே பஞ்ஞாசிஹ மகா நாயக்க தேரோ, சஙகைக்குரிய கலாநிதி வல்பொலராகுல ஆகியோர் அதை அலட்சியப்படுத்தும் வகையில் சர்வ கட்சி மாநாட்டு நிகழ்ச்சி நிரலினுள் பொதுவான விடயங் களைக் கொண்டுவந்து 'பிற்சேர்க்கை C'இலிருந்தும் இனப்பிரச்சினையிலிருந்தும் கவனத்தைத் திசை திருப்பிய திலிருந்து இது தெளிவாகப் புலப்பட்டது.

சர்வகட்சி மாநாட்டின் பிரதிநிதித்துவமானது தேசிய அபிப்பிராயம் மற்றும் நலன்கள் தொடர்பில் அனைத்துப் பிரிவினரையும் பிரதிபலிப்பதாகத் தோன்றியபோதிலும், அதில் சந்தேகத்துக்கிடமான ஒரு செயல் நோக்கமும் இருந்ததென்பதை இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும். பேராசிரியர் விஸ்வ வர்ணபால விளக்குவதாவது:

> சூழ்ச்சித்திறம்வாய்ந்த அரசியல்வாதியான ஜே.ஆர்.ஜெய வர்தன உடனடியாக மாநாட்டினுள் சமய மற்றும் கலாச் சார அமைப்புக்களின் நானாவிதக் கூட்டமொன்றை ஒப்புக்காகச் சேர்த்துக் கொண்டார். அவற்றில் சில பலம் மிக்கவை, மற்றவை முறையான உறுப்பினர்கள் இல்லாத முற்றிலும் அறியப்படாத சங்கங்கள். இத்தந்திரோபாயம் தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கு எதிராகச் சிங்களப் பிரதி நிதித்துவத்தைச் சமநிலைப் படுத்துவதற்காகக் கைக்கொள் ளப்பட்டது. இனவாத நோக்கத்தினால் ஒளிவுமறைவாக வழிப்படுத்தப்பட்ட இந்நடவடிக்கையின்மூலம் சிங்களத் தீவிரக் கருத்து மாநாட்டிற்குள் செல்வாக்குச் செலுத்தக் கூடுமாயிருந்ததனால் அதுவொரு ஏமாற்று வித்தை யாகியது (வர்ணபால,1994:108).

ஜீ. பார்த்தசாரதி ஒரு 'பிராமணத் தமிழராக'க் காணப்பட்டதனால் அவர் சந்தேகத்துக்கு உரியவரென்று கொழும்பில் கருத்து நிலவியது. ஆனால் இதற்கு மாறாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உண்மையில் பார்த்தசாரதி நியாயமான நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் ஐக்கி யத்தை மீளக்கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

'பேச்சுவார்த்தை நடைபெறுகின்ற அதேவேளையில் அதற்குச் சமாந்தரமாகத் தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுத பலமளிப்பதன் ஊடாக அழுத்தம் கொடுக்கின்ற இந்தியா வின் இரட்டைத் தட உபாயத்தின்' ஒரு பகுதியாகத் தமிழ்ப் போராளி இயக்கங்களின் எதிர்க்கும் ஆற்றலைத் தளராது தொடரச் செய்யும்படி இந்தியாவின் வெளிநாட்டுப் புல னாய்வுச் சேவையான 'ரோ'வுக்கு (RAW) ஆணை வழங்கப் பட்டது (முனி, 1993: 75).

மறுபுறத்தில் தமிழ் அரசியற் சமூகம் 'பிற்சேர்க்கை C'இல் ஓர் இடைவெளியை உணர்ந்தது. 'பிற்சேர்க்கை C' அதிகாரப்பகிர்வுக்கான விரிவான ஒரு சட்ட ஏற்பாட்டை வழங்குகின்ற அதேவேளையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தனியொரு நிருவாக ஆள்புலமாகக் காணப் படவேண்டுமென்ற 'தமிழரின் கருத்தொற்றுமையை' அது ஒப்புக்கொள்ளவில்லையெனத் தமிழ் அரசியற் சமூகம் கவலைப்பட்டது. மேலும், தமிழர் கோரிக்கைகளின் பிர தான தளமான 'தமிழ்மொழிப் பிராந்தியம்' என்ற கோட் பாடு அதில் தெளிவாகக் குறிப்பிடப்படாமல் இருந்தது. ஆயுதப் படைகளும் போலீசும் முறையே தேசிய மற்றும் பிராந்திய இன விகிதாச்சாரங்களைப் பிரதிபலிக்க வேண் டுமென்று குறிப்பிடப்பட்டிருந்ததைத் தவிர பிராந்தியத் தின் சட்ட ஒழுங்கிற்கான எந்த ஒரு ஏற்பாடும் அதில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் ஐக்கியத் தேசியக் கட்சி மாவட்டம் 'மட்டுமே' அனுமதிக்கக்கூடியதும் சாத்திய மானதுமான அதிகாரப்பகிர்வு அலகென்ற அதன் நிலைப் பாட்டிலும் மேலும் மாவட்ட அபிவிருத்திச் சபைதான் (DDC) அதிகாரப் பகிர்வுக்கான அடிப்படை என்பதிலும் விடாப்பிடியாயிருந்தது.

ஜனாதிபதி ஜெயவர்தனவின் யூலை பிரேரணைக்கும் மாவட்டத்திற்குப் பிரதிநிதித்துவம் வழங்கக்கூடிய இரண் டாவது அவையொன்றைத் தாபிப்பதற்கான முன்மொழி வுக்கும் சட்ட அந்தஸ்தை வழங்குகின்ற வரைவு 1984





செப்ரெம்பரில் சர்வகட்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட போது தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி அதனை நிராகரித்தது. காணி விடயம் தொடர்பில் கொழும்பின் நோக்கம் தெளிவாகத் தெரிந்தது. காணி இலங்கையிலுள்ள எல்லா மக்களுக்கும் சொந்தமானது. உண்மையில் சர்வ கட்சி மாநாடு நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் வடக்கிலும் கிழக்கிலும் தேசிய இனவிகிதாச்சார அடிப் படையில் 200,000 சிங்கள மற்றும் தமிழ் மக்களைக் குடிய மர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவரான அமிர்தலிங்கம் செப்ரெம்பர் 30ஆம் தேதி சர்வ கட்சி மாநாட்டின் கடைசிக் கூட்டத்தில் ஆற்றிய உரையில் வாதிட்டதாவது:

> பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன்றை எட்டும் பொருட்டு நியாயமான மாற்றுவழிகளைப் பரிசீலனை செய்வதற்கான விருப்பை நாம் காட்டியுள்ள அதேவேளையில் ஓர் இரா ணுவத் தீர்வைத் திணிப்பதற்கும் எமக்கு நிரந்தரத் தீங்கை ஏற்படுத்துகின்ற வகையில் எமது பிரதேச மக்களின் விகி தாச்சாரத்தை மாற்ற முயற்சிப்பதில் அரசாங்கத்தின் விட் டுக் கொடுக்காத நிலைப்பாடும் இம்மாநாட்டின் நடவடிக் கைகள் ஒரு பயனற்ற முயற்சியென எமக்கு உணர்த்துகின் றது (த.ஐ.வி.மு.1998: 11).

எது எவ்வாறாயினும் சர்வ கட்சி மகாநாடு தோல்வி யடையவேண்டுமென ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந் தது. ஏனெனில் ஜெயவர்தனவே பௌத்த குருமாரையும் சிங்கள எதிர்க்கட்சிகளையும் கருவியாகப் பயன்படுத்தி, தேசிய கருத்தொற்றுமை இல்லாததனால் 'பிற்சேர்க்கை C'யை அவரால் செயற்படுத்த முடியவில்லையெனக் கூறி அப்பிரேரணைகளை, ('பிற்சேர்க்கை C') மூழ்கடித்தார். இந்தக் கட்டத்தில்தான் திருமதி காந்தி அவர்கள் அவல மான முறையில் காட்சியிலிருந்து நீக்கப்பட்டார்.

### 1985 முதல் ராஜீவ் காந்தியின்கீழ் மத்தியஸ்தம்

1984ஆம் ஆண்டு ஒக்ரோபரில் சீக்கிய மெய்ப் பாதுகாவலரால் இந்திரா காந்தி படுகொலை செய்யப் பட்டதன் பின்னர் புதிய பிரதமர் ராஜீவ் காந்தியின்கீழ் இரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் முன்னேற்றம் ஏற்படுமென இலங்கையில் புதிய நம்பிக்கை பிறந்தது.

1985ஆம் ஆண்டு மேயில் சிங்கள மன்னர்களின் பண்டைய இராசதானியும் புனித வெள்ளரச மரத்தின் தாயகமுமான அனுராதபுரத்தில் 150 பொதுமக்களைத் தமிழ்ப் போராளிகள் படுகொலை செய்தனர். இப் படுகொலையைத் தொடர்ந்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளை மீளத் தொடங்குமாறு ஜெயவர்தன மீது சிங்களவரின் அழுத்தம் அதிகரித்தது (தமிழ் ரைம்ஸ் 15 யூன் 1985). 1985ஆம் ஆண்டு யூனில் புதுடெல்லியில் ஜெயவர்தனவுக்கும் ராஜீவ் காந்திக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது தடைகள் தகர்க்கப்பட்டு இருதரப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் தொடர்வதற்கான கதவுகள் திறக்கப்பட்டன. முதல் தடவையாகப் பேச்சுவார்த்தைகளில் தமிழ்ப் போராளிக் குழுக்களைச் சேர்த்துக்கொள்வதற்கு ஜெயவர்தன உடன்பட்டார் (தமிழ் ரைம்ஸ் 15 யூன் 1985). முன்னர் உத்தியோகபூர்வப் பேச்சுக்களில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர் மட்டும்தான் சம்பந்தப்பட்டிருந்தனர். இது இந்தியாவுக்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் தெளிவான ஒரு முன்னேற்றத்தைக் குறித்த போதிலும் இவ்வுடன்பாடு சிங்களச் சக்திகளால் எதிர்க்கப்படுமென்பதில் சந்தேகமிருக்கவில்லை.

இலங்கையில் இந்தியாவின் ஈடுபாட்டின் மேலும் தீவிரமான அடுத்த கட்டம் 1984ஆம் ஆண்டு டிசெம்பரில் ராஜீவ் காந்தி பதவியேற்றவேளையில் சர்வகட்சி மாநாட்டின் தோல்வியிலிருந்து பிறந்தது. ராஜீவ் காந்தி முக்கியமான விடயங்களிலும் நுட்பமான கருத்து வேறுபாடுகளிலும் சில குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்து இந்தியக் கொள்கைகளின் தொடர்ச்சியைப் பேணினார். இந்திய மத்தியஸ்த முயற்சிகளின் அவசியத்தையும் பயன்களையும் உணர்ந்த ராஜீவ்காந்தி அவை வெற்றி பெறுவதற்குச் சிங்களவருக்கும் தமிழருக்குமிடையில் நடுநிலையான ஒரு நிலைப்பாட்டை தாம் ஏற்கவேண்டுமென்பதும் அதன் பொருட்டு இந்தியாவின் அணுகுமுறையில் தமிழர்களுக்கான ஆதரவுப்போக்கைக் குறைக்க வேண்டுமென்பதும் அவரின் மதிப்பீடாயிருந்தது (ஈரோஸ் செயலாளர் நாயகம் இரத்தின சபாபதியுடன் கலந்துரையாடல், திசெம்பர் 1990).





இலங்கையின் இனப்பிரச்சினை பற்றி 1985ஆம் ஆண்டு மார்ச்சுக்கும் 1986ஆம் ஆண்டு டிசெம்பருக்கும் இடையில் இடம்பெற்ற கூட்டங்களும், கலந்துரையாடல்களும், பேச்சுவார்த்தைகளும் ஒரு தனிவேறான தமிழ் அரசுக்கான (ஈழம்) அவர்களின் தீவிரமான கோரிக்கையிலிருந்து பின்வாங்குவதற்கும் வன்முறையையும் கெரில்லா இயக்கத்தையும் கைவிடுவதற்கும் இலங்கைத் தமிழர்களை இணங்கச் செய்வதற்கான இந்தியாவின் இடைவிடாத முயற்சிகளாயிருந்தன. அவர்களின் அபிலாசைகளில் கணிசமான அளவை நிறைவேற்றுகின்றதும் ஐக்கிய இலங்கையென்ற வரையறையினுள் அவர்களின் சொந்த விவகாரங்களை நிர்வகிப்பதற்கான அதிகாரப்பகிர்வை அவர்களுக்கு அளிக்கின்றதுமான ஒரு சமாதான உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி இந்தியா அவர்களுக்கு அழுத்தம் கொடுத்தது. அதே சமயம் இலங்கை அரசாங்கம் தமிழர் பிரச்சினைமீது இந்தியாவின் அணுகுமுறையினால் உருவாகியுள்ள அதன் அந்நியநாட்டின் மீதான வெறுப்பைக் கைவிடும்படியும் தமிழரின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு முறையில் அரசியல் முறைமையை மீளமைக்கும்படியும் வேண்டியது (மேற்கூறிய அதே).

## திம்பு சமாதானப் பேச்சுக்கள் – யூலை 1985

சர்வகட்சி மாநாடு முடிவற்ற ஒரு முடிவை நோக்கி இழுபட்டுக்கொண்டிருந்த அதேவேளையில் தமிழ்ப் போராளி இயக்கங்கள் தம்மைத் திடப்படுத்திக்கொள்ளத் தொடங்கின. 1984ஆம் ஆண்டு ஏப்பிரலில் மூன்று இயக்கங்கள் (அதாவது ஈபீஆர்எல்எஃப், ஈரோஸ் மற்றும் ரெலோ) ஓர் ஐக்கிய முன்னணியாக - ஈழத் தேசிய விடுதலை முன்னணியாக (Eelam National Liberation Front - ENLF) இணைந்தன. ஈஎன்எல்எஃப் சந்தேகத்திற்கிடமின்றி டெல்லியின் அருளாசிகளைத் பெற்றிருந்ததுடன் இந்திய உளவு ஏஜன்சியான 'ரோ'வின் ஆதரவையும் பெற்றிருந்தது. இவ்வியக்கங்களின் தலைவர்களுடனான தமிழ் நாட்டின் தி.மு.க. தலைவர் எம். கருணாநிதியின் சந்திப்புக்கு மாபெரும் பிரச்சாரம் வழங்கப்பட்டது. கருணாநிதி அத்தலைவர்களை ஆரத்தழுவி அவரின் முழு ஆதரவை அவர்களுக்கு வழங்கினார். அடுத்த ஆண்டான 1985ஆம் ஆண்டு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏப்பிரலில் ஈஎன்எல்எஃப் உடன் சேருவதென்ற முடிவை எல்ரீரீஈ எடுத்தது. தமிழ்ப் போராளிக் குழுக்கள் அளப்பரிய சக்திவாய்ந்த 'அரசியல்-இராணுவ' அமைப்பாக இணைந்தன.

எனினும் போராளிகளின் நடவடிக்கைகள் மற்றுமொரு பரிமாணத்தை எடுக்கத் தொடங்கின. ஐரோப்பா, கனடா மற்றும் ஐக்கிய அமெரிக்கா எங்கிலும் சிதறிப் பரவியிருந்த தமிழ் மக்களிடமிருந்து நிதிகளைத் திரட்டுதல் உட்பட அரசியல் மற்றும் பிரச்சார மட்டங்களில் 'ஈஎன்எல்எஃப்' இன் ஸ்தாபித உறுப்பினர்கள் மத்தியில் நெருங்கிய ஒத்திசைவு நிலவியபோதிலும் இராணுவச் செயற்பாடுகள் தொடர்பான உபாயமும் உத்திகளும் தனிவேறானவையாகத் தொடர்ந்தன. இதற்கிடையில் திருமதி காந்தியின் படுகொலையும் அதனைத் தொடர்ந்து பிராந்தியத்தில் இந்தியாவின் பங்கு பற்றிய திருமதி காந்தியின் கண்ணோட்டத்தில் நிலவிய இரகசியத்தன்மையை அனுமானிக்க முடியாத ஒரு 'வெற்றுப் பலகை'யாகத் தோற்றமளித்த ராஜீவ் காந்தியின் எழுச்சியும் கொழும்புக்குப் புதிய நம்பிக்கையை அளித்தது. மேலும் பிரதம பேச்சுவார்த்தையாளராகப் புதிதாக நியமிக்கப்பட்ட வெளிநாட்டுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரியால் பார்த்தசாரதி பதிலீடு செய்யப்பட்டமையையும் கொழும்பு வரவேற்றது (லங்கா கார்டியன். 1 மே 1985).

தனது தாயார் விட்டுச்சென்ற இடத்திலிருந்து பணியைத் தொடங்கிய ராஜீவ்காந்தியின் செயல்பாடானது இலங்கை விடயத்தில் இந்திராகாந்தியினால் வடிவமைக்கப்பட்ட கொள்கையின் சாராம்சத்தில் இலங்கை அரசாங்கத்தின்மீது ஓர் நெகிழ்வுத்தன்மையும் அதனைத் தொடர்ந்து தமிழ்ப் போராளி இயக்கங்கள்மீது ஒரு கண்டிப்பான அணுகுமுறையும் என்ற வகையில் அவரின் செயல்பாடு அமைந்திருந்தது. போராளிகள் ஆயுதங்களையும் ஆட்களையும் கடத்துவதைக் கட்டுப்படுத்தும் பொருட்டு இலங்கைக் கடற்படையின் ஒத்துழைப்புடன் பாக்கு நீரிணையில் தீவிர விமான மற்றும் கடற்படைக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டதில் இம்மாற்றம் பிரதிபலித்தது. இது





உண்மையில் திருமதி காந்தியின் ஆட்சிக்காலத்தில் இருந்த சலுகைகளை முழுமையாக மறுதலையாக்கும் கருத்துடையதாயிருந்தது. இம்மாற்றத்தின் அதிகாரபூர்வமான அறிகுறி 1985ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் பிற்பகுதியில் ரொமேஷ் பண்டாரியின் கொழும்பு வருகை முடிவுற்றதைத் தொடர்ந்து தென்பட்டது (தமிழ் ரைம்ஸ் 15 ஏப்பிரல் 1985).

மாற்றப்பட்ட இப்புதிய கொள்கையின் அடிப்படையிலேயே ரொமேஷ் பண்டாரி இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் இடையிலான அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு ஒரு கால அட்டவணையைத் தயாரித்தார். யூன் முதல் வாரத்தில் புதுடெல்லியில் நடைபெற்ற ராஜீவ் - ஜெயவர்தன உயர்மட்டக் கூட்டத்தில் இந்த அட்டவணை பெரும்பாலும் முடிவுசெய்யப்பட்டு விட்டது. இது பின்னர் இந்தியாவின் நல்லாசியுடன் மூன்றாவது நாடொன்றில் இரு தரப்புகளுக்கு மிடையிலான பேச்சுக்களுக்கு வழிசமைப்பதாயிருந்தது. எனினும் தமிழ்ப் போராளி இயக்கங்களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கு மிடையில் பூட்டான் தலைநகரான திம்புவில் 1985ஆம் ஆண்டு யூலை 13ஆந் தேதியன்று நடைபெற்ற யுத்த நிறுத்தப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இந்த தொடக்க கால அட்டவணை குறுகியது. 'திம்பு பேச்சுக்கள்' இரு சுற்றுக்கள் நீடித்தன. ஆயுதமேந்திய அரசியல் அமைப்புக்கள் சர்வ கட்சி மாநாட்டில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியால் ஏற்கெனவே நிராகரிக்கப்பட்ட ஆலோசனைகளைப் பேசித் தீர்ப்பதற்கு மறுத்தன. மேலும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வொன்றைச் சமர்ப்பிக்கின்ற பொறுப்பு கொழும்பைச் சார்ந்ததென்ற நிலைப்பாட்டைத் தமிழ் அமைப்புக்கள் எடுத்தன. இக்கருத்தை வலியுறுத்துமாற் போன்று தமிழ்ப் பேராளர் குழு நான்கு அடிப்படைக் கோட்பாடுகளின் தொகுதியொன்றை அரசாங்கப் பேராளர் குழுவுக்கு முன்வைத்தனர் (பின்னிணைப்பு 15). அவற்றின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் ஒரு தீர்வுத்திட்டத்துடன் வரவேண்டுமென அவர்கள் எதிர்பார்த்தனர். அந்நான்கு கோட்பாடுகளாவன:

1. இலங்கைத் தமிழர்களைத் தனிவேறான தேசிய இனமாக அங்கீகரித்தல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



2. அடையாளம் காணப்பட்ட தமிழர் தாயகத்தை அங்கீகரித்தலும் அதன் ஆட்சிப் பகுதியின் ஒருமைப் பாட்டுக்கு உத்தரவாதமளித்தலும்.
3. மேற்கூறியதன் அடிப்படையில் தமிழ்த் தேசியத் தின் பறித்தெடுக்க முடியாத சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.
4. இத்தீவைத் தமது சொந்த நாடாகக் கருதுகின்ற எல்லாத் தமிழர்களினதும் முழுமையான பிரசா வுரிமையையும் ஏனைய அடிப்படைச் சனநாயக உரிமைகளையும் அங்கீகரித்தல்.

எனினும் பொதுவாக வெளியுலகும் குறிப்பாக இந்தியாவும் தமிழர்களை இணங்கிப் போகாதவர்களாகவும் நியாய மற்றவர்களாகவும் கருதாதிருக்கும் பொருட்டு தமிழ்ப் பேராளர் குழு அவர்களின் கூட்டறிக்கையில், தாம் ஒரு 'சுதந்திரமான தமிழ் அரசு'க்காகப் போராடுகின்ற போதி லும் 'வெவ்வேறு நாடுகள் இக்கோட்பாடுகளை உறுதிப் படுத்துவதற்கு வெவ்வேறு அரசாங்க முறைமைகளை வடிவமைத்துள்ளதனால் மேற்கூறப்பட்ட கோட்பாடு களுக்கிணங்க இலங்கை அரசாங்கம் முன்வைக்கக்கூடிய தீர்வுத்திட்டங்களின் தொகுதி எதனையும் தாம் பரிசீலனை செய்யத் தயாராயுள்ளனரெனக்' குறிப்பாலுணர்த்தினர். ஆகஸ்ட் 12ஆந் தேதியன்று பேச்சுக்கள் மீண்டும் ஆரம்ப மாகியபோது அரசாங்கப் பேராளர் குழு 'அடிப்படைக் கோட்பாடுகளை' நிராகரித்தது. முரண்பாட்டுக்கான தரப்பெதுவும் அதன் இறுக்கமான நிலைப்பாட்டைக் கைவிடத் தயாராயிருக்கவில்லையாதலால் ஒட்டுமொத்தத் தில் திம்பு பேச்சுக்கள் முறிந்துவிடுமென்பது முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்டதாயிருந்தது. அவ்வாறே தள நிலைமை யும் காத்திரமான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான சாதகமான சூழ்நிலைகளைக் கொண்டிருக்கவில்லை. இலங்கை அரசாங்கமும் தமிழ் இயக்கங்களும் எதிர்பார்த்த வாறு திம்புப் பேச்சுக்கள் முறிவடைந்தபோது அவைகள் ஆறுதலடைந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.





## 'அடுத்தகட்டப் பேச்சுகள்'
## 4 மே 1986 – 19 டிசெம்பர் 1986

திம்புப் பேச்சுகள் முறிவடைந்ததைத் தொடர்ந்து, கொழும்பும் தமிழ் அமைப்புக்களும் எதிர்பார்த்ததற்கு மாறாக, புதுடெல்லி இலகுவில் விட்டுக்கொடுக்கப்போவ தில்லையென்பது தெளிவாகியது.

இந்திய இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் ஏற்பட்ட புரிந்துணர்வின் அடிப்படையில் அவைகளின் கூட்டு முன்முயற்சியினால் அதிகாரப் பகிர்வுத் திட்டத்துக்கான பரந்துபட்ட ஷரத்துக்களை உள்ளடக்கிய சட்டவரை வொன்று அவசர அவசரமாகத் தயாரிக்கப்பட்டது. ஜே.ஆர். ஜெயவர்தனவின் சகோதரரான எச்.டபிள்யு. ஜெய வர்தனவுக்கும் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையிலான சந்திப்பைத் தொடர்ந்து இது மேற்கொள்ளப்பட்டது. வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சினால் 1985ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31ஆந் தேதியன்று வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கை கூறியதாவது: 'முக்கியமானவையும் பொருத்த மானவையுமான எல்லா விடயங்களையும் உள்ளடக்கிய ஒரு விரிவான பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப் பட்ட தரப்புகள் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படை யாக இவ்விரிவான வரைவு பயன்படுத்தப்படலாம்' (புறொன்ற் லைன் - 15 செப்ரெம்பர் 1985).

முரண்பாட்டுக்கான தரப்புகள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் 'மத்தியஸ்தர்' என்ற அதன் பங்கைப் புதுடெல்லி விடாப்பிடியாகத் தொடர்கின்றதென்பதற்கு இதுவொரு தெளிவான அறிகுறியாயிருந்தது. வரைவு ஒப்பந்தம் எதிர்காலப் பேச்சுவார்த்தைகளுக்கான முக்கிய அடிப்படையாக அமைந்தது. முதல் தடவையாக அதிகாரப் பகிர்வின் அலகாக மாகாணத்தைக் கொழும்பு ஏற்றுக் கொண்டமை ஒப்பந்தத்தின் பெரிதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். அதிகாரம் பகிரப்படும் விடயங்களில் மாகாணத்தின் சட்டமும் ஒழுங்கும் உள்ளடக்கப்பட்டது. முன்னர் 'பிற்சேர்க்கை C' இல் கருதப்பட்டனவான காணிக் குடியேற்றம், கமத்தொழில், கைத்தொழில், கல்வி மற்றும் கலாச்சாரம் என்பவை உள்ளடக்கப்பட்ட ஏனைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடயங்களாகும். பகிரப்படும் எல்லா விடயங்களும் 'தேசியக் கொள்கை' என்ற பொதுவான கருத்தெல்லை யின்கீழ் கொண்டுவரப்படவிருந்தன. பகிரப்பட்ட விடயங் களைக் கொண்டதான மாகாண சபைகள், சம்பந்தப்பட்ட மாகாண சபையுடன் கலந்தாலோசித்த பின்னர், மூன்றி லிரண்டு பெரும்பான்மைமூலம் பாராளுமன்றச் சட்ட மூல மொன்றின் ஊடாக உருவாக்கப்படவிருந்தன. இணைந்த வடக்கு மற்றும் கிழக்குக்கான ஏற்பாடெதுவும் அதில் இருக்கவில்லை.

வரைவு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து 'அடுத்தகட்டப் பேச்சுக்கள்' ஆரம்பமாயின. முரண்பாட்டுக்கான இரு தரப்புகளும் நேருக்கு நேராகவன்றி 'அண்மையில்' இருந்தன. இந்திய அரசாங்கம் ஓர் ஏற்பாட்டாளர் என்பதைவிட ஒருபடி மேலாக 'மத்தியஸ்தர்' ஆகிவிட்டது. 'முன்னர் பாராளுமன்றக் கட்சி'யென்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் மீதிருந்த மதிப்பும் அதன் சட்டபூர்வ அங்கீகாரமும் தமிழ் அரசியல்-இராணுவ இயக்கங்கள் 'பயங்கரவாதிகள்' எனக் கொழும்பினால் வருணிக்கப் பட்டதனாலும் திம்புப் பேச்சுக்களில் அவை பின்பற்றிய கடும்போக்கினாலும் 'அடுத்தகட்டப் பேச்சுக்களில்' தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு மட்டுமே சிறப் பிடம் அளிக்கப்பட்டது. எனினும் இந்திய-இலங்கை ஒப் பந்தத்தின் பின்னர் உடனடியாக 'சிறப்பிடம்' மீண்டும் எல்ரீரீஈக்கும் ஓராண்டின் பின்னர் ஈபீஆர்எல்எஃப்பிற்கும் மாற்றப்பட்டது.

'அடுத்த கட்டப் பேச்சுக்கள்' தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் சுவாரஸ்யமான சித்தாந்த வாதப் பரிமாற்றத்தைக் கண்டன. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி 1985ஆம் ஆண்டு டிசெம்பர் 1ஆந் தேதியன்று ராஜீவ் காந்திக்குச் சமர்ப்பித்த ஒரு முன்மொழிவில் (த.ஐ.வி.மு. முன்மொழிவு, 1988: 46-49) 'அரசுகளின் ஒன்றியம்' (அதாவது இலங்கை) மற்றும் கணிச மான அதிகாரப்பகிர்வைக் கொண்டதோர் அலகான 'மொழி ரீதியான அரசு' (அதாவது வடக்கு-கிழக்கு மாகா ணம்) பற்றிய எண்ணக்கருக்களை வலியுறுத்தியது. நெகிழ் வான போக்கை விளக்கிக் காட்டுகின்றதாக திம்பு சமா





தானப் பேச்சுக்களுக்கான தமிழர் ஐக்கிய விடுதலை முன் னணியின் முன்மொழிவுகளில் சமர்ப்பிக்கப்பட்ட நான்கு அடிப்படைக் கோட்பாடுகள் பற்றிய குறிப்பெதுவும் அதில் இருக்கவில்லை (த.ஐ.வி.மு. முன்மொழிவு, 1988: 46-49).

இலங்கை அரசாங்கம் சர்ச்சைக்குரிய நீண்ட வாத மாகக் காணப்பட்ட அதன் பதிலளிப்பில் பின்வருவனவற் றில் கவனஞ்செலுத்தியது (மேற்கூறியது, 50-72):

1. 'பிரிக்கப்பட்ட இறைமையை உணர்த்துகின்ற ஒரு சமஷ்டி முறைமை இலங்கையில் நினைத்துப் பார்க்க முடியாததென்பதுடன் ஒற்றையாட்சி அர சென்ற எண்ணக்கருவுக்கும் அது முரணானது'

(2) 'தமிழ்மொழி வாரி மாநிலம் ஒரு அலகாக உரு வாக்கப்படும் பட்சத்தில் எஞ்சியுள்ள ஏழு மாகாணங்களைக் கொண்ட இலங்கை உத்தேச ஒன்றியத்தின் மற்றைய அலகாக அமைகின்றதா அல்லது இலங்கை மேலும் பிரிக்கப்படுதலைக் கருதுகின்றதாவென்ற கேள்வி எழுகின்றது.'

(3) 'இம்முன்மொழிவுகள் முற்றிலும் ஏற்க முடி யாதவை. அவை செயற்படுத்தப்படுமாயின் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி ஈழத்தைத் தவிர ஏனைய எல்லாவற்றையும் எய்திவிடும்.

மேற்படி பரிமாற்றம் நாடு இரண்டாகிவிடுமோ என்ற அச்ச உணர்வின் காரணமாகவும் புரிதலில் உள்ள கோளாறு களினாலும் பேச்சுவார்த்தைகளில் இன்றும் கூடத் தொடர்ந்து பேயாட்டமாடுகின்றது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கை அரசாங்கத்தின் 1986ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் தேதிய தீர்வுத் திட்டமே 'அடுத்தகட்டப் பேச்சு' **வார்த்தையின் குறிப்பிடத்தக்க உள்ளீடாகும்.** அத்தீர்வுத் திட்டத்தின் முக்கியமான அம்சங்களாவன (தமிழ் ரைம்ஸ் 15 யூன் 1986):

1. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இரு தனி வேறான ஆள்புலங்களாகக் கருதப்படுவதற்கு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



2. குறிப்பாக வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும், அவை ஒன்றோடொன்று கலந்தாலோசிப்பதற்கும் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கும், பொருத்தமான நிறுவன ரீதியான ஏற்பாடுகள்.

3. ஏனைய மாகாணங்கள் தொடர்பில் தற்போதுள்ள மாவட்ட அபிவிருத்திச் சபை மாகாண சபையுடன் ஒருங்கிணையத் தீர்மானிக்கலாம்.

4. 30.8.1985ஆந் தேதிய ஒப்பந்தத்தினதும் புரிந்துணர்வினதும் வரைவுச் சட்டகமும் இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையிலுள்ள பதிவுகளும் (அதாவது நிரல்கள் 1, 2 மற்றும் 3) மாகாண சபைகளுக்கும் பகிரப்படுவதற்கு.

5. சட்டத்தையும் ஒழுங்கையும் ஒரு மாகாண விடயமாக ஏற்றுக்கொண்டதன் பின்னர் சட்டமும் ஒழுங்கும் பற்றிய ஒரு பின்னிணைப்பு. அத்துடன்

6. காணி ஒரு மாகாண விடயமென ஏற்றுக்கொண்டதன் பின்னர், காணிக் குடியேற்றம் பற்றிய ஒரு பின்னிணைப்பு.

காணி உடைமை மாற்றத்திற்கான விதிமுறைகள் விடயத்தில் முன்மொழிவு மௌனமாயிருந்தது. இதனைத் தொடர்ந்து 1986ஆம் ஆண்டு செப்ரெம்பர் 4ஆந் தேதியன்று இலங்கை அரசாங்கத்தால் அரசியலமைப்புக்கு ஒரு விரிவான திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் சில ஆலோசனைகள் உள்ளடக்கப்பட்டன. அது 1986ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் தேதிய வரைவு முன்மொழிவின் அடிப்படையில் அரசியலமைப்புக்கான திருத்தங்கள் தொடர்பான கூட்டுத் தொகுதியான ஒரு ஆவணம். அப்போதைக்கு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி கொழும்பின் புதிய முன்மொழிவுகளின் பல்வேறு அம்சங்கள் பற்றிய சந்தேகங்களைத் தொடர்ந்தும் வெளிப்படுத்தியது. குறிப்பாகத் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி பின்வருவனவற்றை வலியுறுத்தியது (மேற்கூறியது 50-72):





1. அனைத்து விடயங்களிலும் செயற்பாடுகளிலும் தேசியக் கொள்கை தவிர்க்கப்பட வேண்டும்,

2. மத்திய அரசாங்கத்தால் இப்போது பயன்படுத்தப்படுபவை தவிர, மாகாணத்திலுள்ள எல்லா அரச காணிகளும் மாகாணத்துக்கு உரித்தாக்கப்பட வேண்டும். காணி உடைமை மாற்றுதல் மாகாணத்தின் நோக்கெல்லையின்கீழ் வரவேண்டும்.

தமது இணக்கமான நிலைப்பாடு, தமிழர்களுக்கெதிரான இராணுவ நடவடிக்கைகளைக் குறைப்பதற்கோ போதிய அதிகாரப்பகிர்வுடன் பிராந்திய சுயாட்சியென்ற வழியிலேனும் அவர்களின் நியாயமான கோரிக்கைகளை கொள்கை அளவில் ஏற்றுக்கொள்வதற்கோ கொழும்பைத் தூண்டவில்லையென்பதை உணர்ந்துகொண்ட ராஜீவ் காந்தி 1985ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் திருமதி காந்தி கடைப்பிடித்த அணுகுமுறையின் கோட்பாடுகளுக்குத் திரும்பிச் சென்றார் (இன்டியா டுடே, 15 திசெம்பர் 1986). அவர் கொலைகளை நிறுத்தும்படியும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் திட்டவட்டமான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும்படியும் கொழும்பைக் கேட்டுக்கொண்டார் (த ஹிந்து, 23 மார்ச் 1986).

இது 1986ஆம் ஆண்டு ஏப்பிரல், மேயில் அவரின் அமைச்சரவையிலிருந்த தமிழ் இராஜாங்க அமைச்சரான ப. சிதம்பரம் தலைமையில் உயர்மட்ட இந்தியப் பேராளர் குழுவொன்று கொழும்புக்கு வருகைதந்ததுடன் மற்றுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு வழிவகுத்தது. யூலையில் முடிவுசெய்யப்பட்ட புதிய முன்மொழிவுகள் நவம்பரில் பெங்களூரில் நடைபெற்ற சார்க் உச்சிமாநாட்டின்போது தமிழ்த் தலைமைத்துவத்தையும் சனாதிபதி ஜெயவர்தனவையும் சந்திக்கச் செய்வதற்கான ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டவேளையில் மேலும் திருத்தப்பட்டன (தமிழ் ரைம்ஸ், 15 திசெம்பர் 1986).

ஜெயவர்தனவுக்கும் ராஜீவ் காந்திக்குமிடையிலான பெங்களூர் உயர்மட்டச் சந்திப்பையும் ஜனாதிபதி ஜெயவர்தனவையோ பிரதமர் ராஜீவ் காந்தியையோ சந்திக்க முடியாமல் பெறுபேறுகள் ஏதுமின்றித் திரும்பிய பிரபாகரனின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பயனற்ற பெங்களூர் விஜயத்தையும் தொடர்ந்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி மேலதிக முக்கியப் பங்கு வகிக்கின்ற வகையில் 'அடுத்த கட்டப் பேச்சுக்கள்' மீண்டும் ஆரம்பமாயின. இம்முறை நட்வர்சிங் மற்றும் ப. சிதம்பரம் ஆகிய இரு இந்திய அமைச்சர்கள் அதிகாரிகளின் துணையுடன் மத்தியஸ்தர்களென்ற பங்கை வகித்தனர். 1986ஆம் ஆண்டு டிசெம்பர் 19ஆந் தேதியன்று இரு மத்திய அமைச்சர்களும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்தனவுடன் கலந்தாலோசனைகளை நடத்தியதன் அதிகபட்ச பலனாக 'டிசெம்பர் 19 முன்மொழிவுகள்' என்றழைக்கப்படும் முன்மொழிவுகள் உருவாகின (தமிழ் ரைம்ஸ், 15 சனவரி 1987).

இம்முன்மொழிவுகள் சிங்கள மேலாதிக்க அம்பாறை மாவட்டத்தைத் துண்டாடுவதன்மூலம் தமிழர்களுக்குத் 'தாயகம்' ஒன்றை உருவாக்க முயற்சித்தனவென்ற வகையில் 'பிற்சேர்க்கை C' ஐயும் 'திம்புக் கோட்பாடுகளையும்' விடத் திட்டவட்டமான முன்னேற்றத்தைக் காட்டின. அவை வடக்கிற்கும் கிழக்கின் எஞ்சிய பகுதிகளுக்கும், அதாவது, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கும் இடையில் ஓர் இணைப்பை ஏற்படுத்த முனைந்தன. தமிழ்ப் பிரதேசங்களுக்கு இம்முன்மொழிவுகளின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட அதிகாரப் பகிர்வு சமஷ்டி அமைப்பின்கீழ் இந்திய மாநிலமொன்று அனுபவிக்கின்ற அதேயளவான தாக இல்லாதபோதிலும் அதுவரை கருதப்பட்டிருந்ததைவிட வெகுதூரம் முன்னேறியதாக இருந்தது.

மேலும் இம்முன்மொழிவுகள், மத்தியில் அதிகாரப் பகிர்வில் தமிழ் அரசியற் சமூகத்தை ஈடுபடுத்துகின்ற ஊகத்துடன் உப சனாதிபதி பதவியொன்றை உருவாக்கவும் எதிர்பார்த்தன. எனினும் தெற்கின் அரசியற் சமூகம் டிசெம்பர் 19இன் முன்மொழிவுகள் மீது உண்மையான அக்கறை காட்டவில்லையென்பது தெளிவாகப் புலப்பட்டது. அத்துடன் நில்லாது ஏனைய தமிழ் இயக்கங்களுக்கெதிரான எல்ரீரீஈயின் 'சகோதரப் படுகொலைத் தாக்குதல்களின்' விளைவாகத் தமிழரின் எதிர்ப்பு வலுக்குறைந்த நிலையை 'இறுதி இராணுவத் தீர்வை' நோக்கி முன்னேறுவதற்குத் தக்க தருணமாகக் கொழும்பு கருதியது. அதற்கேற்ப தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும் அரைகுறை





ஆர்வத்துடன் பதிலளித்த அதேவேளையில் எல்ரீரீஈ இம் முன்மொழிவுகளை நிராகரித்தது. எனவே அடுத்தகட்ட பேச்சுக்களிலிருந்து வெளிப்பட்ட ஆலோசனைகளின் உச்சவிளைவான 'டிசெம்பர் 19 முன்மொழிவுகள்' பின்னர் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் புத்துயிரளிக்கப்படும் வரை முடக்கப்பட்டன (வீரகேசரி, 20 சனவரி 1987). இதுகுறித்து அடுத்த பிரிவில் ஆராயப்படும்.

## இந்திய – இலங்கை ஒப்பந்தம் (ISLA): தோற்றமும் கோட்பாடுகளும்

யூலை 1983இற்குப் பிந்திய காலப்பகுதியில் இலங்கையின் உள்ளகச் சக்திகளின் கூட்டிணைவு வெளிநாட்டுத் தலையீடுகளுக்கான நிலைமைகளையும் உருவாக்கியதென்பதைக் கருத்தில் கொள்ளவேண்டியது குறிப்பிடத்தக்க முக்கியமான அம்சமாகும். ஒருபுறத்தில் இலங்கை அரசு இராணுவத் தீர்வொன்றைத் தொடர்வதற்கு அமெரிக்கா - பிரிட்டன் - இஸ்ரேல் - பாகிஸ்தான் அச்சினால் வெளிப்படையாகவும் ஒளிவுமறைவாகவும் ஆதரவு வழங்கப்பட்டது. மறுபுறத்தில் புதுடெல்லி, பிராந்தியத்தில் அதன் சொந்தப் புவி-அரசியல் அக்கறைகளின் நிமித்தமும் இலங்கையிலுள்ள தமிழர்களுக்கும் தமிழ் நாட்டிலுள்ள தமிழர்களுக்கும் இடையிலான மொழி மற்றும் கலாச்சார உறவுகளின் உணர்வுபூர்வமான இயல்பின் காரணமாகவும் மத்தியஸ்தரென்ற பங்கைத் தானே எடுத்துக்கொண்டது. இன முரண்பாட்டுக்கு இராணுவத் தீர்வொன்றைச் சகித்துக் கொள்ள முடியாதென்று இலங்கை அரசாங்கத்துக்குத் தெளிவாக உணர்த்துகின்ற அதேவேளையில் புதுடெல்லி, தமிழ் நாட்டில் அடைக்கலத்தைத் தேடிய தமிழ் இயக்கங்களுக்கு ஆதரவளித்த அதேசமயம் அவற்றின் பிரிவினைக் கோரிக்கைக்கு ஆதரவளிக்கப்பட மாட்டாதென்றும் அழுத்தந்திருத்தமாகக் கூறியது.

'திம்புப் பேச்சுகள்' முறிவடைந்ததைத் தொடர்ந்து கொழும்பின் இராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டதுடன் எல்ரீரீஈயின் தற்பெருமைக் கோளாறானது ஏனைய தமிழ்ப் போராளிகளின்மீது கொலைவெறித் தாக்குதலையும் நடத்தத் தூண்டியது. எல்ரீரீஈயால் கொல்லப்பட்ட ஏனைய தமிழ்க் குழுக்களைச் சேர்ந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போராளிகளின் மொத்த எண்ணிக்கை 1983 முதல் 1987 வரையான காலப்பகுதியில் இலங்கைப் பாதுகாப்புப் படைகளால் கொல்லப் பட்டவர்களின் மொத்த எண்ணிக்கைக்கு ஏறக்குறையச் சமமானதென மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்ப் போராளிகள் வலுவிழந்துவருவதை உணர்ந்த இலங்கை அரசாங்கம் 1986ஆம் ஆண்டு டிசெம்பர் முதல் 1987ஆம் ஆண்டு மே வரையிலான காலப்பகுதியில் இனப் படுகொலைகள் என்று கூறுமளவுக்கு ஒரு தொடரான இராணுவத் தாக்குதல்களை நடத்தியது. இந்நடவடிக்கையின் மூலம் கொழும்பு, 1986ஆம் ஆண்டு மே மாதம் புதுடெல்லியால் ஆரம்பித்து வைக்கப்பட்ட 'அடுத்த கட்டப் பேச்சு'க்களின் அதிகபட்ச விளைவாக எட்டப்பட்ட 'டிசெம்பர் 19 முன்மொழிவு'களைப் பயனற்றதாக்க முனைந்தது (தமிழ் ரைம்ஸ், 15 யூன் 1987).

இந்நிலைமைகளின் கீழ்தான் இந்தியா அதன் பங்கை மத்தியஸ்தரிலிருந்து உத்தரவாதம் அளிப்பவராகவும் முரண்பாட்டில் நேரடிப் பங்கேற்பாளராகவும் மாற்றுவதற்கு நிர்ப்பத்திக்கப்பட்டது. விமானங்கள்மூலம் உணவு போடப்பட்டதையும் 1987ஆம் ஆண்டு யூலையில் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதையும் அதனைத் தொடர்ந்து விரைவில் இந்திய அமைதிப்படை (IPKF) ஈடுபடுத்தப்பட்டதையும் இச்சூழமைவில்தான் பார்க்க வேண்டும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் அடிப்படையில் பின்வருவனவற்றை உறுதிப்படுத்த முனைந்தது (பின்னிணைப்பு 16):

(அ) இலங்கையின் ஐக்கியமும் ஒருமைப்பாடும்;

(ஆ) தமிழ்பேசும் மக்களுக்கு மாகாண சுயாட்சி;

(இ) ஒப்பந்தத்தின் ஊடாகத் தெளிவாகக் கூறப்பட்ட இந்தியாவின் பாதுகாப்பு அக்கறைகள், அத்துடன்,

(ஈ) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குடியிருக்கின்ற அனைத்துச் சமூகங்களின் உயிருக்கான பாதுகாப்பும் உத்தரவாதமும்.





ஒப்பந்தத்துக்குக் கூட்டொப்பக்காரராக உள்ளதற்கு மேலதிகமாக ஒப்பந்தம் அமுல்செய்யப்படுவதற்குக் காப்பீடும் உத்தரவாதமும் அளிப்பதற்கான பொறுப்பு இந்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

## அரசியல் மற்றும் இராணுவ நிலைமை

முன்னர் விவாதிக்கப்பட்ட டிசெம்பர் 19 முன்மொழிவுகளுக்கு வழிவகுத்த 'அடுத்தகட்டப் பேச்சு'களுடன் சமகால நிகழ்வாக இராணுவ சூழ்நிலையின்மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்ற இரு வளர்ச்சிகளும் காணப்பட்டன. முதலாவது ஏனைய தமிழ் இயக்கங்கள்மீது சகோதரப் படுகொலைத் தாக்குதல்களைத் தொடக்கியதன் ஊடாக எல்ரீரீஈ தனது மேலாதிக்கத்தை நிலைநாட்ட முனைந்ததனால் தமிழர்களின் ஆயுதப்போராட்டம் வலுக்குறைந்தது. இரண்டாவது, இத்தருணத்தைப் பயன்படுத்தி இலங்கைப் பாதுகாப்புப் படைகள் தமிழ் மக்கள் மீது பாரிய இராணுவத் தாக்குதல்களைத் தொடங்கியது.

1986ஆம் ஆண்டு ஏப்பிரல் பிற்பகுதியில் ரெலோ மீது எல்ரீரீஈயின் தாக்குதலும் ரெலோ தலைவர் சிறீ சபாரத்தினம் கொல்லப்பட்டமையும் அதன் தொடக்கம் முதல் எல்ரீரீஈ பேராவல் கொண்டிருந்த இராணுவ உயர் மேலாண்மையை எல்ரீரீஈக்கு உறுதிப்படுத்தின. எல்ரீரீஈ அல்லாத இயக்கங்கள் மத்தியில் ரெலோ மட்டும்தான் பாதுகாப்புப் படைகள்மீது குறிப்பிடத்தக்க தாக்குதல்கள் நடத்திய சாதனை கொண்டதாக யுத்தகளத்தில் எல்ரீரீஈயின் வீரத்திற்கு ஈடுகொடுக்குமளவுக்கு அதற்கு அடுத்த பலம் பொருந்தியதாயிருந்தது. அதே நேரத்தில் ஈரோஸும் புளொட்டும் யாழ்ப்பாணத்தில் செயற்படுவது புலிகளால் தடைசெய்யப்பட்டது.

1986 டிசெம்பரில் ஈபீஆர்எல்எஃப் மீதும் மின்னல் வேகத் தாக்குதல் நடத்தப்பட்டு அவர்களும் தடை செய்யப்பட்டனர். சித்தாந்த ரீதியிலும் அரசியல் ரீதியிலும் சக்தி வாய்ந்தவையாகக் கருதப்பட்ட இவ்வமைப்புக்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுடைய தாங்களே ஏகப்பிரதிநிதிகள் என்ற சுயவெளிப்பாட்டுக்கும் தாங்கள்தான் ஒரேயொரு விடுதலையாளர்கள், புலிகள்தான் ஒரே ஒரு விடுதலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமைப்பு என்ற சிந்தனைக்கும் எதிரானவர்கள் என்பதால் மேற்படி நடவடிக்கையை புலிகள் மேற்கொண்டனர். இதன் மூலம் தங்களுக்கு எதிரானவர்களையும் அல்லது தங்களை அச்சுறுத்தக்கூடிய எதனையும் விட்டுவைக்கக் கூடாது என்பதில் அவர்கள் உறுதியுடன் இருந்தனர் என்பது புலப்படுகிறது. குடை அமைப்பான ஈஎன்எல்எஃப் அந்த அமைப்பினுள் கடைசியாக வந்துசேர்ந்த எல்ரீரீஈக்குப் பயனற்றதாயிருந்தது. இன்னும் சொல்லப்போனால், தமிழ் மக்களின் 'ஏகப்பிரதிநிதியாக' வெளிப்படுகின்ற அதன் செயல்திட்டத்திற்கு ஈழத் தேசிய விடுதலை முன்னணி* ஒரு தொல்லையாகத் தெரிந்தது. விரைவில் அது போராளி இயக்கங்களிடையே நூலிழையில் ஒட்டிக்கொண்டிருந்த ஐக்கிய முன்னணியை இல்லாதொழித்தது.

எனினும் எல்ரீரீஈயின் உண்மையான பலம் சர்வதேச ஆயுதச் சந்தையிலிருந்து நவீன ஆயுதங்களைத் திரட்டிக் குவிப்பதில் தங்கியிருந்தது. புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் எல்ரீரீஈயின் பணப்பேழைகளுக்குப் பங்களித்துக்கொண்டிருந்தபோதிலும் எல்ரீரீஈயின் கைவசமிருந்த அபரிமித ஆயுதங்களின் எண்ணிக்கைக்கு அம்மூலம் மட்டும் காரணமாயிருந்திருக்க முடியாது. அவை இந்தியாவால் வழங்கப்பட்ட அல்லது இலங்கைப் பாதுகாப்புப் படைகளிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களல்ல. உண்மையில் எல்ரீரீஈ ரெலோவைக் கொன்றழித்தபோது அது புதிதாகச் சுவீகரித்த ஆயுதங்களை யாழ்ப்பாண மக்களுக்குக் காட்சிக்கு வைத்ததுடன், அது புதிதாகச் சுவீகரித்த ஆயுதக் குவியலுடன் ஒப்பிடுகையில் இந்தியா ரெலோவுக்கும் ஏனைய இயக்கங்களுக்கும் அதற்கும் கூட வழங்கிய ஆயுதங்கள் வெறும் 'பொம்மைகள்' என்றும் பெருமையடித்துக்கொண்டது. எனவே சர்வதேசச் சந்தையில் எல்ரீரீஈக்கு இருந்த வாய்ப்பு இன்றும் மர்மமாயுள்ளது. அதன் ஆரம்பத் 'தொடர்புகள்' பின்னர் போதை மருந்து - ஆயுதக்கடத்தலை அடிப்படையாகக்கொண்ட ஒரு தன்னாதிக்கமுள்ள சர்வதேச வலையமைப்பாக விருத்தியடைந்தன.

எவ்வாறாயினும், 1986இன் இறுதிப்பகுதியில் எல்ரீரீஈ அதன் சொந்த நடவடிக்கைகளை அதிகரித்தபோது அதற்குப் பின்னடைவொன்று ஏற்பட்டுள்ளதென்பது தெளி





வாகியது. எல்ரீரீஈ அல்லாத தமிழ் இயக்கங்கள் எல்ரீரீஈ தானே வருவித்துக்கொண்ட இக்கட்டுநிலையைப் பற்றிப் பெரிதாகச் சலித்துக்கொள்ளாதபோதிலும் பொது மக்களின் உயிரிழப்புக்களுக்கும் சொத்துக்களின் அழிவுக்கும் பதில்சொல்ல வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டன. நேரடியாகவும் தமிழ்நாடு அரசாங்கத்தினூடாகவும் வேறு அரசியல் கட்சிகளூடாகவும் புதுடெல்லியிடம் திரும்பத் திரும்ப வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன. இவ்வழுத்தங்கள் ஒருபுறமிருக்க, தமது இரு அமைச்சரவை அமைச்சர்களான ப. சிதம்பரமும் நட்வர்சிங்கும் கடும்முயற்சி செய்து உருவாக்கிய டிசெம்பர் 19 முன்மொழிவுகளைத் தொடர்ந்து உடனடியாக இராணுவ வலுத்தாக்குதலைத் தொடங்கியதன்மூலம் கொழும்பு அவநம்பிக்கையை வெளிக்காட்டியுள்ளதென்று ராஜீவ் காந்தி தாமே உணர்ந்தார் (தமிழ் ரைம்ஸ், 15 பெப்ருவரி 1987).

சம்பவங்கள் திருப்பங்களுடன் மீண்டும் இடம்பெறத் தொடங்கியது குறித்து இந்தியாவின் அதிருப்தியை இரு அறிவிப்புக்களில் காணக்கூடுமாயிருந்தது. 1987ஆம் ஆண்டு பெப்ருவரி 9ஆந் தேதிய அறிவிப்பில் ஓர் 'அடிப்படையாகவும் மேலும் பேச்சுவார்த்தைக்கான ஒரு தொடக்கப் புள்ளியாகவும்' டிசெம்பர் 19 முன்மொழிவுகள் தொடர்பில் அதன் கடப்பாட்டைக் கொழும்பு மீண்டும் உறுதிப்படுத்த வேண்டுமென்று இந்தியா கோரியது (தமிழ் ரைம்ஸ், 15 பெப்ருவரி 1987). அதிக முக்கியத்துவம் வாய்ந்த அவ்வறிவிப்பு மறைமுகமான ஓர் எச்சரிக்கையைக் கொண்டிருந்தது. 'இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கெதிரான பொருளாதாரத் தடையையும் இராணுவ நடவடிக்கைகளையும் தொடருமாயின் வன்முறைக்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். மோதல் தொடர்ந்து நீடிப்பதாகவும் அதிகரித்ததாகவும் இருக்குமென்பது இந்தியாவின் மதிப்பீடு' (குணரத்ன, 1994: 173).

பகிரங்கமாக்கப்பட்ட இந்த அறிவிப்பைத் தொடர்ந்து பிரதமர் ராஜீவ் காந்தியால் ஜனாதிபதி ஜெயவர்தனவுக்கு அந்தரங்கச் செய்தியொன்று அனுப்பப்பட்டது. அதில் எச்சரிக்கை வெளிப்படையானதாயிருந்தது. அதிலுள்ள முக்கியப் பிரிவு கூறியதாவது:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*எல்லோரின் நலனின்பொருட்டும் இராணுவ நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். ஏனெனில் தற்போதுள்ள சூழ்நிலைகளில் அரசியல் பேச்சு வார்த்தைகளைத் திரும்பத் தொடங்கும்படி போராளிகளை இணங்க வைத்தல் இந்தியாவுக்குச் சிரமமானதாயிருக்குமென்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள். பேச்சு வார்த்தைப் பாதையை இலங்கை நிராகரித்ததன் விளைவாக அதிகரிக்கின்ற வன்முறையினால் முழு நிலைமையையும் பற்றி நாம் புதிதாக எண்ணிப்பார்க்க நிர்ப்பந்திக்கப்படுவோம் (குணரத்ன, 1994:175).*

இலங்கை அதன் இன்றியமையாத சமூக-இனப் பல்வகைத் தன்மைகளைக் காத்துக்கொள்ளவும் அதன் ஐக்கியத்தையும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் பேணிப் பாதுகாத்துக்கொள்ளவும் கூடியவகையில் சுமுகமான ஒரு தீர்வு எட்டப்படவேண்டுமென்பதே ஆலோசனையாயிருந்தது.

இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தைகளென்ற பாசாங்கைத் தொடர்ந்த அதேவேளையில் தமிழருக்கெதிராக ஒரு நீடித்த வலிந்துதாக்குகின்ற இராணுவ நடவடிக்கைகளுக்குத் தன்னைத்தானே தயார்படுத்திக் கொண்டது. 1983இற்கும் 1986இற்குமிடையில் திம்புவிலும், கொழும்பிலும், டெல்லியிலும், அவ்வாறே பெங்களூரிலும் இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்திய பொருள் மயக்கங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன.

ஒரு சமரசத் தீர்வு எட்டப்பட்டாலும் கூட, 1986ஆம் ஆண்டு டிசெம்பரில் எட்டப்படும் தீர்வினை நடைமுறைப் படுத்தும் பொறுப்பை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டாலன்றி இலங்கை அரசாங்கம் எந்தவோர் சமரசத் தீர்வையும் நடைமுறைப்படுத்தாது என்கிற அச்சம் தமிழ் அரசியல் இராணுவக் குழுக்களின் உள்ளுணர்வின் அடியாழத்தில் புதைந்துகிடந்தது. இலங்கை ஆட்சியாளர்களினால் தமிழ்த் தலைமைகளுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டமையும் துரோகத்தனமான முறையில் தமிழ்-சிங்கள உடன்படிக்கைகள் கிழித்தெறியப்பட்டமை தொடர்பாக தமிழர்களுக்கு இருந்த கசப்பான நினைவுகளும் சிங்கள அரசுகளின் உண்மையான உள்நோக்கம் தொடர்பாக அவர்களுக்கு இருந்த தனிப்பட்ட அறிவும்





அரசியல் இராணுவக்குழுக்களின் உள்ளுணர்வில் இவ் வச்சத்தை ஆழமாகப் பதித்துவிட்டிருந்தது.

எனினும் இவ்வளர்ச்சிகளைத் தொடர்ந்து தார்மீகப் பொறுப்பு திரும்பவும் கொழும்பைச் சேர்ந்ததாகியது. டெல்லியின் அழுத்தம் தளர்த்தப்பட்ட அதேவேளையில் 'இராணுவத்தீர்வு' என்ற தொனிப்பொருள் முழுதும் பழிவாங்கும் போக்கில் வலுப்பெற்றது. 1987ஆம் ஆண்டு ஏப்பிரல் 24ஆந் தேதியன்று பிரதமர் பிரேமதாச தேசத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்வரை அரசியல் தீர்வென்ற பேச்சுக்கே இடமில்லையென்று பாராளுமன்றத்தில் கூறினார். 1987ஆம் ஆண்டு ஏப்பிரல் 28ஆந் தேதியன்று ஜனாதிபதி ஜெயவர்தன 'நான் எப்போதும் வேண்டுவது இராணுவத் தீர்வையே. பெரும் இராணுவ ஊடுருவலொன்று நடத்தப்படும்' என்று சினத்த (கடுகடுப்பான) முகத்துடன் கூறினார் (குணரத்ன 1994: 60).

ஊடுருவல் இடம்பெற்றது - ஆனால் தரைப்படை நகர்வென்ற வடிவத்தில் அல்ல. பல்வேறு தள முகாம்களிலிருந்து பீரங்கித் தாக்குதல்களின் பின்பலத்துடன் விமானக் குண்டுவீச்சுக்களும் எறிகணை வீச்சுக்களும் தீவிரப் படுத்தப்பட்டன. அடையாள ரீதியாக வீரத்தை வெளிப் படுத்தும் நடவடிக்கைகள் ஊடாகவும் பிரச்சாரங்களின் மத்தியிலும் எல்ரீரீஈ பாரதூரமான பின்னடைவுகளை அனுபவிக்கத் தொடங்கியது. ஒரு மாதத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான தரைத் தாக்குதல் நடவடிக்கை ஆரம்பமாகியது. மே 26ஆந் தேதியன்று 'இறுதிவரையான யுத்தம்' என்று ஜனாதிபதி ஜெயவர்தன வருணித்த 'ஒப்பரேஷன் லிபரேஷன்' (விடுதலை நடவடிக்கை) செயற்படுத்தப்பட்டது (எஸ்.டி.முனி, 1993: 90). ஒரு வாரத்தினுள் எல்ரீரீஈயின் இதயபூமி என்று வர்ணிக்கப்படும் வடமராட்சிப் பிராந்தியம் பூரண இராணுவ கட்டுப்பாட்டின்கீழ் வந்தது.

இந்தியா இப்போது ஒருவிதமான மனத்தடுமாற்றத்தில் இருந்தது. இது குறித்து பேராசிரியர் எஸ்.டி.முனி

இந்தியா எப்போதும் தமிழ்ப் போர்முனைப்பின் மட்டத்தை மட்டுப்படுத்துவது அதன் நலனுக்கு உகந்ததெனக் கருதியது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



> இந்தியாவுக்கு எதிர்முகமாகக் கணிசமான தன்னாதிக்கத்தைச் சுவீகரித்திருந்த எல்ரீரீஈயின் போர் முனைப்பைக் கட்டுப்படுத்துவது உண்மையிலேயே இந்தியாவுக்கு ஒரு பிரச்சினையாயிருந்தது எனவே எல்ரீரீ ஈக்கும் ஏனைய போராளிக் குழுக்களுக்கும் பகிரங்கமான, பொருள் ரீதியான ஆதரவை மேம்படுத்துவதன்மூலம் யுத்தத்தின் தீவிரத்தை அதிகரிக்கின்ற தெரிவானது அதன் உடனடியான மற்றும் நீண்டகால நலன்களுக்குப் பாதகமானதும் விரும்பத்தகாததுமான பின்விளைவுகளைக் கொண்டிருந்தது மட்டுமன்றி, அது இலங்கையின் வலுத்தாக்குதலை உடனடியாக மழுங்கடிக்கக்கூடுமென்பதும் நிச்சயமற்றதாகத் தோன்றியது (முனி, 1993: 92-94).

மறுபுறத்தில் இலங்கையின் தீர்க்கப்படாத தமிழர் பிரச்சினை தமிழ்நாட்டுக்கும் வழிந்தோடி அதன் விளைவாக அங்கும் பிரிவினைவாதப் போக்குகள் தூண்டப்படுதலைத் தடுக்கும்பொருட்டு ஐக்கிய இலங்கையென்ற வரையறையினுள் இன முரண்பாட்டுக்குப் பேச்சுவார்த்தை மூலமான தீர்வொன்றை வற்புறுத்துதல் இந்தியாவின் நீண்டகால நலனுக்கு உகந்ததாயுமிருந்தது. மேலும் இலங்கையில் இனமுரண்பாடு இராணுவ மயப்படுத்தப்படுதலும் கொழும்புக்கு உதவுவதில் 'இந்தியாவின் நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கின்ற' ஏனைய பிராந்தியச் சக்திகளின் ஈடுபாடும் டெல்லியின் விருப்பத்திற்கு மாறாக இருந்தன.

எனவே இதிலிருந்து விடுபடுவதற்கான வழி 'நேரடித் தலையீடாக' இருந்தது. இது எல்ரீரீஈ மதிப்பிழந்து போகாதுவிடினும் ஏற்கெனவே மனந்தளர்ந்துபோயுள்ள ஒரு நேரத்தில் மேற்கொள்ளப் படலாமென்பதுடன் இலங்கையின் அரசபடைகளின் தாக்குதல்மீது அழுத்தம் கொடுக்கின்ற வகையில் ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தக்கூடும் என்று இந்தியா கருதியது. அதுமட்டுமன்றி அத்தகைய நோக்கம் இலங்கை அரசை இராணுவ ரீதியாக எதிர் கொள்வதற்குப் போராளிகளின் ஆற்றலுக்குள்ள வரையறைகளையும் அத்துடன் தமிழரின் நியாயமான நலன்களைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்குமான துணிவும் ஆற்றலும் இந்தியாவுக்கு மட்டுந்தான் இருந்ததென்பதையும் உறுதியான முறையில் விளக்கிக்காட்டுவதாக இருந்தது (எஸ்.டி.முனி, 1993: 94).





தலையீட்டின் முதலாவது கட்டம் 'மனிதாபிமான உதவி' என்ற வடிவத்திலிருந்தது. இக்குறிக்கோளை எய்துவதற்கு இந்தியா யாழ்ப்பாணத்துக்கெதிரான இராணுவத் தடையை முறியடித்து அதன் உச்சக்கட்டமாக 1987 யூன் 4ஆந் தேதியன்று அத்தியாவசியப் பொருள்களை விமானங்கள்மூலம் போடுகின்ற நேரடி முயற்சியை எடுத்தது (வீரகேசரி, 5 யூன் 1987). யாழ்ப்பாணத்துக்கு ஆகாய மார்க்கமாக அத்தியாவசியப் பொருள்களை அனுப்புவதன்மூலம் சர்வதேசச் சட்டத்தை இந்தியா மீறியுள்ள சந்தர்ப்பங்கள் உள்ளன. எனினும் இருதரப்பு அரசியல் விவாதங்கள் மூலம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா முதலில் முயற்சித்ததென்பதை நினைவில் கொள்ளவேண்டும். அந்த முயற்சிகள் தோல்வியடைந்ததன் பின்னர்தான் இந்தியா ஒருதலைப்பட்ச நடவடிக்கையை எடுத்தது. புதுடெல்லியிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் விடுத்த பத்திரிகை அறிக்கையில் விமானம் மூலம் அத்தியாவசியப் பொருள்கள் போடப்பட்டதை ஓர் 'அட்டூழியம்' என்றும் 'எமது சுதந்திரத்தின்மீதான அப்பட்டமான மீறல்' என்றும் சாடியது (தி ஐலன்ட், 5 யூன் 1987). அரசாங்கத்துக்கு ஆதரவாகக் கொழும்பில் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன (தி ஐலன்ட், 5 யூன் 1987).

இந்த அச்சுறுத்தும் இராசதந்திர நிகழ்வைத் தொடர்ந்து விரைவில் ஒரு சிரேஷ்ட இந்தியப் பத்திரிகையாளர் (இந்தியத் தினசரியான 'த ஹிந்து'வைச் சேர்ந்த என். ராம்) மற்றும் இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தைச் (Movement of Inter-racial Justice and Equality - MIRJE) சேர்ந்த சார்ள்ஸ் அபயசேகர போன்ற கொழும்பைச் சேர்ந்த புத்திஜீவிகள் ஆகியோரை உள்ளடக்கிய 'மத்தியஸ்தர்கள்' ஊடாகப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.[8] இதில் முக்கியப்பங்கு வகித்த இந்திய உயர் ஸ்தானிகர் ஜே.என்.டிக்ஸிற் புதுடெல்லியுடனான உத்தியோகபூர்வ இணைப்பாளராயிருந்தார் (தமிழ் ரைம்ஸ், 15 யூன் 1987).

இதற்கிடையில் தமிழ் அமைப்புக்களின் தலைவர்கள் இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கான 'வரைவு' பற்றிய பேச்சுக்களுக்காகப் புதுடெல்லிக்கு அழைக்கப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எல்ரீரீஈ தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் யாழ்ப் பாணம் சுதுமலையிலுள்ள அவரின் மறைவிடத்திலிருந்து புதுடெல்லிக்கு ஆகாய மார்க்கமாகக் கொண்டுசெல்லப் பட்ட அதேவேளையில் ஏனைய தலைவர்கள் சென்னையி லிருந்து புதுடெல்லிக்குப் பறந்து சென்றனர்.[9] சுருங்கக்கூறின் இதன் விளைவாகக் குறுகிய காலத்தில் இந்திய-இலங்கை ஒப்பந்தம் உருவானது. அது இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி யினாலும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன வாலும் 1987ஆம் ஆண்டு யூலை 29ஆந் தேதியன்று கொழும் பில் கைச்சாத்திடப்பட்டது (தினகரன், 30 யூலை 1987).

## இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் மீதான பரிசோதனை

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தால் 'போராளிகள்' என்று ஒப்புக்கொள்ளப்பட்ட தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தலைவரும் தமிழ்த் தேசியப் போராட்டத்தின் தலைவராக வெளிப்பட்டிருந்தவருமான வேலுப்பிள்ளை பிரபாகரன் பிரகடனப்படுத்தியதாவது:

> தமிழ்த் தேசியப் பிரச்சினையின் தீர்வுக்காக இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முன்மொழி வுகளின் தொகுதி பாரதூரமான குறைபாடுகளைக் கொண் டுள்ளதுடன் எமது மக்களின் அபிலாசைகளை நிறை வேற்றுவதற்குப் போதாமலுமுள்ளது. எனவே எமது மக்க ளின் உரிமைகளைப் போற்றிப் பாதுகாக்கின்ற அளவுக்கு மட்டும் ஒப்பந்தம் அமுல் செய்யப்படுவதற்கு எமது ஒத் துழைப்பை நீடிக்க நாம் உறுதியளிக்கின்றோம். இந்தியா போன்ற ஒரு சனநாயக நாடு ஒப்பந்தத்துக்கு நிபந்தனை யற்ற ஆதரவளிக்கும்படி துப்பாக்கிமுனையில் வற்புறுத் திக் கோருவது நேர்மையற்றதும் நியாயமற்றதுமாகும் (எல்ரீரீஈ: ஆகஸ்ட் 1987: 2).

## இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் சூழமைவு

மேலே ஆராயப்பட்டவாறு இந்திய இலங்கை ஒப்பந்தம் 'இலங்கையில் அமைதியையும் சகஜ நிலையையும் ஏற் படுத்துவதற்காக' பிரதமர் ராஜீவ் காந்தியாலும் ஜனாதிபதி ஜெயவர்தனவாலும் 1987ஆம் ஆண்டு யூலை 29ஆந் தேதி யன்று கைச்சாத்திடப்பட்டது. உடன்படிக்கைக்கான முன் னுரை 'இலங்கையின் இனப் பிரச்சினையையும் அதன் விளை வான வன்முறையையும் முடிவுக்குக் கொண்டு வருதற்கும் இலங்கையிலுள்ள அனைத்து நகரங்களையும் சேர்ந்த மக்க ளின் பாதுகாப்பையும் நல்வாழ்வையும் சுபிட்சத்தையும் உறுதிப்படுத்துவதற்குமான இன்றியமையாத தேவையை' ஒப்புக்கொண்டது. இந்திய இலங்கை ஒப்பந்தம் இனப்பிரச் சினைக்கு அது வழங்குகின்ற தீர்வின் காரணமாக மட்டு மன்றி, தென்னாசியாவில் ஒரு பிராந்திய வல்லரசாக இந்தியா வின் பங்கை வலியுறுத்துகின்ற வகையில் அது பயனளிக்கத் தக்கதாய் உள்ள காரணத்தினாலும் முக்கியமானதும் குறிப் பிடத்தக்கதுமான ஓர் ஆவணமாகும். ஆக இருவிதமான கணிப்புகளிலும் இந்திய இலங்கை ஒப்பந்தம் நுணுகி ஆராய வேண்டிய பரிசீலனைக்குத் தகுதி பெறுகின்றது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அது உருவான சூழ லில் அதாவது இலங்கை ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரத மருக்கும் இடையிலான 1987ஆம் ஆண்டு யூலை மாதம் 27ஆம் தேதிய கடிதங்களின் பரிமாற்றத்தின் மூலம் பகிரங்க மாக்கப்பட்ட ஒரு சூழலில் வைத்துப் பார்க்க வேண்டும். பிரதமர் ராஜீவ் காந்தியிடமிருந்து ஜனாதிபதி ஜெயவர் தனவுக்கான 1987ஆம் ஆண்டு யூலை மாதம் 27ஆம் தேதிய கடிதத்தின் 2ஆவது வாசகம் கூறுவதாவது:

'எமது கலந்துரையாடல்களின்போது நீங்கள் இந்தி யாவின் கரிசனைகள் சிலவற்றை நிறைவேற்றுவதற்குப் பின் வருமாறு உடன்பட்டிருந்தீர்கள்:

1. வெளிநாட்டு இராணுவ மற்றும் உளவுத்துறையைச் சேர்ந்த ஆளணியினரின் பொருத்தமும் அவர் களை ஈடுபடுத்துதலும் தொடர்பில் அத்தகைய நடவடிக்கை இந்திய, இலங்கை உறவுகளுக்குப் பங்கமில்லாதிருத்தலை உறுதிப்படுத்தும் பொருட்டு **மேன்மைதங்கிய தாங்களும்** நானும் விரைவில் ஒரு **புரிந்துணர்வை எட்டுவோமாக**'.
2. 'திருகோணமலையோ அல்லது இலங்கையிலுள்ள வேறு ஏதேனும் துறைமுகமோ இந்திய நலன்களுக்குக் குந்தகம் ஏற்படுகின்ற வகையில் எந்தவொரு நாட்டின தும் இராணுவப் பயனுக்கு வழங்கப்படமாட்டாது'.







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



3. 'வெளிநாட்டு ஒலிபரப்புத் தாபனங்களுடனான இலங்கையின் ஒப்பந்தமானது, அந்த நாடுகள் பொது மக்களுக்கான ஒலிபரப்புச் சேவைகளை வழங்குவதற்கான வசதிகளை மாத்திரம் பெற்றிருக்க வேண்டும். அவைகள் இராணுவ மற்றும் உளவுப் பிரிவுகளுக்காகப் பயன்படுத்தாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு மீளாய்வு செய்யப்படும்.

## இந்தியாவின் புவி–அரசியல் நலன்கள்

இன முரண்பாடானது சிங்கள ஆதிக்க அரசாங்கங்களுக்கும் தமிழ்த் தேசிய சிறுபான்மைக்கும் இடையிலான ஒரு முரண்பாடு. திருகோணமலையைப் பயன்படுத்துதல் மீது இந்தியா கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் எந்த வகையில் அம்முரண்பாட்டுத் தீர்வுக்கு உதவியிருக்க முடியும்? மேலும் இலங்கையிலுள்ள வெளிநாட்டு ஒலிபரப்பு வசதிகள் இராணுவ மற்றும் உளவு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாதிருத்தலை இந்தியா உறுதிப்படுத்துதல் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையிலான முரண்பாட்டுத் தீர்வுக்கு எந்த வகையில் உதவியிருக்க முடியும்?

விண்வெளிச் செய்மதிகளின் எட்டலுக்கு அப்பாற்பட்ட ஒரு புலம் நீருக்கடியிலுள்ள அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல்களுடன் தொடர்புகொள்ளலும் அவற்றைக் கண்காணித்தலுமென்பதை நாமறிவோம். விண்வெளிச் செய்மதிகளால் அனுப்பப்படும் வானொலிச் சமிக்ஞைகள் நீரினூடாகப் பயணித்து அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல்களை எட்டுமளவுக்குப் போதுமான வலுவற்றவை. இலங்கையைத் தளமாகக்கொண்ட ஒலிபரப்பு வசதிகள் இந்து சமுத்திரத்திலுள்ள அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல்களுடன் தொடர்பு கொள்ளவும் அவற்றைக் கண்காணிக்கவும் பயன்படுத்தப்படக்கூடுமென இந்தியா கவலை கொண்டிருந்ததாகத் தோன்றுகிறது.

இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் வேளையில் இந்தியாவிடம் அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல்கள் இருக்கவில்லை. உலகில் பெரிய அளவில் அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல் தொகுதிகளைக் கொண்டிருந்த இரு நாடுகள் ஐக்கிய அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும்





தான். எனினும் இலங்கையிலிருந்த வொய்ஸ் ஒவ் அமெரிக்காவின் ஒலிபரப்புச் சேவை இணைப்புகள் இந்தியாவைக் கவலை கொள்ளச் செய்தது.

சோவியத் அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பலொன்றை இந்தியா குத்தகைக்குக் கையேற்றுள்ளதெனத் தெரிவித்த 1987ஆம் ஆண்டு சனவரி 6ஆந் தேதிய அசோசியேட் பிரஸ் அறிக்கையொன்று 1987ஆம் ஆண்டு யூலையில் பரிமாற்றப்பட்ட கடிதங்களுக்கு ஓரளவு காரணகாரிய முக்கியத்துவத்தை அளிக்கின்றது. இதன் வேர்கள் ஆசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் தந்திரோபாயக் கொள்கையின் அடிப்படை நோக்கங்களில் காணப்பட்டன. அதாவது தென் கிழக்காசிய விவகாரங்களில் எஞ்சிய பிராந்திய வல்லரசுகளின் மத்தியஸ்தப் பங்கெதனையும் மறுப்பதன்மூலம் ஆசியப் பிராந்தியத்தில் பிராந்திய வல்லரசாக அதன் தனிப்பட்ட அந்தஸ்தை உறுதிப்படுத்துதல் என்பதாக இருந்தன.

சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான இனமுரண்பாட்டுத் தீர்வுக்கும் இத்தகைய ஏற்பாடுகளுக்கும் என்ன தொடர்பு? என்னும் கேள்வி எழுகின்றது. இவ்வேற்பாடுகள் தமிழ் மக்களின் சார்பாக இந்தியாவின் உதவிபுரியும் மனிதாபிமானப் பங்குடனோ அல்லது இன முரண்பாட்டில் ஒரு 'நேர்மையான மத்தியஸ்தராக' அதன் பங்களிப்புடனோ எவ்விதத் தொடர்புமற்றவை என்பது தெளிவான உண்மை.

நல்லகாலமாக பிரதமர் ராஜீவ் காந்தியின் 1987ஆம் ஆண்டு யூலை 27ஆந் தேதிய கடிதம் இம்முக்கிய தொடர்பின் இயல்பு பற்றிய எமது ஆவலைத் தூண்டும் மர்மத்தை வெளிப்படுத்துகின்றது. திருகோணமலையைப் பயன்படுத்துதல் பற்றியும் வெளிநாட்டு ஒலிபரப்பு வசதிகளைப் பயன்படுத்துதல் பற்றியும் இந்தியா வெளிப்படுத்திய கவலைகளுக்குப் பதிற்செயலாற்றுவதற்கு இலங்கை உடன்பட்டுள்ள 'அதே மனப்பாங்குடன்' இந்தியா:

(அ) பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களாக அல்லது தனியாட்சியையோ பிரிவினைவாதத்தையோ பரிந்துரைப்பவர்களாகக் காணப்படும் இலங்கைப் பிரசைகள் அனைவரையும் நாடு கடத்தும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(ஆ) இலங்கைப் பாதுகாப்புப் படைகளுக்குப் பயிற்சி வசதிகளையும் இராணுவத் துணைக்கலப் பொருள் களையும் வழங்கும்

என்று அக்கடிதத்தின் வாசகம் 3 திட்டவட்டமாக வெளிப் படுத்துகின்றது.

## இந்திய இலங்கை ஒப்பந்தம் பற்றிய திறனாய்வு

தமிழர் பிரச்சினையின் தீர்வுக்காக இந்திய இலங்கை ஒப்பந்தம் வழங்கிய முன்மொழிவுகளின் தொகுதியை நாம் தீர்க்கமாக ஆராய்வோமாயின் இம்முன்மொழிவுகளின் எல்லா அம்சங்களையும் விரிவாக விளக்குவதற்கு இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் குறிக்கோள்களும் கருப்பொருளும் எமக்கு இடமளிக்காதிருப்பதனால் இத்திறனாய்வு அதன் சாராம்சத்தைச் சுருக்கமான ஒரு பகுப்பாய்வுக்கு உட்படுத் துகின்றது.

1986ஆம் ஆண்டு மே 4 முதல் 1986 திசெம்பர் 19வரை இந்திய அரசாங்கம், இலங்கை அரசாங்கம், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி ஆகியவற்றுக்கிடையில் பேசித்தீர்க்கப் பட்ட முழுமைபெறாத முன்மொழிவுத் தொகுதிகளின் திரட்டொன்று பிரச்சினையின் தீர்வுக்கான அடிப்படை யாக இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் பரிந்துரைக்கப்பட் டது. அவ்வேளையில் டிசெம்பர் 19 சட்டமென்று அழைக் கப்பட்ட இம்முன்மொழிவுகளின் தொகுதிகளை இந்திய அரசாங்கம் போராளிக் குழுக்களின் பரிசீலனைக்காக 1987 சனவரியில் சமர்ப்பித்தது.

அதே முன்மொழிவுகளின் தொகுதி 'பேச்சுவார்த்தை களின்போது முடிவு செய்யப்படாத எஞ்சிய விடயங்கள் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் தீர்க்கப்பட வேண்டும்' என்ற ஒப்புதலுடன் இந்திய இலங்கை ஒப்பந் தத்தில் இடம் பெற்று மீண்டும் போராளிக் குழுக்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது (குணசேகரத்துடன் நேர்காணல், 20 யூலை 2001). ஆனால் தமிழர்களுக்கு ஏமாற்றமும் கவலையும் அளிக்கத்தக்க இந்த எஞ்சிய விடயங்கள் கலந்தாராய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. இந்திய இலங்கை ஒப்பந்தத் தில் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை மிகத் தெளிவாக மீறுகின்ற வகையில் ஜெயவர்தனவின் ஆட்சி எஞ்சிய விட





யங்களைப் பரிசீலனை செய்ய மறுத்ததோடன்றி, பெரும் பாலான தீர்க்கப்படாத, பூரணமற்ற முன்மொழிவுகளின் திரட்டுகளைக்கொண்ட மாகாண சபைகள் சட்ட மூலம் மற்றும் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் ஆகிய இரு சட்டமூலங்களைப் பாராளுமன்றத்தில் அவசர அவசர மாகவும் நிறைவேற்றியது (பிரேமச்சந்திரனுடன் நேர்காணல், 7 யூன் 2001).

இச்சட்டமூலங்களின் திறனாய்வு சார்ந்த விளக்கம் இச்சட்டமூலங்களில் உத்தேசிக்கப்பட்டுள்ள மாகாண சபை என்ற ஒரு அமைப்பிற்குள் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்குடன் தமிழ் மக்களின் குறிப்பிடத்தக்க மனக் குறைகளில் கவனஞ்செலுத்தவில்லையென்ற முக்கியமான உண்மையை வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றது. மாறாக இச்சட்டங்கள் இலங்கையின் எல்லா மாகாணங்களுக்கும் வரையறுக்கப்பட்ட அரசியல் அதிகாரப் பகிர்வைக் கொண் டதும் மத்திய அரசாங்கத்தால் இறுக்கமாகக் கட்டுப் படுத்தப்படுகின்றதுமான நாடளாவிய அதிகாரப் பரவ லாக்கலின் உருவாக்கத்தை முன்மொழிந்தன. எனவே அரசின் கட்டளைகளை நிறைவேற்றுகின்ற உள்ளூர் நிரு வாக அமைப்புகளாக மாகாண சபைகள் தாழ்த்தப்பட்டன. அவை தமது தனிப்பட்ட தன்னாட்சி அதிகாரமெதனை யும் அனுபவிக்கவில்லை. மாகாண சபைகளின் செயற்பாடு களில் தலையிடுவதற்கும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் வரையறையற்ற அதிகாரங்கள் ஜனாதிபதி, ஆளுநர் மற்றும் பாராளுமன்றம் ஆகிய மத்திய அமைப்புகளுக்கு உரித் தாக் கப்பட்டன. இச்சட்டமூலங்களின் ஏற்பாடுகள் சாரத்தில் மத்தியிலிருந்து ஏனைய பிரதேசங்களுக்கு அதிகாரங்களைக் கையளிப்பதற்குப் பதிலாக மத்தியில் அதிகாரத்தின் முழு மையான ஒருமுகச் செறிவுக்கு இடமளித்தன (எதிரிசிங்க, 5 ஆகஸ்ட் 2000).

## இந்திய இலங்கை ஒப்பந்தம் தமிழ் மக்களின் நலன் களை உறுதிப்படுத்தியதா?

இந்தியா தமிழர்களின் நலனை உள்வாங்கிக்கொண் டதை விட அதன் சொந்தத் தந்திரோபாய நலன்களில் கூடிய அக்கறையுடையதாயிருந்ததெனச் சிலர் கூறுகின் றனர். எனினும் எல்லா அரசுகளுக்கும் அவற்றின் நிலப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பரப்பின்மீது அக்கறைகள் உள்ளனவென்பதை உணர வேண்டியது அவசியமானதே. இந்த எதார்த்தத்தைத் தமிழ் மக்கள் ஒப்புக்கொள்ளவும் ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். சமாதான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டவர்களின் உண்மையான அரசியல் அக்கறைகளை நாம் பகிரங்கமாக வெளிப்படுத்தவேண்டுமென்பது எதார்த்தவாதத்தின் இன்றியமையாத ஒரு பகுதி. எதார்த்தவாதமென்பது பயந்தாங் கொள்ளித்தனமல்ல.

தமிழ் மக்களின் நியாயமான அரசியல் நலன்கள் ஆசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் நியாயமான அரசியல் நலன்களைவிட முக்கியத்துவத்தில் குறைந்தவையல்ல. எனினும் இரண்டும் தவிர்க்கமுடியாத அளவிற்கு முரண்பாடானவையல்ல. மேலும் ஒன்றின்றி மற்றையதைச் சாதிக்க முடியாததாகவும் இருக்கலாம். ஆனால் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் இந்த அரசியல் எதார்த்தத்தை இந்தியா ஒப்புக்கொண்டுள்ளதைக் காட்டுகின்றனவா என்பது தான் கேள்வி.

இந்தியா அதன் அரசியல் நலன்களை உறுதிப்படுத்துவதில் அக்கறையாயிருந்ததென்பதை இந்திய இலங்கை ஒப்பந்தம் உருவானதன் சூழல் காட்டுகின்றபோதிலும் அதன் ஷரத்துக்கள் தமிழ் மக்களின் நியாயபூர்வமான நலன் களை உறுதிப்படுத்தியிருக்கக் கூடுமாவென்பது விடைகாணப் படவேண்டிய ஒரு கேள்வியாயுள்ளது. பிரதமர் ராஜீவ் காந்தி 1987 டிசெம்பரில் தமிழ் நாட்டில் ஒரு பொதுக் கூட்டத்தில் பின்வருமாறு கூறினார்:

*இலங்கைத் தமிழர்களுக்கு அவர்களின் உரிமைகளை நாம் உறுதிப்படுத்துவோம். தமிழர் இதுவரை மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளிலிருந்தும் வெகுதூரத்திற்கு அப்பால் ஒப்பந்தம் சென்றுள்ளது. அது முதல் தடவையாக தமிழர்களின் ஏறக்குறைய ஒவ்வொரு தனித்தனிப் பிரச்சினையையும் ஆராய்ந்து, அப்பிரச்சினைகளுக்குப் பதில்களைக் கண்டு, அப்பதில்களுக்கு உத்தரவாதம் அளிக்கின்ற ஓர் உடன்படிக்கை (தமிழ் ரைம்ஸ், 15 ஆகஸ்ட் 1988).*

இலங்கைத் த்மிழர்களின் உரிமைகள் தொடர்பில் பிரதமர் ராஜீவ் காந்தி கூறியது எந்த அளவுக்குச் சரி?





தமிழர் இதுவரை முன்வைத்த அனைத்து நடவடிக்கைகளிலிருந்தும் வெகுதூரத்திற்கு அப்பால் இந்திய இலங்கை ஒப்பந்தம் சென்றுள்ளதென்று அவர் பிரகடனப்படுத்திய போது அவர் கூறியது சரிதானா? இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தை நாம் ஆராய்ந்து பார்ப்போம். இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஆக்கபூர்வமான அம்சம் தமிழ்ப் போராளி இயக்கத்தை அது சட்டபூர்வமாக அங்கீகரித்தது. இந்திய இலங்கை ஒப்பந்தமானது இறைமை பொருந்திய இரு அரசுகளுக்கிடையில் செய்து கொள்ளப் பட்ட ஒப்பந்தமாயினும் தமிழ்ப் போராளி இயக்கத்தை ஒரு சட்டபூர்வமான இயக்கமாக அது அங்கீகரித்து ஏற்றுக் கொண்டதுடன் அதன் உறுப்பினர்களைப் 'போராளிகள்' என்றும் அழைத்தது. இந்திய இலங்கை ஒப்பந்தம் சர்வ தேசச் சட்டத்தில் தமிழ்க் கிளர்ச்சி இயக்கத்தின் சட்ட பூர்வ அந்தஸ்தை மேலும் திடப்படுத்துவதற்கு உதவியது.

## இந்திய இலங்கை ஒப்பந்தம் : குதிரைக்கு முன் வண்டியைக் கட்டும் செயல்

தமிழ் மக்களின் எதிர்ப்பின் நியாயங்களை அங்கீகரித்ததன் பின்னர் இந்திய இலங்கை ஒப்பந்தமானது போராளி இயக்கம் எதற்காகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததோ அப்போராட்டத்தின் மைய விடயங்களில் உடன்பாடு எட்டப்படுவதற்கு முன்னர் போராளி இயக்கங்களின் ஆயுதங்களைக் களைய முனைந்தது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் 2.15 பிரிவின்படி ஒப்பந்தம் கையெழுத்தாகி ஆறுவாரங்களுக்குள், 1986மே 4க்கும் 1986 திசெம்பர் 9க்கும் இடைப் பட்ட காலத்தில் பேச்சு வார்த்தைகளின் மூலம் எட்டப் பட்ட முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்வதென்றும், இக் கால கட்டத்தில் இறுதி முடிவு எட்டப்படாமல் இருந்த எஞ்சிய முக்கிய விடயங்களுக்குத் தீர்வு காணவேண்டும் என்றும் நிபந்தனை விதித்தது.

ஒருபுறத்தில் ஒப்பந்தத்தின் ஐந்து நாட்களினுள் ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட வேண்டுமென வலியுறுத்திய இந்திய இலங்கை ஒப்பந்தம் மறுபுறத்தில் தமிழர் போராட்டம் தொடர்பான முக்கியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேலும் ஆறுவார கால அவகாசத்திற்கு வழி வகுத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் ஏ.பீ. வெங்கடேஸ்வரன் 1987 ஆகஸ்ட் 13ஆம் தேதியன்று வெளிப் படுத்திய பின்வரும் கூற்று இந்நிலைமை தொடர்பான அவரது ஆழமான பார்வையை வெளிப்படுத்தியது:

> இலங்கை ஜனாதிபதி திரு. ஜெயவர்தனவின் அணுகுமுறையும் இனப்பிரச்சினையில் அவரது மனோநிலையில் மாற்றத்தை ஏற்படுத்திய சூழ்நிலைகளும் கவனிக்கப்படவேண்டும். அவர் அனுதாபமற்றவராக இருந்ததுடன் 1983இல் பிற்சேர்க்கை Cஇல் காணப்பட்ட தீங்கற்ற வாசகங்களைக் கூட எதிர்த்தவர். தப்பித்துக் கொள்வதற்கான வழி வகைகளை அளவுக்கதிகமாகக் கொண்டுள்ளதாகத் தோன்றுகின்ற ஒப்பந்தம் அவசர அவசரமாகக் கைச்சாத்திடப் பட்டமைதான் எனக்குக் கவலையளிக்கின்றது

> இந்திய அரசாங்கம் தமிழர்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக் கப்படும் விடயத்தைத் தீர்மானிப்பதற்குப் பதிலாக முடிவில் ஓர் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதெனவும் பின்னர் அதிகாரப் பகிர்வுப் பிரச்சினையைத் தீர்ப்பதெனவும் தீர் மானித்திருந்தது ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட முறை குதிரைக்கு முன் வண்டியைப் பூட்டுவதற்கு ஒப்பானதாயுள் ளது. இலங்கை அரசாங்கம் எதற்காக அதிகாரப் பகிர்வை அமுல் செய்ய வேண்டும்? அவர்கள் முட்டாள்களல்ல. ஒப்பந்தத்தின்கீழ் அதிகாரப் பகிர்வெதுவும் நடைபெற மாட்டாது. நாம் புகுந்தவேளையில் இருந்ததைவிட மோசமான சூழ்நிலைகளில் இலங்கையை நாம் விட்டுச் செல்ல வேண்டியிருக்கும் (த ஹிந்து 13 ஆகஸ்ட் 1987).

குதிரைக்கு முன் வண்டியைப் பூட்டினால் வண்டியால் அசைய முடியாது. 1987ஆம் ஆண்டு யூலை 29ஆம் தேதியன்று கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை, 1985ஆம் ஆண்டு ஆகஸ்டில் திம்புவில் தமிழ்ப் போராளி இயக்கங்களின் கூட்டானதும், ஏகமனதுடனான நிலைப்பாடாக உருப்பெற்ற தமிழர் போராட்டத்தின் முக்கிய விடயங்களில் கூட கவனஞ்செலுத்தத் தவறியது.

தமிழ்த் தேசிய பிரச்சினைக்குப் பயனுள்ள தீர்வெதுவும் ஏற்பட வேண்டுமாயின், திம்புவில் சமர்ப்பிக்கப்பட்ட பின்வரும் நான்கு முதன்மைக் கோட்பாடுகளை அடிப்படை





யாகக் கொண்டிருக்கவேண்டுமென்பது இந்நூலாசிரியரின் ஆழ்ந்தாராய்ந்த கருத்தாகும்.

தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரித்தல் தமிழர் போராட்டத்தின் மையக்கருவாக விளங்கியது. பல தசாப்தங்களாக மிகைப்படுத்தப்பட்ட சிங்கள தேசிய வாதத்தை இலங்கைத் தேசியவாதத்திற்கு மாற்றாகப் பயன் படுத்துவதை இத்திம்புப் பிரகடனமானது பகிரங்கமாகவும் வெளிப்படையாகவும் கேள்விக்குள்ளாக்கியது. மேலும் இலங்கையில் ஒரு தமிழ்த் தேசியம் வாழ்ந்து வருதலை மறுதலிப்பதன் மூலம் இலங்கைத் தேசியவாதம் என்கின்ற பொய்யான கருத்தினுள் தமிழ் மக்களை உள்ளீர்ப்பதற்கும் சிங்கள இனத்துடன் கலந்துவிடுவதற்கும் முனைந்தது.

சிங்கள மக்களுக்கு நிரந்தரமானதும் ஆதிக்கம் செலுத்தக்கூடியதுமான பெரும்பான்மைக் குரலை வழங்கு வதற்கு ஓர் ஒற்றையாட்சி அமைப்பிற்குள் தமிழ் மக்களை சிங்களவர்களுடன் கலந்துவிடும் சிங்கள மேலாதிக்கத்தின் முயற்சி பலனளிக்கவில்லை. ‘உள்ளீர்ப்பதற்கான’ இம் முயற்சிதான் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்துக்கு வழிவகுத்தது. இந்த அடிப்படை யதார்த்தத்தைக் கண்டு ணர்ந்ததன்பேரில்தான் திம்புவில் தமிழ்ப் பேராளர் குழு பின்வருமாறு பிரகடனப்படுத்தியது:

> நீங்கள் எம்மை ஒரு மக்கள் குழுவாகக் கருதுகின்றீர்களா இல்லையாவென்று தயவுசெய்து நேரடியாகச் சொல்லுங் கள். சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் எழுந்துள்ள பிரச்சினைகள் பற்றிய ஒரு காத்திரமான பேச்சுவார்த்தையில் உங்களை ஈடுபடுத்துவதற்காகவே நாம் இங்கு வந்திருக்கின்றோம். அதனால்தான் ஒரு நியாய மான மக்களென்ற வகையில் தொடக்கத்திலேயே நாம் உங்களிடம் கேட்கின்றோம், நீங்கள் யாருடன் பேசுவதா கக் கூறுகின்றீர்களென்று தயவுசெய்து எமக்குச் சொல்லுங் கள் எமது தரப்பில் நாம் திம்புவிலாயினுஞ்சரி வேறெங் கிலுமாயினுஞ் சரி, தமிழ்த் தேசிய இனத்தின் சார்பாகப் பேசுவோமேயன்றி வேறெவ்வகையிலும் பேசமாட்டோ மென்று மனக்காழ்ப்பின்றியும் பொறுமையுடனும் இங்கு திம்புவில் நாம் பிரகடனப்படுத்துகின்றோம் (தமிழ் விடு தலை அமைப் புக்களின் கூற்று, 17 ஆகஸ்ட் 1985).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எவ்வாறாயினும் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையிலான முரண்பாட்டுக்கான அரசியல் தீர்வொன்று தமிழ் மக்களின் இருப்பை ஒரு மக்களாக ஒப்புக்கொள்வதன் மூலம் தொடங்கப்பட வேண்டும். ஆனால் சமாதான ஒப்பந்தம் இந்த உண்மையான அரசியல் பிரச்சினையில் கவனஞ் செலுத்த மறுத்தது.

## இந்திய இலங்கை ஒப்பந்தம்: அதிகாரப் பகிர்வா? அதிகாரப் பரவலாக்கமா?

இலங்கையில் தமிழ்த் தேசிய இனம், சிங்களத் தேசிய இனம் என இரு தேசிய இனங்கள் இருப்பதை இந்திய இலங்கை ஒப்பந்தம் அங்கீகரிக்கவில்லை. மேலும், ஓர் உண்மையான சமஷ்டி அரசியல் யாப்பினுள் இவ்விரு தேசிய இனங்களுக்குமிடையில் அதிகாரம் பகிரப்பட வேண்டியதன் அவசியத்தை ஒப்பந்தம் உணரவில்லை. சமாதான ஒப்பந்தத்தின்கீழ் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக இலங்கை அரசாங்கம் சமர்ப்பித்த இலங்கை அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளில் அதிகாரப்பகிர்வு உதட்டளவில் மட்டுமே காணப்பட்டது.

ஆனால் அதிகாரப் பகிர்வு என்பது, ஒரு உயர்ந்த அமைப்பிடமிருந்து அதன் உறுப்பு அமைப்புக்களுக்கு அதிகாரங்கள் 'பகிரப்படுதலை'க் குறிக்கும். இங்கு உயர்ந்த அமைப்பென நாம் கருதுவது சிங்கள ஆதிக்கம் மிகுந்த மத்திய அரசாங்கத்தையே. அவ்வாறெனில், அதிகாரங்கள் பகிரப்பட்டாலும் கூட, எந்தவேளையிலும் அவ்வதிகாரங்களை அவர்கள் திரும்பவும் தமது கைகளில் எடுத்துக் கொள்ள முடியும் என்ற உண்மையும் புரிந்துகொள்ளப் பட்டிருக்க வேண்டும். அரசியல் யாப்பு கோட்பாட்டிலும் நடைமுறையிலும் சமஷ்டி முறைக்கும் அதிகாரப்பரவலாக்கலுக்கும் உள்ள வேறுபாட்டையே இதுகாட்டுகிறது. பேராசிரியர் கிளெயர் பல்லேயின் சொற்களில் கூறுவதாயின்:

அரசாங்கத்தின் அதிகாரங்கள் தனியொரு மத்திய அதிகாரசபையின்கீழ் ஒழுங்கமைக்கப் பட்டுள்ள அதே வேளையில் மத்திய அரசாங்கம் உச்ச உயர்நிலையான சட்டவாக்க அதிகாரத்தைப் பிரயோகிக்கக்கூடியதாக உள்ளூராட்சி அலகுகளின் அதிகாரங்கள் மத்திய அர





சாங்கத்தின் தாட்சணியத்தில் வைத்திருக்கப்படுமாயின் அந்த அரசியலமைப்பு ஒற்றையாட்சியென விவரிக்கப்படுகின்றது. அரசாங்கத்தின் அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்துக்கும் உள்ளூராட்சி அரசாங்கத்துக்குமிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டனவாகவும் மத்திய அதிகாரம் ஆட்சிப் பிரதேச அலகுகளுக்கு உறுதிப்படுத்தப்பட்ட அதிகாரங்களால் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருக்குமாயின் அது சமஷ்டி அரசாகும் (மேற்கோள் சத்தியேந்திரா, 1988: 8).

ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறையிலான இந்திய இலங்கை ஒப்பந்தமானது அதிகாரம் தொடர்ந்தும் சிங்கள ஆதிக்கம் நிறைந்த மத்திய அரசாங்கத்திடமே இருப்பதற்கு வழிகோலுவதாக இருந்தது. அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் இலங்கையின் அரசியலமைப்பு நீதிமன்றத்தில் தோற்றிய வழக்கறிஞர் வெளிப்படுத்தியதாவது:

இந்தியா ஒரு சமஷ்டி அரசு. ஒரு சமஷ்டி அரசில் மத்திய அரசாங்கத்திற்கு அதன் சமஷ்டி அலகுகள்மீது உயர் உச்சநிலைக் கட்டுப்பாடு இல்லை. இலங்கை ஓர் ஒற்றையாட்சி அரசு. மாகாண சபைகள் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டவையல்ல. ஜனாதிபதியின் கட்டளைகள் மேலோங்கியுள்ளன. மாகாண சபைகள் தேசியக் கொள்கையைப் பாதிக்கின்ற எந்தவொரு விடயத்திலும் சட்டமெதனையும் ஆக்குதலாகாது (மேற்கோள் சத்தியேந்திரா, 1988: 8).

## மொழிப் பிரச்சினை: அரசாங்கத்தின் நிலைப்பாடு

மொழிப் பிரச்சினை தொடர்பில் இந்திய இலங்கை ஒப்பந்தம் விசித்திரமான வார்த்தைகளைக் கொண்ட ஓர் ஏற்பாட்டைக் கொண்டுள்ளது. வாசகம் 2.18இல் அது கூறுவதாவது: 'இலங்கையின் அரசகரும மொழி சிங்களமாக இருத்தல் வேண்டும். தமிழும் ஆங்கிலமும்கூட அரசகரும மொழிகளாயிருக்கும்'. இவ்வேற்பாடு 'சிங்களம் மட்டும் - தமிழும்கூட' என்ற 1956 சுலோகத்தை நீடித்திருக்கச் செய்கின்றது. அதாவது 'சிங்களம் மட்டும்' என்றால், 'தமிழும்கூட' என்று வைத்திருப்பது என்ன வகையில் சாத்தியம்? சொல்லளவில் அது ஒரு முரண்பாடு. இன்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'இலங்கையின் அரசகரும மொழி சிங்களமாக இருத்தல் வேண்டும்' என்று தெளிவான சொற்களில் கூறுகின்ற ஓர் இந்திய இலங்கை ஒப்பந்தம் எமக்கிருக்கின்றது. இலங்கையின் அரசகரும மொழி சிங்களமாக இருந்தால் 'தமிழும் ஆங்கிலமும்கூட அரசகரும மொழிகளாக இருக்கும்' என்று சேர்த்துக் கொள்வதன் கருத்தென்ன? அவை துணைமையான அரசகரும மொழிகளா? சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்தைக் கொடுப்பது இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்களின் நோக்கமாக இருந்திருக்குமாயின் ஒப்பந்தம் ஏன் அதனை அவ்வாறு எளிமையான முறையில் கூறி, இலங்கையின் அரசகரும மொழிகள் சிங்களமும் தமிழுமாக இருத்தல் வேண்டும்' என்று பிரகடனப் படுத்தவில்லை?

இந்திய இலங்கை ஒப்பந்தம் அத்தகைய எளிமையான, ஒளிவுமறைவற்ற மொழியைப் பயன்படுத்துதலைத் திட்டமிட்டு கவனமாகத் தவிர்க்கின்றது. 1978 அரசியலமைப்பின்கீழ் தமிழ் ஒரு தேசிய மொழியாக இருந்தது. எனவே அந்தளவுக்கு அரசகரும மொழியெனக் கொள்ளத்தக்கதாக இருந்ததென்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். 1978 அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்ததைவிடக் கூடுதலாக எதனையும் இந்திய இலங்கை ஒப்பந்தம் கூறியதா? 'அரசகருமம்' என்பது எந்தளவுக்கு அரசகருமம்? என்பதுதான் கேள்வி.

இந்திய இலங்கை ஒப்பந்தம் திட்டவட்டமாகச் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்தை வழங்கவில்லை. அது எல்லாப் பதிவுச் சான்றுகளும் சிங்களத்திலும் தமிழிலும் பேணப்படுமென்பதை உறுதிப்படுத்தவோ அல்லது அரசாங்க ஊழியர்கள் அனைவரும் சிங்களத்திலும் தமிழிலும் தேர்ச்சிபெற்றிருப்பார்கள் என்பதற்கு உத்தரவாதமளிக்கவோ இல்லை. அதுதான் சிங்களமும் தமிழும் இலங்கையின் அரசகரும மொழிகளாகப் பிரகடனப் படுத்துவதன் நடைமுறை விளைவாக இருந்திருக்கும். உண்மையில் இந்திய இலங்கை ஒப்பந்தம்- சிங்களம் மட்டும், ஆனால் தமிழும் கூட - என்ற பழைய நழுவல் போக்கைக் கொண்டது. சட்டத்திற்கும் அதனை அமுல்படுத்துவதற்கும் இடையிலான, கோட்பாட்டுக்கும் நடைமுறைக்கும் இடையிலான பெரும் பள்ளம் முன்னர் இருந்தவாறு தொடர அனுமதிக்கப்பட்டது.





எனவே இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் உடன்பட்டதற்கு இணங்கி செயற்படுதல் எனக் கருதப்பட்ட 1987 செப்ரெம்பரில் ஜனாதிபதி ஜெயவர்தனவால் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் சிங்களம் தான் அரசகரும மொழியாக இருத்தல் வேண்டுமென்ற 1978 அரசியலமைப்பு ஏற்பாட்டைத் திருத்துவதற்கு எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்பதில் வியப்பதற்கொன்றுமில்லை. தமிழை ஒரு 'தேசிய' மொழியாகப் பிரகடனப் படுத்திய 1978 அரசியலமைப்பு ஏற்பாடே இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்குப் போதுமானது என்று இலங்கை அரசாங்கம் கருதுமென்பதில் சந்தேகமில்லை.

## தமிழர் பாரம்பரியத் தாயகம் பற்றி இந்திய இலங்கை ஒப்பந்தம்

ஒரு தாயகம் பற்றிய முக்கிய பிரச்சினையில் இந்திய இலங்கை ஒப்பந்தம் ஒரேசமயத்தில் இரு வழிகளிலும் நோக்க முயற்சிக்கின்றது. வாசகம் 1.4 பிரகடனப்படுத்துவதாவது: 'வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இலங்கைத் தமிழர்களின் வரலாற்றுக் குடியிருப்புப் பிரதேசங்களாக இருந்துள்ளன. அவர்கள் இதுகாலவரை எல்லாக் காலங்களிலும் இவ்வாட்சிப் பிரதேசத்தில் ஏனைய இனக் குழுக்களுடன் ஒன்றாக வாழ்ந்துவந்துள்ளனர்.'

இந்திய இலங்கை ஒப்பந்தம் இங்கு எதையோ சொல்ல நினைக்கிறது. ஆனால் உண்மையில் அது எதனைச் சொல்ல நினைக்கிறது? ஒருபுறத்தில் அது, 'வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் வரலாற்றுக் குடியிருப்புப் பிரதேசங்களாக இருந்துள்ளன' என்று கூறுகின்றது. அதன் பின்னர் அது, தமிழர் இதுகாலவரை எல்லாக் காலங்களிலும் இவ்வாட்சிப் பிரதேசத்தில் ஏனைய இனக் குழுக்களுடன் சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளனரெனக் கூறுகின்றது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்படி யாழ்ப்பாணத்தில் கூடத் தமிழர் 'இதுவரை எல்லாக் காலங்களிலும் ஏனைய இனக்குழுக்களுடன் ஒன்றாக வாழ்ந்து வந்துள்ளனர் என்பதாகும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனால் அத்தகைய ஐயத்துக்குரிய வரலாற்று உண்மைகள் ஒருபுறமிருக்க, இந்திய இலங்கை ஒப்பந்தம் தமிழர் தாயகமொன்று உள்ளமையை ஒப்புக்கொள்ள மறுக்கின்றது என்பதுதான் அதிலுள்ள அடிப்படையான அரசியல் செய்தி. ஒருபுறத்தில் தமிழ்த் தேசிய இனமொன்று உள்ளமையை அது ஒப்புக்கொள்ள மறுப்பதுடன் மறுபுறத்தில் தேசிய விழிப்புணர்வுக்கான பிணைப்புக்களைப் பிறப்பித்த ஒரு தாயகம் உள்ளமையையும் அது ஒப்புக்கொள்ள மறுக்கின்றது.

இந்திய இலங்கை ஒப்பந்தம் திம்புப் பிரகடனத்தின் முதலாவது கோட்பாட்டை நிராகரித்ததுடன் மட்டுமன்றி இரண்டாவது கோட்பாட்டையும் மேலும் வலியதாக மூன்றாவது கோட்பாட்டையும் நிராகரித்தது. ஏனெனில் இந்திய இலங்கை ஒப்பந்தம் தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் சமமானவர்களாக அமர்ந்து இரு மக்களும் சமத்துவமாக வாழக்கூடிய அரசியற் கட்டமைப்பைத் தீர்மானிப்பதற்கான தமிழ் மக்களின் உரிமையை மறுத்தது. உண்மையில் சுயநிர்ணய உரிமை என்பது அதுதான்.

## பொதுமக்கள் வாக்கெடுப்பென்ற மோசடி

தமிழ்த் தேசிய விழிப்புணர்வின் அரசியல் எதார்த்தத்தை அவர்கள் ஒப்புக்கொள்ள மறுப்பதிலிருந்து ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் உருவாக்கக்கூடிய நெருக்கடிகளை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்கள் கருத்தில் கொள்ளாது விடவில்லை எனத் தோன்றுகிறது. இந்திய இலங்கை ஒப்பந்தம் ஒரு மூடிமறைப்பிலும், ஏமாற்று வித்தையிலும், மக்கள் வாக்கெடுப்பென்ற ஒரு ஏமாற்றுவித்தையிலும் ஈடுபட்டது.

இந்திய இலங்கை ஒப்பந்தம் தமிழர் தாயகமொன்று உள்ளமையை ஒப்புக்கொள்ள மறுத்த அதேவேளையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒரு நிர்வாக அலகாக ஒன்றாக இணைவதற்கு ஏற்பாடு செய்தது. எனினும் இது கிழக்கு மாகாணம் ஒரு சாதாரண பெரும்பான்மைமூலம் பிரிந்துசெல்லவும் அதன் சொந்த நிருவாக அலகைத் தெரிவுசெய்யவும் கூடியதாக 1988 டிசெம்பருக்கு முன்னர் நடத்தப்படவிருந்த ஒரு மக்கள் தீர்ப்புக்கு உட்பட்டதாயிருந்தது.





வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை ஒரு தாயகமாக முதல் தோற்றத்திலேயே கோருவதற்குத் தமிழ் மக்களுக்கு உரிமையுள்ளதென ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தாலன்றி இரு மாகாணங்களையும் ஏன் ஒன்றாக இணைக்க வேண்டும்? தமிழ் மக்களுக்கு முதல் தோற்றத்திலேயே அத்தகைய உரிமைக் கோரிக்கை இருந்திருக்குமாயின், அம் மக்களில் ஒரு பிரிவினர் வசிக்கின்ற கிழக்கு மாகாணத்துக்கு வரையறுக்கப்பட்ட ஒரு மக்கள் தீர்ப்பின் முடிவின் மூலம் எந்த வகையில் அத்தகைய உரிமைக்கோரிக்கையைத் தோற்கடிக்க முடியும்?

ஆனால் உண்மையில் இரு மாகாணங்களினதும் இணைப்பானது ஒரு தற்காலிக நெருக்கடியை வெற்றிகரமாகக் கையாள்வதற்கான ஒரு தற்காலிக ஏற்பாடு என ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்களில் ஒருவர் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். 1987ஆம் ஆண்டு யூலை 29ஆந் தேதியன்று ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர் அதாவது 1987ஆம் ஆண்டு யூலை 26ஆந் தேதியன்று 1200 பேர் அடங்கிய ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் (National Executive Council) உரையாற்றிய ஜனாதிபதி ஜெயவர்தன பின்வருமாறு வெளிப்படுத்தினார்:

> ஒரு விடயத்தை மட்டும்தான் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இது வடக்கினதும் கிழக்கினதும் ஒரு தற்காலிக இணைப்பு. கிழக்கிலுள்ள மக்கள் இவ்விணைப்புக்கு ஆதரவா இல்லையா என்பதை அவர்கள் தீர்மானிக்கத் தக்கதாக அடுத்த ஆண்டின் இறுதிக்குள் ஜனாதிபதியால் முடிவு செய்யப்படும் ஒரு நாளில் மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பொன்று நடத்தப்படும். இது ஒரு சாதாரண பெரும்பான்மை வாக்கு மூலம் தீர்மானிக்கப்படும் அம்பாறையை உள்ளடக்கிய கிழக்கு மாகாணத்தில் 33% முஸ்லிம்கள், 27% சிங்களவர் மற்றும் எஞ்சிய 40% தமிழர் உள்ளனர். இத் தமிழர்களிலும் இருவகையினர் இருக்கின்றனர்.
>
> அவர்களில் அரைப்பங்கிற்குக் கூடியவர்கள் மட்டக்களப்புத் தமிழர், எஞ்சியோர் யாழ்ப்பாணத் தமிழர். ஆகவே யாழ்ப்பாணத் தமிழர் 20%ஆக இருப்பார்களாயின் 60% அத்தகைய ஓர் இணைப்பை எதிர்ப்பார்களென நான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நம்புகின்றேன். திரு. தேவநாயகமும் திரு. மஜீதும் அவ்வாறு தான் எனக்குக் கூறியுள்ளனர். எனவே மத்திய அரசாங்கத்தால் மக்கள் கருத்து வாக்கெடுப்பொன்று நடத்தப்பட்டு கிழக்கு மக்களின் அங்கீகாரம் கோரப்படுமாயின், அங்குள்ள பெரும்பான்மையினர் அதனை எதிர்ப்பார்களென நான் நினைக்கின்றேன். அத்துடன் இணைப்பு முடிந்துவிடும். இத்தற்காலிக இணைப்பினால் எமக்குக் கிடைக்கும் ஆதாயம் என்ன? என்று கேட்ட ஜனாதிபதி, பயங்கரவாத இயக்கத்துக்கு அது ஒரு முடிவைக் காணும்" என்று கூறினார் (ஸ்ரீ லங்கா நியுஸ், 29 யூலை 1987: 3).

ஒப்பந்தத்தைத் தொடர்ந்து உடனடியாக நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இணைப்புக்கு எதிராகப் பிரச்சாரம் செய்வாரென்று ஜனாதிபதி ஜெயவர்தன உறுதிப்படுத்தினார் (ஸ்ரீலங்கா நியுஸ், 29 யூலை 1987: 2). ஒப்பந்தத்துக்கு மறுதரப்பான பிரதமர் ராஜீவ் காந்தி சனாதிபதி ஜெயவர்தன கூறியதை எவ்வேளையிலும் மறுதலித்ததில்லை.

## இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் நிபந்தனைகள்

இந்திய இலங்கை ஒப்பந்தம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தம். இது ஆசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் அரசியல் நலன்களை உறுதிப்படுத்தியது. இந்தியாவின் தந்திரோபாய அக்கறைகள் மீதான அதன் கவலைகளைத் தணிப்பதற்கு இலங்கை மறுத்திருக்குமாயின் அவ்வாறான ஒரு கூற்றுக்கு இலங்கை உடன்படுகின்ற அத்தகைய ஒரு காலம்வரை இந்தியா தமிழ்ப் போராளி இயக்கத்தைத் தொடர்ந்து ஆதரித்திருக்கும். இந்திய இலங்கை ஒப்பந்தமானது:

1. 'எஞ்சிய விடயங்கள்' என்று கூறப்படுபவை பேசித் தீர்க்கப்படுவதற்கு முன்னரே தமிழ்ப் போராளி இயக்கம் ஆயுதங்களைக் களையவேண்டுமென வலியுறுத்தியது.
2. திம்புப் பிரகடனத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை நிராகரித்தது.
3. இலங்கைத் தமிழர்களை ஒரு தேசிய இனமாக ஒப்புக்கொள்ள மறுத்தது.





4. தமிழ் மக்களுக்கு ஒரு தாயகம் உள்ளதென்பதை ஒப்புக்கொள்ள மறுத்ததுடன் ஒரு மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பென்ற நழுவல்போக்கின் மூலம் அவ்விடயத்தை மழுப்புவதற்கும் முனைந்தது.
5. தமிழ் மற்றும் சிங்கள தேசிய இனங்களுக்கிடையில் அதிகாரம் பகிர்ந்துகொள்ளப்படும் சமஷ்டி அரசியலமைப்பொன்றை உருவாக்க மறுத்தது.
6. இலங்கைத் தீவிலுள்ள மக்களுக்கு 'தமிழ்நாடு போன்ற' அரசியலமைப்பு முறையொன்றைக்கூட உருவாக்கவில்லை.

இந்திய இலங்கை ஒப்பந்தம் ஒன்பது மாகாண அலகுகளுக்கு அதிகாரத்தைப் பகிர்வதற்கும் அவ்வாறு 'பகிரப்பட்ட' அதிகாரத்தின்மீது சிங்கள மேலாதிக்க மத்திய அரசாங்கம் கட்டுப்பாட்டையும் விதிமுறையையும் பிரயோகிப்பதற்கு முனைந்தது. மேலும் மாகாண அலகுகளுக்கு அவ்வாறு கைமாற்றப்பட்ட அதிகாரத்தின் அளவு, காணி பராதீனப்படுத்தலை விலக்கியதாயிருந்த 1957இன் பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அளவுக்குக்கூட இருக்கவில்லை. நிதியென்ற முக்கிய விடயத்தைப் பொறுத்தவரையில் இந்திய இலங்கை ஒப்பந்தமானது மாகாண சபைகள் சிங்கள மேலாதிக்க மத்திய அரசாங்கத்தின் தயாள குணத்தில் தங்கியிருக்க விட்டுவிடுவதுடன் திருப்தியடைந்தது.

உண்மையில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தினால் வழங்கப்பட்டது அதிகாரப் பகிர்வுகூட அல்ல. மாறாக மாகாணங்களை நிருவகிப்பதற்கு மத்தியின் அதிகாரத்தை மேம்படுத்தக்கூடிய நிர்வாகப் பன்முகப்படுத்தலே வழங்கப்பட்டது.

## இந்திய இலங்கை ஒப்பந்தம் இந்தியாவின் தந்திரோபாய நலன்களை உறுதிப்படுத்தியது

ஒப்பந்தத்தில் இந்தியாவின் தந்திரோபாய நலன்களை உறுதிப்படுத்திய அம்சங்களை நாம் இப்போது ஆராய்ந்து பார்ப்போம். இலங்கை ஜெயவர்தனவின் கீழான வலதுசாரி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஆட்சிபீடமேறியதைத் தொடர்ந்து இந்தியாவின் செல்வாக்குப் பரப்பி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விருந்து விலகி மேற்குலக ஏகாதிபத்திய சக்திகளின் மையத்தை நோக்கி நகர்ந்தது. இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கை, தமிழர் விடுதலை இயக்கத்தை நசுக்குவதற்கான அதன் திடசங்கற்பம், பிராந்தியத்தில் இந்தியாவின் மேலாதிக்கம் பற்றிய சிங்கள மக்களின் அச்சம் என்பவை ஜெயவர்தனவை இப்போக்கின்பால் உந்தித் தள்ளின. இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தைக் கருத்திற் கொள்கையில் அத்தகைய ஒரு போக்கு இந்திய மக்களுக்கு எரிச்சலூட்டியது.

மேலும் இஸ்ரேலிய உளவுத்துறையினரின் கவிழ்ப்பு நடவடிக்கைகள், தமிழ் கெரில்லாக்களுக்கு எதிரான யுத்தத்தில் வெளிநாட்டுக் கூலிப்படைகளின் உள்வாங்கல், பாகிஸ்தானால் வழங்கப்பட்ட இராணுவ உதவியும் பயிற்சி வசதிகளும், அமெரிக்க மற்றும் மேற்கு ஜேர்மானிய ஒலி பரப்பு நிலையங்களின் ஒளிவுமறைவான தொழிற்பாடுகள், திருகோணமலையிலுள்ள எண்ணெய்த் தாங்கிப் பண்ணைகளைச் சுவீகரிப்பதற்கான அமெரிக்காவின் முயற்சி என்பவை பிராந்தியத்தில் சமாதானத்திற்கும் உறுதிப்பாட்டிற்கும் பாரதூரமான அச்சுறுத்தலை ஏற்படுத்தின (டிக்ஸிற் 1998: 31 - 39). எனவே இத்தீவைத் திரும்பவும் இந்தியாவின் செல்வாக்குப் பரப்பினுள் கொண்டுவருவதற்கும் சர்வதேச கவிழ்ப்புச் சக்திகளின் ஊடுருவலை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் இலங்கையுடன் சமாதானத்திற்கும் நட்புறவுக்குமான ஓர் ஒப்பந்தம் இந்தியாவின் பிரதான நோக்கமாகியது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் முக்கியமான குறிக்கோள் பின்வரும் தந்திரோபாய நலன்களை உறுதிப்படுத்துவதாயிருந்தது :

1. இந்திய இலங்கை ஒப்பந்தம் பிராந்தியத்தில் இந்தியாவின் தந்திரோபாயச் செல்வாக்குப் பரப்பினுள் இலங்கையைக் கட்டுப்படுத்தியது.

2. அது இலங்கையில் வெளிநாட்டுக் கூலிப்படைகள் ஈடுபடுத்தப்படுதலை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது.

3. அது இலங்கையில் இஸ்ரேலிய உளவுத்துறை முகவரகங்களின் நடவடிக்கைகளை நிறுத்தியது.





4. அது வெளிநாட்டு ஒலிபரப்பு நிறுவனங்கள் அவற்றின் வசதிகளை இலங்கையில் இராணுவ மற்றும் 'உளவு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துலைத் தடுத்தது.

5. அது திருகோணமலை எண்ணெய்த் தாங்கிப் பண்ணையைப் புதுப்பித்துத் தொழிற்படுத்துகின்ற பொறுப்பை இந்தியா மேற்கொள்வதற்கு இடமளித்தது.

6. அது திருகோணமலையை அல்லது இலங்கையிலுள்ள வேறேதேனும் துறைமுகத்தை 'இந்தியாவின் நலனுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய முறையில்' எந்த ஒரு நாடும் இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்துதலைத் தடுத்தது.

இவ்வாறு இந்திய இலங்கை ஒப்பந்தம் இந்தியாவின் அரசியல் நலன்களையும் தந்திரோபாயக் குறிக்கோள்களையும் உறுதிப்படுத்தியது.

## இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் தோல்விக்கான காரணங்கள்

உள்நாட்டில் மனித உரிமை நிறுவனங்களும் சமாதான நோக்குடைய 'தொண்டு நிறுவனங்கள்' உட்பட இலங்கையிலுள்ள இடதுசாரி மற்றும் சமூக சனநாயகச் சக்திகளும் ஒப்பந்தத்தை வரவேற்றன. மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வீ.பீ.) அதன் பாரம்பரிய இந்திய மேலாதிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டுடனும் இனப் பெரும்பான்மைக் கருத்துடனும் ஒப்பந்தத்தை எதிர்த்தது.

பிரதமர் ஆர். பிரேமதாச தமது எதிர்ப்பைப் பகிரங்கமாக வெளிப்படுத்தினார். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மீதும் யுத்த நிறுத்தத்தின்மீதும் தமது விருப்பமின்மையைப் பகிரங்கமாக வெளிப்படுத்திய மற்றோர் அமைச்சரான உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் வைபவம் தொடர்பான அனைத்து நிகழ்ச்சிகளையும் தவிர்த்தார்.

எல்ரீரீஈ தவிர்ந்த தமிழ் அரசியல் - இராணுவ அமைப்புக்கள் எல்லாம் ஒப்பந்தத்தை ஓர் 'இடைக்காலத் தீர்வாக'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏற்றுக்கொண்டபோதிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்பை நிபந்தனைக்குட்படுத்திய 'மக்கள் கருத்துக்கணிப்பு வாசகம்' மீது எதிர்ப்பை வெளிப்படுத்தின.

1987ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இந்திய அமைதிப் படைக்கும் எல்ரீரீஈக்குமிடையில் வெடித்த யுத்தமானது, தமிழர் மத்தியில் ஒப்பந்தம் உருவாக்கியிருந்த மனநிறைவை சடுதியாகத் தகர்ப்பதற்கு வழிவகுத்ததுடன் இழப்புக்களும் அழிவுகளும் இறப்புக்களுமென்ற ஒரு புதிய கட்டத்தின் ஆரம்ப அறிகுறியாகவும் விளங்கின.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் தோல்விக்கு முக்கிய காரணம் அதில் கைச்சாத்திட்டவர்கள் தமிழ்த் தேசிய வாதத்தின் அரசியல் எதார்த்தத்தை ஒப்புக்கொள்ள மறுத்தமையாகும். இலங்கைத் தமிழ்த் தேசியவாதம் ஒன்று உறுதியாக இருப்பதனை மறுக்காமல் அதனை ஏற்றுக் கொண்டு அங்கீகரிக்கும் வகையிலான ஓர் அரசியல் யாப்பை உருவாக்க வேண்டுமென்ற தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையினை நிறைவேற்றுவதில் பிரதமர் ராஜிவ் காந்தி அவர்கள் தனது முழுப்பலத்தையும் பிரயோகிக்கத் தவறிவிட்டார்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தால் தமிழ்த் தேசிய வாதத்தை, தாம் விரும்பியவாறு மறக்கச் செயயவோ அல்லது அதனுடைய இருப்பை இல்லாமல் செய்யவோ முடியவில்லை. இந்திய இலங்கை ஒப்பந்தமானது அதற்கு இடங்கொடுத்து அதனைச் சீர்தூக்கிப் பார்த்திருக்க வேண்டும். ஆனால் ஒருவர் அதனை ஒப்புக்கொள்ளாமல் சீர்தூக்கிப் பார்க்க முடியாது. ஒப்புக்கொள்வதற்குப் புரிந்துணர்வு தேவை. தமிழ்த் தேசியவாதம் ஒருபோதும் வெறும் புத்திஜீவிகளின் ஓர் எண்ணக்கருவாக இருந்ததில்லை. அவ்வாறிருந்திருக்குமாயின் அதற்கு உயிரோட்டம் இருந்திருக்காது. அது வெறும் உணர்ச்சியின் வெளிப்பாடுமல்ல. அவ்வாறிருக்குமாயின் அது நீண்டகாலம் தளராது தொடர்ந்திருக்க முடியாது.

மேலும் அது வெறுமனே உணவையும் உடையையும் உறைவிடத்தையும் அவர்கள் உயிர் வாழ்வதற்கான பொருள் சார்ந்த நிலைமைகளையும் ஒரு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்ற ஒரு விடயமல்ல. அவ்வாறு கூறுதல் தமிழ்த் தேசிய வாதத்துக்கு அதன் வளமான கலாச்சார மரபுரிமையை மறுப்பதற்கு ஒப்பானதாகும். தமிழ்த் தேசியவாதம் இவை அனைத்தையும் அதிலும் விடக் கூடியனவற்றையும் உள்ளடக்கியது. அது இவை எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு முழுமை. அதன் விகிதாச்சாரங்களின் கூட்டுத்தொகையைவிட அதிகமான ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட முழுமை. எதிர்ப்பு, வேறுபடுத்தல், கூட்டுழைப்பு என்ற ஒரு நீடித்த, சிக்கலான செயல்முறையின் ஊடாக உருப்பெற்ற ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட முழுமை.

உடன்படிக்கை அதன் குறிக்கோள்களை நிறைவேற்றவில்லையென்றும் இந்திய அமைதிப்படை அதன் பணியைப் பூர்த்திசெய்யாமல் வாபஸ் பெறப்பட்டமை ஒரு வெளிநாட்டுக் கொள்கைத் தோல்வியென்றும் கூறப்படும் கண்டனம் செல்லுபடியானதே. இத்தோல்விக்கான காரணங்களைக் கண்டறிவதற்கு வெவ்வேறு கண்ணோட்டங்களிலிருந்து ஆழமான, திறனாய்வு சார்ந்த பகுப்பாய்வு தேவைப்படுகின்றது. முதலாவதாக இலங்கையின் இன முரண்பாட்டில் இந்தியாவின் தலையீட்டுக்கு வழிவகுத்த அதன் நலன்களையும் நோக்கங்களையும், இந்தியாவின் தன்னலமென்ற கருத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, அவை நியாயமானவை.

இந்திய அரசாங்கம் இலங்கையில் அதன் கொள்கைகளையும் ஈடுபாட்டையும் நிறைவேற்றுவதில் ஒத்திசைவான முறையில் செயற்படவில்லையென்பது தோல்விக்கான முதலாவது காரணமாயிருந்தது. மேலும் முக்கியமானதாக, உடன்படிக்கை தடங்கல்களை எதிர்நோக்கிய தருணத்தில் இலங்கையிலும் இந்தியாவிலும் அத்தகைய ஒரு தோல்வியிலிருந்து எழுகின்ற தாக்கங்கள் பற்றிய போதிய அரசியல் விழிப்புணர்வை இந்தியப் பொது மக்களின் அபிப்பிராயம் காட்டவில்லை. அது ராஜீவ் காந்திக்கு நெருக்கடியான நிலையைத் தோற்றுவித்தது. அத்துடன் அக்கொள்கையைத் தளராது முன்னெடுத்துச் செல்வதற்கான கூட்டு அரசியல் பலத்தையும் அது இல்லாமல் செய்துவிட்டது.

இந்தியாவின் இரு-தட உபாயமானது கோட்பாட்டின் அடிப்படையிலும் மதிப்பீட்டின் அடிப்படையிலும் குறை







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாடுடையதாயிருந்தது. குறிப்பாக எல்ரீரீஈயைக் கட்டுப் படுத்த முடியாமையால்தான் இலங்கையில் இந்தியாவின் உபாயம் தோல்வியடைந்ததென வாதிடப்படுகிறது. கட்டுப் படும் தன்மை குறைந்த ஓர் அமைப்புடன் வேறுபட்ட சூழ் நிலைகளில் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் இந்தியா வெற்றி கண்டிருக்கக் கூடுமென்று அவ்வாதம் தொடர்கின்றது. இது பிரதான மதிப்பீட்டுத் தவறென்ப துடன், எல்ரீரீஈயின் இயல்பைப் புரிந்துகொள்ளத் தவறி யமையையும் வெளிக்காட்டுகின்றது.

போராளிகளை ஆயுதபாணிகளாக்கிய செயலானது, தமிழ்க் குடிசனத்தின் மீதான தாக்குதல்களைக் குறைத்தலும் இலங்கை அரசாங்கத்தின்மீது அழுத்தத்தைப் பிரயோகிக் கும் ஒரு நெம்புகோலாகச் செயற்படுதலுமென்ற அதன் இலக்குகளில் இரண்டை எய்தத் தவறியது. தமிழ்க் குடி சனத்தின் பாதுகாப்பைப் பொறுத்தவரையில் வடக்கிலும் கிழக்கிலும் இருந்த பொதுமக்கள் அதிகரித்த அளவில் முரண்பாட்டின் வேகத்தைத் தொடர்ந்தும் தாங்கிக்கொள்ள வேண்டியிருந்ததுடன் இராணுவத்துக்கும் போராளிகளுக் குமிடையிலான வன்முறையிலும் சிக்குண்டனர்.

இலங்கை அரசாங்கத்தைப் பேச்சுவார்த்தை மேசைக் குக் கொண்டுவருவதற்கு அழுத்தம் கொடுக்கின்ற ஒரு வழி முறையாகப் போராளிகளைப் பயன்படுத்தியமை கலப்பு விளைவுகளைத்தான் ஏற்படுத்தியது. உண்மையில் பெரும் பாலான சந்தர்ப்பங்களில் (பிரதானமாக எல்ரீரீ ஈயின்) போர்முனைப்பு நடவடிக்கைகள் இணக்கமான நிலைமை களை உருவாக்குவதற்குப் பதிலாகப் பேச்சு வார்த்தை களுக்கான வாய்ப்புக்களை இல்லாதொழித்தன. இலங்கை அரசாங்கத்தின்மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் ஒரு வழிமுறையாக வன்முறையையும் வன்முறைக்கான அச்சு றுத்தலையும் பயன்படுத்தியமை பெரும்பாலும் எதிர் விளைவை ஏற்படுத்தின. தமிழ்ப் போராளிகளுக்கு இந்தியா பின்பலமாக உள்ளதென்பது ஊரறிந்த ரகசியமாக இருந்த தனால் அது சிங்களவர் மத்தியில் எதிரலையைத் தோற்று வித்ததைத் தொடர்ந்து ஏற்கெனவே தயக்கமடைந்திருந்த ஜெயவர்தனவை, இந்தியாவின் ஆதரவுடன் வந்த எந்த முன்





மொழிவுகளுக்கும் உடன்படுவதை மேலும் தயக்கமடையச் செய்தது.

ராஜீவ் காந்தியைத் தொடர்ந்து பதவிக்கு வந்த வி.பீ.சிங் அரசாங்கம் இந்திய அமைதிகாக்கும் படை தொடர்பான அரசியல் நடவடிக்கைகளில் துணிவின்மை யைக் காட்டியதனால் இலங்கையின்பாலான இந்திய வெளி நாட்டுக் கொள்கைகள் மறுதலையாகி, இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் தோல்விக்கு வழிவகுத்தன (கல்கட்டுடன் நேர்காணல், 21 ஏப்பிரல் 2001). 1990ஆம் ஆண்டு யூன் 10ஆந் தேதியன்று எல்ரீரீஈயால் யுத்த நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதற்கு மறுநாள் வெளிவிவகார அமைச்சர் ஐ.கே. குஜ்ரால் இந்திய அரசாங்கத்தின் உத்தி யோகபூர்வக் கொள்கையை வெளியிட்டார். இலங்கை யின் உள்நாட்டு விவகாரமென்று இந்தியா கருதுகின்ற தால் இராணுவ ரீதியாக இந்தியா தலையிடமாட்டா தென்று அவர் தெளிவாகக் கூறினார். இலங்கைக்கெதி ரான கவிழ்ப்பு நடவடிக்கைகளுக்கு இந்திய ஆள்புலத்தைப் பயன்படுத்துவதற்கு இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என்றும் கூறினார். எனினும் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலுமிருந்து அகதிகள் தமிழ் நாட்டுக்குள் வருகின்ற சாத்தியம் பற்றி இந்தியா கவலை கொண்டிருந்தது. பிரதமர் வீ.பீ. சிங் உட்பட ஏனையோரும் இந்திய அரசாங்கத்தின் இந்நிலைப்பாட்டைத் திரும்பத் திரும்பக் கூறினர் (தமிழ் ரைம்ஸ், 5 யூன் 1990).

இச்செயல்முறை இந்தியாவுக்குச் சிங்களவரிடமிருந்து ஓரளவு பாராட்டுதலையும் போலியான நன்னடத்தைச் சான்றிதழ்களையும் ஈட்டிக்கொடுத்திருந்த போதிலும் அது இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்கோ அல்லது இந்தியாவின் நீண்டகால நலன்களுக்கோ எந்த விதத்திலும் பயனளிக்கவில்லை. எனவே ஒன்றில் இந்திய வெளிநாட்டுக் **கொள்கைகளி**ல் ஒருங்கிணைந்த செயற்பாடு இல்லாமை யினால் அல்லது இலங்கை விவகாரங்களைக் கையாள் கின்ற இந்திய அரசாங்கத்தின் வெவ்வேறு துறையினர் களுக்கிடையில் ஒன்றிணைந்த செயற்பாடு இல்லாமை யினால் இந்திய இலங்கை ஒப்பந்தம் தோல்வியடைந்தது.

www.tamilarangam.net



## இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்கள்

பெரும்பாலான நாடுகளின் (எ.கா: அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஏனைய மேற்குலக நாடுகள்) தலைவர்கள் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஒரு வலிந்து ஊடுருவுகின்ற இராசதந்திர நடவடிக்கையாகக் கருதினர். பிராந்தியத்தின் அரசியல் மற்றும் இராணுவ விவகாரங்களில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற அளவுக்கு அமைந்த ஒப்பந்தத்தின் பின்னிணைப்புகளையிட்டு மேற்குலக வல்லரசுகள் பெரிதும் விரும்பியிருக்க மாட்டார்கள் என்று ஊகித்துணர முடியும்.

உள்நாட்டில் மனித உரிமை நிறுவனங்களும் சமாதான நோக்குடைய தொண்டு நிறுவனங்கள் உட்பட, இலங்கையிலுள்ள இடதுசாரி மற்றும் சமூக-சனநாயகச் சக்திகளும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை வரவேற்றன. ஜனதா விமுக்தி பெரமுன அல்லது மக்கள் விடுதலை முன்னணி (ஜேவிபீ) அதன் பாரம்பரிய இந்திய மேலாதிக்க விரோத நிலைப்பாட்டுடனும் இனவாதத்துடனும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தது. தமிழருக்கும் தமிழருக்குச் சொந்தமான வியாபார நிலையங்களுக்கும் எதிராகப் பரவலாக இடம்பெற்ற வன்செயல்களுக்கும் தீவைப்புச் சம்பவங்களுக்கும் மத்தியில் 36 மணித்தியால ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டது.

பிரதமர் ஆர். பிரேமதாச அவரின் எதிர்ப்பைப் பகிரங்கமாக வெளிப்படுத்தினார். இதன் பின்னணியில், இந்தியாவின் பங்கை தொடர்ச்சியாகக் குரோதத்துடன் கண்டித்துவந்த பிரேமதாச அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற காலத்தில் நாட்டில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய இலங்கை ஒப்பந்தம் மற்றும் யுத்தநிறுத்தம் தொடர்பில் கலக்கத்தைப் பகிரங்கமாக வெளிப்படுத்திய மற்றுமொரு முக்கிய அமைச்சர் உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சரான லலித் அத்துலத்முதலியாவார். அவர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் வைபவ நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் தவிர்த்தார் (தமிழ் ரைம்ஸ் - 15 ஆகஸ்ட் 1987).





எதிர்வரவிருந்த கொந்தளிப்பான காலப்பகுதியின் கூர்மையான வெளிப்பாடாக, இந்தியப் பிரதமர் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்படுவதற்கு முன்னர் நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையின்போது ஒரு கடற்படை சிப்பாயால் அவர் தாக்கப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது. பின்னர் ஜனாதிபதி பிரேமதாசவால் அக்கடற்படைச் சிப்பாய்க்கு மன்னிப்பு வழங்கப்பட்டதில் ஒன்றும் வியப்பில்லை. இதற்கமைய எல்ரீரீஈ சாராத தமிழ் அரசியல்-இராணுவ அமைப்புக்கள் யாவும் ஒப்பந்தத்தை ஓர் 'இடைக்காலத் தீர்வாக' ஏற்றுக்கொண்டபோதிலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்பை நிபந்தனைக்குட்பட்டதாக்கிய 'மக்கள் கருத்துக்கு விடப்படும் வாசகம்' தொடர்பில் எதிர்ப்பை வெளிப்படுத்தின.

அத்துடன் அவை அரச உதவியுடனான குடியேற்றங்கள் பற்றிக் குறிப்பிடாமை தொடர்பிலும் உத்தேச மக்கள் தீர்ப்புக்கான வாக்காளர் நிரலில் அதன் விளைவு பற்றியும் அதிருப்தியை வெளிப்படுத்தின. மேலும் அவை 'ஆயுதங்களை ஒப்படைத்தல்' என்ற சொற்பிரயோகத்தை ஆட்சேபித்து, அதற்குப் பதிலாக 'ஆயுதங்களைக் கைவிடுவதற்கு' மட்டும் விரும்புவதாக விருப்பம் தெரிவித்தன (பிரேமச்சந்திரன் 1993: 10). உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தீர்மானங்களின் விதிகளை இலங்கை அரசாங்கம் ரத்துசெய்யுமாயின் தமிழ்-அரசியல் இராணுவ அமைப்புகள் ஆயுதப் போராட்டத்துக்குத் திரும்புதல் நியாயமானதென்றும் அதற்கு இந்தியாவின் தார்மீக மற்றும் பொருள் சார்ந்த ஆதரவை அவை எதிர்பார்க்குமென்றும் விளக்கப்பட்டது. அவை தமது அச்சங்களை வெளிப்படுத்துவதற்குப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் சந்திப்பொன்றையும் கோரின (பிரேமச்சந்திரனுடன் நேர்காணல், 30 மே 2001).

இச்சந்திப்பு ராஜீவ் காந்தி டெல்லியிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் அவரின் உத்தியோகபூர்வ வதிவிடத்தில் இடம்பெற்றது. இந்திய அரசாங்கம் இலங்கைத் தமிழர்களைக் கைவிடாதென்று உறுதியளித்த அவர் தம்மீது நம்பிக்கை வைக்கும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டார். ஆயுதங்களைக் கையளிக்கும்போது தமிழ்ப் போராளி இயக்கங்கள் அவமானத்துக்கு உட்படுத்தப்பட மாட்டா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தென்றும் அவர் அவர்களுக்குத் திரும்பவும் உறுதியளித் தார் (தமிழ் ரைம்ஸ், 15 ஆகஸ்ட் 1987).

'மக்கள் கருத்துக்கணிப்பு' வாசகம் மிகவும் சர்ச்சைக் குரிய விடயமாகத் தொடர்ந்தது. தமிழ் அமைப்புக்கள் ஒன்றில் அதனை முழுமையாக எதிர்த்தன இன்றேல் மக்கள் கருத்துக்கணிப்பு காலவரையறையின்றி ஒத்திவைக்கப் படுதலை உறுதிப்படுத்த முயற்சித்தன. மறுபுறத்தில் ஜெய வர்தன நிருவாகமும் பிரதான எதிர்க்கட்சிகளும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பை முழுமையாக எதிர்த்தன. ஜனாதிபதி ஜெயவர்தன 1987ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6ஆம் தேதியன்று தேசத்துக்கு ஆற்றிய தனது உரை யில், உத்தேச மக்கள் தீர்ப்பில் இணைப்புக்கு எதிராகப் பிரச்சாரம் செய்வதென்ற அவரின் நோக்கத்தை வெளிப் படுத்தினார். ஜனாதிபதி ஜெயவர்தனவின் கண்ணோட் டத்தில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் இந்தியாவின் உதவியுடன் தமிழ்ப் போராளிகளின் ஆயுதங் களைக் களைவதற்கான ஒரு வாய்ப்பாக இருந்தது.

ராஜீவ் காந்தியைப் பொறுத்தவரையில் இந்திய இலங்கை ஒப்பந்தமானது ஜெயவர்தனவுக்குச் செய்கின்ற ஓர் உதவியாக மட்டும் இருக்கவில்லை. ஒப்பந்தத்துக்குத் தமிழ் நாட்டில் ஆதரவு திரட்டுகின்ற நோக்குடன் 1987ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2ஆந் தேதியன்று சென்னையில் பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் அவர் பின்வருமாறு வலியுறுத்தினார்:

> இவ்வுடன்படிக்கை, இலங்கையின் ஐக்கியத்தைத் தகர்ப் பதைத் தவிர, இலங்கைத் தமிழர் கோரிய எல்லாவற்றை யும் உறுதிப்படுத்துகின்றது. உண்மையில் அது இலங்கைத் தமிழர்களின் தொடக்கக் கோரிக்கைகளை விட வெகு தூரம் அப்பால் செல்லுகின்றது. உடன்படிக்கையின்கீழ் இலங்கையின் ஆட்சிப் பிரதேசத்தில் ஏறக்குறைய மூன்றி லொரு பங்கு தமிழர் தெளிவான பெரும்பான்மையைக் கொண்ட தனியொரு மாகாணமாக்கப்படும். இந்தியா விலுள்ள மாநில அரசாங்கங்களுக்கு ஒப்பான பிராந்திய சுயாட்சி அவர்களுக்கு இருக்கும். இது 1983இல் 'பிற் சேர்க்கை C'யில் தமிழர்களுக்கு வழங்கப்பட்டவற்றின் மீது அளப்பரிய முன்னேற்றத்தைக் குறிக்கின்றது. தமிழர் கோரிக்கைகளுக்கும் தமிழர் உணர்வுகளுக்கும் இலங்கை அரசாங்கம் அளித்துள்ள பெரும் சலுகைகளை இது குறிக் கின்றது (உலக விவகாரங்களுக்கான இந்திய கவுன்சில், யூலை-ஆகஸ்ட் 1987: 211).





எல்ரீரீஈ இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் 'வரைவு' குறித்து புதுடெல்லியில் அதன் கலந்துரையாடல்களின் போது அதன் உறுப்பினர்களுக்கு உத்தரவாதங்களை உறுதிப் படுத்துவதில் அதிக கவனஞ்செலுத்தியது. தமிழ் மக்களின் உய்வுக்கான முன்நிபந்தனையாகத் தனது இருப்பைப் பாதுகாத்துக் கொள்ளலை எல்ரீரீஈ கவனத்தில் கொண்டது. அதாவது 'தனியொரு பாதுகாவலர்' எண்ணப்போக்கு. அவர்கள் ஓர் அடையாளபூர்வமாக ஆயுதங்களைக் கைவிடு வதற்கு உடன்பட்டபோதிலும் நீண்டகாலமாக அவர்கள் கடுமுயற்சியுடன் வருந்திக் கட்டியெழுப்பியிருந்த இராணுவ உட்கட்டமைப்பை எல்ரீரீஈ கலைக்கப்போவதில்லை யென்பது தெளிவாகப் புலப்பட்டது. சுதந்திரமானதும் இறைமை பொருந்தியதுமான தமிழ் ஈழ அரசை உருவாக்கு கின்ற தமது இறுதிக் குறிக்கோளைக் கைவிடுவதற்கும் பிரபாகரன் விரும்பவில்லை (தமிழ் ரைம்ஸ், 15 ஆகஸ்ட் 1987).

விடுதலைப்புலிகள் உத்தேசிக்கப்பட்ட இடைக்கால நிருவாகத்தில் 'சிறப்பிடம்' உட்பட 'நிதி ஊக்குவிப்புக் களை' இந்திய அரசாங்கத்திடம் கேட்டுப் பெற்றுக் கொண் டது. 'சிறப்பிடம்' அளிக்கப்படுதல் பிரபாகரனுக்கு ஆசை யேற்படுத்துகின்ற ஒரு சலுகையளிப்பாக இருந்ததென்ப தில் சந்தேகமில்லை. எனினும் எல்ரீரீஈ சாராத ஏனைய அமைப்புக்களுக்கு இந்திய அரசின் இச்செயலானது ஒப் பந்தத்தை ஏற்றுக்கொண்டு ஆயுதங்களைக் கைதுறந்த பின் னர் நட்டாற்றில் விடப்பட்ட துரோகச் செயலாக இருந்தது.

இதனைத் தொடர்ந்து ஒப்பந்தம் அமுல்செய்யப்படு கின்ற போது எல்ரீரீஈ அற்பமான சாக்குப் போக்கின்மீது உடன்படிக்கையைப் புறக்கணித்தது. அது இந்திய அமைதிப் படையிடம் மிகக் குறைந்தளவு ஆயுதங்களை ஒப்படைத்த துடன் போட்டித் தமிழ் இயக்கங்களின் உறுப்பினர் களை யும் கொலைசெய்தது. மேலும் இந்தியாவும் இலங்கையும் எல்ரீரீஈக்கு ஆகக்கூடிய பிரதிநிதித்துவத்தை வழங்கத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தயாராயிருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான உத்தேச இடைக்கால நிருவாக சபையை (IAC) திட்டமிட்டு அது புதைத்துவிட்டது. இறுதியாக இந்திய அமைதிப் படையின் மீது யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியதன்மூலம் இலங்கையின் இன முரண்பாட்டில் இந்தியாவின் பங்களிப்பிற்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்தது.

## மாகாண சபைச் சட்டத்திற்கான பதின்மூன்றாவது திருத்தம்

இந்திய இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து மாகாண சபைகளைத் தாபிப்பதற்கும் அதிகாரப் பகிர்வுக்குமென 1978இன் இலங்கை அரசியலமைப்பு திருத்தப்பட்டது (அதாவது, 13ஆவது திருத்தம்). முன்னர் குறிப்பிட்டவாறு மாகாண சபைகள் சட்டமூலம் ஓராண்டினுள் நடத்தப்படவிருந்த சர்வஜன வாக்கெடுப்புக்கமைய இணைப்பை ஒப்புக்கொண்டதன்மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விசேட முக்கியத்துவம் அளித்தது.

1987 ஆகஸ்டில் இலங்கைப் பாராளுமன்றம் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தையும் அத்துடன் மாகாண சபைகள் சட்டத்தையும் நிறைவேற்றியது. இச்சட்டங்களின் ஆக்கம் தமிழ் மக்களுக்கு 'அதிகாரங்களைப் பகிர்வதென்று' ஒப்பந்தத்தில் செய்யப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றியதென இலங்கை அரசாங்கம் பிரகடனப்படுத்தியது.

ஒப்பந்தத்தால் (ஏனைய ஆயுத எதிர்ப்புக் குழுக்களுடன் சேர்த்து) 'போராளிகள்' என அங்கீகரிக் கப்பட்டவர்களும் தமிழ்த் தேசியப் போராட்டத்தின் தலைவர்களாக வெளிப்பட்டவர்களுமான தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் 13ஆவது திருத்தத்தின் அடிப்படை ஏற்பாடுகளை நிராகரித்தனர்.

இப்பிரிவு 13ஆவது திருத்தத்தின் அடிப்படை ஏற்பாடுகளைச் சுருக்கமாக ஆராய்வதுடன் இச்சட்டங்கள் ஒற்றையாட்சி அரசியலமைப்பென்ற சட்டகத்தினுள் சிங்கள ஆதிக்க மத்திய அரசாங்கத்தில் அதிகாரங்கள் தொடர்ந்தும் இருக்கத்தக்கதாகத் தமிழ் மக்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்துள்ளனவா என்றும் ஆராய்கின்றது.





## 13ஆவது திருத்தத்திலுள்ள அதிகாரப்பகிர்வுப் பிரச்சினைகள்

மத்திய அரசாங்கத்தின் அனுகூலத்துக்கிணங்கச் செயற்படுகின்றதாக பொதுப்பட்டியல் மிதமிஞ்சிய சுமையைக் கொண்டதென்ற வகையில் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் மிகப் பாரதூரமான குறைபாட்டைக் கொண்டிருந்தது. 13ஆவது திருத்தத்தின்கீழ் மூன்று பட்டியல்கள்- மத்திக்கு ஒன்று, மாகாணத்துக்கு ஒன்று, மத்தியும் மாகாணமும் கூட்டு நியாயாதிக்கம் கொண்ட பொதுப்பட்டியல் ஒன்று என மூன்று பட்டியல்கள் உள்ளன.

இரண்டாவது பிரதான குறைபாடு மத்திய அரசுக்கான பட்டியலில் 'தேசியக் கொள்கை'யின் அறிமுகம். 'தேசியக்கொள்கை'யின் பரப்பெல்லையினுள் வருவதாகக் கருதப்படும் எதுவும் மத்திய அரசாங்கம் பிராந்திய பட்டியலினுள் அத்துமீறிப் பிரவேசித்தலைச் சாத்தியமாக்குவதனால் மாகாண பட்டியலை அது கேலிக் கூத்தாக்குகின்றது. இதுவொரு கட்டமைப்புக் குறைபாடு. தற்போது பாராளுமன்றத்தின் முன்னருள்ள சட்ட மூலத்தில் மத்திக்கு ஒன்று, பிராந்தியத்துக்கு ஒன்றென இரு பட்டியல்கள் மட்டுமே உள்ளன. இது மத்திக்கும் பிராந்தியத்துக்குமிடையில் விவாதங்களைத் தவிர்ப்பதனால் ஆக்கபூர்வமான ஒரு வளர்ச்சியாகும்.

தற்போதைய சட்டமூலத்தின் மத்திய பட்டியலில் 'தேசியக்கொள்கை' தனிவேறான ஒரு விடயமாகக் குறிப்பிடப்படாதபோதிலும் வெவ்வேறு பிரிவுகளினதும் விடயங்களினதும் கீழ் பரவலாகக் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, பிராந்திய பட்டியலின்கீழான விடயங்கள் பிராந்தியப் பல்கலைக் கழகங்களுக்கான 'தேசியத் தரக் கட்டளைகள்', ஒலிபரப்புக்கும் ஒளிபரப்புக்குமான 'தேசியத் தரக்கட்டளைகள்', தொழிலாண்மைகள், வாழ்க்கைத்தொழில் மற்றும் பயிற்சி தொடர்பில் 'தேசியத் தரக் கட்டளைகள்' மற்றும் காணிப் பயன்பாட்டுக்கும் காடு வளர்ப்பிற்குமான ஒரு தேசியத் திட்டம் என்பவற்றை உள்ளடக்குகின்றன. தவிரவும் பிராந்திய பட்டியலில் குறிப்பிடப்படாத வேறு விடயம் எதுவும் மத்திய பட்டியலில் உள்ளடக்கப்படவேண்டும். முக்கியமாக எதிர்காலத்தில்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உலகமயமாக்கல் நிலைமைகளின்கீழ் புதிய தொழில் நுட்பமும் வேறு ஏதேனும் புதிய விடயங்கள் இருப்பின் அவையும் தன்னியல்பாக மத்திய பட்டியலில் சேர்க்கப்படுமென்பதே இதன் கருத்து. இது சமஷ்டியின் அடிப்படைக் கோட்பாட்டை மீறுகின்றது. இங்கு இவ்விடயங்கள் மீதான முதலுரிமை மத்திக்கு இருக்குமென்றும் எஞ்சிய விடயங்கள் பிராந்தியங்களுக்குச் செல்லுமென்றும் கருதப்படுகின்றது. ஆனால், சமஷ்டியின்கீழ் முதன்மை பிராந்தியத்துக்கு அளிக் கப்படுவதுடன் எஞ்சிய விடயங்கள்தான் மத்திக்குச் செல்கின்றன.

உத்தேசிக்கப்பட்ட இடைக்காலப் பிராந்திய சபைதான் இங்கு மிகவும் முக்கியமான விடயமாகும். தெரிவு செய்யப்பட்ட ஒரு பிராந்தியச் சபையைப் போன்று அதே அதிகாரங்கள் அதற்குள்ளனவா? இன்றேல் இடைக் காலத்தின்போது அதற்கு மறுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் எவை?

ஆயுதங்களை ஒப்படைத்தல் மற்றும் இடைக்காலச் சபையின் சட்டமும் ஒழுங்கும் பற்றிய விடயங்கள் தெளிவற்றுள்ளதனால் விளக்கம் தேவைப்படுகின்றது.

## நிறைவேற்றுக்குழு முறைமை

உத்தேசிக்கப்பட்ட கட்டமைப்பின் மற்றோர் ஆக்கக் கூறான நிறைவேற்றுக் குழு முறைமை பற்றி ஆய்வாளருக்குத் தனிப்பட்ட அபிப்பிராயங்கள் உள்ளன. பலகட்சி அமைச்சர்கள் சபையும் நிறைவேற்றுக் குழு முறைமையும் என்பது மேலும் பொருத்தமானதொரு சொற்றொடராயிருக்கும். இதன் மாற்றுருவொன்றை 1931 - 1947 டொனமூர் அரசியலமைப்பின்கீழான அரச சபையில் காணலாம். டொனமூர் நிறைவேற்றுக் குழுமுறைமையானது அரசியற் கட்சிகள் இல்லாதவிடத்து ஆட்சிமுறை நோக்கங்களுக்கு நிறைவேற்று அதிகாரத்தில் சிறுபான்மை இனங்களையும் மேலதிகமாக இணைத்துக்கொள்வதை உறுதிப்படுத்தும் ஒரு பொறிமுறையாக இருந்தது. எனினும் நடைமுறையில் பெரும்பான்மை வாக்கின்மூலம் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன், சில சந்தர்ப்பங்களில் சமரச இணக்கத்தின் ஊடாகவும் முடிவுகள் எட்டப்பட்டன. அரசியல் கட்சிகள் இல்லாமல் அரச சபை தனிப்பட்டவர்களைக் கொண்ட





தாயிருந்த அச்சூழமைவில் இவ்வேற்பாடு அர்த்தமுள்ளதாக இருந்திருக்கக்கூடும். ஆனால் இப்போது இலங்கையில் ஆட்சிமுறையை உருவாக்குகின்ற அரசியல் முறைமையான பலகட்சி அரசியல் ஒழுங்கொன்றின்மீது இவ்வேற்பாட்டைச் செருகுதல் பொருத்தமானதல்ல.

இம்முன்மொழிவு ஐக்கிய தேசியக் கட்சியால் செய்யப்பட்டதாகவும் பொதுசன முன்னணியால் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் கருதப்படுகின்றது. மேலும் கருத்தொருமித்த அரசியலுக்கு இது நல்லதொரு விளக்கமென அனேக மேடைகளில் கூறப்பட்டுள்ளது. மத்தியில் இம்முறைமை ஏன் செயற்படமுடியாதென்று கேட்கப்பட்டபோது பிராந்தியங்கள் அதன் சுற்றுப்புற விடயங்களைக் கையாள்வதால் நிறைவேற்று முறைமை பிராந்தியங்களுக்கு அதிகப் பொருத்தமானதென விளக்கப்பட்டது. இந்நிலைப்பாடு ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. பிராந்திய மக்களைப் பொறுத்தவரையில் இவை சுற்றுப்புற விடயங்களல்ல. அவை அவர்களின் வாழ்வுக்கும் அடையாளத்துக்கும் மையமானவை. எனவே பிராந்திய மட்டத்தில் கருத்தொருமித்த அரசியலுக்கு இடமளித்தலானது பல கட்சி அமைச்சர்களின் சபையொன்றின்கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ள பிராந்திய நிறைவேற்றுக் குழு முறைமையின் நடைமுறைச் சாத்தியம் பற்றிய கவலையும் மன உளைச்சலும் அதிகரிப்பதற்கு நியாயமான முறையில் வழிவகுக்கின்றது.

இம்முன்மொழிவு நிச்சயமாக நல்ல ஆட்சிமுறைக்கு முட்டுக்கட்டையாகவும் பிராந்திய நிறைவேற்றுத் துறையை முடக்கிவிடுவதாகவும், தெரிவுசெய்யப்பட்ட ஒரு பிராந்தியச் சபையாயிருப்பினுஞ் சரி அல்லது ஓர் இடைக்காலப் பிராந்தியச் சபையாயிருப்பினுஞ் சரி, இறுதியில் அவற்றை ஆளும்படி மத்தியிடம் அவை மன்றாடுகின்ற அளவுக்குப் பிராந்தியத்துக்குப் பகிரப்பட்ட அதிகாரங்களைத் தடுத்து நிறுத்துவதாகவும் இருக்கும். இது மேலும் குழப்பத்துக்குத் தான் வழிவகுக்கும்.

## வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேர்தலும் வ.கி.மா.சபையின் உருவாக்கமும்

இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்பட்டவாறும் இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடுகளுக்கிணங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கவும் கூட்டாகக் கையொப்பமிட்ட இந்திய அரசாங்கத்தின் வேண்டுகோளின்படியும் வடக்கு-கிழக்கு மாகாண அரசைத் தாபிப்பதற்கான தேர்தல்களை நடத்துவதற்கு நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் முரண்பாடானாதும் நகைப்புக்குரியதுமான விடயம் என்னவென்றால் வடக்கு-கிழக்கு மாகாண அரசுக்கான தேர்தல்களுக்கு முன்னர் வடக்கிற்கும் கிழக்கிற்கும் வெளியேயுள்ள பிரதேசங்களில் (அங்கு மாகாண சுயாட்சிக்கான கோரிக்கை இருக்கவில்லை) முழுத்தேர்தல் செயல்முறையும் பூர்த்தியாகியிருந்தது (அதாவது 1988 ஏப்பிரல் 28க்கும் யூன் 9க்கும் இடையில்). ஆனால் இங்கு நாம் உரியமுறையில் தெரிவு செய்யப்பட்ட முதலாவது வடக்கு- கிழக்கு மாகாண அரசின் அனுபவம் பற்றியும் இனப் பிரச்சினையில் ஒரு விளைவைக் கொண்டதாக மத்திக்கும் மாகாணங்களுக்கும் இடையிலான உறவுகள் தொடர்பான விடயங்கள் பற்றியும்தான் அக்கறை செலுத்துகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய அமைதிப் படையினால் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து வெளியேற்றப் பட்ட போதிலும், அதன் தலைமையகத்தை வன்னிக் காடுகளுக்கு மாற்றிக்கொண்டு இந்திய அமைதிப் படைக்கெதிராகத் 'தீவிரம் குறைந்த' நீடித்த கெரில்லா யுத்தத்தில் ஈடுபடத் தொடங்கியது. மேலும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்பட்ட கால அட்டவணை பெருமளவில் நடைமுறைக்கு ஒத்துவராததால் நிலைமையை மீட்கும் பொருட்டும் ஒப்பந்தத்தில் எதிர்பார்க்கப்பட்ட தேர்தல் செயல்முறைகளைத் தூண்டும்பொருட்டும் இரு அரசாங்கங்களுக்குமிடையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இந்திய அமைதிப்படைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆயுத மோதல் நிகழும் சூழலில் தேர்தல் நடத்தப்படுவதையும் மக்கள் தொண்டர் படை (CVF) மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர ஏனைய அமைப்புக்களின் படைப் பிரிவினருக்கு ஆயுதங்கள் வழங்குவதையும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி உத்தியோக பூர்வமாகவும் பகிரங்கமாகவும் எதிர்த்தது. எனினும் தேர்தலை பகிஷ்கரிக்கும்படியான தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாத அச்சுறுத்தல்களுடன் இணைந்த அறைகூவலுக்கு மத்தியில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி





யினர் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக மிகுந்த அச்சத்தைத் தனிப்பட்ட முறையில் வெளிப்படுத்தினர். தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர் மாகாண சபை தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வருவார்களென்றும் அதன்மூலம் அச்செயல்முறைக்குச் சட்டப்படியான அந்தஸ்தை அளிக்கலாமென்றும் மலைபோல் நம்பியிருந்த இந்திய அரசாங்கத்திற்குத் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினரின் இந்நடவடிக்கை எரிச்சலூட்டியதில் வியப்பில்லை.

இந்நிலைமையில்தான் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரும் அதன் கூட்டணியினரும், அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தில் குறைபாடுகள் இருந்த போதிலும், வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வந்து மாகாண அரசாங்கத்தை அமைத்தனர். குறைந்தபட்சம் சமாதானமும் ஜனநாயகமும் நிலவுகின்ற ஒரு சூழலை உருவாக்குவதன் அடிப்படையில் ஒப்பந்தத்திலும் 13ஆவது திருத்தத்திலும் அடி ஆழத்தில் புதைந்து கிடந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நடைமுறையில் அதனை முன்னேற்றுதல் அவர்களின் குறிக்கோளாயிருந்தது. ஆனால் அது அவ்வாறு நடக்கவில்லை. அதற்கான காரணங்களை ஆராய்வோம்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கான ஈபீஆர்எல்எஃப் பின் ஆதரவு ஒரு தந்திரோபாயமாக மட்டும் இருக்கவில்லையென்பது இங்கு கவனிக்கத்தக்கது. ஒப்பந்தமானது முற்றுகையிடப்பட்ட தமிழ் மக்களுக்கு யுத்தத்தின் வேதனைகளிலிருந்து மிகவும் அவசியமாகத் தேவைப் பட்ட ஓரளவு ஓய்வை அளிக்கின்ற 'இடைக்காலத் தீர்வு' என்று அது உணர்ந்தது. அதைவிட முக்கியமாக குறிப்பாக இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் உடனடியாக உத்தேசிக்கப் பட்ட 'இடைக்கால சபை'யிலிருந்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விலக்கிவைக்கப் பட்டதன் காரணமாக, அது தன் வழியில்வந்த வாய்ப்பெதனையும் உதறித் தள்ளத் தயாராயிருக்கவில்லை (பிரேமச்சந்திரனுடன் நேர்காணல், 30 மே 2001).

எனவே 'ஒப்பந்தத்தின் ஆதாயங்களை' மேம்படுத்து கின்ற அரசியல் ஆபத்தை ஏற்பதற்குத் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர் தயக்கம் காட்டியபோது ஈழ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் அச்சவாலை ஏற்றுக்கொண்டு அப்போர்வையைப் போர்த்திக் கொண்டது. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினரை நம்ப வைத்தல் பயனற்றதென உணர்ந்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் மற்றொரு தமிழ் அமைப்பான ஈழம் தேசிய சனநாயக விடுதலை முன்னணியுடன்[10] (இ.என்.டி.எல்.எஃப்) கூட்டணி ஒன்றை ஏற்படுத்தியது. தமிழீழ விடுதலை இயக்கமும் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் (புளொட்) மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிட மறுத்துவிட்ட அதேவேளையில், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தன்னை இணைத்துக் கொண்ட ஈழப்புரட்சி அமைப்பினர் (ஈரோஸ்) தேர்தலில் போட்டியிடுதல் பற்றிய கேள்வி எழவில்லை.

வடக்கு-கிழக்கு மாகாண அரசுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான முடிவு தொடர்பில் ஈபீஆர்எல்எஃப் கைக்கொண்ட உபாயத்தையும் தந்திரத்தையும் 'ஆபத்தை ஏற்கின்ற' ஒரு துணிகரச் செயலாகச் சிலர் கண்டனர். இன முரண்பாடானது ஒரு நீண்ட கால யுத்தத்தைச் சந்தித்ததைத் தொடர்ந்து, சனநாயகத்தை உருவாக்குவதற்கும் தேசிய இணக்கப்பாட்டை உருவாக்குவதற்கும் மாகாண சபைத் தேர்தல் மிக முக்கியமானதாயிருந்தது. ஏனையோருக்கு, குறிப்பாக எல்ரீரீஈயினருக்கு, ஈபீஆர்எல்எஃப் பினர் வெறும் 'இந்தியக் கைப்பொம்மைகளாக'வே தெரிந்தனர்.

முதிர்ச்சிமிக்க தமிழ்ப் பாராளுமன்றக் கட்சியான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர் மாகாணத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான அதன் இயலாமையை எடுத்துக்கூறிய அதேவேளையில், தமிழ் மக்கள் தமது வாக்குரிமையைப் பிரயோகிக்கவேண்டுமென வேண்டுகோள் விடுத்தனர். சென்னையிலிருந்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் அமிர்தலிங்கம் விடுத்த அறிக்கையொன்றில் "**இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாகத்** தமிழ் பேசுகின்ற மக்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளைத் திடப்படுத்துவதற்கு இன்றியமையாத ஒரு வழிமுறையாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சனநாயகச் செயல்முறையைத் தூண்டுவதற்கான முயற்சிகளுக்குத் தமது ஆதரவை அளிக்கும்படி" தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தமிழ்





பேசும் மக்களை வேண்டியது (தமிழ் ரைம்ஸ், 15 நவம்பர் 1988). இறுதியில், இணைந்த வடக்கு- கிழக்கு மாகாணங்களில் மாகாண சபையொன்றைத் தாபிப்பதற்கான தேர்தல் 1988 நவம்பர் 19ஆந் தேதியன்று நடத்தப்பட்டது.

தேர்தல் நடந்த சூழ்நிலைகள் ஒரு ஆரோக்கியமான சூழ்நிலை என்று கூறமுடியாது. ஆயுதமேந்திய தமிழ் இயக்கங்களில் முதன்மையான தமிழீழ விடுதலைப் புலிகளும் முதிர்ச்சிபெற்ற பாராளுமன்றக் கட்சியான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும் வெவ்வேறு காரணங்களுக்காகத் தேர்தலைப் பகிஷ்கரித்தன.

வடக்கு-கிழக்கு மாகாண அரசுக்கான தேர்தலின் விளைவு ஒருவகையில் முன்னரே முடிவுசெய்யப்பட்டிருந்தது. வடமாகாணத்தில் இந்திய உயர்ஸ்தானிகர் திரு.ஜே.என். டிக்ஸிற் அவர்களின் முயற்சியால் மாகாணசபைக்கான உறுப்பினர்கள் 'போட்டியின்றி' தெரிவு செய்யப்படுவதற்கு இடமளித்தது. மறுபுறத்தில் கிழக்கு மாகாணத்தில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இந்திய அமைதி காக்கும் படையுடன் இணைந்து செயற்பட்டமையானது அவர்கள் மத்தியில் ஒரு புரிதலை ஏற்படுத்தியிருந்தது. அது கிழக்கு மாகாணத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எப். வெற்றி பெறுவதற்குத் துணைபுரிந்தது.

எல்ரீரீஈயால் பகிஷ்கரிப்புக்கான அறைகூவல் விடுக்கப்பட்டபோதிலும் வாக்களிப்பதற்குப் பெருந்திரளான வாக்காளர்கள் வந்தமை விளக்க முடியாததாகத் தொடர்ந்தும் இருந்தது. வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வாக்காளர்களைக் கூட்டிச் செல்வதற்குப் போக்குவரதது ஏற்பாடுகளையும், சில சந்தர்ப்பங்களில் கிட்டத்தட்ட அச்சுறுத்தலுக்குச் சமமான தார்மீகத் தூண்டுதலையும் ஈபீஆர்எல்எஃப் மேற்கொண்டது என்பது உண்மைதான். ஆனால், பெருந்திரளான வாக்காளரின் வரவிற்கு அவை மட்டுமே முழுமையான காரணங்களாகத் திகழவில்லை என்பதுடன் தனியே பலவந்தம்தான் காரணமென்று கற்பித்தல் அதனைச் சிறுமைப்படுத்தக் கடைப்பிடிக்கும் போலியான முயற்சியாகும். தமிழ் மக்கள் சமாதானத்துக்காகவும் சனநா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யகத்துக்காகவும் ஒற்றுமைக்காகவும் ஏங்கிக் கொண்டிருந்தனர் என்பதுதான் உண்மை.

எனினும் தமிழ் மக்களின் நாடித்துடிப்பைச் சரியாகக் கண்டறிந்து உணர்ந்து கொண்ட ஈபீஆர்எல்எஃப் தலைமையிலான மாகாண நிருவாகம் அதன் தளத்தைத் திடப்படுத்தவும் மேலும் விரிவுபடுத்தவும் தவறிவிட்டது. அதற்கான காரணங்கள் அடுத்துவரும் அத்தியாயத்தில் ஆராயப்படும்.

இந்த அத்தியாயத்தில் மேற்கொண்ட ஆய்விலிருந்து நாம் கீழ்க்காணும் முடிவுகளுக்கு வரக்கூடுமாயுள்ளது.

1983ஆம் ஆண்டிலிருந்து இந்திய அரசாங்கம் இலங்கையின் இன முரண்பாட்டில் நேரடிப் பங்கொன்றினை வகிக்கத் தொடங்கியது. அப்போதைய இந்தியப் பிரதமரான இந்திரா காந்தி, போராளிக் குழுக்களுக்குப் பொருளாதார மற்றும் இராணுவ ஆதரவை வழங்கும் பொருட்டும் அப்போதைய இலங்கைச் சனாதிபதி ஜெயவர்தனவைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரத்தக்கதாக இராசதந்திரத் தெரிவைத் திறந்ததாக வைத்திருக்கும் பொருட்டும், இரு-தடக்கொள்கையொன்றை அறிமுகப்படுத்தினார். இந்தியாவின் இக்கொள்கைமீது செல்வாக்குச் செலுத்துவதில் தமிழ்நாட்டு அரசியல் வகித்த பங்கும் குறிப்பிடத்தக்கது. இதன் பின்னணியில் இந்திய உபகண்டத்திற்கும் இலங்கைத் தீவுக்கும் இடையிலான வரலாற்று மற்றும் இனப் பிணைப்புகள் ஒரு முக்கிய காரணியாக இருந்துள்ளது.

இலங்கையுடனான அதன் உறவுகளை உருவாக்குவதில் தமிழ்நாட்டு மக்களும் அரசாங்கமும் புதுடெல்லியின் மீது குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்தினர் என்பதைக் கிடைக்கின்ற சான்றுகள் நிரூபிக்கின்றன. இன முரண்பாட்டினால் இடம்பெயர்ந்த சுமார் 200,000 தமிழ் அகதிகள் தமிழ் நாட்டில் வாழ்ந்துகொண்டிருந்தனர். அவர்களும் தமிழ் நாட்டினதும் இந்திய அரசாங்கத்தினதும் அக்கறைகளுக்குப் பங்களித்தனர். மறுபுறத்தில் இந்திரா காந்தியின் தலைமையின்கீழ் ஆட்சியிலிருந்த இந்திரா காங்கிரஸ் காங்கிரஸ் (ஐ) அரசாங்கம், தேர்தலில் வெற்றி பெறுவதற்கும் அரசியல் ஆதரவுக்கும் தமிழ் நாட்டில் ஆட்சியிலிருந்த அ.இ.அ.தி.மு.க.விலும் (AIADMK) அதன் தலைவர் எம்.ஜி.ஆர்.இலும் தங்கியிருந்தது.





1985இல் இலங்கை அரசாங்கமும் தமிழ்ப் போராளிக் குழுக்களின் பிரதிநிதிகளும், முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான இந்திய மத்தியஸ்த முயற்சியொன்றின்பேரில் பூட்டான் தலைநகரான திம்புவில் கூடினர். பேச்சுக்கள் முடிவேதுமின்றி முறிவடைந்தபோதிலும், தமிழ்த் தேசியப் பிரச்சினையின் எந்தவொரு தீர்விற்கும் குறைந்தபட்ச நிபந்தனைகளாக 'நான்கு முக்கிய நிபந்தனைகளை'த் தமிழ்ப் பேராளர் குழு தெளிவாகக்கூறியமை அதன் முக்கிய வளர்ச்சிகளில் ஒன்றாகக் காணப்பட்டது. இலங்கையில் முரண்பாட்டுத் தீர்வுக்கு அவை எவ்வளவு பொருத்தமானவை என்பதையும் அவை இன்றும் செல்லுபடியாகும் நிலையைத் தொடர்ந்தும் கொண்டிருக்கின்ற திம்புக் கோட்பாடுகள் (விவரங்களுக்குப் பின்னிணைப்பு 15ஐப் பார்க்கவும்) எல்லாவற்றையும் இலங்கை அரசாங்கம் நிராகரித்தது.

இன மோதல் அதிகரித்ததைத் தொடர்ந்து 1987இல் இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இன முரண்பாட்டில் சம்பந்தப்பட்டவர்களுக்கிடையில் இவ்வொப்பந்தம் ஏற்படாமல் இந்திய மத்தியஸ்தத்தின் விளைவாக ஏற்படுத்தப்பட்ட இவ்வொப்பந்தம் இலங்கையின் அரசியற் சமூகம் சாதிக்க முடியாமல் இருந்ததை சாதிக்க முனைந்தது. அதாவது, பல்லின அடையாளங்களுக்கு இடமளிக்கும்பொருட்டும் இனங்களுக்கிடையிலான பதற்றங்களைத் தணிக்கும்பொருட்டும் அரசியலமைப்பு ரீதியாக உள்ளார்ந்த அதன் கடமையின் ஒரு பகுதியாக அரசை மீள வகுத்தமைத்தல் ஒப்பந்தத்தின் குறிக்கோள்களாயிருந்தன. அவையாவன:

1. இலங்கையின் ஐக்கியத்தையும் இறைமையையும் ஆட்சிப்பிரதேச ஒருமைப்பாட்டையும் பேணிப் பாதுகாத்தல்.
2. **எல்லாப்** பிரசைகளும் சமத்துவமாகவும் பாதுகாப்பாகவும் இணக்கமாகவும் வாழ்ந்து சுபிட்சமடையவும் அவர்களின் அபிலாசைகளை நிறைவேற்றவும் கூடியதாக ஒரு பல்லின, பலமொழி பேசுகின்ற பன்மைச் சமுதாயமென்ற கட்டமைப்பினுள் ஒவ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வோர் இனக்குழுவினதும் தனிவேறான கலாச்சார, மொழி அடையாளத்தைப் போற்றி வளர்த்தல்.

3. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இலங்கையிலுள்ள தமிழ்பேசும் மக்களின் வரலாற்றுத் தொடர்புடைய குடியிருப்புப் பிரதேசங்களாக அங்கீகரித்தல்.

இந்த ஒப்பந்தமானது, ஏறத்தாழ இந்தியாவில் இருப்பது போன்ற அரைகுறை சமஷ்டிமுறையிலான நிறுவன வடிவமொன்றை முன்வைத்தது. இந்த முன்மொழிவானது அரசியல் சாசனத்திற்கான திருத்தச் சட்டத்தின் ஊடாக இணைக்கப்பட்டு ஒப்பந்தத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப் பட்டன. இதன்விளைவாக, மாகாண சபைகள் ஊடாக அதிகாரப் பகிர்வுத் திட்டமொன்றை உருவாக்கிய, அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் கொண்டு வரப் பட்டது. பதின்மூன்றாவது திருத்தத்தின் நிறைவேற்றத்துக்கான அரசியல் மற்றும் அரசியலமைப்புச் சூழ்நிலைகள் நம்பிக்கையளிக்கும் விதத்தில் இல்லாததினால், அவை பின்னர் அவற்றின் செயற்பாட்டை வேரறுப்பதற்கும் நசுக்குவதற்கும் உதவின (திருச்செல்வம், 2000: 197-215).

வரையறைக்குட்பட்ட அரசியல் அமைப்புச் சட்டமானது அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வைச் செய்வதற்குக் குந்தகமாக இருந்தது. அரசியல் சாசனத்திற்கான 13ஆவது திருத்தம் தொடர்பாக உச்சநீதிமன்றத்தின் பெரும்பான்மை நீதிபதிகளின் கருத்துப்படி மாகாண சபைகளானது பாராளுமன்றத்தினதும் சனாதிபதியினதும் அதிகாரத்திற்குட்பட்ட கீழ்மட்ட அமைப்பாக அமைந்தது (குமாரசுவாமி, 1994:121-143). அப்போது வளர்ச்சிப் பாதையில் இருந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மிக நீண்ட கால தாமதத்தின் பின் வழங்கிய மிகக்குறைந்த அதிகாரங்கள் என்ற அடிப்படையில் மாகாணசபை முறைமையை முற்றாக நிராகரித்தனர். அதனைத் தொடர்ந்து எல்ரீரீஈ ஒப்பந்தத்துக்கு உத்தரவாதமளிப்பதற்காக அனுப்பப்பட்ட இந்திய அமைதிப் படையை இராணுவ ரீதியாக எதிர்கொண்டது. அடுத்த அத்தியாயம் முரண்பாட்டுத் தீர்வுக்கான கடந்த காலப் பேச்சு வார்த்தைகளை ஆராய்கின்றது.





## முடிவுக் குறிப்புகள்

1. இலங்கையின் இன முரண்பாடு பற்றிய இந்தியப் பிரதிநிதியான சந்திரசேகரனுடனான சந்திப்பில் ஏனைய தமிழ்ப் போராளி இயக்கங்களுடன் ஆய்வாளர் சமுகமளித்திருந்தார், இலண்டன், சிட்டி பல்கலைக் கழகத்தில், 1984.

2. இதுவே ஜே.ஆர்.ஜெயவர்தன, திருமதி பண்டாரநாயக்க போன்ற இலங்கையின் தேசியவாதத் தலைவர்களின் கருத்தாயிருந்தது.

3. 1984இன் தொடக்கத்தில் இலண்டனிலும் இந்தியாவிலும் இந்திய உளவுத்துறையினருடனான சந்திப்புக்களில் பங்குபற்றுதல்.

4. இக்குழுக்களின் பெயர்கள் ஈரோஸ், ஈபீஆர் எல் எஃப், ரெலோ மற்றும் புளொட்.

5. இலங்கையின் இன முரண்பாட்டில் இந்தியா ஈடுபடுவதற்கு முன்னர் 1977இன் தொடக்கத்திலேயே ஈரோஸ் பயிற்சி முகாம்களையும் அரசியல் நடவடிக்கைகளையும் ஒழுங்கு செய்திருந்தது.

6. தமிழ்நாட்டில் 'தமிழக-ஈழ நட்புறவுக்கழகம்' போன்ற அனேக 'நட்புறவுக் குழுக்களை' உருவாக்குவதில் ஈழப் புரட்சிகர அமைப்பாளர்கள் (ஈரோஸ்) ஈடுபட்டிருந்தனர், 1977.

7. கொல்லப்பட்ட ஐ.தே.க. வேட்பாளர்கள், பருத்தித் துறையில் வீ. ரத்னசிங்கம், வல்வெட்டித்துறையில் எஸ்.எஸ். முத்தையாவும் மற்றொரு வேட்பாளரும்.

8. இந்தியத் தினசரியான 'த ஹிந்து'வைச் சேர்ந்த என். ராம், இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தைச் சேர்ந்த சார்ள்ஸ் அபயசேகர ஆகியோர் 'இலகுபடுத்துநர்களாக' ஈடுபட்ட பிரமுகர்களில் சிலராவர் (1986-87 காலப் பகுதி).

9. வரைவின்மீது இந்தியப் பிரதமர், வெளிநாட்டு அமைச்சர் கே.பீ.எஸ்.மேனன், செயலாளர் குல்திப் சஹதேவ் ஆகியோருடனான பேச்சுக்களுக்காக டெல்லியில் கூடிய அமைப்புக்களின் பிரதிநிதிகள்:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | | |
|---|---|---|
| எல்ரீரீஈ | - | பிரபாகரன் மற்றும் திலீபன் |
| த.ஐ.வி.மு. | - | அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் மற்றும் சம்பந்தன் |
| ஈபீஆர்எல்எஃப் | - | பத்மநாபா மற்றும் கேதீஸ்வரன் |
| ஈரோஸ் | - | திருநேசன் மற்றும் பாலகுமார் |
| ரெலோ | - | சிறீகாந்தா மற்றும் சார்ள்ஸ் |
| புளொட் | - | சித்தார்த்தன் மற்றும் வாசுதேவா |
| ஈஎன்டிஎல்எஃப் | - | ராஜன் மற்றும் கனகராஜா |

10. ஈஎன்டிஎல்எஃப் 1986இல் புளொட்டிலிருந்து பிரிந்து சென்று உருவான ஒரு குழு.



### அத்தியாயம்- 7

# தீர்வுக்கான முன்னெடுப்புகளும் அதற்கான தடைகளும் (1989-1998)

இந்த அத்தியாயம் 1989-90 காலப்பகுதியில் பிரேமதாசவின்கீழ் இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை ஆராய்கின்றது. 1990ஆம் ஆண்டு முடிவதற்கிடையில் சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்து, அரசாங்கப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் யுத்தம் ஆரம்பித்துவிட்டது. மேலும் இங்கு நாம் 1994இன் தொடக்கத்தில் சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்க தலைமையில் இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள், 1997இன் பொதுசன முன்னணியின் (பொ.மு.) தீர்விற்கான முன்மொழிவு மற்றும் அதன் தாக்கம் ஆகியவற்றையும் அதனைத் தொடர்ந்து கடந்த காலத்தில் சமாதானச் செயல்முறைகளுக்குத் தடைகளாயிருந்த பிரதான இடையூறுகளையும் தீர்விற்கான முன்னெடுப்புகளின் இரண்டுங்கெட்ட நிலைகளையும் ஆராய்கின்றோம்.

## எல்ரீரீஈயுடனான பேச்சுவார்த்தைகள் 1989–1990: ஒரு பரிசீலனை

போராளிக் குழுக்களின் ஆயுதங்களைக் களைதல், ஒரு வழமையான சிவில் நிருவாகத்துக்குச் சாதகமான நிலைமைகளை மீண்டும் ஏற்படுத்துதல், மாகாண சபைகள் செயற்படுவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குதல், இப் பொறுப்புகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டவுடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்திய அமைதிப் படையை (IPKF) திரும்ப அழைத்துக் கொள்ளல் என்பவை இந்திய அரசாங்கத்தின் வெளிப் படுத்தப்பட்ட குறிக்கோள்களாயிருந்தன. தமிழீழ விடுதலைப் புலிகளின் இணங்கிப் போகாத தன்மையும் இந்திய அமை திப் படையுடன் அதன் ஆயுதமோதலும் இக்குறிக்கோள் களை எட்டுவதில் தாமதங்களை ஏற்படுத்தின. தமிழர் ஐக் கிய விடுதலை முன்னணி, ஈரோஸ் மற்றும் எல்ரீரீஈ ஆகி யன மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட மறுத்தன. இந்திய-இலங்கை ஒப்பந்தம் தொடர்பான தமிழீழ விடு தலைப் புலிகளின் சந்தேகங்களிலும் இந்திய அமைதிப் படை தொடர்பில் அது மேற்கொண்ட மோதல் அணுகு முறையிலும் எல்ரீரீஈ மாறாத நிலைப்பாட்டில் இருந்தது.

தேர்தலில் எல்ரீரீஈ போட்டியிட்டிருக்குமாயின் அது ஏனைய கட்சிகளைவிட அனுகூலமடைந்திருக்கும். அத்து டன், இந்திய அமைதிப்படையின் ஆதரவையும் வென்றி ருக்கும். ஆனால், இந்நடவடிக்கை இந்திய-இலங்கை ஒப்பந் தம் பற்றிய பிரபாகரனின் அறிக்கையில் அவர் நிராகரித் திருந்த 13ஆவது திருத்தச் சட்டத்தினுள் எல்ரீரீஈ செயற் படவேண்டிய கடப்பாட்டை அதன்மீது சுமத்தி யிருக்கும் (தயான்: 2000 : 91). இந்திய அமைதிப்படை இராணுவ ரீதி யாக எல்ரீரீஈயைக் குறிப்பிடத்தக்களவு வலுவிழக்கச் செய் திருந்ததுடன், ஒரு கெரில்லாப் படையாக வன்னிக் காட்டி னுள் அதனைக் கட்டுப்படுத்தியுமிருந்தது. மாகாண சபை யில் பதவியேற்பதற்கு உடன்பட்டிருந்தால் அது முழுமை யாக ஆயுதங்களைக் களைந்து இந்திய அமைதிப்படை யின் கண்டிப்பான மேற்பார்வையின்கீழ் வரவேண்டியிருந் திருக்கும். எல்ரீரீஈ அதன் இறுதி இலக்கை இடருக்குள் ளாக்கக் கூடிய எந்தவொரு நடவடிக்கையிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள விரும்பவில்லையெனத் தோன்றியது (கல்கத்துடன் நேர்காணல், 21 ஏப்பிரல் 2001).

இச்சூழ்நிலைகளில் இந்திய அரசாங்கம் இரண்டாவது பெரிய போராளிக் குழுவான ஈழ மக்கள் புரட்சிகர விடு தலை முன்னணியை (ஈபீஆர்எல்எஃப்) ஆதரிக்கத் தீர்மா னித்ததுடன், வடக்கு-கிழக்கு மாகாணசபை (வ.கி. மா.ச.) அதிகாரத்தில் அதனை அமர்த்தவும் செய்தது. விரைவில் ஈபீஆர்எல்எஃப் மாகாண சபைக்குச் சட்டப்படி பகிரப்





பட்ட அதிகாரங்களைப் பிரயோகிப்பதில் பாரதூரமான பிரச்சினைகளை எதிர்நோக்கத் தொடங்கியது. வடக்கு-கிழக்கு மாகாண சபையின் அதிகாரங்களை அமுல்படுத்த விடாமல் தடுப்பதில் அரசியல் யாப்பில் போதிய ஓட்டை கள் இருந்தன. உதாரணமாக அதிகாரங்கள் தொடர்பான பொதுப்பட்டியல் மற்றும் தேசியக் கொள்கைகளின் மீதான மத்திய அரசின் பிடி ஆகியவற்றைக் குறிப்பிடலாம் (பிரேமச் சந்திரனுடன் நேர்காணல், 6 யூன் 2001).

பகிரப்பட்ட அதிகாரங்களைச் செயற்படுத்துவது தொடர்பான பிரச்சினையை திசைதிருப்பும் பொருட்டு, பிரேமதாசா இந்திய அமைதிப்படையை கூடிய விரைவில் வெளியேற்ற வேண்டுமென்ற பிரச்சாரத்தை முன்னெடுத் தார். இதற்கு அணிசேர்க்கும் வகையில் அவர் பதவியேற்ற ஆறுமாதங்களில் அமைதிப்படையைப் பூரணமாக மீள அழைக்கக்கோரி இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதினார் (டிக்ஸிற்: 1998: 373). இலங்கையின் சுதந்திரத்துக்கும் அதன் ஒருமைப்பாட்டுக்கும் குந்தகம் விளைவிக்கும் வகையில் இந்தியா இலங்கைமீது கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கக் கூடுமென்ற உண்மையான கவலையினால் அவர் தூண்டப் பட்டாரெனத் தோன்றுகிறது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் வடக்கு-கிழக்கு மாகாண சபை தொடர்பில் அவரின் கொள்கை மட்டுமீறிய இக்கவலை களினால் வழிப்படுத்தப்பட்டது. 'ஈபீஆர்எல்எஃப்'ஐ அவர் இந்திய அரசாங்கத்தினதும் இந்திய அமைதிப் படை யினதும் 'கூட்டாளிகளாக'வே கருதினார். எனவே அவர் எல்ரீரீஈக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தார். எல்ரீரீஈ மீதான தடையை அவர் நீக்கியதுடன், அரசியல் தீர்வு பற்றிய உடன்பாடொன்றை அவர்களுடன் எட்டுவதற்கான நோக்க மென்ற வெளிவேடத்துடன் அவர்களைப் பேச்சுவார்த்தை களுக்கும் அழைத்தார் (வீரக்கோன்: 1998: 145).

பிரேமதாசவின் தூண்டுதலின்பேரில் எல்ரீரீஈ தன்னை விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி (பீஎஃப்எல்ரீ) என்ற ஓர் அரசியற் கட்சியாகப் பதிவுசெய்தது. எல்ரீரீ ஈயுடன் நெருக்கமான தொடர்பை வைத்திருந்த ஒரு போராளிக் குழுவான ஈரோஸ் ஏற்கெனவே பாராளு மன்றத்தில் இருந்தது. 'பேச்சுவார்த்தைகளுக்குப் பாதகம் ஏற்படுத்தக்கூடுமென்பதனால் எல்ரீரீஈக்கு எதிராகத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடவேண்டாமென' இந்திய அமைதிப்படைக்கு அறிவுறுத்தும்படி இந்தியப் பிரதமரைப் பிரேமதாச கேட்டுக்கொண்டார் (டிக்ஸிற்: 1998: 376). இந்திய அமைதிப் படையுடன் அவர்களின் போராட்டத்தைத் தொடர்வதற்கும் அதன் வெளியேற்றத்தைத் துரிதப் படுத்துவதற்குமென எல்ரீரீஈக்கு அவர் ஆயுதங்கள் வழங்கினார் (கல்கத்துடன் நேர்காணல்: 21 ஏப்பிரல் 2001). தமிழ்-சிங்களப் பேச்சுவார்த்தைகளுக்கு இப்போது ஒரு வழக்கமான துணைச்சாதனமாகிவிட்ட சர்வகட்சி மாநாடென்ற (ச.க.மா.) கருவியையும் பிரேமதாச பயன்படுத்தினார். எல்ரீரீஈ ஒரு குறுகியகாலம் சர்வகட்சி மாநாட்டில் அதன் பிரசன்னத்தைக் காட்டிக்கொண்டது.

எல்ரீரீஈ தனிநாடொன்றைத் தாபிப்பதற்கு ஆதரவான நடவடிக்கை எதனையும் தடைசெய்த ஆறாவது திருத்தம் நீக்கப்படவேண்டுமென்றும், வடக்கு-கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டுப் புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்றும் இரு கோரிக்கைகளை முன்வைத்தது. இவை இரண்டும் உடனடியாக நிறைவேற்றப்பட முடியாதிருந்த கோரிக்கைகள். முதலாவதை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்திற்குப் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவைப்பட்டது. ஆனால் அரசாங்கததிற்கு அத்தகைய ஆதரவு இருக்கவில்லை. அது பிரிவினை பற்றிய அடிப்படைப் பிரச்சினை தொடர்பானதாகவுமிருந்தது. இரண்டாவது கோரிக்கையும் பாரதூரமானதுமான அரசியலமைப்புப் பிரச்சினைகளை எழுப்பியது. நடைமுறையிலிருந்த சட்டத்தின்கீழ் முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் மட்டும்தான் ஒரு மாகாண சபையைக் கலைக்க முடியும். மத்தியினால் மாகாண அரசாங்கமொன்று தன்னிச்சைப்படி கலைக்கப்படுவதற்கெதிரான ஒரு முற்பாதுகாப்பாயிருந்த இதனைத் தமிழ்க் கட்சிகள்தாமே வாதிட்டுப் பெற்றிருந்தன. ஆனால் பிரேமதாசா இரு கோரிக்கைகளையும் பரிசீலனை செய்ய உடன்பட்டார் (லோகநாதன்: 1996: 150).

அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்ச்சிகளிலிருந்து அரசாங்கத்தினதும் எல்ரீரீஈயினதும் நோக்கங்களைத் தீர்மானிக்க முடியும். இந்திய அமைதிப்படை வெளியேறிய தன் பின்னர் தாம் எதிர்நோக்கவுள்ள நிலைமை பற்றி இரு





தரப்பும் அக்கறை கொண்டிருந்ததுடன், வடக்கு மற்றும் கிழக்குமீது கட்டுப்பாட்டை ஈட்டுவதற்கு எந்த முறையில் தம்மை நிலைப்படுத்திக்கொள்வது நல்லதென்றும் ஆராய்ந்து கொண்டிருந்தன. எல்ரீரீஈ அதன் இரு கோரிக்கைகளைச் சமர்ப்பித்தது. அவை ஏற்றுக்கொள்ளப் படுமாயின், வடக்கின் மீதும் கிழக்கின் மீதும் அதன் கட்டுப்பாடு திடப் படுத்தப்படும். அதன் கோரிக்கைகளுக்கான கால எல்லை இந்திய அமைதிப்படை வெளியேறும் நாளில் தங்கியிருந்தது. அரசாங்கம் இக்கோரிக்கைகளைக் காத்திரமான முறையில் பரிசீலிப்பதாயிருந்தாலும் கூட இந்திய அமைதிப் படையினர் வெளியேறிய பின்னர் இவ்விடயங்களைப் பேசித் தீர்ப்பதற்குக் காத்திருப்பதில் எல்ரீரீஈ அக்கறை காட்டவில்லை.

இந்திய அமைதிப் படையை அரசாங்கம் பதிலீடு செய்வதற்கு இடமளித்தலை எல்ரீரீஈ தாங்கிக்கொள்ள முடியாதென்பதால் இந்திய அமைதிப்படையின் இடத்தைக் கைப்பற்றுவதற்கு அது உடனடியாகச் செயற்படவேண்டியிருந்தது. மறுபுறத்தில் எல்ரீரீஈயின் கோரிக்கைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பதில் பிரேமதாசவுக்கு உண்மையில் சிரமங்கள் இருந்தன. அதேசமயம் இந்திய அமைதிப்படையிடமிருந்து பாதுகாப்பைப் பொறுப்பேற்று இராணுவத்தின் நிலையைப் பலப்படுத்துவதற்கு பிரேமதாச எத்தகைய நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அமைதிப்படைக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையில் ஒத்திசைவான செயற்பாடு இருந்திருக்குமாயின் வடக்கு-கிழக்கை அரசாங்கம் தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்க முடிந்திருக்கும். ஆனால் அமைதிப்படைக்கும் ஈபிஆர்எல்.எப்க்கும் எதிராக பிரேமதாசா எடுத்திருக்கும் நிலைப்பாடானது தேவைப்பட்ட ஒத்திசைவான சூழலை உருவாக்கத் தவறியது. இழந்த அதன் இராணுவ ஆற்றலை மீளப்பெறும் பொருட்டு எல்ரீரீஈ இந்திய அமைதிப்படை வெளியேறிய பிரதேசங்களினுள் நகரத்தொடங்கியது. வடக்கிலும் கிழக்கிலுமிருந்து இலங்கை அரசானது இராணுவ முகாம்கள் சிலவற்றை வாபஸ்பெற்றமை, எல்ரீரீஈக்கு ஆயுதங்களை வழங்கியமை போன்ற பிரேமதாசவின் சில நடவடிக்கைகள், அமைதிப்படையை வெளியேற்றுவதற்காக எல்ரீரீஈக்குத் தற்காலிகமாக அதிகாரத்தை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வழங்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டவைகளாகக் கூட இருக்கலாம். எல்ரீரீஈயைத் தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவர முடியுமென்ற கற்பனையான நம்பிக்கையின் பேரில் அவர் இதனைச் செய்திருக்கக்கூடும். இது தான் அவரின் உபாயமாக இருந்திருப்பின் அது பேரழிவான விளைவுகளுடன் அவரைத் திருப்பித் தாக்கியது (லோகநாதன்: 1996: 151-52).

இதற்கிடையில் எல்ரீரீஈ வேறுமுனைகளில் அதன் நடவடிக்கைகள் மூலம் தனது நோக்கங்களைத் தெளிவாக வெளிப்படுத்திக்கொண்டிருந்தது. இக்காலப்பகுதியில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இப்படுகொலைகளை எல்ரீரீஈ ஒழுங்கு செய்திருந்தமை தெளிவாகப் புலப்பட்டது. அமைதிப்படை வெளியேறுவதற்கு முன்னர் எல்ரீரீஈ தமிழர்களின் ஏகப் பிரதிநிதியாக இல்லாதுவிடினும் மிகவும் பலம் பொருந்தியதென்ற அதன் நிலையைத் தாபிப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. ஈபீஆர்எல்எஃப் அதன் தமிழ்த்தேசிய இராணுவத்தைக்கொண்டு கட்டியெழுப்பிக் கொண்டிருந்த இராணுவ ஆற்றல் முழுவதையும் அது அழித்தொழித்தது. அமைதிப்படை வெளியேறியவுடன் எல்ரீரீஈ கட்டுப்பாட்டைக் கைப்பற்றுவதற்கு விரைந்ததுடன் பேச்சு வார்த்தைகளையும் முறித்துக்கொண்டது (தயான்: 1999: 55). எல்ரீரீஈயின் செயற்பாடு குறித்து திகைப்பை வெளிப்படுத்திய அரசாங்கம், பேச்சுவார்த்தைகளை ஒருதலைப்பட்சமாக முடித்துக்கொள்வதற்குத் தீர்மானித்ததற்காக அதன் மீது பழிசுமத்தியது.

எல்ரீரீஈ பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து தீர்வை ஏற்றுக்கொண்டிருக்குமாயின் சுதந்திர ஈழமென்ற அவர்களின் இலக்கைக் கைவிடுவதற்கும் உடன்படவேண்டியிருந்திருக்கும். 1994ஆம் ஆண்டு பிரபாகரன் அவர்கள் BBCக்கு வழங்கிய செவ்வியின்பொழுது, "தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளைக் கையாள்வதற்கு அரசாங்கம் தயாராக இல்லையென்றும் பேச்சுவார்த்தைகள் தடம் மாறியதால் இயல்பாகவே அது முறிந்துவிட்டது" என்றும் கூறினார். பிரேமதாசவுடனான பேச்சுவார்த்தைகளில் எல்ரீரீஈ எடுத்த நிலைப்பாடு எதிர்காலத்தில் அவர்கள் கைக்கொள்ளவிருந்த பேச்சுவார்த்தை உபாயத்தை முன்குறித்துக்காட்டியது - முதலாவது, அவர்களின் பாரம்பரியத் தாயகம் என்று கோருவதில் இயன்றளவு பெரும் பிரதேசத்தின்மீது கட்டுப்பாட்டைக் கொண்டவர்களாகப் பலம்பொருந்திய ஒரு நிலையிலிருந்து பேச்சுவார்த்தையை நடத்துதல். இரண்டாவது, தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதியாகப் பேச்சுவார்த்தையை நடத்துதல். முதலாவது, வடக்கிலும் கிழக்கிலும் இலங்கை இராணுவத்துக் கெதிரான வெற்றிகரமான இராணுவ நடவடிக்கைகளைக் குறித்தது. இரண்டாவது, தமிழர்களின் பேச்சாளராக மாற்று அமைப்பைச் சேர்ந்தவர்கள் அல்லது வேறு எவரேனும் எழுதலை ஒழித்துக்கட்டுவதைக் குறித்தது.





பிரேமதாச நடத்திய பேச்சுவார்த்தையானது இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக கால அவகாசத்தை அவருக்கு வழங்கியது. அப்போதும் வடக்கு-கிழக்கில் இந்திய அமைதிப்படைதான் பொறுப்பாயிருந்தது. எல்ரீரீஈ அவர்களின் கடுமையான இராணுவ அழுத்தத்துக்குட்பட்டிருந்தது. வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கு ஈபீஆர்எல்எஃப் தெரிவு செய்யப்பட்டிருந்தது. ஒரு சிவில் நிர்வாகம் தாபிக்கப்பட்டுக்கொண்டிருந்தது. மேற்கண்ட சூழ்நிலையில் இச்சந்தர்ப்பத்தினை முழுமையாகப் பயன்படுத்துவதாக இருந்தால் அமைதிப்படையையும் ஈபீஆர்எல்எஃப்ஐயும் எல்ரீரீஈயையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரும் மூலோபாயத்தைப் பிரேமதாசா கையாண்டிருக்க வேண்டும். இதனை எல்ரீரீஈ கடுமையாக எதிர்த்திருக்கக்கூடும். ஆயினும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஈபீஆர்எல்எஃப் கேட்டுக்கொண்டதற்கு இணங்க 13ஆவது திருத்தத்தை ஆக்கபூர்வமான முறையில் நடைமுறைப் படுத்தியிருக்குமாயின் புலிகள் வேறுவழியின்றி அத்தகைய ஒரு பேச்சுவார்த்தையில் பங்கேற்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியிருப்பர். இம்மூலோபாய முடிவுகள் இந்திய அமைதிப்படைக்கு எதிரான பிரேமதாசாவின் நிலைப்பாடுகளுக்கு முற்றிலும் முரணானது.

அமைதிப்படை வெளியேறத் திட்டமிடுகின்றதென்று அவருக்குத் தெரிந்திருக்குமென்பதனால் இரு அரசாங்கங்களினதும் நலன்களுக்குகந்ததாக அது கட்டங்கட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாக மீளப் பெறப்படுவதற்கு இணக்கமான முறையில் அவர் உடன்பட்டிருக்கலாம். ஆனால் இந்தியாவின் நோக்கங்களை யிட்டு அவர் மனமார அவநம்பிக்கை கொண்டிருக்கக் கூடும் அல்லது உறுதியான ஒரு சிங்களத் தலைவராகத் தம்மை முனைப்படுத்திக் காட்டக்கூடிய பிரகடனமொன் றைச் செய்யத் தீர்மானித்திருக்கக்கூடும். இந்த இந்திய விரோத நிலைப்பாடு தவிர்க்கமுடியாதவாறு எல்ரீரீஈயுடன் உறவுத் தொடர்பை நாடுவதற்கு அவரை இட்டுச்சென்றது. பிரேமதாசவுக்கும் எல்ரீரீஈக்கும் குறுகியகால உடனடித் தேவைகளே அவர்களின் பிரதான அக்கறையாயிருந்தன (கல்கத்துடன் நேர்காணல்: 21 ஏப்பிரல் 2001).

எல்ரீரீஈ - பிரேமதாச பேச்சுவார்த்தைகள் இனப் பிரச்சினையைக் கையாள்வதில் சிங்கள அரசியல்வாதி களுக்கு ஒரு தெளிவான படிப்பினையாயுள்ளது. அரசியல் தேவைகளுக்காக எல்ரீரீஈ போன்ற கெரில்லா அமைப் புடன் ஏற்படுத்தக்கூடிய எந்த ஒரு குறுகிய கால கூட்டும், முதலாவதாக, பேச்சுவார்த்தை மூலம் பலதரப்பும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வுக்காகச் செயற்படும் சக்திகளின் முயற்சிகளை அழித்துவிடும். இரண்டாவதாக, ஒன்று பட்ட இலங்கைக்குள் நீண்டகாலப் போக்கில் வடக்கு-கிழக்கில் ஜனநாயகத்தை மீளவும் நிலைநாட்டுகின்ற குறிக் கோளினை எட்ட முடியாமற் செய்யும்.

## சந்திரிகாவின் முன்மொழிவின் தடம்பின்பற்றுதல் (1994 – 1998)

1995இல் பொதுசன முன்னணி (பொ.மு.) அரசாங்கம் 'ஆகஸ்ட் 1995 முன்மொழிவுகள்' என்று அழைக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தினைத் தேசிய நிகழ்ச்சிநிரலில் முன்வைத்தது. பாராளுமன்றத் தெரிவுக்குழு முன் சமர்ப்பிக்கப்பட்ட அதன் சட்ட வரைவு '1996 சனவரியின் சட்ட வரைவு' என்றழைக்கப்பட்டது. இது சிலகாலம் கிடப்பில் போடப் பட்டதன் பின்னர் 1997இல் 'ஒக்ரோபர் 1997 முன்மொழிவு கள்' என்ற புதிய பெயரில் அவசர அவசரமாக மீண்டும் வெளிப்பட்டது. இத்தீர்வுத் திட்டமானது மீண்டும் தெரிவுக் குழுவிடம் கையளிக்கப்பட்டது. தெரிவுக்குழுவில் இடம் பெற்ற கலந்தாலோசனைகள் எதுவும் மக்களுக்குத் தெரியப் படுத்தப்படவில்லை. 1999இல் சனாதிபதித் தேர்தலின்





பின்னர் மிகவும் பரபரப்பான அரசியல் மற்றும் இராச தந்திர முன்னெடுப்புகளைத் தொடர்ந்து, பொதுஜன முன் னணியினரும் ஐக்கிய தேசியக் கட்சியினரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு எனக் கருதப்பட்ட இரு தரப்புப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் தீர்மானித்தனர். 2000ஆம் ஆண்டு மார்ச் முதல் யூலை வரையான காலப் பகுதியில் நடைபெற்ற இருதரப்புப் பேச்சுவார்த்தையில் குறிப்பாக ஒக்ரோபர் 1997 முன்மொழிவுகள் ஆராயப்பட்டு பொதுஜன முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகி யவை கூட்டாக மேற்கொண்ட தீர்மானங்கள் ஒரு ஆவண மாக வெளிக்கொணரப்பட்டது.

இம்முன்மொழிவுகளைப் பின்னோக்கிப் பார்த்தல் இலகுவானது. ஏனெனில், 1987இன் இந்திய-இலங்கை ஒப்பந்தமோ, மற்றும் அரசியல் யாப்பின் 13ஆவது திருத் தமோ இங்கு கணக்கில் எடுக்கப்படவில்லை. மேலும் இனப் பிரச்சினை மற்றும் தேசியப் பிரச்சினை தொடர்பில் அதி காரப்பகிர்வு தொடர்பான சர்ச்சைக்குரிய விடயங்கள் மீதான விவாதத்தின் தோற்றத்தையும் அது புறக்கணிக்கின் றது. இத்தீர்வுத் திட்டமானது, முழு நாட்டையும் உள்ள டக்கிய ஒன்றாகும். ஆனால் மறுக்க முடியாத உண்மை யாதெனில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஒரு பொருத்த மான திட்டத்தினைக் காண்பதற்குப் பிரதான உந்துசக்தி யாகவும் தூண்டுகோலாகவும் அமைந்தது இனமோதலே யாகும். மேலும், இந்த நாட்டின் சிறுபான்மை தேசிய இனங்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும் அபிலாஷை களுக்கும் அரசியல்ரீதியான பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டிய தேவை தமிழ் மக்களுக்கே இருந்தது. (நேர்காணல்: பிரேமச்சந்திரனுடன் 7 மே 2001 மற்றும் சிவ சிதம்பரத்துடன் 15 ஏப்பிரல் 2001).

## சந்திரிகாவின் தீர்வுத்திட்ட முன்மொழிவுகள் (1995 – 1997)

இலங்கை அரசாங்கத்தின் 1995ஆம் ஆண்டின் சமா தானத் தீர்வுத்திட்டமானது பல முக்கிய கேள்விகளை எழுப்புகின்றது. இங்கு முதலாவதாக தீர்வுத்திட்டத்தின் குறைபாடுகள் பற்றி ஆராய்வோம். அடுத்து தீர்வுத் திட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டத்தை நடைமுறைப்படுத்துவதன் சாத்தியக் கூறுகள் குறித்து ஆராய்வோம்.

முதலாவதாக, இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்த வரை, நீண்டகால சமாதானம் மற்றும் சுபிட்சத்திற்காக, கூடிய விரைவில் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டி யிருந்தது. ஆனால் இத்தீர்மானத்தைத் தமிழ் கட்சிகளின் கோரிக்கைகளைத் தனியான ஒரு திட்டவரைவினூடாக வெளிப்படுத்துவதா அல்லது அனைத்து மாகாணங்களை யும் ஒரேவிதமாகக் கையாளுகின்ற முயற்சியினை மேற் கொள்வதா என்பதற்கான முடிவினையும் எடுக்க வேண்டி யிருந்தது. இக்கேள்வி இங்கு ஏன் எழுகிறது என்றால் வேறு எந்த ஒரு மாகாணமும் மேலதிக அதிகாரங்களை வலி யுறுத்திக் கேட்கவில்லை. மாறாக, வடக்கு-கிழக்கு மாகாணம் தனது முந்தைய தனிநாடு கோரிக்கைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய மாற்றீடாக ஒரு சமஷ்டி ஆட்சிமுறையை வலியுறுத் தியது.

இக்கேள்வியை எதிர்கொள்ளும்போது முதலாவதாக அதிகாரப் பங்கீடு மற்றும் சுயாட்சி குறித்து சந்திரிகா அரசாங்கத்தின் மனப்பாங்கினை நாம் மனத்திற்கொள்ள வேண்டும். இரண்டாவதாக, அரசாங்கமும் சிங்கள வாக்கா ளர்களும் தமிழர் சுயாட்சி இயக்கம் தொடர்பாகத் தங்க ளுடைய அணுகுமுறையில் மனமாற்றத்திற்குத் தயாராக இருந்தார்களா என்பதை நோக்க வேண்டும். இறுதியாக, சமச்சீரற்ற சமஷ்டி என்றழைக்கப்படும் ஒரு திட்டத்தை, அதாவது சிங்கள மாகாணங்களுக்குக் கொடுக்கப்படவுள் ளனவற்றிலிருந்து வேறுபட்டதாக வடக்கு-கிழக்கிற்குத் தனிவேறான சமஷ்டி ஏற்பாடுகளைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

இத்தருணத்தில் கொழும்பிலுள்ள சிங்கள அரசாங்கம் சமாதானத் தீர்வுத்திட்டத்தின் முழுமையான உள்ளடக்கம் தொடர்பாக ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கவில்லை. சனாதிபதி சந்திரிகா தனது பற்றுக்கோள்களில் உறுதியாக இருந்தபோதிலும், பெருமளவுக்குச் சிங்களப் புத்திஜீவி களினதும் புத்த குருமாரினதும் அழுத்தம் காரணமாக அவரின் அமைச்சர்கள், அவ்வாறிருக்கவில்லை. எனவே





அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் தான்தோன்றித்தன மான நிலை காணப்பட்டது. இக்கருத்து வேறுபாடுகள் எல்லா வற்றின் மத்தியிலும் சனாதிபதி தேவையான சட்டத்தைப் பாராளுமன்றத்தின் ஊடாகப் பலவந்தமாக நிறைவேற்று வாராயின் அமைச்சர்களோ சிங்கள அதிகார வர்க்கத்தி னரோ சுயாட்சிக்கான திட்டத்திற்கு அர்த்தமளிப்பதிலோ அதனைச் செயற்படுத்துவதிலோ ஒத்துழைக்க மாட் டார்கள் (ஜயலத் ஜயவர்தனவுடன் நேர்காணல்: 30 ஏப்பிரல் 2001). இத்தீர்வுத்திட்டம் அரசாங்கத்திலும் எதிர்க்கட்சி யிலுமுள்ள தீவிரவாதச் சிங்களக் குழுக்களால் ஆலோசனை கூறப்பட்ட பல்வேறு திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் நிச்சயமாகச் சமர்ப்பிக்கப்படுமாயினும் கூட, திருத்தப் பட்ட முன்மொழிவுகளைத் தமிழ்க் கட்சிகள் ஏற்றுக் கொள்ளுமா என்ற சந்தேகம் எழுகின்றது (சுனந்த தேசப் பிரியவுடன் நேர்காணல்: 4 மே 2001).

இரண்டாவதாக, தமிழ் மக்கள் துப்பாக்கியின்மீது தமது நம்பிக்கையை வைக்கத் தொடங்கியதன் பின்னர் பெரும் மாற்றம் கண்டுள்ள சிங்கள மக்களின் மனப் பான்மை பற்றிய கேள்வி எழுகின்றது. தமிழ்ப் போராளிகள், பிரதானமாக ஈரோஸ் மற்றும் எல்ரீரீஈ என்பன, யுத்தத்தின் கொடூரத்தை அவர்களின் வாயிற்படிக்குக் கொண்டுவந்து விட்டார்களென்ற வகையில் சிங்கள மக்கள் இன்று கொடிய தொரு சவாலை எதிர்நோக்குகின்றனர். வியட்நாம் யுத்தத் தில் அமெரிக்கா நடந்துகொண்டதைப்போன்று சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் யுத்தத்தை வடக்கு-கிழக்கு மாகாணத்தினுள் கட்டுப்படுத்திவிடலாமென்று இனிமேலும் எதிர்பார்க்க முடியாது. சிங்களவர்களுக்கு இது இப்போது ஒரு பெரும் அரசியற் செயல்முறையாகி யுள்ளது. எனவே அவர்கள் சமாதானத்தின் பயன், தேசியப் பொருளாதார முன்னேற்றத்துக்குப் பயன்படுத்தக்கூடிய கோடிக்கணக்கான ரூபாய் குறித்த கேள்விகளை எழுப்பு கின்றனர். இதனடிப்படையில் சிங்கள அரசியல்வாதிகள் இலங்கையை ஒரு பல்லின அரசாக இப்போது பார்க்க வேண்டுமென்றும், இனிமேலும் இத்தீவு 'சிங்கள பூமி புத்திரர்களுக்கு' அல்லது 'ஸ்ராட்ஸ்வொக்'கினருக்குச் சொந்தமானதல்லவென்றும் தமது மக்களுக்கு இடை விடாது நினை வூட்டி வருகின்றனர். இறைமை பொருந்திய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கை அரசின் உண்மையான குடிமக்கள் சிங்கள பௌத்தர்கள் என்பதே சிங்கள அரசியல்வாதிகளின் முன்னைய நிலைப்பாடாக இருந்தது (சுனந்த தேசப்பிரியவுடன் நேர் காணல்: 4 மே 2001).

முக்கியமாக இன்றைய சூழ்நிலையில் யுத்த நோக்கங்கள் பற்றிய விடயத்தில் சிங்கள மக்களும் அவர்களது அரசியல் தலைவர்களும் ஒன்றுபட்ட கருத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதற்குச் சான்றுகள் உள்ளன. யுத்தத்தில் ஒன்றுபடுவதற்கான இந்த இயலாமைதான் வடக்கு-கிழக்கு யுத்தம் எல்ரீரீஈக்கு வெற்றியளிக்காதுவிடினும் அதனை ஒரு தேக்க நிலைக்கு இட்டுச்சென்றது. அமெரிக்க மாணவர் அமைப்புகள் மத்தியில் நிலவிய ஒற்றுமையின்மை பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்வுக்கு வருவதில் அமெரிக்கா எடுத்த முயற்சிகளை வியட்நாமியர் ஒதுக்கித் தள்ளினர். அது இறுதியில் சனாதிபதி ஹோசிமின்னினதும் வியட்கொங்கினதும் முழுவெற்றிக்கு இட்டுச்சென்றது. எனவே சிங்கள மக்களும் அவர்களது தலைவர்களும் நன்நம்பிக்கையுடன் நடந்துகொள்ளாவிடின் வடக்கு-கிழக்கினுடைய நிலைமை எல்லாவிதத்திலும் நீண்ட காலத்திற்குத் தொடரும் என எதிர்பார்க்கலாம் (சுனந்த தேசப்பிரியவுடன் நேர்காணல்: 4 மே 2001).

மூன்றாவதாக, தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெற்ற அரச உதவியுடனான சிங்கள குடியேற்றங்களால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றிய பாரிய கேள்வி எழுகின்றது. இப்பிரச்சினையைக் கையாள்கையில் 1971ஆம் ஆண்டு என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட கால அளவாகும். அதற்குப் பின்னால் உருவாக்கப்பட்ட குடியேற்றங்களை அரசு திரும்பப் பெறுவதன் மூலம் சீராக்கிக்கொள்ள வேண்டும். இத்தகைய ஒரு தீர்விற்கு இருதரப்பு அரசியல் வாதிகளும் எல்ரீரீஈயும் உடன்பட வேண்டும். அவ்வாறில்லையெனில் குடியேறியவர்கள் கெரில்லா தாக்குதலுக்கு ஆளாவார்கள் (தமிழ் ரைம்ஸ், 15 யூன் 1997).

நான்காவதாக சனாதிபதி சந்திரிகா அவர்கள் 2000ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்த தீர்வுத் திட்டத்திற்கான நகல் பிராந்தியத்துக்கும் மத்திக்குமான இரண்டு





அதிகாரப்பகிர்வு ஆலோசனைகளைக் கொண்டிருந்தது. பிராந்தியங்களுக்கான அதிகாரப் பங்கீடு தொடர்பில் பிராந்திய அரசுக்கான பட்டியல், மத்திய அரசிற்கான பட்டியல் என இரண்டு பட்டியல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை கவனமாக மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படவேண்டும். எடுத்துக்காட்டாக அரும்பொருட் காட்சியகங்கள் மற்றும் அகழ்வாராய்ச்சிக்குரிய பகுதிகள் அறிவுபூர்வமாகச் சிந்திக்குமிடத்து அவை பிராந்திய சபைகளின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். ஆனால், புரிந்து கொள்ளக்கூடிய காரணங்களுக்காக அவை மத்திய அரசின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

பொதுசன முன்னணி தேசிய முரண்பாட்டைத் தீர்ப்பதென்ற வாக்குறுதியுடன் சமாதானக் கோட்பாட்டின் அடிப்படையில் அதிகாரத்துக்கு வந்தது. அது தமிழ் மக்களின் நம்பிக்கைகள் அதிகரித்த ஒரு காலமாயிருந்தது. எல்ரீரீஈயுடன் சமாதானப் பேச்சுக்கள் தொடங்கப்பட்டதுடன் நிபுணர்களால் அதிகாரப்பகிர்வுக்கான முன்மொழிவுகளும் வரையப்பட்டன.

எல்ரீரீஈயுடனான பேச்சுகள் முறிவடைந்த பின்னரே அதாவது 1995 ஆகஸ்ட் 3ஆம் தேதியன்று இம்முன்மொழிவுகள் வெளியிடப்பட்டன. ஒரு குறிப்பிட்டகால விவாதத்தின் பின்னர் 1996ஆம் ஆண்டு சனவரி மாதம் வலுகுறைக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு முன்மொழிவுகள் 'சட்ட முதற்படிவம்' (Legal text) எனக் குறிப்பிடப்பட்ட ஒருவகையான சட்டத்திருத்த வரைவு மூலம் ஒன்று, புதிய பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்டது.

அதிகாரப்பகிர்வு முன்மொழிவுகள் இரண்டினையும் பகுப்பாய்வுக்குட்படுத்துகையில், பிராந்தியத்துக்கு அதிகாரத்தைப் பகிரும் நோக்கம் அரசுக்கு உண்மையாக இருக்கவில்லையென்பதையும், அரசாங்கம் தொடக்கத்திலிருந்து எல்ரீரீஈயுடனான பேச்சுகள் முறியும் வரையில் கபடநாடகமாடி வந்துள்ளதென்பதையும் புரிந்துகொள்ள முடியும். சட்ட முதற்படிவத்தினை பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்குச் சமர்ப்பிப்பதன் மூலம், அரசாங்கம் வெறுமனே காலம் கடத்திக்கொண்டிருந்தது. முரண்பாட்டின் பிரதான தரப்பான எல்ரீரீஈக்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வில்லை. சிரேஷ்ட பௌத்த பிக்குகளும், அனேக சிங்கள அரசியல்வாதிகளும்கூட இச்சட்ட முன்வரைவை எதிர்ப்பதாக அறிவித்தனர். ஆனால் இவர்களின் எதிர்ப்பிற்கான காரணம் தமிழ்த் தலைவர்களின் எதிர்ப்பிற்கான காரணங்களுக்கு நேர் முரணானது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கை ஒரு சிங்கள-பௌத்த அரசென்ற கருத்து புதிய முன்மொழிவுகளில் குறிப்பிடத்தக்க ஏற்பாடுகள் மூலம் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இத்தீர்வுத் திட்டமானது சிறுபான்மையினரின் உரிமைகளை வழங்கும் நோக்குடையதேயன்றி இன ஆட்சிப் பிரதேசங்களை உருவாக்குவதல்ல என்று சனாதிபதி சந்திரிகா பிரகடனப் படுத்தினார். இது பெரும்பான்மைச் சமூகத்தின் கைகளில் மிதமிஞ்சிய அதிகாரங்களைக் குவித்தது என்பதுடன் சனாதிபதி சந்திரிகாவின் கூற்றுகள் சிறுபான்மைகளுக்குச் சலுகைகளை மட்டுமே வழங்கும் என்பதை வெளிப்படுத்தியது. அரசியல் அதிகாரப்பகிர்வைத் தமிழர் வெவ்வேறு கட்டங்களில் வெவ்வேறு வகைகளில் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர். எனினும் அரசியல், பொருளாதாரம், சமூக வாழ்வு ஆகியவற்றின் எல்லா அம்சங்களிலும் சமத்துவம் இல்லாத காரணத்தால் தமிழர்களின் சுயாட்சி அதிகாரத்தைப் பெறுவதும் தம்மைச் சிறுமைப் படுத்துகின்ற ஒரு சமூகத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெறுவதும் தமிழ் மக்களின் ஏகோபித்த விருப்பமாக மாறியது. இத்தீர்வுத் திட்டத்தில் சமத்துவக் கோட்பாடு முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அதிகாரப்பகிர்வு ஆலோசனைகள் தமிழ் மக்களின் அபிலாசைகளைத் திருப்திகரமான அளவிற்கு நிறைவேற்றுவதற்கு மட்டுமன்றி அவர்களின் நியாய பூர்வமான அச்சங்களைப் போக்கக்கூடியதாகவும் இருக்க வில்லை. தற்போது முன்வைக்கப்பட்டுள்ள (மாற்றம் செய்யப்பட்ட) தீர்வுத்திட்டத்தில் உயர்கல்வி, தொழில் வாய்ப்புகள், தொழிற் சுதந்திரம், திட்டமிட்ட அரசாங்க உதவியுடனான குடியேற்றம், கருத்துச் சுதந்திரம், தனிநபர் பாதுகாப்பு, மூலவளங்களின் மீதான கட்டுப்பாடு, உள்ளூர் விவகாரங்களில் தீர்மானமெடுக்கும் உரிமை ஆகிய விடயங்கள்





தொடர்ந்தும் மத்திய அரசாங்கத்தின் மனப் போக்கிற்கு விடப்பட்டுள்ளன.

தீர்வுத்திட்டத்தின் ஏற்பாடுகள் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு உள்ளார்ந்த ஆற்றலை இழந்துவிட்டன என்பதனால் அவை நடைமுறைப்படுத்தப் படுகின்றபோது நெருக்கடிக்குள்ளாகுமென்பதில் சந்தேகமில்லை. அவை நிருவாகத் துணிவு இல்லாமையின் ஒரு தெளிவான வெளிப்பாடாகும். அரசியலமைப்புத் தடைகள் எல்லாவற்றையும் இத்தீர்வுத் திட்டம் தாண்டிச் சென்றாலும்கூட, நடைமுறைப்படுத்தப்படும்போது அது நிருவாக நடவடிக்கையினால் அல்லது நடவடிக்கையின்மையால் தோற்கடிக்கப்படும்.

## இலங்கை அரசாங்க முன்மொழிவு பற்றிய ஒரு பரிசீலனை

### சாராம்சம்

சட்ட முன்வரைவின் முன்னுரையானது, எல்லாச் சமூகங்களும் தத்தமது சொந்தச் சமயத்தைக் கடைப்பிடிக்கவும், மதக்கருத்துக்களைப் பரப்புவதற்கும் வழிவகுப்பதுடன், சட்டத்தின்முன் வேறுபாடின்றியும் முழுச் சமத்துவத்துடனும் மனித உரிமைகளுக்கும் அடிப்படைச் சுதந்திரங்களுக்கும் உத்தரவாதமளிப்பதன் ஊடாக, ஒவ்வொருவரினதும் கௌவரமும் போற்றிப் பாதுகாக்கப்படுகின்ற வகையில் ஓர் ஒழுங்கைத் தாபித்தல் இலங்கை மக்களின் விருப்பாகுமென்று தெளிவுபடக் கூறுகின்றது. எனினும் சட்ட முன்வரைவின் இரண்டாம் அத்தியாயம் புத்த சமயத்துக்கு முதலிடம் அளிப்பதுடன் புத்த சாசனத்தைப் பாதுகாத்துப் போற்றி வளர்த்தல் அரசின் கடமையென்றும் கூறுகின்றது.

அது 1978 அரசியலமைப்பின் 15(1) மற்றும் 15(2)ஆம் உறுப்புரைகளால் வழங்கப்பட்ட உரிமைகளை மட்டும் தான் மற்ற அனைத்துச் சமயங்களுக்கும் நீடிக்கின்றது. ஏனைய சமயங்கள் சமமாக நடத்தப்படவில்லையென்பதை இது தெளிவாகக் காட்டுகின்றது. அரசு புத்த சாசனத்தைப் பாதுகாப்பதற்கு மட்டுமன்றிப் போற்றி வளர்ப்பதற்கும் கடமைப்பட்டுள்ளது. ஏனைய சமயங்கள் தொடர்பில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இக்கடமையுணர்வு காட்டப்படவில்லை. இது இலங்கையின் பன்மைச் சமூகத்திற்கான அரசியல் யாப்பு அடிப்படைகளை மீள்வரையறை செய்தல் என்று பிரகடனப்படுத்தப்பட்ட அறிவித்தலை மறுதலிப்பதாக உள்ளது.

## பிராந்திய நிருவாகம்

ஆளும் கட்சியின் தரப்பில் பிராந்திய ஏற்பாட்டைப் 'பிராந்திய அரசாங்கம்' என்று அழைப்பதற்கான தயக்கத்தை முன்வரைவு வெளிப்படுத்துகின்றது. அதற்குப் பதிலாக அது பிராந்திய நிருவாகம் பற்றிக் கூறுகின்றது. சட்டமுன்வரைவு பிராந்தியச் சபை என்ற பெயரில் அறியப்படும் பிராந்தியச் சட்டசபையொன்றுக்கும் பிராந்திய ஆளுநர் என்ற பெயரில் அறியப்படும் ஒரு பிராந்திய நிறைவேற்றுனருக்கும் அமைச்சர்களின் சபையொன்றுக்கும் பிராந்திய நீதித்துறையொன்றுக்கும் ஏற்பாடு செய்கின்றது. இருந்தபோதிலும் தற்போதைய அரசாங்கம் இதனைப் பிராந்திய மட்டத்திலான ஓர் அரசாங்கமென்று அழைக்கப்படுதலை விரும்பவில்லை. எனினும், பிராந்திய பட்டியலின் 16ஆம் விடயம் 'உள்ளூர் ஆட்சி' பிராந்திய நிருவாகத்தின் கீழ் இருக்கவேண்டுமெனக் குறித்துரைக்கின்றது. அரசாங்கத்தின் கருத்துப்படி முழுநிறைவான சட்டவாக்க அதிகாரத்தையும் நீதித்துறை அதிகாரத்தையும் அனுபவிக்காத உள்ளூர் அதிகாரசபைகள் 'உள்ளூர் ஆட்சி' என்று குறிப்பிடப்படுவதற்குத் தகுதியானவை என்றபோதிலும், பிராந்திய அமைப்புக்கள் அதற்குத் தகுதியற்றவை. இது அரசாங்கத்தின் கபடத்தன்மையையும் ஒளிவுமறைவான நிகழ்ச்சிநிரலையும் தெளிவாகக் காட்டுகின்றது.

## பிராந்தியச் சட்டவாக்க அதிகாரம்

பிராந்தியச் சபைகளின் சட்டவாக்க அதிகாரம் பற்றிய விடயத்தில் பிராந்தியச் சபைகளுக்கும் தேசியப் பாராளுமன்றத்துக்கும் இடையிலான சட்டவாக்கத் தொடர்பு முழுமையாகக் குறித்துரைக்கப் படாமையால் ஊகத்திற்கும் முரண்பாட்டுக்கும் இடமளிக்கின்றது. எதிர்காலத்தில் பிராந்திய சபைகள் இயற்றக்கூடிய சட்டங்களுக்கும் தேசிய பாராளுமன்றம் இயற்றக்கூடிய சட்டங்களுக்கும் இடையில் எழக்கூடிய சட்டவலு சம்பந்தப்பட்ட பிரச்சினை தொடர்பாக வெளிப்படையான குறைபாடு காணப்படு





கின்றது. சட்ட முன்வரைவானது எதிர்காலத்தில் பிராந்திய சபை இயற்றக்கூடிய சட்டங்களுக்கும் பாராளுமன்றத்தில் இயற்றக்கூடிய சட்டங்களுக்கும் இடையில் தோன்றக் கூடிய சாத்தியமான முரண்பாடுகள் பற்றி தெளிவாக எதனையும் குறிப்பிடவில்லை. இதன் விளைவாக மத்திக்கும் பிராந்தியங்களுக்கும் இடையிலான சட்டவாக்கத் தொடர்பை உருவாக்குவதில் நீதித்துறை பெரும் பங்கு வகிக்க நேரிடும். எனவே எதிர்வரும் காலத்தில் நீதித்துறை தான் அரசியலமைப்பை உருவாக்குவதாயிருக்கும்.

மேலும், தற்போதுள்ள மாகாண சபைகளால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் நிலைமை தொடர்பாக ஏற்பாடெதுவும் செய்யப்படவில்லை. அதிகாரம் பகிரப்பட்ட அலகுகளுக்கு அவைகளின் காத்திரமான சட்டங்களை இயற்றுவதற்கான ஆற்றல் குறித்த நம்பிக்கையை ஊட்டும் வகையில் இவை தெளிவாக வகுத்துரைக்கப் பட்டிருக்கவேண்டும்.

## பிராந்தியத்துக்கான நிறைவேற்று அதிகாரங்கள்

காத்திரமான அதிகாரப் பகிர்வு என்பது பிராந்தியங்களுக்குப் பகிரப்பட்ட விடயங்களைச் செயற்படுத்துவதுடன், அவைகளுக்குப் பகிரப்படாத மத்திய அரசின் விடயங்களைச் செயற்படுத்தும் முகவர்களாக இருக்கும் அதிகாரத்தையும் வழங்க வேண்டும். அத்தகையதோர் ஏற்பாடு 13ஆம் திருத்தச் சட்டத்தில் இல்லாமையால் அண்மைய அதிகாரப்பகிர்வு அனுபவம் ஏமாற்றமளிப்பதாகக் காணப்பட்டது. மத்திய அரசாங்கம் அதன் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழுள்ள மத்திய அமைச்சுக்களின் மாவட்ட அலகுகளான கச்சேரி, பிரதேசச் செயலகங்கள் போன்ற சமாந்தரமான நிர்வாக ஒழுங்கை மாகாணத்தில் பேணுகின்றது. இந் நிருவாகத்தினர்களால் நிறைவேற்றப்படும் கடமைகள் மாகாண விவகாரங்களில் இன்று நடைமுறையிலுள்ள மத்திய அரசின் கட்டுப்பாட்டைச் சற்றும் குறைவுபடாது வைத்துக்கொள்ள வழிவகுக்கும். அரசாங்க அதிபர்களும் பிரதேசச் செயலாளர்களும் மத்திய அரசாங்கத்துக்கு மட்டுமே பதில்சொல்லக் கடமைப்பட்டவர்களாவர். அவர்கள் மாகாண சபையின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இது மாகாண சபையின் அதிகாரத்தையும் கட்டுப் பாட்டையும் வேரறுக்கின்ற திட்டவட்டமான நோக்குடன் செய்யப்பட்டுள்ளது. ஒரு காத்திரமான அதிகாரப் பகிர் விற்கு முன்மொழியப்பட்ட பிராந்திய சபையும் அதன் நிருவாக ஒழுங்குகளும் மட்டுமே அப்பிராந்தியத்தின் அரச இயந்திரமாக இருக்க வேண்டும் என்ற வாதம் முன் வைக்கப்படுகிறது. மத்திய அரசுக்கான பட்டியலின் கீழ் வரும் திட்டங்களையும் செயற்பாடுகளையும் நடைமுறைப் படுத்தும் பொறுப்பினைப் பிராந்திய சபைகளுக்கே வழங்க வேண்டும். இவ்விடயத்தில் பிராந்திய சபைகள் இவற்றை நிறைவேற்றும் முகவர்களாகச் செயற்பட முடியுமென்ப துடன் மத்திய அரசிற்குப் பொறுப்புடையதாகவும் இருக்கும். அத்தகைய முக்கிய ஏற்பாடொன்று இல்லா திருப்பின் மாகாண நிருவாகம் செயற்படத் தொடங்கு வதற்கு முன்னரே மாகாண நிருவாக மட்டத்தில் விரக்தி ஏற்பட்டு செயல்குலைவு ஏற்பட வழிவகுக்கும். குறிப்பாகக் கடந்த காலங்களில் வடக்கு-கிழக்கிற்கு எதிரான பார பட்சமான அணுகுமுறைகளிலிருந்து நோக்குகின்றபோது இது சர்ச்சைக்குரியதாகின்றது.

## புதிய முன்மொழிவுகளின்கீழ்

1. மத்திய அமைச்சுகளின் கீழ்நிலை அலகுகளின் நிரு வாகச் செயற்பாடுகளைப் பிராந்தியச் சபையினால் கேள்விக்குட்படுத்தப்பட முடியாது.
2. மத்திய அமைச்சுக்கள் பிராந்தியச் சபைக்குத் தெரி யாமல் அவற்றின் சொந்த நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்ற முடியும்.
3. பிராந்தியச் சபையின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் செயற்பாட்டுக்கும் பாதகமாயுள்ள நிகழ்ச்சித் திட்டங் களை மத்திய அமைச்சுக்கள் நிறைவேற்ற முடியும்.
4. பிராந்தியத்தில் நடைபெறுகின்ற எல்லாவற்றையும் பற்றிப் பிராந்தியச் சபை அறிந்திருக்க வேண்டிய அவசியமில்லை.
5. பிராந்தியச் சபை அதன் பிராந்தியத்தில் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட் டங்களைத் திட்டமிட இயலாததாயிருக்கும்.





6. பிராந்தியச் சபைக்குத் தனது பிராந்தியத்திற்குள் ளான அபிவிருத்தித் திட்டங்களில் (மத்திய அரசின்) இணைப்பாளராக செயல்படும் உரிமை இல்லாமல் போகும்.

மத்தியின் கடமைகளைப் பிராந்தியச் சபை பொறுப் பேற்பதற்கும் செயற்படுத்துவதற்குமான ஏற்பாடெதுவும் முன்மொழிவுகளில் இல்லை. முன்மொழிவுகள், பிராந் தியங்களில் செயற்படுகின்ற மத்திய அமைச்சின் முகவர் கள், நியதிச்சட்ட சபைகள், கூட்டுத்தாபனங்கள் ஆகிய வற்றை ஒருங்கிணைத்துச் செயற்படுத்துவதற்கு ஏதுவாக முதலமைச்சருக்குத் தெரியப்படுத்த வேண்டியதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தவறியுள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக, பிராந்தியச் சபை அதிகமான நிதி வளங்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டும், பிராந்திய அபிவிருத்திக் கான நிதிகள் புத்திசாதுர்யத்துடன் பயன்படுத்தப்படுதலை உறுதிப்படுத்தும் பொருட்டும், பகிரப்பட்ட விடய மாயினுஞ் சரி, பகிரப்படாத விடயமாயினுஞ்சரி, பிராந் தியத்தில் நடக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங் கிணைக்கும் அதிகாரம் முதலமைச்சரிடம் இருக்கவேண்டும்.

முகாமைத்துவக் கடமைகளை எளிதாக்குவதற்குக் கச்சேரி, பிரதேசச் செயலகம் போன்ற நிறுவனங்களையும் ஏனைய அமைச்சு முகவரகங்களையும் பிராந்தியச் சபைக்கு மாற்றுவதற்கும் மாகாணத்தினுள் செயற்படுகின்ற எல்லாக் கூட்டுத்தாபனங்களையும் நியதிச்சட்ட சபைகளையும் முத லமைச்சரின் ஒருங்கிணைப்பின்கீழ்க் கொண்டுவருவதற் கும் முன்மொழிவில் ஏற்பாடு செய்யப்படவில்லை.

### அமைச்சரவை

பிராந்தியத்தின் அமைச்சரவையில் ஆறு அமைச்சர் களுக்குக் கூடுதலாக இருக்கலாகாதென முன்மொழிவு குறிப்பிடுகின்றது. ஏனைய பிராந்தியங்களைப் பொறுத்த வரையில் இது நியாயமானதெனத் தோன்றக்கூடிய போதிலும், வடக்கு-கிழக்கின் விடயத்தில் இது போது மானதல்லவென வாதிடப்படுகின்றது.

### நிதி ஆணைக்குழு

நிதி ஆணைக்குழுக்கள் தொடர்பான அனுபவம் எப்போதும் ஏமாற்றமளிப்பதாயிருந்துள்ளது. புதிய முன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மொழிவுகளின் பிரகாரம் ஆணைக்குழு நிதிவளங்களைப் பகிர்ந்துகொள்வதற்கான விதிமுறைகளைத் தீர்மானிப் பதற்குக் காலத்துக்குக் காலம் முதலமைச்சரைக் கலந்தா லோசிக்க வேண்டும். பிரிவு 20இன் உட்பிரிவு (5) ஆனது அனைத்துப் பிராந்தியங்களிலும் ஒரேசீரான தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் வளங்களின் பகிர்வு தொடர் பில் அதன் சொந்தத் தீர்மானங்களை எடுப்பதற்கு நிதி ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கின்றது. அத்துடன் (8)ஆம் உட்பிரிவின்படி நிதி ஆணைக்குழுவின் தீர்மானங் களை எதிர்த்து நீதிமன்றம் செல்ல முடியாது. மேலும் வடக்கு-கிழக்குக்குக் குறிப்பான தேவைகளும் பிரச்சினை களும் இருந்தபோதிலும் நிதி ஆணைக்குழுவால் நிர்ண யிக்கப்பட்ட விதிமுறைகள் கடந்த ஏழு ஆண்டுகளாக மாற்றமேதுமின்றித் தொடர்கின்றனவென்று அறிவிக்கப் பட்டுள்ளது. உட்பிரிவு (5)இல் (C) மற்றும் (D) பத்திகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள், குறிப்பாகக் கடந்த காலங் களில் வடக்கு-கிழக்குக்கு எதிரான பாரபட்சமான அணுகு முறைகளிலிருந்து நோக்குகின்றபோது சர்ச்சைக்குரிய தாகின்றது. அவசியமேற்படுகின்றபோது முதலமைச்சரின் கலந்தாலோசனையுடன் நிதி ஒதுக்கீட்டு விதிமுறைகளை மீளாய்வு செய்வதற்கான ஏற்பாடும் அதில் இல்லை.

### அரச காணி

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்திற்கு அமைய கிழக் கிலுள்ள சம்மாந்துறை, அக்கரைப்பற்று, அட்டாளைச் சேனை, தம்மன, அம்பாறை போன்ற பிரதேசங்கள் பிராந்தியங்களுக்கிடையிலான திட்டங்களின்கீழ் வருவத னால் கமத்தொழில் திணைக்களமும் மாகாணக் காணி ஆணைக்குழுவும் அப்பிரதேசங்களில் நிகழ்ச்சித்திட்டம் எதனையும் செயற்படுத்த முடியாது. இப்பொருள் விளக்கம் மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களின் பெரும் பகுதிகளுக்கும் கூடப் பொருந்தும். ஏனெனில், ஏறக்குறைய எல்லாக் கமத்தொழிற் பிரதேசங்களும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் ஏ, பி, டி, ஜே, கே, எம், ஐ முறைமைகளின் கீழும் பிராந்தியங்களுக்கிடையிலான ஏனைய திட்டங் களின் கீழும் வருகின்றன. இப்பொருள்விளக்கத்தை எவ ரேனும் ஒருவர் சட்டமும் ஒழுங்கும் தொடர்பான கடமை





களுக்கும் பொலிஸ் கடமைக்கும் நீதிமன்ற நியாயாதிக் கத்துக்கும்கூட நீடிக்கமுடியும். அதைத் தடுப்பதற்கான ஏற்பாடு எதுவுமில்லை. மாகாணங்களுக்கான (பிராந்தியங் களுக்கான) திட்டங்கள் என்பதற்கான புதிய வரைவிலக் கணமானது அடிப்படையில் (மத்திய அரசின்) ஆளுகைக் குட்பட்ட பிரதேசம் என்று விளக்கப்பட்டுள்ளது. மேற் சொல்லப்பட்ட மத்திய அரசின் ஆளுகைக்கு உட்பட்ட தெனக் கூறப்படும் பிரதேசங்கள் எவை என்பதை இன்னமும்கூட வரையறை செய்யவில்லை.

பிராந்தியங்களுக்கிடையிலான திட்டங்களின் ஆணைப் பிரதேசங்கள் மத்திய அரசாங்கத்தின்கீழ் வருகின்றபோதி லும், பிராந்தியச் சபை அதற்குப் பகிரப்பட்ட அதன் கடமைகள் அனைத்தையும் அப்பிரதேசத்தினுள் நிறை வேற்றுவதற்கான வழிவகைகள் செய்யப்படவில்லை.

### சட்டமும் ஒழுங்கும்

சட்டத்தையும் ஒழுங்கையும் பொறுத்தவரையில், ஊழியர் சேர்க்கை அதிகாரம் குறிப்பிடப்படவில்லை. இதன் மூலம் அதிகாரப் பகிர்விற்கான நோக்கத்தையே அழிக்கும் வகையில் இத்தகைய தெளிவற்ற ஏற்பாடுகள் நிருவாக ரீதியான வியாக்யானத்திற்குக் களம் அமைக்கின் றது. சட்டம் ஒழுங்கிற்குத் தேவையான ஊழியர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு மத்திய அரசின் அதிகாரமின்றி பிராந்தியச்சபை மேற்கொள்ள முடியாது. ஆட்சேர்ப்பை அங்கீகரிக்கும் அதிகாரத்துடன் கூடிய பிராந்திய ஊதியம், ஊழியர் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு எந்தவித ஏற்பாடும் செய்யப்படவில்லை.

### பிராந்தியக் காவல்துறையின் புலன்விசாரணை செய்யும் அதிகாரம்

ஒரு பிராந்தியத்திற்குள் நிகழ்ந்த தவறு அல்லது குற்றத்தினைப் பிராந்திய காவல்துறை புலன்விசாரணை செய்வதற்கு அதிகாரமில்லையெனில் அக்காவல்துறை யின் பயனும் மதிப்பும் கேள்விக்குள்ளாக்கப்படலாம். சட்டம் மற்றும் ஒழுங்கின்கீழ் 4ஆம் உட்பிரிவில் குறிப் பிடப்பட்ட விடயங்களுடன் மத்திய அரசிற்கான பட்டி யலிலுள்ள எந்தவொரு விடயம் தொடர்பாகவும் எந்த ஒரு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குற்றமும் எந்தவொரு சட்டத்தின் கீழும் பிராந்திய காவல் துறையினால் புலன்விசாரணை செய்ய முடியாது. இவ்வேற் பாட்டின் அனேக உள்நோக்கங்களில் பின்வருவனவும் அடங்கும்:

1. பிராந்திய காவல்துறை தனிப்பட்டவர்களால் புரியப்படும் தவறுகளுக்கும் குற்றங்களுக்கும் மட் டும் அதனைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டி யிருக்கும்.

2. புலன்விசாரணைகளில் பெரும்பகுதி தொடர்ந் தும் தேசிய காவல்துறையினரால் மேற்கொள்ளப் படும்.

3. பிராந்திய மக்கள் நம்பிக்கையிழந்துவிட்ட மத்திய அரசின் சட்ட ஒழுங்கிற்கான இயந்திரத்தை அப் பிராந்தியத்தில் தொடர்ந்தும் பேணுவதில் மத்திய அரசாங்கம் உறுதியுடன் இருக்கிறது.

4. மத்திய அரசின் காவல்துறையின்மீது பிராந்திய நிருவாகத்துக்கு எவ்வித கட்டுப்பாடும் இல்லை யென்பதனால் பிராந்திய மக்களின் பாதுகாப்பு தொடர்ந்தும் கேள்விக்குறியாகவே இருக்கும்.

சட்டத்தையும் ஒழுங்கையும் காத்திரமான வகையில் பேணுவதற்குத் தேசிய அல்லது பிராந்திய காவல்துறைக்கு ஓர் அதிகாரப்படிநிலை அமைப்பு அவசியமென வாதிடப் படுகின்றது. இன்றேல், பொருள் குழப்பம் காரணமாகப் பொதுமக்களின் நலன்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்து கின்ற எதிர்ப்புணர்ச்சியுள்ள இரு காவல்துறைகள் பிராந் தியத்தில் இருக்கும்.

## நிதியும் வெளிநாட்டுக் கடனும்

தீர்வுத்திட்டத்தின்படி, பிராந்திய அரசு மத்திய அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டே வெளிநாடுகளில் கடன்பெற முடியும். இக்கடன் தொகையானது பிராந்திய சபையின் திரட்டிய நிதியிலிருந்து மத்திய அரசிற்கு வழங்கக் கூடிய பிணைத்தொகையின் அளவைப் பொறுத்து அமையும். வடக்கு-கிழக்கிற்கான இன்றைய நிதித் தேவை மிக அதிக மானது. அதனால் பிராந்தியம் வெளிநாடுகளில் கடன்பட





வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது. ஆனால் மதிப் பிடப்பட்டிருக்கும் திரட்டிய நிதியின் அளவானது பிணை வழங்கத் தேவையான தொகைக்குப் போதுமானதாக இருக்காது. இதேமாதிரியான பிணை நிபந்தனைகள் உள் ளூரில் கடன்படுவதற்குக்கூடப் பொருந்தும். கடந்த பல தசாப்தங்களாக அபிவிருத்தி வாய்ப்புகள் மறுக்கப்பட்டு அளப்பரிய அழிவை ஏற்படுத்தியதன் பின்னர் வடக்கு-கிழக் குப் பிராந்தியத்தின்மீது அநீதியான ஒரு நிபந்தனையை இத்தீர்வுத் திட்டம் திணிக்கிறது.

அரசாங்கத்தின் தீர்வுத்திட்டமானது பகிரப்படும் விடயங்கள் தொடர்பாக இரு பட்டியல்களை உள்ளடக்கு கின்றது. முதலாவது - ஒதுக்கப்பட்ட பட்டியல் (பின்னி ணைப்பு Iஇல் பட்டியல் I) இப்பட்டியலானது மத்திய அரசாங்கம் அதிகாரம் செலுத்தும் விடயங்களைப் பட் டியலிடுகின்றது. இரண்டாவது பிராந்திய பட்டியல் (பின் னிணைப்பு Iஇல் பட்டியல் II) இப்பட்டியலானது பிராந் தியச் சபைக்கான விடயங்களைப் பட்டியலிடுகின்றது.

## கல்வி, உயர்கல்வி மற்றும் கல்விச் சேவைகள்

புதிய தீர்வுத்திட்டத்தின்படி இரண்டாம்நிலைப் பாட சாலைகள்கூட முழுமையாகப் பிராந்திய கட்டுப்பாட்டின் கீழ் இருக்காது. 'தேசியப் பாடசாலை' என்ற எண்ணக்கரு, ஏற்கனவே பாடசாலைகள் மத்தியில் வேறுபாட்டை உரு வாக்கி விட்டது. இங்கு தேசியப் பாடசாலைகள் அனுகூல மான நிலையில் உள்ளன. அதாவது, பிராந்திய சபை வசதி மறுக்கப்பட்டதும் பிற்படுத்தப்பட்டதுமான பாடசாலை களை மட்டுமே பராமரிக்கும். மாகாண சபை முறைமை யின்கீழ் பட்டதாரிகளையும் பட்டயதாரிகளையும் (Diploma Holders) ஆசிரியர்களாக நியமித்தல் பகிரப்பட்ட ஒரு விடயமாக இருந்தபோதிலும், நடைமுறையில் மத்திய அரசாங்கம்தான் நியமனங்களை மேற்கொள்கின்றது. தற்போது மாகாண சபை வகுப்பு I அதிபர்களைக்கூட இடமாற்றஞ்செய்ய முடியாது. புதிய தீர்வுத் திட்டத்தின் கீழும் இந்நிலைமை தொடரும்.

உயர் கல்விக்கான வாய்ப்பை சிறுபான்மையினருக்கு மறுத்தமை இலங்கையின் இன முரண்பாட்டுக்கான பிரதான காரணங்களில் ஒன்றாகும். உயர் கல்வியுடனும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பயிற்சியுடனும் தொடர்புடைய அனைத்து விடயங்களும் பகிரப்படாத காரணத்தினால் புதிய தீர்வுத்திட்டமானது இனமோதலுக்கான இக்காரணியை இல்லாமற் செய்யாது.

## திட்டமிடலும் திட்டச் செயற்படுத்தலும்

தீர்வுத்திட்டத்தின்படி திட்டமிடல்தான் பிராந்தியத் துக்குப் பகிரப்பட்ட விடயங்களில் பெரிதும் பொருள் தெளிவற்ற விடயமாயுள்ளது. இக்கடமையின் பிரயோகம் தீர்வுத்திட்டத்தின் பல்வேறு உள்ளகத் தடைகளால் மட்டுப்படுத்தப்படுகின்றது. திட்டமிடல் மற்றும் திட்ட அமுலாக்கம் ஆகியவற்றின் வரையறைகள் ஏற்கெனவே விளக்கப்பட்டவாறு பிராந்தியத்துக்குக் கிடைக்கக்கூடிய நிதி வளங்களால் மட்டுப்படுத்தப்படுகின்றன. மட்டுப் படுத்தப்பட்ட கடன்பெறும் வசதியும் வருவாயை உரு வாக்கும் திறனும் திட்டமிடலையும் திட்ட அமுலாக் கத்தையும் மோசமாகக் கட்டுப்படுத்தும். திட்டமிடலுக் கும் அமுலாக்கத்துக்கும் இடையிலான ஒத்துப்போகாத இணைப்புகளின் காரணமாக தனிப்பட்ட துறை தொடர் பாகவோ அல்லது முழுமையான அபிவிருத்தித் திட்டமிட லையோ மேற்கொள்ளுதல் நடைமுறை சாத்தியமற்றது.

குறிப்பிட்ட பிராந்தியங்கள் பல்வேறுபட்ட பிராந் திய ஏற்றத்தாழ்வுகளையும் பிராந்திய பிரச்சினைகளையும் குறிப்பிடப்பட்ட முன்னுரிமைகளையும் கொண்டதாக விளங்குகின்றது. இவற்றைத் தீர்ப்பதற்கு குறிப்பிடப்பட்ட வழிமுறைகளும் அதற்கான செயற்திட்டங்களும் தேவைப் படுகின்றன. நீர்ப்பாசனம், கடற்றொழில், கமத்தொழில், நெடுஞ்சாலைகள், பொதுப் பயன்பாடுகள் மற்றும் உட் கட்டமைப்புப் போன்ற பெரும் அபிவிருத்தி விடயங்களின் முக்கிய ஆக்கக்கூறுகளை மத்திய அரசாங்கம் அதற்குரிய தாக ஒதுக்கிவைத்துக்கொள்கின்றபோது பிராந்திய மட் டத்தில் திட்டமிடல் சாத்தியமற்றதாகின்றது.

பகுதியளவு (அரைகுறை) அதிகாரப்பகிர்விலிருந்து எழக்கூடிய குழப்பநிலையைத் திருகோணமலையின் அபி விருத்தி நன்கு விளக்கும். தீர்வுத்திட்டத்தின்கீழ் அபி விருத்தி நோக்கங்களுக்காகத் திருகோணமலை, நாட்டின் தலைநகரான அகண்ட கொழும்பின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது. துரித தொழில்மயமாக்கலுக்குத் திரு





கோணமலையை ஆயத்தப்படுத்தும் பொருட்டுச் சிறிய திட்டங்களென்ற வடிவத்தில் மிகப்பெரிய திட்டமொன்று ஏற்கெனவே செயற்படுத்தப்படுகின்றது. திருகோணமலை யின் விதி ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது. நகர அபிவிருத்தி, துறைமுக அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, தொலைத்தொடர்பு அபிவிருத்தி ஆகியவற்றுக்கான நிகழ்ச் சித் திட்டங்களின்கீழ் பல்லேறு திட்டங்கள் அங்கு செயற் படுத்தப்படுகின்றன. பல நூற்றுக்கணக்கான ஏக்கர் காணி துறைமுக விஸ்தரிப்புக்காக ஏற்கெனவே எல்லை குறித்து ஒதுக்கப்பட்டுள்ளது. அரசாங்க அதிகாரிகளின் கூற்றி லிருந்து திருகோணமலையில் வசிக்கின்ற உள்ளூர்த் தமிழ் மக்கள் இடம்பெயரவைக்கப்பட்டு, அங்கு உத்தேசிக்கப் பட்டுள்ள கைத்தொழில் வலயத்தில் இராணுவ ஆளணி யினருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று தெரிய வருகிறது.

தொலைத் தொடர்பை நவீனப்படுத்தல் ஏறக்குறை யப் பூர்த்தியாகியுள்ளதுடன் கொழும்பு-திருகோணமலை நெடுஞ்சாலையும் மேம்படுத்தப்படுகின்றது. திருகோண மலை மாவட்டத்தைத் தலைநகரஞ்சார்ந்த கொழும்புப் பெரும்பாகத்துடன் இணைக்கின்ற செயல்முறை உள்ளூர் மக்களை அல்லது பிராந்தியத் தேவைகளைக் கருத்திற் கொள்ளாது மிகக் குறுகியகாலத்தில் விரைவாக நிறை வேற்றப்படக்கூடும். சுதந்திர வர்த்தக வலயங்களைத் தாபிப்பதன் மூலம் துரித தொழில்மயமாக்கல், திருகோண மலை நகரின் சனத்தொகையை இப்போதுள்ள 90,000 இலிருந்து 2000ஆம் ஆண்டில் 250,000 ஆக அதிகரிக்கு மென எதிர்பார்க்கப்படுகின்றது. இதுவே முழு இலங்கை யிலும் அத்தகையதொரு குறுகிய காலப்பகுதியில் நகர்ப் புறச் சனத்தொகையின் அதிகபட்ச வளர்ச்சியாயிருக்கும். பிரதேசச் செயலகத்திற்கும் மாகாண சபைக்கும் கையளிக் கப்பட்டிருக்கவேண்டிய காணி அலுவல் இப்போதும் கச்சேரியால் (மத்திய அரசு) கையாளப்படுகின்றது.

மத்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் திரு கோணமலையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பிராந்தி யத்தின் விருப்புக்கு முரணானது. திருகோணமலையை அபிவிருத்தி செய்வது தொடர்பாக பிராந்தியத்தின் விருப்ப மானது வங்கி, காப்புறுதி, கப்பல் திருத்தல் போன்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சேவை வசதிகளின் ஏற்பாட்டுக்கும், ஆராய்ச்சிக்கும் உயர் கல்விக்குமான ஒரு மையத்திற்கும், திருகோணமலையில் அமைதியைப் பேணிப் பாதுகாப்பதற்கு முக்கியத்துவ மளிக்கக்கூடிய வகையில் ஒரு பிராந்திய மையமாக அதனை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டிருக்கக்கூடும். ஒரு குறுகிய காலத்தில் அப்பிரதேசத்தை உருக்குலைத்துச் சுரண்டுகின்ற மத்திய அரசாங்கத்தின் குறிக்கோளுக்கு இது முற்றிலும் முரணானது. மேலும் திருகோணமலையில் ஆயுதந்தரித்த இராணுவக் குடியேற்றங்களைப் பிரதேச மக்கள் விரும்பமாட்டார்கள் ( பின்னிணைப்பு 2).

பிராந்தியச் சமநிலையைக் குலைக்கும் நோக்குடனான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்கெனவே உத்தேசிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு அபிவிருத்தி மற்றுமோர் உதாரணமாகும். இத்திட்டத்தில் சமூகங்களுக்கிடையில் பொருளாதார ஏற்றத்தாழ்வை உருவாக்குகின்றதும் இப்போதுள்ள மாவட்டத் தலைநகர அந்தஸ்திலிருந்து மட்டக்களப்பு நகரைத் தரம் குறைக்கின்றதுமான அம்சங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. பிராந்திய அபிவிருத்தித் திட்டமிடலில் பிராந்தியத் தேவைகளை ஒதுக்கித்தள்ளுதல் உறுதியான அபிவிருத்திக்கு எதிராகச் செயற்படும்.

நடப்புத் தீர்வுத்திட்டத்தின்கீழ் பிராந்தியத்திற்கென்று ஒதுக்கப்பட்ட ஒரு விடயத்தில் அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தும் அதிகாரம் பிராந்தியச் சபைக்கு இருக்காது. ஏனெனில் பிராந்தியத்தினுள் அபிவிருத்தித் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கோ அல்லது அவற்றின் முன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்கான அதிகாரமோ முதலமைச்சருக்கு இல்லை. அத்துடன் குறிப்பிட்ட திட்டங்களின் பயனாளிகளையும் முன்னுரிமைகளையும் அடையாளம் காண்பதற்கான அதிகாரம்கூடப் பிராந்தியச் சபைக்கு இருக்காது.

## பொருள் தெளிவற்ற ஏற்பாடுகளையும் சட்டத்தில் செல்லுபடியற்றவற்றையும் நீக்குதல்

சந்திரிகாவின் தீர்வுத் திட்டமானது, தற்போதைய மாகாண சபை முறைமையிலுள்ள பொதுப்பட்டியலை





ஒழித்துக்கட்ட எதிர்பார்த்தபோதிலும் அப்பட்டியலின் விரும்பத்தகாத பண்புகள் இப்போது மத்திய அரசாங்கத்துக்கான ஒதுக்கப்பட்ட பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நடப்புச் சட்டங்களில் பொருள் தெளிவின்மைகளும் சாத்தியமற்ற தன்மைகளும் அதிகாரப் பகிர்வின் நோக்கத்திற்கு மாறாக அவற்றுக்குப் பொருள் கொள்வதற்கான வாய்ப்புக்களை மத்திய அரசாங்கம் வழங்குகிறது. தற்போதைய மாகாண சபையின் கீழ் உள்ள சில முக்கிய அதிகாரங்கள் சந்திரிகாவின் தீர்வுத்திட்டத்தில் ஒன்றில் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட பட்டியலிலோ அல்லது பொதுப்பட்டியலிலோ இணைக்கப்பட்டுள்ளன. பகிரப்பட்ட விடயத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அத்தகைய ஏற்பாடுகள் இப்போதுள்ள தீர்வுத்திட்டத்தில் காணப்படுகின்றன. இதற்கான உதாரணங்கள் அட்டவணை 7.1இல் தரப்பட்டுள்ளன.

## உபாயகர விடயம்

'ஐக்கியம்' மற்றும் 'இறைமை' என்பவற்றுடன் ஏதேனும் தொடர்புடையதாகப் பொருள் கொள்ளப்படும் விடயங்கள் மத்திய அரசாங்கத்துக்கான ஒதுக்கப்பட்ட நிரலில் உள்ளடக்கப்படுகின்றன. அபிவிருத்திக்கு இன்றியமையாத ஏறக்குறைய எல்லா விடயங்களும் உபாயகர (Strategy) விடயங்களாகப் பொருள்கொள்ளப்பட்டுள்ளன. எது 'உபாயகரமானது' என்று மதிப்பீடு செய்வதற்கான ஏற்பாடோ குறிப்பிட்ட விதிமுறைகளோ குறித்துரைக்கப்படவில்லை.

## வாழ்க்கைத்தொழிலுக்கான உரிமைகள்

கமத்தொழிலும் கடற்றொழிலும் வடக்கு-கிழக்குப் பொருளாதாரத்தின் மிக முக்கியமான இரு பிரிவுகள். வடக்கு-கிழக்கு, நாட்டின் பயிர்ச்செய்கையில் மூன்றிலொரு பங்கிற்கும் மேலான பங்களிப்பைச் செய்கின்றது. நாட்டின் தன்னிறைவு காண்பதென்ற இலட்சியம் வடக்கு-கிழக்கின் துணையின்றி சாத்தியமற்றது. தேசிய இனப் பிரச்சினை தீவிரமடைவதற்கு முன்னர் இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியில் 55 சதவீதத்துக்கும் மேலாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வடக்கு-கிழக்கின் பங்கு இருந்தது. தீர்வுத்திட்டத்தின்கீழ் கமத்தொழிலிலும் கடற்றொழிலிலும் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அவர்களின் வாழ்க்கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான உரிமையும் முழுச் சுதந்திரமும் இருக்காது. எனவே தளராது தொடரக்கூடிய அபிவிருத்திக்கான அடிப்படையை அல்லது ஊக்குவிப்பைப் புதிய தீர்வுத் திட்டங்கள் வழங்கமாட்டா.

## தமிழர்களின் கவலைகள்

வாழ்க்கை முழுமையாக அலங்கோலமாகிப் போய்விட்ட சராசரித் தமிழரைத் தவிர இலங்கையில் உள்ள அனேக மக்கள் தீர்வுத்திட்டத்தை விவாதிப்பதாகத் தோன்றியது. தமிழர்களுக்கு அவர்களின் சின்னாபின்னமாக்கப்பட்ட வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்ப வேண்டியிருந்ததுடன், அவர்களுக்கு அச்சத்திலிருந்து விடுதலையும் தேவைப்பட்டது. இச்சூழலில், தீர்வுத்திட்டத்தின் தகுதியைப் பரிசீலனை செய்வதற்கு முன்னர் உண்மையில் அவை அச்சங்களைத் தணிக்குமா என்று தீர்மானிக்க வேண்டும். இத்தீர்வுத்திட்டத்தின் மூலம் எவ்வாறு அவர்களின் அச்சங்கள் நீக்கப்படுமென்றும் அதனைச் செயற்படுத்துவதற்கான உத்தரவாதங்கள் எவையென்றும் பொறுப்புள்ள தலைவர்கள் சராசரித் தமிழர்களுக்கு விளக்கவேண்டும். சில அச்சங்களும் தீர்வுத்திட்டத்தினால் அவற்றுக்கு வழங்கப்படும் பதிலளிப்புகளும் கீழே தரப்பட்டுள்ளன.

## பெரும்பான்மையின் தயவை எதிர்பார்த்த நிலையில்

சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான முடிவுகள் அனைத்தும் பெரும்பான்மைச் சமூகத்தால் எடுக்கப்படும்வரை நாட்டிலுள்ள தமிழர்களின் வாழ்க்கை தொடர்ந்தும் ஏங்கித் தவிப்பதாகவே இருக்கும். பொதியிலுள்ள தெளிவின்மைகளும் சாத்தியமற்ற தன்மைகளும் திட்டவட்டமான ஏற்பாடுகளும் தமிழர்களின் உரிமைகளைப் பறிக்கின்ற வகையில் பெரும்பான்மை அதன் அதிகாரத்தை விடாது வைத்துள்ளதென்ற உண்மையை வலுப்படுத்துகின்றன. 1972 அரசியலமைப்பும், தற்போது அமுலில் உள்ள 1978 அரசியலமைப்பும் இந்நோக்கத்துக்காகவே விசேடமாக வடிவமைக்கப்பட்டன. சிறுபான்மைகள் பெரும்பான்மையினரின் அடிவருடி வாழ வேண்டும் என்பதற்காகவே அரசியலமைப்புத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.





### அட்டவணை 7.1

**இலங்கை அரசின் (சந்திரிகா) தீர்வுத் திட்டம் பொதுப் பட்டியல்**

| வ. | விடயம் இனம் | பிராந்திய பட்டியலில் இனம் (பட்டியல் II) | பொதுப் பட்டியலில் (பட்டியல் I) |
|---|---|---|---|
| 1. | சுகாதாரம் | 1 | 30 |
| 2. | உயர்கல்வி | 2 | 30,38,33 |
| 3. | கமத்தொழில் | 3 | 36, 35 |
| 4. | நீர்ப்பாசனம் | 4 | 36 |
| 5. | கடற்தொழில் | 6 | 36 |
| 6. | கைத்தொழில் | 8 | 62, 40 |
| 7. | சக்தி | 9 | 18, 19 |
| 8. | துறைமுகப் பட்டினமும் துறைமுகமும் | 11 | 22 |
| 9. | வீதிகள் | 12 | 25 |
| 10. | நகரத் திட்டமிடலும் பொதுப் பயன்பாடும் | 14 | 59 |
| 11. | புனர்நிர்மாணம் | 22 | உட்கட்டமைப்புத் தொடர்பான ஒதுக்கிய நிரல் முழுவதும் |

மூலம் : அரசாங்கத்தின் சமாதான முன்மொழிவு 1997

**தனிப்பட்ட பாதுகாப்பு** : 100 சதவீத சிங்கள ஆயுதப் படைகள் தமிழ் மக்கள்மீது ஏற்படுத்திய மாறாத வடுக்களை அரசாங்கம் அழித்துவிடமுடியாது. இராணுவம் சொத்துக்களை அழித்தும் சூறையாடியும் மக்களைக் கொலைசெய்தும் சித்திரவதை செய்தும் அங்கவீனராக்

www.tamilarangam.net



கியும் வன்புணர்ச்சியில் ஈடுபட்டும் ஓர் ஆக்கிரமிப்புப் படையாக நடந்துகொள்கின்றதென்பது ஒரு கசப்பான உண்மை. தணிக்கையினாலும் வடக்கு-கிழக்கை ஊடகங்கள் அணுகுவதற்கான வாய்ப்பு மறுக்கப்படுவதனாலும் அவசரகால ஒழுங்குவிதிகளினாலும் இராணுவத்தின் அட்டூழியங்களில் பெரும்பாலானவை வெளிச்சத்துக்கு வருவதில்லை. இது பாதுகாப்புப் படைகள் தண்டனை விலக்குரிமையுடன் மனித உரிமைகளை மீறுவதற்கு ஊக்கமளித்துள்ளது. தமிழருக்கெதிரான அட்டூழியங்களுக்காகப் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர் எவரும் இதுவரை தண்டிக்கப்பட்டதில்லை. இந்த அச்சம் பிராந்தியத்தில் இராணுவம் தொடர்ந்து நிலைகொண்டிருப்பது தொடர்பானது. ஒவ்வொரு தமிழரும் தனது அல்லது தனது குடும்ப உறுப்பினர்களின் உயிர், உடல் சார்ந்த பாதுகாப்புப் பற்றிக் கவலைப்படுகின்றனர். பாதுகாப்புப் படைகளிடமிருந்தே அவர்களுக்குப் பாதுகாப்புத் தேவைப்படுகின்றபோதிலும் தீர்வுத்திட்டம் பாதுகாப்புக்கான உத்திரவாதம் எதையும் வழங்கவில்லை.

**சொத்துக்களின் பாதுகாப்பு:** மக்களுக்கு நம்பிக்கை அளிக்கக்கூடிய வகையில் உறுதியான சட்டம்-ஒழுங்குக்கான ஒரு கட்டமைப்பு இல்லாதவிடத்து சொத்துக்களின் பாதுகாப்புக்கு எவ்வித உத்தரவாதமும் இருக்கமாட்டாது. முன்மொழியப்பட்ட தீர்வுத்திட்டத்தின்படி, ஆயுதப்படைகள் அழித்தொழிப்பு நடவடிக்கைகளையும், மக்களை அச்சுறுத்துவதையும் தொடர்ந்து செய்துகொண்டு எந்த வித பாதிப்பும் இல்லாமல் அவர்கள் அங்கு தொடர்ந்து நிலைகொள்ளவும் முடியும்.

**வாழ்க்கைத்தொழிலுக்கான பாதுகாப்பு:** வடக்கு-கிழக்கிலுள்ள ஒவ்வொரு கைத்தொழில் முயற்சியாளரும் தமது தொழிலைத் தொடர விரும்பினால் பொலிசை அல்லது இராணுவத்தை அல்லது எல்ரீரீஈயைத் திருப்திப்படுத்த வேண்டும். ஒரு லொறிச் சாரதி வடக்கிலிருந்து கொழும்பிலுள்ள சந்தைக்கு அழுகக்கூடிய பொருள்களை உரிய நேரத்தினுள் கொண்டுசேர்க்க வேண்டுமாயின், இராணுவ ஊழியருக்கு ஆயிரக்கணக்கான ரூபாயைக் கப்பமாகச் செலவிடவேண்டும். திருகோணமலையில் போக்குவரத்து, வர்த்தகம் போன்றவை பாதுகாப்புப் படைகளின்





அருளாசியைப்பெற்ற சிறப்புச் சலுகையுடைய ஒரு சமூகத்தின் ஆதிக்கத்திலிருப்பதனால் அங்குள்ள தமிழ் விவசாயிகள் உப உணவுப் பயிர்ச்செய்கையை நிறுத்திவிட்டனர். வவுனியாவை அல்லது திருகோணமலையைச் சேர்ந்த ஒரு தமிழர் நீண்டதூரப் பயணிகள் போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட முடியாது. பிரதேசத்திலுள்ள மக்களின் ஈடுபாட்டுடன் சட்டத்துக்கும் ஒழுங்கிற்கும் நம்பிக்கைக் குரிய இயந்திரமொன்று இல்லாமல் எதிர்காலத்திலும் இது சாத்தியமற்றது.

**உயர்கல்வி மீதான கட்டுப்பாடுகளைத் தொடர்தல்:** கல்வியில் பாகுபாடு வடக்கு-கிழக்கில் இளைஞர் எழுச்சிக்குப் பிரதான காரணங்களில் ஒன்றாயிருந்தது. இந்தளவு இரத்தம் சிந்தலுக்கும் அழிவுக்கும் அராஜகத்துக்கும் பின்னரும் கூட உயர்கல்வியில் அனைத்துப் பிரசைகளுக்கும் சமமான வாய்ப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் உடன்படுவதாயில்லை. பிராந்தியச் சபையினால் ஆயுதமேந்திய இளைஞர்கள் சகஜமான வாழ்வில் ஈடுபடுவதற்கு அவர்களைக் கவரக்கூடிய வகையில் ஏதேனும் வசதியையோ அல்லது சலுகைகளையோ அல்லது பிராந்தியக் கட்டமைப்பினுள் உயர்கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்களையோ வழங்க முடியாது.

**மீள்குடியேற்றத்துக்கு இடையூறு:** பல்வேறுபட்ட அழுத்தங்களும் தொடர்ந்துகொண்டிருப்பதால் மீள்குடியேற்றப்பட்ட கிராமங்கள்கூட நிலைத்து நிற்க முடியவில்லை. தமிழ் மக்களின் மீள்குடியேற்றத்தை இராணுவம் மிகக் காத்திரமான முறையில் கட்டுப்படுத்துகின்றது. குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் மிகவும் வலுவான முறையில் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது. நிரந்தரக் குடியிருப்புக்கள் இல்லாத மக்களை இலகுவாக விரட்டியடித்துவிடலாமென்று அரசாங்கம் நம்புவதாகத் தோன்றுகின்றது. வடக்கு-கிழக்கின் எல்லைப் பிரதேசங்கள் இராணுவத்தின் உதவியுடன் பெரும்பான்மைச் சமூகத்தால் குடியேற்றப்படுகின்றன. பாதுகாப்புக் காரணங்களென்ற சாக்கில் தமிழர்கள் அங்கிருந்து விரட்டப்படுகின்றனர்.

**முன்னுரிமைத் தீர்மானம்:** பெரிதும் உள்ளூர் சார்ந்த விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள் கூடக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கியும் வன்புணர்ச்சியில் ஈடுபட்டும் ஓர் ஆக்கிரமிப்புப் படையாக நடந்துகொள்கின்றதென்பது ஒரு கசப்பான உண்மை. தணிக்கையினாலும் வடக்கு-கிழக்கை ஊடகங்கள் அணுகுவதற்கான வாய்ப்பு மறுக்கப்படுவதனாலும் அவசரகால ஒழுங்குவிதிகளினாலும் இராணுவத்தின் அட்டூழியங்களில் பெரும்பாலானவை வெளிச்சத்துக்கு வருவதில்லை. இது பாதுகாப்புப் படைகள் தண்டனை விலக்குரிமையுடன் மனித உரிமைகளை மீறுவதற்கு ஊக்கமளித்துள்ளது. தமிழருக்கெதிரான அட்டூழியங்களுக்காகப் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர் எவரும் இதுவரை தண்டிக்கப்பட்டதில்லை. இந்த அச்சம் பிராந்தியத்தில் இராணுவம் தொடர்ந்து நிலைகொண்டிருப்பது தொடர்பானது. ஒவ்வொரு தமிழரும் தனது அல்லது தனது குடும்ப உறுப்பினர்களின் உயிர், உடல் சார்ந்த பாதுகாப்புப் பற்றிக் கவலைப்படுகின்றனர். பாதுகாப்புப் படைகளிடமிருந்தே அவர்களுக்குப் பாதுகாப்புத் தேவைப்படுகின்றபோதிலும் தீர்வுத்திட்டம் பாதுகாப்புக்கான உத்திரவாதம் எதையும் வழங்கவில்லை.

**சொத்துக்களின் பாதுகாப்பு:** மக்களுக்கு நம்பிக்கை அளிக்கக்கூடிய வகையில் உறுதியான சட்டம்-ஒழுங்குக்கான ஒரு கட்டமைப்பு இல்லாதவிடத்து சொத்துக்களின் பாதுகாப்புக்கு எவ்வித உத்தரவாதமும் இருக்கமாட்டாது. முன்மொழியப்பட்ட தீர்வுத்திட்டத்தின்படி, ஆயுதப்படைகள் அழித்தொழிப்பு நடவடிக்கைகளையும், மக்களை அச்சுறுத்துவதையும் தொடர்ந்து செய்துகொண்டு எந்த வித பாதிப்பும் இல்லாமல் அவர்கள் அங்கு தொடர்ந்து நிலைகொள்ளவும் முடியும்.

**வாழ்க்கைத்தொழிலுக்கான பாதுகாப்பு:** வடக்கு-கிழக்கிலுள்ள ஒவ்வொரு கைத்தொழில் முயற்சியாளரும் தமது தொழிலைத் தொடர விரும்பினால் பொலிசை அல்லது இராணுவத்தை அல்லது எல்ரீரீஈயைத் திருப்திப்படுத்த வேண்டும். ஒரு லொறிச் சாரதி வடக்கிலிருந்து கொழும்பிலுள்ள சந்தைக்கு அழுகக்கூடிய பொருள்களை உரிய நேரத்தினுள் கொண்டுசேர்க்க வேண்டுமாயின், இராணுவ ஊழியருக்கு ஆயிரக்கணக்கான ரூபாயைக் கப்பமாகச் செலவிடவேண்டும். திருகோணமலையில் போக்குவரத்து, வர்த்தகம் போன்றவை பாதுகாப்புப் படைகளின் அருளாசியைப்பெற்ற சிறப்புச் சலுகையுடைய ஒரு சமூகத்தின் ஆதிக்கத்திலிருப்பதனால் அங்குள்ள தமிழ் விவசாயிகள் உப உணவுப் பயிர்ச்செய்கையை நிறுத்திவிட்டனர். வவுனியாவை அல்லது திருகோணமலையைச் சேர்ந்த ஒரு தமிழர் நீண்டதூரப் பயணிகள் போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட முடியாது. பிரதேசத்திலுள்ள மக்களின் ஈடுபாட்டுடன் சட்டத்துக்கும் ஒழுங்கிற்கும் நம்பிக்கைக் குரிய இயந்திரமொன்று இல்லாமல் எதிர்காலத்திலும் இது சாத்தியமற்றது.

**உயர்கல்வி மீதான கட்டுப்பாடுகளைத் தொடர்தல்:** கல்வியில் பாகுபாடு வடக்கு-கிழக்கில் இளைஞர் எழுச்சிக்குப் பிரதான காரணங்களில் ஒன்றாயிருந்தது. இந்தளவு இரத்தம் சிந்தலுக்கும் அழிவுக்கும் அராஜகத்துக்கும் பின்னரும் கூட உயர்கல்வியில் அனைத்துப் பிரசைகளுக்கும் சமமான வாய்ப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் உடன்படுவதாயில்லை. பிராந்தியச் சபையினால் ஆயுதமேந்திய இளைஞர்கள் சகஜமான வாழ்வில் ஈடுபடுவதற்கு அவர்களைக் கவரக்கூடிய வகையில் ஏதேனும் வசதியையோ அல்லது சலுகைகளையோ அல்லது பிராந்தியக் கட்டமைப்பினுள் உயர்கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்களையோ வழங்க முடியாது.

**மீள்குடியேற்றத்துக்கு இடையூறு:** பல்வேறுபட்ட அழுத்தங்களும் தொடர்ந்துகொண்டிருப்பதால் மீள்குடியேற்றப்பட்ட கிராமங்கள்கூட நிலைத்து நிற்க முடியவில்லை. தமிழ் மக்களின் மீள்குடியேற்றத்தை இராணுவம் மிகக் காத்திரமான முறையில் கட்டுப்படுத்துகின்றது. குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் மிகவும் வலுவான முறையில் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது. நிரந்தரக் குடியிருப்புக்கள் இல்லாத மக்களை இலகுவாக விரட்டியடித்து விடலாமென்று அரசாங்கம் நம்புவதாகத் தோன்றுகின்றது. வடக்கு-கிழக்கின் எல்லைப் பிரதேசங்கள் இராணுவத்தின் உதவியுடன் பெரும்பான்மைச் சமூகத்தால் குடியேற்றப்படுகின்றன. பாதுகாப்புக் காரணங்களென்ற சாக்கில் தமிழர்கள் அங்கிருந்து விரட்டப்படுகின்றனர்.

**முன்னுரிமைத் தீர்மானம்:** பெரிதும் உள்ளூர் சார்ந்த விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள் கூடக்







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடந்த காலத்தில் மத்திய அரசாங்கத்தால் எடுக்கப்பட்டன. மத்தியினாலேயே தெரிவு விதிமுறைகள் வகுக்கப்பட்டு முன்னுரிமைகள் அங்கீகரிக்கப்பட்டன. பிராந்திய சபைக்காகப் பகிரப்பட்ட விடயங்களின் முக்கிய அம்சங்களை மத்திக்கு ஒதுக்குவதன்மூலம் பிராந்தியச் சபை மத்தியின் தீர்மானங்களில் செல்வாக்கைப் பிரயோகிப்பதிலிருந்து தடுக்கப்படுகின்றது.

**தாயகத்தில் சிறுபான்மையாக்கும் செயல்முறை:** அப்பாவித் தமிழர்களின் வாழ்க்கையைக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய வகையில் அரசாங்கத்தால் வழிப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களில் ஒன்றுதான் அவர்களின் வடக்கு-கிழக்குத் தாயகத்தில் அவர்களைச் சிறுபான்மையாக்கும் செயல்முறை. ஒவ்வொரு வன்முறை அலையின் போதும் தெற்கிலுள்ள தமிழர் அவர்களின் பாரம்பரியத் தாயகத்தில் அடைக்கலம் தேடியுள்ளனர். வடக்கு-கிழக்கின் பொருளாதாரக் கட்டமைப்பு அழிக்கப்படுவதன் காரணத்தினால் தங்களது பிரதேசங்களின் அனைத்தின் மீதுமான கட்டுப்பாட்டையும் அவர்கள் இழக்கும் தறுவாயில் உள்ளனர். மேற்கண்ட நடவடிக்கைகள் தமிழ் மக்களை அழித்தொழிக்கும் அரசின் முனைப்புக்களைத் திறம்படச் செய்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதுடன் முழு ஒத்துழைப்பையும் வழங்குகிறது. இவ்விடயத்தில் திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை சிறிலங்கா அரசாங்கத்திற்கு குறிப்பிடத்தக்களவு வெற்றி கிட்டியுள்ளது. தமிழர்கள், வளம்மிக்க பிரதேசங்களிலிருந்தும் செழிப்புமிக்க அவர்களின் பாரம்பரிய கிராமங்களிலிருந்தும் கேந்திர முக்கியத்துவமிக்க இடங்களிலிருந்தும் ஏற்கெனவே விரட்டப்பட்டு விட்டனர். திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களின் எண்ணிக்கையை விரைவில் விஞ்சிவிடுமளவுக்கு இராணுவத்தினரும் ஏனைய பாதுகாப்புப்படையினரும் அங்கு நிலைகொண்டுள்ளனர்.

திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் இராணுவத் தளங்களின் விஸ்தரிப்பின் விளைவாகத் தமிழர்கள் வெளியேற்றப்பட்டு அவர்களின் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. வெலிஓயா(மணலாறு)விலுள்ள சிங்களக் குடியேற்றங்கள் வவுனியா தேர்தல் தொகுதியின்கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களைக் கொண்டுள்ளன. முல்லைத்தீவிலும் மன்னாரிலும் புலம்பெயர்ந்துவந்த சிங்கள மீனவர்களைப் பதிவுசெய்தல் ஏற்கெனவே ஆரம்பமாகிவிட்டது. தமிழ் மக்களின் உயிருக்கான பாதுகாப்பே இப்போது உடனடியாக வரவுள்ள அச்சுறுத்தலாகும். முன்னர் கூறப்பட்டவாறு அத்தகைய சிறுபான்மையாக்கும் செயல்முறை 1977இல் பெரும்பான்மைச் சமூகம் முதல் முறையாகத் திருகோணமலையிலிருந்து ஒரு பாராளுமன்ற உறுப்பினரைத் தெரிந்தனுப்புவதற்கு வாய்ப்பளித்தது. கிழக்கிலுள்ள அம்பாறை தேர்தல்தொகுதி அனேக சந்தர்ப்பங்களில் சிறுபான்மைச் சமூகங்களுக்குச் சொந்தமான காணிகளில் பரந்த அளவிலான சிங்களக் குடியேற்றத்தின்மூலம் உருவாக்கப்பட்டது. தீர்வுத்திட்டத்தின்படி காணியென்ற விடயமும் காணிப் பராதீனமும் பிராந்திய பட்டியலின்கீழ் வருமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மத்திய அரசாங்கம் பிராந்தியங்களுக்காக ஒதுக்கப்பட்ட விடயங்களின் மீது அதன் பிரத்தியேக அதிகாரத்தின் ஊடாகப் பிராந்தியக் காணிகள்மீது குறிப்பிடத்தக்க அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொண்டது. மத்திய அரசின் தேவைகளுக்காகப் பிராந்தியத்தின் எப்பகுதியிலிருந்தும் எவ்வளவு காணியையும் மத்திய அரசு எடுத்துக்கொள்ளலாம். அதற்குப் பிராந்திய அரசாங்கத்தின் ஒப்புதலைப் பெறவேண்டிய தேவையுமில்லை.

**தீர்வுத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான உத்தரவாதம்:** தீர்வுத்திட்டங்கள் குறித்த கடந்தகால அனுபவங்கள் தமிழர்களுடனான எந்தவோர் உடன்படிக்கையும் அரசாங்கங்களால் கௌரவிக்கப்படவில்லை என்ற படிப்பினையையே சராசரி மனிதருக்கும் கொடுக்கின்றது. அரசாங்கத்தின் சமீபத்திய தீர்வுத் திட்டப் பொதியின் கதியும் அவ்வாறானதே என்பது பெரும்பாலோருக்கும் தெரியும்.

தமிழரின் நியாயபூர்வமான கோரிக்கைகளை அடுத்தடுத்துவந்த அரசாங்கங்கள் நிறைவேற்றத் தவறியமைதான் தமிழ் இளைஞரின் ஆயுதப்போராட்டத்துக்கு வழிவகுத்ததென்பதை சந்திரிகா அரசாங்கம் கவனத்தில் எடுக்கத் தவறிவிட்டதென்பதைத் தீர்வுத்திட்டத்தின்







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முன்மொழிவுகள் தெளிவாகக் காட்டுகின்றன. தமிழ் மக்களின் அபிலாஷைகளைக் கவனத்தில் எடுப்பதற்குத் தவறியுள்ள தீர்வுத்திட்டமானது தமிழரின் பாரம்பரியத் தாயகத்தைக் கூறுபோடுகின்ற நோக்குடையது. இது இலங்கை அரசாங்கத்தின் பிரச்சார நோக்கங்களுக்காக - அரசாங்கம் பெருந்தன்மையானதென்றும் தமிழர்தான் நியாயமற்றவர்களென்றும் சர்வதேச சமூகத்தை நம்பச் செய்வதற்குத் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத் தெரிவுக்குழுக்களும் ஏனைய சர்வகட்சி மாநாடுகளும், வட்டமேசை மாநாடுகளும் தமிழர்களின் உண்மையான அபிலாசைகளிலிருந்தும் பிரச்சினைகளிலிருந்தும் கவனத்தைத் திசைதிருப்புவதற்கு அரசாங்கத்திற்குப் போதிய கால அவகாசத்தை வழங்கும்.

ஒவ்வொரு மாகாணத்தினதும் ஒப்புதலைப் பெற்றதன் பின்னர் மட்டும்தான் மாகாணங்களின் அதிகாரங்கள் மாற்றப்படலாமென்று ஏதேனும் ஏற்பாடு இருக்குமாயின் மாகாணங்களுக்கு சமமான அந்தஸ்து இருக்கும். எனினும் அவ்வாறெதுவும் இல்லை. எனவே மீண்டும் தமிழர் சிங்களப் பெரும்பான்மையின் நுகத்தடியின்கீழ் இருப்பர்.

## சமாதானத்துக்கான தடைகள்

இலங்கையில் நிலையாக நீடித்திருக்கும் சமாதானத்துக்கான ஆவல் சிங்களவர் மத்தியிலும் தமிழர் மத்தியிலும் மேலும் அதிகரித்துள்ளது. ஆனால் தத்தமது முரண்பாடான நோக்கங்களில் சமரசம் செய்துகொள்வதற்கும் விட்டுக்கொடுப்பதற்குமான அவர்களின் ஈடுபாடு குறைவாயுள்ளது. இது சமாதான வட்டாரமொன்று உருவாக்கப்படுதலை மேலும் கடினமானதாக்குகின்றது. தொடர்ந்து வந்த அரசாங்கங்களின் அணுகுமுறைகள் அந்தந்த நேரங்களில் பதற்றத்தைக் குறைப்பதற்கும், சர்வதேசச் சமூகத்தை நம்பச்செய்வதற்குமான நோக்கத்துடன் சிறு சலுகைகளை வழங்க முயல்வதாக இருந்தனவேயன்றி முரண்பாட்டின் உண்மையான காரணங்களிலும் அவற்றைத் தீர்ப்பதற்கான சாத்தியக்கூறுகளிலும் கவனத்தைச் செலுத்துவனவாக இருக்கவில்லை. வேறுவகையில் கூறுவதாயின் தமிழர்களின் பிரதிநிதிகளுடன் திறந்த மனதுடன் ஒரு முழுமையான பேச்சுவார்த்தை நடத்தி அதனூடாகத் தீர்வுத்திட்டமொன்றை உருவாக்குவதை விடுத்து, மத்திய அரசாங்கம்





தான்விரும்பிய தீர்வொன்றினைத் திணிக்கும் அணுகுமுறையானது 'மிகக்குறைந்ததும் மிகவும் தாமதமானதும்.' என்று புத்திஜீவிகளால் விவரிக்கப்படுகிறது.

### ஆளுங்கட்சி – எதிர்க்கட்சி உடன்பாடு இல்லாமை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதன் கூட்டணியான பொதுசன முன்னணியும் (பொ.மு.) மற்றொரு கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் (ஐ.தே.க.) பல தசாப்தங்களாக அரசாங்கத்தை நடத்திவந்துள்ளபோதும் இனப் பதற்றங்களினதும் தேசிய உணர்வினதும் நிலையில் ஒன்று மற்றதற்கெதிராக அரசியல் ஆதாயங்களை ஈட்டியுள்ளன (விட்டில்: 1994). 1995ஆம் ஆண்டிலிருந்து இரு பிரதான சிங்களக் கட்சிகளும் இனப் பதற்றத்தைக் குறைப்பதற்கும் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவருவதற்குமான அணுகுமுறைகளைத் தொடர்ந்து எதிர்த்து வருவதோடு அதற்கு முட்டுக்கட்டையாகவும் விளங்குகின்றன. பொதுஜன முன்னணி, தீர்வுத்திட்டத்தினூடாக அரசியலமைப்புச் சீர்திருத்தத்தைத் தூண்டியது. ஐக்கிய தேசியக் கட்சி அத்தீர்வுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் முழுமனதுடன் ஈடுபடவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் விக்கிரமசிங்க அதிகாரப்பகிர்வுத் தீர்வுத்திட்டம் மீதான பேச்சுவார்த்தைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் கொண்டுவரப்படும்வரை தாம் அதற்கு ஆதரவாக வாக்களிக்க விரும்பவில்லையெனத் தெரிவித்தார். தீர்வுத்திட்டம் தொடர்பாக குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டதன் பின்னர்தான் தாம் எல்ரீரீஈயுடன் பேசுவேனென்று சனாதிபதி சந்திரிகா கூறினார் (ஜயலத் ஜயவர்தன, 30 ஏப்பிரல் 2001). நாட்டின் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்காக பொதுஜன முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் அவற்றுக்கிடையில் இருகட்சி உடன்படிக்கையொன்று பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முயற்சியால் எட்டப்பட்டபோதிலும் (லியாம் ஃபொக்ஸ் உடன்படிக்கை, 4 ஏப்பிரல் 1997) இரண்டுக்குமிடையில் ஒருங்கிணைந்த செயற்பாடெதுவும் இடம்பெறவில்லை.

உண்மையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நம்பிக்கைக்குரிய தீர்வுத்திட்டங்களை வகுப்பதற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி -ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய வற்றிற்கிடையில் கருத்தொருமைப்பாடு இன்றியமையாத ஒரு முன்நிபந்தனையென்று சர்வதேசச் சமூகம் கருது கின்றது. இதன் முதற்படியாக 1998இல் அப்போதைய பிரித்தானியாவின் நேருதவிச் செயலாளர் லியாம் ஃபொக்ஸ் சனாதிபதி சந்திரிகாவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் உடன் படிக்கையொன்றைத் திட்டமிட்டுருவாக்கினார் (பின்னி ணைப்பு 17). எனினும் இரு தலைவர்களும் ஒரேயறையில் ஒன்றாக அமர்ந்து லியாம் ஃபொக்ஸ் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்குப் பதிலாகத் தனித்தனியாகத் தத்தமது அலுவலகங்களிலிருந்து அதில் கைச்சாத்திட்டனர். அவர் களின் இந்நடவடிக்கையானது கருத்தொற்றுமையை எட்டு வதற்கு முன்னர் அவர்கள் நீண்டதூரம் போகவேண்டி யிருந்ததை உணர்த்தியது.

### உளவியல் ரீதியான தடைகள்

ஒரு நீடித்த உள்நாட்டு இனமுரண்பாட்டில் இன்றள வும் நீடிக்கின்ற இனநலன்கள் சார்ந்த முரண்பாடுகளுக்கு அப்பால் சமூக உளவியற் காரணிகளும் இன முரண்பாட் டைத் தூண்டும் சக்திகளாத் திகழ்கின்றன. இலங்கையில் இன முரண்பாடானது, சம்பந்தப்பட்ட இருதரப்புகளுக் கிடையில் சமூக ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் ஒரு இடைவெளியை உருவாக்குகின்றது. இந்த இடைவெளி அவநம்பிக்கையைத் தூண்டுகின்றது. எதிரியைக் குறித்த மோசமான அச்சங்களை நிரூபிக்கின்ற 'நிகழ்வுகளின்' மூலம் மனதைத்தேற்றிக்கொள்வதற்கு இந்த அவநம்பிக்கை இடமளிக்கின்றது. உள்ளத்திலிருந்து எழும் அவநம்பிக்கை உணர்வானது எதிரியுடனான இடைவெளியை அதிகரிப்ப தோடு தனிமைப்படுத்தவும் செய்கின்றது (சில்வெர்ஸ் ரெய்ன் மற்றும் ஃபிளமென்போம் 1989: 51-72).

பல ஆண்டுகளாக நீடிக்கின்ற ஆயுத முரண்பாட்டில் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் மாறாமல் ஒருவருக்கொருவர் முன்னும் பின்னுமான தகவல்களை அனுப்பிவந்துள்ளதாகத் தெரிகின்றது. அவர்கள் எதார்த் தங்களில் இருந்து விலகிவாழப் பழக்கப்பட்டு விட்டனர்.





நான் யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனைய வடபகுதி நகரங்களுக்குச் சென்றபொழுது, அங்கு யாழ்ப்பாணத்தி லிருந்து இடம்பெயர்ந்து வந்த அகதிகளைச் சந்திக்க நேரிட் டது. அவர்கள் மத்தியில் இலங்கை அரசாங்கமானது ஒரு வெளிநாட்டு அரசாங்கம் போலவே தோற்றமளித்ததை என்னால் அவதானிக்க முடிந்தது. ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சிங்கள பாராளுமன்ற உறுப் பினர்களைப் பொறுத்தவரையிலும், கொழும்பு மற்றும் தென்பகுதி நகரங்களில் வாழுகின்ற சிங்கள மக்களைப் பொறுத்தவரையிலும் தமது அயலவர்களாக இருக்கின்ற தமிழ் புத்திஜீவிகளைப் போன்றே முழுத் தமிழ் மக்களை யும் இனம் காண்கின்றனர்.

கொழும்பில் வசிக்கின்ற தமிழ் மக்களுக்கும் வடக்கு- கிழக்கில் வசிக்கின்ற தமிழ் மக்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசங்களையும், கண்ணோட்டங்களையும் புரிந்து கொள்வதில் இவர்கள் மிகக் குறைந்த கவனத்தையே செலுத்துகின்றனர். தெற்கிலுள்ளவர்கள் குறிப்பாகத் தலை நகரிலுள்ளவர்கள் கணிசமானளவு ஒருங்கிணைந்துள்ளனர். வடக்கில் உள்ளவர்களுக்கு இலங்கையின் சிவில் நிருவாகங் கள் பெரும்பாலும் எட்டாக்கனியாகவே இருக்கின்றன என்பதுடன் அவர்கள் தனித்துவமான அடையாளமொன் றையும் கொண்டிருக்கின்றனர். யுத்தத்தின் விளைவாகக் காலப்போக்கில் வடக்கிலுள்ள தமிழருக்கும் தெற்கிலுள்ள சிங்களவருக்குமிடையிலான தொடர்புகள் குறைவடைந் துள்ளதால், ஒருவர்மீது மற்றவர் கொண்டுள்ள ஊகங்களை யும் கண்ணோட்டங்களையும் இறக்கிவைப்பற்கான உண்மை யான தகவல்கள் இல்லை.

உண்மை நிலைமைகளை அடையாளம் காண்பது தொடர்பாக ஒவ்வொருதரப்பிற்கும் இருக்கக்கூடிய அக் கறையானது மற்றதரப்பினரைவிட மிகக் குறைந்த அளவே இருக்கின்றது. சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் நிலஅமைப்பு ரீதியில் அதிக தொலைவில் இருப்பதால் ஒருவருக்கொருவர் முகம்பார்த்துப் பேசக்கூடிய சூழல் இல்லை. அதுமாத்திர மின்றி, உளவியல் ரீதியாகவும் இவர்கள் வெகுதூரத்தில் இருப்பதால் உலகப் பார்வைகள் தொடர்பாகவும் இவர்கள் மத்தியில் நேரடியான வெளிப்படுத்தல்கள் இல்லை. தூரம்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவநம்பிக்கையையும் எதிரி மனிதனல்லவென்ற எண்ணத்தையும் அதிகரிக்கச் செய்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளைக் கொழும்பிலுள்ள சிவிலியன் இலக்குகள்மீது குண்டுத் தாக்குதல் நடத்துகின்ற பயங்கரவாதிகளாக மட்டுமன்றி அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அவர்களின் சொந்த மக்களை அச்சுறுத்தி ஆட்சிபுரிபவர்களாகவும் அரசாங்கத்தின் அறிக்கைகள் வருணிக்கின்றன.

அதைப்போன்றே, அரசாங்கம் தமிழ் மக்களைப் பொருட்டாக மதிக்காததென்றும், அவர்களை அடக்கியாளும் நோக்குடையதென்றும், பேச்சுவார்த்தைத் தீர்வொன்றைக் காண்பதில் உண்மையான அக்கறையற்றதென்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்துகின்றனர். 2001 ஏப்பிரலில் நான் வவுனியாவுக்குச் சென்றபோது, மோதலை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதில் அரசாங்கத்திற்கு உண்மையான அக்கறை இல்லை எனப் புலிகள் நம்புவதாகத் தோன்றுகிறது என்று யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த தமிழ் அகதிகள் தெரிவித்தனர்.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் மாறுபட்ட நலன்களைக் கொண்டவர்களகவும் மறுதரப்பின் கண்ணோட்டங்களை எதிர்ப்பவர்களாகவும் இருப்பதால் சம்பவங்களை அவரவர்கள் தங்களது கண்ணோட்டத்தில் வியாக்கியானப்படுத்த முயல்வது முரண்பாட்டை மேலும் மோசமடையச் செய்யும். தமிழர் விடுதலைப் போராட்டத்தின் பிரதான பிரதிநிதிகளாகக் கருதி புலிகளைச் சமமாக நடத்துவதற்கு அரசாங்கம் ஆர்வமற்றுள்ளதாகத் தெரிகின்றது. 1995ஆம் ஆண்டு சனாதிபதியால் பேச்சுவார்த்தைக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் நியாயமான அளவிற்குப் புலிகளை விளங்கிக்கொண்டவர்களை உள்ளடக்கியிருந்தமை நல்லெண்ணத்துக்கான ஒரு பாரிய முயற்சியாகத் தோன்றியது.

மாறாக புலிகள், அவர்கள் உயர்மட்டத் தீர்மானம் எடுப்பவர்களல்லவென்ற காரணத்தினால் சனாதிபதியின் பிரதிநிதிகளுக்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தனர். பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டவர்களைப் பொறுத்தவரை அவர்கள் முடிவெடுக்கும் தகுதியைப் பெற்றவர்கள் அல்லர் என்பதால் இந்நடவடிக்கையானது பேச்சுவார்த்தை





யின் மீதான தங்களது நம்பிக்கைக்கு அரசாங்கம் மதிப்பளிக்கவில்லை என்று புலிகள் கருதுவதற்கு இடமளித்தது. அரசாங்கப் பிரதிநிதிகளின் உத்தியோகபூர்வமற்ற தன்மையை, புலிகளைச் சமமான பங்காளியாக அரசாங்கம் கருதவில்லை என்பதற்கோர் அறிகுறியென்று அரசாங்கமும், புலிகளும் அவரவர்கள் தங்களது இஷ்டத்திற்குப் பொருள் கொள்வதில் அவர்களுக்கிடையில் எந்தவித வேறுபாடும் இருக்கவில்லை (பாலசிங்கம்: 2000: 19).

தீர்வுத்திட்டம் தொடர்பாகப் புலிகளிடமிருந்து ஒரு பதிலைப் பெற்றுக்கொள்ள அரசாங்கப் பிரதிநிதிகள் எதிர்பார்த்திருந்ததனால் ஒருவரின் எண்ணத்தை மற்றவர் விளங்கிக்கொள்ள வேண்டிய பரஸ்பர தேவை தொடர்ந்தது. தீர்வுத்திட்டமொன்றின் உருவாக்கத்தில் ஏதாவது ஒரு வகையில் புலிகளின் பங்களிப்பு இல்லாதவிடத்து புலிகள் அதனை ஏற்க மறுப்பர் என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ளாமல் ஒதுக்கி வைப்பதால் புலிகளுக்கு ஏற்படுகின்ற மன உணர்வுகளை விளங்கிக்கொள்ள அரசாங்கம் தவறுகின்றது (மேற்கூறியது: 20).

இனமுரண்பாட்டிற்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இருதரப்பினருக்கும் மனமார்ந்த அக்கறை இருக்கமுடியாது என்பதை இரு சமூகங்களையும் சேர்ந்த உறுப்பினர்களுடன் உரையாடுகின்றபோது தெரியவருகின்றது. ஒவ்வொரு தரப்பும் அதன் சொந்த செயற்பாட்டைத் தங்களது பாதுகாப்புக்கவசமாகவும், மற்றதன் நடவடிக்கைகளை நேர்மையற்றவையாகவும் கருதுவதாகத் தோன்றுகின்றது. 'நாம் நல்லவர்கள், அவர்கள் மோசமானவர்கள்' என்ற மிகவும் எளிமையான வாசகத்தின் மூலம் எதிரியின் அடையாளம் குறிப்பிட்டுக்காட்டப்படுகிறது (ஜயலத் ஜயவர்தனவுடன் நேர்காணல், 30 ஏப்பிரல் 2001).

இவ்வாறு இடைவெளியை ஏற்படுத்தி தனிமைப்படுத்திய சமூக உளவியற் சுழற்சியானது இரு தரப்பினரையும் ஆழமான அவநம்பிக்கைக்கு இட்டுச்சென்றதோடு எதிரி மனப்பான்மையையும் தோற்றுவித்து, எதிர்மறையான தோற்றத்திற்கு ஒருவடிகாலாக இருப்பதுடன் இருதரப்பினருக்கிடையிலான இடைவெளியை அதிகப்படுத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பேச்சுவார்த்தைக்கான சூழலையும் இல்லாமல் செய்கின்றது. இச்சமூக உளவியற் சுழற்சியானது உண்மையான தந்திரோ பாய வேறுபாடுகளுடன் பின்னிப் பிணைந்திருப்பதால் இத்தகைய வேறுபாடுகளை எதிர்கொள்வதை மேலும் சிக்கலாகியுள்ளது.

### மாகாண சபைக்கு அதிகாரங்கள் இல்லாமை

1980களில் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் மனக் குறைகளுக்கான அடிப்படைக் காரணங்கள் சிலவற்றில் கவனஞ்செலுத்துவதற்குக் காலங்கடந்த முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. 1977இன் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் அறிக்கையில் இம்மனக்குறை கள் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தன. 1978இல் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பில் தமிழ் படிப்படியாக ஒரு தேசிய மொழியாகவும், பின்னர் 1987இல் ஓர் அரசகருமமொழி யாகவும் ஆக்கப்பட்டது. இம்மாற்றங்களின் விளைவாகச் சிங்களமும் தமிழும் சட்ட, நிருவாக மற்றும் நீதிமன்ற மொழிகளாயுள்ளன. எனினும் இருமொழிக் கொள்கை யைக் காத்திரமான முறையில் செயற்படுத்துதல் தொடர் பில் இன்றும் அனேக பிரச்சினைகள் உள்ளன.

எந்த அரசியல் மற்றும் அரசியல்சாசன விதிமுறை களுக்குள் மாகாண சபைத் திட்டம் உருவாக்கப்பட்டதோ அதேவிதிமுறைகள் மாகாணசபை நடவடிக்கைகளை முழு வேகத்துடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தொடர்ச்சி யான இடையூறாகவும் இருக்கின்றன. இத்திட்டம் 1987 யூலை 29ஆந் தேதியன்று இலங்கை சனாதிபதி ஜயவர்தனவுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையில் கைச்சாத் திடப்பட்டு செய்துகொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் இன்றியமையாத ஒரு பகுதி. முன்னர் விளக் கப்பட்டவாறு, இவ்வொப்பந்தம் இன முரண்பாட்டை முடிவுக்குக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டு, அந்த முயற்சியின் ஒருகட்டமாக சிங்கள மற்றும் தமிழ்ச் சமூகங்களுக்கிடையில் அதிகாரப் பரவலாக்கலுக்கான நிறுவனரீதியான ஏற்பாடுகளைக் கோடிட்டுக் காட்டுவதற் கான ஒருதிட்டத்தை வழங்க முனைந்தது. ஒப்பந்தமானது இலங்கைத்தீவு பெரும்பான்மை சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர் ஆகிய நான்கு இனக்குழுக்களைக்





கொண்டதொரு 'பல்லின, பன்மொழிப் பன்மைச் சமுதாயம்' (பின்னிணைப்பு 16) என்று வெளிப்படுத்தியது. மேலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் 'தமிழ் பேசும் மக்களின் வரலாற்று பூர்வமான வாழ்விடங்கள்' என்பதை ஒப்பந்தம் ஏற்றுக்கொண்டது (பின்னிணைப்பு 16). மேற் கண்ட இருகூற்றுக்களும் இருமொழிப்பயன்பாடு, மாகாண சபை முறைமை, இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணம் என்பது தமிழ் மக்களின் அரசியல் நிருவாக அலகு என்ற கொள்கைகளை உருவாக்குவதில் முக்கியத்துவமானதும் மிகக் காத்திரமானதுமான சித்தாந்த அடிப்படை ஒன்றை வகுத்துக்கொடுத்தன.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை வடிவமைத்தவர்கள் இலங்கையின் வடக்கு-கிழக்கிலும் தெற்கிலுமுள்ள அரசி யற் குழுக்களுக்கு எதார்த்தமானதொன்றைத் தாம் முன் வைக்கக்கூடுமென்றும் அவர்கள் படிப்படியாக ஒப்பந்தத் தில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான கருத்துப் படிவங் களையும் யோசனைகளையும் மையமாகக்கொண்டு ஒரு கருத்தொருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவரென்றும் எதிர்பார்த்தனர். எனினும் இந்த எதிர்பார்ப்புகள் எதார்த்த மற்றவை என்று நிரூபிக்கப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலிகள், ஜனதா விமுக்தி பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சி ஆகியவை 1988ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்றவில்லை. வடக்கு-கிழக்கிற்கான அதிகாரப் பகிர்வுப் பரிசோதனை என்பது நவம்பர் 1988 இலிருந்து மார்ச் 1990வரையிலான குறுகியகாலகட்டத்திற்கே நீடித்தது. ஒரு குரூரமானதும் எள்ளிநகையாடக்கூடிய வகையிலும் வடக்கு-கிழக்கு மாகாணசபை தொடர்ந்தும் கலைக்கப்பட்டநிலையில் இருப்பதுடன் சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரங் கள் அனைத்தும் அம்மாகாணத்தின் ஆளுநருக்கு உரித் தாக்கப்பட்டதாகவுமே இருந்து வருகின்றது (பிரேமச் சந்திரனுடன் நேர்காணல், 7 மே 2001).

அரசியல் சாசன வடிவமும் பிரச்சினைக்குரியதாகவே நிரூபிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பு ஒற்றையாட்சி அரசைத் தூக்கிப்பிடிப்பதனால் அது மத்திய-மாகாண அரசுகளுக்கிடையேயான பிணக்குகளின் தீர்வில் நிருவாகத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துறையினதும் நீதித்துறையினதும் வெளிப்புறப்பார்வை யின்மீது செல்வாக்கைச் செலுத்துகிறது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையானது பலத்தையும் அதிகாரத்தையும் தவிர்க்கமுடியாதவாறு மத்திய அரசிடம் குவித்துள்ளதால் மாகாணங்களுக்கான அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வைக் கட்டுப்படுத்தியது. பிரதேசச் செயலக முறைமையின் வாயிலாக உப மாவட்ட மட்டத்தில் மத்தி யின் அதிகாரம் மேலும் நீடிக்கப்பட்டது. அதிகாரத்தைப் பங்கிடுவதில் மத்திய அரசு பெருமளவு தயக்கம் காட்டின என்றும் அதிகாரப் பகிர்வுத் திட்டத்தைச் செயற்படுத்து வதில் அரசு தொடர்ந்தும் நேர்மையற்றதன்மையுடன் செயல் பட்டது என்றும் கவலை கொள்வதற்கே இவ்வளர்ச்சிகள் வழிவகுத்தன (மேலது).

### ஈழம் என்ற எண்ணக்கரு பற்றிய சர்ச்சை

சிங்களத் தலைவர்கள் ஈழம் என்பது ஒரு சுதந்திரமான தமிழ் அரசுக்கு ஒத்தகருத்துள்ள சொல்லாகக் கருதுகின் றனர். எனவே, அச்சொல்லைப் பாவித்து வைக்கப்படுகின்ற யோசனை எதனையும் பரிசீலனை செய்ய மறுக்கின்றனர். எனினும் ஈழம் என்பது ஆரம்பத்தில் அது கொண்டிருந்த கருத்தை இப்போது கொண்டிருக்கவில்லை. அது இத்தீவி லுள்ள தமிழர் ஆதிக்கத்திற்கு உட்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வசிக்கின்ற இலங்கைத் தமிழர்களின் கலாச்சார மற்றும் புவியியல் அடையாளத்தை உருவகப் படுத்திக் காட்டும் ஒரு சொல்லாகத் தமிழ்ச் சொற்றொகுதி யின் ஓர் அங்கமாகிவிட்டது. மேலும், ஈழப் புரட்சி அமைப்பினர், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகியவை உட்பட அனைத்துத் தமிழ்க் கட்சிகளாலும் ஈழம் என்ற வார்த்தை தமிழ் மக்களின் புவியியல் அடையாளத்தை உறுதிப்படுத் தும் ஒருசொல்லாகவே பயன்படுத்தப்படுகின்றது. எனவே சிங்களத் தலைவர்கள் பிரிக்கப்படாத இலங்கை என்ற சூழலில் வைத்து ஈழம் என்பதை மீண்டும் வரையறை செய்யவேண்டிய தேவையுள்ளது (அருட்பிரகாசத்துடன் நேர்காணல், 27 ஒக்ரோபர் 2001).

### ஒற்றையாட்சிக் கட்டமைப்பிற்கான அரசியலமைப்பு

ஜீ.எல்.பீரிஸ் வரைவுசெய்த அதிகாரப்பகிர்வுப் பொதி யானது, தமிழர்களைப் பொறுத்தவரையில் முன்னைய





முன்மொழிவுகளைப் போன்று, வடக்கு-கிழக்கு மாகாணங் களின் பிராந்தியச் சபைகளுக்குக் கணிசமான அளவு அதிகாரங்களை உரித்தாக்கவில்லை. தமிழர்கள் மத்திய அரசாங்கத்தின் குறைந்தபட்சத் தலையீட்டுடன் தமது சொந்த அலுவல்களைக் கவனித்துக்கொள்வதற்கு அவர் களுக்கு இடமளிக்கக்கூடிய அதிகாரப்பகிர்வு ஏற்பாடு களை அது உள்ளடக்கவில்லை. மேலும் தமிழர்கள் மட்டும் எதிர்நோக்குகின்ற சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் பிரச்சினைகளுடன் பிணைக்கப்பட்டுள்ள முரண்பாட்டின் ஆணிவேர்களுக்கு அழுத்தம் கொடுத் திருக்கவேண்டும். அத்துடன் சிங்களப் பிரதேசங்களில் பிராந்தியச் சபைகளை நிறுவுவதற்கான அல்லது தமிழ்ப் பிராந்தியச் சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் அதே அதிகாரங்களை அவற்றுக்கும் வழங்குவதற்கான முற்போக் கான காரணம் எதையும் அது கொண்டிருக்கவில்லை. அதுமட்டுமன்றி, அதிகாரப்பகிர்வானது பிராந்தியச் சபை களுக்கு உண்மையான அதிகாரத்தை அளிக்கவுமில்லை அல்லது மத்தியுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதற்கு இடமளிக்கவுமில்லை (சர்வேஸ்வரனுடன் நேர்காணல், 23 ஏப்பிரல் 2001).

அதிகாரப்பகிர்வு முன்மொழிவுகளிலுள்ள அரசிய லமைப்பு ஏற்பாடுகள் அரசியலமைப்பின் ஒற்றையாட்சிப் பண்பைத் தொடர்ந்து நீடித்திருக்கச் செய்கின்றன. அதன் கீழ் பெரும்பான்மை சிறுபான்மைகள் மீது ஏகபோக அதிகாரத்தைக் கொண்டதாக இருக்கும். இலங்கையில் நிலையான சமாதானம் நிலவவேண்டுமாயின் தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் தத்தமது விடாப்பிடி யான நிலைப்பாடுகளை விட்டுக்கொடுத்து தமிழர் பிரச் சினையைத் தீர்ப்பதற்கு நடுநிலையான வழியொன்றைப் பின்பற்றவேண்டியது அவசியமாகும். இதனைச் சிங்களப் பெரும்பான்மையின் அபிலாசைகளை மட்டுமன்றித் தமிழ்ச் சிறுபான்மைகளினதும் அபிலாசைகளைப் பாதுகாக்கின்ற அரசியற் சட்டகமொன்றைத் தாபிப்பதன்மூலம் மட்டுமே சாதிக்க முடியும். அரசாங்க முன்மொழிவுகளின் பொதி தொடர்ந்தும் ஏகபோக இறைமையை மத்திக்கு உரித்தாக்கு கின்றது. எனவே, மத்திய அரசாங்கத்துக்கும் அதன் அரசியல் சாசன உறுப்புகளுக்கும் இடையில் இறைமையைப் பகிர்ந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துறையினதும் நீதித்துறையினதும் வெளிப்புறப்பார்வையின்மீது செல்வாக்கைச் செலுத்துகிறது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையானது பலத்தையும் அதிகாரத்தையும் தவிர்க்கமுடியாதவாறு மத்திய அரசிடம் குவித்துள்ளதால் மாகாணங்களுக்கான அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வைக் கட்டுப்படுத்தியது. பிரதேசச் செயலக முறைமையின் வாயிலாக உப மாவட்ட மட்டத்தில் மத்தியின் அதிகாரம் மேலும் நீடிக்கப்பட்டது. அதிகாரத்தைப் பங்கிடுவதில் மத்திய அரசு பெருமளவு தயக்கம் காட்டின என்றும் அதிகாரப் பகிர்வுத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் அரசு தொடர்ந்தும் நேர்மையற்றதன்மையுடன் செயல்பட்டது என்றும் கவலை கொள்வதற்கே இவ்வளர்ச்சிகள் வழிவகுத்தன (மேலது).

### ஈழம் என்ற எண்ணக்கரு பற்றிய சர்ச்சை

சிங்களத் தலைவர்கள் ஈழம் என்பது ஒரு சுதந்திரமான தமிழ் அரசுக்கு ஒத்தகருத்துள்ள சொல்லாகக் கருதுகின்றனர். எனவே, அச்சொல்லைப் பாவித்து வைக்கப்படுகின்ற யோசனை எதனையும் பரிசீலனை செய்ய மறுக்கின்றனர். எனினும் ஈழம் என்பது ஆரம்பத்தில் அது கொண்டிருந்த கருத்தை இப்போது கொண்டிருக்கவில்லை. அது இத்தீவிலுள்ள தமிழர் ஆதிக்கத்திற்கு உட்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வசிக்கின்ற இலங்கைத் தமிழர்களின் கலாச்சார மற்றும் புவியியல் அடையாளத்தை உருவகப்படுத்திக் காட்டும் ஒரு சொல்லாகத் தமிழ்ச் சொற்றொகுதியின் ஓர் அங்கமாகிவிட்டது. மேலும், ஈழப் புரட்சி அமைப்பினர், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகியவை உட்பட அனைத்துத் தமிழ்க் கட்சிகளாலும் ஈழம் என்ற வார்த்தை தமிழ் மக்களின் புவியியல் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஒருசொல்லாகவே பயன்படுத்தப்படுகின்றது. எனவே சிங்களத் தலைவர்கள் பிரிக்கப்படாத இலங்கை என்ற சூழலில் வைத்து ஈழம் என்பதை மீண்டும் வரையறை செய்யவேண்டிய தேவையுள்ளது (அருட்பிரகாசத்துடன் நேர்காணல், 27 ஒக்ரோபர் 2001).

### ஒற்றையாட்சிக் கட்டமைப்பிற்கான அரசியலமைப்பு

ஜீ.எல்.பீரிஸ் வரைவுசெய்த அதிகாரப்பகிர்வுப் பொதியானது, தமிழர்களைப் பொறுத்தவரையில் முன்னைய





முன்மொழிவுகளைப் போன்று, வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பிராந்தியச் சபைகளுக்குக் கணிசமான அளவு அதிகாரங்களை உரித்தாக்கவில்லை. தமிழர்கள் மத்திய அரசாங்கத்தின் குறைந்தபட்சத் தலையீட்டுடன் தமது சொந்த அலுவல்களைக் கவனித்துக்கொள்வதற்கு அவர்களுக்கு இடமளிக்கக்கூடிய அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளை அது உள்ளடக்கவில்லை. மேலும் தமிழர்கள் மட்டும் எதிர்நோக்குகின்ற சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் பிரச்சினைகளுடன் பிணைக்கப்பட்டுள்ள முரண்பாட்டின் ஆணிவேர்களுக்கு அழுத்தம் கொடுத்திருக்கவேண்டும். அத்துடன் சிங்களப் பிரதேசங்களில் பிராந்தியச் சபைகளை நிறுவுவதற்கான அல்லது தமிழ்ப் பிராந்தியச் சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் அதே அதிகாரங்களை அவற்றுக்கும் வழங்குவதற்கான முற்போக்கான காரணம் எதையும் அது கொண்டிருக்கவில்லை. அதுமட்டுமன்றி, அதிகாரப்பகிர்வானது பிராந்தியச் சபைகளுக்கு உண்மையான அதிகாரத்தை அளிக்கவுமில்லை அல்லது மத்தியுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதற்கு இடமளிக்கவுமில்லை (சர்வேஸ்வரனுடன் நேர்காணல், 23 ஏப்பிரல் 2001).

அதிகாரப்பகிர்வு முன்மொழிவுகளிலுள்ள அரசியலமைப்பு ஏற்பாடுகள் அரசியலமைப்பின் ஒற்றையாட்சிப் பண்பைத் தொடர்ந்து நீடித்திருக்கச் செய்கின்றன. அதன் கீழ் பெரும்பான்மை சிறுபான்மைகள் மீது ஏகபோக அதிகாரத்தைக் கொண்டதாக இருக்கும். இலங்கையில் நிலையான சமாதானம் நிலவவேண்டுமாயின் தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் தத்தமது விடாப்பிடியான நிலைப்பாடுகளை விட்டுக்கொடுத்து தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடுநிலையான வழியொன்றைப் பின்பற்றவேண்டியது அவசியமாகும். இதனைச் சிங்களப் பெரும்பான்மையின் அபிலாசைகளை மட்டுமன்றித் தமிழ்ச் சிறுபான்மைகளினதும் அபிலாசைகளைப் பாதுகாக்கின்ற அரசியற் சட்டகமொன்றைத் தாபிப்பதன்மூலம் மட்டுமே சாதிக்க முடியும். அரசாங்க முன்மொழிவுகளின் பொதி தொடர்ந்தும் ஏகபோக இறைமையை மத்திக்கு உரித்தாக்குகின்றது. எனவே, மத்திய அரசாங்கத்துக்கும் அதன் அரசியல் சாசன உறுப்புகளுக்கும் இடையில் இறைமையைப் பகிர்ந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொள்வதற்கு இடமளிக்கின்ற அரசியலமைப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டாலன்றி இனப்பிரச்சினைக்கு உருப்படியான தீர்வொன்றைக் காணமுடியாது. மத்திக்கும் அதன் அரசியல்சாசன உறுப்புகளுக்கும் இடையில் சட்டவாக்க, நிறைவேற்று மற்றும் நீதித்துறை அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளுதலும் மத்திய அரசு தனது உறுப்புகளுக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களை ஒருதலைப்பட்சமாக மாற்றுவதற்கோ அல்லது திருத்தியமைப்பதற்கோ எந்த ஒருவழிமுறையும் இல்லாதிருத்தலே ஒரு கூட்டாட்சியின் அடையாளச் சின்னங்களாகும் (சிவநேசச்செல்வனுடன் நேர்காணல், 6 மே 2001).

### சிங்கள, தமிழ் மக்களின் ஆழ்மன நிலைப்பாடு

இரு தரப்புகளும் மேற்கொண்டுள்ள நேர்மாறான 'நிலைகளே' இன்று இன முரண்பாடு நிலைத்திருப்பதற்குக் காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது. இது 'மனதின் அடியில் பதிந்துவிட்ட ஒரு எண்ணம் (Mind set)', 'மூளையில் பதிந்துபோன ஒன்று' அல்லது ஒருவர் சூழ்நிலையைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் தான் ஏற்கனவே தீர்மானித்துவிட்ட முடிவின்படி பதில்நடவடிக்கையில் ஈடுபடுகின்ற ஒருவகையான மனோநிலை அல்லது உளச் சார்பு' என்று பொருள்கொள்ள முடியும் (The American Heritage Dictionary of the English Language, மூன்றாம் பதிப்பு 1992).

இம்முரண்பாட்டில் இருதரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் ஒரு பொதுவான சூழ்நிலை தொடர்பாக நிலைத்த மனோநிலையைக் கொண்டுள்ளனர். இம்மனோநிலை ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகின்ற முரண்பாட்டில் அவர்களின் பழைய நினைவுகளின் திரட்டையும் அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டனவாகத் தோன்றுகின்றன. மிகவும் அண்மைக்கால நிகழ்வுகளின் நினைவுகளும் அனுபவங்களும் இப்போதுள்ள மனோநிலைகளில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதும் உண்மைதான் என்றபோதிலும், நெடுங்காலத்துக்கு முற்பட்ட நிகழ்ச்சிகளின் பாதிப்பை ஒருவர் முற்றாகப் புறக்கணித்துவிட முடியாது. எடுத்துக்காட்டாக, இலங்கைத் தமிழர் தமிழ் நாட்டுத் தமிழர்களுடன் இணைந்து என்றோ





ஒருநாள் தமக்கெதிராக யுத்தம் புரிவார்களென்று தாம் பயப்படுவதாகச் சிங்கள மக்கள் கூறுகின்றபோது அதுவோர் 'நியாயமான' அச்சம் - நெடுங்காலத்துக்கு முந்திய நிகழ்வுகளின் அடிப்படையிலான ஒரு மனோநிலை. இப்படிப்பட்ட அசைக்க முடியாத மனோநிலைகள்தான் இலங்கையில் இன முரண்பாட்டின் சமாதானத் தீர்வுக்குப் பெரும் தடைகளாயுள்ளன (செனிவிரத்னவுடன் நேர்காணல், 9 மே 2001).

மறுபுறத்தில் தமிழரின் மனோநிலையும் அச்சத்தின் அடிப்படையிலமைந்தது. தமிழரின் இறுக்கமான மனோநிலையைத் தோற்றுவித்துள்ள நினைவுகள் அண்மைக்கால நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டவை. இவை 1920 இல் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளர்கள் இலங்கையில் குடியிருப்பவர்களுக்கு மட்டுப்படுத்திய சுயாட்சி பற்றிய கருத்தை ஆராயத் தொடங்கிய காலத்திலிருந்து அளிக்கப்பட்ட வாக்குறுதிகளின் மீறல்கள் தொடர்பானவை. இப்போக்கு காலனித்துவத்துக்குப் பிந்திய வரலாற்றுக் காலம் முழுவதும் தொடர்ந்துள்ளது. உடல்ரீதியான வன்முறை பற்றிய அச்சம் 1956இன் தமிழர் விரோதக் கலவரங்களுடன் ஆரம்பமாகி, அதன் பின்னர் விதிவிலக்கின்றி அதிகரித்துள்ளது. இந்நிகழ்வுகள் திரும்பவும் இடம்பெறுவதற்கு இடமளிக்கக் கூடாதென்ற அடிப்படையில் ஒரு தீர்வு காணப்பட வேண்டும் என்று அவர்களின் மனோநிலை ஆணையிடுகின்றது. எனவே இவ்விரு மனோநிலைகளும் வெவ்வேறானவையும் முரண்பாடானவையும் ஒன்றோடொன்று மோதுபவையுமாகும். எனினும் ஒவ்வொருவரினதும் அச்சம் மற்றவரின் மனோநிலையைப் பிரதிபலிக்கின்றது (சிவசிதம்பரத்துடன் நேர்காணல், 15 ஏப்பிரல் 2001).

தமிழ் மக்கள் மத்தியில் பொதுக்கருத்து ஒன்றை எட்ட முடியுமா? என்ற கேள்விக்கு என்னைப் பொறுத்தவரையிலும் ஐரோப்பாவில், அமெரிக்காவில், இந்தியாவில், கனடாவில் மற்றும் அவுஸ்திரேலியாவில் சிதறிப் பரவியுள்ள தமிழ் மக்களின் கருத்துக்களை (நேர்காணல்களிலிருந்து) எண்ணிப்பார்க்கின்றபோதும் அதற்கான பதில், அர்த்தம் பொதிந்த 'ஆம்' என்பதாகும். உலகெங்கும் சிதறிப் பரவியுள்ள தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் முழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மையாகப் பிரிந்துசெல்வதுதான் ஒப்பேறக்கூடிய ஒரே யொரு தீர்வென்று நம்புவதில் மட்டும்தான் இப்பதில் அர்த்தம் பொதிந்ததாகக் காணப்படுகிறது. கொழும்பி லுள்ள சில தமிழர்களும் சிங்களத் தலைவர்களும் ஐக்கிய இலங்கைக்குள் தங்கியிருப்பதற்கான சில ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம் ஒரு தீர்வை எட்ட முடியும் என்று நம்பு கின்றனர்.

**சிங்களத் தலைவர்கள் சர்வதேச சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சுயநிர்ணய உரிமைகளை ஏற்க மறுத்தல்**

சமாதான முயற்சிகளின் வெற்றிக்குப் பிரதான தடை களில் ஒன்று தமிழர்களது சுயநிர்ணய உரிமையைச் சிங்களத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தலாகும். காலனி நாடுகள் சுதந்திரம் பெற்றவுடன், இலங்கை உட்பட அந்நாடுகள் சிலவற்றிலுள்ள ஆளும் இனப்பெரும்பான் மைகள், அங்குள்ள சிறுபான்மை தேசிய இனங்களின் கலாச்சாரத்தையும் அவர்களது தேசிய அல்லது ஆட்சிப் பிரதேச அடையாளங்களை வெளிப்படுத்துவதற்கான ஏதேனும் அரசியல் கட்டமைப்பை அவர்களுக்கு வழங்கு வதற்கோ அல்லது சிறுபான்மை தேசிய இனங்கள் தனித் துச் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களுக்குப் பிராந்தியச் சுயாட்சியை வழங்குவதற்கோ மறுப்பதன்மூலம் அச்சிறு பான்மைகள் மீதான ஏகபோக இறைமையைத் தமதாக்கிக் கொண்டன. எனினும் இலங்கையில் அந்நிய ஆதிக்கத்தி லிருந்து வழங்கப்பட்ட சுதந்திரமானது சிங்கள மக்களுக்கு மட்டும் சுயநிர்ணய உரிமையை வழங்கியது.

இலங்கைத் தமிழர்களினதும் மலைநாட்டுத் தமிழர் களினதும் முஸ்லிம் தமிழர்களினதும் கலாச்சார மற்றும் புவியியல் அடையாளங்களை அங்கீகரிப்பதற்கு அல்லது 'தமிழ் பேசுகின்ற மக்களின் வரலாற்று வதிவிடங்கள்' என்று கருதப்படும் நன்கு வரையறுக்கப்பட்ட ஒரு பிராந்தி யத்தின் எல்லைகளினுள் சிறுபான்மைச் சமூகங்கள், தமது சொந்த அலுவல்களைக் கவனித்துக்கொள்ள அனுமதிப் பதற்கு அரசியலமைப்பில் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட வில்லை (இந்திய-இலங்கை ஒப்பந்தம், 29 யூலை 1987).

சிங்களப் பெரும்பான்மையானது பாகுபாடான சட்டங் களை இயற்றுவதன் மூலம் தேசிய சிறுபான்மை இனத் தின் இறையாண்மையைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. அது அந்த மண்ணில் நூற்றாண்டு காலங் களாக வாழ்ந்துவரும் தேசிய இனத்தின் அதிகாரத்தையும், சிறப்புரிமைகளையும்கூட அச்சுறுத்தலுக்குள்ளாக்கியுள் ளது. ஆரம்பத்தில் இலங்கைத் தமிழர் ஐக்கிய இலங்கைக் குள் ஒரு சமஷ்டி முறையான அரசாங்கம் என்னும் அடிப் படையில் தங்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை முன்வைத்து இப்பாகுபாடான நடவடிக்கைகளுக்குப் பதிலளித்தனர்.

1990களின் தொடக்கத்திலிருந்து தமிழர்களின் சுய நிர்ணய உரிமைக்கான கோரிக்கை வலுத்தது. அக்கோட் பாடானது ஐரோப்பாவிலும் முன்னாள் சோவியத் யூனிய னிலும் பெரும்பான்மை இனத்தவர்களிடமிருந்து அரசியற் சலுகையையும் பிராந்திய சுயாட்சியையும் கோரிய சிறு பான்மை தேசிய இனங்களுக்கு அனைத்துலகாலும் அங்கீ கரிக்கப்பட்ட ஒரு அடிப்படை உரிமையாக வெளிப்பட்டது. சிறுபான்மை இனங்களின் சுயநிர்ணய உரிமை 1991இன் 'புதிய ஐரோப்பாவுக்கான பாரிஸ் சாசனம்' மூலம் மேலும் செழுமைப்படுத்தப்பட்டுள்ளது. அச்சாசனம் 'தேசியச் சிறுபான்மைகளின் இன, கலாச்சார, மொழி மற்றும் சமய அடையாளங்கள் பாதுகாக்கப்படுமென்பதுடன் சிறு பான்மை தேசிய இனங்களைச் சேர்ந்தவர்கள் எவ்விதப் பாகுபாடின்றியும் சட்டத்தின்முன் முழுச் சமத்துவத்துட னும் அவர்களின் அடையாளத்தை முழுமையாக வெளிப் படுத்துவதற்கும் போற்றிப் பாதுகாப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான உரிமையையும் கொண்டிருப்பர்' என்று உறுதிப்படுத்துகின்றது (CSCE, 6 July 2002). அனைத்துல காலும் ஒப்புக்கொள்ளப்பட்ட இத்தேசிய சுயநிர்ணய உரிமையின்கீழ் இலங்கைத் தமிழர் உட்படத் தேசிய சிறு பான்மை இனங்கள் ஏற்றுக்கொள்ள விரும்புகின்ற அரசி யல் ஏற்பாடுகள் பிராந்திய சுயாட்சியிலிருந்து பூரண சுதந்திரம் வரையிலான வீச்சினுள் அடங்குகின்றன. எனவே சிங்களப் பெரும்பான்மை தமிழரின் சுயநிர்ணய உரிமை யை ஏற்றுக்கொள்ள விரும்பினாலன்றிச் சமாதான முன் னெடுப்புகள் எதுவும் வெற்றியளிக்கும் என்று எண்ணுவது பகல் கனவாகும்.







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### சிங்கள மக்களின் அச்சமும் கட்சி நலன்களும்

முதலாவதாக, சிங்கள அரசாங்கங்கள் 'சமஷ்டி' என்ற வார்த்தையின் உண்மையான பொருளை ஒருபோதும் விளங்கிக்கொண்டதில்லை. இலங்கை பிரிக்கமுடியாத ஒரு தீவென்றும் சமஷ்டியை அறிமுகப்படுத்துதல் அதனைப் பிரிப்பதாகுமென்றும் அவை வலியுறுத்துகின்றன. சமஷ்டி என்பது தமிழர்களுக்கு முழுச் சுதந்திரத்தை நோக்கிய முதற்படியென்றே பெரும்பாலான சிங்களவர்கள் சந்தேகிக்கின்றனர். எனவே அவர்கள் அதனை எதிர்க்கின்றனர். அத்துடன் சிங்களவர் இலங்கையைத் தமக்குச் சொந்தமானதாகக் காண்கின்றனர். அவர்களில் அதிகமான பேரினவாதப்போக்கினர், தமிழர் 'எங்கிருந்து வந்தார்களோ அந்த இந்தியாவுக்கு' எப்போதும் திரும்பிச்செல்ல முடியும், அதேவேளையில் சிங்களவருக்குப் போவதற்கு இடமில்லை என்று வாதிடுகின்றனர். அவர்களில் அனேகர் இலங்கை உலகில் தனித்துவமானதொரு சிங்கள பௌத்த ஆட்சிப் பிரதேசமென்றும் தமிழர்கள், ஒன்றில் சிங்களக் கலாச்சாரத்துடன் ஒன்றுபட்டு இணையவேண்டிய அல்லது வெளியேறிவிட வேண்டிய உரிமையில்லாத வணிகர்களென்றும் கருதுகின்றனர் (சத்தியம், 30 சனவரி 1999: 1 - 5).

இரண்டாவதாக, ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டு பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் இலங்கையில் உள்ளன. ஹொறோவிற்ஸ் (1985) சரியாகக் கணிப்பிட்டவாறு, பிரதான இனக் கட்சிகள் ஒரே இனக்குழுவின் விசுவாசத்திற்காகப் போட்டியிடுகின்றபோது, அதிகாரத்திலுள்ள கட்சியால் வழங்கப்படும் ஏதாவதொரு சலுகையை அதிகாரத்தில் இல்லாத கட்சி அதிகாரத்தில் உள்ள கட்சியின் செல்வாக்கைக் குறைக்கும் பொருட்டு அச்சலுகையை ஓர் ஆயுதமாகப் பிடித்துக்கொண்டு 'எமது மக்களை விற்றுவிட்டதாக' ஆளும் கட்சிமீது குற்றஞ் சாட்டுகின்றது. இது தவிர்க்கமுடியாதது. உண்மையில் பண்டாரநாயக்கவும் அவரின் சில ஆதரவாளர்களும் ஐக்கிய தேசியக் கட்சி சிங்கள பௌத்தர்களுக்குச் செய்வது போதுமானதல்லவென்ற முறைப்பாட்டுடன் அக்கட்சியிலிருந்து வெளியேறி உருவாக்கியதுதான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாகும் (சிவசிதம்பரத்துடன் நேர்காணல், 15 ஏப்பிரல் 2001).





### ஒருதலைப்பட்ச அணுகுமுறை

இருதரப்பினருக்குமிடையில், 'சமீப காலத்தில் 1994-95இல் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ள போதிலும் அவை நேர்மையான பேச்சுவார்த்தைகளாக இருந்ததில்லை. கொழும்பிலுள்ள அரசாங்கங்கள் காலத்துக்குக் காலம் தமது சொந்த அரசியல் முன்மொழிவுகளையே விருத்தி செய்துள்ளன'. 1995ஆம் ஆண்டு பொதுஜன முன்னணியால் உருவாக்கப்பட்ட தீர்வுத்திட்டமானது வலுக்குறைக்கப்பட்டு எலும்பும் தோலுமான ஒரு தீர்வுப் பொதியாக மாற்றப்பட்டது. இறுதியில், பொதுஜன முன்னணி அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட பிராந்திய சபை முறைமை தான் முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட பல தீர்வுத்திட்டங்களையும் விட மிகக்குறைந்த அதிகாரங்களைக்கொண்ட பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிக்கக்கூட முடியாத தீர்வுத்திட்டமாக அமைந்திருந்தது. எனினும் அரசியற் செயல்முறையானது இதுவரை தமிழர்களிடமிருந்து, பிரதானமாக எல்ரீரீஈயிடமிருந்து பதில்களோ முன்மொழிவுகளோ வெளிப்படாத ஒருதலைபட்சமாக இருந்தது. தனியரசுக்கு மாற்றான ஒன்றைப் பரிசீலனை செய்யலாமென்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளிப்படுத்தப்படாத நிலைப்பாடாக இருந்தது. அத்தகைய ஒரு மாற்றத்தை வகுத்தமைக்கின்ற பொறுப்பை தமிழீழ விடுதலைப் புலிகள் கொழும்பின் மீது சுமத்தினர். பொதுஜன முன்னணி அரசாங்கம் இன முரண்பாட்டுக்கான தீர்வுத்திட்டமாக உருவாக்கிய முன்மொழிவுகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அடிப்படைக் கருத்துக்களையே ஏற்றுக்கொள்ளாததால் இன முரண்பாட்டிற்கான ஒரு தீர்வு சாத்தியமற்றதாயிற்று.

1994-95இல் சந்திரிகா அரசாங்கத்தின் முரண்பாட்டுத் தீர்வு முன்மொழிவு இலங்கையிலுள்ள எல்லா மாகாணங்களுக்கும் சமமான முறையில் பிரயோகிக்கப்படும் அதிகரித்த அதிகாரப்பகிர்வு முறைமையொன்றை முன்வைத்தது. முதலாவதாக, இனப்பிரச்சினையின் விசேடத் தன்மையை அது ஒப்புக்கொள்ளாததனால் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை அது நிறைவேற்றவில்லை. 'திம்புக் கோட்பாடுகளின்' (பின்னிணைப்பு 14) அடிப்படையில், எந்தவொரு தீர்வும் தமிழர் தனித்துவ மிக்க ஒரு தேசிய இனமென்ற அந்தஸ்தை உறுதிப்படுத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டுமென்று தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களது சொந்த அரசியல் சூத்திரத்தில் வகுத்திருந்தனர். தனித்துவ மிக்க தேசியம் என்ற இக்கருத்தை அரசியலமைப்புக் கோட்பாடுகளாக மாற்றுவதற்கு, சிங்களப் பிராந்தியங் களுக்கு வழங்கப்பட்டவற்றுடன் ஒப்பிடுகையில் தமிழ்ப் பிராந்தியத்துக்குக் கூடிய அரசியல் மற்றும் நிருவாக அதிகாரங்கள் உத்தரவாதமளிக்கப்படவேண்டும். சமச் சீரற்ற அதிகாரப்பகிர்வு-சமஷ்டி என்ற கருத்து தமிழீழ விடுதலைப் புலிகளினதும் ஏனைய போராளி அரசியற் கட்சிகளினதும் நிலைப்பாட்டுக்கு ஏறக்குறைய ஏற்புடைய தாய் இருக்கக்கூடும் (லோகநாதன், 5 ஆகஸ்ட் 2000).

இரண்டாவதாக, முன்மொழியப்பட்ட பிராந்தியச் சபைகளால் நிறைவேற்றப்படவுள்ள அதிகாரங்களையும் மத்திக்கும் பிராந்தியங்களுக்குமிடையிலான உறவுகளை யும் விவரமாகக் கூறுகின்ற ஒரு விரிவான அரசியலமைப்பு ஆவணமாயுள்ள தீர்வுத்திட்ட முன்மொழிவுகள், தமிழீழ விடுதலைப் புலிகள் உட்படத் தமிழ்ப் போராளிகளினதும் தமிழ் அரசியற் கட்சிகளினதும் தலையீடு எதற்கும் நடை முறையில் இடமளிக்கவில்லை. முரண்பாட்டுத்தீர்வு முன் மொழிவானது அதன் ஒவ்வொரு விவரமும் சிங்கள அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட ஒருதலைப்பட்சமான ஒரு முன்மொழிவென்று தமிழர் வாதிடுகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற ஒரு தேசியவாத கெரில்லா இயக்கத்தின் உளவியல் கண்ணோட்டத்தின்படி 'எதிரியால்' விரிவாக வகுத்துரைக்கப்பட்ட தீர்வெதுவென்றாலும் அதனை ஏற்றுக்கொள்ளத் தயங்கக்கூடும். தேசியவாத கெரில்லாக்கள் தமக்கு எவ்விதத் தொடர்புமற்ற ஓர் உடன் பாட்டை ஏற்றுக்கொள்வதைவிட நேரடி நடவடிக்கை (பேச்சுவார்த்தைகள், அழுத்தம், சூழ்ச்சித்திறன், அச்சுறுத் தல்கள் ஆதியன) மூலம் தீர்வொன்றைப் போராடிப் பெறு வதைத்தான் பொதுவாக விரும்புகின்றனர் (சர்வேஸ்வர னுடன் நேர்காணல், 23 ஏப்பிரல் 2001).

### இருதரப்பினருக்கும் நம்பிக்கை இல்லாமை

இருதரப்பினருக்கும் நம்பிக்கையின்மையே தொடர்ச் சியாக நீடித்துவரும் தேசியஇன முரண்பாட்டிற்கான முக்கிய காரணமாகும். உடன்படிக்கைகளை மதிப்பதில்





மறுபக்கத்தினரும் விசுவாசமாயிருப்பரென்று இருபக்கத் தினரும் நம்பாவிட்டால் அவர்கள் பேச்சுவார்த்தைகளைக் காத்திரமானவையாகக் கருதமாட்டார்கள்.

பிரிந்து செல்லுதலும் சுதந்திரமான தமிழ் அரசொன்றை (ஈழம்) உருவாக்குதலுமென்ற தமிழீழ விடுதலைப் புலி களின் திட்டமிட்ட இலக்குக்குக் குறைவான எத்தகைய உடன்படிக்கையையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட் டார்கள் என்பதைப் பலமுறை நிரூபித்துள்ளனர் என்று இலங்கை அரசாங்கம் கருதுகின்றது. சனாதிபதி ஆர். பிரேம தாச 1988இல் பதவியேற்றபோது, எல்ரீரீஈ யுத்த நடவடிக் கைகளை நிறுத்திக்கொள்ளுமென்ற உடன்பாட்டின்பேரில் இந்திய அமைதிப்படையின் வெளியேற்றத்தை உறுதிப் படுத்தியதுடன், எல்ரீரீஈ வட-கிழக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசிய இராணுவத்தை (Tamil National Army - TNA) ஒழித்துக்கட்டுவதற்கு அதற்கு ஆயுதங்களும் நிதியும் வழங்கு வதன்மூலம் உதவியும் புரிந்தார் (தயான், 1999: 52-53). எனினும் அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் யுத்த நடவடிக்கைகள் விரைவில் மீண்டும் தொடங்கின.

இக்குறுகியகால இணைப்பு முறிந்துபோனதற்கு வழக்கம்போலவே இருதரப்புகளும் ஒன்றின்மீது மற் றொன்று பழிசுமத்தியபோதிலும் இலங்கை அரசாங்க அதிகாரிகள் தாம் திட்டமிட்டுத் தவறாக வழிநடத்தப் பட்டதாக நம்புகின்றனர். ஆனால் மிகப் பொருத்தமான தாக தமிழீழ விடுதலைப் புலிகள் நம்பமுடியாதவர்கள் என்பதோடு அவர்கள் பீதியுணர்வையும் ஏற்படுத்துபவர் கள் என்று இலங்கை அரசாங்கம் கருதியது. தமிழீழ விடுதலைப் புலிகள் கொழும்பில் படுகொலைப் படைக் குழுக்களைக் களத்தில் இறக்கக்கூடுமென்ற உண்மையான அச்ச உணர்வை அரசாங்கம் கொண்டிருந்ததில் வியப்பதற் கெதுவுமில்லை. தலைநகரில் வசிக்கின்ற 150,000 தமிழர் கள் மத்தியில் பல்வேறு எல்ரீரீஈ மையங்கள் முழுமையான பாதுகாப்புடன் செயற்படக்கூடியனவாக உள்ளனவென்று நம்பப்படுகின்றது (மேற்கூறியது: 55).

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகள், முக்கிய தமிழ்த் தலைவர்கள், சிங்களத் தலைவர்கள், அமைச்சரவையைச் சேர்ந்த அமைச்சர்கள், ஆயுதப்படைகளின் உயர் தளபதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கள், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஆகியோரின் படுகொலைகளிலும் சம்பந்தப்பட்டிருந்தனர். பிரபாகரன் தமது வழியில் குறுக்கிடுகின்ற எவரையும் துடைத்தழித்து விடுவதற்குத் தயங்காத மிக ஆபத்தான ஒரு மனிதரென்ற கருத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு இக்கொலைகள் துணைநிற்கின்றன (புறொன்றலைன், 19 திசெம்பர் 1998 - 1 சனவரி 1999: 3-16).

தமிழர் கண்ணோட்டத்தில் இலங்கையின் வரலாறானது மீறப்பட்ட வாக்குறுதிகளைக் கொண்டதொன்று. எடுத்துக்காட்டாக, மாகாண சபைகள் உருவாக்கப்படுதலையும் தேசிய மொழிகளில் ஒன்றாகத் தமிழ் அங்கீகரிக்கப்படுதலையும் கோரிய 1957 யூலையின் பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் நியதிகளை இலங்கை அரசாங்கம் மதித்துச் செயற்படுத்தியிருந்தால் இன்றைய முரண்பாட்டைத் தவிர்த்திருக்கலாம் என்று கருதலாம். வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இன மற்றும் தேர்தல் தொகுதிகளின் விகிதாச்சாரத்தை மாற்றுவதற்குத் தமிழர் தாயகத்தில் அரசாங்க ஆதரவிலான சிங்களக் குடியேற்றத்தை விட்டொழித்தல், மலைநாட்டுத் தமிழருக்கெதிரான பாகுபாடான பிரசாவுரிமைச் சட்டத்தை நீக்குதல் (சிங்கர், 7 யூலை 2000: 1 - 8) ஆகியவையும் அளப்பரியமுறையில் உதவியிருக்கக்கூடும்.

**அரசியல் மிதவாதிகளை விலக்கியொழித்தல்**

அரசியல் ரீதியாகப் பெரும் இழப்பை ஏற்படுத்துவதாக அல்லது மரணத்தை ஒத்ததாக இருக்கின்றபோது மிதவாதத்தை முன்மொழிதல் நீடித்த இன முரண்பாடு எதனையும் தீர்த்தல் கடினமானது. சிங்களவர் மத்தியில் அதிகாரத்திலுள்ள கட்சி தமிழர்களுக்கு எவ்வளவுதான் அற்பச் சலுகைகளைக் கொடுக்க முயற்சித்தாலும் எதிர்க்கட்சிகள் அத்தகைய ஒரு முயற்சியை 'எமது மக்களை விலைபேசிவிடுவதாக'க் காட்டி, அதனை உடனடியாகத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, 1987இல் மாகாண சபைச் சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, அதிகாரப்பகிர்வுக்குத் தீவிர இளம் பௌத்த குருமாரினதும் கிராமப்புறச் சிங்கள இளைஞர்களினதும் எதிர்ப்பு போர்முனைப்புள்ள 'ஜனதா





விமுக்தி பெரமுன'வின் (ஜேவிபீ) புத்தெழுச்சிக்கு வழி வகுத்தது. முன்னர் தீவிர இடதுசாரிச் சிங்களக் குழுவாயிருந்த ஜேவிபீ 'எல்லாவற்றுக்கும் மேலாகத் தாய்நாடு' என்ற வலதுசாரித் தீவிரப்போக்குடன் மறுபிறப்பெடுத்தது (ரவீந்திரதாசுடன் நேர்காணல், 10 ஒக்ரோபர் 2001). 1988 இலும் 1989இலும் 'ஜேவிபீ'யின் கிளர்ச்சி, ஒரு கொடுமையான பாதுகாப்பு நடவடிக்கையின்மூலம் அடக்கப்படும் வரை, நாட்டை அராஜகத்தின் விளிம்புக்குக் கொண்டு வந்தது.

பெரும்பாலும் எதிர்க்கட்சிகளுடன் ஒன்றுசேர்ந்து திட்டமிட்டுச் செயற்படுகின்ற பௌத்த நிறுவனங்களின் அழுத்தம் சலுகைகளை அளிக்க முன்வருகின்ற அரசாங்கத்தின் ஆற்றலுக்கு மற்றுமொரு தடையாயுள்ளது. உதாரணத்திற்கு, 1986 யூலையில் தாபிக்கப்பட்ட தாய்நாட்டின் பாதுகாப்புக்கான இயக்கம் என்றழைக்கப்படும் ஓர் அமைப்பு ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், சமயப் பிரசுரங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி மாகாண சபைச் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்தது. பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பல்வகைப்பட்ட பௌத்த பொதுநிலையினரதும் மதகுருமாரினதும் அமைப்புக்கள் என்பவை இவ்வியக்கத்தில் முக்கிய பங்குவகித்தன. அதிகாரப்பகிர்வை எதிர்க்கின்றதும் வடக்கிலும் கிழக்கிலும் ஒரு 'தாயகம்' என்ற தமிழர் கோரிக்கையை நிராகரிக்கின்றதுமான 'தாய்நாட்டின் பாதுகாப்பிற்கான இயக்கம்' பண்டைய ஆதிகாலத்திலிருந்த ஓரினத்தன்மையின் அடிப்படையில் இலங்கைத் தேசம் இறைமையும் ஒற்றையாட்சியும் கொண்ட பிரிக்கமுடியாத ஓர் ஆட்சிப்பிரதேசம் என்ற அதன் சிந்தனைக்குப் புதிய வடிவம் கொடுப்பதற்காக 'ஒரு குடை' என்ற பௌத்த சாயலைப் பயன்படுத்துகின்றது (மேற்கூறியது). விடுதலைப் புலிகள் தனது பங்கிற்கு படுகொலைகள், மரண தண்டனைகள் போன்ற நேரடி நடவடிக்கைகள் மூலம் மிதவாதக் குரல்களை அடக்கியது. முரண்பாட்டின் தொடக்கத்திலேயே போட்டிப் போராளிக் குழுக்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான உறுப்பினர்களைத் திரளாக அழித்தொழிப்பதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகள் வளைத்துப் பிடித்ததிலிருந்து இது தெளிவாகியது. தமிழீழ விடுதலைப் புலிகளால் கொலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்யப்பட்டவர்களெனப் பெரிதும் நம்பப்படும் அனேக ரில் பின்வருவோர் சிலரும் அடங்குவர்:

| | |
|---|---|
| • அ. அமிர்தலிங்கம் | பா.உ., த.ஐ.வி.மு. தலைவர் |
| • வீ. யோகேஸ்வரன் | முன்னாள் யாழ்ப்பாணப் பா.உ., த.ஐ.வி.மு. |
| • சாம் தம்பிமுத்து | பா.உ., ஈபீஆர்எல்எஃப் மட்டக்களப்பு |
| • வீ. யோகசங்கரி | யாழ்ப்பாணப் பா.உ., ஈ.பீ.ஆர்.எல்.எஃப் |
| • ஸ்ரீ சபாரத்தினம் | ரெலோ தலைவர் |
| • நீலன் திருச்செல்வம் | பா.உ., த.ஐ.வி.மு. |
| • சிவபாலன் | யாழ்ப்பாண மேயர் |
| • சரோஜினி, வை. | யாழ்ப்பாண மேயர் |
| • துரையப்பா | யாழ்ப்பாண மேயர் |
| • பத்மநாபா | செயலாளர் நாயகம், ஈ.பீ.ஆர்.எல்.எஃப் |

மூலம் :(www.lankaweb.com 5 பெப். 2000)

ரெலோ, புளொட், ஈழமக்கள் சனநாயகக் கட்சி (ஈபீடிபீ) மற்றும் ஈபீஆர்எல்எஃப்-வரதராஜப் பெருமாள் அணி போன்ற எஞ்சிப்பிழைத்த தமிழ்ப் போராளிக் குழுக் கள் இப்போது இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து எல்ரீரீஈக்கு எதிராகப் போராடுகின்ற அதேவேளையில், மிதவாதத் தமிழ் அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள் கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அவர் களின் வீடுகளில் பாதுகாப்பு ஊழியர்களினால் பலமாகப் பாதுகாக்கப்படுவதனால் மட்டும் தப்பிப்பிழைத்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிர தேசங்களில் அவர்களின் கொள்கைகளிலிருந்து வேறு படுபவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு விடுதலைப் புலிகள் முனைவதனால் பாரிய, இடைவிடாத அடிப்படை மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன.





எல்ரீரீஈயின் நன்மதிப்பை இழந்துவிட்ட அல்லது அதைவிட்டுத் தப்பியோட முயற்சிக்கின்ற அதன் போராளி கள் தூக்கிலிடப்படுவதும் எதிரிக்கு உதவுவதாகச் சந்தே கிக்கப்படும் பொதுமக்கள் கொல்லப்படுவதும் சர்வசாதா ரணமாகிவிட்டது. 1986இல் பிரபாகரனின் இரு நெருங்கிய கூட்டாளிகளுக்கெதிராக யாழ்ப்பாணத்தில் குண்டுத் தாக்குதலை நடத்தியவர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் எல்ரீரீஈ அறுபதுக்கும் அதிகமான ஈபீஆர்எல்எஃப் ஆதர வாளர்களைக் கொன்றதாகவும் தாக்குதல் முயற்சி இடம் பெற்ற வீதிக்கருகில் வசித்த சுமார் 300 பொதுமக்களைச் சித்திரவதை செய்ததாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. எல்ரீரீஈயின் யுத்த நடவடிக்கைகள் அப்பாவிக் குடிமக்களை 'மனிதக் கேடயங்களாக'ப் பயன்படுத்துவதுடன், 21 வய துக்குக் குறைந்த தமிழ் ஆண்மகன் எவரையும் யாழ்ப் பாணத்தைவிட்டு வெளியேறுவதற்கு எல்ரீரீஈயினர் அனு மதிப்பதுமில்லை. எல்ரீரீஈயின் 'வெளிச்செல்லும் வீசா' வுக்கு 10,000 ரூபாயைச் செலுத்துவதுடன் தமக்குப் பிணை யாக மற்றொரு நபரையும் வைக்கக்கூடுமாயின் 21 முதல் 40 வயதுக்கிடைப்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தை விட்டுத் தற்காலிகமாக வெளியேறலாம். ஆனால், அவர்கள் திரும்ப வரத்தவறினால் பிணை நின்றவர் புலிகளின் மறியல் பங்கர் களுக்குள் காணாமல்போய்விடுகின்றார்கள் என யாழ்ப் பாணத்து அகதி மக்கள் கூறினர்.

எல்ரீரீஈயினர் 4,000க்கும் அதிகமான தமிழ்க் கைதி களை 'நாஸி மற்றும் ஸ்டாலின் காலச் சிறைத்தொகுதிகள் பற்றித் திரைப்படங்கள் மற்றும் நூல்கள்மூலம் அறிந்து கொண்ட' முறைகளில் தடுத்துவைத்திருப்பதாக மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் களால் [UTHR(J)] வெளியிடப்பட்ட அறிக்கையொன்று தெரிவிக்கின்றது (15 யூன் 1994).

தமிழருக்கு யாழ்ப்பாணத்தில் வாழ்வது கடினமான தாயிருக்கக்கூடும். ஆனால் யாழ்ப்பாணத்தின் சுதேசிய முஸ்லிம் குடும்பங்கள் அங்கு தொடர்ந்தும் இருப்பது சாத்தியமற்றதெனக் கருதுகின்றன. செர்பிய 'இனச்சுத்தி கரிப்பை' நினைவூட்டும் வகையில் ஒரு பலவந்த வெளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யேற்றத்தில் சுமார் 75,000 முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்தி லிருந்து வெளியேற்றப்பட்டனர். எல்ரீரீஈயின் அடக்குமுறை தமிழ் அகதிகளுக்கு ஒரு பாதுகாப்பான புகலிடம் கொடுத் திருந்த இந்தியாவுக்கும் மேற்கு நாடுகளுக்கும்கூடப் பரவத் தொடங்கியது. 1990இல் அவர்கள் பாரிஸ் நகரில் ஒரு மிதவாதத் தமிழ்த் தலைவரான சபாலிங்கத்தையும் சுவிற் சர்லாந்தில் மற்றுமொரு தலைவரான ஐயாத்துரையையும் கொலைசெய்தனர். 1993இல் தமிழ் இளைஞர் கும்ப லொன்று கனடாவில் வாழ்கின்றவரும் எல்ரீரீஈயின் விருப் பத்துக்கு மாறாக இலங்கைக் கூட்டங்களில் பங்குபற்றி வந்தவருமான பிரபல தமிழ்ப் பத்திரிகையாளர் டி.பி.எஸ். ஜெயராஜைத் தாக்குவதற்கு பேஸ்போல் துடுப்புகளைப் பயன்படுத்தியது.

### இராணுவத் தீர்வில் நம்பிக்கை

இராணுவ வழிமுறைகள் ஊடாக வெற்றியைச் சாதிக்க முடியுமென்று போட்டியாளர்கள் நம்புவார்களாயின் ஒரு நீடித்த மோதலைத் தீர்ப்பது கடினம். இலங்கை அரசாங் கம் சமாதானத்தைப் பற்றிப் பேசியபோதிலும் யுத்தத்தைத் தொடர்வதனால் அது தமிழ்த் தேசிய இன முரண்பாட் டுக்கு இராணுவத் தீர்வொன்றை நாடுகின்றதென்று - அவ்வாறில்லையென ஆட்சேபிக்கப் பட்டபோதிலும் - பெரும்பாலோர் முடிவிற்கு வருவதற்கு வழிவகுக்கிறது (ரொட்பேர்க் 1997: 31 மே 2000). இராணுவம் ஜே.வி.பீ. கிளர்ச்சிக்கு எதிராக வெற்றிகண்ட புத்துணர்ச்சியோடு கிழக்கு மாகாணத்தில் ஓரளவு வெற்றியை ஈட்டியுள்ள துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கணிசமான இழப்புக்களை ஏற்படுத்தியவாறு வட மாகாணத்தின் தலைநகரான யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறியுமுள் ளது. அதுமட்டுமன்றி, இராணுவம் இப்போது இந்தியாவின் பழிவாங்கும் நடவடிக்கை, தமிழ்நாட்டின் கண்டனம் அல்லது சர்வதேச உதவி முகவரகங்களின் குறிப்பிடத்தக்க எதிர்ப்புப் பற்றிய அச்சமேதுமின்றிச் செயற்படமுடியும்.

ஆனால் இராணுவத் தீர்வொன்றைச் சாதித்தலும் அதனைத் தொடர்ந்து நீடித்து நிலைபெறச் செய்வதும் அவ்வளவு எளிதானதல்ல. இலங்கை இராணுவப் படை கள் மேம்பட்ட மனித வலுவையும் சாதனங்களையும் பயிற்சி





யையும் வளங்களையும் கொண்டிருந்தபோதிலும் 1983 முதற்கொண்டு (1983-2001) தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியாதிருந்துள்ளன. இப்போது ஏறக்குறைய 18 ஆண்டுகளாக யுத்தம் தொடர்கின்றது (ராஜனுடன் நேர்காணல், 28 மே 2001). 20,000க்கும் அதிகமானவர்கள் இராணுவத்தைவிட்டுத் தப்பியோடியுள்ளனரென்றும், 15,000 - 20,000 ஆயுதப் படையினர் கொல்லப்பட்டுள்ளன ரென்றும் அதையொத்த எண்ணிக்கையினர் காயமடைந் துள்ளனரென்றும் அண்மையில் வெளிவந்த அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

கடந்த ஏழு ஆண்டுகளில் (1992 - 1999) தமிழீழ விடு தலைப் புலிகள் மோசமான பின்னடைவுகளைச் சந்தித்த போதிலும், இராணுவம் பட்டினங்களையும் நகரங்களை யும் கைப்பற்றினாலும் கூட, 'காட்டினுள் கரைந்துவிடு வதற்கான' அக்குழுவின் ஆற்றல் அதன் உய்வுக்கு இட மளிக்குமென்று அதன் தலைமைத்துவம் நம்பியதாகத் தோன்றியது. இத்தந்திரோபாயம் விடுதலைப் புலிகளின் இழப்புக்களைக் குறைக்கின்ற அதேவேளையில் இராணு வத்தின்மீது மிகப்பெரிய தாக்குதலை மேற்கொண்டு அதற்கு அழிவை ஏற்படுத்துவதற்கும் இடமளிக்கின்றது. எடுத்துக் காட்டாக, அரசாங்கத்தின் கூற்றுப்படி, கிழக்கு மாகாணத் தில் கணிசமான பிரதேசங்கள் விடுதலைப் புலிகளிடமிருந்து 'விடுவிக்கப்பட்டுள்ளன'. ஆனால் விடுதலைப் புலிகள் காட்டில் அதன் தளங்களிலிருந்து வெளிப்பட்டு ஒருசில மணித்தியாலங்களினுள் அப்பிரதேசங்களைத் தாக்கக் கூடிய சூழ்நிலை இருந்தது. எனவே அரசாங்கத்தின் கூற்று வெறும் கட்டுக்கதையேயன்றி வேறில்லை (தமிழ் ரைம்ஸ், 15 சனவரி 2000).

எனினும் விடுதலைப் புலிகளும் மனித ஆற்றல் மற்றும் கட்டுப்பாட்டுணர்வுப் பிரச்சினைகளை அனுபவிக்கக்கூடும். விடுதலைப் புலிகள் இலங்கை ஆயுதப் படைகளுடனான மோதல்களைத் தவிர்ப்பதற்காகத் தமிழ்நாட்டுக்கு உடனடி யாகத் தப்பியோடக்கூடிய சூழ்நிலை இருந்தபோது பேரழி வான உயிரிழப்புக்களை அக்குழு தவிர்க்கக்கூடுமாயிருந்தது. ஆனால் தமிழ்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டதுடன் இந்தியக் கடற்படையால் கடலில் இடைமறிக்கப்பட்டதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யும் தொடர்ந்து விடுதலைப் புலிகள் வன்னிக் காட்டில் (யாழ்ப்பாணத்துக்குத் தெற்காக) தளங்களை நிலைநிறுத்திக்கொண்டனர். 1987இன் பிற்பகுதியிலிருந்து எல்ரீரீஈயினர் 10 - 12 வயதுள்ள சிறு ஆண் பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் பலவந்தமாக அதன் படையணியில் சேர்த்துள்ளனர் என்பதைத் தக்க சான்றுகளுடன் ஒரு அறிக்கை குற்றம் சுமத்துகின்றது.

யுத்தம் பற்றிய இலங்கையின் பேச்சில் 'இராணுவத் தீர்வு' என்பது இப்போது அதிக அளவில் பயன்படுத்தப்படும் ஒரு சொற்றொடராகிவிட்டது. அது விடுதலைப் புலிகளை நிபந்தனையின்றிச் சரணடையச் செய்வதற்காக அவர்களை இராணுவ ரீதியாக முழுமையாகத் தோற்கடிப்பதென்ற அரசாங்கத்தின் துல்லியமான, திட்டவட்டமான எண்ணக்கருவை வெளிப்படுத்துகின்ற ஓர் அலங்கார வழக்கு. நிபந்தனையற்ற சரணடைவென்பது இலங்கை ஆயுதப் படைகளிடம் விடுதலைப் புலிகளின் படைகள் முழுமையாகச் சரணடைதலையும் அவற்றின் ஆயுதங்கள், சாதனங்கள் அனைத்தையும் இலங்கை ஆயுதப்படைகளிடம் ஒப்படைத்தலையும் தவிர்க்க முடியாததாக்கும் (சந்திரிகா, 19 டிசெம்பர் 1998). அரசின் இந்த எண்ணக்கரு நிறைவேறும் பட்சத்தில் இலங்கைத் தீவு முழுமைக்கும் ஒரே அரசென்பதை நிலைநாட்டுவதற்குத் தேவையான ஆயுதப்படைகளின் ஏகபோக அதிகாரத்தை முழுத் தீவிலும் இலங்கை அரசு மீண்டும் நிலைநாட்டும்.

சிங்கள யுத்த முயற்சிக்குத் தலைமைதாங்கிவந்துள்ள நான்கு சனாதிபதிகளும் - ஜயவர்தன, பிரேமதாச, விஜேதுங்க மற்றும் சந்திரிகா - யுத்தத்தில் வெல்லமுடியுமென்று வெளிப்படையாகவும் திரும்பத்திரும்பவும் எவ்வித வரம்புமின்றிச் சிங்கள மக்களுக்கு உறுதியளித்து வந்துள்ளனர். சந்திரிகா பூரண வெற்றிக்கு '1977 முடிவதற்கிடையில்' போன்ற இலக்குத் தேதிகள் குறிப்பிடுவதை நிறுத்திவிட்டபோதிலும் இன்றில்லாவிட்டாலும் குறைந்தபட்சம் பல சூழ்நிலை மாற்றங்களின் முடிவில் இறுதியானதும் முழுமையானதுமான வெற்றி நிச்சயமென்று இடைவிடாது வலியுறுத்தி வருகின்றார் (மேற்கூறியது).





மிக முக்கியமான இவ்விடயத்தில் சனாதிபதிகளின் நிலைமாறாமையின் விளைவாக சிங்களச் சமுதாயத்தின் தேசப்பற்றும், சிங்கள பௌத்த அதிதீவிரவாத எண்ணமும் கொண்ட சக்திகள் பூரணமான இராணுவ வெற்றியைச் சாதித்தலே சமாதானத்துக்கு ஏற்ற சூழலை உருவாக்கும் என்று உறுதியாக நம்புகின்றனர். எனவே 'மகா சங்கத்தை' (பௌத்த தலைமைப்பீடம்) சேர்ந்த அனேக பிக்குகள் இராணுவரீதியாக வெற்றிகாணும்படி அரசாங்கத்தையும் இராணுவத் தலைவர்களையும் வற்புறுத்துகின்றனர். தேசிய அரசியல்வாதிகள் - ஜே.வி.பீ., சிஹல உருமய, பயங்கரவாதத்துக்கெதிரான தேசிய இயக்கம் - எல்லோரும் அதே விடயத்தை - 'அங்கு சென்று வெற்றிகாணும்படி' - ஒரே குரலிலும் குற்றம்காணமுடியாத தருக்கப்படியும் வற்புறுத்துகின்றனர் (சத்தியம், 6 சனவரி 1999: 1-6). யுத்தத்தில் வெற்றிகண்டவுடன் பேச்சுவார்த்தைக்குத் தமிழ்ப் போராளிகள் எவரும் (இப்போது எல்ரீரீஈ) இருக்கமாட்டார்கள் - சிங்களத் தலைமைத்துவத்தின் விருப்பமும் இதுவாகவே உள்ளது.

முழுத்தீவும் தனியோர் அரசென்பது பேணிப் பாதுகாக்கப்படவேண்டுமாயின் (அல்லது இப்போது அவ்வாறில்லாவிட்டால் அதனை மீண்டும் ஏற்படுத்துவதற்கு) எல்ரீரீஈ ஓர் இராணுவ அமைப்பாக இருத்தலை வேரோடும் வேரடி மண்ணோடும் பிடுங்கி எறியப்படவேண்டும். இரு இராணுவங்கள் போரிட்டுக்கொண்டிருக்கின்ற தனியோர் அரசு இருக்க முடியாது. ஒரே ஆட்சிப் பிரதேசத்தினுள் போரிடுகின்ற இரண்டு இராணுவங்கள் இருத்தலானது யுத்த நிலையைத்தான் குறிப்பிடுகின்றது என்று அவர்கள் மேலும் சொல்கின்றார்கள் - அவர்களைப் பொறுத்தவரை அது சரியானதே.

முதலாவது கேள்வி - விரும்புகின்ற இம்முடிவு சாத்தியமானதா? சிலருக்கு இக்கேள்வியைக் கேட்பதே ஒரு தேசத்துரோகக் குற்றமாகும் - ஆமென்ற பதில் நம்பிக்கை மீதான விசுவாசத்தினதும் ஆதாரத்தினதும் அடிப்படையில் எழுந்த ஊகமாகத் திகழ்கின்றது. அத்தகைய ஒரு கேள்வியைக் கேட்பதே எதிரிக்கு உதவியும் ஆறுதலும் அளிக்கக்கூடியதாக அவர்கள் கருதுகின்றனர். அரசின் வளங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசு கட்டுப்படுத்துவதனாலும் தமிழ்ப் போராளிகளுக்கு அவற்றின்மீது கட்டுப்பாடு இல்லையென்பதனாலும், தீவிலுள்ள ஏனைய எல்லா இனங்களையும் சேர்த்தாலும் கூடச் சிங்களவர் எண்ணிக்கையில் மிகக் கூடியவர்களென்பதனாலும், அரசுக்கு நியாயமான நவீன தளபாடங்களைக் கொண்ட தரைப்படை, கடற்படை மற்றும் வான்படை இருப்பதனாலும், அரச படைகளின் பலத்துடன் விடுதலைப் புலிகளின் படைகளை ஒப்பிடுகையில் 10:1 என்ற அனுகூலத்தைக் கொண்டிருப்பதனாலும் இறுதியில் இலங்கை அரசு வெல்லவேண்டுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லையென்பது அனைவரிடமும் காணப்படுகின்ற ஓர் ஊகமாயுள்ளது. மேலே குறிப்பிட்ட காரணங்களின்படி பல தசாப்தங்கள் எடுத்தாலும்கூட, இறுதிவிளைவு அரசுக்குச் சாதகமானதாக இருக்கவேண்டும்.

சிங்கள மக்களும் அவர்களின் எல்லா அரசியற் கட்சித் தலைவர்களும் விதிவிலக்கின்றி இந்நம்பிக்கையில் உறுதியாக உள்ளனர். இக்கருத்தொற்றுமைக்கு இசைவாக அவர்கள் ஈடுபட்டுள்ள யுத்தத்தின் மிகக்குறிப்பான தன்மை பற்றிய புரிந்துணர்வின்மையும் எங்கும் காணப்படுகின்றது. இலங்கையில் நடைபெறுவது அரசின் மரபுரீதியான படைகளுக்கும் கெரில்லா எதிரிக்கும் இடையிலான ஒரு வெறும் யுத்தமல்ல - அது கெரில்லாக்களின் தாயகத் தளத்தில் புரியப்படும் தனிநாடொன்றுக்கான ஒரு தேசியவாதக் கெரில்லா யுத்தம். இது மரபுரீதியான படைகளுக்கும் கெரில்லாப் படைகளுக்கும் இடையிலான மிகக் குறிப்பான ஒருவகை யுத்தம். அது வேறு சில அரங்குகளிலும் நடைபெற்றுள்ளது.[1] விதிவிலக்கின்றி அவ்வரங்குகள் எல்லாவற்றிலும் அரசு கெரில்லாக்களுக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளிலும் அனுகூலங்களைக் கொண்டிருந்ததுடன் 'கெரில்லாக்களை நிபந்தனையற்ற சரணடைவுக்கு விரட்டுவதினூடாக அவர்களை முழுமையாகத் தோற்கடித்தல்' என்ற அடிப்படையில் அனைத்து அரசுகளின் குறிக்கோளும் ஒன்றாகவே இருந்துள்ளன.

அத்தகைய மோதல் இடம்பெற்றுள்ள எந்தவோர் அரங்கிலும் அரசு அதன் குறிக்கோளைச் சாதிப்பதில் வெற்றி காணவில்லை. அத்தகைய யுத்தங்கள் நடத்தப்பட்ட இடங்களிலெல்லாம் கெரில்லாக்கள் உரிமைகோரிய ஆட்சிப் பிரதேசம் முழுவதையும் அல்லது அதன் கணிசமான பகுதியைக் கொண்டதான சுதந்திரமான அரசென்ற கெரில்லாக்களின் குறிக்கோளை அவர்கள் உறுதிப்படுத்துவதன் மூலம் அவை முடிவுக்கு வந்துள்ளன. அவ்வாறு அத்தகைய யுத்தங்கள் முடிவுக்குக் கொண்டுவரப்படாத இடங்களில் மோதல்கள் இப்போதும் தொடர்கின்றன - அவற்றில் மிகவும் பழைமையானது (மியன்மார், முன்னர் பர்மா) இப்போது ஐந்தாவது தசாப்தத்தை எட்டியுள்ளது. தொழில் அபிவிருத்தியில் முதன்மையான இடத்தைப் பிடித்துள்ள நாடுகளால் கூட இப்பொதுவான பாங்கைத் தவிர்க்க முடியவில்லை (எ.கா. ஐக்கிய ராச்சியம் மற்றும் ரஷ்யா).

**பிரச்சினையின் சாரம்**

நிறுவனப்படுத்தப்பட்ட கட்டமைப்பு தமிழ் மற்றும் சிங்களப் பிரதேசங்கள் இரண்டிலும் நடைமுறைப் படுத்தப்படுவதற்கான சட்டபூர்வமான அந்தஸ்தைப் பெற வேண்டுமாயின், பிராந்தியத்தின் நலன்கள் குறித்த விடயங்கள் மீது முடிவெடுக்கக்கூடிய வகையில் மாகாணங்களுக்கு அதிக அதிகாரங்கள் பகிரப்படக்கூடியதாக மத்தியின் அதிகாரங்களும் சட்டபூர்வ எல்லைகளும் தெளிவாக வரையறுக்கப்பட்டு விளக்கவேண்டியது அவசியமாகும். மத்திய அரசு தேசியக் கொள்கைகளை வகுத்து அதன் அடிப்படையில் செயல்படுமாறு பிராந்திய அரசை அறிவுறுத்துவதோடு நிறுத்திக்கொண்டு ஏனைய குறிப்பிட்ட விடயங்களையும் செயற்பாடுகளையும் மாகாண (பிராந்திய-பிரதேச) மட்டத்திற்கு விட்டுவிடவேண்டும். இது நிருவாகச் சீர்திருத்தம் பற்றிய வணசிங்க குழுவால் பரிந்துரைக்கப்பட்டவாறு மத்திய அரசியல் மற்றும் அதிகாரவர்க்கத்தின் முகவரகங்களின் அளவைக் குறைப்பதுடன் மாகாண அரசின் செயல்திறனையும் அதிகரிக்கும் (இலங்கை நிருவாகச் சீர்திருத்தக் குழு 1987: அறிக்கை இல. 6).

குறைந்தபட்சம் பெரிய நீர்ப்பாசன, காணிக் குடியேற்றத் திட்டங்கள், சட்டம், பொலிஸ், திட்டமிடல், கமத்தொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி ஆகிய அதிகாரங்கள் தொடர்பாக மாகாண நலன்களுக்குச் சாதகமாக கருத்துத் தெரிவிக்க பரந்த மனதுடன் அனுமதிக்க வேண்டிய







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேவை உள்ளது. மத்திய அரசால் மாகாண வருவாய்க்காக ஒதுக்கப்படும் நிதியானது அந்தப் பிராந்தியத்தின் உற்பத்தி யின் வளர்ச்சி வீதத்தை அடிப்படையாகக் கொண்டது. அபிவிருத்தியின் விளைவு உற்பத்தியில் தங்கியிருப்பதால் மாகாண அரசே அவைகளுக்கு அனுசரணையாளராக இருப்பதற்குப் பொருளாதார வளங்கள் மற்றும் அதி காரங்கள் தொடர்பாகவும் பரந்த மனதுடனான விளக்கம் தேவைப்படுகிறது. ஏனெனில் அதன் மூலம்தான் மாகாண அரசுகள் மேலும் முன்னோக்கி நகர முடியும். (சூரிய குமாரன் *1991:* CRMD தொடர் இல. *2*).

எனினும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்புப் பற்றிய வினாவே இதுவரை தீர்வை எதிர்த்து நிற்பதும் மேற்கூறிய பல்வேறு விடயங்களைச் சுற்றிச் சுழல்கின்றதுமான பிரச்சினையின் மையமாகும். இது 1983 இன் பின்னர் இடம்பெற்ற அனைத்துப் பேச்சுவார்த்தை களிலிருந்தும் அனைத்துத் தமிழ்க் குழுக்களின் நிலைப் பாட்டிலிருந்தும் தெளிவாகப் புலப்படுவதைப் போன்று வடக்கு-கிழக்கு இணைப்பு என்பது பேச்சுவார்த்தைக்கு அப்பாற்பட்ட அடிப்படை விடயமாகும் (பிரேமச்சந்திர னுடன் நேர்காணல், 6 யூன் 2001). இருப்பினும், 1980களிலும் 1990களிலும் பலகட்டப் பேச்சுவார்த்தைகள் நடந்தேறிய போதிலும் சிங்கள உயர் குடியினரும் பொதுமக்களில் சில பிரிவினரும் இணைப்பை விடாப்பிடியாக எதிர்க்கின்றனர். முன்வைக்கப்பட்ட பல்வேறு ஆலோசனைகளையும் ஆராய்தல் இவ்வத்தியாயத்தின் நோக்கெல்லைக்கு அப் பாற்பட்டதெனினும், பல்வேறு கட்சிகளினதும் பகிரங்க நிலைப்பாடுகள் பற்றிய ஒரு பரிசீலனை, சர்வகட்சி மாநாட் டிலும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலும் பிரதிநிதித் துவப்படுத்திய பிரதான சிங்களக் கட்சிகள் மத்தியிலும் மிதவாதத் தமிழ் அரசியற் குழுக்கள் மத்தியிலும்கூட ஒரு மித்த கருத்துச் செறிவு இப்போதும் இல்லையென்பதைக் காட்டுகின்றது. இப்போக்கு ஒருபுறத்தில் இணங்கிப்போக மறுக்கின்ற விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஓர் உடன்படிக்கையை எட்டுவதிலும் மறுபுறத்தில் மிகத் தீவிரமான தேசியவாதச் சிங்களவரின் கருத்துக்களை மாற்று வதற்கு அவர்களுக்கு அறிவூட்டுவதிலுள்ள நடைமுறைச் சிக்கலுக்கும் மேலானதொன்று.





தற்போதுள்ள மாகாண சபை முறைமையின் குறை பாடுகளும், சிங்கள தலைமைத்துவத்தில் உள்ள அரசியல் பலவீனமும் ஒரு சிறுபான்மை தேசிய இனம் ஏற்றுக் கொள்ளக்கூடிய நடைமுறைச் சாத்தியமான அரசியல் தீர் வொன்றை உருவாக்குவதற்குத் தடைக்கற்களாய் உள்ளன. இவை எதிர்விளைவுகளை உருவாக்கி அதிக உத்தரவாத முள்ள பன்முகப்படுத்திய அதிகாரப் பகிர்வுக் கட்டமைப் புக்கு மாறவேண்டியதன் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளன. செல்வாக்குள்ள இலங்கைத் தமிழர்களும் இந்தியர்களும் ஒரு சமஷ்டி முறைமைக்குச் சாதகமாகத் தமது கருத்தை அதிகரித்த அளவில் வெளிப்படுத்தி வருகின்றனர் (ஜா, 2 பெப்ருவரி 1992). எனினும் சமஷ்டி முறைமைக்கான மாற்ற மெதுவும் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான் மையின் ஆதரவைப் பெறவேண்டுமென்பதுடன், மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பொன்றிலும் அங்கீகரிக்கப்படவேண்டும். இத்திசையில் ஒரு சாதகமான வாக்கெடுப்பிற்குக் குறைந்த பட்சம் இரு பிரதான கட்சிகளும் இப்பிரச்சினையில் ஒத்த கருத்துடன் ஆதரவளிக்கவேண்டும். இரு கட்சிகளுக்கு மிடையில் தொடர்கின்ற சில்லறைச் சண்டைகளினதும் சிடுசிடுப்புகளினதும் பின்னணியில் அதனை எதிர்பார்ப்பது கடினமானதே. எனவே தற்போதைய சூழலில் மாகாண சபைத் திட்டம் நிரந்தரமாகிவிட்டதாகத் தோன்றுகிறது. ஆனால் தற்போது அமைக்கப்பட்டுள்ள அத்திட்டம் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கானதொரு தீர்வை வழங்கவில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிகாரப் பகிர்வுக்கான அலகென்ற சிக்கலான விடயத்துக்கு 1994-95 தீர்வுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த தீர்வு தமிழ்த் தேசியக் கட்சிகளின் உறுதியான நிலைப்பாட்டை நிராக ரிப்பதற்கு ஒப்பானது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் கள் தற்போது நிருவாக ரீதியாக இணைக்கப்பட்டுள்ள வாறு ஒரு தமிழ்மொழி ரீதியான அலகாக நிரந்தரமான அடிப்படையில் இணைக்கப்படவேண்டுமென்பது போராளி களினதும் பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்க் கட்சிகளின தும் மாறாத கோரிக்கையாக இருந்துவந்துள்ளது. பொது ஜன முன்னணி அரசாங்கம் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களுக்கான ஓர் அரசியல் அலகைத் தாபிப்பதற்கும் கிழக்கு மாகாணத்திலிருந்து சிங்களச் சிறுபான்மை அம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாறை மாவட்டத்தையும் அதே கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து சேருவில தேர்தல் தொகுதியையும் துண்டித்துவிடுவதற்குமான ஏற்பாட்டை தீர்வுத்திட்ட முன்மொழிவில் செய்தது. வட-கிழக்கு இணைப்பு என்பது பேச்சுவார்த்தைக்கு அப்பாற்பட்ட விடயம் என்ற அவர்களின் நீண்டகால நிலைப்பாட்டைத் தமிழீழ விடுதலைப் புலிகள் உட்படத் தமிழ்ப் போராளிகளும் தமிழ் அரசியல் கட்சிகளும் கைவிடுவரென்பது வெறும் கனவாகவே இருக்கமுடியும்.

### ஒற்றையாட்சி அரசியலமைப்பு

வடக்கு-கிழக்கு இணைப்பு விடயத்துடன் பின்னிப் பிணைந்ததுதான் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்கின்ற மேலும் சிக்கலான ஒரு பிரச்சினை. வடக்கு-கிழக்கிற்குக் கூடிய சுயாட்சியை வழங்கக்கூடியதாகக் குறைந்தபட்சம் அரைச் சமஷ்டி முறையையாவது அடைவது என்பது தமிழரின் குறிக்கோளாயுள்ள அதேவேளையில் மத்திய அரசாங்கம் தமிழ்ப் பிரதேசங்களைத் தனது உறுதியான கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று சிங்களவர் விரும்புகின்றனர். இவ்விடயத்தில் இலங்கை அரசியலமைப்பின் மையப்படுத்துகின்ற அம்சங்களும் மையப்படுத்துவதில் அரசின் தீவரமான போக்குகளும் இத்தீவில் அதிகாரப் பகிர்வுப் பிரச்சினையின் சிக்கல்களை மேலும் அதிகரிக்கின்றன (ஃபட்னிஸ் 1990: 238-50).

1987இன் மாகாண சபைகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மாகாண சபையின் நிருவாகக் கட்டமைப்பு, சனாதிபதியால் நியமிக்கப்படும் ஓர் ஆளுநர், தெரிவுசெய்யப்பட்ட சபை உறுப்பினர்கள், சபையிலிருந்து ஒரு முதலமைச்சர் மற்றும் (ஐந்து உறுப்பினர்களுக்கு மேற்படாத) அமைச்சர்களின் சபை ஆகியோரைக் கொண்டுள்ளது. 1987 உடன்படிக்கைக்கான 13ஆவது திருத்தத்தின்கீழ் மத்தியினதும் மாகாணங்களினதும் அதிகாரங்களும் கடமைகளும் மூன்று பட்டியல்களின்கீழ் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. மாகாண சபை நிரல் ஏறக்குறைய 37 விடயங்களில் மாகாணங்களின் பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் குறித்துரைக்கின்றது. ஒதுக்கப்பட்ட (மத்திய அரசுக்கான பட்டியல்) பட்டியல் கிட்டத்தட்ட 16 இனங்களில் மத்தியின் மேலதிகாரத்தை விவரித்தது. பொதுப்பட்டியல் மாகாணங்களும் மத்தியும் சுமார் 36 குறித்துரைக்கப்பட்ட விடயங்களில் மத்தியின் மேலதிகாரத்துக்குட்பட்டுச் சட்டங்களை ஆக்குவதற்கு அவையிரண்டுக்கும் அதிகாரமளித்தது (அபேசிங்க 1989). பதின்மூன்றாவது திருத்தம் அரசியலமைப்பை அரை சமஷ்டியைக் கொண்டதாக மாற்றியுள்ளதென்றும் தற்போதுள்ள அரசியலமைப்பு ஏற்பாடுகள் இந்தியாவிலுள்ள சமஷ்டி முறைமையிலிருந்து வேறுபட்டதல்ல என்றும் சிங்கள விமர்சகர்கள் சிலர் கருதுகின்றபோதிலும் (கே.எம். டி சில்வா 1991) அது உண்மையல்ல.





மத்திய அரசு மையப்படுத்துகின்ற அதன் அதிகாரங்களை விடாது வைத்துள்ளதென்பதையும் மாகாணங்களுக்கு மட்டுப்படுத்திய வகையில் அதிகாரங்களைப் பகிர்ந்துள்ளதென்பதையும் 13ஆவது திருத்தத்தின் மீதான கவனமான நுண்ணாய்வு வெளிப்படுத்துகின்றது. மத்திய அரசு பொதுப்பட்டியல் மற்றும் ஒதுக்கப்பட்ட பட்டியல் ஆகியவை தொடர்பில் மட்டுமன்றி அனைத்து விடயங்களையும் கடமைகளையும் உள்ளடக்கிய தேசியக் கொள்கையை வகுத்தலிலும் மேலாண்மை அதிகாரங்களை அனுபவிக்கின்றது. மாகாண சபைகள் நிதி ஆதாரங்களுக்கு, மத்தியில் தங்கியிருக்க வேண்டியுள்ளமை இலங்கையின் 13ஆவது திருத்தத்தின்கீழான அதிகாரப்பகிர்வில் உள்ள குறைபாட்டிற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டாகும். வரிவிதிப்புத் தொடர்பான பெரும்பாலான அதிகாரங்கள் மத்தியில் தொடர்ந்துமுள்ளன. அதனால் மாகாணங்கள் தங்களது சொந்த வருவாய் ஆதாரங்களை உருவாக்கும் ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய வருவாயின் சின்னஞ்சிறிய (5 சதவீதம்) ஒரு பின்னம்தான் ஒருமாகாணத்தின் மொத்த வருவாயாகும் (சூரியகுமாரன், 1 ஏப்பிரல் 1991: CRDM தொடர் இல. 1).

13ஆவது திருத்தம் இதுவரை வழங்கியதற்கு அப்பாற் செல்கின்றதாக, செயல்விளைவில் அரைச் சமஷ்டிக் கட்டமைப்பென்று கருதக்கூடியதாக மத்தியிலிருந்து மாகாணங்களுக்கு அதிக அதிகாரப்பகிர்வு உள்ளதாக இருக்க வேண்டுமென்று தமிழர் கோருகின்றனர். தற்போதுள்ள ஒற்றையாட்சி அரசியலமைப்பு இவற்றைக் கட்டுப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படுத்துவதில் தெளிவாக உள்ளது. சமஷ்டி என்பது இப்போதும் சிங்களவரால் ஏற்றுக்கொள்ளப்படமுடியாத ஒரு பதமாகவே இருக்கிறது. அவர்கள் சமஷ்டிச் சுயாட்சியை, ஈழத்தை உருவாக்குதலை நோக்கிய முன்னெடுப்பின் முதல் அடியாகவே காண்கின்றனர். குறைந்தபட்சம் அரைச் சமஷ்டி அமைப்புக்குக்கூட அவர்களின் எதிர்ப்பு உயர்வாக இருக்கும்வரை அதிகாரப்பகிர்வு விடயத்தில் தேக்கநிலை தவிர்க்கமுடியாதது. இதுவே இலங்கையின் சமாதானத்துக்கு ஒரு தடையாக இருக்கிறது.

## இன முரண்பாட்டுத் தீர்வின் நெருக்கடி நிலை

இலங்கையின் வடக்கிற்கும் கிழக்கிற்கும் வெளியேயுள்ள அப்பாவித் தமிழர்களுக்கெதிரான திட்டமிட்ட கொடூரமான இனப்படுகொலையைத் தூண்டிவிடுவதற்கும் நாட்டை நீடித்த இன யுத்தப் பாதையில் திருப்பிவிடுவதற்கும் காரணமாயிருந்த, 13 படைவீரர்கள் மீதான பதுங்கித் தாக்குதல் இடம்பெற்றுப் பதினெட்டு ஆண்டுகளுக்கு மேல் (1983 - 2001) கடந்துவிட்டது. கடந்த பதினெட்டு ஆண்டுகளாக யுத்தமானது வெற்றியின் விளிம்பைக்கூட எட்டிப்பார்க்கவில்லை என்பதுடன் சமாதானமும் எப்போதும்போல் எட்டப்பட முடியாததாக நழுவிக்கொண்டே இருந்தது. இப்போதும்கூட 'சமாதானத்துக்கான யுத்தத்தில்' மற்றுமொரு கட்டமாக இன்னுமொரு தாக்குதல் மும்முரமாக நடத்தப்பட்டது.

முரண்பாட்டுக்கான தீர்வு நீண்டது, கடினமானது, அத்துடன் மழுங்கலானது. தீர்வை இனங் காண்பதென்பது ஒரு விடயம், அதனை எவ்வாறு எய்தலாமென்பதை இனங் காண்பது வேறொரு விடயம். தேசிய இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் இலங்கையில் முரண்பாட்டுத் தீர்வின் இரு அம்சங்கள் போதிய அளவில் உணரப்படவில்லையென்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். முதலாவது, முரண்பாடானது ஒரு தேசிய இன முரண்பாடாகும். இரண்டாவது, கடந்த 18 ஆண்டுகளின் அனுபவத்திலிருந்து தேசியஇன முரண்பாடு ஒரு சிறிய பிரச்சினையல்லவென்று இனங்காண்பதுமாகும். இதனை முரண்பாட்டுத் தீர்வின் இரண்டக (ஊசலாட்ட) நிலையென்று கூறலாம் - தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ளப்படக் கூடிய





சமாதானம் எத்தகையது என்பதும் அவர்களைத் தவிர்த்துச் செய்துகொள்ளப்படக்கூடிய சமாதானம் எத்தகையது என்பதுமாகும். இவ்விரு அம்சங்களையும் தெளிவாகக் கண்டுணர்தல் சமாதானத்துக்கான பாதையைப் பெருமளவுக்குத் தெளிவுபடுத்தும்.

இதுவொரு தேசிய இன முரண்பாடென்று திரும்பவும் வலியுறுத்துவது இங்கு அவசியமானது. ஏனெனில், இன்றுள்ள சந்திரிகா அரசாங்கம் கடந்த காலத்தில் ஒப்புக்கொண்டபடி இன முரண்பாட்டின் பரிமாணம் அதன் அதிகாரப்பகிர்வு முன்மொழிவுகளில் புதைக்கப்பட்டுவிட்டதென்ற ஒரு நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது. பெரும்பான்மை சிறுபான்மையினர்களுக்கிடையிலான அதிகாரப் பகிர்வை எப்படி மேற்கொள்வதென்பதும் தேசத்தையும் அரசையும் எப்படிக் கட்டி எழுப்புவது என்பதுமே இன்று இலங்கைத் தேசத்திலுள்ள முக்கிய பிரச்சினை. இவை அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை எப்படிக் கையாளப்போகிறார்கள் என்பதிலேயே தங்கியுள்ளது.

இம்முன்மொழிவுகள் இப்போதும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றிடம் சிக்கியுள்ளனவென்பதும் அவை பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையாலும் மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பொன்றின் மூலம் மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமென்பதும் இங்கு முக்கியமானதல்ல. இந்த அரசியலமைப்புச் சீர்திருத்தச் செயல்முறை முழுவதும் அனேக 'ஒருவேளை'களும் 'ஆனால்'களும் கொண்டதாக இருத்தலும் அதனைக் கண்டுணர்ந்த சனாதிபதி தீர்வுத்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு 1997இன் தொடக்கத்தில் ஓர் 'அரசியலமைப்புப் புரட்சி' பற்றிப் பேசியதும்கூட இங்கு முக்கியமானதல்ல. வேறு வகையில் கூறுவதாயின், தீர்வுத்திட்டம் (அதிகாரப்பகிர்வுப் பொதி) பிரபாகரனின் பிரிவினை வாதத்தைத் தகர்த்துவிட்டது.

இலங்கை அரசாங்கம் தேசிய ஐக்கியத்தை விரும்புகிறது. அதனால் தேசிய ஐக்கியத்தைச் சாதிப்பதற்கும் ஒரே நிருவாகத்தின்கீழ் கொண்டுவரவும் முடியுமென்று காட்டவும் முனைந்தது. இந்த இடத்திலிருந்து தொடர்ந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ததுதான் முரண்பாடு பயங்கரவாதம் பற்றியதேயன்றி நியாயபூர்வமான அரசியல் அபிலாஷைகள் பற்றியதல்ல வென்ற நம்பிக்கை. 'புலிப் பயங்கரவாதி'களைத்' தோற் கடித்தவுடன் யுத்தத்தில் வெற்றிகிட்டிவிடும். இதன் மூலம் நாம் எளிதில் புரிந்துகொள்ளக்கூடியது யாதெனில், அர சாங்கம் இராணுவத்தீர்வையே அடிப்படைக்கொள்கை யாக வகுத்துள்ளது. யுத்த களத்தில் புலிகளைத் தோற் கடித்தல் அல்லது பிரபாகரனை ஒழித்துக்கட்டுதல் என்ற கருத்துடன் ஒட்டிக்கொள்ளுதலும் அரசிற்குத் தன்னுடைய எண்ணத்தை மூடிமறைப்பதற்காகவே தேவைப்படுகிறது. தெற்கிலும்கூடத்தான் பயங்கரவாதம் இருந்தது. அது இராணுவ நடவடிக்கை மூலம் எப்படி அடக்கப்பட்ட தென்பதும் பொதுவாக எல்லோருக்கும் தெரிந்ததே (அடெல், 2 பெப்ருவரி 1999: 1-4).

சிறுபான்மைத் தமிழ்ச் சமூகத்துக்கு அதிகாரத்தைப் பகிர்வதற்கான முன்மொழிவை அதன் தனிப்பட்ட சொந்த முயற்சியில் தானாகக் கொண்டுவந்த முதலாவது இலங்கை அரசாங்கம் என்றவகையில் பொதுஜன முன்னணி அரசாங் கத்தைப் பாராட்டவேண்டிய அதேவேளையில் அதிகாரப் பகிர்வுப் பொதி (தீர்வுத்திட்டம்) பயங்கரவாத எதிர்ப்பு மருந்தேயன்றி அது சர்வரோக நிவாரணியல்ல. அதன் இறுதி முடிவு எவ்வாறிருக்குமென்று அப்போது தமிழருக் குத் தெரியாதபோதும் முதலில் வெளிவந்த 1995 ஆகஸ்ட் 3ஆந் தேதிய முன்மொழிவுகளைவிட மிகவும் ஒடுங்கிய தென்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

முரண்பாட்டுத் தீர்வுக்கும் சனநாயக முறையில் தேசத் தையும் அரசையும் கட்டியெழுப்புவதற்கும் அதனை அதி களவில் பொருத்தமானதாகச் செய்யக்கூடியதாக அரசிய லமைப்புச் சீர்திருத்த முயற்சியில் உள்ளடக்கக்கூடிய வேறு அம்சங்கள் உள்ளன. ஏனெனில் அவற்றைச் சாதிப்பதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சி பலனளிக்காமல் போனா லும் எளிதுபடுத்துமென்று கருதப்படுகின்றது. மத்தியில் குவிந்துகிடக்கும் அதிகாரங்களைப் பிராந்தியங்களுக்குப் பகிர்ந்து அளிப்பதற்கு அரசியல் அமைப்பின் மூலம் உரு வாக்கப்பட்ட, விசாலமான மனதுடன் அரசியலமைப்பை மீளாய்வு செய்யக்கூடிய வகையிலும் சுதந்திரமாகச் செய





லாற்றக்கூடிய வகையிலும் ஒரு பொதுச்சேவையை உள்ள டக்கிய இரண்டாவது சபையொன்று இருத்தல்வேண்டும்.

அரசியலமைப்புச் சீர்திருத்தம் ஒருபுறமிருக்க, அரச கருமமொழியாகத் தமிழ்மொழியை இணைப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் முழு வேகத்துடன் செயற்படுத்து மாயின் தேசிய இன முரண்பாட்டுக்கான முடிவு நிச்சய மாக ஊக்குவிக்கப்படும். இலங்கையிலுள்ள தமிழ்ப் பிரசை களுக்குப் பாதுகாப்பு மற்றும் சமத்துவ உணர்வை ஏற்படுத்த இது பெருமளவுக்கு உதவும். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதன் மூலம் மட்டுமன்றி இத்தீவிலுள்ள எல்லாச் சமூகங்களினதும் பாதுகாப்பின்மைக்கும் அச்சத் திற்குமான மூலகாரணங்களை ஒழித்துக்கட்டுவதன் மூல மும் தேசிய ஐக்கியம் வளர்க்கப்படவேண்டும்.

பிரபாகரனும் எல்ரீரீஈயும் உண்மையில் பிரச்சினை யல்ல. மாறாக, அதன் அறிகுறிகள்தான். அவர்கள் தேசிய இன முரண்பாட்டின் நிலைத்த மூலங்களிலிருந்தும் திருப்தி கரமான முறையில் அவற்றில் கவனஞ்செலுத்துவதற்கு ஆட்சியிலுள்ள அரசாங்கம் விரும்பினாலும்கூட அதனால் இயலாதென்று விளக்கிக் காட்டுவதற்கான தங்களின் ஆற்றலிலிருந்தும் ஊட்டம் பெறுகின்றனர். பிரபாகரனை ஒழித்துக்கட்டுதலானது அதிகபட்சமாக யுத்தத்திலிருந்து ஒரு தற்காலிக ஓய்வை ஈட்டிக்கொடுக்கலாம். ஆனால், அதேவேளையில் கவனஞ் செலுத்தப்படாத முரண்பாட் டின் சிறுகாயங்கள் பிந்நாளில் பெரும் இரத்தக்களரியாக வெடிப்பதற்குப் புரையோடிக்கொண்டிருக்கும். மிகவும் மோசமான கட்டத்தில் பிரிவினைக் கிரீடத்தைக் கைப் பற்றுவதற்கான பேரழிவின்போது மேலும் கூடுதலாக இரத்தம் சிந்தப்படும்.

இலங்கை யுத்தம் தொடங்குவதற்கு முன்பிருந்த நிலைக்குக் கிட்டியதைவிட வேறெதற்கும் திரும்ப முடியாது என்பதுதான் உண்மை. அதுவே ஒற்றையாட்சி அரசுக்கும் சிங்களப் பேரினவாதத்துக்கும் ஆதரவளிப்பவர்கள் விரும்பு கின்ற குறிக்கோளாயிருக்கலாம். ஆனால், அது தேசிய ஐக்கியத்துக்கும் சமாதானத்துக்கும் சுபிட்சத்துக்கும் வழி வகுக்காது. கிடைக்கின்ற சான்றுகளையும் எமது சமகால வரலாற்றையும் கொண்டு பார்க்கையில் ஒற்றையாட்சி அரசு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரச்சினையின் ஓர் அங்கமில்லையாவென்றும் இராணுவ வெற்றி சாத்தியமானதாவென்றும் கேட்பது நியாயமானதே.

இது ஒருபுறத்தில் இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளினாலும் மறுபுறத்தில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மற்றொரு சுற்றுப் பேச்சுவார்த்தை பற்றிய மௌனமான எதிர்பார்ப்புகளினாலும் கட்டப்பட்டுள்ள தற்போதைய நிலைமைக்கு எம்மைக் கொண்டு வருகின்றது. முக்கிய தரப்பினர் தனக்கு அரசியல் அக்கறைகளும் புறக்கட்டுப்பாடுகளும் உள்ளனவென்பதை விளங்கிக் கொள்வதே முரண்பாட்டுத் தீர்வை முன்னோக்கி நகர்த்துவதற்கான நெம்புகோலாகும். மேலும் முன்னேற்றத்துக்கான ஒரே வழி பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்துதலாகும்.

முரண்பாட்டுத் தீர்வுக்கான அரசாங்கத்தின் உபாயத்தைக் கருதுகின்றபோது, அரசாங்கம் யுத்தத்துக்கு ஒரு முடிவு காணுதலை அதன் முன்னுரிமையாக்கியுள்ளது. ஆனால், இதற்கு இசைவான உபாயமொன்று அதனிடம் உள்ளதா என்பதுதான் புதிராக உள்ளது. எடுத்துக்காட்டாகத் தெரிவுக்குழு முயற்சி, விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளையும் தாக்குதல் நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்றதாக பிரிட்டிஷ் வெளிநாட்டு அலுவலக நேருதவிச் செயலாளர் லியாம் ஃபொக்ஸ் ஏற்பாடுசெய்த ரணில் விக்கிரமசிங்கவுடனான இருகட்சி ஒப்பந்தத்தை எடுத்துக்கொள்வோம். அது முரண்பாட்டுத் தீர்வுக்கான பல்கூட்டு உபாயமாக ஒன்றோடொன்று பொருந்துகின்றனவா? அத்தகைய நோக்கம் அவற்றுக்கிருந்ததா?

அரசாங்கம் அதிகாரப் பகிர்வுப் பொதியை (தீர்வுத் திட்டத்தை) அல்லது தெரிவுக் குழுவிலிருந்து வெளிப்படுகின்ற எதனையேனும் விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொள்ள வைப்பதற்கு அதனைத் தோற்கடித்துப் பணிய வைக்கலாம் என்று நினைத்திருந்தது. சண்டையில் தோற்கடிப்பதன் ஊடாக நம்பகமான சமாதானப் பங்காளிகளாக விடுதலைப் புலிகளின் நிலையை மாற்றமுடியுமென்பதே இதற்கு அடிப்படைக் காரணமெனத் தோன்றுகிறது. மாற்றாக அதிகாரப் பகிர்வுப் பொதியைச் செயற்படுத்துதல் புலிகளின் அரசியல் தளத்தையே ஆட்டம் காண வைத்துவிடுமென்பதால் அவர்கள் தலையெடுக்க முடியாதவாறு காத்திரமான முறையில் ஓரங்கட்டப்படமுடியும்.





இதில் அரசாங்கம் ஒரே மனதுடன் செயல்படவில்லையென எவரும் சந்தேகிக்கலாம். அரசியல் தீர்வொன்று காணப்படவேண்டுமென்றும் அதிலிருந்து எல்ரீரீஈயை விலக்குதல் சாத்தியமற்றதென்றும் அல்லது அதனைச் சாதிக்க முடியாத அளவுக்குச் செலவானது என்ற முடிவில் இருப்பவர்களும் அரசாங்கத்தினுள் இருக்கின்றனர். எல்ரீரீஈயை அழித்துவிட முடியாவிட்டாலும் பலவந்தமாக அடிபணியச்செய்ய முடியுமென்று உறுதியாக நம்புகின்ற ஏனையோரும் உள்ளனர். எனவேதான் ஃபொக்ஸ் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பேச்சுக்களுக் கெதிராகத் தாக்குதல் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. சனாதிபதி என்ன நினைக்கின்றாரென்பதும் அவர் எந்தப்பக்கம் சாய்கின்றாரென்பதும்தான் முக்கியமான கேள்வி. அவருக்கு இதுவொரு கண்கட்டி வித்தையாகக்கூட இருக்கலாம். அனேக பந்துகள் மேல்நோக்கி எறியப்பட்டுள்ளன. அவர் பிடிக்கின்ற பந்துதான் அத்தருணத்தில் அவர் செல்கின்ற பாதையாயிருக்கும்.

தமிழர்களின் தாயகமென்று எல்ரீரீஈ கோருகின்ற ஆட்சிப் பிரதேசத்தின் சுமார் 70 சதவீத இடங்களில் அரசாங்கக் கட்டுப்பாட்டை ஏற்றுக்கொண்டு ஆயுதங்களையும் ஈழக் கோரிக்கையையும் தமிழீழ விடுதலைப் புலிகள் கைவிட்டால்தான் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது சாத்தியம் என்று அரசாங்கம் வலியுறுத்துகின்றது. வட அயர்லாந்து பற்றிய மிச்செல் கமிஷன் சுட்டிக்காட்டுகின்றவாறு எதார்த்தத்தில் பேச்சுவார்த்தைகளுக்கு ஒரு நிபந்தனையாக எதிர்த்தரப்பினர் தனது துணைவலுவாகவுள்ள பிரதான கருவியை, அதாவது இராணுவப் படையைக் கைவிடவேண்டுமென எதிர்பார்த்தல் ஒரு தொடக்கத் தடையாகும் (மிச்செல், 6 யூன் 2000). விடுதலைப் புலிகளின் விடாப்பிடியான சர்வாதிகார வன்முறைதான் அதிகாரப் பகிர்வுப் பொதி மேசைக்கு வருவதற்கான திட்டவட்டமான காரணம் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

மேலும் எல்ரீரீஈயுடன் பேசி இறுதித் தீர்வொன்றுக்கு அவர்களின் கையொப்பத்தைப் பெற வேண்டியது தவிர்க்க முடியாததாயின், பிரபாகரன் அடக்கப்பட்டு, தண்டித்துத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருத்தப்பட்டு, பணியவைக்கப்பட்டிருந்தாலும் கூட பேச்சு வார்த்தை மேசையில் பயன்படுத்துவதற்கு அவரிடம் சில துருப்புச்சீட்டுகள் இருக்கத்தான் செய்யும். அரசாங்கம் மோதலை விரைவில் முடிவுக்குக் கொண்டுவந்து அபி விருத்தியும் சனநாயகமும் என்ற அலுவலைத் தொடங்கி விடவேண்டும். மோதலை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்குப் பிரபாகரனின் உடன்பாடு தேவை. அவர் ஒருவேளை அதிகாரப் பகிர்வுப் பொதியில் வழங்கப்படு வதைவிடக் கூடுதலாகக் கேட்கக்கூடும். உண்மையில் இதுதான் சமாதானத்துக்கான வழி என்றால் எல்ரீரீஈயுடன் அரசாங்கம் ஏன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது? இப் பேச்சுவார்த்தைகளிலிருந்து எட்டப்படுகின்ற தீர்வு பின்னர் பாராளுமன்றத்துக்கும் மக்களுக்கும் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ளப்படலாம்.

ஃபொக்ஸின் தூண்டுதலுக்கு முன்னரே, அரசாங்கம் எல்ரீரீஈயுடன் பேச வேண்டுமென்று எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வெளிப்படையாகக் கூறிவந்தது. இது அவர்களின் கபட நாடகம் என்று ஒருவர் கூறலாம். அதே சமயம் அவர்கள் அதிகாரப் பகிர்வுப் பொதிக்கு எதிராக ஒற்றையாட்சி அரசுக்கான அவர்களின் வாதவிளக்கத்தைப் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தினர். இப்போது ஃபொக்ஸ் இடைத்தரகராகச் செயற்பட்ட ஒப்பந்தத்தினாலும் உள் ளூராட்சித் தேர்தலில் ஓரளவு தமிழரின் ஆதரவு ஐக்கிய தேசியக் கட்சிக்குத் திரும்பவும் கிடைத்துள்ளதினாலும் நிலைமை மாறக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது (ஜயலத் ஜயவர்தனவுடன் நேர்காணல், 30 ஏப்பிரல் 2001).

எனினும் ஒரு தகுதி இருக்கின்றது. அதுதான் பேச்சு வார்த்தை மேசைக்குத் திரும்பி வருவதற்கான வாய்ப்புகள் மீது தற்போதைய தாக்குதல் நடவடிக்கையின் தாக்கம். அனைத்து முரண்பாட்டு நிலைமைகளிலும் காணப்படு வதைப் போன்று பேசுவதற்கு ஒரு 'இடைவெளி' இருக்க வேண்டும். எந்த ஒரு தரப்பும் இராணுவத் தோல்வியென்ற அழுத்தத்தின்கீழ் அவ்வாறு செய்வதாகக் கருதுமாயின் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை ஏற்க முன்வராது. எல்ரீரீஈயைப் பொறுத்தவரையில் நடைபெற்றுக் கொண் டிருக்கும் தாக்குதல் நடவடிக்கையின் காரணமாக, அவர்கள்





இழந்துவிட்ட மதிப்பென்று கருதுவதை இரகசியப் பேச்சுக் கள் சீர்செய்யக்கூடுமென்றபோதிலும் அவை தாங்கள்தான் 'தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள்' என்று பகிரங்கமாக ஒப்புக்கொள்ளப்பட வேண்டுமென்ற அவர்களின் பேரா வலை நிறைவேற்றாது.

இங்கு தேவைப்படுவது மண்டையைப் பிய்த்துக் கொண்டாவது சமாதானத்துக்கு இசைவான ஓர் உபாயத் தைக் கண்டறிதலாகும். இது முன்னுரிமைகளை அடையா ளம் காணவேண்டியதன் அவசியத்தைத் தவிர்க்கமுடியாத தாக்கும். உபாயத்தின் எந்தவோர் அம்சமும் மற்றதுடன் முரண்பட்டதாகவோ ஆபத்தை உண்டாக்குவதாகவோ இருக்கக்கூடாது அத்துடன் நிச்சயமாக ஒட்டுமொத்தக் குறிக்கோளுக்கும் முரண்பட்டதாக இருக்கக்கூடாது. தாக்குதல் நடவடிக்கை ஓர் அரசியல் தீர்வுக்கு வழிவகுக்கு மாயின் அர்த்தமுள்ளதாகவும், ஃபொக்ஸ் ஒப்பந்தம் அதனை எளிதாக்குமாயின் தடைகளைத் துளைத்துக் கொண்டு செல்கின்ற ஒரு வழியாகவும் இருக்கும். ஆனால், தாக்குதல் நடவடிக்கை அரசியல் தீர்வை நோக்கிய முன் னேற்றத்தைத் தாமதப்படுத்துவதாகவும், ஃபொக்ஸ் ஒப்பந்தம் பொதுஜன முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் ஒரு உடன்பாட்டை வலிந்து திணிக்கின்ற வகை யில் அவைகளை மேலும் இக்கட்டான நிலைக்குத் தள்ளு வதாகவும் இருந்தால், முரண்பாடு தொடர்ந்து இழுபட்டுச் செல்லும்.

பிரபாகரன் உளதானமைக்குக் காரணம் முரண்பா டென்பதனால் அவ்வாறான நிலையைக் காண அவர் ஒருவேளை விரும்பக்கூடும். பேச்சுவார்த்தை மேசையில் ஒருபிரச்சினையைப் பற்றி மட்டும் பேசப்படுகின்ற பேச்சுக் களில் அவரைச் சிக்கவைப்பது எப்போதும் சவாலாகவே யிருக்கும். அத்தகையதொரு விடயம் அரசியல் தீர்வா யிருக்கவேண்டும். இப்பேச்சுக்கள் நடைமுறைப்படுத்தலில் தங்கியிருக்கக் கூடிய விதிமுறைகளை வகுப்பதற்காக மேற் கொள்ளப்படும் முயற்சிகள் எதுவும் தோல்வியடையும் ஆபத்தைக் கொண்டுள்ளது. இயலாமையை விளக்கிக் காட்டுவதற்கு இந்த வாய்ப்பைப் புலிகள் கவ்விப்பிடித்துக் கொள்வர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிவில் நிருவாகம் மீண்டும் ஏற்படுத்தப்படுதலை எளிமையாக்குவதற்கு அரசியல் தீர்வொன்று இல்லாத விடத்து கட்டுப்பாட்டுப் பிரதேசம் பேராற்றலுள்ள ஒரு சக்தியாக மாறக்கூடுமென்பதே இப்போதுள்ள ஆபத்து. தொடர்ச்சியான இராணுவ ஆக்கிரமிப்பானது இதயங் களையும் உள்ளங்களையும் வெல்லுவதற்குப் பதிலாக மனித உரிமை மீறல்களும் கசப்பும் வன்மமும் அதிகரிப் பதற்கே வழிவகுக்கும். அது பிரிவினைவாதிகளுக்கு மட்டுமே சாதகமாக அமைவதோடு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற 'எதிர்கால நடவடிக்கைகளையும் பின்னோக்கி இழுத்துவிடும்' ஆபத்தானதாகவும் கேடு விளைவிக்கின்றதாகவும் அமைந்துவிடும். பெரும்போக்கு அரசியலினுள் புகுந்துவிட்ட முன்னாள் போராளிகளைக் கொண்ட ஓர் இடைக்காலச் சபையைத் தாபித்தல் என்பது தான் இப்போதுள்ள ஒரேயொரு வழி. தமிழர்களைத் திருப்திப்படுத்துவதற்கான ஒரேவழி ஈழம்தான் என்று முடிவின்றிக் கூறிவரும் பிரபாகரனின் கோரிக்கைக்குச் சமமான ஒருதீர்வை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திப் பெறமுடியுமென்பதை அவர்கள் நிரூபிக்கவேண் டும் (சுனந்த தேசப்பிரியவுடன் நேர்காணல், 4 மே 2001).

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒரு இடைக்காலச் சபையானது, அதனை நிரந்தரமாக்குவதற்குச் சாதகமான சூழ்நிலைகளில் நிறுவப்படக்கூடாது. ஒரு இடைக்கால நிருவாகமானது சகல வழிகளிலும் தற்போதுள்ள மாகாண சபையை அடியொற்றியதாக இருக்கும். மேலும் இந்த ஏற்பாடுகளின் குறைபாடுகள்தான் இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்குப் பிந்திய தசாப்தத்தில் முரண்பாட்டைத் தூக்கிப்பிடிப்பனவாயுள்ளன. இனமுரண்பாட்டைத் தொட ராமல் செய்வதற்கு இதைவிடச் சிறந்த மாற்றுவழி ஏதும் புலப்படவில்லை.

பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்புதல்தான் இருக் கின்ற ஒரேயொரு வழியாகத் தோன்றுகின்றது. அதற்கான தயாரிப்புகளில் கவனமாக ஈடுபட்டால் தேச ஒற்றுமைக் குச் சாத்தியமான ஒரு சட்டகம் உருவாகும். இதுகுறித்து ஆழமாகச் சிந்திப்பதற்கும் தேவைப்படின் அதற்கான உத வியை நாடுவதற்குமான தக்கதருணம் இதுதான்.





## முரண்பாட்டுக்குச் சாத்தியமான தீர்வு

இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காணுதல் என்பதே ஒரு ஆழமான கேள்வியாயுள்ளது. எனினும் தீர்வுக்கு வழிவகுத்திருக்கும் என்று நம்பப்படுகின்ற முயற்சி கள் பற்றி ஆராய்ந்து பார்க்கவேண்டும். இன்றைய வன்முறை யான முரண்பாடுகளில் பெரும்பாலானவை உள்நாட்டுப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டவை எனக் கூறலாம். எனினும் அவற்றுக்குச் சாத்தியமான தீர்வுகள் ஒன்றில் சர்வதேச அமைதிபேணும் அமைப்புக்களினூடா கவோ இன்றேல் ஆதிக்கஞ்செலுத்துகின்ற பலம்பொருந்திய வேறு அரசுகளினாலோ அல்லது அதற்குச் சர்வதேசப் பரிமாணமொன்றை அளிக்கின்றவகையில் பலநாடுகளைச் சேர்ந்த விசேட அதிரடிப்படை நடவடிக்கை மூலமாகவோ அல்லது அயல்நாடுகளின் மூலமாகவோ கொண்டுவரப் படுகின்றன.[2] முன்னர் குறிப்பிட்டவாறு பல்லினச் சமுதாய மொன்றில் நிலவுகின்ற பிரிவுகளே இன்றைய பெரும்பா லான வன்முறை சார்ந்த முரண்பாடுகளுக்குக் காரணமாகும். எனவே அத்தகைய வித்தியாசங்(பிரிவு)கள் முரண்பாடு களுக்குக் காரணமாயிருப்பின், அவற்றுக்கான தீர்வுகள் பல்வேறு இனக் குழுக்கள் அல்லது கிளைப் பிரிவினருக் கிடையில் அதிகாரத்தைப் பகிர்வதன்மூலம் காணப்பட வேண்டும். அவ்வாறே சமீப காலங்களில் சிறுபான்மைகள் மீதும் அவர்களின் உரிமைகள் மற்றும் கோரிக்கைகள் மீதும் அதிக கவனஞ்செலுத்தப்படுவதை அவதானிக்கலாம் (சோமசுந்தரம், 1999).

இன்று உலகெங்குமுள்ள பல்லின, பல்சமயச் சமுதா யங்களை நோக்குகையில் இன முரண்பாடுகளுக்கு அல்லது கிளைப் பிரிவினரின் வன்முறைசார்ந்த முரண்பாடுகளுக் குத் தீர்வு காண்பதென்பது சுலபமானசெயலல்ல. தனிப் பட்ட மற்றும் குழு வேறுபாடுகள் மறைந்து போவதற்குப் பதிலாக அபிவிருத்தி மற்றும் போட்டியின் காரணமாக இவ்வேறுபாடுகள் கூர்மையாகவும் ஆழமாகவும் வேக மாக வளர்ந்துவருகின்றன. உள்ளூர் மட்டத்தில் அதிகாரப் பகிர்வுக்கான அல்லது பிராந்திய சுயாட்சிக்கான பரஸ்பர ஏற்பாடு ஏதேனும் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் இத் தகைய முரண்பாடுகள் நீடித்திருக்காது. அத்துடன் நாட்டின் மனிதவளங்களும் ஏனைய பிற வளங்களும் வீணாகாமல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தடுக்கமுடியும். இவைகளை எய்துவதற்குக் கண்டிப்பாக மேலும் சில சூழ்நிலைகள் நிலவவேண்டும். நம்பிக்கையைக் கட்டியெழுப்புதலின் ஒரு பகுதியாக மற்றத் தரப்பினரையும் அவர்களது கோரிக்கைகளையும் பரஸ்பரம் மதிக்க வேண்டும். எதிராளி நியாயமான கோரிக்கைகளைக் கொண்ட கௌரவமானவரென்று ஒவ்வொரு தரப்பும் நோக்க வேண்டும். அல்லாவிடின் விரிவடைகின்ற அச்சங்களும் இடைவெளிகளும் பல்வேறு குழுக்களுக்கிடையில் உறவுகளை மேம்படுத்தாது (சரவணமுத்து, 14 செப்ரெம்பர் 1997).

முரண்பாடுகளைச் சமாளிப்பதற்குக் குறிப்பிடத்தக்க மற்றுமொரு நடவடிக்கை அதிகாரப்பகிர்வாகும். தனிப்பட்டவர்களுக்கும் குழுக்களுக்கும் ஓரளவு திருப்தியளிக்கின்றவகையில் அமைச்சரவை, சிவில் சேவை, இராணுவம், கட்சியில் உயர் பதவிகள் ஆகியவற்றில் சிறுபான்மைக் குழுக்களுக்குக் கண்டிப்பாக குறிப்பிட்ட ஒரு பகுதியை ஒதுக்க வேண்டியது அவசியமாகும். அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகள் மிகவும் பலவீனமானதும், தற்காலிகமானது மேயன்றி நிரந்தரமான தீர்வுகள் அல்ல. இனக் குழுக்களுக்கிடையில் அல்லது கிளைப் பிரிவினருக்கிடையில் அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளின் பயன்பாடு ஒருகுறிப்பிட்ட அளவு கவனத்தையே ஈர்க்கின்றது (சோமசுந்தரம் 1999: 1-12).

இந்தியாவின் விடயத்தில் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அனைத்து அஸாம் மாணவர் சங்கத்துடனும், சீக்கிய தலைவர் லொங்கோவால், மிஸோ தலைவர் லால்டெங்கா மற்றும் கூர்கா தலைவர் சுபாஷ் கிசிங் ஆகியோருடன் அந்தந்த மாநிலப் பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் சமாதான ஒப்பந்தங்களை ஏற்படுத்தியிருந்தார். பெல்ஜியத்தில் அமைச்சரவை இரு இனக்குழுக்களைச் சமமான அடிப்படையில் கொண்டுள்ளது. கம்போடியாவிலும் அரசாங்கம் நீடித்த சிவில் யுத்தமொன்றில் ஈடுபட்டிருந்த மூன்று பிரதான உட்பிரிவினரில் இரண்டை உள்ளடக்கியுள்ளது (தமிழ் ரைம்ஸ், 15 யூன் 1997). இவ்வேற்பாடு இக்குழுக்களுக்கு நிச்சயமாக ஒருகுறிப்பிட்ட அளவு உளவியல்ரீதியான பாதுகாப்பை வழங்குவதால் பல்வேறு போட்டிக் குழுக்களுக்கிடையிலான உறவுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.





அத்துடன் போட்டிபோடுகின்ற, முரண்படுகின்ற தரப்புக்கள் தங்களின் நிலைகளில் பாதுகாப்பாக இருப்பதற்கான போதிய ஆதரவு இருக்கும்வரை அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளால் அவர்களை இலகுவில் கவரமுடியாது. இலங்கையிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் பரந்தகன்ற வளங்கள்மீது அவர்களுக்குக் கட்டுப்பாடு இருக்கும்வரை அவர்களின் கோரிக்கைகளுக்கு ஒரு தீர்வாகச் சுயாட்சியை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. கம்போடியாவிலும் சில கெமர் ரோக் குழுக்கள் துண்டுதுண்டுகளாகக் கிடந்த நிலப்பரப்பின்மீதும் வர்த்தகத்தின்மீதும் அவர்களுக்குக் கட்டுப்பாடு இருக்கும்வரை கூட்டணி மந்திரிசபையில் அங்கத்துவத்தை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்தன. இத்தகைய ஓர் ஏற்பாட்டுக்குச் சம்பந்தப்பட்ட தரப்புகள் இணங்கினாலும்கூட அது நீண்டகாலம் நிலைத்திருக்காது.

அவ்வாறாயின் யார் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வர்? தென்னாசியாவில் ஏறத்தாழ 200 பேச்சு மொழிகள் உள்ளன; பத்து வகையான சமயங்களும் பின்பற்றப்படுகின்றன; மேலும், குறிப்பிட்டுச் சொல்லமுடியாத தனித்துவமிக்க பழங்குடிக் குழுக்களைச் சேர்ந்தவர்களும் இருக்கின்றனர். இங்கு வெவ்வேறு இன, மத, சாதி, குலமரபு மற்றும் மொழி அடையாளங்கள் எல்லாவற்றையும் திருப்திப்படுத்தக்கூடியதாக அதிகாரப் பகிர்வைத் தாபிப்பதாயின் பல இலட்சக்கணக்கான மக்களுக்குப் பல்வேறு அரச கட்டமைப்புக்களில் இடமளிக்கப்படவேண்டியிருக்கும்.

அரசின் கொள்கையில் பிராந்திய சுயாட்சியையும் கூட்டாட்சியையும் அறிமுகப்படுத்துதல் மற்றுமொரு நடவடிக்கையாகும். அது உள்ளூர் மற்றும் பிராந்திய அதிகார சபைகளுக்கு ஓரளவு சுயாட்சியையும் அதிகாரத்தையும் வழங்கும். சூடான், அங்கோலா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் முரண்பாடு தொடர்பான பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் எட்டப்பட்ட ஒப்பந்தந்தின் ஒரு பகுதியாக அதிகாரப்பரவல், பிராந்தியச் சுயாட்சி, சமஷ்டி என்பவை முயற்சிக்கப்பட்டு அவை ஓரளவு வெற்றியும் ஈட்டியுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இம்முரண்பாடுகளுக்கு ஓரளவு இணக்கமான தீர்வைக் கொண்டுவருவதற்கு மற்றொரு வழி வெளிப்புறத் தலையீட்டின் ஊடானதாகும். வெளிப்புறத் தலையீட்டுக்கான பதிலளிப்பு அரசுக்கு அரசு வேறுபடுகின்றது. தென்னாசிய அரசுகள் வெளிப்புறத் தலையீட்டைப் பெரிதும் விரும்புவதில்லை. பங்களாதேஷ், பர்மா, பூட்டான், இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகியவை சத்மா பழங்குடியினர், நேபாள வம்சாவளியினரான பூட்டான் பிரிவினைவாதிகள், இந்தியாவில் காஷ்மீரிகளும் அஸாமியரும் அல்லது பாகிஸ்தானில் சிந்தித் தேசியவாதிகள் போன்ற அவற்றின் உள்நாட்டு முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பதற்கு அந்நிய நிறுவனங்களையோ அல்லது நாடுகளையோ அனுமதிக்கவில்லை. தென்னாசிய அரசுகளுக்குள் இலங்கை மட்டும் தான் அதன் தமிழ்-சிங்களப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக சர்வதேச சமூகத்தின் மத்தியஸ்தத்திற்குப் பகுதியளவு இடமளித்துள்ளது. இரு கொரியாக்களையும் கம்போடியாவையும் தவிர, முழுத் தென்கிழக்காசியாவினதும் பதிலளிப்பு தென்னாசியாவினதைப் பெரிதும் ஒத்ததாயுள்ளது.

இன முரண்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற இன்றைய காலகட்டத்தில் ஒருநாட்டின் உள் விவகாரங்களில் சர்வதேச நிறுவனங்களும் பிற அரசுகளும் தலையிடுகின்ற வாய்ப்புக்களும் அதிகரித்துள்ளன. வெளிப்புறத் தலையீடுகள் இரு பிரதான விளைவுகளைக் கொண்டுள்ளன. முதலாவதாக, அவை இனங்களுக்கிடையிலான வலுச்சமநிலையை மாற்றியமைப்பதுடன் குழுக்களின் கோரிக்கைகளையும் மிதமாக்க வழிகோலுகின்றன. இரண்டாவது பிரதான விளைவானது, யுத்தம் புரிகின்ற தரப்புகளுக்கிடையில் குறைந்தபட்சம் ஒரு இடைக்காலத்திற்காவது புதிய இன ஒப்பந்தங்களுக்கான உத்தரவாதங்களை வழங்குவதாகும்; (லேக் மற்றும் ரொத்சைல்ட், 1996: 66-67).

மூன்றாந்தரப்பின் தலையீட்டில் அல்லது எத்தகைய வெளிப்புறத் தலையீட்டிலும் பாரதூரமான ஒரு பிரச்சினையுள்ளது. இனங்களுக்கிடையேயான யுத்தத்துக்கான முன்நிபந்தனைகளை வெளியாட்கள் புரிந்து கொள்வதும்





அவற்றின் மீது செல்வாக்கு செலுத்துவதும் பொதுவாகக் கடினமானவை அல்லது ஏறக்குறையச் சாத்தியமற்றவை. மேலும் இந்த நிலைமைக்கு அவர்களை இட்டுச்சென்ற காரணிகளான இனரீதியில் பிளவுபட்ட சமூகங்களையோ அவர்களின் ஆதங்கங்களையோ அல்லது பிணக்குகளையோ அல்லது அவர்களது கடந்தகால வரலாற்றையோ கூட மூன்றாந்தரப்பினரால் மாற்ற முடியாது. (டிக்ஸிற்: 1998: 31-47). ஆனால் அந்த தேசம் இராணுவ மயமாக்கப்படுவதிலிருந்தும் யுத்தத்தில் ஈடுபடுவதிலிருந்தும் தடுத்துநிறுத்துவதற்கான சாத்தியமான வழிகளை மேற் கொள்ளமுடியும்.

அரசுகளைப் பிரித்தல் என்பதும் இம்முரண்பாடுகளுக்கான சாத்தியமான தீர்வாக இருக்க முடியாது. 20ஆம் நூற்றாண்டில் 'சுயநிர்ணயத்தின்' அடிப்படையில் அனேக நாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வணுகுமுறையின் முக்கிய அம்சம் நாட்டைப் பிரித்தலாக இருந்துள்ளது. ஆட்சிப் பிரதேசங்கள் பாரபட்சமற்ற முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு இனக்கோட்பாடு பின்பற்றப்பட்டுள்ளது. எனினும் ஒவ்வொரு சமூகத்திற்கும் அதற்குச் சொந்தமானதாக ஓர் அரசைக் கொடுப்பதற்கு ஆட்சிப் பிரதேசங்களைப் பிரித்தல்மூலம் இன்றுள்ள தேசிய மற்றும் இன முரண்பாடுகளில் பெரும்பாலானவற்றைத் தீர்க்க முடியாது. 1947இல் இந்தியா, பாகிஸ்தானாகவும் இந்தியாவாகவும் பிரிக்கப்பட்டது. 1971இல் பாகிஸ்தான் வங்கதேசமாகவும் பாகிஸ்தானாகவும் பிரிக்கப்பட்டது. இத்தேசங்கள் எல்லாவற்றினுள்ளும் மீண்டும் பிரிவினைவாதப் போக்குகள் காணப்படுகின்றன. நாடுகளை முடிவின்றி மேலும் பிரிக்க முடியாது. இன மற்றும் சிறுபான்மையினரின் அபிலாசைகளுக்கு எல்லாநேரங்களிலும் இவ்வகையில் தீர்வுகாண முடியாது.

முரண்பாட்டுத் தீர்வுக்கான மற்றொரு நடவடிக்கை பிராந்திய அடிப்படையில் இம்முரண்பாடுகளில் கவனஞ் செலுத்தித் தீர்க்கக்கூடிய பிராந்திய அமைப்புக்களைக் கட்டியெழுப்புதலாக இருக்கலாம். சர்வதேச மட்டத்தில் ஐக்கிய நாடுகள் முரண்பாடுகளைக் கையாள்வதற்கு இராசதந்திரத்தின் ஊடாகத் தடுத்தல், சமாதானத்தை உருவாக்குதல், சமாதானத்தைப் பேணுதல், சமாதானத்தினைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்டியெழுப்புதல், சலுகைகளை வழங்குதல் மற்றும் சமாதானத்தை வலிந்து நிலைநாட்டுதல் போன்ற பல்வேறு யுக்திகளைக் கண்டறிந்துள்ளது. ஐரோப்பாவில் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான நிறுவனம், ஐக்கிய ஆப்பிரிக்க நிறுவனம், மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதாரச் சமூகம் போன்ற அமைப்புக்கள் சிலவற்றின் அனுபவங்கள் பெரிதும் பொருத்தமானவையாக இருக்கக்கூடும். ஒரு பிராந்தியத்திலுள்ள அரசாங்கங்களுக்கு இடையிலான போட்டி எந்தவொரு விடயத்திலும் உடன்பாடு எட்டப்படுதலைக் கடினமானதாக்கும்.

## ஈழமும் பிரிந்துசெல்லுதற்கான உரிமையும்

ஈழம் சட்டப்படி எவ்வாறாயினும், நடப்பின்படி இன்று மெய்யாக உள்ளது. அது தன்னகத்தே நன்கு தீர்மானிக்கப்பட்ட மக்கள் குழுவையும் அவர்களால் உருவாக்கப்பட்டு நிருவகிக்கப்படுகின்ற ஒரு குறிப்பிட்ட ஆட்சிப்பிரதேசத்தையும் கொண்டுள்ளது. இது இலங்கை அரசுக்குள்ளவாறு அனைத்து விதிமுறைகளையும் பூர்த்தி செய்கின்றது. இன்றுள்ள இலங்கை அரசுக்குத் திட்டவட்டமான எல்லைகள் இல்லை. மிகப் பரவலான வாக்கு மோசடியின் நிமித்தம் அது தன்னை ஒரு சனநாயக அரசாங்கமென்று உரிமைகொண்டாடுவது சந்தேகத்திற்குரியது. அதன் 'அரசாங்கம்' தன் மக்களின் ஒரு பகுதியினரை வெடிகுண்டு வீசி தொடர்ந்து அழித்துவருகின்றது. எனவே சட்டப்படி எவ்வாறாயினும் நடைமுறையில் ஈழம் ஏற்கெனவே நிலை பெற்றிருக்கின்றது. பிரிந்து செல்வதற்கான உரிமை என்னும் சட்டப்படியான கோரிக்கைக்கு நியாயமான ஓர் அந்தஸ்தை அளிக்கின்றதா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. பாரபட்சமின்றி, நடுநிலையுடன் இக்கேள்வியை ஆராய வேண்டும். ஏனெனில், உணர்ச்சிகள் பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட விடயங்களை மூடிமறைத்துவிடும். இவ் விடயத்திலும் இதனுடன் தொடர்புடைய ஏனையவற்றிலும் துரிதமாக வளர்ந்துவருகின்ற சர்வதேசச் சட்டம் ஈழ மக்களின் உரிமைகளை அவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதிலும் உரிமை மீறலிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதிலும் எந்தளவுக்கு உதவக்கூடுமென்பதையும் ஆராயவேண்டும் (பாக்கர், 3 ஏப்பிரல் 2001: 1-2).





ஈழத்துக்காகப் பிரச்சாரம் செய்பவர்கள் அவர்களின் இலட்சியத்தை மேம்படுத்தும்பொருட்டு இப்போக்குகளைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். சுயநிர்ணயம் பற்றிய சர்வதேசச் சட்டத்தில் எழுகின்ற நவீன போக்குகளின் சூழமைவில் ஈழத்துக்குச் சாதகமான வாதங்கள் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படவேண்டும். அத்தகைய வாதங்களில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1947இல் இலங்கைக்கு ஆங்கிலேயரால் வழங்கப்பட்ட தன்னாட்சிமுறையே குறைபாடுடையது. ஆங்கிலேயர் காலனித்துவ சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கியபோது இலங்கையைக் கைப்பற்றுவதற்கு முன்னர் தமிழர் இருந்த நிலையை அவர்களுக்கு மீட்டளிக்காதுவிடினும், குறைந்தபட்சம் அவர்களின் உரிமைகளுக்குப் போதியளவு பாதுகாப்பை யாவது உறுதிப்படுத்தியிருக்கவேண்டும். முன்னர் குறிப்பிட்டபடி ஆங்கிலேயர் வெற்றிகொண்டு அடிமைப்படுத்திய வேளையில் தமிழர் தாயகம் தனிவேறாக நிருவகிக்கப்பட்டிருந்தது. மேலும் ஐரோப்பியக் காலனித்துவத்துக்கு முன்னர் தமிழர் தாயகத்தில் தனியான மன்னராட்சி ஒன்றிருந்தது. முன்பிருந்த நிலையை மீட்டளிக்கவேண்டிய ஒரு கடமையைச் சுயநிர்ணயம் ஆங்கிலேயர்மீது சுமத்தியது. சோல்பரி அரசியலமைப்பில் சிறுபான்மையின் பாதுகாப்புக்கென வெற்றியளிக்காத உத்தியினை அவர்கள் வகுத்தமைத்தபோது அக்கடமையை அவர்கள் உணர்ந்திருந்த போதிலும் அவர்கள் அதை நிறைவேற்றத் தவறினர். எனவே இலங்கைக்கு வழங்கப்பட்ட சுயநிர்ணயம் குறைபாடுடையதென்பதுடன் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க பிரித்தானியா கடமைப்பட்டிருந்ததால் அதை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும் பிரித்தானியரிடமே தங்கியுள்ளது. (நேசையா, 2001: 55-71).

தமிழர்களுக்கெதிராகத் தொடர்ந்து கொண்டிருக்கின்ற விடாப்பிடியான பாகுபாடு தனிநாட்டுக்கான கோரிக்கையை உயர்த்திப்பிடிக்கிறது. சிறுபான்மைகள் தாங்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக்கப்பட்டுவிட்டோம் என்ற தாங்கமுடியாத துன்பத்தினாலன்றி மற்ற சந்தர்ப்பங்களில் சிறுபான்மைகளைக் கொண்டுள்ள அரசுகளில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சாதாரணமாகச் சுயநிர்ணய உரிமை எழுவதில்லையென்று ஏற்கெனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு இந்தியாவில் சிறுபான்மைகளின் பாதுகாப்புக்கு அரசியலமைப் பின்கீழ் தேவையான முன்னேற்பாடுகள் அர்த்தமுள்ள வகையில் நடைமுறையில் உள்ளதால் அங்கு சிறுபான்மையினருக்குச் சுயநிர்ணய உரிமை இருக்க வாய்ப்பில்லை. இது எளிதில் விளங்கக்கூடியதே. ஏனெனில், இக்கோரிக்கைகளை முன்னரே எதிர்பார்த்து, சிறுபான்மைகள் தங்களது கலாச்சாரத் தனித்துவத்தையும் அரசியல் அபிலாசைகளையும் உறுதிப்படுத்திக்கொள்வதற்கான அனைத்து வழிமுறைகளையும் வழங்குவதன் மூலம் மத்திய அரசாங்கம் இதை தேவையற்றதாக்குகிறது (நேசையா, 1997: 152-199). இலங்கையில் இந்நிலைமை தலைகீழானது என்பதுதான் உண்மை.

தமிழர் மற்றும் ஏனைய சிறுபான்மையான முஸ்லிம்கள் மற்றும் கத்தோலிக்கர்கள் போன்றவர்களுக்கு எதிரான பாகுபாடு சட்டத்தில் மட்டுமின்றி சுதந்திர இலங்கையின் தொடக்க ஆண்டுகளிலும் அதற்குப் பின்னரும் காலத்திற்குக் காலம் தமிழருக்கெதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறை மூலமும் இது தொடர்ந்தது. தமிழ் இளைஞர்களும் பெண்களும் யுத்தச் சூழ்நிலைகளில் இடம்பெறுவதைப்போன்ற வன்செயல்களையும் இழிவுபடுத்தல்களையும் எப்போதும் தாங்கிக்கொண்டு வந்துள்ளனர். சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைக் கண்காணிப்பு சபை மற்றும் ஏனைய மனித உரிமை அமைப்புக்கள் ஆகியவற்றின் அறிக்கைகளில் அத்தகைய பல்வேறு சம்பவங்கள் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ் அரசியல்வாதிகள் அவர்களின் உரிமைகளைச் சமாதானமான, சனநாயக வழிமுறைகள் ஊடாக வலியுறுத்த முயன்றுள்ளனர். அத்தகைய வலியுறுத்தல்களின் தோல்வி காந்தீய முறையிலான சாத்வீக எதிர்ப்புகளுக்கு வழிவகுத்தது. காந்தி மற்றும் மார்ட்டின் லூதர்கிங் போன்றவர்களால் வழிநடத்தப்பட்ட இயக்கங்கள் சனநாயகரீதியாக வளர்ச்சியடைந்த அரசாங்கங்களுக்கெதிராக மட்டுமே வெற்றிபெற முடியுமென்று எடுத்துக்காட்டுவதற்குக்கூட ஒருவேளை இச்சாத்வீகப் போராட்டங்களில் பங்குபற்றி





யவர்கள்மீது சிங்கள அரசாங்கம் பயங்கரவாதத்தையும் வன்முறையையும் கட்டவிழ்த்துவிட்டிருக்கலாம். தமிழர்கள் தங்களது முயற்சிகளுக்குப் பதிலாக, அவர்களை அடக்கி ஒடுக்குவதற்கும், தாக்கிக் கொள்ளையடிப்பதற்கும், உடைமைகளைச் சூறையாடுவதற்கும் அவர்களின் தாயகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஒரு சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தைத்தான் பெற்றனர்.

இச்சூழ்நிலைகளில் ஏற்றத்தாழ்வுகளைச் சீர்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட சமாதானமான நடவடிக்கைகள் அனைத்தும் தோல்வியடைந்தபோதுதான், தமிழர்களிடமிருந்து சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை எழுந்தது என்பதில் ஐயமில்லை. வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் தமிழர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகள் தமிழ் மக்களுக்கென்று தனித்துவமான அரசொன்றுக்கான அறைகூவலை விடுத்தனர். எத்தகைய வழிமுறையிலேனும் அத்தகைய ஓர் அரசை வலிந்து பெறுவதற்கான உரிமை தமிழ் இளைஞர்களுக்குள்ளதென்று அவர்கள் தெரிவித்தனர். இதற்கிடையில் பிரிந்துசெல்வதற்கான உரிமை சர்வதேசச் சட்டத்தில் முழுவளர்ச்சி கண்டுவிட்டதனால் இந்த அரசியல் பிரகடனம் சிறுபான்மையொன்றின் சுயநிர்ணய உரிமையை ஒப்புக்கொண்ட சர்வதேசச் சட்டத்துக்கும் இசைவானதாயிருந்தது. பிரிந்துசெல்லும் உரிமைக்காகத் தொடர்ந்து நடைபெறுகின்ற வன்முறையுடன் கூடிய வலியுறுத்தல் முழுமையாகச் சர்வதேசச் சட்டத்துக்கு இணங்கியதாகும் (பாக்கர், 6 யூலை 1997: 1-7).

எனவே பிரிந்துசெல்வதற்கான உரிமையின் பிரகாரம் இருபது ஆண்டுகளுக்கு மேலாக நடைபெறுகின்ற பிரிவினை யுத்தம் இரு தேசிய இனங்களுக்குடையே நடைபெறுகின்ற உள்நாட்டு யுத்தமேயன்றி இலங்கை அரசாங்கம் குறிப்பிடுவதுபோன்று ஒரு சிவில் யுத்தமல்ல. சிங்கள அரசாங்கத்தால் அதனை இராணுவரீதியாக முடிவுக்குக்கொண்டுவர முடியவில்லை. எல்ரீரீஈ மரபுரீதியான யுத்தத்தை நடத்தி வந்துள்ளதுடன் யுத்தத்தின்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிகளையும் பின்பற்றியுள்ளது. மாறாக, சிங்கள அரசாங்கம் சர்வதேச யுத்த விதிகளுக்கு முரணாக அதன் பிரசைகளென்று அது உரிமைகொண்டாடுகின்ற பொதுமக்கள் மீது ஈவிரக்கமின்றி தொடர்ச்சியாக வெடிகுண்டுத் தாக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தல்களை மேற்கொண்டு அவர்களைக் கொன்று வருகின்றது. தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்ற இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வழிமுறைகளை ஆழ்ந்து ஆராய்வதுதான் இன்றைய உடனடித் தேவையாகும் (மேற் கூறியது).

## தீர்வுக்கான வழிமுறை

### 1. அதிகாரப்பகிர்வு

அதிகாரப்பகிர்வுதான் ஆலோசனைக்காக வைக்கப் பட்ட முதலாவது தீர்வாகும் இது இலங்கையின் ஒற்றை யாட்சி அரசைப் பேணிப் பாதுகாப்பதனால் மூன்றாம் அரசுகளின் ஆதரவைப்பெற்ற தீர்வு. இதுவே சந்திரிகா அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட தீர்வுமாகும். அது எப்படிப்பட்டதாக இருந்தாலும் இத்தருணத்தில் அத்தீர்வு ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. அதிகாரப்பகிர்வானது எதிர்காலத்தில் வெவ்வேறு இனக்குழுக்களுக்கிடையில் எழக்கூடிய பிரச்சினைகளை முன்னரே உணரக்கூடிய ஐக்கிய இராச்சியத்தில் வேண்டுமானால் வெற்றியளிப்பதாக இருக்கலாம். இலங்கையிலும் தொடக்கத்தில் பண்டார நாயக்க-செல்வநாயகம் (பண்டா-செல்வா) மற்றும் சேன நாயக்க- செல்வநாயகம் (டட்லி-செல்வா) ஆகிய ஒப்பந்த காலகட்டங்களின்போது வேண்டுமானால் அது வெற்றி யளித்திருக்கக்கூடும். ஆனால் இரண்டு ஒப்பந்தங்களும் சிங்கள இனவெறியர்களால் கிழித்தெறியப்பட்டன. இன் றும் தீவிரமாயுள்ள புத்த பிக்குகள்தான் அன்றும் இரண்டு ஒப்பந்தங்களுக்கும் தலையாய எதிரிகளாயிருந்தனர். அன்று தொட்டு இனச் சமூகங்களுக்கிடையிலான வன்முறை ஒரு யுத்தமென்ற அளவுக்கு அதிகரித்துள்ளது. இத்தகைய சூழலில், இவ்வளவு இரத்தம் சிந்தியதன் பின்னர் அதிகாரப் பகிர்வு வெற்றியளிப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவான தாகவே இருக்கும்.

அதிகாரப் பகிர்விற்கான உடன்படிக்கைகள் எல்லாம் மேலாதிக்கக் குழுவினால் திரும்பப்பெறப்பட்டதை வரலாறு காட்டுகின்றது. தங்களுக்குள் சமபலமானநிலை இருந்தா லன்றி அவை வெற்றியளிக்கமாட்டா என்பதற்கு எத்தி யோப்பியாவும் சூடானும் சிறந்த உதாரணங்களாகத் திகழ் கின்றன. ஒரு குறுகிய இடைவெளியின்பின் இவ்விரு அரசு





களிலும் மீண்டும் யுத்தம் ஆரம்பித்துவிட்டது. இலங்கை யில் சிங்களப் பேரினவாதமும் தமிழரின் உரிமைகளை ஒப்புக்கொள்ள மறுக்கும் அதன் முரட்டுப்பிடிவாதமும் தீர்விற்குத் தடைக்கற்களாய் உள்ளன.

### 2. கூட்டாட்சி

ஒரு கூட்டாட்சித் தீர்வு தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதாவினாலும் இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவராலும் பரிந்துரைக்கப்பட்டது. கூட் டாட்சி அமைப்பென்பது சமத்துவமுள்ள இரு மக்களுக் கிடையிலான ஓர் இணைப்பென்பதனால் அதனைக் காத்திர மானமுறையில் ஆராய்ந்து பார்க்கவேண்டும். கூட்டாட்சி அமைப்பொன்றின் உருவாக்கம் தமிழ் மக்களின் தனித்துவ மான தன்மையையும் அவர்களின் தாயகங்களையும் ஒப்புக் கொள்கின்றது. அது தமிழர் தாயகங்களின் எல்லைகளை வரையறை செய்து இணைந்து உருவாக்கப்படும் ஆவண மொன்றில் இடம்பெறச் செய்வதற்கு வழிவகுக்கக்கூடும். இவைகள் அடையப்போகும் ஆதாயங்கள். அது யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதுடன் யுத்தம் மீண்டும் தொடங்கலாமென்ற அச்சுறுத்தல் எப்போதும் இருப்ப தால் இவ்வேற்பாடு நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்யும். தமிழர்களுக்காக இது உறுதிசெய்யப்படலாம். யுத்தம் மீண்டும் தொடங்கப்பட்டாலும்கூடத் தமிழ் தேசத்தின் எல்லைகள் ஏற்கெனவே வகுக்கப்பட்டு அங்கீ கரிக்கப்பட்டுள்ளன என்ற உண்மை நிலைத்திருக்கும். அதி காரப் பகிர்வு அரசியலமைப்பு ஆவணமொன்றில் பதிவு செய்யப்பட்டிருக்கும் (இந்தியா ருடே, 19 யூன் 2000: 14-17).

வெளிநாட்டுக் கொள்கை, நாணய ஒழுங்குமுறை மற்றும் ஏனைய பொதுவான காரணிகளைக் கூட்டாகக் கையாளவேண்டும். எஞ்சிய மற்ற அனைத்து விடயங்களை யும் இரு தன்னாட்சி அரசாங்கங்களிடம் பொறுப்பில் விட்டுவிட வேண்டும். சிங்கள அரசாங்கம் இம்முன்மொழி வை ஏற்றுக்கொள்ளும் சாத்தியமில்லை. கூட்டாட்சி தமிழர் தாயக எல்லைகளை வரையறை செய்வதுடன் ஆசுவாசப் படுத்திக்கொள்வதற்கான சிறிது ஓய்வு நேரத் திற்கும் இடமளிப்பதால் உபாயகர நோக்கத்துக்காக இதனை ஆராய்ந்து பார்க்கலாம். எடுத்துக்காட்டாக





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யூகோசிலாவியாவுக்கான வான்ஸ் - ஒவன் ஒப்பந்தம் ஒருபோதும் நடைமுறைப் படுத்தப்படவில்லை (இந்தியா ருடே, 19 யூன் 2000: 14-17). எனினும் பொதுவாகக் கூறு மிடத்து, கூட்டாட்சித் தீர்வுகள் இன நெருக்கடிகளுக்கு வெற்றியளித்ததில்லை.

### 3. சமஷ்டி

ஒரு யதார்த்தமான அரசியல் உணர்வுடன் நோக்கும் போது ஒரு கூட்டாட்சி அமைப்பானது இரு இராணுவங் களை அதனுள் கொண்டதாக (அல்லது அவ்வகையில் எந்தவோர் அரசும்) இருக்க முடியாது. எனவே இரண்டில் ஒன்று கலைக்கப்படவேண்டும் அல்லது ஒன்று மற்றதனுள் ஈர்த்துக்கொள்ளப்பட வேண்டும். எல்ரீரீஈ தோற்கடிக்கப் பட்ட ஒரு படையல்ல - இலங்கை மற்றும் இந்திய இராணு வங்களுக்கெதிராக அதன் வெல்லப்படமுடியாத தன்மையை அது நிரூபித்துள்ளது. கூட்டாட்சியொன்றைத் திணிக்க முடியாது. அது பங்குபற்றுபவர்களின் கூட்டுமுயற்சியால் உருவாக்கப்படவேண்டும். கூட்டாட்சியமைப்பினுள் ஒரு தரப்பு ஆயுதந்தரித்ததாகவும் மறுதரப்பு ஆயுதங் களைந்த தாகவும் புகவேண்டுமென்ற எதிர்பார்ப்பு, பங்குபற்றுபவர் களிடத்தில் இருப்பதாகக் கருதப்படுகின்ற சமத்துவத்தை மறுக்கின்றது. எனினும் இது ஒரே சமயத்தில் இருதரப்பி லும் நிகழுமாயின் ஆயுதக்களைவு என்ற பிதற்றலுக்குப் 'பூச்சியச் சமநிலைப்படுத்தப்பட்ட படைக்குறைப்பு' என்று பொருள் கொண்டால் கூட்டாட்சியொன்றை உருவாக்கு தல் கோட்பாட்டளவில் சாத்தியமானது (உலகிலேயே ஒரே ஒரு அரசுதான் இராணுவமில்லாமல் இருக்கிறது அதுதான் மத்திய அமெரிக்கக் குடியரசான கொஸ்ர-றிக்கா). அத்தகைய ஓர் நினைப்புகூட தமிழர்கள் மத்தியில் தாங்கள் அவமதிக்கப்பட்டுவிட்ட உணர்ச்சியால் தூண்டப் பட்டு ஆத்திரத்துடன் பொங்கியெழுவதை எளிதில் உணர லாம். அது சரணடையச் சொல்வதற்குப் பதிலாக 'அவர் களின் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டுமென்று' அரசு அடிக்கடி எல்ரீரீஈ தலைவர்களிடம் முன்வைக்கும் பசப் பான கோரிக்கைகளுக்கு தமிழர்களின் உணர்வை வெளிக் காட்டுகிறது (சிங்கர் 1992: 1-5).

ஒருமுறை மக்கள் தமது சொந்த அரசுக்காக ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கிய பின்னர், சமஷ்டி அடங்க





லாக அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படுகின்ற எவ்வகை யான இணைப்பு வேலையும் (tinkering) அவர்களைத் திருப்திப்படுத்த முடியாதென்பது வெளிப்படையான உண்மை. அத்துடன் இது உலக வரலாற்றில் விதிவிலக்கன்றி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஐரிஷ் மக்களுக்குத் துளித் துளியாகத் தன்னாட்சி வழங்கப்பட்ட போதிலும் அது முழுமையான இறைமைச் சுதந்திரத்துக் கான அவர்களின் தாகத்தைத் தணிப்பதற்குப் பதிலாக அந்நெருப்பை விசிறித்தூண்டியது. இந்தியாவில் அடுத் தடுத்து ஆட்சிபுரிந்த பிரிட்டிஷ் அரசாங்கங்கள் ஐரிஷ் அனுபவத்தை மனதிற்கொண்டு இருபதாம் நூற்றாண்டின் முதல் நான்கு தசாப்தங்களில் தொடர்ச்சியான அரசிய லமைப்புச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு அதன் மூலம் உள்நாட்டில் தெரிவுசெய்யப்பட்ட அரசியல்வாதிகளுக்கு அதிகரித்த அளவுகளில் சுதந்திரத்தை வழங்கியபோதிலும் அவை பூரண சுதந்திரத்துக்கான இந்தியர்களின் பசியைத் தூண்டிவிடுவதற்குத்தான் பயன்பட்டன. காலனித்துவ இலங்கைக்கும் இது பொருந்தும். தமிழ்மக்களது சொந்த, தனித்துவமான, இறைமைபொருந்திய ஓர் அரசுக்கான ஆயுதப் போராட்டத்திலிருந்து எல்ரீரீஈயை விலை கொடுத்து வாங்கிவிடவோ அதிலிருந்து அவர்களைத் திசைதிருப்பவோ முடியாது (மேற்கூறியது).

இவ்விடயத்தில் சிங்கள வாதத்தின் உண்மையான இயல்பும் மொழிநடையும் அவர்கள் எதார்த்தத்திலிருந்து எவ்வளவுதூரம் விலகியுள்ளனரென்பதைக் காட்டுகிறது. தமிழ் மக்களுக்கு எதையோ 'கொடுத்துக்கொண்டிருப்பது' பற்றி இடைவிடாது பேசப்படுகின்றது - நிலத்தில் மூன்றி லொரு பங்கும் கரையோரத்தில் மூன்றிலிரண்டு பங்கும் என்பது, தமிழ் மக்கள் அவற்றைப் பல நூற்றாண்டுகளாக அனுபவித்து வந்துள்ளனரென்ற உண்மையைப் புறந்தள்ளி விட்டுத் தங்களுக்குச் சாதகமாக வகுத்துக்கொண்ட ஒரு சூத்திரம், வேறு சமயங்களில் தமிழர் தாம் வாழ்கின்ற தாயகத்தில் தம்மைத்தாமே ஆள்வதற்கு உறுதிபூண்டுள்ள துடன் அவர்களுக்கு அதிகாரங்கள் 'பகிரப்படவேண்டிய' தேவையில்லை என்பதையும் புறக்கணித்துச் சிங்களவர் அவர்களுக்குச் சில அதிகாரங்களைப் 'பகிர' விரும்புகின் றனர். தமிழர் தமது தாயகமெனக் கருதுவதைத் தாமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆள்வதென்று ஒருதலைப் பட்சமாகத் தீர்மானித்துள்ள நிலையில் சிங்கள அரசாங்கத்தின் அனுமதியோ ஒப்புதலோ அவர்களுக்குத் தேவையுமில்லை. இந்த எளிய உண்மைகள் சிங்களவர்களால் புரிந்துகொள்ள முடியாதவை - எதார்த் தத்தில் நிலத்தின் பெயர் மாற்றப்பட்டுவிட்டது.

**4. பிரிந்துசெல்லுதல்**

ஈழத்தை உருவாக்குதல்தான் மிகச்சிறந்த தீர்வு. இதற்கு முறைப்படியான சட்டவிதி எதுவும் தேவையில்லை. ஆட்சிப் பிரதேசம் தொடர்ச்சியாகக் கையகப்படுத்தப்பட்டிருந்தது என்ற உண்மையே ஈழத்தை உருவாக்கும். தற்போது ஈழம், சட்டப்படி எவ்வாறாயினும் நடப்பின்படி நிலையானதாக உள்ளது. தமிழர்கள் தங்களது பாரம்பரியத் தாயகங்க ளென்று உரிமைகொண்டாடும் பிரதேசங்கள் மீது சிங்கள அரசாங்கத்தினால் தனது கட்டுப்பாட்டை நிலைநாட்ட முடியவில்லை. ஐக்கிய அமெரிக்காவின் சிறப்புத் தூதுவர் திரு. பிக்கரிங் சர்வதேசச் சமூகம் ஈழத்தை அங்கீகரிக்க மாட்டாதென்று கூறியுள்ளார் (கிறே 5 மே 2001). ஆனால் இதுவொரு முன்நிபந்தனையல்ல. அத்தகைய அங்கீகார மில்லாமல்கூட நடைமுறையில் அனேக அரசுகள் உள்ளன. சீனா நீண்டகாலம் அமெரிக்க அங்கீகாரமின்றி நன்கு முன்னேறியது. தாய்வான் அங்கீகாரமின்றி நன்கு தழைத் தோங்கியுள்ளது.

உலகமெங்கும் அதிகளவில் பரந்துள்ள தமிழர்களும் இலங்கையிலுள்ள தமிழர்களும் ஈழமும் அவைகளைப் போலவே நீடித்து நிலைத்திருக்குமென்று நம்புகின்றனர். ஆனால் இறுதியில் அங்கீகாரம் கிடைக்கும். ஏற்கெனவே வெளிநாட்டு அரசுகள் சமாதானப் பேச்சுக்களை நடத்து வதற்கும் வேறு இராசதந்திர முயற்சிகளில் ஈடுபடுவதற் கும் ஈழத்தின் பிரதிநிதிகளைச் சந்திப்பதனால் அவை ஈழத்தை ஓர் ஆட்சிப்பிரதேசமாகக் கருதுகின்றன.[3] ஈழம் சட்டப்படி எவ்வாறாயினும் நடைமுறையில் நிலையான தாக உள்ளது என்ற அந்தஸ்த்தைத் தெளிவாகப் பெற் றுள்ளது. இதனைச் சட்ட அந்தஸ்துடையதாக மாற்றுதல் சட்டத்தின் படிப்படியான வளர்ச்சியின்மூலம் முன்னெ டுத்துச் செல்லப்படும். பிரிவினைவாத இயக்கங்கள் வளர்ந்து வருகின்றன. ரஷ்யாவில் செச்னியாவும் ஏனைய இயக்கங் களும் துரிதமாக வளர்ந்துவருகின்றன. இவ்வியக்கங்கள் முன்வைக்கின்ற உண்மையான பிரச்சினைகளைக் கண்டு ணர்வதற்கு சர்வதேசச் சட்டம் துரிதமாகச் செயற்பட வேண்டியிருக்கும். இச்சர்வதேசப் போக்குகளிலிருந்து ஈழம் பயன்பெறும். காலத்தைக் கடத்துதல் என்பது மனித விவகாரங்களில் நீதிக்கு மதிப்பளிக்கின்ற வகையில் அனேக விடயங்களைத் தீர்க்கின்றது.





**ஐக்கிய இலங்கையின் முடிவு**

ஓர் அரசிற்கு இருக்க வேண்டிய இயல்பான பண்பினை, அதாவது அதன் எல்லைகளினுள் ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவப் படையொன்றைத் தனக்கேயுரியதாகக் கொண் டிருத்தலை, இலங்கை அரசு இழந்தமையே மாற்றங்கள் அனைத்திலும் முதன்மையானதும் மிகவும் அடிப்படை யானதுமாகும். இலங்கை அரசு, கடந்த இருபது ஆண்டு களில் தனக்கு எதிராக ஆயுதத்துடன் சவால் விடுகின்ற தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இத்தீவைப் பகிர்ந்து கொண்டுள்ளது. சவால் விடுத்தவரை அடக்குவதற்கும் ஒழித்துக்கட்டுவதற்குமான இருபது ஆண்டுகால முயற்சி அக்குறிக்கோள்களை எய்தத் தவறிவிட்டது. அதற்கு மாறாக, சவால் விடுத்தவர் மேலும் மேலும் பலமடைந்து, ஒரு கெரில்லாப் படையென்பதிலிருந்து முற்றிலும் மரபு ரீதியான தரைப் படையாகவும் கடற்படையாகவும் படிப் படியாக வளர்ச்சிகண்டுள்ளார்.

1996 முதற்கொண்டு எல்ரீரீஈயின் கரங்களில் இலங்கை யின் ஆயுதப்படைகள் அனுபவித்துள்ள நீண்ட தொடர்ச்சி யான மாபெரும் இராணுவத் தோல்விகள், இந்நிலைமை மாற்றமுடியாத தென்பதையும் மாறாக, காலப்போக்கில் மேலும் மோசமடையுமென்பதையும் மிகத் தெளிவாகக் காட்டுகின்றன (விஜயமான்ன, 3 மார்ச் 2000).

எனவே சிங்கள மக்களும் இலங்கை அரசாங்கமும் ஒரு புதிய எதார்த்தத்தை, அதாவது, தீவின் ஒரு பகுதி அரசின் கட்டுப்பாட்டு எல்லைக்கு வெளியே, அரசுக்கெதி ராக ஆயுதமேந்தி வெல்ல முடியாதவாறு சவால் விடுக் கின்ற ஒரு படையின் ஆளுமைக்கும் கட்டுப்பாட்டுக்கும்கீழ் உள்ளதென்ற எதார்த்தத்தை, எதிர்நோக்குகின்றன. இந்த ஆய்வில் ஆராயப்பட்டுள்ள புதிய எதார்த்தங்கள் இந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிலைமையை தலைகீழாக மாற்றமுடியுமா, முடியாதா என்ற கேள்வியுடன் நேரடித் தொடர்பைக் கொண்டுள்ளன.

**இந்த ஆய்வின் மூலம் தெரியவருவதாவது:**

அதிகாரப் பகிர்வுப் பொதிகள் (தீர்வுத்திட்டங்கள்) தமிழர் அபிலாசைகளுக்கு எந்தளவுக்குப் பதிலளித்தன வென்பது எவ்வாறிருப்பினும் எல்ரீரீஈ அவற்றை அதன் பிரதான இலக்கான ஈழத்துக்கு ஒரு மறுப்பாக நோக்கியது. எல்ரீரீஈ அதிகாரப் பகிர்வுப் பொதியொன்றை எவ்வகையிலேனும் ஏற்றுக்கொண்டு ஐக்கிய இலங்கையினுள் செயற்பட உடன்படுவதானது, அது சாத்வீகத்தையும் சனநாயகச் செயற்பாட்டையும் பின்பற்றுகின்றதென்ற கருத்தாகும். இது அதன் சிந்தாந்தத்துக்கும் அமைப்புவிதிகளுக்கும் அரசியல் அனுபவத்திற்கும் அதன் செயற்படும் முறைக்கும் முரணானதாக அமைந்துவிடும்.

அதிகாரப் பகிர்வின்மீதும் அரசியலமைப்பு மாற்றங்கள்மீதும் பொது ஜன முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் அறிவிக்கப்பட்ட கருத்தொருமைப்பாடு திடப்படுத்தப்படவேண்டும். அதிகாரப் பகிர்வின் அலகு பற்றியும் இலங்கை அரசின் குணாதிசயம் பற்றியும் சனாதிபதி சந்திரிகாவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான உடன்பாடு மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்புக்கான ஓர் ஏற்பாட்டுடனாவது தமிழர் அபிலாசைகளைப் பொதுவாக நிறைவேற்றுகின்றது. இவ்விரு தலைவர்களும் தீவிரவாதச் சிங்களக் கருத்துக்களைப் புறக்கணித்து மாகாண சபைகளுக்கு உரிமைகளை வழங்கவேண்டும். அத்தகைய முயற்சி ஒரு குறுகிய காலத்திற்கு நிலையான மதிப்பைக் கொடுக்கும். மேலும் அதிகாரப் பகிர்வுப் பொதியின் (தீர்வுத்திட்டத்தின்) சாரத்தையும் எல்ரீரீஈ தவிர்ந்த தமிழ்க் கட்சிகள் ஏற்றுக்கொள்ளுதற்கு வழிவகுக்கும்.

இலங்கையின் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான பாதையில் தகர்க்க முடியாத தடைகள் உள்ளனவென்பதை இப்பகுப்பாய்வு சுட்டிக்காட்டுகின்றது. பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் இலங்கை அரசாங்கத்திற்கும் எல்ரீரீஈக்கும் மேலதிகமாக ஏனைய தமிழ்க் கட்சிகளையும் ஏனைய





பிரதான சிங்களக் கட்சிகளையும், அத்துடன் மிக முக்கியமாக ஐக்கிய தேசியக் கட்சியையும் உள்ளடக்கவேண்டியது முக்கியமானதெனக் கருதுகிறது. ஏனெனில் அத்தகைய உள்ளடக்கமின்றிச் சமாதானச் செயல்முறையில் தேசிய கருத்தொருமைப்பாட்டைக் காணமுடியாது. சமாதான ஒப்பந்தமொன்றை ஏற்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இலங்கையில் இன-அரசியல் முரண்பாட்டின் பிரதான தரப்புக்களின் தலைவர்களின் தயார்நிலை பற்றிக் கடந்த காலத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. எனவே, பேச்சுவார்த்தை நடத்துபவர்கள் பயிற்றப்பட்டவர்களாகவும் ஒழுங்குக் கட்டுப்பாடுடையவர்களாகவும் எத்தகைய சூழலையும் சமாளிக்கும் திறமையானவர்களாகவும் இருக்கவேண்டியது முக்கியம். அத்தகைய குணங்கள் சமாதானத்துக்கான தடைகளை வெற்றிகொள்ள அவர்களுக்கு உதவும். இந்த கோர நாடகத்தின் முக்கிய கதாபாத்திரங்கள் காலனித்துவத்துக்குப் பிந்திய இலங்கையை ஆண்டவர்களும் தொடர்ந்தும் ஆட்சிசெய்பவர்களுமான இரு அரசியல் குடும்பங்களையும் - சேனநாயக்க-ஜயவர்தன வழித்தோன்றல்களையும், பண்டாரநாயக்க குடும்பத்தையும் - சேர்ந்த ஆண்களும் பெண்களுமாவர். அவர்கள் ஏறக்குறைய 50 ஆண்டுகளாக முரண்பாட்டின் வளர்ச்சியின் அனைத்துக் கட்டங்களிலும் அதனைத் தீர்ப்பதற்கான சகல முயற்சிகளையும் வெற்றிகரமாகத் தடுத்துவந்துள்ளனர்.

இறுதியாக 2002ஆம் ஆண்டில் இன முரண்பாடு தணிக்கப்பட்டதன் காரணமாக இலங்கையின் சமகால அரசியலில் அது பெரிதும் குறிப்பிடத்தக்க ஆண்டாயிருந்தது. 2002 பெப்ருவரியின் நடுப்பகுதியில் இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் (எல்ரீரீஈ) இடையில் யுத்தநிறுத்த உடன்படிக்கையொன்று வடிவமைக்கப்பட்டது. 2002 செப்ரெம்பரில் இரு தரப்புகளுக்குமிடையில் முறையான நேரடிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின. யுத்தநிறுத்தமும் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளும் முன்னேற்றத்தையும் பிரச்சினைகளையும் காட்டுகின்றனவாக இப்போது 2003ஆம் ஆண்டினுள் பிரவேசித்துள்ளன. எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செயல்முறையும் அதன் விளைவும் எத்திசையில் செல்லப் போகின்றன என்பதில் தெளிவின்மையால் பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கைக் குறைந்துள்ளதென்பதில் சந்தேக மில்லை.

இலங்கையின் கடந்தகால அனுபவங்களிலிருந்து முரண் பாட்டுத் தீர்விற்கான படிப்பினைகள்: இதுவரை நாம் கண் டுணர்ந்தவற்றின் சாரம்:

- முரண்பாட்டுப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிப் பதற்கு முரண்பாட்டுத் தீர்வொன்றுக்குச் சாதக மான முன்நிபந்தனைகள் இருத்தல்வேண்டும்.
- ஒரு முரண்பாட்டில் பேச்சுவார்த்தைத் தீர்வென் பது கட்டுப்படுத்தக்கூடிய நிலைகளுக்கிடையில் ஒரு சமரசத்தை ஏற்படுத்த வேண்டும். அது முரண் பாட்டுக்கான தரப்புகள் கூட்டாகப் பின்பற்ற வேண்டிய ஒரு 'மையப்பகுதி'யாகும். சமாதானத் துக்கான முன்நிபந்தனைகள் விதிக்கப்படுகின்ற போதுதான் பேச்சுவார்த்தைகள் பெரும்பாலும் வெற்றியளிக்கின்றன.
- தரப்புக்களின் குறுகியகால அரசியல் அல்லது இராணுவக் குறிக்கோள்கள் பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலினுள் புகுகின்றபோது பேச்சுவார்த் தையினூடான முரண்பாட்டுத்தீர்வு சிரமமானதா கின்றது.
- அரசியல் முரண்பாடுகளில் நேரடியான தரப்பு களும் மறைமுகமான தரப்புகளும் உள்ளன. முரண் பாட்டுத் தீர்வுக்கு மறைமுகமான தரப்புகளின் பங்குகளும் கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.
- பேச்சுவார்த்தை தடங்கல்களைக்கொண்ட ஒரு நீண்ட, சிக்கலான செயல்முறையாக இருக்கக்கூடும். பேச்சுவார்த்தைச் செயல்முறை வெற்றியளிப்ப தற்கு அச்செயல் முறையைத் தளராது தொடர் வதற்கான முயற்சிகள் அவசியம்.
- ஒரு சமாதான நடவடிக்கைக்கு கவனத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற தந்திரோபாயம் அவசியம்.





பேச்சுவார்த்தைக்கும் சமாதானத்திற்குமான தந்தி ரோபாயம் யுத்த தந்திரோபாயத்தைப் போன்று முக்கியமானது.

- முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப் படுகின்ற முயற்சிகள் எதுவும் அர்த்தமுள்ளவகை யில் நீடித்து நிலைக்கக்கூடிய சமாதானத்தை உரு வாக்கவேண்டும். 'துரித ஒட்டு வேலைகளால்' (Quick fixes) நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த முடியாது.
- முரண்பாடுகளில் 'மூல காரணங்களும்' 'உடனடிக் காரணங்களும்' உள்ளன.
- 'மூல காரணங்கள்' வரலாற்று, உளவியல் மற்றும் பொருளாதாரப் பரிமாணங்களைக் கொண் டுள்ளன.
- சமாதானமானது யாருக்கும் வெற்றியில்லை என்ற நிலையில்தான் சாத்தியமானது..
- தரப்புகள் சமரச இணக்கத்துக்கு வந்து கூட்டுத் தீர்வுகளைத் தேடும்போது மட்டும் தான் யாருக் கும் வெற்றியில்லை என்ற நிலை சாத்தியமாகும்.
- முரண்பாட்டுத் தீர்வுக்கு அனேக தடங்களைப் பின் பற்றவேண்டும்.

இலங்கையின் இன்றைய பேச்சுவார்த்தை நடைமுறை பற்றிய ஒற்றைக் கண்ணோட்டம் சாத்தியமானதோ விரும் பக்கூடியதோ அல்ல என்பது வெளிப்படையான உண்மை. நீடித்த யுத்தமொன்றுக்கு இராணுவ நடவடிக்கை தவிர்ந்த முடிவைக் கொண்டுவருதல் பெரும் சிக்கலான செயலாகும். ஏனெனில் அதன் நெளிவு சுளிவுகள் நிச்சயமற்றவை. இந்தப் பின்புலத்தில் அரசியல் செயல்முறை திறந்தமனதுடனும், வெளிப்படையாகவும் உள்வாங்கக்கூடியதாகவும் இருத் தலை உறுதிப்படுத்துவதற்குப் பேச்சுவார்த்தை நடை முறைகள் பொதுப்படையான ஆய்வுநோக்கில் நுண் ணாய்வு செய்யப்படவேண்டியது மிக முக்கியமானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## முடிவுக் குறிப்புகள்

1. எடுத்துக்காட்டாக : தென்னாபிரிக்கா, எரித்திரியா, பலஸ்தீன், கிழக்கு தீமோர் ஆகியவை
2. எடுத்துக்காட்டாக : பொஸ்னியா, கொசோவோ, பலஸ்தீன், தென்னாபிரிக்கா மற்றும் சைப்பிரஸ்
3. எடுத்துக்காட்டாக : இந்தியா 1983-89இல் தமிழ்ப் போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. 1998 முதல் நோர்வே அரசாங்கம் தமிழ்ப் போராளிக் குழுவான எல்ரீரீஈக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் ஏற்பாட்டாளராகச் செயற்படுகின்றது.

○○○



அத்தியாயம்- 8

# இனமுரண்பாட்டுக்குப் பிந்திய காலமும் சனநாயகமும்

இந்த ஆய்வு இன்றைய இன நெருக்கடியை உருவாக்கியுள்ள இலங்கையின் கடந்த அறுபது ஆண்டுகால வரலாற்றையும் அரசியலையும் உள்ளடக்குகின்றது. இனநெருக்கடியின் வரலாற்றுச் சூழமைவை வழங்குகின்றதும் அதன் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாயிருந்த அடிப்படைக் காரணிகளை வெளிக்கொண்டுவருகின்றதும் சனநாயக ஆட்சியின் அடிப்படையில் இனமுரண்பாட்டுக்குச் சமாதானமான தீர்வினைத் தேடுகின்றதுமான ஆய்வென்றவகையில் இதுவே முதலாவது முயற்சியாகும். இந்த ஆய்வு பிரதானமாக இலங்கையின் குறிப்பிட்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளபோதிலும் ஆய்வின் சில முடிவுகள் வளர்முக நாடுகளில் வேறிடங்களில் இன முரண்பாட்டுப் பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதற்கும் அவற்றுக்கு விளக்கமளிப்பதற்கும் உறுதுணையாக இருக்கக்கூடும்.

இந்த ஆய்வுநூல் இலங்கையின் இன நெருக்கடி பற்றிய ஏழாண்டுகால ஆராய்ச்சியின் பெறுபேறாகும். அது நெருக்கடி பற்றிய உயிரோட்டமுள்ள ஒரு வருணனையையும் விளக்கத்தையும் வழங்குவதுடன் அதற்குத் தூண்டுதலாயிருந்த பல்வேறு காரணிகளையும் நுணுகி ஆராய்ந்து, சமாதானமான வழிமுறைகளில் அதனை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான யோசனைகளையும் முன்வைக்கின்றது.

பல்வேறு காரணங்களின் நிமித்தம் இந்த ஆய்வுநூல் இலங்கையின் இன நெருக்கடி பற்றி எழுதப்பட்ட ஏனைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வற்றிலிருந்து ஓரளவுக்கு வேறுபடுகின்றது. இலங்கையின் இன நெருக்கடியின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில அம்சங்களை மட்டுமன்றி அம்முரண்பாட்டை மிக விரிவான முறையில் ஆராய்கின்ற வகையில் இதுமட்டுமே விளங்குகின்றது. அதேசமயம் முன்னர் எழுதப்பட்டவற்றைப் போன்றல்லாது நெருக்கடியின் இன்றைய சிக்கலான தன்மைகளை வாசகர் மேலும் நன்கு விளங்கிக்கொள்வதற்கு இது உதவுகின்றது.

இந்த ஆய்வின் பிரதானமானதும் முதன்மையானது மான பங்களிப்புகள்:

- இது இலங்கையில் இன முரண்பாட்டின் வரலாற்றுச் சூழமைவு பற்றிய முழு விவரத்தை வழங்குகின்றது.
- இன நெருக்கடியை விரைவுபடுத்துவதில் பின்னிப் பிணைந்து செயற்பட்ட வெளிப்படையான மற்றும் உள்ளார்ந்த காரணிகளை மீளாய்வு செய்வதுடன், அவற்றைப் பகுப்பாய்வும் செய்கின்றது.
- காலனித்துவத்துக்குப் பிந்திய இலங்கை அரசின் மன்னர்குல மரபு சார்ந்த சனநாயகப் பகட்டைத் தோலுரித்துக் காட்டுவதுடன், புத்தகுருமாரின் எதிர்விளைவாக்கப் பங்கையும் வெளிப்படுத்துகின்றது.
- இலங்கைத் தமிழர்களினதும் முஸ்லிம் தமிழர்களினதும் மலைநாட்டுத் தமிழர்களினதும் இன்றைய இக்கட்டுநிலைக்கு, இலங்கையின் கடைசிக் காலனித்துவ ஆட்சியாளர்களான ஆங்கிலேயரின் பொறுப்பை அவர்களுக்கு நினைவூட்டுகின்றது.
- இலங்கையின் இன முரண்பாட்டின் பிராந்திய மற்றும் சர்வதேசப் பரிமாணங்களைக் கவனத்திற் கொண்டு, இந்திய-இலங்கை உறவுகளை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் திறனாய்வு செய்கின்றது.
- 1980களிலும் 1990களிலும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பின்னிய செயல்விளைவுகளை ஆராய்ந்து அவற்றுக்குப் பொருள் விளக்கமளிப்பதன்மூலம் தமிழ் நாட்டுக் காரணியையும் நெருக்கடிக்கு இந்தியாவின் பதிலளிப்பையும் விளக்குகின்றது.





- இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நடுநிலையுடன் திறனாய்வுசெய்வதுடன் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அல்லது அதனைக் கூர்மைப்படுத்துவதற்கான அதன் சாதகமான மற்றும் பாதகமான பங்களிப்புகளையும் நெறிதவறாமல் திறனாய்வு செய்கின்றது.
- தமிழர் இனமுரண்பாட்டைத் தீர்ப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையும் அவை வெற்றியளிக்காததற்கான காரணங்களையும் ஆராய்கின்றது.
- சனநாயக ஆட்சிமுறை மாதிரியொன்றின் அடிப்படையில் நெருக்கடிக்குத் தீர்வொன்றை முன்மொழிகின்றது. அத்தீர்வு ஒத்த நிலைமைகளிலுள்ள வேறு நாடுகளுக்கும் பிரயோகிக்கப்படலாம், மேலும்
- இன்றைய அரசியற் சூழ்நிலையில் முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான ஒரு வழியைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

இலங்கையில் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையிலான பகைமையானது இவ்விரு சமூகங்களினதும் தோற்றத்தையும் வளர்ச்சியையும் சூழ்ந்ததான கடந்தகால வரலாற்று உணர்வுகளைப் பெருமளவுக்கு அடிப்படையாகக் கொண்டுள்ளது. இன முரண்பாடு பற்றிய சிங்களவரின் உணர்வானது பெருமளவிற்குப் புராணக் கதைகளை மையமாகக் கொண்டும் அவர்கள் தாங்களாகவே தேடிக் கொண்ட சிங்களத் தேசியவாதத்தின் அடிப்படையிலும் எழுந்துள்ளது.

சிங்கள மொழி மற்றும் சமயத்தின் அடிப்படையில் அவர்களின் கூட்டு இன அடையாளத்தை வலியுறுத்துகின்ற இலங்கையின் ஆதிகாலச் சிங்களத் தேசியவாதத்துடன் ஒப்பிடுகையில், தமிழ்த் தேசியவாதிகள் இலங்கையை ஒரு பன்மைச் சமுதாயமாகக் கருதினர். ஒப்புக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொள்ளப்பட்ட பன்மைச் சமுதாயக் கோட்பாடு எந்தவொரு சமூகத்தையும் தனித்துவமானதாக அங்கீகரிக்கவில்லை. ஆனால் சமுதாயத்தில் சமத்துவ அந்தஸ்தை அனுபவிக்கின்ற அவர்களின் தெளிவாக வேறுபட்ட அடையாளத்தை ஏற்றுக்கொள்கின்றது. இந்த எண்ணம் தமிழ் மக்களை இலங்கையில் சட்டப்படி சமத்துவம் கொண்ட மதச் சார்பற்ற ஒரு சமுதாயத்தையும் இனக் குழுக்களுக்கிடையில் அரசியல் அதிகாரப் பகிர்வையும் கோருவதற்கு வழிவகுத்தது. தமிழ்த் தேசியவாதிகளின் பன்மைவாத எண்ணக்கருவுக்கு, 1956இல் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் 'சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக இருக்கும்' என்று பிரகடனப்படுத்தி அரசகரும மொழிச் சட்டத்தை ஆக்கியபோது இலங்கையின் சிங்கள உணர்வினால் சவால் விடுக்கப்பட்டு தமிழர்களின் பன்மைவாதம் ஒதுக்கித்தள்ளப்பட்டது. இதனைத் தமிழர்கள் தங்களது சொந்தத் தாயகத்தில் தாங்கள் பகிரங்கமாகப் பாகுபடுத்தப்பட்டதாக உணர்ந்தனர்.

மேலும் சுதந்திரத்துக்குப் பிந்திய காலத்தில் சிங்கள ஆதிக்க அரசாங்கங்களினால் தமிழர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட பாகுபாட்டின் விளைவுதான் தமிழ் ஈழ இயக்கத்தின் தோற்றமென இவ்வாய்வு கண்டுரைத்தது. பல்கலைக்கழகக் கல்விக்கான அனுமதி, அரசாங்க சேவைகளுக்கான ஆட்சேர்ப்பு என்பவை தொடர்பில் தொடர்ந்துவந்த அரசாங்கங்களின் கொள்கைகள் தமிழருக்கு மனக்கசப்பை ஏற்படுத்தின. அத்துடன் அரசாங்கக் குடியேற்றக் கொள்கை தங்களின்; அடையாளத்துக்கு ஓர் அச்சுறுத்தலெனத் தமிழர் உணர்ந்ததுடன் தமது சொந்தப் பாரம்பரியத் தாயகத்தில் தாங்கள் ஒரு சிறுபான்மை அந்தஸ்துக்குத் தாழ்த்தப்படுவோமென்றும் அச்சமடைந்தனர்.

இலங்கையில் ஆளும் கட்சிகள் பெருமளவுக்குச் சிங்கள வாக்கு வங்கியில் தங்கியிருந்ததனாலும் அதற்கே வகைப்பொறுப்புடையனவாக இருந்ததனாலும் அடுத்தடுத்துவந்த எல்லா அரசாங்கங்களும் தமிழர்களுக்கெதிரான அத்தகைய பாகுபாட்டை அத்தியாவசியமானதாகக் கருதின. தொடர்ந்துவந்த அரசாங்கங்களின் பாகுபாடான





கொள்கைகள் சிங்களப் பெரும்பான்மையின் அபிலாசைகளை நிறைவேற்றும் நோக்கையே கொண்டிருந்தன. ஏனெனில் அதுதான் எந்தவோர் சிங்கள அரசியல் கட்சியினதும் இருப்பை உறுதிப்படுத்தியது. எனவே சுதந்திரத்துக்குப் பிந்திய காலப்பகுதியில் சிங்கள இனத்துவ அடையாளத் தோற்றத்திற்கு தமிழர்களுக்கான இடமளிப்பும் செய்யப்பட்டிருந்தால் சிங்களவரின் இன அடையாளம் பற்றிய உணர்வுக் கூறுகள் இன முரண்பாட்டுக்கு வழிவகுத்திருக்க மாட்டா.

சிங்கள ஆதிக்க அரசாங்கங்களின் தமிழருக்கெதிரான தொடர்ச்சியான பாகுபாடும் பழிவாங்கும் நடவடிக்கைகளும் பன்மைச் சமுதாயமென்ற தங்களின் எண்ணத்தைத் தமிழர் மாற்றிக்கொள்வதற்கும் இலங்கையின் அரசியல் அமைப்புமுறையில் தங்களது உரிமையை நிலை நாட்டுவதற்குச் சவால் விடும் நிலைக்கும் அவர்களை நிர்ப்பந்தித்தது. இலங்கையின் அரசியலமைப்புச் சட்டகத்தினுள் நியாயமான சுயாட்சியை முயன்று பெறுவதென்ற தமிழ்த் தலைவர்களின் ஆரம்பகாலக் குறிக்கோள்கள், 1970களில் இனத்தையும் சமயத்தையும் மொழியையும் தெளிவாக வெளிப்படுத்துகின்ற ஓர் ஆட்சிப் பிரதேசத் தளத்தைக் கொண்ட சுதந்திரமான தமிழ் அரசென்ற கனவை நோக்கிப் படிப்படியாக நிலைமாற்றம் பெற்றன.

உயர்கல்வி மற்றும் தொழில்வாய்ப்பு ஆகிய துறைகளில் இலங்கை அரசாங்கத்தின் திட்டமிட்ட பாகுபாட்டுக் கொள்கைகளின் நிமித்தம் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ் இளைஞர் விரக்தியும் மனக்கசப்புமடைந்தனர். எனவே இலங்கையில் ஒரு சுதந்திரமான தமிழ் அரசுக்கான கோரிக்கையைத் தொடக்கிவைத்தாலன்றி சிங்கள ஆதிக்க அரசாங்கம் அவர்களின் பிரச்சினைகளில் கவனஞ் செலுத்தமாட்டாதென அவர்கள் உறுதியாக நம்பினர். 1977 பாராளுமன்றத் தேர்தலின்போது தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர் (த.ஐ.வி.மு) சுதந்திரமான தமிழ் அரசொன்றைத் தாபிப்பதற்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் மக்களின் ஆணையைக் கோரித் தேர்தலில் போட்டியிட்டனர். பிரிவினைக் கோட்பாட்டின் அடிப்படையில் த.ஐ.வி.மு. இலங்கையின் வடக்கு, கிழக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாகாணங்களில் தமிழர் பெரும்பான்மையாயுள்ள எல்லாத் தொகுதிகளிலும் வெற்றிகண்டு அளப்பரிய பெரும்பான் மையைப் பெற்றது. இலங்கையின் வடக்கு-கிழக்கில் தமிழர் களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியுடன் தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழரின் பேரம்பேசும் சக்தியை அதிகரிக் கின்றவகையில் செயல்விளைவுமிக்க அரசியல் தளமொன் றைப் பேணிவளர்த்தனர். இப்பின்னணியில் முரண்பாடு மூர்க்கத்தனமாக உருவெடுத்தது.

இதனைத் தொடர்ந்து சிங்கள ஆதிக்க அரசாங்கம் இன முரண்பாட்டை அரசியல் ரீதியாகவன்றி இராணுவ ரீதியாகவும் இனஆதிக்கரீதியாகவும் அணுகமுற்பட்டது. எனவே அது அரசுக்கெதிரான தமிழ்ப் போராளிகளின் சவாலை இராணுவ அடக்குமுறையால் சந்திக்க முனைந்தது. அரசு அநீதியிழைக்கப்பட்ட தமிழ்ப் போராளிகளின் நோக்கங்களை ஒப்புக்கொள்ளத் தவறியதுடன் பகிரங்க மோதலுக்கும் அவர்களை நிர்ப்பந்தித்தது. இது மனதளவில் பாதிப்படைந்த இரு சமூகங்களினுள்ளும் இன உணர்வு களுக்கும் அடையாளம் பற்றிய உணர்வுகளுக்கும் உர மூட்டியது. இச்செயல்முறையின்போது தமிழ்ப் போராளிக் குழுக்கள் சுய நிர்ணய உரிமைக்கான தங்களின் போராட் டத்தைத் தொடர்ந்ததனால் அது பாரதூரமான இன மோதலுக்கு வழிவகுத்தது. இந்நீடித்த மோதல், நடை முறையில் ஒரு சிவில் யுத்தத்தின் பரிமாணங்களைப் பெற் றுள்ளதுடன் இலங்கையின் பாதுகாப்புக்கும், உறுதிப் பாட்டுக்கும், ஒருமைப்பாட்டுக்கும் பாரதூரமான அச்சுறுத் தலையும் ஏற்படுத்தியுள்ளது.

எந்தவோர் அரசியல் கலாச்சாரமும் சகிப்புத்தன்மை யற்றதகாவோ, சமுதாயத்தினால் ஆழமாக உணரப்படும் நெருக்கடி அனுபவங்களிலிருந்து விலகிநின்று நிலைத் திருக்கவோ, உருப்பெறவோ முடியாது. 1970களின் பிற் பகுதியிலிருந்து இலங்கையின் நாளாந்த அனுபவம் வன் முறையையும், அழிவையும், பகைமையையும், வெறுப்பையும், பொறாமையையும் மையமாகக்கொண்டதாக இருந் துள்ளது. அளவுக்குமீறிய சகிப்புத்தன்மையால் ஏற்பட்ட நிச்சயமற்றநிலை என்ற அச்சஉணர்வும் கவலையும் வன் முறையாகவும் வன்முறை சார்ந்த அச்சமாகவும் மாற்ற





மடைகின்றன. அந்தளவுக்கு வன்முறையால் கபளீகரம் செய்யப்பட்டுள்ள இலங்கை ஒரு வழமையான சமுதாய மல்ல. அது உறுதியானவற்றைக்கூட ஆட்டம்காணவைப்ப தாக உள்ளது அவரவர் தங்கள் நியாயங்களை ஆயுத முனையில் அர்த்தம்கொள்வதால் இன அரசியலானது அரசிலையே அச்சமடையச் செய்துள்ளது. ஒருசிலரின் தீவிர நிலைப்பாடுகள் செய்திப் பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளாக இடம் பிடிக்கின்றபோதும் மிதவாதம் கண்டிக்கப்படுகின்ற அல்லது ஏளனப்படுத்தப்படுகின்ற போதும் ஒரு சனநாயக அரசியல் கலாச்சாரத்தின் அடிப் படைகள் எவ்வளவுதூரம் செயலிழக்கச் செய்யப்பட் டுள்ளன என்பதை அளப்பதற்கு வேறு அளவுகோல்களைத் தேடவேண்டிய அவசியமில்லை.

ஒருமுழுமையான சூழ்நிலையில், தொலைநோக்குப் பார்வையுடன் பல்வேறு முரண்பாடுகளைக் கொண்ட அரசியல் கூட்டே அரசு எனப்படுகிறது. அந்த தொலை நோக்குப் பார்வையானது சிங்கள மக்களாலும் தமிழ் மக்களாலும் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டியதாகும். அப்படிப் பகிர்ந்துகொள்ளப்படவேண்டிய தொலை நோக்குப் பார்வையானது இன்றும் எட்டாத தூரத்திலேயே உள்ளது. குறிப்பாக இனங்களுக்கிடையில் அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வது என்பது மிகவும் அதிகபட்சமாக எதிர்க்கப்பட்டதும் மிகக்குறைந்த பட்ச மாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான அணுகுமுறையாக உள்ளது. இலங்கை மிக நெருக்கமாகப் பின்பற்றிவந்துள்ள சனநாயக அரசியல் கலாச்சாரமானது இனத்துவத்தின் அடிப்படையில் அதிகாரம் பகிர்ந்துகொள்ளப்படுதலை முற்றுமுழுதாக நிராகரிக்கின்றது. சனநாயக நிறுவனங் களையும் நடைமுறைகளையும் சுதேசமயமாக்கலும் நாட்டுச் சூழலுக்கு ஏற்புடையதாக்கலும் ஆகிய செயற்பாடுகள் முற்றுமுழுதாக பிரிவினை நலன்களுக்குப் பயன்படுகின்ற முறையில் இடம்பெற்றுள்ளன. இதுவே பெரும்பான்மை ஒற்றையாட்சி வாதத்துக்கும் சிறுபான்மைப் பிரிவினை வாதத்துக்குமான மூலகாரணமாகும்.

அரசியலில் இன ஏகபோகத்துக்கு எதிரான உறுதி யான பாதுகாப்பு இல்லாமையே இலங்கை இன்று எதிர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோக்கியுள்ள முக்கியமான பிரச்சினையாகும். காலனித்துவத்துக்குப் பிந்திய தேசிய அரசு தனக்கே உரிய பாணியில் அத்தகைய பாதுகாப்புக்களை எல்லாம் அழித்துவிட்டது. அவற்றை மீளக் கட்டியெழுப்புவதற்கு அரசியலில் இனத்துவத்தை ஏற்றுக்கொள்கின்ற அதேவேளையில், இனத்துவத்துக்கு அப்பாற்பட்டதான ஒரு புதிய அரசியல் கலாச்சாரத்தையும் கட்டியெழுப்ப வேண்டும். ஆனால் இதில் பாரிய பிரச்சினையொன்றுள்ளது. வரலாற்றை உற்று நோக்கும்போது அத்தகைய ஒரு பார்வையை வழங்கக் கூடிய அரசியல் சித்தாந்தம் எதுவும் தென்படவில்லை.

இலங்கையின் நீடித்த முரண்பாடு இலங்கையினுள் வழமையான வாழ்க்கையையும் உறுதிப்பாட்டையும் பாதித்ததுடன் மட்டுமன்றி, இலங்கையிலிருந்து இந்திய மாநிலமான தமிழ் நாட்டுக்குத் தமிழ் அகதிகள் சென்றதன் விளைவாக இந்தியாவின் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார வாழ்வையும் பாதித்ததென்று இந்த ஆய்வின் மூலம் தெரியவருகின்றது.

இலங்கையின் இனமுரண்பாட்டில் இந்தியா மூன்று பங்குகளை வகித்திருந்தது. அவற்றில் முதலாவதாக, 1980 இல் இந்திரா காந்தி மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் இந்தியாவில் செயற்பட்டுக்கொண்டிருந்த இலங்கைத் தமிழ் அரசியல் குழுக்களுக்கு மறைமுக உதவிகள் தீவிரமடைந்தன. இம்மறைமுக ஆதரவு 1987 வரை தொடர்ந்தது. இரண்டாவதாக, இலங்கை விவகாரங்களில் இந்தியாவின் சிக்கலான பங்கில் தமிழ்நாட்டுக் காரணி ஒரு முக்கிய அம்சமாயிருந்தது. மிக அபூர்வமாகத்தான் ஒரு நாட்டின் ஆக்கக்கூறு (ஒரு மாகாணம் அல்லது மாநிலம்) அந்நாட்டிற்கும் அயல் நாடொன்றுக்கும் இடையிலான உறவில் அத்தகைய தீவிரமான செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. எனவே சர்வதேச விவகாரங்களில் இந்தியா - தமிழ்நாடு - இலங்கை உறவு தனித்துவமானது. இந்தியாவின் சொந்தப் பங்களிப்பானது வெறுமனே தமிழகத்தின் அரசியல் கொள்கைகளால் கொடுக்கப்பட்ட அழுத்தங்களுக்கு பதிலளிப்பதாக மட்டுமன்றி மிகவும் சிக்கலானது என்பதை மறுக்கமுடியாது. இருப்பினும் தமிழகத்தின் அக்கறைகளும் ஒரு முக்கிய காரணமாயிருந்துள்ளன. தமிழ்நாட்டின் மாநில அரசாங்கம்





இலங்கைத் தமிழ்ப் போராளிகள் தங்குவதற்கு அனுமதி வழங்கியதுடன் பயிற்சித் தளங்களையும் வழங்கியது. இந்திய மத்திய அரசாங்கம் இதில் சம்பந்தப்பட்டிருந்ததுடன் பயிற்சி வசதிகள் வழங்கப்படுதலையும் நாட்டின் பிற பகுதிகளில் முகாம்களும் தளங்களும் இருத்தலையும் சகித்துக் கொண்டது. இந்நடவடிக்கைகள், 1980களின் தொடக்கத்தில் இந்திரா காந்தியுடன் ஆரம்பமாகின.

இந்தியாவின் மூன்றாவது பங்களிப்பு - ஒரு மத்தியஸ்தம் வகிக்கும் பணி - இலங்கையில் 1983 யூலை தமிழர் விரோதக் கலவரங்களுக்கு ஒரு திட்டமிட்ட அரசியல் பதிலளிப்பாக திருமதி காந்தியின்கீழ் தொடங்கியது. இக்கொள்கை ராஜீவ் காந்தியின்கீழும் தொடரப்பட்டது. இந்தியாவின் கொள்கையானது 1987இன் பிற்பகுதியில் மத்தியஸ்தம் வகிப்பதிலிருந்து முரண்பாட்டில் தீவிர பங்கேற்பாளராக மாற்றமடைந்து 1990களின் நடுப்பகுதிவரை தொடர்ந்தது. உண்மையில் மத்தியஸ்தம் வகிக்கும் அயல்நாடொன்று தன்னைப் பாதுகாவலராகக் கருதிய சிறுபான்மையின் ஒரு பிரிவினருக்கெதிராகப் போராடுபவராகவும் யுத்தம் புரிபவராகவும் பங்கேற்கும் நிகழ்ச்சி மிக அரிதாகத்தான் இடம்பெற்றுள்ளது. எனவே இந்தியாவின் மத்தியஸ்தமானது இன முரண்பாட்டில் மத்தியஸ்தம் பற்றிய வரலாற்றில் ஏறக்குறையத் தனித்துவமானது.

தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கு உதவி வழங்கியதன் மூலம் இந்தியத் தலையீடு ஆரம்பமாகியது. இவ்வுதவி பகுதியளவில் இலங்கை அரசாங்கம் அதன் உபாயத்தை மாற்றுவதற்கும் இந்திய ஆதரவின்கீழ் தீர்வொன்றைப் பேசித் தீர்ப்பதற்கும் அதனை நிர்ப்பந்திக்கின்ற அல்லது இணங்கவைக்கும் வகையில் போராட்டத்தைத் தளராது தொடர்வதற்கு வழங்கப்பட்டது. 1987இல் இந்திய அரசாங்கம் முரண்பாட்டைத் தாங்களே தீர்த்துக்கொள்ளும் வகையில் ஒரு மத்தியஸ்தராகச் செயற்பட்டு முரண்பாட்டுடன் தொடர்புடைய ஒரு தரப்பினருக்கோ அல்லது சில தரப்பினருக்கோ அல்லது அனைத்துத் தரப்பினருக்குமோ தேவையானவற்றை வழங்கி முரண்பாட்டுத் தீர்விற்கான எழுத்துபூர்வமான தீர்வை எட்ட முனைந்தது. இச்செயல் முறையினால் இந்தியா 'எல்ரீரீஈ'க்கும் சில சிங்கள அரசியல் கட்சிகளுக்கும் ஒரு பொதுவான எதிரியாகியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இனமுரண்பாட்டைச் சர்வதேசமயமாக்குவதால் வரும் விளைவுகள், பாதிக்கப்பட்ட தரப்புக்கள் எதிர்பார்த்ததைப் போன்று இருக்கத்தேவையில்லை என்பதை இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியத் தலையீடு உணர்த்துகின்றது. உண்மையில் அத்தலையீடு பயனாளிகளெனக் கருதப்பட்டவர்களுக்கு அனுகூலமானதாக இருக்கவில்லை. முற்றிலும் மாறாகச் சர்வதேசமயமாக்கல், முரண்பாட்டை மேலும் நீடிக்கச் செய்திருக்கக்கூடுமென்பதுடன் முரண்பாட்டுக்கான தரப்புகளில் அனேகமானவற்றைக் கட்டுக்குள் கொண்டுவர முடியாமலும் ஆக்கியிருக்கும். மீண்டும் பெரிய பிராந்திய அல்லது உலக அரசுகள் அனுசரணையாளர்கள் அல்லது வழங்குநர்கள் என்ற பங்கை வகிப்பனவாக உள்நாட்டு இனப் பிணக்கொன்றில் புகுகின்றபோது வெளிப்புறப் போட்டியாளர்களின் நலன்கள் முரண்பாட்டின் மூலவிடயங்களைப் புறந்தள்ளிவிடக்கூடும்.

இலங்கையின் இன முரண்பாட்டில் மத்தியஸ்தராகவும் தலையீட்டாளராகவும் செயற்பட்ட இந்தியாவின் பங்கிலிருந்து வெளிப்படுகின்ற கண்டிப்பான படிப்பினையானது பெரும்பாலான வெளிப்புறச் சக்திகள் அவற்றின் சொந்த அரசியல் முறைமையிலிருந்தும் அவற்றுக்கிருப்பதாக அவை எண்ணுகின்ற அரசியல் அனுபவத்திலிருந்தும் உதாரணமாகக்கொள்கின்ற வகையில் வழங்குவதற்கு எதுவுமில்லை என்பதாகும். லெபனானில் இஸ்ரேலும் சிரியாவும் கற்றுக்கொண்டவாறு, அயல் நாடொன்றின் இன முரண்பாட்டினுள் பிராந்திய அரசின் கவனத்தை ஈர்ப்பது பிராந்திய அரசைத் தவறிழைக்கச் செய்துவிடும். மற்றுமொரு வெளிப்புற மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு அதனைப் பரிசீலனை செய்வதற்குக்கூட இலங்கை அரசாங்கத்தின் தயக்கமானது இந்திய மத்தியஸ்தத்தின் முனைப்பான தோல்வியிலிருந்து எழுகின்றது.

இலங்கையில் தமிழர் பாரபட்சமாக நடத்தப்படுவதிலிருந்து உதயமான இனமுரண்பாட்டின் புரையோடிப்போன நிலைமை, எப்போதாகிலும் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுப்போடும் வகையிலான தீர்வைத் தவிர, நீண்டகாலம் கவனிக்கப்படாது விடப்பட்டது. 1980களின் தொடக்கத்தில் மட்டுப்படுத்தப்பட்ட நிருவாகப் பரவலாக்க முன்மொழிவு





கள் குறித்து ஆலோசிக்கப்பட்ட தருணத்தில் தமிழ்த் தலைமைத்துவம் போராளிகளிடம் கைமாறிவிட்டது அவர்கள் வழங்க முன்வந்தவற்றை மிகக் குறைந்ததாகவும் காலங்கடந்ததாகவும் கருதினர். 1983 யூலையில் தமிழர் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து இலங்கையில் தேசிய முரண்பாடு மேலும் மோசமான போக்கில் திரும்பியது. அத்தாக்குதல்களுக்குப் பதிலாக இத்தாக்குதல்கள் என்று தமிழ்ப் போராளிக் குழுக்களை இராணுவ ரீதியில் பதிலளிக்க வழிவகுத்ததால் இன்றளவும் சாத்தியமான தீர்வெதுவும் பார்வைக்கெட்டாதவகையில் தொடர்கின்றது.

இன முரண்பாடு மற்றும் பாதுகாப்பு ஆகிய இரு விடயங்களிலும் இந்தியா சம்பந்தப்பட நேர்ந்ததனால் இரு விடயங்களையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்ப்பது அடிக்கடி சிரமமானதாக இருந்தது. இந்தியாவின் முதலாவது பதிற்செயல் தமிழ்நாட்டில் அடைக்கலம் புகுந்த பல்வேறு போராளிக் குழுக்களுக்கு ஆயுதங்களும் பயிற்சியும் வழங்குதலாயிருந்தது. இவ்வாயுதக் குழுக்கள் இலங்கையில் ஆயுதப் படைகளுக்கெதிரான தமது போராட்டத்தைத் தொடரும்பொருட்டு இலங்கைக்குத் திரும்பிச் சென்றன. அதேசமயம் இந்தியா மத்தியஸ்தச் செயல்முறையொன்றையும் தொடக்கிவைத்தது. அதன் உச்சக்கட்டமாக 1987 யூலை 29ஆம் தேதியன்று இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. பேச்சுவார்த்தையானது இனப் பிரச்சினை, மற்றும் பாதுகாப்பு விடயங்கள் ஆகிய இரண்டு விடயங்களையும் உள்ளடக்கியதாக இருந்தது.

1985இல் இந்தியா ஏற்பாட்டாளராகச் செயற்பட்ட வெற்றியளிக்காத திம்புப் பேச்சுவார்த்தைகளில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ்க் குழுக்கள் முதல் முறையாக உத்தியோகபூர்வமாகக் கலந்துகொண்டன. மீண்டும் 1987இல் இந்திய-இலங்கை ஒப்பந்தம் தொடர்பான பேச்சுக்களிலும் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இலங்கைத் தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கு ஆயுதங்களும் பயிற்சியும் வழங்கியதன் ஊடாக இந்தியாவின் ஊக்குவிப்பு அடிக்கடி விமர்சனத்திற்குள்ளானது. எனினும் 1983-87 காலப்பகுதியில் உள்நாட்டு இராசதந்திரத்தில் இந்தியர்கள் ஈடுபடுத்தப்பட்டு அனைத்துக் கட்சிகளுடனும் தொடர்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வழிகள் உருவாக்கப்பட்டதால் இக்காலப்பகுதி தீவிர ஆய்விற்குட்படுத்தப்பட்டது. எல்ரீரீஈயை அமைதிப்படுத்து வதற்கு இந்தியா தனது இராசதந்திர மற்றும் இராணுவ ஆற்றல்கள்மீது அதீத மதிப்பு வைத்திருந்ததன் காரணமாக இறுதியில் அவை தோல்விகண்டன. எனினும் இலங்கைக்கு மாகாண சபைகளை முறைப்படி அறிமுகப்படுத்திய இந்திய-இலங்கை ஒப்பந்தம், தொடக்கத்தில் தெற்கின் சில பகுதிகளிலிருந்து கிளம்பிய கடுமையான எதிர்ப்பின் மத்தி யிலும், 'ஏற்றுக்கொள்ளத்தக்க' விவாதம் இடம் பெறக் கூடியதாக அதன் எல்லைகளை விரிவுபடுத்தியது. இவ்வெதிர்ப்பு காலப்போக்கில் மறைந்துபோனதுடன், 1998இல் சிங்களத் தேசியவாதக் கருத்துக்களைப் பிரதி நிதித்துவப் படுத்துகின்ற சிங்கள ஆணைக்குழு, அரசாங் கத்தின் அதிகாரப் பகிர்வுப்பொதி பற்றிய அதன் இடைக் கால அறிக்கையில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிர தான ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்கின்றதென்றும் சுட்டிக் காட்டியது.

இந்திய-இலங்கை விவகாரங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாகச் சுட்டிக்காட்டப்படும் இரு விடயங்கள், 1980களில் சர்வதேசமயமாக்கப்பட்ட இலங்கையின் இன முரண்பாடும், இந்தியாவின் பாதுகாப்பைத் தொடர்ந்து கவலைகொள்ளச்செய்யும் வகையில் வளர்ந்து வந்த இரு நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கைகளுக்கிடையிலான ஒத்திசைவின்மையுமாகும்.

இலங்கையின் ஆயுத மோதலைப் பேச்சுவார்த்தை மூலமாக முடிவுக்குக் கொண்டுவருவதற்குப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், அவைகள் வெற்றியளிக்கவில்லை. அப்பேச்சுவார்த்தைகள் வெற்றிக்கு அவசியமான நான்கு அடிப்படை அம்சங்களை எவ்வாறு நிறைவேற்றத் தவறிவிட்டனவென்பதை அடுத்துவரும் பிரிவிலுள்ள சில எடுத்துக்காட்டுகள் விளக்குகின்றன. சமாதானத்தை உருவாக்குவது என்பது பன்முகப்புக் கொண்ட பலமட்ட நடவடிக்கையாகும். தலைமைத்துவப் பிரமுகர்கள் அனைத்துக் கட்டங்களிலும் பகிரங்கமாகப் பேச்சுவார்த்தை நடத்தியதுடன் பல்வகைப்பட்ட பங்காளர் களும் பங்குபற்றியதனால்தான் வட அயர்லாந்தின் பெரிய





வெள்ளி உடன்படிக்கையும் புதிய தென்னாபிரிக்காவும் சாத்தியமாயிற்று. தலைவர்கள் மட்டும் சந்தித்து அதன் மூலம் இரு தரப்பினரும் உரிமைகொண்டாட முடியாத வெற்றி என்று அவர்கள் சந்தைப்படுத்தக்கூடிய ஒரு பேரத்தை எட்டிவிடுவதனால் மட்டும் சமாதானம் வந்து விடாது.

இலங்கையானது கிழித்தெறியப்பட்டதும், முறிந்து போனதுமான உடன்படிக்கைகளின் வரலாற்றைக் கொண் டுள்ளது. 1983க்கு முன்னர் அரசியலமைப்புச் செயல்முறை யினுள் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் அடுத் தடுத்துவந்த அரசாங்கங்களால் முறித்துக் கொள்ளப் பட்டதன்மூலம் கௌரவிக்கப்பட்டன. 1983 முதல் அரசிய லமைப்புச் செயல்முறையினுள் ஒரு தொடரான முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன- சர்வகட்சி மாநாடு களும், பாராளுமன்றக் குழுக்களும், மேலும் அரசியலமைப் புச் செயல்முறைக்கு வெளியே இயங்கிய ஆயுதந்தரித்த தமிழ்ப் போராளிக் குழுக்களையும் உள்ளடக்கிய பேச்சு வார்த்தைகளும் இடம்பெற்றன. அந்நேரத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் அனைத்தும் அனைத்துத் தரப்பின ராலும் கைவிடப்பட்டு உடன்படிக்கைகள் அனைத்தும் காற்றில் பறக்கவிடப்பட்டன. இம்முறிந்த உடன்படிக்கைகள் இன்றைய அரசாங்கத்தையும் நிழல்போல் தொடர்கின்றன. உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்தத் தவறியமை அனேகத் தமிழர்களை பேச்சுவார்த்தைகளின் மீதே நம்பிக்கையிழக்கச் செய்துள்ளதுடன் யுத்தநிறுத்த உடன் படிக்கைகளை மதிப்பதற்கான தமிழீழ விடுதலைப் புலிகளின் நோக்கம் குறித்து அரசாங்கமும் சந்தேகம் கொண்டுள்ளது. எனவே பேச்சுவார்த்தைக்குப் பிந்திய கட்டத்தில் உடன் படிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுதலைக் கண்காணித் தலும் உடன்படிக்கைகளைக் கண்காணிப்பதற்கான ஏற்பாடு களும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு மிக முக்கிய மானவை.

1990இன் பின்னர் எல்ரீரீஈ மட்டும்தான் இலங்கை அரசாங்கத்துடன் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த போராளிக் குழுவாக எஞ்சியிருந்தது. 1990இல் சனாதிபதி பிரேமதாச வாலும் 1994-95இல் சனாதிபதி சந்திரிகாவாலும் 2002



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெப்ருவரி முதல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவாலும் எல்ரீரீஈயுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உத்தியோகபூர்வ ஆவணங்கள் அல்லது அறிக்கைகள் மிகக்குறைவாகவே கிடைக்கின்ற போதிலும், இக்காலப்பகுதிகள் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பவர்களுக்கு மிகுந்த அறிவாற்றலையும் ஆழமானபார்வையையும் கொடுப்பனவாக உள்ளன.

சில ஆய்வாளர்கள் தமிழ் ஆயுதக் குழுக்கள் பிரதான பாத்திரமேற்று எழுச்சிபெற்றுத் தமிழ் அரசியற் கட்சிகளை இருட்டடிப்புச் செய்தவுடன் பாராளுமன்றத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் தமிழ் அரசியல் கட்சிகளின் பங்களிப்பைப் புறந்தள்ளிவிட எண்ணுகின்றனர். பாராளுமன்றத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகள் மட்டும் பிரச்சினையைத் தீர்க்க மாட்டாதென்றும் சமாதானச் செயல்முறையொன்று அவற்றின் அடிப்படையில் மட்டும் முழுமையாக அமையாதென்றும் கூறுதல் நியாயமானதே. இருந்தபோதிலும், பேச்சுவார்த்தைகளுக்கான தயாரிப்புகளில் அத்தகைய நடவடிக்கைகள் சிறந்த பங்காற்றமுடியும் என்பதைக் குறைத்து மதிப்பிடக் கூடாதென்பதும் முக்கியமானதாகும். அவை அதிகாரப்பகிர்வுத் திட்டத்தையும் எதிரியுடனான பேச்சுவார்த்தையையும் சுமுகமாக்கும் என்பதுடன், அரசியற் சமூகத்தைச் சமாதானத்தை நோக்கி நகர்த்தவும் தொடங்கும்.

சமாதானச் செயல்முறைகள் தளராது தொடர்வது அனைத்துச் சமூகங்களினதும் உறவுகளில் நிலைமாற்றம் அடைவதில் தங்கியிருக்கிறது. அவைகளை ஆயுதம் தாங்கியுள்ள இருதரப்பினரின் கைகளில் மட்டும் முழுமையாக விட்டுவிட முடியாது. சமாதான இயக்கத்தில் தீவிரமாகச் செயற்படுகின்ற பிரசைகள் அடிக்கடி ஓரங்கட்டப்படுகின்றனர். ஏனையோர் பிளவுபட்டிருக்கின்றவர்கள் மத்தியில் தொடர்பை ஏற்படுத்துபவர்களாகவும் கருத்துப் பரிமாற்றங்களுக்கான தொடக்க வழிகளை ஏற்படுத்தும் நிலையிலும் உள்ளனர். இலங்கையில் இப்பங்கைத் திருச்சபைகள் நிறைவேற்ற முனைந்ததுடன் 1998-99இல் வர்த்தகச் சமூகமும் இதில் ஈடுபட முயற்சித்தது. பேச்சுவார்த்தைகளை வெற்றியடையச் செய்வதற்கு அச்செயல்





முறையுடன் இணைந்து செயற்படுகின்ற துணை வலையமைப்பொன்று தேவைப்படுகின்றது. தொடக்கத்தில் சமாதான முன்மொழிவுகள், தொடர்பாடலுக்கான மாற்று வழிகளை உருவாக்குதல், பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தும்படி அதில்பங்கேற்றுள்ளவர்களுக்கு அழுத்தங்கொடுத்தல், உடன்பாடு எட்டப்படுதலையும் அவற்றை நடைமுறைப்படுத்துதலையும் வலியுறுத்தல் ஆகிய அனைத்தும் மிக முக்கியமான பங்களிப்புகளாகும். எனினும் இலங்கையின் விடயத்தில் இக்குரல்கள் வலுக்குறைந்தனவாக இருந்துள்ளன.

முரண்பாட்டுத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக் கோட்பாடு மற்றும் நடைமுறை குறித்து இலங்கையின் கடந்த கால அனுபவங்கள் மதிப்புமிக்க ஆழமான கருத்துக்களை வழங்குகின்றன. எனினும் இவ்வனுபவங்கள், பிரதானமாக முரண்பாட்டுத் தீர்வுக்கான செயல்முறை முழுமையாக அதன் இயல்பினை வெளிப்படுத்துவதால், பேச்சுவார்த்தை மூலமான சமாதானத்துக்கு எதிரான வாதங்களுக்கு ஆதரவாகவும் எடுத்துக்காட்டப்படலாம். இராணுவத் தோல்விகள் பொதுவாக இராணுவத் தீர்வுகளுக்கான வாதங்களுக்கு முட்டுக்கொடுப்பதற்குப் பயன்படுத்துகின்ற அதே வேளையில், பேச்சுவார்த்தை மூலம் எட்டப்படுகின்ற தீர்வை எதிர்ப்பவர்கள் பேச்சுவார்த்தைகள் எப்போதும் தோல்வியில் முடிவடைய வேண்டும் என்பதில் ஆர்வமாக இருக்கின்றனர். இப்புரியாத புதிர் ஒருபுறம் இருக்கட்டும், உண்மையில் தோல்வியடைந்த பேச்சுவார்த்தைகள் இறுதி வெற்றிக்கான ஆக்கபூர்வமான படிப்பினைகளை வழங்குகின்றன. இவ்வாறு கூறுவது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தோன்றக்கூடியபோதிலும், பேச்சுவார்த்தைகள் மூலமாகச் சமாதானத்தை ஏற்படுத்துதல் யுத்தத்தின் மூலம் வெற்றியைத் தேடுவதைப்போன்றே அதேயளவு சிக்கலானதென்று கூறுவதும் இங்கு அவசியமாகிறது. இலங்கையின் கடந்த காலப் பேச்சுவார்த்தைகளின் தோல்விகளிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய படிப்பினைகள் அனைத்தையும் சுருங்கச் சொல்வதாயின் சமாதானத்தைப் போதியளவு தந்திரோபாயமாகக்கொள்ளாவிடில் முரண்பாட்டுப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கும் சாத்தியம் குறைவானதென்று சொல்லமுடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு பக்கத்துக்கு இராணுவ வெற்றி இல்லாமல் இனச் சமாதான ஒப்பந்தமொன்றை வெற்றிகரமாகப் பேசித்தீர்ப் பதற்கு மூன்றாந்தரப்பின் தலையீடு தேவைப்படும். மூன்றாந் தரப்பு முக்கிய கதாபாத்திரங்களைவிடப் போதுமான அளவு கூடிய அரசியல் பலம் கொண்டதாகவும் ஒரு உடன்படிக்கையை எட்டுவதில் உறுதியான அக்கறையுடைய தாகவும் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற் குத் தேவையான அளவு வளங்களை ஈடுபடுத்துவதில் விருப்பமுடையதாகவும் இருக்க வேண்டும். குழு மத்தியஸ் தத்திற்குப் பெரும் வல்லரசுகளின் துணையிருக்குமாயின் ஐக்கிய நாடுகள் அல்லது 'ஆசியான்' மற்றும் 'சார்க்' போன்ற ஒரு பிராந்தியக் குழு மூன்றாந்தரப்பின் பங்கை வகிக்க முடியும் (வூல்பேர்ஸ் 1985 மற்றும் ஸ்கீமன் அன்ட் ஃபோர்ட் 1985).

இராணுவப் பலத்தைப் பயன்படுத்தித் தீர்வொன்றைத் திணிக்க முயற்சிப்பதை மூன்றாந்தரப்புத் தலைவர்கள் தடுத்து நிறுத்த வேண்டும். முக்கிய கதாபாத்திரங்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளின் கீழ், நடுநிலையான அமைதிகாக்கும் படைகளைப் பயன் படுத்துதல் ஒரு தற்காலிக வழிமுறையாக இருக்கலாம். பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளும் மூன்றாம் தரப் பினர்கள், முக்கிய கதாபாத்திரங்களுக்கிடையில் கருத்துப் பரிமாற்றங்களை ஏற்படுத்துதல் நம்பிக்கையைக் கட்டி யெழுப்புதல் பரஸ்பரம் அக்கறையுள்ள விடயங்களை அடை யாளம் காணல் ஆகியவற்றில் ஈடுபாட்டுடனும் கடமை யுணர்வுடனும் செயல்படுபவர்களாக இருக்க வேண்டும்.

இருபத்தோராம் நூற்றாண்டு தொடங்குகின்ற வேளை யில் அரசியல் தலைவர்களின் ஒரு புதிய சந்ததி, இனரீதி யாகத் தம்முள் மாறுபட்ட தன்மையுடைய தேசங்களின் அரசியலமைப்பு மற்றும் நிறுவனம் சார்ந்த வடிவமைப்புப் பிரச்சினைகளுடன் மல்லாடிக்கொண்டிருக்கின்றது. இத் தலைவர்கள் இன முரண்பாட்டுக்கான காரணங்கள் பற்றி யும் நிறுவனஞ் சார்ந்த மாற்றுக் கட்டமைப்புகள் எவ்வாறு இனப்பதற்றங்களைத் தணிக்க அல்லது மேலும் அதிகரிக்கச் செய்ய முடியும் என்பது பற்றியும் ஆழமான புரிந்துணர் வைக் கொண்டிருப்பதும் அவசியமாகும். மேலும் இனப்





பதற்றங்களைப் பலவந்தமான முறையில் தீர்ப்பதற்காகக் கொடுக்கவேண்டிய விலையையும் அதன் பலன்களையும் எதார்த்தமாக மதிப்பீடு செய்வது அவசியமாகும். பதற்றம் மோதலுக்கு வழிவகுக்கின்றபோது போரிடுகின்ற குழுக் களின் தலைவர்களும் புரிந்துணர்வை ஏற்படுத்தக்கூடிய மூன்றாந்தரப்புத் தலையீட்டாளர்களும் எந்தெந்த உபாயங் கள் பேச்சுவார்த்தையிலும் மத்தியஸ்தத்திலும் அதிக பலனளிக்கக்கூடுமென்பதை அறிந்திருக்கவேண்டும்.

தமிழர்களுடனான பேச்சுவார்த்தைகளைப் பொறுத்த வரையில், இலங்கையில் நிலவும் இனமுரண்பாட்டைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்குப் பல்வேறு அடிப் படைத் தடைகள் உள்ளன. கட்சியினுள் கருத்தொருமைப் பாடு இல்லாமை, பிணக்கின் நிலையிலிருந்து வெகுதூரம் சென்று அடியில் புதைந்துகிடக்கின்ற தேவைகளையும் அக்கறைகளையும் ஆராயத் தவறியமை மற்றும் உளவியல் தடைகள் என்பவை கடப்பதற்குக் கடினமான தடைகள். மூன்றாந்தரப்பொன்று இத்தடைகளை வெற்றிகொள்வ தற்கு அரசாங்கத்துடனும் எல்ரீரீஈயுடனும் சேர்ந்து செயற் பட முடியும். இருவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சாத்திய மான முடிவை எட்டுவதில் மூன்றாந்தரப்பின் தெரிவு களைக் கவனமாகப் பரிசீலனை செய்தல் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு ஒரு கடினமான செயலாக இருக்கும்.

பேச்சுவார்த்தை மேசைக்குப் போவதற்கான வழியும், பேச்சுவார்த்தையும் உத்தியோகபூர்வ மற்றும் உத்தியோகப் பற்றற்ற முறையில் ஆக்கபூர்வமாக இணைக்கப்பட்ட செயல் முறைகள் ஊடாகக் கட்டம் கட்டமாக இடம்பெறவேண் டும். இத்தகைய செயல்முறைகள் பேச்சுவார்த்தைக்கு முந்திய கட்டத்தில் குறைந்த உந்துசக்தியுடன் ஏற்பாடு செய்யப்பட்டு அதன் மூலம் பேச்சுவார்த்தைக்கான பாதையை அமைப்பதில் தொடங்கி, பேச்சுவார்த்தைச் செயல் முறையின்போது முக்கியமான விடயங்களில் அதிகரித்த உந்துசக்தியுடன் உத்தியோகபூர்வமாகச் செயல் படுவதில் முடிவடையலாம்.

இலங்கையில் இனரீதியாக அழுத்தமான இருதுருவங் கள் காணப்படக்கூடும். பிளவுபட்ட இச்சமூகங்கள் அவற் றின் வேறுபாடுகளைக் களைந்து சமாதானத்தைத் தழுவச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்வதற்கு ஒருவரால் முடியாவிட்டால் இப்போது நாட்டுக்கு வெளியேயுள்ள தமிழர்களினதும் சிங்களவர்களினதும் ஆதரவை முயன்றுபெறுவதைப்பற்றி அவர் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பொதுவாக மோதல் அரங்கிலிருந்து ஒருவர் விலகியிருக்கும்போது அவர் தெளிந்த அறிவுடனும் அதிகம் உணர்ச்சிவசப்படாதவராகவும் பொறுப்புடன் செயலாற்ற முடியும். இலங்கைக்கு வெளியேயுள்ள தமிழர்களினதும் சிங்களவர்களினதும் ஆதரவு சமாதானச் செயல்முறையை முன்னோக்கி நகர்த்துவதில் உறுதுணையாக இருக்கும். அத்துடன் அது நாட்டினுள் இருக்கின்ற கடும்போக்காளர்கள் தங்களின் கருத்துக்களை மீள்பரிசீலனை செய்வதற்கும் வழிவகுக்கும்.

உலகின் ஏனைய பகுதிகளில் அமைதிப் பேச்சுவார்த்தைக்கான நகர்வுகள் நீண்டநாட்களுக்கு முன்னர் அரசியல்வாதிகள் ஈடுபட்டிருந்த பேச்சுவார்த்தைகள் எந்த ஒரு முடிவும் எட்டப்படாமல் தேங்கியிருந்த நிலையில் விடுதலை இயக்கங்களுடன் மட்டும் அடிமட்டநிலையிலிருந்து தொடங்கப்பட்டிருக்கின்றன. செல்வாக்குள்ள தனிப்பட்டவர்கள், தொழிற்சங்கங்கள், வியாபாரத்தில் முன்னணி வகிப்போர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவை விடுதலை இயக்கங்களுடன் பேச்சுக்களைத் தொடக்கி வைத்துள்ளன. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மீதான தடை நீக்கப்படுவதற்கு முன்னர் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த வியாபார முக்கியஸ்தர்கள் செனகலில் அதனுடன் சந்திப்புக்களை நடத்தினர். இத்தகைய முன்முயற்சிகளை இலங்கை விடயத்திலும் ஒருவர் ஆராய்ந்து பார்ப்பது அவசியம்.

அனுசரணையாளர் குறித்து இலங்கையில் முன்மொழியப்பட்டுள்ளது. சந்திரிகா அரசாங்கம் அனுசரணையாளர் குறித்து பரிசீலனைசெய்ய விருப்பமற்றிருக்கக்கூடும். இலங்கை அரசாங்கம் அல்லது விடுதலை இயக்கங்கள் ஆகியவை விரும்புகின்றவாறு இராணுவ நடவடிக்கைமூலம் இலங்கையில் முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் நெடுந்தொலைவானது. இப்போது இன்றைய தேசிய ஐக்கிய முன்னணி அரசாங்கம் மூன்றாந்தரப்பினரான நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் எல்ரீரீஈயுடன் மத்தியஸ்தத்தில் ஈடுபட்டுள்ளது. இங்கு இம்முயற்சி ஆராயப்படவில்லை.





இலங்கையில் சம உரிமைகளுக்கும் பன்மைவாதத்துக்கும் இனச் சமாதானத்துக்கும் இடையிலான தொடர்புகளுக்கு இந்த ஆய்வே சாட்சியாக அமைகின்றது. அடிப்படை உரிமைகள் என்ற எண்ணக்கரு 'இனம், நிறம், பால், மொழி, சமயம், தேசிய அல்லது சமூகத்தோற்றம், பிறப்பு அல்லது வேறு அந்தஸ்து போன்ற எவ்வகையான வேறுபாடுமின்றி' பொதுத்துறையில் (பொதுப்படையான) சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் உறுதிப்படுத்துகின்ற பாகுபாடின்மைக் கோட்பாட்டை மெய்க்கோளாகக் கொண்டது (அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தின் உறுப்புரை 2, 1994: 6).

தனியாக இலங்கை மட்டும்தான் என்று கூறுவது கடினமான போதிலும், இலங்கையின் தனித்துவமான வரலாறு, சம உரிமைகள் கோட்பாட்டையும் பாகுபாடின்மையையும் எய்துவதற்கான முயற்சிகளையும் திரும்பத் திரும்ப, பல்வேறு வழிகளில் தடுத்தழித்துள்ளது. குறிப்பாக இனத்துவம் மற்றும் சமயத்திற்கு இடையிலான பலமான, விசேடமான தொடர்பு இதற்குக் காரணமாயிருந்துள்ளது. ஒன்றுமட்டும் தெளிவாயுள்ளது, இனப்பாகுபாடு நியாயப்படுத்தப்பட்டுள்ளதுடன் மட்டுமன்றி, தீவிர புத்தகுருமாரின் பிரிவினரால் தொடர்ந்து ஆழப்படுத்தப்பட்டுமுள்ளது. இலங்கை எப்போதாவது இனப் பகைமையையும் வன்முறையையும் குறைத்து ஓர் அமைதியான பல்லின, பல்சமயச் சமுதாயமாக அதனைத்தானே நிலைநிறுத்திக்கொள்ள வேண்டுமாயின், அது அரசியலமைப்பு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மத ரீதியாகவும் சம உரிமைக் கோட்பாட்டையும் பாகுபாடின்மையையும் செயற்படுத்துவதற்கான ஒரு வழியைக் காணவேண்டும்.

இரு இனச் சமூகங்களும் ஆராய்ந்து அறிந்து செய்ய வேண்டியவைகள் உள்ளன. புத்த தலைமைத்துவத்தையும் குருமாரையும் உள்ளடக்கிய சிங்களவர்கள் பன்மைவாதத்தைப் புரிந்துகொள்வதற்கான வழிவகைகளைக் காணவேண்டும். றோகான் எதிரிசிங்க கூறுகின்றவாறு, தாங்கள் தான் 'தூய்மையானவர்கள் மற்றும் தனித்துவமானவர்கள்' என்ற நிலைப்பாட்டைக் கைவிட்டுவிட்டு மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பிவிட்டோம் என்பதைத் தமிழர்கள் நிருபிக்கத் தொடங்கவேண்டும் (11 - 14 யூன் 2001).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதுகாலம்வரை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகளில் அரசியலமைப் புச் சீர்திருத்த முன்மொழிவுகள் மிகத் துணிகரமானவை என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆனால் இலங்கைச் சமுதாயம் எதிர்நோக்குகின்ற நெருக்கடியின் பாரிய அளவைப் பார்க்கின்றபோது அவை போதுமானவையா? என்ற கேள்வி எழுகின்றது. அவை 1985ஆம் ஆண்டு யூலை - ஆகஸ்டு மாதங்களில் பூட்டான் நாட்டின் தலைநகரான திம்புவில் நடத்தப்பட்ட அரசியல் பேச்சுவார்த்தைகளின் போது பிரதான தமிழ் அமைப்புக்கள் அனைத்தினாலும் முன்வைக்கப்பட்ட திம்புக் கோட்பாடுகளில் குறிப்பிடப் பட்டிருந்ததைவிடக் குறைவானது என்று விமர்சகர்கள் கருத்துத்தெரிவித்துள்ளனர்.

இனமுரண்பாட்டுத் தீர்விற்கான அரசியல் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதானால் திம்புக் கோட்பாட்டை அங்கீகரிப்பதன் மூலமே அது சாத்தியமாகும். இக்கோட் பாடுகளை ஆராய்ந்ததன் விளைவுதான் 'தமிழ் மக்களின் அபிலாசைகளின் மையப்பகுதியை' அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய முன்முயற்சி அவசியம் என்று சில விமர்சகர்கள் பரிந்துரைப்பதற்கு வழிவகுத்துள்ளது. இந்திய-இலங்கை ஒப்பந்தம் தெளிவாக வேறுபட்ட அடையாளங்கள் பேணிவளர்க்கப்படவும் பாதுகாக்கப் படவும் வேண்டுமென்று வலியுறுத்தியதன் மூலமும் 'வடக்கு-கிழக்கு மாகாணம்' தமிழர்களின் பாரம்பரிய உறைவிடமாக அமைகின்றதென ஒப்புக்கொண்டதன் மூலமும் திம்பு எண்ணக்கருக்கள் சிலவற்றை உள்ளூர ஒப்புக்கொள்கின்றது. எனினும் தமிழ்த் தேசிய அடையா ளத்தின் இயல்பையும் தேசியப் பிரச்சினையின் வரைவிலக் கணத்தையும் வெறுமனே அடையாளபூர்வமாக ஒப்புக் கொள்ளுதல் மட்டும் தீர்வுக்கு வழிவகுக்கமாட்டாது. திம்புக் கோட்பாடுகளின் கருமையமானது அரசின் தன்மையை மீள்வரையறை செய்வதற்கும் மாகாணங்கள் அல்லது பிராந்தியங்களுக்கிடையில் இறைமையுள்ள சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்குமான அரசியல் ஒழுங்கமைப்பை உள்ளடக்கு கின்றது.





இன முரண்பாடு தொடர்ந்தும் மனித உரிமைகள், சமூக நீதி, அரசியலமைப்பு மற்றும் சட்டம்-ஒழுங்கு என்பவை தொடர்பான அடிப்படைக் கேள்விகளையும் பிரச்சினைகளையும் எழுப்புகின்றது. இனப்பிரச்சினைகளின் பல்வேறு பரிமாணங்கள் குறித்தும் அவற்றின் இயல்புகள் குறித்தும் அதிகரித்துவரும் விழிப்புணர்வின் விளைவாக அத்தகைய முரண்பாடுகளைச் சமாளிப்பதற்கு உபாயங் களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கட்டமைப்புக்களை யும் வகுத்தமைப்பதற்கு ஒருங்கிணைந்த திட்டமிட்ட நட வடிக்கை அவசியமென வலியுறுத்தப்படுகின்றது. பன்மைச் சமுதாயங்களுக்கும் பல்லினச் சமுதாயங்களுக்குமான நிறுவனங்களில் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கு அண்மைக்கால அரசியலமைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் அனுபவத்திலிருந்து பின்வரும் பரந்த முடிவுகளுக்கு நாம் வரக்கூடுமாயுள்ளது.

முதலாவதாக, அரசியலமைப்பியல் மற்றும் சர்வதேச மனித உரிமைச் சட்ட நிபுணத்துவம் குறித்த விவாதங்கள், தேசிய அரசை மட்டுமன்றி அரசியலமைப்பு ஒழுங்கின் அத்திவாரங்களையே இடருக்கு உள்ளாக்குகின்ற சவால் களுக்கு இனிமேல்தான் கற்பனை வளத்துடன் பதிலளிக்க வேண்டியுள்ளது. இத்தகைய கரிசனங்கள் தேசிய அரசின் உண்மையான இயல்பையும் தேசிய இறைமை பற்றிய எண்ணக்கருவையும் மீள்மதிப்பீடு செய்வதற்கு நிர்ப்பந்திக் கின்றன. மக்கள், பிரபலமான இறைமை, பிரசாவுரிமை, ஐக்கியம், சமத்துவம், அங்கீகாரம் மற்றும் சனநாயகம் ஆகிய அனைத்தினதும் எண்ணக்கருக்களும் அரசியலமைப் பின்கீழ் மையப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி அரசைக் கொண்ட ஒரு நாட்டில் ஒரே சீரான தன்மையைக் கொண் டுள்ளது என்ற ஊகத்தின் அடிப்படையில், ஒரு பல்லின அரசியற் சமுதாயத்தின்மீது ஒற்றையின அரசைத் திணிக் கின்ற முட்டாள்தனமான செயற்பாடுகள் பெரும்பாலும் முரண்பாடுகளுக்கு வழிவகுக்கின்றன. அரசின் வரைவிலக் கணம், அரசியற் சமுதாயத்தின் இனப் பன்மைத்துவத்தை அதிகரித்த அளவில் பிரதிபலிக்கவேண்டும். அத்துடன் அரசு என்பது இன ரீதியாகவும் மொழிரீதியாகவும் தெளி வாக வேறுபட்ட பிராந்தியங்களையும் சிலசமயங்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தெளிவாக வேறுபட்ட பல்வேறு தேசிய இனங்களையும் கொண்டதொரு திரட்சியென்று ஒப்புக் கொள்ளப்படவும் வேண்டும்.

இரண்டாவதாக, சிறுபான்மைப் பாதுகாப்பென்ற துறையில்தான் அரசியலமைப்பு வாக்குறுதிக்கும் அதன் நிறைவேற்றத்துக்குமிடையில் தெளிவான வேறுபாடு காணப்படுகின்றது. நாட்டின் அதியுயர் சட்டத்தினுள் சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு குறித்து விவரிக்கப்பட்டிருப்பினும் அவை காத்திரமான முறையில் நடைமுறைப் படுத்தப்படுவதில்லை. இலங்கையில் மொழி உரிமைகள் தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடுகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாமலேயே இருந்து வருகிறது. இந்தியாவிலும்கூட மதச் சார்பின்மை, சம அந்தஸ்தும் வாய்ப்பும், மேலும் தனிப்பட்டவரின் கௌரவத்தைப் பாதுகாத்தல் போன்ற அடிப்படை அரசியலமைப்பு விழுமியங்களை நடைமுறைப்படுத்தத் தவறியமை இன உடன் பிறப்புக் கொலைகளும் கூட்டு வன்செயல்களும் அச்சந் தரும் அளவிற்கு அதிகரிப்பதற்கு பங்களித்துள்ளதென விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் (நேசையா 1977: 36-50).

இனச் சிறுபான்மைகளின் அடிப்படை மனக்குறைகளில் ஒன்று, நெருக்கடியான தருணங்களில் சட்டம்-ஒழுங்கு குலைந்துபோதல் தொடர்பானது. தென்னாசியாவின் பல்வேறு பகுதிகளில் கூட்டு வன்முறையால் பாதிக்கப்பட்ட சிறுபான்மைகளுக்கு அரசின் பாதுகாப்புக் கரம் நீட்டப்படவில்லை (மேற்கூறியது). எனவே அரசியலமைப்பு நியமங்களையும் கட்டமைப்புகளையும் செயல் முறைகளையும் நடைமுறையில் பின்பற்றுவதற்கான முயற்சி எடுக்கப்பட்டாலன்றி அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு ஏற்பாடும் இனப்பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வை வழங்காது.

மூன்றாவதாக, இச்சூழமைவில்தான் விழுமியங்களை உருவாக்கும் செயல்முறையில் மக்கள் சமுதாயத்தின் ஈடுபாடு மேலதிக முக்கியத்துவம் பெறுகின்றது. தென்னாசியாவில் பத்திரிகையாளர்களுடனும், வழக்கறிஞர்களுடனும் ஆக்கபூர்வமான செயலெதிர்ச் செயலில் ஈடுபடுகின்ற மனித உரிமைக் குழுக்களினதும் சமூக செயற்





பாட்டு நிறுவனங்களுடனான மக்கள் பங்கேற்பின் விளைவாக அரசியலமைப்பில் கவனத்தில்கொள்ள வேண்டிய விடயங்கள் குறித்தும் அரசியலமைப்பு குறித்த விவாதத்தின் இயல்பும் மீள்வரையறை செய்யப்பட்டுள்ளன. இந்தியாவில் அடிப்படை உரிமைகளைச் செயற்படுத்துவதில் சமூக-பொருளாதார உரிமைகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் ஓரளவுக்கு இச்செயல்முறையின் விளைவாக ஏற்பட்டதுதான் (மேற்கூறியது: 155). எனவே அரசியலமைப்பு சார்ந்த கற்பனைத்திறமும் புத்தாக்கமும் சட்டவல்லுனர்களின் அல்லது கட்சித் தலைவர்களின் ஏகபோகத் தனியுரிமை அல்லவென்பதும் அரசியலமைப்புச் சட்டவியலின் எல்லைகளை விரிவுபடுத்துவதிலும் அதன் மூலம் இனத்துவத்தின் சவால்களுக்குப் பதிலளிப்பதிலும் மக்கள் சமுதாயம் ஒரு முக்கிய பங்கினை வகிக்கமுடியுமென்பது தெளிவாகின்றது.

தமிழ்ப் பெரும்பான்மைத் தன்னாட்சிப் பிராந்தியமொன்றை நிறுவுதலானது, சிங்களவர் மத்தியில் பிரிந்து செல்லுதல் பற்றிய அச்சங்களையும், அத்துடன் அப்பிராந்தியத்தில் குடியேறியுள்ள சிங்களவர் மற்றும் முஸ்லிம்கள் மத்தியில் பாதுகாப்புப் பற்றிய அச்சங்களையும் தோற்றுவிக்கும். ஏற்கெனவே சுட்டிக்காட்டியவாறு சமஷ்டியென்ற எண்ணக்கருவும் இப்பிராந்தியத்தில் வேறு நாடுகளில் அது செயற்பட்டுள்ள முறையும் சமஷ்டி இன முரண்பாட்டை (ஒருவேளை அதனை இல்லாமற் செய்யாதபோதிலும்) கூடியவரை குறைக்குமென்பதை உணர்த்துகின்றன. பிரிந்து செல்லும் விடயத்தில்கூட (சுவிற்சர்லாந்தையும் ஐக்கிய இராச்சியத்தையும் போன்று) அதிகாரப் பகிர்வு தட்டுத் தடங்கலின்றி ஏற்றுக்கொள்ளப்படும் இடங்களைவிட (வங்கதேசம் தொடர்பில் பாகிஸ்தானைப்போன்று) அடக்குமுறையும் மிதமிஞ்சிய மையப்படுத்தலுமுள்ள இடங்களில் இக்கோரிக்கை கூடிய வீரியமானதென்பதை வேறிடங்களின் அனுபவம் உணர்த்துகின்றது.

கனடாவும் இந்தியாவும் சமஷ்டி அரசியலமைப்புகளைக் கொண்டிராதிருந்தால் அவை நீண்ட காலத்துக்கு முன்னரே துண்டாடப்பட்டிருக்குமென்றும் வங்காளதேசமும் எரித்திரியாவும் பொஸ்னியாவும் சமத்துவத்தையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்ளகச் சுயநிர்ணயத்தையும் அனுபவித்திருக்குமாயின் அவை பிரிந்து சென்றிருக்கமாட்டாவென்றும் வாதிடலாம். எனினும் பிரிந்து செல்லுதலும் தமிழ் நாட்டுடனான அரசியல் பிணைப்புகளும் பற்றிய சிங்களவரின் அச்சங் களைப் போக்குகின்ற வகையில் தமிழ்நாட்டுக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமான வரலாறு ஒரே மாதிரியாக இருக்கின்ற போதிலும் அவை இரண்டறக் கலக்காமல், இணைகோடு களாகவே தொடர்ந்து வந்துள்ளன என்பதற்கான விளக் கங்கள் போதாதனவாக இருக்கக்கூடுமென்பதால், இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டியதுடன், அவர்கள் தங்களது கோரிக்கைகளை முன்வைப்பதற்குத் தேவை யான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியதும் அவசியமாகும். மறுபுறத்தில் பிராந்திய அரசாங்கங்களைக் கலைப்பதற்கும், மத்திய அரசின் நேரடி ஆட்சியைத் திணிப் பதற்குமான வரம்பற்ற அதிகாரங்கள் பற்றிய சிறுபான்மை யின் அச்சத்திலும் கவனஞ் செலுத்தப்பட வேண்டும்.

முரண்பாட்டுத் தீர்வைவிட முரண்பாட்டைச் சமாளித் தல் இனச் சமாதான ஒப்பந்தங்களுக்கு ஒருவேளை கூடுத லாக விரும்பத்தக்கதும் எய்தப்படக்கூடியதுமான இலக் காக இருக்கக்கூடும். அனேக இன முரண்பாடுகள் சமாளிக் கப்படக்கூடியவை. ஆனால் தீர்க்கமுடியாதவை. பேச்சு வார்த்தை வெற்றியடைந்து அதன் மூலம் ஒரு உடன்பாடு எட்டப்பட்டால் அதனை முரண்பாட்டைச் சமாளிக்கும் செயல்முறையின் தொடக்கமாக நோக்கப்படவேண்டுமே யன்றி அதன் முடிவாகவல்ல. இனவேறுபாடுகளைச் சமாளிப்பதற்கு மிகப் பொருத்தமானதும் பயனுள்ளது மான காலம் வன்முறையான மோதல் வெடிப்பதற்கு முந்திய காலமென்பதை வாய்ப்புள்ள மூன்றாந்தரப்புத் தலையீட்டாளர்களும், முக்கிய தரப்பினரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

முரண்பாட்டைச் சமாளிக்கும் உபாயங்களாக இது வரை வெளிவந்துள்ள இலக்கியங்களின் மத்தியில் இனப் பதற்றங்களைத் தணித்து, அதனைச் செயலிழக்கச் செய்து, அதன்னைச் சரியான திசைவழியில் செலுத்துகின்ற அரசியற் கட்டமைப்புகள் திட்டமிடப்படுதலை வலியுறுத்துகின்ற ஹொரோவிற்ஸ்சின் (1985) முன்மொழிவுகள் கூடிய நம்பிக் கையளிப்பனவாகத் தோன்றுகின்றன.





## மோதலுக்குப் பிந்திய அரசு: அரசியல் தெரிவுகளின் முக்கியத்துவம்

அரசுகள் குறிப்பாக குழுக்களுக்கிடையிலான பதற்றங் களை தணிக்கின்ற அல்லது அதிகரிக்கின்ற அரசியல் செயல் முறைகள் தொடர்பில் தெரிவுகளைச் செய்கின்றன. குறிப்பாக அரசியல் செயல்முறைகளில் குழுக்களுக்கிடை யிலான பதற்றங்களைத் தணிப்பதற்கோ அல்லது அதிகரிக்கச் செய்வதற்கோ சூழ்நிலைகளும் காரணமாகின்றன.

ஹொரோவிற்ஸ் (Horowitz) (1985) சுட்டிக்காட்டி யுள்ளவாறு அவற்றின் தொடக்க நிலைகளை மட்டும் நாம் கருத்தில்கொண்டால், மலேசியா இனங்களுக்கிடையான வன்முறையைக் குறிப்பிடத்தக்க அளவில் கண்டிருக்க வேண்டிய அதேவேளையில் தமிழரும் சிங்களவரும் ஆங்கி லேயரால் பயிற்றப்பட்ட உயர்குடியினராகக் கலந்துற வாடிய இலங்கை அத்தகைய வன்முறையிலிருந்து பிழைத் திருக்க வேண்டும். எனினும் மலேசியா அதனைப் பெரு மளவுக்குத் தவிர்ப்பதில் வெற்றிகண்டுள்ள போதிலும் இலங்கையால் அவ்வாறு செய்ய முடியவில்லை. இரு நாடு களிலும் வளர்ந்துகொண்டிருந்த அரசியல் முறைமை யானது பாரிய வேறுபாடானது என்று ஹொரோவிற்ஸ் எழுதுகின்றார். மலேசிய அரசியல்வாதிகள் பல்லின அரசியல் கூட்டணி ஒன்றை ஏற்படுத்தினர். அது சீனத் தலைவர்களுக்கும் மலே தலைவர்களுக்குமிடையில் பிணைப்புக்களைப் பேணிவளர்த்ததுடன் அரசியல் வேட் பாளர்களை மிகப்பரந்த இடைநிலைத் தேர்தல் களத்தை நாடுவதற்கு நிர்ப்பந்தித்தது. இலங்கையில், நாம் முன்னர் கண்டவாறு, சிங்களப் பேச்சாளர்கள் ஒரு பேரினவாதத் தேசிய இயக்கத்தை உருவாக்கினர். இதன் காரணமாக தொடக்கத்தில் ஒருங்கிணைந்து செயல்பட்ட தமிழரும் சிங்களவரும் பின்னர் தத்தமது இனத்தை அடிப்படை யாகக்கொண்ட அரசியற் கட்சிகளை உருவாக்குவதற்குப் பிரிந்துசென்றனர்.

ஆனால் அரசியல் முறைமைகளை மாற்ற முடியும். நைஜீரியா இதற்கொரு நல்ல உதாரணம். 1967ஆம் ஆண்டுக்கு முன்னர் அது வடக்கு, தெற்கு மற்றும் கிழக் கென்று மூன்று பிராந்தியங்களைக் கொண்டிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஒவ்வொன்றுக்கும் இனக்கட்டப்பாடுகளை ஆதாரமாகக் கொண்ட சொந்தக் கட்சிகளிருந்தன. இம்மூன்றுவழிப் பிரிவின் தீவிரம் 1967இல் தென்கிழக்குப் பிராந்தியமான பயாபிராவை நைஜீரியாவிலிருந்து பிரிந்து செல்லும் முயற்சிக்குத் தூண்டியது. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற சிவில் யுத்தத்தின் விளைவு அரசியல்வாதிகள் புதிய முறைமையொன்றைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு வழிவகுத்தது. அவர்கள் பல்லினக் கூட்டிணைவுகளின் அடிப்படையிலான ஒரு புதிய சமஷ்டி அரசியலை ஊக்குவிக்கின்றவகையில், மிகப்பெரிய மூன்று இனக் குழுக்களின் (ஹௌசா, யொறுபா மற்றும் இக்போ) ஆட்சிப் பிரதேசங்களை ஊடுருவிச் செல்லும் வகையில் எல்லைகளைக் கொண்டனவாக அந்நாட்டைப் பத்தொன்பது அரசுகளாகச் செதுக்கி நிர்மாணித்தனர். எனினும் பின்னர் வந்த தலைவர்கள் தமது சொந்த அரசியல் காரணங்களுக்காக அரசுகளின் எண்ணிக்கையைத் தொடர்ந்தும் அதிகரித்தனர் (பிறவுண் 1996).

இவ்வனுபவமானது, அரசியல் சீர்திருத்தத்தின் ஊடாக இன முரண்பாட்டை வெல்வதற்கான சாத்தியக்கூறுகளைக் காண்பதில் கவனம் செலுத்தத் தூண்டுகின்றது. எனது வாதத்தின் மையக்கருவானது இத்தீவின் இன முரண்பாட்டுக்குப் பேச்சுவார்த்தைமூலமான அரசியல் தீர்வொன்று சாத்தியமானது என்பதாகும். தீர்விற்கான வழிவகைகளைத் தடங்கலின்றி அரசியல் ரீதியாகக் காண்பதற்கு, தமிழ்த் தேசியத்தின் சனநாயக சுதந்திரத்திற்கான உந்துதல்களை அங்கீகரித்து ஏற்றுக்கொள்கின்ற அதே வேளை, பிரிவினைவாதத்தைக் காத்திரமான முறையில் பதிலீடு செய்யக்கூடிய புதிய நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டியிருக்கிறது. அது காலனித்துவத்துக்குப் பிந்திய முழு இலங்கையிலும் சிங்கள, தமிழ் மற்றும் இஸ்லாமிய அரசியற் சமுதாயங்களை உள்ளடக்கிய சனநாயக அரசு ஒன்றைத் தாபிப்பதில் பண்பு ரீதியில் ஒரு புதிய பரிமாணத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது. புதிய பரிமாணத்தில் கட்டியமைக்கப்படும் தேசத்தின் வகுத்துரைக்கப்பட்ட தன்மைகள் இலங்கையின் அரசியல் நிலைமாற்றத்திற்கான கதவுகளைத் திறந்துவைத்துள்ளது. அதாவது காலனித்துவத்திற்குப்





பிந்திய போரும் வன்முறைகளும் என்ற பரிமாணத்திலிருந்து இனப்போருக்குப் பிந்திய பரிமாணம் என்கின்ற நிலைக்கு நகர்வதற்கான வழி இதன் மூலம் திறக்கப்படுகின்றது. இதன் மூலம் இருவேறுபட்ட மற்றும் ஒன்றுடன் ஒன்று போட்டியிடுகின்ற அரசுக்கட்டமைப்புச் செயற்பாட்டினை, பேச்சுவார்த்தைகள் மூலமாகவும் நிதானத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமாகவும் இணைக்க முடியும். இலங்கைக்கு இன்று இருக்கக்கூடிய அரசியல் ஆளுமையானது காலனித்துவத்துக்குப் பிந்திய அரசை மீளஉருவாக்குவதை நோக்கி ஓர் ஆழமான சீர்திருத்தச் செயல்திட்டத்தை முன்னெடுப்பதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளது.

## சனநாயக அரச உருவாக்கத்துக்கான முன்நிபந்தனைகள்

இப்பிரிவு இன முரண்பாட்டை நீககுவதற்கும் சமாதானம், பன்மைவாதம் மற்றும் சனநாயகம் ஆகியவற்றை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக இலங்கை அரசுடன் இணைந்து செயல்படுவதற்குச் சாத்தியமான தந்திரோபாயத் தளங்களின் மீது கவனஞ்செலுத்துகின்றது. இவ் விவாதம் மூன்று துணிபுரைகளைச் சுற்றிக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. முதலாவதாக, நான் ஏற்கெனவே சுட்டிக் காட்டியுள்ளவாறு பல்தேசிய அரசுகளில் சிறுபான்மைத் தேசியங்களுக்கு அரசியல் விடுதலையை அளிக்கக்கூடிய விதத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு இல்லையென்பதாகும். தளைகளிலிருந்து விடுபடுவதற்கான அரசியல் போராட்டமானது இன ஆதிக்கத்திற்கான திட்டங்களாக உருமாறுவதைத் தடுக்கின்ற அதேவேளையில் இன முரண்பாட்டை அனுபவித்துக்கொண்டிருக்கின்ற சமுதாயங்களில் முரண்பாட்டுத் தீர்வுக்கும் அரசியற் சீர்திருத்தங்களுக்கும், இன அடையாளங்களின் அபிலாஷைகளை உள்ளடக்கக் கூடிய சனநாயகரீதியான மாற்று வழிகளை வலியுறுத்துகிறது. இரண்டாவது, இலங்கை அரசின் பல்லினச் சமஷ்டியாக்கம் பிராந்திய, உள்ளூர் மற்றும் பிற சிறுபான்மைகளின் சுறுசுறுப்பான ஒத்துழைப்புடன் இத்தீவுச் சமுதாயத்தின் மூன்று பிரதான இனச் சமூகங்களான சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்கள் அரசியல்ரீதியாக மீண்டும் இணைக்கப்படுவதை (கூட்டிணைப்பை) முன் கூட்டியே உணர்ந்துகொள்கின்றது.

www.tamilarangam.net



தற்போதைய சூழலில் இலங்கையானது எந்நேரமும் சிதைந்துபோகக்கூடிய வகையில் மூன்று பிரதான இனச் சமூகங்களின் ஓர் இணைப்பாக உள்ளதுடன் மாறாது நெருக்கடியை அனுபவித்துவரும் அரசின் தொடர்ச்சியும் ஒரு நீண்டகாலப் பிரச்சினையாயுள்ளது. சொல்லப் போனால் சனநாயகரீதியான அரசியல் விவாதத்தில்கூட, பிராந்திய மற்றும் உள்நாட்டுச் சிறுபான்மைகளுக்கும் சனநாயக உரிமைகள் அளிக்கப்பட வேண்டும் என்பது அங்கீகரிக்கப்படவில்லை. அதேவேளையில் இலங்கையின் ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கின்ற சக்திகளைக் கட்டுப் படுத்துவதற்கு .இணைந்து செயல்படக்கூடிய தளங்களை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டியது ஒரு வரலாற்றுத் தேவையாகியுள்ளது. மூன்றாவது துணிபுரை தேசத்தை மீண்டும் கட்டியெழுப்புவது பற்றிய இக்கருத்தை வலி யுறுத்துகின்றது. தேசத்தை மீண்டும் கட்டியெழுப்புகின்ற செயற்திட்டமானது ஒற்றையாட்சிமுறையைத் தாங்கிப் பிடிக்கின்ற பெரும்பான்மையினருக்கும் பிரிவினைவாதத் தைத் தாங்கிப்பிடிக்கின்ற சிறுபான்மையினருக்கும் அத் துடன் ஏனைய இன மற்றும் தனி அடையாளங்களை யுடைய சமூகத்தினருக்கும் பாதிப்பின்றி சாத்தியமான ஒருவழியைக் கண்டுபிடிப்பதற்காக ஒருங்கிணைந்து செய லாற்றி ஒருஉடன்பாட்டிற்கு வரும் வகையில் திறந்த மன துடன் செயற்படுத்தப்பட வேண்டுமென்று வாதிடுகின்றது.

கூட்டு ஒப்பந்த அடிப்படையிலான மீள் இணைப் பானது, இனங்களுக்கிடையிலான பகைமையையும் சந்தே கத்தையும் முரண்பாட்டையும் வேரறுக்கும். அதன் நீடித்த ஒத்துழைப்புக்குப் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படையை இனச் சமூகங்களுக்கு வழங்கவேண்டும் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. தேசத்தை மீளக்கட்டி யெழுப்புவதற்கான எனது முன்மொழிவு, உடன்படிக்கை யின் ஊடான மீள் இணைப்பை, தேசம் முழுமையும் ஒரு சமூகமாக நிலைத்திருக்கும் வகையில் நிர்மாணிப்பதற்கு, அனைத்து இன மற்றும் அடையாளங்களையுடைய சமூ கங்களும் ஒன்றையொன்று சம மதிப்புடைய அரசியல் சமூகங்களாக நடத்துவதற்கு அடிகோலும் என்ற வாதத் துடன் மேலும் தொடர்புடையதாயுள்ளது.





'பிராந்திய மற்றும் உள்நாட்டுச் சிறுபான்மைகள்' என்று நான் வலியுறுத்துவதைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு, இலங்கையின் சமூக அடையாளங்களையும் சமூக அடையாள அடிப்படையிலான சனநாயக அரசியல் உரிமைக்கோரிக்கைகளையும் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் என்ற பரந்த அளவிலான இன வகைப்படுத்தலுக்கு மட்டும் வரையறை செய்கின்ற அரசியல் தவறை நினைவிற் கொள்வது அவசியமாகும். இத்தவறானது, இலங்கையில் இன உறவுகளில் சனநாயகத்திற்கு எதிரான இரண்டு பின்விளைவுகளைக் கொண்டுள்ளது.

முதலாவதாக, அரசியற் சமுதாயத்தில் பெரும் பான்மை மற்றும் சிறுபான்மையென்ற இனப் படிநிலை அமைப்பொழுங்கை இன்றியமையாதவாறு அதன் அரசி யல் நடைமுறையில் தாபித்துள்ளது. இரண்டாவதாக, பெரும்பான்மை - சிறுபான்மை வகைப்படுத்தல் அவசிய மற்ற நிலையில் உள்ளூர்ச் சூழ்நிலைகளின்கீழ் சமூகங்களின் அதிகார உறவுகளில் ஏற்படும் மாற்றத்தை அது முற்றாக மறைக்கின்றது. எடுத்துக்காட்டாக, இன பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தது என்ற வகைப்படுத்தலின்கீழ் பொதுப் படையாக அறியப்படுகின்ற ஒரு சமூகம், பல்வேறு இனங் களைக்கொண்ட மக்கள் வாழுகின்ற பிராந்திய அமைப் பின்கீழ், அதாவது இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் சிங்களச் சமூகங்களைப் போன்று, தன்னைத்தானே ஒரு சிறுபான்மையாகக் காணக்கூடும். ஒத்தவகையில், சிறு பான்மையினத்தைச் சேர்ந்தது என்ற வகைப்படுத்தலின்கீழ் பொதுப்படையாக அறியப்படுகின்ற ஒரு சமூகம், இலங்கை யில் தமிழர்களைப்போன்று, பல்லின மக்கள் வாழுகின்ற ஒரு பிராந்திய அமைப்பின்கீழ் ஒரு பெரும்பான்மையாகத் தன்னை அடையாளம் காணக்கூடும்.

தருக்கரீதியாக நோக்குமிடத்து, குழு அரசியலில் ஒரு பெரும்பான்மையும் சில சிறுபான்மைகளும் மட்டும் இருப் பதில்லை மாறாக பல சிறுபான்மைகள் இருக்கின்றன. அத்தகைய பெரும்பான்மையை உள்ளடக்கியுள்ளவற்றி லும்கூட பிராந்தியம், சாதி, மதம், மொழி மற்றும் பிற அடையாளங்களைக் கொண்ட அனேக சிறுபான்மைகள் இருக்கின்றன. எனவே முழுமையான சனநாயகத்தன்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யற்ற பெரும்பான்மை-சிறுபான்மை ஒழுங்கமைப்பை வெற்றிகொள்வதற்கும், சமத்துவமான முறையில் குழு உறவுகளை மீண்டும் நிலைநாட்டுவதற்கும் அனைத்துச் சமூகங்களையும் பல்வேறு சிறுபான்மைகளால் உருவாக்கப்பட்டனவாகக் கருதி அவற்றை சமமாக நடத்துதல்தான் நன்கு ஆராய்ந்து அறிந்து தேர்ந்தெடுத்த வழியாகும்.

இலங்கையில் இருப்பதைப் போன்ற ஒரு துன்பமான, நீடித்த, கற்பிக்கமுடியாத இனமுரண்பாட்டு நிலைமைகளின்கீழ் அரசியற் சமூகங்களை சனநாயகரீதியாக மீள உருவாக்குதல் எவ்வகையிலும் ஒரு எளிதான வேலையில்லை. இலங்கையில் இக்கடினமான வேலையைக் கடமையுணர்வுடன் போராடி வெற்றி பெறுவதற்கு இங்கு நான் இரு வழிகளை முன்மொழிகின்றேன்.

முதலாவது, ஒரு கூட்டு அரசியல் பிணைப்பை உருவாக்குவதற்காக, அனைத்துச் சமூகங்களையும் ஒன்றுதிரட்டி பல்வேறு கோட்பாடுகளை உள்ளடக்கிய ஒரு நிறுவனமாக இலங்கை அரசைத் தோற்றம்பெறச் செய்தல். இவ்வணுகுமுறை இரண்டு தசாப்தகால யுத்தத்தினதும் வன்முறையினதும் பின்னரும்கூட சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய இனஅடையாளச் சமூகங்கள் அரசியல் சமூகமொன்றை உருவாக்குவதற்கு ஏன் ஒன்றுசேர்ந்திருக்க வேண்டுமென்ற கேள்விக்குப் பதிலளிக்கக் கூடும். ஒப்பீட்டடிப்படையில் உருமாற்றம் பெற்ற அரசியல் ஒன்றிப்புக்கான மாதிரிக் கோட்பாடுகளானது நீதி, நேர்மை, சமத்துவம், சகிப்புத்தன்மை, கூட்டு மகிழ்ச்சி போன்ற உயர் இலக்குகளும் சமயச்சார்பு கடந்த விழுமியங்களுமாகும். இணைந்து செயலாற்றுவதின் ஊடாக அவற்றைச் சாதிக்க முடியும்.

இரண்டாவது அணுகுமுறை, அரசியல் துறையை-அரசு, அதன் நிறுவனங்கள், கட்டமைப்புகளும் நடைமுறைகளும், சமூகங்களுக்கிடையிலான அரசியல் உறவுகள், அரசு-சமுதாய உறவுகள் ஆகியவற்றை, தொடர்ந்து சனநாயக மயப்படுத்துவதன் நன்மைகளைக் கண்டறிதலும் அவற்றில் நம்பிக்கையும் பற்றுறுதியும் கொள்ளுதலுமாகும். இத்தகைய பார்வையால் கடுமை தணியாத சனநாயக





மயப்படுத்தல் ஒரு பலவீனமானதோ தீங்கானதோ அல்ல. மாறாக அது பலத்துக்கான ஒரு மூலம், ஒரு நற்பண்பு இனக் குழுக்களுக்கிடையிலான அடையாள அரசியலுக்கு மீண்டும் மனிதப் பண்பூட்டுவதற்கும் சமூகங்களுக்கிடையிலான வேறுபாடுகளை வளங்களாக மாற்றுவதற்குத் தேவையானவற்றைச் செய்வதற்கும் இதுவொரு நிச்சயமான வழியென்று நான் ஆலோசனை வழங்குகின்றேன்.

இலங்கையின் இனமுரண்பாட்டுத் தீர்வுக்கும் சனநாயகச் சீர்திருத்தத்துக்கும் மேலே பரிந்துரைக்கப்பட்ட இரட்டை அணுகுமுறையானது, அரசியல் நிகழ்ச்சிநிரலில் ஒரு குறிப்பிட்ட பங்கினை வகிக்கக்கூடிய விதத்தில், பரந்த அளவில் கோடிட்டுக்காட்டக்கூடியவகையில் வகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றது. அதனைப் பின்வருமாறு வரையறுக்கலாம்.

முதலாவதாக, அரசு என்பது எல்லா இன மற்றும் பிற அடையாளக் குழுக்களினதும் தன்னியல்பான ஒரு சனநாயக அரசியல் கூட்டிணைப்பென்ற ஒரு புதிய பார்வை - உண்மையில் மீள்பார்வை- இருக்கவேண்டும். இரண்டாவதாக, தேசத்தின் மீள்பார்வையானது சுதந்திரத்திற்கு முன்னதாகவோ அல்லது காலனிஆதிக்கத்திற்கு முன்பாகவோ வரலாற்று உணர்ச்சியற்ற நிலையில் இருந்ததைப்போலல்லாமல் அரசியல் கற்பனைத்திறனுடன் வரையறை செய்யப்பட்டு எதிர்காலத்தில் அதிகமான அளவில் சனநாயகத்தையும் அரசியலில் தாங்களாகவே பங்கெடுத்துக்கொள்ளக் கூடிய சாத்தியக்கூறுகளுடன் சுயஅடையாளமுள்ள சமூகங்கள் அனைத்தினதும் ஒத்துழைப்புடனான ஒரு செயல்திட்டமாக இருக்கவேண்டும்.

அத்தகைய செயற்திட்டமானது, குறைந்தபட்சம் ஒரு புதிய அரசியல் கற்பனைத்திறனின் நலன்கருதியாவது இனங்களுக்கிடையிலான வரலாறு சார்ந்த பெரும்பாலான போராட்டங்கள் நேற்றைய நிலையிலிருந்து பின்னோக்கிச் செல்கின்ற வகையில் ஒரு அறியாமைத் திரைகொண்டு மூடிமறைக்கப்படுதலை முன்கூட்டியே உணர்ந்துகொள்கின்றது. மூன்றாவதாக, மக்கள் சமுதாயத் தலையீடுகள் உட்பட அரசின் எல்லாத் துறைகளிலும், அடையாள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முடைய அனைத்துச் சமூகங்களினதும் தனிப்பட்ட பிரசை களினதும் அரசியல் மற்றும் சமூக விடுதலை உறுதிப்படுத் தப்படவேண்டும். நான்காவதாக, ஆனால் எவ்வகையிலும் இறுதியானதென்று கருதமுடியாதது யாதெனில், சிங்கள மற்றும் முஸ்லிம் சமுதாயங்களின் சனநாயகத் தூண்டுதல் களினால் நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் இலங்கைத் தமிழ்ச் சமுதாயத்தின் அரசியலை மீண்டும் சனநாயக மயப்படுத்துதலாகும்.

இலங்கைத் தமிழ்ச் சமுதாயம் ஒரு நீடித்த, அழிவேற் படுத்தும் யுத்தச் சூழமைவில் அதன் சனநாயகத் தோற்றங் களின் பெரும்பாலானவற்றை இழந்துவிட்டது. தமிழ்ச் சமுதாயத்தின் அரசியலும் அன்றாட வாழ்க்கையும் இராணுவமயப்படுத்தப்பட்டதாக இருக்கும்வரை சிங்கள மற்றும் தமிழ்ச் சமுதாயங்களில் சனநாயக உந்துவிசைகள் பெரும்பாலும் வலுவற்றனவாகவும் தாக்கத் தயரானவை யாகவும் இருக்கும். இலங்கையின் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள அரசியற் சமூகங்களை மீண்டும் சனநாயகமயப் படுத்துவதற்கு யுத்தத்துடனான இனப் பிரச்சினையின் இணைப்பை அறுத்தல் அத்தியாவசியமான ஒரு முன்நிபந் தனையாகும்.

இவ்வழிகளில் ஒரு புதிய சனநாயகத்திற்கான நிகழ்ச்சித் திட்டத்தை வகுத்தமைத்தல் கடினமானபோதிலும், புரிந் துணர்வுடன் செயற்படுவதற்கான ஆக்கபூர்வ முயற்சியாகும். அது சிங்களவரை மையப்படுத்திய ஒற்றையாட்சி அரசு மற்றும் தமிழரை மையப்படுத்திய தனியரசு என்ற தேசத்தின் இரு சக்திவாய்ந்த, அர்த்தமுள்ள விருப்புக்களால் உரு வாக்கப்பட்ட இரு பல்மிக்க தேசியவாதத் தோற்றத்துடன் மோதவும், அரசியல்ரீதியான பேச்சுவார்த்தைகளில் உட னடியாக ஈடுபடவும் வேண்டுமென்ற நிகழ்விலிருந்து அதன் ஆக்கபூர்வமான அம்சத்தைக் காணமுடியும்.[1] இவை யிரண்டும் இனத்தன்மையை வெளிப்படுத்துவதால் யதார்த்தமான சனநாயக அரசியல் உலகில் அவற்றைச் சமரசப்படுத்த முடியாது. எனவே இலங்கையின் சனநாயக அரசியலின் எதிர்காலத்துக்கு இத்தகைய தேசியத் தோற் றத்தினை நீக்கவேண்டியது அடிப்படையில் முக்கியமானது. (ஆளும் வர்க்கக் குழுக்கள் அவற்றின் முக்கியமான





வர்க்கப் பொறுப்புக்களைக் கைவிட்டுவிட்ட ஓர் அரசியற் சமுதாயத்தில், தேசத்தில் சனநாயகத்தை மீள்தோற்றம் பெறச்செய்வதற்கான இலங்கையின் அரசியல் எதிர்காலம் பற்றிய காத்திரமான உரையாடல்கள் எதிலும் வரலாற்று பூர்வமான அரசாங்க முகவர்கள் ஏன்முன்னிலை வகிக்க வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது.) ஒத்தவகையில் பெருமளவிலான அரசியல் சக்திகளை மீண்டும் திரட்டக் கூடியவகையில், சனநாயகத்தை நவீனப்படுத்துகின்ற கூட்டுத் தோற்றம் அவசியம். உண்மையில் இதுதான் சமூக விடுதலைக்கான சனநாயகத்துடன் தொடர்புடைய எமது அரசியல் கற்பனைத்திறனின் நியதிகளை வரையறை செய் வதற்கு அழைக்கப்படவேண்டும்.

### பிரிவினைவாதத்துக்குப் பிந்திய நீடித்திருக்கக் கூடிய தெரிவுகள்

இலங்கையின் இனமுரண்பாட்டுக்கு அரசியல் தீர் வொன்றைக் காண்பதற்கு நியாயமான அளவு காத்திர மான ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகின்ற இவ்வேளை யில், ஐக்கிய தேசிய முன்னணி (UNF) அரசாங்கத்துக்கும் எல்ரீரீஈக்கும் இடையில் கடந்த 2002-03 காலப்பகுதிகளில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைச் செயல்முறையானது தன் னகத்தே குறைபாடுகளைக் கொண்டிருந்ததென்ற உண் மையைத் தூக்கிப்பிடிக்காமல் சமஷ்டிக் கருத்தை ஆதரிக்க வேண்டியது முக்கியமானதாகும். இக்கருத்தையும் சமஷ்டி யின் எதிர்காலத்தையும் ஆதரித்தல் என்பது ஐக்கிய தேசிய முன்னணி (ஐ.தே.மு) - தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்ரீரீஈ) அரசியல் நிகழ்ச்சிநிரலுக்கு மட்டும் வரையறுக் கப்பட்டதாக இருத்தலாகாது. மாறாக, அது காலனித் துவத்துக்குப் பிந்திய இலங்கை அரசை சனநாயகத்திலும் பன்மைவாதத்திலும் மீளக் கட்டியெழுப்புகின்ற செயற் திட்டத்துடன் ஒருங்கிணைந்த ஈடுபாட்டுடைக் கொண்டி ருக்கவேண்டும். பல்லாண்டுகால வன்முறைக்கும், சமூகத் துருவப்படுத்தலுக்கும், அரசியல் நிறுவனங்களின் சீர் குலைவுக்கும் பின்னர், பழைய அரசியலுக்கு அல்லது பழைய அரசுக்குத் திரும்பிச் செல்வதற்கு இடமில்லை. குறிப்பாக, அரசு பிரிவினைவாதத் தேசிய இனமொன்று டன் தீர்வுச் செயல்முறையொன்றில் ஈடுபடுகின்றபோது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இத்தகைய நிலை தோன்றுகின்றது. எல்ரீரீஈயின் பிரிவினைவாதச் செயல்திட்டம் அவசியமற்றது என்பதை அரசியல் ரீதியாக வெளிப்படுத்துவதற்கு எவ்வாறு தன்னைத் தானே மறுசீரமைத்துக் கொள்ளலாமென்பதே இலங்கை அரசு இப்போது எதிர்நோக்குகின்ற சவாலாகும். தங்களின் ஆரம்பக் குறிக்கோளுக்குக் குறைந்ததான அரசியல் தீர்வை ஒரு வெற்றியென்றும் அவர்களின் 'தேசியத்துக்கு' சமத்துவத்தையும் நீதியையும் அங்கீகாரத்தையும் கொண்டு வருகின்ற மதிப்புமிக்க ஒரு சமரசமென்றும் அவர்கள் தமக்கும் தமது மக்களுக்கும் மெய்ப்பித்துக்காட்டுதல் எல்ரீரீஈ யினர் எதிர்நோக்கும் சவாலாகும்.

இச்சவாலை எதிர்கொள்வதற்கு அனேக மட்டங்களில் செயற்படவேண்டிய அவசியமுள்ளது. முதலாவதாக, முரண்பாட்டின் முக்கிய தரப்பினர் ஒரு பன்மைவாத-சனநாயக அரசியற் சமுதாயத்தில் பங்காளிகளாகவும் அதேசமயம் போட்டியாளர்களாகவும் உடனொத்து வாழக்கூடிய ஓர் அரசியல் சட்டகத்தைக் கண்டுபிடிக்கக் கூடியவர்களாக இருக்கவேண்டும். அது இணைந்து வாழ்வதற்கான ஒரு புதிய அரசியலுக்கு அறைகூவல் விடுக்கின்றது. கூடி வாழ்வதற்கான அமைப்புமுறையானது வழமையில் ஓர் அரசியலமைப்பு மாதிரியாகும். அது மத்திக்கும் அதன் சுற்றயலுக்கு இடையிலும் அவ்வாறே இனச் சமூகங்களுக்கிடையிலும் அதிகாரப்பகிர்வு முறைகளைத் தீர்மானிப்பதற்குப் போதியளவு இசைந்து கொடுக்கின்ற ஆற்றலுடையதாக இருக்கவேண்டும். எனினும் கூட்டுவாழ்வுக்கான எந்தஒரு அரசியல் - அரசியலமைப்பு முறையும் அது முக்கிய தரப்பினரால் கூட்டாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருக்கவேண்டுமேயன்றி ஒரு பக்கத்தால் மற்றதன் மீது திணிக்கப்பட்டதாக இருக்கக்கூடாது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டியது முக்கியமானதாகும். இந்நோக்கில் இலங்கையின் முரண்பாட்டுக்குப் பிந்திய அரசானது கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள இனச் சமூகமும் சொந்தம் கொண்டாடுகின்ற ஒன்றாக இருக்க வேண்டும்.

இரண்டாவதாக, முரண்பாட்டுக்குப் பிந்திய அரசியல் சீர்திருத்த முயற்சியானது முரண்பாட்டுக்குப் பிந்திய அரசை உருவாக்கும் செயல்முறையில் முக்கியமானதும் கடுஞ்சோதனையானதுமான ஒரு கட்டம் என்பதை





விளங்கிக்கொள்ளப்படவும் அவ்வாறு கையாளப்படவும் வேண்டும். காலனித்துவத்துக்குப் பிந்திய ஒருபழைய அரசானது கடுமையானதும் தப்பிக்கமுடியாததுமான ஒரு நெருக்கடியினுள் இருந்துவருகின்றது. இம்முரண்பாடு பழைய காலனித்துவத்துக்குப் பிந்திய அரசினதும் அதனுடன் இணைந்த அரசியல் துணைக்கட்டமைப்பினதும் குறைபாடுகளினால் வரலாற்றுரீதியாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. முரண்பாட்டிற்கான தீர்வை நீடித்து நிலைக்கச் செய்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற செயல்முறையொன்று தன்னை வலுப்படுத்திக்கொள்ள வேண்டுமாயின் அது அரசை மீள்நிர்மாணித்தலில் தெளிவாகத் தன்னை வெளிப்படுத்த வேண்டும். இலங்கையில் அரசை மீள உருவாக்குகின்ற செயல்திட்டமானது ஒற்றையாட்சி அரச மாதிரியிலிருந்தும் நிரந்தரப் பெரும்பான்மை சனநாயகப் பாரம்பரியத்திலிருந்தும் முற்றிலும் மாறுபட்ட குணாதிசயத்துடன் நிகழப்போவதை உணர்ந்துள்ளது. தற்போது வலியுறுத்தப்படுகின்ற சமஷ்டிமுறையானது எண்ணக்கருவில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க மாற்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. விடுதலைப் புலிகள் பிரதிநிதித்துவப்படுத்துவதைப் போன்று தமிழ்த் தேசியவாதிகள் தமது ஆரம்ப இலக்கான காலனித்துவத்துக்குப் பிந்திய தமிழ்த் தேசியவாதத்தினை மீண்டும் நிலைப்படுத்த விரும்பினர். அதேவேளையில், ஆளுகின்ற சிங்கள உயர்குடியினர், அல்லது அவர்களில் ஒரு பிரிவினர், நாட்டின் அரசியல் அதிகாரக்கட்டமைப்பு மற்றும் ஒழுங்கமைப்புக்களில் தீவிர மாற்றம் ஒன்றைக் கொண்டுவருவது தொடர்பாக அதிக எதிர்ப்பினைக் காட்டவில்லை.

மூன்றாவதாக சமஷ்டி என்பது, வெறுமனே கீழ் நோக்கிய நிர்வாக அலகுகளுக்கு அதிகாரத்தைப் பகிர்கின்ற [illegible]யாக மட்டும் விளங்கிக்கொள்ளப்படலாகாது. **உண்மையில், இலங்கையின் முரண்**பாட்டுத் தீர்வு தொடர்பாக உருவாகி வரும் வழிமுறைகளையும் மற்றும் அரசியல் சேர்க்கை ஆகியவற்றையும் மிகச் சுருக்கமாக வெளிப்படுத்துவதற்கு அதிகாரப்பகிர்வென்ற மொழிப்பிரயோகம் சற்றேனும் போதுமானதாக இல்லை. இலங்கையின் அரசியலமைப்பு விவாதத்தினூடாகப் பரிணாமம் பெற்ற அதிகா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இத்தகைய நிலை தோன்றுகின்றது. எல்ரீரீஈயின் பிரிவினைவாதச் செயல்திட்டம் அவசியமற்றது என்பதை அரசியல் ரீதியாக வெளிப்படுத்துவதற்கு எவ்வாறு தன்னைத் தானே மறுசீரமைத்துக் கொள்ளலாமென்பதே இலங்கை அரசு இப்போது எதிர்நோக்குகின்ற சவாலாகும். தங்களின் ஆரம்பக் குறிக்கோளுக்குக் குறைந்ததான அரசியல் தீர்வை ஒரு வெற்றியென்றும் அவர்களின் 'தேசியத்துக்கு' சமத்துவத்தையும் நீதியையும் அங்கீகாரத்தையும் கொண்டு வருகின்ற மதிப்புமிக்க ஒரு சமரசமென்றும் அவர்கள் தமக்கும் தமது மக்களுக்கும் மெய்ப்பித்துக்காட்டுதல் எல்ரீரீஈ யினர் எதிர்நோக்கும் சவாலாகும்.

இச்சவாலை எதிர்கொள்வதற்கு அனேக மட்டங்களில் செயற்படவேண்டிய அவசியமுள்ளது. முதலாவதாக, முரண்பாட்டின் முக்கிய தரப்பினர் ஒரு பன்மைவாத-சனநாயக அரசியற் சமுதாயத்தில் பங்காளிகளாகவும் அதேசமயம் போட்டியாளர்களாகவும் உடனொத்து வாழக்கூடிய ஓர் அரசியல் சட்டகத்தைக் கண்டுபிடிக்கக் கூடியவர்களாக இருக்கவேண்டும். அது இணைந்து வாழ்வதற்கான ஒரு புதிய அரசியலுக்கு அறைகூவல் விடுக்கின்றது. கூடி வாழ்வதற்கான அமைப்புமுறையானது வழமையில் ஓர் அரசியலமைப்பு மாதிரியாகும். அது மத்திக்கும் அதன் சுற்றயலுக்கு இடையிலும் அவ்வாறே இனச் சமூகங்களுக்கிடையிலும் அதிகாரப்பகிர்வு முறைகளைத் தீர்மானிப்பதற்குப் போதியளவு இசைந்து கொடுக்கின்ற ஆற்றலுடையதாக இருக்கவேண்டும். எனினும் கூட்டுவாழ்வுக்கான எந்தஒரு அரசியல் - அரசியலமைப்பு முறையும் அது முக்கிய தரப்பினரால் கூட்டாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருக்கவேண்டுமேயன்றி ஒரு பக்கத்தால் மற்றதன் மீது திணிக்கப்பட்டதாக இருக்கக்கூடாது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டியது முக்கியமானதாகும். இந்நோக்கில் இலங்கையின் முரண்பாட்டுக்குப் பிந்திய அரசானது கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள இனச் சமூகமும் சொந்தம் கொண்டாடுகின்ற ஒன்றாக இருக்க வேண்டும்.

இரண்டாவதாக, முரண்பாட்டுக்குப் பிந்திய அரசியல் சீர்திருத்த முயற்சியானது முரண்பாட்டுக்குப் பிந்திய அரசை உருவாக்கும் செயல்முறையில் முக்கியமானதும் கடுஞ்சோதனையானதுமான ஒரு கட்டம் என்பதை





விளங்கிக்கொள்ளப்படவும் அவ்வாறு கையாளப்படவும் வேண்டும். காலனித்துவத்துக்குப் பிந்திய ஒருபழைய அரசானது கடுமையானதும் தப்பிக்கமுடியாததுமான ஒரு நெருக்கடியினுள் இருந்துவருகின்றது. இம்முரண்பாடு பழைய காலனித்துவத்துக்குப் பிந்திய அரசினதும் அதனுடன் இணைந்த அரசியல் துணைக்கட்டமைப்பினதும் குறைபாடுகளினால் வரலாற்றுரீதியாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. முரண்பாட்டிற்கான தீர்வை நீடித்து நிலைக்கச் செய்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற செயல்முறையொன்று தன்னை வலுப்படுத்திக்கொள்ள வேண்டுமாயின் அது அரசை மீள்நிர்மாணித்தலில் தெளிவாகத் தன்னை வெளிப்படுத்த வேண்டும். இலங்கையில் அரசை மீள உருவாக்குகின்ற செயல்திட்டமானது ஒற்றையாட்சி அரச மாதிரியிலிருந்தும் நிரந்தரப் பெரும்பான்மை சனநாயகப் பாரம்பரியத்திலிருந்தும் முற்றிலும் மாறுபட்ட குணாதிசயத்துடன் நிகழப்போவதை உணர்ந்துள்ளது. தற்போது வலியுறுத்தப்படுகின்ற சமஷ்டிமுறையானது எண்ணக்கருவில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க மாற்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. விடுதலைப் புலிகள் பிரதிநிதித்துவப்படுத்துவதைப் போன்று தமிழ்த் தேசியவாதிகள் தமது ஆரம்ப இலக்கான காலனித்துவத்துக்குப் பிந்திய தமிழ்த் தேசியவாதத்தினை மீண்டும் நிலைப்படுத்த விரும்பினர். அதேவேளையில், ஆளுகின்ற சிங்கள உயர்குடியினர், அல்லது அவர்களில் ஒரு பிரிவினர், நாட்டின் அரசியல் அதிகாரக்கட்டமைப்பு மற்றும் ஒழுங்கமைப்புக்களில் தீவிர மாற்றம் ஒன்றைக் கொண்டுவருவது தொடர்பாக அதிக எதிர்ப்பினைக் காட்டவில்லை.

மூன்றாவதாக சமஷ்டி என்பது, வெறுமனே கீழ் நோக்கிய நிர்வாக அலகுகளுக்கு அதிகாரத்தைப் பகிர்கின்ற முறைமையாக மட்டும் விளங்கிக்கொள்ளப்படலாகாது. உண்மையில், இலங்கையின் முரண்பாட்டுத் தீர்வு தொடர்பாக உருவாகி வரும் வழிமுறைகளையும் மற்றும் அரசியல் சேர்க்கை ஆகியவற்றையும் மிகச் சுருக்கமாக வெளிப்படுத்துவதற்கு அதிகாரப்பகிர்வென்ற மொழிப்பிரயோகம் சற்றேனும் போதுமானதாக இல்லை. இலங்கையின் அரசியலமைப்பு விவாதத்தினூடாகப் பரிணாமம் பெற்ற அதிகா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரப் பகிர்வென்ற எண்ணக்கருவானது, பெரும்பான்மைச் சமூகத்தின் ஆளும் வர்க்கத்தினரால் நடத்தப்படுகின்ற மத்திய ஆட்சி, தனது அதிகாரங்கள் சிலவற்றைக் கீழ் நோக்கிய நிர்வாக மட்டங்களுக்கு (Periphery) தயக்கத்துடன் விட்டுக்கொடுக்கின்றது என்பதையே வெளிப்படுத்துகின்றது. அத்துடன் இலங்கையின் இனமுரண்பாடு வெறும் சிறுபான்மைப் பிரச்சினையென்று நோக்கப்படுவதன் அடிப்படையிலேயே அத்தகைய எண்ணக்கரு உதித்தது. அரசியல் சீர்திருத்தங்களென்ற முழு விடயத்தையும் தமிழ்ச் சமூகத்தின் கண்ணோட்டத்திலிருந்து நாம் பார்ப்போமாயின், அதிகாரப் பகிர்வென்ற கருத்தானது பெரும்பான்மைத்துவ உள்ளர்த்தங்களைக் கொண்டிருப்பதை நாம் காணலாம். அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளுதலென்பது உயர்ந்த சனநாயகத்தைக் குறிக்கும் பதமாகும். அது இனச் சமூகங்கள் சமமானவையென்பதையும் சமமாக மதிக்கப்படவும் அங்கீகரிக்கப்படவும் தகுதியுடையவை என்பதையும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. யுத்தத்திலிருந்து சமாதானத்திற்கு மாறிவரும் காலகட்டத்தில் அரசியலமைப்பானது பெருமளவு மாற்றத்தினை வேண்டி நிற்கும் சூழ்நிலையில், விவாதங்கள் மற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாயங்களின் அடிப்படையில், சமூகங்களுக்கிடையில் சமத்துவத்தை நோக்கிய நகர்வானது இலங்கையின் அரசியல் மதிப்பை வளப்படுத்துவதற்கு உதவும் (திருச்செல்வம்: 2001). இதைத்தான் சிலர் அரசியல் சிந்தனையில் ஓர் அடிப்படை மாற்றம் என்று குறிப்பிடுகின்றனர். இதனை வேறுவார்த்தைகளில் கூறுவதாயின், சனநாயக மாற்றுக்களைத் தேடுவதில் புதிய கோணத்திலான அரசியல் சிந்தனையும், கருத்தாடல்களும் அவசியமாகின்றது.

நான்காவதாக, வளர்ந்துவருகின்ற சீர்திருத்தச் செயல்முறை பெரும்பான்மைத்துவ சனநாயகத்தின் பிடியிலிருந்து பாதுகாக்கப்படக்கூடிய உறுதியான நிறுவனமயப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டாலன்றி, இலங்கையால் சமாதானத்துக்கான உறுதியான அரசியல் அடித்தளத்தை நாட்ட முடியுமா என்பது சந்தேகமே. பெரும்பான்மைத்துவப்படுத்தப்பட்ட தாராண்மை சனநாயகம் அதன் சட்டவாக்கத்துறை, அதன் நீதித்துறை, அதன் நிறைவேற்றுத்





துறை, மற்றும் நிருவாகத்துறை கட்டமைப்புக்கள், மற்றும், தேர்தல் செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளினால் இன சிறுபான்மையினர் குறிப்பாக தமிழ் மக்கள் பலியாக்கப்பட்டனர் என்னும் வரலாற்றுபூர்வமான அனுபவத்தினை மறந்துவிடுதல் விவேகமானதல்ல. பாராளுமன்ற மிதவாதிகள் மற்றும் கிளர்ச்சி கெரில்லாக்கள் ஆகியோரால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்த் தேசியச் சித்தாந்தமானது, போர் நிலைமைகளில் மட்டுமன்றி 1947 முதல் 1983 வரையான பாராளுமன்ற சனநாயக நிலைமைகளின் போது கூட இலங்கைத் தமிழர்கள் திட்டமிட்ட முறையில் பாரபட்சமாக நடத்தப்பட்டார்கள், அங்கீகாரம் மறுக்கப்பட்டவர்களாக இருந்தார்கள், ஒதுக்கப்பட்டார்கள் என்ற உண்மைகளை ஒருமித்த குரலில் முன்வைக்கின்றது. அதேவேளை, வடக்கு கிழக்கில் இலங்கை அரசு தோல்வியடைந்து விட்டது என்பதனை காலனித்துவத்துக்குப் பிந்திய வரலாறானாது தெளிவாகச் சான்று பகர்கின்றது. ஆளும் தகுதியற்ற ஒரு பெரும்பான்மைத்துவ அரசு, அங்கீகாரத்தையும், சமத்துவத்தையும், சுயநிர்ணயத்தையும் தேடுகின்ற பெரும்பான்மையல்லாத இனச் சமூகம் எதற்கும் ஒரு முன்னுதாரணமாக இருக்க முடியாது. இலங்கையின் புதிய அரசியலமைப்பை உருவாக்குபவர்கள் இலங்கைத் தமிழ் மக்களின் இத்தகைய வரலாற்று அனுபவத்தின் இக்குறிப்பிட்ட அம்சம் குறித்து மிகுந்த எச்சரிக்கைவுடையவர்களாக இருக்கவேண்டும். இலங்கைத் தமிழர் நிறுவனமயப்படுத்தப்பட்ட ஒரு குறிப்பிட்ட வகையான தாராண்மை சனநாயகத்துக்குப் பலியாகியுள்ளனர். பெரும்பான்மைத்துவக் கொள்கைக்கு எதிராக அரசியலமைப்பில் தேவையான பாதுகாப்புகள் செய்யப்பட்டாலன்றி, வெறுமனே அதன் பழைய நிறுவனப்படுத்தப்பட்ட தாராண்மை சனநாயகத்துக்கு திரும்பிச் செல்லுதல் இலங்கையில் சமூகங்களுக்கிடையிலான இணக்கத்தைப் பேணி வளர்க்கும் என்று கருத முடியாது.

இறுதியாக, இலங்கையைப் போன்று ஆழமாகப் பிளவு பட்ட ஒரு சமுதாயத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சமாதானச் செயல்முறையானது அதன் அரசியல் சமுதாயத்தின் (Polity) அடிப்படை சாசனத்தை மீளமைத்தலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோக்கிய ஒரு படிமுறையாகப் பார்க்கப்படவேண்டும். அத்தகைய நோக்கத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை மூலம் எட்டப்படுகின்ற அரசியலமைப்பானது ஒரு புதிய அரசியல் சமூகத்தின் அடிப்படைச் சாசனமாக அமையும். உண்மையில் அதற்குப் பொதுமக்களிடமிருந்து நியாய மானது என்று பாராட்டப்படுகின்ற அரசியல் புனிதத் தன்மை அவசியம். இலங்கையைப்போன்று கடுமையாகக் கூறுபட்டுள்ள ஓர் அரசியற் சமுதாயத்தில் சமூக மற்றும் அரசியல் உணர்வுகளுக்குப் பரந்துபட்ட அளவில் பாது காப்பளிக்கக்கூடிய வகையில் அரசியலமைப்பு சீர்திருத் தத்தை மேற்கொள்ளுதல் எளிதானதல்ல. ஆனால், இடம் பெற இருக்கும் முரண்பாட்டுத் தீர்வுக்கான அரசிய லமைப்பு உருவாக்கமானது, நாட்டின் குழப்பகரமான சமகால வரலாறாற்றை நோக்குமிடத்து, உண்மையில் இலங்கையின் சனநாயகத் தலைமையின் அரசியல் முகா மைத்துவ ஆற்றலை மதிப்பிடும் ஒரு சோதனையாகும்.

ஆக்கபூர்வமான இன முரண்பாட்டு முகாமைத்துவம், சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருதல் மற்றும் சனநாயக அரசியல் சீர்திருத்தங்கள் ஆகியவை ஒரே அரசி யல் நிகழ்ச்சிநிரலினுள் பின்னிப் பிணைந்துள்ளதனால் இலங்கையின் அரசியற் சமுதாயமானது மீண்டும் ஒரு முறை சூழ்நிலையின் கைதியாகி குழப்பத்திற்குள் சிக்குண் டுள்ளது. சர்வதேச உந்துதலுடனான தற்போதைய பேச்சு வார்த்தைச் செயல்முறையானது முரண்படுகின்ற தரப்புக் களை ஒருஉடன்படிக்கையினை எட்டுவதை நோக்கித் தள்ளுகின்ற ஆற்றலுடையதாகக் காணப்படுகின்றது. சிங்கள ஆளும் வர்க்கத்தின் சில பிரிவினர் அரசியலமைப் பில் சுயாட்சி ஏற்பாடொன்றை இடம்பெறச்செய்வதற்குத் தயாராக உள்ள அதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் பிரிவினைக்கு மாற்றாக சமஷ்டி முறையினைப் பரிசீலிப்பதற்கு விருப்பந்தெரிவித்துள்ளனர். இம்முன்னேற் றங்கள் இலங்கைக்கு என்றும் இல்லாத வகையிலான கடினமான சனநாயக சீர்திருத்தங்களை வழங்குகின்றது. எனினும் இவ்வத்தியாயத்தில் நான் சுட்டிக்காட்டியுள்ள வாறு, வன்முறையினாலும் போரினாலும் சிதறடிக்கப் பட்டுள்ள இலங்கையின் அரசியல் சமுதாயத்தில் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு அரசியலின் சில அடிப்படை





களில் கவனஞ்செலுத்த வேண்டியுள்ளது. இலங்கை அர சானது மீண்டும் பன்மைப்படுத்தப்பட்ட இன அத்திவாரங் களின் மீது கட்டியெழுப்பப்படவேண்டியுள்ள அதேவேளை யில், மாநில, துணை மாநில, உள்ளூர் மட்டங்களுக்கு அதிகாரப்பகிர்வு உருவாக்கப்படவேண்டும். அத்துடன் பிராந்திய அலகுகளில் இன உறவுகளை வரையறை செய் கின்ற விதத்தில் ஓர் ஆழமான சமஷ்டிமுறைச் செயற்திட் டம் உருவாக்கப்படவேண்டும்.

முரண்பாட்டு முகாமைத்துவத்தை அல்லது தீர்வு உத்திகளைத் திறனாய்வுக்கு உட்படுத்திய ஆய்விலிருந்து அவை நீடித்த சமூக முரண்பாட்டு விவாதங்களுக்குப் பகுதியளவில் மட்டும் பிரயோகிக்கப்படக்கூடியவை என் பது தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

கடந்தகால முரண்பாடுகள் பற்றிய ஆய்வுகள் இவ் விடயத்தைத் தெளிவுபடுத்துவதற்கான சில வழிமுறை களை எமக்குச் சூசகமாகத் தருகின்றன. முரண்பாடுகள் தொடக்கத்தையும் முடிவையும் கொண்டுள்ளன. அண் மைக் காலத்தில் சில யுத்தங்கள் 30 ஆண்டுகள் நீடித்துள்ள போதிலும், பெரும்பாலும் அரசுகளுக்கிடையிலான யுத் தங்கள் குறுகிய கால எல்லையை உடையதாக மாறி வருவதுடன், அவ்வப்பொழுது மட்டுமே நிகழ்கின்றன. மறுபுறத்தில் உள்நாட்டு யுத்தங்கள் நீடித்தனவாகவும், தொடர்ச்சியானதாகவும் காணப்படுகின்றன. இன முரண் பாடுகள்தான் தீர்ப்பதற்கு மிகவும் கடினமான முரண்பாடு கள் என்பது தெளிவாகியுள்ளதுடன் அவைதான் மிக அதிக மான எண்ணிக்கையில் பொதுமக்களின் உயிர்களைப் பலிகொள்ளுகின்ற கொடிய வன்முறையானவையாகவும் காணப்படுகின்றன.

வன்முறைகள் ஓர் உயர் மட்டத்தையும், இழப்புக்கள் மிக அதிகரித்த அளவையும் எட்டும்வரை மூன்றாந்தரப்பு கள் அரிதாகவே அவற்றில் தலையிடுகின்றன. இத்தகைய முரண்பாடுகளில் ஐக்கிய நாடுகள் மிக அரிதாகவே தலை யிடுவதுடன், இத்தகைய பிரச்சினைகள் அரிதாகவே பாது காப்புச் சபைக்குக் கொண்டுவரப்படுகின்றன. தலையீடு, மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் அல்லது பேச்சுவார்த்தை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கள், பொதுவாக முரண்பாடானது இலகுவாகக் கையாளப்பட முடியாத நிலையை எட்டுகின்றபோது, அதாவது பல வருடங்கள் கழித்து காலதாமதமாகவே ஏற்படுகின்றன. எனவே முரண்பாட்டுச் செயல்முறைகளில் காணப்படும் குறைபாடுகளை இனங்கண்டு அத்துறைகளை பலப்படுத்துதலும் ஆற்றலைக் கட்டியெழுப்புதலும் அவசியமாகின்றது.

முரண்பாடுகளுக்கு ஒற்றைக் காரணங்களைத் தேடுகின்ற படிப்படியான அணுகுமுறைகளை கைவிட்டு எளிதில் கையாளப்பட முடியாததற்கான காரணிகளைக் குறைக்கின்ற பல்வேறு அணுகுமுறைகளை நாம் கைக்கொள்ள வேண்டுமென்பது அண்மைக்காலத்தில் மிகத் தெளிவாகியுள்ளது. முரண்பாடுகளை ஓர் அரசியற் செயல்முறையினுள் மட்டுமே தீர்க்கமுடியும். அத்தகையதோர் அணுகுமுறையானது, முரண்பாடு தொடர்பான பல்வேறு தரப்பினர் மற்றும் நிறுவனங்கள் ஈடுபடுவதற்கான அங்கீகாரத்தினைக் கோரிநிற்கின்றது. மேலும், ஐக்கிய நாடுகள், சர்வதேச சமூகம், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றை ஈடுபடுத்துகின்ற வகையில் வேறுபட்ட வல்லுனர் குழுக்கள் உருவாக வேண்டும்.

தேர்தலினூடாகவோ அல்லது ஆட்சிக் கவிழ்ப்பினூடாகவோ ஆட்சி மாற்றம் ஏற்படுகின்றபோது முரண்பாட்டின் பிரதான சக்திகள் அதிகாரச் சமநிலையை மாற்றக்கூடியதாக இருக்கின்றது. இந்த நிலையை முரண்பாட்டு நிலைமாற்றம் எனலாம். இத்தகைய முரண்பாட்டு நிலைமாற்றமானது வெறுமனே அதிகாரக் கையளிப்பாக இல்லாமல் இருப்பதுடன், சமுதாயத்தினுள் கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். மேலும், தீர்க்கப்படாத பிரச்சினைகளை அர்த்தமுள்ளவகையில் எடுத்துச் செல்லக்கூடிய புதிய நிறுவன அமைப்புக்கள் உருவாதலும் முரண்பாட்டு நிலைமாற்றம் அர்த்தமுள்ளதாக அமைவதற்கு அவசியமாகும்.

மேலே விவாதிக்கப்பட்ட முரண்பாட்டு வகைகளுக்குச் சாத்தியமான தீர்வுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:





1. ஆட்சிப் பிரதேசத்துக்கான வலுவான ஓர் உரிமைக் கோரிக்கையை ஏற்கெனவே கொண்டுள்ள ஒரு தேசிய சிறுபான்மைக்கு ஓர் உயர்ந்த அளவிலான பிராந்தியச் சுயாட்சி வழங்கப்பட வேண்டும். ஐக்கிய இலங்கை என்னும் அமைப்பினுள் சுயநிர்ணய உரிமையென்பதே இதன் கருத்தாகும். இது ஒருமைப்பாடு மற்றும் சுயநிர்ணய உரிமை ஆகிய அடிப்படைகளை இணைக்கும் நோக்கத்துடன் வழங்கப்பட வேண்டும். மேலும், பகிரப்பட்ட ஆட்சி மற்றும் சுயாட்சிக் கட்டமைப்பின் மூலம் இது வெளிப்படுத்தப்படலாம்,
2. மனித உரிமைகளையும் அவை தொடர்பில் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களையும் மதித்தலும் பாதுகாத்தலும் பலப்படுத்துதலும்,
3. விசேடமாகப் பேச்சு, கருத்து வெளிப்படுத்துதல், ஒன்றிணைதல், கருத்து வேறுபடுதல் என்பவற்றுக்கான அடிப்படை உரிமைகளைக் கொண்டதான சனநாயகப் பன்மைத்துவம்,
4. சட்டத்தின் ஆட்சியையும் உரிய செயல் முறையையும் மதித்தல்,
5. அரசியல் தீர்மானமெடுக்கும் கட்டமைப்புகளில் அனைத்து மக்களினதும் பிரதிநித்துவமும், விசேடமாகப் பிராந்தியச் சிறுபான்மைகளின் பிரதிநிதித்துவம் போற்றப்படல்,
6. மேற்கூறியவற்றைச் சாத்தியமானளவு விரைவில் தேர்தல்கள் ஊடாக சட்டபூர்வமாக்குதலும் இது முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய விடயமாக இருப்பதால் அதனைச் செய்வதற்கான ஈடுபாடும் கடமைப்பாடும்,
7. வடக்கிற்கும் கிழக்கிற்குமென்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் கட்டமைப்பு வளங்களுக்கான வாய்ப்புக்கும் நிதித் தன்னாதிக்கத்துக்கும் உத்தரவாதம் அளித்தலும் அதனுடன் இணைந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொறுப்புக்கும் ஒளிவு மறைவின்மைக்கும் அவசியமான நடைமுறைகளையும் வழிமுறைகளையும் தாபிப்பதற்கான கடமையுணர்வும்,

8. கூட்டாகச் சேரும் சனநாயகம், சர்வதேச அரசியல் உரிமைகளை இலகுவில் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு விசேட ஏற்பாடுகளுடன் இணைந்த அதிக அளவிலான சமூகக் கூட்டு ஒப்பந்தங்கள்,

9. மொழிசார்ந்த குழுக்களையும் தேசிய இனங்களையும் அதிகாரப்பகிர்வு அலகுகளாக ஒப்புக் கொள்கின்ற சமஷ்டி வடிவிலான அரசாங்கம்.

தற்போது இலங்கைக்குச் சமஷ்டி முறையிலான அரசாங்கம் தேவை என்ற கோரிக்கையைப் புறக்கணிக்க முடியாது. 1920களில் கண்டியச் சிங்களவர் சமஷ்டியை வேண்டியபோது தமிழர் அக்கருத்தை நிராகரித்தனரென்பதும் தமிழர் அதனைப் பரிந்துரைத்தபோது சிங்களவர் அதனை மறுத்தனர் என்பதும் உண்மையே. இன்று அரசாங்கமும் (தமிழரின் ஏக பிரதிநிதிகளாயிருக்கவுள்ள) எல்ரீரீஈயும் சமஷ்டித் தீர்வொன்றைத் தொடர்வதற்கு உடன்பட்டுள்ளன. தற்போது அதிகாரத்திலுள்ள கட்சிகள் இலங்கைக்குச் சமஷ்டித் தீர்வொன்றை மட்டுமே ஏற்றுக் கொண்டுள்ளன. அதன் பரந்த அம்சங்கள் குறித்து ஆராயப்படுகின்ற அதேவேளையில் அதிலுள்ள நுணுக்கமான பிரச்சினைகள் குறித்து இனிமேல்தான் பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளது. இலங்கையில் ஒரு சமஷ்டி முறைக்கான பாதை நீண்டதும் கடினமானதுமாக இருக்குமென்பதில் ஐயமில்லை. இச்சவால்களுக்கு மத்தியிலும் அதிகாரத்திலுள்ளவர்கள் நாட்டை அழிவுக்கு இட்டுச்செல்கின்ற பல்வேறு கேடுகளுக்கு ஒரு தீர்வாகச் சமஷ்டி அரசியலமைப்பொன்றைக் காண்பதில் அக்கறை கொண்டுள்ளதாகத் தோன்றுகிறது.

எனவே சமஷ்டியின் இயல்பும் வடிவமும் எத்தகையதாயிருப்பினும், சமமான இரு அதிகார சபைகள், அதியுச்ச மேலாண்மையுள்ள ஓர் அரசியலமைப்பு, மத்தியில் பிராந்தியப் பிரதிநிதித்துவம், மத்திக்கும் மாநிலத்துக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துகின்ற வழிமுறை





கள், பிணக்குகளைத் தீர்ப்பதற்கான ஒரு நடுவர் அமைப்பு ஆகிய சமஷ்டியின் உள்ளியல்பான அம்சங்கள் உள்ளடக்கப்படவேண்டியது இன்றியமையாதது. இவற்றுடன் சனநாயகம், மனித உரிமைகளை மதித்தல், சட்டத்தின் ஆட்சி என்பவற்றையும் இணைத்து இலங்கையின் இன்றைய பிரச்சினைகளுக்குச் சிறந்ததொரு தீர்வை வழங்கக் கடமைப்பட்டுள்ளது. எனவே இலங்கைப் பிரச்சினைக்குச் சமஷ்டிமுறையை ஒருதீர்வாகப் பரிசீலிக்கையில் அதனை வடிவமைக்கும் செயல்முறையின்போது ஒற்றையாட்சி முறையின்கீழ்தான் பிரச்சினைகளே எழுந்தன என்பதை மனத்திற்கொள்ளவேண்டியது அவசியமாகும். சமஷ்டி முறையானது எதிர்பார்த்த தீர்வுகளை வழங்குகிறது என்பதையும், ஆழமாகப் பிளவுபட்ட ஒரு நாட்டை ஐக்கியப்படுத்துகிறது என்பதையும் உறுதிப்படுத்துவதற்கு அதிக கவனம் செலுத்தப்படவேண்டும்.

ஆழ்ந்த அறிவுடன் வகுக்கப்பட்ட கொள்கைத் திட்டமானது முரண்பாட்டுச் செயல்முறையில் சந்திக்க வேண்டியுள்ள சில பிரச்சினைகளை இலகுவாகக் கையாள உதவும். எனினும் அது அனைத்துப் பிரச்சினைகளையும் கையாளப் பயன்படாது. பல்வேறு தலையீடுகளின் தருணமும் தலையீட்டாளரின் இயல்பும் முரண்பாட்டை எந்தவகையில் நிலைமாற்றுவது என்பதைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாகும். தற்போது நிலவும் சனநாயக சூழலைப் பற்றிக் கொண்டுள்ளவர்களுக்கு முரண்பாடுகளைக் கூட்டாகவும் சாத்வீக முறையினூடாகவும் நிலைமாற்ற முடியுமா அல்லது ஆயுதமோதல்களும் குற்ற இயல்புகளும் மேலோங்கிவிடுமா என்பதைத் தீர்மானிப்பது சவாலாயிருக்கும். சமாதானத்தைக் கட்டியெழுப்புகின்ற செயல்முறைகளில் ஒவ்வொரு குறித்த கலாச்சாரமும் அவற்றின் சொந்த முரண்பாடுகளைத் தாங்களே தீர்த்துக்கொள்வதற்கான சுதேச வளங்களைக் கொண்டுள்ளதென நான் கருதுகின்றேன். முரண்பாட்டு நிலைமாற்றமென்பது, முரண்பாட்டின் அனைத்துத் தரப்புக்களுக்கும் பலப்படுத்த முயற்சிக்கின்றதென்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். சமூக முரண்பாடுகள் வன்முறை குறைந்த ஒரு வழியில் நிலைமாற்றப்படவேண்டியது அவசியம் என்பதை இவ்வணுகுமுறை வலியுறுத்துகின்றது. வன்முறையால் மட்டுப்படுத்திய குறிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கோள்களைச் சாதிக்க முடியுமாயினும் சமகால வன்முறையும் அதன் வெளிப்பாடுகளும் அனைத்துத் தரப்பினரையும் பெருமளவில் ஊனப்படுத்தவும் காயப்படுத்தவும் செய்கின்றது.

பேச்சுவார்த்தை மூலமாக எட்டப்படுகின்ற முடிவொன்றில் மட்டும்தான் இதன் தீர்வு தங்கியுள்ளது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும் இடம்பெயர்ந்தும் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ள நிலையிலும், சர்வதேச சமூகம் மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றின் கவனங்களை பெருமளவிற்கு ஈர்த்துள்ள நிலையிலும் அரசாங்கம் இதனை ஒரு சிறிய உள்நாட்டுப் பிரச்சினையென்று வாதிட முடியாது. அத்துடன் தமிழ் தலைமைகள் முன்முயற்சியெடுத்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டியதும் அவசியமாகும். தமிழ் தலைமைகள் சர்வதேச மத்தியஸ்தத்திற்கு அறைகூவல் விடுக்கவேண்டும். சர்வதேச மத்தியஸ்தத்திற்கான இந்த அறைகூவலை வெளி நாடுகளும், இதில் ஏதேனும் ஆக்கபூர்வமான விளைவைக் காணவிரும்பின் ஐக்கிய நாடுகள் சபையும் ஆதரிக்கவேண்டும்.

சமாதானத்துக்கான திறவுகோல் அதிகாரப்பகிர்வுதான். அமரர் நீலன் திருச்செல்வம் கூறியவாறு 'சமத்துவம், இனப்பன்மைவாதம், அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளல் என்பவற்றின் அடிப்படையில் பல்லினச் சமுதாயத்தின் அரசியலமைப்பு அத்திவாரங்களைத் தாபிப்பதற்கு இலங்கை தவறியமை இனமுரண்பாட்டை மேலும் கிளறிவிட்டுள்ளது' (திருச்செல்வம் 2000: 44). எந்தவோர் அரசும் சரியாகச் செயற்படுவதற்கு அது அனைத்து மக்களினதும் அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும். பிரஜைகளின் ஒவ்வொரு பிரிவினரும் அரசாங்கத்தை அமைப்பதிலும் ஆட்சிமுறையின் எல்லா மட்டங்களிலும் கருத்துக்கூறவும் உரிமை கொண்டிருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும். மத்திய அரசாங்கத்தை அமைப்பதோ அல்லது ஆட்சிமுறையில் ஒரு முக்கிய பங்கை உறுதிப்படுத்துவதோ இலங்கைத் தமிழர்களுக்கு கடினமானதாக இருக்குமென்ற போதிலும், முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு அது மிக முக்கியமானது. அத்துடன் வடக்கும் கிழக்கும்





இணைந்த மாகாண சபைக்குக் கணிசமான அளவு அதிகாரப் பகிர்வை வழங்குவது இலங்கைத் தமிழ்த் தேசியவாதத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இதுவரை இல்லாதிருந்த நிறைவை அளிக்கமுடியும்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்விற்கான வாய்ப்பு இல்லையென்றே கூறலாம். எனவே இனமுரண்பாட்டை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கு, யுத்தம் புரிகின்ற இரு தரப்புக்களும் சாதி, சமய வேறுபாடின்றி அனைத்து மக்களையும் சமத்துவமாக நடத்த வேண்டும். மேலும், இலங்கையின் உறுதிப்பாட்டையும் சுபிட்சத்தையும் சமயச் சார்பற்ற சனநாயகத்தையும் பாதுகாக்கும் நோககில் பொதுவான தேசிய விழுமியங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு உடன்பட வேண்டும். மொழி, கல்வி, காணி, இனம், கலாச்சாரமென்ற ஒவ்வொரு துறையிலும் தேசிய ஏற்றத் தாழ்வுகளை ஒழித்துக்கட்டுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டியது இலங்கை அரசாங்கத்தின் கடமையாகும்.

புதுடெல்லியோ அதன் தென்மாநிலத் தமிழ்நாட்டு அரசாங்கமோ இலங்கையின் இனமுரண்பாட்டில் சிக்கிக் கொள்ளமாட்டாதென்று இந்திய அரசாங்கம் மிகத் தெளிவாகக் கூறுகின்றது. 1997ஆம் ஆண்டு சனவரியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஐ.கே.குஜ்ரால் இலங்கைக்கு வருகைதந்தபோது இந்நிலைப்பாடு மிகத்தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது. 1997 சனவரி 24ஆந் தேதிய 'த ஹிந்து' பத்திரிகை 'இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் மீண்டும் ஒருமுறை இந்தியா தலையிடாதென்பதை யாருக்கும் சந்தேகம் வராதவாறு குஜ்ரால் தெளிவாக்கியுள்ளார்' என்று கருத்து வெளியிட்டதன்மூலம் கொழும்பின் மனோநிலையைப் படம்பிடித்துக் காட்டியது. குஜ்ரால், தனது நான்குநாள் விஜயத்தின்போது சனாதிபதி சந்திரிகா, பிரதம அமைச்சர் திருமதி பண்டாரநாயக்க, மற்றும் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த வேறு அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பலதரப்பட்ட கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல்களை நடத்தினாரென்றும் 'ஒவ்வோர் அரங்கிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒவ்வோர் அறிவிப்பிலும் தொடர்புடைய ஒவ்வொரு கேள்விக்குமான பதிலிலும் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடமாட்டாதென்று திரும்பத் திரும்பக் கூறியதாக'வும் அது குறிப்பிட்டது (லங்கா அவுட்லுக் சனவரி-மார்ச் 1997: 4-5).

குஜ்ராலைச் சந்தித்த தமிழ்த் தலைவர்கள், இன முரண்பாடு இத்தீவின் ஓர் உள்நாட்டுப் பிரச்சினையென்றும் இந்தியா அதில் தலையிடாதென்றும் வலியுறுத்துவதில் அவர் உறுதியாயிருந்தாரென்றும் கூறினர். தமிழ்த் தலைவர்களில் ஒருவர் 1987 யூலை 29ஆந் தேதிய ஒப்பந்தத்தின்கீழ் தமிழர் இத்தீவில் சமாதானமாகவும் கௌரவமாகவும் வாழ்வதற்கு உதவ வேண்டியது இந்தியாவின் 'தார்மீகப் பொறுப்பு' விடயத்தை எழுப்பியபோது 'ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஒரு தரப்புக்கு என்ன நடந்தது?' என்ற கேள்வியைத் தொடுத்ததன் மூலம் குஜ்ரால் பதிலளித்தார். எல்ரீரீஈயால் படுகொலை செய்யப்பட்டவரும் பிரதமரென்ற வகையில் அப்போதைய சனாதிபதி ஜயவர்தனவுடன் ஒப்பந்தத்தில் கூட்டாகக் கைச்சாத்திட்டவருமான ராஜீவ் காந்தியையே அவர் அவ்வாறு குறிப்பிட்டார் (பிரேமச்சந்திரனுடன் நேர்காணல், 7 மே 2001).

குஜ்ரால் தமிழ்த் தலைவர்களிடம், இந்தியாவுக்கு அதன் சொந்த உள்நாட்டுப் பிரச்சினைகள் உள்ளனவென்றும் அவர்களின் சார்பாகத் தலையிடும் நிலையில் அது இல்லையென்றும் மேலும் கூறினார். ஆட்சியெதிர்ப்பாளர்கள் இந்தியாவுக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தலொன்றை ஏற்படுத்துகின்றனரென்ற நிகழ்வின் காரணமாக இந்தியா எல்ரீரீஈயைக் கையாள்வதற்குக் கொழும்புக்கு இராணுவ உதவி வழங்குமாவென்று கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு அவர் 'இல்லை' என்று திட்டவட்டமாகப் பதிலளித்தார். 'இந்தியா எந்தவிதமான பாதுகாப்பு அச்சுறுத்தலைக் காண்பினும் அதனைக் கவனித்துக்கொள்ளும்' என்று அவர் மேலும் கூறினார் (பிரேமச்சந்திரனுடன் நேர்காணல், 7 மே 2001).

இன்றைய (2003) சூழமைவில் தற்போதைய சமாதானச் செயல்முறை முறிந்துபோகுமாயின் அது அரசுக்கும் எல்ரீரீஈக்கும் பெரும் இழப்பாகும். வரலாற்றுபூர்வ





முன்னுதாரணங்களையும் சர்வதேச நிலைமைகளையும் இலங்கையின் சகல சமூகங்களினதும் அபிலாசைகளையும் புறக்கணித்தல், இனி ஒருபோதும் மீளமுடியாத கசப்புத் தன்மையும் அவநம்பிக்கையும் பரஸ்பர எரிச்சலும் வன்முறையும் கொண்டதொரு கடுஞ்சுழியினுள் இலங்கையைச் சிக்கவைத்துவிடுமென்பதை இரு தரப்பினரும் ஒப்புக்கொள்ளவேண்டும்.

எம்மில் புலமை சான்றவர்களாயுள்ளவர்கள் இப்பரப்புகளை மேலும் முழுமையாக ஆய்வுசெய்ய வேண்டும். நாம் புதிய அறிவைத் தேடுகின்ற அதேவேளையில் இப்போது அறிந்துள்ளவற்றைத் தெளிவான, சக்தியுள்ள, பொருத்தமான வழிகளில் அரசியல் தலைவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அத்துடன் எமது தற்போதைய அறிவை மேலும் பரந்தமுறையிலும் பயனுறுதியுள்ள முறையிலும் பிரயோகிக்கவேண்டும்.

OOO

www.tamilarangam.net

## அத்தியாயம்- 9

# 1999 – 2007 வரையான வரலாற்று நிகழ்வுகள்

இந்நூல் 1948ஆம் ஆண்டிலிருந்து 1998ஆம் ஆண்டு வரையிலான இலங்கையின் சிங்கள, தமிழ் இனமோதலின் பல்வேறு பரிமாணங்களையும் பரிணாமங்களையும் ஆய்வு செய்தது. வாசகர்களின் நன்மைகருதி 1998இன் பின்னரான இனமோதல் அரசியலின் பிரதான நகர்வுகளை இவ்வத்தியாயம் ஆய்வு செய்கின்றது.

இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய சர்வதேசத் தலையீடு மற்றும் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட சமாதான நடவடிக்கைகள், இவற்றுக்கு சிங்கள அரசியல் சக்திகளதும், அரசாங்கத்தினதும், தமிழீழ விடுதலைப் புலிகளினதும் பதில் அணுகுமுறைகள் அவற்றைத் தொடர்ந்து நடைபெறும் அரசியல் செயற்பாடுகள் போன்றவையும் இங்கு ஆய்வு செய்யப்படுகின்றன.

சர்வதேசத் தொடர்புகளைப் பொறுத்தவரை 2000 ஆம் ஆண்டில் நோர்வே அரசு, இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைக்கான வசதி செய்து கொடுக்கும் அனுசரணையாளர்களாகப் பணிபுரிய முன்வந்தது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை, போர்நிறுத்த உடன்படிக்கையைக் கண்காணிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சிறிலங்கா கண்காணிப்புக்குழு (Sri lanka Monitoring Mission) என்னும் ஸ்கேன்டிநேவிய நாடுகளின் பாதுகாப்புத்துறையினரின் பிரிதிநிகளைக் கொண்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, இவற்றிற்கு ஆதரவாக உருவாக்கப்பட்ட இணைத்தலைமை நாடுகளின் அணுகுமுறைகள் மேலும், தீர்வு தொடர்பான சர்வதேச





சமூகத்தின் ஆலோசனைகளையும் அவை தொடர்பான அரசு உட்பட சிங்கள அரசியல் சக்திகளினதும், விடுதலைப் புலிகளினதும் அணுகுமுறைகளும் இங்கு ஆராயப்படுகின்றன.

முன்னைய அத்தியாயங்களில் நாம் சந்திரிகாவின் முன்மொழிவுகள் வரை ஆராய்ந்தோம். அந்தத் தீர்வுத்திட்ட முன்மொழிவுகள் ஐக்கிய தேசியக் கட்சியினால் எதிர்க்கப்பட்டன. பின் 1999ஆம் ஆண்டு டிசெம்பரில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தல் 2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் மற்றும் 2001ஆம் ஆண்டு திசெம்பரில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்கள், அதனைத் தொடர்ந்து அரசியல் சட்டத்தின் 17வது திருத்தம் ஆகியன இலங்கையின் அரசியலில் மாற்றங்களைக் கொண்டுவந்தன. 2001ஆம் ஆண்டுத் தேர்தலில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகியவை இணைந்து போட்டியிட்டன. 2000ஆம் ஆண்டு தனித்துப் போட்டியிட்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி ஐந்து ஆசனங்களை மட்டுமே பெற்றிருந்தது. ஆனால் 2001ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி ஏனைய மூன்று அமைப்புக்களுடன் கூட்டாகப் போட்டியிட்டதன் மூலம் (கூட்டமைப்பு) பதினைந்து ஆசனங்களைப் பெற்றது.

1994ஆம் ஆண்டு நவம்பரில் சந்திரிகா குமாரதுங்கா முதல் முறையாக சனாதிபதியானதும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடத்திய நேரடிப்பேச்சுவார்த்தை தோல்வியில் முடியவே, அவர் இரண்டுவிதமான அரசியல் தந்திரங்களைப் பயன்படுத்த முயற்சித்தார்.

1. 'சமாதானத்துக்கான போர்' எனும் நடவடிக்கையூடாக விடுதலைப் புலிகளை, இராணுவ ரீதியாக பலவீனப்படுத்துவது.
2. தீர்வொன்றை முன்வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பது.

அதன்படி சந்திரிகா அரசு சமஷ்டி அடிப்படையிலான ஆட்சிமுறை குறித்து ஆளும் கட்சிக்குள்ளும், எதிர்க்கட்சிகளுடனும், தமிழ்க் கட்சிகளுடனும் கலந்துரையாடல்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈடுபட்டது. இக்கலந்துரையாடல்களில் மத்திய அரசின் அதிகாரத்திற்குள் இருக்கும் அதிகாரங்கள் எவை? மாகாண சபைகளுக்கு இருக்கும் அதிகாரங்கள் எவை? என்பவை முக்கியத்துவம் பெற்றன. பௌத்தசமயம் அரசமதமாக எல்லா விதசலுகைகளையும் பெற்றிருப்பது; ஏனைய மதங்கட்குச் சமமான சலுகைகளை மறுப்பது என்பதும் முக்கியத்துவம் பெற்றது.

முக்கியமாக ஆராயப்பட்ட மற்றைய விடங்கள் கிழக்கு மாகாணத்தின் எல்லைகளை மாற்றியமைப்பது, வடக்கு - கிழக்குக் குடியேற்றத் திட்டங்கள், ஏனைய சட்டதிட்டங்களை மத்திய அரசு தன்னிடமே வைத்திருத்தல் என்பவையாகும். 1995இல் சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்கா, நீலன் திருச்செல்வம், பேராசிரியர் பீரிஸ் போன்றவர்களால் உருவாக்கப்பட்டு, தமிழ் கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகளினூடாக ஓரளவிற்குச் செழுமைப்படுத்தப்பட்ட அந்த நகல் தீர்வுத் திட்டமானது ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஆட்சியிலிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிங்கள அதிதீவிரவாத சக்திகளினதும் நிர்ப்பந்தங்களால், பெருமளவிற்கு அதிகாரங்கள் குறைக்கப்பட்டு உள்ளடக்கத்தில் அதிகாரமற்ற ஒரு நகலாகவே இது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை இந்நகலானது நடைமுறையிலிருக்கும் மாகாண சபை முறையை வேறு வார்த்தைகளில் மீண்டும் நிறுவமுற்பட்டது. இத்தகைய பலவீனமான நகலை ஈ.பி.டி.பி தவிர்ந்த ஏனைய தமிழ் கட்சிகள் அனைத்தும் நிராகரித்தன. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியோ தமிழ் மக்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்படுகின்றது என்ற நிலைப்பாட்டின் அடிப்படையில் அதனை நிராகரித்து பாராளுமன்றத்தில் அச்சட்ட நகலைக் கிழித்தெறிந்தனர். தாராண்மைவாத சனநாயக அரசியல் கட்சிகள் என்று கருதப்படுகின்ற ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மற்றும் சிங்கள **பௌத்த அதிதீவிரவாத கட்சிகள்** அனைத்தினதும் அணுகுமுறைகள் **இனப்பிரச்சனைக்**கான தீர்வு விடயத்தில் ஒரே தன்மை உடையதாக இருப்பதையே இச்செயற்பாட்டினூடாக நாம் புரிந்துகொள்ள முடிகிறது. அதாவது இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பான சிங்களக் கட்சிகளின் மனோநிலை என்பது இறுக்கமான மாற்றமுடியாத தன்மையைக் கொண்டுள்ளது என்பதையே இது புலப்படுத்துகின்றது.





1994ஆம் ஆண்டில் நடந்ததற்கு நேர்மாறாக சந்திரிகா 1999இல் முதலாவது சனாதிபதி தேர்தலையும் அதன் பின்னர் பாராளுமன்றத் தேர்தலையும் நடத்த முடிவு செய்து முதலில் 1999ஆம் ஆண்டு டிசெம்பரில் சனாதிபதித் தேர்தலை நடத்தினார். இத்தேர்தலில் 73.3 சதவீத மக்கள் வாக்களித்திருந்தனர். அதில் 51.1 சதவீத வாக்குகளை பெற்று சந்திரிகா வெற்றி பெற்றார்.

தேர்தல் கூட்டமொன்றில் சந்திரிகாவின் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலானது குறிப்பிடத்தக்க அளவிலான அனுதாப வாக்குகளைப் பெற்றுக் கொள்ள உதவியமை அவர் வெற்றிபெறுவதற்கு முக்கியமான காரணமாக அமைந்தது. இருந்தபோதிலும் 1994ஆம் ஆண்டு தேர்தலைவிட மிகக்குறைந்த சதவீத வாக்குகளையே அவரால் பெறமுடிந்தது. குறிப்பாக வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளை அவர் இழந்திருந்தார். வடக்கு கிழக்கு தமிழ் மக்களில் அதிகமானோர் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவிற்கே வாக்களித்தனர். இதன்மூலம் தமிழ் மக்கள் சந்திரிகாவின் சமாதான முன்னெடுப்புகளில் நம்பிக்கை இழந்துவிட்டனர் என்பதை உணர்த்தியிருந்தனர்.

வடக்கு - கிழக்கு போர்முனையில் 2000ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் பல இடங்களிலும் சிறிலங்கா இராணுவத்தை வெற்றி கொண்டனர். அதன் தொடர்ச்சியாக யாழ். குடா நாட்டைக் கைப்பற்றக்கூடிய நிலை ஏற்பட்டது. இச்சூழ்நிலையில் இலங்கை அரசு இந்தியாவின் உதவியை நாடியது. இந்தியா அதுதொடர்பான தெளிவான பதில் எதனையும் முன்வைக்கவில்லை. எனினும் தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கத்தைக் கைவிட்டனர். இங்கு அதன் காரணங்களை ஆராய முனைவது எனது நோக்கமல்ல.

ஒக்ரோபர் 2000ஆம் ஆண்டில் நடந்த பாராளுமன்றத் தேர்தலிலும் சந்திரிகாவின் பொதுஜன முன்னணி (Peoples Alliance) வெற்றிபெற்று தனது ஆட்சியைத் தொடர்ந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இக்காலகட்டத்தில் பேச்சு வார்த்தையைத் தொடங்கும் நோக்கில் சந்திரிகாவினால் நோர்வே நாட்டின் உதவி கோரப்பட்டது. அழைப்பை ஏற்று அந்நாடும் உதவுவதற்கு முன்வந்தது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஆளும் பொதுஜன முன்னணிக்கும் இடையில் இணக்கப்பாடற்ற நிலை தொடர்ந்தது. முக்கிய அரசியல் முடிவுகளை எடுப்ப தற்குப் பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு பெரும் பான்மை தேவை என்பதால் ஆளுங்காட்சி, எதிர்க்கட்சி யின் ஆதரவின்றி இனப்பிரச்சினைக்கும் தீர்வு காணமுடி யாது என்னும் நிலை காணப்பட்டது. இத்தகைய நிலை இலங்கை அரசியலில் காலம் காலமாக நிலவி வருகின்றமை ஓர் நியதியாகும்.

## சர்வதேசத் தலையீட்டிற்கான பின்னணி

சந்திரிகா பண்டாரநாயக அவர்களின் ஆட்சிக்காலத் தில் அரசியல் தீர்வுத்திட்டத்தை முன்வைத்து அதன் மூலம் தீர்வை நோக்கி முன்னேறி வருவதாக உலகை நம்பவைத்த போதும் அவரது சமாதானத்திற்கான போர் பிரகடனமும் அதன் நாசகார விளைவுகளும் தமிழ் மக்களுக்கு அவரது அணுகுமுறையின் மீது இருந்த நம்பிக்கையைத் தகர்த்து விட்டது. எனவே, சிங்களத் தலைமைகளுடன் பேசி பிரச்சி னைக்கு நியாயமான தீர்வை எட்டமுடியும் என்ற நம்பிக் கையை மீண்டும் தமிழ் மக்கள் இழந்தனர். இதன் அடிப் படையில் தமிழ் தலைவர்கள் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு மூன்றாம் தரப்பின் அவசியத்தை வலியுறுத்தத் தொடங்கினர். சமா தானத்திற்கான யுத்தத்தினால் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் தமது சொந்த இருப்பிடங்கள், வாழ்வாதாரங்கள் ஆகியவற்றை இழந்து இடம்பெயர்ந்து, தங்குமிடங்களின்றி நாடோடிகள்போல் வாழ்ந்துகொண்டிருந்த சூழ்நிலையில் ஒரு ஸ்திரமான வாழ்க்கையை அவர்கள் உருவாக்கிக் கொள் வதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டிய நெருக்கடியான நிலை விடுதலைப்புலிகளுக்கு இருந்தது.

அதேவேளை ஆனையிறவு இராணுவ முகாம் தாக்கு தல் அதனைத் தொடர்ந்த கட்டுநாயக விமான தளம் மற் றும் விமான நிலையை தாக்குதல் ஆகியவை இலங்கை அர சுக்கு இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும்





பலத்த பின்னடைவுகளை ஏற்படுத்தியது. இவற்றால் ஏற் பட்ட தாக்கங்களிலிருந்து தன்னை மீள்வித்து ஸ்திரப்படுத் திக்கொள்வதற்கு அரசிற்கு போரற்ற ஒருகால அவகாசம் தேவைப்பட்டது. மேலும், தாங்கள் நேர்மையான அணுகு முறையைக் கடைப்பிடிப்பதாகவும், ஆனால் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளே இனப்பிரச்சினைத் தீர்விற் குக் குந்தமாக இருப்பதாகவும் உலகிற்குப் பிரச்சாரப்படுத்த வேண்டிய தேவையும் அரசிற்கு இருந்தது. அதேசமயம் புலிகள் ஒரு பலமான நிலையில் இருந்ததால் அதனை விரும்பி ஏற்றுக் கொள்ளாத நிலையும் அரசிற்கு இருந்தது. எனினும் இதனை மறுக்கும் பட்சத்தில் தாம் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதிகள் என்பது வெளிப்பட்டுவிடும் என்பதினால் பேச்சு வார்த்தை அணுகுமுறையை ஏற்றுக்கொள்ளும் முடிவினை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தமும் அரசிற்கு இருந்தது.

இக்காலகட்டத்தில்தான் 11.09.2001இல் அமெரிக்காவின் இரட்டை கோபுரங்கள் மற்றும் பென்டகன் ஆகியவை சர்வதேச இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்பான அல் கொய்டாவினால் தகர்க்கப்பட்டன. உலகின் மிகப்பெரும் வல்லரசான அமெரிக்காவின் மீதே பயங்கரவாதத் தாக்கு தல் தொடுக்கப்பட்டது என்பது அமெரிக்காவை கடும் சினம் கொள்ளவைத்தது. இதன் விளைவாக அமெரிக்கா உலகம் முழுவதும் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவோம் என்ற கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்தது. அமெரிக் காவினால் பயங்கரவாதப் பட்டியலிடப்பட்ட மற்றும் தடை செய்யப்பட்ட அமைப்புக்களை இராணுவ ரீதியில் அழித் தொழிப்பதற்கான வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத் தப்பட்டன. இவ்வகையில் ஆப்கானிஸ்தானில் தாலிபான் ஆட்சிக்கு எதிராக இராணுவ நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டு புதிய ஆட்சி நிறுவப்பட்டது. இதேபோன்று பயங்கரவாதம் நிலைகொண்டிருந்த பல நாடுகளுக்கும் அதனை அழிப்பதற்குத் தேவையான அனைத்து உதவி களும் அமெரிக்காவினால் வழங்கப்பட்டது.

இலங்கையைப் பொறுத்தவரை, அமெரிக்காவின் பயங்கரவாத பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகளும் இடம்பெற்றிருந்ததானது பயங்கரவாதத்தை அழிப்பதென்ற பெயரால் தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அழித்தொழித்துவிடுமோ என்ற அச்சம் பொதுவாகத் தமிழ் மக்களுக்கும் குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்டது. ஆனால், இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி தீர்வொன்றிற்கு வரவேண்டும் என்ற நிலைப்பாட்டினை அமெரிக்கா அறிவித்தது. இவ்வறிவிப்பானது ஒரு புறம் இராஜதந்திர முறையில் இனமுரண்பாட்டின் இருமுக்கிய பங்காளிகளான இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஒரு எச்சரிக்கையாக அமைந்தது. மறுபுறம் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்திருக்கும் போதிலும் தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயங்களை அமெரிக்கா ஏற்றுக்கொண்டுள்ளதையே இந்நிலைப்பாடு வெளிப்படுத்துகின்றது. எனினும், தீர்விற்காக பயங்கரவாத வழிமுறைகளைக் கையாள்வதை அமெரிக்கா ஏற்றுக் கொள்ளாது என்ற செய்தியும் இதில் அடங்கியுள்ளது. ஏற்கெனவே உள்ளூரில் இடம்பெயர்ந்து நிர்க்கதியான தமிழ்மக்கள் தமது வாழ்வை ஸ்திரப்படுத்திக்கொள்ள ஒரு போரற்ற சூழ்நிலையை வேண்டியிருந்தனர். மேலும் இந்தியா, அமெரிக்கா, கனடா உட்பட பலநாடுகள் புலிகளைத் தடை செய்திருந்தமையானது, புலிகளுக்கு அரசியல் ரீதியான பாதிப்புக்களையும் ஏற்படுத்தியிருந்தது.

இதனால் சர்வதேச ரீதியில் தான் ஒரு விடுதலைப் போராட்ட இயக்கம் என்ற அங்கீகாரத்தைப் பெறவேண்டிய கட்டாயமும் புலிகளுக்கு இருந்ததை யாரும் மறுக்க முடியாது. ஆகவே தற்காலிகமாகவேனும் பேச்சுவார்த்தை அணுகுமுறையை ஏற்றுக்கொண்டு சர்வதேச அரங்கில் தம்மை விடுதலைப் போராட்ட அமைப்பு என்ற தகுதியை நிலைநாட்ட வேண்டிய கட்டாயம் புலிகளுக்கு இருந்தது. எனவே விடுதலைப் புலிகள் தமது அரசியல் முகத்தையும் உறுதியாகக் காட்டவேண்டியிருந்தது. இதன் அங்கமாகவே 2001ஆம் ஆண்டு அவர்கள் தமிழ்க் கூட்டமைப்பிற்குத் தமது மறைமுக ஆதரவை வழங்கினர். இதனைத் தொடர்ந்து அந்த ஆண்டில் இடம்பெற்ற மாவீரர் தின உரையில், பிரபாகரன் தாம் சமாதனப் பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இருப்பதாக அறிவித்தார். அதில் ஐக்கிய இலங்கைக்குள் 'உள்ளக சுயநிர்ணய உரிமை' (Internal Self - determination) அடிப்படையிலான தீர்வை பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக அறிவித்தார்.' (மாவீரர்தின உரை 2001).

மேற்கண்டவற்றிலிருந்து இனமுரண்பாட்டின் இரு முக்கிய பங்காளிகளுமே நெருக்கடியின் காரணமாகத்தான் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டனரே அன்றி பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை அல்லது விருப்பிலிருந்து முடிவுகள் எடுக்கப்படவில்லை என்றுகொள்ள முடிகின்றது. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் தமது உரிமைகளோடு வாழ்வதற்கு சிங்கள இனவாதத் தலைமையின் கீழான ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு சாத்தியம் என்பதை நம்பவில்லை. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களுக்குச் சமஉரிமைகள் வழங்குவதென்பது அவர்களால் நம்பப்படும் சிங்கள நலன்களுக்கு எதிரானது என்பதில் உறுதியாக இருப்பதனால் தமிழ் மக்களின் போராட்ட பலத்தை அழிப்பதன் மூலம் அவர்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. எனவே சிங்கள அரசியல் சமூகத்தின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைப்பதற்கு எந்தவொரு முகாந்திரமும் இல்லை. எனவே இப்புதிய அணுகுமுறையானது சிங்கள அரசியற் சமூகத்தின்மீது தமிழ் மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பை அரசின்மீது சுமத்தியது.

மேற்கண்டவற்றின் அடிப்படைகளிலேயே நோர்வேயின் முன்முயற்சியிலான சமாதான நடவடிக்கைகளையும் முரண்பாட்டின் பங்குதாரர்களாகிய சிங்கள அரசியல் சமூகம், குறிப்பாக சிங்கள அரசு மற்றும் விடுதலைப் புலிகள் ஆகியோரின் அணுகுமுறைகளையும் நாம் நோக்கலாம்.

## போர்நிறுத்த உடன்படிக்கை

நாம் முன்னர் கண்டவாறு ஒருபுறம் தமிழ் மிதவாதத் தலைமை போரை நிறுத்தி புலிகளுடன் பேச்சுவாத்தை நடத்துமாறு அரசை வலியுறுத்தி வந்தது. மறுபுறத்தில் இருதரப்பினருக்கும் போரற்ற ஒரு சூழ்நிலை தேவையாக இருந்தது. இப்பின்னணியில் அமெரிக்காவின் அறிவிப்பா









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



னது இருதரப்பினரும் நோர்வேயைப் பேச்சுவார்த்தைக் கான அனுசரணையாளராக ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தைத் தோற்றுவித்தது. சர்வதேச அரசியலில் பக்கம் சாராத நடுநிலை நாடுகளில் ஒன்றாக நோர்வே கருதப்படுவதாலும், மிக நீண்டகாலமாக மோதலில் ஈடு பட்டுவந்த பாலஸ்தீன, இஸ்ரேல் ஆகியவற்றைப் பேச்சு வார்த்தை மேசைக்கு அழைத்து இருதரப்பு உடன்படிக் கையை வெற்றிகரமாக ஏற்றுக்கொள்ள வைத்தமை ஆகிய தகுதிகளே இருதரப்பினரும் நோர்வேமீது நம்பிக்கை வைத்து அழைக்கக் காரணமாக அமைந்தது. 2000ஆம் ஆண்டில் அனுசரனையாளராக அழைக்கப்பட்ட நோர்வே கொழும்புத் தலைமைக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடை யில் பேச்சுவார்த்தைக்கான நம்பிக்கையைக் கட்டியெழுப் பும் நடவடிக்கைகளில் பல மாதங்களாக ஈடுபட்டுவந்தது. இதன் பெறுபேறாக தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தை மீது தமக்கிருக்கும் ஈடுபாட்டைப் புலப்படுத் தும் பொருட்டு அதே ஆண்டு டிசம்பர் மாதம் நத்தார் பெரு நாளில் ஒருதலைப் பட்சமான போர்நிறத்தத்தை அறிவித் தனர். இவ்வாறு நோர்வேயினால் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்டுவந்த பேச்சுவார்த்தைகளின் ஊடாக 2001 ஆம் ஆண்டு அரசாங்கம் புலிகளின் மீது விதித்திருந்த தடையை நீக்கியது.

இவ்வேளையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமை யிலான பொதுஜன முன்னணி பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை இழந்ததினால், 2002இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தலை மையிலான கூட்டணி அதிகாரத்தைக் கைப்பற்றியது. இந் நிலையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியான திருமதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்கா சனாதி பதியாகவும் இதன் போட்டிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் பதவி வகித்தனர். இந்நிலைமையானது இனப்பிரச்சினை போன்று சிக்கலானதும், அவசியம் தீர்க்கப்பட வேண்டியது மாகிய பிரச்சினைகளைக் கையாள்வதற்கு அடிப்படை யாகத் தேவைப்படக்கூடிய அரசியல் ஸ்திரத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கியது. அதாவது சனாதிபதிக்கும் பிரதம ருக்கும் இடையில் அதிகாரம் தொடர்பாக ஓர் அரசியல்





யாப்பு நெருக்கடி ஏற்பட்டது. மேலும், நோர்வேயை அழைத் தவர் சனாதிபதியாக இருந்தபோதிலும், பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சமாதான நடவடிக்கைகளில் பெரும் பங்கு வகிக்க கூடிய ஒரு சூழல் உருவானதால் சமாதான நடவடிக்கைகளுக்கான நற்பெயரை யார் தட்டிக்கொள்வது என்ற ஒரு குறுகிய அரசியல் போட்டியும் வெளிப்பட்டது. இந்நிலையில் சமாதான நடவடிக்கைகளின் விரைந்து செயல் பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நோர்வேயின் அனு சரனையுடன் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகர னுடன் ஓர் போர்நிறுத்த உடன்படிக்கை (Cease Fire Agree- ment - CFA) யை 23.02.2002 இல் கைச்சாத்திட்டார்.

போர்நிறுத்த உடன்படிக்கையானது பொதுவாக இலங்கை மக்கள் மத்தியில், குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. இச்சூழ்நிலை யானது தமிழ் மக்களுக்கு ஓரளவிற்கு நிம்மதியையும், உயிர் அச்சுறுத்தலற்ற ஒரு நிலையையும் ஏற்படுத்தியது. இடம் பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேறும் சூழல் உருவானது. போர்ச்சூழ் நிலை காரணமாக வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்குப் பெரும் தடையாக் அமைந்திருந்த வீதித்தடைகள் சோதனைச் சாவடிகள் ஆகியவை அகற்றப்பட்டன. மக்களின் நடமாட் டத்திற்கான ‘பாஸ்’ நடைமுறைகள் அகற்றப்பட்டன. ஏ-9 வீதி திறக்கப்பட்டது. இதனால் பொதுவாக அனைத்து மக்களும், குறிப்பாக வடக்கு - கிழக்கு மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். கொலைகள் குறைந்தது. விவசாய உற்பத்தி, வியாபார நடவடிக்கைகள் அதிகரித்தன.

எனினும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமை யிலான ஆளும் கட்சி, ஜனதா விமுக்தி பெரமுன ஆகிய கட்சிகள் உட்பட கடும்போக்கான சிங்கள தேசியவாத **சக்திகளும் இவ்வொப்பந்தத்தினை** எதிர்த்தனர். இவ்வொப் **பந்தம் இருதரப்பினரதும்** இருப்பு நிலையை (Statusco) அங்கீகரித்திருந்தன் அடிப்படையில் இருதரப்பும் ஒருவர் மீது ஒருவர் இராணுவத் தாக்குதல் தொடங்கக்கூடாது என்பதுடன் விடுதலைப் புலிகள் வடக்கு - கிழக்கில் இராணு வக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஆயுதமின்றி அரசியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நடவடிக்கைகளில் ஈடுபடவும், குறுகிய கால எல்லைக்குள் அரசு அதிஉயர் பாதுகாப்பு வலையங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டு மக்கள் வெளியேற்றப்பட்ட இடங்களில் மீள்குடியேற்றம் செய்வது போன்ற முக்கிய அம்சங்களை யும் கொண்டிருந்தது. வடக்கு - கிழக்கில் பொது இடங் களில் அமைந்திருந்த இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு, மக்கள் சுதந்திரமாக நடமாடக்கூடிய சாதாரணமான சூழலை ஏற்படுத்துவது என்பதும் மிக முக்கியமான விடயமாக யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது (பின்னிணைப்பு 21).

மேலும் கடற்புலிகள் குறித்து ஒப்பந்தத்தில் எதுவும் கூறப்படவில்லை என்பதனால் புலிகளின் எல்லைக்குள்ளான கடல் ஆதிக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவே புலி கள் கருதினர். மேற்கண்ட காரணங்களால் இவ்வொப்பந் தத்தில் கையெழுத்திட்டதின் மூலம் பிரமர் ரணில் விக்கிர மசிங்க அவர்கள் நாட்டின் இறையாண்மை, ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கேள்விக்குள்ளாக்கி விட்டார்; எனவே யுத்த நிறுத்த ஒப்பந்தம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கோஷங்களுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு எதிரான பிரச்சாரமும் அதில் கையெழுத்திட்ட பிரதமர் ரணிலுக்கு எதிரான பிரச்சாரமும் தொடர்ந்தது. இப்போக்கானது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் இருப்பு தொடர்பாகவும் தீர்விற் கான சாத்தியங்கள் பற்றிய ஆழமான சந்தேகங்களையும் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது.

இலங்கையின் இனமோதலுக்கான தீர்வு தொடர்பாக சர்வதேச ஈடுபாடு என்ற வகையில் இந்தியாவிற்கு அடுத்து சமாதானத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்ட இரண் டாவது நாடு நோர்வேயாகும். போர்நிறுத்த ஒப்பந்தம் அதனைத் தொடர்ந்து சிறிலங்கா போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழு ஆகியவற்றை உருவாக்கி போர்நிறுத்தத் தைக் கண்காணிப்பதற்கான ஏற்பாடுகள் செய்ததையும் நோர்வேயின் வெற்றிகரமான முன்னெடுப்புக்களாகக் கொள்ளலாம். போர்நிறுத்த உடன்படிக்கை முற்றுமுழு தாக அரசாங்கத்தினாலும் ஓரளவிற்குப் புலிகளாலும் மீறப் பட்டு இன்று அது நடைமுறையில் செயலிழந்துவிட்ட போதும் உத்தியோகபூர்வமாக இவ்வொப்பந்தத்தை மீளப்





பெற்றுக் கொள்கிறோம் என்று கூறமுடியவில்லை என்பதி லிருந்து இருதரப்பினருக்குமே சர்வதேச சமூகத்தைப் பகைத்துக்கொண்டு தத்தமது குறிக்கோள்களை முன்னெ டுப்பது இலகுவானதல்ல என்பது புரிகின்றது. ஏனெனில், ஒப்பந்தத்தை உருவாக்குவதில் நோர்வே நேரடியாகச் செயற்பட்ட போதும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், இந்தியா ஆகியவற்றின் ஆதரவும் பின்பலமும் பகிரங்கமாக அதற்கு இருந்தது. இதில் முக்கியமாக அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் இந்தியா ஆகிய முக்கிய நாடுகள் புலிகளைத் தடைசெய்திருந்தமையாலும் சர்வதேச அரசியலில் பெரும்பாலும் ஓர் அரசு இன்னொரு அரசிற்கு உதவும் நிலையே காணப்படுவதாலும் ஒருபுறம் பேச்சு வார்த்தையை நடத்தும்படி கூறியபோதும், அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் அரசிற்குப் பல்வேறுவிதமான இராணுவ உதவிகளை வழங்கி வந்ததுடன் புலிகளுக்கு அதிக அழுத்தம் கொடுக்கும் போக்கையும் கடைப்பிடித்தன.

2001ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 தாக்குதலின் பின்னர் அமெரிக்காவின் கொள்கையின் பிரகாரம் ஆயுதமெடுத்துப் போராடக்கூடிய சகல பிரிவினருமே பயங்கரவாதிகள் என்ற வரையறைக்குள் உட்படுத்தப்பட்டனர். இதனடிப் படையில் விடுதலைப் புலிகளும் பயங்கரவாத அமைப்பு என்ற வரையறைக்குள் உட்படுத்தப்பட்டனர். இதனால், புலிகளது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது அதனூ டாக புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்துவது என்ற நிலையை அமெரிக்கா இந்தியா உட்பட சர்வதேச சமூகம் கைக்கொண்டது. இதற்கு விடுதலைப் புலிகளின் ஒருசில நடவடிக்கைகளும் ஒத்திசைவாக இருந்தது. இதன் அடிப்படையில் சர்வதேசரீதியாக புலிகளுக்கான நிதி, மற் றும் அவர்களது வங்கிக் கணக்குகள் போன்றவை முடக் கப்பட்டன. அத்துடன் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்விகளினூடு புலிகளினுடைய கடல் நடமாட்டமும் இலங்கை அரசிற்குத் தெரிவிக்கப் பட்டதனூடாக புலிகளின் ஆயுதக் கப்பல்களும் மூழ்கடிக் கப்பட்டன. மொத்தத்தில் பேச்சுவார்த்தை என்ற விடயத் தில் சர்வதேச சமூகம் ஒருதலைப்பட்சமாகவே செயற் பட்டது. அதாவது, புலிகளைத் தடைசெய்ததுடன் அவர் களுக்கான இராணுவ சாதனங்கள் கொள்வனவு செய்வதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யும் மற்றும் நிதிதிரட்டலையும் தடைசெய்தது. அதே சமயம் சிறிலங்கா அரசாங்கத்தை இராணுவரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பலப்படுத்தியது. இது, சர்வதேச சமூகத்தின் முரண்பாடான அணுகுமுறையையே காட்டுகின்றது.

2002ஆம் ஆண்டு பிப்பரவரி 23 ஆம் நாளன்று யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நிலையில், மூன்று வாரங்கள் கழியும் முன்னராகவே அமெரிக்கா விடுதலைப் புலிகளை யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மதித்து நடக்கும்படியும், அவ்வாறில்லாத பட்சத்தில் சர்வதேச அரங்கிலிருந்து ஒதுக்கப்பட்டுவிடுவீர்கள் என்றும் எச்சரித்தது (த இந்து: 12.3.2002). அதேவேளை யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் மீறி மீண்டும் போரினைத் தொடரும் பட்சத்தில் அதனை எதிர்கொள்ளக்கூடிய வகையில், ஒரு சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலை ரணில் விக்கிரமசிங்க உருவாக்கிவந்தார். அதாவது பேச்சுவார்த்தையை தொடர்ச்சியாக முனனெடுத்துச் செல்வதற்கான தந்திரோபாயங்களை வகுப்பதைவிட, பேச்சுவார்த்தை பிழைத்தால் இராணுவ ரீதியில் புலிகளை வெற்றிகொள்ள தேவையன தந்திரரோபாயங்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டது. இதனடிப்படையில் ஒப்பந்தத்திற்குப் பின்னணியில் இருந்து ஆதரவளித்த நாடுகளிடம், போருக்கு தயார் செய்யும் உதவிகளையும் உத்தரவாதங்களையும் அரசு பெற்றுவந்தது.

அரசின் இப்போக்கானது, தீர்வு தொடர்பான அரசின் நேர்மையின்மீது புலிகளை சந்தேகம் கொள்ள வைத்தது. இருதரப்பினரும் ஒருவர்மீது ஒருவர் சந்தேகம் கொண்ட நிலையிலும் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நடைபெற்றன. இவற்றில் குறிப்பிடத்தக்க சாதனைகளாக 1. விடுதலைப் புலிகள் உள்ளக சுய நிர்ணய உரிமையின் அடிப்படையிலான ஒரு தீர்வுத்திட்டத்தைப் பரிசீலிக்க ஒப்புக்கொண்டனர் (பின்னணைப்பு: 19). 2. அரசியல் பிரச்சினைகளைக் கையாள்வதற்கான துணைக் குழு (Sub Committee on political Issues) 3. புனர்வாழ்வு மற்றும் மனிதாபிமான ரீதியிலான உடனடித் தேவைகளுக்கான குழு (Sub committee for Immediate Humanitarian and Rehabilitation Needs), 4. பதற்றத்தைத் தணித்து சுமுகமான





சூழலை உருவாக்கும் குழு (Sub committee for De - escalation and Normalaisation) ஆகிய நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. இந்நிலையில் இலங்கைக்கு உதவி வழங்குவது தொடர்பாக, உதவி வழங்கும் நாடுகளைக் கொண்ட ஆலோசனைக் கூட்டம் ஒன்றை அமெரிக்கா வாஷிங்டனில் ஏற்பாடு செய்திருந்தது. இதற்கு இலங்கை அரசு அழைக்கப்பட்ட போதும் விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இலங்கை சார்பில் இக்கூட்டத்திற்கான தயாரிப்புகளில் அமைச்சர் மிலிந்த மொரகொட செயற்பட்டார். இலங்கைக்கான வெளிநாட்டு உதவிகள் கடன்கள் போன்றவை சுதந்திரத்திற்குப் பின் பாரபட்சமாக சிங்களப் பகுதிகளின் அபிவிருத்திக்கு மட்டுமே செலவிடும் போக்கும் இவ்வினமுரண்பாட்டிற்கான காரணிகளில் மிக முக்கியமானதொன்றாகும். இந்நிலையில் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பதில் வெளிநாட்டு உதவிகளில் தமிழ்பேசும் மக்களின் பங்கு அவர்களுக்காக செலவிடப்படுவதை உத்தரவாதப்படுத்த வேண்டியதும் அவசியமாகும். அத்துடன் தீர்வு நடவடிக்கைகளிலும் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டியதும் தீர்விற்கான அடிப்படைத் தேவையாகும். மேலும், போரினால் அழிக்கப்பட்ட வடக்கு - கிழக்கிற்கான புனர்நிர்மாணம், அம்மக்களின் புனர்வாழ்வு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். முரண்பாட்டுத் தீர்விற்கான இருதரப்புப் பேச்சு வார்த்தை ஆரம்ப கட்டங்களில் இருக்கும்போதே தமிழ் மக்களின் நலன்களும் சம்பந்தப்பட்டுள்ள விடயத்தில் அவர்களது பிரதிநிதித்துவம் குறிப்பாக புலிகளின் பிரதி நிதித்துவத்தைப் புறந்தள்ளி இம்மகாநாடு அமெரிக்காவில் கூட்டப்பட்டது. புலிகள் அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட இயக்கமாக இருப்பதால் அவர்கள் அமெரிக்கா செல்ல சட்டம் இடம்கொடுக்காது என அமெரிக்கா விளக்கம் அளித்தது.

இனப்பிரச்சினைகளின் அடிப்படைகளையும் தமிழ் மக்களின் எதிர்ப்பார்ப்பையும் சரியாக நாடிபிடித்துப் பார்க்காததின் விளைவே இதுவாகும். இலங்கை அரசிற்கு அத்தகைய தேவையோ அவசியமோ இல்லை. ஆனால், அது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தன்னை சர்வதேச சமூகத்திற்கு சமாதான விரும்பியாகக் காட்டிக்கொள்ள வேண்டும். உண்மையான சமாதான விரும்பி யாக அது இருந்திருந்தால் புலிகளின் பிரதிநிதி களும் பங்குகொள்ள ஏதுவாக இன்னோர் நாட்டில் இம் மகாநாட்டைக் கூட்டும்படி இலங்கை அரசு கூறியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை என்பது தமிழ் மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை அதற்கு இல்லை என்ற அலட்சிய மனோபாவத் தையே காட்டுவதாக உள்ளது. மேலும், போர்நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக அரசை விமர்சிக்கும் சிங்கள கட்சி களை திருப்திப்படுத்துவதும் அதன் நோக்கமாக இருந்திருக் கலாம்.

ஆனால் சர்வதேச சமூகம் குறிப்பாக அமெரிக்கா, தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு நேர்மை யான பங்களிப்பைச் செய்வதைவிட தனது மேலாதிக்க மனோபாவத்தை வெளிப்படுத்துவதையே முன்னிறுத்தியது. நோர்வேயினால் அமெரிக்காவை மீறிச் செயற்படமுடியாது. மொத்தத்தில் அமெரிக்கா கூட்டிய மகாநாடானது இலங்கை அரசின் அணுகுமுறை மீதான நாணயத்திலும் சர்வதேச சமூகத்தின் நடுநிலைத் தன்மைமீதும் சந்தேகங் களை விதைப்பதற்கே பயன்பட்டன. வேறு விதமாகக் கூறு வதாயின், அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றிய நாடு கள் இவையெல்லாமே முரண்பாட்டின் பங்காளிகளான அதாவது அரசை வலுப்படுத்துபவர்களாகவே தமிழ் மக்களால் பார்க்கப்பட்டனர்.

பேச்சுவார்த்தை என்று வருகின்ற பொழுது நடுநிலை வகிக்கும் மூன்றாந்தரப்பினர், முரண்பாட்டின் இருதரப் பினரையும் சமமாக மதிக்கவும், சம அந்தஸ்து கொடுக்கவும் வேண்டும். மகாநாட்டிற்கு புலிகள் அழைக்கப்படாமை என்பது மீண்டும் சர்வதேச சமூகம் தமிழர் நலன்களை சிங்கள அரசின் கருணையில் விடும்போக்கையே புலப்படுத் தியது. இது பேச்சுவார்த்தைக்கான அடித்தளத்தையே நாசப்படுத்தும் ஒரு செயலாகும், பேச்சுவார்த்தையின் அர்த்தத்தைச் சிறுமைப்படுத்தும் ஒரு செயலாகும் என்பதும் விடுதலைப்புலிகளின் வாதமாக இருந்தது. எனவே பேச அழைத்து அவமானப்படுத்தும் போக்கைக் கண்டித்து





இனி பேச்சுவார்த்தைக்கே வரமாட்டோம் என புலிகள் அறிவித்தனர்.

## விடுதலைப் புலிகள்மீதான தடை

யுத்த நிறுத்த உடன்படிக்கையால் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தங்களுக்குக் கிடைத்த ராஜதந்திர அங்கீ காரத்தினால் அரசுடன் சரிநிகர் சமானமாக சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய தகுதியைப் பெற்றனர். அதைவிட வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் தடையின்றி சென்று தமது அரசியல் வேலைகளைச் செய்வதற்கும் யுத்தநிறுத்தம் வழிவகுத்தது.

2001 ஆம் ஆண்டு டிசெம்பரில் நடைபெற்ற பாராளு மன்ற தேர்தலில் நான்கு தமிழ் அரசியல் கட்சிகள் இணைந்து போட்டியிட்டு வடக்கு - கிழக்கில் 15 ஆசனங்களை வென் றனர். அதன் பின்னர் 2004 ஆம் ஆண்டுத் தேர்தலிலும் அக்கூட்டணி தொடர்ந்தது. தமிழ் மக்களின் பிரச்சனை களை ஒரே குரலில் ஒலிக்க வேண்டிய அவசியத்தின் அடிப் படையிலும், அத்துடன் எதிர்காலத்திலும் இக்கூட்டணி தொடர வேண்டும் என்ற தீர்மானத்தின் அடிப்படையிலும் நான்கு கட்சிகளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு (Tamil Naional Alliance) என்ற பொதுவான பெயரில் செயற்படத் தொடங்கின. மேலும், இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தும் பட்சத்தில் அவர்களுக்குப் பின்பலமாக இருப்பது என்கின்ற கொள்கை முடிவினையும் அறிவித்தது. இக்கால கட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஏற்பட்டது. இப்பின் னணியில் 2004 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலுக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் தெரிவில் விடு தலைப் புலிகளின் செல்வாக்கும் இருந்தமையைப் புரிந்து கொள்ளலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என வலியுறுத்தினர். இத்தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் 22 ஆசனங் களைப் பெற்றனர். 1977 தேர்தலுக்குப் பின்னர் 2004 ஆம் ஆண்டுத் தேர்தலிலேயே தமிழர்கள் தமிழ்த் தேசியக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூட்டமைப்பிற்கு வாக்களித்து அதை தமிழரின் ஜனநாயக உரிமைக் குரலாக தெரிவு செய்தனர்

போர் நிறுத்த உடன்படிக்கையின் பின்னரும் விடுதலைப் புலிகளின் அரசியற் கொலைகள் தொடர்ந்ததால் அவர்கள் சர்வதேச சமூகத்திடம் தமது மதிப்பை இழந்தனர். ஏற்கெனவே இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் உட்பட பல மேற்கத்திய நாடுகளில் தடைசெய்யப்பட்டிருந்த இவர்கள், 2005 இல் இலங்கை வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் கொலை, அதனைத் தொடந்து, சிறுவர்களை இராணுவத்தில் இணைத்துக்கொள்வதற்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் வலியுறுத்தலுக்குப் போதிய மதிப்பளிக்காமை ஆகிய காரணங்களால் ஐரோப்பிய ஒன்றியத்தினாலும் தடை செய்யப்பட்டனர் (ஐரோப்பிய ஒன்றியத்தில் 27 நாடுகள் அங்கம் வகிக்கின்றன).

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னைய அரசியல் கொலைகளைவிட நீலன் திருச்செல்வம், கேதீஸ்வரன் லோகநாதன் போன்ற தமிழ் மக்களுக்காகவே தமது காலத்தையும், சிந்தனைகளையும் செலவிட்டவர்களும்கூட கொழும்பில் கொலை செய்யப்பட்டனர். இவை உலக நாடுகளில் விடுதலைப் புலிகளுக்கு நற்பெயரைக் கொடுக்கவில்லை. இக்கொலைகள் உட்பட பல கொலைகளையும் உலக நாடுகள் கண்டித்திருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தகைய நடவடிக்கைகள் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவிக்கப்பட்டபோதிலும், அவற்றை தடுத்து நிறுத்துவதற்கான அதிகாரம் அவர்களிடம் இல்லாததினால் அவர்களால் இவ்விடயத்தில் ஆக்கபூர்வமாக எதுவும் செய்ய முடியவில்லை. இத்தகைய சிறுசிறு முறைப்பாடுகளுக்காக அதிக நேரத்தைச் செலவழிப்பதைவிட, அடிப்படையான இனப்பிரச்சனைக்கு சரியான தீர்வை எட்டுவதே நோர்வேயினதும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரதும் நோக்கமாக இருந்தது. அத்துடன் பொது மக்களின் கொலைகளை எல்லாம் விசாரிக்கும் அதிகாரம் அவர்களது போர்நிறுத்த உடன்படிக்கையில் இடம்பெறவில்லை.





## சிங்கள தலைமைகளின் மனோநிலையும் சிறுபான்மைத் தேசியஇனங்களும்:

இனப்பிரச்சினை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்று 73வீதமான மக்கள் கருத்துக்கணிப்பின் மூலம் தெரிவித்துள்ளனர். இதை முக்கியமான பெரிய சிங்களக் கட்சிகள் கணக்கில் எடுப்பதில்லை. மாறாக சுமார் 10 வீதமான வாக்குகளை பெறக்கூடிய சிங்கள அதிதீவிர வாதக் கட்சிகளின் கருத்துக்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதைக் காணலாம்.

2006 இல் நடந்த அனைத்துக் கட்சி மாநாட்டில், இன முரண்பாட்டிற்கான தீர்விற்கு ஒரு சரியான தீர்வுப் பொதியைக் கொண்டுவருவதாக தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் ஒக்ரோபர் 2006 இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் எதிர்பாராதவகையில் முன்னெப்போதும் நடக்காதவாறு ஒரு உடன்படிக்கை உருவானது. இது அரசியல், பொருளாதார விடயங்களில் கூட்டாக ஒத்துழைப்பது எனவும் இதனால் ஜே.வி.பியினரின் அதிகாரத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் குறைக்கலாம் என்றும் கருதப்பட்டது. இதனால் முன்புபோல் இன்றி அமைதிப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படலாம் எனவும் கருதப்பட்டது. ஆனால் கடந்தகால வரலாறு போலவே, ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவை உருவாக்கி அதற்குள் இருந்த 17 பாராளுமன்ற உறுப்பினர்களை ஆளும் கட்சி அரச தரப்பிற்குள் உள்வாங்கி அவர்களுக்கு அமைச்சர் பதவி கொடுத்ததன் ஊடாக ஐ.தே.க., சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கிடையில் உருவாக்கப்பட்ட உறவை சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முறித்துக்கொண்டார். இதன் மூலம் இருபெரும் கட்சிகளும் இணைந்து தமிழின பிரச்சனைக்குத் தீர்வுத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கான சந்தர்ப்பம் கெடுக்கப்பட்டது.

சிங்கள அரசியல் தலைமைகளையும் சிங்கள இராணுவத்தையும் பொறுத்தவரையில், தமிழ் மக்களை ஒட்டு மொத்தமாகவே புலிகள் என்ற வரையறைக்குள் நோக்குவது கண்கூடு. யுத்த காலக்கட்டங்களில் தென்பகுதியிலும், சரி, வடக்கு - கிழக்குப் பகுதியிலும் சரி தமிழ் மக்கள் கைது செய்யப்படுவதும், காணாமல் போவதும், கொலைசெய்யப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படுவதும் ஒரு நடைமுறையாகிவிட்டது. 2007ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து கொழும்பையும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் நூற்றக்கணக்கான தமிழ் மக்கள் அரச படைகளால் கடத்தப்பட்டும், காணமாற்போயுள்ளதாகவும், கொலைசெய்யப்பட்டுள்ளதாகவும் மனித உரிமைக்குழுக்கள் தெரிவிக்கின்றன. இலங்கை அரசாங்கம் தென்பகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றோம் என்று கூறும் பொழுதெல்லாம் இக்கடத்தல்கள், காணாமல்போதல், கொலைகள் ஆகியன மிக அதிகளவில் இடம்பெறுகின்றன.

7.6.2007 அன்று கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த அப்பாவித் தமிழ் மக்கள் இரவோடு இரவாக பேருந்துகளில் ஏற்றப்பட்டு இராணுவப் பாதுகாப்புடன் வடக்கு - கிழக்கிற்கு அனுப்பப்பட்டனர். இதற்கு அரசாங்கத்தினர், அவர்கள் வடக்கு - கிழக்கைச் சேர்ந்தவர்கள் என்பதனாலேயே அவர்களை அங்கு அனுப்புவதற்குப் பாதுகாப்பு அமைச்சு முடிவு எடுத்ததாகக் கூறினார்கள். இந்த நடவடிக்கையானது தமிழ் மக்கள் வடக்கு - கிழக்கிற்கு மாத்திரமே சொந்தமானவர்கள் என்பதை மீண்டும் வலியுறுத்துவதாக அமைந்தது. அதுமாத்திரமல்லாமல் சிங்கள அரசியல் தலைமைகள் மத்தியில் தமிழ் மக்கள் தென்பகுதிக்குச் சொந்தமானவர்கள் அல்ல என்பதும் அதனால் தமது பிரதேசங்களுக்குச் செல்வதன் மூலமாகவே தென்பகுதியின் பாதுகாப்பு உத்தரவாதப்பப்படுத்தப்படும் என்ற அவர்களது நம்பிக்கையையும் இது எடுத்துக்காட்டுகிறது. இன்னொரு வகையில் கூறுவதானால் வடக்கு - கிழக்கு என்பது தான் தமிழர்களின் தாயகப் பிரதேசம் என்பதை, சிங்களவர்களின் இம்மனோநிலை எடுத்துக்காட்டுகின்றது.

## இடைக்கால தன்னாட்சி அதிகார சபை: (Interim Self - Governing Authority)

நிதி வழங்கலை முடிவு செய்யும் டோக்கியோ மகாநாடு 2003 இல் கூட்டப்பட்டது. அம்மகாநாட்டில் விடுதலைப் புலிகளை பங்குபெற்றுமாறு நோர்வே, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கோரின. அரசு - புலிகளுக்கிடையிலான நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நோக்கில் ஒரு வருடத்திற்கு முன் நோர்வே அனுசரணையாளர்களின் முன்னெடுப்பினால் உருவாக்கப்பட்ட புனர்வாழ்வு மற்றும் மனிதாபிமான





ரீதியிலான உடனடித்தேவைகளுக்கான அரசு - புலிகள் கொண்ட குழு (Sub committee for Immediate Humanitarian and Rehabilitation Needs)விற்கு அரசு ஒருசதம்கூட ஒதுக்கவில்லை. அத்துடன், ஒருவருட காலத்திற்கென உருவாக்கப்பட்ட இக்குழு செயலிழந்தும் இருந்தது. எனவே தமிழ் மக்களின் நலன்களுக்கு நிதியினை ஒதுக்குவதில் இலங்கை அரசின் பாரபட்சத்தினை உலகம் புரிந்துகொள்வதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவையாயிருக்கவில்லை. சமாதான நடவடிக்கை தொடர்பில் அரசின் இவ்வலட்சிய மனோபாவத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சர்வதேச சமூகத்தினருக்கு எடுத்துரைத்தனர். எனவே இலங்கைக்கு வழங்கப்படுகின்ற நிதியில் வட கிழக்கிற்கான நிதி எவ்வளவு என்பதும், அதனைக் கையாள்வதற்கான ஒரு அங்கீகரிக்கப்பட்ட அமைப்பும் அவசியமாக இருந்தது. எனவே அத்தகைய ஒரு கட்டமைப்பு இல்லாமல் நிதிவழங்கும் மாநாட்டில் பங்குபற்றுவதானது பாரபட்சமிக்க இலங்கை அரசின் தமிழ் மக்கள் மீதான ஆட்சியை அங்கீகரிப்பதாக அமையுமென புலிகள் கருதினர். எனவே, தமது தலைமையிலான ஒரு இடைக்கால நிர்வாக சபை உருவாக்கப்பட வேண்டுமென்றும், அதனிடமே வடக்கு - கிழக்கிற்கான நிதி வழங்கப்பட வேண்டுமென்றும் புலிகள் வலியுறுத்தினர்.

புலிகளின் கோரிக்கையை ஏற்று ரணில் விக்கிரமசிங்க ஒரு திட்டத்தை புலிகளின் பார்வைக்குச் சமர்ப்பித்தார். புலிகளுக்கு அவை ஏற்புடையதாக இருக்கவில்லை. 2002 ஜுலை மாதத்தில் கொண்டுவரப்பட்ட இத்திட்டத்தின்படி, பரிட்சார்த்தமாக மாகாண நிர்வாகக் கட்டமைப்பினைத் தருவதாகவும், அங்கு சிறப்பு ஆணையர்களை நியமிப்பதன் ஊடாக புலிகளின் ஆலோசனைக்கமைந்த தற்காலிக நிர்வாக சபை முறைமையை அறிமுகப்படுத்தலாம் என்றும் அரசு கூறியது. இதன் மூலம் புலிகள் புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் மற்றும் மீள்குடியேற்றத்திற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள முடியுமே அன்றி காலவல்துறை, பாதுகாப்பு மற்றும் காணி விடயங்களில் எதுவும் செய்ய முடியாது (Daily Mirror: 12.10.2003) ஆகையால் அரசின் இத்தற்காலிக ஏற்பாட்டைப் புலிகள் நிராகரித்தனர். ரணில் விக்கிமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட ஏறத்தாழ இதே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வடிவிலான இன்னொரு நகல் ஆலோசனைத் திட்டத்தையும் விடுதலைப்புலிகள் நிராகரிக்கத்தனர்.

இதன் பின்னர் மாற்றுத் திட்டம் ஒன்றை முன்வைக்குமாறு புலிகளை அரசாங் கேட்டுக்கொண்டது. எனினும் புலிகளுக்கு அத்தகைய திட்டத்திற்கு கால அவகாசம் தேவைப்பட்டதால் டோக்கியோ மாநாட்டிற்கு முன்பாக அத்தகைய திட்டம் முன்வைக்கப்படவில்லை. எனவே புலிகள் அதில் கலந்துகொள்ளவும் இல்லை. 2003 நவம்பர் மாதத்தில் புலிகள் ISGA என்றழைக்கப்படும் இடைக் கால தன்னாட்சி அதிகாரசபைக்கான திட்டத்தை அரசிடம் கையாளித்தனர் (பின்னிணைப்பு : 22).

இதன் நோக்கம் வடக்கு கிழக்கின் இடைக்கால நிர்வாகத்திற்கான நிர்வாக அலகை உருவாக்குவதாகும். இந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத்திட்டத்தின்படி அதற்கும் அரச நிர்வாக அலகுகட்கும் தொடர்புகள் இருக்க முடியாது (The Hindu 21 November 2003). இந்த இடைக் கால நிர்வாக சபைத் திட்டத்தின் மூலம் பேச்சுவார்த்தைகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு வலுவான பாத்திரத்தை வகிக்க முடியும். இதற்கு சிங்கள எதிர்க்கட்சிகளிடமிருந்து பாரிய எதிர்ப்புக்கள் வந்தன.

இதன் முதற்கட்டமாக சனாதிபதி சந்திரிகா தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தை இரண்டுவார காலத்திற்கு முடக்கிவைத்தார் (Suspended). மேலும், பாதுகாப்பு, உள்நாட்டமைச்சு, ஊடகத் துறை ஆகிய அமைச்சுகளைத் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தார். இவையனைத்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ விடயமாக அமெரிக்கா சென்றிருந்தபொழுது நடைபெற்றது. (The Hindu, 10th November 2003). சனாதிபதி இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை எதிர்த்து மூன்று அமைச்சுக்களைத் தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டதை அமெரிக்கா வன்மையாகக் கண்டித்தது. இதனால் இருவேறு கட்சிகளின் தலைவர்களான சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான அதிகார பலப்பிரயோகமானது ஒரு அரசியல் யாப்பு





நெருக்கடியைத் தோற்றுவித்தது. இது நாட்டின் அரசியல் தலைமையில் ஒரு வெற்றிடத்தை உருவாக்கியது. அமைதிப் பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பித்தன. பிரதமருக்கும் சனாதிபதிக்கும் இடையில் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று அவை விட்டுக்கொடுப்பின்றி முடிவுற்றன. இதில் பாதுகாப்பு அமைச்சை யார் பொறுப்பில் வைத்திருப்பது என்பதே முக்கிய பிரச்சினையாக இருந்தது. அரசியல் யாப்பின்படி சனாதிபதியே பாதுகாப்பு அமைச்சின் தலைவர் ஆவார். ஆனால் பிரதமர் விக்கிரமசிங்க அது தனது கட்டுப்பாட்டிற்குள் இருந்தால் மட்டுமே அமைதிப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்த முடியும் என வாதிட்டார். இதனால் 2000 ஆம் ஆண்டிலிருந்து அமைதிப் பேச்சுவார்த்தைகளில் வெற்றிகரமாகச் செயல்பட்டுவந்த நோர்வே அனுசரணையாளர்கள் விரக்தியுற்ற நிலையில் தமது பணிகளைத் தற்காலிமாக நிறுத்திக்கொண்டனர். இருந்தும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு புரிந்துணர்வு ஒப்பந்த விடயங்கள் குறித்த தனது கண் காணிப்புப் பணிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தது. அதே வேளையில் விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் போர் நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து பின்பற்றுவதாக அறிவித்திருந்தனர்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை பொதுஜன முன்னணி, ஜே.வி.பி, மற்றும் ஜே.எச்.யு ஆகிய கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. சனாதிபதியின் நடவடிக்கை அவர்கட்கு ஆதரவாக இருந்தது. இவர்கள் இனப்பிரச்சனைக்கு அதிகாரப் பகிர்வு அடிப்படையிலான தீர்வுவொன்றைக் காண்பதை எதிர்த்து வருகின்றனர். இவ்வகையில் இவர்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மக்கள் மத்தியில் கடுமையாக விமர்சித்து வந்துள்ளதுடன் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தனர். குறிப்பாக ஜே.வி.பி. யினர் 2003ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ஒரு நீண்ட ஊர்வலத்தையும் இதற்கு எதிராக நடத்தினர். அவர்கள் நோர்வே அரசின் தலையீட்டை விமர்ச்சிக்கும் போது 'சிறிலங்கா நோர்வேயின் காலனி' என்று கூறினர். இக்கூற்றானது இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் ஒரு இராணுவத்தீர்வினை ஆதரித்து நிற்கும் இக்கட்சிகளின் நிலைப்பாட்டிற்கு சர்வதேச தலையீடானது பாதமாக அமையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்கின்ற அச்சத்தின் வெளிப்பாடாகும். ஏனெனில், அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா மற்றும் நோர்வே உட்பட சர்வதேச சமூகம் இலங்கை இனப்பிரச்சனைக்கு ஒரு வலுவான அதிகாரப் பகிர்வினையே தீர்வாகப் பரிந்துரைத்து வருகின்றனர்.

அதேசமயம் ஐரோப்பிய ஒன்றியம் கிறிஸ்பற்றனை பிரத்தியேக தூதராக இலங்கைக்கு அனுப்பியது. அவர் இலங்கை சென்று பின் கிளிநொச்சி சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டதுடன் பிரபாகரன் உள்ளிட்ட ஏனைய பிரமுகர்களுடனும் கலந்துரையாடினர். அவரது இந்த விஜயம் சிங்கள ஊடகங்களின் கடுமையான கண்டனத்திற்கு உள்ளானது. இந்திய ஊடகங்களும் அவரின் கிளிநொச்சி விஜயத்தை விமர்சித்திருந்தன. கிறிஸ்பற்றனின் கிளிநொச்சி விஜயத்தால் புலிகளின் தன்னாட்சி நியாயப்படுத்தப்பட்டுள்ளதாக முன்னாள் இந்திய உளவுத்துறை (RAW) அதிகாரியான இராமன் தெரிவித்தார் (Sio: Pernh. 845I 8 Janauary 2004).

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து பேராசிரியர் உயாங்கொட கருத்துத் தெரிவிக்கையில், "பலவருடங்களாக தனிநாட்டுக்காக 'தமிழ் ஈழத்திற்காக' போரிட்டவர்கள் பேச்சுவார்த்தை மூலம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை கோருவது. பிரிவினை வாதத்தை விட்டு மீள் இணைவுக்கான முன்னோடியாகவே கருதப்பட வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து தேசிய சமாதான கவுன்சில் பணிப்பாளர் ஜெகான் பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "பொலிஸ், நிலம், நீதித்துறைக்கான அதிகாரங்கள் குறித்து விடுதலைப் புலிகளின் கோரிக்கையானது அனேகமாக சமஷ்டி முறைகளின் அடிப்படை அம்சங்களாகவே இருக்கின்றன. விடுதலைப் புலிகள் வடக்கு - கிழக்கு மக்களின் அபிவிருத்தித் தேவைகட்கும் மேலாகச் சென்று இறுதித் தீர்வில் விவாதிக்கப்பட வேண்டிய அடிப்படை விடயங்களையும் தாங்களே முன்வைத்துள்ளனர். இது பாராட்டப்படவேண்டியது" என்றார். மேலும், புலிகளின் கோரிக்கைகளில் சில பிரிவினையை நோக்கிச் செல்கின்றது என்றும் அவர் கூறியுள்ளார். உதாரணமாக ஆழ்கடல் மீதான அதிகாரங்கள் தொடர்பான முரண்பாடுகளை நடுவர்மன்றத்துக்கு எடுத்துச் செல்லுதல் என்று கூறுவது இருநாடுகளுக்கு இடையேதான் இடம் பெறலாம். ஓர் சமஷ்டி ஆட்சியில் இருக்கும் இரு மாநிலங்கட்கு இது பொருந்தாது என்றார்.





அடுத்து, கலாநிதி குமார் ரூபசிங்க, "அரசு நிர்வாகத்தில் தமிழை நியாயமான அளவில் பயன்படுத்துவதில் தொடர்ந்து வந்த அரசுகள் தவறிவிட்டன. மக்கள் தங்கள் சொந்த மொழியைப் பயன்படுத்வதைத் தடுப்பதென்பது ஒரு மனிதனின் அடிப்படை மனித உரிமையை அப்பட்டமாக மீறுவதாகும்" என்றார். சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தற்போதைய ஆலோசகர் தயான் ஜயதிலகா, "இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை + புலிகளின் இராணுவம் + புலிகளின் கடற்படை = தனிநாடு என்றும், புலிகளின் கடற்படை + புலிகளின் இராணுவம் இல்லாத இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை ஓரளவு மாற்றங்களுடன் ஏற்றுக்கொள்ள முடியும்" என்றும் கூறியுள்ளார். அடுத்து "ஒன்றை நேர்மையாக ஒப்புக்கொள்வோம். புலிகளிடம் துப்பாக்கிகள் இல்லாவிட்டால் சிங்களவர்கள் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றிக் கதைக்கக்கூட மாட்டார்கள்" என்று கூறியுள்ளார் (விடுதலைப் புலிகள் புரட்டாதி - ஐப்பசி 2004).

அடுத்து ஐக்கிய தேசியக் கட்சி இத்திட்டத்தைப் பற்றிக் கூறுகையில், "இதை அடிப்படையாக வைத்துப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டால் தாம் அதற்கு ஆதரவு வழங்குவோம்" என்று தெரிவித்திருந்தது.

சிங்கள சிந்தனையாளர்கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் நிலைப்பாட்டிற்கு மாறாக 2004 ஆம் ஆண்டு சனவரி மாதம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஜே.வி.பி.யினரும் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி என்ற ஒரு கூட்டணியை உருவாக்கினர். இதனால் அமைதிப் பேச்சுவார்த்தை விடயத்தில் சிங்கள பௌத்த கடும்போக்காளர்களின் ஆதிக்கம் வலுவடைந்தது. இத்தருணத்தில் பதவியில் இருந்த ஐக்கிய தேசியக் கூட்டணி அரசாங்கத்தை சனாதிபதி கலைத்தார். அதனைத்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடர்ந்து நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் சிங்களக் கடும்போக்காளர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

## இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை – ஒருபரிசீலனை:

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் திட்டம்தான் தமிழீழ விடதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட முதலாவது தீர்வுத்திட்டமாகும். இதற்கு முன்னர் சனாதிபதி சந்திரிகா விடுதலைப் புலிகள் பத்து வருடத்திற்கு இடைக் கால நிர்வாகத்தை நடத்தலாம் என்று அறிவித்திருந்த வேளையில் 2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிதனது தேர்தல் அறிக்கையில் கால நிர்ணயம் எதுவுமின்றி விடுதலைப்புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தைக் கொடுப்போம் எனத் தெரிவித்திருந்தது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் விடுதலைப் புலி களுக்குமிடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தை களின்போது இடைக்கால நிர்வாகசபை ஒன்றை உருவாக்கு வது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சி யாக ஐக்கிய தேசியக் கட்சியினரின் இரு முன்மொழிவுகள் விடுதலைப் புலிகளினால் நிராகரிக்கப்பட்டதுடன் விடு தலைப் புலிகளே இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தினை அரசிற்குச் சமர்ப்பித்தனர்.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டமானது பின்வரும் முக்கிய அம்சங்களை முன்மொழிகின்றது.

1. இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையில் இஸ்லாமிய தமிழர்கட்கும். சிங்கள மக்களுக்கும் அவர்கட்குரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படும்.
2. 5 வருடங்களின் பின் வெளிநாட்டுப் பார்வை யாளர்கள் முன்னிலையில் சுதந்திரமான தேர்தலை நடத்துதல்.
3. சுயாதீன மனித உரிமை ஆணையத்தை உருவாக் குதல்.
4. எந்த ஒரு சமயத்திற்கும் முதலிடம் கொடுக்காமல் அனைத்தையும் சமமாகப் பார்த்தல்.





5. மாவட்டப் பிரதிநிதிகள் தெரிவில் அனைத்துச் சமூகத்தவர்களையும் பிரதிநிதித்துவப் படுத்தக் கூடியதாக தெரிவுகளை மேற்கொள்ளுதல்.
6. நிலம்: வடக்கு- கிழக்கில் தனியார்க்குச் சொந்த மற்ற காணிகளைப் பகிர்ந்தளிப்பதற்கும் ஏனைய பொருத்தமான தேவைகட்குப் பயன்படுபடுத்து வதற்குமான முடிவுகளையும் எடுப்பதற்கான அதி காரங்களையும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தன்னகத்தே கொண்டிருக்கும்.

தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் வடக்கு - கிழக்கு நிலங்களில் திட்டமிட்டு சிங்களவர்களைக் குடியேற்றிய தால் இது வடக்கு - கிழக்கு ஆட்சியின் கீழ் வருவது அவசிய மாகும். இக்குடியேற்றம் பற்றிய விவரத்தை முன்னர் உள்ள அத்தியாயங்களில் பார்த்தோம்.

உலகில் இத்தகைய இனப்பிரச்சினை நிலவும் இடங் களில், உதாரணமாக போகன்வில்ல தீர்வுத்திட்டம், காணி நிர்வாகத்தை மாகாண அரசுக்கே கொடுத்திருந்தது. சூடான் சமாதானத் தீர்விலும் காணி நிர்வாகம் மாகாண அரசுக்கே கொடுக்கப்பட்டது. இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சினை யிலும் காணி நிர்வாக விடயங்களை பாலஸ்தீனியர்கட்குக் கொடுப்பதற்காக ஒஸ்லோ உடன்படிக்கை மூலம் ஒரு நில ஆணையம் நிறுவப்பட்டது. எனவே விடுதலைப் புலிகள் வடக்கு - கிழக்கிற்கான காணி நிர்வாகம் அவ்வாட்சிக்குள் வரவேண்டும் என்று கேட்பது புதிதல்ல; தவறும் அல்ல. இதே போலத்தான் ஏனைய முக்கிய விடயங்களான நிதி, நிர்வாகம், பாதுகாப்பு, கடல்வளம், இயற்கைவளம், நீர்ப் பயன்பாடு குறித்த விடயங்களும் மாநில அரசிடமே விடப் பட்டுள்ளது. அதாவது சமஷ்டி முறையில் ஆட்சி நடை பெறுகின்ற இடங்களில் தமது எல்லையுள் தாமே மேற் கூறிய முக்கியமான எல்லா விடயங்களையும் கவனிக்கின் றனர். மேற்கூறியவற்றைவிட நீதி, நிர்வாகம், கல்வி, சுகா தாரம், விவசாயம், போக்குவரத்து வசதிகள், விளையாட்டு வசதிகள் யாவுமே மாநில, மாகாண அரசின் அதிகாரத்திற் குள்ளேயே வருகின்றன. எனவே வடக்கு - கிழக்கு மக்களின் விடயத்திலும் இம்முறை பின்பற்றப்படுதலே அவர்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரச்சனைக்குத் தீர்வாக அமையும் என்பதுடன் ஏற்புடைய சனநாயக முறையாகவும் அமைய முடியும்.

அமெரிக்கப் பிரதிநிதியான றிச்சட் ஆமிரேஜ், ஐரோப்பிய யூனியன் பிரதிநியான கிறிஸ் பற்றன் ஆகிய இருவரும் இரண்டு பெரிய சமஷ்டி ஆட்சியுள்ள இடத்தில் இருந்து போனவர்கள். இவர்கட்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அரசாங்கத்திற்கான அதிகார முறை தமது நாட்டு மாகாண அரசுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது சரியானதாகவே இருந்திருக்க வேண்டும். ஆனால் அதுபற்றி அமெரிக்க வெளிவிவகார உதவிப் பிரதிநிதி றிச்சட் ஆமிரேஜ் கருத்துத் தெரிவிக்கையில், "நான் முதன்முதலாக தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து இப்படியொரு அர்த்தம் பொதிந்த அவர்களின் அபிலாஷைகளுக்கான வெளிப்பாட்டைப் பார்க்கிறேன். இது குறிப்பிடத்தக்க ஒன்று" என்று கூறினார். அதேவேளையில் இத்தகைய அபிலாஷைகள் தீர்க்கப்பட முடியாதவை என்பதுடன் இதற்குமுன் இப்படி எங்குமே நிகழ்ந்ததுமில்லை என்றார். அவரின் மேற்படி கூற்றுக்கள் தனது நாட்டில் உள்ள சமஷ்டி முறை எப்படிப்பட்டது என்பதை உணராது கூறுவதாகவே எனக்குத் தோன்றுகிறது.

அமெரிக்காவில் ஒவ்வொரு மாநில அரசுக்கும் விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அரசுக்கான அதிகாரத்தைவிட அதிக அதிகாரங்கள் உண்டு. பேராசிரியர் கேட்ஸ் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் மத்திய அரசு தனது சட்டத்தில், மாநில அரசு பிரியாமல் இருக்க சட்டத்தை உருவாக்கலாம் என்றும் மாநில அரசுக்குத் தேவையான அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்றும் சுவிட்சர்லாந்தை மாதிரியாகக் கொள்வோமானால் வெளிநாட்டுக் கொள்கைகளை வகுப்பதில் கன்டோன்கள் முக்கியமான பங்கை வகிக்கின்றது என்றும் கூறுகின்றார். அவர் மேலும், அமெரிக்க மாநிலங்களுக்கு காவல்துறையைவிட தமது இராணுவப் படையை வைத்திருப்பதற்கும் சட்டத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது என்கிறார்.

1995ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஜி.எல். பீரிஸ் மற்றும் நீலன் திருச்செல்வம் ஆகியோரால் தயார் செய்யப்பட்ட





தீர்வுத்திட்டத்தில் மாநில அரசுக்கு ஒரு பொலிஸ்படை இருக்க வேண்டும் என பத்தி 3.1 கூறுகிறது. அதாவது, "அங்கு மாநில அரசின் காவல்துறை ஆணையத்தின் கீழ் ஒரு காவல்துறை இருக்கும். அது மாநில முதலமைச்சரால் அந்த மாகாண ஆளுநரின் ஆலோசனையின் பேரில் அமைக்கப்படும்" என்று கூறுகிறது. எனவே இவ்விடயத்தில் புலிகளின் கோரிக்கையானது ஏற்கெனவே முன்னைய அரசாங்கத்தினால் பரிந்துரைக்கப்பட்ட ஒன்றாகும்.

ஐக்கிய இராச்சியத்தை எடுத்துக்கொள்வோமானால் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து ஆகிய மாநிலங்களை உள்ளடக்கியதுதான் பெரிய பிரித்தானியா. இங்கு ஒவ்வொரு மாநிலமும் தமக்கான அரசுகளை வைத்து ஆட்சி செய்கின்றன. இவை உலக உதைப்பந்தாட்டப் போட்டிகளில் தனித்தனி நாடுபோல் ஒவ்வொரு மாநிலமும் தமது உதைப்பந்தாட்டக் குழுவை அனுப்புகின்றன. அவைகளுக்குத் தனித்தனிக் கொடிகள் இருக்கின்றன. எல்லா மாநிலங்கட்கும் எல்லைகள் உண்டு. அவர்கட்கான நீதி நிர்வாகம், பொலிஸ் யாவும் உண்டு. ஸ்காட்லாந்து போன்ற மாநிலங்கள் தங்களுக்bென்று சொந்த மத்திய வங்கி, சொந்த நாணயம் அதாவது ஸ்காட்டிஷ் பவுண் (Scottish pound) வைத்திருக்கலாம். இப்போது அவர்கட்குத் தனியான பாராளுமன்றமும் இருக்கின்றது.

உலநாடுகளில் வசிக்கும் மக்களில் பாதிக்கும் மேலானவர்கள் சமஷ்டி ஆட்சியின்கீழ்தான் வாழ்கின்றனர். உலகில் 25வகையான சமஷ்டி முறைகள் இருக்கின்றன. இலங்கைக்கான சமஷ்டிமுறையானது இலங்கையில்தான் உருவாக வேண்டும். தமிழ் மக்கள் தமக்கு எப்படியான சமஷ்டிமுறை வேண்டும் என்பதை ஆய்வாளர்களை வைத்து ஆராய்ந்து சரியான சமஷ்டி முறையைக் கொண்டுவருவது தமிழ்த் தலைவர்களதும், தமிழ் ஆய்வாளர்கள், அரசியல்வாதிகள், அறிஞர்களினதும் பணியாகும். தமிழர்களது தீர்வு அவர்களின் விருப்பதுக்கேற்றவாறு அவர்களின் நிபந்தனைகளுக்குட்பட்ட சமஷ்டி முறையாக இருக்க வேண்டும்.

உலக நாடுகளை எடுத்துக்கொண்டால் செக்கோஸ்லாவாகியா, மலேசியா ஆகிய இடங்களில் சமாதானமாகப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரிந்துள்ளனர். பல நாடுகள் பல ஆண்டு போருக்குப்பின் பிரிந்துள்ளன அல்லது ஒரு பரஸ்பர உடன்படிக்கைக்கு வந்துள்ளன. ஸ்பெயினைப் பொறுத்தவரை அதிகாரப்பகிர் வானது சமச்சீரற்ற முறையில் உள்ளது.

"தமிழர்களின் வரலாற்று பூர்வமான பாரம்பரியப் பிரதேசத்தில் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படை யில் கூட்டரசுக் கட்டுமானத்தின் கீழ் ஐக்கிய இலங்கைக்குள் ஒரு அரசியல் தீர்வை எட்டுவதற்கு இருதரப்பும் ஏற்றுக் கொண்டுள்ளன" என்று தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் ஏற்பட்ட ஒஸ்லோ உடன் படிக்கை குறித்து நோர்வே அரசு தனது அறிக்கையில் கூறியுள்ளது. அதேசமயம் "எங்களது உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் எங்களுக்குப் போதுமான சுயாட்சியையும், தனியான அரசாங்கத்தையும் அளிக்கின்ற வகையில் அதற்குச் சாதகமாக முன்வைக்கப்படும் எந்த வொரு அரசியல் தீர்வுத்திட்டத்தையும் நாங்கள் பரிசீலிக் கத் தயார்" என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பிரபாகரனின் அதற்கு முன்னைய மாவீரர் தின உரையைச் சுட்டிக்காட்டி கருத் துத் தெரிவித்துள்ளார்.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமானால் சமஷ்டி ஆட்சிமுறைவேண்டும். அதையே எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தொடக்கம் பிரபாகரன்வரை கூறியுள்ளனர். அதைத்தான் ஒஸ்லோ உடன்படிக்கையும் கூறுகிறது. அதனடிப்படையில்தான் இடைக்கால தன் னாட்சி அரசாங்க அதிகாரசபைத்திட்டமும் வரையப்பட் டுள்ளது. எனவே யதார்த்தபூர்வமானதும் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுக் கூடியதுமான இத்திட்டத் தினை இனப்பிரச்சனை தீர்விற்கான காத்திரமான ஒருவழி முறையாகப் பார்க்கப்படுவதன் மூலமே இனப்பிரச்சனைத் தீர்விற்கு சர்வதேச சமூகம் பயனுள்ள பங்கை ஆற்றமுடியும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இடைக்கால தன்னாட்சி அரசாங்க அதிகாரசபைத் திட்டத்தைக் கொண்டு வந்ததன் நோக்கம் சுலபமான வழியில் தமது இருப்பை வடக்கு - கிழக்கில் நிலைகொள்ள வைக்கலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இருக்கலாம். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இடைக்கால தன்னாட்சி அரசாங்க அதிகார சபைத் திட்டத்தை ஒரு அடிப்படையாக வைத்துப் பேசு வதற்கு எண்ணியிருந்தாலும் அது கைகூடவில்லை. விடு தலைப் புலிகளின் இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட் டிருந்தால் அடுத்த ஐந்து வருடத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆதிக்கத்தை வடக்கு - கிழக்கில் நிலைநிறுத்தி யிருப்பர். அதன்பின் தேர்தல் நடந்தாலும் தங்களால் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும் என்ற நம்பிக்கை அவர் களுக்கு இருந்திருக்கும். எனினும் இவர்களது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தில் ஜனநாயகத்துக் கான இடம் அரிதாகவே காணப்படுகின்றது. குறிப்பாக வளர்ந்து வருகின்ற பன்மைவாதத்திற்கு இதில் இடமளிக்கப் படவில்லை.

இந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரத்தை சந்திரிகா ஏற்காமல் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைக் கலைத் தமையை மேலே கண்டோம். இஸ்லாமியத் தமிழர்களும் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் இதற்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகளினால் தாக்கப்பட்ட சம்பவங் களை மனதில் கொண்டு அச்சமடைந்தவர்களாக இருந் தார்கள். இதனால் முஸ்லிம்களில் ஒரு பிரிவினர் சிங்கள தேசியவாதிகளோடு இணைந்து இதனை எதிர்த்தனர். இவை இனப்பிரச்சனையின் வெளிப்பாடான யுத்தத்தினால் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் விளைவுகள் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். ஒரு ஜன நாயக சூழ்நிலையில் இந்த விடயங்கள் முழுமையாக மாற்ற மடையும் என்று நாம் எதிர்பார்க்கலாம். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூத்த தலைவர் அஷ்ரப் தாம் வடக்கு - கிழக் கில் தமிழ்பேசும் மக்கள் என்ற நிலைப்பாட்டுக்குள் நிற்பதே சரி என்பதை பல இடங்களிலும் தெரிவித்திருக்கின்றார். புலிகளின் கூடல் சம்பந்தமான கொள்கை இந்தியாவிற்குத் திருப்தியளிப்பதாக இல்லாததினால் இந்தியாவும் இடைக் கால தன்னாட்சி அதிகாரத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள வில்லை. இவ்வச்சங்களுக்கும் அதிருப்திகளுக்கும் இனப் பிரச்சனை தீர்விற்கான ஒரு முழுமையான பேச்சுவார்த்தை யில் சுமுகமான ஒரு முடிவினை எட்ட முடியும்.







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சமாதானப் பேச்சுவார்த்தைகள் – நோர்வேயின் ஈடுபாடு (2002 – 2005)

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவிற்கு அடுத்ததாகச் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட இரண்டாவது நாடு நோர்வேயாகும். இதன் முதலாவது வெற்றிகரமான செயல் விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையை (Memorandom of Understanding - MOU) ஏற்படுத்தியதாகும். இரண்டாவதாக சிறிலங்கா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை (SLMM) உருவாக்கி நாட்டில் 'இடம்பெற்ற யுத்த நிறுத்த மீறல்களைக் கண்காணிப்பதற்கு நடவடிக்களை மேற்கொண்டிருந்தமையாகும்.

அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போரினால் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11க்குப் பின்னர் உலக நாடுகளில் உள்ள பல வன்முறை அமைப்புகள் சமாதானப் பேச்சுவார்த்தையை நாடின. உதாரணமாக இந்தோநேசியாவில் 'ஆச்சே' யைச் சேர்ந்த அமைப்பு, பாலஸ்தீனத்தில் பாலஸ்தீன விடுதலை அமைப்பு, பிலிப்பைன்ஸில் உள்ள அமைப்பு ஆகியன ஆயுதப் போராட்டத்தைத் தவிர்த்துப் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சித்தன. இதில் அமெரிக்காவின் பங்கும் குறிப்பிடக்கூடிய அளவுக்கு இருந்தது. செப்ரெம்பர் 11 தாக்குதல் இடம்பெற்ற சில வாரங்களில் அல்கொய்தா உறுப்பினர்கள் பயிற்சி பெறும் நாடு என அமெரிக்காவால் கருதப்பட்ட ஆப்கானிஸ்தானைத் தாக்கிஅதன் ஆட்சியாளர்களான தலிபான்களை அமெரிக்கா அழித்தது. தலிபானைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் தலைமறைவாகிவிட்டனர். அங்கிருந்த இஸ்லாமிய அமைப்பான அல்கொய்தா அமைப்பே செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப் பொறுப்பேற்றிருந்தது. இதனால் அதற்கு ஆதரவாக இருந்த தலிபான் அரசு அழிக்கப்பட்டது.

இவற்றின் தொடர்ச்சியாக அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் உலகின் முக்கிய பயங்கரவாத அமைப்புக்கள் தமது நாட்டுக்குள் இருப்பதைத் தடைசெய்துள்ளன. அவற்றுள் தமிழீழ விடுதலைப் புலிகளும் அடங்கும். இதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் நோர்வேயின் அனுசரணையுடனான பேச்சுவார்த்தைக்குச் சம்மதித்தனர். இந்தச் சூழ்நிலையில்தான் பிரபாகரனும் உள்ளக சுய நிர்ணய உரிமையைப் பற்றிப் பேசச் சம்மதித்தார். 2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அமெரிக்காவின் பிரதேச அபிவிருத்திக்கான துணைச் செயலாளர் கிறிஸ்டினா ரொக்காவும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை நேரில் அவதானித்தார்.

இதனைத் தொடர்ந்து இந்தியாவும் பலவழிகளிலும் விடுதலைப்புலிகளை அமைதிப் பேச்சுவார்த்தைக்குச் செல்லும்படி வலியுறுத்தியது. தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தியாவிலேயே பேச்சவார்த்தைகளை நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்த போதிலும் அவர்கள் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட அமைப்பாதலால் புலிகளின் விருப்பத்தை இந்தியா ஏற்க மறுத்துவிட்டது.

மேற்குறிப்பிடப்பட்டது போன்ற காரணங்களினால் அமைதிப் பேச்சுவார்த்தை விடயங்கள் தாமதமாகிக் கொண்டே போயின. விடுதலைப் புலிகளின் மீதான தடையை நீக்குவது தொடர்பான விடயமே அதில் முக்கிய பங்கு வகித்தது. விடுதலைப் புலிகளின் மீதான தடையை நீக்கினால் சிங்களத் தேசியவாதிகளிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பும் என அரசு பயந்தது. அத்துடன் இத்தருணத்தில் இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்திருந்தன. 2001 செப்ரெம்பர் 11க்குப் பிறகு இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளின் மீதான தடையை நீக்குவது சரிதானா? என யோசித்தது. அதேவேளை 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி அன்று பிரபாகரன், பாலசிங்கம் ஆகியோர் கிளிநொச்சியில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தாம் 'தமிழீழக் கொள்கையைக் கைவிடவில்லை' எனக் கூறியிருந்தனர் என்பதும் கவனிக்கத்தக்கது (The Hindu, 11.4.2002).

2003 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்தியாவிற்கும் இலங்கை அரசுக்கும் இடையில் கொள்கையளவில் ஒரு







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தற்காலிக உடன்படிக்கை ஏற்பட்டது. அதில் இலங்கையின் பாதுகாப்பிற்கான சகல உதவிகளையும் இந்தியா வழங்கும் என்றும், வடக்கு - கிழக்கு விமான தளங்களைப் புனரமைப் பதற்கு இந்தியா உதவி செய்யும் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற் போக்குவரத்தைக் கண்காணித்தல் போன்ற நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ளும் என்றும் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்குத் தடையாக இருக் கும் என்ற காரணத்தால் தமிழீழ விடுதலைப் புலிகள் இதனை முற்றாக எதிர்த்தனர் (The Hindu 27.01.2004). 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதிக்குப் பிறகு தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான உலகநாடுகளின் அழுத்தம் அதிகரித்துவிட்டதையே இத்தகைய சம்பவங்கள் உணர்த்து கின்றன. இதுவே விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்கு முக்கியக் காரணமாகவும் அமைந்தது.

## நோர்வேயின் உதவியுடனான அமைதிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பம்:

விடுதலைப் புலிகள் டோக்கியோ மாநாட்டில் பங்கு பற்றாதவிடத்தும் அதன் பின்னர் 2002 ஆம் ஆண்டு செப் டம்பர் மாதத்தில் தாய்லாந்தில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையில் தொடங்கி, அதே ஆண்டு திசெம்பரில் ஒஸ்லோவிலும், 2003 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் ஜெர்மனியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் இறுதி யாக 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜப்பானில் இடம் பெற்ற பேச்சுவார்த்தை உட்பட ஆறுசுற்றுப் பேச்சு வார்த்தைகளில் விடுதலைப் புலிகள் பங்கேற்றனர். இப் பேச்சுவார்த்தைகளின் பயனாக பல உபகுழுக்கள் அமைக் கப்பட்டமையை மேலே பார்த்தோம்.

2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒஸ்லோவில் நடை பெற்ற இலங்கைக்கான நிதிவழங்கும் நாடுகளின் மாநாட் டில் நோர்வே அரசு புனர்வாழ்விற்கான தனது நிதியை ஒதுக்கியது. அதைத் தொடர்ந்து 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் டோக்கியோவில் நடைபெற்ற மாநாட்டில் 51 நாடு களும் 22 அரச சார்பற்ற நிறுவனங்களும் கலந்துகொண்





டன. இதில் இந்நாடுகள் கூட்டாக 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை நான்கு வருட காலத்துக்குப் பகுதிபகுதியாக வழங்க முன்வந்தன. ஆனால் இது இலங்கையின் அமைதிப் பேச்சுவார்த்தைகள் தடங்கலின்றி முன்னேற்றகரமாக நடந்தாலே வழங்கப்படும் எனவும் அறிவித்தன.

எனினும் போர் நிறுத்த ஒப்பந்தமானது (பின்னிணைப்பு 18) நடைமுறையில் பல சவால்களைச் சந்தித்தது. கடற்புலி களின் நடவடிக்கைகளை காரணம் காட்டி அரசும் போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் குறிப்பிட்டவாறு உயர்பாதுகாப்பு வலயங்களில் இருந்து இராணுவத்தினரைத் திரும்பப்பெற்று மக்களை மீள்குடியேற்றுவது மற்றும் பொது இடங்களில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றி பொதுமக்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு வழிவகுத்தல் போன்ற அம் சங்கள் நிறைவேற்றப்படாமையைச் சுட்டிக்காட்டி புலிக ளும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்தி வந்தனர். எனவே போர் நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துதல் என்ப தைக் காட்டிலும் போர்நிறுத்த மீறல்கள் அரசியலாக்கப் பட்டது. இவ்வணுகுமுறையானது சுமுகமானதும் தொடர்ச்சி யானதுமான பேச்சுவார்த்தைக்குத் தடங்கல்களை ஏற்படுத் தியது.

சுனாமிக்குப் பின்னரான தொழிற்பாட்டு முகாமைத் துவக் கட்டமைப்பொன்றை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (Post Tsunami operational Mangement Structure - PTOMS) செய்யபட்டும் அதுவும் நீதிமன்றத்தால் நிராகரிக் கப்பட்டது.

இத்தகைய தடங்கல்களையும் எதிர்கொண்டு ஆறு சுற் றுப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதில் நோர்வே அனு சரணையாளர்கள் குறிப்பிடத்தக்க ஆற்றலை வெளிப் படுத்தினர். இதன் பயனாக புலிகள் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு குறித்து ஆராயத் தயார் என அறிவித்ததைத் தொடர்ந்து, சர்வதேச அழுத்தத்தி னால் குறிப்பிடித்தக்க அதிகாரப் பகிர்வுடன் கூடிய ஒரு சுயாட்சி தமிழர்களுக்கு வழங்கப்பட்டுவிடும் என்று அஞ்சிய சிங்கள மேலாதிக்கவாத சக்திகள் பேச்சுவார்த்தைக்கு எதிராகவும் நோர்வேயின் செயற்பாட்டிற்கெதிராகவும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகவும் கடுமையான விமர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சனங்களை முன்வைத்ததுடன் எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். இந்நிலையில் இணைப்பாட்சி (Confederation) வகையிலான இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை புலிகள் கையளித்தனர். இது சிங்கள இனவாத சக்திகளை பேச்சுவார்த்தைக்கு எதிராக ஒன்றுபட வைத்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் கூட்டணி அமைத்து ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையைக் கலைத்து சனாதிபதி புதிய தேர்தலுக்கு உத்திரவிட்டார். இத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பி., ஜே.எச்.யு மற்றும் இடதுசாரிக்கட்சிகள் இணைந்த கூட்டணி வெற்றிபெற்றது. இப்புதிய மந்திரி சபையில் மகிந்த ராஜபக்ச பிரதமரானார். நோர்வேயின் மத்தியஸ்தத்திற்கு எதிரான பிரச்சாரம் ஒருபுறமும் போர்நிறுத்த உடன்படிக்கை மாற்றப்பட வேண்டும் என்ற அரசின் உறுதியான நிலைப்பாடு மறுபுறமுமாக நோர்வேயை விரக்திக்குள்ளாக்கியது. இதனால் நோர்வே தனது செயல்பாட்டைத் தற்காலிகமாக நிறுத்திக்கொண்டது. இந்நிலையிலேயே 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி ஆழிப்பேரலை (Tsunami) இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்குக் கரைகளைத் தாக்கி பேரழிவுகளை ஏற்படுத்தியது. அங்கு வாழ்ந்த மக்கள் ஆழிப்பேரலைகளுடன் சங்கமமாகினர். நூற்றுக்கணக்கான ஆண், பெண், குழந்தைகள், முதியோர் என பலரும் அகதிகளாகவும் அனாதைகளாகவும் ஆனார்கள். இந்நிலையில் வடக்கு - கிழக்கில் ஆறு மாவட்டங்களின் கரையோரப் பகுதிகள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டன. அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய ஆறு மாவட்ட கரையோர சமுதாய மக்களுக்குத் துரித நிவாரணம் செய்ய வேண்டிய கடமை அரசாங்கத்துக்கு இருந்தது. அதேவேளை இவற்றுள் சில மாவட்டங்களைத் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்ததால் அவர்களும் அரசும் இணைந்து ஓர் புதிய கட்டமைப்பை உருவாக்கினால் நிவாரண வேலைகளைத் துரிதகதியில் செய்யமுடியும் என்றும் இத்தகைய அரசு புலிகள் இணைந்த கட்டமைப்பும் மனிதாபிமான செயற்பாடுகளும் இருதரப்பிற்கும் இடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப உதவும் என்ற நம்பிக்கையிலும் உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகள் இவ்வாறான ஒரு கட்டமைப்பை உருவாக்கும்படி நிர்ப்பந்தித்ததால் (Post Tsunami operational Management Structure - (PTOMS) என்னும் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கினர் (பின்னிணைப்பு : 20).





இலங்கையில் 25 மாவட்டங்களில் 14 மாவட்டங்கள் கரையோரப்பகுதியை உள்ளடக்கியுள்ளது. அவற்றில் 60 வீதமான கரையோரப் பகுதி சுனாமியால் பாதிக்கப்பட்ட அதேசமயம், யுத்தத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளது. வட - கிழக்குக் கரையோரங்களில் மன்னார் வவுனியா தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ளன. அதேசமயம் எட்டு மாவட்டங்களும் ஈழப்போரால் அழிந்து போய் உள்ளன. அதேபோல் சிங்களப் பகுதிகளான அம்பாந்தோட்டை, மாத்துறை, காலி, களுத்துறை, கொழும்பு, நீர்கொழும்பு ஆகிய மாவட்டங்களின் கரையோரங்களும் சுனாமி தாக்குதலுக்கு உள்ளாகியது.

ஆனால் இந்த உடன்படிக்கையை (PTOMS) நடைமுறைப்படுத்த விடாது இலங்கை உயர்நீதிமன்றத்தில் ஜே.வி. பியினர் ஓர் வழக்குத் தாக்கல் செய்து அதனைத் தடுத்து நிறுத்தினர். இதனால் இருதரப்பிற்குமிடையில் நன்னம்பிக்கை அதிகரிக்கும் என்னும் நோக்கம் ஈடேறாமல் போனது. மேலும், சுனாமி கட்டமைப்பை (PTOMS) அதன் ஒப்பந்த நிலையிலேயே செயற்பட விடாமல் செய்ததன் மூலம் ஜே.வி.பி. வடக்கு - கிழக்கு மக்களுக்குக் கிடைக்க வேண்டிய மனிதாபிமான உதவிகளைத் தடைசெய்தது. வடக்கு - கிழக்கிற்குச் செலவிடப்படவேண்டிய பெருந்தொகையான நிதி மற்றும் கட்டுமான உதவிகள் சிங்களப் பகுதிகளுக்கே செலவு செய்யப்பட்டன. அடிப்படை மனிதாபிமான உதவிகளையே நீதிமன்றத்தின் மூலம் மறுதலித்தவர்கள் அச்சந்தோஷத்திலும் நம்பிக்கையிலும் வடக்கு - கிழக்கு இணைப்பிற்கு எதிராகவும் நீதிமன்றம் சென்றனர்.

## வடக்கு – கிழக்கு பிரிப்பும் இலங்கை நீதித்துறையும்

இந்திய - இலங்கை உடன்படிக்கை மூலம் இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பற்றியும் அதன் 18 மாத கால ஆட்சி பற்றியும் முன்பு பார்த்தோம். இப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொழுது 18 ஆண்டுகளுக்குப் பின் இந்த வடக்கு - கிழக்கு இணைப்பு சிறிலங்காவின் உயர்நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டுள்ளது. இது சரியானதா? என்பதை ஆராய்வதே இப்பிரிவின் நோக்கமாகும்.

இலங்கையின் வடக்கையும் - கிழக்கையும் இணைத்து 'ஈழம்' என்ற பெயருடன் ஒரே மாகாணமாக இருக்க வேண்டும். என்பதற்கு ஒரு வரலாறே இருக்கிறது. அவற்றை மேலே உள்ள அத்தியாயங்களில் பார்க்க முடியும்.

இந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பு என்பது ஒரு சட்டப்பிரச்சினையே அல்ல. இது ஒரு தேசிய இனத்தின் அரசியல் பிரச்சினை. இதற்கு ஒரு அரசியல் தீர்வே சரியான தீர்வாக இருக்க முடியும். கிழக்கு மாகாணம் அம்பாறையில் 1911 இல் 7சதவிகிதமாக இருந்த சிங்கள மக்கள்தொகை பின்னர் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களின் பயனாக 1981இல் 38.01 சதவிகிதமாக அதிகரித்தது. மேலும் திரிகோணமலையில் 1872 இல் 1.3சதவிகிதமாக இருந்த சிங்கள மக்கள் தொகை திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களின் பயனாக 1981இல் 33.6 சதவிகிதமாக அதிகரித்தது. இதனால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் விகிதாசாரம் திட்டமிட்டுக் குறைக்கப்பட்டது. இதை அத்தியாயம் 3இல் விரிவாகக் காணமுடியும். இக்குடியேற்றத்திட்டங்கள் 1931 முதல் இனவாதப் போக்குடன் ஆரம்பிக்கப்பட்டன.

சுதந்திரம் அடைந்தகாலந்தொட்டு வடக்கு - கிழக்கு இன விகிதாசாரத்தை மாற்றி சிங்கள மக்களை அங்கு பெரும்பான்மையாக்குதை நோக்கமாகக்கொண்டு அரசு பல திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை உருவாக்கி வந்துள்ளது. திருகோணமலை, அம்பாறை, பதவியா போன்ற இடங்களில் புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஊடாக வேறு இடங்களில் இருந்த சிங்கள மக்கள் இவ்வாறான இடங்களில் குடியேற்றப்பட்டார்கள். சுமார் 175 ஆண்டுகளுக்கு முன் கிழக்கு மாகாணத்தில் ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாக இருந்த சிங்கள மக்கள் சிங்களத் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட குடியேற்றத்தின் விளைவாக இன்று 33 சதவிகிதத்திற்கும் அதிகமாக்கப்பட்டுள்ளனர்.





1931ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் மக்களின் ஒப்புதலின்றி எந்தவித சர்வசன வாக்கெடுப்புகளும் இன்றி கிழக்கிலும் வடக்கிலும் நிர்வாக ரீதியாக பல மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. உதாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து அம்பாறை மாவட்டம் பிரிக்கப்பட்டது. முந்தைய மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சில பகுதிகள் ஊவா மாகாணத்துடனும், வடமாகாணத்தில் இருந்தும் திருகோணமலை மாவட்டத்திலிருந்தும் சில பகுதிகள் அப்பகுதி தமிழ் மக்களின் ஒப்புதலின்றி அண்டைய சிங்கள மாகாணங்களான வடமத்திய மாகாணத்தின் அனுராதபுர மாவட்டம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களுடன் இணைக்கப்பட்டன. இவையெல்லாம் நிரந்தர சிங்களப் பெரும்பான்மை அரசுகளால் திட்டமிட்டு நடாத்தப்பட்டன. இதற்கு இவர்கள் நீதித்துறையை நாடிப் போகவில்லை.

சிங்களத் தலைவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி ஒவ்வோர் தேர்தலிலும் அவர்கள் கூறும் முக்கிய விடயம் யாதெனில் 'எங்கள் தாயக தேசத்தைப் பிளவுபட அனுமதிக்க மாட்டோம்' அதாவது இலங்கை முழுவதுமே சிங்கள தேசம் என்பதே இதன் உள்ளர்த்தமாகும். ஆகவே சிங்களவர் அல்லாதவர்க்கு இந்நாட்டின்மீது எந்த உரிமையும் கிடையாது என்பதே இதன் கருத்தாகும். உண்மையான வரலாற்றிற்கு மாறாக தமிழர்களது பூர்வீகத் தாயகமான வடக்கு - கிழக்கை மேற்கூறியதுபோல் துண்டாடி தமது மாவட்டங்களோடு இணைக்கவோ, சிங்கள மக்களை திட்டமிட்டு தமிழ்ப் பகுதிக்குள் குடியேற்றி அங்கும் தமிழர்களைச் சிறுபான்மையாக்கவோ தயங்கவில்லை. இவையனைத்தையும் ஜனநாயகம் என்ற போர்வையில் தமிழர்களின் ஆதரவின்றி அவர்களின் சாத்வீக எதிர்ப்பின் மத்தியில் செயற்படுத்தி வந்தார்கள். இங்கும் அவர்கள் நீதித்துறையை நாடிப்போகவில்லை.

பிரித்தானிய அரசு சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் நிரந்திர பெரும்பான்மையினரான சிங்களத் தலைவர்களிடம் இலங்கை ஆட்சியை ஒப்படைத்தனர். அன்றிலிருந்து தமிழர்களின் பூர்வீகத் தாயகம் சிங்கள மயப்படுத்தப்பட்டு தமிழர்களது தனித்துவம் இல்லாதொழிக்கப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படும் சூழ்நிலை தோன்றுவதால் அவர்கள் தமது பூர்வீகத் தாயகத்திற்காக அறவழிப் போராட்டத்தில் இருந்து ஆயுதப் போராட்டத்திற்கு மாறினார்கள். இவை விவரமாக அத்தியாயம் மூன்றில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

ஆயுதப்போராட்டத்தின் விளைவாக இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் மூலம் இணைக்கப் பட்ட தமிழர் தாயகப் பகுதிகளை ஜே.ஆர். ஜெயவர்த்தன தொடக்கம் சந்திரிகா குமாரதுங்கவரை ஏற்றுக்கொண்டு வந்துள்ளார்கள். ஆரம்பத்தில் இருந்தே சிங்கள இனவாதிகள் இந்த இணைப்பை எதிர்த்தபோதும் ஆட்சியாளர்கள் வடக்கு கிழக்கைப் பிரிப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி நன்கு உணர்ந்திருந்தனர் தற்போதைய சனாதிபதி மகிந்தாஜ்பக்ச அவர்கள் ஜே. வி. பி. மற்றும் ஜே. எச்யு போன்ற சிங்கள அதிதீவிரவாத கட்சிகளுடன் ஒப்பந்தங்களை உருவாக்கி அதன் அடிப்படையிலேயே சனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார். அந்த ஒப்பந்தங்கள் அடிப் படையில் தமிழர் விரோத ஒப்பந்ங்களாகவே இருந்தன. பேச்சுவார்த்தை நிறுத்தப்படவேண்டும் மூன்றாந்தரப்பு அனுசரணையாளர்கள் அகற்றப்பட வேண்டும். இனப் பிரச்சனைக்கு யுத்தம் மூலமே தீர்வு காணப்பட வேண்டும். வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட வேண்டும் போன்றவை எல்லாம் இந்த அதிதீவிர இனவாத சக்திகளின் கோரிக்கைகளாக இருந்தன.

சனாதிபதி மகிந்தராஜபக்ச அவர்கள் சிங்கள மக்கள் செறிந்து வாழக்கூடிய தென்பகுதியிலிருந்து ஆரம்பத்தில் பாராளுமன்றதத்திற்குத் தெரிவானவர். பௌத்தத்தைக் காப்பதற்கான சிங்கள புத்திரன் என்ற மதிப்பை பெற்றிருந் தவர். அது மாத்திரமல்லாமல் இலங்கையை ஆண்டுவந்த முந்தைய அரசன் துட்டகைமுனுவின் வாரிசாகவும் அவர் தன்னைக் கருதிக்கொள்கின்றார். அந்த அடிப்படையில் சிங்கள பௌத்தத்தைத் தான்மாத்திரமே காப்பாற்ற முடியும் என்றும் அவர் நம்புகின்றார். சிங்கள பௌத்தத் தைக் காப்பாற்றுவது என்பது அனகாரிக தர்மபாலவின் காலத்திலிருந்து தமிழ் இன ஒழிப்பிலேயே தங்கியுள்ளது என்ற சிங்கள அதிதீவிர வாதிகளின் கொள்கையிலிருந்தே





தோன்றி வளர்ந்துள்ளது. இவை ஒருபுறமிருக்க சனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களின் அமைச்சரவையில் ஜே. ஹெச். யு (JHU)வின் முக்கியஸ்தர்கள் அமைச்சர்களாக இருப்பதும் அவர்களே சனாதிபதியின் ஆலோசகர்களாக இருப்பதை யும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இத்தகைய குணாதிசயங்களைக் கொண்ட ஒரு சனாதிபதி இனவாதியாகத்தான் இருக்க முடியுமே தவிர அவர் அனைத்து இனங்களையும் அரவணைத்துச் செல்லக்கூடிய இனத்துவேக்ஷமற்ற ஒரு தலைவராக இருக்க முடியுமா என்பது சந்தேகமே.

1987 ஆம் ஆண்டு செய்யப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு உருவாக்கப் பட்டதுதான் அரசியல் சாசனத்தின் 13 ஆவது திருத்தமும், மாகாணசபைகள் சட்டமுமாகும். இச்சட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒரே அரசியல் நிர்வாக அலகாக நிர்வகிக்கப்பட்டு வந்தது. 17.10.2006 அன்று இலங்கையின் உச்ச நீதி மன்றம், மாகாண சபைச் சட்டத்தின் 42ஆம் பிரிவின் 37(1) (4) உபபிரிவின்கீழ் சனாதிபதியால் வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டமை, அது அப்போது அமுலில் இருந்த அவசாரகால விதிகளின் கீழ் பிறப்பிக்கப் பட்ட படியால் சரியான நிரந்தர சட்டவலுவைக் கொண் டிருக்கவில்லை என்பதனால் வடக்கு - கிழக்கு மாகாண நிரந்தர இணைப்பு முறையானதல்ல என்று தீர்ப்பளித்தது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பதன் அடிப்படையாக தமிழ் பேசும் மக்களின் வரலாற்று பூர்வ வாழ்விடங்களான வடக்கு - கிழக்கு மாகாணங்கள் அரசியல் நிர்வாக ரீதியில் இணைக்கப்பட்ட வேண்டும் என்பதை தமிழரசுக் கட்சி பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட அனைத்து தமிழ் இயக்கங்களும் வலியுறுத்தி வந்தன. முன்னர் ஏற்படுத்தப்பட்ட பாண்டா - செல்வா ஒப்பந்தம் கூட சாராம்சத்தில் வடக்கு - கிழக்கு என்பது தமிழர்களின் வரலாற்று பூர்வமான வாழ்விடம் என்பதை ஏற்றுக் கொண்ட அடிப்படையில்தான் செய்யப்பட்டது. தமிழ் அமைப்புகளைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களின் தனித்துவமும் அவர்களது மொழியும் காப்பாற்றப்பட வேண்டுமாயின் அவர்களின் பாரம்பரிய நிலம் காப்பாற்றப்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்டாலே அது சாத்தியம் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள். இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் தமிழ் மக்களின் இப்பாரம்பரிய பிரதேசம் எவ்வாறு சிங்கள மயமாக்கப்பட்டது என்பதை முன்னைய அத்தியாயங்களில் விவரமாகப் பார்த்தோம் இந்த அடிப்படைகளில் இருந்து தான் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் செய்துகொண்ட இலங்கை ஒப்பந்தத்தின் முகவுரையில் வடக்கு - கிழக்கு மாகாணங் கள் தமிழரின் 'பாரம்பரிய வாழ்விடங்கள்' என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனடிப்படையிலேயே வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்ட ஒரே அரசியல் நிர்வாக அலகாக உருவாக்கப்பட்டது. ஆனால், சிங்கள அதிதீவிரவாதிகளிடமிருந்து வரக்கூடிய எதிர்ப்புகளைக் குறைப்பதற்காக ஒருவருடத்தின் பின்பு மாகாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்தி அது ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் வடக்கு - கிழக்கு இணைப்பு நிரந்தரமாக இருக்கும் என்றும் அதுவரை அது தற்காலிக இணைப்பாக இருக்கும் என்றும் இருதரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இது சனாதிபதி ஜே. ஆரை திருப்திப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு க்ஷூரத்தே தவிர தமிழ் அரசியல் கட்சிகள், இயக்கங்கள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் கிழக்கு மாகாணத்தில் சர்வஜன் வாக்கெடுப்பென்பதையும் தற்காலிக இணைப் பென்பதையும் முற்றுமுழுவதாக நிராகரித்தார்கள்.

ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு முன்பாக ராஜீவ் காந்தி அவர்கள் இந்து பத்திரிகையின் ஆசிரியர் என்.ராம் மூல மாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிய செய்தி யில், "இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை அதிபர் ஜே. ஆர். ஜயவர்த்தனவும் கௌரவமனிதர்களுக் கிடையில் செய்துகொள்ளப்படும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளார்கள். அதன்படி வடக்கு - கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்பட்டிருக்கும். ஒப்பந்தத்தில் குறிப் பிட்டிருப்பதுபோல் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட மாட்டாது" என்று தெரிவித்திருந்தார். இதை நடைமுறைப் படுத்துவதுதான் உலக அரசியலின் ஜனநாயக தர்மமாகும் என எண்ணி அவர் இவ்வாறு தெரிவித்திருந்திருக்கலாம்.





அதுமாத்திரமல்லமல் 29.07.1987 அன்று இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்பாக விடு தலைப்புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட், ஈரோஸ் ஆகிய இயக்கங்களும் அத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணியும் டெல்லிக்கு அழைக்கப்பட்டு இந்திய இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக விளக்கம் அளிக் கப்பட்டது. அப்பொழுது வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது நிரந்தரமானது என்றும் கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு காலகட்டத்திலும் சர்வஜன வாக்கடுப்பு நடை பெறமாட்டாது என்றும் இதனை ஜே. ஆரும் ஏற்றுக்கொண் டிருப்பதாகவும் அதற்கு இந்தியா முழு உத்திரவாதமும் தருவதாகவும் திரு ராஜீவ்காந்தி அவர்கள் தமிழ் தலைவர் களுக்குத் தெரிவித்திருந்தார்.

இந்த அடிப்படையில்தான் ஜே. ஆருக்குப் பின் தொடர்ச்சியா வந்த இலங்கை சனாதிபதிகளான பிரேம தாச, விஜயதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க போன்றவர்களால் கிழக்கு மாகாணத்திற்கான சர்வஜன வாக்கெடுப்பானது பிற்போடப்பட்டு வந்தது. 1987இலிருந்து 2006வரை ஏறத்தாழ 18 வருடங்களுக்கும் மேலாக கிழக்கு மாகாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பு நடக்கவில்லை.

எனவே, என்ன காரணங்களுக்காக, எந்தெந்த அடிப் படையில் எத்தகைய சூழ்நிலையில் வடக்கு - கிழக்கு இணைப்பு ஏற்படுத்தப்பட்டது என்பதைக் கவனத்தில் எடுக்காமல் வெறுமனே சட்ட அடிப்படையில் மாத்திரம் உச்சநீதிமன்றம் முடிவுகளுக்கு வருவதானது அரசியல் ரீதியாக தீர்வுகளையே மாற்றிவிடுவது மாத்திரமல்லாமல் அது இனக்குரோதங்களையும், நீதித்துறையின் மீது நம்பிக் கையின்மையையும் ஏற்படுத்த வழிவகுத்து விடுகின்றது.

ஒருநாட்டின் ஒற்றுமைக்கு ஆபத்துவரும் வேளையில் அந்நாட்டு உயர்நீதிமன்றம், அந்நாட்டு அரசியல் தீர்வு சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகளை எப்படிக் கையாண் டால் நாடு ஒற்றுமையாக இருக்கும் என்பதைக் கவனிக்க வேண்டும் ஆனால் இலங்கை உயர்நீதிமன்ற நீதிபதிகள் நாட்டின் ஒற்றுமையையும் பாதுகப்பையும் கவனிக்கத் தவறிவிட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வடக்கு-கிழக்கு இணைப்பு வழக்கின் வாதிகள் சட்ட வல்லுனர்கள், நீதிபதிகள் அனைவரையும் பார்த்தால் யாவருமே சிங்கள இனத்தைச் சார்ந்தவர்களாகேவ உள்ளனர்.

இந்த வழக்கிற்கு மனுதாக்கல் செய்தவர்கள் கந்தளாயைச் சேர்ந்த என்.டபிள் யூ. எம் விஜயசேகர, உகணையைச் சேர்ந்த எல்.பி. வசந்த பியதிஸ்ஸ, சம்மாந்துறையைச் சேர்ந்த ஏ.எல்.முகமட் புகாரி ஆகியோர்.

இவர்கட்காக வாதிட்டார்கள்: சனாதிபதி சட்டத்தரணி எச். எல். டி. சில்வா, எஸ். எல். குணசேகரா. கோமின் தயாசிறி, மனோலி ஜினாதாச ஆகியோர். பிரதிவாதிகளாக அரசசார்பில் வாதிட்ட சட்டத்தரணிகள் சொலிசிட்டர் ஜெனரல் பி. ஏ. ரத்நாயக்கா, பிரதி சொலிசிட்டர் ஜெனரல்களான சுனில் குணரத்தின, ஏ. ஞானதாச, சிரேஷ்ட அரச சட்டத்தரணிகளான ஜனக டி.சில்வா, மகிந்த குணதிலக, றெரிடன்புள்ளே ஆகியோர்.

இந்த வழக்கின் நீதிபதிகள்: பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, நிகால் ஜயசிங்க, என்.கே உடலகம, ஏ. ஆர் என். பெர்னான்டோ, ஆர். ஏ. என் .ஜி. அமரதுங்க ஆகிய ஐந்து நீதிபதிகள் கொண்ட குழுவினராவர்.

இங்கே இந்தப் பெயர்களை எல்லாம் குறிப்பிடுவதற்கான காரணம் வாதி, பிரதிவாதி, சட்டத்தரணிகள், நீதிபதிகள் ஆகிய அனைவருமே ஒரேயொரு இஸ்லாமியரைத் தவிர சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களாவர். இங்கே முன் வைக்கப்பட்ட வாதங்களானது இந்த நாட்டின் ஒற்றுமையை, தமிழ் மக்களின் இறைமையை, இந்தியாவின் நட்புறவை, சர்வதேச ஒப்பந்தம் எதனையும் கணக்கில் எடுக்காமல் தமிழ் மக்கள்மீது தமது ஆதிக்கத்தை நிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே வாதித்துள்ளனர். இதில் வாதிகளான ஜே.வி.பி.யினர், ஓர் இடதுசாரிக் கொள்கையில் இருந்து தமது ஆதிக்கத்தை நிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே வாதித்துள்ளனர். இதில் வாதிகளான ஜே.வி.பி.யினர், ஓர் இடதுசாரிக் கொள்கையில் இருந்து தமது அரசியல் லாபத்திற்காக சிங்கள - பௌத்த தேசியவாதிகளாக மாறி, தமிழர்கட்கு அவர்கள் விரும்பக்கூடிய





அரசியல் தீர்விற்கு எதிராக முழக்கமிடுபவர்களாக மாறியுள்ளனர்.

ஒரு சிறுபான்மை இனத்தினது அரசியல் விடயம் தொடர்பான ஒரு விசாரணையில் அமைக்கப்பட்ட உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளின் அமர்வானது (Bench) பெரும்பான்மை சிங்கள இன நீதிபதிகளுடன் குறைந்தபட்சம் தமிழ், முஸ்லீம் நீதிபதிகளில் ஒவ்வொருவராவது இணைக்கப்பட்ருக்க வேண்டும். ஆனால் இங்கு முழுக்க முழுக்க சிங்கள நீதிபதிகளைக் கொண்ட அமர்வாகவே இது இருந்துள்ளது. எந்தவொரு நாட்டிலும் இவ்வாறான முறையில் இந்த நீதிபதிகளின் அமர்வுமுறை ஏற்படுத்தப்பட்டிருக்கும் என்று நான் கருதவில்லை. இனவாத சிங்கள சட்டத்தரணிகள், முழுமையான சிங்கள நீதிபதிகளைக் கொண்ட அமர்வு, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மீண்டும் பிரிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலான தீர்ப்பு போன்றவற்றைப் பார்க்கும் எந்தத் தமிழ் மக்களும் உச்சநீதிமன்றத்தின் மீதும் நம்பிக்கைகொள்ள மாட்டார்கள்.

ஆனால் வேறுநாடுகளில் இப்டியான வழக்கு விசாரணைகளில் நாட்டின் நலனையே நீதிபதிகள் கணக்கில் எடுப்பார்கள். இன முரண்பாட்டிற்கு அரசியல் தீர்வு மூலம் முடிவு காண்பதே சரி எனக்கூறுவார்கள். உதாரணமாக கனடாவில் பிரஞ்சுமொழி பேசும் கியூபெக் மாகாண அரசு 1995இல் தனிநாடு கோரி சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தி தோல்விகண்டது. ஆனால் கனடாவின் மத்திய அரசாங்கம் வாக்கெடுப்பிற்கான வாக்குச் சீட்டில் பாவித்த கேள்வி தெளிவற்றதாக இருந்ததால்தான் தாம் தோற்றதாக கியூபெக் அரசு கூறியது. இதனால் வருங்கால சர்வஜன வாக்கெடுப்பின்போது அதற்குரிய 'கேள்வி' தெளிவாக இருக்க வேண்டும் என்பதை மத்திய அரசின் சட்டத்தில் கொண்டுவரும்படி உயர்நீதிமன்றம் மூலமாகக் கேட்கப்பட்டபோது மத்திய அரசும் மாகாண அரசும் எற்கக்கூடிய விதத்தில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதனால் கனடாவின் இறைமை, ஒற்றுமை, ஜனாநாயம் யாவும் பாதுகாக்கப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கனடாவின் பழங்குடி மக்களுக்கும் கனடாவின் முன்னாள் ஆட்சியாளர்களான பிரித்தானிய அரசுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்கு கனடா மத்திய அரசின் நீதித்துறை சட்டவலுக்கொடுத்து பல நல்ல தீர்ப்புகளை வழங்கியுள்ளது. பிரித்தானியாவைப் பொறுத்தவரை, பாராளுமன்றம் எந்த நோக்கத்திற்காக ஒரு சட்டத்தை உருவாக்கியதோ அதனை வலியுறுத்துவதாகவே தீர்ப்பு அமையும். ஏற்கனவே உள்ள ஒரு சட்டம் அல்லது சாசனத்திற்கு ஏதேனும் வகையில் முரணான சட்டம் பின்னர் இயற்றப்படுமாயின் பின்னைய சட்டமே வலுவுள்ளதாகும். அதனடிப்படையில் முன்னர் இருந்த சட்டம் அதன் வலிமையை இழக்கும். ஏனெனில், நாட்டில் வளர்ந்துவரும் புதிய தேவைகளுக்கு ஏற்பவே புதிய சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இப்புதிய சட்டங்களே நாட்டின் நலன்களுக்கு அவசியமானது என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே அவ்வாறு பார்க்கப்படுகின்றது. எனவே இலங்கை நீதிமன்றம் பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரம், சனாதிபதியின் தற்துணிபு அதிகாரம், இருநாடுகளுக்கு இடையிலான ஒப்பந்தம் ஆகியவற்றை கேள்விக்குள்ளாக்குகின்ற வடிவிலேயே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழரின் பூர்வீகத் தாயகமென்பது முன்னைய அத்தியாயங்களில் நிறுவப்பட்டுள்ளது. சுதந்திரமடைந்த பின்னரும் கூட வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழரின் பூர்வீகத் தாயகம் என்பதை பல சிங்களத் தலைவர்கள் மட்டுமின்றி பல வெளிநாட்டுத் தலைவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதுபற்றி அவர்கள் தெரிவித்துள்ள சில கருத்துக்களைப் பார்ப்போம்.

இலங்கையில் முதலாவதாக 1935 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இடதுசாரிக் கட்சியான இலங்கை சமசமாசக் கட்சி தமிழ் மக்களின் பிரச்சனைக்குத் தீர்வாக சம அந்தஸ்துக் கொள்கையை முன்வைத்தது. பின் 1944 இல் இலங்கை சமசமாசக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை இலங்கைக்குச் சுதந்திரம் கொடுப்பதோடு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர் (கொழும்பு மாநகரசபை மாநாடு: 1944). 1944 கம்யூனிஸ்ட் கட்சி





மாநாட்டில் கட்சியின் தலைவர் எஸ்.ஏ.விக்ரமசிங்க, பீட்டர் கெனமன், வைத்திலிங்கம் மாஸ்ரர் காத்திகேசு மாஸ்ரர் ஆகியோர் இணைந்து வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு 'மாநில சுயாட்சி' பெறும் உரிமை உண்டு என்ற தீர்மானத்தை நிறைவேற்றினர்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக் இலங்கையை ஒரு சமஷ்டி முறையிலான நிர்வாகத்துக்குள் கொண்டுவர வேண்டும் என 1926இல் கூறியுள்ளார். இதுபற்றிய அவரது கருத்தை 1926 ஆம் ஆண்டு ஜூலைமாதம் 17 ஆம் திகதி வெளிவந்த சிலோன் மோனிங் லீடரில் பார்க்கலாம். இதில் அவர் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழர்கட்கு, மலையகச் சிங்களவர்கட்கு, கீழ்நாட்டுச் சிங்களவர்கட்கு என்று மூன்று நிர்வாக அலகுகள் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் வடக்கு - கிழக்கு தமிழரின் பூர்வீகத் தாயகம் என்பதையும் அவர்கள் ஓர் தேசிய இனம் என்பதையும் அவர் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பயையும் அனுமானிக்கலாம்.

1956இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்துகம பாராளுமன்ற உறுப்பினரான வில்மட் பெரேரா சிங்கள இனவாதத்துள் தன்னை இணைக்காது தமிழர் பிரதேசத்தில் அவர்கட்கு சுயாட்சி வழங்க வேண்டும் என்று முழு மனதுடன் இடித்துரைத்தார்.

1956ஆம் ஆண்டு ஜூன்மாதம் 5 ஆம் திகதியன்று இலங்கை சமசமாசக் கட்சியின் தலைவர்களான என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா ஆகியோர் தங்களது பாராளுமன்ற உரையில் தமிழர்களின் சுயாட்சியை முன்னிலைப்படுத்திப் பேசினர். கொல்வின் கூறும்போது ஒரு மொழிக்கொள்கையிருந்தால் இருநாடுகள் உருவாகும் என்றும் இருமொழிகளும் சம அந்தஸ்துடன் இருந்தால் ஒருநாடாக இருக்கலாம் என்பதை "ஒரு மொழி இரு நாடுகள், இருமொழி ஒருநாடு" என்று சுருக்கமாகக் கூறினார்.

வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு தமிழர் தாயகத்தை உருவாக்கவே தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி அகிம்சா முறையிலும் அதனைத் தொடர்ந்து ஈழப் புரட்சி அமைப்பு,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய அமைப்புக்கள் ஆயுதப் போராட்டத்தையும் நாடாத்தின. தமிழீழ விடுதலைப் புலிகள் இன்றும் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு - கிழக்கு தமிழர்களின் பாரம்பரியத் தாயகம் என்பதை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையிலேயே பண்டா - செல்வா உடன்படிக்கை, டட்லி - செல்வா உடன்படிக்கை ஆகியன உருவாயின.

கிழக்கு மாகாண இஸ்லாமிய தமிழர்களின் தலைவரான அஷ்ரப் அவர்கள் வடக்கு - கிழக்கு இணைப்பை சீர்குலைக்காமலே தென் - கிழக்கு இஸ்லாமியருக்கான சுயாதீனப் பிரதேசம் வரையறுக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

பின்னைய காலத்தில் சிங்கள இடதுசாரித் தலைவர்களான விவியன் குணவர்த்தன. சரத்முத்தட்டுவேகம, எட்மன் சமரக்கொடி ஆகியோரும் தமிழர்களின் பூர்வீகத் தாயகக் கோட்பாட்டையும் அவர்கள் சுயாட்சியோடு வாழ அனுமதிக்கப்பட வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொண்டனர். பண்டா - செல்வா உடன்படிக்கையில் வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகம் என்றும் வடக்கு - கிழக்கு ஒரே நிர்வாகப் பகுதியாக மாற்றப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்ததால்தான் ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள் கொழும்பு - கண்டி யாத்திரையை மேற்கொண்டதாக விளக்கம் கொடுத்தார். அதே ஜே. ஆர். ஜெயவர்த்தன தான் பின்னர் 1987இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு - கிழக்கை தமிழர்களின் பூர்வீகத் தாயகமாக ஏற்றுக்கொண்டார். அவரைத் தொடர்ந்து 1987 - 2006 வரை அத்தனை சனாதிபதிகளும் 18 ஆண்டுகாலமாக வடக்கு - கிழக்குத் தாயகக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டே தமிழர் பிரச்சினனைகளைத் தீர்க்க முனைந்தனர்.

இந்திய - இலங்கை உடன்படிக்கை மூலம் இந்திய அரசும் இலங்கையில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழ்பேசும் மக்களின் பூர்வீகத் தாயகம் என்பதையும் அவர்கள் இலங்கைக்குள் சுயநிர்ணயத்துடன் வடக்கு - கிழக்கு இணைந்த தாயகத்துள் சுயாட்சியுடையவர்களாக இருக்கலாம் என்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளது.





## வடக்கு – கிழக்கு மாகாணப் பிரிப்பும் பல்வேறு அரசியல் சக்திகளின் நிலைப்பாடுகளும்

வடக்கு - கிழக்கு பிரிப்புக்கான கோரிக்கையை முதலில் விடுத்தவர் எச்.எல்.டி சில்வா ஆவார். இவரே பின் வாதிகட்காக (மனுதாரர்கட்காக) ஆஜராகி வழக்கை வெல்வதற்குக் காரணமானார்.

வடக்கு - கிழக்கைப் பிரித்ததன் மூலம், தமிழர்கட்கு வரலாற்றிலேயே மிகப்பெரிய தோல்வியொன்றைப் பரிசாகக் கொடுத்திருக்கின்றோம் என்று 16.11.2006 அன்று பிரேமதாச ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மேற்கண்ட தீர்ப்பை வழங்கிய நீதிபதிகளுக்குப் பாராட்டு விழா நடைபெற்ற தருணத்தில் ஜே.வி.பியின் விமல்வீரவன்ச கூறினார்.

ஜாதிக ஹெல உருமய என்னும் புத்த பிக்குகளின் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய ஓமல்பே சோபித தேரர் கூம்போது "இன்று ஒரு சொட்டு இரத்தம் கூடச் சிந்தாமல் உயர்நீதிமன்றத் தீர்ப்பால் வடக்கு - கிழக்கு இணைப்பு பிரிக்கப்பட்டமை நாட்டிற்கும் மக்களுக்கும் கிடைத்த வெற்றி" என்றதோடு, "சிங்கள இனத்திற்கு நியாயம் கிடைத்துள்ளது" என்றும் கூறினார்.

ஜே.வி.பி. ஜே.எச்.யு ஆகியவை இணைந்து வடக்கு - கிழக்கைப் பிரிப்பதற்கு வழக்கைத் தாக்குதல் செய்தவர்கட்கும் அவர்கட்காக வழக்காடிய சட்டத்தரணிகளுக்கும் 'ஜனபிரணாபிமானி' என்ற பெயரில் விருதுகள் கொடுத்து கௌரவித்தனர் (20.11.2006 கொழும்பு சுகதாச உள்ளக அரங்கு).

இந்த வழக்கை தாக்கல் செய்தவர்களில் ஒருவரான ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினரான ஜயந்த விஜேசேகர பாராளுமன்றத்தில் பேசும்போது நாம் வடக்கு - கிழக்கை மீண்டும் இணைய விடமாட்டோம் என்று சூளுரைத்தார் (உதயன் 30.11.2006.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்கூறிய ஜே.வி.பி, ஜே.எச்.யு கட்சிகளைவிட இப்போதுள்ள அரசின் கூட்டணிக்கட்சிகளும் இத்தீர்ப்பை எதிர்த்துக் குரல் கொடுக்கவில்லை. அதேபோல் எதிர்வரிசையில் உள்ள சிங்களக் கட்சிகளிலும் முக்கியமாக ஐக்கிய தேசியக் கட்சியில் ஒரு சில தலைவர்களைத் தவிர ஏனையோர் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் இத்தீர்ப்பை வரவேற்றனர்.

உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை அடிப்படையாக வைத்து வடக்கு - கிழக்கு இணைந்த ஒரே நிர்வாகத்தைப் பிரிப்பது என்பது 'இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் மக்களுக்கு வழங்கப்பட்ட அடிப்படை உரிமையை மறுப்பதாக அமையும்' என்று சனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு அனுப்பிய கடிதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள் கூறியுள்ளார்.

மேலும் சம்பந்தன் அவர்கள் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் "வடக்கு - கிழக்கு மாகாணம் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டதன் மூலம் அங்கு வாழும் மக்களின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. 18 வருடங்களுக்கு முன்னர் இணைக்கப்பட்ட இந்த இரு மாகாணங்களும் ராஜபக்ச சனாதிபதியாக வந்த பின்பே பிரிக்கப்பட்டுள்ளது" என்றும் கூறியுள்ளார் (தினக்குரல்: 24.11.2006)

இதேவேளை, இணைத்தலைமை நாடுகள் வெளியிட்ட அறிக்கையொன்றில் வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பை வலியுறுத்தினார்கள். இந்த இணைந்த மாகாணங்கள் உயர்நீதிமன்றத்தால் பிரிக்கப்படுவதற்கு முன்னரும் பிரிக்கப்பட்ட பின்னரும் அவர்கள் இரு மாகாணங்களும் இணைந்தே இருக்க வேண்டும் என்ற தமது கருத்தை அவ்வப்போது வெளியிட்டிருந்தனர்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் வடக்கு - கிழக்கு இணைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இது இலங்கையின் எந்தவொரு அரசும் மதித்து அமுல்படுத்த வேண்டிய சர்வதேச உடன்படிக்கையாகும். அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழும், மாகாணசபைகள் சட்டத்தின் படியும் முன்னாள் சனாதிபதி ஜெயவர்த்தன இரண்டு மாகாணங்களையும் இணைத்துள்ளார் (தினக்குரல் 24.11.2006).





1987 ஆம் ஆண்டு ஜூலைமாதம் செய்துகொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு மதிப்பளித்து இலங்கை அரசு செயற்பட வேண்டும் என்றும், அதன்படி வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும் என்றும் இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர் மேனன் ஊடாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் சனாதிபதி ராஜபக்சவிற்கு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார் (27.11.2006).

கியூபாவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் மாநாட்டின்போது கூட இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ராஜபக்சேயைச் சந்தித்து வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பை வலியுறுத்தியிருந்தார் (தினக்குரல்: 11.12007). இதன் மூலம் வடக்கு - கிழக்கு இணைப்பின் முக்கியத்துவத்தை இந்தியா நேரடியாகவே ராஜபக்சேவுக்கு சுட்டிக்காட்டியிருக்கிறது. இது தமிழர்கள் குறித்து இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டைக் காட்டுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் சம்பந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன் மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் ஆகியோர் புதுடெல்லியில் மன்மோகன்சிங்கைச் சந்தித்து இந்த இணைப்பு சம்பந்தமான விடயங்களைப் பேசிய போதுகூட, பிரதமர் மன்மோகன்சிங் அதைமுற்று முழுதாக ஏற்றிருந்தார் (சம்பந்தன், 11.1.2007)

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் யாப்பு விவகார நிபுணரான கே. என். சொக்சி கூறும்போது, வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இணைக்கப்பட்டே இருக்க வேண்டும் அதன்பின் மக்கள் வாக்கெடுப்பின் மூலம் கிழக்கு மாகாண மக்களே தீர்மானிக்கட்டும் என்று கூறியுள்ளார் (புதினம்: 28.04.2007). தற்போதைய நிலையில் இருமாகாணங்களையும் இணைப்பதற்கான சட்டரீதியான ஏற்பாடுகட்கு ஆதரவு வழங்குவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார் (தினக்குரல்: 11.1.2007). இதன் மூலம் இணைப்பின் முக்கியத்துவத்தை எதிர்க்கட்சி ஏற்றுக்கொள்கிறது என்பது தெரிகிறது.

ஏனைய தமிழ்க்கட்சிகளான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழர் ஐக்கிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுதலை முன்னணி (ஆனந்தசங்கரி), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (வரதராஜபெருமாள்) ஆகியனவும் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணம் சட்டத்தின் மூலம் பிரிக்கப்பட்டதை எதிர்த்திருந்தனர். இவர்கள் அரச ஆதரவாளர்கள் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

அதேபோல் அரசுக்கு ஆதரவளிக்கின்ற மலையகக் கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியவையும் இந்த இணைப்பு பிரிக்கப்பட்டமையைக் கண்டித்திருந்தனர். மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் கூறும்போது, "சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஜே.வி.பியினால் வலிந்து பெறப்பட்ட ஒரு தீர்ப்பாகவே இதைக் கருத வேண்டியுள்ளது. தமிழர்களுக்கு நியாயம் வழங்க எடுக்கப்பட்ட முயற்சிகள் கடந்தகாலங்களில் வன்முறை அரசியல் மூலம் பறிக்கப்பட்டது. தற்போது சட்டத்தின் மூலம் பறிக்கப்பட்டுள்ளது. வடக்கும் கிழக்கும் பிரிக்கப்படுவது இந்தியப் பேரரசிற்கு இலங்கையின் சிங்கள பௌத்த பேரினவாதிகள் வழங்கிய பரிசாகும். கடந்த 18 ஆண்டுகளாக இருந்து வரும் தற்காலிக இணைப்பு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாகவே பெறப்பட்டதாகும். இது இலங்கையின் சமாதான சக்திகளைவிட இந்தியப் பேரரசின் முகத்தில் விழுந்த அடியென எண்ணுவதாகவும்" அவர் கூறியுள்ளார்.

வடக்கு-கிழக்கு பிரிக்கப்பட்டதன் பின்னர் ராஜபக்சவின் அரசு, வடக்கு-கிழக்கை மூன்று அலகுகளாகப் பிரிக்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. அவை வடமாகாணம், அம்பாறையையும் மட்டக்களப்பையும் உள்ளடக்கிய கிழக்கு மாகாணாம். திருகோணமலை மாகாணம் என்பதாகும் இப்பொழுத வடக்கு கிழக்கு மாகாணங்கட்குத் தனித்தனியாக அமைச்சுச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பதுடன் திருமலையை தனியே பிரித்தெடுத்து நேரடியாக மத்திய அரசினூடாக அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்கின்ற செயலும் நடைபெறுகின்றது (தினக்குரல் 4.1.2007) திருகோமணமலையை தனிமைப்படுத்தி மத்திய அரசின்கீழ் கொண்டுவரும் அரசின் போக்கானது வடக்கு - கிழக்கின் நிலத் தொடர்ச்சியைத் துண்டித்து தமிழ் மக்களின் பூர்வீகத் தாயக நிலப்பரப்பை இல்லாமற்செய்கின்ற





இலங்கை அரசின் நீண்டகாலக்கொள்கையின் தொடர் நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

1956இல் சிங்களம் மட்டும் சட்டம் வந்தபோது தமிழர்களுடன் இணைந்து பல இஸ்லாமிய தலைவர்களும் அரசை எதிர்த்துப் போராடினர் அவர்களில் ஜனப் அசிஸ், எருக்கலம்பிட்டி கபூர், மசூர் மௌலானா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களவர்.

வடக்கு- கிழக்கில் முஸ்லிம் மக்களுக்குத் தமிழ்த் தலைமைகள் வழங்கத் தயாராக இருக்கின்ற உரிமைகளைப் பொறுத்தே வடக்கு - கிழக்கு இணைப்பிற்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என்பதை முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானிக்கும் என்று அச்சுட்சியின் தலைவர் ரவூப் ஹக்கிம் கூறியுள்ளார் (தினக்கும் 11.01.2007) ஆனால் முன்னைய தலைவர் அஷ்ரப் வடக்கு -கிழக்கு இணைப்பிற்குள்ளேயே இஸ்லாமியரின் தீர்வும் இருக்கவேண்டும் என்று கூறியிருந்தார்.

ஆனால் ஏ.சி. எம். கலீல் அவர்கள் 'வடக்கு -கிழக்கை இணைப்பதற்குத் தழிழர் தரப்புக்கு நிபந்தனை விதிப்பது போல அவற்றைப் பிரிப்பதற்கு சிங்களத்தரப்பிடம் நமது முஸ்லிம் தலைவர்கள் வைத்துள்ள நிபந்தனை என்ன என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்கிறார். அரசனை நம்பி புருசனை கைவிட்ட நிலைக்கு முஸ்லிம் மக்களை நமது தலைவர்கள் உள்ளாக்கி விடக்கூடாது என்றும் அவர் கூறினார் (தினக்குரல் 15.1. 2007).

தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் ஒரு சர்வதேச உடன்படிக்கையை உள்நாட்டுச் சட்டத்தின் மூலம் இல்லாமல் செய்து இன முரண்பாட்டை தொடரவைத்துள்ளனர். உள்நாட்டு சட்டப்படியே இவ்வழக்கு நீதியாக விசாரிக்கப்படவில்லை. காரணம் தமிழர்கட்கு இந்த வழக்கில் அவர்களது பக்க நியாயங்களைக் கூற நீதிமன்றம் வழிசமைக்கவில்லை. இது ஒரு சர்வதேச உடன்படிக்கையாதலால் இது ஒரு பிரத்தியேக நீதிமன்றத்தில் சர்வதேச நீதிபதிகளின் மத்தியில் நடைபெற்றிருக்க வேண்டும். இந்த வழக்கு அவ்வாறு நடைபெறவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எல்லாவிதமான முடிவுகளையும் எடுக்கும் வல்லமை கொண்ட சனாதிபதி, இந்த விடயத்தில் பாராமுகமாக இருந்ததோடு இந்த முடிவை ஏற்று நடைமுறைப்படுத்தவும் தொடங்கிவிட்டார். அந்தவிதத்தில் இவர் ஒரு நடுநிலையான சனாதிபதி அல்ல என்பதையும் நிரூபித்துவிட்டார்.

இதுபற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சுரேஷ் பிரேமச்சந்திரன், "வடக்கு - கிழக்கு மாகாணத்தை இலங்கை - இந்திய உடன்படிக்கையே இணைத்தது. இதனை இன்று நிராகரித்துள்ள இலங்கை அரசு, வடக்கு கிழக்கை மாவட்ட ரீதியாகப் பிரித்துவிட்டு, கிழக்கை சிங்கள மயப்படுத்தும் துரித நடவடிக்கையில் இறங்கியுள்ளது என்றும் 75வீதம் தமிழ் பேசுவோரைக் கொண்ட திருகோணமலை மாவட்டத்தைத் துரிதமாக சிங்களமயப்படுத்தும் நடவடிக்கையில் அரசு இறங்கியுள்ளது" என்றும் கூறியுள்ளார்.

இப்பிரிப்பைக் கண்டித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய இரா.சம்பந்தன், "கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளும் நோக்கிலும் உங்கள் அதிகாரத்தை செயற்படுத்துவதற்காகவுமே வடக்கு - கிழக்கைப் பிரித்துள்ளீர்கள். வடக்கு - கிழக்கில் பெரும்பான்மை மக்கள் தமிழ் பேசுபவர்கள். இந்நாட்டில் சம உரிமையோடு தமிழர்கள் வாழ்ந்ததில்லை. தங்கள் பிரதேசத்திலாவது சம உரிமையோடு வாழவேண்டும் என்பதற்காகவே நாம் போராடுகிறோம்' என்று பாராளுமன்றத்தில் வாதிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் தற்போது 75வீதமான மக்கள் தமிழ் பேசுபவர்கள். ஆனால் அங்கு நிர்வாகப் பொறுப்புகளில் ஏறத்தாழ 50 வீதமானோர் சிங்கள மொழிபேசுபவர்கள். கிழக்கு மாகாணத்தில் இருந்து பல இஸ்லாமிய தலைவர்கள் தொடர்ந்தும் பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் மந்திரிகளாகவும் இருந்தாலும், கிழக்கு மாகாணம் சிங்களமயமாக்கலை எதிர்த்து அவர்கள் போராடுவதாகத் தெரியவில்லை. அவர்கள் முழுமையாகவோ பகுதியாகவோ அரசுடன் இணைந்திருப்பதே இதனைத் தட்டிக்கேட்க முடியாமைக்கான காரணமாகும்.





அம்பாறை மாவட்டத்தில் 62வீதம் தமிழ் பேசுபவர்கள் வாழ்ந்தாலும் அங்கும் பெருமளவில் சிங்களமயமாக்கல் நடைபெற்று வருகிறது (தினக்குரல்: 6.4.2007)

**மாகாண – மாவட்ட எல்லை மாற்றங்களும் அரசின் நடைமுறைகளும்**

இலங்கையின் மாகாணங்கள், ஐந்தில் இருந்து ஏழாகி பின் ஒன்பதானது பற்றி அத்தியாயம் மூன்றில் பார்த்தோம். இலங்கையில் மாகாணங்களின் நிர்வாக எல்லைகள் 19 ஆம் நூற்றாண்டிலேயே பிரித்தானிய ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டது என்றாலும் அவை முதன் முதலாக 13ஆவது அரசியல் யாப்பு திருத்தம் வரும்வரை சட்ட பூர்வமானதாக இருக்கவில்லை. சுதந்திர இலங்கையில் மாவட்டங்கள் மட்டுமே சட்டபூர்வமானவையாக இருந்தன. இம்மாவட்ட, மாகாண எல்லைகள் அவ்வப்போது அரசாங்கங்களாலேயே உருவாக்கப்பட்டன. இது மக்களினது உடன்பாடின்றியும், சர்வஜன வாக்கெடுப்பின்றியும் சிங்கள அரசுகளின் பெரும்பான்மையைப் பயன்படுத்தி எதேச்சாதிகாரமான முறையில் எல்லைகளை அவ்வப்போது மாற்றினர். வடக்கு - கிழக்கின் பல மாவட்டங்கள் பிரித்தெடுக்கப்பட்டு சிங்கள மாவட்டங்களுடன் இணைக்கப்பட்டுள்ளமையை மேலே பார்த்தோம்.

ஒன்றுபட்ட இலங்கையில் சிங்கள - தமிழ் இனத்தவர்கள் ஒற்றுமையாக வாழமுடியுமானால் ஒன்றுபட்ட வடக்கு - கிழக்கு மாகாணத்திலும் அவ்வாறு ஏன் வாழமுடியாது? என்றும் நியாயமான கேள்வி தமிழ் தலைமையிடமிருந்து எழுகின்றது. இதுபோலவே வடக்கும் கிழக்கும் இணைந்திருப்பதற்குக் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு தேவை என்றால், அங்கு ஏனைய தமிழர்களின் தீர்மானத்தைத் திணிக்கக்கூடாது என்றால், தொடர்ச்சியான நிலப்பரப்பைக்கொண்ட தமது பூர்வீகத் தாயகமான வடக்கு - கிழக்கு மக்களின் சுயநிர்ணய உரிமையை நிர்ணயிக்க ஏன் வடக்கு கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தக்கூடாது? என்கின்ற நியாயமான கேள்வியும் தமிழ் தலைமையிடமிருந்து எழுகின்றது. எனவே தமிழர்களின் நலன்கள் தொடர்பில் ஒருவகையான அணுகுமுறையையும் சிங்களவர்களின் நலன்களைக் காக்க இன்னொருவகையான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அணுகுமுறையையும் கையாள்வது கண்கூடு, எனவே இங்கு தமிழ்த் தலைவர்களின் கேள்விகள் உண்மையான சனநாய விழுமியத்தின் அடிப்படையிலானதாகவும் அரசின் நட வடிக்கைகள் சனநாயக விழுமியங்களைச் சிறுமைப்படுத்து வதாகவும் அமைந்துள்ளமையை நோக்கலாம்.

மகிந்தராஜபக்ச அவர்கள் தனது கட்சியின் நாடாளு மன்ற குழுக்கூட்டத்தில் பேசும்பொழுது "கிழக்கு மாகாண மக்களின் தலைவிதியை வேறுயாரும் தீர்மானிக்க முடியாது. நாடாளுமன்றமோ, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதி பதியோ, நீதிமன்றமோ கூடத் தீர்மானிக்கக்கூடாது. அந்த மக்களே முடிவு செய்ய வேண்டும். வடக்குடன் இணைந் திருப்பதா அல்லது தனித்த மாகாணமாக இயங்குவதா என்பதை கிழக்கு மக்களே தீர்மானிக்க வேண்டும் என்று கூறினார் (உதயன் 18.10.2006). அப்படியானால் வடக்கு - கிழக்கு மாகாண மக்களின் தலைவிதியை ஏன் சிங்கள மக்கள் நிர்ணயிக்க வேண்டும்? வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் இணைந்திருப்பதா அல்லது பிரிந்திருப்பதா என்பதை தமிழ் மக்கள் தான் முடிவெடுக்க வேண்டும் சிங்கள மக்கள் அல்ல என்கின்ற தமிழ்த் தலை வர்களின் வாதம் சனநாயக ரீதியானதே.

நாட்டின் சமாதானத்திற்கு ஆதரவாக நடந்துகொள்ள வேண்டிய உயர்நீதிமன்றம் நாட்டின் அரசியல் பிரச்சினை யைத் தமது தலையில் எடுத்துக்கொண்டு நாட்டின் இன முரண்பாட்டிற்கு மேலும் எண்ணெய் ஊற்றுவது நடுநிலை யாக இருக்க முடியாது, இதுபற்றி மேலே பார்த்தோம் இதுபற்றி நீதி மற்றும் நீதிமன்ற மறுசீரமைப்பு விவகார பிரதியமைச்சர் டிலான் பெரேர, "அரசியலமைப்பு உடன்படி யாகத் திருத்தப்பட வேண்டும். அரசியல் தீர்மானங்களை மாற்றும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உள்ளமை ஆரோக் கியமான விடயமல்ல. அந்த அரசியலைப்பு தொடர்ந்து இருந்தால் நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. அரசாங்கத்தால் அரசியல் தீர்மானங்கள் மேற்கொள்ளவும் முடியாது" என்று கூறியுள்ளார். மேலும் அவர். "அரசியல் தீர்மானத்தை மாற்றும் வகையில் நீதிமன்றத்தால் வடக்கு- கிழக்கு பிரிக்கப்பட்டமை இனப்பிரச்சினை தீர்வு தொடர் பான சாத்தியத்தை தள்ளிவைத்துள்ளது என்றே கூற





வேண்டும் என்றும், இவ்வாறு தொடர்ச்சியாக அரசியல் தீர்மானங்கள் நீதிமன்றத்தால் மாற்றப்பட்டு வந்தால் இந்த நாட்டின் நீதிமன்றங்கள் சிங்கள மக்களுடையது என்று தமிழ் மக்கள் கருதிவிடுவார்கள், இதற்கு நாம் உடந்தை யாக இருக்கக்கூடாது" என்றும் கூறினார் (வீரசேகரி, 5.1.2007)

இந்த சர்வதேச உடன்படிக்கையை மீறியதால் இலங்கை ஒரு சர்வதேச உடன்படிக்கைக்குரிய முக்கியத்துவத்தைச் சிறுமைப்படுத்தியது மட்டுமின்றி இந்தியாவையும் அவ மதித்துவிட்டது. இன்று இலங்கை இனப்பிரச்சனை தீர்விற் காகச் செயற்படும் சர்வதேச நாடுகளுக்கு இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒரு படிப்பினையாகக் கொள்ளப் படலாம். இலங்கை அரசியல் யாப்பின்படி சனாதிபதியும் பாராளுமன்றமும் நினைத்தால் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பை யும் மீறிச்சென்று வடக்கு - கிழக்கு மாகாணங் களைத் தொடர்ந்தும் இணைந்த மாகாணங்களாக வைத் திருக்கலாம். ஆனால் இவ்விடயத்தில் சனாதிபதியும் அரசாங் கமும் அப்படிப்பட்டவையல்ல என்பதை அவர்களது நடை முறைகள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டிநிற்கின்றது.

### கருணாவின் வெளியேற்றம்

தமிழீழ விடுதலைப் புலிகள் தாம் ஒரு பலமான நிலை யில் இருந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டால்தான் தாம் நினைத்ததை அடையலாம் என்ற நம்பிக்கையுடையவர்கள். இதன் பின்னணியிலேயே கருணாவின் விலகல் ஆராயப் படவேண்டும்.

2004ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கருணா விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிவதகாக் கூறியதோடு தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் (TMVP) என்ற புதிய கட்சியை யும் ஆரம்பித்தார். கருணா 20வருடத்திற்கும் மேலாக அம் பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின் பொறுப்பாளராக இருந்துள்ளார். இவரது கட்டுப்பாட்டின் கீழ் 6000 தொடக்கம் 7000 வரையான தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் இருந்தனர் என்று மதிப்பிடப்படுகிறது. இவர்களில் 1400பேர் வரை

www.tamilarangam.net



கருணாவோடு பிரிந்த சிறிலங்கா இராணுவ முகாம்களில் சரணடைந்ததாகவும் மிகுதிப்பேர் தமது வீடுகளுக்குச் சென்றதாகவும் அறியப்படுகிறது.

இதனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண போராளிகள் திசை தெரியாமல் தடுமாறினர். இத்தருணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் கருணா குழுவினர்க்கும் இடையே சிறிய அளவிலான மோதல் ஒன்று இடம்பெற்று முடிவில் மேற்கூறியதுபோல் கருணா குழு சிறிலங்கா இராணுவத்துடன் இணைய, புலிகள் திரும்பவும் கிழக்குப் பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தாலும் தொடர்ந்து அதனைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாத நிலையே ஏற்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் வன்னியில் இருந்த முக்கிய போராளிகளைக் கொண்ட ஒரு குழுவை அனுப்பியே கருணாவைப் பின்வாங்க வைத்தனர்.

கிழக்கு மாகாணத்தில் புலிகளின் தளபதி என்ற அடிப்படையில் கடந்த 20 வருடகாலத்தில் அங்கு அவர்களின் பேரில் நடந்த சகல பயங்கரவாதச் சம்பங்களுடனும், வன்முறைச் சம்பவங்களுடனும் கருணா தொடர்புகொண்டிருந்தார். இவர் விடுதலைப் புலிகளின் சார்பில் அமைதிப் பேச்சுவார்த்தைகளிலும் கலந்துகொண்டார். ஆனால் வடக்கு - கிழக்கின் பொருளாதார விடயங்களும், கருணாவுக்கும் பொட்டு அம்மானுக்கும் இடையேயான அதிகாரப் போட்டியும் கருணாவின் பிரிவுக்குக் காரணமாக இருக்கலாம் என்பது அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாகும். இவர்கள் பிரிந்ததற்கான உண்மையான காரணத்தை எதிர்கால சரித்திரம்தான் கூறவேண்டும்.

விடுதலைப் புலிகளின் தலைமைத்துவமானது தமது பலத்தைப் பாவித்து கருணாவைப் பின்வாங்க வைக்க முயன்றது. ஆனால் வன்னியில் இருந்து புலிப்படை வரு முன்பே கருணாவின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பல இடங்கள் சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. இக்காலகட்டத்தில் போர்நிறுத்த ஒப்பந்தம் இருந்தது. இராணுவம் அவ்வொப்பந்தத்தை மீறி கருணாவின் ஆதரவோடு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்





பகுதிக்குள் ஊடுருவியது. விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு முன்பே இது நடந்தது. இது போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயலாக இருந்தாலும் கருணா பிரிந்து அரசோடு இணைந்ததானது கிழக்கில் அரசாங்கத்திற்கு பெரும்பலம் சேர்த்தது. கருணாவும் அவரது ஆதரவுப் போராளிகளும் இராணுவத்துடன் இணைந்து அமைதிப் பேச்சுவார்த்தையைத் தடுப்பதில் முக்கிய பங்காற்றினர். அதாவது போர்நிறுத்த ஒப்பந்தப்படி ஓட்டுக்குழுக்கள் அரசபடைகளால் நிராயுதபாணிகளாக்கப்பட வேண்டும். ஆனால் இலங்கை அரசு கருணா குழுவை பாவித்து, புலிகளை கிழக்கு மாகாணத்தில் இருந்து அகற்றத் திட்டமிட்டது. அதன்படி 2006இல் கருணா குழுவினர் இராணுவத்தின் முக்கிய பிரிவாகினர். இவர்கள் புலிகளில் இருந்து பிரிந்தவர்கள் என்பதால் புலிகளின் போர்த் தந்திரங்களும் உபாயங்களும் பலங்களும் பலவீனங்களும் இவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தது. எனவே விடுதலைப் புலிகளின் போர்த்தந்திரங்களை இவர்கள் இலங்கை இராணுவத்திற்கு வழங்கியதுடன் அவர்களுடன் இணைந்து புலிகளுக்கு எதிரான போரிலும் ஈடுபட்டனர். எனவே கருணாகுழுவின் பிரிவானது கிழக்கிலிருந்து புலிகள் பின்வாங்கிச் செல்வதற்கு முக்கியக் காரணமாக அமைந்தது.

கருணாவின் பிரிவு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஒரு மிகப்பெரிய இழப்பாகும். கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் 20 ஆண்டு கால வளர்ச்சி இப்பிரிவால் தடைப்பட்டது. இதனால் பல சிங்கள தீவிரவாதிகள் சந்தோசப்பட்டனர். இராணுவ தலைமைப்பீடம் மகிழ்ச்சியடைந்தது. உலகில் வாழும் தமிழ் மக்கள் இப்பிரிவால் கவலையடைந்தனர். கிழக்கின் தமிழ் மக்கள் கவலையடைந்தனர். இப்பிரிவால் அடிபட்டு இறந்துகொண்டிருந்தவர்களில் அதிகமானோர் கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்கள் என்றால் அதுமிகையாகாது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் ஒழுங்காக நடைபெறமுடியாமல் போனமைக்கு கருணாவின் பிரிவும் ஒரு காரணமாகும். தவிரவும், பல்வேறு காரணங்கள் பேச்சுவார்த்தைக்குத் தடையாக அமைந்தன. இவற்றை இனி ஆராய்வோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மகிந்தராஜபக்சவின் தலைமையும் சமாதான நடவடிக்கைகளும்

நவம்பர் 2005 ஆண்டு நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் சில எதிர்பாராத கூட்டணிகள் உருவாகின. சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரான ராஜபக்சவுக்கு ஆதரவாக சிங்கள பௌத்த தீவிரவாதிகளான ஜனதா விமுக்தி பெரமுன, ஜாதிக ஹெலஉருமய, மற்றும் இடது சாரிக்கட்சிகள் ஆகியவை பிரச்சாரம் செய்தன. அதேவேளை வடக்கு - கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் பேசும் மக்களை வாக்களிக்காது பகிஷ்கரிக்குமாறு வேண்டுகோள் விடுத்ததன் மூலம் ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிட்டவரான ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியைத் தடை செய்தனர். எனவே தமிழ்த் தேசிய வாதிகளும் சிங்கள தீவிரவாதிகளும் இணைந்து தமிழ்த் தேசியவாதத்துக்கு எதிரான ஒரு வேட்பாளரை சனாதிபதியாகத் தெரிவு செய்தனர். இதனால் ரணில் விக்கிரமசிங்கவால் ஏற்படுத்தப்பட்ட சமாதான நடவடிக்கை ஒரு முடிவுக்கு வந்தது. புதிய அரசான ராஜபக்ச அரசு சமாதான நடவடிக்கையில் அக்கறை காட்டாமல் இருந்தபோதிலும் நோர்வேயை தொடர்ந்து அனுசரணையாளராக வைத்திருந்தது. அதேசமயம் போர் நிறுத்த ஒப்பந்தத்தையும், நோர்வேயின் அனுசரணையாளர் நடவடிக்கைகளையும் விமர்சித்துக்கொண்டிருந்தது. இத்தருணத்தில் இரண்டுவிதமான நடவடிக்கைகளை ராஜபக்ச அரசு மேற்கொண்டது. அவற்றில் முதலாவதாக, வடக்கு - கிழக்கில் கடுமையான இராணுவத்தாக்குதல், இரண்டாவதாக இராணுவ தாக்குதலை நடாத்தும் அதே நேரத்தில் அரசியல் தீர்வு ஒன்று கொண்டுவருவது போலான நடவடிக்கையையும் செய்து உலகநாடுகட்குத் தாம் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை அழிக்கப் போராடும் அதேநேரம், அரசியல் தீர்வுக்கும் திட்டமிட்டு வேலை செய்வதாகவும் காட்டிக்கொள்ளுதல். இப்படி செய்வதன் மூலம் தாம் தமிழீழ விடுதலைப் புலிகளை அரசியல் தீர்வை ஏற்றுக்கொள்ள வைக்கலாம் என்றும் அதற்கான பேச்சுவார்த்தைக்கு அவர்களைக் கொண்டு வரலாம் என்ற பிரச்சாரத்தையும் அரசின் பிரச்சாரப்பகுதி முடுக்கிவிட்டிருந்தது.





ஆனால் உண்மை நிலை அவ்வாறிருக்கவில்லை. அரசாங்கம் பெயரளவில் சமாதான நடவடிக்கைகள், பேச்சுவார்த்தைகள் பற்றி பொதுமக்களுக்கும் இணைத் தலைமை நாடுகளுக்கும் கூறினாலும், அவர்களது உண்மையான நோக்கமும் செயற்பாடும் தமிழீழ விடுதலைப் புலிகளைப் போரட்டத்தில் வென்று அதன்பிறகு தாம் விரும்பியவாறு தமிழர்கள் மீது ஆட்சிபுரிவதென்பதாகும். அரசபடைகளின் தாக்குதல்கள் ராஜபக்ச தலைமையின்கீழ் போர்நிறுத்த காலத்திலேயே தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இவ்வகையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களின்மீது விமானத் தாக்குதல்களும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இதனால் பெருமளவு உயிரிழப்புக்களும் உடைமை இழப்புக்களும் நாளாந்தம் ஏற்பட்டு வருகின்றன. போர் நிறுத்த ஒப்பந்தம் என்ற ஒன்று இருக்கின்றது. என்பதை அறவே மதிக்காததின் வெளிப்பாடாகவே இந்த இராணுவ நடவடிக்கைகள் நடைபெற்றன. விமானத்தாக்குதல்களைத் தொடர்ந்து, தரைப்படையினரின் பீரங்கித்தாக்குதல்களினாலும், கருணா குழுவினரின் ஊடுருவித்தாக்கும் செயல்பாடுகளினாலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடு கிழக்கு மாகாணத்தில் குறையத் தொடங்கியது. அதேவேளை இருபக்கமும் போர்நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருப்பதாகக் கூறிக்கொண்டே தமது யுத்தத்தைத் தொடர்ந்தனர். அனுசரணையாளரான நோர்வேயும் சிறிலங்கா போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் சிங்களவர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் தமது வேலைகளைத் தொடர்ந்தனர். இதில் முக்கியமான விடயம் யாதெனில், முன்னைய தலவர்களைவிட ராஜபக்சவின் தலைமையின் கீழ்தான் விடுதலைப் புலிகளுக்கு எதிராக போர்நிறுத்த ஒப்பந்த காலத்தில் விமானத்தாக்குதல்களும் ஏனைய தாக்குதல்களும் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. இத்தகைய தாக்குதல்களில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் பாதுகாப்புச் செயலாளரும் சனாதிபதியின் தம்பியுமான கோத்தபாய ராஜபக்சவும் முன்னர் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றி இப்பொழுது இராணுவ தளபதியாக இருக்கின்ற சரத்பொன்சேகாவும் ஆவர். இவர் ராஜபக்சவினால் இலங்கையின் இராணுவக் கொமாண்டராக நியமிக்கப்பட்டார். இவர்கள் இருவரும் விடுதலைப் புலி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களை அழிக்க வேண்டும், 'அழிப்போம்' என்பதில் முழுமூச்சாக இருப்பவர்கள். இவர்கட்கு அமைதிப் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் பல எதிர்க்கருத்துக்கள் உண்டு. இவர்கட்கு ஆலோசகராக சிங்கள தீவரவாதக் கட்சியான ஜாதிக ஹெல உருமயவின் ஆலோசகரான முன்னைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (DIG) கொட்டகதெனிய நியமிக்கப்பட்டிருந்தார். அதேவேளை பாதுகாப்பு அமைச்சோடு பொலிஸ்படையின் வேலைகளும் இணைக்கப்பட்டு வலுவாக்கப்பட்டிருந்தது.

இக்காலக்கட்டத்தில் விடுதலைப் புலிகளும் ஆங்காங்கே இராணுவத்தினரை தாக்கிக் கொண்டிருந்தனர். அரச படைகளும் தமது தாக்குதல்களைத் தொடர்ந்தன. 25, டிசம்பர் 2005இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் நத்தார் தினத்தை அனுஷ்டிப்பதற்காக கிறிஸ்தவ தேவாலயத்துக்குச் சென்ற சமயம் தேவாலயத்திற்குள் வைத்தே பலபேர் முன்னிலையில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்குச் சிலமாதங்களின் பிறகு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் அவர்களும் சுற்றாடலில் பொலிஸ், இராணுவத்தினர் இருந்தும் பட்டப்பகலில் நடுவீதியில் பலர் முன்னிலையில் சுட்டுக்கொல்லப்பட்டார். இத்தலைவர்களின் கொலைகள் பாதுகாப்பு அமைச்சின் ஒப்புதலின்றி நடைபெற்றிருக்க முடியாது என்பது பல்வேறு அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாகும். இதுபோன்றே இவ்வாட்சிக் காலத்தில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் கடத்தப்பட்ட தலைவர்கள், கல்விமான்கள், பத்திரிகையாளர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் ஆகியோரின் மிக நீண்ட பட்டியல் காணப்படுகின்றது. இவற்றில் ஈடுபட்ட எந்தவொரு கொலையாளியோ கடத்தல்காரர்களோ கைது செய்யப்பட்டு சட்டத்தின்முன் நிறுத்தப்படவில்லை. அல்லது தண்டிக்கப்படவில்லை என்பதானது சட்ட அமுலாக்கல் பிரிவிற்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இக்கொலையாளிகள் மற்றும் கடத்தல்காரர்களுக்குமிடையில் மிக நெருங்கிய தொடர்பு இருக்குமோ என்கின்ற நியாயமான சந்தேகத்தினை எழுப்புகின்றது. இக்கொலைகள் காணாமல் போதல்கள் தொடர்பாக உள்நாட்டின் மனித உரிமைகள் அமைப்புகள் தொடக்கம் ஐ. நாசபை மனித உரிமைகள் ஆணையம்வரை பதிரங்கக் கண்டனங்களையும் அவற்றை நிறுத்துவதற்கான அழுத்தங்களையும் பிரயோகித்து வருகின்றன. எனினும் இன்னமும் இத்தகைய கொலைகளும் கடத்தல்களும் தொடர்வதும் இவற்றில் சம்மந்தப்பட்டவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து இலகுவாகத் தப்பியிருக்கின்றமையும் ஆட்சியாளர்களின் முழுமையான ஆதரவு இல்லாமல் சாத்தியமா என்கின்ற கேள்வியையும் எழுப்புகின்றது.





விதிவிலக்காக சர்வதேச அழுத்தம் காரணமாக இரண்டு படுகொலைச் சம்பவங்கள் மட்டுமே சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் விசாரிக்கப்பட்டு வருகின்றது. 1. ஜனவரி 2006இல் திருகோணமலை கடற்கரையில் படுகொலை செய்யப்பட்ட ஐந்து உயர்கல்வி மாணவர்களின் கொலை சம்மந்தப்பட்டது. 2. மூதூரில் பதினேழு சர்வதேசத் தொண்டுநிறுவனப் பணியாளர்களின் கொலை (action Contre la Faim -(ACF) பற்றியதாகும். இவ்விசாரணைகளைக் கண்காணிப்பதற்கு ஓய்வுபெற்ற இந்திய உச்சநீதிமன்ற நீதிபதி பி. என். பகவதி தலைமையில் சர்வதேச நீதித்துறை வல்லுநர்களைக் கொண்ட ஒரு சுயாதீனக் கண்காணிப்புக் குழு நியமிக்கப்பட்டது. இவ்விசாரணைகள் தொடர்பாக இலங்கை அரசினதும் சட்டமா அதிபர் திணைக்களத்தினதும் இராணுவம் பொலிஸ் ஆகியோரதும் ஒத்துழைப்பின்மையினால் அதிருப்தியடைந்து தமது கண்காணிப்புப் பணியைவிட்டு வெளியேறுமுன் வெளியிட்ட பதினொரு பக்க அறிக்கையில், "தன்னுடைய சொந்தப் படைகளால் இழைக்கப்பட்டவை என்று குற்றம் சுமத்தப்படும் மோசமான மனித உரிமை மீறல் கொடூரங்கள் குறித்து தீவிரமாகவும் உறுதியாகவும் விசாரணைகளை நடாத்தி உண்மையைக் கண்டறிந்து சூத்திரதாரிகளை அம்பலப்படுத்தும் அரசியல் உறுதிப்பாடு அரசுக்கு இல்லவே இல்லை" மேலும் "பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்கள் குறித்து தீவிரமாக விசாரிப்பதற்கும் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான நோக்கத்துடன் செயற்படுவதற்கும், நீதிக்குத் தடையாக உள்ள விடயங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களை இனங்காண்பதற்குமான அரசியல் மற்றும் நிர்வாகக் கட்டமைப்பு உறுதிப்பாடு இங்கு காணப்படவில்லை" என்றும் தெரிவித்துள்ளனர். இவ்வாறான நீதிக்கு அப்பாற் பட்ட கொலைகள் (Extra judicial killing) அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. கருணா குழுவினரும் இச்செயற் பாடுகளில் ஈடுபட்டு வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் குற்றம்சாட்டியுள்ளன. இவர்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்படவேண்டு மென்று சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருவதையும் இங்கு நோக்கலாம்.

அரசினால் கருணா குழுவினர் பாதுகாக்கப்பட்டும் வலுப்படுத்தப்பட்டும் புலிகளை அழிப்பதற்கு பயன்படுத் தப்பட்டு வந்தபோது போர்நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிட்டிருந்தவாறு கருணா குழுவினர் நிராயுதபாணி களாக்கப்பட வேண்டும் என்று புலிகள் அரசை வலியுறுத் தினர். எனினும் அரசாங்கம் மற்றும் அதன் கூட்டணி கட்சி களான சிங்கள கடுபோக்காளர்கள் புலிகளுக்கு எதிரான போரில் கருணா குழுவைப் பயன்படுத்துதல் என்கின்ற முக்கியத் தேவையின் அடிப்படையில் போர்நிறுத்த ஒப்பந்த விதிகளை அரசு அலட்சியம் செய்தது. இந்நிலையிலும் இருதரப்பினரும் மார்ச் 2006இல் ஜெனிவாவில் அமைதிப் பேச்சுவார்த்தைக்குச் சம்மதித்தனர். இது மூன்று ஆண்டு களின் பின்னர் ஆரம்பமாகிய பேச்சுவார்த்தையாகும். இப் பேச்சுவாத்தையின்போது போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் திருத்தி எழுதுவதாக அரசு திட்டமிட்டிருந்தது.

ஆனால் விடுதலைப் புலிகள் அதற்கு சம்மதிக்கவில்லை. மாறாக தம்மில் இருந்து பிரிந்த கணருாகுழுவின் ஆயுதங் களைக் களையுமாறு வேண்டுகோள் விடுத்தனர். அரசும் சம்மதித்தது. ஆனால் நடைமுறைப்படுத்தவில்லை.

## மீண்டும் போர்:

### 1. திருகோணமலை

ஏப்ரல் 2006இல் திருகோணமலையில் இன முரண் பாடுகள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்தன. திருமலை தெற்காசியாவில் முக்கிய துறைமுகமாகும். இங்கு மூன்று இன மக்களும் ஏறத்தாழ சமவிகிதாசரத்தில் பரவலாக வாழ்கின்றனர்.





2006 ஏப்ரல் 12 ஆம் திகதி திருகோணமலை சந்தைப் பகுதியில் ஒருகுண்டு வெடித்ததால் ஒரு குழந்தை உட்பட 5பேர் கொல்லப்பட்டனர். இது தமிழீழ விடுதலைப் புலி களால் நடத்தப்பட்டதாகக் கருதப்பட்டது. இதற்கு எதிர் தாக்குதலாக இலங்கைக் கடற்படையினரும் அவர்களால் அழைத்துவரப்பட்ட சிங்கள கூலிப்படையினரும் திரு கோணமலை நகரப்பகுதியில் தமிழர் கடைகளைத் தெரிவு செய்து கொள்ளையடித்தல், தீவைத்தல் ஆகிய வன்செயல் களில் ஈடுபட்டனர். இதில் குறைந்தது 19 தமிழர்கள் கொல் லப்பட்டனர் என நம்பப்படுகிறது. மனித உரிமைகளுக் கான யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் குழுவினரின் அறிக்கை பாதுகாப்புப்படையினர் இந்த தாக்குதல்களை நிறுத்துவதற்குப் பதிலாக வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்தனர் என்று தெரிவிக்கின்றது (UTHR (J) அறிக்கை 15.5.2006)

இப்பொழுது நடைபெற்ற திருகோணமலைக் கலவரம் 1983 ஜூலை கலவரம்போல் பெரிதாகக் கூடும் என்று பலரும் பயந்தனர். அந்தளவுக்கு அந்நகரமும், கிராமப்புறமும் சிறு கலவர நிலையிலேயே இருந்தது. இந்நிலையில் தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களின் தலையீட்டால் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உடனடியாக ராஜ பக்சவைக் தொடர்புகொண்டு திருமலை கலவரத்தை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டதன் பின்னரே அங்கு சகஜ நிலை நிரும்பியது.

மேலும் ஏப்ரல் 25,2006அன்று விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையைச் சேர்ந்த பெண் ஒருவர் கொழும் பில் உள்ள இராணுவத் தலைமையகத்துக்கு முன் குண்டை வெடிக்க வைத்ததன் மூலம் 11 இராணுவத்தினர் அதே இடத்தில் கொல்லப்பட்டதோடு இராணுவ உயர் அதிகாரி சரத்பொன்சேகா உட்பட பலர் காயமடைந்தனர். இதற்கு எதிர்த்தாக்குதலாக விமானப்படையினர் 2001ஆம் ஆண் டிற்குப் பின்னர் முதன் முதலாக சம்பூர் கறடியனாறு ஆகிய விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளைத் தாக்கினார்கள். இவ்விமானத் தாக்குதல்கள் திருகோண மலை மாவட்டத்திலிருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் தொடர்ந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 2. மாவிலாறு

திருமாலை மாவட்டத்தில் இருதரப்பிலும் இரகசியக் கொலைகள் தொடர்ச்சியாக நடந்தவண்ணமிருந்தன. இந்நிலையில் விடுதலைப் புலிகள் ஜூலைமாத இறுதியில் மாவிலாறு நீர்த்தேக்கத்திலிருந்து சிங்களப் பகுதிகளுக்குச் செல்லும் நீரின் முகத்துவாரத்தை அடைத்துவிட்டனர். இதனால் கிழக்கு மாகாணத்தில் போராட்டம் ஒரு புதிய வடிவத்தை எடுத்தது. அரசபடைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் நேரடி மோதல்கள் ஆரம்பமானது. விமானப் படை குண்டு வீச்சுக்கள் தொடர்ந்தன. இந்த நீரோட்டத்தை விடுதலைப் புலிகள் ஏன் மூடினார்கள் என்பது வெளிப்படையாகக் கூறப்படாவிட்டாலும் தமிழ்ப் பகுதி கட்கு நீர்கிடைக்கவில்லை என்பதைக்காட்ட எடுத்துக் கொண்ட எதிர்ப்பு நடவடிக்கையாகவே கருதப்பட்டது. எனினும் இது ஓர் தொடர்ச்சியான ஒரு போருக்கு வழி வகுத்தது. சில தினங்களில் மாவிலாறு அணையை புலிகள் திறந்துவிட்டபோதும் அணையை மூடியமையைக் காரணம் காட்டி அரச படைகளும், அவர்கட்குச் சார்பான ஒட்டு படைகளும் சேர்ந்து, குறிப்பாக கருணா குழுவும் சேர்ந்து கிழக்கு மாகாணத்தை புலிகளிடமிருந்து விடுவிக்கும் முயற்சியில் இறங்கினர். இவ்விடயத்தில் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அணையைத் திறக்கும் பேச்சுவார்த்தையில் வெற்றிகண்டு 5.8.2006 அன்று அணையைத் திறப்பதற்காக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அதிகாரி உல்ஃப் ஹென்றிக்சன் மாவிலாறு சென்ற வேளையில் அப்பிரதேசத்தில் இராணுவமும் விமானப்படைகளும் தாக்குதல்களை மேற்கொண்டன. இதில் ஹென்றிக்சன் மயிரிழையில் உயிர் தப்பினார். விடுதலைப் புலிகளும் பதில் தாக்குதல்களை நடத்தினர். இதன் தொடர்ச்சியாக முஸ்லிம்கள் அதிகமாக வாழும் மூதூர் சில தினங்களில் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டு பின்னர் கைவிட்டுச் சென்றனர். அதனைத் தொடர்ந்து இராணுவம் மீண்டும் அப்பகுதியை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தது. இச்சந்தர்ப்பத்திலேயே நாம் ஏற்கனவே நோக்கிய மூதூர் சர்வதேசத் தொண்டு நிறுவனப் பணியாளர் படுகொலையும் நடைபெற்றது. இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு இக்கொலைகளை இலங்கை அரசபடை





களே செய்தனர் என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. இப்போரில் அப்பகுதி மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்தனர்.

இதனால் இப்பகுதி ஒருமுழு போராட்டகளமாக மாறியது. முப்படைகளின் தாக்குதல்களும் இப்பகுதியில் தொடர்ந்தன. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழும் சாதாரண மக்களை அப்பகுதியை விட்டு வெளியேற்றுவதன் ஊடாக அவர்கள் மத்தியில் வாழும் புலிகளைத் தனிமைப்படுத்தலாம் அல்லது மக்கள் வெளியேறும் பட்சத்தில் அவர்களும் வெளியேறுவார்கள் என்கின்ற தந்திரரோபாயம் இங்கு பயன்படுத்தப்பட்டது. இதனை நடைமுறைப்படுத்துவதற்கு அப்பகுதி மக்களுக்கான உணவுத்தடை, மருந்துத்தடை ஆகியவை நடைமுறைப்படுத்தப் பட்டதுடன் தொடர்ச்சியான தரை, ஆகாயவழி குண்டு வீச்சுக்களால் இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்க் கப்பட்டனர். உணவு, மருந்து போன்றனவும் உயிர் அச்சுறுத் தலும் போர் வெற்றிக்கான கருவிகளாகப் பயன்படுத்தப் பட்டன. இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு இக்கொலைகளை அரசபடைகளே செய்திருப்பதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

### சம்பூர் – யாழ்ப்பாணம்

மாவிலாறு மதகு திறக்கப்படுவதற்கான தாக்குதல் என ஆரம்பித்த யுத்தமானது படிப்படியாகக் கிழக்கு மாகாணத்திலிருந்து புலிகளை வெளியேற்றும் போராக பரிணாமம் பெற்றது. மாவிலாறை அண்மித்த பகுதியான சம்பூரிலிருந்து விடுதலைப் புலிகள் திருகோணமலைக் கடற்படைத் தளத்தைக் தாக்கமுடியுமென்றும் எனவே சம்பூர் இராணுவ பாதுகாப்பு ரீதியில் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம் எனவும் பார்க்கப்பட்டது. இதனால் சம்பூரைத் கைப்பாற்றுவதற்கான போர் தொடர்ந்தது. இதனைத் தொடர்ந்தே உணவு மருந்து ஆகியவற்றையும் உயிர் அச்சுறுத்தலையும் புலிகளை வெல்லும் ஆயுதமாகப் பயன் படுத்தும் அணுகுமுறை கையாளப்பட்டது. இதன் மூலம் சம்பூர் அதனைத் தொடர்ந்து வாகரை அதனைத் தொடர்ந்து குடும்பிமலை (தொப்பிகல) ஆகியவற்றை இராணுவம் கைப்பற்றியது. இராணுவத்தினரின் இத்தாக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தல்களால் ஏறத்தாழ இரண்டரை லட்சம் மக்கள் தமது பிரதேசங்களைவிட்டு இடம் பெயர்ந்தனர். இவர்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்த பிரதேசங்களைவிட்டு வெளியேற்றப்பட்டதுடன் பல்லாண்டுகால சேமிப்புகளும் சொத்துக்களும் முழுமையாக அழிக்கப்பட்டன. சம்பூர் உட்பட ஏராளமான கிராமங்களை அரசு உயர்பாதுகாப்பு வலையமாகக் கருதி அங்கு வாழ்ந்த மக்களை நிரந்தரமாக நிர்க்கதிக்குள்ளாக்கியது. இப்பிரதேசம் அனைத்தும் தனி நபர் சொத்துக்கள் என்பதும் சட்டரீதியாக அவை அந்த மக்களுக்கே சொந்தம் என்பதும் இங்கு கருத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். இச்சூழலில் கிழக்கு மாகாணத்தை வெற்றிகரமாக இராணுவத்தின்கீழ் கொண்டுவந்த செயலைக் கொண்டாடும் வகையில் கொழும்பில் சனாதிபதி ராஜபக்ச தலைமையில் கிழக்கின் உதயம் என்னும் பெயரில் பெரும்விழா கொண்டாடப்பட்டது.

சம்பூரின் மீதான தாக்குதல்கள் தொடர்ந்துகொண்டிருக்கும்போதே 11.8.2006 அன்று விடுதலைப் புலிகள் கடல் வழியாகவும் தரைவழியாகவும் எதிர்த்தாக்குதலை யாழ்குடா நாட்டிற்குள் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடத்தினார்கள். இதன் விளைவாக யாழ்ப்பாணத்தையும் கண்டியையும் இணைக்கும் நெடுஞ்சாலையான ஏ-9 வீதி மூடப்பட்டது. இதனால் யாழ்குடா நாட்டு மக்களின் ஏனைய பகுதிகளுக்கான தரைவழித் தொடர்பு துண்டிக்கப்பட்டது. இது அவர்களுடைய அடிப்படைத் தேவைகள் உட்பட அன்றாட அவசியத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளமுடியாத நெருக்கடிக்குள் அவர்களைத் தள்ளியது. விடுதலைப் புலிகளுக்கும் அவர்களது வரி மூலம் கிடைக்கப் பெற்ற வருமானம் இல்லாமல் போனது. இரண்டு வார போருக்குப்பின் அரசபடைகள் தமது எதிர்த்தாக்குதலைத் தவிர்த்து பின்வாங்கினார்.

வீதி மூடப்பட்டதைத் தொடர்ந்து யாழ் மாவட்ட மக்கள் கடுமையான உணவுத் தட்டுப்பாட்டை எதிர்நோக்கினர். பெருமளவு மக்கள் வேகமாக அதிகரித்த விலைவாசியினால் தங்களது வாங்கும் தகுதியை இழந்து பட்டினிக்குள் தள்ளப்பட்டனர். பாதையைத் திறக்கும்படி புலிகள் உட்பட தமிழ்த் தலைமைகள் அனைத்தும் கோரிக்கை விடுத்தன.





சர்வதேச சமூகமும் இக்கோரிக்கைக்கு ஆதரவளித்தது. எனினும் அரசாங்கம் புலிகளின் சட்டவிரோத வரிவசூலிப்பையும், தமது இராணுவத்தின் பாதுகாப்பையும் காரணம் காட்டி இந்தப் பாதையை திறக்க மறுத்தது. ஏறத்தாழ ஏழுலட்சம் மக்களின் நலன்கள் இராணுவத்தின் பாதுகாப்பு நலன்களுக்கு கீழ்ப்படுத்தப்பட்டது. ஏ-9 பாதை மூடப்பட்டது என்பது இராணுவத்திற்கான பாதுகாப்புடன் சம்பந்தப்படுத்தப்படுவது எந்த அளவிற்குச் சரியானது என்பதும் ஏற்கனவே பாதுகாப்பு நடைமுறைகள் செயற்படுத்தப்பட்டுக்கொண்டிருந்த நிலையில் பாதையை மூடுவது அவசியமா என்கின்ற கேள்வியும் எழுகின்றது. இது பற்றி தனியான ஓர் ஆய்வில் பார்க்கப்படலாம். மூதூரில் தொண்டு நிறுவனத்தின் 17 தொண்டர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்த தொண்டு நிறுவனத்தினர் கொழும்பிற்கு இடம்பெயர்ந்துவிட்டனர்.

## பேச்சுவார்த்தையில் உள்ள சவால்கள்

இலங்கை இனப்பிரச்சனையின் தோற்றுவாயானது இலங்கையை ஒரு பௌத்த சிங்கள நாடாகக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற எண்ணிக்கையில் பெரும்பான்மையான சிங்கள சமூகத்தில் தோன்றிய தலைவர்களின் மறைமுக செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தொடங்கியதிலிருந்து காணலாம். இதன் வெளிப்பாட்டினைக் காலனித்துவ ஆட்சிக் காலத்திலிருந்தே நோக்கலாம். இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்ற பேரால் சிறுபான்மை மக்களின் மீது பெரும்பான்மையின் ஆதிக்கத்தைக் நிலை நாட்டுவதற்கான தீர்மானங்களே முன்னெடுக்கப்பட்டன. 1930 இல் தனிச் சிங்கள அமைச்சரவை அமைக்கப்பட்டமை. சுதந்திரத்தின்பின் ஒருமில்லியனுக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டமை இலங்கையின் சனத் தொகையில் ஏறத்தாழ மூன்றில் ஒருபங்கினரான தமிழ்ப் பேசும் மக்களின் மொழிஉரிமை 1956ஆம் ஆண்டு மறுக்கப்பட்டமை, தமிழர்களின் பாரம்பரியத் தாயகப் பிரதேசங்கள் சிங்கள மயமாக்கப்பட்டமை, சிறுபான்மை மக்களுக்கு அரசியல் யாப்பில் வழங்கப்பட்டிருந்த மிகக்குறைந்த பாதுகப்பு அம்சங்கள் 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பிலிருந்து நீக்கப்பட்டமை, கிரமமான கால இடைவெளிகளில் அரசு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆதரவுடனான தமிழின ஒழிப்பு நடவடிக்கைகள் தமிழ் மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புக்களைத் தடை செய்தமை என நீண்டு செல்லும் பாரபட்சமானதும் ஒடுக்கு முறை நிறைந்ததுமான ஆட்சிமுறையானது, இலங்கையின் தமிழ் பேசும் மக்கள் தொடர்பாக சிங்களத் தலைமை களின் வரலாற்று ரீதியான மனோபாவத்தை வெளிப் படுத்தி நிற்கிறது தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களின் மேற்கண்ட வகையான அணுகுமுறைகள் அடிப்படையில் தமிழ் சமூகத்தினை அரசியல் ரீதியில் அதிகாரமற்றவர் களாக்கி, பொருளாதார ரீதியில் பலவீனமானவர்களாக்கி, சமூக ரீதியில் இழிநிலைக்கு இட்டுச்செல்லும் நோக்க முடையதாகவே காணப்படுகின்றது இன்னொரு வகையில் கூறின், பெரும்பான்மைத் தலைவர்களின் செயற்திட்ட மான இலங்கைத் தீவை ஒரு பௌத்த சிங்கள நாடாகக் கட்டியெழுப்பும் நடைமுறையை வெற்றிகரமாக முன்னெ டுப்பதற்கு இலங்கை தமிழ் மக்கள் பெரும் சவாலாக இருப்பதாக சிங்கள தலைமைகள் அச்சமடைந்தன. இந்த அச்ச உணர்வின் வெளிப்பாடே மேற்சொல்லப்பட்ட தொடர்ச்சியான பாரபட்ச ஒடுக்குமுறை நடவடிக்கை களாகும். எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருந்தா லும் இந்நாட்டின் ஆதிக்குடிகள் என்கின்ற வரலாற்றுபூர்வ உரிமை, வளர்ச்சியடைந்த மொழிக்குரியவர்கள் என்கின்ற பெருமை, மிக நீண்ட பாரம்பரிய கலாசாரத்திற்குச் சொந்தக்காரர்கள் என்னும் பெருமை, தெற்கு, தென்கிழக்கு ஆசியாவின் கணிசமான பகுதிகளைத் தங்களது முடியின் கீழ் கொண்டுவந்தவர்கள் என்ற கௌரவச் செருக்கு ஆகியன தமிழ்ச் சமூகத்தின் உணர்வுகளோடு கலந்த ஒன்றாகும் இந்த விழுமியங்களே அவர்களுக்குரிய தனி அடையாளத்திற்கும் பலத்திற்கும் காரணமாகும்.

மேற்கண்ட புரிதலிலிருந்து இலங்கையின் இனப்பிரச் சனையானது இரண்டு எதிரெதிரானதும் வெவ்வேறு வகை யில் வலுவானதுமான அடிப்படைகளில் வளர்ச்சி பெற் றுள்ளது. சிங்கள சமூகத்தைப் பொறுத்தவரை இலங்கை முழுவதும் ஒரு சிங்கள பௌத்த நாடென்ற அடையாளம் நிலைத்திருக்க வேண்டும் என்பதில் எந்த விட்டுக்கொடுப் புக்கும் தயாராக இல்லாத மனோபாவம் தெளிவாக





வெளிப்படுகின்றது. இதனடிப்படையிலேயே அரசியல் அதிகாரத்தை சிறிதேனும் பகிர்ந்தளிக்க விரும்பாத முழுமை யாக தமது ஆதிக்கத்தின்கீழ் வைத்திருக்கும் உறுதிப்பாட் டைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றது. மாறாக தமிழ் அரசியல் சமூகத்தைப் பொறுத்தவரை இலங்கைத் தீவில் தமக்குரிய அடையாளத்தையும் ஆதிபத்தியத்தையும் எந்தவிதத்திலும் விட்டுக்கொடுக்காத மனோபாவத்தை வெளிப்படுத்தி வருகின்றது.

இப்பின்னணியில் இனப்பிரச்சனை தீர்விற்கான சவால் களை நோக்குமிடத்து,

1. சிங்கள அரசியல் சமூகத்திற்கு அரசியல் அதிகா ரத்தை பங்கிடும் விருப்பம் உள்ளதா என்கின்ற சந்தேகத்திற்கு இடமற்ற கேள்வி எழுகின்றது.

2. இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய திட்டம் ஏதும் உரு வாகும் பட்சத்தில் அதனை அரசியல் யாப்பாக்கம் செய்யவும் நடைமுறைப்படுத்தவும் இரண்டு பெரிய கட்சிகளும் இணைந்து செயற்படுமா என்கின்ற கேள்வி எழுகின்றது.

3. அதிகாரப் பகிர்வு அடிப்படையிலான எத்தகைய ஒரு தீர்வையும் பகிரங்கமாகவும் முழுமையாகவும் எதிர்த்து வருகின்ற சிங்கள பௌத்த அதிதீவிர வாத கட்சிகளை எவ்வாறு கையாள்வது என்கின்ற கேள்வி எழுகின்றது.

4. மேற்கண்ட கேள்விகள் பேச்சுவார்த்தையில் இலங்கை அரசின் ஈடுபாடானது தமிழ் அரசியற் சமூகத்தின் வலுவையும் கோரிக்கைகளையும் பல வீனப்படுத்தும் நோக்கமுடையதா அல்லது தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தீர்வினைக் காணவேண்டுமென்கின்ற இதய சுத்தியுடனான அணுகுமுறையா என்கின்ற நியாய மான கேள்வி எழுகின்றது

5. தமிழ் அரசியல் சமூகத்தைப் பொறுத்தவரை குறிப்பாக விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தனிநாடு என்கின்ற அவர்களது அடிப்படையான தும் உறுதியானதுமான நோக்கத்தில் சமரசம் செய்து கொள்ள முன்வருவார்களா என்கின்ற கேள்வி எழு கின்றது.

6. பேச்சுவார்த்தையில் புலிகளின் ஈடுபாடானது தனிநாடு என்கின்ற தனது நோக்கத்தை எய்துவதற் கான ஒரு தந்திரோபாய நடவடிக்கையா அல்லது சிங்கள ஆட்சியின்மீது நம்பிக்கை வைத்து தீர்வு வொன்றினை எட்டுவதற்கான உளப்பூர்வமான அணுகுமுறையா என்னும் அர்த்தமுள்ள கேள்வி எழுகின்றது.

மேற்கண்ட கேள்விகளுக்கு விடைகாணாமல் இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கான எந்த முயற்சியும் எதிர்பார்க் கும் பயனைத் தராது. மேற்கண்ட சவால்களில் சிலவற்றை சமாளிக்கும் முயற்சி முன்னர் எடுக்கப்பட்ட போதும் அவை எதுவும் இதுவரை எந்தப் பயனையும் அளிக்கவில்லை.

## ராஜபக்ச தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்வுத்திட்டம்

இணைந்த வடக்கு - கிழக்கை அலகாகக்கொண்டு மாகாண அரசிற்கென அதிகாரங்கள் பகிரப்பட்டு ஒற்றை யாட்சி முறையின்கீழ் அமைக்கப்பட்ட மாகாணசபை முறையானதும் தோல்வியில் முடிந்தது. இந்நிலையில் இத்தோல்வியை நிவர்த்தி செய்யும் வகையில் சமஷ்டி அடிப் படையிலான தீர்வு என ஆரம்பித்து, பின்னர் படிப்படியாக வெட்டி குறைக்கப்பட்டு, இறுதியில் புதிய வார்த்தைகளுட னான இன்னுமொரு மாகாணசபை முறைமையை சந்திரிகா அரசு அறிவித்தது. தமிழ் மிதவாதிகளே ஏற்றுக்கொள் ளாது கைவிட்ட சந்திரிகாவின் தீர்வுத்திட்டமும் தோல்வி யடைந்த நிலையில், இனப்பிரச்சினையைத் தீர்க்கும் உண்மையான அணுகுமுறையை வெளிப்படுத்த வேண்டு மாயின் ராஜபக்ச அரசு சந்திரிகாவின் தீர்வுத்திட்டத்தை விட மேம்பட்ட ஒருதிட்டத்தினை முன்வைக்க வேண்டி யிருந்தது. இந்நிலையில் விடுதலைப் புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை திட்டத்தில் ஏறத்தாழ ஒரு இணைப்பாட்சியை வலியுறுத்தி தமது தீர்வுத்திட்டத்தைக்





கொடுத்திருந்தனர். ராஜபக்ச அரசு அதனை கருத்திற் கெடுக்கவே இல்லை. மாறாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒற்றையாட்சி முறைக்குள் மாவட்ட சபை என்ற திட்டத்தை வெளியிட்டமையானது தமிழ் மக்களின் அடிப்படையான பிரச்சினைகளை, அவர்களது உணர்வுகளை சிங்கள இன வாத சக்திகள் எந்தளவிற்கு மலினமாகப் பார்க்கின்றனர் என்பதைத் துலாம்பரமாகக் காட்டிநிற்கின்றது.

சனாதிபதி பதவியேற்றுக்கொண்டவுடன் இந்தியா சென்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் இலங்கை யில் தொடர்ந்து நிலவும் இன முரண்பாட்டிற்கு அதிகள விலான அதிகாரப்பகிர்வு அடிப்படையில் அரசியல் தீர்வு காணப்படும் என்று கூறியிருந்தார். இதற்காகத் தாம் அனைத்துக் கட்சிக் கூட்டம், அனைத்துக் கட்சி பிரதி நிதிகள் குழு கூட்டம் ஆகியவற்றை நடத்தவிருப்பதாகவும் இதற்காக ஒரு நிருபுணர் குழுவை அமைத்திருப்பதாகவும் அது அனைத்து சமூகங்களின் பிரதிநிதிகளிடமிருந்தும் அனைத்து கட்சிகளிடமிருந்தும் வரும் தீர்வுத்திட்ட யோசனைகளை ஆராய்ந்து நாட்டின் ஒற்றுமை, ஆள்புல ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையைக் கருத்தில் கொண்டு ஒரு தீர்வுத்திட்டத்தை தயாரிக்கும் எனவும் கூறி யிருந்தார்.

2002 ஆம் ஆண்டு சந்திரிகா சனாதிபதியாக இருந்த சமயத்திலேயே ராஜபக்சவும் பிரதம மந்திரியானார். இக் காலத்தில் சந்திரிகா தனது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுவைக் கூட்டி அதில் முரண்பாட்டைத் தீர்ப்பதற்காகக் கூட்டாட்சி முறையை ஏற்றுக்கொள்வதாக முடிவெடுத்தனர். திலான் பெரேராவும் மங்கள சமரவீரவும் இதனை ஆதரித்தனர். அதன்பிறகு நான்கு வருடங்கள் கழித்து தற்போதைய சனாதிபதி மகிந்த ராஜபக்சேயின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை யில் இயங்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் இருந்து கொண்டே சிறிலங்கா சுந்திரக் கட்சியின் முரண் பாட்டுக்கான தீர்வுப்பொதியாக மாவட்ட சபை முறை யினைக் கொண்டுவர இருப்பதாக அறிவித்ததோடு அதை வல்லுனர் குழுவிடமும் கொடுத்திருந்தனர். இத்திட்ட மானது 1965இல் டட்லி செனநாயக்க - செல்வநாயகம்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒப்பந்தத்தில் முன்வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தாமல் விடப்பட்ட ஒரு திட்டமாகும். சிறிலங்கா சுந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் தாம் ஒருபோதும் கூட்டாட்சிமுறைக்கு ஆதரவளிக்க மாட்டோம் என்றும் கொடுத்த தீர்வுப் பொதியில் கூட்டாட்சி முறைக்கான திருத்தம் கொண்டுவரமாட்டோம் என்றும் முடிவெடுத்திருந்தனர் (Tamilweek.com May 29 2000).

இனி இத்தீர்வுத் திட்டத்தின் மூலம் அரசு உண்மையில் என்ன செய்தியைத் தமிழர்களுக்கும் உலகிற்கும் தெரிவிக்க விரும்புகின்றது என்பது குறித்து சிங்கள அரசியல்வாதிகள், ஆய்வாளர்கள், பத்திரிகையாளர்கள், பொதுமக்கள் ஆகியோரின் விமர்சனங்களை நோக்கலாம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்வுத்திட்டம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி கருத்து தெரிவிக்கையில் இன முரண்பாட்டுத் தீர்விற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்வுத்திட்டத்தில் எந்தத் தீர்வும் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் இதுவரை அதிகாரப்பகிர்வு அலகாக மாகாணமே இருந்தது என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதனைக் குறைத்து அதிகாரப் பகிர்வு அலகாக மாவட்ட சபை யோசனையை முன்வைத்துள்ளது என்றும் இதன் மூலம் இது பின்னோக்கிய நகர்வையே மேற்கொண்டுள்ளது என்றும் இன முரண்பாட்டுத்தீர்வில் இந்த குறைவான மதிப்பீடானது இன சிக்கலை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையை உருவாக்கும் என்றும் கூறியுள்ளது (தினக்குரல், மே 2, 2007). எனினும், ஐக்கிய தேசியக் கட்சி தாம் சமஷ்டி முறையை என்றும் ஆதரித்ததில்லை, ஆதரிக்கமாட்டோம் என்பதையும் திட்டவட்டமாக அண்மையில் தெரிவித்துள்ளமையானது, அவர்கள் ஆட்சிக்கு வந்தாலும் மாகாண சபைக்கு உயிரூட்ட முடியும் என்பதை ஆராய்வதைவிட, அதிக தூரம் செல்லமாட்டார்கள் என்பதும் உணர்த்தப்பட்டுள்ளது. ராஜபக்சவின் தீர்வுத்திட்டம் எதிர்க்கப்பட்டாலும், ஐ.தே.க. அதிகமாக எதனையும் வழங்குமா என்பது கேள்விக்குரியது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீட சிரேஷ்ட விரிவுரையாளர் றோகான் எதிரிசிங்கா இத்தீர்வுப் பொதி பற்றிக் கூறுகையில், "ஒரு தொழிலாளர் குழு தான் உழைத்துக் கொண்டிருக்கும் தனது முதலாளியிடமிருந்து மாதந்தோறும் தாம் பெற்றுவருகின்ற 10,000 ரூபாய் சம்பளம் போதாது அதைவிடக் கூடிய சம்பளம் வேண்டும் என்று கேட்டு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும்போது, அந்த முதலாளி தொழிலாளர்களே உங்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நான் அக்கறையுடன் இருக்கிறேன். தயவு செய்து வேலைக்குப் போங்கள் உங்களுக்கு மாதச் சம்பளம் ஐயாயிரம் ரூபாய் தருகிறேன் என்று சொன்னாராம். அதாவது தொழிலாளர்கள் தாங்கள் இப்போது வாங்கும் சம்பளமே போதாது என்பதற்காகத்தான் போராட்டமே நடத்துகின்றனர். ஆனால் முதலாளி அவர்களது முந்தைய சம்பளத்தில் அரைவாசியைத் தருவதாகக் கூறுகிறார். இதைப்போலத்தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்வுப் பொதியும்" என்கிறார். இந்நிலைமை ஒரு பாரதூரமான பயங்கர முடிவைக் கொண்டுவரலாம் என்றும் இதனால் ஜனநாயகம், நல்ல ஆட்சிமுறை, சுதந்திரமான அரசியல் கட்சிகள், மற்றும் அமைப்புக்கள் ஒரு பயங்கர நிலைமைக்குத் தள்ளப்படலாம் என்றும் கூறுகிறார் (Tamilweek.com May 2007)

தமிழ் மக்கள் கடந்த மூன்று தசாப்தங்களாகப் போராடுவது வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு தமிழர் தாயகத்தை உருவாக்குவதற்காகும். இந்திய - இலங்கை உடன்படிக்கையின் மூலம் அதில் வெற்றியும் கண்டனர். இந்திய - இலங்கை ஒப்பந்தம், இலங்கையிலும் இந்தியாவிலும் சம்பந்தப்பட்ட பலருடனும் வருடக்கணக்கில் கலந்துரையாடி விவாதித்து எடுத்த முடிவின் பலனாகும். 1985ஆம் ஆண்டு திம்புவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் அமைப்புக்களும் பங்குபற்றின. ஒஸ்லோ உடன்படிக்கையிலும் வடக்கு - கிழக்கு இணைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. தமிழ் மக்களின் தாயகபூமியான வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணசபைக்குத் தனது பரிபூரண ஆதரவை வழங்குவதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஸ்தாபகரான M.H.M. அஷ்ரப் அவர்கள் பிரேமதாச கூட்டிய அனைத்துக்கட்சி மாநாட்டில் கூறினார்.

வடக்கு - கிழக்கு இணைந்த தமது பாரம்பரிய பிரதேசத்தை அங்கீகரிக்கக் கோருவதே தமிழ் மக்களின்







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கோரிக்கையாகும். மாவட்டசபை அடிப்படையில் 1980ஆம் ஆண்டுத் துவக்கத்தில் மாவட்ட அபிவிருத்தி சபையை அமைக்க முயன்று அது தோல்வியில் முடிந்ததையும். அதன் பின்னர் 1980இன் நடுப்பகுதியில் மாவட்ட அபிவிருத்தி சபையிலிருந்து முன்னேறி மாகாண சபைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்திக் கொண்டிருப்பதையும் அதன்பின்னர் சந்திரிகாவின் அரசியல் தீர்வுத்திட்டத்தில் இம்மாகாணசபை 1990 நடுப்பகுதியில் மேலும் ஒருபடி முன்னேறி ஒரு மாநிலம் என்ற நிலைமைக்கு வந்தமையும் நாம் பார்க்க முடியும். எனவே கடந்த 25 வருடத்தில் தமிழ் பேசும் மக்களின் தீர்வு விடயத்தில் கொள்கையளவில் ஒரு தொடர்ச்சியான முன்னேற்றம் இருந்தது. முன்பு அதாவது 1947இல் சோல்பரி கமிஷன் விசாரணையின்போது கண்டிச் சிங்களத் தலைவர்கள் இலங்கையை ஒரு கூட்டாட்சி முறைக்குள் கொண்டுவர வேண்டும் என தமது விருப்பத்தைத் தெரிவித்தனர். அதில் அவர்கள் இலங்கையை மூன்று மாநிலங்களாக அல்லது பிரிவுகளாகப் பிரித்தனர். அவையாவன: 1.வடக்கு - கிழக்கு இணைந்த மாநிலம், 2. மலையகப் பகுதிகள் - கண்டி மாநிலம், 3. மேற்கு - தெற்கு இணைந்த கீழ் மாநிலம் (Low counttry) என்பனவாகும். 1957ஆம் ஆண்டின் பண்டா - செல்வா உடன்படிக்கையும் மாநில முறைபற்றியே (Regional Council) கூறுகிறது. இங்கு வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணமே மாநிலமாகக் கருதப்படுகிறது. ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட அனைத்துக்கட்சி வல்லுனர்கள் குழுவின் பெரும்பான்மை அறிக்கை வடக்கு - கிழக்கு இணைப்பை ஆதரிக்கும் அதேவேளை, அதனை ஆதரிக்காத சிறுபான்மை அறிக்கைகளைக் கொடுத்தவர்கள் கூட தனித்தனி மாகாணசபைகளை ஆதரிக்கின்றனர். அறிக்கைகள் கொடுக்காத ஏனைய அனைத்துக்கட்சி வல்லுனர்களும் மாகாணசபை முறையையே ஆதரிக்கின்றனர். இவர்கள் யாவரும் சிங்கள இனத்தவர்களே (பெரும்பான்மை அறிக்கையில் உள்ள ஐவரைத் தவிர்த்து).

1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை உடன்படிக்கையின் பின்னர் மாகாணங்களை அடிப்படையாக வைத்து மாகாணசபைகள் அமைக்கப்பட்டன. அப்போது வடக்கு - கிழக்கு தமிழர்களின் இணைந்த பூர்வீகத் தாயகமாகவே





கருதப்பட்டு வடக்கு - கிழக்கு மாகாணம் நிர்வகிக்கப்பட்டது. 18மாதங்கள் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமையில் கூட்டாட்சி ஒன்று அங்கு நடத்தப்பட்டது. இந்த மாகாணசபைமுறை ஜே.ஆர்.ஜயவர்த்தன காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து வந்த சனாதிபதிகளான பிரேமதாச, விஜயதுங்க, சந்திரிகா குமாரதுங்க ஆகியோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் வடக்கு - கிழக்கில் தொடர்ந்து யுத்தம் நடந்துகொண்டே இருந்தது. 1990 இல் இந்திய அமைதிப் படையினர் நாடுதிரும்பிய பின்னர் அங்கு மாகாணசபை நிர்வாகம் மக்கள் பிரதிநிதிகளால் நடத்தப்படாமல் அரச நிர்வாகிகளினாலேயே நிர்வகிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான சனாதிபதி மகிந்த ராஜபக்ச இனமுரண்பாட்டுக்கான தனது தீர்வாக மாவட்ட அபிவிருத்தி சபைத் திட்டத்தை 2007 இல் முன்வைத்தார். இதில் தற்போதைய 25 மாவட்டங்களை 30 மாவட்டங்களாக விஸ்தரிக்க இருப்பதாகவும் கூறியுள்ளார். இவர்கள் கடந்த 60 வருடங்களாகத் தமிழ் பேசும் மக்கள் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருப்பதையோ, கடந்த கால வரலாறுகளையோ உணராதவர்களாகவே தமது மாவட்ட அபிவிருத்தி சபை தீர்வுத்திட்டத்தைக் கொடுத்துள்ளனர். இவர்களின் இந் நடவடிக்கை இனப்பிரச்சனையைச் சிறுமைப்படுத்துவதாக அமைகிறது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானப் பீடத்தின் தலைவராகிய ஜெயதேவா உயாங்கொட அவர்களது கருத்தும் இதனையே வலியுறுத்துகின்றது. 2007 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி 'The Nation' என்ற ஞாயிற்றுக்கிழமைகளில் வெளிவரும் ஆங்கில ஏட்டில் "இத்தீர்வுத் திட்டம் சிங்கள ஆளும் வர்க்கத்தினரால் சிங்கள இனத்தவர்களுக்கு வழங்கப்பட்ட தீர்வாகும் என்றும் அத்துடன் மானமுள்ள எந்தவொரு சிறுபான்மையினரும் இத்தீர்வுத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும் கூறியிருந்தார். அவர் மேலும், இத்தீர்வுத் திட்டம் ஆளும் அரசாங்கத்தில் உள்ள முக்கிய கட்சியால் எந்தவித சிந்தனையுமின்றி கடந்த 20 வருடத்துக்கும் மேலான இன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முரண்டபாட்டைக் கண்டுகொள்ளாத அசட்டை செய்யும் மனோநிலையாகும்" என்றும் தெரிவித்திருந்தார்.

இதேபோன்றே ஏப்ரல் 29 - மே 2007 தேதியிட்ட Tamilweek.com என்ற இணையத்தள வாரசஞ்சிகையில் பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரான சுமணசிறி லியனகே அவர்கள் இத்தீர்வுத்திட்டம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், "காலகட்டத்துக்கு ஏற்றது அல்ல என்றும், இருக்கிற இன முரண்பாட்டைத் தீர்க்கக் கூடிய அளவுக்கோ இதுவரை நடந்துமுடிந்த தீர்வுத் திட்டங்கட்கு ஏற்றதாகவோ இல்லை என்றும், இத்தகைய தீர்வுத்திட்டம் தமிழீழ விடுதலைப் புலிகள் தனிநாடு கேட்பதை நியாயப்படுத்துகிறது" என்றும் கூறியுள்ளார்.

Daily Mirror என்னும் ஆங்கில தினசரியின் மே 7, 2007 இதழில் அதன் ஆசிரியர் தலையங்கத்தில் இத் தீர்வுத் திட்டம் குறித்து, ஒரு ஆழமான நம்பிக்கையீனத்தையும், இரு இனங்களும் இணையவே முடியாத இரு துருவங்கள் என்னும் அளவிற்கு முரண்பாடு முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் இது இன ஒற்றுமைக்கு உதவாது பிரித்து வைத்திருக்கவே உதவுகிறது என்றும், பிரிந்துபோய் இருக்கிற இரு இனங்களையும் ஒரு பல்லின மக்கள் வாழும் நாடாக மாற்றக்கூடியதாக இருக்கவில்லை என்றும் கூறுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களுள் ஒருவரான எஸ்.பி.திஸநாயக இதுபற்றிக் கூறுகையில், "சனாதிபதிக்கு அரசியல் தீர்வில் நாட்டமில்லை. யுத்தத்தையே விரும்புகிறார் என்பதை இது நன்கு புலப்படுத்துகிறது. அது மட்டுமன்றி ஒற்றையாட்சியின் கீழ் தீர்வுத்திட்டத்தை வைக்க வலியுறுத்தும் ஜனதாவிமுக்தி பெரமுனவும், ஜாதிக ஹெல உருமயவும் 13ஆவது சட்டத் திருத்தத்தின் பின்னர் மாகாண சபை ஆட்சிகள் ஆரம்பமானதுடன் ஒற்றையாட்சி முறையே இல்லாமல் போய்விட்டது என்பதை மறந்து கூச்சலிடுகின்றனர் என்றும் இவர்கள் அனைவருக்கும் சமாதானத்தை விட யுத்தமே தேவைப்படுகின்றது" என்றும் கூறுகிறார்.

மாற்றுக்கொள்கை மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து இத்தீர்வுத் திட்டம் குறித்துக் குறிப்பிடுகையில், "மாவட்டசபை, கிராமராஜ்யம் ஆகியவற்றிலிருந்து செனற் மற்றும் அமைக்கப்படவுள்ள நிர்வாகக்குழு என்பதெல்லாம் மத்தியில் அதிகாரத்தைக் குவித்துவைத்திருக்கும் ஒற்றையாட்சிமுறையைக் கருத்தற் கொண்டே செயல்படுவதாகத் தெளிவாகத் தெரிகின்றது". "உண்மையில் இத்தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும்போது, அவர்களது எண்ணம் தாம் இராணுவ வெற்றியடைந்து விடுவோம் என்பதால் ராஜபக்ச அரசு அவர்களது பார்வையில் சரியாக நேர்மையாகச் செயல்படுவதாகவே உணர்ந்துள்ளனர்" என்று அவர் மேலும் கூறுகின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ பிரிவு பேச்சாளரான இளந்திரையன் தென்னிலங்கைத் தலைவர்கள் இராணுவ முன்னெடுப்புத் திட்டங்களை நோக்கமாகக் கொண்டு முன்வைக்கின்ற இதுபோன்ற உத்தேசத் தீர்வுத் திட்டங்களைக் கணக்கில்கூட எடுக்க மாட்டோம் என்று தெரிவித்திருந்தார் (தினக்குரல் 2 மே 2007). தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA) சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் முன்வைக்கப்பட்டுள்ள இத்தீர்வு யோசனைகள் ஆராய்வதற்கான எந்தவொரு தகுதியுமற்றவை என்று கூறியுள்ளது (தினக்குரல்: மே 2007). இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில், "சனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தலைமையிலான அரசாங்கம் நாட்டின் மிகப்பிரதானமான இன நெருக்கடித் தீர்வு முயற்சிகள் தொடர்பில் எந்தவொரு தரப்பினராலும் பரிசீலிக்க அருகதையற்ற இந்த யோசனைகளை முன்வைத்தமையானது யுத்தத்தின் மூலம்' தீர்வு காண்பதற்கான சனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நிகழ்ச்சிநிரல்களையே தெளிவாக வெளிக்காட்டி நிற்கிறது" என்கிறார் (தினக்குரல் 2மே, 2007).

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையின் மே 4 2007 இதழ், "தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான யோசனை என்ற பெயரில் ஆளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள திட்டம் தமிழர் தரப்பை மட்டுமல்ல, இலங்கை விவகாரத்தை ஆழ உற்று நோக்கும் பக்கசார்பற்ற பார்வையாளர்களையும் சர்வதேச சமூகத்தையும்கூட அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளது.







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கையிலிருந்து வெளிவரும் தமிழ்த் தினசரியான வீரகேசரி, அரசாங்கத்தின் இத்தீர்வுத் திட்டம் பற்றி குறிப்பிடுகையில், "இத்தீர்வுத் திட்டமானது சர்வதேசத் தையும் ஒட்டுமொத்தமான தமிழ் சமூகத்தையும் ஏமாற்றி யுள்ளது என்பதைத் தெளிவாக அறியமுடியும்" என்று கூறியுள்ளது (வீரகேசரி 2மே 2007).

சர்வதேச நாடுகளான அமெரிக்கா மற்றும் இந்தியா குறிப்பாக அமெரிக்கப் பிரதிநிதி புச்சரும் இந்திய அரசாங் கமும், தீர்வுத்திட்டமானது 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் அரசியல் தீர்வுத்திட்டத்தைவிடக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதுடன் அரசாங்கத்தின் உண்மையான மனப்பூர்வமான தீர்வுத்திட்டமென சர்வதேச நாடுகள் குறிப்பிடக்கூடியதாக இருக்க வேண்டும் என்று கூறியுள்ள னர் (Tamilweek.com மே 11/ 2007). இவை இனப்பிரச் சினை விடயத்தில் சர்வதேச சமூகத்தின் ஓரளவான விழிப் புணர்வை வெளிப்படுத்துவதாக உள்ளன.

## சர்வகட்சி பிரதிநிதிகள் குழு:

சிறிலங்கா அரசாங்கம் இராணுவத் தீர்வில் முனைப் பாக இருந்தபோதிலும் இந்தியாவும், சர்வதேச சமூகமும் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்கும்படி இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்திவந்தனர். ஆளும் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சனாதிபதி அவர்களும் எவ்வாறான தீர்வுத்திட் டத்தை விரும்புகிறார்கள் என்பதை மேலே பார்த்தோம். ஆனாலும் சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்துவதற் காகவும் யுத்தம் ஒன்றை நடாத்துவதற்கான நேரத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும் ஓர் அரசியல் தீர்வில் அக்கறை இருப்பதாகக் காட்டவேண்டியிருந்தது. அதனை நிறை வேற்றுவதற்கும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு ஒன்றை அமைத்து அதனூடாக ஒரு தீர்வுத்திட்டத்தை வடிவமைக்கப் போவதாக சனாதிபதி அவர்கள் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து சிங்கள கட்சிகளின் ஒருமித்த கருத்துக்களைப் பெற்றுக்கொண்டு தமிழ்க் கட்சிகளுடன் அடுத்த கட்டமாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தலாம் எனத் தீர்மானித்தார். இதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு





அழைக்கப்படவில்லை. ஏனெனில், ஏனையோர் மத்தியில் ஓர் உடன்பாடு வந்தபின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப் புடனும் விடுதலைப் புலிகளுடனும் இறுதியில் பேசப்படும் என அதற்கு விளக்கமளிக்கப்பட்டது. சனாதிபதி அதிகாரத் திற்கு வந்து இரண்டுவருடங்கள் முடிந்துவிட்ட நிலையிலும் இதுவரை தீர்வுத்திட்டம் இன்னமும் முழுமை பெறவில்லை. பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் தீர்வுத்திட்டத்தை வெளி யிடுவதற்கான திகதிகள் குறிக்கப்பட்டும்கூட அவை மீண் டும் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டே வருகின்றது. இந்த சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற் காகவும் தீர்வுத்திட்டத்தை சரியாக உருவாக்குவதற்காக வும் பதினாறுபேர் கொண்ட நிபுணர் குழுவும் அமைக்கப் பட்டது.

இதில் பதினொரு சிங்கள புத்த ஜீவிகளும், நான்கு தமிழ் புத்திஜீவிகளும் ஒரு முஸ்லிம் புத்திஜீவியும் அடங்கு வர். இதில் ஆறு சிங்களவர், நான்கு தமிழர், ஒரு முஸ்லிம் உட்பட பதினொரு பேர் (நிபுணர்கள் குழுவில் பெரும் பான்மையோர்) ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைத்தனர். இத்தீர்வுத்திட்டமானது முழுமையானதாக இல்லாமல் இருந்தபோதிலும்கூட பேச்சுவார்த்தைக்கான ஓர் அடிப் படையாக இதனைக் கொள்ளமுடியும் என சர்வதேச சமூகம் கூறியது. அதுமாத்திரமல்லாமல் உருவாக்கப்பட்ட தீர்வுத்திட்டங்களில் இது பேச்சுவார்த்தையை ஆரம்பிப் பதற்கு ஒரு சிறப்பான அடித்தளத்தைக் கொண்டுள்ளதென தமிழ் புத்திஜீவிகளும் தங்களது கருத்துக்களைத் தெரிவித் திருந்தனர். ஆனால், சனாதிபதி அவர்கள் இதனை உடனடி யாகவே நிராகரித்தார். அத்தீர்வுத்திட்டமனாது சமஷ்டி அரசியல்முறையைப் பற்றிப் பேசுவதாகவும், தமிழ் மக்களுக் கான ஒரு சுயாட்சி பற்றிப் பேசுவதாகவும் ஆளும் தரப்பி லிருந்து தெரிவிக்கப்பட்டது. இதிலிருந்து ஒருவிடயத்தை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடிகிறது. அதாவது சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவானது ஒற்றையாட்சிமுறைக்கு மேலதிகமாக ஒரு தீர்வுத்திட்டத்தை முன்மொழியுமாயின் அதுவும் சனாதிபதியால் நிராகரிக்கப்படலாம் என்பதை நாம் நம்பலாம். இவ்வகையில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு என்பது சர்வதேச சமூகத்தை சமாளிப்பதற்காகவும் போரை நீட்டிப்பதற்கான ஒரு காலஅவகாசத்தைப் பெற்றுக்கொள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வதற்காகவுமே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பது புலனாகிறது.

## பேச்சுவார்த்தைகள்:

ஜே.வி.பி. ஜே.எச்.யு போன்ற சிங்கள பௌத்த அதி தீவிர வாதக் குழுக்களின் ஆதரவுடனும் ஒப்பந்தங்களுடனும் 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பதவிக்கு வந்த சனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுக்கு மீண்டும் யுத்தத்தைத் தொடர்வதற்கான நிர்ப்பதந்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. மிகவும் கடும்போக்காளர்களான சரத்பொன்சேகாவை இராணுவத் தளபதியாக நியமித்ததும், முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபரான கொட்டகதெனியாவை தனது பாதுகாப்பு ஆலோசகராக நியமித்ததும், இராணுவத்தில் இருந்து விலகி அமெரிக்காவில் வாழ்ந்த தனது சகோதரர் கோத்தபாய ராஜபக்சவை பாதுகாப்புச் செயலாளராக் கியதும் சனாதிபதியின் கடும்போக்கையும் யுத்தத்தின்மேல் அவர் கொண்டிருந்த பற்றுறுதியையும் தெளிவாகக் காட்டு கின்றது.

இந்தப் பின்னணியில் சிறிலங்கா இராணுவம் தமிழீழ விடுதலைப் புலிகளின் சனநாயக பூர்வ செயற்பாடுகளின் மீது தடைகளை ஏற்படுத்தியதுடன் அரச வன்முறைகளை யும் ஆரம்பித்தது. 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விடுதலைப் புலிகளால் ஆரம்பித்துவைக்கப்பட்ட மாவீரர் தினக் கொண்டாட்ட நிகழ்வுகளின்போது விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் இன்னொருவர் பலத்த காயத்துக்கும் உள்ளாகினார். இத னைத் தொடர்ந்து புலிகளும் பதில் தாக்குதல்களை நடத் தினர். இவ்வாறு ஏற்பட்ட மோதல்கள் இரு பகுதியினருக்கு மிடையில் இருந்த நம்பிக்கையின்மையைக் கடுமைப்படுத் தியதுடன், முரண்பாட்டையும், கடும்போக்கையும் 2006 இலும் தொடரவைத்தது. இதனால் இருதரப்பினருக்கிடை யில் சற்று ஓய்ந்திருந்த யுத்தம் மீண்டும் தலைகாட்டத் தொடங்கியது. இந்நிலையில்தான் நோர்வேயின் அனு சரணையுடன் இருபகுதியினரும் முதற்கட்டமாக ஜெனி வாவில் பெப்ருவரி 19 - 2 - 2006 இலும் பின்னர் ஒக்ரோபர் மாதம் 28 -29 ஆகிய நாட்களில் இரண்டாம் கட்டமாகவும் நேருக்குநேர் பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.





கடந்த 2003 மார்ச் மாதத்திலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடனான நேரடிப் பேச்சுவார்த்தை களை நிறுத்திவைத்திருந்தமை இங்கு முக்கியமாகக் கவனிக் கத்தக்கது. இதனால் போர்நிறுத்த உடன்படிக்கை நடை முறையில் இருந்தபோதிலும் அது பயனற்றநிலையிலேயே இருந்தது.

ஜெனிவாவில் முதற்கட்ட பேச்சுவார்த்தைகள் இடம் பெற்ற வேளையில் இருபகுதியினருக்குமிடையிலான உறவு மோசமான நிலையிலேயே இருந்தது. இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையின்போது பளை, முகமாலை பகுதியில் கடுமையான யுத்தம் நடந்துகொண்டிருந்தது. இப்பேச்சு வார்த்தைகட்கு முன்பும், பேச்சுவார்த்தை நடைபெற்ற வேளையிலும், அதன் பின்னரும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

போர்நிறுத்த ஒப்பத்தத்தைத் தொடர்ந்து. சமாதான நடவடிக்கைகள் குறித்து பேசுவதற்கும், சமாதானத்திற் கான நம்பிக்கைகளைக் கட்டியெழுப்புவதற்கான பேச்சு வார்த்தைகளை நடத்தவும் என பல்வேறுபட்ட நாடுகளும் ஐ.நா. அமைப்புக்களினது பிரதிநிதிகளும் கிளிநொச்சியி லுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்திற்கு அடிக்கடி விஜயம் செய்து அவர்களின் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவது சாதாரண நிகழ்வாக இருந் தது. இது முரண்பாட்டின் முக்கிய பங்காளிகளில் ஒரு தரப்புடனான அவசிய சந்திப்பாக இருந்தபோதிலும்கூட இன்னொரு வகையில் விடுதலைப் புலிகளுக்கு ஏறத்தாழ அரசிற்குச் சமமான அங்கீகாரத்தைக் கொடுக்கும் தோற்றம் உடையதாகவும் இருந்தது. சிங்கள இனவாதப் பிரிவின ரைப் பொறுத்தவரை (அரசு, ஜே.வி.பி., ஜே.எச்.யு.) இத் தகைய நடவடிக்கைகள் தமிழர்களின் இறையாண்மையை யும் புலிகளின் தலைமைத்துவத்தையும் அங்கீகரிக்கும் செயலாகும் என்ற நோக்கத்தைக் கொண்டிருந்தனர். தாம் பயங்கரவாதிகள் எனக் குறிப்பிடுவோரை அழிக்க நினைப் போரை சர்வதேச சமூகம் பேச்சுவார்த்தை விடயத்தில் அரசிற்குச் சமமாகப் பாவிப்பதை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதனால் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு வரமுடியாது என்று சொல்லுமளவிற்கு அவர்களைச் சிறுமைப்படுத்தி ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தனர். அவர்களின் பாதுகாப்பானதும் விரைவானதுமான நடமாட்டத்திற்கு வழங்கிவந்த இராணுவப் பாதுகாப்பை இடைநிறுத்தினர் அவர்களுக்கு பேச்சுவார்த்தை விடயத்தில் அவசியமேற்படுகின்றபோது புலிகளுக்குள் சந்திப்பை ஏற்படுத்திக்கொள்வதற்கு வழங்கிவந்த உலங்கு வானூர்தி சேவைகளையும் நிறுத்தினர். இதன் மூலம் அரசு காலத்தைக் கடத்தியதுடன். விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு ஆதரவானவர்கள் அல்ல என்ற கருத்தையும் சர்வதேச சமூகத்திற்குக் கொண்டுசெல்ல முயன்றனர். இத்தகைய பின்னணியிலேயே முதற்கட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

ஜெனிவாவில் இடம்பெற்ற முதற்கட்ட பேச்சுவார்த்தையின்போது போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கண்டுள்ளபடி சமாதானத்தைக் கொண்டுவர முயன்றனர். இதன்படி இராணுவத்திற்கு எதிரான தொடர்ந்த தாக்குதல்களை நிறுத்திக்கொள்வதாக விடுதலைப் புலிகளும், துணை இராணுவப் படைகளாகச் செயற்பட்ட ஒட்டுக்குழுக்களை நிராயுதபாணிகளாக்குவதாக அரசு தரப்பினரும் தெரிவித்தனர். இது கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதே தவிர தாக்குதல்களை நிறுத்துவதற்கான காலவரையறை ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை. இதனால் அரசு தனது முதலாவது ஜெனிவா வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டு கருணா குழுவினரையும் ஏனைய குழுக்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்குப் பயன்படுத்துவதற்காக அவற்றை வலுப்படுத்தியது. எனவே இருபகுதியினரும் முதற்கட்ட ஜெனிவா பேச்சுவார்த்தையில் பெயரளவில் சமாதனத்தை நோக்கிப் போவதாகக் கூறினாலும், நடைமுறையில் அவர்கள் அதை கடைப்பிடிக்கவில்லை என்பதுதான் உண்மைநிலை. இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவில் அடுத்த இரண்டு மாதத்திற்குள் மீண்டும் ஜெனிவாவில் சந்திப்பதாக முடிவெடுத்தனர்.

சனாதிபதி போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு எதிராகப் பிரச்சாரம் செய்தார். மறுபுறத்தில் தமிழீழ விடுதலைப்





புலிகள் தாங்கள் ஜெனிவாவில் இடம் பெற்ற முதற்கட்ட பேச்சுவார்த்தையின்போது அளித்த வாக்குறுதியைக் காப்பாற்றும் பொருட்டு இராணுவத்திற்கெதிரான தமது தாக்குதல்களை குறைத்திருந்தனர். அரசு முதற்கட்ட ஜெனிவா பேச்சுவார்தையில் தான் ஒப்புக்கொண்டவற்றை நிறைவேற்றாததால் அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்கான நேரம் நிர்ணயிக்கப்படாமல் காலம் தாழ்த்தப்பட்டது. இரு தரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் குற்றம்சாட்டியபடியே காலத்தை இழுத்தடித்தனர். முதற்கட்ட ஜெனிவா பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட முடிவுகளை நிரைவேற்றினால் தான் இரண்டாம் கட்ட ஜெனிவா பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள முடியும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் திட்டவட்டமாக அறிவித்தனர். ஆனால் அரசதரப்பினர் அதைப்பற்றி எந்த கருத்தையும் வெளியிடாமல் நேரடியாக அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்குப் போகச் சம்மதிப்பதாகக் கூறினர். முதற்கட்ட ஜெனிவா பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்டவைகளைக் கூட நிறைவேற்றாத நிலையில் ஜெனிவாவில் நடைபெற்ற இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைதயின் போது இருதரப்பினரும் பாரிய தாக்குதல்களை நடத்துவதில்லை என்று கொள்கையளவில் எற்றுக்கொண்டனர் இதன்மூலம் முதற்கட்ட ஜெனிவா அமைதிப் பேர்ச்சுவார்த்தைகளில் எட்டப்பட்டவற்றை நடைமுறைப்படுத்தவில்லை என்பதை மறைமுகமாக ஏற்றுக்கொண்டனர்.

## ஜெனிவா முதற்கட்டப் பேச்சுவார்த்தை

ஜெனிவாவின் முதற்கட்டப் பேச்சுவார்த்தை 2006 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 19 - 22 ஆம் திகதிவரை நடைபெற்றது. அத்தருணத்தில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு சர்வதேச நாடுகளாலும் கூட்டுத்தலைமை நாடுகளாலும். இணைத்தலைமை நாடுகளாலும் போரை நிறுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது மறுபுறத்தில் விடுதலைப் புலிகளும் அரசுக்கு எதிரான பாரிய அளவிலான யுத்தத்தை நடத்தக் கூடிய போர்த்தந்திர நிலையிலும் இருக்கவில்லை. இவ்வேளையில் சிறிலங்கா அரசாங்கம் கிழக்குமாகாணத்தில் ஓரளவு வெற்றிகளைப் பெற்று முன்னேறிக்கொண்டிருந்தது. இதை வெளிநாட்டுத் தலைமைகளும் வரவேற்றிருந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த முதலாவது ஜெனிவா பேச்சுவார்த்தையானது ஜெனிவாவிலிருந்து 20 மைல் தொலைவில் உள்ள சிலிக்னி என்ற இடத்தில் நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மாற்றாமல் வைத்திருப்பதிலும் அதை அரச தரப்பினர் ஏற்கவைப்பதிலும் வெற்றி பெற்றனர். இந்த பேச்சுவார்த்தையில் அரச தரப்பில் கூடுதலான ஆலோசகர்கள், சட்டவல்லுனர்கள், அரச பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். பேச்சுவார்த்தைக்கு முன்னர் இவர்களுக்குப் பேச்சுவார்த்தையில் எழக்கூடிய விடயங்கள் தொடர்பாகவும் அவற்றை எவ்வாறு கையாள்வது என்பது பற்றியும் வல்லுநர்களால் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. அரசசார்பான ஊடகவியலாளர்கள் அரசிற்கு முழுமையான ஆதரவை வழங்கினர் இருந்த போதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வாதத்தில் அரசு தோற்றுவிட்டதாகவே கூறவேண்டும். ஏனெனில் ஒப்புக்கொண்ட எவற்றையும் அரசால் நடைமுறைப்படுத்த முடியாமையானது சமாதானம் தொடர்பான அரசின் உண்மையான தோற்றத்தை வெளிக்காட்டியது.

ஒருபக்கத்தில் ஜெனிவாவில் பேசிக்கொண்டு மறுபுறத்தில் சிறிலங்காவின் முப்படைகளையும் பாவித்து வடக்கு - கிழக்கில் தாக்குதல்களைத் தொடுத்து, விடுதலைப் புலிகளைப் போர்க்களத்தில் பலவீனப்படுத்தி, தமது பிரச்சார ஊட்கங்களை முடுக்கிவிட்டு விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாகச் சித்திரித்துப் பிரச்சாரம் செய்வதுடன், மந்திரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி ஈழப்போராட்டத்தை ஒரு பயங்கரவாதப் போராட்டமாகப் பிரச்சாரம் செய்ய வைப்பதே அரசின் தந்திரோபயமாக இருந்தது. மறுபுறத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தந்திரோபாயமானது நடைமுறையில் இருக்கும் போர்நிறுத்த உடன்பாட்டில் எதுவித மாற்றமுமின்றி அதை நடைமுறைப்படுத்தும் படிகோருவதாக இருந்தது.

அரசுப் பிரதிநிதிகளின் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா கூறியதாவது, ‘அரசாங்கம் இரண்டு காரணங்களை முன்வைத்துப் போர்நிறுத்த உடன்படிக்கையில் மாற்றம் கொண்டுவரவேண்டும் என்கின்றது. அதாவது





முதலாவதாக போர்நிறுத்த உடன்படிக்கையானது சட்டத்திற்கு எதிரானது என்பதாலும் இரண்டாவதாக அத்தகைய உடன்படிக்கையில் சகல அதிகாரங்களும் உடைய சனாதிபதியே அரசாங்க தரப்பில் கையொப்பமிட்டிருக்க வேண்டும்’ என்றும் கூறியிருந்தார்.

இதற்கு நோர்வே தரப்பில் அனுசரணையாளராகச் செயல்பட்ட எரிக்சொல்கெய்ம் பதிலளிக்கையில் இவ்வுடன்படிக்கையில் நாட்டின் பிரதமர் கையொப்பமிட்டுள்ளதால் இது செல்லுபடியாகும் என்று கூறினார். அதுமட்டுமன்றி சந்திரிகாவோ அல்லது அதன் பிறகு வந்த மகிந்தாவோ அதனை ரத்து செய்யவில்லை என்றும் சுட்டிக்காட்டினார். இந்த உடன்படிக்கை சனாதிபதிகளால் ஏற்றுக்கொள்வதாகவே இருக்கிறது என்று அரசாங்கப் பிரதிநிதிகளுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டது. இறுதியில் இதனை சனாதிபதி மகிந்தவும் அவரது பிரதிநிதிகளும் ஏற்றுக்கொண்டனர். எனினும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதிலிருந்து 2006 சனவரிவரை புலிகள் 3519 யுத்தநிறுத்த மீறல்களையும் அரசு 169 மீறல்களையும் செய்திருப்பதாக அமைச்சர் நிமல்சிறிபாலடி சில்வா கூறினர்.

இதன் தொடர்ச்சியாக தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதி பாலசிங்கம் போர்நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது குறித்த விடயத்திற்கு வந்தார். அப்பொழுது அவர் போர்நிறுத்த உடன்படிக்கையில் உள்ள அம்சங்களைத் தாங்கள் தொடர்ந்து கடைப்பிடிப்போம் என்று ஒப்புக்கொண்டதுடன் குறிப்பாக அரச படைகட்கும் பொலிஸ்படைக்கும் எதிராக தாம் தாக்குதல்களை நிறுத்திக்கொள்வதாகவும் கூறினார். அத்துடன் சிறுவர் சிறுமிகளை தமது இராணுவத்தில் சேர்த்துக்கொள்வதை நிறுத்துவதாகவும் கூறினார். மறுபுறம் யுத்த நிறுத்த உடன்படிக்கையின் 1.8 சரத்தின்படி ஒட்டுப்படைகளை நிராயுதபாணிகளாக்கும் வேலையை அரசாங்கம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டது இதன்கருத்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனி (பெருமாள்). தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகியவற்றுடன் தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்து பிரிந்து சென்று தமிழீழ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்கள் விடுதலைப் புலிகள் என்ற அமைப்பை ஆரம்பித்த கருணா குழு ஆகியோரிடமிருந்து ஆயுதங்களைக் களைய வேண்டும் என்பதாகும். இக்கோரிக்கையை அரசுப்பிரதி நிதிகள் ஏற்றுக்கொண்ட போதிலும் கொழும்பு திரும்பியதும் அதை நடைமுறைப்படுத்தாது தொடர்ந்து கருணா குழுவினரை வலுவேற்றி கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபடுத்தி வருகின்றனர். அரசாங்கத்தின் இச்செயல் இன்னமும் பெரிய அளவிலான யுத்த நிறுத்த மீறலாக சர்வதேச சமூகத்தால் பார்க்கப்படுகின்றது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் 1.8 சரத்தானது உடன்படிக்கை கைச்சாத்தான ஒரு மாதத்திற்குள் அரசாங்கம் ஒட்டுக்குழுக்களை நிராயுதபாணிகளாக்க வேண்டும் அப்படி இல்லாத பட்சத்தில் அவர்களை வடக்கு - கிழக்கிற்கு வெளியில் எடுத்து அரச இராணுவத்தின் ஒரு பகுதியாக வைத்திருக்க வேண்டும் என்று கூறுகிறது. இலங்கை அரசு இதனைச் செய்யவில்லை.

பேச்சுவார்த்தைக்கான உறுப்பினர்கள் பற்றிய விடயத்திலேயே இலங்கை அரசு திடமான நிலைப்பாட்டில் இருக்கவில்லை. கடைசி நிமிடம் வரை உறுப்பினர்களைப் புதிதாக இணைத்தனர். எனவே இவ்வெண்ணிக்கை தொடர்பாக இரு தரப்பினருக்குமிடையில் உரிய தகவல் பரிமாற்றங்கள் இடம் பெறவில்லை. இதனால் இறுதியாக சென்ற குழுவில் அரசதரப்பில் ஏழு பிரதிநிதிகளும் அவர்களுக்கு உதவுதற்காக ஏழு நபர்களும் என பதின்நான்கு பேர் கொண்ட குழுவினர் கலந்துகொண்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளில் சார்பில் ஆறு பிரதிநிதிகளும் இரண்டு ஆதரவுப் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். இந்நிலையில் அரசு தரப்பு தமது பக்கத்தில் உள்ள பிரதிநிதிகளைக் குறைக்க முடியாது என்றும் வேண்டுமானால் விடுதலைப் புலிகளைப் தரப்பில் பிரதிநிதிகளை கூட்டிக்கொள்ளட்டும் என்றும் கூறியது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளை பொறுத்தவரை ஜெனிவாவில் அப்படிப்பட்ட பிரதிநிதிகள் யாரும் இல்லை இதனால் ஆதரவாளர்கள் அல்லது பார்வையாளர்களாக வந்த எட்டுப்பேர் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கு ஆதரவாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்களில்





படைப்பிடிப்பாளர் மற்றும் சு.ப.தமிழ்ச்செல்வனின் உதவியாளரும் அடங்குவர். இத்தகைய ஓர் மாற்றம் என்பது அரசு தரப்பினருக்கு சங்கடத்தை ஏற்படுத்தியது.

முதற்கட்ட ஜெனிவா பேச்சுவார்த்தையில் போர் நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது பற்றியே தமிழீழ விடுதலைப் புலிகளினால் முக்கியமாக விவாதிக்கப்பட்டது. அரசாங்கம் போர்நிறுத்த உடன்படிக்கையில் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்பதிலேயே அதிக கவனம் செலுத்தியது.

பாலசிங்கம் கூறும்போது. "அரசு தரப்பினர் தமக்குச் சாதகமான ஒட்டுப்படைகளின் தாக்குதல்களை அதாவது அவர்களினால் செய்யப்பட்ட கொலைகள், அரசியற் கொலைகள், ஆட்கடத்தல்கள், மக்களைத் துன்புறுத்தல், கட்டாய பணம் வசூலித்தல் அடித்தல், சித்திரவதை செய்தல், கட்டாயமாகக் கடத்திச்சென்று தமது படைகளில் சேர்த்தல் போன்ற செயல்களை அரசும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் கணக்கில் எடுக்கவில்லையா?" என்று கேள்வி எழுப்பினார். அத்துடன் இந்த ஒட்டுப்படை செய்தவற்றையெல்லாம் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரில் பதியப்பட்டுள்ளதாகவும் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்தார்.

அரச பிரதிநிதிகளின் சட்ட ஆலோசகர் எச். எல். டி சில்வா இந்த ஒட்டுக்குழுக்கள் என்பது யுத்த நிறுத்த உடன்படிக்கைக்குப் பின் வந்தவை அல்லது யுத்த நிறுத்த உடன்படிக்கை வந்ததனால் வந்தவை அதனால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 1.8 பிரிவு அவற்றிற்குப் பொருந்தாது என்று வாதிட்டார்.

அவரது வாதத்திற்குப் பதிலளித்த பாலசிங்கம். "நாம் பாராளுமன்றத்திற்கு அப்பாற்பட்ட விடுதலை அமைப்பு இது எங்கள் அரசியல் விவகாரத்தை வைப்பதற்குரிய தளமே தவிர, ஒரு சட்டமன்றமல்ல" என்றும் "நாம் அரசின் சட்ட வாதங்களை ஏற்கப்போவதில்லை என்றும் அத்துடன் இவ்வொட்டுக் குழுக்களில் கருணா குழுவானது தமிழீழ விடுதலைப் புலிகளிலிருந்து உருவானது இது எப்படி இயங்குகின்றது என்பது எமக்குத் தெரியும் என்றும், இத





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



னடிப்படையில் யுத்த நிறுத்த உடன்படிக்கையின் 1.8 சரத் தின்படி அரசு அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். இதற்கு ஒட்டுக் குழுக்கள் உருவான காலம் எப்போது என்ற காலவரையறை கதைக்கு இங்கு இடம் கிடையாது" என்றும் வாதிட்டார்.

சிறுவர்களுக்குக் கட்டாயப் போர்ப்பயிற்சி அளிப்பது குறித்து தமிழ்ச் செல்வன் கூறுகையில் "நாங்கள் அவர் களுக்கு இராணுவப்பயிற்சி அளிக்கவில்லை மாறாக அவர் களுக்குத் தற்காப்பு பயிற்சியே கொடுத்தோம்" என்றார் இதில் பாலசிங்கம் குறுக்கிட்டு, சிறுவர்களுக்கு இராணுவப் பறிற்சி அளிப்பது யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறுவது என்று யுத்த நிறுத்த உடன்படிக்கையின் எத்தனையாவது பிரிவு தெரிவிக்கின்றது?" என்று போர்நிறுத்தக் கண்காணிப் புக் குழுவின் தலைவர் ஹொக்றுப் ஹொக்லொந்திடம் கேட்டார்.

எனவே முதற்கட்ட ஜெனிவா பேச்சுவார்த்தையில் மேற்கூறிய இரண்டு விடயங்களுமே முக்கியமாக இருபகுதி யினராலும் பேசப்பட்டது ஆனால் இருபகுதியினரும் ஏற்றுக்கொண்டவற்றை நடைமுறைப்படுத்தவில்லை.

மேற்கூறிய இரண்டு முக்கியமான விடயங்கள் தவிர கீழ்க்கண்ட விடயங்களையும் இரு பகுதியினரும் ஏற்றுக் கொண்டனார்.

1. இரு பகுதியினரும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மதித்து நடத்தல்.

2. இரு பகுதியினரும் இலங்கை போர்நிறுத்தக் கண் காணிப்புக்கு வினருக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

3. இரு பகுதியினரும் எந்தவித அச்சுறுத்தல் (Intimidation), கடத்தல்(abduction), கொலை மற்றும் கொடுமைப் படுத்துதல் (Killings) இதர வன்முறை சார்ந்த நடவடிக்கைகள் (act of violance) ஆகிய வற்றை நிறுத் திக் கொள்ளுதல்.

4. விடுதலைப் புலிகள் தாம் பாதுகாப்புப் படையின ருக்கு எதிராகத் தாக்குதல் நடத்தமாட்டோம் என்று ஒப்புக்கொண்டனர்.





5. அரச தரப்பினரும் வடக்கு- கிழக்கில் பாதுகாப்புப் படையினரைவிட மற்றையோர் (ஒட்டுப்படைகள்) ஆயுதத்தோடு உலாவ விடமாட்டோம் என்று உறுதி யளித்தனர். அதற்கான அனைத்து நடவடிக்கை களும் எடுக்கப்படும் என்றும் கூறினர்.

6. இரு தரப்பினரும் இரண்டாவதுமுறையாக 19 - 21 ஏப்ரல் 2006இல் ஜெனிவாவில் சந்தித்துப் பேசுவ தற்கு ஒப்புக்கொண்டனர்.

7. இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மேற்கூறிய விடயங்களைக் கண்காணித்து அடுத்த சந்திப்பில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது.

இவை ஏற்றுக்கொள்ளப்பட்டபோதும் கள நிலவரங் களை நோக்கும்போது முக்கியமாக தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து பிரிந்து சென்ற கருணா குழுவின் உதவி யோடு இலங்கை இராணுவம் கிழக்கு மாகாணத்தை ஏறக் குறைய ஒருவருடத்திற்குள் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துவிட்டது 2006 - 2007 நடுப்பகுதிக்குள் கிழக்கு மாகாணம் முழுவதும் அரச இராணுவத்தின் கட்டுப்பாட் டிற்குள் வந்துவிட்டதாக இராணுவம் கூறுகின்றது. இதை விடுதலைப் புலிகளும் மறுக்கவில்லை.

மகிந்த ராஜபக்ச பதவிக்கு வந்த ஒன்றரை ஆண்டுகளுக் குள் இவை நடந்துள்ளன. இதில் 5000 வரையான பொது மக்கள் இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்டதுடன், 350.000 மக்கள் வரை அகதிளாக்கப்பட்டுள்ளனர். பலர் கடத்திச்செல்லப்பட்டுக் காணாமல் போயுள்ளனர். பேச்சு வார்த்தை தொடர்பாக முன்னாள் பிரதமரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவும் வேறு பல முக்கியஸ்தர்களும் ஜெனிவா பேச்சுவார்த்தை **யில் அரசு கருணாவை நிராயுதபாணியாக்குவதாகக் கூறி** யதை நடைமுறைப் படுத்தினாலேயே யுத்த நிறுத்த உடன் படிக்கையானது பயனுடையதாக அமையும் என்று கூறினர்.

இதற்கு மாறாக ஜே.வி. பியினர் 23.2.2007 அன்று பத்திரிகைக்கு ஒரு ஒப்பந்தக் குறிப்பைக் கொடுத்திருந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதாவது 'நோர்வே விடுதலைப் புலிகளுக்கு அவர்கள் தனிநாடு பெறுவதற்கு அவர்களுடைய போரட்டத்திற்கு உதவுகின்றது. அத்துடன் நோர்வே ஒரு உண்மையான நடுநிலையான நாடு அல்ல என்றும், தாம் அரசங்கத்துடன் இணைந்து வேலை செய்வதானல் நோர்வேயினை அதன் அனுசரணைப் பணியில் இருந்து விலக்க வேண்டும்' என்றும் கோரிக்கை விடுத்தது. அதேவேளை இப்பேச்சு வார்த்தையில் அக்கறை கொண்ட சர்வதேச குழுவான இணைத்தலைமை நாடுகளான ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பானிய அரசு, நோர்வே மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகியவை இப்பேச்சுவார்த்தையை வரவேற்று ஆதரித்தன. விட்டுக்கொடுத்து நடந்துகொள்ளும்படி இருதரப்பினரையும் வற்புறுத்தினர். தாம் நோர்வேக்குத் தேவையான உதவிகள் செய்ய காத்திருப்பதாகவும் தெரிவித்திருந்தனர்.

## இரண்டாம் கட்ட ஜெனிவா பேச்சுவார்த்தை

முதலாவது ஜெனிவா பேச்சுவார்த்தை ஒரு வகையில் வெற்றி எனக் கூறலாம். ஏனெனில் இரண்டாவது பேச்சு வார்த்தைக்குத் திகதி குறித்து மீண்டும் சந்திக்க விரும்பினர் அத்துடன் யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதாகவும் ஒப்புக்கொண்டனர்.

இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் அதியுயர் பாதுகாப்புவலையம் குறித்து பேசுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. இப்பேச்சுவார்த்தை இருபக்க பலம் பலவீனங்களை அறியக்கூடியதாக இருக்கும் என எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் அவ்வாறு இடம் பெறவில்லை.

போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் காலத்தில் விடுதலைப் புலிகள் வெகுவாக பலவீனப்பட்டிருந்ததை அரச இராணுவம் உணர்ந்திருந்தது. இதனை ஜெனிவா. 1. ஒஸ்லோ பேச்சுவார்த்தைகள் மூலம் மறைமுகமாக உணரக்கூடியதாக இருந்தது போர்நிறுத்த உடன்படிக்கை காலத்தில் சிறிலங்காவும் நவீன ஆயுதங்களையும் பல்குழல் ஆட்டிலறிகளையும் ஏனைய போர்த்தள பாடங்களையும் வாங்கியிருந்தது. அத்துடன் இந்தியா, பாகிஸ்தான், சீனா, இஸ்ரேல், அமெரிக்கா ஆகிய நாடுகளில் இராணுவ வல்லுநர்களிடம் பயிற்சியும் பெற்றனர்.





விடுதலைப் புலிகளும் இப்பேச்சுவார்த்தையின் மூலம் எதனையும் பெற்றுவிடமுடியாது என்பதை உணர்ந்திருந்தனர். இலங்கையின் வரலாற்றையோ, முரண்பாட்டின் உண்மையான ஆழத்தையோ புரிந்துகொள்ளாத சர்வதேச சமூகம் ஒரு ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட அரசுக்கு எதிராக அந்நாட்டு சிறுப்பான்மை இன மக்கள் ஜனநாயக முறையில் தமது இழந்துபோன உரிமையைப் பெறமுயற்சித்து முடியாது போகவே ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கினர் என்ற யதார்த்தத்திலிருந்து விடயங்களை அணுகுவதற்கு மாறாக புலிகள் அமைப்பின் அணுகுமுறைக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. மாறாக அரசாங்கத்தின் அணுகுமுறைகளான உணவு, மருந்து ஆகியவற்றைப் போர்க்கருவிகளாகப் பயன்படுத்துதல், சிவிலியன்கள் மீது தாக்குதல் நடத்தி அகதிகளாக விரட்டுதல் போன்றவை போதிய அளவிற்குக் கவனத்தில் எடுக்கப்படவில்லை. எனவே பேச்சுவார்த்தை தொடர்பில் சர்வதேச சமூகத்தின் நடுநிலைத் தன்மை கேள்விக்குள்ளாகிறது.

இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் ஏ-9 பாதையை திறப்பதுபற்றிய விடயமே முக்கியத்துவம் பெற்றது ஏ 9. வீதி மூடப்பட்டமையை அரசாங்கமும் இராணுவத்தினரும் தமது பாதுகாப்பிற்கான நடவடிக்கை எனக் கூறினாலும் போராட்டத்தில் எதிரிகளைப் பட்டினி போடுவதும் ஒரு போர்த்தந்திரமாகும். தமிழ்மக்கள் அனைவருமே சிங்கள அரசின் பார்வையிலும் இராணுவத்தின் பார்வையிலும் விடுதலைப் புலிகளாவர். இதனால் வடக்கிலுள்ள மக்கள் எத்தகைய கஷ்டத்தை அனுபவித்தாலும் அது அவர்களது போராட்டத்தின் அங்கமாகவே அரசாங்கத்தால் பார்க்கப்படுகிறது. நான் கொழும்பில் உள்ள பொதுவுடைமைக் கட்சி ஒன்றின் செயலாளரிடம் கொழும்பில் ஒரு சிறிய குண்டு வெடிப்பு நிகழ்ந்ததால்கூட நடுநிசியில் தமிழர்கள் கைது செய்யப்படுகின்றார்களே எனக் கேட்டபோது அதற்கு அவர் கூறிய பதில் புலிகள் எல்லாரும் தமிழர்களாய் இருப்பதனால் நாம் தமிழர்களைத்தானே தெருவிற்குக் கொண்டுவரலாம் என்று கூறினார். ஒரு சிங்கள அமைப்பு இப்படி ஏதாவது செய்தால் முழுச்சிங்களவர்களையும் கைது செய்வீர்களா எனக் கேட்டதற்கு அவரால் பதில் அளிக்க முடியாமல் போய்விட்டது. இத்தகைய கள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிலவரப் பின்னணியிலேயே இரண்டாவது கட்ட பேச்சு வார்த்தை ஆரம்பித்தது. இதனை ஆரம்பித்து வைக்கையில் இணைத்தலைமை நாடுகளின் தலைவர் எரிக்சொல்கெய்ம் கூறியதாவது.

1. சர்வதேச நாடுகளின் குழுமத்தில் பல்வேறுபட்ட முரண்பாடுகள் இருக்கின்றன. தமக்குத் தெரிந்த முக்கியமான நாடுகளிலேயே சர்வதேச சமூகம் இந்த முரண்பாடுகளின் தீர்விற்குத் தலையீடு செய்யும் இலங்கை விடயத்தில் தலையீடு செய்யும் தேவை இவர்கட்கு இல்லை. இதனால் இங்கு இரு பகுதியினரும் உண்மையான தீர்விற்காக ஒரே நோக்கத்துடன் இவ்விடயத்தை அணுகாவிட்டால் தாம் இந்த அனுசரணையாளர் பொறுப்பில் இருந்து விலகிவிடக்கூடும் என்று கூறினர்.
2. தீர்வு இலங்கையைப் பிரிப்பதாக அன்றி ஒன்று பட்ட இலங்கைக்குள் அனைத்து சமூகத்தினரும் சுமுகமாக வாழக்கூடிய சூழலை உருவாக்கக்கூடிய வகையில் பேச்சுவார்த்தைகள் அமைய வேண்டும் என்றார்.
3. முதலாம் கட்ட ஜெனிவா பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட தீர்மானங்களும் நடைமுறைப்படுத் தப்படவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஏ-9 வீதியை திறக்க முடியாது என அரசாங்கம் கூறியதற்கு எதிர்க்கட்சிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சர்வதேச சமூகம் ஆகியன எதிர்த்துக் குரல் கொடுத்தன. அரசில் அங்கம் வகிக்கும் ஜே. வி.பி. ஜே. எச் யு ஆகியன அரசின் இந்த நிலைப்பாட்டை ஆதரித்தன. அரசோடு உள்ள ஒட்டுப்படைகளான ஈ. பி. டி.பி., ரி. எம்.வி.பி. ஈ. பி. ஆர் எல் எவ் (பெருமாள்) ரியு எல் எவ் (ஆ) புளொட் ஆகியவையும் இந்நிலைப்பாட்டை ஆதரித்தன.

ஏ-9 வீதி திறக்க முடியாது என ஜெனிவாவில் அரச தரப்பினர் கூறியதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் நாடாளுமன்றத்தில் பெரியதோர் விவாதத்தையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர். இரண்டாம் கட்ட





ஜெனிவா பேச்சுவார்த்தை தோல்வியிலேயே முடிந்துள்ளது என்பதைப் பெரும்பாலான சிங்கள. தமிழ் மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகள் விவரித்திருந்தன. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் அரசுக்கெதிரான தமது குற்றச்சாட் டுக்களை உலகுக்கு உணர்த்தும் ஒரு பிரச்சார மேடை யாகவே இதனைப் பாவித்ததாகக் கூறினர். விடுதலைப் புலிகள் ஏ-9 வீதியை திறப்பதன் முக்கியத்துவத்தையும் திறக்காததால் வடமாகாணத்தில் ஏற்பட்டுள்ள மனிதாபி மான நெருக்கடிகள் அடிப்படைத் தேவைகளைக்கூடப் பெறமுடியாத நிலையில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்ட நிலைமைகளையும் விவரித்தனர். அத்துடன் முதற்கட்ட ஜெனிவா பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொண்ட விடயங் களை அரசாங்கம் நிறை வேற்றவில்லை என்றும் சுட்டிக் காட்டினர்.

இப்பேச்சுவார்த்தையில் ஜே. வி. பி. யினரால் வடக்கு-கிழக்கு இணைப்பைப் பிரிப்பதற்காகப் போடப்பட்ட வழக்கில் அரசுதரப்பு வழக்கறிஞராகப் பணியாற்றிய எச். எல் டி சில்வாவும் கோமின் தயாசிரி ஆகிய இருவரும் அரசு தரப்பில் கலந்துகொண்டனர். இங்கு இருதரப்பின ருமே இறுக்கமாக தத்தமது நிலைப்பாடுகளில் விட்டு கொடுக்காது இருந்தனர். இது அவர்களின் தலைமைப்பீட அறிவுறுத்தலாகவும் இருக்கலாம்.

ஆனால் மேற்கூறியதுபோல் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பாகவும் ஈழம் என்ற தமது நோக்கை அடைவதற் கான திட்டத்தை முன்வைத்துத்தான் தமது நகர்வை நகர்த்து கிறார்கள் என்றும் கூறுகிறது. அத்துடன் ராஜபக்சவில் இருந்து அமைச்சர்கள் மற்றும் கோத்தபாய போன்ற அதிகாரிகள்வரை அனைவரும் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்திவிட்டுத்தான் பேசுவோம் என வெளிப் படையாகவே அறிவித்து போரை முன்னெடுக்கின்றனர்.

சர்வதேச சமூகத்தின் அனுசரனையுடனான சமாதான நடவடிக்கைகளும் அரசினதும் சர்வதேவ சமூகத்தின் அணுகுமுறையினதும் பேச்சுவார்த்தையினதும் முடிவுகள் சில முக்கிய நன்மைகளைப் பிரதிபலிக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1. சிங்கள இனவாத அரசியற் சமூகம் இலங்கையில் தமிழ் பேசும் மக்களை அன்னியர்களாகவே பாவிக்கின்றது. இதன் அடிப்படையிலேயே செயற்படுகின்றது. எனவே சிங்கள அரசியல் சமூகத்தினால் தமிழ் பேசும் மக்களை சம பிரசைகளாக சம உரிமைகளுடனும் அந்தஸ்துடனும் நோக்க முடியாது ஏனெனில் சிங்கள தேசியவாதமே இலங்கை தேசியவாதமாக அவர்களால் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. அவர்களின் பார்வையில் தமிழ் பேசும் மக்கள் இலங்கைத் தேசியவாதத்திற்குள் உள்ளடங்கவில்லை. இலங்கையில் எந்த உரிமையைக் கேட்பதற்கும் அவர்களுக்குத் தகுதியில்லை என்ற அடிப்படையிலிருந்தே சிங்கள அரசியல் சமூகத்தின் தேசியவாதம் கட்டியெழுப்பட்டு உள்ளது. எனவே ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு சாத்தியமா என்ற கேள்வி சர்வதேச சமூகத்திடம் எழ ஆரம்பித்துள்ளதாகத் தோன்றுகின்றது.

2. இலங்கைத் தமிழர்கள் ஆயுதப் போராட்டம் ஒன்றை நடத்துவதால்தான் அவர்களுக்குப் பிரச்சினை உள்ளது என்பதை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் அதற்கு அவர்களுடன் பேசவேண்டும் என்பதையும் கொள்கையளவிவேனும் சிங்கள அரசியல் சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே இலங்கையில் தமிழ் மக்களின் உரிமையை நிலை நாட்டுவதற்கு ஆயுத பலம் அவசியம் என்பதும் நிருபிக்கப்பட்டுள்ளது. ஆகவே சர்வதேச சமூகம் பயங்கரவாதம் என்ற பெயரால் புலிகளைப் பல வீனப்படுத்துவதோ பாதுகாப்பு என்ற பெயரால் அரசைப் பலப்படுத்துவதோ தமிழினத்தை அழிப்பதற்கே வழிசெய்யும். எனவே நிரந்தர சமாதானத்தை நோக்கிய நகர்வினை உறுதிப்படுத்த சர்வதேச சமூகம் தமிழ் மக்களை பலப்படுத்தும் அதே வேளை அரசிற்குத் தேவையான அளவு அழுத்தத்தையும் கொடுக்க வேண்டும்.

3. மேற்கண்ட இருவிடயங்களையும் முன்னெடுக்கும் வகையில் சர்வதேச சமூகம் தமது அணுகுமுறையில் பாரிய மாற்றத்தினை வெளிப்படுத்த வேண்டும்.





ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையாக. ஆரம்பித்த தமிழர்களின் உரிமைப் போராட்டம் பல பரிமாணங்களைத் தாண்டி இன்று தனிநாடு ஒன்றைத் தாபிப்பதற்கான ஒரு பாரம்பரிய முறையிலான யுத்தத்தை நடாத்துகின்ற கட்டத்திற்கு வளர்ச்சியடைந்துள்ளது. 1987இன் இந்தியத் தலையீடோ அல்லது 2000ஆம் ஆண்டு ஆரம்பித்த நோர்வேயின் முன்னெடுப்பிலான சர்வதேசத் தலையீடோ சிங்கள அரசியல் சமூகத்தின் மேலாதிக்க மனோபாவத்தில். குறிப்பிடத்தக்க மாற்றம் எதனையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. மாறாக 60 ஆண்டுகால போராட்டத்தின் பின்னர், குறிப்பாக 30 ஆண்டுகால ஆயுதப் போராட்ட காலத்தின் பின்னர், நாடு பாரிய உடைமை அழிவுகளைச் சந்தித்த பின்னரும் தமிழர் மீதான சிங்கள, அரசியல் சமூகத்தின் மேலாதிக்க முனைப்பு மூர்க்கத்தனமாக மேலோங்கியே காணப்படுகிறது. இலங்கையின் இனப்பிரச்சனை என்பது தொடர்பாக அவர்களின் பொருள் விளக்கமானது எண்ணிக்கையில் அதிகமான சிங்கள இனத்தின் ஆட்சி என்பதே. தொடர்ச்சியாக தமிழ் மக்களை அவர்களின் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் சிங்கள ஆட்சி அடக்கி ஒடுக்கி வருவதை மேலே பார்த்தோம். இங்கு பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் பாதிப்பை ஏற்படுத்தியவர்கள் சிங்கள ஆட்சியாளர்கள். எனவே ஒரு தீர்வு என்பது தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டுமேயன்றி வேறெவரையும் அல்ல. எனினும் 1980கள் தொடக்கம் இன்றுவரை தீர்வு பற்றிய பேச்சுக்கள் வரும் போது அனைவரும் ஏற்றுக்கொள்ளகூடிய தீர்வு முன்வைக்கப்பட்ட வேண்டும் என சர்வதேச சமூகம் உட்பட பலரும் கூறிவருதைக் காணலாம். இவ்வாய்வில் நாம் ஏற்கனவே நோக்கியதைப் போன்று யதார்த்தத்தில் இலங்கையில் சிங்கள அரசியல் சமூகமானது தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரங்களைப் பகிர்வதிலோ பொருாதார அபிவிருத்திக்கு உதவுவதிலோ சமூக முன்னேற்றத்திற்கு வழிவகுப்பதிலோ வெறுப்புடன் கூடிய ஒரு அணுகுமுறையைத்தான் காட்டுகின்றதே தவிர சாதகமான பிரதிபலிப்புக்களைக் காணமுடியவில்லை. எனவே, இலங்கைக்குள் அனைத்துத் தரப்பினரும் ஏற்கக்கூடிய தீர்வு என்கின்ற கருத்து ஒரு வகையில் உண்மையான தீர்வை நோக்கிய கருத்தாக பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முடியாது. ஏனெனில், இலங்கையில் எல்லோரும் ஏற்கக் கூடிய தீர்வென்பது சாத் தியமா என்ற கேள்வி உறுதியாக எழுந்து நிற்கின்றது.

சிங்கள அரசியல் சமூகத்தின் இலங்கையை பௌத்த சிங்கள மேலாதிக்கத்தின்கீழ் வைத்திருக்க வேண்டும் என்கின்ற 60 ஆண்டுகால உறுதியான முடிவுகளைப் பரிசீலிக்குமிடத்து இலங்கை இனப்பிரச்சனைக்கு ஒரு சமஷ்டிமுறையிலான தீர்வு நடைமுறைச்சாத்தியமா என்கின்ற கேள்வியும் எழுகின்றது எனவே, இலங்கையில் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமாயின் முரண்பாட்டிற்கான உண்மையான தோற்றுவாய்களையும் இவ்விடயத்தில் இரு சமூகங்களது உளவியல் ரீதியான நிலைகளையும் முரண்பாட்டினுடைய வீச்சையும் தெளிவாக மனங்கொண்டு தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான ஓர் புதிய அணுகுமுறை கையாளப்படவேண்டும். இவ்வணுகுமுறையானது இன்று பின்பற்றப்படும் அணுகுமுறையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக இருக்க வேண்டும் அதாவது இலங்கையின் அனைத்து நடவடிக்கையிலும் சிங்களவர்களும் தமிழர்களும் சமபங்காளிகள் என்கின்ற அடித்தளத்திலிருந்து அணுகப்படவேண்டும்.

○○○



# BIBLIOGRAPHY

## Secondary Sources *(உசாத்துணை நூல்கள்)*


Abeyaratne, S. 1998. Economic Changes and Political Conflict in Developing Countries, Amsterdam: VU University Press.

Abeyasekara, Charles, and Gunasinghe,Newton, (eds.) 1987. Facets of Ethnicity in Sri Lanka, Colombo: Social Scientist Association.

Abeyasekera, P.H. 1999. Some Colourful Cameos of Sri Lankan Life, Colombo: Vishva Lekha Publishers.

Abeyasinghe, Tikiri, 1986. Jaffna Under the Portuguese, Colombo: Lake House Investment Ltd.

Abeysekara, Vernon, 1989. Images of Jaffna: A Government Agent's Recollections, Colombo: Unigraph (Pvt) Ltd.

Alagappan, M.V.M. 1985. Tears in Teardrop Island, Delhi: Sterling Publishers.

Amirthalingam, A. 1977. 'Self-determination and National Minorities', Logos, Vol. 16, No.4: 73-74.

Amirthalingam, A. 1983. 'Life has Become Impossible', India Today, Vol. 8, No. 23: 43.

Amirthalingam, A. 1988. Introduction towards Devolution of Power in Sri Lanka: Main Documents August 1983 to October 1987, Madras: Jeevan Press and Practice.

Anand, J.P. 1987. 'Indian Ocean: Strategic Significance of Island Republics and Territories', IDSA Journal,. Vol. 6, No. 2: 551-552.

Anita, P. 1987. 'Sri Lanka: Coping with Peace', India Today, pp126 – 130.

Anon, A. 1984. 'Centcom to Shift HQ to Trincomalee', Tamil Times (London).

Antoninus, A.J.B. 1944. Sri Lanka – Indo Studies: Martyrs of Mannar, Colombo: Central Publishers Ltd.

Arasaratnam, S. 1964. Ceylon, New Jersey: Prentice Hall.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Arasaratnam, S. 1967. Nationalism, Communalism and National Unity and Diversity in Ceylon, Bombay: Lalwani.

Arasaratnam, S. 1979. 'Nationalism in Sri Lanka and the Tamils', in Michael Roberts, (ed.) Collective Identities, Nationalisms and Protests in Modern Sri Lanka, Volume 2. PP 295 – 314, Colombo: Marga Institute.

Arasaratnam, S. 1986. Sri Lanka After Independendence: Nationalism Communalism and Nation Building, Madras: University of Madras.

Arulpragasam, A.R. 1996. The Traditional Homeland of the Tamils: The Missing Pages of Sri Lankan History, Sri Lanka: Canal Publications.

Bajpai, U.S. 1983. India's Security: The Politico-Strategic Environment, New Delhi: Allied Publications.

Bala, S. S. 1994. Peace Constitution for Sri Lanka, Colombo: Swastika (Pvt) Ltd.

Balasingham, A. 1983. Liberation Tigers and the Tamil Eelam Freedom Struggle, Madras: Makkal Achchakam.

Balasingham, A. 2000. The Politics of Duplicity: Revisiting the Jaffna Talks, England: Fairmax Publishing Ltd.

Balasingham, Adele, 1993. Women Fighters of Liberation Tigers, UK: LTTE International Secretariat.

Balasingham, Adle, 2001. The Will to Freedom: An Inside View of Tamil Resistance, England: Jalini Print.

Balasooriya, T. 1977. 'Tamil Mandate for Eelam: Fact or Fiction', Tribune, Vol. 22, No. 15: 14-17.

Balu, S.V. 1987. 'The Return of the Conv[illegible]', Frontline (Madras), Vol. 4, No. 12: 13-15.

Bansil, P.C. 1971 Ceylon Agriculture: A Perspective, Delhi: Dhanapat Rai and Sons.

Barsh, Lawrence, 1988. 'The Ethnic Factor in Security and Development: Perceptions of the United Nations Human Rights Bodies.' Acta Sociologica Vol.31, No. 4: 333-41.





Bastiampillai, B. and Wanasinghe, S. 1995. Devolution in a Multi-Ethnic Society, Colombo: Marga Publication.

Bastian, S. 1981. 'Sinhala-Tamil Grievances Since 1977', Lanka guardian Vol. 4, No. 6: 12-14 & 16.

Bastian, S. 1984. 'University Admission and the National Question', in Social Science Association of Sri Lanka (ed.) Ethnicity and Social Change in Sri Lanka, Colombo: SSA Publication.

Bastian, S. 1994. Devolution and Development in Sri Lanka, Delhi: Ravindra Offset Press.

Behera, A D. 1999. Politics of Violence and Development in South Asia, Colombo: Regional Centre for Strategic Studies Publication

Bercovitch, J. 2003. 'Managing Internationalised Ethnic Conflict: Evaluating the role and Relevance of mediation', World Affairs Summer, 2003.

Bhaduri, S. and Karim, A. 1990. The Sri Lankan Crisis, New Delhi: Lanch International.

Birch, A.H. 1993. The Concept and Theories of Modern Democracy, London: Routledge.

Bose, S. 1994. State, Nations, Sovereignty: Sri Lanka and the Tamil Eelam Movement, New Delhi: Sage Publication

Brass, Paul 1991. Ethnicity and Nationalism. New Delhi: Sage Publications.

Bruton, H.J. et al. 1992. The Political Economy of Poverty, Equity and Growth: Sri Lanka and Malaysia, Washington DC: The World Bank Publication.

Bsworth, D.P. 1994. Citing Your References: A Guide for Authors of Journal Articles and Students Writing Thesis or Dissertations, Yorkshire: Underhill Press.

Bullion, A J. 1995. India, Sri Lanka and the Tamil Crisis 1976-1994: An International Perspective, London: Pinter.

Burton, J. and Dukes, F. 1990. Conflict: Practices in Management, Settlement and Resolution, New York: St. Martin's Press.

Caldwel, R. 1961. Comparative Grammar of Dravidian or South Indian Family of Languages. Second Edition 1875, Madras: University of Madras Press, Reprinted in 1961.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Chacko, A. 1985. 'Jaffna Militant and People'. Frontline. Vol. 2, No. 16: 15-16.

Chandraprema, C.A. 1991. Sri Lanka: The Years of Terror. The JVP Insurrection 1987 – 1989, Colombo: Lake House Publication.

Chattopadhya, H.P. 1994. Ethnic Unrest in Modern Sri Lanka: An account Consittutional Jurisprudence, Colombo: I C E S Publication.

Cohen, R. 1990. Cultural Conflict in Egyptian – Israeli Relations: A Dialogue of the Deaf, Bloomington and Indianapolis: Indiana University Press

Committee for Democracy and Justice, (ed.), 1994. In Place of the Spiral of Violence, Colombo: C.R.C. Press.

Committee For Rational Development. 1984, Sri Lanka: The Ethnic Conflict-Myths,Realities and Perspectives, New Delhi: Navarang.

Conner, Walker, 1994. Ethnonationalism; The Question of Understanding, Princeton: Princeton University Press.

Coomaraswamy, R. 1986. 'Nationalism: Sinhala and Tamil Myths, Lanka Guardian, Vol. 9, No. 3: 19 – 24.

Coomaraswamy, R. 1990. 'The Crisis of Constitunalism: Devolution and the Sri Lankan Constitution', Thatched Patio, Vol. 13, No. 3.

Coomaraswamy, R. 1994. 'Devolution, the Law, and Judicial Construction', in Bastian, S. (ed.) Devolution and Development in Sri Lanka, Colombo: Konark Publication.

Coomaraswamy, R. 1996. 'Tiger Women and the Question of Women's Emancipation', Pravada Vol. 4, No. 9: 8-10.

Coomaraswamy, R. 1996. Ideology and the Constitution: Essays on Constitutional Jurisprudence, Colombo: ICES Publication.

Coomaraswamy, R. and Wickramasinghe, N. 1994. Introduction to Social Theory, New Delhi: Kanark Publishers (PVT) Ltd.

Darby, John, 2001. The Effects of Violence on Peace Processes, Washington DC: The US Institute of Peace.

David, K. and Kadirgamar, S. (ed.), 1989. Ethnicity, Identity, Conflict and Crisis, Hongkong: Arena Press.

Dayan, J. 1995. Sri Lanka: The Travails of Democracy, Unfinished War, Protracted Crisis, New Delhi: Vikas.





Dayan, J. 1999. The Indian Intervention in Sri Lanka, 1987-1990: The North-East Provincial Council and Devolution of power, Kandy: ICES.

Dayan, J. 2000. 'The LTTE and Tamil Separatism in Sri Lanka' in (ed) K.M.de Silva and G.H.Peiris, Persuit of Peace in Sri Lanka: Past Failures and Future Prospects, Colombo: ICES.

De Silva C.R. 1987. Sri Lanka: A History, New Delhi: Vikas Publishing House.

De Silva, C. R. 1979. 'The Impact of Nationalism on Education: The School Take-Over (1961) and the University Admission Crisis 1970-1975', in M. Roberts, (ed.), Collective Identities, Nationalism and Protests in Modern Sri Lanka, pp 103-133. Colombo: Marga Institute.

De Silva, C. R. 1984. 'Sinhala-Tamil Ethnic Rivalry: The Background', in Goldmann, R.B and Wilson, A.J (eds.), From Independence to Statehood: Managing Ethnic Conflict in Five African and Asian States, pp 111-125. London: Frances Printers.

De Silva, C.R and . Samaraweera, V. 1974. 'Leadership Perspective 1975; An Interpretive Essay', The Ceylon Journal of Historical and Social Studies, Vol. 4, No. 1 &2: 20-30.

De Silva, C.R. 1977. 'Education' in, De Silva, K.M (ed) Sri Lanka a Survey, London: C. Hurst.

De Silva, C.R. 1978. 'The Politics of University Admission – A Review of some Aspects of Admission Policy in Sri Lanka, 1971 –1978', Sri Lanka Journal of Social Science, Vol. 1, No. 2: 85 – 123.

De Silva, C.R. 1978. 'The Politics of University Admission Policy in Sri Lanka 1971-1978', Sri Lanka Journal of Social Science, Vol. 1, No. 2.: 85-112.

De Silva, C.R. 1979. 'Constitution of the Second Republic of Sri Lanka (1978) and it's Significance', Journal of Commonwealth and Comparative Politics, Vol. 17, No. 2: 192-209.

De Silva, C.R. 1979. 'The Impact of Nationalism on Education: The School Take Over (1961) and University Admissions Crisis, 1970 – 75', in Roberts, Michael (ed.), Collective Identities, Nationalisms and Protests in Modern Sri Lanka, Volume 2. PP 103 – 132. Colombo: Marge Institute.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



De Silva, C.R. 1980. 'The Tamils and the Constitution of the Second Republic of Sri Lanka (1978)', Sri Lanka Journal of Social Sciences Vol. 3, No. 1: 9-17.

De Silva, C.R. 1982. 'The Electoral System 1947-1978: An Overview', in K.M. de Silva (ed.), Universal Franchise 1931-1981, the Sri Lankan Experience, pp107-124. Sri Lanka: Dept. of Information.

De Silva, C.R. 1982. 'The Sinhalese-Tamil Rift in Sri Lanka' in A.J. Wilson and Dennis Dalton (ed.), The States of South Asia: Problems of Integration, pp 155-175. London: C. hurst & Co.

De Silva, H.L. 1991. An Appraisal of the Federal Alternative for Sri Lanka, Sri Lanka: Sri Devi Printers (Pvt) Ltd.

De Silva, K M. (ed.), 1977. Sri Lanka A Survey, London: C. Hurst and Company.

De Silva, K M. 1994. The 'Traditional Homelands' of the Tamils: Separatist Ideology in Sri Lanka, A Historical Appraisal, Colombo: ICES Publication.

De Silva, K.M. (ed.), 2000. Conflict and Violence in South Asia: Bangladesh, India, Pakistan and Sri Lanka, Kandy: ICES Publication.

De Silva, K.M. 1962. 'The Formation and Character of the Ceylon National Congress', The Ceylon Journal of Historical and Social Studies, Vol. 10, Nos. 1&2: 70-102.

De Silva, K.M. 1971. 'Weightage in University Admission: Standardisation and District Quota', Modern Ceylon Studies, Vol. 5, No. 2

De Silva, K.M. 1972. 'The Ceylon National Congress in Disarray I 120-1, Sir Ponnambalam Arunachalam leaves the Congress', The Ceylon Journal of Historical and Studies New Series, Vol. 2, No. 2: 97-117.

De Silva, K.M. 1973. 'The Ceylon National Congress in Disarray II: The Triumph of Sir William Manning 1921-1924', The Ceylon Journal of Historical and Social Studies New Series, Vol. 3, No. 1: 16-39.

De Silva, K.M. 1973. History of Ceylon. Vol. III, Colombo: University of Ceylon.





De Silva, K.M. 1974. 'Nationalism and it's Impact', The Ceylon Historical and Social Studies New Series, Vol. 4, Nos. 1&2: 62-72.

De Silva, K.M. 1979. 'Resistance Movement in Nineteenth Century Sri Lanka', in Roberts, Michael (ed.), Collective Identities, Nationalisms and Protests in Modern Sri Lanka. Volume 1. PP 145 – 164, Colombo: Marga Publication.

De Silva, K.M. 1981. A History of Sri Lanka, London: C. Hurst & Co (Publishers) Ltd.

De Silva, K.M. 1986. Managing Ethnic Tensions in Multi-Ethnic Societies – Sri Lanka 1880-1985, New York: University Press of America.

De Silva, K.M. 1987. Separatist Ideology in Sri Lanka. A Historical Appraisal of The Claim for the 'Traditional Homeland' of the Tamils of Sri Lanka, Peradeniya: Peradeniya University Press.

De Silva, K.M. 1993. ' Language Problems: The Politics of Language Policy', in De Silva, K.M (ed.), Sri Lanka Problems of Governance, pp 275-306. Delhi: Konark Publication.

De Silva, K.M. 1994. 'University Admission and Ethnic Tension in Sri Lanka 1977-82', in R.B. Goldmann, and A.J. Wilson, (eds.), From Independence to Statehood: Managing Ethnic Conflict in Five Africal and Asian States, pp 97-111, London: Frances Printers.

De Silva, K.M. 1996. Devolution in Sri Lanka: S. W. R. D Bandaranaike and the Debate on Power Sharing, Kandy: ICES Publication.

De Silva, K.M. 1996. Regional Powers and Small State Security: India and Sri Lanka, New Delhi: Vikas Publishing House.

De Silva, K.M. 1998. Reaping the Whirlwind: Ethnic Conflict, Ethnic Politics in in Sri lanka, New Delhi: Penguin Publication.

De Silva, K.M. and Wiggins, H. 1994. J.R Jayewardena of Sri Lanka: A Political Biography. From 1956 to his retirement 1989, Vol. II, London: Leo Cooper/Pen & Sward.

De Silva, M. 1986. 'Political Pressure on Rajiv', Lanka Guardian, Vol. 9, No. 2: 6.

De Silva, N. 1997. An Introduction to Tamil Racism in Sri Lanka, Colombo: Visidune Prakashakayo (Pvt) Ltd.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Denham, E B. 1911. Ceylon at the Census of 1911. Colombo: Government Press.

DeSouza, V. et al. 1987. 'Sri Lanka: A War for Peace. Can the Indian Army do what the Lankan Army could not?', South Asian Studies, Vol. 5, No. 45: 10 – 18.

Dharmadasa, K.N.O. 1992, Language, Religion and Assertiveness: The Growth of Sinhalese Nationalism in Sri Lanka, Ann Arbor: University of Michigan Press

Dissanayaka, T.D.S.A. 1993. The Agony of Sri Lanka: An In-Depth Account of Racial Riots of 1983, Colombo: Swastika.

Dissanayaka, T.D.S.A. 1993. The Dilemma Of Sri Lanka: An In-Depth Account of The Current Ethnic Conflict in Sri Lanka, Colombo: Swastika.

Dissanayaka, T.D.S.A. 1994. The Politics of Sri Lanka: An in-depth Analysis of the Current Political Scene Culminating with the General Election of 1994, Colombo: Swastika Publishers (PVT) Ltd.

Dissanayaka, T.D.S.A. 1998. War or Peace in Sri Lanka: Volume 2, Colombo: Swastika.

Dissanayake, T.D.S.A. 1995. War or Peace in Sri Lanka, Colombo: Swastika.

Dixit, J.N. 1990. 'What Brought the IPKF here?', Lanka Guardian, Vol. 12, No. 17: 11 – 14 and ibid No. 18: 8 – 9.

Dixit, J.N. 1998. 'Indian Involvement in Sri Lanka and the Indo-Sri Lanka Agreement of 1987' in Rupesinghe, K. (ed.), Negotiating Peace in Sri Lanka: Efforts, Failures and Lessons, London: Intrenational Alert.

Dixit, J.N. 1998. Assignment Colombo, Colombo: Vijitha Yapa Book shop.

Doob, L. (ed.), 1970. Resolving Conflict in Africa, New Haven: Yale University Press.

Dubey S.R. 1976. 'National Integration and Constitution in 81', South Asian Studies, Vol. 13, No. 1 & 2: 120 – 225.

Dubey, R. 1989. Indo-Sri Lanka Relations, with Special Reference Reference to the Tamil Problem, New Delhi: Deep and Deep Publications.





Economic and Political Weekly, 10 October 1983. 'Anti- Tamil Riots and the Political Crisis in Sri Lanka', Vol. 18, No. 40: 1694 – 1704.

Economic and Political Weekly, 24 September 1983. 'Ethnic Conflict in Sri Lanka – Myths and facts', Vol. 18, No. 39: 1657 – 60.

Economies of Armed Conflict,' in Robert I Rotberg (ed.), Creating Peace in Sri Lanka: Civil War and Reconciliation, Washington DC: The Brookings Institution Press.

Edirisinghe, R. 1979. 'The Changing Political Scene in Sri Lanka', The Round Table, No. 276: 325 – 351.

Emersom, T.J. 1859. Ceylon Volume Two, London: Longmans Press.

Emmanuel, S.J. 1999. Let My People Go, Canada: Federation of Association of Canadian Tamils (FACT).

Eriksen, Thomad, H. 1993. Ethnicity and Nationalism: Anthropological Perspectives. London: Pluto Press.

Everding, U. 1993. Problems of Democracy, Constitutionalism and Political Violence, Colombo: Goethe – Institute.

Farmer, B.H. (1963) Ceylon: A Divided Nation. London: Oxford University Press.

Farmer, B.H. 1957. Pioneer Peasant Colonisation in Ceylon. New York: Oxford University Press.

Farmer, B.H. 1965. 'The Social Basis of Nationalism in Ceylon', Journal of Asian Studies, No. 24: 431 – 439.

Fernando, T. 1988. 100 Days in Sri Lanka, Sri Lanka: Choromographic.

Fernando, T. and Kerney, R.N. (ed.), 1979. A Society in Transition, Syracuse: Syracuse University Press.

Fernival, J.S. 1948. Colonial policy and Practice, Cambridge: University Pres.

Fishman, J. 1980. 'Language Maintenance' in Harvard Encyclopaedia of American Ethnic Groups, Mass: Harvard University Press.

Fornari, F. 1975. The Psychoanalysis of War, Bloomington: Indian University Press.

Gamage, S. and Watson, I.B. (ed.), 1999. Conflict and Community in Contemporary Sri Lanka, New Delhi: Sage Publications India (Pvt) Ltd.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Ghai, Y. (ed.), 2000. Autonomy and Ethnicity: Negotiating conflicting claims in Multi-Ethnic States, UK: Cambridge University Press.

Gnanaprakasar, S. 1952. 'Ceylon Originally a Land of Dravidians', Tamil Culture, Vol. 1, No. 1: 27-35.

Gobalakrishnan, M.D. 1992. Periyar (EVRN): Father of the Tamil Race, Madras: Emerald Publishers.

Goldman, R.B. and Wilson, A.J. (ed.), 1984. From Independence to Statehood: Managing Ethnic Conflict in Five African and Asian States, London: Frances Printer.

Goodhand and David Hulme, 1990. 'From Wars to Complex Political Emergencies: Understanding Conflict and Peace Building in the New World Disorder,' Third World Quarterly, 20:1.

Goodwin, B. 1992. Using Political Ideas, Chichester: John Wiley & Sons. Third Edition.

Gopalakrishnan, K. 1987. 'Lankan Accord, A Violent Peace', The Week, Vol. 5, No. 34: 12 – 22.

Gulliver, P.H. 1979. Disputes and Negotiations: A Cross – Cultural Perspective, New York: Academic Press.

Gunaratna, M.H. 1988. For a Sovereign State, Sri Lanka: Sarvodaya Vishva Lekha.

Gunaratna, R. 1993. Indian Intervention in Sri Lanka: The Role of India's Intelligence Agencies, Colombo: South Asian Network on Conflict Research.

Gunaratna, R. 1994. Indian Involvement in Sri Lanka: The Role of India's Intelligence Agencies, Colombo: South Asian Network on Conflict Research.

Gunaratna, R. 1998. Sri Lanka's Ethnic Crisis and National Security, Colombo: Unie Arts (Pvt) Ltd.

Gunaratne, R. 1988. War and Peace in Sri Lanka with a Post Accord Report and Jaffna, Colombo: Institute of Fundamental Studies.

Gunasekera, S.L. 1996. Tigers, 'Moderates' and Pandora's Package, Colombo: Multi Packs (Ceylon) Ltd.

Gunasekera, S.L. no date. Indo-Lanka Accord: An analysis, Colombo: Marga Publication.





Gunasinghe, M. 1984. 'The Open Economy and Its Impact on Ethnic Relations in Sri Lanka' in Committee for Racial Development (ed.), Sri Lanbka, The Ethnic Conflict: Myths and Realities–and Perspectives, New Delhi: Navarang.

Gunatillaka, G.1977. 'Some Socio-economic Aspects of Communal Problems', Logos, Vol. 16, No. 2: 17-39.

Gunatilleke, G. 1993. Development and Liberalisation in Sri Lanka: Trends and Prospects, Colombo: Marga Publication.

Gunatilleke, G. 2001. The Ethnic Dimensions of Socio-Economic Development, Colombo: Marga Institute Publication.

Gunawardena, R.A.L.H. 1995. Historiography in time of Ethnic Conflict:Construction of the Past in Contemporary Sri Lanka, Colombo: Social Scientists Association.

Gunawardene, R.A.L.H. 1979. 'The People of the Lion: The Sinhala Identity, Ideology and Historiography', Sri Lanka Journal of humanities, Vol. 5, No. 2: 1-36.

Gupta, B.S. 1983. 'The Indian Doctrine', India Today, pp 20-21.

Gupta, et al. 1986. 'Changing Patterns of Regional Conflicts in South Asia', in B. S. Gupta (ed.), Regional Co-operation and Development in South Asia, New Delhi: South Asian Publishers.

Gupta, S. 1984. 'Sri Lanka Rebels: Ominous Presence in Tamil Nadu', India Today, Vol. 9: 88 – 94.

Hagerty, D, 1991. 'India's Regional Security Doctrine', Asian Survey, Vol. 31, No. 4: 351 – 63.

Hakim, C. 1994. Research Design: Strategies and choices in the Design of Social Research, London: Routledge.

Haugen, E. 1966. 'Linguistics and Language planning' in William, Bright (ed.), Socio-linguistics, The Hague: Mouton.

Hellman, R.D. 1988-89. 'Tamil Militants: Before the Accord and after', ***Pacific Affairs, Vol. 61, No. 4: 603 – 19.***

Hellman, R.D. 1994. The Tamil Tigers: Armed Struggle for Identity, Stuttgart: Franz Steiner.

Herring, R.J. 1994. 'Explaining Sri Lanka's Exceptionalism: Popular Responses to Welfairism and the Open Economy' in J. Walter,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



and D. Seddon, (eds.), Free Markets and Food rights: The Politics of Global Adjustment, Oxford: Blackwell Publication.

Hillman, D. 1989. 'Arumuganavalar: Religious Reformer or National Leader of Eelam', Indian Economic and Social History Review, Vol. 26, No. 2: 235 – 57.

Hoole, R. 2001. Sri Lanka: The Arrogance of Power – Myths, Decadence and Murder, Colombo: Wasala Publication.

Hoole, R. et al. 1990. The Broken Palmyrah: The Tamil Crisis in Sri Lanka, an inside account, Claremont. Calif: Sri Lanka Studies Institute.

Hoosan, D. (ed.), 1994. Geography and National Identity,. Cambridge: Blackwell.

Horowitz, D. 1985. Ethnic Groups in Conflict, Berkley and Los Angeles: University of California Press.

Horowitz, Donald L. 1981. 'Patterns of Ethnic Separatism.' Comparative Studies in Society and History Vol. 23, No.2

Howard, R.M. 1993. The Culture of Conflict: Interests, Interpretations and Disputing in Comparative Perspective, New Haven: Yale University Press.

Howell, S. and Wills, R. 1989. Societies at Peace: Anthropological Perspectives, London: Routledge.

Hoy, C. and Otrovsky, V. 1990. By Way of Deception: An India's Devastating Expose of Mossad, London: Arrow.

Hunter, B. (ed.), 1992. The Statesman's Year Book 1992-93, London: MacMillan Press.

Hunter, J. 1983. 'Sri Lanka and Israeli Connection: Trouble Shooter Walters Paves the Way for Mossads', Lanka Guardian, Vol. 11, No. 2: 3 – 4.

Hutchinson, J. and .Smith, A.D. (ed.), 1994. Nationalism, Oxford: Oxford University Press.

Imayavaramban, S. 1985. On National Relations in Sri Lanka, Madras: Rasakili Printers International.

International Alert. 1986. Sri Lanka: Emergency 1986, London: International Alert Publication.





Iriyagolla, G. 1985. Tamil Claims to Land: Fact and Fiction, Colombo: The Institute of Public Affairs.

Ivan, V. 1989. Sri Lanka in Crisis: Road to Conflict, Sri Lanka: Sarvodaya Book Publishing Services.

Jacob, L.M. 1978. 'Constitutional Development and the Tamil Minority in Sri Lanka', South Asian Studies, No. 13: 66 – 79.

Janesick, V.J. 1994. 'The Dance of Qualitative Research Design'. in Denzine, N. and Lincoln, Y. (eds.), Hand Book of Qualitative Research Design, London: Sage.

Jayasekera, P.V.J. (ed.), 1992. Security Dilemma of a Small State: Sri Lanka in the South Asian Context, New Delhi: South Asian Publishers Pvt. Ltd.

Jayawardena, J.R. 1988. My Quest Foe Peace, Colombo: Sri Lanka Broadcasting and Information Department.

Jayawardena, J.R. 1994. 'I am not Frightened by India', Interview on April 7th with S. Venkat N. India Today, Vol. 9, No. 8: 16-30 and 74-75.

Jayawardene, K. 1984. 'Class Formation and Communalism', Race and Class, Vol.26, No. 1: 51 – 61.

Jayawardene, K. 1985. Ethnic and Class Conflicts in Sri Lanka, Colombo: Center for Social Analysis.

Jayaweera, N. 2001. The Role of the Churches in the Ethnic Conflict, Colombo: Marga Institute Publication.

Jeganathan, P. and Ismail, Q. 1995. Unmaking the Nation: The politics of Identity and History in Modern Sri Lanka, Colombo: Social Scientists Sri Lanka.

Jeyaraj, D.B.S. 1985. 'How Strong Are the Boys?' Frontline. Vol. 2, No. 6: 62-65.

Jiggins, J. 1979. 'Caste and Family in the Politics of the Sinhalese 1947-76, London: Cambridge University Press.

John, Bowen, R. 'The Myth of Global Ethnic Conflict,' Journal of Democracy Vol.7, No.4, (1996) 3-14.

Johnson, M. 1986. 'Island at War: Tamil Rebels Mount a Bloody Campaign, For Justice', Lanka Guardian. Vol. 9, No. 5: 5-9.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Kabir, M.H.L. 1987. 'The Indo – Sri Lanka Agreement: An Assessment', BISS Journal, Vol. 8, No. 10: 452 – 79.

Kailasapathy, K. 1979. 'Cultural and Linguistic Consciousness of the Tamil Community', in Ethnicity and Social Change in Sri Lanka, Colombo: The Social Science Association Publication.

Kalasooriya, R. 2001. LTTE and IRA: Combating Terrorism & Discussing Peace, Colombo: Sanhinda Printers.

Kandiah, R. 1990. India's Sri Lanka Fiasco: Peace Keepers at War, New Delhi: Vision.

Kandiah, T. 2001. The Media and the Ethnic Conflict in Sri Lanka, Colombo: Marga Institute Publication.

Kapferer, B. 1988. Legends of People, Myths of State, Violence, Intolerance and political culture in Sri Lanka, Washington D.C: Smithsonian Institute Press.

Karalasingham, V. 1977. 'A Left approach to the Minority Problem', Logos, Vol. 16, No. 2: 48-52.

Karim, A.F. 1993. Transactional Terrorism: The Danger in the South, New Delhi: Lancer International.

Karunaratne, V. 1980. 'The NSSP and the National Question', Lanka Guardian, Vol. 2, No. 18: 20-30.

Kaul, R. 1974. 'The Indian Ocean: A Strategic Posture for India', in Poulose, T.T. (ed.), Indian Ocean Power Rivalry, New Delhi: International Publications.

Kaushik, D. 1987. Perspectives on Security in Indian Ocean Region, New Delhi: Allied Publishers.

Kearney, R.N. 1964. 'Sinhalese Nationalism And Social Conflict in Ceylon', Pacific Affairs, No. 37: 125 – 136.

Kearney, R.N. 1967. Communalism and Language in the Politics of Ceylon, Durham: Duke University Press.

Kearney, R.N. 1978. 'Language and the rise of Tamil Separation in Sri Lanka', Asian Survey, Vol. 18, No. 5: 531-34.

Kearney, R.N. and Miller, B.D. 1987. Internal Migration in Sri Lanka and its Social Consequences, Colorado: West View Press.





Keen, David. 1997. 'The Political Economy of War,' in F. Stuart, (Ed.), The Social and Economic Cost of Conflict in Developing Countries, London: DEID,

Keerawella, G. 1990. 'Peace and Security of a Small State: Sri Lankan Responses to Super Power Naval Rivalry in the Indian Ocean, 1970-1977', in S. Kodikara, (ed.), South Asian Strategic Issues, pp175-196, New Delhi: Sage, pp175-196.

Kelman, H. 1978. 'Israelis and Palestinians: Psychological Prerequistes for Mutual Acceptance'. International Security, No. 3: 162-86.

Kibamuna, S. 1986. 'The Tamils in Ancient and Medieval Sri Lanka: the Historical Roots of Ethnic Identity', Ethnic Studies Report, Vol. 4, No. 1: 9-23.

Kissinger, H. 1979. White House Years, Boston: Brown and Company.

Kodikara, S U. 1965. Indo-Sri Lanka Relations Since Independence, Colombo: Ceylon Institute of World Affairs.

Kodikara, S.U. (ed.), 1990. South Asian Strategic Issues: Sri Lankan Perspective, New Delhi: Sage.

Kodikara, S.U. (ed.), 1993. External Compulsions of South Asian Politics, New Delhi: Sage.

Kodikara, S.U. 1970. 'Communalism and Political Modernization in Ceylon', Modern Ceylon Studies, Vol. 1, No. 1: 94-114.

Kodikara, S.U. 1978. 'Contemporary Indo-Lanka Relations', Sri Lanka Journal of Social Sciences, Vol.1, No. 1: 61-73.

Kodikara, S.U. 1981. 'The Separatist Eelam Movement in Sri Lanka: An Overview', India Quartely, Vol. 37, No. 2: 198-212.

Kodikara, S.U. 1982. Foreign of Sri Lanka: A Third World Perspective. Delhi: Chankkya Publication.

Kodikara, S.U. 1988. 'India in Sri Lanka's Internal Affairs – The Accord', Lanka Guardian, Vol. 11, No. 10: 11 – 14.

Kodikara, S.U. 1989. 'The Continuing Crisis in Sri Lanka, the JVP, Indian Troops and Tamil Politics', Asian Survey, Vol. 29, No. 7: 716 – 24.

Kodikara, S.U. 1989. Indo – Sri Lanka Agreement of July 1987, Colombo: Sri Devi Printers (Pvt) Ltd.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Krishna, S. 1979. 'Divergent Narratives: Dravidian And Eelamist Tamil Nationalisms', in Roberts, Michael (ed.),. Collective Identities, Nationalisms and Protests in Modern Sri Lanaka, Volume 2. PP 315 – 346, Colombo: Marga Institute.

Krishna, Sankaran, 1999. Postcolonial Insecurities: India, Sri Lanka and the Question ofNationhood, Minneapolis and London: The University of Minnesota Press.

Kumar, L. 1977. India – Sri Lanka Relations: The Sirimavo – Shastri Pact, New Delhi: Chetna.

Kumarasamy, P.R. 1987. 'Israeli Connections of Sri Lanka', Strategic Analysis, Vol. 11, No. 2: 1341 – 55.

Kval, S. 1996. Interviews: An introduction to Qualitative Research Interviewing, London: Sege.

Lawson, M.G. et al. 1968. 'The United States Information Agency During Administration of President Lyndon B. Johnson' United States Information Agency, Vol. 1: 111.

Lee, R.M. 1993. Doing Research on Sensitive Topics, Londo: Sege.

LeVine, R.A. and Campbell, D. 1972. Ethnocentrism: Theories of Conflict, Ethnic Attitudes and Groups Behaviour, New York: John Wiley.

Little, D. 1994. Sri Lanka: The Invention of Enmity, Washington: Institute of Peace.

Livingstone, S. no date. The Sinhalese and the Aryan Theory, Colombo: Mortlake Press.

Liyanagamage, A. 1993. The Indian Factor in the Security Perspective of Sri Lanka, Sri Lanka: Sri Devi Printers Ltd.

Loganathan, K. 1996. Sri Lanka: Lost Opportunities, Colombo: University of Colombo press.

Mahadeva, K. 1994. A Plan for Peace in Eelam, Birmingham: Century National Christian Council.

Malalasekera, G.P. 1928. The Pali Litrature of Ceylon Vol.10. Colombo: RAS Publication Ltd.

Manikkalingam, R. 1995. Tigerism and other Essays, Colombo: Karunaratna & Sons Ltd.





Manogaran, C and Pfaffenburger, B. 1994. The Sri Lankan Tamils: Ethnicity and Identity, Colorado: West view Press.

Manogaran, C. 1987. Ethnic Conflict and Reconciliation in Sri Lanka, Honolulu: University of Hawaii Press.

Manogaran, C. 1988. 'Indo – Sri Lanka Accord of 29 July 1987: A Tamil Linguistic Province and Lasting Peace in Sri Lanka', Round Table, No. 206: 195 – 200.

Manogaran, C. 1993. 'A Political Solution to the National Conflict in Sri Lanka', Refuge, Vol. 13, No. 3: 23-26.

Manor, J. (ed.), 1984. Sri Lanka in Changes and Crisis, New York: St. Martin Press.

Manor, J. 1979. 'The Failure of Political Integration in Sri Lanka (Ceylon)', Journal of Commonwealth and Comparative Politics, Vol. 7, No. 1: 27-46.

Manor, J. and Segal, G. 1985. 'Causes of Conflict: Sri Lanka and Indian Ocean Strategy', Asian Survey, Vol. 25, No. 12: 1174.

Mansingh, S. 1984. India's Search for Power: Indira Gandhi's Foreign Policy 1966-1982, New Delhi: Sage Publication.

Marga Institute, 1994. Reflections on Governance, Colombo: Marga Publication

Maunaguru, S. 1995. 'Gendering Tamil Nationalism: The Construction of "Women" in Project of Protest and Control', in Jeganathan, P. and Ismail, Q.(eds.), Unmaking the Nation: The Politics of Identity and History in Modern Srilanka, Colombo: Social Science Association pp158-175.

Mendis, G.C. (ed.), 1956. The Colebrook – Cameron Papers Volume One,Oxford: Oxford University Press.

Miles, M.B. and Huberman, M.A. 1994. Qulitative Data Analysis, London: Sege.

Mohan, V. 1987. Identity Crisis of Sri Lankan Muslims, Delhi: Mittal Publication.

Montville, J.V. 1991. 'The Arrow and the Olive Branch: A Case for Track Two Diplomacy' in V.D. Volkan, J.V. Montville and J.A. Demetrios (eds.), The Psychodynamic of International Relationships, Volume 2. pp 161-176, Lexington: Lexington Books.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Moore, M. 1985. The State and Peasant politics in Sri Lanka, Cambridge: Cambridge University Press.

Movement for Inter-Racial Justice and Equality, 1980. Emergency 79, Colombo: C M U Press.

Mukarji, A. 2000. The War in Sri Lanka: Unending Conflict?, New Delhi: Har-Annand Publications (PVT) Ltd.

Muni, S. 1991. 'Indo – Sri Lanka Relations and Sri Lanka's Ethnic Conflict', in De Silva, K. M. and May, R. (eds.), Internationalisation of Ethnic Conflict, London: ICES/ Printer.

Muni, S.D. 1984. 'Indians In South Asia: Socio-Economic Status and the Emerging Political Order' in B. Singh. (ed.), I. J. Indians in South Asia, New Delhi: Sterling Publishers.

Muni, S.D. 1987. 'Indo – Sri Lanka Agreement: Regional Implication', Mainstream, Vol. 25, No. 8: 19 – 23.

Muni, S.D. 1993. Pangs of Proximity: India and Sri Lanka's Ethnic Crisis, New Delhi: Sage.

Murray, N. 1984. 'The State Against the Tamils", Race and Class (London). Vol. 26, No. 1: 97-110.

Nadesan, S. 1993. A History of the Up-Country Tamil People in Sri Lanka, Sri Lanka: Nandalala Publications.

Nambi, K. 1980. Tamil Renaissance and Dravidian Nationalism, Colombo: Madurai Koodal Publishers.

Narayanswamy, M.R. 1994. Tigers of Lanka: From Boys to Guerrillas, Delhi: Konark Publishers

Navaratnam, V. 1991. The Fall and Rise of the Tamil Nation, Madras: Kaanthalakam.

Nesiah, D. 1997. Discrimination with Reason: The Policy of Reservation in the United States, India and Malaysia, Oxford: Oxford University Press.

Nesiah, D. 2001. Tamil Nationalism, Colombo: Marga Institute Publication.

Nicholas, C.W. and Paranavitana, S. 1961. A Concise History of Ceylon, Colombo: Ceylon University Press.





Nissan, E. 1996. Sri Lanka: A bitter Harvest, London: Minority Rights Group.

Nithyananthan, V. 1987. 'An Analysis of Economic Factors Behind the Origins and Development of Tamil Nationalism in Sri Lanka', in Ethnicity and Social Change in Sri lanka, Colombo: Social Science Association Publication.

Noorani, A.G. 1988. 'Discordant Accord: India Blundered Badly in Sri Lanka', The Week, Vol. 6, No. 34: 34 – 37.

Northrup, T. 1989. 'The Dynamic of Identity in Personal and Social Conflict' in L. Kriesberg. et al. (eds.), Intractable Conflicts and their Transformation, pp55-82,Syracuse: Syracuse University Press.

Northrup, Terrell, A. 1989. 'The Dynamic of Identity in Personal and Social Conflict.' In Louis Krieberg, Terrell A Northrup, and Stiart J. Thorson (eds.). Intractable Conflicts and their Transformation. Syracuse: Syracuse University Press.

O'Balance, E. 1989. The Cyanide War: Tamil Insurrection in Sri Lanka 1973 1988, UK: Brassy's (UK) Ltd.

Obeyasekere, G. 1984).'Political Violence and Future Democracy in Sri Lanka', International Asian Forum, Vol. 15, No. 6: 36-60.

Obeyesekere, G. 1984. 'The Origins and Institutionalisation of Political Violence', in J. Manor, (ed.), Sri Lanka In Change and Crisis, London: Croom Helm.

Obeyesekere, R. 1999. Sri Lankan Theater in a Time of Terror: Political of Tamil Sinhalese Race Relations, New Delhi: M D Publishers.

Obyesekere, G. 1979. 'The Vicissitudes of the Sinhala Buddhist Identity Through Time and Changes', in M. Roberts (ed.), (1979) Collective Identities, Vol.1. pp 355-385, Colombo: Marga Institute.

Omvedt, G. 1984. 'The Tamil National Questio'" The bulletin of Concerned Asian Scholars, Vol. 16, No. 1, January-March: 23-26.

Padmanabhan, V.K. 1991. 'Ethnic Question in Sri Lanka and the Politics of Tamil Nadu' in V. Surynarayan, (ed.), Sri Lankan Crisis and India's Response, New Delhi: Patriot Press

Palanithurai, G. and Mohandas, M. 1993. Dynamics of Tamil Nadu Politics in Sri Lankan Ethnicity, New Delhi: Northern Book Centre.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Paranavitana, S. 1959. History of Ceylon, Colombo: Government Pres.

Parthasarathy, M. 1985. 'Sago of a Doctor... Political Prisoner... Liberation Activist'. Frontline, 23 March-5 April.

Pathimanathan, S. 1986. 'Religion and Social Change in Northern Sri Lanka, 1796 – 1875: Protestant Missionary Activity and the Hindu Response', Journal of Modern Sri Lankan Studies, Vol. 1, No. 1: 15 – 42.

Pathmanathan, S. 1978. The Kingdom of Jaffna, Colombo: Arul Rajendram.

Peebles, P. 1997. 'Colonisation and Ethnic Conflict in the Dry Zone of Sri Lanka', The Journal of Asian Studies, Vol. 49, No. 1: 30 – 35.

Peiris, D. 1985. 'Colombo Rides Tigers', South

Peiris, G.H 1996. Development and Changes in Sri Lanka: Geographical Perspective, Colombo: M D Gunasena & Co.

Perera, S. (ed.), 1996. Newton Gunasinghe: Selected Essays, Colombo: Social Scientists Association.

Pfaffenberger, B. 1990. 'The Political Construction of Defensive Nationalism: The 1967 Temple Entry Crisis in Northern Sri Lanka', Journal of Asian Studies, Vol. 49: 78–96.

Phadnis, U. (1990) 'Ethnic Dynamics in South Asian States', South Asian Journal, Vol. 3, No. 3: 261 – 72.

Phadnis, U. 1976. Religion and Politics in Sri Lanka, New Delhi: Manohar Book Service.

Phadnis, U. 1979. 'Ethnic Groups in the Politics of Sri Lanka', in D. Taylor and M. Yapp (ed.), Political Identity in South Asia, London: Curzon Press.

Phadnis, U. 1979. 'Ethnicity and Nation Building in South Asia: A Case Study of Sri Lanka', Lanka Quarterly, No. 3 329 – 350.

Phadnis, U. 1987. 'Indo-Sri Lanka Agreement-Task Ahead', Mainstream, Vol. 26, No. 6: 21-26.

Phadnis, U. and Ganguly, R. 2001. Ethnicity and Nation- Building in South Asia, New Delhi: Sage Publications.

Phadnis, U. and Jetly, N. 1990. Indo – Sri Lanka Relations: The Indira Gandhi Years, London: Sangam.





Phandis, U. 1975. Ethnic Tensions in South Asia: Complications for Regional Cooperation, New Delhi: Centre for Policy Research.

Philip, A.S. 1992. Sri Lanka: Chronology of Events 1991, Norway: Sri Lanka Resource Centre.

Pieris, R. 1953. 'Administration of Justice and Revenue on the Island of Ceylon under the Dutch Government', (The Cleghorn Minute), Journal of Royal Asiatic Society(Ceylon Branch), Vol. 3, No. 2: 131.

Piyadasa, L. 1984. Sri Lanka: The Holocaust and After, London: Marram Books.

Ponnmbalam, S. 1983. Sri Lanka: The National Question and the Tamil Liberation Struggle, London: Led Books Ltd.

Pratap, A. 1985. 'Talking Over Genocide', Sunday, Vol. 12, No. 44: 32-35.

Pratap, A. 1986. 'Sri Lanka: When Tamils Killed Tamils', Sunday. Vol. 13, No. 30: 64.

Pratap, A. 1986. 'Sri Lankan Crisis: Exit Ideology, Enter Adventurism', Sunday. Vol. 13, No. 20: 48-49.

Premachandran, K. 1989. Ethnic Conflict in Sri Lanka: An Evaluation of Historical Facts and Current Situation, Colombo: EPIC Publication.

Premachandran, K. 1993. Inaugural Address by Secretary General Comrade Premachandran, At the Second Congress of the Eelam People's Revolutionary Liberation Front, Madras: EPIC Publication.

Premdas, R.R. et al (eds.), 1990. Secessionist Movements in Comparative Perspective, Colombo: I C E S Publication Press.

Priyadarshini, A. 1987. 'India and the Ethnic Strife in Sri Lanka', Journal of Political Studies, Vol. 26, No. 2: 44 – 55.

Pruitt, D. G and Rubin, J. 1986. Social Conflict: Escalation, Stalemate and Settlement, New York: Random House.

Rajah, V. 1998. Tamil Exodus and Beyond: An Analysis of the National Conflict in Sri Lanka, London: LTTE Publication.

Rajanayagam, P. 191998. 'Government-LTTE Negotiations (1994-1995) Another Lost Opportunity' in Rupesinghr, K. (ed.) Negotiating



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Peace in Sri Lanka: Efforts, Failures and Lessons, London: International Alert.

Rajappa, S. 1983. 'Fears for Lanka Unity, even Moderate Tamils Demand Eelam', Times of India.

Rajasingham, Senanayake, D. 1999. 'The Dangers of Devolution: The Hidden

Rajayan, K. 1982. History of Tamil Nadu 1565-1982, Madras: M.K. University Press.

Ram, M. 1989. Sri Lanka: The Fractured Island, New Delhi: Penguin Books.

Ram, N. 1987. 'Waging Peace in Sri Lanka', Frontline, Vol. 4, No. 16: 4 – 15.

Ramaswamy, P. 1987. New Delhi and Sri Lanka: Four Decades of Politics and Diplomacy, New Delhi: Allied Publishers Private Ltd.

Rana, S. 1995. 'Small Arms and Intra-State conflicts', Research paper No.34. New York and Geneva; UNIDIR, UN.

Ranatunga, S. 1988. Politics of Terrorism: The Sri Lankan Experience, Canberra: International Fellowship for Social and Economic Development (IFSED).

Rao, P.V. (1989) 'Foreign Involvement in Sri Lanka', Round Table, No. 309: 88 – 100.

Rasanayagam, C. 1926. Ancient Jaffna, Madras: Everyman's Publishers.

Richardson J.M. Jr. and Samarasinghe, S.W.R.de.A (eds.), 1998. Democratisation in South Asia: the First Fifty Years, Colombo: Sridevi Printers (Pvt) Ltd.

Robert, M. 1978. 'Ethnic conflict in Sri Lanka and Sinhalese Perspectives: Barriers to Accommodation', Modern Asian Studies, Vol. 12, No. 3: 353-376.

Roberts, M. (ed.), 1977. Documents of the Ceylon National Congress and National Politics in Ceylon 1929-1950. Vol.I, Colombo: Department of National Archives.

Roberts, M. (ed.), 1979. Collective Identities, Nationalism and Protect in modern Sri Lanka. Vol. I. [Reprinted in 1997], Colombo: Marga Institute.





Roberts, M. (ed.), 1979. Collective Identities,Nationalism and Protect in Modern Sri Lanka. Vol. II. [Reprinted in 1998],Colombo: Marga Institute.

Roberts, M. 1970. 'Stimulants and Ingredients in the Awakening of Latter Day Nationalism', in M. Roberts, (ed.), Collective Identities, Nationalisms and Protests in Modern Sri Lanka. Volume 1. PP 267 – 292, Colombo: Marga Institute.

Roberts, M. 2001. Sinhala-ness And Sinhala Nationalism, Colombo: Marga Institute Publication.

Ross, H. 1991. 'Case Studies', in G Allan and C.Skinner (eds.), Hand Book for Research Students in the Social Science, London: Falmer Press.

Ross, M.H. 1993a. The Culture of Conflict: Interests, Interpretations and Disputing in Comparative Perspective, New Haven: Yale University Press.

Ross, M.H. 1993b. Managing Disputes Constructively: Interests, Interpretations and Disputing in Comparative Perspective, New Have; Yale University Press.

Ross, M.H. 1995. 'Psycho Cultural Interpretation Theory and Peace Making in Ethnic Conflicts', Political Psychology, No. 16: 523 – 44.

Rotberg G.R.J. (ed.), 1999. Creating Peace in Sri Lanka: Civil War and Reconciliation, Washington D.C: Brokings Institution Press.

Rothman, J. 1991. 'Negotiation as Consolidation: Prenegotiations in the Israeli-Palestinian Conflict', Jerusalem Journal of International Relations, No 13: 22-44.

Rothman, J. 1992. From Confrontation to Co-operation: Resolving Ethnic Conflict in the Middle East and Beyond, Beverly Hills, Co: Sage Publications.

Ruphesinghe, K. 1988. 'Ethnic Conflict in South Asia: The Case of Sri Lanka and the Indian Peace Keeping Force', Journal of Peace Research, (Oslo), Vol. 25, No. 24: 337 – 350.

Russell, J. 1982. Communal Politics under the Donoughmore Constitution 1931 – 1947, Sri Lanka: Tisara Prakasakayo Ltd.

Sahadevan, P. 1995. India and Overseas Indians: The Case of Sri Lanka, Delhi: Kalinga Publishers.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Sahadevan, P. 1995. India and Overseas Indians: The Case Study of Sri Lanka, Delhi: Kalinga Publications.

Samarasinghe, S.W.R.de A. 1984. 'Ethnic Representation in Central Government Employment and Sinhala- Tamil Relations in Sri Lanka: 1948-81', in R.B. Goldmann, and A.J. Wilson, (ed.), From Independence to Statehood: Managing Ethnic Conflict in Five African and Asian States, pp 173-185, London: Frances Printers.

Samarasinghe, S.W.R.de. A and Coughlan, R. 1991. Economic Dimensions of Ethnic Conflict, London: St. Martins Press.

Samaraweera, V.K. 1973. 'Land Policy and Peasant Colonisation', in De Silva, K.M (ed.), History of Ceylon, Predeniya: University of Ceylon publication.

Sanmugathasan, N. 1984. 'Sri Lanka: The Story of the Holocaust', Race and Class, Vol. 26, No. 1: 63-82.

Sardeshpende, S.C. 1992. Assignment Jaffna, New Delhi: Lancer Publishers Ltd.

Satchithananthan, V. 1971. Standardisation or Socialism?: University Entrance Exam, Jaffna: V. Satchithananthan.

Schrijvers, J. 1999. 'Fighters, Victims and Survivors: Constructions of Ethnicity, Gender and Refugees Among Tamils in Sri Lanka', Journal of Refugee Studies, Vol. 12, No. 3: 307-333.

Schwarz, W. 1975. The Tamils of Sri Lanka, London: Minority Rights Groups Publications.

Seevaratnam, N. (ed.), 1989. The Tamil National Question and The Indo-Sri Lanka Accord, Delhi: Konark Publishers.

Selbourne, D. 1982. 'Sinhala Lions and Tamil Tigers', The Illustrated Weekly of India (Bombay). Vol. 103, No. 37: 6-8. and Vol. 103, No. 38: 16-17.

Seneviratne, B. 1986. 'The Problems of Sri Lanka', in Bahadur, Kalim (ed.), South Asia in Transition: Conflicts and Tension, New Delhi: Patriot publishers.

Seneviratne, M. 1995. Search for a Tamil Homeland, Colombo: Swastika (Pvt) Ltd.

Seneviratne, M. 2000. A Lasting Storm, Sri Lanka: 1948-2001, Colombo: Wimal Enterprises.





Senewiratne, B. 1990. Human Rights Violations in Sri Lanka, Melbourne: Art Offset.

Shanmugaratnam, N. 1989. 'Seven Days in Jaffna: Life under Indian Occupation', Race and Class, Vol. 31, No. 2: 1 – 6.

Shanmugaratnam, N. 1993. 'The Tamil National Question in Sri Lanka: Some Reflection', Tamil Times, Vol. 12, No. 9.

Sharan, P. 1982. Government and Politics in Sri Lanka, New Delhi: Metropolitan Books.

Shastri, A. 1990. 'The Material Basis for Separatism: The Tamil Movement in Sri Lanka', The Journal of Asian Studies, Vol. 49, No. 1: 56 – 77.

Sherif, M. et al. 1988. The Robbers Cave Experiments: Inter groups Conflict and Co-operation. Middletown, CT: Wesleyan University Press.

Shreedhar, T. 1984. 'Anatomy of Trincomalee Deal', Strategic Analysis, Vol.111, No. 3.

Singer, M. R. 1992. 'Sri Lanka's Provincial Council System: A Solution to the Ethnic Problem', Asian Survey, Vol. 32, No. 8.

Singh, D. 1992. IPKF in Sri Lanka, Delhi: Trishul Publication.

Sinha Rao, K.V. 1987. 'Militarisation of Sri Lanka: A Tabular Story', Strategic Analysis, March, Vol. 11, No. 12: 1457.

Sivanandan, A. 1984. 'Sri Lanka: Racism and the Politics of Under Development', Race and Class, Vol. 26, No. 1: 1-38.

Sivanayagam, S. 2001. The Pen and the Gun: Selected Writings 1977-2001, London: Tamil Information Centre.

Sivarajah, A. 1990. 'Indo-Sri Lanka Relations and Sri Lanka's Ethnic Crisis: The Tamil Nadu Factor, in S.U. Kodikara, (ed.), South Asian Strategic Issues: Sri Lankan Perspective, pp 135-160, New Delhi: Sage Publication.

Sivarajah, A. 1996. Politics of Tamil Nationalism in Sri Lanka, New Delhi: South Asian Publishers.

Sivathamby, K. 1984. 'Evolution of the Tamils Question', Lanka Guardian Vol. 6, No. 18, 15 January 1984: 12-14; Vol. 6, No. 19, 1 February 1984: 5-9; Vol. 6, No. 20,15 January 1984: 12-14; Vol. 6, No. 20, 15 February 1984: 20-22; Vol. 6, No. 21, 1 March 1984: 112-113 & 116.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Sjoberg, Andree. 1971. Symposium on Dravidian Civilisation: Asian Series of the Center for Asian Studies of the University of Texas, New York: Jenkins Publishing co.

Smarasinghe, S W R de A. 1984. 'Sri Lanka in 1983: Ethnic Conflict and the Search for Solutions', Asian Survey, Vol. 24, No. 2: 250 – 6.

Smith, A.D. 1971. Theories of Nationalism, London: Duckworth.

Smith, Anthony D. 1983. 'Ethnic Identity and World Order.' Millennium Vol. 12: 149-61.

Smith, D.E. 1979. 'Religion, Politics and the Myth of Re-conquest', in Tissa Fernando and Kearney, R.N (ed.), Modern Sri Lanka; A Society in transition, Syracuse: Maxwell School of Citizenship and Public Affairs.

Somasundram, M. (ed.), 1999. Reimagining Sri Lanka: Northern Ireland Inside, Colombo: Unie Arts (Pvt) Ltd.

Spencer, J. (ed.), 1990. Sri Lanka: History and the Roots of Conflict, London: Routledge.

Sri Kantha, S. 1977. 'Tamil Mandate for Eelam', Tribune, Vol. 22, No. 18: 14-16.

Sriweera, W.I. 1983. 'Recent Developments in Sinhala-Tamil Relations', Asian Survey, Vol. 20, No. 9: 903-913.

Stern, D.N. 1985. The Interpersonal World of the Infant, New York: Basic Books.

Stokke, K. 1998. 'Sinhala-Tamil Nationalism as post-colonial Political Projects From 1948-1983', Political Geography, Vol. 17, No. 1: 83-113.

Subramaniam, T.S. 1986. 'A Terrible Bloody Fend', Frontline. Vol. 3, No. 10: 18-19.

Subramaniyam, K. 1987. 'Sri Lanka: A Strategic Perspective', Frontline, Vol. 4, No. 7: 7 – 10.

Suriya N.V. (ed.), 1991. Sri Lankan Crisis and India's Response, New Delhi: Patriot.

Suriyakumaran, C. 1990. The Anguish of 1983: Sri Lanka's Ethnic Crisis and the Way Out, Colombo: K. V. G. De Silva (Colombo) Ltd.

Suriyakumaran, C. 1995. Anguish – II. 1990-1995: A Sequel to the 'Anguish of 83', Colombo: K. V. G. de Silva Ltd.





Suryanarayan, P.S. 1988. The Peace Trap: an Indo-Sri Lankan Political Crisis, Madras: East-West Press.

Suryanarayan, V. 1990. 'Sri Lanka and Indian Ocean as a Zone of Peace', Strategic Analysis, pp 453 – 62.

Swamy, M.R.N. 1995. Tigers of Lanka: From Boys to Guerrillas, Delhi: Konark Publishers (Pvt) Ltd.

Tambiah, S.J. 1955. 'Ethnic Representation in Ceylon's Higher Administrative Services 1870-1946', University of Ceylon Review, Vol. 13, No. 2 & 3: 113-134.

Tambiah, S.J. 1967. 'The Politics of Language in India and Ceylon', Modern Asian Studies, No. 1: 215 – 240.

Tambiah, S.J. 1986. Sri Lanka: Ethnic Fratricide and the Dismantling of Democracy, USA: University of Chicago Press.

Tambiah, S.J. 1990. 'Sri Lanka: Introduction', Journal of Asian Studies, Vol. 49, No. 1: 26–29.

Tambiah, S.J. 1992. Buddhism Betrayed? Religion, Politics and Violence In Sri Lanka, Chicago: The University of Chicago Press.

Tamil Information Center, 1997. The International Crime of Genocide: The Case of Tamil People in Sri Lanka., London: Tic Publication.

Tauli, V. 1968. Introduction to Theory of Language Planning, USA: Uppsala.

Taylor, D..M. and Moghaddam, F.M. 1987. Theories of Inter group Relations: International Social Psychological Perspective, New York: Praeger.

Tennet, J.M. 1959. Ceylon Vol.1&2, London: Longman Press.

The Muslim, 1987. 'Colombo Protests to India: Tamil Nadu Giving Aid to Sri Lankan Rebels', The Muslim (Lahore).pp 15 17.

The University Teachers For Human Rights (Jaffna), 1994. Someone Else's War, Colombo: C. R. C Press.

Thevarajan, A. 1995. Tamil as official Language: Retrospect and Prospect, Colombo: International Centre For Ethnic Studies (ICES).

Thornton, E.M. 1985. Sri Lanka, Island of Terror: An Indictment, Middlesex: Eelam Research Organisation.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Tiruchelvam, M. and Dattathreya, C.S. 1998. Culture and Politics in Sri Lanka, Colombo: Unie Arts (Pvt) Ltd.

Tiruchelvam, N. 1984. 'Ethnicity and Resource Allocation', in Goldmann, R.B and A.J. Wilson, (eds.), From Independence to Statehood: Managing Ethnic Conflict in Five African and Asian States, pp 196-210, London: Frances Printers.

Tiruchelvam, N. 2000. Transcending the Bitter Legacy: Selected Parliamentary Speeches, Colombo: Unie Arts (Pvt) Ltd.

Tiruchelvam, N. and Coomaraswamy, R. 1987. The Role of Judiciary in Plural Societies, UK: Frances Printers.

Tiruchelvam, Neelan, 2000. 'The Politics of Federalism and Diversity in Sri Lanka,' in Yash Ghai (ed.), Autonomy and Ethnicity, Negotiating Competing Claims in Multi-ethnic Societies, Cambridge University Press.

Tiwari, C. K. 1989. Security in South Asia: Internal and External Dimensions, New York: University Press of America.

Triphthi, D. 1989. Sri Lanka's Foreign Policy Dilemmas, London: RHA.

Tusker, R. 1985. 'Bring of Civil War', Far Eastern Economic Review.pp 36.

Urmila, P. 1987. 'Keeping the Tamils Internal', Far Eastern Economic Review No. 75: 21-22.

Uyangoda, Jayadeva, 1994. 'Ethnicity, Nation and State Formation in Sri Lanka: Antinomies of Nation-Building,' Pravada, No. 3.

Uyangoda, Jayadeva, 2002a. 'Sri Lanka's Conflict: Complexities in a Negotiated Settlement,' in Paul R Brass & Achin Vanaik (eds.), Competing Nationalisms in South Asia, New Delhi: Orient Longman.

Uyangoda, Jayadeva, 2002b. 'Civil War and the Peace Process in Sri Lanka,' Asian Exchange, Vol. 17, No. 2 and Vol. 18, No. 1.

Vaidic, V.P. 1986. Ethnic Crisis in Sri Lanka: India's Option, New Delhi: National.

Vaidya, K.P. 1959. The National Defence of India, Bombay: Allied Publication





Van den Berghe, P.L. 1981. The Ethnic Phenomenon, New York: Elsvier.

Vanniasingam, S. 1988. Sri Lanka: The Conflict Within, New Delhi: Lancer.

Vasantharajah, S. 1996. Tamil Exodus and Beyond: An Analysis of the National Conflict in Sri Lanka, London: Published by LTTE.

Veeramani, K. 1992. The History of the Struggle for Social Justice in Tamil Nadu, Madras: The D K Publications.

Venkatachalam, M.S. 1987. Genocide in Sri Lanka, New Delhi: Lancer.

Venkateswaran, A.P. 1987. 'The Great Failure – Lankan Mistake can still be corrected', The Week, pp 67 – 73.

Venkatramani, S.H. 1987. 'Jaffna: Bearing the Blockade', India Today, 15 February1987: 80-84.

Venugopal, P. 1992. Justice Party and Social Justice, Madras: Periyar Self-Respect Propaganda Institution.

Vije, M. 1985. Oppression of Tamils in Sri Lanka, London: Tamil Information Centre.

Vije, M. 1986. Militarisation in Sri Lanka, London: Tamil Information Centre.

Vije, M. 1987. Where Serfdom Thrives: The Plantation Tamils of SriLanka, Madras: Tamil Information Centre.

Vitache, T. 1958. Emergency 1958: The Story of the Ceylon Race Riots, London: Andre Deutsch.

Volkan, V. D. 1988. The Need to have Enemies Allies: From Clinical Practice to International Relationship, New York: Jason Aronson.

Wanapala, W.A.W. 1994. Ethnic Strife and Politics in Sri Lanka: An Investigation Into Demands and Responses, Colombo: Navarang.

Waters, J. 1986. 'Origin of the Ethnic Conflict in Sri Lanka: The Colonial Experience', South Asian Bulletin, Vol. 6, No. 2: 3 – 8.

Weerawardana, I.D.S. 1960. Ceylon Genetral Election 1956, Colombo: M D Gonasena & Co.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Werake, M. and Jeyasekara, P.V.J. (eds.), 1996. Security Dilemma of Small States, Kandy: Institute of International Studies.

Whall, H.J. 1995. The Right to Self-Determination: the Sri Lankan Tamil National Question, London: Tamil Information Centre.

Wickramaratne, J. 1996. Fundamental Rights in Sri Lanka, New Delhi: Navarang Publishers.

Wijemanne, A. 1986. War and Peace in Post-Colonial Ceylon: 1948-1991, New Delhi: Orient Longman Ltd.

Wijesekera, C. 1999. On Devolution, Unitarism, & Majoritorian Elitism, Colombo: Cosmolink Offset Printers.

Wijesekera, N.D. 1965. The People of Ceylon, Colombo: M D Gunadena and Co.

Wijesingha, R. 1986. Current Crisis in Sri Lanka, New Delhi: Navarang.

Wilson, A.J. 1961. 'The Tamil Question of Ceylon', Bulletin of the International Commission of Jurists,No. 12: 9 – 12.

Wilson, A.J. 1966. 'The Tamil Federal Party in Ceylon Politics', Journal of Commonwealth Political Studies Vol. 4, No. 2: 117-135.

Wilson, A.J. 1974. Politics in Sri Lanka, 1947 – 1973, New York: St. Martin Press.

Wilson, A.J. 1974. Politics in Sri Lanka, London: MacMillan Press.

Wilson, A.J. 1975. Electoral Politics in an Emergent State: The Ceylon General lection of May 1970, Cambridge: Cambridge University Press.

Wilson, A.J. 1979.. 'The Politics of Ethnicity and Ethno-Nationalisms in Asia' in Roberts, M. (ed.),. Collective Identities, Nationalisms and Protests in Modern Sri Lanka". Volume 2. PP 347 – 356, Colombo: Marga Institute.

Wilson, A.J. 1980. The Gaullist System in Asia: The Constitution of Sri Lanka 1978, London: Cambridge University Press.

Wilson, A.J. 1986. 'Sri Lanka: It's Future and International Ramifications', Tamil Times, p 11.

Wilson, A.J. 1988. The Break-up of Sri Lanka: The Sinhalese – Tamil Conflict, London: C. Hurst & Co. (Publishers) Ltd.





Wilson, A.J. 1989. The States of South Asia: Problems of National Integration, London: Christopher Hurst.

Wilson, A.J. 1994. Chelvanayagam and the Crisis of the Sri Lankan Tamil Nationalism. 1947 – 1977, London: C. Hurst & Co.

Wilson, A.J. and Chanrakanthan, A.J. 1998. 'Tamil Identities and Aspirations', in Conciliation Resources (ed.), Demanding Sacrifice: War and Negotiation in Sri Lanka.,London: Conciliation Resources.

World Council of Churches, 1990. Plurality, Passion and Power, Colombo: National Christian Council.

Wriggins, H.W. 1982. 'Sri Lanka in 1981 – Year of Austerity, Development Councils and Communal Disorders', Asian Survey, Vol. 22, No. 2: 171 – 179.

Wriggins, W.H. 1960. Ceylon: Dilemmas of a New Nation, New Jersey: Princeton University Press.

Wriggins, W.H. 1982. 'US Interest in South Asia and the Indian Ocean' in Lawrence Zirig (ed.) Subcontinent In World Politics, New York: Praeger.

Yash, Ghai, (ed.), Autonomy and Ethnicity, Negotiating Competing Claims in Multi-ethnic Societies, Cambridge University Press.

Yin, Robert. 1994. Case study Research: Design and Methods, London: Sege Publication.

Zackariya, F. and Shanmugaratnam, N. 2003. 'Communalisation of Muslims in Sri Lanka: An Historical Perspective', www.google/shanmugaratnam.n, 06 12 2003: 1-31.

Zartman, William I. (ed.), 1995. Elusive Peace: Negotiating an end to Civil Wars, Washington DC: The Brookings Institution.

## Primary Sources

Official Publications of the Government of Sri Lanka.

Central Bank of Ceylon, 1981. Economic & Social Statistics of Sri Lanka, Kelaniya: The Vidyalankara Privena Press.

Central Bank of Ceylon, 1982. Report on Consumer Finances and Socio-Economic Survey, 1981/82, Kelaniya: The Vidyalankara Privena Press.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Central Bank of Ceylon, 1994. Review of the Economy 1977-1993, Colombo: Bank of Ceylon Publication.

Central Bank of Ceylon, Annual Reports 1977-1992, Colombo: Bank of Ceylon Publication.

Central Bank of Ceylon, Annual Reports of the Monetary Board to the Minister of Finance for the years 1960-70, Kelaniya: The Vidyalankara Privena Press.

Ceylon Department of Census and Statistics, 1972. Census of Population 1971, Sri Lanka: Government Press.

Ceylon Department of Elections, 1971. Results of Parliamentary General Elections in Ceylon 1947-1970, Colombo: Dept. of Government Printers.

Ceylon Department of Information, Government of Ceylon [compiled], 1963. Towards a New Era- Selected Speeches of SWRD Bandaranaike in the Legislative of Ceylon 1931-59, Colombo: Government Publication.

Ceylon Department of Information, 1963. SWRD Bandaranaike - Speeches and Writings, Colombo: Government Publication.

Government of Ceylon, Department of Information, 1954. SWRD Bandaranaike-the Foreign Policy of Ceylon- Extract From Statements, Colombo: Government Publication.

Government of Sri Lanka Department of Information, (22 May 1984) Mission of Violence, Colombo: Dept. of Government Printing.

Government of Sri Lanka Ministry of State Publications, 1986. It's Our Duty and Right to Act in Self-Defence, Colombo: Dept. of Government Printing.

Government of Sri Lanka, Department of Census and Statistics, Ministry of Plan and Information, 1982. Sri Lanka Economic Atlas-1980, Colombo: Government Press.

Government of Sri Lanka, Department of Census and Statistics, 1982. Sri Lanka Year Book-1981, Colombo: Government Press.

Government of Sri Lanka, Department of Information, 1978). The Minority Question in Sri Lanka, Colombo: Department of Government Printing.

Government of Sri Lanka, Department of Information, 1983. Sinhala-Tamil Disturbances, Colombo: Dept. of Government Printing.





Government of Sri Lanka, Department of Information, (Undated) A Tigers Tale for the birds, Colombo: Dept. of Government Printing.

Government of Sri Lanka, Department of Information, (Undated) Facts about 'the Tamil Problem' in Sri Lanka, Colombo: Dept. of Government Printing.

Government of Sri Lanka, Ministry of finance, Planning, Ethnic Affairs and National Integration, 1994. Statistical Pocket Book of the Democratic Socialist Republic of Sri Lanka. Colombo: Government Press.

Government of Sri Lanka, Ministry of State, 1983. Not an Indictment but Facts, Colombo: Dept. of Information.

Government of Sri Lanka, Ministry of State, 1983. Sri Lanka – A House of Commons view, Colombo: Dept. of Information.

Government of Sri Lanka, Ministry of State, 1983. Sri Lanka – Who Wants a Separate State?, Colombo: Dept. of Information.

Government of Sri Lanka, Ministry of State, 1983. Sri Lanka Back in Business, .Colombo: Dept. of Information, Sri Lanka.

Government of Sri Lanka, Ministry of State, 1983. Sri Lanka: The Truth about Discrimination against the Tamils, Colombo: Dept. of Information.

Government of Sri Lanka, Ministry of State, Undated. The Thimpu Talks: The Stand taken by Sri Lanka Government, Colombo: A Ministry of State Publication.

Government of Sri Lanka, 1979. National State Assembly Debates – Official Reports, 1972 –1978, Colombo: Government Press.

Government of Sri Lanka, 1980. Parliament, Development Councils Act No. 35 of 1980 (Certified on 22 September 1980), Colombo: Dept. of Government Printing.

Government of Sri Lanka, 1980. Presidential Commission on Development Councils Report, Colombo: Dept. of Government Printing.

Government of Sri Lanka, 1982. Parliament, Sixth Amendment to the Constitution Bill, Parliamentary Debates (Hansard) Vol.24, No.13: August 4, 1982; 1254-1459, Colombo: Dept. of Government Printing.

Government of Sri Lanka, 1983. The Facts and The International Commission of Jurist Report on Ethnic Violence in Sri Lanka, Colombo: Ministry of State.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Government of Sri Lanka, 1987. Provincial Councils Act No. 42 of 1987, Colombo: Dept. of Government Printing.

Government of Sri Lanka, 1987. Thirteenth Amendment to the Constitution, Colombo: Department. of Government Printing.

Government of Sri Lanka, Undated. Tamil Terrorists: A Record of Murder and Robbery, Colombo: Ministry of State Publication.

Government of Sri Lanka, Fourteenth Amendment to the Constitution, Colombo: Dept. of Government Printing.

House of Representatives Official Report, 1968. Ceylon Parliamentary Debates (Hansard), Vol. 26.

Jayawardene, J.R. 1977. Towards a Free and Just Society, Sri Lanka: Department of Government Printing.

Lionel, Lee. 1892. Census Report: The census of Ceylon, 1891. [Three Volumes, Colombo 1892] (CSB/3/2), London: British Library.

Parliament of the Democratic Socialist Republic of Sri Lanka, 1979. Prevention of Terrorism (Temporary Provisions) Act No 48 of 1979, Sri Lanka: Dept. of Government Printing.

Sri Lanka Ministry of State Publication, 1984. Tamil Eelam Terrorists Murder Again, Time Bomb kill 30 at Madras Air Port, Sri Lanka: The Government Press.

## Sri Lanka Political Parties' Publications

Amirthalingam, Appapillai, 1978. Poraduvome (Tamil), Colombo: New Leela Press.

Amirthalingam, Appapillai, 1984. The Communal Violence in Sri Lanka July 1983, Alaveddy: Jeya Achchakam.

Amirthalingam, Appapillai, Undated. Eelaththil Ina Othukal (Tamil), Alaveddy: Jeya Achchakam.

Ceylon Workers Congress, 1973. Plantation Youth and the Economy of Sri Lanka, Colombo: New Leela Press.

Ceylon Workers Congress, 1983. Voice of the Voiceless No. 14, Colombo: CWC Publication.

Ceylon Workers Congress, no date. Report on Activities October 1969 to December 1971, Twenty fourth Convention, Colombo: New Leela Press.





Chelvanayagam, S.J.V. no.date. Presidential Address Delivered at the Inaugural and First Meeting of the Ilankai Thamil Arasukadchi on 18th December 1949, Colombo:

De Silva, Colvin R, no date. 1935-1985 From Democratic Progress to Repressive Reaction, Colombo: Star Press Ltd.

De Silva, Colvin. R. 1987. Safeguard for the Minorities in the 1972 Constitution, Colombo: Star Press.

Federal Party of Ceylon, 1957. Ceylon Faces Crisis, Colombo: FP's publication.

Ilankai Communist Kadchi, 1980. Thesia Ina Pirachchinaiyum Ilankai Communist Kadchiyu, (Tamil), Colombo: Pirakathy Achchakam.

Ilankai Thamil Arasu Kadchi, 1960. Election Manifesto March 1960, Colombo: Suthanthiran Press.

Ilankai Thamil Arasu Kadchi, no date. Memorandum on the Constitution submitted to the Steering Committee of the Constitution Assembly, Chunnakam: Thirumakal Press.

Ilankail Thamil Arasu Kadchi, 1951. The Case for a Federal constitution for Ceylon: Resolution Passed at the First National Convention of the Ilankail Thamil Arasu Kadchi, Colombo: I.T.A.K. Publication.

Karalasingham, V. 1963. The Way for the Tamil Speaking People, Colombo: Young Socialist Publications.

Karikalan, S. 1965. Ean Thamil Arasu? (Tamil), Jaffna: Ilanthamilar Pathipakam.

Karunanaidhi, M. 1983. Complaint of Acts of Genocide and Violations of Human Rights Committed Against the Tamils of Sri Lanka, Memorandum dated 15 August 1983 to the Secretary General, United Nations, New York from the President, DMK Party and Chairman of the Committee for the Protection of the Tamils in Sri Lanka, Madras.

Karunaratne, Vikramabahu, 1979. Lanka Sama Samaja Party and the Tamil Speaking People, Colombo: G.C.S.U. Press.

Kathiravelupillai, S. 1965. Co-Existence not Confrontation, Nallur: Shanmuga Pathippakam.

Lanka Sama Samaja Part, 1987. The Indo-Lankan Accord and the Tasks Ahead, Colombo: The Star Press Ltd.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Suntharalingam, C. 1967. Eelam: Beginnings of the Freedom Struggle, Colombo: Arasan Printers.

Tamil United Liberation Front, 1976. Resolutions Passed at a Convention of the Tamil United Liberation Front held at Pannakam, Vaddukkodai on 14th May 1976.

Tamil united Liberation Front, 1977. Manifesto, General Elections 1977, Colombo: Modern Printers.

Tamil United Liberation Front, 1983. 'The Genocide of the Tamils of Sri Lanka', A Memorandum by the Tamil United Liberation Front presented to the United Nations on October 13, 1983.

Tamil United Liberation Front, 1983. A Memorandum on Discrimination Submitted to the International Commission Jurists, Jaffna: St. Joseph's Catholic Press.

The Ceylon Communist Party, 1983. Statement of the Ceylon Communist Party on the Problem of the Tamil Minorities, Colombo: CCP Publication.

## Publications of the Tamil Militant Groups

Balasingham, A.S. 1983. Liberation tigers and Tamil Eelam Freedom Struggle, Madras: LTTE Publication

Eelam People's Information Centre (EPIC), no date. The Political Program of the EPRLF, Madras: EPIC Publication.

EPIC. 1981. Presidential Address by Comrade K. Padmanabha, First Congress of EPRLF, 1981, Madras: Syndicate Printers.

EPRLF. January 1984.Senthanal, Madras: EPIC Publication.

EPRLF. 1984. EPRLF in Eelam Liberation Struggle, Madras: Syndicate Printers.

EROS Documentation Unit, 1985. EROS is the Ethos of Eelavar, Madras: EROS Publication.

EROS, Documentation Unit, 1986. EROS: The Dark Horse, Madras: EROS Publication.

General Union of Youths and Students (GUYS), 1987. Youths and Students in Eelam Liberation Struggle: A New Era Begins, Madras: EROS Publication.

GUES. 1983. 'Eelam is the Solution for the Problem of the Sri Lankan Tamils', The Journal of the General Union of Eelam Students (GUES). No.7, Madras: EROS Publication.





LTTE no date. India and Eelam Tamils crisis - A factual explanation, Madras: LTTE Publication.

LTTE Political Committee, 1983. Liberation Tigers and Tamil Eelam Freedom struggle, Madras: LTTE Publication.

LTTE. 1983. Arasa Payankaravathamum Ayuthappuradchiyum (Tamil), Madras: LTTE Publication.

LTTE. 1983. Tamils fight for National Freedom, March 1-15 1983. A Memorandum submitted by the Liberation Tigers to the Seventh Summit of Non-Aligned Nations held in New Delhi, India.

LTTE. 1984. Diary of Combat 1975-1984, Madras: LTTE publication.

LTTE. 1984. Thamil Eelam Enkal Thakam (Tamil), Madras: LTTE Publication.

LTTE. 1988. An Unjust War Against Tamils, Madras: LTTE Publication.

LTTE's Political committee, 1983. Liberation Tigers and Tamil Freedom Struggle, Madras: Makkal Achchakam.

LTTE's Propaganda and Publication Section, 1980. Towards a Socialist Tamil Eelam, Madras: LTTE Publication.

PLOTE's Press and Information Secretariat, 1983. Detention, Torture and Murder in Sri Lanka, Madras: PLOTE Publication.

PLOTE's Press and Information Secretariat, no date. Massacres will never stop the fight for freedom, Madras: Voice of Tamileelam Publication.

PLOTE's Press and Information Secretariat, no date. Memorandum to the Heads of the Governments of the Commonwealth Nations, Madras: PLOTE Publication.

PLOTE's Press and Information Secretariat, no date. Peoples' Liberation organisation of Tamileelam, Madras: PLOTE Publication.

PLOTE's Press and Information Secretariat, no date. The PLOTE Shows the Way Forward, Madaras: PLOTE Publication.

TELO. 1983. We are not Mental Patients in love for Atrocities, Madras: TELO Publication.

## Unpublished Sources

Anandasangaree, V. (Member of Parliament), 1-2/9/2001. 'Prospects for Peace – International Pressure, the Devolution Package



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



and Related Issues', Speech delivered at at Conference on Indo –Sri Lankan Relations, New Delhi.

Bastian, S. 1999. 'The failure of State Formation, Identity Conflict and Civil Society responses; The Case of Sri Lanka', Uk: University of Bradford.

Chandrasekeran, S. 1-2.9/2001. 'Sri Lanka: The Turbulent Eighties and Missed Opportunities: an Indian Perspective', Speech delivered at Conference on Indo – Sri Lankan Relations, New Delhi.

Dayan, Jayatilleka, 1-2/9/2001. 'Crisis Management: The Colombo – Delhi - Trinco Triangle 1987 – 90', Speech delivered at Conference on Indo – Sri Lanka Relations, New Delhi.

Ghosh, S.Partha, 1-2/9/2001. 'Reconciliation through Devolution: Chasing the Political Consensus', Speech delivered at Conference on Indo – Sri Lankan Relations, New Delhi).

Nithiyananthan, V. 1996. 'Political Economy of Ethnicity with Special Reference to Sri Lankan Tamils', Speech delivered at Conference on Tamils, Wellington, New Zealand.

Pannerselvan, A.S. 1-2/9/2001. 'The Nadu Angle. Myth and Reality', Speech delivered at Conference on Indo – Sri Lanka Relations, New Delhi.

Pararajasingham, Joseph, (Member of Parliament), 1999. 'Life of Tamil People under Civil Administration and Army Occupation', Speech delivered at Conference on Tamil Nationhood and Search for Peace in Sri Lanka, Ottawa.

Parthasarathy, G. 1-2/9/2001. 'Indo – Sri Lanka Relations – Prospects for the Future', Speech delivered at Conference on Indo – Sri Lankan Relations, New Delhi.

Ponnambalam, G.G. (General Secretary, ACTC), 1996. 'The Intelligence of Sinhalese', Speech delivered at Conference on Peace with Justice, Canberra.

Ponnambalam, G.G. (General Secretary, ACTC), 1999. 'The Current Dynamics of the Tamil National Conflict in Sri Lanka', Speech delivered at Conference on Tamil Nationhood and Search for Peace in Sri Lanka, Ottawa.





Ponnambalam, Satchi 1984. 'Tamil Liberation Struggle Reaches Popular Stage', Speech delivered at Proceeding of the Second World Tamil Convention, New York.

Premachandran, K. (Secretary General, EPRLF), 1-2/9/2001. 'Impact on Internal Political Dynamics of India and Sri Lanka in the Ethnic Conflict in Sri Lanka', Speech delivered at Conference on Indo-Sri Lanka Relations, New Delhi.

Ratnapriya, Sunil, 1996. 'Peace in Sri Lanka: Obstacles and Possibilities', Speech delivered at Conference on Peace with Justice, Canberra.

Rupesinghe, K. 2002. 'Governance and Conflict Resolution in Multi-Ethnic Societies', Sri Lanka:

Saverimuttu, T. and Sriskandarajah, N. 1999. 'Ecological Consequences of the War in the Tamil Homeland in Sri Lanka', Speech delivered at Conference on Tamil Nationhood and Search for Peace in Sri Lanka, Ottawa.

Schalk, Peter, 1996. 'Yalppanam (Jaffna) in War', Speech delivered at Conference on Tamils in New Zealand, Wellington.

Selbourne, David, 1984. 'The Tamils of Sri Lanka: An International Issue', Speech delivered at the Proceeding of the Second World Tamil Conference, New York.

Sidharthan, D. 1-2/9/2001. 'Internal Political Dynamics of Sri Lanka and India as a factor of the Ethnic Conflict', Speech delivered at Conference on Indo – Sri Lanka Relations, New Delhi.

Sugeeswara, S. (Director, RCSS, Colombo), 1-2/9/2001. 'Sri Lanka Peace Prospects: Story of Failed Attempts to Break Deadlocks', Speech delivered at Conference On Indo – Sri Lankan Relations, New Delhi.

Suryanarayan, V. (Centre for South and Southeast Asian Studies), 1-2/9/2001. 'Use and Abuse of History – A Case Study of Ethnic Conflict in Sri Lanka', Speech delivered at Conference on Indo – Sri Lanka Relations, New Delhi.

Trawick, Margaret, 1996. 'Combatant's Positions: An Account from the East', speech delivered at Conference on Peace with Justice, Canberra.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Uyangoda, Jeyadeva, 2003. 'Democratising and Developing Post-Conflict Sri Lanka', University of Oslo, Norway 6 May 2003.

Vigneswaran, K. 1-2/9/2001. 'Prospects for Peace – International Pressure, the Devolution Package and Related Issues', Speech delivered at Conference on Indo- Sri Lankan Relations, New Delhi.

Wolfe, Bryn, 1996. 'The role of the International Community', Speech delivered at Conference on Peace with Justice, Canberra.

## Reports

Amnesty International – Reports on Sri Lanka's Human Rights Violations 1975-2000 London: Amnesty International Publications.

Ceylon, Report of the Commission on Constitutional Reform. Presented by the Secretary for the Colonies to Parliament by Command of His Majesty, September 1945. Published by His Majesty's Stationary Office, London.

Ceylon, Report of the Special Commission on the Constitution, Presented by the Secretary of State for the Colonies to Parliament by Command of His Majesty, July 1928. Published by His Majesty's Stationary Office, London.

Indo-Sri Lanka Agreement to Establish Peace and Normalcy in Sri Lanka signed between the Prime Minister of India and President of Sri Lanka 29 July 1987.

International Commission of Jurists, Ethnic Violence in Sri Lanka 1981-1983. A Report by the staff of International Commission of Jurists Geneva. I.C.J., August 1983.

Jayawardene, J. R., Towards a Free and Just Society, Sri Lanka: Dept. of Government Printing, 1977.

Leary, Virginia A., 1981. Ethnic Conflict and Violence in Sri Lanka. A Report of a mission to Sri Lanka in July-August 1981 on behalf of the International Commission of Jurists, Geneva: International Commission of Jurists.

Madras, Government of Madras, Madras Legislative Assembly Debates, 1948-49.

Rajanayagam, R. 1986. Sri Lanka: Sri Lanka File on 'Arrest and Detention', 'Torture and Inhuman Treatment' and 'Arbitrary





and Extra-judicial Killings'. London: Centre for Human Rights Documentation and Research.

Schwarz, Walter. 1975. The Tamils of Sri Lanka: Report No. 25. London: Minority Rights Groups.

Sieghart, Paul, March 1984. Sri Lanka. A Mounting Tragedy of Errors, Report of a mission to Sri Lanka in January 1984 on behalf of the International Commission of Jurists and it's British Section. Justice, London: International Commission of Jurists and Justice.

UNDP. 1998. National Human Development Report: Sri Lanka 1998. Colombo: UNDP Publication.

University Teachers human Rights Jaffna UTHR(J), Special Reports 1983-2003, Colombo: UTHR(J) Publications.

**News Papers and Periodicals**

Asian Survey, 1983-2002.

Ceylon Daily New (Colombo), 1977-2001.

Ceylon Observer (Colombo), 1983-2002.

Frontline (Madras), 1983-1998, passim.

Homeland (Delhi), 1984-2001.

Illustrated Weekly of India (Bombay), 1980-1985.

India Today (New Delhi), 1977-2002, passim.

Indian Council of World Affairs (New Delhi), 1984-1990.

Kuwait Times (Kuwait), 1983-1990.

Lanka Guardian (Colombo), 1977-1998.

Link (Delhi), 1983-1990.

Muslim (Lahore), 1984-1990.

Race & Class (London), 1977-1995, passim.

Sun (Colombo), 1977-1985.

Sunday (Calcutta), 1980-1995.

Strategic Analysis (New Delhi), 1983-2001.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Tamil Guardian (London), 1990-2002, passim.

amil Times (London), 1983-2002, passim.

The Daily Telegraph (London), 1977-2001, passim.

The Economist (London), 1980-2000, passim.

The Far Eastern Economic Review (Hong Kong), 1983-1999.

The Guardian (London), 1977-2001, passim.

The Hindu (Madras), 1979-2000.

The Hindustan Times (New Delhi), 1980-1999.

The Indian Express (Madras and New Delhi), 1983-1998.

The Island (Colombo), 1983-2000.

The Statesman (New Delhi), 1983-1998.

The Sunday (Kerala), 1980-2000.

The Sunday Times (Colombo), 1977-2000, passim.

The Sunday Times (London), 1983-2001.

The Sunday Observer (Colombo), 1983-2001.

The Times (London), 1977-1999.

The Times (New York), 1983-1995.

The Times (Colombo), 1983-2001.

The Telegraph (Calcutta), 1983-2001.

The Week (Kerala), 1983-1996.

Times of India (Bombay), 1983-2000.

**Tamil Dailies and periodicals from India and Sri Lanka**

Dinakaran, Indian Tamil Daily paper, (Madras), 1983-1999.

Dinamalar, Indian Tamil Daily paper, (Madras), 1983-1999.

Dinamani, Indian Tamil Daily paper, (Madras), 1977-1999.

Eelam, Monthly magazine, EROS publication, (Madras), 1984-1987.





Eelanadu, Tamil Weekly paper, (Paris), 1990-2000.

Erimalai, Tamil Monthly magazine, LTTE publication, (Paris), 1988-2002.

India Today, Indian Tamil Weekly, (Madras), 1983-2000.

Junior Vikatan Indian Tamil Weekly, (Madras), 1989-2000.

Kalathil, Weekly LTTE publication, (London), 1986-1993.

Mulakkam, Monthly magazine, EPIC publication, (Madras), 1984-1986.

Nakkeeran, Indian Tamil Weekly, (Madras), 1985-1998.

Palam, Monthly magazine, EROS publication, (Madras), 1984-1986.

Pothumai, Weekly paper, EROS publication, (Madras), 1984-1986.

Puthiya Kannottam, Monthly, EPRLF publication, (Colombo), 1989-1994.

Puthiya Paathai, Weekly paper, PLOTE publication, (Madras), 1984-1985.

Sarinihar, Tamil Weekly paper, (Colombo), 1990-1998.

Suthanthiran, Weekly paper, TULF publication, (Jaffna), 1970-1983.

Tamilan Express, Indian Tamil Monthly, (Madras), 1985-1989.

Tharasu, Indian Tamil Weekly, (Madras), 1987-1993.

Thatkeekam, Weekly paper, EROS publication, (Madras), 1984-1986.

Thayagam, Tamil Weekly paper, (Ontario), 1987-1989.

Thinakaran, Tamil National Daily paper, (Colombo), 1980-2000.

Thinakkural, Tamil National Daily paper, (Colombo), 1993-2000.

Thinamurasu EPDP publication, (Colombo), 1994-1999.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Thinaththanthi, Indian Tamil Daily paper, (Madras), 1983-1995.

Tuqlak, Indian Tamil Weekly, (Madras), 1988-2000.

Ulakathamilar, Weekly paper, (Canada), 1990-2000.

Uthayan Tamil National Daily, (Jaffna), 1988-2000.

Veera Venkai, Weekly paper, LTTE publication, (Jaffna), 1986-1988.

Veerakesari , Tamil National Daily paper, (Colombo), 1983-2001.

Viduthalai, Weekly paper, EPRLF Publication, (Jaffna), 1988-1

○○○



# பின்னிணைப்பு-1

## 1983 முதல் 1998 வரை யுத்தச் செலவின் சுருக்கம் செலவினம், சேதங்கள் மற்றும் விளைவளவின் இழப்பு

| | | ரூபாய் பில்லியனில் |
|---|---|---|
| **1.** | **நேரடிச் செலவினம்** | |
| | யுத்தத்தின் மீதான நேரடி அரசாங்கச் செலவினம் | 213.32 |
| | பொதுமக்கள் பாதுகாப்பின் மீதான நேரடிச் செலவினம் | 40.00 |
| | யுத்தத்தின் மீதான எல்ரீரீஈ செலவினம் | 42.60 |
| | அகதிகள், இடம்பெயர்ந்த ஆட்கள் மீதான செலவினம் | 38.00 |
| | | 333.92 |
| **2** | **சேதங்கள் மற்றும் புனர்நிர்மாணச் செலவு** | |
| | பௌதிகச் சொத்துக்களுக்குச் சேதம் | |
| | 1987-புனர்நிர்மாணச் செலவு வடக்கு-கிழக்கு | 10.40 |
| | 1995-புனர்நிர்மாணச் செலவு வடக்கு-கிழக்கு | 49.00 |
| | வீடுகளின் புனர்நிர்மாணம் வடக்கு-கிழக்கு | 10.10 |
| | வடக்கு-கிழக்கிற்கு வெளியே சேதங்கள் | 4.50 |
| | 1998 விலைகளில் | 112.30 |
| | 1995 இன் பின்னர் சேதங்கள் | 24.80 |
| | | 137.10 |
| **3** | **விளைவளவின் இழப்பு Loss of Output** | |
| | தொழில்வல்லுனர்களின் புலம்பெயர்வினால் ஏற்பட்ட இழப்பு | 112.50 |
| | விளைவளவின் இழப்பு வட - கிழக்கு | |
| | (1) 1982 விளைவளவின் சரிவு | |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | |
|---|---|
| (2) தேசிய பொருளாதாரத்தின் சராசரி வளர்ச்சி | |
| வீதத்தில் வ.கி. வளர்ந்திருக்குமாயின் விளைவளவு | |
| வாய்ப்பின் இழப்பு | 273.00 |
| | **392.00** |
| சுற்றுலாத்துறை - ரூ. 200 பில்லியன் (ஈட்டல்கள்) | |
| பெறுமதி கூட்டியது | 120.00 |
| வெளிநாட்டு முதலீடு | 75.00 |
| | **972.50** |
| யுத்தத்திலும் விளைவளவு இழப்பிலும் பெறப்பட்ட செலவினத்தின் மொத்தமதிப்பீடு | 1443.52 |
| சேதங்களின் செலவு கழிய மொத்த மதிப்பீடு (2)1 | 1306.42 |

1. புனர்நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்கள் மீண்டும் அழிக்கப்பட்ட 1995இல் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்குமாயின் 1987-1994இல் புனர்நிர்மாணத்தின்மீது கூறப்பட்ட செலவினம் ஒரு செலவாக நிறுத்திவைக்கப்பட வேண்டும். எனினும் புனர்நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் நிலைமை பற்றிய நம்பகமான தகவல் கிடைப்பதற்கில்லையாதலால் இச்சீராக்கம் செய்யப்படவில்லை.

மூலம் : National Peace Council of Sri Lanka, Cost of the War, Economic, Social and Human cost of the war in Sri Lanka, 1998:4.

○○○



# பின்னிணைப்பு-2

## இந்த ஆய்வுக்காக நேர்காணப்பட்டவர்களின் நிரல்

**இலங்கை**

**பானர்ஜி, திபன்கர்,** (இளைப்பாறிய மேஜர் ஜெனரல்) - நிறைவேற்றுப் பணிப்பாளர், உபாயகர ஆய்வுகளுக்கான பிராந்திய நிலையம், 2 எலிபாங்க் வீதி, கொழும்பு 5, இலங்கை, 5 மே 2001.

**தேசப்பிரிய, சுனந்த** - பத்திரிகையாளர், பதிப்பாசிரியர், பலய சஞ்சிகை, ஊடக உசாத் துணையாளர், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சார்புப் பேச்சாளர், சுதந்திர ஊடக இயக்கம், யக்கல, இப்பாகமுவ, இலங்கை, 4 மே 2001.

**தேவராஜா, எஸ்.** - பதிப்பாசிரியர், 'வீரகேசரி' தமிழ்த் தினசரி, கொழும்பு, இலங்கை, 7 மே 2001

**கணேசன், மனோ** - மாகாண சபை உறுப்பினர், மேல் மாகாணம், கொழும்பு, சனநாயக தொழிலாளர் காங்கிரசின் மாவட்ட மற்றும் பொதுச் செயலாளர் (ச.தொ.கா. அரசியல் பிரிவு), கொழும்பு, இலங்கை, 4 ஏப்பிரல் 2001.

**ஜயவர்தன, ஜயலத்** (வைத்.கலா) - பாராளுமன்ற உறுப்பினர் (ஐ.தே.க.-எதிர்க் கட்சி), 26பி, சமிற் பிளாட்ஸ், ஜாவத்தை வீதி, கொழும்பு 5, இலங்கை (இப்போது அவர் வட-கிழக்கு அபிவிருத்திக்கான அமைச்சர்). 30 ஏப்பிரல் 2001.

**ஜெகான், பெரேரா** - பணிப்பாளர், ஆராய்ச்சி மற்றும் ஊடகங்கள், இலங்கைத் தேசிய சமாதானப் பேரவை, 12/14 பரண விகார வீதி, கொழும்பு 6, இலங்கை, 28 ஏப்பிரல் 2001.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**பிரேமச்சந்திரன். கே. (சுரேஷ்)** செயலாளர் நாயகம், ஈபீஆர்எல்எஃப், 6 யூன் 2001.

**சரவணமுத்து, பீ. (கலாநிதி)** - நிறைவேற்றுப் பணிப்பாளர், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA), 32/3, பிளவர் வீதி, கொழும்பு 7, இலங்கை, 4 மே 2001.

**செனெவிரத்ன அதாவுட,** பாராளுமன்ற உறுப்பினர் - இனவிவகார, தேசிய ஒருங்கிணைப்பு, கனிப்பொருள் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர், 152, காலி வீதி, கொழும்பு 3, இலங்கை, 9 மே 2001.

**சிவநேசச் செல்வன், ஏ.** எம்ஏ (சிலோன்), எம்எஸ்சி - பிரதம பதிப்பாசிரியர், தினக்குரல் தமிழ்த் தினசரி மற்றும் ஞாயிறு தினக்குரல், யுனைரட் நியூஸ்பேப்பர்ஸ் (பிரை) லிமிட்;. தமிழில் சுதந்திரத் தினக்குரல் வெளியீட்டாளர்கள். 68, எலிஹவுஸ் வீதி, கொழும்பு 15, இலங்கை, 6 மே 2001.

**சிறீகாந்தா, என்.** - சட்டத்தரணி, தலைவர், ரெலோ, 162/1, கிளிபோட் பிளேஸ், கொழும்பு 4, இலங்கை, 8 மே 2001

**வில்சன், ஜே.** - கொழும்பு ஈபீஆர்எல்எஃப் மத்திய குழு உறுப்பினர் மற்றும் யாழ்ப்பாண ஈபீஆர்எல்எஃப் பாராளுமன்ற வேட்பாளர் 1999, கொழும்பு, இலங்கை, 6 ஏப்பிரல் 2001

**சித்தார்த்தன், தர்மலிங்கம்** - பாராளுமன்ற உறுப்பினர், வவுனியா மாவட்டம், வவுனியா, இலங்கை, 11 யூன் 2001

**விசாகப்பெருமாள், எஸ்.** - முன்னாள் கிராமசேவகர், வவுனியா, இலங்கை, 27 யூன் 2001.

ராயப்பு, ஜோ - மன்னார் ஆயர், மன்னார், இலங்கை, 8 ஏப்பிரல் 2001.

**குணசேகரம், எஸ்.** - ஆசிரியர் மற்றும் ஈபீஆர்எல்எஃப் குழு உறுப்பினர், யாழ்ப்பாணம், இலங்கை, 20 யூலை 2001.

**ரவிராஜ், என்.** - பாராளுமன்ற உறுப்பினர், த.ஐ.வி.மு. யாழ்ப்பாண மாவட்டம், 16 மே 2001.





**சேனாதிராஜா, எம்.** (மாவை) - பாராளுமன்ற உறுப்பினர், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (த.ஐ.வி.மு) யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணம், இலங்கை, 11 யூலை 2001.

**விநாயகமூர்த்தி, எஸ்.** - பாராளுமன்ற உறுப்பினர், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (அ.இ.த.கா.), யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணம், இலங்கை, 15 யூலை 2001.

**சந்திரசேகரன்,** பெ. - பாராளுமன்ற உறுப்பினர், தலைவர், மலையக மக்கள் முன்னணி, தலவாக்கலை, மலைநாடு, இலங்கை, 7 மே 2001.

**சந்திரசேகரன், ஆர்.** - பாராளுமன்ற உறுப்பினர், ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பீ), கொழும்பு, இலங்கை, 26 ஏப்பிரல் 2001.

**இந்தியா**

**அஜே, தர்ஷன் மெகெரா (கலாநிதி)** - ஆராய்ச்சி மாணவர், பாதுகாப்பு ஆய்வுகளுக்கும் பகுப்பாய்வுக்குமான நிறுவகம், புளொக் 3, பழைய JNU வளாகம், புதுடெல்லி, 110067, இந்தியா, 19 ஏப்பிரல் 2001.

**அஷோக், மேத்தா** (இளைப். மேஜர் ஜெனரல்) - இந்திய அமைதிகாக்கும் படை (ஐ.பீ.கே.எஃப்), கிழக்குப் பிரதம கட்டளை அதிகாரி, புதுடெல்லி, இந்தியா, 21 ஏப்பிரல் 2001.

**ஹர்ஷே, ஆர். ஜி. (பேரா)** - அரசியல் விஞ்ஞானத்துறை, ஹைதராபாத் பல்கலைக் கழகம், ஹைதராபாத் 50046, இந்தியா, 20 ஏப்பிரல் 2001.

**கல்கட், ஏ.எஸ்.,** லெப். ஜெனரல், IPKF (இளைப்) - நு229, கைலாஷ் கிழக்கு, புதுடெல்லி, இந்தியா, 22 ஏப்பிரல் 2001.

**கணபதி, எம்.** (எம்பில்) - சமூக மருத்துவ, சமுதாய சுகாதார நிலையம், சமூக ஆய்வுப் பாடசாலை, JNU புதுடெல்லி, இந்தியா, 24 ஏப்பிரல் 2001.

**சகாதேவன், பி.** (பீஎச்டி, துணைப் பேராசிரியர்) - தென்னாசிய ஆய்வுகள் பிரிவு, ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுடெல்லி, 11067, இந்தியா, 23 ஏப்பிரல் 2001.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**சர்வேஸ்வரன், கே.** - தென்னாசிய ஆய்வுகள் பிரிவு, சர்வதேச ஆய்வுகள் பாட சாலை, JNU புதுடெல்லி, இந்தியா, 23 ஏப்பிரல் 2001.

**சந்திரஹாசன், செ.** - Offer நிறை வேற்றுப் பணிப்பாளர், சென்னை, தமிழ்நாடு, இந்தியா (த.ஐ.வி.மு. முன்னாள் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் மகன்),13 ஏப்பிரல் 2001.

**தேசிகன், ஆர்.** - ஈபீஆர்எல்எஃப் தொடர்பாடல் பணிப் பாளர், சென்னை, தமிழ்நாடு, இந்தியா, 14 ஏப்பிரல் 2001.

**ஜெயக்கொடி, என்.** - இணைப்பாளர், ஈழ மக்களின் தகவல் நிலையம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா, 16 ஏப்பிரல் 2001.

**கமலாகரன், கே.என்.** - தலைவர், இந்தியப் பெருங்கடல் அமைதிப் பேரியக்கம் - IMPIO, சென்னை, தமிழ்நாடு, இந்தியா.

**ராமசாமி, சோ.** - பதிப்பாசிரியர், துக்ளக் (தமிழ்ச் சஞ்சிகை), சென்னை, தமிழ்நாடு, இந்தியா, 15 ஏப்பிரல் 2001.

**சிவசிதம்பரம், எம்.** - தலைவர், த.ஐ.வி.மு. சென்னை, தமிழ்நாடு, இந்தியா, 15 ஏப்பிரல் 2001.

**திருநேசன், என்.** - முன்னாள் நிறைவேற்று உறுப்பினர், ஈரோஸ், சென்னை, இந்தியா, 14 ஏப்பிரல் 2001.

ஐரோப்பா

**புஷ்பராஜா, கே.** - 'தமிழ் இலக்கியக் குழு' உறுப்பினர், பாரிஸ், பிரான்ஸ், 22 மார்ச் 2002.

**அருட்பிரகாசம், ஏ.** - எழுத்தாளர் மற்றும் இலங்கையில் முன்னாள் ஈரோஸ் அமைப்பாளர், 27 ஒக்ரோபர் 2001.

**ரவீந்திரதாஸ், ஆர்.** - ஈபீ ஆர்எல்எஃப் பிரதிநிதி, இலண்டன், 10 ஒக்ரோபர் 2001.

**சரவணபவன், என்.** - உறுப்பினர், சனநாயகத்துக்கும் நீதிக்குமான குழு, இலண்டன், 17 ஒக்ரோபர் 2001.

**வரதகுமார், எம்.** - பணிப்பாளர், தமிழ்த் தகவல் நிலையம், இலண்டன், 26 ஒக்ரோபர் 2001.





**அருந்தவராஜா, கே.** - ஈபீ ஆர்எல்எஃப் பிரதிநிதி, ஜேர்மனி, 7 மார்ச் 2002.

**பரராஜசிங்கம், எம்.** - பதிப்பாசிரியர், 'சிந்தனை' தமிழ் வாரச் சஞ்சிகை, பெர்லின், ஜேர்மனி, 12 மார்ச் 2002.

**செல்லையா, கே.** - தமிழ் அகதிச் சமூக உறுப்பினர், கனடா, 28 மார்ச் 2002.

**சிவக்குமார், கே.** - கனடாவில் முன்னாள் ரெலோ செயற் பாட்டாளர், 26 மார்ச் 2002.

OOO



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பின்னிணைப்பு-3

## சிலோன் (அரசியலமைப்பு)
## 1946இன் (சோல்பரி அரசியலமைப்பு) பிரிவு 29

பி.29 (1) இக் கட்டளையின் ஏற்பாடுகளுக்குட்பட்டு இத்தீவின் சமாதானத்துக்கும் ஒழுங்குக்கும் நல்ல ஆட்சி முறைக்குமான சட்டங்களை ஆக்குவதற்குப் பாராளுமன்றம் தத்துவமுடையதாக இருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய சட்டமெதுவும்:

- (அ) சமயம் எதனதும் செயலாட்சியைத் தடைசெய்தலாகாது அல்லது கட்டுப்படுத்தலாகாது அல்லது
- (ஆ) ஏதேனும் சமூகத்தை அல்லது சமயத்தைச் சேர்ந்த ஆட்களை, வேறு சமூகங்களை அல்லது சமயங்களைச் சேர்ந்த ஆட்கள் உட்படுத்தப்படாத தகுதியீனங்களுக்கு அல்லது கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தலாகாது அல்லது
- (இ) ஏதேனும் சமூகத்தை அல்லது சமயத்தை சேர்ந்த ஆட்களுக்கு, வேறு சமூகங்களை அல்லது சமயங்களைச் சேர்ந்த ஆட்களுக்கு அளிக்கப்படாத ஏதேனும் சிறப்புரிமையை அல்லது அனுகூலத்தை அளித்தலாகாது அல்லது
- (ஈ) ஏதேனும் சமய நிறுவனத்தின் யாப்புவிதியை அதன் ஆட்சியதிகார சபையின் ஒப்புதலின்றி மாற்றுதலாகாது.

(3) இப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவுக்கு முரணாக ஆக்கப்பட்ட சட்டமெதுவும் அத்தகைய முரணின் அளவுக்குச் செல்லுபடியற்றதாதல் வேண்டும்.

(4) பாராளுமன்றம் இப்பிரிவின் கீழான அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் இக்கட்டளையின் அல்லது இப்பிரிவுக்கு ஏற்புடையதான இக்கட்டளையின் ஏதேனும் ஏற்பாடுகளைத் திருத்துவதற்கான அல்லது நீக்குவதற்கான சட்டமூலம் எதுவும் சனப்பிரதிநிதிகள் சபையில் அதற்குச் சாதகமாக அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (சமுகமளிக்காதோர் உட்பட) சபையின் உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையின் மூன்றிலிரண்டுக்குக் குறையாததென்று சபாநாயகரின் கையொப்பத்துடனான சான்றளிப்பு அதில் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி மகாராணியின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்படலாகாது.



# பின்னிணைப்பு-4

## 1948இன் 18ஆம் இலக்க இலங்கைப் பிரசாவுரிமைச் சட்டம்

## இலங்கைப் பிரசாவுரிமைக்கும் அதனுடன் தொடர்புடைய விடயங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கான ஒரு சட்டம்.
## (1948 நவம்பர் 15ஆந் தேதி)

1. இச்சட்டம் பிரசாவுரிமைச் சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

பகுதி (i) இலங்கைப் பிரசாவுரிமை

2 (1) நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து "இலங்கைப் பிரசையொருவரின் அந்தஸ்து" என்று அறியப்படும் அந்தஸ்தொன்று இருத்தல் வேண்டும்.

(2) ஆளொருவர் பின்வரும் வழிகளில் ஒன்றின்மூலம் மட்டும் இலங்கைப் பிரசையென்ற அந்தஸ்தைப் பெறுதல் வேண்டும் அல்லது அதற்கு உரித்துடையவராதல் வேண்டும் -

(அ) இச்சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வம்சாவழி உரிமையின்மூலம்;

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது ஒரு குறித்தவகையான ஏதேனும் விசேட சந்தர்ப்பத்தில் பதிவுசெய்வதன்மூலம் அத்தகைய அந்தஸ்து வழங்கப்படுவதற்கு அதிகாரமளிக்கின்ற வேறு ஏதேனும் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பதிவு செய்வதன்மூலம்.

(3) மேலே சொல்லப்பட்ட அந்தஸ்தைக் கொண்டவரான ஒவ்வோர் ஆளும் இதில் பின்னர் ஓர் "இலங்கைப் பிரசை" எனக் குறிப்பிடப்படுவார். அவ்வந்தஸ்து வம்சாவழியின் அல்லது பதிவின் அடிப்படையில் வேறுபடுத்தப்படும் ஏதேனும் சூழமைவில் ஓர் இலங்கைப் பிரசை "வம்சாவழிப் பிரசை" அல்லது "பதிவுப் பிரசை" என்று குறிப்பிடப்படுவதுடன் ஒத்த சூழமைவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அத்தகைய பிரசையின் அந்தஸ்தும் "வம்சாவழிப் பிரசாவுரிமை" அல்லது "பதிவுப் பிரசாவுரிமை" என்று குறிப்பிடப்படும்.

3. ஓர் இலங்கைப் பிரசை, இலங்கையில் ஏதேனும் நோக்கத்துக்காக அவரின் தேசிய இனத்தை "இலங்கைப் பிரசை" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவதன்மூலம் விவரிக்கலாம்.

பகுதி (IV) பிரசாவுரிமையை இழத்தல்

19. பூரண வயதும் புத்தி சுவாதீனமும் உள்ள ஓர் இலங்கைப் பிரசை குறித்துரைக்கப்பட்ட முறையில் இலங்கைப் பிரசாவுரிமையைத் துறக்கின்ற வெளிப்படுத்துகையொன்றைச் செய்வாராயின் அமைச்சர் அவ்வெளிப்படுத்துகையைப் பதியச் செய்வித்தல் வேண்டும். அவ்வாறு பதிவுசெய்வதன்பேரில் வெளிப்படுத்துபவர் ஓர் இலங்கைப் பிரசையாக இல்லாதொழிதல் வேண்டும்.

எனினும் அத்தகைய வெளிப்படுத்துகை இலங்கை ஈடுபட்டுள்ள ஏதேனும் யுத்தம் தொடர்கின்றதாயுள்ளவேளையில் செய்யப்பட்டதாகவும் அந்த யுத்தத்தின் விளைவாக ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் செயற்பாட்டின்மூலம் வெளிப்படுத்துபவர் அப்போதைக்கு ஓர் எதிரியாகக் கருதப்படுவதாகவும் இருக்குமாயின் அமைச்சர் அத்தகைய வெளிப்படுத்துகை பதிவுசெய்யப்படுதலை நிறுத்திவைக்கலாம்.

20 (1) நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் பிறந்த ஓர் ஆள் வம்சாவழி மூலம் இலங்கைப் பிரசையாகவும் அத்துடன் அத்தேதியில் வேறு ஏதேனும் நாட்டின் பிரசையாகவும் இருப்பாராயின், அந்த ஆள் -

(அ) 1952 திசெம்பர் 31ஆந் தேதியன்று, அல்லது

(ஆ) இருபத்துரண்டு வயதை எய்துகின்ற நாளன்று

அவரின் விடயத்தில் இவற்றில் எது பிந்தியதோ அந்நாளுக்கு முன்னர் அவர் அவ்வேறு நாட்டில் அதன் தொடர்பில் வலுவிலுள்ள சட்டத்துக்கிணங்க அவ்வேறு நாட்டின் பிரசாவுரிமையைக் கைதுறந்து, அத்தகைய கைதுறப்பைக் குறித்துரைக்கப்பட்ட அலுவலருக்கு அறிவித்தாலன்றி, அந்நாளன்று அவர் இலங்கைப் பிரசையாக இல்லாதொழிதல்வேண்டும்.

(2) ஆளொருவர் வம்சாவழி மூலம் இலங்கைப் பிரசையாயிருந்து சட்டத்தின் செயற்பாட்டினால் அவர் பிறக்கும் நேரத்தில் அல்லது அதன் பின்னர் வேறு ஏதேனும் நாட்டினதும் பிரசையாவாரா யின்; அந்த ஆள் -





(அ) 1952 திசெம்பர் 31ஆந் தேதியன்று, அல்லது

(ஆ) வேறு நாட்டின் ஒரு பிரசையாகிய தேதியிலிருந்து பன்னிரண்டு மாத காலம் முடிவடைகின்ற தேதியை உடனடுத்து வருகின்ற நாளன்று, அல்லது

(இ) இருபத்திரண்டு வயதை எய்துகின்ற நாளன்று,

அவரின் விடயத்தில் இவற்றில் எது பிந்தியதோ அந்நாளுக்கு முன்னர் அவர் அவ்வேறு நாட்டில் அதன் தொடர்பில் வலுவிலுள்ள சட்டத்துக்கிணங்க அவ்வேறு நாட்டின் பிரசாவுரிமையைக் கைதுறந்து அத்தகைய கைதுறப்பைக் குறித்துரைக்கப்பட்ட அலுவலருக்கு அறிவித்தாலன்றி, அந்நாளன்று அவர் இலங்கை பிரசையாக இல்லாதொழிதல் வேண்டும்.

(3) ஆளொருவர் 5ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்கீழ் வம்சாவழி மூலம் இலங்கைப் பிரசையாகவும் அவரின் தந்தை பதிவின் மூலம் இலங்கைப் பிரசையாகவும் இருக்குமிடத்து அவர் இருபத்திரண்டு வயதை எய்துகின்ற நாளன்று, அந்நாளுக்கு முன்னர் இலங்கைப் பிரசாவுரிமையை விடாது வைத்திருக்கின்ற வெளிப்படுத்துகையைக் குறித்துரைக்கப்பட்ட முறையிலும் படிவத்திலும் அமைச்சருக்குத் தெரிவித்தாலன்றி, இலங்கைப் பிரசையாக இல்லாதொழிதல் வேண்டும்.

(4) முற்போந்த உட்பிரிவுகளின் ஏதேனும் ஏற்பாடு ஏற்புடையதாயுள்ள எவரேனும் ஆளின் விடயத்தில் அதில் குறிப்பிடப்பட்ட இருபத்திரண்டு வயது, பணிப்புரையில் குறித்துரைக்கப்படக் கூடியவாறு அத்தகைய உயர்ந்த வயதைக் குறிப்பிடுகின்றதெனப் பொருள்கொள்ள வேண்டுமென்ற மாற்றத்துக்கமைய அவ்வேற்பாடுகள் ஏற்புடையதாதல் வேண்டுமென அமைச்சர் தமது தற்றுணிபின்படி பணிக்கலாம்.

(5) வம்சாவழிமூலம் இலங்கைப் பிரசையாயுள்ள ஆளொருவர் சுயவிருப்பின்பேரில் வேறொரு நாட்டின் பிரசையாவாராயின் அவர் இலங்கைப் பிரசையாக இல்லாதொழிதல் வேண்டும்.

(6) ஆளொருவர் 8ஆம் உட்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) பந்தியின் தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டவராயிருந்து அவ்வுட்பிரிவின்கீழான ஒரு வெளிப்படுத்துகையின் நிமித்தம் வம்சாவழி மூலமான இலங்கைப் பிரசையென்ற அந்தஸ்தைத் திரும்பவும் எடுத்துக் கொள்வாராயின் அந்த ஆள் அவ்வெளிப்படுத்துகைத் தேதியிலிருந்து மூன்று மாத காலம் (அல்லது அமைச்சர் நல்ல நோக்கத்துக்காக அனுமதிக்கக்கூடிய அத்தகைய கூடிய காலம்) முடிவடையும் தேதியை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உடனடுத்து வரும் நாளன்று, அந்நாளுக்கு முன்னர் அவர் மேலே சொல்லப்பட்ட (அ) பந்தியின் தேவைப்பாடுகளுக்கு இணங்கச் செயற்பட்டாலன்றி, இலங்கைப் பிரசையாக இல்லாதொழிதல் வேண்டும்.

21 (1) பதிவின்மூலம் இலங்கைப் பிரசையாயுள்ள ஆளொருவர் சுயவிருப்பின்பேரில் வேறொரு நாட்டின் பிரசையாவாராயின் அவர் இலங்கைப் பிரசையாக இல்லாதொழிதல் வேண்டும்.

(2) இலங்கைப் பிரசையாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள ஆளொருவர் அதன்பின்னர் சட்டச் செயற்பாட்டின்மூலம் வேறு ஏதேனும் நாட்டினதும் பிரசையாவாராயின் அவர் -

(அ) அவ்வேறு நாட்டின் பிரசையாகிய தேதியிலிருந்து மூன்று மாத காலம் (அல்லது அமைச்சர் நல்ல நோக்கத்துக்காக அனுமதிக்கக்கூடிய அத்தகைய கூடிய காலம்) முடிவடையும் தேதியை உடனடுத்துவரும் நாளன்று, அல்லது

(ஆ) இருபத்துரண்டு வயதை எய்துகின்ற நாளன்று, அவரின் விடயத்தில் இவற்றில் எது பிந்தியதோ அந்நாளுக்கு முன்னர் அவர் அவ்வேறு நாட்டில் அதன் தொடர்பில் வலுவிலுள்ள சட்டத்துக்கிணங்க அவ்வேறு நாட்டின் பிரசாவுரிமையைக் கைதுறந்து, அத்தகைய கைதுறப்பைக் குறித்துரைக்கப் பட்ட அலுவலருக்கு அறிவித்தாலன்றி, அந்நாளன்று அவர் இலங்கைப் பிரசையாக இல்லாதொழிதல் வேண்டும்.

(3) ஆளொருவர் -

(அ) 15ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டவராயிருந்து இச்சட்டத்தின்கீழ் ஓர் இலங்கைப் பிரசையாகப் பதிவுசெய்யப்பட்டிருப்பாராயின், அல்லது

(ஆ) இந்திய மற்றும் பாகிஸ்தானி வதிவோர் (பிரசாவுரிமை) சட்டத்தின்கீழ் இலங்கைப் பிரசையாகப் பதிவுசெய்யப்பட் டிருந்து அத்தகைய பதிவின் பின்னரும் வேறு ஏதேனும் நாட்டின் ஒரு பிரசையாகத் தொடர்வாராயின் அந்த ஆள் -

(a) இலங்கைப் பிரசையாக அவர் பதிவுசெய்த தேதியிலிருந்து மூன்று மாத காலம் (அல்லது அமைச்சர் நல்ல நோக்கத்துக் காக அனுமதிக்கக்கூடிய அத்தகைய கூடிய காலம்) முடி வடையும் தேதியை உடனடுத்துவரும் நாளன்று, அல்லது

(b) இருபத்திரண்டு வயதை எய்துகின்ற நாளன்று,





அவரின் விடயத்தில் இவற்றில் எது பிந்தியதோ அந்நாளுக்கு முன்னர் அவர் அவ்வேறு நாட்டில் அதன் தொடர்பில் வலுவி லுள்ள சட்டத்துக்கிணங்க அவ்வேறு நாட்டின் பிரசாவுரிமை யைக் கைதுறந்து, அத்தகைய கைதுறப்பைக் குறித்துரைக்கப் பட்ட அலுவலருக்கு அறிவித்தாலன்றி, அந்நாளன்று அவர் இலங்கைப் பிரசையாக இல்லாதொழிதல் வேண்டும்.

22. எவ்வாறாயினும், இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின்கீழ் ஓர் இலங்கைப் பிரசையென்ற அந்தஸ்தைப் பெறுகின்ற, விடாது வைத்திருக்கின்ற அல்லது திரும்பவும் எடுத்துக்கொள்கின்ற நோக்கத்துக்காக ஏதேனும் நாட்டின் பிரசாவுரிமையைக் கை துறந்ததாகக் கருதப்படும் எவரேனும் ஆளின் கைதுறப்பானது அத்தகைய வேறு நாட்டில் அதன் தொடர்பில் வலுவிலுள்ள சட்டத்துக்கிணங்கச் செய்யப்படவில்லை அல்லது சட்டத்தின் கீழ் செயல்விளைவற்றதென எந்நேரத்திலாவது கண்டுபிடிக்கப் படின் அந்த ஆள் அவ்வேற்பாட்டின்கீழ் ஓர் இலங்கைப் பிரசை யென்ற அந்தஸ்தை ஒருபோது பெறவில்லை. விடாது வைத்திருக்க வில்லை அல்லது திரும்பவும் எடுத்துக்கொள்ளவில்லையெனக் கருதப்படுதல் வேண்டும், அத்துடன் அத்தகைய ஏதேனும் விட யத்தில் அவ்விளைவைக் கொண்டதான ஒரு வெளிப்படுத்துகை யை அமைச்சர் செய்வாராயின் அவ்வெளிப்படுத்துகை முடி வானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் நீதிமன்றத் தில் அதனை எதிர்த்தலுமாகாது.

23. பதிவின்மூலம் பிரசையாயுள்ள ஆளொருவர் பின்வருவனவற் றுக்காக அவர் கழித்த காலப்பகுதி நீங்கலாக, தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்குக் கூடுதலாக இலங்கைக்கு வெளியே வதிவாராயின் அவர் ஓர் இலங்கைப் பிரசையாக இல்லாதொழிதல் வேண்டும் -

(அ) இலங்கை அரசாங்கத்தின் சேவையில் ஓர் அலுவலராக வெளிநாட்டில் தொழில்புரிதல், அல்லது

(ஆ) இலங்கை அரசாங்கத்தின் ஒரு பிரதிநிதியாக வெளிநாட்டில் இருத்தல், அல்லது

(இ) இப்பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகளில் குறித்துரைக்கப் பட்ட ஏதேனும் கோதாவில் வெளிநாட்டில் வசிக்கின்ற இலங்கைப் பிரசையொருவரின் வாழ்க்கைத்துணையாக அல்லது பராயமடையாத பிள்ளையாக அப்பிரசையுடன் வெளிநாட்டில் வசித்தல், அல்லது

(ஈ) விடுமுறையின் பொருட்டு அல்லது உடல்நலக் காரணங் களுக்காக வெளிநாட்டில் வசித்தல், அல்லது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உடனடுத்து வரும் நாளன்று, அந்நாளுக்கு முன்னர் அவர் மேலே சொல்லப்பட்ட (அ) பந்தியின் தேவைப்பாடுகளுக்கு இணங்கச் செயற்பட்டாலன்றி, இலங்கைப் பிரசையாக இல்லாதொழிதல் வேண்டும்.

21 (1) பதிவின்மூலம் இலங்கைப் பிரசையாயுள்ள ஆளொருவர் சுயவிருப்பின்பேரில் வேறொரு நாட்டின் பிரசையாவாராயின் அவர் இலங்கைப் பிரசையாக இல்லாதொழிதல் வேண்டும்.

(2) இலங்கைப் பிரசையாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள ஆளொருவர் அதன்பின்னர் சட்டச் செயற்பாட்டின்மூலம் வேறு ஏதேனும் நாட்டினதும் பிரசையாவாராயின் அவர் -

(அ) அவ்வேறு நாட்டின் பிரசையாகிய தேதியிலிருந்து மூன்று மாத காலம் (அல்லது அமைச்சர் நல்ல நோக்கத்துக்காக அனுமதிக்கக்கூடிய அத்தகைய கூடிய காலம்) முடிவடையும் தேதியை உடனடுத்துவரும் நாளன்று, அல்லது

(ஆ) இருபத்துரண்டு வயதை எய்துகின்ற நாளன்று, அவரின் விடயத்தில் இவற்றில் எது பிந்தியதோ அந்நாளுக்கு முன்னர் அவர் அவ்வேறு நாட்டில் அதன் தொடர்பில் வலுவிலுள்ள சட்டத்துக்கிணங்க அவ்வேறு நாட்டின் பிரசாவுரிமையைக் கைதுறந்து, அத்தகைய கைதுறப்பைக் குறித்துரைக்கப் பட்ட அலுவலருக்கு அறிவித்தாலன்றி, அந்நாளன்று அவர் இலங்கைப் பிரசையாக இல்லாதொழிதல் வேண்டும்.

(3) ஆளொருவர் -

(அ) 15ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டவராயிருந்து இச்சட்டத்தின்கீழ் ஓர் இலங்கைப் பிரசையாகப் பதிவுசெய்யப்பட்டிருப்பாராயின், அல்லது

(ஆ) இந்திய மற்றும் பாகிஸ்தானி வதிவோர் (பிரசாவுரிமை) சட்டத்தின்கீழ் இலங்கைப் பிரசையாகப் பதிவுசெய்யப்பட்டிருந்து அத்தகைய பதிவின் பின்னரும் வேறு ஏதேனும் நாட்டின் ஒரு பிரசையாகத் தொடர்வாராயின் அந்த ஆள் -

(a) இலங்கைப் பிரசையாக அவர் பதிவுசெய்த தேதியிலிருந்து மூன்று மாத காலம் (அல்லது அமைச்சர் நல்ல நோக்கத்துக்காக அனுமதிக்கக்கூடிய அத்தகைய கூடிய காலம்) முடிவடையும் தேதியை உடனடுத்துவரும் நாளன்று, அல்லது

(b) இருபத்திரண்டு வயதை எய்துகின்ற நாளன்று,





அவரின் விடயத்தில் இவற்றில் எது பிந்தியதோ அந்நாளுக்கு முன்னர் அவர் அவ்வேறு நாட்டில் அதன் தொடர்பில் வலுவிலுள்ள சட்டத்துக்கிணங்க அவ்வேறு நாட்டின் பிரசாவுரிமையைக் கைதுறந்து, அத்தகைய கைதுறப்பைக் குறித்துரைக்கப் பட்ட அலுவலருக்கு அறிவித்தாலன்றி, அந்நாளன்று அவர் இலங்கைப் பிரசையாக இல்லாதொழிதல் வேண்டும்.

22. எவ்வாறாயினும், இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின்கீழ் ஓர் இலங்கைப் பிரசையென்ற அந்தஸ்தைப் பெறுகின்ற, விடாது வைத்திருக்கின்ற அல்லது திரும்பவும் எடுத்துக்கொள்கின்ற நோக்கத்துக்காக ஏதேனும் நாட்டின் பிரசாவுரிமையைக் கை துறந்ததாகக் கருதப்படும் எவரேனும் ஆளின் கைதுறப்பானது அத்தகைய வேறு நாட்டில் அதன் தொடர்பில் வலுவிலுள்ள சட்டத்துக்கிணங்கச் செய்யப்படவில்லை அல்லது சட்டத்தின் கீழ் செயல்விளைவற்றதென எந்நேரத்திலாவது கண்டுபிடிக்கப் படின் அந்த ஆள் அவ்வேற்பாட்டின்கீழ் ஓர் இலங்கைப் பிரசை யென்ற அந்தஸ்தை ஒருபோது பெறவில்லை, விடாது வைத்திருக்க வில்லை அல்லது திரும்பவும் எடுத்துக்கொள்ளவில்லையெனக் கருதப்படுதல் வேண்டும், அத்துடன் அத்தகைய ஏதேனும் விட யத்தில் அவ்விளைவைக் கொண்டதான ஒரு வெளிப்படுத்துகை யை அமைச்சர் செய்வாராயின் அவ்வெளிப்படுத்துகை முடி வானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் நீதிமன்றத் தில் அதனை எதிர்த்தலுமாகாது.

23. பதிவின்மூலம் பிரசையாயுள்ள ஆளொருவர் பின்வருவனவற் றுக்காக அவர் கழித்த காலப்பகுதி நீங்கலாக, தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்குக் கூடுதலாக இலங்கைக்கு வெளியே வதிவாராயின் அவர் ஓர் இலங்கைப் பிரசையாக இல்லாதொழிதல் வேண்டும் -

(அ) இலங்கை அரசாங்கத்தின் சேவையில் ஓர் அலுவலராக வெளிநாட்டில் தொழில்புரிதல், அல்லது

(ஆ) இலங்கை அரசாங்கத்தின் ஒரு பிரதிநிதியாக வெளிநாட்டில் இருத்தல், அல்லது

(இ) இப்பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகளில் குறித்துரைக்கப் பட்ட ஏதேனும் கோதாவில் வெளிநாட்டில் வசிக்கின்ற இலங்கைப் பிரசையொருவரின் வாழ்க்கைத்துணையாக அல்லது பராயமடையாத பிள்ளையாக அப்பிரசையுடன் வெளிநாட்டில் வசித்தல், அல்லது

(ஈ) விடுமுறையின் பொருட்டு அல்லது உடல்நலக் காரணங் களுக்காக வெளிநாட்டில் வசித்தல், அல்லது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(உ) வெளிநாட்டிலுள்ள கல்வி நிறுவனமொன்றில் ஒரு மாணவராயிருத்தல், அல்லது

(ஊ) வம்சாவழிமூலம் இலங்கைப் பிரசையாயுள்ள வாழ்க்கைத் துணையுடன் வெளிநாட்டில் வசித்தல், அல்லது

(எ) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காக வெளிநாட்டில் இருத்தல்.

24 (1) பதிவின்மூலம் இலங்கைப் பிரசையாயுள்ள ஆளொருவர் -

(அ) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டவரென, அல்லது

(ஆ) தண்டனைச் சட்டக்கோவையின் VIஆம் அத்தியாயத்தின் கீழ் தவறொன்றுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவரென, அல்லது

(இ) மோசடியான முறையில், பொய்யான தெரிவிப்பின்மூலம், அல்லது முக்கியமான சூழ்நிலைகளை மறைத்துள்ள தன்மூலம் அல்லது தவறுதலாக இலங்கைப் பிரசையாகப் பதிவு செய்யப்பட்டாரென, அல்லது

(ஈ) இலங்கைப் பிரசையாகப் பதிவுசெய்யப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளினுள் ஏதேனும் நீதிமன்றத்தால் பன்னிரண்டு மாதங்கள் அல்லது அதற்குக் கூடிய மறியல் தண்டனை விதிக்கப்பட்டவரென, அல்லது

(உ) பதிவின்மூலம் இலங்கைப் பிரசையாகிய தேதியின் பின்னர் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத ஒரு காலம் அத்தேதிக்கு முன்னர் எவ்வேளையிலாவது அவர் தேசிய இனத்தவராக அல்லது பிரசையாக இருந்த ஒரு வெளிநாட்டில் தங்கியிருந்தவரெனவும் அக்காலப்பகுதியில் இலங்கையுடன் குறிப்பிடத்தக்க தொடர்பெதனையும் பேணவில்லையெனவும், அல்லது

(ஊ) வெளிநாடொன்றில் உறுதிப்பிரமாணம் அல்லது சத்தியப் பிரமாணம் எடுத்துள்ளாரென அல்லது அந்நாட்டின்மீது பற்றுறுதிக்கான வெளிப்படுத்துகையைச் செய்துள்ளாரென, அல்லது

(எ) அவரின் நடத்தை காரணமாக அவர் தொடர்ந்தும் இலங்கைப் பிரசையாக இருத்தல் இலங்கையின் நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடியதென அமைச்சர் திருப்திப்படுமிடத்து அத்தகைய ஆள் அத்தகைய பிரசையாக இல்லாதொழிதல் வேண்டுமென அமைச்சர் கட்டளைமூலம் வெளிப்படுத்தலாம், அதன்பேரில் யார் தொடர்பில் கட்டளை பிறப்பிக்கப்பட்டதோ அந்த ஆள் பதிவின்மூலம் இலங்கைப் பிரசையாக இல்லாதொழிதல் வேண்டும்.





(2) இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் பந்தி (எ) ஏற்புடையதாகின்ற ஆளொருவர் தொடர்பில் ஏதேனும் கட்டளையை அமைச்சர் பிறப்பிக்குமுன்னர் அவர் அந்த ஆளின் விடயத்தை, குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய தகைமைகளைக் கொண்டதாக அவரால் நியமிக்கப்படும் ஒருவர் அல்லது ஒன்றுக்குக் கூடியவர்கள் விசாரணை செய்வதற்கு ஆற்றுப் படுத்த வேண்டும். இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் விசாரணை செய்வதற்கு அதிகாரமளிக்கப்படும் ஆள் அல்லது ஆட்கள் விசாரணை முடிந்தவுடன் விரைவில் எழுத்திலான அறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அவர் அவ்வறிக்கையைக் கவனமாகப் பரிசீலனை செய்யாமல் இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை எதனையும் பிறப்பித்தலாகாது.

(3) இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் ஆளொருவர் இலங்கைப் பிரசையாக இல்லாதொழியுமிடத்து அமைச்சரானவர் பின் வரும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஆட்களில் எவரேனும் அல்லது எல்லோரும் இலங்கைப் பிரசையாக இல்லாதொழிதல் வேண்டுமெனக் கட்டளைமூலம் பணிக்கலாம். அதன்பேரில் அவர்கள் பிரசைகளாக இல்லாதொழிதல் வேண்டும் -

(அ) அவரின் பதிவின்போது பதிவுச் சான்றிதழில் உள்ளடக்கப் பட்ட அத்தகைய ஆளின் பராயமடையாத பிள்ளைகளில் எவரேனும் அல்லது எல்லோரும், அத்துடன்

(ஆ) அவரின் வாழ்க்கைத்துணை, விதவை அல்லது விதுரன் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தால் அத்தகைய வாழ்க்கைத்துணை, விதவை அல்லது விதுரன்.

 OOO



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பின்னிணைப்பு-5

### 1956இன் 33ஆம் இலக்க அரசகரும மொழி (சிங்களம் மட்டும்) சட்டம்)

### இலங்கையின் ஒரேயொரு அரசகரும மொழியாக விதித்துரைப்பதற்கும் குறித்த சில இடைக்கால ஏற்பாடுகளைச் செய்வதற்கு இயலச்செய்வதற்குமான ஒரு சட்டம். (இசைவுத் தேதி : யூலை 7, 1956)

தற்போது கூடியுள்ள பாராளுமன்றத்தில் சனப்பிரதிநிதிகள் சபையினதும் செனட் சபையினதும் ஆலோசனையுடனும் ஒப்புதலுடனும் அவற்றின் அதிகாரத்தின்மூலமும் மாட்சிமைதங்கிய மகாராணியால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம் 1956இன் 33ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டமென எடுத்துக்காட்டப் படலாம்.

2. சிங்களமொழி இலங்கையின் ஒரேயொரு அரசகரும மொழியாக இருத்தல் வேண்டும்,

   எனினும் இச்சட்டம் வலுவுக்கு வந்தவுடன் உடனடியாக ஏதேனும் அரசகரும நோக்கத்துக்காகச் சிங்களமொழியை மட்டும் பயன்படுத்தத் தொடங்குதல் நடைமுறைச் சாத்தியமற்றதென அமைச்சர் கருதுவாராயின், 1960, டிசெம்பர் முப்பத்தோராம் நாள் முடிவதற்கிடையில் இயன்றவரை விரைவாக அதற்குத் தேவையான மாற்றம் செய்யப்படும்வரை அந்நோக்கத்துக்காக இதுகாலவரை பயன்படுத்தப்பட்ட மொழி அல்லது மொழிகள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படலாம். மேலும் அத்தகைய மாற்றத்தை நிருவாகக் கட்டளையின்மூலம் செய்யமுடியாதிருப்பின் அத்தகைய மாற்றத்தைச் செய்வதற்கு இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

3 (1) அமைச்சரவர்கள் இச்சட்டத்தின்மூலம் அதிகாரமளிக்கப்பட்ட எல்லா விடயங்கள் தொடர்பிலும், பொதுவாக இச்சட்டத்தின் கோட்பாடுகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் செயல்





விளைவு அளிக்கின்ற நோக்கத்துக்காகவும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) உட்பிரிவு (1)இன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி எதுவும், செனட் சபையாலும் சனப் பிரதிநிதிகள் சபையாலும் அங்கீகரிக்கப்பட்டு, அத்தகைய அங்கீகாரம் வர்த்தமானியில் வெளியிடப்படும்வரை, செயல்விளைவுடையதாக இருத்தலாகாது.

மூலம் :இலங்கைத் தகவல் திணைக்களம், The Official Language and the Reasonable use of Tamil (Colombo Government Press, n.d.) pp. 36 - 40.

ooo



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பின்னிணைப்பு-6

### பண்டாரநாயக்க – செல்வநாயகம் ஒப்பந்தம்

இலங்கைப் பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவுக்கும் தமிழ்த் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துக்கும் இடையில் 1957 யூலை 25ஆந் தேதியன்று ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அது பின்னர் ஓராண்டுக்கும் குறைந்த காலமான 1958 ஏப்பிரல் 9ஆந் தேதியன்று விட்டொழிக்கப்பட்டது.

கீழே ஒப்பந்தத்தின் மூலபாடம் திரும்ப எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ந்து வளர்ந்து நாட்டில் நெருக்கடியை ஏற்படுத்திவந்த கருத்து வேற்றுமைகளைத் தீர்க்கும் முயற்சியாக அகில இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் பிரதமரோடு அவை தொடர்பான பேச்சு வார்த்தைகளை நடத்தினார்கள்.

உரையாடலின் தொடக்கத்திலேயே அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சில கோரிக்கைகளைப் பிரதமர் ஏற்பது சாத்தியமற்ற தென்பது தெளிவாகியது.

சமஷ்டி அரசியல் அமைப்பையோ, பிரதேச சுயாட்சியையோ ஏற்படுத்துவது பற்றிப் பேசவோ, அல்லது உத்தியோக மொழிச் சட்டத்தை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவோ அரசாங்கத்தின் நிலையில் தன்னால் இயலாது என்று பிரதமர் கூறினார்.

அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது அடிப்படைக் கொள்கை கள், நோக்கங்கள் எவற்றையும் கைவிடாத வகையில் ஓர் இடைக்கால ஒழுங்குக்கு வர இயலுமா என்பதை ஆராயும் கேள்வி பின் எழுந்தது.

அரசாங்கத்தின் பிரதேச சபைகள் மசோதாவை ஆராய்ந்து அதன்கீழ் அகில இலங்கைத் தமிழரசுக்கட்சி கருத்திற்கொண்டிருக்கும் சில விடயங்களை நியாயமாக உள்ளடக்கக்கூடியதாக ஏற்பாடுகள் செய்ய இயலுமா என்று பார்க்குமாறு பிரதமர் ஆலோசனை கூறினார்.

அங்கு ஏற்பட்ட உடன்படிக்கை ஓர் தனியான பத்திரத்தில் தரப்படு கிறது.





மொழி விடயத்தில் அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி சம அந்தஸ்துக் கோரிக்கையை வலியுறுத்தியது. ஆனால் இவ்விடயத்தில் பிரதமரின் நிலையை உத்தேசித்து இடைக்கால ஏற்பாடாக ஓர் உடன்படிக்கைக்கு வந்தனர். தமிழ் ஒரு தேசிய மொழியாக அங்கீகரிக்கப்படுவதும் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் நிர்வாக அலுவல்கள் தமிழில் நடை பெறுவதும் முக்கியமானவை என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

தான் முன்பு குறிப்பிட்டதுபோல, உத்தியோக மொழிச் சட்டத்தை அழிக்கக்கூடிய நடவடிக்கையும் எடுப்பது சாத்தியமற்றது என்று பிரதமர் கூறினார்.

கருத்துப் பரிமாறலின் பின், இயற்ற உத்தேசிக்கப்படும் சட்டத்தில் இலங்கையின் தேசிய சிறுபான்மையோரின் மொழியாகத் தமிழை அங்கீகரிக்கவேண்டுமென்றும், உத்தியோக மொழியின் நிலையைப் பாதிக்காத வகையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாகத் தமிழே இருக்கும் வகையில் பிரதமரின் நாலு அம்சத் திட்டத்தில் ஏற்பாடு இருக்க வேண்டுமென்றும், வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசுவோரல்லாத சிறுபான்மை யோருக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்று இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

இந்திய வம்சாவழியினருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்குவது பற்றியும், குடியுரிமைச் சட்டம் பற்றியும் தமது கருத்துக்களை அகில இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் பிரதமருக்கு எடுத்து விளக்கி, விரைவில் இப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமென்று வற்புறுத்தினர்.

இப்பிரச்சினை விரைவில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று பிரதமர் அறிவித்தார்.

இம்முடிவுகளின் காரணமாகத் தமது உத்தேச சத்தியாக்கிரக நடவடிக்கையைக் கைவிடுவதாக அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்தது.

(ஒப்பம்)

**எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க**

26.07.1957

(ஒப்பம்)

**எஸ்.ஜே.வி.செல்வநாயகம்**

26.07.1957



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பின்னிணைப்பு-7

## டட்லி சேனாநாயக்க – செல்வநாயகம் ஒப்பந்தம்

சேனாநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் இலங்கைப் பிரதமர் டட்லி சேனாநாயக்கவுக்கும் தமிழ்த் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வ நாயகத்துக்கும் இடையில் 1965 மார்ச் 24ஆந் தேதியன்று கைச்சாத் திடப்பட்டது. கீழே ஒப்பந்தத்தின் மூலபாடம் திரும்ப எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

திரு. டட்லி சேனாநாயக்க அவர்களும் திரு.எஸ்.ஜே.வி. செல்வ நாயகம் அவர்களும் 1965 மார்ச் 24ஆம் திகதி சந்தித்துத் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக நடாத்திய பேச்சுவார்த்தை களுக்கமைய, ஒரு நிரந்தர அரசாங்கத்தை அமைக்கும் நிமித்தம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவற்றுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படு மென்று திரு. டட்லி சேனாநாயக்க ஒப்புக் கொள்கின்றார்.

(1) வட, கிழக்கு மாகாணத்தில் தமிழில் நிர்வாகம் நடப்பதற்கும், அவற்றைத் தமிழிலேயே பதிவதற்கும், தமிழ்மொழி விசேட விதிகளுக்கமைய உடனே நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தமிழ்பேசும் குடிமகன் நாடு முழுவதிலும் தமிழிலேயே காரிய மாற்ற உரிமையுள்ளவன் என்பதே தன் கட்சியின் கொள்கை என்பதையும் திரு. சேனாநாயக்க விளக்கினார்.

(2) வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள சட்டபூர்வமான நடவடிக்கை களை நடாத்தவும், அவற்றைப் பதிவதற்குத் தமிழே நீதிமன்ற மொழியாக இருப்பதுதான் தன் கட்சியின் கொள்கை என்று திரு. டட்லி சேனாநாயக்க ஏற்றுக்கொள்கிறார்.

(3) இரண்டு தலைவர்களின் பரஸ்பர சம்மதத்தின்பேரில், மக்கள் பாலுள்ள அதிகாரங்களுக்கேற்ப, இலங்கையில் மாவட்ட சபைகள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும் தேசிய நன்மை கருதி, சட்டங்களுக்கமைய மாவட்ட சபை களுக்கு மேலான அதிகாரங்கள் அரசாங்கத்துக்குண்டென்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.





(4) இலங்கைப் பிரஜை காணிப்பங்கீடுகளில் காணி பெறும் வண்ணம் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் திருத்தி அமைக்கப் படும்.

குடியேற்றத் திட்டங்களில் காணிகள் வழங்கப்படும்போது வட, கிழக்கு மாகாணங்களில் கீழ்க்காணும் விடயங்கள் முதன்மை யாகக் கவனிக்கப்படுமெனவும் திரு. சேனாநாயக்க ஏற்றுக் கொண்டார்.

(அ) வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள காணிகள் அம்மாகாணங் களிலுள்ள காணியற்றவர்களுக்கே முதலில் வழங்கப்படல் வேண்டும்.

(ஆ) இரண்டாவதாக - வட, கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ்பேசும் மக்களுக்கே வழங்கப்படல் வேண்டும்.

(இ) மூன்றாவதாக - இலங்கையின் ஏனைய பகுதிகளிலுள்ள தமிழ்பேசும் இனத்தவர்களுக்கே முதலிடம் கொடுத்து ஏனையவர்களுக்கும் வழங்கலாம்.

(ஒப்பம்)

**டட்லி சேனாநாயக்க**

24.03.1965

(ஒப்பம்)

**எஸ்.ஜே.வி.செல்வநாயகம்**

24.03.1965



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பின்னிணைப்பு-8

## வட்டுக்கோட்டை தீர்மானம் (1976)

### 1976 மே 14ஆந் தேதியன்று வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் முதலாவது தேசிய மாநாட்டில் ஏகமனதாகக் கைக்கொள்ளப்பட்ட தீர்மானம்

*தவிசாளர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், கியு.சி., பா.உ. (காங்கேசன்துறை)*

1976 மே 14ஆந் தேதியன்று (வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள) பண்ணாகத்தில் கூடுகின்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் முதலாவது தேசிய மாநாடு, இலங்கைத் தமிழர்கள் தங்களின் தொன்மைவாய்ந்த மொழியினாலும் மதங்களினாலும் வேறான கலாசாரம், பாரம்பரியம் ஆகியவற்றினாலும் ஐரோப்பிய படையெடுப்பாளர்களின் ஆயுதப் பலத்தினால் அவர்கள் வெற்றி கொள்ளப்படும்வரை பல நூற்றாண்டுகளாக ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் தனிவேறான அரசாகச் சுதந்திரமாக இயங்கிய வரலாற்றின் காரணமாகவும் எல்லாவற்றுக்கும் மேலாக தமது சொந்தப் பிரதேசத்தில் தம்மைத்தாமே ஆண்டுகொண்டு தனித்துவமாகத் தொடர்ந்திருக்கும் விருப்பம் காரணமாகவும் சிங்களவர்களிலிருந்து வேறுபட்ட தனித் தேசிய இனமாகவுள்ளனரென, இத்தால் பிரகடனப்படுத்துகின்றது. மேலும் 1972இன் குடியரசு அரசியலமைப்பு தமிழ் மக்களைப் புதிய காலனித்துவ எசமானர்களான சிங்களவர்களால் ஆளப்படும் ஓர் அடிமைத் தேசிய இனமாக ஆக்கியுள்ளதென்றும் தமிழ்த் தேசிய இனத்தின் ஆட்சிப் பிரதேசம், மொழி, பிரசாவுரிமை, பொருளாதார வாழ்க்கை, தொழில் மற்றும் கல்வி வாய்ப்புக்கள் ஆகியவற்றை இழக்கச் செய்வதற்கு சிங்களவர்கள் தாம் முறைகேடாகப் பறித்துக்கொண்ட அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றனரென்றும் அதன்மூலம் தமிழ் மக்களின் தேசியத்துக்கான இயற்பண்புகள் யாவும் அழிக்கப்படுகின்றனவென்றும் இம்மாநாடு உலகுக்கு அறிவிக்கின்றது.

மேலும் தமிழ் ஈழம் என்ற தனிவேறான அரசொன்றைத் தாபிப்பதற்கான அதன் ஈடுபாட்டுக் கடப்பாடு தொடர்பில், வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களுக்கு வெளியே வாழ்கின்றவர்களும் வேலை





செய்கின்றவர்களுமான பெரும்பான்மையான பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஒரு தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெளிப்படுத்திய அதன் ஒவ்வாமைகளைக் கருத்தில் கொள்கின்ற அதேவேளையில்,

ஒவ்வொரு தேசிய இனத்தினதும் உள்ளியல்பான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான, இறைமைபொருந்திய, சமயச் சார்பற்ற, சமதர்மத் தமிழீழ அரசை மீட்டளித்தலும் மீள உருவாக்குதலும் இந்நாட்டில் தமிழ்த் தேசிய இனம் உளதாயிருத்தலைப் பாதுகாக்கும் பொருட்டுத் தவிர்க்கமுடியாததாகியுள்ளதென இம்மாநாடு தீர்மானிக்கின்றது.

இம்மாநாடு மேலும் பிரகடனப்படுத்துவதாவது -

(அ) தமிழ் ஈழ அரசு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களைக் கொண்டதாக இருக்கவேண்டுமென்பதுடன் இலங்கையின் எந்தப் பகுதியிலும் வசிக்கின்ற தமிழ் பேசுகின்ற மக்களுக்கும் தமிழ் ஈழத்தின் பிரசாவுரிமையை விரும்பித் தெரிகின்ற உலகின் எப்பகுதியிலும் வசிக்கின்ற ஈழ வம்வாவழித் தமிழர்களுக்கும் முழுமையான, சமமான பிரசாவுரிமைகளை உறுதிப்படுத்தவும் வேண்டும். தமிழ் ஈழத்தின் ஏதேனும் சமயத்தைச் சேர்ந்த அல்லது ஆட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த சமூகமொன்று வேறு ஏதேனும் பிரிவினரின் மேலாதிக்கத்துக் குட்படாதிருத்தலை உறுதிப் படுத்தும்பொருட்டு தமிழ் ஈழத்தின் அரசியலமைப்பு சனநாயகப் பன்முகப்படுத்தற் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும்.

(ஆ) தமிழ் ஈழ அரசில் சாதி ஒழிக்கப்படவேண்டுமென்பதுடன், பிறப்பின் அடிப்படையில் பின்பற்றப்படும் பெருங்கேடான பழக்கமான தீண்டாமை அல்லது ஏற்றத்தாழ்வு முற்றாக ஒழித்துக் கட்டப்படவும் எவ்வகையிலேனும் அதனைக் கடைப்பிடித்தல் சட்டத்தால் தண்டிக்கப்படவும் வேண்டும்.

(இ) தமிழ் ஈழம் அவ்வரசிலுள்ள மக்கள் சார்ந்திருக்கக்கூடிய எல்லாச் சமயங்களுக்கும் சமமான பாதுகாப்பும் உதவியும் வழங்குகின்ற சமயச் சார்பற்ற ஓர் அரசாக இருக்கவேண்டும்.

(ஈ) தமிழ் அரச மொழியாக இருக்கவேண்டும். எனினும் தமிழ் ஈழத்தில் சிங்களம் பேசுகின்ற சிறுபான்மைகள் அவர்களின் மொழியில் கல்வியையும் அலுவல்களையும் தொடர்வதற்கான உரிமைகள் சிங்கள அரசிலுள்ள தமிழ்பேசும் சிறுபான்மைகள் பாதுகாக்கப்படும் சரி எதிரீடான அடிப்படையில் பாதுகாக்கப்படவேண்டும்.

www.tamilarangam.net



(உ) தமிழ் ஈழத்தில் மனிதனால் மனிதன் சுரண்டப்படுதல் தடை செய்யப்படும், உழைப்பின் மகத்துவம் பாதுகாக்கப்படும். சட்டத்தினால் அனுமதிக்கப்படும் எல்லைகளுக்குள் தனியார் துறையின் இருப்புக்கு அனுமதி வழங்கப்படுகின்ற அதே வேளையில், பண்டங்களின் உற்பத்தி மற்றும் விநியோகம் என்பன அரச உரிமையின்கீழ் அல்லது அரச கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளப்படும். பொருளாதார அபிவிருத்தி சோசலிசத் திட்டமொன்றின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும். ஒரு தனிநபரின் அல்லது குடும்பத்தின் செல்வம் தொடர்பில் உச்சவரம்பு விதிக்கப்படும். இவ்வகையில் தமிழ் ஈழம் ஒரு சமதர்ம அரசாக இருக்கவேண்டும்.

தமிழ்த் தேசிய இனத்தின் இறைமையையும் சுதந்திரத்தையும் வென்றெடுப்பதற்கான போராட்டத்துக்கான செயல்திட்டமொன்றை மிதமிஞ்சிய தாமதமின்றி வகுத்தமைத்து அதனைத் தொடங்கவேண்டுமென தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயற்குழுவை இம்மாநாடு பணிக்கின்றது.

மேலும் இம்மாநாடு, சுதந்திரத்துக்கான இப்புனிதப்போரில் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க முன்வரும்படியும் இறைமையுள்ள தமிழ் ஈழ அரசென்ற இலக்கு எட்டப்படும்வரை அஞ்சாது போரிடும்படியும் பொதுவில் தமிழ்த் தேசிய இனத்துக்கும் குறிப்பாகத் தமிழ் இளைஞர்களுக்கும் அறைகூவல் விடுக்கின்றது.

(இது 1976 மே 15ஆந் தேதியன்று திரு. செல்வநாயகம், கியு.சி., பா.உ. அவர்கள் தலைமையில் (வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள) பண்ணாகத்தில் நடைபெற்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் 1ஆவது தேசிய மாநாட்டில் ஏகமனதாகக் கைக்கொள்ளப்பட்ட தீர்மானம். 1977இல் இதனை முன்வைத்துத் தேர்தலுக்குச் சென்ற த.ஐ.வி.மு. தமிழ் வாக்காளர்களிடமிருந்து அமோகமான ஆணையைப் பெற்றது. இதுவே ஈழத் தமிழர் சனநாயக முறையில் நடத்தப்பட்ட ஒரு வாக்கெடுப்பில் சுதந்திரமாகத் தமது விருப்பை வெளிப்படுத்தக் கூடுமாயிருந்த இறுதித் தடவையாயிருந்தது.

ooo



## பின்னிணைப்பு-9

### 1998இன் 1ஆம் இலக்க அவசரகால ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 1998ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, அவசரகால (தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தடைவிதித்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) தமிழீழ விடுதலைப் புலிகள் எனப் பெயர்கொண்ட ஒழுங்கமைப்பானது இத்தால் தடை விதிக்கப்பட்டதொன்றாகிறது.

(2) இந்த ஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் (இதனகத்தின் பின்னர் தடைவிதிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு எனக் குறிபீடு செய்யப்படும்) தமிழீழ விடுதலைப் புலிகள் எனப் பெயர் கொண்ட ஒழுங்கமைப்பினால் கொண்டு நடாத்தப்படும் அல்லது முன்னர் கொண்டு நடாத்தப்பட்ட செயற்பாடுகளைப் பெருமளவில் ஒத்த செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள மற்றொவ்வோர் ஒழுங்கமைப்புக்கும் அத்துடன் ஒவ்வொரு குழுவுக்கும் அல்லது ஆட்கள் குழுவுக்கும், அது அல்லது அவை தடைவிதிக்கப்பட்ட ஒழுங்கமைப்பொன்றென்றாற் போன்று அதேமுறையில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. (அ) தடைவிதிக்கப்பட்ட ஒழுங்கமைப்புடன் ஏதேனும் உறவை அல்லது அதன் அங்கத்துவத்தை அல்லது அதனைப் பின்பற்றுவதனைக் குறிக்கின்ற அல்லது சுட்டிக்காட்டுகின்ற ஏதேனும் சீருடையை, உடையை, அடையாளத்தை அல்லது வேறு சின்னத்தை அணிந்திருக்கின்ற, அல்லது

(ஆ) அத்தகைய தடைவிதிக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் கூட்டமொன்றைக் கூட்டுகின்ற அல்லது அதில் சமுகமாயிருக்கின்ற அல்லது அத்தகைய ஒழுங்கமைப்பின் அல்லது அதனோடு தொடர்புபட்ட அல்லது அதனோடு உறவுபட்ட ஏதேனும் செயற்பாட்டில் பங்குபற்றுகின்ற, அல்லது ஈடுபடுகின்ற அல்லது

(இ) அத்தகைய தடைவிதிக்கப்பட்ட ஒழுங்கமைப்பில் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்வதற்கென ஆட்களை அழைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பதன்மூலம் அல்லது வற்புறுத்துவதன் மூலம் நிதிகளை உதவுவதன்மூலம் அல்லது சேகரிப்பதன்மூலம் அத்தகைய ஒழுங்கமைப்பை ஆதரிக்கின்ற, அல்லது

(ஈ) அத்தகைய தடைவிதிக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் எவரேனும் உறுப்பினர் கைதுசெய்யப்படுவதனை, விளங்கப்படுவதனை அல்லது தண்டிக்கப்படுவதனைத் தடுக்கும், தடைசெய்யும் அல்லது அதில் தலையிடும் உளக்கருத்துடன் அத்தகைய உறுப்பினருக்குப் புகலிடமளிக்கின்ற, அவரை ஒழித்துவைத்திருக்கின்ற அல்லது வேறு எம்முறையிலேனும் அவருக்கு உதவியளிக்கின்ற, அல்லது

(உ) அத்தகைய தடைவிதிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் அல்லது அதன் சார்பில் அல்லது எவரேனும் உறுப்பினரால் வெளியிடப்பட்ட அல்லது வெளியிடப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் எழுத்திலான அல்லது அச்சிட்ட விடயத்தை ஆக்குகின்ற, அச்சிடுகின்ற, விநியோகிக்கின்ற அல்லது வெளியிடுகின்ற அல்லது ஆக்குவதில், அச்சிடுவதில், விநியோகிப்பதில் அல்லது வெளியிடுவதில் எவ்விதத்திலேனும் சம்பந்தப்பட்டிருக்கின்ற, அல்லது

(ஊ) அத்தகைய தடைவிதிக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்லும் நோக்கங்களுக்காக, அத்தகைய ஒழுங்கமைப்பினால் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரினால் ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் கட்டளையை, முடிவை, வெளிப்படுத்துகையை அல்லது வற்புறுத்தலை அல்லது அது தொடர்பான ஏதேனும் தகவலை எம்முறையிலேனும் வேறு எவரேனும் ஆளுக்குத் தெரிவிக்கின்ற அல்லது தெரிவிக்க முயலுகின்ற, எவரேனும் ஆள் இவ்வொழுங்குவிதிகளின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஏழு ஆண்டுகளுக்குக் குறையாததும் பதினைந்து ஆண்டுகளுக்கு மேற்படாததுமான ஒருகாலப்பகுதிக்கான இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

4. (1) அமைச்சர், அவர் பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின் பின்னர் ஆளெவரும் தடைவிதிக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படுகின்ற அல்லது பயன்படுத்தப்படுவதற்கென முன்வைக்கப்பட்ட எவையேனும் பணத்தை, பிணையங்களை அல்லது வரவுகளை கட்டுக்காப்பில் வைத்திருக்கின்றார் எனத் திருப்திப்படுமிடத்து, அமைச்சர் எழுத்திலான





கட்டளையின்மூலம், அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருக்கின்றவாறான அத்தகைய பணம், பிணையங்கள் அல்லது வரவுகள் அல்லது அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட பின்னர் அவரது கட்டுக்காப்பிற்கு வரக்கூடிய எவையேனும் பணங்கள், பிணையங்கள் அல்லது வரவுகள் மற்றும் அத்தகைய ஒழுங்கமைப்பிற்கு உரித்தான வேறு ஏதேனும் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனம் என்பன அரசுக்கு இழப்பிக்கப்பட வேண்டுமென வெளிப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அமைச்சரின் முடிவு இறுதியானதும் தீர்க்கமானதுமாதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் நீதிமன்றத்தில் பேராணை என்றவகையில் அல்லது வேறுவகையில் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

5. ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளதும் மனிதாபிமான உதவியை நல்குவதோடு தொடர்புபட்ட ஏதேனும் செயற்பாட்டில் காலத்துக்குக்காலம் ஈடுபடுவதற்கென, பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் குறித்துரைக்கப் பட்டதுமான ஏதேனும் சர்வதேச ஒழுங்கமைப்பின் உரிமையை எவ்விதத்திலும் பாதிக்கமாட்டாதென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது.

மூலம் : www.tamilcanadian.com 16/05/2002

○○○





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பின்னிணைப்பு-10

# இலங்கையின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் PTA

**(அடக்குமுறைக்கு எதிரான தமிழர் கிளர்ச்சிக்கு எதிர்ச்செயலாக ஆக்கப்பட்ட ஒரு சட்டம்)**
**1979இன் 48ஆம் இலக்க**
**பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்**
**(1979 யூலை 20ஆந் தேதியன்று சான்றுப்படுத்தப்பட்டது)**
**பிடியாணைகள் பற்றிய பகுதிகள்**

பகுதி ii – தவறுகளின் புலன்விசாரணை

6 (1) வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் அத்தியட்சகர் நிலைக்குக் குறையாத எவரேனும் பொலிஸ் அலுவலர் அல்லது அதன்பொருட்டு அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட உப பரிசோதகர் நிலைக்குக் குறையாத வேறு எவரேனும் பொலிஸ் அலுவலர் எழுத்தாணை இன்றி -

(அ) எவரேனும் ஆளைக் கைதுசெய்யலாம்,

(ஆ) எந்தவொரு வளவினுள்ளும் புகுந்து தேடுதல் நடத்தலாம்,

(இ) எவரேனும் தனிப்பட்ட ஆளை அல்லது ஏதேனும் வாகனத்தை, கப்பலை, இரயில் வண்டியை அல்லது விமானத்தை நிறுத்தித் தேடுதல் நடத்தலாம், அத்துடன்

(ஈ) ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளைக் கைப்பற்றலாம்

குறுக்குவிசாரணை செய்யும் இடங்கள் பற்றி

கைதுசெய்யப்பட்ட எவரேனும் ஆள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் புலன்விசாரணை நடத்துகின்ற பொலிஸ் அலுவலர் அத்தகைய ஆளை அணுகுவதற்கான உரிமையையும் அத்தகைய ஆளை இடத்துக்கிடம் கூட்டிச்செல்வதற்கான உரிமையையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.





தடுத்துவைத்தலுக்கான காலநீட்சியும் இடமும் பற்றி

**தடுப்பு மற்றும் தடைக்கட்டுக் கட்டளைகள்**

9 (1) அத்தகைய ஆளை அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய இடத்திலும் அத்தகைய நிபந்தனைகளுக்கு அமையவும், முதலாவது சந்தர்ப்பத்தில் மூன்று மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்குத் தடுத்துவைக்கும்படி அமைச்சர் கட்டளையிடலாம். மேலும் அத்தகைய கட்டளை ஒரு தடவையில் மூன்று மாதங்களை விஞ்சாதவகையில் காலத்துக்குக் காலம் நீடிக்கப்படலாம் அத்தகைய தடுப்பின் கூட்டுமொத்தக் காலம் பதினெட்டு மாதக் காலப்பகுதியை விஞ்சுதலாகாது.

தடுப்புக்கெதிரான சட்டவிளக்கக் கோரிக்கைகள் பற்றி

10. பிரிவு 9இன் கீழ் செய்யப்பட்ட ஒரு கட்டளை முடிவானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் பேராணைமூலமாதல் அல்லது வேறுவகையிலாதல் அதனை ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் கேள்விக்குட்படுத்தலுமாகாது

அமைச்சரால் (1)ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒரு கட்டளை முடிவானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் பேராணைமூலமாதல் அல்லது வேறுவகையிலாதல் அதனை ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் கேள்விக்குட்படுத்தலுமாகாது

சான்றுவிதிகள் பற்றி பகுதி VI – விளக்கம்

16 (1) வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறுக்காக எவரேனும் ஆள் குற்றஞ்சாட்டப்பட்டிருக்குமிடத்து, எந்நேரத்திலாவது அத்தகைய ஆளினால் கூறப்பட்ட ஏதேனும் கூற்று -

(அ) அது ஒரு குற்ற ஒப்புதலாக இருப்பினுஞ்சரி இல்லாது விடினுஞ்சரி,

(ஆ) வாய்மூலம் செய்யப்பட்டிருப்பினுஞ்சரி எழுத்திலானதாக உருமாற்றப்பட்டிருப்பினுஞ்சரி,

(இ) அத்தகைய ஆள் கூட்டுக்காவலில் அல்லது ஒரு பொலிஸ் அலுவலரின் சமுகத்தில் இருந்திருப்பினுஞ்சரி இல்லாதிருந்திருப்பினுஞ்சரி,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(ஈ) ஒரு புலன்விசாரணையின்போது செய்யப்பட்டிருப்பினுஞ் சரி இல்லாதிருப்பினுஞ்சரி,

(2) உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்ட ஏதேனும் கூற்று, சான்றுக் கட்டளைச்சட்டத்தின் 24ஆம் பிரிவின்கீழ் இயைபற்றதென எண்பிக்கின்ற பொறுப்பு அதனை இயைபற்றதென வலியுறுத்துகின்ற ஆளைச் சார்ந்ததாயிருத்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1)இன்கீழ் ஏற்கத்தக்க ஏதேனும் கூற்று அக் கூற்றைக் கூறுகின்ற ஆளுடன் கூட்டாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வேறு எவரேனும் ஆளுக்கெதிராக எண்பிக்கப்படலாம்

18 (1) ....

(அ) இறந்துபோன அல்லது தேடிக் கண்டுபிடிக்க முடியாத ஓர் ஆளினால் அடையாளங் காண்கின்ற அணிவகுப்பில் செய்யப்பட்ட அல்லது நீதிவானால் பதிவுசெய்யப்பட்ட ஒரு கூற்று, அத்தகைய ஆள் சமுகமளிக்காமை அல்லது சமுகமளிக்க முடியாமை அல்லது குறுக்கு விசாரணை செய்யப்படாமை என்ற ஏதுக்கள் எவ்வாறிருப்பினும் சான்றாக ஏற்கத்தக்கதாகும், அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டவரின் அல்லது அத்தகைய ஆளின் ஒரு முகவரின் அல்லது பிரதிநிதியின் கட்டுக்காப்பில், கட்டுப்பாட்டில் அல்லது உடைமையில் கண்டுபிடிக்கப்பட்ட ஏதேனும் ஆவணம் அத்தகைய ஆளுக்கெதிரான சான்றாக நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படலாம்

### பிணை பற்றி

19. (a) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறுக்காக ஏதேனும் நீதிமன்றால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒவ்வோர் ஆளும், அவரின் குற்றத்தீர்ப்புக்கு அல்லது விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளமை எவ்வாறிருப்பினும், மேன்முறையீடு தீர்மானிக்கப்படும்வரை அவர் விளக்கமறியலில் வைக்கப்படவேண்டும்.

### பின்னோக்கிச் செயற்படுதல்

பகுதி VII - 22. இச்சட்டத்தின் VIஆம் பகுதி நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முன்னர் தண்டனைச் சட்டக்கோவையின் 296ஆம் பிரிவின், 297ஆம் பிரிவின் அல்லது 300ஆம் பிரிவின்கீழ் ஏதேனும்





தவறைப் புரிந்துள்ள எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்தவராக அமைவதுடன் முதனிலை விசாரணையொன்று அல்லது குற்றப்பகர்வொன்று இல்லாமலும் விளங்கப்படலாம்.

### பாதுகாப்பு ஆளணியினருக்குப் பொதுவாகப் பொருந்துகிற தண்டனை விலக்குரிமை

பகுதி VIII - 26. இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது பணிப்புரையைத் தொடர்வதற்காக அல்லது தொடர்கின்ற கருத்தில் செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக எவரேனும் அலுவலருக்கு அல்லது ஆளுக்கு எதிராக குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு, வழக்குத்தொடுப்பு அல்லது நடவடிக்கை எதுவும் இருத்தலாகாது.

### நாட்டின் மீயுயர் சட்டம்

28. வேறு ஏதேனும் எழுத்திலான சட்டம் எதனைக் கொண்டிருந்தாலும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வலுவுடையனவாக இருத்தல் வேண்டும். அதற்கிணங்க இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கினவாக இருத்தல்வேண்டும்

இச்சட்டத்தின் பெரும்பாலான ஏற்பாடுகள் இப்போது 1997ஆம் ஆண்டிலும் வலுவிலுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பின்னிணைப்பு-11

## இலங்கை ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் (1977) பக்கம் 16

### தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள்

தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்குகின்ற மிகப்பல பிரச்சினைகள் உள்ளனவென்ற நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுள்ளது. அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வொன்று இல்லாமை தனிவேறான அரசை உருவாக்குவதற்கான இயக்கமொன்றைக்கூடத் தமிழ் பேசும் மக்கள் ஆதரிக்கச் செய்துள்ளது. முழு நாட்டினதும் பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியாவசியமான தேசிய ஒருங்கிணைப்பினதும் ஐக்கியத்தினதும் நலனின் பொருட்டு அத்தகைய பிரச்சினைகள் கால விரயமின்றித் தீர்க்கப்பட வேண்டுமெனக் கட்சி கருதுகின்றது. கட்சி பின்வருவன போன்ற துறைகளில் அவர்களின் மனக்குறைகளைத் தீர்ப்பதற்குச் சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும்.

1. கல்வி
2. குடியேற்றம்
3. தமிழ்மொழி உபயோகம்
4. அரச மற்றும் அரசு சார்ந்த கூட்டுத்தாபனங்களில் தொழில்.

முன்னர் கூறியவாறு நாம் சர்வகட்சி மாநாடொன்றைக் கூட்டி அதன் முடிவைச் செயற்படுத்துவோம்.



# பின்னிணைப்பு-12

## தமிழ்ப் போராளி இயக்கங்களின் நிரல்

*1986* வரை பிரதான குழுக்களாயிருந்தவை ஈரோஸ், ஈபீஆர்எல்எஃப், எல்ரீரீஈ, ரெலோ மற்றும் புளொட் என்பவையாகும். எல்ரீரீஈ, ஈவிரக்கமின்றி ஏனைய குழுக்களை ஒழித்துக்கட்டியதன் மூலம் பிரிவினைவாத இயக்கத்தின் ஏகபோக கட்டுப்பாட்டையும் உயர் மேலாண்மையையும் சாதிக்கும் வரை இவ்வியக்கக்கங்கள் மொத்தம் 20,000க்குக் கூடிய போராளிகளைக் கொண்டிருந்தன.

காலத்துக்குக் காலம் தோன்றிய குழுக்கள் பின்வருமாறு:

ஈழப் புரட்சிகர அமைப்பாளர்கள் (EROS)

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)

ஈழ மக்கள் விடுதலை முன்னணி (EPLF)

ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ENLF)

ஈழ ஆய்வு நிறுவனம் (ERO)

ஈழத் தேசிய சனநாயக விடுதலை முன்னணி (ENDLF)

ஈழ விடுதலைப் பாதுகாப்பு முன்னணி (ELDF)

ஈழ விடுதலைப் புலிகள் (ELT)

ஈழ விடுதலை அமைப்பு (ELO)

கழுகு இயக்கம் (EM)

தமிழ் ஈழ கெரில்லா இராணுவம் (GATE)

இலங்கைச் சுதந்திரத் தமிழ் இராணுவம் (IFTA)

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (LTTE)

தமிழ் ஈழத் தேசிய விடுதலை முன்னணி (NLFT)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் ஈழ மக்கள் விடுதலை இயக்கம் (PLOTE)

மக்கள் விடுதலைக் கட்சி (PLP)

தமிழ் ஈழவாதிகளின் செம்முன்னணி (RFTE)

புரட்சிகரப் போரேறுகள் (RW)

செம்பிறை கெரில்லாக்கள் (RCG)

புரட்சிகர ஈழ விடுதலை இயக்கம் (RELO)

சோசலிசப் புரட்சிகர சமூக விடுதலை (SRSL)

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO)

தமிழ் ஈழ விடுதலை முன்னணி (TELF)

தமிழ் ஈழ விடுதலை இராணுவம் (TELA)

தமிழ் ஈழத் தேசிய இராணுவம் (TENA)

தமிழ் ஈழ இராணுவம் (TEA)

தமிழ் ஈழ விடுதலைத் தீவிரவாதிகள் (TELE)

தமிழ் ஈழ விடுதலை கெரில்லாக்கள் (TELG)

தமிழ் ஈழப் பாதுகாப்பு முன்னணி (TEDF)

தமிழ் ஈழக் கழுகுகள் முன்னணி (TEEF)

தமிழ் ஈழக் குருதி இயக்கம் (TEBM)

தமிழ் ஈழப் பாதுகாப்புச் சேவைகள் (TESS)

தமிழ் ஈழ விடுதலை நாகங்கள் (TELC)

தமிழ் மக்கள் பாதுகாப்பு முன்னணி (TPSF)

தமிழ் மக்கள் ஆணைப் பிரிவு (TPCU)

தமிழ் மக்கள் சனநாயக முன்னணி (TPDF)

மூலம்: பல்வேறு தமிழ் இயக்கங்களின் வெளியீடுகள் 1975 - 1987.



## பின்னிணைப்பு-13

### அரசியலமைப்புக்கான ஆறாவது திருத்தம் (1983 ஆகஸ்ட் 8ஆந் தேதியன்று சான்றுப்படுத்தப்பட்டது) L.D.O. 46/84

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்தவதற்கான ஒரு சட்டம்.

(7) சத்தியத்தை அல்லது உறுதியுரையை செய்து கீழொப்பமிடுவதற்கு அல்லது மொழிந்து கீழொப்பமிடுவதற்கு 32ஆம் உறுப்புரையினால் அல்லது 53ஆம் உறுப்புரையினால் அல்லது 61ஆம் உறுப்புரையினால் அல்லது 107ஆம் உறுப்புரையினால் அல்லது 165ஆம் உறுப்புரையினால் அல்லது 169(12)ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்பட்டிருந்தவாறான அல்லது தேவைப் படுத்தப்பட்டு உள்ளவரான அலுவலர் அல்லது ஆளொவ்வொருவரும், உள்ளூரதிகார சபையொன்றின் ஒவ்வோர் உறுப்பினரும் அல்லது அதன் சேவையிலுள்ள ஆளொவ்வொருவரும், அபிவிருத்திச் சபையொன்றின் ஒவ்வோர் உறுப்பினரும் அல்லது அதன் சேவையிலுள்ள ஆளொவ்வொருவரும், பிரதேச சபையொன்றின் ஒவ்வோர் உறுப்பினரும் அல்லது அதன் சேவையிலுள்ள ஆளொவ்வொருவரும், கிராமோதய சபையொன்றின் ஒவ்வோர் உறுப்பினரும் அல்லது அதன் சேவையிலுள்ள ஆளொவ்வொருவரும், அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் சேவையிலுள்ள ஆளொவ்வொருவரும் அத்துடன் சட்டத்தரணி ஒவ்வொருவரும் -

(அ) இந்த உறுப்புரை வலுவுக்கு வரும் தேதியன்று அத்தகைய அலுவலரொருவர் பதவி வகிக்கின்றவராக இருப்பின் இந்த உறுப்புரை வலுவுக்கு வரும் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் அவ்வுறுப்புரையிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக அத்தகைய ஆள் அல்லது குழு எவரேனும் அல்லது ஏதேனும் இருப்பின், அவர் அல்லது அதன் முன்னிலையில், பொருளளவில், ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லான சத்தியத்தை அல்லது உறுதியுரையைச் செய்து கீழொப்பமிடுதல் அல்லது மொழிந்து கீழொப்பமிடுதல் வேண்டும்,

(ஆ) இந்த உறுப்புரை வலுவுக்கு வந்ததன் பின்னர் அத்தகைய ஆள் அல்லது அலுவலர் அத்தகைய பதவிக்கு நியமிக்கப் பட்டிருப்பின், அத்தகைய பதவிக்கு அவர் நியமிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குள், அவ்வுறுப்புரையிற் குறிப்பீடு செய்யப் பட்டவாறாக அத்தகைய ஆள் அல்லது குழு எவரேனும் அல்லது ஏதேனும் இருப்பின், அவர் அல்லது அதன் முன் னிலையில், பொருளளவில், ஏழாம் அட்டவணையில் தரப் பட்டுள்ள படிவத்திலான சத்தியத்தை அல்லது உறுதியுரை யைக் கீழொப்பமிடுதல் வேண்டும்,

இப்பந்தியினால் தேவைப்படுத்தப்பட்டவாறு ஒரு சத்தியத்தை அல்லது ஒரு உறுதியுரையைச் செய்து கீழொப்பமிடுவதற்கு அல்லது மொழிந்து கீழொப்பமிடுவதற்குத் தவறுபவரான எவ ரேனும் ஆளுக்கும் அல்லது அலுவலருக்கும் அத்துடன் ஆள் தொடர்பிலும் அல்லது அலுவலர் தொடர்பிலும், 165ஆம் உறுப்புரையினதும் 169 (12)ஆம் உறுப்புரையினதும் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(8) (அ) இந்த உறுப்புரை வலுவுக்கு வருவதன்மேல் பாராளுமன்றத் தின் உறுப்பின ரொருவராக உள்ள ஆளொவ்வொருவரும், ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான சத்தியத்தை அல்லது உறுதியுரையை அவர் செய்து கீழொப்ப மிட்டாலன்றி அல்லது மொழிந்து கீழொப்பமிட்டாலன்றி பாராளுமன்றத்தில் அமருவதற்கும் வாக்களிப்பதற்கும் உரித் துடையவராதலாகாது.

(ஆ) இந்த உறுப்புரை வலுவுக்கு வருவதன்மேல் அல்லது அதன்பின்னர் பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவாறான அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளவாறான ஆளொவ்வொருவரும் ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான சத்தியத்தை அல்லது உறுதியுரையைச் செய்து கீழொப்பமிட்டாலன்றி அல்லது மொழிந்து கீழொப்பமிட்டாலன்றி பாராளுமன்றத் தில் அமருவதற்கும் வாக்களிப்பதற்கும் உரித்துடையவராத லாகாது.

(9) ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான சத்தி யத்தை அல்லது உறுதியுரையை செய்து கீழொப்பமிட்டுள்ள வரான அல்லது மொழிந்து கீழொப்பமிட்டுள்ளவரான ஆளெ





வரும், அரசியலமைப்பில் முரணாகவுள்ள ஏற்பாடெதுவும் எப்படியிருப்பினும், அரசியலமைப்பின்கீழ் செய்து கீழொப்ப மிடப்படுவதற்கு அல்லது மொழிந்து கீழொப்பமிடப் படுவதற் குத் தேவைப்படுத்தப்பட்ட வேறேதேனும் சத்தியத்தை அல்லது உறுதியுரையினைச் செய்து கீழொப்பமிடுவதற்கு அல்லது மொழிந்து கீழொப்பமிடுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.

(10) ஏழாம் பந்தியின் ஏற்பாடுகள் வேறு எந்த வகுதியினரான ஆட்களுக்கு அல்லது அலுவலர்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டுமோ அந்த வேறு வகுதியினரான ஆட்களை அல்லது அலுவலர்களைப் பாராளுமன்றம் தீர்மானம் மூலம் தீர்மானிக்க லாமென்பதுடன், அதன்மேல் அந்த வகுதியினரான அலுவலர் களுக்கும் அல்லது ஆட்களுக்கும் அத்துடன் அலுவலர்கள் தொடர்பிலும் அல்லது ஆட்கள் தொடர்பிலும் அத்தகைய பந்தியின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாத லும் வேண்டும்.

(11) இவ்வுறுப்புரையின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தத்து வங்கள் தொடர்பில் அந்நீதி மன்றத்துக்குள்ள நியாயாதிக்க மானது, 146ஆம் உறுப்புரையின் (2)ஆம் பந்திக்கான காப்பு வாசகத்தின் (iv)ஆம் உட்பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

**அரசியலமைப்பின் 161ஆம் உறுப்புரையின் திருத்தம்**

5. அரசியலமைப்பு அதன் முடிவில் பின்வரும் அட்டவணை யைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. அந்த அட்ட வணை அரசியலமைப்புக்கான ஏழாவது அட்டவணையாகப் பயனு றுதல் வேண்டும்.

"ஏழாம் அட்டவணை

157அ (7) உறுப்புரையும் 161(ஈ) (iii)ஆம் உறுப்புரையும்

..................................................ஆகிய நான் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை உறுதியாகப் போற்றிக் காப்பேன் என்றும், இலங்கையின் ஆள்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்று தாபிக்கப்படுவதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ இலங்கை யிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ ஆதரவு அளிக்கவோ, ஆக்கமளிக்கவோ, ஊக்குவிப்பு அளிக்கவோ, நிதி உதவவோ, ஊக்கு விக்கவோ, பரிந்துரைக்கவோ மாட்டேன் என்றும் பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதிசெய்கிறேன் சத்தியஞ் செய்கின்றேன்."

அரசியலமைப்புக்குச் சேர்க்கப்பட்ட ஏழாம் அட்டவணை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பின்னிணைப்பு-14

### பிற்சேர்க்கை C (Annexure – C)

சனாதிபதியின் 1983 திசெம்பர் 1ஆந் தேதிய அறிக்கையின் ஆறாம் பந்தியின் பிரகாரம், கொழும்புக்கும் புதுடெல்லிக்கும் இடையிலான கலந்தாராய்வுகளின் விளைவாக உருவான பின்வரும் முன்மொழிவுகள் சர்வகட்சி மாநாட்டின் பரிசீலனைக்காக இணைக்கப்படுகின்றன. இலங்கையின் ஐக்கியத்தினதும் ஒருமைப்பாட்டினதும் சூழமைவில் உருவான இம்முன்மொழிவுகள் சர்வகட்சி மாநாட்டின் நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்கான அடிப்படையாக அமையும்.

(1) ஒரு மாகாணத்திலுள்ள மாவட்ட அபிவிருத்திச் சபைகள் அச்சபைகளின் தீர்மானங்கள் மூலம் உடன்படுமாயின் அம்மாவட்டத்தில் நடத்தப்படும் மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பின் அங்கீகாரத்துடன் ஒரு பிராந்தியச் சபையாக அல்லது ஒன்றுக்குக் கூடிய பிராந்தியச் சபைகளாக ஒருங்கிணைவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

(2) முறையே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மாவட்டச் சபைகளின் விடயத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் பதவிவிலகலின் நிமித்தம் அவை செயற்படாதுள்ளதனால், ஒவ்வொரு மாகாணத்தினுள்ளும் அவற்றின் ஒன்றிணைப்பு ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

(3) ஒவ்வொரு பிராந்தியமும், அவ்வாறு விரும்புமாயின், ஒரு பிராந்தியச் சபையைக் கொண்டிருக்கும். பிராந்தியச் சபையில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டுள்ள கட்சியின் தலைவர் பிராந்தியத்தின் முதலமைச்சராக சனாதிபதியால் முறைப்படி நியமிக்கப் படுவாரென்ற நடைமுறை மரபு தாபிக்கப்படும். முதலமைச்சர் பிராந்தியத்தின் அமைச்சர் குழுவொன்றை உருவாக்குவார்.

(4) சனாதிபதியும் பாராளுமன்றத்தினரும் பிராந்தியத்துக்குக் கைமாற்றப்படாத எல்லா விடயங்களுக்கும் பொதுவாக முழுக் குடியரசினதும் இறைமை, ஒருமைப்பாடு, ஐக்கியம், பாதுகாப்பு,





முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றைப் பேணுதல் தொடர்பான ஏனைய எல்லா விடயங்களுக்குமான ஒட்டுமொத்தப் பொறுப்பைத் தொடர்ந்தும் கொண்டிருப்பர்.

(5) பிராந்தியத்தின் சட்டவாக்க அதிகாரம் பிராந்தியச் சபைகளுக்கு உரித்தாக்கப்படும். பிராந்தியத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல், நீதி நிருவாகம், சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி, கலாசார விடயங்கள் மற்றும் காணிக்கொள்கை உட்பட, குறித்த சில நிரற்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் சட்டங்களை ஆக்குவதற்கும் நிறைவேற்று அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கும் பிராந்தியச் சபைகளுக்குத் தத்துவமளிக்கப்படும். பிராந்தியங்களுக்கு ஒதுக்கப்படவுள்ள விடயங்களின் நிரல் விரிவாகத் தயாரிக்கப்படும்.

(6) பிராந்தியச் சபைகள் வரிகளையும் தீர்வைகளையும் கட்டணங்களையும் அறவிடுவதற்கும் கடன்கள் ஊடாக வளங்களைத் திரட்டுவதற்குமான அதிகாரங்களைக் கொண்டிருக்கும். அவ்வாறான வருவாய் குறிப்பிட்ட பிராந்தியத்துக்கெனத் தாபிக்கப்படும் திரட்டு நிதியமொன்றில் வரவுவைக்கப்படும். குடியரசினால் வழங்கப்படும் மானியங்கள், ஒதுக்கீடுகள் அல்லது உதவுதொகைகளும் அந்நிதியத்தில் வரவுவைக்கப்படும். காலத்துக்குக் காலம் நியமிக்கப்படும் பிரதிநிதித்துவ நிதி ஆணைக் குழுவின் விதப்புரைகளின்பேரில் பிராந்தியத்துக்கு நிதி வளங்கள் பங்கீடு செய்யப்படும்.

(7) ஒவ்வொரு பிராந்தியத்திலும் மேல் நீதிமன்றங்களை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். இலங்கையின் உயர் நீதிமன்றம் மேன்முறையீட்டு மற்றும் அரசியலமைப்பு நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும்.

(8) ஒவ்வொரு பிராந்தியமும்

(அ) பிராந்தியத்தின் அலுவலர்களையும் பகிரங்க சேவையாளர்களையும், அத்துடன்

(ஆ) பிராந்தியத்துக்குத் தற்காலிகமாக விடுவிக்கப்பட்ட அத்தகைய வேறு அலுவலர்களையும் பகிரங்க சேவையாளர்களையும் கொண்ட பிராந்தியச் சேவையொன்றைக் கொண்டிருக்கும். பிராந்தியச் சேவையின் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும் அவர்கள் தொடர்பில் ஒழுக்காற்று அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கும், ஒவ்வொரு பிராந்தியமும் பிராந்தியப் பகிரங்கச் சேவை ஆணைக்குழுவொன்றைக் கொண்டிருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(9) இலங்கையின் ஆயுதப்படையினர் தேசிய இன ஆக்க அமைவைப் பிரதிபலிப்பர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ளகப் பாதுகாப்புக்கான பொலிஸ் படையினரும் அப்பிராந்தியங் களில் இன ஆக்க அமைவைப் பிரதிபலிப்பர்.

(10) திருகோணமலைத் துறைமுகப் பட்டினத்தையும் துறைமுகத்தை யும் நிர்வகிப்பதற்கு மத்திய அரசாங்கத்தின்கீழ் துறைமுக அதிகாரசபையொன்று தாபிக்கப்படும். துறைமுக அதிகார சபையின்கீழ்வரும் பிரதேசமும் அதற்கு ஒப்படைக்கப்படவுள்ள அதிகாரங்களும் மேலும் கலந்தாராயப்படும்.

(11) காணி குடியேற்றமும் காணிக் குடியேற்றத்தை அரசாங்கம் மேற்கொள்கின்ற அடிப்படையும் பற்றிய தேசியக் கொள்கை யொன்று தயாரிக்கப்படவேண்டும். எல்லாக் குடியேற்றத் திட்டங் களும், பிரதான கருத்திட்டங்கள்மீது உடன்பாடுகள் எட்டப் படுவதற்கமைய, மக்கட் பரம்பல் சமநிலையை மாற்றாதவகை யில் இன விகிதாசாரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

(12) அரசகருமமொழியான சிங்களமும் தேசிய மொழியான தமிழும் தொடர்பான அரசியலமைப்பும் ஏனைய சட்டங்களும் தேசியக் கொடி மற்றும் தேசிய கீதம் தொடர்பான ஒத்த சட்டங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் செயற்படுத்தப்படவேண்டும்.

(13) மாநாடு இத்தீர்மானங்களைச் செயற்படுத்துவதற்கு அவசிய மான அரசியலமைப்பு மற்றும் சட்ட மாற்றங்களைத் தயாரிப் பதற்கென ஒரு குழுவை நியமிக்கவேண்டும். அரசாங்கம் அதன் செயலகத்தையும் தேவையான சட்டப் பணித்துறையையும் வழங்கும்.

(14) சர்வகட்சி மாநாட்டின் கருத்தொருமித்த அபிப்பிராயம்தானே சட்டவாக்க நடவடிக்கைக்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்படுவதற்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற் றுக் குழுவினாலும் ஏனைய கட்சிகளின் நிறைவேற்றுச் சபை களினாலும் பரிசீலனை செய்யப்படும்.

○○○



# பின்னிணைப்பு-15

## திம்பு பிரகடனம் (1985)

### 1985 யூலை 13ஆந் தேதியன்று திம்புப் பேச்சுக்களின் முதலாம் கட்ட முடிவு நாளன்று

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF), ஈழப் புரட்சி அமைப்பு (EROS), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT), தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE), தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) மற்றும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) ஆகியவற்றைக் கொண்டதான தமிழ்த் தூதுக்குழுவால் விடுக்கப்பட்ட கூட்டறிக்கை.

தமிழ்த் தேசிய பிரச்சினைக்கான பயனுள்ள தீர்வெதுவும் பின்வரும் நான்கு முக்கிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென்பது எமது ஆழ்ந்தாராய்ந்த கருத்தாகும்.

1. இலங்கைத் தமிழர்கள் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்படுதல்.
2. இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு இனங்காணப்பட்ட ஒரு தாயகம் உள்ளதென்பதை அங்கீகரித்தல்.
3. தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.
4. இத்தீவைத் தமது நாடாகக் கருதுகின்ற எல்லாத் தமிழர்களி னதும் பிரசாவுரிமையையும் அடிப்படை உரிமைகளையும் அங்கீகரித்தல்.

இக்கோட்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு வெவ்வேறு நாடுகள் வெவ்வேறு அரசாங்க முறைமைகளை வகுத்தமைத்துள்ளன.

எமது மக்களுக்கு இந்த அடிப்படை உரிமைகளை மறுத்ததனால் எழுந்துள்ள இப்பிரச்சினைக்குப் பதிலளிப்பாக நாம் சுதந்திரமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் அரசொன்றைக் கோரியுள்ளதுடன் அதற்காகப் போராடியும் வந்துள்ளோம்.

இப்பிரச்சினைக்கு அவர்களின் தீர்வாக இலங்கை அரசாங்கத் தூதுக் குழுவினரால் முன்வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. எனவே 1985 யூலை 12 ஆந் தேதிய எமது கூற்றில் நாம் தெரிவித்துள்ளவாறு அவற்றை நாம் நிராகரித்துள்ளோம்.

எனினும் சமாதானத்துக்கான எமது மனமார்ந்த விருப்பின் நிமித்தம், மேலே குறிப்பிடப்பட்ட கோட்பாடுகளுக்கிணங்க இலங்கை அரசாங்கம் எமக்கு முன்வைக்கும் ஆலோசனைகளின் தொகுதி எதனையும் நாம் பரிசீலனை செய்யத் தயாராயுள்ளோம்.

ooo



## பின்னிணைப்பு-16

### இலங்கையில் சமாதானத்தையும் வழமை நிலையையும் ஏற்படுத்துவதற்கான இந்திய – இலங்கை உடன்படிக்கை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி மேதகு ஜே.ஆர்.ஜயவர்தனவும் இந்தியக் குடியரசின் பிரதமர் மேதகு ராஜீவ் காந்தியும் 1987 ஜுலை 29 ஆம் திகதி கொழும்பில் சந்தித்து,

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான பாரம்பரியமான நட்புறவை வளர்ப்பதற்கும் தீவிரப்படுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் அதி கூடிய முக்கியத்துவமளித்தும் இலங்கையின் இனப்பிரச்சினையையும் அதன்விளைவான வன்முறையையும் தீர்த்துவைக்கும் கட்டாய தேவையை அங்கீகரித்தும் இலங்கையின் சகல சமூகங்களையும் சார்ந்த மக்களின் பாதுகாப்பிற்காகவும் நலனுக்காகவும் சுபீட்சத்திற்காகவும்

இன்றைய தினம் இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகப் பின்வரும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

1. இச்சந்தர்ப்பத்தில்,

1.1 இலங்கையின் ஒற்றுமையையும் இறைமையையும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க விரும்பி

1.2 இலங்கை சிங்களவர்கள், தமிழர், முஸ்லிம்கள் (சோனகர்) மற்றும் பறங்கியர் ஆகியோர் அடங்கிய ஒரு "பல் இன, பல்மொழி, பன்மைச்சமூகம் ஆகும்" என்பதை ஏற்றுக்கொண்டு

1.3 ஒவ்வொரு இனக்குழுமமும் கவனமாகப் பேணிப் போற்றப்பட வேண்டிய தனித்துவமான கலாசார மற்றும் மொழி தனித்துவங்களை கொண்டுள்ளதென்பதை அங்கீகரித்து

1.4 வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இதுவரை காலமும் இப்பிராந்தியத்தில் ஏனைய இனக் குழுமங்களுடன் சேர்ந்து வாழ்ந்த





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கையின் தமிழ்பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ் விடமாகும் என்பதையும் அங்கீகரித்து

1.5 இலங்கையின் ஒற்றுமைக்கும் இறைமைக்கும் ஆள்புல ஒருமைப் பாட்டிற்கும் பங்களிப்புச் செய்யும் சக்திகளை வலுப்படுத்தி சகல பிரசைகளும் சமத்துவமாகவும் பாதுகாப்பாகவும் சௌஜன்ய மாகவும் வாழ்ந்து வளம்பெறுவதோடு தமது அபிலாசைஷகளை யும் நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய ஒரு பல் இன, பல்மொழி, பல் சமய பன்மைச் சமூகம் என்ற அதன் தன்மையையும் பாது காக்கும் தேவையையும் மனதிற்கொண்டு

2. தீர்மானிப்பதாவது

2.1 அடுத்தடுத்துள்ள மாகாணங்கள் ஒன்றாக இணைந்து ஒரே நிர்வாக அலகை உருவாக்குவதையும் அத்துடன் பிரத்தியேக மான சர்வஜன வாக்கெடுப்பொன்றின்மூலமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிவதையும் இலங்கை அரசாங்கம் பின்வருமாறு விளக்கப்பட்டவாறு அனுமதிப்பதனால்

2.2 இடைக்காலமெனக் கருதப்படவேண்டிய காலப்பகுதியில் (அதாவது பந்தி 2.8இல் விதந்துரைக்கப்பட்டவாறு இம்மாகா ணத்திற்கான தேர்தல் நடைபெறும் தினத்திலிருந்து பந்தி 2.3இல் விதந்துரைக்கப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் தினம்வரை இப்போது அமைந்துள்ளவாறான வடக்கு-கிழக்கு மாகாணம் தெரிவுசெய்யப்பட்ட ஒரே நிர்வாக அலகாக அமை யும். அத்தகைய அலகு ஓர் ஆளுநரையும் ஒரு முதலமைச்சரை யும் ஓர் அமைச்சரவையையும் கொண்டிருக்கும்.

2.3 கிழக்கு மாகாண மக்கள்:

(அ) கிழக்கு மாகாணம் வடக்கு மாகாணத்துடன் ஒரே நிர்வாக அலகாக இணைந்து பந்தி 2.2இல் விதந்துரைக்கப்பட்டவாறு வடமாகாணத்துடன் இணைந்து தொடர்ந்தும் நிர்வகிக்கப் படவேண்டுமா அல்லது

(ஆ) கிழக்கு மாகாணம் தனக்கெனத் தனியான ஆளுநர், முத லமைச்சர் மற்றும் அமைச்சரவை ஆகியவற்றைக்கொண்ட தனியான மாகாண சபையைக்கொண்ட தனி நிர்வாக அலகாக அமைய வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க உதவு முகமாக 1988 டிசெம்பர் 11ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சர்வஜன வாக்கெடுப் பொன்று நடத்தப்படும்.

ஜனாதிபதி அவர்கள் தனது தற்றுணிபைப் பிரயோகித்து அத்தகைய சர்வஜன வாக்கெடுப்பை ஒத்திப்போடலாம்.





2.4 இன வன்முறைகளின் நிமித்தம் அல்லது வேறு ஏதேனும் கார ணங்களின் நிமித்தம் இடம்பெயர்ந்துள்ள சகல ஆட்களுக்கும் இத்தகைய சர்வஜன வாக்கெடுப்பில் வாக்களிக்க உரிமை உண்டு. எவ்விடத்திலிருந்து இடம்பெயர்ந்து சென்றார்களோ அவ் விடங்களுக்கு மீண்டும் திரும்பி வருவதற்குத் தேவையான நிலைமைகள் தோற்றுவிக்கப்படும்.

2.5 சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்போது அது பிரதம நீதி யரசரின் தலைமையில் இலங்கை அரசாங்கத்தினால் பெயர் குறிப்பிடப்பட்டு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஓர் உறுப் பினர் கிழக்கு மாகாண தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகளினால் பெயர் குறிப்பிடப்பட்டு ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர் ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவால் கண்காணிக் கப்படும்.

2.6 சர்வஜன வாக்கெடுப்பின் முடிவைத் தீர்மானிப்பதற்கு சாதாரண பெரும்பான்மை போதுமானதாகும்.

2.7 சர்வஜன வாக்கெடுப்புக்கு முன்னர் நாட்டின் சட்டத்திற்குட் பட்ட கூட்டங்கள் வேறுவகையிலான பிரசாரங்கள் ஆகியன அனுமதிக்கப்படும்.

2.8 அடுத்த மூன்று மாதங்களுக்குள், எப்படியும் 1987 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படும். வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலுக்கு இந்திய கண்காணிப்பாளர்கள் அழைக்கப்படுவர்.

2.9 1987 ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்கு முன்னர் வடக்கு-கிழக்கு மாகா ணத்தில் அவசரகாலச்சட்டம் நீக்கப்படும். இவ்வொப்பந்தம் கைச்சாத்தாகிய 48 மணித்தியாலங்களுக்குள் தீவெங்கும் பகை மைத்தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்று அமுலுக்கு வரும். தற்போது போராளிகளிடமுள்ள ஆயுதங்கள் அனைத்தும் ஏற்றுக்கொள் ளப்பட்ட நடைமுறை ஒன்றிற்கமைய இலங்கை அரசாங்கத்தி னால் நியமிக்கப்படும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும். பகைமைத்தவிர்ப்பையும் போராளிகளின் ஆயுதக் கையளிப்பை யும் தொடர்ந்து, இராணுவமும் ஏனைய பாதுகாப்பு ஆளணி யினரும் 1987 மே 25 ஆம் திகதி அன்றுள்ளவாறான முகாம்களி லேயே தங்கியிருப்பர். ஆயுதங்களை ஒப்படைத்தலும் ஆயுதப் படையினர் முகாம்களுக்குப் பின்வாங்கிச்செல்வதும் பகைமைத் தவிர்ப்பு அமுலுக்கு வந்த 72 மணித்தியாலங்களுக்குள் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

2.10 வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சட்டத்தை நிலைநாட்டல் மற்றும் பாதுகாப்பை பேணுதல் ஆகிய நோக்கங்களுக்காக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கை அரசாங்கம் நாட்டின் ஏனைய பகுதிகளில் பயன்படுத்தும் அதே அரச நிறுவனங்களையும் பொறிமுறைகளையும் பயன்படுத்தும்.

2.11 பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழும் ஏனைய அவசரகாலச் சட்டங்களின்கீழும் தடுப்புமுகாம்களில் வைக்கப்பட்டுள்ள அரசியல் மற்றும் ஏனைய கைதிகளுக்கும் அத்துடன் போராளிகளுக்கும் இச்சட்டங்களின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அல்லது குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ஏனைய ஆட்களுக்கும் இலங்கை ஜனாதிபதி பொதுமன்னிப்பொன்றை வழங்குவார். போராளி இளைஞர்களை தேசிய வாழ்வின் பெரும்போக்கினுள் மீண்டும் கொண்டுவருமுகமாக அவர்களுக்கு மறுவாழ்வளிப்பதற்கான விசேஷட முயற்சிகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும். இந்தியா இந்நடை முறையில் ஒத்துழைப்பு வழங்கும்.

2.12 இலங்கை அரசாங்கம் மேல்வரும் ஏற்பாடுகளை ஏற்றுக்கொண்டு அதன்படி நடப்பதோடு, ஏனையவர்களும் அவ்வாறே செய்ய வேண்டுமென எதிர்பார்க்கும்.

2.13 இத்தீர்மானத்திற்கான வரைபுச்சட்டம் ஏற்றுக்கொள்ளப்படின் சம்பந்தப்பட்ட முன்மொழிவுகளை இலங்கை அரசாங்கம் உடனடியாக அமுல்படுத்தும்.

2.14 இந்திய அரசாங்கம் இத்தீர்மானத்தில் உடன் கைச்சாத்திட்டு அதற்கு உத்தரவாதமளிப்பதுடன், இத்தீர்வாலோசனைகளின் அமுலாக்கத்திலும் ஒத்துழைப்பு வழங்கும்.

2.15 1986-05-04ஆம் திகதி முதல் 1986-12-19 வரை பேச்சுவார்த்தை செய்யப்பட்ட தீர்வாலோசனைகளை ஏற்றுக்கொள்வது என்னும் நிபந்தனையிலேயே இத்தீர்வாலோசனைகளும் அமைகின்றன. மேல்வரும் பேச்சுவார்த்தைகளின்போது முடிவு செய்யப்படாத எஞ்சிய விடயங்கள் இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட ஆறு வார காலப்பகுதியினுள் இலங்கை மற்றும் இந்திய நாடுகளினால் தீர்த்துவைக்கப்பட வேண்டும். இத்தீர்வாலோசனைகள் அவற்றின் அமுலாக்கலில் இந்திய அரசாங்கம் நேரடியாக ஒத்துழைக்கும் என்னும் நிபந்தனையின் பேரிலானவையுமாகும்.

2.16 இத்தீர்வாலோசனைகள் இலங்கையில் தொழிற்படும் ஏதேனும் போராளிக் குழுக்கள் இத்தீர்வாலோசனை வரைச்சட்டத்தை ஒரு தீர்வுக்காக ஏற்றுக்கொள்ளாதவிடத்து இந்திய அரசாங்கம் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற நிபந்தனையின் பேரிலுமானவையாகும். அதாவது:





அ) இலங்கையின் ஐக்கியத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் பாதுகாப்பிற்கும் பாதகமான நடவடிக்கைகளுக்கு இந்திய ஆள்புலம் பயன்படுத்தப்படமாட்டாது என்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்தியா மேற்கொள்ளும்.

ஆ) இந்திய கடற்படை, கரையோரப் பாதுகாப்புப்படை இலங்கையைப் பாதிக்கும் தமிழ்ப் போராளிக்குழு நடவடிக்கைகளை தடுப்பதில் இலங்கைக் கடற்படையுடன் ஒத்துழைக்கும்.

இ) இத்தீர்வாலோசனைகளை அமுலாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்திடம் இராணுவ உதவிகளைக் கோருமிடத்து, இந்திய அரசாங்கம் அத்தகைய இராணுவ உதவிகளை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குவதன் மூலம் ஒத்துழைக்கும்.

ஈ) தமிழ்நாட்டிலுள்ள இலங்கை அகதிகளைத் தமது தாயகத்துக்குத் திருப்பி அனுப்புகின்ற செயலுடன் இணைந்ததாக இலங்கையில் இருக்கும் இந்தியப் பிரசைகளைத் தாயகத்துக்கு திருப்பி அழைத்துக்கொள்ளும் செயலை இந்திய அரசாங்கம் துரிதப்படுத்தும்.

உ) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற சகல சமூகத்தினரதும் உடல்ரீதியான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் இந்தியாவும் இலங்கையும் ஒத்துழைக்கும்.

2.17 இவ்வொப்பந்தத்தில் கூறப்பட்ட தேர்தல் நடைமுறைகளில் வடக்கு, கிழக்கில் உள்ள சகல சமூகத்தையும் சார்ந்த வாக்காளர்கள் சுதந்திரமாகவும் முழுமையாகவும் நேர்மையாகவும் பங்குபற்றுவதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். இவ்விடயத்தில் இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கும்.

2.18 இலங்கையின் அரசகரும மொழி சிங்கள மொழியாதல் வேண்டும். அத்துடன் தமிழும் ஆங்கிலமும் அரசகரும மொழிகளாக இருக்கும்.

8. கைச்சாத்திடப்பட்டதன் பேரில் இவ்வொப்பந்தமும் அதற்கான பின்னிணைப்புகளும் அமுலுக்கு வருதல் வேண்டும்.

இதற்கு சாட்சியாக நாம் இதில் கையொப்பமிட்டு அதன்மீது எமது இலட்சினையைப் பதிக்கின்றோம்.

ஓராயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து ஏழாம் ஆண்டு ஜுலை மாதம் 19ஆம் நாளாகிய இன்று கொழும்பு, இலங்கையில் இரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரதிகளில், இரண்டு பிரதிகளுமே சம வலுவுள்ளதாக செய்துகொள்ளப்பட்டது.

ராஜீவ்காந்தி
இந்தியக் குடியரசின் பிரதமர்

ஜூனியஸ் ரிச்சட் ஜயவர்தன
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி

## உடன்படிக்கைக்கான பின்னிணைப்பு

1. உடன்படிக்கையின் 2ஆவது பந்தியிலும் அதன் உட்பந்திகளிலும் குறிப்பிடப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு இலங்கையின் மேதகு சனாதிபதியால் அழைக்கப்படவுள்ள இந்தியத் தேர்தல் ஆணைக் குழுவின் பிரதிநிதியொருவரால் கண்காணிக்கப்படுமென இலங்கையின் மேதகு சனாதிபதியும் இந்தியப் பிரதமரும் உடன் படுகின்றனர்.

2. ஒத்தவகையில், உடன்படிக்கையின் 2.8ஆம் பந்தியில் குறிப்பிடப் பட்ட மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இலங்கையின் மேதகு சனாதிபதியால் அழைக்கப்படவுள்ள இந்திய அரசாங் கத்தின் பிரதிநிதியொருவரால் கண்காணிக்கப் படுமென இரு அரசாங்கத் தலைவர்களும் உடன்படுகின்றனர்.

3. வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு நியாயமான தேர்தலுக்கு உகந்த நிலைமைகளை உருவாக்கும்பொருட்டு ஊர்காவல் படை யினர் கலைக்கப்படுவரென்றும் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங் களிலிருந்து இராணுவத் துணைப்படை ஆளணியினர் அனை வரும் மீளப்பெறப்படுவரென்றும் இலங்கையின் மேதகு சனாதிபதி உடன்படுகிறார்.

   இன வன்முறையின் நிமித்தம் வழக்குக்குவந்த அத்தகைய இராணுவத் துணைப் படைகளை சனாதிபதி அவரின் தற்றுணி பின்பேரில் இலங்கையின் நிலையான பாதுகாப்புப் படைகளினுள் உள்ளீர்த்துக்கொள்ளவேண்டும்.

4. தமிழ்ப் போராளிகள் தமது ஆயுதங்களை இலங்கையின் சனாதிபதியால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கவேண்டுமென இலங்கையின் சனாதிபதியும் இந்தியப் பிரதமரும் உடன்படுகின்றனர். இந்த ஒப்படைப்பு இலங்கைச் செஞ்சிலுவையினதும் இந்தியச் செஞ்சிலுவையினதும் ஒவ்வொரு சிரேஷ்ட பிரதிநிதியினதும் முன்னிலையில் இடம்பெறவேண்டும்.





5. இலங்கை அரசாங்கத்தினதும் இந்திய அரசாங்கத்தினதும் தகுதிபெற்ற பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு கூட்டு இந்திய-இலங்கைக் கண்காணிப்புக் குழு 1987 யூலை 31ஆந் தேதியிலிருந்து பகைமைத் தவிர்ப்பைக் கண்காணிக்குமென்று இலங்கைச் சனாதிபதியும் இந்தியப் பிரதமரும் உடன்படுகின்றனர்.

6. உடன்படிக்கையின் 2.14ஆம் பந்தியினதும் 2.16(இ) பந்தியினதும் பிரகாரம் பகைமைத் தவிர்ப்புக்கு உத்தரவாதமளிப்பதற்கும் அதனை அமுல்செய்வதற்கும் தேவைப்படுமாயின் இலங்கைச் சனாதிபதியால் இந்திய அமைதிகாக்கும் படையொன்று அழைக்கப்படலாமென்றும் இந்தியப் பிரதமரும் இலங்கைச் சனாதிபதியும் உடன்படுகின்றனர்.

○○○



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பின்னிணைப்பு-17

## லியம் ஃபொக்ஸ் உடன்படிக்கை

ஐக்கிய இராச்சியத்தின் பிரதி வெளிநாட்டுச் செயலாளர் லியம் ஃபொக்ஸ் அவர்கள் தரகராகச் செயற்பட்டு, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் உடன்படிக்கையொன்று எட்டப்பட்டுள்ளது. "இன முரண்பாட்டைத் தீர்க்கும் நோக்குடன் அரசாங்கக் கட்சிக்கும் எல்ரீரீஈ உட்பட வேறு ஏதேனும் கட்சிக்கும் இடையிலான கலந்தாராய்வு களும் தீர்மானங்களும் எதிர்கட்சியின் உடன்பாட்டுடன் இடம் பெறுமாயின் அக்கலந்தாராய்வுகளை அது கீழறுக்கமாட்டாதென" ஐ.தே.க. கூறுகின்றது. இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவரு வதற்கு இவ்வுடன்படிக்கை 'முக்கியமானதும் பெறுமதிப்பு வாய்ந்தது மான ஒரு படி' என்று தெரிவித்த வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் 'நீண்ட பாதையில் இதுவோர் அடி' என்று மேலும் கூறினார்.

உடன்படிக்கையின் உரைமூலம் பின்வருமாறு:

> இன முரண்பாட்டின் தீர்வு இலங்கையில் சமாதானத்தை மீண்டும் நிலை நாட்டுவதுடன் நாட்டினதும் அதன் மக்களினதும் அபி விருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் சுபிட்சத்திற்கும் வழிவகுக்கு மென்றும் நாம் இருவரும் கண்டுணர்ந்துள்ளோமென நான் நம்புகின்றேன். அது கட்சி அரசியலின் எல்லைகளைக் கடந்த தொரு பிரச்சினை. இன முரண்பாட்டின் தீர்வுக்கு இரு கட்சிகள் சார்ந்த உண்மையான அணுகுமுறையொன்றை விருத்தி செய்தல் முரண்பாட்டுக்கு நிரந்தரமான தீர்வொன்றைச் சாதிப்பதற்கு இன்றியமையாதது. அதன் நிமித்தம் பொதுசன முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் பின்வரும் ஏற்பாடுகளை நான் யோசனை கூற விரும்புகின்றேன். அவற்றை உறுதிப்படுத்து வதற்கு எனது கட்சியின் பொருத்தமான தீர்மானம் எடுக்கும் சபைக்குச் சமர்ப்பிக்க நான் எண்ணியுள்ளேன்.
>
> பதவியிலுள்ள அரசாங்கத் தலைவர் இன முரண்பாடு தொடர் பான குறிப்பிடத்தக்க வளர்ச்சிகள் பற்றி ஐக்கிய தேசியக் கட்சித்





> தலைவருக்கு இருவரும் கண்டிப்பாக இரகசியமான முறையில், சுருக்கமாக விளக்குவதுடன் அவரின் அபிப்பிராயத்தையும் நாடுவார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் அரசாங்கத்தில் இருப்பாராயின் அதேவகையில் எதிரீடு செய்வார்.
>
> அரசாங்கக் கட்சிக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் உட்பட வேறு ஏதேனும் கட்சிக்கும், குழுவுக்கும் அல்லது ஆட்களுக்கும் இடையில் இன முரண்பாட்டைத் தீர்க்கும் நோக்குடைய ஏதே னும் கலந்தாராய்வுகள் அல்லது தீர்மானங்கள் எதிர்க்கட்சியின் உடன்பாட்டுடன் இடம்பெறுமாயின் அக்கலந்தாராய்வுகளையும் தீர்மானங்களையும் எதிர்க்கட்சி கீழறுக்கமாட்டாது: அத்தகைய உடன்பாட்டின் பின்னணியில் இரு கட்சிகளில் எது ஆட்சிக்குத் தெரிவுசெய்யப்படினும் அது அத்தகைய தீர்மானங்கள் எல்லா வற்றையும் முழுமையாக மதிக்கும்.

ஒப்பமிடப்பட்டது
**சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க**
**ரணில் விக்கிரமசிங்க**
ஏப்பிரல் 04,1997.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பின்னிணைப்பு-18

## இலங்கையின் புனரமைப்பு அபிவிருத்தி மீதான டோக்கியோப் பிரகடனம் (2003 யூன் 10)

### மாநாடு பற்றிய சுருக்கமான விளக்கம்

1. 51 நாடுகள் மற்றும் 22 சர்வதேச ஸ்தாபனங்களின் அமைச்சர்கள், பிரதிநிதிகள் கலந்து கொண்ட இலங்கையின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி மீதான மாநாடு டோக்கியோவில் யூன் மாதம் 9ஆம் 10ஆம் தேதிகளில் நடைபெற்றது. பங்குபற்றிய நாடுகள் மற்றும் சர்வதேச ஸ்தாபனங்களின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. யப்பானியப் பிரதம மந்திரி திரு. ஜூனிசிரோ கொயிஸூமி, இலங்கைப் பிரதம மந்திரி திரு. ரணில் விக்கிரமசிங்கா ஆகியோர் ஆரம்ப உரைகளை இங்கு நிகழ்த்தினர். யப்பானிய அரசின் பிரதிநிதி திரு. யசூசி அகாசி அங்குரார்ப்பணக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

2. இம்மாநாட்டின் இணைத் தலைவர்களாக யப்பான், நோர்வே, ஐக்கிய அமெரிக்கக் குடியரசு மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (தலைமைப்பீடமும் ஆணைக்குழுவும்) செயற்பட்டன. இணைத் தலைமைப் பீடங்களின் பிரிதிநிதிகளான யப்பானிய வெளிவிவகார அமைச்சர் செல்வி யோரிக்கோ கவகூச்சி, நோர்வே வெளிநாட்டமைச்சின் ராஜாங்க காரியதரிசி திரு. ஓலாவ் கஜஓ-எர்வென், ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் பிரதி ராஜாங்க காரியதரிசி திரு. ரிச்சர்ட் ஆர்மிடேஜ், ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப்பீடத்தை பிரதிநிதித்துவப்படுத்திய திரு.ஐயோனிஸ் தியோபனாபொலஸ், ஐரோப்பிய ஆணைக்குழுவின் பிரதிநிதி திரு. பேர்னார்ட் செப்டர் ஆகியோர் ஆரம்பக் கூட்டத் தொடரின் போது அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர். ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் திரு.தடாஓ சினோவும் இக்கூட்டத்தின் போது உரை நிகழ்த்தியதோடு அதனைத் தொடர்ந்து உலக வங்கித் தலைவர் திரு. ஜேம்ஸ் வுல்பென்சொனின் விடியோ செய்தியொன்று ஒளிபரப்பப்பட்டது.





3. செயற்பாட்டுக் கூட்டத்தின் போது, இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர், திரு. ஏ.எஸ். ஜயவர்த்தனா இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வாய்ப்புக்கள் பற்றிய அறிக்கையினைச் சமர்ப்பித்தார். இலங்கையின் சர்வாங்கப் பொருளாதாரச் செயற்பாடு மற்றும் புனரமைப்பு அபிவிருத்திக்கான நிகழ்ச்சி நிரல் பற்றிய அறிக்கையினை சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் இணைந்து சமர்ப்பித்தன. இலங்கை அரசு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்ரீரீஈ) ஆகிவற்றுடன் விரிவாகக் கலந்தாலோசித்து உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் தயாரிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு ஆசியவற்றுக்கான தேவைகள் மதிப்பீடு ஒன்றினை ஆசிய அபிவிருத்தி வங்கியும் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பும் மீள்பரிசீலனை செய்தன. இச்செயற்பாட்டின் போது சிவில் சமூக அமைப்புக்களின் கருத்துக்களும் பெறப்பட்டன.

4. முழுமையான கூட்டத்தொடரில் கலந்து கொண்ட நாடுகள் சர்வதேச ஸ்தாபனங்கள் என்பன இலங்கைக்குப் பொருளாதார உதவியை வழங்குவதற்கான தம் எண்ணத்தை எடுத்துக்காட்டும் விதத்திலான அறிக்கைகளைச் சமர்ப்பித்தன. நாட்டின் அபிவிருத்தி நோக்கங்களுக்கான சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் தனியார் முயற்சிகளின் பங்களிப்புக்கள் பற்றிய சமர்ப்பணங்கள் அங்கு முன்வைக்கப்பட்டன.

### இலங்கைச் சமாதானச் செயற்பாட்டின் வரலாறு

5. கடந்த இரு தசாப்தங்களாக நடைபெற்று வந்த ஆயுதந்தாங்கிய மோதல் 65,000க்கும் மேற்பட்ட உயிர்களைப் பலிகொண்டுள்ளதோடு 800,000 க்கும் அதிகமானோரை நாட்டினுள்ளே இடம்பெயரச் செய்து வடக்கிலும் கிழக்கிலும் அதிக எண்ணிக்கையிலான அகதிகளையும் தோற்றுவித்துள்ளது. இலங்கை சனாதிபதி திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனும் சமாதானப் பேச்சுவாத்தைகளுக்கான பாரபட்சமற்ற நடுவராகச் செயற்படுமாறு நோர்வேக்கு விடுத்த அழைப்பைத் தொடர்ந்து தற்போதைய சமாதானச் செயற்பாடு 2000 இல் ஆரம்பமாகியது. நோர்வேயின் அனுசரணையுடன் இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பரஸ்பர யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினை 2002 பெப்ரவரி மாதம் 23 ஆம் தேதி ஏற்படுத்திக் கொண்டனர். 2002 செப்டம்பர் தொடக்கம் இரு கட்சிகளுக்குமிடையே ஆறு கூட்டத் தொடர்கள் நடைபெற்றுள்ளதோடு அவற்றின் போது கணிசமான அளவு முன்னேற்றமும் காணப்பட்டது. 2002 நவம்பர் 25ஆம் தேதி ஒஸ்லோவில் கூடிய பங்காளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாடுகளும் சர்வதேச ஸ்தாபனங்களும் சமாதானச் செயற்பாட்டுக்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்க உறுதி அளித்தன. டோக்கியோவுக்கு முன்கூட்டி வாசிங்டனில் 2003 ஏப்பிரலில் ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் ராஜாங்க அமைச்சரின் தலைமையின் கீழ் கருத்தரங்கொன்று நடாத்தப்பட்டது. டோக்கியோ மாநாட்டுக்கான அரசியல் உத்வேகத்தைத் தூண்டுவதே அதன் நோக்காக இருந்தது.

**மாநாட்டின் நோக்கங்கள்**

6. இலங்கையின் புனரமைப்புக்கும் அபிவிருத்திக்கும் உறுதியான ஒன்றிணைந்த பொறுப்பை வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தைச் சர்வதேச சமூகத்துக்கு வழங்குதையும் சமாதானச் செயற்பாட்டில் மேலும் முன்னேற்றத்தைக் காண்பதற்காக தம் முயற்சிகளைப் பன்மடங்காக அதிகரிக்கச் சம்பந்தப்பட்ட கட்சிகளை ஊக்குவிப்பதையும் இம்மாநாடு நோக்கங்களாகக் கொண்டிருந்தது. சமாதானச் செயற்பாட்டில் சம்பந்தப்பட்ட கட்சிகளுள் ஒரு கட்சியினர் மாத்திரமே இம்மாநாட்டில் சமூகமளித்திருந்த வேளையிலும், வடக்கு மற்றும் கிழக்கில் செயலாக்கமுள்ள புனரமைப்பையும் அபிவிருத்தியையும் உறுதிப்படுத்துவதற்குத் தேவையான பரிபாலன அமைப்பை ஏற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட கட்சியினருக்கு ஆதரவு வழங்குவதற்கான தம் உறுதிப்பாட்டை நிரூபிப்பதற்கானதொரு சந்தர்ப்பமாக இதனைச் சர்வதேச சமூகம் பயன்படுத்திக் கொண்டது. இப்பிரதேசங்களைப் பயனுறு விதத்தில் மீண்டும் கட்டியெழுப்புவதற்கு இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பங்காளிகளாகச் செயற்பட வேண்டியுள்ளது. ஏனைய சகல சமூகங்களினதும் நலன்களைப் பேணிப் பாதுகாப்பதற்கான விதிகளும் இச்சட்டகத்தினுள் உள்ளடக்கப் பட வேண்டும்.

7. நாடு எதிர்நோக்கும் பொருளாதாரச் சவால்களை இம்மாநாடு கவனத்துக்கெடுத்துக் கொள்வதோடு அவை தொடர்பாக இலங்கையை சீரான மற்றும் நியாயமான அடிப்படையில் அபிவிருத்தி செய்ய விளையும் பூரண நடவடிக்கைத் திட்டமான இலங்கையை மீளப் பெறும் முயற்சியையும் அது ஆமோதிக்கிறது.

8. டோக்கியோ மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் கலந்து கொள்ளாததையிட்டு அதில் பங்குபற்றியோர் கவலை தெரிவித்துள்ளனர். சமாதானச் செயற்பாட்டை தொடர்வதற்கான அதன் தீர்மானத்தை மீள உறுதிப்படுத்தி இலங்கையின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தியில் கவனஞ் செலுத்த இம்மாநாடு இலங்கை அரசுக்கு சந்தர்ப்பமொன்றை வழங்குகிறது.





**சமாதானச் செயற்பாட்டின் சித்தியில் இம்மாநாட்டின் முக்கியத்தும்**

9. இலங்கையில் பேச்சுவார்த்தைகளினூடாகப் பெறப்படும் தீர்வு ஆயுதந்தாங்கிய மோதலொன்றைச் சமாதானமான முறையில் தீர்ப்பது என்ற வகையில் முக்கியமானதொரு சம்பவமாக இருக்கும் என பங்குபற்றியவர்கள் கருதுகின்றனர். ஐக்கிய இலங்கையினுள் சமஷ்டி அமைப்பொன்றின் அடிப்படையிலான நிரந்தர மற்றும் பேச்சு வார்த்தைகளினூடாகப் பெறப்படும் சமாதானத்தை அடைவதற்காக இரு கட்சியினரும் கொண்டிருக்கும் உறுதிக்காக அவர்களை இம்மாநாடு மெச்சுகிறது. மேலும், சமாதானத்தினூடாகப் பெறப்படும் இலாபங்களை நுகரக்கூடிய விதத்தில் இலங்கையில் வாழும் சகல மக்களுக்கும் அவற்றை வழங்குவதன் முக்கியத்துவத்தையும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

**சீரான மனிதாபிமான மற்றும் பொருளாதார உதவி**

10. வடக்கு மற்றும் கிழக்கில் மோதலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான அவசர மனிதாபிமான உதவி அத்துடன் மத்திய கால நீண்ட கால உதவியுடன் முழு நாட்டையும் அபிவிருத்தி செய்வதற்கான உதவி ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இம்மாநாடு கருத்திற்கொண்டுள்ளது. உதவி வழங்கும் போது நுண்மையான இன மற்றும் பிரதேச சமபாட்டினை முழுமையாகக் கவனத்துக்கெடுத்துக் கொள்வதன் முக்கியத்துவத்தையும் இம்மாநாடு வலியுறுத்துகிறது. மோதலினால் தாக்கமடைந்துள்ள பிரதேசங்களின் தேவைகளை இனங்காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கின் தேவைகள் மதிப்பீட்டினை இம்மாநாடு வரவேற்கிறது. இம்மாநாட்டுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கையை மீளப் பெறுதல், வடக்கு மற்றும் கிழக்குக்கான தேவைகள் மதிப்பீடு, வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களை அடுத்துள்ள மோதலுடன் தொடர்புபட்ட மாவாட்டங்களுக்கான தேவைகள் மதிப்பீடு ஆகியன தொடர்பான மூலவள ஆவணங்கள் மற்றும் தேவைகள் மதிப்பீடு அத்துடன் இலங்கையை மீளப் பெறுதல் ஆகியவற்றை இணைக்கும் இணைப்பு ஆவணம் என்பனவற்றின் அடிப்படையில் இலங்கைக்கு உதவி வழங்க உதவி வழங்கும் சமூகம் அதன் விருப்பத்தைத் தெரிவிக்கிறது.

**உதவி வழங்குவோர் தெரிவித்துள்ள ஆதரவு**

11. 2003 முதல் 2006 வரையிலான 4ஆண்டு காலப்பகுதியில் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமான மதிப்பீடு செய்யப்பட்ட திரண்ட தொகையொன்றினை நாடு முழுவதற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மான உதவியாக வழங்குவதற்குத் தம்முடைய விருப்பத்தை பங்குபற்றிய உதவி வழங்கும் நாடுகளும் சர்வதேச ஸ்தாபனங்களும் குறித்துரைத்துள்ளன. மேலும், சில நாடுகளும் சர்வதேச ஸ்தாபனங்களும் தொழில்நுட்ப உதவியையும் வழங்க முன்வந்துள்ளன அத்துடன், ஏனையோர் சமாதானச் செயற்பாடு வெற்றியடையும் என்ற ஊகத்தின பேரில் அவர்களின் உறுதிப்பாடுகளை குறிப்பிட்டனர்.

12. பல நாடுகளும் சர்வதேச ஸ்தாபனங்குளம் தமது உதவியின் கணிசமான அளவினை வடக்கு மற்றும் கிழக்குக்கென குறிப்பிட்டுள்ளனர். சமாதானச் செயற்பாட்டின் திருப்திகரமான முன்னேற்றத்தைப் பொறுத்தே அத்தகைய உதவி வழங்கப்படும் என அவர்களுள் பலர் குறிப்பிட்டுள்ளதோடு, அத்தகைய முன்னேற்றத்தைக் கவனத்திற்கொண்டு மேலதிக உறுதிப்பாடுகளை ஆராயத் தயாராக இருப்பதாக ஏனையோர் குறிப்பிட்டனர்.

### வடக்கிற்கு மற்றும் கிழக்கிற்கு உதவியை அனுப்பும் வழிகள்

13. மனிதாபிமான நிவாரணத்துக்கு ஆதரவு வழங்கவும் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் சர்வதேசச் சமூகம் உறுதிபூண்டுள்ளது. அத்துடன். அது வடக்கு மற்றும் கிழக்கு ஆகியவற்றின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான புதுமையானதொரு பரிபாலன அமைப்பு மீதான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட கட்சியினரை ஊக்குவிப்பதற்காக இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்கிறது. இத்தேவைக்காக இக்கட்சிகளுடன் ஒத்துழைப்பதற்கான அதன் ஈடுபாட்டையும் சர்வதேச சமூகம் வலியுறுத்துகிறது. இவ்வமைப்பு இலங்கையில் மீளிணக்கப்பாட்டுச் செயற்பாட்டுக்கான பங்களிப்பையும் சுயமாகவே வழங்கும். உள்நாட்டு மற்றும் சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் ஒத்துழைப்புடன் இருதரப்பு மற்றும் பலதரப்பு வழிகள் மூலம் வடக்கு மற்றும் கிழக்கில் ஏற்கனவே சில மனிதாபிமான உதவிக் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன என்பதை திருப்தியுடன் இம்மாநாடு இனங்கண்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு ஆகியவற்றுக்கு உதவியை வழங்குவதற்கான பிரதான மார்க்கமாக உலக வங்கியினால் நிருவகிக்கப்படவுள்ள வட-கிழக்கு புனரமைப்பு நிதியம் (NERF) அமைக்கப்பட்டதையும் இம்மாநாடு வரவேற்கிறது. உதவி வழங்கும் சமூகத்திடமிருந்து உதவியைப் பெற்றுக் கொள்வதில் இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் வளைந்து கொடுக்க வேண்டியதன் அவசியத்தை இம்மாநாடு அழுத்தமாக எடுத்துரைக்கிறது. இவ்வுதவியினால் ஆதரவு வழங்கப்பட்ட கருத்திட்டங்களைப் பொறுப்புடன், வெளிப்படையாக, வேகமாகவும் வினைத் திறனுடனும் அமுலாக்கப்படுவதை உறுதி செய்து நல்லாட்சி முறையை மேம்படுத்தும் ஆளுமையைக் கட்டியெழுப்புவதற்காக உதவி வழங்குவதற்கான விருப்பத்தையும் உதவி வழங்கும் சமூகம் வெளிப்படுத்துகிறது.





### உறுதியான மற்றும் வளர்ச்சி சார்ந்த பாரிய பொருளாதாரக் கொள்கை

14. இலங்கையை மீளப்பெறல் திட்டத்தின் கீழ் முன்வைக்கப்பட்ட உறுதியான பாரிய பொருளாதாரக் கொள்கையை இலங்கை அரசு அமுல் செய்வதன் முக்கியத்துவம் பற்றி இம்மாநாடு கவனம் செலுத்துகிறது. அத்துடன், வறுமையைக் குறைப்பதை நோக்காகக் கொண்ட பொருளாதாரக் கொள்கைகளை மேற்கொள்வதன் அவசியத்தையும் இம்மாநாடு வலியுறுத்துகிறது. பொருளாதார வளர்ச்சி, தொழில் உற்பத்தி அத்தோடு தனியார் முயற்சியினை ஊக்குவித்தல் ஆகியவற்றில் நிலைதகவுள்ள அபிவிருத்தி தங்கியுள்ளது.

### சமாதானச் செயற்பாட்டின் முன்னேற்றம்

15. கடந்த கால சமாதானப் பேச்சுத் தொடர்களின் போது கணிசமான அளவு முன்னேற்றம் காணப்பட்டதென்பதை இம்மாநாடு கவனத்துக்கெடுத்துள்ளது. ஒஸ்லோ பிரகடனத்தில் பிரதிபலிக்கும் கோட்பாடுகளின் மேல் நிறுவப்பட்ட சமாதானச் செயற்பாட்டை மேலும் மேம்படுத்துவதற்காக தம்மாலான சகல முயற்சிகளையும் இரு கட்சியினரும் மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் உதவி வழங்குவோர் நினை வூட்டுகின்றனர். மோதலினால் தாக்கமடைந்த வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு ஆதரவு வழங்குவதின் அவசரத் தேவையை உதவி வழங்குவோர் இனங்கண்டுள்ளதோடு இத்தேவைக்கான ஒதுக்கீடுகளைச் செய்யவும் முன்வந்துள்ளனர். வடக்கு மற்றும் கிழக்கைப் பொறுத்தவரையில், சகல சமூகங்களினதும் நலன்களைப் பேண போதியளவு பாதுகாப்புடன் முன்னுரிமைத் தெரிவு மற்றும் கருத்திட்ட அமுலாக்கம் ஆகியவை அரசு அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் இணைந்த செயற்பாடாகவிருக்கும். வடக்கு மற்றும் கிழக்கின் புனரமைப்பு அத்துடன் அபிவிருத்திக்காக உதவி வழங்குவோர் சமூகத்தினால் உறுதியளிக்கப்பட்ட உதவியினை குறிப்பாக அத்தேவைக்காக பிரயோகிக்கப்படுவதை அரசாங்கம் உறுதிப்படுத்தும் என இம்மாநாடு எதிர்பார்க்கிறது.

16. நிரந்தரமானதும் நியாயமானதுமானதொரு அரசியல் தீர்வை வேகமாக அணுகுமாறு இக்கட்சியினரை இம்மாநாடு தூண்டுகிறது. அத்தகையதொரு தீர்வானது மனித உரிமைகள், ஜன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கான கோட்பாடுகள் ஆகிவற்றை மதிக்கும் அடிப்படையில் இருத்தல் வேண்டும். இது தொடர்பாக 'கோனேயில் நடைபெற்ற ஆறாவது சமானதாப் பேச்சுத் தொடரின் போது கலந்துரையாடிய பிரகாரம் மனித உரிமைகள் பிரகடனம் மீதான துரித இணக்கப்பாட்டை இக்கட்சியினர் காண்பர் என இம்மாநாடு எதிர்பார்க்கிறது.

17. பேச்சுவார்த்தைகளினூடான சமாதானச் செயற்பாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குள்ள ஈடுபாட்டை இம்மாநாடு வர வேற்பதோடு இயன்றவரை அவசரமாகப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் தொடருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளை அது ஆர்வமூட்டுகிறது. மோதலினால் பாதிப்படைந்த வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு உடனடியாக சமா தானத்தின் பிரதிபலன்களை அனுபவிக்கும் வாய்ப்புக் கிட்ட வேண்டும். மோதலினால் பாதிப்படைந்த வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக் காக சர்வதேச உதவிக்கான ஏற்பாடுகளுக்கு இயைவாகச் சமா தானச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கை அரசு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தெளிவான ஈடுபாடு அவசியமாகும்.

உதவி வழங்குவோரின் ஆதரவு மற்றும் சமாதானச் செயற்பாட் டின் முன்னேற்றம் ஆகியவற்றுக்கிடையிலான இணக்கப்பாடு

18. ஒஸ்லோவில் கட்சியினரால் இணக்கம் காணப்பட்ட நோக்கங் களை அடைவதற்காகச் சமாதானச் செயற்பாட்டில் எய்தப் பெறும் கணிசமான மற்றும் சமாந்தரமான முன்னேற்றத்துக்கும் உதவி வழங்குவோர் சமூகத்தினால் வழங்கப்படும் உதவிக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருத்தல் வேண்டும். நடை முறை தொடரும் போது புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி அம்சங்களை முகாமைப்படுத்துவதற்கான தற்காலிக பரிபாலான அமைப்பொன்றைப் பற்றிக் கால தாமதமின்றிப் பேச்சுவார்த்தை நடாத்துமாறு இம்மாநாடு இலங்கை அரசையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் உற்சாகமூட்டுகிறது. இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய இறுதித் தீர்வை அடைதவதற்கான தெளிவான கட்டங்களைக் கொண்ட பாதை விளக்கமொன்றை அவசரமாக அபிவிருத்தி செய்வது இச்செயற்பாட்டுக்கு இன்றி யமையாததாகும். இதனைக் கருத்திற்கொண்டு, பின்வருவன வற்றை உள்ளிட்டு குறிப்பாக நோக்கங்கள் மற்றும் விசேடக் கட்டங்கள் தொடர்பில் சமாதானச் செயற்பாட்டின் முன்னேற் றத்தை உன்னிப்பாகக் கண்காணிப்பதற்கு சர்வதேச சமூகம் நாடுகிறது:





அ. இரு கட்சியினரும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக அனுசரித்து நடத்தல்.

ஆ. வடக்கு மற்றும் கிழக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான பயனுறு வழங்கல் வழிமுறை.

இ. தாய்லாந்தில் நடைபெற்ற சமானதாப் பேச்சுக்களின் நாலாம் தொடரின் பிரகடனத்தில் தீர்மானித்தபடி முஸ்லிம் தூதுக் குழுவொன்று கலந்துகொள்ளல்.

ஈ. ஒஸ்லோ பிரகடனத்தின் கோட்பாடுகளின் அடிப்படையில் இறுதியான அரசியல் தீர்வொன்றை நோக்கி சமாந்தரமாக முன்னேறுதல்.

உ. ஆயுதந்தாங்கிய மோதலினால் இடம்பெயர்ந்தவர்களுக்கான தீர்வுகள்.

ஊ. சகல மக்களினதும் மனித உரிமைகளைச் செயலாக்கத்துடன் மேம்படுத்திப் பாதுகாத்தல்.

எ. அரசியல் மன்றங்களிலும் ஏனைய தீர்மானமெடுக்கும் மட்டங்களிலும் பெண்களின் சமத்துவமான பிரதிநிதித் துவத்தை வலியுறுத்தும் வகையில் சமாதானத்தைக் கட்டி யெழுப்பல், மோதலை மாற்றியமைத்தல் மற்றும் புனரமைப் புச் செயற்பாடு ஆகியவற்றில் பாலியல் சமத்துவத்தையும் சமநிலையையும் பயனுறுவிதத்தில் உட்புகுத்தல்.

ஏ. யுனிசெவ் ஆதரவுடனான செயற் திட்டத்துக்கிணங்க வயது குறைந்தவர்களை அணிசேர்த்தலை நிறுத்தி மற்றும் வயது குறைந்தவர்களை விடுவித்து அவர்கள் புனர்வாழ்வுக்கும் சமூகத்துடன் மீள இணைப்பதற்குமான செயற்றிறனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

ஒ. ஆயுதந்தாங்கிய மோதலினால் அங்கவீனமுற்று அல்லது மனோதத்துவ ரீதியாகப் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள முன்னைய போராளிகள் அத்துடன் பொது மக்களுக்குப் புனர்வாழ்வளித்தல்.

ஓ. அரசியல் தீர்வொன்றை எய்துவது தொடர்பாக தோதான தருணத்தில் கட்ட அடிப்படையிலான, சீரான மற்றும் பரி சோதனைக்குட்படுத்தப்படக் கூடிய தணிப்பு நடவடிக்கை கள், இராணுவ சூன்ய நிலை அத்துடன் சகஜநிலைச் செயற் பாடு ஆகியவை மீது இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளல்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் தனியார் முயற்சிகளினால் கிட்டும் உட்பாய்ச்சல்கள்**

19. 2003 ஏப்பிரல் 26-27 ஆம் தேதிகளில் நடைபெற்ற சிவில் சமூக மற்றும் 2003 யூன் 8ஆம் தேதி டோக்கியோவில் நடைபெற்ற கூட்டங்களினால் கிடைக்கப் பெற்ற உட்பாய்ச்சல்களை இம்மாநாடு வரவேற்கிறது. இக்கட்சியினர் மேற்கொண்டுள்ள சவால்கள் அடங்கிய பொறுப்பில் வெற்றி அடைவதற்காக சிவில் அமைப்புக்களின் உத்வேகமும் தொடர்ச்சியான ஈடுபாடும் அவசியம் என இம்மாநாடு கருதுகிறது. தனியார் முயற்சியின் துடிப்புள்ள ஈடுபாடு இம்மாநாட்டுக்கு உற்சாகமூட்டுவதாயிருக்கிறது. கல்விமான்கள் சமூகம், தொழிற் சங்கங்கள், உயர் தொழில்சார் குழுக்கள் மற்றும் ஏனையோரின் பங்களிப்பையும் இம்மாநாடு மெச்சுகிறது.

**கண்காணித்தல் மற்றும் மீளாய்வு**

20. உதவி வழங்குவோர் வழங்கும் ஆதரவு மற்றும் சமாதானச் செயற்பாட்டின் முன்னேற்றம் ஆகியவற்றுக்கிடையிலான இணைப்பின் காரணமாக, சமாதானச் செயற்பாட்டின் முன்னேற்றத்தை சர்வதேச சமூகம் கண்காணித்து மீளாய்வு செய்யும். தமது உதவித் திட்டங்களைச் செயற்படுத்துவதில் இக்கால வரைக்குட்பட்ட மீளாய்வுகளின் பெறுபேறுகளை கவனமாக ஆராய உதவி வழங்கும் சமூகம் நாடுகிறது. நோர்வேயின் நடுவர் நிலையை முழுமையாக மதித்து, ஐக்கிய அமெரிக்கக் குடியரசு மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், இத்தேவைக்கான வழிமுறைகளை இயன்றவரை அவசரமாக ஏற்படுத்துவதற்குத் தேவைப்படும் உசாத்துணை நடவடிக்கைகளை யப்பான மேற்கொள்ளும்.

**பின்தொடர் நடவடிக்கை**

21. உபசரிப்பு நாடென்ற கோதாவில், இந்நாட்டின் தீர்மானங்களை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்குமாறு இம்மாநாடு யப்பான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

2003 யூன் 09ஆம் 10ஆம் தேதிகளில் டோக்கியோவில் நடைபெற்ற இலங்கையின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய டோக்கியோ மாநாட்டில் கலந்து கொண்ட நாடுகள் மற்றும் சர்வதேச ஸ்தாபனங்களின் பட்டியல்

Commonwealth of Australia

Republic of Austria





Peoples Republic of Bangladesh

Kingdom of Belgium

Federative Republic of Brazil

Brunei Darussalam

Kingdom of Cambodia

Canada

Peoples Republic of China

Kingdom of Denmark

Arab Republic of Egypt

Republic of Finland

French Republic

Federal Republic of Germany

Hellenic Greece

State of the City of Vatican

Republic of Iceland

India

Republic of Indonesia

Islamic Republic of Iran

Ireland

State of Israel

Republic of Italy

Japan

Republic of Korea

State of Kuwait

Lao Peoples Democratic Republic

Grand Duchy of Luxembourg

Malaysia

Kingdom of Nepal



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பின்னிணைப்பு-19

## ஒஸ்லோ பிரகடனம்

### ஐக்கிய இலங்கையினுள் சமஷ்டி அடிப்படையிலான உள்ளக சுய நிர்ணயத்தின் மேல் நிறுவப்பட்ட அரசியல் தீர்வொன்று பற்றி ஆராய கட்சிகள் தீர்மானித்துள்ளன.

### நோர்வே முடியாட்சி அரசாங்கத் தூதரகம்

*பத்திரிகை அறிக்கை - அமர்வு 3: டிசம்பர் 2-5, 2002*

*2002 டிசம்பர் 05*

*ஒஸ்லோ.*

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களின் மூன்றாம் அமர்வு 2002 டிசம்பர் 5ஆம் திகதி ஒஸ்லோ, நோர்வேயில் நடைபெற்றது. இக்கட்சிகள், மனம் திறந்து, ஒளிவு மறைவின்றி மற்றும் ஆக்கபூர்வமான முறையில் பின்வரும் மூன்று பிரதான துறைகளில் கவனஞ் செலுத்தின:

- யுத்த நிறுத்தத்தை உறுதிப்படுத்தல்.
- மனிதாபிமான மற்றும் மறுசீரமைப்பு செயற்பாடு
- அரசியல் விவகாரங்கள்

குறிக்கோள் மற்றும் பல கணிசமான அரசியல் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான செயலாக்கமுள்ள சட்டக அமைப்பொன்று மீது இக்கட்சிகள் இணக்கம் கண்டன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தின் யோசனையொன்றுக்குப் பதிலளிக்கு முகமாக தமிழ்மொழி பேசும் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வரும் பிரதேசங்களில் உள்ளக சுய நிர்ணயத்தின் மேல் நிறுவப்பட்ட தீர்வொன்றை ஐக்கிய இலங்கையினுள் சமஸ்டி அடிப்படையில் தேடுவதற்கு இக்கட்சிகள் இணக்கம் தெரிவித்தன. அத்தீர்வு சகல சமூகங்களாலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதை இக்கட்சிகள் ஒப்புக் கொள்கின்றன.





இந்நோக்கின் வழிநடாத்தலின் பேரில், பின்வரும் கணிசமான அரசியல் விடயங்கள் பற்றி, அவற்றுக்கு முற்றும் மட்டுப்பட்டிராத வகையில், பேச்சுக்களை ஆரம்பிக்கக இக்கட்சிகள் இணக்கம் தெரிவித்தன.:

- மத்திக்கும் பிரதேசத்துக்கும் இடையில் அத்துடன் மத்தியினுள்ளும் அதிகாரப் பகிர்வு
- பூகோளப் பிரதேசம்
- மனித உரிமைகள் பாதுகாப்பு
- அரசியல் மற்றும் பரிபாலன கருவியமைப்பு
- பொது நிதி
- சட்டமும் அமைதியும்

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ச்சியாக உறுதிப்படுத்து வதன் மூலம் அரசியல் விடயங்களிலான முன்னெடுப்புக்களுக்கு ஆதரவு வழங்கப்பட வேண்டும் என்பதை இக்கட்சிகள் இனங்கண் டுள்ளன. தீவிர நிலைமையை மேலும் தணித்து இயல்பு நிலையை சீர்திருத்துவதற்காக புதிய உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.:

- இலங்கை அரசாங்கம் விரைவில் யாழ்ப்பாணத்திலுள்ள ஹோட்டல்களில் ஒன்றை அதன் முன்னைய பாவனைக்காகத் திரும்பக் கையளிக்கும்.
- எதிர்காலத்தில் சகல பிரதேச தளபதிகளின் போக்குவரத்தும் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மேற்பார்வையின் கீழ் நடைபெறும் என்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதிசெய்து கொள்ளும்.
- யுத்தநிறுத்த உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டபடி நிராயுதபாணியாக இருத்தல் வேண்டும் என்பதற்கேற்ப, யாழ்ப்பாண தீபகற்பம் மற்றும் தீவுகள் உட்பட அரசியல் குழுக்கள் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உரிமையினை, தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்வார்கள்.
- இலங்கை அரசாங்கம், சம்பந்தப்பட்ட சகல கட்சிகள் மற்றும் குழுக்களுடன் கலந்தாலோசித்து, ஊர்காவற்றுறையில் அண்மையில் ஏற்பட்ட நிகழ்வுகள் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வொன்றைக் காணும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- சகல சமயங்களைச் சேர்ந்த சமூகங்களுக்கும் சொந்தமான வடக்கிலும் கிழக்கிலும் உள்ள வழிபாட்டுத் தலங்களைப் பழைய நிலைக்குக் கொண்டுவந்து மறுசீரமைப்பதற்கு சகல கட்சிகளும் வசதியளிக்கும்.

வடக்கிலும் கிழக்கிலும் சட்டத்தையும் அமைதியையும் பேணுதல் மிக முக்கியமானது என்ற தம் திடமான நம்பிக்கையின் அடிப்படையில், யுத்தத்தினால் பாவனை தடைப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், தனியார் சொத்தின் சர்ச்சைக்குரிய பாவனை தொடர்பான விடயங்களைத் தீர்ப்பதற்காக பொது அணுகுமுறையொன்றைப் பிரேரிக்குமாறு தீவிரத்தன்மையைக் குறைத்து இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கான உப-குழுவை வேண்டிக் கொள்வதற்கு சகல கட்சிகளும் இணக்கம் தெரிவிக்கின்றன. மேலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் செல்வாக்குள்ள பகுதிகளுக்கு வெளியே அவர்களது நீதி மற்றும் அமைதிக்கான கருவி அமைப்புக்கள் பரவாமலிருப்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதி செய்துகொள்வார்கள்.

வடக்கிலும் கிழக்கிலும் அவசரமாக மனிதாபிமான அத்துடன் மறுசீரமைப்பு முயற்சிகளை மேற்கொள்வதன் தேவையை கட்சிகள் திடமாக எடுத்துக்காட்டின. இத்தேவைக்காக, வட-கிழக்கு மறுசீரமைப்பு நிதியத்தை விரைவில் அமைப்பது இன்றியமையாததாகும்.

அவசர மனிதாபினமான மற்றும் மறுசீரமைப்புத் தேவைகளுக்கான உப குழுவின் அடுத்த கூட்டத்தின் போது நிதியத்துக்கான பொறுப்பாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு அதனைச் செயற்படுத்துவதற்கான செயல்முறை தீர்மானிக்கப்பட வேண்டும் என கட்சிகள் இணக்கம் கண்டுள்ளன. ஒஸ்லோவில் நம்பர் 25ஆம் திகதி நடைபெற்ற இலங்கைக்கான ஆதரவு தெரிவிக்கும் கூட்டத்தில் இலங்கையின் சமாதானச் செயற்பாட்டுக்குப் பல அரசாங்கங்கள் காட்டிய உறுதியான ஆதரவுக்குத் தம் மெச்சுதலைத் தெரிவிக்கும் கட்சிகள், மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு முயற்சிகளுக்குத் தேவையான நிதிகளை விரைவில் வழங்குமாறு அவ்வரசாங்கங்களைத் தூண்டின.

சமாதானச் செயற்பாட்டின் சகல அம்சங்களிலும் பெண்களின் முன்னுரிமைகள் மற்றும் தேவைகள் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தப்படுவதை கட்சிகள் ஒப்புக் கொள்கின்றன. இதற்காக, பேச்சுவார்த்தைகளின் அமர்வுகளின் போதும் சமாதானச் செயற்பாட்டின் குழுக்களுக்கும் கிரமமான அடிப்படையில் பெண்கள் நலன்கள் பற்றிய யோசனைகளை முன்வைப்பதற்காக நிரந்தர ஆலோசனைக் குழுவொன்றை அமைக்கவும் அவர்கள் இணக்கம் தெரிவிக்கின்றனர். ஒவ்வொரு கட்சியினரதும் நான்கு பிரதிநிதிகளை இக்குழு கொண்டிருக்கும். மனிதாபிமான நடவடிக்கைக்கு கட்சிகள் இனங்கண்டுள்ள முன்னுரிமைத் துறையாக யுத்தத்தினால் பாதிப்





படைந்துள்ள சிறுவர்களின் நிலைமைய சீர்திருத்துவதற்கான தேவையை கட்சிகள் வலியுறுத்துகின்றன. குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் சர்வதேச கோட்பாடுகளால் உந்தப்பட்டு, குழந்தைகள் தம் பெற்றோருடன் அல்லது பாதுகாவலர்களுடன் இருக்க வேண்டுமே அன்றி சிவில் அல்லது இராணுவ வேலைத்ததளத்தில் இருக்கக் கூடாது என்பதை கட்சிகள் வலியுறுத்துகின்றன.

சிறுவர்களின் வாழ்க்கையின் இயல்பு நிலையை மீட்பதற்கான செயற்திட்டம் ஒன்றை ஐ.நா. குழந்தைகள் நிதியத்துடன் (யுனிசெவ்) தமிழீழ விடுதலைப் புலிகள் பங்காளியாகச் சேர்ந்து செயற்படும் என்பதோடு அத்தகை செயற்திட்டத்துக்கு நிதி உதவி வழங்குமாறு கட்சிகள் சர்வதேச சமூகத்தை வேண்டிக் கொள்கின்றன.

இலங்கை அரசாங்கம், இயன்றவரை மிகப் பரவலான இணக்கப்பாட்டை அடைவதற்காக, நடைபெற்று வரும் சமாதானச் செயற்பாட்டின் ஓர் அங்கமாக சகல பிரிவுகளினது கருத்துக்களையும் கலந்தாலோசித்து தோதானதொரு கருவித்தொகுதியை அமைக்கும்.

○○○



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பின்னிணைப்பு-20

## சுனாமிக்கு பின்னரான தொழிற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றை (P.toms) தாபிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம். (MOU)

முன்னுரை

2004 டிசெம்பர் 26 ஆம் திகதியன்று இலங்கையைத் தாக்கிய சுனாமி (முன்னொரு போதும் இல்லாத அளவில் மனித உயிர்களையும் ஆதனங்களையும் அழித்துள்ளமையாலும்:

இப்பொது அனர்த்தத்தை எதிர்கொள்வதில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய சமுதாயங்கள் அனைத்தும் மனிதாபிமான ரீதியில் ஒத்துழைக்க வேண்டிய அவசர தேவை ஒன்றுள்ளதானாலும் சுனாமியால் தாக்கப்பட்ட இலங்கையின் சகல பாகங்களுக்கும் சுனாமிக்குப் பின்னான நிதிகளின் சமமான ஒதுக்கீடு, ஏற்றுக்கொள்ளத்தகு தேவை மதிப்பீடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட உள்ளதாலும் இந்த அவசரமான மனிதாபிமானத் தேவையை அங்கீகரித்து ஒத்துழைக்கும் மனப்பான்மையுடனும், அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய ஆறு மாவட்டங்களிலுள்ள கரையோர சமுதாயங்களுக்கு துரிதமான நிவாரணத்தையும் புனர்வாழ்வையும், புனரமைப்பையும் அபிவிருத்தியையும் வழங்குவதற்கும் அத்துடன் பாதிக்கப்பட்ட இடப்பரப்புகளை மீளக்கட்டியெழுப்பும் நடைமுறைக்கு வசதி வாய்ப்பளிப்பதற்கும் அதனைத் துரிதப்படுத்துவதற்கும் என இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் நல்லெண்ணத்துடனும் அவற்றின் முனைப்பான முயற்சிகளைப் பயன்படுத்தியும் ஒருமித்துச் செயலாற்றத் தீர்மானித்தமையாலும்:

சமுதாயங்களிற்கிடையிலும் இரு தரப்புக்கிடையிலும் அத்தகைய ஒத்துழைப்பிற்கு வசதிவாய்ப்பளிப்பதற்காக P-Toms ஒன்றைத் தாபிப்பதற்கான

தேவையொன்றுள்ளதாலும் இப்போது, முற்போந்ததை கருத்திற் கொண்டு திறத்தவர்கள் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை செய்து கொண்டுள்ளதுடன் பின்வருமாறும் உடன்படுகின்றனர்:





### 1. அமைப்பு

அ. சுனாமிக்கு பின்னரான பணியைத்திட்டமிடல், நடைமுறைப் படுத்தல், இயைபு படுத்தல், ஆகிய நோக்கங்களுக்காக ஒருங்கிணைந்த தொழிற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப் பொன்றை தாபிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய கட்டமைப்பு பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.:

1. சுனாமிக்குப் பின்னரான கரையோரப் புனரமைப்புக்குழு
2. ஆறு மாவட்டங்களுக்குமான சுனாமிக்கு பின்னான கரையோரப் புனரமைப்புக்குழு (பிராந்தியக்குழு) அத்துடன்
3. அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் சுனாமிக்குப் பின்னரான கரையோரப் புனரமைப்புக் குழுக்கள் (மாவட்டக்குழுக்கள்)

ஆ. உயர் மட்டக்குழுவும் பிராந்தியக்குழுவும் மாவட்டக் குழுக்களும் சுனாமி அனர்த்த வலையமைப்பிலுள்ள சகலரதும் துயரங்களை கருத்திற் கொள்ளக் கூடியவாறான முறையொன்றில் அவற்றின் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும் என்பதுடன் இனப்பூர்வாங்கம் பால்நிலை, மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிரயாயம், சமூகப்பூர்வாங்கம், பிறப்பு அல்லது வேறு அந்தஸ்து போன்ற ஏதுக்களின் மீது எந்தவொரு நபருக்கும் எதிராக பாரபட்சமின்றி செயற்பட வேண்டும்.

### 2. நோக்கெல்லை

அ. உயர்மட்டக்குழுவினதும் பிராந்தியக்குழுவினதும் மாவட்டக் குழுவினதும் நோக்கெல்லை முறையே பிரிவுகள் 5(அ), 6(ஆ) 8(ஆ) என்பவற்றில் வரைவிலக்கணம் கூறப்பட்ட பணிகளைப் புரிவதற்கும் பிராந்தியக்குழுக்களின் விடயத்தில் 8(அ) என்னும் பிரிவாலும் (கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு) பிரத்தியேகமாக "சுனாமி அனர்த்த வலயம்" விற்கும் பயனுறுவதாகவும் வரையறுக்கப்படுதல் வேண்டும்.

ஆ. சுனாமி அனர்த்த வலயம் (சு.அ.வ) சுனாமியால் பாதிக்கப்பட்ட இடப்பரப்பாக வரைபிலக்கணம் செய்யப்படுதல் வேண்டும்.

இ. 'சு.அ.வ" ஆனது கடலையடுத்துள்ளதும் சராசரி தாழ்த்தப்பட்ட நீர்மட்டத்திலிருந்து தரை நோக்கி இரண்டு கிலோ மீற்றர் எல்லைக்குள் அமைந்துள்ளதுமான சுனாமியால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாதிக்கப்பட்ட இலங்கையின் எல்லாக்காணி இடப்பரப்பை யும் உள்ளடக்குதல் வேண்டும்.

ஈ. உயர்மட்டக்குழு, மேலதிக காணி இடப்பரப்புகளை 'சு.அ.வ." வற்குள் கொண்டு வரத்தீர்மானிக்கலாம். எவ்வாறாயினும் அத்தகைய எல்லா காணி இடப்பரப்புகளும் சுனாமியால் நேரடியாக தாக்கத்திற்குள்ளாக்கப்பட்டு அல்லது சுனாமியின் விளைவாக ஆட்களின் புலம் பெயர்வினாலும் மீள் குடி யேற்றத்தினாலும் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உ. கடல் நீரால் மேவப்பட்ட கரையோர இடப்பரப்புகளில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய

அல்லது அவற்றைப் பாதிக்கின்ற வழிமுறைகளுக்கான புதிய பிரே ரணைகளை சர்வதேச முகவராண்மையொன்றில் அனுசரணையின் கீழ் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும். அத்தகைய வழிமுறைகள் சுனாமியின்போது கடலுக்குள் இழக்கப்பட்ட பொருட்களை மீளப் பெறுவதற்கான வழிமுறைகளையும், பாதிக்கப்பட்ட கரையோரங் களையும், கடற்கரைகளையும் கடல் நீரால் குழப்பப்பட்டிருக்கும் போது கூட துப்பரவு செய்தலையும் அத்துடன் சுனாமியால் பாதிக் கப்பட்டுள்ள இறங்கு துறைகளை அல்லது வர்த்தக கடற்தொழில் துறைமுகங்களை பழுது பார்த்தலையும் தீர்மானித்தலையும் உள்ளடக் கக்கூடும்.

ஊ. இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான 2002 பெப்ரவரி 23 எனத் தேதியிடப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை முழுவலு வுடனும் பயனுறுதியுடனும் தொடர்ந்திருத்தல் வேணடும் என்பதுடன் இந்தப்புரிந்துணர்வு ஒப்பந்தத்திலுள்ள எதுவும் அத்தகைய உடன்படிக்கையை பங்கப்படத்துவதாகவோ அல்லது அதன் நியதிகளை ஏதேனும் விதத்தில் மாற்றுவ தாகவோ பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.

### 3. நடைமுறையில் இருக்கும் காலப்பகுதி

அ. இப்பரிந்துணர்வு ஒப்பந்தம் இரு திறத்தவர்களாலும் அது நிறைவேற்றப்படும் திகதியிலிருந்து ('தொடங்கும் தேதி") வலுவுக்கு வருதல் வேண்டும் என்பதுடன் தொடங்கும் தேதியிலிருந்து ஓராண்டு காலப் பகுதியொன்றிற்கு தொடர்ந்து நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

ஆ. திறத்தவர்களின் உடன்பாட்டின் மூலம் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேலும் ஒரு காலப்பகுதிக்கு அல்லது





காலப்பகுதிகளுக்கு நீடிக்கும் விருப்பத்தெரிவை கொண் டிருத்தல் வேண்டும்.

### 4. செலவும் செலவுகளும்

P.Toms என்னும் கட்டமைப்பை தாபித்தல், அதன் செயற்பாடு என்பன தொடர்பில் ஏற்படும் எல்லா ஆகு செலவுகளையும் மற்றும் செலவுகளையும், ஏற்குமாறு உதவி வழங்குனர்கள் கேட்டுக்கொள்ளப் படுதல் வேண்டும்.

### 5. உயர் மட்டக்குழு

#### அ. புவியியல் நோக்கெல்லை

உயர் மட்டக்குழு பித்தியேகமாக "சு.அ.வ" தொடர்பில் செயற்படுதல் வேண்டும்.

#### ஆ. பணிகள்

உயர் மட்டக்குழு பின்வரும் பணிகளை புரிதல் வேண்டும்.

1. சு.அ.வ இல் உதவி வழங்குனர்களின் நிதிகளின் சமமான ஒதுக் கீட்டிற்கும் செவீட்டிற்கும், உயர்மட்டக்குழுவின் கொள்கை வகுத்தல் அதற்கு சமர்ப்பிக்கப்பட்ட தேவை மதிப்பீடுகளின் அடிப்படையிலும் பாதிக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை யினதும் சேத அளவினதும் விகிதாசாரத்தின் அடிப்படையிலும் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும் என்ற கோட்பாட்டினால் வழிநடத்தப்படல் வேண்டும்.
2. மதியுரை சேவைகளை வழங்குதல், அத்துடன்
3. P-Toms கட்டமைப்பின் பணிகளைக் கண்காணித்தல்

#### இ. அமைப்பு

உயர் மட்டக்குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. 1 இலங்கை அரசின் நியமத்தர்;.
2. 1 தமிழீழ விடுதலைப் புலிகளின் நியமத்தர்;.
3. 1 முஸ்லிம் கட்சிகளின் நியமத்தர்;.

#### ஈ. மாற்று நியமத்தர்கள்

பெயர் குறித்த நியமனம் செய்யும் திறத்தவர் ஒவ்வொருவரும் மாற்று நியமத்தர் ஒருவரை பெயர் குறித்தொதுக்குதல் வேண்டும். உறுப்பினர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒருவர் சுகயீனம் காரணமாக பிரயாணத்தின் காரணமாக அல்லது வேறு காரணமாக அவசியம் காரணமாக அல்லது வேறு அவசிய சூழ்நிலை காரணமாக சமூகமாயிருக்க இயலாதிருக்கும் பட்சத்தில் மாத்திரம் கூட்டங்களுக்குச் சமூகம் அளிப்பதற்கும் உறுப்பினரின் சார்பில் செயலாற்றுவதற்கும் அதிகாரமளிக்கப்படுவார்.

### உ. தவிசாளர்

உயர்மட்டக்குழு தவிசாளராகச் சேவையாற்றுவதற்கும் அதன் கூட்டங்களை நடத்துவதற்கும் இசைவு படுத்துவதற்கும் உயர்மட்டக்குழுவின் உறுப்பினர்களுள் ஒருவரை தெரிவு செய்தல் வேண்டும். தவிசாளரான ஒவ்வொருவரும் இரண்டு மாதங்களுக்கு சேவையாற்றிய பின்னர் தலைமை வகிக்கும் பணி உறுப்பினர்களிடையே சுழற்சி முறையில் வருதல் வேண்டும்.

### ஊ. பார்வையாளர்கள்

உயர்மட்டக்குழுக் கூட்டங்களுக்கு பார்வையாளராக பலதரப்பு உதவி வழங்குநர்களையும், இருதரப்பு உதவி வழங்குநர்களையும், பிரதிநிதித்துவப்படுத்தும் ஒவ்வொருவரைக் கொண்டிருத்தல் வேண்டும். பார்வையாளர்கள் முறையே பல தரப்பு உதவி வழங்கும் சமுதாயத்தினாலும் பெயர் குறித்த நியமிக்கப்படுதல் வேண்டும்.

### எ. முடிவெடுத்தல்

1. உயர்மட்டக்குழு உடன்பாட்டின் அடிப்படையில் முடிவுகளை எடுக்க முயலுதல் வேண்டும். உயர் மட்டக்குழு எந்தவொரு முடிவுகளையும் எடுக்க முன்னர் எல்லா உறுப்பினர்களும் நல்லெண்ணத்துடன் ஒருமித்து பணியாற்றி பொது உடன்படிக்கை ஒன்றை எய்துவதற்கு தங்களது முனைப்பான முயற்சிகளைப் பயன்படுத்துதலும் வேண்டும்.

2. உடன்பாட்டை எய்த முடியாத பட்சத்தில் உறுப்பினர்கள் உயர்மட்டக்குழுவில் தொடர்ந்தும் ஒத்தழைப்பை உறுதி செய்யும் நோக்கத்துடன் உடனடியாக அவர்களை நியமனம் செய்யும் திறத்தவர்களுடனும் விரிவான கலந்தாலோசனை நடைமுறை ஒன்றில் ஈடுபடுதல் வேண்டும்.

4. அப்போதும் உடன்பாட்டை எய்த முடியாத பட்சத்தில் நியமனம் செய்யும.

   திறத்தவர்கள் பிரிவு 5(ஏ,1 மற்றும் 2) என்பதில் விதிந்துரைக்கப்பட்ட கலந்தாலோசனை நடைமுறையை பின்பற்றியதன் பின்னரும் 14 நாள் முன்னறிவித்தலை கொடுத்ததன் பின்னரும் உயர் மட்டக்குழுவின் ஒத்தழைப்பை இடைநிறுத்தல் செய்யலாம்.





### ஏ. அமைவிடம்

உயர்மட்டக்குழு கொழும்பில் அமைந்திருத்தல் வேண்டும்.

### ஐ. நடவடிக்கை முறைகள்

உயர்மட்டக்குழு அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அதன் சொந்த நடவடிக்கை முறைகளை தீர்மானித்தல் வேண்டும்.

### ஒ. சேவையாற்றும் செயலகம்

உயர்மட்டக்குழு போதியளவு பணியாட் தொகுதியினருடன் சிறிய, சுயேச்சையான செயலகம் ஒன்றை ஸ்தாபித்தல் வேண்டும்.

### 6. பிராந்தியக்குழு

### அ. புவியியல் நோக்கெல்ல்லை:

பிராந்தியக்குழு பிரத்தியேகமாக ஆறு மாவட்டங்களிலுமுள்ள சு.அ.வ. வின் இடப்பரப்புக்கள் செயலாற்றுதல் வேண்டும்.

### ஆ. பணிகள்:

பிராந்தியக்குழு பின்வரும் பணிகளைப்புரிதல் வேண்டும்.

1. சுனாமிக்கு பின்னரான அவசர கால நிவாரணம், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், அத்துடன் அபிவிருத்தி வழிமுறைகளை நடைமுறைப்படுத்தவதற்கும் அவற்றிற்கு முன்னுரிமை அளிப்பதற்கும் ஆன தந்திரோபாயங்களை விருத்தி செய்தல்.

2. சுனாமிக்கு பின்னரான நிவாரணம், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், அத்துடன் அபிவிருத்தி என்பவற்றுக்கான கருத்திட்டங்கள் தொடர்பான கருத்திட்ட அங்கிகாரமும் முகாமைத்துவமும்.

3. கருத்திட்டங்களின் முழுமையான கண்காணிப்பு,அத்துடன்,

4. பிரிவு 7 இல் குறித்துரைக்கப்பட்டவாறு வரைவிலக்கணம் கூறப்பட்ட நிதி தொடர்பில் நிதி முகாமைத்துவம்.

### இ. அமைப்பு:

பிராந்தியக்குழு பின்வரும் உறுப்பினர்களை கொண்டிருக்கவேண்டும்.

1. இலங்கை அரசாங்கத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் 2 உறுப்பினர்களில் ஒருவர் பிரதித்தவிசாளராக செயலாற்றுவார்.

2. தமிழீழ விடுதலைப் புலிகளினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் 5 உறுப்பினர்களில் ஒருவர் தவிசாளராக செயலாற்றுவார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



3. முஸ்லிம் கட்சிகளால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட 3 உறுப் பினர்களில் ஒருவர் பிரதித்தவிசாளராக சேவையாற்றுவார்.

4. பிராந்தியக்குழு தகுந்த ஆண், பெண் சமநிலை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்

**ஈ. பார்வையாளர்கள்:**

பிராந்தியக்குழு அதன் கூட்டங்களுக்கு சமுகமளிப்பதற்கு பலதரப்பு உதவி வழங்குநர்களை பிரதிநிதித்தவப்படுத்தும் பார்வையாளர் ஒருவரையும் இருதரப்பு உதவி வழங்குநர்களை பிரதிநிதிப்படுத்தும் பார்வையாளர் ஒருவரையும் கொண்டிருத்தல் வேண்டும். பார்வை யாளர்கள் முறையே பல தரப்பு உதவி வழங்கும் சமுதாயத்தினாலும் பெயர் குறித்து நியமிக்கப்பட வேண்டும். ஏனைய பார்வையாளர்கள் பிராந்தியக்குழுவின் கூட்டத்திற்கு சமுகமளிப்பதற்கு அழைக்கப் படலாம்.

**உ. முடிவெடுத்தல்**

1. பிராந்தியக்குழு உடன்பாட்டின் அடிப்படையில் முடிவுகளை எடுக்க முயலுதல் வேண்டும். பிராந்தியக்குழு எவையேனும், முடிவுகளை எடுப்பதற்கு முன்னர் எல்லா உறுப்பினர்களும் நல்லெண்ணத்துடன் ஒருமித்துப் பணியாற்றுதலுக்கும் பொது உடன்படிக்கை ஒன்றை எய்துவதற்கும் தங்களது முனைப்பாக முயற்சிகளை பயன்படுத்துதல் வேண்டும்.

2. உடன்பாட்டை எய்த முடியாத பட்சத்தில் பிராந்தியக்குழுவின் சாதாரண பெரும்பான்மையொன்றினால் முடிவுகள் எடுக்கப் படுதல் வேண்டும்.

3. கீழே உள்ள பந்தி.

4. எவ்வாறிருப்பினும் சிறுபான்மைக் குழுவொன்றின் மீது பாதிப் பினை ஏற்படுத்தும் பிரச்சினை ஒன்றின் மீது பிராந்தியக் குழுவின் குறைந்த பட்சம் 2 உறப்பினர்களினால் ஏற்றுக்கொள்ளப் பட்டிருப்பின் முடிவொன்று எடுக்கப்படும் பட்சத்தில் பிராந் தியக்குழுவின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அங்கீகாரம் (7 உறுப்பினர்கள்) தேவைப்படும்.

5. மாவட்டக்குழுவொன்றின் பிரேரணை ஒன்றிற்கு பிராந்தியக் குழுவின் சாதாரண பெரும்பான்மையொன்று கிடைக்காத பட்சத்திலும் அத்துடன் பிரேரணை தொடர்பிலான முடிவை சீராக்குமாறு பிராந்தியக்குழுவின் குறைந்தபட்சம் இரண்டு உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில் நிராகரிப் பிற்கு பிராந்தியக்குழுவில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அங்கீகாரம் (7 உறுப்பினர்கள்) தேவைப்படும்.





**ஊ. அமைவிடம்:**

பிராந்தியக்குழு கிளிநொச்சியில் அமைந்திருத்தல் வேண்டும்.

**எ. நடவடிக்கை முறைகள்:**

பிராந்தியக்குழு அதன்பணிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை முறைகளை உயர்மட்டக்குழுவுடனான கலந்தாலோசனையுடன் தீர்மானித்தல் வேண்டும்.

**ஏ. சேவையாற்றும் செயலகம்:**

ஆறு மாவட்டங்களுக்குமான சிறிய செயலகம் ஒன்று நிறுவப்படுதல் வேண்டும் என்பதுடன் உடனடி மனிதநேய மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான செயலகத்திலிருந்து (உ.ம.பு.தே.ச.-SIHRN) பணியாட் தொகுதியினர் பெறப்படலாம். இச்செயலகம் சுனாமிக்கு பின்னரான கரையோர புனர்நிர்மான அபிவிருத்தி பிராந்திய செயலகம்.

(சு.பி.பு.ச.பி.செ.(RSPCRD) எனப்பெயரிடப்படல் வேண்டும் என்ப துடன் பிராந்தியக்குழுவிற்கு செயலக நிர்வாக சேவைகளை புரிதலும் வேண்டும்.

**ஐ. கருத்திட்ட முகாமைத்துவக் கூறு**

பிராந்தியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவக் குழுவொன்று (க.மு.க. (PMU) தாபிக்கப்படுதல் வேண்டும்.

**ஒ. கணக்கீடு பிராந்தியக்குழு**

பொருத்தமான தகமை பெற்ற சுயேட்சையான கணக்காளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

**7. பிராந்திய நிதியம்**

அ. ஆறு மாவட்டங்களுக்கும் குறித்துரைக்கப்படாத (நிகழ்ச்சித் திட்ட நிதிகளையும் செயலக நிதிகளையும் கொண்ட சுனாமிக்கு பின்னரான கரையோர நிதியம் ஒன்றிருத்தல் வேண்டும். (பிராந்திய நிதியம்) குறித்துரைக்கப்படாத (நிகழ்ச்சி திட்டம்) நிதிகள் பிரத்தியேகமாக வெளிநாட்டு நிதிகளை கொண்டிருக்க வேண்டிய அதே வேளையில் செயலக நிதிகள் வெளிநாட்டு நிதிகள் உள்ளூர் நிதிகள் ஆகிய இரண்டையும் கொண்டிருத்தல் வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆ. திறத்தவர்கள் பிராந்திய நிதியத்தின் சட்டக்காப்பாளராக இருப்பதற்கென பொருத்தமான பல தரப்பு முகவர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

இ. பிராந்திய நிதியத்தின் நோக்கம் ஆறு மாவட்டங்களினதும் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடப்பரப்புகளில் நிவாரண, புனர்வாழ்வு, புனர்நிர்மாண, மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கும், அதனைத் துரிதப் படுத்தவதற்கும் தகுந்த அங்கிகரிக்கப்பட்ட நடைமுறை களின் படி நிதிகளை துரிதமாக கிடைக்கச்செய்வதாகும்.

ஈ. திறத்தவர்களும் சட்டக்காப்பாளர்களும் பிராந்திய நிதி யத்தில் தாபிப்பதற்கும் தொழிற்படுவதற்குமான கட்டமைப்பு முறையொன்றின் மீது உடன்படுதல் வேண்டும்.

**8. மாவட்டக்குழுக்கள்.**

**அ. புவியில் நோக்கெல்லை.**

மாவட்டக்குழு ஒவ்வொன்றும் பிரத்தியேகமாக தத்தமது மாவட் டத்திற்குட்பட்ட சுனாமி அழிவு இடப்பரப்புக்கள் தொடர்பில் செயலாற்றுதல் வேண்டும்.

**ஆ. பணிகள்**

மாவட்டக்குழு ஒவ்வொன்றும் அதன் மாவட்டத்திற்குள் பின்வரும் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

1. தேவைகளை இனம் காணுதல்
2. தேவைகளை முன்னுரிமைப்படுத்தல்
3. பல்வேறு பங்காளிகளிடமிருந்தும் கருத்திடப் பிரேரணை களை பிறப்பித்தலும். பெறுதலும், கணிப்பீடு செய்தலும், முன்னுரிமைப்படுத்தலும், அத்துடன் பிராந்தியக்குழுவிற்கு விதப்புரைகளைச் சமர்ப்பித்தலும்.
4. திட்டத்தின் முன்னேற்றத்தை கண்காணித்தலும் அதனைப் பற்றி பிராந்தியக்குழுவிற்கு அறிக்கையிடுதலும்.

**இ. அமைப்பும் முடிவெடுத்தலும்**

ஏற்கனவே தாபிக்கப்பட்ட நன்கு பணியாற்றும் மாவட்டக்குழுக்கள் அவற்றின் பணிகளைத் தொடருதல் வேண்டும். மாவட்டக்குழுக்கள் அவற்றின் அமைப்பு மற்றும், முடிவெடுத்தலும் தொடர்பிலான பிரச்சினைகளை மேலும் கலந்துரையாடி அவற்றின் மீது முடி





வெடுக்கலாம். போதியளவிலான முஸ்லிம் பிரதிநிதித்துவம் உள்ளடக் கப்படவேண்டும். மாவட்ட குழு தகுந்த ஆண் பெண் சமநிலையையும் கொண்டிருக்க வேண்டும்.

**ஈ. அமைவிடம்:**

மாவட்டக்குழு ஒவ்வொன்றும் அதன் மாவட்டத்திற்குள் அமைந் திருத்தல் வேண்டும்.

**உ. சேவையாற்றும் செயலகம்**

சிறிய சேவையாற்றும் செயலகம் ஒன்று மாவட்டக்குழுக்குளுக்கு செயலக நிர்வாக சேவைகளை வழங்க வேண்டும்.

**9. நிறைவேற்றுகை**

இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் இணைப்புப் பிரதிகளில் நிறைவேற்றப் படலாம். 2 வாசகங்களும் சமமான சான்றுறுதி கொண்டவையாகும்.

○○○





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆ. திறத்தவர்கள் பிராந்திய நிதியத்தின் சட்டக்காப்பாளராக இருப்பதற்கென பொருத்தமான பல தரப்பு முகவர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

இ. பிராந்திய நிதியத்தின் நோக்கம் ஆறு மாவட்டங்களினதும் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடப்பரப்புக்களில் நிவாரண, புனர்வாழ்வு, புனர்நிர்மாண, மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கும், அதனைத் துரிதப் படுத்தவதற்கும் தகுந்த அங்கிகரிக்கப்பட்ட நடைமுறை களின் படி நிதிகளை துரிதமாக கிடைக்கச்செய்வதாகும்.

ஈ. திறத்தவர்களும் சட்டக்காப்பாளர்களும் பிராந்திய நிதி யத்தில் தாபிப்பதற்கும் தொழிற்படுவதற்குமான கட்டமைப்பு முறையொன்றின் மீது உடன்படுதல் வேண்டும்.

## 8. மாவட்டக்குழுக்கள்.

### அ. புவியில் நோக்கெல்லை.

மாவட்டக்குழு ஒவ்வொன்றும் பிரத்தியேகமாக தத்தமது மாவட் டத்திற்குட்பட்ட சுனாமி அழிவு இடப்பரப்புக்கள் தொடர்பில் செயலாற்றுதல் வேண்டும்.

### ஆ. பணிகள்

மாவட்டக்குழு ஒவ்வொன்றும் அதன் மாவட்டத்திற்குள் பின்வரும் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

1. தேவைகளை இனம் காணுதல்
2. தேவைகளை முன்னுரிமைப்படுத்தல்
3. பல்வேறு பங்காளிகளிடமிருந்தும் கருத்திடப் பிரேரணை களை பிறப்பித்தலும். பெறுதலும், கணிப்பீடு செய்தலும், முன்னுரிமைப்படுத்தலும், அத்துடன் பிராந்தியக்குழுவிற்கு விதப்புரைகளைச் சமர்ப்பித்தலும்.
4. திட்டத்தின் முன்னேற்றத்தை கண்காணித்தலும் அதனைப் பற்றி பிராந்தியக்குழுவிற்கு அறிக்கையிடுதலும்.

### இ. அமைப்பும் முடிவெடுத்தலும்

ஏற்கனவே தாபிக்கப்பட்ட நன்கு பணியாற்றும் மாவட்டக்குழுக்கள் அவற்றின் பணிகளைத் தொடருதல் வேண்டும். மாவட்டக்குழுக்கள் அவற்றின் அமைப்பு மற்றும், முடிவெடுத்தலும் தொடர்பிலான பிரச்சினைகளை மேலும் கலந்துரையாடி அவற்றின் மீது முடி





வெடுக்கலாம். போதியளவிலான முஸ்லிம் பிரதிநிதித்துவம் உள்ளடக் கப்படவேண்டும். மாவட்ட குழு தகுந்த ஆண் பெண் சமநிலையையும் கொண்டிருக்க வேண்டும்.

### ஈ. அமைவிடம்:

மாவட்டக்குழு ஒவ்வொன்றும் அதன் மாவட்டத்திற்குள் அமைந் திருத்தல் வேண்டும்.

### உ. சேவையாற்றும் செயலகம்

சிறிய சேவையாற்றும் செயலகம் ஒன்று மாவட்டக்குழுக்குளுக்கு செயலக நிர்வாக சேவைகளை வழங்க வேண்டும்.

## 9. நிறைவேற்றுகை

இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் இணைப்புப் பிரதிகளில் நிறைவேற்றப் படலாம். 2 வாசகங்களும் சமமான சான்றுறுதி கொண்டவையாகும்.

○○○





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பின்னிணைப்பு-21

## சிறிலங்கா ஜனநாயச் சோஸலிச குடியரசு அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் பெப்ரவரி – 23–2002

முகவுரை

சிறிலங்கா ஜனநாயக சோசலிஸ குடியரசு அரசாங்கத்தினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் ஒட்டுமொத்தமான நோக்கம் இலங்கையில் தற்போதுள்ள இன மோதலுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதாகும். இந்தத்தரப்பினர் (இந்த தரப்பினர் என்று இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடுவது சிறிலங்கா அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் ஆகும்) பகைமைகளுக்கு ஒரு முடிவுகட்டி, மோதலினால் பாதிக்கப்பட்டிருக்கும் அனைத்து குடிமக்களதும் வாழ்க்கை நிலைமையை சீருயர்த்துவதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கின்றனர். பகைமைகளுக்கு முடிவு கட்டுவது எனும் போது, நிரந்தர தீர்விற்கான பேச்சுவார்த்தைகளை நோக்கிய மேலதிக நடவடிக்கைகளை எடுக்கக் கூடியதாக ஒரு சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதாக இந்த தரப்பினரால் கவனிக்கப்படுகின்றது.

மோதலில் நேரடியாக சம்பந்தப்படாத குழுக்களும் இதன் பாதிப்புக்களால் துன்பப்படுகின்றனர் என்பதையும் இந்தத் தரப்பினர் மேலும் அங்கீகரிக்கின்றனர். குறிப்பாக முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் இது பொருந்தும், ஆகவே, பொதுமக்களினதும் அவர்களின் சொத்துக்கள்தும் பாதுகாப்புப் பற்றிய இந்த ஒப்பந்தத்தின் விதிகள் அனைத்துக் குடிமக்களுக்கும் செல்லுபடியாகும். இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, போர் நிறுத்தம் ஒன்றில் ஈடுபடவும், நல்ல நோக்கங்களைப் பாதிக்கக்கூடிய அல்லது ஒப்பந்தத்தின் சாரத்தை முறிக்கக் கூடிய செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ளவும், கீழ்வரும் பிரிவுகளில் சொல்லப்பட்டிருப்பது போன்று நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை செயற்படுத்தவும் இந்தத் தரப்பினர் ஒப்புக் கொண்டுள்ளனர்.





**ஷரத்து 1. போர் நிறுத்தத்தின் முறைகள்**

இந்தத் தரப்பினர் தமது ஆயுதப் படைகளுக்கு இடையே போர் நிறுத்தம் ஒன்றை பின்வருமாறு அமுல் செய்ய ஒப்புக் கொண்டுள்ளனர்.

1.1 நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரினால் விதி 4.2 இன் பிரகாரம் ஆரம்ப தினம் என்று இதன் பின்னர் குறிக்கப்படும் தினம் அறிவிக்கப்பட்டதும் அத்தினத்தில் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே கூட்டாக ஒப்புக் கொள்ளப்பட்ட போர் நிறுத்தம் ஒன்று அமுலுக்கு வரும். (இந்த விதியின் கீழ் 23.02.2002ஆம் திகதியை நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் யுத்தநிறுத்த ஆரம்ப நாளாக பிரகடனம் செய்து போர் நிறுத்தம் அமுலுக்கு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.)

**இராணுவ நடவடிக்கைகள்**

1.2 வலுத்தாக்குதல் இராணுவ நடவடிக்கைகளில் எந்தத் தரப்பினரும் ஈடுபட இயலாது. முற்று முழுதாக சகல இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்துவதை இது கோருகின்றது. பின்வரும், ஆனால், மட்டுப்படுத்தப்படாத நடவடிக்கைகளை இது உள்ளடக்கின்றது.

அ. நேரடியானதும் மறைமுகமான ஆயுதங்களினால் சுடுதல், ஆயுதங்களுடன் முற்றுகைத் தேடுதல், பதுங்கியிருந்து தாக்குதல், கொலைகள், ஆட் கடத்தல், பொதுமக்களது அல்லது இராணுவத்தினது சொத்துக்களை அழித்தல், நாசகார செயல்கள், தற்கொலைத் தாக்குதல் நடவடிக்கைகள், ஆழ ஊடுருவும் குழுக்களின் செயற்பாடுகள்.

ஆ. வான்வழி குண்டு வீச்சுக்கள்

இ. கடலில் வலுத்தாக்குதல் நடவடிக்கைகள்

1.3 விடுதலைப் புலிகளுக்கு எதிரான வலுத்தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடாத வகையில், சிறிலங்காவின் ஆயுதப் படைகள் சிறிலங்காவின் இறைமையையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் சட்டப்படியான நடவடிக்கைகளை தொடர்ந்து நிறைவேற்றலாம்.

### படைகளைப் பிரித்து வைத்தல்

1.4 முன்னணி காவலரண்கள் அமைக்கப்பட்டிருக்கும் பகுதிகளில், குறைந்தது 600மீற்றர் தூரம் இடைவெளி பிரித்து சிறிலங்கா அரசாங்கத்தின் ஆயுதப் படைகளும் விடுதலைப்புலிகளின் போரிடும் படைகளும் தமது கள நிலையை வைத்திருக்கலாம். எனினும் ஒவ்வொரு தரப்பினரும் தமது காவல் நிலையிலிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



100மீற்றர் தூரம் தங்களுக்குள் உள்ளவாறு நடமாடுவதற்கான உரிமையை கொண்டிருப்பர். 400 மீற்றருக்குக் குறைவான இடைவெளி உள்ள தற்போதுள்ள நிலைகள் விடயத்தில் இந்த நடமாடும் உரிமை செல்லாது. தமது துருப்பினர் இடையே முடிந்தளவு கூடுதலான இடைவெளியை உறுதிப்படுத்த இந்தத் தரப்பினர் ஒப்புக் கொள்கின்றனர்.

1.5 பகுதிகள் தெளிவாக வரையறுக்கப்படாத இடங்களில் 1.6 விதியில் குறிப்பிடுவது போன்று நிலவரையறை செய்யப்படும் வரை 2001 டிசம்பர் 24ம் திகதியில் இருந்தவாறு சிறிலங்கா அரசாங்கத்தாலும் விடுதலைப் புலிகளாலும் கட்டுப்படுத்தப் படும் பகுதிகள் அவ்வாறே இருந்து வரலாம்.

1.6 சிறிலங்கா கண்காணிப்புக் குழுவினருக்கு 3ம் விதியின் பிரகாரம் சிக்கலுக்குரிய சலக பகுதிகளினதும் காவலரண் நிலைகள் பற்றிய தகவல்களை இந்த தரப்பினர் வழங்கலாம். ஆகக் குறைந்தது ஆரம்ப தினத்திலிருந்து 30 நாளுக்குள்ளாக நிலவரையறைக் கோடுகளை வரைவதில் இந்தக் கோடுகளை வரைவதில் இந்தத் தரப்பினருக்கு கண் காணிப்புக் குழுவினர் உதவுவர்.

1.7 மற்றைய தரப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் ஆயுதங் கள், வெடிபொருட்கள் மற்றும் இராணுவ தளபாடங்கள் என்பனவற்றை இந்தத் தரப்பினர் நகர்த்த முடியாது.

1.8 சிறிலங்கா அரசாங்கம் தமிழ் ஆயுதக்குழுக்களிடம் இருந்து ஆயுதங்களை ஆகக் குறைந்தது ஆரம்ப தினத்திலிருந்து 30 நாளுக் குள்ளாக களைய வேண்டும். வடக்கு-கிழக்கிற்கு அப்பாற்பட்ட பகுதிகளில் சேவைக்கென சிறிலங்கா ஆயுத படைகளின் கட்டுப் பாட்டின் கீழ் மேற்படி குழுக்களில் இருக்கும் தனிநபர்களை சேர்த்துக்கொள்ள சிறிலங்கா அரசாங்கம் முன்மொழியலாம்.

### நடமாடும் சுதந்திரம்

1.9 இந்தத் தரப்பினரின் படைகள் 1.4 மற்றும் 1.5 விதிகளில் சொல்லப் பட்டிருப்பது போன்று ஆரம்பத்தில் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தங்கியிருக்க வேண்டும்.

1.10 ஆயுதமேந்தாத சிறிலங்கா துருப்பினர் ஆரம்ப தினத்திலிருந்து 60 நாட்களிற்கு பின்னர் யாழ்ப்பாணத்திற்கும் வவுனியாவிற்கும் இடையே யாழ்-கண்டி (ஏ9) வீதியை பாவித்து மட்டுப்படுத்தப் படாத அளவில் பயணம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். இந்தச் செயல்முறைகள் இந்தத் தரப்பினரால் சிறிலங்கா கண்காணிப்புக் குழுவினரின் உதவியுடன் வகுக்கப்பட வேண்டும்.





1.11 ஆரம்ப தினத்தில் இருந்து போராளிகளான தனிநபர்கள் தமது பிராந்திய தளபதியின் சிபார்சின் பெயரில் ஆயுதமில்லாமலும் சாதாரண உடையிலும் தமது குடும்பத்தவர் மற்றும் நண்பர்கள் ஆகியோரை மற்றத் தரப்பின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று பார்த்துவர அனுமதிக்க வேண்டும். குறைந்தளவு துார வீதியால் பயணம் செய்யும் நேரத்தை கணக்கில் எடுக்காது ஒவ்வொரு இரண்டு மாதத்தில் ஆறு நாட்களுக்கென இத்தகைய பயணங்கள் மட்டுப்படுத்தப்படும். இந்த நோக்கத்திற்கு யாழ் - கண்டி வீதியை விடுதலைப் புலிகள் வசதி செய்து கொடுப்பர். குறிப்பிட்ட இராணுவப் பகுதிக்குள் நுழைவதற்கு மறுப்புத் தெரிவிக்கும் உரிமையை இந்தத் தரப்பினர் கொண்டிருப்பர்.

1.12 போராளிகளான தனிநபர்கள் ஆரம்ப தினத்தில் இருந்து இரண்டு மாத கட்டுப்பாட்டைக் கவனத்தில் கொள்ளாது தமது நெருக்கிய (மனைவி, பிள்ளைகள், பாட்டனார், பெற்றோர், உடன்பிறப்புக் கள்) திருணம், இறுதி அஞ்சலி போன்றவற்றிற்கு ஆயுதமில்லாம லும், சாதாரண உடையிலும் சென்றுவர அனுமதிப்பதென இந்தத் தரப்பினர் ஒப்புக்கொள்கின்றனர். குறிப்பிட்ட இராணு வப் பகுதிக்குள் நுழைவதற்கு மறுப்புத் தெரிவிக்கும் உரிமை இங்கு செல்லுபடியாகும்.

1.13 ஆயுதமேந்தாத 50 விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஆரம்ப தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் வடக்கு கிழக்கில் சிறிலங்கா அரசாங்க கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் அரசியல் பணிகளுக்கென சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுவர். ஆரம்ப தினத்திலிருந்து 60 நாட்களுக்குள் மேலும் ஆயதம் ஏந்தாத 100 விடுதலைப்புலி உறுப்பினர்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுவர். ஆரம்ப தினத்திலிருந்து 90 நாட்களுக்குள் சகல ஆயுதம் ஏந்தாத விடுதலைப் புலி உறுப்பினர்களும் வடக்கு கிழக்கில் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுவர். விடுதலைப் புலி உறுப்பினர்கள் அடையாளப் பத்திரங்களை வைத்திருக்க வேண்டும். குறிப்பிட்ட இராணுவப் பகுதிக்குள் நுழைவதற்கு சிறிலங்கா அரசாங்கம் மறுப்பு தெரிவிக்க உரிமை இங்கு செல்லுபடியாகும்.

### ஷரத்து 2. இயல்பு நிலையை தோற்றுவிக்கும் நடவடிக்கைகள்

சிறிலங்காவின் சகல குடிமக்களுக்கும் இயல்புநிலை வாழ்க்கையை மீளமைப்பதற்காக பின்வரும் நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கை களை இந்தத் தரப்பினர் மேற்கொள்வர்.

2.1 சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக இந்தத் தரப்பினர் சித்திர வதை நெருக்கடி, ஆட்கடத்தல், கட்டாய வரி வசூலித்தல், தொந்தரவு என்பன உள்ளிட்டதான பகைமை நடவடிக்கைகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொது மக்களுக்கு எதிராக மேற்கொள்வதைத் தவிர்த்துக் கொள்வர்.

2.2 கலாசார, மத உணர்வுகளை புண்படுத்தக்கூடிய நடவடிக்கைகள், கொள்கை பரப்புதல் என்பனவற்றில் ஈடுபடுவதில் இருந்து இந்தத் தரப்பினர் தம்மைத் தவிர்த்துக் கொள்வர். எந்தத் தரப்பினதும் படைகளால் தற்போது வைத்திருக்கப்படும் வழிபாட்டு இடங்களில் (கோவில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் மற்றும் ஏனைய புனித தலங்கள் என்பன) இருந்து ஆரம்ப தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் படையினர் வெளியேறுவதுடன் அவை பொது மக்கள் சென்றுவரக்கூடியதாயிருக்க வேண்டும். உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள வழிபாட்டுத் தலங்களில் இருந்து, அவை பொதுமக்கள் சென்று வர முடியாததாயிருப்பினும் ஆயுதமேந்திய சலக துருப்பினரும் வெளியேறுவதுடன் பொதுசன தொண்டர்களால் அவை நல்ல நிலையில் பரிபாலிக்கப்பட வேண்டும்.

2.3 இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வரும் நாளில் இருந்து எந்தத் தரப்பினராலும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பாடசாலைக் கட்டிடங்கள் விடுவிக்கப்பட்டு அவற்றின் நோக்கங்களுக்கு பாவிக்கவென திரும்பக் கொடுக்கப்பட வேண்டும். ஆகக் குறைந்தது ஆரம்ப தினத்திலிருந்து 160 நாட்களுக்குள் இந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

2.4 ஏனைய சகல பொதுக் கட்டிடங்களும் அவற்றின் நோக்கங்களுக்கென திரும்ப ஒப்படைக்கப்படுவதன் கால அட்டவணை இந்தத் தரப்பினரால் தயாரிக்கப்பட்டு ஆகக் கூடியது ஆரம்ப தினத்திலிருந்து 30 நாட்களிற்குள் வெளியிடப்பட வேண்டும்.

2.5 பாதுகாப்பு நடவடிக்கைகளையும் சோதனைச் சாவடிகளின் அமைப்பையும் குறிப்பாக நெருக்கமாக குடிசனங்கள் உள்ள நகரங்களிலும் பட்டணங்களிலும் பொதுமக்கள் தொந்தரவு செய்யப்படுவதை தவிர்க்கும் வகையிலான முறைகளை புகுத்துவதற்காக இந்தத் தரப்பினர் மீளாய்வு செய்வர். ஆரம்ப தினதிலிருந்து 60நாட்களுக்குள் இத்தகைய முறை அமுலில் இருக்க வேண்டும்.

2.6 விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கும் அங்கிருந்தும் இராணுவ பாவனைக்கில்லாத பொருட்கள் தங்கு தடையின்றி கொண்டு செல்லப்படுவதை உறுதிப்படுத்துவதென இந்தத் தரப்பினர் ஒப்புக் கொள்கின்றனர். இணைப்பு 'அ" வில் உள்ள சில பொருட்கள் இதற்கு விதிவிலக்காயிருக்கும். பொருட்களின் அளவு சந்தையின் தேவையைப் பொறுத்தே நிச்சயிக்கப்படும். இராணுவ பாவனைக்கல்லாத பொருட்கள் மீது எஞ்சியுள்ள கட்டுப்பாடுகளை படிப்படியாக அகற்றுவதற்காக சிறிலங்கா அரசாங்கம் தொடர்ச்சியாக இந்த விடயத்தை மீளாய்வு செய்து வரும்.

2.7 பொருட்கள் கொண்டு செல்லப்படுவதையும் பொதுமக்களின் நடமாட்டத்தையும் வசதிப்படுத்துவதற்காக இந்தத் தரப்பினர் தமது கட்டுப்பாட்டு கோட்டு பகுதியில் இணைப்பு 'அ'வில் கூறப்படும் இடங்களில் சோதனைச் சாவடிகளை அமைக்க ஒப்புக் கொள்கின்றனர்.

2.8 திருமலை-ஹபரணை வீதி பயணிகளின் போக்குவரத்து 24 மணி நேரமும் ஆரம்ப தினத்திலிருந்து 10 நாட்களிற்குள் இது திறந்திருப்பதை உறுதிப்படுத்தும் விதமாக இந்தத் தரப்பினரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

2.9 மட்டக்களப்பு பாதையில் ரயில் சேவை வெலிகந்த வரை விஸ்தரிக்கப்படுவதற்கு இந்தத் தரப்பினர் வசதி செய்வர். மட்டக்களப்பு வரை சேவையை விஸ்தரிப்பதற்கு திருத்த பராமரிப்பு பணிகளை சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

2.10 கண்டி-யாழ்ப்பாணம் (ஏ9) வீதியை இராணுவ பயணமல்லாத பயணிகளதும் பொருட்களினதும் போக்குவரத்திற்கு இந்த தரப்பினர் திறந்து விட வேண்டும். இதுபற்றித் திட்டவட்டமான முறைகள் இந்தத் தரப்பினரால் நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் ஆகப்பிந்தியது ஆரம்ப தினத்திலிருந்து 30 நாட்களிற்குள் வகுக்கப்பட வேண்டும்.

2.11 மீன்பிடி கட்டுப்பாடுகள் படிப்படியாகத் தளர்த்துவது ஆரம்ப தினத்தில் இருந்து ஆரம்பமாக வேண்டும். பின்வரும் சில விதி விலக்குகளை தவிர்த்து ஆரம்ப தினத்திலிருந்து 90 நாட்களிற்குள் சகல இரவு, பகல் மீன்பிடி கட்டுப்பாடுகளும் விலத்தப்பட்டிருக்க வேண்டும்.

1) கரையில் பாதுகாப்புப் படைகளினது சகல முகாம்களில் இருந்தும் இரு பக்கமாகவும் கரைப்புறமாக ஒரு கடல் மைல் தூரமும், கடல்புறமாக இரு கடல் மைல் தூரமும்,

11) துறைமுகங்கள், துறை முகங்களுக்குச் செல்லும் வழிகள், கரையோரமாகவுள்ள குடாக்கள், களப்புக்கள் என்பவற்றில் மீன் பிடிக்க அனுமதிக்கப்படமாட்டாது.

2.12 பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தேடுதல்கள், கைது செய்தல் என்பன நடக்கக்கூடாது என இந்தத் தரப்பினர் ஒப்புக்







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொள்கின்றனர். கைது செய்யப்படுவதானது கிரிமினல் சட்டக் கோவைக்கு அமைந்ததாக முறையான சட்ட ஒழுக்குப்படி நடத்தப்பட வேண்டும்.

2.13 தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை அவர்களது குடும்பத்தவர்கள் சென்று பார்ப்பதற்கு ஆரம்ப தினத்திலிருந்து 30 நாட்களிற்குள் அனுமதிப்பதென இந்தத் தரப்பினர் ஒப்புக் கொள்கின்றனர்.

**ஷரத்து : 3. சிறிலங்கா கண்காணிப்புக்குழு**

இந்த ஒப்பந்தத்தின் ஒழுங்குகள் நிபந்தனைகள் மீறப்படும் எந்தவொரு சம்பவத்தையும் விசாரிப்பதற்குப் பொறுப்பாக சர்வதேச கண்காணிப்புக் குழு ஒன்றை அமைப்பதென இந்தத் தரப்பினர் ஒப்புக்கொண்டுள்ளனர். எந்தவொரு மோதலும் தமது தரப்பால் ஏற்படும் போது அவற்றைச் சரிப்படுத்துவதற்கு இரு தரப்பும் முற்றாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்த ஒப்பந்தத்தில் ஒப்புக் கொண்டவற்றை நிறைவேற்றுவதில் களத்தில் இருந்து சர்வதேச கண்காணிப்பை இந்த குழு பின்வரும் முறையில் மேற்கொள்ளும்.

3.1 இந்தக் கண்காணிப்புக் குழுவின் பெயர் சிறிலங்கா கண்காணிப்புக்குழு.

3.2 இந்தக் தரப்பினரின் ஒப்புதலைப் பெற்று, சிறிலங்கா கண்காணிப்புக் குழுவின் தலைவரை நோர்வே அரசாங்கம் நியமிக்கும். அவரே இந்த ஒப்பந்தத்தின் விளக்கம் தொடர்பாக இறுதி அதிகாரத்தைக் கொண்டிருப்பார்.

3.3 சிறிலங்கா கண்காணிப்புக்குழு இந்தத் தரப்பினருடன் தொடர்பு வைத்திருப்பதுடன் நோர்வே அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

3.4 சிறிலங்கா கண்காணிப்புக் குழுவின் தலைவர் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் தினத்தை தீர்மானிப்பார்.

3.5 சிறிலங்கா கண்காணிப்புக் குழு, நோர்டிக் நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்படும்.

3.6 சிறிலங்கா கண்காணிப்புக் குழுவின் தலைவர் பொருத்தமான தெரிவு செய்யும் இடத்தில் குழுவின் தலைமை அலுவலகம் அமைக்கப்படும். சிறிலங்கா அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகளுடனும் தொடர்பு கொள்ள கொழும்பிலும் வன்னியிலும் அலுவலகங்கள் அமைக்கப்படும். யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் சிறிலங்கா கண்காணிப்புக் குழுவினர் பிரசன்னமாக இருப்பார்கள்.





3.7 யாழ்ப்பாணம், மன்னார். வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படும். ஒவ்வொரு குழுவிலும் ஐந்து அங்கத்தவர்கள் இருப்பார்கள். அவர்களில் இருவர் சிறிலங்கா அரசாங்கத்தாலும் இருவர் விடுதலைப் புலிகளாலும் நியமிக்கப்படுவதுடன் ஒரு சர்வதேச கண்காணிப்பாளர் சிறிலங்கா கண்காணிப்புக்குழுவின் தலைவரால் நியமிக்கப்படுவார். சர்வதேச கண்காணிப்பாளர் இந்த குழுவிற்கு தலைமை தாங்குவார். சிறிலங்கா அரசாங்கத்தினதும், விடுதலைப் புலிகளினதும் நியமனதாரிகள் ஓய்வுபெற்ற நீதிபதிகள், பொதுச்சேவை உத்தியோகத்தர்கள், சமயத் தலைவர்கள் மற்றும் அத்தகைய பொது ஜன தலைவர்கள் ஆகியோர் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படலாம்.

3.8 சிறிலங்கா கண்காணிப்புக் குழுவினரின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பனவற்றிற்கு இந்தத் தரப்பினர் பொறுப்பாயிருப்பார்கள்.

3.9 சிறிலங்கா கண்காணிப்புக் குழுவினர் தமது கடமையை நிறைவேற்றுவதற்கென அவர்களின் நடமாடும் சுதந்திரத்தை உறுதிப்படுத்த இந்தத் தரப்பினர் ஒப்புக் கொள்கின்றனர். ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்படும் பகுதிக்கு உடனடியாக செல்வதற்கு கண்காணிப்புக் குழுவினர் அனுமதிக்கப்பட வேண்டும். அத்தகைய பகுதிகளில் மேற்படி ஆறு மாவட்ட குழுக்களின் அங்கத்தவர்களும் முடிந்தளவு கூடுதலாக புழங்குவதற்கு வசதி செய்வதென இந்தத் தரப்பினர் ஒப்புக் கொள்கின்றனர்.

3.10 ஒப்பந்தத்தின் எந்தத் தரப்பினரும் செய்யும் எந்த முறைப்பாடுகள் குறித்தும் உடன் நடவடிக்கை எடுப்பதும், அவற்றை விசாரிப்பதும், அத்தகைய முறைப்பாடு தொடர்பாக எழும் எந்தப் பிணக்கையும் தீர்த்து வைப்பதில் இந்தத் தரப்பினருக்கு உதவுவதும் சிறிலங்கா கண்காணிப்புக் குழுவினரின் பொறுப்பாகும்.

3.11 முடிந்தளவு அடிமட்டத்தில் பிணக்கைத் தீர்க்கும் நோக்குடன் சிறிலங்கா அரசாங்கத்தின் ஆயுதப் படைகளது தளபதிகள், விடுதலைப் புலிகளின் பிராந்தியத் தலைவர்கள் ஆகியோருக்கு மத்தியில் தொடர்புகளை, பிணக்குகளுக்கு உரிய பகுதிகளில் பிரச்சினையைத் தீர்க்க உதவுவதற்காக ஏற்படுத்த வேண்டும்.

3.12 சிறிலங்கா கண்காணிப்புக் குழுவின் செயற்பாடு குறித்த வழிமுறைகள் பிறிதொரு தனியான ஆவணத்தில் உருவாக்கப்பட வேண்டும்.

www.tamilarangam.net



**ஷரத்து 4. இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வருதல், திருத்துதல் மற்றும் முடிவிற்கு வருதல்**

4.1 இந்த ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டு தமது விருப்பத்தை ஒவ்வொரு தரப்பும் சிறிலங்கா அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் விடுதலைப் புலிகளின் சார்பில் வேலுப் பிள்ளை பிரபாகரனும் முறையே கையெழுத்திட்டு நோர்வேயின் வெளிவிவகார அமைச்சருக்கு கடிதம் மூலமாக அறிவிக்க வேண்டும்.

4.2 நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் அறிவிக்கும் தினத்தில் இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வரும்.

4.3 இரு தரப்பினதும் பரஸ்பர இணக்கத்துடன் இந்த ஒப்பந்தம் திருத்தவும் மாற்றப்படவும் இயலும், அத்தகைய திருத்தங்கள் எழுத்து மூலமாக நோர்வீஜிய அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும்.

4.4 எந்தத் தரப்பினராலும் ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாக நோர்வே அரசாங்கத்திற்கு அறிவித்தல் கொடுக்கப் படும் வரை இந்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும். அத்தகைய முன்னறிவித்தல் முடிவிற்கு வரும் தினத்திற்கு 14 தினங்களிற்கு முன்னதாக கொடுக்கப்பட வேண்டும்.

**இணைக்கப்பட்டவை**

**இணைப்பு ஏ :** பொருட்களின் நிரல்

**இணைப்பு பி :** சோதனை நிலையங்கள்.

இணைப்பு ஏ:-

a. இராணுவ ஆயுதம் அல்லாத ரவைகள், குண்டுகள்.

b. வெடி பொருட்கள்

c. தூர இருந்து இயக்கும் கருவி

d. முள்ளுக்கம்பி

e. தூரதிருஷ்டிக் கண்காடிகள்

f. காற்று அமுத்தி மிஷன்

g. பென்டோஜ் பற்றரி

h. டீசல், பெற்றோல் சீமேந்து, இரும்புக் கம்பிகள் என்பவை கீழ்க்காணும் வழி முறைப்படியும் தொகைப்படியும் கட்டுப் படுத்தப்படும்.





**டீசல் பெற்றோல்**

அரசாங்க அதிபர்கள் விடுதலைப்புலிகளின் வட்டாரத்திலுள்ள வாகனங்கள், றக்டர்கள், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றைப் பதிவு செய்வார்கள். அவர் இவற்றிற்கு பின்வருமாறு ஒரு கிழமை அவசியப்படும் எரிபொருளை கணிப்பிட்டு வழங்குவர்.

டிறக் பேருந்துகள் 250 லீட்டர் கிழமைக்கு

4 சில்லு உழவு இயந்திரம் 350 லீட்டர் கிழமைக்கு

2 சில்லு உழவு இயந்திரம் 40 லீட்டர் கிழமைக்கு

பெற்றோல் வாகனம் 30 லீட்டர் கிழமைக்கு

மோட்டர் சைக்கிள் 7 லீட்டர் கிழமைக்கு

மீன்பிடி வள்ளம் 400 லீட்டர் கிழமைக்கு

**சீமேந்து**

அரசாங்க அதிபரினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் அடிப் படையில் தொடர்புள்ள நிறுவனங்களின் கீழ் அரச கட்டிடங்களை புனரமைத்தல், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் அல்லது இலங்கை அரசாலும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களாலும் சமூகத்தில் செல்வம் படைத்த உறுப்பினர்களாலும் அமுல்படுத் தப்படும் வீடமைப்புத் திட்டங்கள் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் சீமேந்து வழங்கப்படும். திட்டமிட்ட மற்றும் அறிவிக்கப்படும் திட்ட முன்னேற்றங்களின் அடிப்படையில் மாதாந்த தேவைகளை அரசாங்க அதிபர் குறிப்பிடுவார்.

தனிப்பட்டவர்கள் பாவனைக்கு, வியாபாரிகளிற்கு, வீடு கட்டுபவர் களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் வர்த்தக ரீதியில் வழங்கப்படும் இதற்கு ஏற்ப முதல் மாதம் 5000 மூடைகளும் அதன் பின் ஒவ்வொரு மாதமும் 10,000 மூடைகளும் தனிப்பட்ட விற்பனை, கூட்டுறவு சங்கங்களின் மூலம் பதிவு செய்யப்பட்டு 25 மூடைகள் ஒவ்வொரு வீட்டிற்கும் கொடுக்கப்படும்.

**இரும்புக் கம்பிகள்**

இரும்புக் கம்பிகள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேச பாவனைக்கு அரசாங்க அதிபர் அவர்களின் அனுமதியுடன் வழங்கப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**இணைப்பு பி**

உடன்படிக்கையின் பிரிவு 2.7ல் ஒப்புக் கொள்ளப்பட்ட சோதனைச் சாவடிகள் பினவருமாறு:-

- மண்டூர்
- பட்டிருப்பு
- களுதாவெளி வள்ளத்துறை
- அம்பலந்தீவு வள்ளத்துறை
- மண்முனை வள்ளத்துறை
- வவுணத்தீவு
- கரும்பாலம்
- சித்தாண்டி படகுத்துறை
- கிரான் பாலம்
- கிண்ணியடி படகுத்துறை
- வாழைச்சேனை
- மாங்கேணி
- மகிந்தபுரம்
- மூதூர்
- உயிலங்குளம்
- ஓமந்தை

ooo



# பின்னிணைப்பு- 22

## இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபு

சட்டத்தின் ஆட்சிக்கான கோட்பாடுகள், மனித உரிமைகள், அனைத்து நபர்களதும் சமத்துவம் மற்றும் மக்களது சுயநிர்ணய உரிமைக்கு அமைவாகவும், இலங்கைத் தீவின் அனைத்து நபர்களுக்கும் நிலையான அமைதியைக் கொண்டு வருவதற்கு உறுதி பூண்டும், இத்தீவில் அமைதியைக் கொண்டுவருவதற்கு மாண்புமிகு நோர்வே அரசும் நோர்வே மக்களும் சர்வதேச சமூகமும் ஆற்றும் சேவைகளைப் பாராட்டி ஏற்றுக்கொண்டு, தமிழ்மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையிலான சமாதான நடவடிக்கைகள் சவால்கள் நிறைந்த வரலாறாக அமைந்திருந்தாலும், அமைதி வழியிலான தீர்விற்கு உண்மையான வாய்ப்பு இருப்பதை இனம்கண்டு, இறுதித் தீர்வை அடைவதற்கான செயல்முறை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்க, சட்டங்களையும் கொள்கைகளையும் வகுத்து, வடக்குக் கிழக்கிலே மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி ஆகிய பணிகள் அனைத்தையும் செயற்றிறனுடன் விரைவாக நிறைவேற்றுவதன் மூலம் வடக்குக் கிழக்கு மக்களது உடனடித் தேவைகளை வழங்குவதற்காக வடக்குக் கிழக்குப் பிராந்தியத்திற்கு ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை நிறுவுவதற்கு உறுதி பூண்டு, தமிழ்மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் இடையிலான உறவுகள் பற்றிய வரலாறு, வாக்குறுதிகளை மீறிய ஒரு செயல் முறையாக இருந்தமையையும் இலங்கை அரசுக்கும் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் மக்களது பிரதிநிதிகளுக்கும் இடையே காத்திரமாகச் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த இலங்கை அரசுகளால் ஒருதலைப்பட்சமாக, மதிக்கப்படாது முடிவிற்குக் கொண்டு வந்தமையையும் கவனத்திலெடுத்து, அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசுகள் தமிழ்மக்களுக்கு எதிராக மேற்கொண்ட இனரீதியான துன்புறுத்தல், பாரபட்சம், அரச வன்முறை மற்றும் அரசுகள் பின்னிருந்து நடத்திய வன்முறை ஆகியனவற்றை மனதில் நிறுத்தியும், 1976 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் தமிழ்மக்களுக்கு ஒரு சுதந்திர, இறைமையுள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மதசார்பற்ற அரசை அமைக்குமாறு தமிழ்மக்கள் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட தமது பிரதிநிதிகளுக்கு ஆணை வழங்கியிருந்தமையைக் கவனத்திலெடுத்தும், நான்கு தசாப்தங்களுக்கு மேலாக, வன்முறையின்றி அமைதி வழியில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு வரையறைக்குள் அமைந்த போராட்டம் பயனற்றதென நிரூபிக்கப்பட்டு, முரண்பாட்டை அமைதி வழியில் தீர்ப்பதற்கான மார்க்கங்கள் இல்லாது போன பின்னர்தான், ஒரு தற்காப்பு நடவடிக்கையாகவும் தமிழரது சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு வழிமுறையாகவுமே தமிழரது ஆயுதப் போராட்டம் தொடங்கியது என்பதை மனதில் நிறுத்தியும், முதலில் டிசெம்பர் 2000 இலும் பின்னர் டிசெம்பர் 2001 இலும் ஒரு தலைப்பட்சமாகப் போர்நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி, நெடுஞ்சாலைகளைத் திறந்து, வர்த்தகத்திற்கும் மக்களது சுதந்திரமான நடமாட்டத்திற்கும் அனுசரணை வழங்கி, இயல்புநிலை திரும்புவதற்கான ஓர் உகந்த சூழலையும் முரண்பாட்டிற்கு ஒரு நீதியான தீர்வையும் காணும் நம்பிக்கையோடு சமாதானப் பேச்சுக்களுக்குள் நேர்மையாக இறங்கி, சமாதானம் நோக்கிய நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகளே முதலில் முன்னெடுத்தார்கள் என்பதை மீள நினைவுபடுத்தியும், 2001 போர் நிறுத்த அறிவிப்பிற்கு மதிப்பளித்து தற்போதைய இலங்கை அரசு தானும் ஒரு போர்நிறுத்தத்தை அறிவித்ததிலுள்ள அரசியல் துணிவைக் கவனத்திற்கொண்டு, இலங்கைத் தீவிலுள்ள வடக்குக் கிழக்குப் பகுதியின் சமூக, பொருளாதார, நிர்வாக மற்றும் பௌதிகக் கட்டுமானங்களுக்கு அழிவை விளைவித்த போர், வடக்குக் கிழக்கிற்கே பிரதானமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்ததோடு, வடக்குக் கிழக்கே இலங்கைத் தீவில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசமாகத் தொடர்ந்தும் இருக்கிறது என்பதையும் உணர்ந்து, 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில், வடக்குக் கிழக்கிலுள்ள பெரும்பான்மையான தமிழ்மக்கள் தமது செயல்கள் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தங்கள் அதிகார பூர்வமான பிரதிநிதிகள் என ஏற்றுக்கொண்டே தங்கள் வாக்கை வழங்கினார்கள் என்பதை இனம் கண்டு, இலங்கைத் தீவிலுள்ள வடக்குக் கிழக்கின் பெரும்பான்மையான பகுதி மீது தமிழீழ விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டையும் நியாயாதிக்கத்தையும் செயற்றிறன் வாய்ந்த முறையில் செயற்படுத்துகின்றமையைக் கருத்திற்கொண்டு, பேச்சு மூலமான ஓர் இறுதித் தீர்வை அடைவதும் அதனை அமுல்படுத்துவதும் ஒரு நீண்ட கால மெடுக்கும் கருமமாக அமையலாம் என்பதை உணர்ந்து, அனைத்து அகதிகளும் இடம்பெயர்ந்த நபர்களும் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் திரும்பிச்செல்வதற்கான அவசியத்தையும், அவர்கள் வடக்குக் கிழக்கிலுள்ள தங்கள் வீடுகளுக்குத் தங்கு தடையின்றிச் சென்று, தரையிலும் கடலிலும் தமது வாழ்வாதாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான அவர்களது உடனடித் தேவையையும் வலியுறுத்தி,





இலங்கை அரச நிறுவனங்களும் அவை வழங்குகின்ற சேவைகளும் வடக்குக் கிழக்கு மக்களது உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமானவையல்ல என உணரப்பட்டுள்ளமையை மனதிற்கொண்டு, அமைதிப் பேச்சுக்களின் போது அமைக்கப்பட்ட அவசர மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உப குழுவும் (சிரான்) ஏனைய உபகுழுக்களும் தோல்வியுற்றமையையும் மீண்டும் மீண்டும் செயலற்ற நிலைக்கு இட்டுச்சென்ற இந்த உப குழுக்களது அமைப்பு முறையே அந்தத் தோல்விக்குக் காரணம் என்பதையும் இனங்கண்டு, இலங்கை அரசு தனது 2000ஆம் ஆண்டுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டவாறு, ஓர் இடைக்கால அதிகார சபைக்கான தேவையை அங்கீகரித்துள்ளமைக்கு மதிப்பளித்து, சட்டம், ஒழுங்கைப் பேணுவது ஒரு நீதியானதும் சுயாதீனமுமான சமூகத்திற்கு இன்றியமையாத அம்சம் என்பதை உணர்ந்து, போரினால் சிதைக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் மற்றும் எந்தவோர் ஆட்சியியல் செயற்பாட்டை அங்கு மேற்கொள்வதற்கும் வருமானம் ஈட்ட வேண்டியது தேவை என்பதை இனம்கண்டு, மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி என்பனவற்றிற்கு, நிலத்தின் மீதான கட்டுப்பாடு முக்கியம் என்பதை இனம்கண்டு, 1972 ஆம், 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்களது உருவாக்கத்தில் தமிழ்மக்கள் பங்குபற்றவில்லை என்பதையும் அவை பாகுபாடான ஆட்சியியலை நிறுவனமயப்படுத்தி, தீர்மானம் எடுக்கும் செயல்முறையில் காத்திரமான பங்கினைத் தமிழ்மக்களுக்கு வழங்க மறுத்ததையும் மனதிற் கொண்டு, கடந்த தசாப்தத்தில் இனங்களுக்கிடையேயான முரண்பாடுகளைத் தீர்க்க புதுமையானதும் பரந்த சிந்தனையுடனுமான நடைமுறைகளுடே சமத்துவத்தின் அடிப்படையில் முரண்பட்ட தரப்புக்களுக்கிடையே உடன்படிக்கையினை ஏற்படுத்துவதன் மூலமாக சர்வதேச மட்டத்தில் கடைப்பிடிக்கப்பட்ட வழக்கத்தைக் கவனத்திற்கொண்டு, போரிடும் தரப்புக்களுக்கிடையே சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தோடு எட்டப்படும் ஒப்பந்தங்களில் அல்லது உடன்படிக்கைகளில் மாத்திரமிருந்தே பெறப்படும் சட்டரீதியான பலத்தைக் கொண்டு போரினால் சிதைந்த நாடுகளில் இடைக்கால அரசாங்க ஒழுங்குகளை நிறுவுவதற்கான முன்னுதாரணங்களில் நம்பிக்கைகொண்டும், இலங்கைக் கண்காணிப்புக் குழுவின் (SLMM) பணியை உள்ளடக்கிய போர்நிறுத்த ஒப்பந்தம், மற்றும் வடக்குக் கிழக்கு மீள்கட்டுமான நிதியம் (NERF) அமைக்கப்பட்டமை போன்ற நடைமுறைகள் இத்தகைய ஒழுங்குகளை ஏற்படுத்துவதற்குரிய பெறுமதியான முன்னுதாரணங்களாக அமைகின்றன என்பதைக் கவனத்திற் கொண்டு, மேலே கூறப்பட்டனவற்றின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட தரப்புக்களான தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் கீழ்வரும் ஏற்பாடுகளுக்கு இத்தால் இணங்குகின்றன.

www.tamilarangam.net



**1. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை**

பேச்சு மூலமான இறுதித்தீர்வு எட்டப்பட்டு அமுல்படுத்தப் படும் வரை, வடக்குக் கிழக்கிலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப் பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கி ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை (Interim Self-Governing Authority ISGA) நிறுவப்படும்.

ISGA இல் முஸ்லிம் சமூகத்தினது பங்கை உருவாக்கம் செய்வதில் கலந்துகொள்வதற்கு அவர்களது பிரதிநிதிகளுக்கு உரிமை உண்டு.

**2. ISGA இன் அங்கத்துவ அமைப்பு**

2.1 இந்த உடன்படிக்கையில் சம்பந்தப்படுகின்ற தரப்புக் களால் தீர்மானிக்கப்படும் எண்ணிக்கையிலான உறுப்பினர்களை ISGA கொண்டிருக்கும்.

2.2 ISGA இன் அங்கத்துவ அமைப்பு கீழ்வருமாறு அமையும்.

2.2.a தமிழீழ விடுதலைப் புலிகளால் நியமிக்கப்படுகின்ற உறுப் பினர்கள்.

2.2.b இலங்கை அரசால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள், மற்றும்

2.2.c வடக்குக் கிழக்கிலுள்ள முஸ்லிம் சமூகத்தால் நியமிக்கப்படு கின்ற உறுப்பினர்கள்.

2.3 கீழ்வருவனவற்றை உறுதி செய்யக்கூடிய விதத்தில் உறுப்பினர் களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

2.3.a ISGA இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் நியமனதாரிகளே அறுதிப் பெரும்பான்மையினராக இருப்பர்.

2.3.b மேலுள்ள உபவிதி (a) இற்கு பங்கம் ஏற்படாத வகையில் வடக்குக் கிழக்கிலுள்ள முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகங் கள் ISGA இல் பிரதி நிதித்துவத்தைக் கொண்டிருக்கும்.

2.4 தலைவர் (Chairperson) ISGAஇலுள்ள பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டு ISGA இன் பிரதான நிறைவேற்று அதிகாரியாகச் செயற்படுவார்.

2.5 வடக்குக் கிழக்கிற்கான பிரதான செயலாட்சியரையும் அவரது கடமைகளை ஆற்றுவதில் உதவுவதற்கு தேவைப் படக்கூடிய ஏனைய அதிகாரிகளையும் தலைவர் நியமிப்பார். இந்த நியமனம் ஏதேனையும் இடை நிறுத்துவதற்கு அல்லது





முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அதிகாரங்களையும் தலைவர் கொண்டிருப்பார்.

**3. தேர்தல்கள்**

சரத்துக்கள் 2.2 மற்றும் 2.3 இன் ஏற்பாடுகள், ISGA இற்கான தேர்தல்கள் நடத்தப்படும் வரை தொடரும், இந்த ஒப்பந்தம் நடை முறைக்கு வந்து ஐந்தாண்டின் முடிவில் இறுதித் தீர்வு எதுவும் எட்டப்படாமலும் அமுல்படுத்தப்படாமலும் விட்டால் இந்த ஐந் தாண்டு காலப்பகுதி முடிவடைகையில் தேர்தல்கள் நடத்தப்படும். ISGA ஆல் நியமிக்கப்படும் ஒரு சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழு, சுதந்திரமானதும் நேரடியானதுமான தேர்தல்களை சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் சர்வதேச ஜனநாயகக் கோட்பாடுகள் மற்றும் நியமங்களுக்கு அமைவாக நடத்தும்.

**4. மனித உரிமைகள்**

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளவாறு அனைத்து உரிமைகளும் வடக்குக் கிழக்கிலுள்ள மக்களுக்கு வழங்கப்படும். ISGA இயற்றும் சட்டம், ஒழுங்கு முறை, தீர்ப்பு, கட்டளை, தீர்மானம் எல்லாம் மனித உரிமைகள் பாதுகாப்பிற்கென சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும். ISGA ஆல் நியமிக்கப்படும் ஒரு சுயாதீனமான ஆணைக்குழு இந்த மனித உரிமைகளுக்கான கடப்பாடுகள் எல்லாம் பேணப்படுவதை உறுதி செய்யும். மனித உரிமைகளைப் பாதுகாப் பதற்கு ஒரு காத்திரமான ஒழுங்கமைப்பை நிறுவுவதற்கு இந்த ஆணைக்குழு சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் உதவியை நாடும். இந்த ஆணைக்குழு எந்தவொரு தனிநபரிடமிருந்தும் முறைப் பாடுகளை ஏற்று விசாரணை செய்து, பாதிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும் வழங்க வேண்டிய நட்டஈட்டைப் பரிந்துரைத்து, அந்த நபரின் உரிமைகள் மீளநிலைநிறுத்தப்படுவதை உறுதி செய்யும்.

**5. மதச்சார்பின்மை**

வடக்குக் கிழக்கில் எந்தவொரு மதத்திற்கும் விசேட இடம் வழங்கப் படமாட்டாது.

**6. பாகுபாட்டிற்கெதிரான தடை**

வடக்குக் கிழக்கில் மதம், இனம், சாதி, தேசியம் அல்லது பிராந்தியம், வயது அல்லது ஆண், பெண் என்பவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படாதிருப்பதை ISGA உறுதிசெய்யும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**7. இலஞ்ச ஊழலைத் தடுத்தல்**

ISGA தனது நிர்வாகத்தில் அல்லது தனது நிர்வாகத்தின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் எதுவும் இடம்பெறாதிருப்பதை உறுதி செய்யும்.

**8. அனைத்து சமூகங்களினதும் பாதுகாப்பு**

கலாசாரம் அல்லது மதம் தொடர்பாக, ஒரு சமூகத்திற்கு வழங்காத தனிச்சலுகைகளை அல்லது அவர்கள் மீது திணிக்காத அசௌகரியங்களை இன்னொரு சமூகத்திற்கு வழங்கும் அல்லது திணிக்கும் சட்டம், ஒழுங்குமுறை, விதி, கட்டளை அல்லது தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது.

**9. ISGA இன் நியாயாதிக்கம்**

9.1. (Resettlement) மீள்குடியமர்வு, (Rehabilitation) புனர்வாழ்வு, (Reconstruction) புனரமைப்பு மற்றும் தற்போதுள்ள சேவைகளையும் வசதிகளையும் மேம்படுத்தி உயர்த்துதல் உள்ளடங்கலான அபிவிருத்தி (Development) (இதன் பின்னால் RRRD எனக் குறிப்பிடப்படுகின்றது), வரிவிதித்தல் உள்ளடங்கலான வருவாய் ஈட்டல், வருமானம், தீர்வையும் சுங்க வரியும், சட்டமும் ஒழுங்கும் மற்றும் காணி தொடர்பான அதிகாரங்கள் உள்ளடங்கலாக வடக்குக் கிழக்கை ஆளுகை செய்வதற்கு வேண்டிய அனைத்து அதிகாரங்களையும் ISGA கொண்டிருக்கும்.

இந்த அதிகாரங்களுக்குள், வடக்குக் கிழக்கிலும் வடக்குக் கிழக்கிற்காகவும் பிராந்திய நிர்வாகம் தொடர்பாக இலங்கை அரசால் செயற்படுத்தப்படும் அனைத்து அதிகாரங்களும் செயற்பாடுகளும் உள்ளடங்கும்.

9.2. இவ்வாறான அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கும் செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்குமான விரிவான வழிமுறைகள் இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட தரப்புக்களால் மேலும் பேசி முடிவெடுக்கப்படும்.

**10. அதிகாரங்களை வகைபிரித்தல்**

வடக்குக் கிழக்கில் நீதியை நிர்வகிப்பதற்கான தனியான அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு, அந்த அமைப்புகளுக்கு நீதி அதிகாரங்கள் உரித்தாக்கப்படும். நீதிபதிகளது சுயாதீனத்தை உறுதி செய்வதற்கு ISGA பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும்.

இந்த ஒப்பந்தத்தின் சரத்து 4 (மனித உரிமைகள்) மற்றும் 22 இற்கு (பிணக்குத் தீர்த்தல்) பங்கம் ஏற்படாதவாறு, இந்த சரத்தின் கீழ் உருவாக்கப்படும் அமைப்புக்களே, இந்த உடன் படிக்கையை அர்த்தப்படுத்தி அமுல்படுத்துவதில் எழும் அனைத்துப் பிணக்குகளையும்,





இந்த உடன்படிக்கையில் அல்லது இந்த உடன்படிக்கையின் கீழ் அல்லது இந்த உடன்படிக்கையின் ஏதேனும் ஏற்பாட்டில் எழும் ஏதேனும் பிணக்குகளையும் தீர்ப்பதற்கு தனியானதும் தனித்துவமானதுமான நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும்.

**11. நிதி**

ISGA, ஒரு வருடாந்த வரவு - செலவு அறிக்கையைத் தயாரிக்கும்.

ISGAஆல் நியமிக்கப்படும் அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு நிதி ஆணைக்குழு அமைக்கப்படும். இந்த அங்கத்தவர்கள் நிதி, நிர்வாகம் அல்லது வாணிபம் போன்ற துறைகளில் உயர்பதவி வகித்தவர்களாகவோ அல்லது இத்துறைகளில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்கள் என இனம் காணப்பட்டவர்களாகவோ இருக்க வேண்டும். இலங்கை அரசின் ஒன்று திரட்டிய நிதியத்திலிருந்து (Consolidated fund) வடக்குக் கிழக்கிற்கு ஒதுக்கப்பட வேண்டிய நிதியின் அளவை இந்த ஆணைக் குழு பரிந்துரைக்கும். இப்பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கு இலங்கை அரசு தனது நல்லெண்ண முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சமவிகிதத்தில் பகிர்ந்தளிப்பதற்கு உரிய கவனம் செலுத்தி, ISGA தன்வசமுள்ள நிதிகளை எப்படிப் பயன்படுத்துவதெனத் தீர்மானிக்கும். ISGA வசமுள்ள நிதிகளுள் வடக்குக் கிழக்குப் பொதுநிதியம், வடக்குக் கிழக்கு மீள்கட்டுமான நிதியம், விசேட நிதியம் ஆகியன உள்ளடங்கியிருக்கும்.

வடக்குக் கிழக்கில் அல்லது வடக்குக் கிழக்கிற்காக இலங்கை அரசு செய்யும் அனைத்துச் செலவுகளும் ISGAஇன் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது என்பதை இலங்கை அரசு ஏற்றுக்கொள்கிறது.

11.1. வடக்குக் கிழக்குப் பொதுநிதியம் வடக்கு - கிழக்கு பொது நிதியம் ISGAஇன் கட்டுப் பாட்டின் கீழ் இருப்பதோடு பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

11.1.a. இலங்கை அரசு ஏதேனும் குறித்த நோக்கங்களுக்காக வழங்கும் அனைத்து உதவிகளிலிருந்தும் கடன்களிலிருந்தும் கிடைக்கும் பணம் மற்றும் ISGAஇற்கு வழங்கப்படும் ஏனைய பிறகடன்கள் மூலம் பெறப்படும் பணம்.

11.1.b. அரசுகளுடனோ, நிறுவனங்களுடனோ, ஏனைய அமைப்புக்களுடனோ ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் வடக்குக் கிழக்கிற்கென சிறிலங்கா அரசினால் குறித்தொதுக்கப்படும் நிதிகள்.

11.1.c. கீழே குறிப்பிடப்படும் நிதியங்கள் தவிர்ந்த, ISGA இற்கு கிடைக்கும் ஏனைய வரவுகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**11.2.** வடக்குக் கிழக்கு மீள்கட்டுமான நிதியம்

NERF அமைப்பு, கட்டுப்பாடு ISGA இற்கு மாற்றப் படுவது தவிர, ஏனைய அம்சங்களில் அதன் தற்போதைய வடிவத்திலேயே தொடர்ந் தும் இருக்கும்.

வடக்குக் கிழக்கு மீள்கட்டுமானத்திற்காகக் கொடுக்கப்படும் அனைத்து கொடுப்பனவுகளும் NERF இற் கூடாகப் பெறப்படும். NERF நிதியத் திலிருந்து பெறப்படும் வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக ISGA நேரடியாக முடிவுகளை எடுத்துக் கண்காணிக்கும்.

**11.3.** விசேட நிதியம்

மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றிற்கென்றேவரும் கடன்களும் கொடுப்பனவுகளும், NERF நிதியத்தினூடாக உள்வரமுடியாதவிடத்து, இந்த விசேட நிதியத் திற்குள் உள்வாங்கப்படும். ஏனைய நிதியங்களைப் போலவே இந்த விசேட நிதியமும் ISGAஇன் கட்டுப்பாட்டில் இருக்கும்.

12. கடன் பெறுவதற்கும் உதவிபெறுவதற்கும் வர்த்தகத்திற்கு மான அதிகாரங்கள்

உள்ளூரிலும் வெளியூரிலும் கடன்பெறுதல், உத்தரவாதங் களையும் இழப்பீடுகளையும் வழங்குதல், நேரடியாக உதவி களைப் பெறுதல், உள்ளூர் மற்றும் வெளியூர் வர்த்தகத்தில் ஈடுபடுதல் அல்லது அதனை ஒழுங்கமைத்தல் போன்றன வற்றிற்கான அதிகாரங்களை ISGA கொண்டிருக்கும்.

**13.** நிதிக் கணக்கீடும் கணக்காய்வும்

13.1. ISGA ஒரு கணக்காய்வாளர் நாயகத்தை நியமிக்கும்.

13.2. இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிதியங்களும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாகச் செயற்படுத்தப்பட்டு, பேணப்பட்டு, கணக்கீடு செய்யப்படும். இந்தக் கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்தால் ஆய்வு செய்யப்படும். சர்வதேச மூலங்களிலிருந்து பெறப்படும் அனைத்து நிதிகளது கணக்காய்வும், ISGA ஆல் நியமிக்கப் படும் சர்வதேசப் புகழ்பெற்ற நிறுவனத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும்.

**14.** மாவட்டக் குழுக்கள்

14.1. தனது சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரங்களைக் காத்திரமாகச் செயற்படுத்துகையில், மாவட்டங்களில்





நிர்வாகத்தினை மேற்கொள்வதற்காக ISGA மாவட்டக் குழுக்களை உருவாக்கி, இந்தக் குழுக்களுக்கு தான் தீர்மானிக் கின்ற அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கலாம். ISGAஇற்கும் குழுக்களுக்கும் இடையிலான ஓர் இணைப்பாளராகச் சேவையாற்றக்கூடியவாறு ISGAஇன் உறுப்பினர்கள் மத்தி யிலிருந்து ISGAஆல் இந்தக் குழுக்களது தலைவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

14.2. குழுவின் ஏனைய உறுப்பினர்களும் ISGA ஆல் நியமிக்கப் படுவதோடு இந்த நியமனங்கள் எதனையும் இடைநிறுத்து வதற்கு அல்லது முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அதிகா ரங்களையும் ISGA கொண்டிருக்கும். இந்த உறுப்பினர்களை நியமிக்கையில், அனைத்து சமூகங்களதும் பிரதிநிதித்து வத்தை உறுதி செய்வதற்கு உரிய கவனம் செலுத்தப்படும்.

14.3. இந்தக் குழுக்கள் ISGA இன் கீழ் நேரடியாகச் செயற்படும்.

14.4. ISGAஇன் பிரதான செயலாட்சியாளர் மாவட்டங்களில் பிரதான நிறைவேற்று அதிகாரிகளை நியமிப்பதோடு, இந்தப் பிரதான நிறைவேற்று அதிகாரிகள், குழுக்களுக்குச் செயலாளர்களாகவும் செயற்படுவார்கள். இந்த நியமனங் கள் எதனையும் இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களைப் பிரதான செய லாட்சியாளர் கொண்டிருப்பார்.

14.5. குழுக்களது அனைத்து நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் அந்தந்தக் குழுக்களது செயலாளர்கள் ஊடாக ஒருங்கிணைக் கப்படும்.

14.6. நிர்வாகத்திற்கு உதவியாக இருப்பதற்காக உபகுழுக்களும் நியமிக்கப்படலாம்.

**15.** நிர்வாகம்

தனது நிறைவேற்று அதிகாரங்களைச் செயற்படுத்துவதன் ஒரு பகுதி யாக இந்த ஒப்பந்தத்தின் சரத்து 9 இல் குறிப்பிடப்பட்ட அதிகாரங் களுடன் தொடர்புபட்ட வடக்குக் கிழக்கி லுள்ள அனைத்து நிர்வாக அமைப்புக்களும் ஆளணியும் ISGA இன் கட்டுப்பாட்டிலும் நெறிப் படுத்தலின் கீழும் அமையும்.

ISGA தற்றுணிவுடன், தேவையான துறைகளில் நிபுணர்களது ஆலோசனைக் குழுக்களை உருவாக்கலாம். இந்த ஆலோசனைக் குழுக்கள் பொருளாதார விவகாரங்கள், நிதி விவகாரங்கள், நீதி விவகாரங்கள், மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு விவகாரங்கள்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடிப்படை கட்டுமானங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அத்தியாவசிய சேவைகள் ஆகியனவற்றிற்கும் இவற்றிற்கென மட்டுப்படுத்தப்படாமல் இன்னும் தேவையான துறைகளுக்கும் அமைக்கப்படலாம்.

**16. காணி நிர்வாகம்**

சரத்து 9 இல் (ISGAஇன் நியாயாதிக்கம்) குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்குக் காணி முக்கியம் என்பதால், வடக்குக் கிழக்கிலுள்ள தனியாருக்குச் சொந்தமானவை தவிர்ந்த எல்லாக்காணிகளையும் பகிர்ந்தளிப்பதற்கும் மற்றும் பொருத்தமான தேவைகளுக்குப் பயன்படுத்துவதைத் தீர்மானிப்பதற்குமான அதிகாரத்தை ISGA கொண்டிருக்கும்.

காணிகளிலிருந்து விரட்டப்பட்ட மக்களது காணிகளின் உரிமை, அத்துமீறிக் குடியேறியோர் வசிக்கும் காணிகளின் உரிமை போன்றவற்றை காலம் எவ்வளவு கடந்திருந்தாலும் கூட விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென காணி நிர்வாகம் தொடர்பான ஒரு விசேட ஆணைக்குழுவை ISGA நியமிக்கும். விசேட ஆணைக்குழு செயற்படுகின்ற கால வரையறையை ISGA தீர்மானிக்கும்.

**17. ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் மீள்குடியமர்வு**

இலங்கை அரசின் ஆயுதப் படைகளால் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையும் இத்தகைய காணிகளுக்கு உரித்துடைய பொது மக்கள் தங்குதடையின்றிச் செல்வதற்கான உரிமையை மறுப்பதும் சர்வதேச சட்ட நியமங்களை மீறும் செயலாகும். இந்தக் காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட்டு அவற்றின் உரிமை முன்னைய உரித்தாளர்களுக்கு மீளளிக் கப்படவேண்டும். சொந்தக்காரர்களிடம் இருந்து அவர்களது காணிகளைக் கடந்த காலங்களில் பறித்து வைத்திருந்தமைக்காக, இலங்கை அரசு அவர்களுக்குக் கட்டாயம் நட்டஈடு செலுத்தவேண்டும்.

இந்தக் காணிகளில் இடம்பெயர்ந்த மக்களையும் அகதி களையும் மீளக்குடியமர்த்திப் புனர்வாழ்வு அளிப்பதற்கு ISGA பொறுப்பாக இருக்கும்.

**18. கடல் மற்றும் கரையோர வளங்கள்**

வடக்குக் கிழக்கு நிலப் பிரதேசத்தை அண்டிய கடல் மற்றும் கரையோர வளங்கள் மீது ISGA கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதோடு இந்த வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பாகத் தேவைப்படும் கட்டுப்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கான அதிகாரங்களையும் கொண்டிருக்கும்.





**19. இயற்கை வளங்கள்**

வடக்குக் கிழக்கிலுள்ள இயற்கை வளங்கள் மீது ISGA கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும். அத்தகைய இயற்கை வளங்கள் தொடர்பாக ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும். அத்தகைய ஒப்பந்தங்களின் கீழ் வரவேண்டிய பணம் அனைத்தும் ISGAஇற்கு செலுத்தப்படுவதை இலங்கை அரசு உறுதிசெய்யும். நடைமுறையிலிருக்கும் அத்தகைய ஒப்பந்தங்களில் எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் யாவும் ISGAஇன் சம்மதத்துடனேயே செய்யப்பட வேண்டும். எதிர்காலத்தில் இவற்றிற்கான ஒப்பந்தங்கள் ISGA உடன் செய்யப்படவேண்டும்.

**20. நீர்ப்பயன்பாடு**

ஆறுகளின் கீழ்ப்பகுதியில் நீர்பெறுவோருக்கு நீதியாகவும் நியாயமாகவும் சம அளவிலும் நீர் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டிய கடப்பாடு ஆறுகளின் தோற்றுவாய்ப்பகுதிகளில் நீர் பெறுவோருக்கு உண்டு. இலங்கை அரசும் ISGAஉம் நீர்வளப் பாவனையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இந்தக் கோட்பாடு பின்பற்றப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

**21. ஒப்பந்தங்களும் குத்தகைகளும்**

ISGA இன் நியாயாதிக்கத்தின் கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் எய்தப்படும் ஒப்பந்தங்கள் அனைத்தும் ISGA உடன் மேற்கொள்ளப்படவேண்டும். நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தங்கள் அப்படியே தொடரும். ஆனால், இந்த ஒப்பந்தங்களின் கீழ் கிடைக்கும் அனைத்து வருமானங்களும் ISGA இற்கு கொடுக்கப்படுவதை இலங்கை அரசு உறுதிசெய்ய வேண்டும். அத்தகைய ஒப்பந்தங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாயின் ISGA இன் சம்மதத்துடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

**22. பிணக்குத் தீர்த்தல்**

இந்த ஒப்பந்த சரத்துகளுக்கு அர்த்தம் கற்பிப்பதிலோ, நடைமுறைப்படுத்துவதிலோ இருதரப்பினரிடையேயும் பிணக்கு ஏதேனும் ஏற்பட்டு அப்பிணக்கு நோர்வே அரசின் நல்லிணக்கம் உட்பட இரு தரப்பினருக்கும் ஏற்புடைத்தான வேறு ஏதாவது வழியில் தீர்க்கப்படமுடியாவிட்டால் மூன்று அங்கத்தவர்கள் - இதில் இருவர், தரப்பிற்கு ஒருவர் என்ற ரீதியில் இரு தரப்பினராலும் நியமிக்கப்படுவர் - கொண்ட ஓர் இணக்கமன்றின் முன் விசாரிக்கப்படும். இரு தரப்பினராலும் கூட்டாக நியமிக்கப்படும் மூன்றாவது அங்கத்தவர் மன்றின் தலைவராகச் செயற்படுவார். தலைவர் நியமனத்தில் ஏதேனும் கருத்துவேறுபாடு ஏற்படுமிடத்து, மன்றின் தலைவரை நியமிக்குமாறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சர்வதேச நீதிமன்றின் தலைவரை (President of the International Court Justice) இரு தரப்பினரும் கோருவர்.

எந்தவொரு தகராறு பற்றியும் தீர்மானமெடுக்கையில், பிணக்குத் தீர்ப்பவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளதும் இலங்கை அரசினதும் சமத்துவமான நிலையை உறுதிசெய்வதோடு இந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளை மாத்திரமே உசாத்துணையாகக் கொண்டு பிணக்குகளைத் தீர்ப்பர்.

பிணக்குத் தீர்ப்பவர்களது தீர்மானம் இறுதியானதாகவும் முடிவானதாகவும் இருப்பதோடு பிணக்கில் சம்பந்தப்பட்ட தரப்புக்களையும் கட்டுப்படுத்தும்.

## 23. செயற்படும் காலம்

பேச்சு மூலமான நிரந்தரத் தீர்வொன்றின் விளைவாக வடக்குக் கிழக்கிற்கென ஒரு புதிய அரசு நிறுவப்படும் வரை இந்த ஒப்பந்தம் தொடர்ந்து நடைமுறையிலிருக்கும். அத்தகைய ஒரு தீர்வை எவ்வளவு விரைவாக அடைய முடியுமோ அவ்வளவு விரைவாக அடைவதற்கு இருதரப்பும் நல்லெண்ணத்துடன் பேச்சில் ஈடுபடும். இருப்பினும் கூட இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கிடையே நான்கு வருடங்களின் முடிவில் இறுதி உடன்படிக்கை எதுவும் எட்டப்படாவிட்டால் ஒப்பந்தத்தின் வீதிகளை மேலும் அதிகரித்து தெளிவுபடுத்தி வலுப்படுத்தும் நோக்கத்தில் இரு தரப்பும் நல்லெண்ணத்தோடு பேச்சுக்களில் ஈடுபடும்.

ooo



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திதி ஆ. க. மனோகரன்

கட்டப்பிராயில் பிறந்த
ஆ.க. மனோகரன் அவர்கள்
-73ஆம் ஆண்டுகளில்
கை விவசாய இலாகாவில்
பாதனா ஆசிரியராகப்
ணியாற்றியவர். இவர்,
ரபுரம் மகா வித்தியாலயம்,
செங்குந்தா இந்துக்கல்லூரி,
ண்டி - குண்டாசாலே
யக் கல்லூரி ஆகியவற்றில்
னது கல்வியை முடித்து
துறையின் மேற்படிப்பிற்காக
இங்கிலாந்து சென்றார்.

கை அரசியலில் ஈடுபாடு
ட இவர், 1975இல் இருந்து
ரோப்பிய நாடுகளிலும்,
பிலும் தமிழ்பேசும் மக்களின்
யமான உரிமைகளுக்கான
சியல் நடவடிக்கைகளில்
ன ஈடுபடுத்தி வருகின்றார்.

ரோப்பியப் பத்திரிகைகளில்
விடுதலைப் போராட்டம்
டர்பான கட்டுரைகளை
யர்களில் எழுதியுள்ள இவர்,
னது சமூகவிஞ்ஞான
ுளமானிப்பட்டத்தை
*sity of North London* இலும்
துமானிப் பட்டத்தை
*South Bank University* இலும்
நிறைவு செய்து
தே சர்வகலாசாலையில்
சியல் விஞ்ஞானத்தில்
திப் பட்டமும் பெற்றார்.
ழுது தெற்காசிய நாடுகளின்
ண்பாடுகள் பற்றிய ஆய்வில்
ஈடுபட்டு வருகிறார்.

e PARKAR

இலங்கை தேசிய இன முரண்பாடுகளும் சமாதான முன்னெடுப்புகளும் - கலாநிதி ஆ. க. மனோகரன்

The PARKAR

# இலங்கை தேசிய
# இன முரண்பாடுகளும்
# சமாதான முன்னெடுப்புகளும்

## ஒரு வரலாற்றுப் பார்வை
## 1948 - 2007

**கலாநிதி ஆ. க. மனோகரன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்